தமிழரசு

திங்கள் இருமுறை

அக் 1 1971 35 காசு

அரசு சிமெண்ட்

வலிவும் வனப்பும் வாய்ந்தது



நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

மலர் 2 | 1-10-1971 | இதழ் 7

அண்ணலைப் பற்றி அன்னை
இனிமைத் தமிழில் இறைவழிபாடு
பாலை சோலையாகிறது
எதிர்ச் சுவரில்
பரிசு பெற்ற சிற்றூர்
பயணத்தில் வந்த நண்பர்
ஐ.ஆர். 22
தமிழ் நாட்டில் இளைஞர் படை
சிற்றூர் செழிக்க ....
கண் நோய்
தமிழ்த் தட்டச்சைக் கண்டுபிடித்தவர்
தமிழகத்தே காந்தி அண்ணல் (கவிதை)
ஏன் இந்தக் காதல்? (நொடிக் கதை)
வெண்பாப் போட்டி

திங்களுக்கு ஒரு தொழிற்சாலை

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி, வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

திங்களுக்கு ஒரு தொழிற்சாலை

மிக விரைவாகத் தொழில் வளர்ச்சி அடைந்து வரும் மணலிப் பகுதியில் கமானி நிறுவனத்தின் கார்பன் பிளாக் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிடச் சென்ற திங்கள்தான் நான் வந்திருந்தேன்.

இந்தத் திங்கள் ஐந்தரைக் கோடி ரூபாய் மூலதனத்தில் உருவாகியுள்ள நாக்பால் அம்பாடி பெட்ரோ கெமிகல் தொழிற்சாலையைத் திறந்து வைக்க வந்துள்ளேன்.

அடிக்கல் நாட்டு விழாவாக இந்த விழா இல்லாமல் ஆலையைத் திறந்து வைக்கும் விழாவாக இது இருப்பதில் எனக்குத் தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. இங்குக் குழுமியுள்ள ஆற்றலும் செயல் திறனும் மிக்க தொழில் அதிபர்களின் மனமுவந்த ஒத்துழைப்புடன்—ஒவ்வொரு மாதத்துக்கும் புதிய பெருந் தொழில் ஒன்றைத் தொடங்குவது என்ற குறிக்கோளை முன் வைத்துச் செயல் பட முடியும் என்று நம்புகிறேன்.

இந்த மாநிலத்தில் உள்ள நாம், மக்கள் வாழ்வில் செழிப்பு மிகுந்தோங்கத் தொழில் வளர்ச்சியையே நம்பியிருக்கிறோம்.

நமது மாநிலத்தில் தங்கமோ—பூமிக்கடியில் எண்ணெய்யோ, பிற உயர் ரகக் கனிப் பொருள்களோ கிடைப்பதில்லை. ஆனால் இங்கே திறமையும்—பிறர்கண்டு பொறாமைப்படத்தக்க அளவுக்கு வாய்ப்புகளும் ஏராளமாக உள்ளன. மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு எளிதான வகையில் நம்மிடம் நல்ல துறைமுகங்கள் உள்ளன. இவற்றின் மூலம் நாம் ஏற்றுமதியினையும், பெருக்க முடியும். விரைவில் தூத்துக்குடித்துறைமுக வேலைகள் முற்றுப் பெறும்.

அதன் வாயிலாகத் தென்பகுதி மாவட்டங்கள் உலக ஏற்றுமதிக்கு உதவிட இயலும். தமிழ் நாட்டில் சாலை வசதியும், போக்குவரத்து வசதிகளும் சிறப்புடன் விளங்குகின்றன. இவை எல்லாவற்றையும் விட இந்த மாநிலத்தில் தொழில் நுணுக்க அறிவு படைத்தோரின் உதவி ஏராளமாகக் கிடைக்கும், சிறப்பான ஆற்றலுடன் இவையனைத்தையும் ஒரு சேரத் திரட்டி இயல்பான தொழில் நிபுணத் தன்மையுடன் சேர்ந்து பணியாற்றினால்—தமிழ் நாட்டைச் செழிப்புள்ளதாக்க நமக்குத் தங்கமோ—பூமிக்கடியில் உள்ள எண்ணெய்யோ தேவைப்படாது.

மணலி, தொழில் வட்டாரத்தில் ''பெட்ரோலை அடிப்படையாகக் கொண்ட ரசாயனத் தொழில்கள் விரைவாக வளர்ந்து வருகின்றன. பெட்ரோல்—ரசாயனத் தொழில் ஆலைக் கூட்டம் (Petro chemical complex) ஒன்றை இந்தப் பகுதியில் தொடங்கிட வேண்டும் என்ற தமிழக அரசு மத்திய அரசை நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது.

இந்த நியாயமான வேண்டுகோளை மத்திய அரசு ஏற்று பெட்ரோல் ரசாயனத் தொழில் கூடம் ஒன்றை இங்கே அமைத்திடுவதற்கு நமக்கு அனுமதி வழங்கும் என்று நான் நம்புகிறேன். நாப்தா கிராக்கர் தொழிற்சாலை ஒன்றை இங்கே அமைக்க வேண்டும். இதற்கான மூலப் பொருள் இறக்குமதி செய்வதாக இருப்பினும் கூடக் கவலையில்லை என்று நாம் வலியுறுத்தி வருகிறோம்.

ஏனெனில், இறக்குமதியாகும் மூலப் பொருளைக் கொண்டு உற்பத்தியாகும் பொருள்களை நாம் ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இறக்குமதிக்குச் செலவழிக்கும் அந்நியச் செலாவணியை விடப் பன்மடங்கு அதிகமான அந்நியச் செலாவணியை நாம் ஏற்றுமதி மூலம் சம்பாதிக்க முடியும்.

மூலப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டுமே என்று அச்சப்பட்டுக் கொண்டு புதிய தொழில்கள் தொடங்குவதை நாம் தள்ளிவிடக்கூடாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை இறக்குமதி செய்ய விரும்பும் தொழில்களுக்கு அனுமதி வழங்க மத்திய அரசு இன்று [illegible]

காட்டுகிறது. இது நல்ல வாய்ப்பாகாது. ஜப்பான், அமெரிக்கா போன்ற மிகவும் முன்னேறிய நாடுகள் கூட மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதாக நான் அறிகிறேன்.

பெட்ரோலிய ரசாயனப் பொருள்கள்—பல வகையான தொழில் திட்டங்களுக்கு அடிப்படையான தன்மை படைத்தவை. பிளாஸ்டிக் முதல், பூச்சித் தடுப்பு வரை பல வகையான தொழில்களுக்குப் பெட்ரோலிய ரசாயனப் பொருள்கள் ஆதாரமாக அமைவதாகும்.

எனவே, இங்கு நாப்தா கிராக்கர் தொழிற்சாலை அமைந்திட மத்திய அரசு அனுமதி வழங்கிடுமானால், அந்த ஆலையிலிருந்து வெளியேறும் பொருள்களைக் கொண்டு—இந்த வட்டாரத்தில் பல வகைத் தொழில்கள் பெருகக் கூடும். அதன் விளைவாகத், தொழில்களின் கூட்டம் பல்கிப்—பெருகிப்—பொருளாதார வளம் அதிகரிக்கும்.

மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் அண்மையில் சென்னை வந்திருந்தார். அவரோடு நான் நீண்ட நேரம் விவாதம் நடத்தினேன். தொழில் துறை குறித்து அவர் கொண்டுள்ள புதிய அணுகும் முறை என்னைக் கவர்ந்தது. என்னோடு நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது, அவர் தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறையை எளிதாக்குவதாகக் கூறினார். 1970 முதல் கவனிக்கப்படாமல் இருக்கிற விண்ணப்பங்களை இன்னும் மூன்று மாதங்களுக்குள்—அதற்கு முன்னரே கூட— கவனித்து மறு மொழி அனுப்புவதாக அவர் உறுதியளித்தார். இதன் மூலம் நமது மாநிலத்துக்குச் சில புதிய தொழில்கள் தொடங்கிட அனுமதி கிடைக்கக் கூடும். தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறையை ஒழுங்குபடுத்துவதானாலும் கூட, அனுமதி வழங்கும் முறை இன்னும்சிக்கல் நிறைந்ததாகவே இருப்பதை நாம் ஒ..க்கிவிட முடியாது. எனவே, இந்த முறையை எப்படி எளிதாக்குவது என்று நாம் சிந்தித்தாக வேண்டும்.

தொழில்களுக்கு அனுமதி வழங்கும் முறையை எளிதாக்க வேண்டும், என்கிற நமது கோரிக்கையை அண்மையில் மத்திய அரசு ஏற்றது கண்டு நான் மகிழ்கிறேன். இப்போதுள்ள உற்பத்தித் திறன்—எதிர்காலத் தேவை இவை பற்றி ஆழமான ஆராய்ச்சியில் இப்போதெல்லாம் மத்திய அரசு ஈடுபடுவதில்லை என்று நான் நினைக்கிறேன். எதிர்காலத் தேவைகள் பற்றிய மத்திய அரசின் மதிப்பீடுகள் உண்மை நிலைக்குப் பொருந்துவதாக இருப்பதில்லை.

சிமெண்ட் உற்பத்தி அளவு மீறிவிட்டது என்று ஒரு ஆண்டிலும் சிமெண்ட் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது என்று அடுத்த ஆண்டிலும் மத்திய அரசு கூறு கிறது. இதுபோலவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எஃகு உற்பத்தியில் உபரி கண்டதாகச் சொன்னார்கள். இப் போது எஃகுப் பற்றா குறை என்று கூறுகிறா கள். எனவே வரு காலத் தேவைகளை நி ணயிக்கும் பொறுப்பை மூலதனம் போடுகிற நிறுவனங்கள் வசமே ஒப்படைத்து விடலாம் அப்போது அனுமதி வழங்கும் முறை மேலும் எளிதாகி விட கூடும். மூலதனப் போடுகிறவர்கள் இயல் பாகவே, கவனத்துடன் இருப்பார்களல்லவா ?

இன்று நான் தொடங்கி வைக்கிற இந்தத் தொழில் உள் நாட்டுத் தொழில் திறமை, அயல் நாட்டுத் தொழில் நுணுக்கம் இரண்டும் இணைந்த நலமான கூட்டுறவை இங்கே காண்கிறேன். எந்தத் திசையிலிருந்து வருவதாக இருப்பினும்—இன்னும் சில காலத்துக்கு வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு வருவதற்கு நாம் கதவுகளைத் திறந்தே வைத்திருக்க வேண்டும். தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ள ஜப்பான் கூட இன்னும் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தை வரவேற்றுக்—கடைப்பிடித்து —முன்னேற்றத்திற்குப் பயன் படுத்திக் கொள்கிறது என்று நான் அறிகிறேன். நாம் என்ன செய்யவேண்டும் என்றால்; வெளி நாட்டுத் தொழில் நுட்ப அறிவை நாம் மேலும் விசாலப்படுத்தி —நமது தொழில் நுட்ப அறிவைக் கொண்டு நடத்தும் ஆராய்ச்சிகளின் பயனை வெளி நாடுகளுக்குச் சொல்லக்கூடிய ஆற்றலை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தொழில் துறை வளர்ச்சி, மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை முழுவதும் மறு பரிசீலனை



தொழிற்கூட இயந்திரங்களின் ஒரு பகுதி

செய்ய ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டும் என்று நான் வெளிப்படையாக யோசனை கூற விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் பல முக்கிய தொழில்கள் இந்தச் சட்டத்தின் ஆட்சிக்குள் கொண்டு வரப்படுகின்றன. இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் வராத தொழில்கள் மிகக் குறைந்த அளவினதாகும். அடிப்படையான சில தொழிற்சாலைகள் மட்டுமே இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்படும் என்பது தான் முதலில் சொல்லப்பட்ட விளக்கம். ஆனால் நாளடைவில் ஒவ்வொரு தொழிலும்அடிப்படைத் தொழிலாக — ஆதாரத் தொழிலாகக் கருதப்பட்டு அதன் மூலம் இந்தத் தொழில்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசிடம் குவித்து வைக்கப்படுகிறது.

தொழில்களை, அமைப்பதற்கு இது திறமை வாய்ந்த வழியல்ல என்பதை மாநில அரசு என்கிற முறையில் நாங்கள் பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.



தொழிற்சாலையின் ஒரு தோற்றம்

இந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டு வருகிறோம். மத்திய அரசின் அதிகார வரம்பில் அதிகமான தொழில்கள் சேர்க்கப்படுவதால் தொழில் துவங்க அனுமதி வழங்குவதில் தாமதமும் அதிகமாகிறது. எனவே, அனுமதி வழங்கும் பிடியிலிருந்து பல தொழில்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும். இப்போது இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் நான் கூறுகிற கருத்தை அதன் உண்மையான பொருளில் ஏற்று, முழு அடிப்படையினையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனுமதி வழங்கும் முறையை மறுபரிசீலனை செய்ய மத்திய-மாநில அரசுகளின் பிரதிநிதிகள் கொண்ட உயர் மட்டக் குழுவை அமைத்திடவேண்டும். அனுமதி வழங்கும் முறையால் பாதிக்கப்படுபவை மாநில அரசுகள்தான். எனவே, மாநில அரசுகளின் பிரதிநிதிகள் அந்த உயர் மட்டக் குழுவில் இடம் பெற வேண்டும்.

"தொழில் அனுமதி வழங்கும் கொள்கை முழுவதுமே சிக்கலாக இருக்கிறது. எனவே, தீவிரமான நடவடிக்கைகள் தான் நிலைமையைச்சீர்படுத்த முடியும்".

(நாக்பால் அம்பாடி பெட்ரோல் ரசாயனத் தொழிற்சாலை திறப்பு விழாவில் முதலவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)

புதிய தொழில் யுகம்

மணலியில் 1971 செப்டம்பர் திங்கள் 18-ஆம் நாள் நாக்பால் அம்பாடி பெட்ரோலிய ரசாயனத் தொழிற்கூடம் துவக்கப்பட்டது.

ஐந்து கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற் கூடம் சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு அருகில் அமைந்துள்ளது. 55 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள இந்தத் தொழிற் கூடம் ஒரு காலத்தில் நீரில் மூழ்கிக் கிடந்த வெறும் தரிசு நிலமாகும். பள்ளத்தைச் சமன்படுத்த ஒரு லட்சத்து இருபதாயிரம் கன மீட்டர் மண்ணைக் கொட்டி அதன்மீது தொழிற்கூடத்தை அமைத்திருக்கிறார்கள், நாக்பால் அம்பாடி நிறுவனத்தார். இன்று எங்கும் பிரம்மாண்டமான எண்ணெய்த் தொட்டிகள்—அதனை எடுத்துச் செல்லும் பாம்பு போன்று வளைந்து நெளிந்து செல்லும் குழாய்கள் தோற்றமளிக்கின்றன. தூங்கிய மணலி தொழில் நகராகிறது என்ற முதல்வரின் சொல்லுக்குப் பொருத்தமான காட்சிகள்இவை.

அமெரிக்க "விட்கோ" ரசாயனக் கழகத்தின் தொழில் நுணுக்க உதவியுடன் துவக்கப்பட்டுள்ள இந்தப் புதிய தொழிற்கூடத்தில் தயாராகும் பெட்ரோலியம் தொழில்கள் மூலம் ஆண்டு தோறும் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச் செலாவணி கிடைக்கும்.

இந்தத் தொழிற் கூடத்தில் ஆண்டு தோறும் 15 ஆயிரம் டன் டிரான்ஸ்பார்மர் எண்ணெய்யும், எட்டாயிரம் டன் தனித் தன்மையுள்ள எண்ணெய்கள் (Speciality Oils), (மருந்துகள் தயாரிக்க, வேளாண்மைக்கான மற்றும் பலதரப்பட்ட எண்ணெய்கள்), பதினாறாயிரத்து ஐந்நூறு டன் 'ஒலியம்' ஆகியவை தயாரிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் டிரான்ஸ்பார்மர் எண்ணெய், மின் கருவிகளுக்கு மிகவும் தேவையானது ஆகும். தனித் தன்மையுள்ள எண்ணெய்கள் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கவும், உணவுப் பொருட்கள் தயாரிக்கவும், துருப்பிடிக்காதபடி இயந்திரங்களைப் பாதுகாக்கவும் பயன்படும்.

இங்குத் தயாரிக்கப்படும் பெட்ரோலட்டம்ஸ் (Petrolatums) களிம்புகள் (மருந்து) தயாரிக்கவும் மற்றும் பல தொழில்களுக்கும் பயன்படத் தக்கது.

இவை மட்டுமல்ல. இந்தப் பொருட்கள், மேலும் பல்வேறு புதிய தரமான பொருட்கள் தயாரிக்க மிகவும் உதவும்.

அண்ணலைப் பற்றி அண்ணா

உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள், நாடெங்கும் நன்னாளாகக் கொண்டாடப்
டுகிறது, அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத்
மது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்.

அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும்—அவர் புகழ் பற்றிய பாடல்களை
)சைத்தும்—பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும்
ணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்

அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்—என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த
!ஞ்சா நெஞ்சினர் என்பாரும்;

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைபங்காளர், ஏழைகள் புது வாழ்வு பெற வழிவகுத்தவர்
ன்பாரும்;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர், என்பாரும், இதுபோல, அவரிடம்
|வரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு
|கையினர் உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரி
|றுர் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினை
|ாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர்
ுல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறு
)லர்ச்சியின் உருவகம்.

அவர் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத்
துறையினரும், எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார்
என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும்
அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்தநாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும்
கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே
ஒரு துறைக்கு அல்ல! எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய
பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற
வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும்.
அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்
கிறதா என்ற கணக்குப் பார்க்கவேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடைக்காது; ஒரு
நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு
இந் நாட்டுக்குக் காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான் காந்தியடி
களின் பிறந்த நாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாகமட்டுமின்றி, ஒரு
நாட்டுக்குக் கிடைத்த நற்காலம், என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

அந்த—அரை ஆடை மனிதர் கோடானுகோடி மக்களுக்குமானமுள்ள வாழ்வு
பெற்றுத் தந்ததைவிட "அற்புதம்" வேறென்ன இருக்க முடியும்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும்
நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிடவேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ்
பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல—அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக்
கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய
உணர்ச்சிகளை உயிருள்ளவை யாக்கிட! மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின்
பயன் ஒளியில்! விழாக்களின் பலன் நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே
இருக்கிறது!

தமிழரசு

வெள்ளி விழா மலரில்

மணம்பரப்புவோரில் சிலர்

ஆளுநர் கே. கே. ஷா.
முதல்வர் டாக்டர் கலைஞர்
கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன்
தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன்
அரிசன நல அமைச்சர் சத்தியவாணிமுத்து
உணவு வேளாண்மை அமைச்சர் ப. உ. சண்முகம்
தொழில் அமைச்சர் செ. மாதவன்
பொதுப்பணி அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா
கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
உணவு உற்பத்தி அமைச்சர் அன்பில் தருமலிங்கம்
பிற்பட்டோர் நல அமைச்சர் க. இராசாராம்
மின்துறை அமைச்சர் ஓ. பி. ராமன்
அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன்

தந்தை பெரியார்	நாமக்கல் கவிஞர்
திரு. நெ. து. சுந்தரவடிவேலு	கவிஞர் கருணானந்தம்
பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்	கவிஞர் சுரதா
டாக்டர் மெ. சுந்தரம்	கவிஞர் வாணிதாசன்
டாக்டர் தா. ஏ. ஞான மூர்த்தி	கவிஞர் சாமிபழனியப்பன்
பெரும்புலவர் மே. வீ. வேணுகோபாலர்	கவிஞர் ஈரோடு தமிழன்பன்
கோவை இளஞ்சேரன்	கவிஞர் நா. காமராசன்
சிலம்பொலி சு. செல்லப்பன்	கவிஞர் தமிழ்ப்பித்தன்
டாக்டர் பா. நடராசன்	புலவர் மு. சிக்கந்தர்
தொழிலதிபர் நா. மகாலிங்கம்	பாசொலி
இரா. நாகசாமி	மறைமலையான்
அமிர்தலிங்கம்	சோம. மகாதேவன்
வேங்கடசாமி	
குருமூர்த்தி	திருநாவுக்கரசு

மூவண்ணங்களில்
குடும்ப நலத்துறை அளிக்கும்
சிறப்புப் பகுதி!

மின்துறை வழங்கும்
சிறப்புப் பகுதி!

செய்தித்துறைத்
தோற்றத்தையும்
வளர்ச்சியையும் விளக்கும்
கட்டுரைக் குவியல்கள்!

ஏராளமான
படத்தொகுப்பு

நான்கு வண்ணங்களில்
நானிலத்தின் ஓவியம்



பல்கலைக் கழக...
திருக்குறள் ஆரா...
சிறப்புச்செய்...

இவை மட்டுமல்ல....
இன்னும் ஏராளமான பகுதிகள் ...!

மொத்தத்தில்....
வண்ணக்களஞ்சியமாய்
எண்ணக் கருவூலமாய்த்
தயாராகிறது!

... திங்களில் நடைபெறும்
... விளம்பரத் துறை
வெள்ளி விழாவை ஒட்டி வெளிவரும்

விலை ரூ. 2-50 தான்

தமிழகத்தே காந்தியண்ணல்

தமிழகத்தே காந்தியண்ணல் தாள்பதித்த அந்நாளில்
அமிழ்தான உண்பொருள்கள் ஆக்குகிற நல்உழவர்
கோவணத்துத் திருக்கோலம் கொண்டுழைத்தல் நோக்கிவிட்டு
மேலணிந்த தலைப்பாகை, மிகநீண்ட வேட்டிவிட்டுத்
துண்டெடுத்து வரிந்துகட்டத் தொடங்கிவிட்டார் ; துணிந்துவிட்டார் !
பண்டங்கள் படைக்கின்ற உழவனையே போற்றிவிட்டார் !
சீர்பசுமைப் புரட்சியினால் தென்னகமே ஓங்குவதைப்
பார்வையிட்டால் அடிகளவர் பரவசத்துக் கண்ணீரைப்
பயிர்பச்சை வயல்களிலே பாய்ச்சிடுவார் ; உண்மையன்றோ ?
உயிர்மூச்சாய்த் தன்தேவை தான்நிறைத்தல் ஓம்பியவர்
சேலத்தின் நல்லிரும்பை ஞாலத்தின் நாடுகட்கு
மூலத்துப் பொருளாக முகந்தளித்தல் போற்றுவரா ?
தொழிற்சாலை பற்பலவும் தோற்றுவிக்க வேண்டுமன்றோ ?
கந்தியுடன் எந்திரமும் ககனத்தைச் சாடுகின்ற
அத்தனைநற் பொறிகளையும் ஆக்கிடுக, என்றிடுவார் !
நீர்கடந்து செல்வதுவும் நிறைபாபம் என்றிருந்த
ஆர்வமிலா அந்நாளில் அனைத்துவிதி உடைத்தெறிந்து
சட்டங்கள் பயின்றுவந்தார் ; தளையவிழ்த்து வாழ்வளித்தார் !
எட்டாத திங்களிலும் இணையடிகள் பதிக்கின்ற
இன்றவரே இருந்திட்டால் இல்லாமை பறந்தோட
நின்றுயர்வை நிலைகுலைக்கும் தடைக்கற்கள் நீக்கிவிட்டு
நெறியான வளர்ச்சியினை நிறுத்துகிற இயற்கைநிலை,
அறியாமை வறுமைமற்றும் அலைக்கழிக்கும் சக்தியெலாம்
பூண்டோடு போக்கிடவே ஆணைசெய்வார், அடிகளவர் !
நீண்டுயர்ந்த அசோகத்தின் நிமிர்ந்தமரம் இரண்டங்கே
காந்தியண்ணல் நட்டதென வேலூரில் விளங்குவதை
மாந்தர்நாம் கண்டிடுங்கால் மரம்போலத் தலைநிமிர்வோம் !
பிள்ளைகளும் இரண்டேதான் போதுமெனப் பெற்றுயர
வெள்ளையுள்ளத் தந்தையங்கே சொல்லாமல் சொல்லுகிறார் !
உழைப்பாளர் தமிழர்நாம் உயர்வாளர் ஆகிடவே
தழைப்பித்த காந்தியைப்போல் தளையகற்றித் தலைநிமிர்வோம்!

மனசை ப. கீரன்

இனிமைத் தமிழில் இறை வழிபாடு

கோவை. இளஞ்சேரன்.

''இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிர
யாசத்தையும் பெருமறைப்பையும் போது
போக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரியம்
முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல
ஒட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும்
இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்
கும் மிகவும் இனிமையுடையதாய்த் திரு
வருள் வலத்தால் கிடைத்த தென்மொழி
ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து
அத்தென்மொழிகளாற் பலவகைத் தோத்
திரப் பாடல்களைப் பாடுவித்தருளினீர்''.

மேற்காணப்படுவது கருத்துரை நல்க
வேண்டும் எனும் எண்ணத்தில் எழுதப்பட்ட
தன்று. இறைவனிடமே பேசும் உணர்வில்
எழுந்தது. ஒரு பட்டறிவின் அடிப்படைக்
கருத்து இது.

இவ்வாறு எழுதியவர் தான் வெளிப்படுத்
தும் கூற்றின் தன்மையை,

'' வாய்மட்டிற் சொல்லுகின்ற வார்த்தை
யன்று ;
இது என் மனமொத்துச் சொல்லிய
வாய்மை''—

என்று விளக்கியவர். இவர் மொழித்
துறையில் ஊக்கங் கொண்டவர்
அல்லர். இறை அருளில் தோய்ந்தவர்.
அருளையும் பட்டறிவையும் குழைத்து ஆயிரக்
கணக்கில் பனுவல் தீட்டியவர். தம் பாடல்
களில் அருள் என்னுஞ் சொல் 3,738 இடங்
களில் இயல்பாக அமையப் பாடியவர். அதன்
இயைபாகத் தம் பாடல்களுக்கு ''அருட்பா''
எனப் பெயர் சூட்டியவர். ஆம்; வள்ளலார்
இராமலிங்க அடிகளாரது உள்ளம் வழங்கிய
கருத்து இது. அதனை உணர்ச்சியின் சொற்
றொடர் உருவம் எனலாம்.

மேலே காணப்பட்ட கருத்துரை வள்ளலார்
இராமலிங்க அடிகளாரது என்ற உணர்வில்
மீண்டும் ஒருகால் அன்பர்கள் படித்து மேலே
செல்லலாம்.

வள்ளல் இராமலிங்க அடிகளார் இறை
வன் அருளைப் பெறுதற்குத் துணையாகக்
கொண்டது இனிமைத் தமிழ் மொழி
யையே. அவர்க்கு முன்னர் திகழ்ந்த சமயச்
சான்றோர்களும் தமிழ் கொண்டே இறை
வனை அணுகினர்.

மொழிகளும் இறைவனும்

மொழிகள் யாவும் இறைவனால் ஒலிக்கப்பட்
டவை என்பது சமயத் துறையினரது ஒருவகைக்
கருத்து. அவை சான்றோரால் வழங்கப்படுங்
கால், இறைவனது அறத்தைச் சொல்லவே
பயன்படுத்தப்பட்டன என்பதும் சமயத்
துறைக் கருத்தே. இதனைச் சைவப் பெரு
நூலாம் திருமந்திரத்தை வழங்கிய திரு
மூலர்,

''பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறம்சொன்ன வாறே''

என்று ஆகமச் சிறப்பை விளக்கும் பகுதியில்
பாடினார். பதினெட்டு மொழியும் அண்ட
முதல்வனாகிய இறைவனது அறத்தைக்
கூறின. அறம் சொல்வதாவது வழிபாட்டு
மந்திரமாகக் கூறுவதையும் உட்கொண்ட
தாகும். இப்பதினெட்டுள்ளும் தேர்ந்த
மொழிகள் தமிழும் ஆரியமும். இவ்விரண்
டும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை
என்பர் சமயத்துறையினர். இறைவன்
தமருகம் என்ற தனது தோற் கருவியின்
ஒருபுறத்தில் ஒலியெழுப்பித் தமிழையும்,
மறுபுறத்தில் ஒலியெழுப்பி ஆரியத்தையும்
வெளிப்படுத்தினன் என்பர். இவ்விரண்டு
மொழிகளையும் சிவபெருமான் உமையம்
மைக்கு அருளினார் என்பதாகத் திருமூலர் திரு
மந்திரம்,

''ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே''

என்று பேசுகிறது. இவ்விரண்டு அடிகளும்
ஆகமச் சிறப்பைக் கூறும் பகுதியில் உள்ளவை.
இதன்மூலம் தமிழும் ஆரியமும் ஆகம
மொழிகளே என்பதனைத் திருமூலர்
உணர்த்தியுள்ளார். ஆகமம் என்பது முதல்
வனது மொழி என்றும், சான்றுக்குரிய
அறமொழி என்றும் பொருள்படும்.
எனவே, தமிழும் ஆரியமும் முதல்வனது
மொழிகள் ; சமயத் தொடர்பில் சான்றுக்
குரிய மொழிகள் என்றாகின்றன. சமயத்

துறையினர் ஒரு படி மேலே சென்று
இவ்விரண்டு மொழிகளும் இறைவனது
இரு கண்கள் என்பர். அதனினும் மேலே
சென்று இறைவன் இவ்விரு மொழிகளா
கவே உள்ளான் என்று சமயச் சான்றோர்
பாடியுள்ளனர்:

இறைவன்;

''ஆரியம் தமிழோடு இசையானவன்''
—என்றும்,

''வானவன்காண் வானவர்க்கும் மேலானான்
காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள்
நான்கும்
ஆனவன்காண்''

என்றும் திருநாவுக்கரசர் உள்ளம் குழைந்து
அறிவிக்கின்றார்.

''செந்திறந்த தமிழோசை வடசொல்லாகி''
என்று நம்மாழ்வாரும் தம் திருவாய்
மொழியில் அறிவித்துள்ளார்.

இவ்வாறே இவ்விருமொழிகளையும் இணைத்
தும் தனித்தும் இறைவனோடு தொடர்பு
படுத்திப் பல அருமறை ஆன்றோரும், சமயச்
சான்றோரும் சிற்றிலக்கிய நூலாரும், தனிப்
பாடல் தந்தாரும் பாடியுளர். இவை
கொண்டு தமிழும் ஆரியமும் இறைவ
னுக்கு உகந்த மொழிகள் என்பது அறியப்
படும். இரண்டும் பாடிப் பரவுதற்குரிய
தகுதி வாய்ந்தவை; போற்றித் தொழுதற்
குரிய ஏற்றங் கொண்டவை; அருச்சித்து
வழிபடற்குரிய மந்திரமானவை ஆகும்.
இரண்டும் தெய்வ மொழிகளே எனலாம்.

இவ்வாறிருந்தும், 'இவ்விரு மொழிகளிலும்
ஆரிய மொழி ஒன்றுமே மறைமொழி;
அதன்கண் உள்ளனவே மந்திரங்கள்;
அஃதொன்றே அருச்சனை செய்து வழிபடற்கு
உரியது; எனவே, ஆரிய மொழியே தெய்வ
மொழி தேவபாடை' என்று தமிழர்களே
நம்பும் நிலை வந்தது. கோயில்களில் இறைவன்
திருமுன் அணுக்க மொழியாய் ஆரியமாம்
வடமொழியே நடைமுறை மொழியாயிற்று.

அசைக்க முடியாமல் நிலை பெற்ற
தமிழர்தம் குறைபாட்டால் நேர்ந்த வியப்
களில் இஃதும் ஒன்று.

தமிழ்நாட்டில், தமிழர் எழுப்பிய கோயி
களில், தமிழர் வழிபடுதற்குத் தமி
இல்லை என்பதை வியப்பு என்று குறிக்
வேண்டும்; அல்லது

''காற்செருப்பைப் பிறனொருவன்
கழிவிடத்தில் தள்ளிடினும்
பொறுத உள்ளம்
மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன்மொழியைத்
தமிழைத் தீயோர்
போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தால்
பொறுப்ப துண்டோ?''

—என்று பாவேந்தர் உணர்வில் பொறுக்க
இயலா நிலை என்று கூற வேண்டும்.

இவ்வியப்பு எவ்வாறு நேர்ந்தது? இவ்
வகையில் வினா எழ எவ்வகை நிகழ்ந்தது!

கோயிலும் வழிபாடும்

மிகத் தொன்மை நாளில் இறைவனுக்குக்
கோயில் இல்லை. இயற்கை மரத்தின் அடி
யிடமே இறைவன் அமரும் இடமாக இருந்
தது. ஆலமரத்தின் கீழிருந்து அரன் ஐயந்
தீர்த்தான். அரச மரத்தின் அடியில் அமர்ந்து
புத்தன் அறம் கண்டான். அசோக மரத்தின்
அரும் நிழலில் அருகன் அறம் உரைத்தான்.
இவற்றின் குறிப்பாகவே மக்கள் மரத்தின்
கீழ் இறைவனை அமர்த்தி வழிப்பட்டனர்.
இதன் அறிகுறியாக இன்றும் ஒவ்வொரு
கோயிலிலும் ஒவ்வொரு மரம் ''தலவிருட்
சம்'' என்னும் பெயரில் திருமரமாக அமைந்
துள்ளதைக் காண்கிறோம்.

காலப் போக்கில் இறைவன் உருவைத் தூய்
மையாகப் பேண விரும்பிச் சிறு குடில்களாக-
சிறு இல்லங்களாக அமைத்தனர் இறைவ
னும் கோ அமரும் இல் கோவில் ஆகியது.
படிப்படியாகக் கதைகள் பிறந்தன; கர
ணங்கள் தோன்றின; புராணங்கள் எழுந்தன.
ஆயினும், மக்கள் தாமே நீரும் பூவும்கொண்டு
சென்று இறைவனை வழிபட்
டனர். பூ, நீரோடு படைக்கும் அமுதாம்
பலிப்பொருளும் இணைந்தது. இறையன்பர்
கள் தாமே இறைவனை நீராட்டினர். மலர்
களை இறைவன் திருவடியில் குவியலாகப்
படைத்தனர். பலிப்பொருளையும் திருமுன்
வைத்தனர். தம் குறை சொல்லியும், குறை
யற்ற இறைவனின் நிறைகுணம் பேசியும்
போற்றினர். தம் உள்ளத்து உணர்வைத்
தம் வாயால்-வாய்மொழியாம் தாய்மொழி
யால் வெளியிட்டு ஏத்தினர். மலரை இரு
கை நிறைய ஏந்திக் குவியலாகப் படைக்கும்
வழிபாடே தமிழர்தம் வழிபாடாக இருந்தது.

மலர்ப் படைப்பையும் ஏத்துதலையும்
இணைத்து ஒவ்வொரு போற்றுதலுக்கு ஒவ்
வொரு மலராக இடும் பழக்கத்தை உண்
டாக்கினர் பிறர். இஃதே அருச்சனை என
லாயிற்று. அருச்சனை என்ற வடமொழிச்
சொல்லே இம்முறை வடமொழியாளர் ஏற்
படுத்தியது என அடையாளம் கூறி நிற்கிறது.

இந்நிலையில் தமிழில் மந்திரம் சொல்லி
வழிபடுவதற்குத் துணையாகப் போற்றிகள்
உருவாயின.

''மந்திரம் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திர'' மாம்

''மந்திரம் முந் நூறு'' என்னும் நூல்
எழுந்தது. சுந்தரநாதன் என்னும் இயற்
பெயருடைய திருமூலர் இந்நூலை உரைத்
தார் என்பதை,

''மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்''
—என்று திருமந்திர இறுதிப் பாடல் அறிவிக்
கிறது. இவ்வாறு ஒரு நூல் உருவானதைக்
கொண்டு இறைவழிபாட்டில் வடமொழி
ஆட்சிக்கு மாற்றாக அக்காலத்திலேயே
உணர்வு எழுந்ததாகவும் கொள்ளலாம்.

மக்கள், தாமே நீராட்டி, மலர் படைத்து
ஏத்தும் முறை தேவார மூவர், திருவாத
வூரர், திருமூலச் சான்றோர் காலத்திலும் இருந்
ததை அவர்களது வாய்மொழிகள் பேசு
கின்றன.

''பூவும் நீரும் பலியும் சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்று ஏத்தல் ஓவார்''
—திருஞானசம்பந்தர்.

''பூவோடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார்''
—திருநாவுக்கரசர்.

''குடம் எடுத்து நீரும் பூவும் கொண்டு''
—சுந்தரர்.

''பரந்துபல் ஆய்மலர் இட்டு முட்டாது
அடியே இறைஞ்சி,
இரந்தஎல்லாம் எமக்கே பெறலாம் என்
னும் அன்பர்
—மாணிக்கவாசகர்.

''சிறப்பொடு பூ நீர் திருந்த முன் ஏந்தி''
—திருமூலர்.

இவர்கள் காலத்தில் மக்கள் தாமே வழி
பாடியற்றும் வழக்கத்தோடு வடமறை மந்திர
மும் ஓதி அருச்சிக்கும் பழக்கமும் ஆங்காங்கு
தலையெடுத்தது.

''மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு
வழிபட்டா
வான் ஆளக் கொடுத்தி அன்றே'
—என்கிறார் அப்பரடிகள்.

பல்லவர் ஆட்சி தமிழகத்தில் தலை
யெடுத்தபோது வடமொழிக்கும் வட
மொழியாளர்க்கும் ஏற்றம் கிடைத்தது.
பல்லவ மன்னர்கள் வடமொழியைப்
போற்றி வளர்க்க இயலுவன செய்தனர்.
வடமொழியாளரை மிக மதித்து வந்தனர்
செய்தனர். பல்லவர்களது பேராதரவோடு
இறைவனது திருக்கோயில்களில் வடமொழி
ஒன்றே ஆட்சிபெறும் நிலை வேரூன்றியது.
வடமொழி ஒன்றே தெய்வமொழி—தேவ
பாடை எனும் கருத்து நிலைத்தது.

வடமொழி ஆட்சி இறைவனது அணுக்கத்
தில் திகழ்ந்தது. ஆயினும், கோயிலில் தமிழுக்
கும் இடமிருந்தது. கருவறையில் அன்று;
அதற்கு இப்பாற்பட்ட எல்லையில் இடம்
ஒதுக்கப்பட்டது. இறைவனின் திருவுலா
வில் வடமொழியே இறைவனுக்கு அணுக்க
மாய் ஒலித்தது. தமிழ் ஒரு கோடியில்
இசைத்தது.

இந்நிலையில்தான் நாம், இறைவழிபாட்டிற்
கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பைக்
காண வேண்டியவர்கள் ஆகின்றோம். இறை
வனுக்கும் தமிழ் மொழிக்கும் இயைபு என்ன?
தமிழ்ச் சான்றோர் இறைவன் தொடர்பில்
தமிழுக்கு எத்தகுதியைக் கண்டனர்? சமயத்
துறையினர் கொண்ட தமிழ் உளப்பாங்கு
எத்தகையது? இவ்வினாக்களின் விடைகளில்
தான் தமிழ்வழிபாட்டு முறை இயற்கை
யாகவே வலுப்பெறுகின்றது.

தமிழின் தகுதி

''இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்''
—என்று பிங்கலநிகண்டு தமிழுக்குப் பொருள்
கூறுகின்றது. தமிழ் இனிமை என்னும் பொரு
ளது. நீர்மைஎன்றபொருளால் நீரின் தன்மை
யாகிய தண்மையைக் கொண்டது.

மாணிக்கவாசகரும், ''தண்ணார்
தமிழ்''—என்றார். நீர்மை என்னும்
சொல் பல பொருளைக்கொண்டது.
அப்பொருள்களில் தமிழோடு இயைந்து
வரும் பொருள்களில் இயல்பு என்னும்
பொருளும் ஒன்று. இப்பொருளால் தமிழ்
இயல்பான மொழி என்பது உணரப்படும்.
எனவே, தமிழ், இனிமைத் தமிழ்; தண்மைத்
தமிழ்; இயல்பு மொழி.

தமிழ் தெய்வமொழி

கழாரம்பர் என்னும் தொல்லாசிரியர்
தமிழின் தனிப் பொருளைக் கூற எழுந்தவர்,
''தமிழ் சிவம் இனிமை எனும்
தனிப்பொருளாம்''—என்று தம்
''பேரிசை'' நூற்பாவில் குறித்தார். அவர்
கருத்தில் இனிமைத் தமிழுக்கு முன்னர்
சிவத் தமிழ்—தெய்வத் தமிழ்—இறைத்தமிழ்
எழுகின்றது. தமிழே இறைவனாய், இறை
வனே தமிழாகிறான். தமிழ்ச் சான்றோர்
தமிழுக்குத் தந்த இயல்பான தகுதி இறை.
இறைவனேயாகும் தகுதியுடையது தமிழ்.
தமிழும் தெய்வ மொழியே. வடமொழி

தான் தேவபாடை என்பதன்று. தென் மொழியும் தெய்வத் தமிழே.

இதனைச் சேக்கிழார் சொல்லிக் காட்டு கின்ருர்.

''ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்'' சேக்கிழாரது இந்த உண்மைப் பேச் சில் தமிழ் தெய்வத் தமிழ் மட்டும் அன்று மேன்மைத் தமிழ், மேன்மைத் தெய்வத் தமிழ்; உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதை யாது உலகத்தை அளந்து நிற்கும் தமிழ். ஞாலம் அளந்த தகவால் தமிழ் மன்பதை மொழி. மன்பதை மொழியே தெய்வத் தமிழ் ஆகும் தகுதி உடையது.

சுந்தரரும்,

''பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ் சுடர்''—என்று பரமனைப் பாட்டுத் தமிழ் ஆனவன் என்கின்ருர். அவரே,

''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்''—என்று பாட்டுடைத் தமிழை இறைவனுக்கு ஒப்புக் கூறி உயர்த்திஞர்.

தமிழ் அருள்மொழி

இத்தெய்வத் தமிழால் போற்றியே சமய குரவர் நால்வரும், இறையடியார் பலரும் வியத்தகு அருட்செயல்களை இறைவன் அருளால் செய்தனர்; பெற்றனர் என நூல் களில் காண்கின்ருேம்.

தமிழ்ப்பாட்டு வியத்தகு செயல்களை விளை வித்தது.

தமிழ் எழுதப்பட்ட ஏடு நீரில் ஏறி, நெருப்பில் நின்றது. மறைக்காட்டுக் கதவு திறந்தது; அடைத்தது. ஆண்பனை பெண் பனை ஆகியது. எலும்பு பெண்ணாகியது. நஞ்சு நீங்கியது. நஞ்சு அமுதாகியது. சுடு காளவாய் சுரும்புத் தடாகம் ஆனது. யானை பணிந்தது. கடலில் கல் மிதந்தது. நெல்லும் பொன்னும் சோறும் வந்தன. ஆரூர்த் தெருவில் இறைவனே நடந்தான். இழந்த கண்கள் மீண்டன. முதலையுண்ட குதலை மீண்டான். வெள்ளை யானை வந்தது. நோய்கள் தீர்ந்தன. பகைகள் முறிந்தன. இவ்வாறு பட்டியல் நீண்டது. யாவும் தமிழ்ப்பாடலால் என்று காண்கின்ருேம்.

வள்ளலார் இவையெல்லாம் கூட்டி,

''வடிக்குறும் தமிழ் கொண்டு அன்பருக்கு அருளும் வள்ளல்''—என்ருர். தமிழ் இறைவனது அருளைப் பெறும் தகுதி உடை யது ஆகிறது.

தமிழ் இறைவன் உணவு

தமிழ்ப்பாட்டு இறைவனுக்கு உவப் பானது; அவனது அருளைச் சுரக்கவைப்பது மட்டும் அன்று, இறைவனுக்கு உணவாகவும் அமைந்தது.

இறைவனை வந்திக்கும் முறைகளுள் வெந்தழல் வளர்த்து வேள்வி செய்யும் முறை; வடவரால் உண்டாக்கப்பட்டுத் தமிழகத்தில்

புகுத்தப்பட்டது. திருவள்ளுவப் பெ தகையார்.

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணுமை நன்று''—

என்று மாற்று முறையால் வேள்வியைக் குறிப்பாகக் கண்டித்தார். இக்குறளில் குறிக்கப்படும் ''அவி'' இறைவனுக்கு உரிய உணவு என்னும் பொருளது. இறைவனுக் குரிய உணவாகப் பலிப் பொருள்களை வேள்வி வேள்வியின் தீக்குழியில் நெய் சொரிந்து இடுவர். அஃது அவி எனப்படும். தீயில்வெந்து ஆவியாய் அவிவதால்—ஆவியாவதால் (அவி -ஆவி-அவி) அவி எனப்பட்டது. வேள்வித் தீ இல்லாமலே--வேள்வி செய்ய மாட்டாராய்— தமிழ்ப்பாட்டை அவியாக இறைவனுக்கு ஊட்டினர் திருமூலர். காலையில் பாடி ஊட் டினர். மாலையில் பாடி ஊட்டினர். அதைப் பாடுகிருர்:

வேட்டுஅவி உண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் யாமிலம்; காலையும் மாலையும்
ஊட்டு அவி யாவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டு அவி காட்டுதும், பால் அவியாமே''

—என்பது அவர் காட்டும் பாட்டு. இதன்கண் உள்ளம் குளிர்விக்கும் பாட்டை அவி என் கின்ருர். தீக்குழி வழியாகச் செல்லாத அவியன்ருே? அதனல் அது குளிர்ந்து பால் போன்ற சுவையான உணவு ஆயிற்ரும்.

வெந்தழல் வளர்க்கும் வேள்வி முறை செந்தமிழ்த் திருமூலர்க்கு ஒத்தது இல்லை போலும். அதனல்தான் ''காட்டவும் யாம் இலம்'' என்று இப்பாடலிலும் குறித் தார் பின்னரும்,

நன்னெறி செல்வார்க்கு ஞானத்தின் ஏகலாம்'
புன்னெறி யாகத்திற் போக்கில்லை தானே'

—என்ருர். வேள்வி முறை தாழ்வானது என்பதைப் ''புன்னெறி யாகம்'' என்பதால் குறித்தார்.

இப்பாடல் [வேட்டு அவி பாடல்] ''சிவ பூசை''யை விளக்கும் பகுதியில் அமைந்த பாடல் என்பதைக் குறிக்க நேர்கின்றது- வழிபாட்டு—பூசை முறையாகத் தமிழ்ப் பாட்டைப் படைத்தலைக் கூறினர் என்பதை இவ்விடத்தில் நினைவிற் கொள்ளவேண்டும்.

அருச்சனை தமிழ்ப்பாட்டே

இவற்றையெல்லாம் உளத்துக்கொண்டே சேக்கிழார், ''அருச்சனை பாட்டே ஆகும்'' என்ருர். அதனையும் தாம் கூறுவதாக இல்லாமல் இறைவனே சுந்தரமூர்த்தியிடம் ஏவல் இடுவதாக,

''அருச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக'' என்ருர்

தூமறை பாடும் வாயார்''—என்று பாடினர். தூமறை பாடும் வாயை உடைய வரையே 'தமிழ்ப்பாட்டே அருச்சனை ஆகும்' என்று பேச வைத்துள்ளார் சேக்கிழார். இதில் சேக்கிழாரின் உள்ளெண்ணம் புலனு கின்றது. இறைவன் ''சொற்றமிழ் பாடுக'' என்று சுந்தரரைப் பணித்தான். ஒரு வரைத் தமிழில் பாடுவதற்குப் பணித்தவன் மற்ருெருவரைத் தமிழ் மந்திரம் பாடுவதற் காகப் படைத்தாஞம். அவ்வாறு படைக்கப் பட்டவர் திருமூலர். அவரே பேசுகின்ருர்:

''என்னைநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைநன் ருகத் தமிழ்செய்யு மாறே''

தன்னை நன்ருகத் தமிழால் போற்ற வேண்டுமென்பது இறைவனது பேரவா. அதனுல் நன்ருகவே படைத்துள்ளாஞம். இறைவனே பெரும் புகழ் விரும்பிதான். அந்தப் புகழையும் தமிழால் கேட்பதில் பெருவிருப்பினன். அப்பெருவிருப்பில் இறைவன் தன்னைத் தானே தமிழிற் பாடிக் கொண்டவன். வைணவப் பெரியார் நம்மாள்வாரைக் கருவியாகக் கொண்டு பாடிக்கொண்டான். இதனை, நம்மாள் வாரே,

''அன்றைக் கன்று என்னைத் தன்னுக்கி
இன்றமிழ் பாடிய ஈசன்''—என்று பாடிப் பூரித்துள்ளார். அங்கு நன்ருகப் படைத் தான். இங்கு தானே அடியவராகி நாளுக்கு நாள்—அன்றைக்கு அன்று—ஆக்கிக்கொண் டான். தன் புகழைத் தானே புதிது புதிதாகத் தமிழில் சுவைத்துள்ளான் இறை வன்.

இதுவரை கண்ட சான்றுகளால் தமிழி னது தகுதிப்பாடு பல முனைகளில் மிளிர் வதைக் காணலாம். தமிழ் தெய்வமொழித் தகுதி உடையது. அருள்மொழியாம் தகுதி கொண்டது. இறைவற்கு உணவாகும் தகுதி கொண்டது. இறைவற்கு மிக உவப்பாகும் தகுதி கொண்டது. இறைமைக் குரிய இத்துணைத் தகுதிப்பாடுகள் இருந்தும் தமிழ் எவ்வாறு கோயிலில் கருவறைக்கு வெளியே நிறுத்தப்பட்டது? வழிபாட்டு— அருச்சனை—போற்றி மொழியாக வடமொழி எவ்வாறு முடிசூடிக்கொண்டது? எவ்வாறு கருவறைக்குள் தனியாட்சி செலுத்தி வரு கின்றது? இந்நிலை தமிழருக்கு ஒரு மானக் கேடான நிலையே. இந்த அளவுக்குத் தமிழரின் சூழல் நெடுங்காலத்திற்கு முன்னரே கெடத் துவங்கிவிட்டது. இக்கேட்டின் துவக்கத்திற்குத் தமிழ்ச் சமயச் சான்ருேரும் அறிந்தோ அறியாமலோ ஓரளவில் துணை போயினர் எனலாம்.

வடமொழிக்கும் இடம்

தேவார மூவர் காலத்தின் தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்



களாகவே இருந்தன. அவர்களது பாடல் களில் இதனைத் தெள்ளத் தெளிவாகக் காண் கின்ருேம். ஆனல், பிற்காலச் சமயத் துறையினர் தேவார மூவர்க்கு வேறுபட்டு வடமொழியில் பெயர்களை மாற்றி வழங்க இடம் தந்தனர்; தாமும் வழங்கினர். இடைக்காலத்தில் சிறுகச் சிறுக வடமொழிப் பெயர்கள் செருகப்பட்டன. இதுபோன்றே சிறுகச் சிறுக வடமொழி மந்திரங்கள் தமி ழோடு இடம் பெற்று 'ஒண்ட வந்த பிடாரி ஊர்க் கடாரியை விரட்டிய' தாய், 'இடத்தைக் கொடுத்தால் மடத்தையே பிடுங்கிய' துறவிக் கதையாய் ஆகிவிட்டது.

இந்நிலைக்கு முற்காலச் சமயச் சான்ருே ரின் பெருந்தன்மையே காரணமாயிற்று. நந்தம் செந்தமிழோடு வடமொழியும் இறை வனின் அணுக்க மொழியாய் இடம்பெற்றது. இவ்வாறு இடம்பெறச் சான்ருேர் தம் பெருந் தன்மையாலும் பரந்த உளப்பாங்காலும் இசைந்தனர்; ஏற்றனர்; போற்றினர்.

ஞானசம்பந்தராம் ஆளுடையபிள்ளை,

''தம் மலரடியொன்று அடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர''

என்று பாடினர். இவ்விரு அடிகளுட் கூர்ந்து நோக்கத்தக்கன. முன் அடி, அடிய வர்கள் பாடலாலும் தொழுகையாலும் பரவுதலைக் குறிப்பது. ,பின் அடி, இறைவ னது நிறை குண', புகழைப் போற்றியாகச் சொல்லி. அப்போற்றியை இறைவன் தாளில் படைக்கும் அறிகுறியாய், மலரைத் தூவி வழிபாடு இயற்றும்—அருச்சனையைக் குறிப் பது. அப்புகழ்மொழி தமிழ்ச் சொற் போற்றியாகவும், வடசொற் போற்றி யாகவும் தனித்தனியே அமைந்ததைக் குறிக் கிறது. வழிபாட்டில் தமிழ் வழக்கோடு வட மொழியும் இடம்பெற்றுப் புகுந்துள்ளதை உணரலாம்.

''முத்தமிழும் நான்மறையும் ஆனன் கண்டாய்''—என்று பாடிய திருநாவுக்கரசர் அவ்விரு மொழி நிலைக்கும் ஏற்ப இறைவனை யும் இருநிலையில் கண்டவராய்,

''ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்'' —என்று பாடினார். இறைவனை ஆரிய னாகக் காணும்போது செந்தமிழோடு ஒட்டிய ஆரியனாகக் கொண்டு,

''செந்தமிழோடு ஆரியனைச் சீரியனை''— என்று பாடினார். 'செந்தமிழ் ஆரியனை' என்று குறிக்காமல் 'ஓடு' சேர்த்துச் ''செந்தமிழோடு'' என்று குறித்ததில் ஒரு தனிக்கருத்து உண்டு.

'ஓடு' என்னும் மூன்றும் வேற்றுமை உருபு, உயர்ந்த பொருளையே சாரும். ''ஒரு வினை ஓடுச்சொல் உயர்பின் வழித்தே'' என்கிறது தொல்காப்பியம். 'ஆசிரியனோடு மாணாக்கன் வந்தான்' என 'ஓடு'வை உயர்த்த ஆசிரியனோடு சேர்த்தே கூறவேண்டும். 'மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான்' என்று கூறக்கூடாது. இவ்வகையில் ''செந்தமிழோடு ஆரியன்'' என்னும் தொடரில் செந்தமிழ் ஆரியநிலைக் கடவுளுக்கு உயர்வாய்க் கூறப்பட் டது. இக்குறிப்பால் செந்தமிழில் வழிபாடியற் றல் தனியாகக் குறிக்கப்பட்டதாகக் கொள்ள லாம். அவரவர் தம் தம் மொழியில் பூசித் தனர் என்பதை நம்மாள்வாரும்,

''உலகர்கள் எல்லாம்
தங்கள் அன்பு ஆரத் தமது சொல்வலத்தால்
தலைத்தலை சிறந்து பூசிப்ப''—என்றார்.

இவ்விடத்துப் பகவத் கீதையில் கண்ணன் கூறியதையும் காணல் இயைபாகும்.

''யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு நான் அப்படியே அருள்புரி கின்றேன்.'' வடமொழி நூலிலும் அவ ரவர் விருப்பப்படி அவரவர் மொழியிலே வழிபடல் விலக்கப்படவில்லை என்பதை உணரலாம்.

திருமூலர்,

''தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும், அவனை உணரலும் ஆமே''—

என்று பாடியது கூர்ந்து நோக்கத்தக்கது. இவ்விரண்டு அடிகளுக்கு முன் இரண்டு அடிகள் உள. அவற்றில், ஆன்மா பற்றால் பிணிக்கப்படுவதும், விடுபடுவதும், முடிவில் போதலும் குறிக்கப்படுகின்றன. இங்குள்ள 'உணர்த்தும்' என்னும் சொல் 'ஆன்மாவின் நடப்பை உணர்த்தும் என்றும், பின்னுள்ள 'அவனை-இறைவனை-உணர்த்தும்' என்றும் இயைந்து பொருள்படும். ''உணரலும் ஆம்'' என்பது தமிழ்ச் சொல்லாலும், வட சொல்லாலும் இறைவனை உணர முடியும். என்பதை வலியுறுத்துவது. 'தமிழ்ச்சொல், வடசொல்' என்று சொல்லைக் குறித்திருப்ப தால் இது போற்றி வழிபடும் அருச்சனையைக் குறிப்பதாகும். 'தேவபாடை வடமொழி தான், அதுதான் இறைவனை உணர்த்தும்' என்று கூறும் இக்காலத்துப் பெருமக்களுக்கு இவ்வடிகள் தக்க குறிப்பைத் தருவன. தமிழ்ச்

சொல்லோடு வடமொழிக்குத் தமிழரால் பெருந்தன்மையோடு கூடிய பரந்த மனப் பாங்கோடு இடமளிக்கப்பட்டது என்பதைத் ''தமிழ்ச்சொல்'' முன்னே அமைந்து அறிவிக் கின்றது.

திருமூலர் காலத்தில் போற்றிக்கு இரு மொழிகளையும் காட்ட வேண்டிய சூழல் இருந்தது. ஆயினும், அப்பர், ''செந்தமி ழோடு ஆரியனை'' என்றது போன்று திரு மூலரும் மற்றோரிடத்தில் செந்தமிழ் வழக்கை வலியுறுத்தியுள்ளார்:

''செந்தமிழ்ஆதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நவம் உரைத்தானே''—இது

'வயிரவி மந்திரம்'என்னும் பகுதியில் வருவது. இதில் நந்தியாம் தலைவனே உரைத்ததாகக் கூறினார். 'செந்தமிழ் முதலியவற்றால் இறைவியின் நிலையைத் தெளியலாம். அவ் வாறு தெளிந்து வழிபடு' என்று ஆணையிடு கிறது இவ்வடி. இங்கேயுள்ள 'வழிபடு' என்னும் சொல்லை நினைக்கவேண்டும். இப் பாடல் அமைந்த பகுதி மந்திரம் (வயிரவி மந்திரம்) என்ற சொல் இணைந்து இருப்பதை யும் இணைக்க வேண்டும். இந்நினைப்பாலும் இணைப்பாலும் வழிபாட்டுக் கருத்து அறி விக்கப்பட்டுள்ளதை உணரலாம். வட மொழி, ஆதி (முதலிய) பட்டியலில் அடக்கப் பட்டதும் ஒரு குறிப்பே.

சமயச் சான்றோர் ஆங்காங்குக் குறித் துள்ள கருத்துக்களைக் கொண்டு,

மக்கள் தாமே (குருக்கள் இன்றி) வழி
பட்டனர்;
அருச்சனை வெய்யும் வழிபாட்டுமுறை
புகுத்தப்பட்டது;
அஃதும் தமிழ்ச் சொற்போற்றியாகவே
நிகழ்ந்தது;
காலப்போக்கில் வடசொற்போற்றியும்
ஒட்டி இடம்பெற்றது;
காலப்போக்கில் வழிபாடியற்றிவைக்கக்
குருக்கள்—பூசாரிகள் அமைந்தனர்.
குருக்கள் வடமொழியாளராய் வடமொழி யைப் புகுத்தினர்.

தமிழ்ப் போற்றிமுறை தள்ளப்பட்டது.

''ஓசை ஒலியெலாம் ஆன'' இறைவன் தமிழ் ஒலியை மட்டும் நீக்கியவனாக ஆக்கப் பட்டுள்ளான்.

தமிழில் வைதாலும் வாழ வைப்பான்

நம் காலத்துப் பாரதியாருக்கும் தமிழ் வழிபாட்டு எண்ணம் தோன்றியது. எந்தச் சொல்லால் இறைவனை விரைவில் வரவழைக்க முடியும் என்று நினைத்தார். அந்நினைப்பைச் ''சொல்'' என்னும் தலைப்பிட்டுச் சில பாடல் களால் வெளியிட்டார். தொடக்கப் பாடல்,

''தேவர் வருக என்று சொல்வதோ?—ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினால்
ஆவல் அறிந்து வருவீர்கொலோ?—உம்மை
அன்றி ஒரு புகலும் இல்லையே''—என்பது

தமிழ் மொழியால் போற்றினால் இறைவன் ஆவல் அறிவான் என்ற கருத்தின் வெளிப் பாடு இது. தொடர்ந்து பல தமிழ்ச் சொற்களைச் சொல்லிப் பாடியவர் இறுதியில்,

''அமிழ்தம் அமிழ்தம் என்று கூறுவோம்—
நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்;
தமிழில் பழமறையைப் பாடுவோம்—
என்றும்
தலைமை, பெருமை, புகழ் தேடுவோம்"

—என்று முடித்துள்ளார். இறைவனைப் போற்ற அமிழ்தம் என்ற தமிழ்ச் சொல்லைக் கூறினார். ''மலர் தூவி'' என்று குறித் திருப்பதைக் கொண்டு அருச்சனை செய்தற்குப் போற்றியாகத் தமிழ்ச் சொல்லைப் பயன் படுத்தலாம் என்று குறித்தார் எனக் கொள்ள முடிகிறது. தமிழர் பாடுவதுதான் தமிழர்க்குத் தலைமை ; தமிழர்க்குப் பெருமை; தமிழர்க் குப் புகழ் என்றார்.

தமிழ்ச்சொல்லைக் கூறினால் இறைவன் ஆவலறிந்து வருவாரோ என்று பாரதியார் கருதினார். ஆயினும், ''ஆவலறிந்து வருவீர்கொலோ'' என்று தொடங்கியதில் 'வாராமலும் இருந்துவிடுவீரோ' என்ற ஐய உணர்வு ஒலிக்கிறது.

ஆனால், முருகன் அடியார் ஒருவர் இந்த ஐயம் இன்றி உறுதிக் குரல் கொடுத்தார்.

''மொய்தார் குழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரையும் இங்கு வாழவைப்பான்''

—என்று பாடினார்.

தமிழில் புகழ்ந்து பாடும் வாழ்த்துக்கும் 'அருள்செய்வான்; வசைக்கும் அருள் செய் வான். இயற்றமிழால் ஓர் ஏச்சு; இசைத் தமிழால் ஒரு வசை; நாடகத் தமிழால் ஒரு திட்டு, என்று முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன்' என்றன்றோ இப்பாடல் பேசுகின்றது. முருகன் புகழைத் திருப்புகழாகப் பாடிய அருண கிரியாரது கருத்து இது. இது நயம் தோய்ந்த கருத்தாயினும், இதில் முருகன் தமிழைக் கேட்டால் உள்ளம் குளிர்பவன்



என்ற கருத்து நிறைவாக விளங்குகிறது. முருகன் தமிழ்க் கடவுள் அன்றோ? அதனால் தான் தமிழால் வைதாலும் வாழவைப்பவ னாகின்றான்.

முற்காலத் தமிழர் உணர்வு

இவ்வாறு தமிழருமையை உண்மை யாக அறியாதவர்கள் எக்காலத்திலும் இத்தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களை எண்ணி ஒரு புலவர் (யாரென்று அறிதற்கில்லை) சினங்கொண்டார். சிறிது வன்மையாகவே சாடிப் பாடினார்.

''பேயறிவார் முழுமூடர் தமிழருமை
அறிவாரோ பேசுவாரோ?
நாயறியா தொருசந்திச் சட்டிபானையும்
இந்த ஞாயந்தானே''

—என்பது அப்பாட்டு. இது தண்டலையார் சதகம் என்னும் நூலில் உள்ளது. 'மூடர், பேய் அறிவார்; நாய் போன்றவர்' என்னும் சொற்கள் மிகக் கடுமையானவை என்றாலும் ''வேண்டும் இவர்களுக்கு'' என்று சொல்லச் சிலருக்காகிலும் தோன்றும்.

இந்த ஏச்சையும் மீறிய வன்செயலாக நக்கீரர் நடந்துகொண்ட கதையும் வழங்கப் படுகிறது. ''ஆரியம் நன்று; தமிழ் தீது'' என்று கூறிய குயக்கொண்டான் என்பவனை எதிர்த்துச் சாகடிக்கவும் நக்கீரர் எழுந் தாராம்'' இது வேண்டாத ஒன்றாகிலும், அப்படி ஓர் உணர்வு முன்காலத்திலேயே நக்கீரருக்கோ எவருக்கோ எழுந்தது நினைக்கத் தக்கதே.

இவற்றிற்கெல்லாம் பின்னரும் இறை வனை அண்ட இயலாமல் தமிழ் தள்ளித் தடுக்கப்பட்டிருப்பதை உணர்ந்தும் உணரா தவர்போல் 'சிவனே' என்றிருக்கும் தமிழர் களைப் பார்த்தார் பாவேந்தர் பாரதிதாசனார்.

''உயிர்போன்ற உங்கள்தமிழ்
கடவுளுக்கே உவப்பாதல் இல்லை
போலும்;
உயிர்போன்ற உங்கள்தமிழ்
உரைத்தக்கால் கடவுள் அதை ஒப்பார்
போலும்''

—என்று பாடித் தமிழுணர்வைக் கெல்லப் பார்த்தார். அசையாத தமிழர் களை எண்ணி நொந்து, தமிழையே பார்த்துத் தமிழன்னாய் !

''.........வன்பு
தொடுத்துமகிழ் நெஞ்சுடையார்
தோன்று
துறைதோறும் நின்னெழிலைத் வண்ணம்
தடுத்துவரல் நினைக்கையிலே
நெஞ்சுபதைக்கும் சொல்ல வாய்
பதைக்கும்''

—என்று பதைத்து நின்றார். அவர் அத்துடன் நிற்பவர் அல்லர்; நின்றவர் அல்லர்.

''சொற்கோவில் நற்போற்றித்
திருஅகவல் செந்தமிழில் இருக்கும்போது
கற்கோயில் உட்புறத்தில்
தால்வைத்த தெவ்வாறு சந்திர வாமம்''

—என்று விடை காண முடிந்த வினைவை எழுப்பினர். இவ்வினவிற்குரிய விடையைத் தமிழர்க்கு உணர்த்தத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் முனைந்தார். இன்றையத் தமிழ்நாட்டுத் தமிழ் நெஞ்ச அரசு விடையைப் பெருந்தன்மையோடு (வடமொழிக்கும் இடம் தந்து) செயற்படுத்துகின்றது. இதுகருதியும் தமிழ்ப்பெருமக்கள் தமிழ்நாட்டு அரசை—அதன் முதல்வர் டாக்டர் கலைஞரை—அமைச்சரவையை உள்ளம் நிறைந்த மகிழ்வுடன் பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

தமிழ் மந்திரம் எது ?

தமிழின் பேரிலக்கண நூல் தொல்காப்பியம் மறையையும் மந்திரத்தையும் பின்வருமாறு விளக்குகின்றது :

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''—

என்று இந்நூற்பா குறிக்கின்றது. இந்நூற்பாவின் ஈற்றில் உள்ள 'என்ப' என்னும் சொல் 'என்று முன்னோர் சொல்லுவார்கள்' என்னும் பொருளைக் கொண்டது. இது கொண்டு இக்கருத்து தொல்காப்பியத்திற்கு முற்பட்ட தொன்மைக்காலத்திலேயே உள்ளது என்பது விளங்கும். தமிழ்ப் புலமை சான்ற சான்றோர் யாவரும் நிறைமொழி மாந்தர்களே. அவர்கள் வலியுறுத்திக் கூறும் யாவும் மறைகளே. அம்மறைகளே மந்திரங்கள் என்பதை ''மறைமொழி தானே மந்திரம் என்ப'' எனும் அடியில் உள்ள ''தானே'' எனும் சொல் உறுதிப்படுத்துகின்றது. இங்குக் குறிக்கப்படும் மந்திரம் தமிழ் மந்திரமே. இதற்கு உரை எழுதிய பேராசிரியர் என்னும் உரையாசிரியர்,

''தானே என்று பிரித்தார், இவை
தமிழ் மந்திரம் என்றற்கு''—என்றார்.

எனவே, தமிழ்ப்பெருஞ் சான்றோர்களது நூல்களாம் தமிழ் மறைகளிலிருந்து இறைவன் புகழ் தோய்ந்த பெயர் அமைந்த தொடர்களைத் தொகுத்துப் போற்றியாக்க வேண்டும். அருச்சனை—வழிபாடு என்பதைப் போற்றி என்றே வழங்கலாம்.

முடிவுரை ஒன்றே

தமிழ் வழிபாட்டிற்கு—போற்றிக்கு விரிவான விளக்கம் கூறுதலும், சமயச் சான்றோரைச் சான்றுக்கு அழைத்தலும் இலக்கியங்களிலிருந்து சான்றுகள் காட்டுதலும் இலக்கண இவைபோன்ற எவையும் ஒரு தொடருக்கு முன் வேண்டாதனவே. அத் தொடர் பின்வருவது. இத்தொடரே முடிவுரை.

தமிழ் நாட்டில் தமிழ்

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை. இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, செட்ட கனவுகள், ... குணப்படுத்தப் புதிய சக்தி, புதுமலர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 80·00. ஜாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ரத்னம்.

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி, S.I.

போன்: 16

தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்:

41, நைனியப்பன் தெரு, G. T., சென்னை-1.

போன்: 21448

வெண்பாப் போட்டி–20

ஈற்றடி :

நாளும் விளையும் நலம்

முடிவு நாள் : 15—10—1971

பரிசு :

ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெற வேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

பாலை சோலையாகிறது

கவிஞர்களின் கனவுகள் பல, காலப்போக்கில் நனவாகிக் கொண்டு வரும் உண்மையினை இந்த உலகம் அறிந்து கொண்டிருக்கிறது.

முதலில், கவிஞர்களின் கனவுகள் பலருக்கு வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தாலும் கூட அவை நனவாகி வரும்போது, உலகம் அந்த நற்பயனைத் துய்க்க மறுத்ததில்லை.

'பாலைவனம் சோலைவனம்
ஆக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து
பாட வேண்டும்'

என்று, கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்பு கனவு கண்டார்கள். 'அன்புடைமை'யின் இன்றியமையாமையை வலியுறுத்த வந்த திருவள்ளுவர் - 'அன்பின் வழியது உயிர்நிலை' என்று பாடிய திருவள்ளுவர்—

'அன்பகத் தில்லா உயிர்
வாழ்க்கை
வன்பாற்கண் வற்றல்
மரந்தளிர்த் தற்று'

என்னும் குறட்பாவின் வாயிலாக, 'அன்பில்லாத உயிர் வாழ்க்கை, பாலைவனத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது' என்று கூறுகிறார். பாலைவனத்தில் பசுமரமே தளிர்க்காது என்றால், பட்டமரம் தளிர்ப்பதெங்கே ?

'பாலை' எப்படி உருவானது என்பதைப் பழந் தமிழ் இலக்கியங்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. பழந்தமிழ்ப் புலவர்கள், நிலத்தைக் 'குறிஞ்சி', 'மருதம்', 'முல்லை', 'நெய்தல்' என நால்வகையாகப் பிரித்துக் காட்டினர். ஆம். தொடக்கத்தில் 'பாலை' யில்லை. பின்னர், காலப்போக்கில் 'முல்லையும் குறிஞ்சியும் நல்லியல்பிழந்து', நிலையில் திரிந்து, பாலையாயிற்று என்பர். 'பாலை'யின் வெம்மையையும், அஃது உயிர்களுக்கு உண்டாக்கும் வெங்கொடுமையையும், அதன் வேறு பல தன்மைகளையும் இலக்கியங்கள் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் உணர்த்துகின்றன.

'கற்றவர் ஏத்தும் கலி' எனப் போற்றத் தக்க 'கலித்தொகை'யில் 'பாலைக்கலி' என்றே ஒரு 'பகுதி'யுள்ளது. இப் 'பாலைக்கலி' யைப் பாடியவர், 'பெருங்கடுங்கோ'. இவர், பாலை பாடிய காரணத்தால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என்றே பெயர் பெற்றார். இவர் தவிர, 'பாலைக் கெளதமனார்' என்றொரு புலவரும் அந்நாளில் வாழ்ந்து இலக்கியத் தொண்டு புரிந்துள்ளார். 'பதிற்றுப்பத்து' என்னும் நூலில் மூன்றும் பத்துப் பாடியவர் இவரே.

சில இடங்களில் மழை பெய்யாமையாலோ, ஒருகால் மழை பெய்தாலும் மேற்பரப்பு மணற்பாங்காகவோ, பாறையாகவோ இருப்பதால் நீர் கவறிப் போவதாலோ அந்தப் பகுதி நீர்வளமில்லாமற் போகும்—வறண்டு போகும். இத்தகைய நிலப் பகுதிகளில் பயிர், பச்சைகள் செழித்து வளர மாட்டா.

இது தவிர, மழை மறைவுப் பிரதேசங்களில் மழையின்மை யாலும், 'பாலை' தோன்றக் கூடும். மழையின்மை அல்லது வறட்சி, வெப்பமண்டலப் பாலைவனத்தின் சிறப்பியல்பாகும். வெப்ப மண்டலப் பாலைவனங்கள் என்றால், அவை முற்றிலும் வறண்டவையல்ல. அப்பகுதிகளில் முறையாக மழை பெய்வதில்லையே தவிர, எப்போதாவது மழை பெய்யும். அப்படிப் பெய்யும் மழை, பயிர் வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க அளவாக இராது. ஒரு பெருகால், மழை பெய்தாலும், பெய்யும் மழை அங்கு தேங்கி நிற்பதில்லை. அது, வெள்ளமாகத் திரண்டு, வழிந்தோடி விடும். இதனாலும், அந்தப் பகுதிக்கு ஆக்கமில்லை.

பொதுவாக, வெப்ப மண்டலப் பாலைகளில் ஆங்காங்குச் சில 'பசுந்திடர்கள்' காணப்படும்; அந்தப் பசுந்திடர்களில் ஓரளவு நீர்ப் பாசன நீர்ப்பாசன வசதியிருக்கும். வசதியுள்ள இந்த இடங்களில், கோதுமை, தானியம், பருத்தி, பேரீச்சை, அத்தி ஆகிய மரங்கள் நன்கு வளரும்: அந்தப் பாலைவனப் பசுந்திடர்களில் வாழும் மக்கள் பேரீச்சம் பழம், உப்பு, தோல் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு வாணிகம் செய்கின்றனர். கால்நடைகளை வளர்க்கின்றனர். இவர்கள், தங்கள் போக்குவரத்துக்கும் வாணிகப் பொருள்களைக் கொண்டு செல்லவும் ஒட்டகங்களையே பயன்படுத்துகின்றனர்: ஒட்டகத்தின் உடல் அமைப்பு, பாலைவனத்தில் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அது மட்டுமல்ல—நீர் வசதியற்ற அந்தப் பாலைவனத்தில் — வெப்பம் நிறைந்த அந்தப் பாலைவனத்தில் பயணம் செய்யும் ஒட்டகம், தனக்குப் பல நாட்களுக்கு ஆவியாக்காமல் வேண்டிய குடிநீரை சேகரித்து வைத்துக் கொண்டு, தனக்குத் தேவையானபோது பயன்படுத்திக் கொள்ளத்தக்க 'இயற்கையமைப்பு'க் கொண்டதாகவும் இருக்கிறது. எனவேதான், ஒட்டகத்திற்குப் 'பாலைவனக் கப்பல்' எனும் பெயர் தோன்றியது போலும்!

மழையின்மை அல்லது வறட்சியைச் சிறப்பியல்புகளாகக் கொண்டவை வெப்பமண்டலப் பாலைவனங்கள். ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள சகாராவும் கலகாரியும், ஆசியாவிலுள்ள அரேபியத் தார்ப் பாலைவனமும்,

யாப் பாலைவனமும் ஆஸ்திரேலியாவிலுள்ள மேற்குப் பாலைவனமும், தென் அமெரிக்காவிலுள்ள ஆட்டக்காமா பெருவியப் பாலைவனமும், கலிபோர்னியா அருகிலுள்ள கொலராடோப் பாலைவனமும் வெப்ப மண்டலப் பாலைவனங்களாகும்.

இத்தகைய வெப்பமண்டலப் பாலைவனங்களில், நிழல் தரும் மரங்களை வளர்த்துக் கோடையிலே குளிர்தரும் சோலைகள் எழுப்பி அங்கு இளைப்பாறித் திரும்பும் வகையில் சாதனை புரிந்துள்ளது விஞ்ஞான உலகம் என்பது நம்மில் பலருக்கு நம்ப முடியாத செய்தியாக இருக்கலாம். ஆனாலும், அது அப்பட்டமான உண்மையாகும்.

அண்மையில் ஒரு பிரிட்டிஷ் நிறுவனம், இத்தகு வியக்கத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது. அது, சகாராப் பாலைவனத்தில் 400 ஏக்கர் மணற்பரப்பிற்கு 'மண்சிகிச்சை' யளித்து, மரம் வளர்த்துக் காட்டியிருக்கிறது. கடந்த ஆண்டு, கொதிக்கும் மணல் வெளியாக இருந்த அந்தப் பகுதியில் இப்போது 60,000 யூகலிப்ட்ஸ் மரங்கள் தளதளவென்று ஓங்கி வளர்ந்து நிழல் தருகின்றன. முன்பு வெப்பக் காடாக-கொதிக்கும் மணல் வெளியாக விளங்கிய அந்தப் பகுதியே இப்போது பசுமையாகவும் குளுமையாகவும் மாறிக் காட்சியளிக்கிறது. இதனை நம்மிலே பலர் நம்பாதது—நம்ப முடியாதபடி இருப்பது வியப்பன்று. இம்முறையைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள பிரிட்டிஷ் நிறுவனம் முதலில் இதைப்பற்றி விளக்கிய போது அந்த நாட்டிலேயே நம்ப மறுத்தவர்கள் இப்போது அந்தக் 'குளிர்மரச்சோலை'க்குச் சென்று மரநிழலில் இளைப்பாறித் திரும்புகின்றனர்.

ரப்பர்க் கூழும், தாது எண்ணெய்யும் கலந்த (யுனிசால்-71) கலவையைத் தெளிப்பதுதான் அவர்கள் செய்த 'மண் சிகிச்சை'. இந்த 'மண்சிகிச்சை', பெரும் புழுதிப் புயல் ஏற்பட்டாலும் மணல் அரிப்பு ஏற்படாமல் காப்பாற்றுகிறது. கலவை தெளித்த மணற் பகுதியில், செடிகள் வேர்விட்டு வளரும் வரை மணல் அரிப்பு ஏற்படாமல் தடுக்கப்படுகிறது. செடிகள் வளர்ந்த பிறகு, அரிப்பு ஏற்பட்டால், அதனால் செடிகள் பாதிக்கப்படுவதில்லை.

இப்படி 'மண் சிகிச்சை' மூலம், சகாரா பாலைவனத்தில் 400 ஏக்கர் மணற் பரப்பில், 'குளிர் தரு நிழற் சோலை'யை உருவாக்கி வெற்றி கண்டிருப்பதால், இப்போது லிபியா அரசு, மேலும் 6,000 ஏக்கர் மணற் பரப்பில் 'மண் சிகிச்சை' யளித்துப் பயிர் செய்யத் திட்டமிட்டிருக்கிறது என்று பிரிட்டிஷ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு செய்தி குறிப்பிடுகிறது.

ஆம்! பல ஆண்டுகளுக்கு முன், கவிமணி கண்ட கனவு நனவாகி வருகிறது! இல்லையா?

—சாமி

நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.



நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். இவ்வி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

தார்ப்பொருள்கள்:

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி-1

கேளுங்கள் கொடுக்கப்படும்!

வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

வினா : பயிர்களுக்கு நேரடியாக இடும் யூரியாவும், தண்ணீரில் கரைத்துத் தெளிக்கும் யூரியாவும் ஒன்றா? அல்லது வெவ்வேறா?

இராம வானொலி மன்றம்,
வெள்ளாகுளம்,
திருச்சி மாவட்டம்.

விடை : தெளிப்பதற்காகப் பயன்படுத்தும் யூரியாவில் 'பையூரேட்' என்னும் இரசாயனப் பொருள் 0·25 சத அளவுக்குமேல் இருக்கக் கூடாது. மிக நுண்ணிய சிதறல்களாகத் தெளிக்கப்படும் பொழுது அதிகபட்சம் 0·5 சதம் வரை 'பையூரேட்' இருக்கலாம். தற்பொழுது வணிகச் சந்தையில் கிடைக்கும் யூரியாவில் 'பையூரேட்' 0·25 சதத்திற்கும் குறைவாகத்தான் உள்ளது. எனவே, பயிர்களுக்கு நேரடியாக இட, வாங்கும் யூரியாவையே தெளிப்பதற்கும் பயன்படுத்தலாம். ஆனால் யூரியாவை அதிக வெப்பமான இடத்தில் வைத்திருக்கக் கூடாது. அவ்வாறு வைத்திருந்தால் யூரியாவில் இரசாயன மாற்றம் ஏற்பட்டு 'பையூரேட்' அதிகமாகிவிடும். எனவே, அதிக வெப்பமான இடங்களில் வைத்திருந்த யூரியாவைத் தெளிப்பதற்குப் பயன்படுத்தக் கூடாது.

வினா : யூரியாவைத் தண்ணீரில் கலந்து மானாவாரிப் பயிர்களுக்கும் தெளிக்கலாம் என்று கூறப்படுகிறது. ஏக்கருக்கு எவ்வளவு யூரியா, எவ்வளவு நீரில் கலந்து தெளிக்க வேண்டும்?

வெள்ளியங் காட்டுப் புதூர்
உழவர் விவாதக்குழு,
கோவை மாவட்டம்.

விடை : மானாவாரிப் பயிர்களுக்கும், இறைவைப் பயிர்களுக்கும் 1 முதல் 2 சதம் யூரியா நீர்க்கரைசலை விசைத் தெளிப்பானால் இலைகளின் மேல் தெளிக்கலாம். 1 சத யூரியா கரைசல் கிடைக்க, ஒரு கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும். 2 சத யூரியாக் கரைசல் கிடைக்க, 2 கிலோ யூரியாவை 100 லிட்டர் தண்ணீரில் கரைக்கவேண்டும். ஏக்கருக்கு ஒரு முறை 2 கிலோ யூரியாவை இலைகளின் மேல் தெளிப்பதனால் பயிர் நல்ல வளர்ச்சியடைகிறது. இவ்வாறு இரு முறைகளோ அல்லது மூன்று முறைகளோ கூட இலைகளின்மேல் தெளிப்பதனால் பயிரின் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தி அதிக மகசூல் பெற்றுப் பயனடையலாம். ஆனால் கலப்படமற்ற தூய்மையான யூரியாவையே பயன்படுத்த வேண்டும்.

வினா : கரும்பின் தோகை மீது யூரியாக் கரைசலைத் தெளிக்க எவ்வளவு யூரியாவை எவ்வளவு தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்?

காஞ்சிகோவில்
இராம வானொலி மன்றம்,
கோவை மாவட்டம்.

விடை : கரும்பின் தோகை மீது யூரியாக் கரைசலைத் தெளிக்க வேண்டுமானால் 2·5 சத யூரியாக் கரைசல் தயாரித்துக் கொள்ளவேண்டும். ஒரு கிலோ யூரியாவை 40 லிட்டர் தண்ணீரில் கரைத்தால் 2·5 சத யூரியாக் கரைசல் கிடைக்கும். ஒரு ஏக்கர் கரும்புக்கு 200 பவுண்டு தழைச் சத்தை முழுமையாக நிலத்தின் மூலமாக அளிப்பதைக் காட்டிலும், 100 பவுண்டு தழைச் சத்தை நிலத்தின் மூலமாகவும், 50 பவுண்டு தழைச் சத்தைத் தோகைகளின் மூலமாகவும் அளிப்பது சிறந்தது. இவ்வாறு செய்வதால் 4·5 சதம் கரும்பு மகசூல் அதிகமாவதுடன் 50 பவுண்டு (23 கிலோ) தழைச்சத்து மீதமாகிறது. இதன் காரணமாக வருமானம் பெருகுவதுடன், உரச்செலவு, உரமிடும் செலவு ஆகியவையும் குறைகிறது.

வினா : ஐ. ஆர். 8 நெல்லிற்கு எந்த அளவுக்கு எப்படி நீர் பாய்ச்ச வேண்டும்?

கபிலமலை
இராம வானொலி மன்றம்,
சேலம் மாவட்டம்.

விடை : ஐ. ஆர் 8 நெல் நடவு செய்த முதல் 14 நாட்கள் பயிர் வேர்பிடித்து பச்சை கட்டும் பருவமாவதால் இலேசான உருட்டுத் தண்ணீரே போதுமானது. நட்ட 15-ஆம் நாள் முதல் 30-ஆம் நாள்வரை முன் தூர் கிளைக்கும் பருவமாகும். இப்பருவத்தில் 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) தண்ணீர் தேக்கி நிறுத்த வேண்டும்.

நடவு செய்த 31-ஆம் நாளிலிருந்து 35-ஆம் நாள்வரை நிலத்தில் வெடிப்புகள் தோன்றுதவாறு நீரை வடிய



விட வேண்டும். இவ்வாறு செய்வது களையெடுக்கவும் அதிகத் தூர்கள் கிளைக்கவும் உதவும்.

நடவு செய்த 36-ஆம் நாள் முதல் 45-ஆம் நாள்வரை பின்தூர் கிளைக்கும் பருவமாகும். இப்பருவத்தில் 5 சென்டி மீட்டர் (2 அங்குலம்) தண்ணீர் நிறுத்த வேண்டும். இதனால் அதிக தூர்கள் கிளைக்க வழிபிறக்கும்.

நடவு செய்த 46-ஆம் நாளிலிருந்து 50-வது நாள்வரை மீண்டுமொரு முறை நிலத்தில் வெடிப்புகள் தோன்றாத அளவுக்குத் தண்ணீரை வடித்து விட வேண்டும். இது மேலும் தூர் கிளைப்பதைக் கட்டுப்படுத்தி, கிளைத்த தூர்களில் கதிர்கள் உருவாக உதவும்.

நடவு செய்த 51-ஆம் நாளிலிருந்து கதிரில் நெல் மணிகள் முதிர்ச்சியடையும் வரை 5 முதல் 10 சென்டி மீட்டர் (2 முதல் 4 அங்குலம்) உயரத்திற்குத் தண்ணீர் தேக்கி வைத்திருப்பது நல்லது. இதனால் கதிர்கள் நன்கு தோன்றவும், தோன்றிய கதிர்களில் பால் பிடித்து நெல் மணிகள் உருவாகவும் உதவும்.

அறுவடைக்கு 7 முதல் 10 நாட்களுக்கு முன்பு தண்ணீரை வடித்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால் நெல்மணிகள் பழுத்து முதிர்ச்சியடையக் கூடும்.

• • •

வினா: களர் நிலத்திற்கேற்ற பி. வி. ஆர். 1 நெல் எப்பட்டத்திற்கு ஏற்றது? நாற்று விட்டு நடுதல் நலமா? அல்லது விதைகால் ஏற்றதா? உர [illegible] எவ்வளவு?

நடராஜன், நரியாப்பட்டு (வ.ஆ.மா.)

விடை: பேரா[illegible]-1 (பி.வி. ஆர்.-1) நெல் ச[illegible] பட்டத்திற்கு ([illegible]—ஆ[illegible] முதல் [illegible]—ஜனவரி [illegible]ரை) [illegible] நாற்று [illegible] நல்லது. [illegible] 8 [illegible] நடவு செய்ய வேண்டும். இந்த ரகத்தின் வயது [illegible] நாட்கள்; [illegible]

ரகம் பயிரிட அடி உரமாக 11 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட வேண்டும். அந்த அளவுக்கு இரசாயன உரம் இட 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 24 கிலோ யூரியா, 90 கிலோ சூப்பர் பாஸ்பேட், 11 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். மேல் உரமாக 7 கிலோ தழைச்சத்தை (35 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 15 கிலோ யூரியா) இரு சம பாகமாகப் பிரித்துக் கொண்டு இரு தடவைகளில் இடவேண்டும். பேராவூரணி-1 என்ற களர் ஒட்டு நெல் ஏக்கருக்கு 1,200 கிலோ மகசூல் கொடுக்க வல்லது.

• • •

வினா: தற்பொழுது முந்திரி பயிரிடத் தமிழ்நாடு அரசு கடன் கொடுக்கிறதா? கொடுத்தால் எப்படிப் பெறுவது?

பி.எஸ்.கே. சந்திரன், பட்டிவீரன்பட்டி

விடை: புதிதாக முந்திரித் தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை ஏக்கருக்கு ரூபாய் 150 விதமும், தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 3,000 வரையும் நீண்டகாலக் கடன் கொடுக்கிறது. இக்கடனை முந்திரி நட்ட 6-ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுத் தவணைகளில் 5½ சத வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் பெற இதற்கென உள்ள மனுவைப் பூர்த்தி செய்து உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலம், உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு அனுப்புங்கள்.

• • •

வினா: உயர்ந்தரக நக்குவாரி தென்னம் பிள்ளைகள் எங்குக் கிடைக்கும்? முகவரியுடன் தெரிவிக்கவும்.

திரு[illegible]யம், [illegible], தஞ்சை மாவட்டம்.

விடை: உயர்ந்த ரக நக்குவாரித் தென்னம்பிள்ளைகள் வா[illegible] உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுதல் நல்லது. அல்லது பின் கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்டு விவரமறிந்து முன்பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

உதவி எண்ணெய் வித்து நுண்ணறிஞர்,
தென்னை ஆராய்ச்சி நிலையம்,
வேப்பங்குளம் (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

மேற் கூறிய முகவரியிலிருந்தும் உயர்ந்தரகத் தென்னம்பிள்ளைகள் கிடைக்க வில்லையானால், கேரள மாநிலத்தில் காயாங்குளம் என்ற இடத்தில் உள்ள மத்திய தென்னை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

• • •

வினா. இராமநாதபுரம் மாவட்டத்தில் மண் பரிசோதனை செய்ய மண் மாதிரிகளை எங்கு அனுப்பவேண்டும்? முகவரியைத் தெரிவிக்கவும்.

கா. பாலசுப்பிரமணியன், விருதுநகர்.

விடை: இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பரமக்குடியில் உள்ள மண்பரிசோதனை நிலையத்திற்கு மண் மாதிரிகளை அனுப்ப வேண்டும். மண் மாதிரி எடுக்க உங்கள் [illegible] ஊழியர் அல்லது துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் உதவியை நாடினால் அவர்களே முறைப்படி எடுத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகச் சோதனைக்கு அனுப்பி வைப்பார்கள். மண் மாதிரிகளை நீங்களே அனுப்புவதாக இருந்தால் பின்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

உதவி மண் இரசாயன வல்லுநர்,
மண் பரிசோதனைச்சாலை,
பரமக்குடி (அஞ்சல்),
இராமநாதபுர மாவட்டம்.

இரவின் அமைதியிலே, காற்ருடி சுற்றுகிறது.

அவனும் ஓயவில்லை. இந்தப் பத்தாண்டுக் கால உழைப்பின் முத்திரையாக, அவனது முதுகே வளைந்திருக்கிறது.

கோப்புக்கள், கோவையாக, ஒன்று முடிய—மற்ருென்ருக உருவாகி, அவனைச் சுற்றிலும் அடுக்கடுக்காகக் குவிந்துள்ளன.

தன்னை மறந்து இவற்றிடையே லயித்து விடுவதில் அமைதி இருக்கிறதோ !

"என்ன சார் வீட்டு நினைவு வரலையா ?"

"போகணும் சார்—நாலு நாள் தபால் வந்தமேனிக்கு இருக்கு. பதியணும்".

உடனிருந்த ஒருவரும் போய் விடுகிருர்.

யாருமே இல்லாத தனிமை.

சுழலும் காற்ருடியின் இரைச்சல் மட்டுமே கேட்கிறது.

அவன் ஏறிட்டுப் பார்க்கிருன்.

கொட்டாவி வருகிறது,

வீட்டு நினைவும் இடையில் நுழைகிறது.

இப்போது, மூலைக்கு மூலை, அங்கே என்னென்ன ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கும்? அவள் தனிமையில் நின்று தவித்துக் கொண்டிருப்பாள். வேறு என்ன செய்ய ?

காலையில் புறப்படும்போது, அவள் ஏதோ சொல்லி அனுப்பவில்லையா ?

என்ன சொன்ருள் ?

அவன் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிருன்.

வீட்டிலே என்ன இல்லை ?

எதிர்க் கேள்வியும் விழுகிறது.

அங்கே என்ன இருக்கிறது !

அவன் வறட்சியுடன் சிரித்துக் கொள்கிருன்.

அந்த நினைவுகள் தொடரும்போது, அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

அவள் எதையோ வாங்கி வரச் சொன்ருளே!

நினைவுக்கு வரவில்லை.

கதவை இழுத்து அடைக்க வேண்டியவன் எட்டிப் பார்க்கிருன்.

அவனும் புறப்படுகிருன்.

வாசலில் அடியெடுத்து வைப்பதற்குள், 'அப்பா வந்தாச்சு; அப்பா வந்தாச்சு', என்ற அடுக்கடுக்கான குரல், அலைமோதி வரவேற்கிறது.

தனது காலைச் சுற்றிக்கொண்ட நான்காவது மகளைத் தூக்கிக் கொஞ்சிக்கொண்டே, உள்ளே நுழைந்தபோது, வேர்வைக் கோலத்தோடு எதிரே வருகிருள் இல்லத்தரசி.

சென்னையில்

அதிசயம் !

ஜே. எம். ரூபஸ்ரீ

புதுவை மாநில முதல்வர் பரூக் மரைக்காயர்

சொன்னது சொன்னபடி நடக்கிறது. உங்களுக்கு எவ்வளவு தீராத சோதனைகள் ஏற்பட்ட போதிலும் எங்களை ஒரு முறை சந்தித்துப் பல நன்மைகளையும், உண்மைகளையும் மிகத் தெளிவாக தெரியலாம். அரசியல் தலைவர்கள், சினிமா நடிகர்கள், மற்றும் பல லட்சகணக்கான மக்களின் கைரேகைகளைப் பார்த்து 25 வருடம் அனுபவம் பெற்று வருபவர்களும் எ. எ. ரவி சங்கர் முதல் நூற்றுக் கணக்கான கைரேகை ஜோதிட சாஸ்திரியர்களை உருவாக்கியவர்களுமான மனோதத்துவ மருத்துவர் டாக்டர் எம். நயினு முகமது, கைரேகை அரசி ஜே. எம். ரூபஸ்ரீ ஆகிய இருவரையும் இன்றே சந்தியுங்கள். முக்கிய கவனிப்பு : நீங்கள் நினைத்த காரியம் எதுவாக இருந்தாலும் வெற்றி அடைய செய்துதரப்படும். நீங்கள் வெற்றி பெற்றபிறகே சார்ஜ்-பணம் வாங்கப்படும். கைரேகையின் தரத்தைப் பொறுத்து சார்ஜ் உண்டு. இன்னும் சென்னையில் ஒரு மாத காலம் தங்குவார்கள்.

டாக்டர் எம். நயினு முகமது,
ரூம் நெ. 40, துவாரகா லாட்ஜ்,
கென்னத் லேன், சென்னை-8
தொலைபேசி எண் : 27284.

ஜே. எம். ரூபஸ்ரீ,
ரூம் நெ. 3,
எக்மோர் லாட்ஜ், சென்னை-8.
எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்.

"கையை வீசிக்கிட்டு வந்து நிக்கிறிங்களே! காலையிலே, மெனக்கெட்டு வாசல் வரைக்கும் வந்து சொல்லி அனுப்பலையா ?"

"நினைவுக்கு வரலே. என்ன சொன்னே ?"

"நல்லா மறந்திங்க, பேபிக்கு ராத்திரிக்கி அமுல் இல்லே! அப்புறம் விடிய விடியப் போராட்டமாத்தான் இருக்கப் போவுது. எனக்கு ஆவி இல்லே"—அவள் சலிப்போடு உள்ளே போகிருள்.

அவன் அலுப்போடு உட்காருகிருன்.

சுற்றிலும் செல்வங்கள்.

பாக்கி எங்கே ?

"எங்கே பசங்களைக் காணுமே!"

"பள்ளிக்கூடத்திலே ஆண்டு விழாவாம். போயிருக்காங்க. சாப்பிடலே—இனி யாருமே மேத்தான்" உள்ளிருந்து குரல் வருகிறது.

அவளும் ஓய்ந்துவிட்டாள்.

கணக்குக்கு எத்தனையாகிறது?

இத்தனைக்குப் பிறகும் இப்போதும் எத்தனையாவது மாசம்?

இயந்திரமா என்ன ?

ஒவ்வொரு தடவையும்தான் 'வைராக்கியம்' பிசுபிசுத்துப் போகிறது.

நினைவு கசப்படைகிறது.

உள்ளிருந்து எந்தக் குழந்தையோ அலறியழும் குரல் வந்து மோதுகிறது.

"பவுடர் டப்பாவை பாப்பா காலிலே போட்டுட்டாள்"—

அவன் என்றைக்கோ பொறுமையை இழந்துவிட்டான்.

போட்டவளுக்கு அடி விழுகிறது.

அழுகுரல் இரட்டிப்பாகிறது.

குழந்தைகள் என்றிருந்தால் சத்தம் இல்லாதிருக்குமா ?

அவள் எட்டிப் பார்க்கிருள்.

"திரும்பவும் போறிங்களா ?"

"போகாமல் தீருமா ?"

அவன் எழுந்து புறப்படுகிருன் அமுல் வாங்க.

முற்றத்தில் இறங்கியவன் ஏறிட்டுப்பார்க்கிருன்.

எதிர்ச் சுவரில் பெரிய விளம்பரம்.

இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்.

சிவப்பு முக்கோணம்

ஐந்தாண்டுகளுக்கு முன்பே, நினைத்து, முடிவு செய்திருக்க வேண்டும்.

அவன் திரும்பிப் பார்க்கிருன்.

கதவோரம் நின்று, சோகத்தின் உருவாக, அவளும் அதையே பார்த்துக் கொண்டிருக்கிருள்.

21

பரிசு பெற்ற சிற்றூர்

(மூக்கடலும் சந்திக்கின்ற சிறப்
பினைப் பெற்று நம் இந்தியாவில்
தென் கோடியில் அமைந்துள்ள
குமரி மாவட்டத்தில் குருந்தங்
கோடு ஊராட்சி ஒன்றியத்தில்
ஓர் அங்கமாகத் திகழும் சிற்றூர்
மணவாளக்குறிச்சி.

ஆழ் கடலில் ஆர்ப்பரிக்கும்
அலைக்கரங்கள் தழுவுகின்ற
எழில்சிந்தும் இந்தச் சிற்றூர்
அரபிக்கடலோரம் அமைந்துள்
ளது. நெஞ்சையள்ளும் நீலக்கடல்
ஒரு பக்கம், பசுமைப் புரட்சியின்
விளைவால் பச்சைப்பசேல் என்று
தோன்றும் நெல் வயல் மறு
பக்கம், அவற்றின் ஊடே நெடி
துயர்ந்த தென்னையும், கமுகும்
நிறைந்த தோப்புகள், அவற்றிற்
குத் தண்ணீரைத் தட்டின்றித்
தருவதற்கான வளைந்தோடும்
வளம் மிகு வள்ளியாறு இவை
தான் மணவாளக் குறிச்சியில்
காணக் கிடைக்கின்ற மனங்கவர்
காட்சிகள். இந்தச் சிற்றூரின்
பரப்பளவு 4.70 சதுர மைல்
களாகும். மொத்தம் 13,672
மக்கள் தொகையுள்ள இச்சிற்றூ
ரில் 6,939 ஆண்களும் 6,733
பெண்களும் உள்ளனர்.

வேளாண்மை

பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட
அமோக விளைச்சல் திட்டம் இச்
சிற்றூர் மக்களைப்பெரிதும் கவர்ந்
துள்ளது. இச் சிற்றூர் விவசாயி
கள் அனைவரும் அதிசய நெல்
ஐ. ஆர். 8 ரகத்தையே பயிரிட்டு
வருகின்றனர். அது மட்டுமின்றி
வேளாண்மைத் துறையினர் தெரி
விக்கின்ற கட்டுக்கோப்பு, சாகு
படி முறைகளைக் கண்ணுங்கருத்து
மாகப் பின்பற்றி வருகின்றனர்.

இச் சிற்றூர் மக்கள் இயற்கை
உரம் தயாரிக்கும் திட்டத்தில்
போட்டி நடந்த ஆண்டில் 480
எருக் குழிகள் வெட்டி 2,880
மெட்ரிக் டன் இயற்கை எரு உற்
பத்தி செய்துள்ளனர். மேலும்
இரசாயன உரங்களையும் அதிக
அளவில் பயன்படுத்துகின்றனர்.
196 மெட்ரிக் டன் இரசாயன
உரங்களைப் பயன்படுத்தி உள்ள
னர். இரசாயன உரங்களைப் பயன்
படுத்திய விவசாயிகளின் எண்
ணிக்கை 2,672 ஆகும். தழை
உரப்பயிர்களைப் பயிரிடும் வழக்
கத்தினையும் மேற்கொண்டுள்ள
னர்.

வேளாண்மைச் சிறப்புத் திட்டம்

குமரி மாவட்ட ஆட்சித் தலை
வர் மற்றும் மாவட்ட வளர்ச்சி
அலுவலர் ஊராட்சி ஒன்றியப்
பெருந்தலைவர் ஆகியவர்களின்
அரிய முயற்சியால் சேரமங்க
லம் பெரியகால்வாயையும்,
சிறிய கால்வாயையும் இணைத்
ததன்மூலம் புஞ்சையாகக்
கிடந்த 100 ஏக்கர் நிலம்
பாசன வசதி பெற்று, நஞ்சை
யாகக் காட்சி தருகின்றது.
ரூ. 18,000 மதிப்பீட்டுத்தொகை
யில் தமிழக அரசு மூன்றில்
இரண்டு பங்குத் தொகையும்
அளித்துள்ளது. இதனால்
வேளாண் பெருங்குடி மக்கள்
பெரிதும் அரசைப் பாராட்டி
யுள்ளனர்.

இந்தியாவிலேயே சிறந்த
சிற்றூராகத் தேர்ந்தெடுக்கப்பட்
டுள்ள மணவாளக் குறிச்சியைப்
படம் பிடித்துக் காட்டுகிறது
இக் கட்டுரை.

தொழில் :—

வேளாண்மைக்கு அடுத்தபடி
யாகக் கடலோரம் வாழும்
மக்களின் முக்கியத் தொழில்
மீன் பிடித்தலாகும். மீன்
பிடிக்கும் மீனவர்களுக்கு நல்ல
வகை நைலான் வலைகள் வழங்
கப்பட்டுள்ளன. இங்குப் பிடிக்
கப்படும் இரால் வகை மீன்கள்
அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி
செய்யப்பட்டு அந்நியச் செலா
வணியை ஈட்டிக்கொடுக்கின்றன.

மணல் ஆலை ஒன்று இங்கு
இயங்கி வருகிறது. இந்த
ஆலையில் 1,500 தொழிலாளி
கள் வேலை செய்கின்றனர்.
கடற்கரையைச் சுற்றியுள்ள
சுமார் இரண்டு மைல் தொலைவி
லுள்ள கடல் மணலை எடுத்து
அந்த மண்ணில் இருந்து இல்
மனைட், மோனேசைட், சர்க்
கலைட், குட்டைல் கார்னட்,
ஆகிய உலோகப் பொருட்
கள் பிரித்து எடுக்கப்படு
கின்றன. இல்மனைட்டிலிருந்து
டைட்டானியம் டி ஆக்சைடு
தயாரிக்கப்படுகின்றது. இப்
பொருள் பெயின்ட், ரப்பர்
சாமான்கள், டெரிலின் துணிகள்
முதலியவைகள் தயாரிக்கத்
தேவைப்படுகிறது. டைட்
டானியம் உலோகமும் தயா
ரிக்கப்படுகிறது. இந்த உலோ
கம் மிகச் சக்தி வாய்ந்த
தாகும்.

இந்த மணல் வகைகள் மண
வாளக் குறிச்சியில் மிக அண்
மையில் உள்ள வரலாற்றுச்
சிறப்பு மிக்க குளச்சல் துறை
முகத்திலிருந்து அயல்நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்பட்டு அந்
நியச் செலாவணி பெறப்படுகிறது.

தென்னந்தோப்பு மிகுதியாக
உள்ள இச்சிற்றூர் மக்களின்
இன்னொரு முக்கியத் தொழில்
கயிறு தயாரிப்பதாகும். தேங்
காய் நார்களை ஊற வைத்துக்
கயிறு தயாரிப்பதற்குத் தேவை
யான உப்புவளம் கொண்ட
தண்ணீர் இருப்பதால் இங்கு
இத்தொழில் சிறப்புப் பெற்
றுள்ளது. பெண்கள் தென்
னங்கீற்றுகள் பின்னுதல், பாய்
முடைதல், துணி நெய்தல் ஆகிய
துறைகளில் ஈடுபட்டுக் குடும்ப
வருவாயைப் பெருக்கியுள்ளனர்.

கல்வி :—

இச்சிற்றூர் மக்கள் கல்வி
யைக் கண்ணெனக் கருதுகின்

னர்; இங்கே 5 துவக்கப் பள்ளிகளும் 1 உயர் துவக்கப்பள்ளியும், 2 உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு கலைக் கல்லூரியும் கல்விச் செல்வத்தை வாரி வழங்கி வருகின்றன. பள்ளிகளில் நண்பகல் உணவுத் திட்டம் நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

கிராம வேலைத் திட்டங்கள் :—

கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இச்சிற்றூரில், 12 சாலை வேலைகள், ரூ. 35,700 செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இச் சாலைகளின் மொத்த நீளம் 72 கிலோ மீட்டர். குடி தண்ணீர்த் திட்டத்தின் கீழ் 50,000 செலவில் பத்துக் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இச்சிற்றூரிலுள்ள எல்லாச் சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளதுடன் இணைப்புச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ. 5,500 மதிப்பீட்டில் மக்கள் குளிப்பதற்காக மூன்று படித்துறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், புதூர் துறை என்ற இடத்தில் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தட்டான் விளை என்ற இடத்தில் போக்குவரத்திற்கு மிக இடையூறாக இருந்ததை நீக்கி ரூ. 10,000 மதிப்பீட்டில் ஓடையின் குறுக்கே சிறு பாலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. சிற்றூர் மனித உழைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 3,000 மதிப்பீட்டில் 3 பர்லாங்கு நீளத்திற்குச் சாலை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

மின் வசதி :—

இச் சிற்றூரிலுள்ள சிற்றூர் பெருஞ் சிற்றூர்கள் அனைத்திற்கும் மின்வசதி அளிக்கப்பட்டு இருள்மண்டிக் கிடந்த இடமெல்லாம் இன்று ஒளிமிக்கதாய்க் காட்சியளிக்கின்றன. 113 தெருவிளக்குகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு :—

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று, கொள்கையிலே உறுதிப்பாடு கொண்ட இச்சிற்றூர் மக்கள் மத்தியில், மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன. மூன்று மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையும், ஒரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் இயங்கி வருகின்றன. இச் சிற்றூர் மக்கள் நிலவள வங்கி மூலம் 3 லட்சம் ரூபாய்க்கும் மேலாகக் கடனுதவி பெற்று 12 நீர்ப்பாசனக் கிணறுகள் வெட்டப்பட்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் இயக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலத்திட்டம் :—

அளவான குடும்பமே அழகான குடும்பம் என்ற கருத்தினை உள்ளத்திலே கொண்ட இச் சிற்றூர் மக்கள் குடும்ப நலத்திட்டத்தில் பெரிதும் ஆர்வங்கொண்டு குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றனர். தாய்மார்களுக்கு மகப்பேறு உதவி அளிக்கும் பொருட்டு ஒன்றியத்தின் சார்பில் இரண்டு தாய் சேய் நலவிடுதிகள் இயங்கி வருகின்றன.

மகளிர் நலன்:—

குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் செயல்படும் 51 குழந்தைகள் காப்பகங்களில் மணவாளக் குறிச்சி சிற்றூரில் இரண்டு குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுகின்றன.

இரண்டு வயது முதல் ஐந்து வயதிற்குட்பட்ட 45 குழந்தைகள் இக் காப்பகங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காலை 9·30 முதல் மாலை 3·00 மணி வரையிலும் வகுப்புகள் நடத்தப்படுகிறது. சிறு பாடல்கள், ஆரம்பக் கல்வி முறை, நல்ல பழக்க வழக்கங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

'கேர்' நிறுவனத்தாரால் வழங்கப்பட்டு வரும், உணவுப் பொருட்கள், குழந்தைகள் விரும்பி உண்ணும் உணவுப் பொருட்களாகத் தயாரிக்கப்பட்டு 80 குழந்தைகளுக்கும் 40 தாய்மார்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மணவாளக் குறிச்சி சிற்றூரில் மகளிர் மன்றம் 30 உறுப்பினர்களுடன் செயல்படுகின்றது. தையல் இயந்திரமும் இதர வேலைக்குரிய சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. எல்லா விதமான ஆக்கப் பணிகளிலும், சிறு சேமிப்பு, குடும்பநலத் திட்டம் ஆகியவற்றில் பெரும்பாலான உறுப்பினர்கள் தீவிரப் பங்கேற்று ஆக்கப் பணிகளில் ஆர்வமுடன் செயல்பட்டு வருகிறார்கள்.

சிரணி : –

'தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தன்னலமற்ற பணியாற்றிடல் வேண்டும்' என்கிற அண்ணாவின் சிறப்பு மிக்க சிரணித் திட்டத்தின்கீழ் அண்ணா நினைவுப்பள்ளி ஒன்றைச் சிரணியினர் இச் சிற்றூரில் செம்மையாக நிர்மாணித்துள்ளனர்.

தமிழக அரசின் வறட்சி நிவாரணத் திட்டம் :—

வறட்சியால் வாடிய மக்களின் துயர் துடைக்கும் திட்டமாம் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இச்சிற்றூரைச் சேர்ந்த படுநிலம் என்னுமிடத்தில் ரூ. 6,000 மதிப்பீட்டில் குடிநீர்க் கிணறும் கடலோர மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ரூ. 40,000 மதிப்பீட்டில் மீனவ மக்கள் வாழும் புதூர் துறை கிராமத்தில் ரூ. 40,000 மதிப்பீட்டில் குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் சீரும் சிறப்பு மிக்கதாக விளங்குகின்ற இச் சிற்றூரில் அனைவரையும் கவர்கின்ற வரலாற்றுப் புகழ் பெற்ற பகவதி அம்மன் கோவில் உள்ளது. தமிழ்த் திங்கள் மாசி முடிய பத்துநாட்கள்தொடர்ந்து நடைபெறும் இக்கோவில் திருவிழாவில் அண்டை மாநிலங்களிலிருந்தும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் இரண்டு லட்சம் பேர் அம்மனை வணங்க வருவது இச் சிற்றூருக்கு மேலும் சிறப்பையும் பொலிவையும் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

மாதவன் மட்டுமா? மஞ்சள் நிறக் கந்தல் புடவையை அலங்கோலமாய் அள்ளிப் போட்டுக் கொண்டு ஓர் ஆரணங்கும் நின்றிருந்தாள் அந்த அறையினுள்ளே.

புழுதி மணலில் புதைந்து வெளிப்பட்ட பூங்கொத்துப் போல அவளது உடல், உடை இரண்டுமேஅழுக்கேறி இருந்தன; பழுப்பேறித் தோன்றின. எண்ணெய்யைக் கண்டு தலைக்கு எவ்வளவு காலம் ஆயிற்றோ? முடியெல்லாம் செம்பட்டை தட்டிப் போய்ச் சிலிர்த்தும் சுருண்டும் குருவிக் கூடாய்ச் சிதறிக் கிடந்தன.

அவளது முகமோ........'சவ்-சவ்'—சீமைக் கத்திரிக்காயை விட, அதுங்கியும் பிதுங்கியும், குழிந்தும், கொப்பளித்தும்.... சே! முகமா அது? அதிலிருந்து அவளது உண்மையான வயதைத் தான் கணித்து விட முடியுமா? இளமையையும் ஓட்டிக் கொண்டிருக்கின்ற — முதுமையையும் தொட்டுத் தொடர்கின்ற—ஓர் இடைப்பட்ட வயதாக இருக்கலாம் அவளுக்கு.

6. காணாமற்போன காதலன்

பொதுவாக, அவளைக் காண்பவர்களுக்குக்கருணையும் பிறக்கும்; கூடவே ஒருவிதக் கரிப்பும் சுரக்கும்! இரக்கமும் ஏற்படும்; எச்சரிக்கையோடு தள்ளி நிற்கின்ற ஒதுக்கமும் உண்டாகும். பேரின்பமுத்துவைப் பொறுத்த வரையில் அவள் இப்போது எரிச்சலையே கொடுத்துக் கொண்டிருந்தாள்.

சுழல் நாற்காலியிலே அமர்ந்திருந்த அவர், காரின் முன் கண்ணாடியில் விழும் மழைத் துளிகளை அகற்றும் 'துடைப்பான்' ('வைபர்') மாதிரி, அப்படியும் இப்படியுமாகத் தாம் அசைந்தவாறே, சுருள் சுருளாகச் சிகரெட் புகையைத் தவழ விட்டுக்கொண்டிருந்தார்.

அறையின் குறுக்குக் கதவைத் திறந்து கொண்டு, தம்முடைய மகள் உள்ளே நுழைந்தது கூட அவரது உணர்விலே உறைந்திருக்குமா என்பது ஐயப்பாடுதான்.

கோபக் கனலின் தகிப்பினால் அவரது முகம் முழுவதுமே கொதிப்பேறிக் கிடந்தது; தடித்துக் கறுத்த உதடுகளும் மிக நுண்மையாக—இலேசாகத்— துடித்த வண்ணம் இருந்தன.

தன் எதிரே நோட்டுப் புத்தகம் ஒன்றை நீட்டிக் கொண்டு நிற்கும் அந்தப்பெண்ணை நெருக்கு நேர் பார்க்க அறவே விரும்பாதவரைப் போல், மேலே சுவரிலே தொங்கும் ஓவியங்கள் மீது தம் விழிகளை ஓடவிட்ட அவர், தொண்டையைக் கிழித்துக் கொண்டு இப்படி இரைந்து கத்தினார் :

''இந்த இடத்தை விட்டு இப்போ போகப் போறியா இல்லையா? என்ன நினைச்சிக்கிட்டு இப்படிக் காலையிலேயே வந்து என் கழுத்தை அறுக்கிறே?''

வேறொருவராக இருந்திருந்தால் அவரது சிவப்பேறிய விழிகளைக் கண்டதும்—சீறுகின்ற குரலைக் கேட்டதும்—நடுநடுங்கிப் போய் மெதுவாகவா நழுவியிருப்பார்கள்? விரைவாக ஓட்டமே எடுத்திருப்பார்கள்!

ஆனால் அந்தப் பெண்ணோ..?

சரியான அழுத்தக்காரிதான்! இம்மியளவு கூடத் தான் நின்றிருந்த இடத்தை விட்டு அவள் நகரவே இல்லை. 'இடம்'—என்றால் தரையை மட்டுமல்ல, அவள் பிடித்த பிடிவாதத்தை—விடுத்த வேண்டுகோளைச்—சேர்த்துத்தான் குறிப்பிடுகிறோம்.

''உங்க தரத்துக்குத் தகுந்த மாதிரி, நீங்க தரவேண்டியதைத் தந்திட்டா, நான் அடுத்த விநாடியே இங்கிருந்து ஓடிப் போயிட மாட்டேனா?''

—அலட்டிக் கொள்ளாத ஒரு நமுட்டுச் சிரிப்புடன் கூறினாள் அவள்.

''அதெல்லாம் ஒண்ணும் இங்கே நடக்காது. யாரோ தெருவிலே திரிகிற திருட்டுப் பசங்க பிள்ளைங்களுக்கெல்லாம் இவள் புத்தகம் வாங்கிக் கொடுக்கப் போறளாம்; அதுக்கு நான் பத்து ரூபாயை உடனே எடுத்து நீட்டணுமாம். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கப் பார்க்கிறியா—?''

''பிள்ளையாருக்குக் கோவில் கட்டி வச்சுக் கும்பிடுறவங்களே ஏழை - எளிய - பிள்ளைங்களுக்கு இரக்கப்பட மறுத்தா எப்படி?''

''ஓகோ! எனக்கே நீ அறிவுரை வழங்க ஆரம்பிச்சுட்டியா? என்னை எதிர்த்து வாதம் பண்ற அளவுக்கு உனக்கு வாய்க் கொழுப்பும் ஏறிப் போச்சா? உன்னை இந்தக் காம்பவுண்டுக்குள்ளே நுழைய விட்டதே தப்பு! உன்னைப் பார்த்தாலே எனக்கு எவ்வளவு அருவருப்பா—அசிங்

கமா—வயிற்றையே [illegible] விட்டு வாந்தியே வரும் தெரியுமா? நீ யெல்லாம் எதுக்கு வெளியிலே வந்து நடமாடிப், பார்க்கிறவங்க மனசை யெல்லாம் பல்லி விழுந்த பாலாக் கெடுக்கணும்?

"என்ன பண்றது? உங்க மாதிரிப் 'பெரிய மனிதர்'களின் அழு

கான உடைக்கும் உடம்புக்கும் உள்ளே இருதயமும் தூசுபடியாமே துப்புரவா இருக்கான்னு தெரிஞ்சுக்க வேணுமா? அதுக்காகத்தான் என்னைப் போல உள்ளவங்க வெளியே தலையைக் காட்ட வேண்டியிருக்கு. ம்.. என்னைப் பார்க்கிறதுக்கு 'இப்போ' உங்களுக்கு அருவருப்பாத்தான் இருக்கும்..?"

[illegible] இருக்காரமாகக் கூறிய அவன் மேலும் தொடரவில்லை; பெருமூச்செறிந்து பெரிதாகச் சிரித்தான்.

அவன் 'இப்போ'—என்னும் வார்த்தைக்கு வழங்கிய அழுத்தம் மாதவன் — தேன்மொழி இருவருடைய மனத்திலும் ஒருவிதப் புழுக்கத்தையே நிரப்பிற்று. அவர்களது விழிகள் பொருள் செறிவோடு சந்தித்துத் தாழ்ந்தன; பிறகு சுவரிலே தொங்கும் ஓர் ஓவியத்தின்மீதும் படர்ந்தன.

அந்த ஓவியத்திலோ தேர் வடம் போலத் தன்னைச் சுற்றிக் கொண்டுவிட்ட பாம்பிடம் திணறிக் கொண்டிருந்தது ஒரு பசுமாடு.

"மத்தவங்க பின்னாலே என்னைக் கிண்டல் பண்ணிச் சிரிக்கிறதுக்குத்தான் இப்ப நீ வந்தியா? எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன்னை இப்படியே கழுத்தை நெரிச்சுக் கொன்னுடணும் போல என் கை ரெண்டும் துடியாய்த் துடிக்குது; ஆனா உன் நாறிப்போன உடம்பை எப்படித் தொடுறதுன்னுதான் நான் யோசிக்கிறேன்"

—நறநறவென்று பற்களைக் கடித்துக் கொண்டார் பேரின்பமுத்து. அவரது இடக்கரம், எரிந்து குறைந்து எஞ்சி நிற்கும் சிகரெட் துண்டைச் 'சாம்பல் கிண்ணி'—'ஆஷ்டிரே' யில் ஓர் அழுத்து அழுத்தி வீசியெறிந்தது. மறுகரமோ, பூ வேலையோடு கூடிய சின்னஞ்சிறு பளிங்குச் 'சுமைக்கல்'லை (பேப்பர் வெயிட்டை)—உருட்டிய வண்ணமே இருந்தது.

எங்கே ஆத்திர வெறியில் அந்தக் கல்லை எடுத்து அவள்மீது வீசிவிடுவாரோ தன் அப்பா என்று தேன்மொழிக்கும் அச்சந்தான்.

ஆனால் அந்த அச்சம் எதுவும் அடிப் பிடித்துக்கொண்டு நிற்கும் அந்தப் பெண்ணுக்கு அறவே இல்லை.

"நீங்க என்னைக் குத்திக் குத்தியே பேசினாலும்—என்னைக் கொல்றதுக்காகக் கத்தியையே தீட்டினாலும்—உங்க கிட்டே ஒரு பத்து ரூபாயாவது வாங்காமல் இந்த இடத்தை விட்டு நான் நகர்வேனா? ஊ..கூ..ம்!"

—என்று அலட்சியமாகச் சிரித்தான் அவன்.

தன்னுடைய முதலாளியின் பொறுமை எல்லையைக் கடந்து விட்டால் பிறகு என்ன செய்வார் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாதே என்று அஞ்சிய மாதவன், எப்படியாவது அந்த நெருக்கடி நிலைக்கு ஒரு தீர்வு காண்பது என்கிற போக்கிலே,

"உனக்கென்ன, பத்து ரூபாய் பணந்தானேம்மா வேணும்! இந்தா, இதை எடுத்துக்கொண்டு இந்த இடத்தை விட்டுப் போ"

—என்றவாறே, தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினான்.

"நீ நல்லா இருக்கணும், தம்பி; என்னைச் சேர்ந்தவங்க கிட்டே, இவரோட நன்கொடையா பத்து ரூபாயாவது வாங்கிக்கிட்டு வந்திடுவேன்னு பந்தயம் போட்டேன். அதனாலேதான் இவ்வளவு அழுத்தமா பிடிவாதம் பிடிக்கருப்பலே ஆயிடுச்சு. பாவம்! இவர் எப்போதும்போல இரக்கம் இல்லாமத்தான் இருக்காரு"

—என்று ரூபாய்த் தாளைப் பெற்றுக் கொண்ட அந்த நோயாளிப் பெண் அறையை விட்டு விரைவாக வெளியேறினாள்.

• • •

அவளுடைய தலை மறைவதற்குள்ளேயே சீற்றந் தெறிக்கும் விழிகளுடன் மாதவனை எரித்து விடுவதைப்போல் நோக்கினார் பேரின்பமுத்து.

"ஆமா நீ எதுக்கு அவ கிட்டே பணத்தை எடுத்துக் கொடுத்தே?"

—அவருடைய குரலில் பொறி பறந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் மாதவன்; நடுக்குற்றுத் தவித்தாள் தேன்மொழி.

"நீ எதுக்குப் பணத்தை எடுத்துக் கொடுத்தே? நான் பொல்லாதவன்; நீ மட்டும் நல்லவன்னு பேர் எடுத்துக்கிறதுக்கா? நான் படுகஞ்சன்; நீ பாரி வள்ளல்னு தம்பட்டம் அடிச்சுக்கிறதுக்கா?"

"அதுக்கில்லே, சார்..வந்து ....."

"என்ன அதுக்கில்லே...... பின்னே எதுக்கு அப்படி என்னை அவமானப் படுத்தினே?"

"சார், அந்த மாதிரி நீங்க தவறு எடுத்துக்கிறதா இருந்தா, நான் மன்னிப்பே கேட்டுக்கிறேன். அந்த அம்மா 'விடாக்கண்டனா' உங்க உயிரை எடுக்கிறாளே என்றுதான்.."

"அவ, உயிரை மட்டுந்தான் எடுத்தா; நீ என் மானத்தையே எடுத்திட்டியே! ..உங்களையெல்லாம் வைக்கவேண்டிய இடத்திலே வைக்காமல் உரிமை கொடுத்தேன் பாரு, அது என் தப்பு! என்ன திமிர் இருந்தா, எனக்கு முன்னாலேயே அவகிட்டே பணத்தை எடுத்து நீட்டுவே?"

"சார், அப்படியெல்லாம்..."

"சரிதாண்டா, வாயை மூடு! பேசாதே?"

—வெறியேறிக் கத்திய அவரது கையின் படபடப்பில், படாத பாடுபட்டுக் கொண்டிருந்த அந்தப் பளிங்குக்கல் சட்டென்று அவரது பிடியை விட்டுப் பிதுங்கிற்று; மேசைக் கண்ணாடியிலே விரைந்து உருண்டோடிய அது 'நங்' என்று கீழே போய் விழுந்தது.

அதே சமயம், தன்னுடைய இருதய நரம்பையும் யாரோ 'நங்' என்று சம்மட்டி கொண்டு அடிப்பது போல் இருந்தது தேன்மொழிக்கு.

"அப்பா! உங்களுக்கென்ன பைத்தியம் கியித்தியம் பிடிச்சுட்டுதா ?"—என்று அலறினாள் அவள்.

மாதவனோ.. ?

மறுவார்த்தை எதுவும் பேசவில்லை. தலையைக் குனிந்தவாறே விரைந்து வெளியேறினான் அந்த அறையை விட்டு.

• • •

சாந்தோமில் உள்ள கிறித்துவ தேவாலயத்தை ஒட்டிக் கடற்கரையை நோக்கி ஒரு தெரு செல்கிறது அல்லவா? அதன் ஓரத்தில் தன் காரை நிறுத்திவிட்டுக் கடலை நோக்கி நடந்தாள் தேன்மொழி.

பிற்பகல் இரண்டுமணி இருக்கலாம். வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது கடுமையாக. அந்த அனல் வீச்சில் கடலே தடதடவென்று ஆடுவது போல் தென்பட்டது தேன்மொழிக்கு.

கீழே சோளக்கதிரைப் போட்டால் மல்லிகைப் பூவாய் மலர்ந்து விடும் என்று சொல்லும்படியாகச் சுரீர் என்று சுட்டது பெருமணல். அதிலே தன் கால் கொப்புளித்து விடுமே என்று கூடக் கவலைப் படாமல், அவள் தாவித் தாவி நடந்த வண்ணம் இருந்தாள்.

எதிரே தெரியும் மண்டபத்தில் ஓர் ஆடவனும் பெண்ணும் மிக நெருக்கமாக அமர்ந்து ஒருவர் மீது ஒருவர் சாய்வதும் நிமிர்வதுமாகச் சிரிப்பாய்ச் சிரித்தனர். தேன்மொழியைக் கண்டதும் தங்களைத் துப்பறியத்தான் வருகிறாளோ என்னும் அச்சத்

தாலோ என்னவோ அந்த இளஞ் சிட்டுகள் இரண்டும் சட்டென்று எழுந்து வடக்கு நோக்கி விரைந்தன.

தேன்மொழி, அவர்களுக் காகவா அங்கே—அந்த நேரத் தில்—அதுவும் கொளுத்துகின்ற வெய்யிலில்—வந்தாள்? இல்லை. மாதவனைக் கண்டுபிடித்துவிட மாட்டோமா என்ற எண்ணத் தால்தான்!

கடந்த ஒரு வாரமாகவே அவன் முகத்தைக் காணுமல் அவள் உள்ளம் அடைந்துவரும் வேதனைக்கு — விம்மலுக்கு— எல்லையே இல்லை. அவன் குடியிருக்கின்ற வீடு, உணவு அருந்துகின்ற உண்டி விடுதி, விளையாடுகின்ற திடல்கள் — மகிழ்ச்சி மன்றங்கள்—எங்குமே அவனைத் தேடி விட்டாள்; கண்டுபிடிக்கவே முடியவில்லை.

அவன் பணிபுரிகின்ற தன் தந்தைக்குச் சொந்தமான அலுவலகத்திலும் விசாரித்துப் பார்த்தாள். மாதவன் வேலைக் கும் வரவில்லை; விடுமுறை மனுவும் தரவில்லை என்று அங்கே கூறிவிட்டார்கள்.

எங்கே தன் தந்தையின் நெருப்புச் சொற்களினுல் நெஞ்சம் வெந்து போய்ப் பதவியிலிருந்து விலகி விடவும் அவன் துணிந்திருப்பானே என் கிற அச்சமும் அவளைப் பதறச் செய்தது.

அப்படியெல்லாம் அவன் வெறுப்புக்கும் விரக்திக்கும் இரையாவதற்கு முன்னே, அவனை நேரில் கண்டு மனத்தைத்தேற்றித் தன் தந்தையின் சார்பில் மன்னிப்பும் கேட்டுவிட வேண் டும் என்னும் துடிப்போடு தான் அவனைத் தேடுகின்ற படலத்தில் ஈடுபட்டாள் தேன் மொழி.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை தனக்கு 'டேபிள் டென்னிஸ்' கற்றுக் கொடுக்க நேரங்கழித்து வந்த அவன், தான் சாந்தோம் கடற்கரையில் உள்ள சிறு மண்டபத்திலே அயர்ந்து உறங்கி விட்டதாகக் காரணம் கூறியது அவளது நினைவில் வந்து பளிச் சிட்டது.

'ஒரு வேளை அப்படியும் ஏன் அவர் உறங்கிக் கொண்டிருக்கக் கூடாது அங்கே?'— என்கிற ஒரு குருட்டு நம்பிக்கையோடு

> **ஆணுக்குத் துணை**
>
> பெண் என்பவள் ஆணுக் குத் துணைவி; ஆணைப் போலவே சரிசமமான அறிவுத்திறன் வாய்ந்தவள். ஆணின் ஈடுபாடுகளில் சிறு சிறு அம்சங்களில் கூடக் கலந்துகொள்ளவும் அதில் பங்குபெறவும் பெண்ணுக் குச் சரிசமமான உரிமை யுண்டு.
>
> —காந்தியடிகள்

தான், அவள் இப்போது சாந் தோம் கடற்கரைப் பக்கம் வந்திருக்கிருள் மாதவனைத்தேடி.

* * * *

அந்த இளங்காதலர்கள் எழுந்து ஓடியதும் கடலின் பக்கமாகக் கால்களை நீட்டி விட்டு, மண்டபத் தூணின் மறைவில் ஒரு மனித உருவம் படுத்துக் கிடப்பது தேன் மொழியின் விழிகளுக்குத் தெளி வாகத் தெரிந்தது.......?

அருகில் நெருங்கிப் பார்த் தாலோ . . ?

அவள் கொண்டிருந்தது 'குருட்டு நம்பிக்கை' இல்லை, 'விழிப்பு நம்பிக்கையே' என்பது வெளிச்சமாயிற்று.

ஆம்; அங்கே படுத்துக் கிடந்தவன் மாதவனே!

அவனுடைய முகத்தைக் கண்டதுமே அவளது உடம்பும் உள்ளமும் புகைமுற்றுச் சிலிர்த் தன பூரிப்பினுல்; நெஞ்சம் விம்மிற்று மகிழ்ச்சியினுல்; மல்லாந்து கிடக்கும் அவனது நெடிய வடிவத்தின் அருகே அமர்ந்து கீழேயுள்ள படிக் கட்டிலே கால்களைத் தொங்க விட்டுக் கொண்ட தேன் மொழிக்கு, அவன் உறங்குகின்ற அழகே தனியான உவகைப் பெருக்கை அளித்தது.

அவனுடைய பரந்த முக எழிலையே தன் விழிகளால் பருகிக் கொண்டிருந்த அவள், சற்றே பிளந்திருந்த அவனது கீழ் உதட்டின் அருகே ஒரு சுள்ளெறும்பு ஊர்ந்து செல் வதைக் கவனித்து விட்டாள்.

அதைத் தன் பட்டுப்போன்ற விரல்களால் அழுத்திப் பற்றி எடுத்தெறிய முற்பட்ட பொழுது—

மாதவன் தற்செயலாகவே விழித்துக் கொண்டு விட்டான்.

உள்ளங்கையினுல் கண்களை அழுத்தித் தேய்த்து உறக்க மயக்கத்தை விரட்டியடிக்க முயன்ற அவன்,

"ஆமா, நீங்க எங்கே இங்கே வந்தீங்க— அதுவும் இந்த நேரத்திலே?"—என்று வியப்போடு நோக்கினுன் தேன் மொழியை.

"எல்லாம் உங்களைத் தேடித் தான்!"—முறுவலை இழையவிட்ட வாறே மொழிந்தாள் அவள்.

"வேடிக்கையா இருக்கே! இந்த வேகாத வெய்யிலிலே. தேடிக் கண்டு பிடிக்கிற அளவுக்கு நான் என்ன திருவிழாச் சந்தடியிலே காணுமல் போன சின்னக் குழந்தையா என்ன?"

"பின்னே ஏன் இந்த ஒரு வாரமாக இந்தப் பெரிய குழந்தையைக் காணவே காணுமாம்?"

"ஓ! அதைக் கேட்கிறீங் களா? உங்கள் வீட்டை விட்டு நான் வந்ததுமே, ஊருக்கு உடனே புறப்பட்டு வரச் சொல் லித் தந்தி வந்திருந்தது. வண் டியைப் பிடித்து விட வேண்டும் என்கிற பரபரப்பில் யாரிடமுமே சொல்லிக்கொள்ள முடியவில்லை; கிளம்பி விட்டேன். இன்று காலையில்தான் திரும்பி வந் தேன். அதுவும் பத்து மணிக்கு மேலே. சரி, இன்றைக்கும் விடு முறையாகவே கழியட்டும்! மாலையிலே உங்களை வந்து சந் திப்போம்; உங்கள் அப்பா விடமும் ஊருக்குப் போக நேர்ந்த நிலைமையை விளக்கி விடுமுறையை ஏன் முன் கூட் டியே எடுக்க முடியவில்லை என்ப தைத் தெளிவாக்குவோம் என்று நினைத்திருந்தேன். அதற்குள் நீங்களே வந்து விட் டீர்கள்."

"நல்ல வேளை! இந்த ஒரு வாரமாக உங்களைக் காண முடியாமல் போனதும் நான் எப்படியெல்லாம் கற்பனை செய்து கொண்டு கலங்கிப் போனேன் தெரியுமா? எங்கே வேலைக்க

விட்டு விலகி விட்டீர்களோ என்றுகூட வேதனைப் பட்டேன்"

"எதற்கு அப்படி நான் வேலையை விட்டு விலகணும்?"

"அப்பா அன்றைக்கு உங்க ளிடம் கடுமையாக நடந்து கொண்டு முறை தவறியும் பேசி விடவில்லையா? அதனுல் உங் கள் மனம் உடைந்திருக்குமோ என்றுதான் அப்படி நினைத் தேன்."

"அட பைத்தியமே! உங் கள் அப்பாவைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன? அவர் ஓர் உணர்ச்சிக் கடல்; முன்கோபி. அப்படித்தான் பாம்பாகச் சீறுவார்; உடனே பச்சைக் குழந்தையாகவும் மாறு வார். அதோடு அவருடைய சூடான சொற்களெல்லாம் பெரும்பாலும் உள்ளத்திலிருந்து வருவதில்லை; உதட்டிலிருந்து தான் தெறிக்கின்றன என்பதும் எனக்குப் புரியாதா என்ன? மேலும்.............மற்றவர்கள் என்னைத் தவருகக் கருதினுலோ தாறுமாருக ஏசினுலோ உடனே நான் உணர்ச்சி வயப்பட்டு நிதானத்தை இழந்து விடுவதில்லை. "நான்தான் ஏதோ செய்திருப்பேனு?" என்று முதலில் என்னைத்தான் உள்முக மாகத் திரும்பிப் பார்த்துக் கொள்வேன்; திருத்திக் கொள் ளவும் முயல்வேன். என்னிடம் தவறில்லை என்று தெளிவாகப் பட்டாலும் கூட அதற்காக எதிரி மீது சேற்றை வாரி வீசி விட வேண்டும் என்று நான் துடிதுடிப்பதும் இல்லை. அதே வேளையில், 'நம்மைப் பற்றி அவர்கள் இப்படி எண்ணவோ ஏசவோ தேவை இல்லையே!' என்கிற 'உறுத்தல்' வேண்டு மானுல் உண்டாகும். அந்த உறுத்தலே நெஞ்சை நெருடுவ தோடு நில்லாமல் ஆழமாகக் கீறியே விடுமானுல் அதற்காக ஒதுங்கிக் கொண்டு விடுவேனே யொழிய அந்த உறுத்தலையே 'வெறுப்பாக' மாற்றிக் கொள் வதில்லை. ஏன் தெரியுமா? வெறுப்பைப் போல மனிதப் பண்பாட்டுக்கு வேட்டு வைக் கும் நெருப்பு உணர்ச்சி வேறு எதுவுமே இல்லை. அதுவும், உங் கள் அப்பாவை நான் எப்படி வெறுக்க முடியும்? அன்றிருந்த சூழ்நிலையில் அவருக்கு ஏதோ அடக்க முடியாத ஆத்திரம்! வார்த்தைகளை வீசி விட்டார்.

ஏதோ ஒரு நொடியில் தவறி வந்த வார்த்தைகளைப் பெரிது படுத்திக் கொண்டு பலகாலமாக அவர் காட்டி வந்த அன்பை— மதிப்பை கொடுத்து வந்த சலுகைகளை —அளித்து வந்த மறக்கலாமா? —உடனே வெறுக்கலாமா? சரி, அதுதான் போகட்டும்; அவர் என் வருங் கால மாமனுர் ஆயிற்றே? அவரை எப்படி நான் வெறுக்க முடியும்? அதுவும் இப்படி யொரு அழகான ஓவியத்தைப் பெற்று வைத்திருப்பதற்காகவா வது நான் அவரை விரும்ப வேண்டாமா?"

—கண்களைச் சிமிட்டிப் புன்னகையை வழிய விட்ட மாதவன், தேன்மொழியின் பூங்கரத்தை உரிமையோடு பற்றித் தன் உதட்டருகே கொண்டு சென்றுன்.

அவன் பேசப்பேச, அவனது சொற்சுவையிலேயே சொக்கிப் போய் இமைக்க மறந்து அவனையே வியப்போடு நோக் கிக் கொண்டிருந்த அவள்,

"உங்களுக்கு இவ்வளவு மனத் தெளிவு இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை."

—என்று பெருமிதத்தோடு கூறினுள்.

"ஆமாம், நான் கொடுத்த கடிதத்தைப் படித்தீர்களா?"

"ம்."

"அதைப் பற்றி என்ன நினைக் கிறீர்கள்?"

"சொன்னுல் கோபிக்க மாட் டீங்களே?"

"கண்டிப்பாகக் கோபிக்க மாட்டேன்; அதுவும் இந்த ரோஜாப்பூ வாயாலே சொன் லும் போது எப்படிக் கோபம் வரும்? சும்மா சொல் லுங்க."

"எனக்குப் பிடிக்கலே."

"காரணம்.?"

"அளவுக்கு மீறித் தெவிட் டிப் போச்சு!"

"ஓகோ!"

"அதுவும் ஆயிரம் அல்வாத் துண்டை ஒரே மூச்சில் விழுங்கின மாதிரி அவ்வளவு இனிப்பு!"

"அப்போ அது உங்களுக்கு ஆகாது தானுங்களே?"

—இருவருடைய சிரிப்பலை களும் அந்தச் சிறுகட்ட டம் முழுதும் எதிரொலித்தன.

"போகட்டும்; இன்னும் நீங்கள் 'கள்' போட்டுத்தான் பேசணுமா?"

நாணங்குமிழக் கேட்டாள் தேன்மொழி.

"நான் ஒன்றும் 'கள்' போட்டு விட்டு வரவில்லையே! ஓ, அந்தக் 'கள்'ளைச் சொல் றீங்களா? அதுவும், சரிதான்; இந்தக் 'கள்' இருக்கும் பொழுது அந்தக் 'கள்' தேவை இல்லை தான்!

—என்றவாறே தேன் மொழி யின் கன்னக் கதுப்பைக் கிள்ளித் திருகினுன் மாதவன்.

கடலுக்கு மேலே இரண்டு பறவைகள் சிறகடித்துப் பறந்து சென்றன.

சற்றுத் தொலைவில் அலைகளை இலட்சியம் செய்யாமல் படகு ஒன்று கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்தவாறே,

"இன்று இரவு நீங்கள் வீட் டுக்கு வந்தீர்களானுல் அப்பா உங்களுக்கு ஓர் இனிப்பான செய்தியைச் சொல்வார்."

—என்றுள் தேன் மொழி.

"என்ன செய்தி!"—ஆவ லுடன் கேட்டான் மாதவன்.

"அங்கே வந்த பிறகு தான் தெரிந்துகொள்ளுங்களேன். ஆனுல் அது நம் திருமணத்தைப் பற்றியது மட்டும் அல்ல!

(தொடரும்)



சிற்றூர் செழிக்க சிறு தொழில்கள்!

கு. செல்லசாமி. பி.ஏ.,

"நல்ல இமயம், நலம் கொழிக்கும் கங்கை நதி—வெல்லத் தமிழ் நாட்டின் மேன்மைப் பொதிய மலை—செந்நெல் வயல்கள், செழுங் கரும்புத் தோட்டங்கள்—தின்னக் கனிகள்—தெவிட்டாப் பயன் மரங்கள் இன்பஞ் செறிந்திருக்கும் இப்பெரிய தேசம்," என்று வளமனைத்தையும் கவிதையாக வடித்துக் காட்டுகின்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

ஆனால், இந்த நாட்டில் வறுமை சூழ்ந்திருக்கின்றதே? இருள் கவ்விக் கொண்டிருக்கின்றதே? ஏன்? அந்தப் பாடலின் பிற்பகுதியிலே அதற்குக் காரணம் சொல்லாமல் போகவில்லை. அறியாமையே இவற்றுக்கெல்லாம் காரணம் என்று பாடுகின்றார்.

"அருள் ஒன்றே சட்டம்! மக்கட்கே ஆட்சி-அமைதி நிலை என்று கொட்டடா பறை" என்று ஆர்த்தெழுந்து, "ஆனை என் ஆட்சியை நிறுவ அல்லல்கள் வரின் ஏற்பேன்-ஊனுடல் கேட்பினும்செந்தமிழ் நாட்டுக்கு-உவப்புடன் நான் சேர்ப்பேன்" என்று சூளுரை புகன்று, நித்திய தரித்திரராய் உழைத்துழைத்து தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்களின் பிணி போக்கப் பகல் இரவு துஞ்சாது, நாலரைக்கோடித் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்து நிற்கின்ற நாயகனாக, பேரறிஞர் அண்ணாவின் படைத் தலைவராக விளங்குகின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 15—8—71 விடுதலை நாள் விழாவன்று, நாட்டு மக்களுக்கு விடுத்த உணர்ச்சி மிக்க வேண்டுகோளை அனைத்திந்திய வானொலி முழங்கியது.

"அறியாமை இருள் அகன்றிட
உழைப்போம்.
இல்லாமைக் கொடுமை
தொலைந்திட உழைப்போம்.
புத்தொளி கண்டிட
உழைப்போம்".

புதுவைக் கவிஞரின் பாடல், உலகக் கவிஞரின் மூலம் பெருமுழக்கமாகப் பீறிட்டெழுந்து நாட்டு மக்களைத் தட்டி எழுப்புகின்ற அதிசயத்தை நாம் பார்க்கின்றோம். வளம் மிக்க இப்பெரிய தேசத்தில் இல்லாமை இல்லையென்று ஆக வேண்டும். அறியாமை என்ற இருள் அகல வேண்டும். பகுத்தறிவுப் பகலவன் உதயமாக வேண்டும். அந்தக் காலைக் கதிரவனின் செந்தளிர்க் கரங்கள் பட்டு, ஏழை எளியவர்கள் சிரித்திட வேண்டும்-அதில் இறைவனைக் காண வேண்டும்-நாடெல்லாம் மலர்க் காடாகி நாமெல்லாம் தும்பிகளாகச் சிறகடித்துப் பறக்க வேண்டும், என்பதுதான் கலைஞர் அவர்களின் உள்ளக்கிடக்கை.

அந்த வரலாற்றுப் புகழ் மிக்க வீர உரையின் ஒரு பகுதியில் எடுத்துக்காட்டாக இதையும் நம் முன் படைக்கிறார். உவமையின் இலக்கணமே—தெரியாத ஒரு பொருளுக்குத் தெரிந்த ஒரு பொருளைக் காட்டித் தெளிவு பெறச் செய்தல் ஆகும். கலைஞர் அவர்களோ எடுத்துக்காட்டாகக் காட்டும் ஓர் உவமையையே ஒரு பொருளாகக் காட்டி விட்டுச் செல்கின்றார். கலைஞர் அவர்களுக்கே உரிய தனிச் சிறப்பு இது.

" நூற்பாலைகளையும் நெசவாலைகளையும் அனுமதித்துவிட்டுத்தான் கதர் கட்டுவதிலும் கைத்தறி கட்டுவதிலுமுள்ள சிறப்புகளைப் போதித்து வருகிறோம்."

'குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலை' என்ற சிலப்பதிகாரக் காப்பியச் செய்யுளைப் படிக்கும்போது, 'குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்-மழலைச் சொல் கேளாதவர்' என்ற இனிய குறள் நினைவுக்கு வருதல் போல, கலைஞர் அவர்களின் மேற்கண்ட உரைப் பகுதியைக் காணும்போது 1963-ம் ஆண்டு, டிசம்பர் திங்கள் டெல்லிப் பாராளுமன்றத்தில் நேரு பெருமகனார் ஆற்றிய உரைப் பகுதியை நினைவுக்குக் கொண்டு வருகிறோம்.

" முழுக்க முழுக்க இயந்திரச் சகாப்தத்தை வரவேற்பவன் நான்; என்றாலும் பெருமளவு மக்கட் தொகையினர் இன்னும் முழுமையான பலனடைய வில்லை, என்பதைப் பார்க்கும்போது சிறு தொழில்களுக்கு ஊக்கமளிப்பது மிகவும் அத்யாவசியமாகிறது."

கலைஞர் அவர்கள் 'உழைப்பு உழைப்பு' என்று அறைகூவி விடுத்த வேண்டுகோளைக் கதர் கிராமத் தொழில்களில் ஈடுபடுவதன் மூலமும் நிறைவேற்றித் தரலாம். ஏனெனில், கதர்- உழைப்பின் சின்னம் என்று அடையாளம் காட்டப்பட்டு விட்டது.

கதர்-தனிப்பட்டவருக்கு மட்டுமோ, அல்லது ஒரு கட்சிக்கோ சொந்தமென்ற ஒரு 'மாயை' முன்னர், தெரிந்தோ தெரியாமலோ உருவாகியிருந்ததன் பலனாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிபீடம் ஏறியபோது பலர் பயந்தனர். கதர் என்னவாகுமோ என்ற வினா எழுப்பினர். ஆனால் அந்தக் கருணை வள்ளல்-தமிழகத்துத் தலைமகனார், தென்னாட்டுக் காந்தி அவர்கள் பெருந்தன்மையோடு கதர் வளர்ச்சிக்குப் பேராதரவைத் தந்து முன்னினும் பல மடங்கு சாதனைபுரிந்து காட்டினார்கள்.

அந்தப் பெருமகனாரின் அடிச் சுவட்டில் வீறு நடை போடுகின்ற-உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண்கின்ற பசுமை புரட்சித் திட்டம், மாநிலத் திட்டக் குழு, மைய—மாநில உறவு ஆய்வுக் குழு, குடிசை மாற்றுத் திட்டம், பிச்சைக்காரர்களின் மறுவாழ்வுத் திட்டம் போன்ற பல்வேறு மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டுகின்ற 'முன்னோடித் திட்டங்கள்' மூலம்

சாதனைகள் நிகழ்த்திக் காட்டும் கலைஞர் அரசு, கதர்த் திட்டத்தையும் ஏற்றுச் சிறப்புற இயக்கிக் காட்டிக், கடந்த ஆண்டுகளில் கண்டிராத மகத்தான சாதனையைச் செய்துகாட்டி, இதிலும் தமிழகம் 'முன்னேடி' என்ற தனது தனித்த 'முத்திரையைப்' பதித்திருக்கின்ருர்கள்.

வேலை வாய்ப்பு

மறைந்த மாமேதை-முன்ஞள் தமிழக முதல்வர் அவர்கள் 1947 ஆகஸ்டு 15-ஆம் நாளை ஆங்கிலேயனுக்குக் ''கணக்குத் தீர்த்த நாள்'' என்று குறிப்பிட்டு விட்டு, அதற்குப் பின்னர் ஆண்டு தோறும் வருகின்ற ஆகஸ்டு 15-ஆம் நாளைக் 'கணக்குப் பார்க்கும் நாள்' என்று சுட்டிக் காட்டினுர்கள்.

இப்போது 1970–71 நிதி யாண்டில் கதர் கிராமத்தொழில் சாதனைகளைக் கணக்கிட்டுப் பார்ப்போம்.

தமிழகம் முழுவதிலுமுள்ள சிற்றூர்களின் எண்ணிக்கை 15,000. இதில் 80 சதவிகிதத்தினர் உழுதுண்டு வாழ்வோர். வேலையற்ருேர் பலராயினும் வேலையிருந்தும் போதிய ஊதியமில்லாமல் அவதிப்படுவோர் மிகப் பலர். இவ்விரு பகுதியினருக்கும் இத் தொழில்கள் நல்வாய்ப்பை நல்குகின்றன. குறிப்பாகவும் சிறப்பாகவும் சிற்றூர்களில் வாழ்கின்ற பின் தங்கிய ஏழை எளிய மக்களுக்குக் கதர் கிராமத் தொழில்கள் உறுதுணையாக இருக்கின்றன. நூற்றல், பாவு போடுதல், நூலிழைத்தல், சாயம் போடுதல் நெய்தல் முதலான தொழில்களில் கதர்த் தொழிலில் மட்டும் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை நல்கி யிருக்கிறது தமிழக அரசு. அவர்களுக்கு 118 இலட்சங்களுக்குமேல் ஊதியமாக வாரி வழங்கியிருக்கின்றது.

பனைத் தொழில், பனை நார், எண்ணெய், கரும்பு, வெல்லம், பழுப்புச் சர்க்கரை, கைக்குத்தல் அரிசி, சோப்பு செய்தல், தேனீ வளர்த்தல், மட்பாண்டம், தோல், தச்சு-கொல்லுப் பட்டறை, கைக் காகிதம், குடிசைத் தீப்பெட்டித் தொழில், சுண்ணும்பு, பழம் பதப் படுத்துதல், பனை ஓலை, நார், பிரம்பு,மூங்கில், கிராமப்பொருள்கள் விற்பனைக் கூடங்கள் ஆகிய கிராமக் கைத் தொழில்களில் ஈடுபடுத்தி 2½ லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைத் தந்து ரூ. 209 இலட்சத்தை ஊதியமாகப் பகிர்ந்து தந்திருக்கின்றது. ஆக மொத்தம் கதர்கிராமத்தொழிலில்1970–71 நிதியாண்டில் மட்டும் 3½ லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பைத்தந்து 327 இலட்சத்துநாற்பத்தெட்டாயிரம் ரூபாயை ஊதியமாகத் தந்திருக்கின்றது.

கதர்

பாலாடையன்ன மேலாடையும் ஆவியன்ன ஆடைகளையும் துகிலையும் நெய்து வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கடல் மூலம் வாணிபம் செய்து தொன்மையும் மேன்மையும் பெற்றவர் தென்னவர். கைபுனைக் கதராடைக்குத் தமிழகத்தில் ஒரு சிறப்பிடம் உண்டு.

> கதர் என்னும் தத்துவத்தில் மக்கள் நலனும் உண்மையான சமத்துவமும் உள்ளடங்கியிருக்கிறது.
>
> கிராமங்களில் நடைபெற்று வந்த கைத்தொழில்கள் எல்லாம் மறந்து போனதால் அவைகள் அழிந்து போகும் நிலையில் இருக்கின்றன. அவற்றை மீண்டும் உயிர்ப்பிப்பதால் தான் கிராமங்களையும் உயிர்ப்பிக்க முடியும்!
>
> —காந்தியடிகள்

ஆனல் பத்தாண்டுகளுக்குமுன்பாகக் கதர் என்ருல் முரட்டுத் துணி என்பதுவும், அதை அணிந்திருப்பவரைப் பார்த்தால் அவருக்கு ஒரு 'வண்ணம்' இருப்பதுவுமாகவே நம் கண் முன் நிழலாடும். அவையாவும் இப்போது பொய்யாகப் பழங்கதையாகக் கற்பனையாகப் போய் விட்டது. இப்போது யாவரும் கதர் உடுத்துகின்றனர். துணிகள் மெல்லியதாக இருக்கின்றன.

பழைய கைராட்டையிலிருந்து கிசான் ராட்டை, அம்பர் ராட்டை, டெக்ஸ்டூல் ராட்டைகள், 6 கதிர் 12 கதிர் ராட்டைகள் என்று மாறிப் புதுமை நுழைக்கப்பட்டிருக்கின்றது.

முழுநேரமும் ஈடுபடத் தக்க வகையிலும், அதிக ஊதியம் பெறும் நோக்கோடும் தரமான நூல் உற்பத்தியின் பொருட்டும், பழைய கைராட்டையில் மாறுதல் செய்து அம்பர் ராட்டையைக் கண்டுபிடித்து அவைகள் பரவலாக்கப்பட்டன. அந்த அம்பர் இராட்டையைக் கண்டு பிடித்த திருவாளர் ஏகாம்பரம், எந்த வறுமையை ஒழிக்க அந்தப் புதுமையைச் செய்தாரோ, அதே வறுமையால் பாதிக்கப்பட்டதைக் கண்டார் கலைஞர் அவர்கள். அவருக்கு வாழ்க்கைப் பணமாக மாதம் ரூ. 100 வீதம் முதல்வர் அவர்கள் கொடையளித்துள்ளார்கள் என்ருல் டாக்டர் அவர்கள் இக் கதர்த் திட்டத்தின் மீது எத்தகைய கருத்தைச் செலுத்தி வருகிருர் என்பது நன்கு புலனுகும்.

புதிய டெக்ஸ்டூல் இராட்டைகள் மூலம் தரமான மெல்லிய நூல் உற்பத்தி பெருகி வருகின்றது. கதர் விலையும் குறைந்திருக்கிறது. ஈடுபடுபவர்களுக்குக் கணிசமான ஊதியமும் கிட்டி வருகிறது. தற்போது இயங்கி வருகின்ற 75 டெக்ஸ்டூல் இராட்டை நிலையங்களில் 1,49,278 நூற்பாளர்கள் நூற்று வருகின்றனர். அவர்கள் சென்ற நிதியாண்டில் பெற்ற ஊதியம் ரூபாய் 52 இலட்சம்.

கதர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற 3,639 நெசவாளர்கள் ரூ. 52.40 இலட்சம் நெசவு கூலியாகப் பெற்றிருக்கிருர்கள்.

தற்போது இயங்கி வருகின்ற 9 பட்டு உற்பத்தி நிலையங்கள் ரூ. 63 இலட்சத்துக்குப் பட்டு உற்பத்தி செய்திருக்கின்றது. பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நூலிழைப்போர், நெசவாளிகள் ஆகிய 1,183 பேர் பெற்ற கூலி ரூ. 13 இலட்சம்.

1970–71-ல் 124 கதர் உற்பத்தி நிலையங்களும், 21 பிரதான முக்கிய நிலையங்களும், 170 கதர் விற்பனைக் கூடங்களும், தலைநகரில் உள்ள 'குறளகமும்', புறநகரில் உள்ள, கோவை, திருச்சியில் இருக்கும் இரு கதர் அங்காடிகளும் 5,295 பேரைக் கொண்ட 13 கூட்டுறவு நிறுவனங்களும் கதர்ப்பணியில் ஈடுபட்டிருக்கின்றன.

வேலூர், கடலூர், தஞ்சை, திருப்பூர், மதுரை ஆகிய 5 இடங்களில் வாரியத்தின் தையல் நிலையங்கள் பணிபுரிகின்றன. இவைகளில்சென்ற ஆண்டில் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

காந்தி பிறந்தநாள், தீபாவளி, பொங்கல் முதலிய சிறப்புத் தள்ளுபடிக் காலங்களில் 10 விழுக்காடு விலையில் தள்ளுபடி செய்து விற்கப்படுகிறது. சென்ற சிறப்புத் தள்ளுபடிக் காலங்களில் கதர் ரூ. 271 இலட்சத்துக்குக் விற்பனையாகியுள்ளது.

1970–71-ல் கதர் உற்பத்தியின் மதிப்பு ரூ. 238.84 இலட்சம். விற்பனை ரூ. 306.75 இலட்சம். இவ்வளவு உற்பத்தியும் விற்பனையும் இதற்கு முன் இல்லையாதலால் இந்த நிதியாண்டைச் சாதனையாண்டு என்று குறிப்பிடுகிருேம்.

கிராமத் தொழில்கள்

பனைத் தொழில், எண்ணெய், சோப்பு, தேனீ வளர்த்தல் முதலான 18 கிராமக் கைத்தொழில்களின் அலகுகள் 3,250-ம், 2,420 கூட்டுறவு நிறுவனங்களும், ரூ. 766.32 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்திருக்கின்றன. ரூ. 852.73 இலட்சத்துக்கு அப்பொருள்கள் விற்பனையாகியிருக்கின்றன. இதில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற 251 இலட்சம் பேர்களும் 209 இலட்சம் ரூபாயை ஊதியமாகப் பெற்றிருக்கின்றனர்.

இங்ஙனம் சிறு துளி பெரு வெள்ளமாக, சிறு தொழில்கள் பெரும் வேலை வாய்ப்பு நிறுவனங்களாக, நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு உறு துணையாக இருந்து வருகின்றன.

முடிவாக, கடந்த ஜூன் திங்கள் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தமிழக முதல்வரும் நிதியமைச்சருமான டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நிதிநிலை அறிக்கையில் அளித்த உரையின் ஒரு பகுதியை இங்கே கோடிட்டுக் காட்டுவது மிகவும் பொருத்தமானதாகும்.

''ஏழை எளியவர்கள்—கிராமப் புறத்து மக்கள் இது வரையில் தங்களையே சரிவர உணர்ந்து கொள்ள முடியாமல் எங்கோ தள்ளப்பட்டுக் அழுத்தப்பட்டு, பிற்போக்கான நிலையி கிடந்த மக்கள் வாழ்வில் விடிவு ஏற்பட வேண்டுமென்பதற்காக இந்த அரசு இவ்வளவு முயற்சிகளையும் மேற் கொண்டிருக்கிறது''

காலக் கண்ணுடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



...கோவைக்குச் சென்றிருந்த ...ன் சென்னைக்குத் திரும்பி ...ந்துகொண்டிருந்தேன். புகை ...ண்டி நிலயத்தில் ஒரேகூட்டம். ...ற்கனவே இருக்கைக்குப் ...திவு செய்து வைக்காததால் ...நரிசலில் சிக்கித் தவித்தேன். ...குந்த முயற்சி செய்து அமர ...தற்கு ஓர் இடத்தைப் ...டித்துக்கொண்டேன்.

வண்டி புறப்பட்டது. வழி...னுப்ப வந்திருந்த எனது ...ண்பர்களும் விடைபெற்றுச் ...சென்றுவிட்டார்கள். அவர்கள் ...சென்ற பிறகு, அன்றைய ...ாளிதழ் ஒன்றை எடுத்துப் ...டிக்கத் தொடங்கினேன். ...டித்து முடிக்கும்போது வண்டி, ...ிருப்பூரை அடைந்தது. சில ...ிமிடங்கள் அங்கே புகைவண்டி ...ஓய்வுபெற்றது. பயணிகள் அங்கும் இங்கும் ஓடினர்—ஆகாரத்தைத் தேடி!

புகைவண்டி, நீண்ட ஒலியை எழுப்பியது. பயணிகள் ஓடோடி வந்தார்கள். தங்கள் பெட்டிகளில் ஏறிக்கொண்டார்கள். பெயருக்கேற்றபடி புகையைக் கக்கியவாறு புகை வண்டி புறப்பட்டது.

இந்த நேரத்தில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் என் பெட்டியிலேயே என்னுடனேயே பயணம் செய்து வருவதைக் கண்டேன். அந்த நண்பர் என்னைக் கண்டதும் மறைந்து கொண்டார். நான் அவரைப் பார்க்காத நேரங்களில் அவர் என்னைப் பார்த்து, தானும் என்னுடன் பயணம் செய்து வருவதை நினைவு படுத்திக் கொண்டே வந்தார். அவருடைய செயல் ஒவ்வொன்றும் அவர் 'டிக்கெட்' இல்லாத பயணி என்பதை மெய்ப்பித்துக்கொண்டிருந்தது.

வண்டிகளில் வழக்கமாகப் பேசப்படும் அரசியல் விமரிசனங்கள், கலை உலகச் செய்திகள், நடிக நடிகையரின் வாழ்க்கை வரலாறுகள் ஆகியவை அன்றையத் தினம் பேசப்படவில்லை. எல்லாப் பயணிகளும் நித்திரைத் தேவியின் சீட கோடிகளாக இருந்ததால், பெட்டியில் உள்ள விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன. உள்ளே

பயணத்தில் கிடைத்த நண்பர்

சுந்தர்

இருந்த பெருமக்களின் தலைகளும் வண்டியின் போக்குக்கு ஏற்ப நர்த்தனமாடத் தொடங்கின.

சேலம் சந்திப்பில் வண்டி நின்றது. மதிப்பிற்குரிய டிக்கெட் பரிசோதகர் தனக்கே உரிய தனித்தோரணையில் எங்கள் பெட்டிக்குள் நுழைந்தார். உள்ளே இருட்டாக இருப்பதை அறிந்து, விளக்கைப் போட்டார். அவ்வளவுதான்! அதுவரை எல்லார் முன்னும் இருந்த என் அருமை நண்பர் ஓட்டம் பிடித்தார். பயணிகள் அமர்ந்திருக்கும் பலகைக்குக் கீழே தஞ்சம் புகுந்தார். போகும் போது அவர் என்னைப் பார்த்து விட்டுச் சென்ற பார்வை மிகவும் பரிதாபமாகவே இருந்தது. டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யும் அந்த நண்பரைக் காப்பாற்ற நினைத்தேன். குற்றம் செய்தால் மட்டுமல்ல தண்டனை, குற்றம் செய்பவருக்கு உதவி செய்தாலும் தண்டனை உண்டு என்பது தெரியும். என்றாலும்

நண்பரின் உயிரைக் காப்பாற்ற நான் முடிவு செய்ததால் பாவம், அவரைக் காட்டிக் கொடுக்கவில்லை. ஒருவழியாகப் பரிசோதகரிடம் இருந்து தப்பி விட்டார் நண்பர். ஆனால் சில நிமிடங்களுக்குள்ளேயே தனது பழைய நிலையை மறந்து விட்டார். மீண்டும் தொல்லை கொடுக்க ஆரம்பித்தார். ஏனைய பயணிகளை அடிக்கடி விழிக்க வைத்து, அவர்களின் கோபத்தையும் சாபத்தையும் நிறையச் சம்பாதித்துக்கொண்டார்.

சென்னை வந்தது. வண்டியில் வந்த பரிசோதகரைத்தான் ஏமாற்றி விட்டார், நிலயத்தின் வெளியே பளபளக்கும் வெள்ளை உடையுடன் நிற்கும் டிக்கெட் சேகரிப்பவருக்குத் தெரியாமல் எப்படி வெளியே போகப் போகிறாரோ என்று என் மனம் அச்சப்பட்டுக் கொண்டிருந்தது. பெட்டியை விட்டு இறங்கினேன்; நண்பர் வருகிறாரா என்று திரும்பிப் பார்த்தேன். என்ன அதிசயம்! நண்பரைக் காணவில்லை. நல்ல வேளை என்று எண்ணியபடி எனது டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக வீட்டுக்கு வந்துசேர்ந்தேன்.

என் மனம் மட்டும், நண்பர் எப்படித் தப்பித்துச் சென்றார் என்பதைப் பற்றியே எண்ணி எண்ணி வியந்துகொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஒரு சிறு அதிர்ச்சி! என்ன ஆச்சரியம்! தப்பிச் சென்றதாக எண்ணினேனல்லவா, அந்த நண்பர் என் வீட்டுக்கே வந்து விட்டார். அவர் தானாகத் தப்பிவரவில்லை. எனது துணை கொண்டுதான் வந்திருக்கிறார். அவர் மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. டிக்கெட் இல்லாமல் பயணம் செய்து வந்து விட்ட அந்த நண்பரை என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, "என்னங்க இது, ரெயில் சிநேகிதமா? உருப்பட்டாப்பிலே தான்" என்ற அர்ச்சனையுடன் அருகில் வந்தாள் என் அன்பு மனைவி.

பாவம்! டிக்கெட் பரிசோதகரின் கண்ணில் படாமல் தப்பித்து வந்துவிட்ட அந்த நண்பர் என் குடும்ப விளக்கி... ...ர்மை

யான கண்களிலிருந்தும் கடுமையான எண்ணத்திலிருந்தும் தப்பிக்க முடியவில்லை. அருமை நண்பர் என் மனைவியின் கரங்களால் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டார். என்னால் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டேன். பிறகு, சிறிது சிறிதாகத்தான், மாண்டு கிடந்த நண்பரைப் பார்க்க முடிந்தது என்னால்.

முதலில் நானும் நண்பரின் கொலைபற்றி வருந்தத்தான் செய்தேன். பிறகு, குடும்ப விளக்கு செய்ததே சரி என்ற முடிவுக்கு வந்தேன். அந்த நண்பர் யாரென்று தெரிந்தால் நீங்களும் எங்கள் கருத்தைத் தான் ஆதரிப்பீர்கள்.

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2

டிக்கெட் இல்லாமல் பயணம் செய்த அந்தத் தீரர் யார் தெரியுமா?

என்னைப் பின் தொடர்ந்து என் வீட்டுக்கு வந்துவிட்ட நண்பர் யார் தெரியுமா?

என் இல்லத்து அரசியினால் கொலைக்களத்துக்கு அனுப்பப் பட்ட பரிதாபத்திற்குரிய நபர் யார் தெரியுமா?

அவர்தான்...... திருவாளர் மூட்டைப் பூச்சியார்!

ஐ. ஆர். 22.

பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் (International Rice Research Institute) உருவாக்கப்பட்ட நான்காவது நெல் தினுசு ஐ.ஆர். 22. அனைத்து நாட்டிலும் அதிக மகசூல் அளித்து, 'அதிசய நெல்' (Wonder Rice) என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஐ.ஆர். 8 நெல்லையும், நோய் தாங்கும் திறன் கொண்டதும், சிறந்த மணிகளைக் கொண்டதுமான 'தடுக்கன்' (Tadukan) என்ற பிலிப்பைன்சு நாட்டு நெல்லையும் 1965-ஆம் ஆண்டில் கரு இணைப்புச் செய்து (Hybridisation) உருவாக்கப்பட்டது ஐ.ஆர். 579-160-3 என்ற தினுசு. பல்வேறு வகையான பரிசோதனைகளுக்குப் பின் அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையம் ஐ.ஆர். 579-160-3 என்ற தினுசை 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள், ஐ.ஆர். 22 எனப் பெயரிட்டு வெளியிட்டது.

ஐ.ஆர். 22 நெல், ஐ.ஆர். 8 நெல்லைப் போன்றே அதிக உரமேற்று அதிக மகசூல் அளிக்க வல்லது. ஐ.ஆர். 22 நெல், ஐ.ஆர். 8 நெல்லைப் போலவே நல்ல திடமான நாற்றுக்களையும் அகன்ற இலைகளையும், விரைப்பான தண்டுகளையும், நன்கு கிளைக்கும் திறனையும்கொண்டது. ஆனால், ஐ.ஆர். 22 நெல்லின் மணியானது, ஐ.ஆர். 8 நெல்லின் மணியைவிடச் சிறந்த தரமுள்ளதாக இருக்கிறது. மேலும், இத்தினுசு, ஐ.ஆர். 8 நெல்லை விட நோய்களைத் தாங்கும் திறன் வாய்ந்தது.

ஐ.ஆர். 22 நெல்லின் மணிகள் நீளமாக இருக்கும். ஐ.ஆர். 8 அரிசியின் நடுப் பாகத்தில் வெண்மையாக இருக்கும். இதனால் இதைப் பெரும்பாலோர் விரும்புவதில்லை. ஆனால், ஐ.ஆர். 22 அரிசியின் நடுப் பாகத்தில், அவ்வாறில்லாமல் சாதாரண அரிசியைப் போன்றே இருக்கும். எனவே, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5 ஆகியவைகளை விட ஐ.ஆர். 22 நெல்லை, மக்கள் பெரிதும் விரும்பக் கூடும். இதன் வயது 120 முதல் 135 நாட்களேயாகும். ஐ.ஆர். 8 நெல்லுக்குப் பரிந்துரைக்கப்படும் முறைகளையே இந்த நெல்லிற்கும் மேற்கொள்ள வேண்டும்.

பகல் முழுதும் கடினமான வேலைக்குப் பிறகு...
புத்துயிரளிக்கும் நெஸ்கா:பே ஒரு கப் அருந்துங்கள்
—5 செகண்டில் தயார்!

நெஸ்கா:பே
உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

முற்றிலும் சுத்தமான காப்பி
தென்னிந்திய காப்பி
விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

தமிழ்நாட்டில் இளைஞர் படை

எஸ். சிங்கராசன்

14 வயது முதல் 22 வயது வரையிலும் கல்வி கற்று வேலை வாய்ப்புகளை நாடும் தமிழ் நாட்டு இளைஞர்கள், ஆண்களும் பெண்களும் வேலை வாய்ப்புகளைப்பெறுவது வரை, தங்கள் பொன்னான நேரத்தை, வேலை வாய்ப்புகளை அறிவதிலும், பணியின் மூலம் தங்கள் உள்ளத்தைப் பக்குவப் படுத்தி, நாளை தேடிக்கொள்ளும் வேலைக்குத் தங்களை மேலும் உகந்தவர்களாக ஆக்கவும் இளைஞர் படை அமைப்பில் ஒரு சிறந்த வாய்ப்பு உள்ளது.

ஒவ்வொரு இளைஞனும் தன் வருங்காலத்தையும், நாட்டின் எதிர்காலத்தையும் எண்ணித் தனக்கும், நாட்டிற்குமிடையே அமைந்த குடும்பம், ஊர், ஊராட்சி, கோவில், அற நிலையம், மாவட்டம், பள்ளி, பாலர் அரங்கங்கள், விளையாட்டு அரங்கங்கள், ஓய்வு வேளையில் தொழில்களைக் கற்கும் நிலையங்கள், விவசாயப்பண்ணைகள், நூலகங்கள் போன்ற நிறுவனங்களில் தன்னைப் போன்ற இளைஞர்களுடன் சேர்ந்து, ஓய்வு வேளைகளில் சேவை செய்வானாயின், தான் கல்லூரியில் கற்ற பாடங்கள், தனக்கு அமைந்த பண்பாடுகள், தான் என நினையாமல் மற்றவர்களை எண்ணித் தான் செய்ய வேண்டிய சேவைகள் இவைகளைப் பெருக்கவும், விருத்தி அடையச் செய்யவும் ஓர் இளைஞர் அணி பெரும் தேவையாகும்.

கல்வி கற்கும் வாய்ப்புகள் முடிவடைந்ததும், இன்று நம் இளைஞர்கள், தாங்களே வேலை வாய்ப்புகளைத் தேடி நடக்கும் ஓர் இக்கட்டான நிலை நாட்டில் உருவாகியுள்ளது. வேலைத் தகவல் நிலையங்கள், வேலையில்லாதவர் பெயரைப் பதிவு செய்து வேலை வாய்ப்புகள் வரும்போது அவர்களுக்கு அறிவித்து, வேலை ஏற்பாடுகள் செய்ய உதவிய போதிலும், வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை ஆண்டு தோறும் இலட்சக் கணக்கில் கூடுவதன் காரணமாகவும், போதிய வேலை வாய்ப்புகள் திடீரென அதிகரிக்காத காரணத்தாலும், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை இல்லாமல் அவதிப் படுகின்றனர்.

ஆனால், நாட்டில் நடக்க வேண்டிய வேலைகளோ ஏராளம்! ஏராளம்!! கட்டாயக் கல்வி, சுகாதாரம், சாலைகள் அமைப்பது, காடு வளர்த்தல், விவசாயிகளுக்கு உதவுதல், தொழில் நுட்பக் கல்வியில் மேலும் தேர்வு பெறுதல், சமுதாய நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எண்ணிறந்த நிறுவனங்களுக்குத் தொண்டு செய்வது, போன்ற முற்போக்கு மனப்பான்மை ஓங்கி வளர்வதற்கு இளைஞர்கள் முன் வர வேண்டும்.

இளைஞர்கள் முன்னேற்றமும், நாட்டின் முன்னேற்றமும், ஒன்றோடொன்று இணைந்தே காட்சியளிக்கிறது. இன்றைய இளைஞர்கள் மனம் கொந்தளிக்காமல், நல்ல பயிற்சியின் மூலம் சேவையின் இன்றியமையாமை உணர்த்தப்படுமாயின், நாளை அவர்கள் இந்நாட்டின் நல்ல குடிமக்களாக இருப்பது மட்டுமல்லாமல் அவர்கள் வேலைக்கு அமரும் காலங்களில் சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமக்குத் தாமே எவ்வாறு உதவி செய்வது என்று அறிவதோடு, மற்றவர்கட்கும் பணி செய்வதைத் தங்கள் இலட்சியமாகக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். மன விரிவும், பண்பும் பெற மனித சமுதாயத்தின் தேவைகளை பார்த்தும், கொள் நடைமுறையில் புரிந்து செய்தும் வதுதான் பணியின் அடிப்படை இலட்சியம். உண்மையில் நம் இளைஞர்களுக்கு மிகத் தேவை விவசாயக் கல்வியும், தொழிற் கல்வியும். அத்தோடு தாங்கள் கற்ற பாடங்களை நடைமுறையில் எவ்வாறு பயன் படுத்துவது என்ற அறிவும் அவசியம்.

வெறும் புத்தகப் பூச்சியாக இல்லாமல், பயிற்சியும், அனுபவமும், தேர்வும் பெற்று நாட்டின் நிலையையும் தேவையையும் புரிந்து, தாமாகவே தம்மை ஒரு வேலையில் அமர்த்தும் திறன், இளைஞர்கள் பணியின் மூலம் நமது நாட்டில் உருவாக்க முடியும். இளைஞர்கள் வாழ்வில் நிச்சயமாக ஓர் புதிய அத்தியாயத்தைத் தொடங்க வாய்ப்பு உண்டு.

" தனி மரம் தோப்பாவதில்லை ". குடும்பத்தில் எல்லாரும் பட்டம் பெற்று வேலை தேடுவதில் வாழ்வைக் கழிப்பதிலும் பயன் இல்லை. தன் நிலையைப் பக்குவப்படுத்திப் பணிக்கு முந்தும் எந்த இளைஞனுக்கும், எப்போதும் வேலை இல்லாமல் இருந்ததில்லை. ஆனால் அதற்கு மாறாக இளைஞர்களுக்குப் போதிய நேரம் இல்லை எனக் கூறலாம். குடும்பத்திற்கும், நாட்டிற்கும் உழைக்கும் பண்பு பணியின் மூலமே பெற முடியும். தனியார் ஒருவரின் முன்னேற்றமோ அல்லது ஒரு நாட்டின் முன்னேற்றமோ, தன்னலமற்ற தியாகத்திலும், பணியிலும் தான் அமைந்துள்ளது. பதவி, பணம், கௌரவம் எல்லாம் தியாகத்தின் சிகரங்கள்; பயிற்சியும்

> தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் இயக்குநரான இக்கட்டுரை ஆசிரியர்—தமிழ்நாட்டில் இளைஞர் அணி எப்படி அமைய வேண்டும் என்பது பற்றித் தமது கருத்துக்களை இலட்சிய அடிப்படையில் தெரிவிக்கிருர்.

வழங்கியோர் பட்டியல்

	ரூ.	பை.
முந்திய இதழின்படி தொகை.	16,98,286	86
திரு அப்துல் ரகீம் (முதல்வர் அலுவலகம் வாயிலாக).	10	00
வெள்ளக்கோவில் சாமிநாதன், (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்).	101	00
திரு டி.எம். சண்முகம், சென்னை ..	10	00
பொன்மலைப்பட்டி, தி.மு. கழகம்.	5	00
டால்மியா, சிமெண்ட் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், கல்லக்குடி.	206	00
கோட்டாட்சி அலுவலர், கோவில் பட்டி.	3,340	00
திரு எம்.டி. ராமசாமி ரெட்டியார், டிரஸ்டி, ஸ்ரீஅபிநாமேசுவரர் கோவில், திருவாமாத்தூர்,	150	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சாத்தான்குளம்.	1,038	66
நிலவளவங்கித் துணைப்பதிவாளர்.	50	00
இணைத் துணைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், காஞ்சிபுரம்.	25	00
நிர்வாக அலுவலர், பேரூராட்சி, பெரம்பலூர்.	50	00
துணைப்பதிவாளர், ஊத்துக்கோட்டை	25	00
வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், பூண்டி.	110	00
லட்சுமி தியேட்டர், திருநெல்வேலி (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சகம் வாயிலாக.)	265	15
அறிஞர் அண்ணா மன்றம், பலகை வாராவதி, திருவான்மியூர்.	15	00
திரு சி. ராமன், ஊராட்சி ஒன்றிய [illegible]	30	00
செயலாளர், கருணாநிதிபுரம்	81	00
திரு சின்னக்கண்ணு, அத்திரிமலைப் பட்டு.	5	02
ஒண்ணுபுரம் தி. மு. கழகம் —	1	00
திரு திருநாவுக்கரசு .. —	1	01
அண்ணா நினைவுக் கல்லூரி, தருமபுரி	5	00
ஒகனேகல் கிளை அலுவலகம் ..	51	51
திர்த்தகிரி, நொச்சிப்பேட்டை, கிளைக்கழகம்.	5	00
தலைவர், நொச்சிப்பேட்டை, கிளைக் கழகம்.	5	00
திரு மாணிக்கம், கோவிந்தரெட்டி பாளையம், (கல்வியமைச்சர் அலுவலகம்வாயிலாக.)	5	00
திரு இருளப்பன் சேர்வை வத்தலக்	100	00
குண்டு, வெள்ளிப்பட்டிப் பொதுக் கூட்ட வசூல்.	54	00
'ஏமாளி' நாடகத்தி[illegible] நடிகர் கண்ணன் வசூல்.	10	00
மின்துறை அ[illegible] திரு. ஓ.பி. ராம[illegible]	500	00
சிறைக்கைதிகள்—[illegible] ஜெனரல், கு[illegible]	25	00
மருத்துவ அ[illegible] சுகாதார நி[illegible]	20	00
திரு பத்மநாபன், [illegible] கடலூர்-1.	100	00
மொத்தத் தொகை ..	17,04,636	21

பணியும் இல்லாதவர்கட்கு இவ் வாய்ப்புகள் எட்டாத உச்சி களாகும். ஆக, வாழ்வில் உயர் வளிக்கும் பாதைதான் இளைஞர் படை அமைப்பு. இளைஞர் களின் பள்ளிக் கல்வி அல்லது கல்லூரி வாழ்வு முடிந்ததும், தன் போன்ற நூற்றுக் கணக்கான இளைஞர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து சமுதாய நலனை முக்கியமாகக் கருதி, சமுதாய அமைப்பில் தன் வருங்காலத்தை வளர்ச்சி யடையச் செய்ய இளைஞர்படை பெரும் உதவியளிக்கும். குரு விற்கும், குருகுலத்திற்கும், கோவில்கட்கும், நண்பர்களுக் கும், நாட்டு மன்னருக்கும் தன்னாலான பணிகளைச் செய்து பயிற்சி பெற்ற பாரம்பரியத் தில் வந்த தமிழ் நாட்டு இளைஞர்கட்கு, இளைஞர் கூட் டணி புதிய பாடம் அல்ல.

மேலை நாடுகளில் இளைஞர் பணி

இங்கிலாந்தில் இளைஞர் பணி மூன்று முக்கிய பங்காளிகளால் நடத்தப்படுகின்றது. அவைகள் முறையே, அந்நாட்டின் அரசு, மாவட்டக் கல்வி அதிகாரிகள், தானாகவே பணி செய்யும் நோக்குடன் முன்வரும் சங்கங் கள். இந்நிறுவனங்கள் 14–20 வயதிற்கு உட்பட்ட ஓய்வி லுள்ள இளைஞர்களுடன் பங்கு கொண்டு செயல்படுகின்றன. இளைஞர் முன்னேற்றம் தேசியக் கல்வியின் முக்கியப் பொறுப்பாக 1839-ஆம் ஆண்டு 'இளைஞர் பணி' என்ற தலைப்பில் ஆரம்பிக்கப்பட்டது. 1944-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கல்விச் சட்டத்தின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்கள் கட்டா யமாக அவ்வட்டாரங்களின் தேவைக்கேற்ப வசதிகளை இளைஞர்களின் முன்னேற்றத் திற்கு ஏற்பச் செய்து கொடுப்ப தோடு, முன் வந்துள்ள இளைஞர் சங்கங்களுடன் சேர்ந்து நல்ல முறையில் பணி ஆற்ற வேண்டும்.

இங்கிலாந்திலும், வேல்ஸ் நாட்டிலும் இளைஞர் பணியை நடத்த வேண்டிய மத்தியப் பொறுப்பு "கல்வி—விஞ்ஞானத் துறையைச் சேர்ந்ததாகும். ஆனால் இத்துறை, 'இளைஞர் பணியைப் பெருக்கும் மன் றத்தின்' ஆலோசனையைக் கேட்டே பணியாற்றும்; இத் துறை இளைஞர்களின் பயிற் சிக்கு வேண்டிய பணியாற்றும் நிறுவனங்களை நடத்துவதற்குத் தேவையான பண உதவியை அளிக்கும். இந்நிறுவனங்களில் முழு நேர இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், இளைஞர் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் நிறுவனங்களுக்குத் தேவை யான பூமி, அங்கு தேவைப் படும் பொருள்கள், சிறந்த நாட்டுப்பணித் திட்டங்கள் நடத் தும் செலவுகளை ஈடு செய்யவும் கல்வி—விஞ்ஞானத் துறை பொருள் உதவி செய்யும். ஆங் காங்குள்ள கல்வி அதிகாரிகள், வட்டார இளைஞர் மன்றங் களோடு தொடர்பு கொண்டு இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக் கும் அதிகாரிகள் மூலம் இளைஞர் மன்றங்களிடையே ஒத்துழைப்பை உண்டாக்கி, புதிய நிறுவனங் களையும் ஆரம்பிக்கின்றனர்.

மாவட்ட அதிகாரிகள், இளைஞர் தலைவர்களுக்குப் பண உதவி செய்வதோடு இளைஞர் மன்றங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் செய்கின்ற னர். ஒவ்வொரு மன்றத்திற் கும் திறமை வாய்ந்த பயிற்சி யாளர்களை அனுப்பி, மன்ற இளைஞர்களுக்கு வேண்டிய பயிற்சியை அளிக்கின்றனர். மாவட்ட அதிகாரிகள் அரசாங் கத்தின் மேற்பார்வையில் நேரடி யாகப் பல இளைஞர் மன்றங்களை நடத்துகின்றனர். மாவட்ட அதிகாரிகள் ஒவ்வொரு மாவட் டத்திலும், அதிகாரிகளையும், இளைஞர் மன்றங்களிலிருந்து அனுப்பும் பிரதிநிதிகளையும் கொண்ட குழுக்கள் அமைத்து மேலும் பணியைப் பெருக்குவதைப் பற்றி ஆலோசிக்கின்றனர்.

இங்கிலாந்தில் முக்கியமான பணிகளை 1944-ஆம் ஆண்டு புதிதாக வந்த சட்டத்திற்கு முன்பாகவே கிறித்தவ மன்றங் களைச் சார்ந்த இளைஞர்கள் ஆரம் பித்து நடத்தி வந்தார்கள். அங்கு 21 வயதிற்குட்பட்ட 30 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் இந்த மன்றங்களில் உறுப்பினர்களாக இருக்கின்ற னர்.

இளைஞர் மன்றங்களின் முக்கியப் பணியானது அவரவர் திறமைக்கு ஏற்றவாறு தொழில் சம்பந்தமாக வழி காட்டுவதா கும். இவ்விளைஞர்கள் என் னென்ன வேலை வாய்ப்புகள் நாட்டில் உள்ளன என்றும் அவர்கள் வேலையில் அமர்ந்த பின்னரும், அவர்கள் வேலை முன்னேற்றமாகத் தொடர்பு கொள்வதும் இளைஞர் மன்றங் களின் முக்கியப் பணியாகும்.

இங்கிலாந்தில், 1948-ஆம் ஆண்டு அமலில் வந்த வேலை வாய்ப்பு—சேவைச் சட்டத்தின் கீழ், தொழில் அமைச்சர் இளைஞர் களின் வேலைக்கும், இளைஞர் சேவைக்கும் தலைமை வகித்த தோடு பாராளுமன்றத்துக்கும் பொறுப்புள்ளவராக இருந்தார். அவருக்கு ஆலோசனை கூறத் தேசிய இளைஞர் வேலை மன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. அம் மன்றம் நாட்டிலுள்ள பலதரக் கல்விநிறுவனங்களையும், தொழில் நிறுவனங்களையும், தனியார் நிறு வனங்களையும் ஒன்று சேர்த்துப் புதிய கொள்கைகளை அமல் செய்து வந்தது. ஆகவே கல்வி கற்று முடிந்ததுமே இளைஞர்கள் கல்வி நிலையங்களோடு தொடர் புள்ள இளைஞர் சேவை செய்யும் மன்றங்களில் கொண்டு வரப் பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவியும், பயிற்சியும் அளிக்கப் படுகின்றனர். இளைஞர் சேவை செய்யும் மன்றங்களின் அவசி யத்தை ஸ்காட்லாந்திலும் ஒப்புக் கொள்ளப்பட்டுத்தான் கல்வி நிலையங்களின் இன்றி யமையாத தொடர்புள்ள அம்ச மாக 1945-ஆம் ஆண்டிலிருந்து கருதப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சமுதாயச் சீர்திருத்தமும் இளைஞர் பணியும்

1917-ஆம் ஆண்டு சமுதாயச் சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு எம். ஆர். ஜெயகர் (M. R. Jayakar) அவர்கள் இளைஞர்களின் தேச சேவை சமுதாயப் புனரமைப் பிற்கும், முன்னேற்றத்திற்கும் எத்துணை அவசியம் எனக்குறிப் பிடும்போது, சமுதாய ஒருமைப் பாட்டிற்கும், பகுத்தறிவுக் கொள்கைகளுக்கும் புறம்பான மூடப் பழக்க வழக்கங்களை ஒழிப் பதற்கும், சாதிப்பாகுபாட்டினால் பின் தங்கிய மக்களுக்குக் கை கொடுக்கவும் இளைஞர் பணி மிக அவசியம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். முன்னேற்றக் கருத்துக்களை, இளைஞர்கள் பணி மூலம் கண்டறி வார்களேயாயின் அவர்கள் முன்னேற்றக் கொள்கைகளைப் பரப்பும் அரசாங்கத்தின் தூண் களாகக் காட்சி அளிப்பர் என்ப தில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆசைகள் பொங்கி அலைபாயும் இளைஞர்களின் ஆவேசத்தைச் சமுதாய சீர்திருத்தத்திற்கு வேண்டிப் பயன்படுத்தப் பணி என்ற அணை போட்டுப், புன ரமைப்பு என்ற வாய்க்கால் வழித் திருப்புவதாயின் அரசுக் கும், இளைஞர்கட்கும் நல் லெண்ணம் ஏற்படுவதோடு சமு தாயமும் சீர்திருத்தப்படும். சாதி ஒழிப்பு, கலப்புத் திரு மணம், சமுதாய ஒற்றுமை, தேசிய உணர்வு, பகுத்தறிவுக் கொள்கைகளை மக்களிடையே பரப்புதல், இதற்கெல்லாம் மேலாக எல்லா இளைஞர்களும் தொழில், விவசாயம் இவ்விரு துறைகளிலும் பயிற்சி பெறுவது போன்ற ஆக்க வேலைகளை இளைஞர் படையின் மூலம் இளைஞர்கட்கு அளிக்கப்படும் சமுதாயப்பணி நிச்சயம் செய்து முடிக்கும்.

நல உரை

தமிழ் நாட்டில் இளைஞர் படையை அமைத்து, இளைஞர் பணியை நல்ல முறையில் கொண்டு வரப் பின் வரும் ஏற்பாடுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

(1) மேல்நாடுகளைப் போன்று சீர்திருத்தங்களுக்கு முன்னோடி (Pioneer) எனப் பெயர் பெற்ற தமிழக அரசு 'இளைஞர் கல்வி விஞ்ஞானம்' (Department for Youth services and rationalism) என்ற புதிய துறை ஒன்றை அமைப்பதோடு 'இளைஞர் பணியில்' தேர்ச்சி பெற்ற நிபுணர்கள், கல்வி அதிகாரிகள் இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் இவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபையை (Youth Advisory corps or Youth service Board) நிறுவுவது உடனடித் தேவையாகும்.

(2) எல்லா உயர்தரப் பள்ளிகளும், கல்லூரிகளும், தேர்வு பெற்று வேலை தேடும் இளைஞர்கட்கு இளைஞர் சேவையைப் பற்றிப் பயிற்சி அளிக்கவும், வேலை வாய்ப்பு அளிக்கும் வழிகளைத் தெரியப் படுத்தவும், இளைஞர் மன்றங் களை நிறுவச் சட்ட அடிப் படையில் அரசு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும்.

(3) தமிழ் நாடு முழுவதும் 1,000 இளைஞர்கட்கு ஒரு மன்றம் என்ற அடிப்படையில் இளைஞர் மன்றங்கள் அமைத்து, அவ்விளைஞர்கட்கு நற்பயிற்சி அளிக்க, அதிகாரிகளையும், நிறு வனங்களுக்கு வேண்டிய வசதி களையும் அரசு அளிக்க வேண்டும். மேற் குறிப்பிட்ட நட வடிக்கைகள் மூலம் சமுதாயச் சீர்திருத்தமும், சமூக முன்னேற் றமும் புரட்சியின்றி நிலை நாட்ட வழி பிறக்கும்.

தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

தொலைபேசி எண்: 20367

தந்தி விலாசம்: 'அர்பாங்க்'

தபால் பெட்டி எண்: 226

	(வருடத்திற்கு சதவீதம்)
கரண்ட் அக்கௌண்ட்	0·50
சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட்	4·00
கால் டெபாஸிட்டுகள்—1,000-ம் அதற்கு மேலும்.	
15 நாட்கள்	2·00
46 நாட்கள்	3·00
பிக்செட் டெபாஸிட்டுகள்—ரூ. 100-ம் அதற்கு மேலும்.	
91 நாட்கள்	4·75
6 மாதங்கள்	5·25
12 மாதங்கள்	6·25
2 வருடங்கள்	6·75
3 வருடங்கள்	7·25
5 வருடங்கள்	7·50

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களின் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள்:

மாதத் தவணை	தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.						
	12	24	36	48	60	72	84
ரூ. 5-ம் அதன் மடங்குகளும்	ரூ. 62	128·50	201	278	362·50	452	548·50

ஆர். கனகசபை,
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.



கண்நோய்

டாக்டர் ஜி. வேங்கடசாமி

கடந்த பத்து ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகிறோம். அதன் பயனாகத் தமிழ் நாட்டின் மக்களுக்கு என்னென்ன கண் நோய்கள் உண்டாகின்றன, எவ்வளவு பேர்களுக்கு நோய் உண்டாகிறது என்று அறிந்திருக்கிறோம். முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் நாட்டில் கண் நோய்கள் அதிகம். நோய் அதிகமாக இருந்தும், சிகிச்சைக்குப் போதிய அளவு வசதி இல்லை. கண்நோய்களை முக்கியமாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

சுற்றுப்புறச் சூழ்நிலையால் உண்டாகும் கண் நோய்கள்

சுற்றுப்புறம் அசுத்தமாக இருந்தால் அதனால் கிருமிகள் கண்களில் சேர்ந்து கண் நோய்களை உண்டாக்குகின்றன. சாதாரணமாக, கண்கள் சிவந்து பூளை வடியும், கண் வலி என்ற நோய் இந்த மாதிரிக் கிருமிகளால் உண்டாகிறது. உடலையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டால் இம்மாதிரி நோய்களைத் தடுக்கலாம்.

மேல் நாடுகளில் இத்தகைய கண் நோய்கள் வெகு குறைவு. கிருமிகளால், கரு விழியில் புண் உண்டாகி பார்வை இழப்பது நம் நாட்டில் சகஜம். இதுவும் மேலை நாடுகளில் மிகக் குறைவு. சுத்தம் குறைவதால் கண்ணில் உள்ள நீர்ப்பையில் கிருமிகள் சேர்ந்து நீர்ப்பையை அடைத்துக் கொள்ளும். இதுவும் நம் நாட்டில் சாதாரணமாகக் காணப்படுகின்றது. நீர்ப்பையில் உண்டாகும் சீழ் கண் விழியில் சேர்வதால் பல கெடுதல்கள் ஏற்படும். கருவிழியில் சிறிய தூசிபட்டாலும் கூட, கிருமிகள் சேர்ந்து, பெரிய புண்ணாகி, பார்வை இழக்கிறார்கள். இக் கிருமிகளால் ஏற்படும் நோய்களை எல்லாம், நமது உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதாலும், சுற்றுப்புறத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதாலும் தடுக்கலாம்;

குப்பை, கூளங்கள்,. சாக்கடை, வெளியில் மலஜலம் கழித்தல், இவற்றால் பல்வேறு வியாதிகள் உண்டாகின்றன. உடனடியாக சுற்றுப்புறச்சூழ்நிலையை மாற்றிச் சுத்தமாக வைத்தோமானால், இத்தகைய கண் நோய்கள் உட்பட பற்பல வியாதிகளைத் தடுக்கலாம்.

சத்துக் குறைவான உணவினால் ஏற்படும் நோய்கள் :

உணவில் போதிய சத்து இல்லாவிடில் உடல் வளர்ச்சி குறைவதுடன் பல்வேறு கண் நோய்களும் ஏற்படுகின்றன. மாலைக்கண் இதற்கு ஓர் சிறந்த உதாரணம். கீரை, பால், கேரட் ஆகியவற்றில் இருக்கும் வைட்டமின் 'எ' போதிய அளவு உணவில் இல்லாவிடில் மாலைக்கண் ஏற்படும். தமிழ் நாட்டில், குழந்தைகளுக்கு மாலைக்கண் சகஜமாக காணப்படுகிறது. இன்னும் உணவில் அதிக சத்து குறையுமானால் கருவிழி கெட்டு, பார்வை போய்விடும். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமிழ்நாட்டில் இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பார்வை இழக்கிறார்கள். பெரும்பாலும் இரண்டுமுதல் நான்குவயதுக்குட்பட்ட குழந்தைகளே இவற்றால் பாதிக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளின் தாய்மார்களுக்கு இவ்வியாதியின் காரணம் தெரிவதில்லை. குழந்தைகளுக்குக் காய்ச்சல் அல்லது வயிற்றுப்போக்கு ஏற்பட்டவுடன், கொடுக்கவேண்டிய சிறிய அளவு ஆகாரத்தையும் நிறுத்திப் பத்தியம் போட்டுவிடுகிறார்கள். அப்பொழுது குழந்தை கண் திறக்காமல் கண்களை மூடிக் கொண்டேயிருக்கும்.

பின்னர் கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது கருவிழி கரைந்து கெட்டுப் போய்விடும். இந் நிலைமையைத் தாய்மார்கள் அறிந்தால் இவ் வியாதியை எளிதில் பூரணமாகத் தடுத்து விடலாம். வளரும் குழந்தைக்கு என்ன உணவு கொடுக்க வேண்டும், சத்துக் குறைவான உணவு கொடுத்தால் குழந்தை எவ்வாறு இருக்கும் என்பதை மக்களுக்குப் போதிக்க மதுரையில் சத்து உணவு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் உள்ள குடும்பத்திலுள்ளவர்களுக்காக மலிந்த விலையில் குழந்தைகளுக்கு ஏற்ற சத்து உணவு தயாரிக்கும் முறை, உணவு புகட்டும் முறை ஆகியவற்றைத் தாய்மார்களுக்குப் போதிக்கிறார்கள். எல்லாத் தாய்மார்களும் இம் முறைகளைச் செவ்வனே கையாண்டால் சத்துணவின்மையால் பார்வை இழப்பதைத் தடுக்கலாம்.

உணவில் வைட்டமின் 'பி' இல்லாவிடினும், இமைகளில் புண் உண்டாகி, பார்வை குறையும். இதுவும் தமிழ் நாட்டில் சாதாரணமாக காணப்படுகிறது. பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் நூற்றுக்குப், பதினைந்து பேர், இந்த 'பி' வைட்டமின் குறைவால் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு வாய்ப்புண், கண் எரிச்சல், கூச்சம் முதலியன உண்டாகும். பார்வையும் குறையும். கைக்குத்தல் அரிசி, கீரை வகைகள், பால், மோர் முதலியன உட்கொண்டால் இந்த 'பி' வைட்டமின் குறைவால் உண்டாகும் கண் நோய்களைத் தடுக்கலாம்.

கண் உறுப்புகளில் ஏற்படும் கோளாறு

ஐம்பது வயதிற்கு மேற்பட்ட மக்களுக்குக்கண்ணினுள்இருக்கும் வில்லை கெட்டுப் புரை உண்டாகும்.

இது சாதாரணமாக வயதான யாவருக்கும் உண்டாகும் வியாதி. கொஞ்சம்கொஞ்சமாகப்பார்வை குறைந்து, சில மாதங்களில் பார்வை முழுவதும் குறைந்துவிடும். இவ் வியாதியை எளிதில் குணப்படுத்தலாம். அறுவைச் சிகிச்சை மூலம் புரையை எடுத்துவிட்டுக், கண்ணாடி போட்டுக் கொண்டால் இழந்த பார்வை

யைத் திரும்பப் பெறலாம். மக்க
ளில் நூற்றுக்கு இரண்டு பேர்
கண்ணில் புரை உண்டாகி, இத
ஞல் பார்வையை இழக்கிறார்கள்.
தமிழ்நாட்டில் மட்டும் எட்டு லட்
சம் மக்கள் இதனால் பார்வையை
இழக்கிறார்கள். இவர்கள் கண்
நோய் மருத்துவமனைக்கோ அல்
லது முகாமிற்கோ சென்று அறு
வைச் சிகிச்சை செய்து கொண்டு
இழந்த பார்வையைத் திரும்பப்
பெறலாம். எந்த வயதிலும்
இந்த அறுவைச் சிகிச்சை செய்து
கொள்ளலாம். புரை முற்றிப்
பூரணமாக மறையும் முன்னரே
அறுவைச்சிகிச்சை செய்து கொள்
ளுதல் நல்லது. குழந்தைகளுக்குக்
கூட சிலருக்கு கண்ணில் புரை
உண்டாகலாம். இதையும்
அறுவைச்சிகிச்சை மூலம் குணப்
படுத்தலாம்.

கண் அழுத்தம் அதிகமாதல்

கண்ணினுள் சுரக்கும் நீர்
வெளிப்படுவது தடைப்பட்டால்
கண்ணில் அழுத்தம் அதிகமாகும்.
ஆரம்பத்தில் இவ் வியாதிக்கு
அறிகுறிகள் ஒன்றும் இருக்காது.
கொஞ்சம் கொஞ்சமாக பார்வை
குறைந்து இவ் வியாதி முற்றும்
போது பூரணமாகப் பார்வையை
இழந்து விடுவார்கள். இவ்வாறு
பார்வை போய்விட்டால் அதைத்
திரும்பப் பெற இயலாது. தமிழ்
நாட்டில் மட்டும் பல்லாயிரக்
கணக்கான மக்கள் இதனால் பார்
வை இழந்திருக்கிறார்கள். இவ்
வியாதியை ஆரம்பத்திலேயே
கண்டுபிடித்து வைத்தியம் செய்
தால் பார்வையைக் காப்பாற்ற
லாம். வருடம் ஒரு முறையாவது
ஒவ்வொருவரும் தங்களின் கண்
அழுத்தம் எவ்வாறு இருக்கிறது
என்று சோதித்துப் பார்த்துக்
கொள்ளவேண்டும்.

மாறு கண்

கண்விழி அசைவதற்கு ஒவ்
வொரு விழியையும் சுற்றி ஆறு
தசைகள் உள்ளன. இத் தசை
களில் ஏதாவது கோணலினாலும்,
இதர காரணங்களினாலும் மாறு
கண் உண்டாகின்றது. இதுவும்
குணப்படுத்தக் கூடிய வியாதி.
சிறு வயதிலேயே தகுந்த டாக்ட
ரிடம் காட்டிச் சிகிச்சை செய்து
வந்தால் மாறு கண்களை நேராக்க
லாம். அவ்வாறு நேராக்காவிட்
டால் கண்ணில் பார்வை குறை

தமிழரசு இதழுக்கு அனுப்பப்படும் கவிதை-கதைகள் முதலியன எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பப்படமாட்டா அவை வெளியிடுதல் பற்றிய கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ள இயலாது! அஞ்சல் தலைகளோ அஞ்சல் அட்டைகளோ அனுப்பவேண்டாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

யும். இரண்டு கண்களும்
சேர்ந்து இணைந்து பார்க்க முடி
யாது.

உடல் வியாதியால் ஏற்படும் கண் நோய்கள்

கண்களும், உடலில் உள்ள
உறுப்புக்களில் ஒன்றானதால்,
உடலில் ஏற்படும் வியாதிகள்
கண்களையும் பாதிக்கும். நீரிழிவு
நோயினால் ஆயிரக்கணக்கான
மக்கள் பார்வை இழக்கிறார்கள்.
பல வருடங்கள் ஒருவருக்கு நீரி
ழிவு நோய் இருந்தால் கண்ணி
னுள் இருக்கும் விழித் திரையில்
ரத்தக் கசிவு ஏற்படும். அது
அதிகமாகிப் பார்வையைக்
குறைத்துவிடும். ஆதலால் நீரி
ழிவு உள்ளவர்கள் தங்களது கண்
களை அடிக்கடி டாக்டரிடம்
காட்டிப் பரிசோதனை செய்து
கொள்வது அவசியம். ஆரம்பத்
திலேயே நல்ல முறையில் கவனித்
தால் பார்வையைப் பல வருடங்
கள் பாதுகாக்கலாம்.

இரத்தக் கொதிப்பு

உடலில் இரத்தக் கொதிப்பு
உண்டானாலும், கண்ணில் உள்ள
விழித் தசையில் இரத்தம் கசியும்.
இதனாலும் பார்வை குன்றும்.

மூளையில் உண்டாகும் கட்டிகள்

மண்டைக்குள், மூளையிலும்
மூளையைச் சுற்றி உள்ள உறை
களிலும் வியாதிகள் வந்தால்,
அவை கண் நரம்புகளைப் பாதிக்
கும். இதனால் பலருக்குப் பார்வை
போய்விடுகிறது. ஆதலால், தலை
வலி, மயக்கம், வலிப்பு முதலிய
நோய்கள் ஏற்பட்டால் கண்
டாக்டரிடம் காட்டி, கண் நரம்பு
களில் ஏதாவது கோளாறு இருக்
கிறதா என்று அறிந்துகொள்ள
வேண்டும். ஆரம்பத்திலேயே
சிகிச்சை செய்துவந்தால் பார்வை
இழப்பதைத் தடுக்கலாம்.
இது தவிர, கிரந்தி போன்ற
வியாதிகளாலும் கண்களில்
நோய்கள் உண்டாகிப் பார்வை
இழக்கிறார்கள். உடலில் எத்
தகைய வியாதிகள் இருந்தாலும்,
அவைகளைச் சரிவரக் கவனித்துக்
குணப்படுத்த வேண்டும்.

நாம் பிறக்கும் போது நல்ல
பார்வையுடன் பெறும் கண்கள்,
நாம் சாகும்வரை நன்றாகப் பாது
காக்கப்பட வேண்டும். இதில்
சிறப்புக்கவனம்செலுத்துவதால்,
கண்களில் எந்த வியாதிகள் உண்
டாகும் என்றுஅறிந்து, அவற்றை
வராமல் தவிர்க்கச் செய்ய
வேண்டும். தவிர்க்க முடியாத
காரணங்களினால் நோய்கள் உண்
டானாலும், தகுந்த சிகிச்சை
செய்துகொள்ள வேண்டும். இவ்
வாறு செய்வோமானால் கடைசி
வரை நம் கண்கள் நமக்கு நல்ல
பார்வையை அளித்து வாழ்வை
ஒளிமயமாக்கும். ◆



'சமுதாயத்தில் எல்லார்க்கும்
எல்லா வாய்ப்புக்களும் கிடைக்க
வேண்டும்—எல்லாரும் எல்லாப்
பெருஞ் செல்வமும் எய்தி வாழ
வேண்டும்—வாய்ப்பில்லாக் கார
ணத்தால் யாருடைய வளர்ச்சி
யும் தடைப்படக் கூடாது—
வாய்ப்பும் வசதியும் உடைய
காரணத்தால் மிகச் சிலர் சமுதா
யத்தின் மேல் மட்டத்தில் உலவு
வதும் இவ்விரண்டும் இல்லாக்
காரணத்தால் பெருவாரியான
வர்கள் அடிமட்டத்தில் நைந்து
உழல்வதுமான நிலைமை ஒழிக்கப்
பட வேண்டும் என்று காந்தி
யடிகள் விரும்பி, 'கடையனுக்கும்
கடைத்தேற்றம்' அளிக்கும்
'சர்வோதய' சமுதாயத்தைத்
தோற்றுவிக்கும் பெரும் பணியில்
ஈடுபட்டார். இக் கருத்தினை
வலியுறுத்துவது போன்றே,

'தனியொருவனுக்
குணவில்லையெனில்
சகத்தினை யழித்திடுவோம்'

என்றார் பாரதியார்.

ஆம். சமுதாயத்தில் தன்
தேவைக்காக வக்காலத்து
வாங்கிக்கொண்டு போராட,
கூச்சல் போடச் சில நபர்
களோ அல்லது ஒரு கட்சியோ
இல்லாமல்— தனக்குத்
தானே உரத்துக் கேட்கும்—தட்
டிக் கேட்கும் வலிமை கூட இல்
லாமல் சமுதாயத்தின் கடைக்
கோடியில் எங்கோ ஒரு மூலையில்
கண்ணிருந்தும் குருடனாய்—
காதிருந்தும் செவிடனாய்—வாயி
ருந்தும் ஊமையாய் முடங்கிக்
கிடந்து அணு அணுவாகச்
செத்துக் கொண்டிருக்கிறானே,
அவனைத் தான் பாரதி, 'தனி
யொருவன்' என்னும் சொற்றொ
டரால் நமக்குக் காட்டுகிறார்.
அத்தகையவர்களுக்கு உரிய
வாய்ப்பும் வசதியும் அளித்து,
அவர்களையும் சமுதாய அந்தஸ்
தோடு வாழவைப்பதுதான் சர்
வோதயம். அத்தகையதொரு
சர்வோதய சமுதாயத்தைக்
காணவே காந்தியடிகள் தன்னை
அர்ப்பணித்தார்.

'உலகம் நமக்கு என்ன செய்ய
வேண்டும் என்று நாம் எதிர்
பார்க்கிறோமோ அதை இந்தச்
சமுதாயக் கடை கோடியில் இருக்
கிறவர்களுக்கும் நாம் செய்ய
வேண்டும்—எல்லாருக்கும் சம
வாய்ப்புக் கிடைக்க வேண்டும்.
வாய்ப்பு மட்டும் அளிக்கப்படு
மானால் ஒவ்வொரு மனிதனும்
சமமான ஆன்மீக வளர்ச்சியைப்
பெறுவான்'—என்கிறார் காந்தி
யடிகள்.

காந்தியடிகளின் வாழ்க்கை
யில் இத்தகையதொரு இலட்சி
யத்திற்கு வித்தாக அமைந்தது
எது தெரியுமா? அஃதொரு
சுவையான வரலாறு. இதனைக்
காந்தியடிகள் எழுதிய 'சத்திய
சோதனை' என்னும் 'தன் கதை'
யில் விரிவாக விளக்குகிறார். 'ஒரு
நூலின் மந்திர சக்தி' என்றே
அந்த அதிகாரத்திற்குப் பெயரும்
கொடுத்துள்ளார்.

ஒரு சமயம் காந்தியடிகள்
நேட்டாலுக்குப் புறப்படும்
போது, அவரது முழு நம்பிக்கைக்
கும் பாத்திரராகி விட்டவரும்,
'கிரிட்டிக்' என்னும் பத்திரிகை
யின் உதவி ஆசிரியருமான திரு
போலக் காந்தியடிகளை வழியனுப்
புவதற்காக ரயில்வே நிலையத்
திற்கு வந்திருந்தார். அவர்,
'இது தங்கட்குப் பெரிதும் பிடிக்
கும்' என்று கூறி ஒரு புத்தகத்
தைக் காந்தியடிகளிடம் கொடுத்
தார். அதை அன்போடு பெற்
றுக் கொண்டார் காந்தியடிகள்.

காந்தியடிகள் தனது ரயில்
பயணத்தில், திரு போலக் வழங்
கிய அந்தப் புத்தகத்தையே
தனக்கு 'வழித் துணை'யாக்கிக்
கொண்டு படிக்கத்தொடங்கினார்.
'இந்த நூலைப் படிக்க ஆரம்பித்த
பின் இடையே அதைக் கீழே
வைக்கவே முடியவில்லை; எனது
உள்ளம் முழுவதையும் அது
கவர்ந்து விட்டது' என்று காந்தி
யடிகளே கூறுகிறார்.

பொதுவாகத் தனது பள்ளிப்
பருவத்தில் காந்தியடிகள் பள்
ளிப் பாடப் புத்தகங்களைத் தவிர
இதர புத்தகங்களை அநேகமாகப்
படித்ததேயில்லையாம். இது
தவிர, தொண்டு வாழ்க்கையில்
இறங்கிவிட்ட பிறகு அவருக்குப்
படிப்பதற்கு நேரமே இருந்த
தில்லையாம். 'நூல்களைப்
படித்த அறிவு எனக்கு உண்
டென்றே சொல்லிக் கொள்வதற்
கில்லை. என்றாலும், இதனால்
அதிகப்படியான நஷ்டம்
அடைந்து விடவில்லை என்றே
கருதுகிறேன்' என்கிறார் காந்தி
யடிகள்.

'அத்தகைய நூல்களில், என்
வாழ்க்கையில் உடனேயே நடை
முறை மாறுதலை உண்டாக்
கிய நூல், கடையனுக்கும்
கடைத் தேற்றம் என்னும்
நூலே' என்கிறார். ஆம். காந்தி
யடிகள் நேட்டாலுக்குப் புறப்
படும்போது, வழியனுப்ப வந்
திருந்த திரு போலக் 'உங்க
ளுக்கு மிகவும் பிடிக்கும்' என்று
கூறிக் கொடுத்துப் போனதுதான்
'கடையனுக்கும்கடைத்தேற்றம்'
எனும் நூல். இது, 'Unto the last'
என்னும் தலைப்பில் ரஸ்கின் எழு
தியதாகும். 'ரஸ்கின் எழுதிய
நூல்களில் நான் முதல் முத
லாகப் படித்தது இந்த நூலே'
என்கிறார் காந்தியடிகள்.

ரஸ்கினின் இந்த நூலை—
காந்தியடிகள் வாழ்க்கையில்
உடனடி மாறுதலை உண்டா

இலக்கியப்பித்தன்

கிய இந்த நூலையே, பின்னர் காந்தியடிகள், 'சர்வோதயம்' என்னும் பெயரில் தன் தாய் மொழியான குஜராத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்னும் நூல் தனது உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்த கொள்கைகளைப் பிரதிபலித்திருப்பதாக உணர்ந்த காந்தியடிகள், அதனாலேயே அது தன்னை ஆட்கொண்டதோடு மட்டுமின்றித் தன் வாழ்க்கையையும் மாற்றிக் கொள்ளும்படிச் செய்தது என்கிறார்.

சமுதாயத்தில் எல்லாருமே சரிசமமான வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்பதைக் காந்தியடிகள் நன்கு உணர்ந்திருந்தார். பொதுவாக, மனித உள்ளத்திலிருக்கும் நல்ல தன்மையை எழுப்பிவிட வல்லவனே கவிஞன். என்றாலும்கூட, மேலே கூறிய வண்ணம் எல்லாருமே சரிசமமான வளர்ச்சியடைந்தவர்களாக இல்லாமையால், எல்லாருடைய உள்ளங்களிலும் பெரும் மாறுதல்களை உண்டாக்கி விடுவதில்லை என்பது காந்தியடிகள் கருத்து. எனவே, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும்சோஷலிச சமுதாய உணர்வோடு, 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்னும் நூல் பின் வருபவைகளைப் போதிப்பதாக எனக்குத் தோன்றுகிறது என்று கூறிச் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அவர் கூறுவதைப் பார்ப்போம் :

"1. சமுதாய நலனில்தான் தனிப்பட்டவர் நலனும் அடங்கிக் கிடக்கிறது.

2. தங்கள் உழைப்பினால் வாழ்க்கையின் தேவைகளைத் தேடிக் கொள்வதற்கு எல்லாருக்குமே ஒரே மாதிரியான உரிமை இருப்பதால் மயிர் மழிக்கும் தொழிலாளியின் தொழிலுக்கு உள்ள அதே மதிப்புத்தான் வழக்காடியின் வேலைக்கும் உண்டு.

3. ஒரு பாட்டாளியின் வாழ்க்கையும், அதாவது நிலத்தில் உழுது பாடுபடும் குடியானவரின் வாழ்க்கையும் கைத்தொழில் செய்பவரின் வாழ்க்கையுமே வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கைகள்.

இவற்றில் முதலில் கூறப்பட்டதை நான் அறிவேன். இரண்டாவதாகக் கூறப்பட்டிருந்ததை அரைகுறையாகவே அறிந்து கொண்டிருந்தேன். மூன்றாவதாகக் கூறப்பட்டதோ என் புத்திக்குத் தோன்றவே இல்லை. இரண்டாவதும் மூன்றாவதும் முதலாவதாகக் கூறப்பட்டிருப்பதிலேயே அடங்கியிருக்கின்றன என்பதைக் 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' பட்டப்பகல் போல் எனக்குத் தெளிவாக உணர்த்தியது. பொழுது புலர்ந்ததும் நான் எழுந்து இந்தக் கொள்கைகளை நடைமுறையில் கொணரத் தயாரானேன்".

ஆம்! காந்தியடிகளின் வாழ்க்கையில் இத்தகையதொரு மனமாற்றத்தை ஏற்படுத்திய 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்னும் நூலின் மந்திர சக்தியை எவரும் வியக்காமலிருக்க முடியாது.

கடையனை — சமுதாயத்தின் கடை கோடியில் வாழ்கின்ற—நலிபிழைப்புப் பிழைக்கின்ற மனிதனை—வாழவைக்க வேண்டும்—அவனுக்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்கச் செய்ய வேண்டும்—அதன் மூலம் அவனை உயர்த்தி, அவனுடைய சமுதாய அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்று விரும்பினார் காந்தியடிகள். அவர் காண விரும்பிய—அமைக்க விரும்பிய சர்வோதய சமுதாயம் அதுதான். தமிழகத்தைப் பொறுத்தவரை, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டதும், அண்ணா அமைத்துக் கொடுத்த 'தமிழ்நாடு அரசு' பீடுநடை போட்டுக் கொண்டிருப்பதும் அந்தச் சர்வோதயசமுதாயத்தை நோக்கியேயாகும்! அத்தகைய சமுதாயத்தை அமைப்பதுதான் காந்தியடிகளுக்கு நாம் நிறுவும் நிலையான—பெருமை தரத்தக்க நினைவுச் சின்னமாகும்!



17. வன்முறையை வேரறுப்போம் வா.

'கோட்டை, குடிசை'யென்று கூறுகின்ற வேற்றுமையேன்?
வாட்டும் வறுமையிலே வாழுகின்ற—பாட்டாளி
இன்முறையில் வாழ 'இருப்பவன்; இல்லாத
வன்'முறையை வேரறுப்போம் வா.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

பண்ணார் மொழிபேசும் பைந்தமிழ்ச் செல்வா! நாம்
அண்ணா கலைஞர் அடியொற்றி—கண்ணான
தென்னாட்டின் நல்லமைதி தீய்க்க முயல்வாரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—நாகை. சிவம், கொடும்பாளூர்.

இந்து முசுலீமும் இன்ன பிறருமே
வந்து வகையுடனே வாழவழி—தந்ததனால்
இன்புறவே வாழுகின்ற இன்பத் தமிழகத்தில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வா. சுப்பையா, நிலக்கோட்டை.

மங்காப் புகழோடு மாண்டு மடிந்துவரும்
வங்காள மக்களை வாட்டியே—இங்கிதமாய்க்
கொன்று குவித்துக் குதூகலப் பட்டுவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் அ. தங்கவேலு, வாணபுரம்.

வள்ளுவனின் முப்பாலும் வள்ளலார் செப்பியதும்,
உள்ளமதில் ஓதி யுணர்ந்திடுவோம்—கள்ளமிலா,
நன்முறையில் நாம்வாழ நானிலத்தி லென்றென்றும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—[illegible] சுப்ரமணியன், சாத்தாம்பாடி.

அன்புவழி தான்நடந்தே ஆக்கமெனும் உச்சியினைச்
சென்றடைதல் நன்றெனவே செப்பிடுவீர்!—இன்றந்த
நன்முறையை நீக்கிவிட்டு நாசவழி நாடுகின்ற
வன்முறையை வேரறுப்போம் வா!

—புலவர் மு. இரத்தினம், அலங்காதல்லூர்

மண்ணில் தமிழ்ப்பண்பு மாயாமல் போற்றிடவும்,
கண்ணான நம்நாட்டைக் காத்திடவும்—அண்ணாவின்
நன்னெறி நாட்டில் நிலைபெறவும் தீயோரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் குமர தன்னொளியன், கண்ணமங்கலம்.

கலையை வளர்த்திடும் நம்கலைஞர் மக்கள்
நிலையை உயர்த்திட நித்தம்—மலையாது
நன்முறையை நாட்டுவதை நாடாத புல்லோரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—க. பரமசிவம், பி.எஸ்ஸி., பி.டி., அரண்மனைப்புதூர்.

பண்பற்ற செய்கைகளால் பாருலகோ டென்தோழி
விண்ணுலகு கிட்டிடினும் வேண்டோமே—மண்ணுலகில்
அன்பாறு பாய்ச்சி அனைத்துலகும் வாழ்வுபெற
வன்முறையை வேரறுப்போம் வா.

—சரிதா, இராசிபுரம்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு மு. சிவலிங்கம்
நெ. 85, காந்தி தெரு,
வேடசந்தூர்,
மதுரை மாவட்டம்.

நற்செய்கை செய்துவரும் நல்லோரின் போக்கினைச்
சொற்புத்தி இல்லாதார் தூற்றுகிறார்—பொற்புடைய
நன்முறையைத் தூற்றி நலமழிக்க நாடுவார்தம்
வன்முறையை வேரறுப்போம் வா.

—மோ. யாகோப்பு, புதுவை-5.

இந்த நிலையில் எதற்கடியோ உன்முத்தம்?
செந்தமிழ் நாட்டமைதி சீர்குலைக்க—முந்துகிறார்;
அன்னவரை வீழ்த்திடுவோம்! அப்புறம்தான் நம்காதல்!
வன்முறையை வேரறுப்போம் வா.

—சிவ. மு. சிவலிங்கம், சிவகாசி.

பாலம் உடைத்தற்கும் பல்லோரை மாய்த்தற்கும்
காலனே வந்தாலும் கட்டறுப்போம்—ஞாலத்தில்
மென்முறையை நாடிடும் மேலாந் தமிழகத்தில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் ச. ஆதிமூலம், பி.ஏ., தேவகோட்டை.

பண்ணிருக்கும் தண்ணிலவே! மாமயிலே! பூப்போலக்
கண்ணிருக்கும் என்னின்பக் காதலியே!—பண்ணிருக்கும்
மென்மொழியே! பண்பாட்டு மேன்மையுடன் நாம்தீய
வன்முறையை வேரறுப்போம் வா.

—கலைநம்பி, சீர்காழி.

கண்ணே கனியமுதோ கற்கண்டோ பாகோநீ
உன்னைக் கரம்பிடித்தேன் உத்தமியே—பெண்மணியே
அன்னைத் தமிழ்நாட்டில் ஆறுயிப் பெருகிவரும்
வல்முறையை வேரறுப்போம் வா.

—வ. குமரன், திருமூர்த்திநகர்.

ஆக்கப் பிறந்தோம்நாம்; ஆறறிவு பெற்றோம்நாம்;
தாக்கும் வறுமையைத் தாழ்நிலையைப்—போக்கிட
நன்முறையை நாடிடுவோம்! நானிலம் தூற்றிடும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

காட்டில் விலங்குகள்போல் கண்டபடி ஓர்கூட்டம்
நாட்டைக் குலைத்து நலங்கெடுக்கப்—போட்டிருக்கும்
புன்மதித் திட்டத்தைப் போக்கித் தமிழகத்தில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. வெ. அழகுசுந்தரம், குளமங்கலம்.

எங்கெங்குச் சென்றாலும் ஏதேது கண்டாலும்
தங்கத் தமிழகம்போல் தாரணியில்—மங்காத
நன்னெறி இல்லையென நானிலத்தோர் போற்றிநிற்க
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் ல. சண்முகசுந்தரம், தேவகாசி.

தேவன் திருக்குறளும் சேரன் புரிசிலம்பும்
நாவில் இனிக்குமொரு நாலடியும்—செல்விழியே!
நன்முறையைக் கூறும்; நயக்கத் தகாதென்று
வன்முறையை வேரறுப்போம் வா.

—'வெற்றிச் செல்வன்', காந்திக் கிராமம்.

நாட்டு வளர்ச்சியிலே நாட்டம் சிறிதுமின்றி
வேட்டை வெறிநாய்போல் வினைக—வேட்புற்று
பொன்னை இந்நாட்டின் தொன்மைப் புகழழிக்கும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் ந. அ. அண்ணாமலை, நத்தம்.

தூங்கினையா தம்பி! துணிவிலையா? தூளாக்கும்
ஓங்கியுயர் தோள்வீரம் ஓய்ந்ததுவா—இங்கிழைக்கும்
கன்மனத்தார் காடாக்கும் நம்நாட்டைக் காத்திடுவோம்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்.

நன்முறையைச் சொல்லும் நலமுணர்ந்த நல்லோரைத்
தன்னலத்தைப் பேணுத் தகையோரை—இந்நிலத்தில்
குன்றக் கொடுமைசெயும் கோமாளிக் கூட்டத்தின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—ஆசிரியர், "மாணுக்கன்", திருத்துறைப்பூண்டி.

கல்லெறிந்து சொல்லெறிந்து கைகொட்டி ஆர்ப்பரித்துப்
புல்லுருவி போல்வார் புரிகின்ற—அல்லலோ!
சொன்னல் அளவில்லை, தோழா! பொறுப்பதோ!
வன்முறையை வேரறுப்போம் வா.

— கல்கிழார், கடமலைக்குண்டு

அண்ணல்நம் காந்தியவர் அன்புநெறி காட்டியுள்ளார்
அண்ணாவும் அவ்வழியே மேற்கொண்டார்—கண்ணேபோல்
இன்முறையைக் காப்போம் இழிந்தோர்கள் கையாளும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வித்துவான் கு. செல்லையா, தேவதானப்பட்டி.

நல்லரசின் பேர்கெடுக்க, நாட்டில் அமைதிகெட,
தொல்லைபல செய்கின்றார், துள்ளியெழு!—சொல்லவொணு
புன்மைச் செயல்புரியும் புல்லரின் உள்ளத்து
வன்முறையை வேரறுப்போம் வா.

—மு. அ. முகில்வண்ணன், செங்குன்றநல்லூர்.

செந்தமிழ்த் தாயீன்ற செல்வத் திருமகனே!
நந்தமிழ் நாட்டில் நலம்பலவும்—வந்தவைய
நன்முறையைக் காட்டும் நமதரசை மாய்க்கவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

பூக்காட்டில் தீய புயல்மூட்ட எண்ணுகின்ற
போக்குடைய பேருக்குப் புத்திசொலி—மாக்குறளின்
அன்புநெறி சொல்வோம்; அதைமறுத்துச் சீறிவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. வைரமுத்து, சென்னை-7.

வெண்ணிலவே! எங்கெங்கும் வீசுகின்ற தென்றலே!
பண்ணார் மொழிபேசும் பைங்கிளியே!—"தண்ணுதே"
என்றுரைத்த என்தலைவி எண்ணமதில் சேர்ந்துள்ள
வன்முறையை வேரறுப்போம் வா.

—கு. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ., ஷாநகர்.

பேரழகே! தாழ்குலத்துப் பெண்ணுன்னை நான்மணந்தால்
ஊரிழிவாய்த் தள்ளி ஒதுக்குமாம்!—பாரழகை!
நன்முறையில் நாம்மணந்து, நம்மை அறுக்கவரும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

அன்னமொடு செந்நெல்லும் காவிரியால் காட்சிபெற்ற
பன்னலத்தைப் பாரதமே பார்த்ததுண்டு—பொன்னியுன்னை
என்னுரிமை என்றே பிதற்றிவரும் பித்தரது
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் பத்மநாபன், உறையூர்

ஆக்கும் புரட்சியைநாம் ஆதரிப்போம்; மக்களைத்
தாக்கும் வறட்சிக்குத் தாழிடுவோம்—ஊக்கமுற
நன்மறைகள் ஓதுபல நன்னெறியில் நின்றென்றும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—த. குப்பால், வேப்பங்குளம்.

வண்டாரும் சோலைகள் வளநாட்டின் மாமணிகள்
கொண்டாரோ வஞ்சகக் கோலத்தை—தொண்டாற்றித்
தன்னைத்தான் அர்ப்பணிக்கும் தன்மையால் வஞ்சகரின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—மீனாட்சிசுந்தரம், கோவை

காந்தி வழியிருக்கக் காஞ்சித் தலைவர்தம்
சாந்தி வழியிருக்கச் செஞ்சினே—மாந்தர்தம்
இன்னுத போதனையை ஏற்றுச் சிலர்செய்யும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—நிலவு முருகன், குளிப்பிறை

அன்று பிறந்த அருமைத் தமிழகத்து
மண்ணில் அமைதி மடிவதுவோ—திண்ணமாய்
நன்முறை வாளெடுத்து நாட்டில் தலைகாட்டும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. பெ. ராமசாமி, சென்னை-11

எல்லா வளங்கொண்டோம்! ஏற்ற அரசமைத்தோம்!
இல்லாமை எங்கில்லை என்றுண்டா?—சொல்தோழா!
உன்மத்தம் கொண்டோரால் ஊடுருவிப் பாய்கின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. திருவேங்கடம், சின்னத்தடாகம்.

பொன்னி தமிழ்நாட்டின் பொய்யாக் குலக்கொடியாம்,
கன்னி இளமயிலைக் காத்திடவே!—துன்னலரின்
இன்னல் தடையகற்றி என்று வளம்காண
வன்முறையை வேரறுப்போம் வா.

—அ. பொ. மு. வாணன், கோவை-18.

கத்தியைத் தீட்டக் களமா இதுதம்பீ?
புத்தியைத் தீட்டிப் புறப்படு—சித்தமாய்
என்னுடன் வா, தம்பீ, எங்கெங்கே கண்டாலும்
வல்முறையை வேரறுப்போம் வா.

—வை. வாணி, பி.ஏ., சென்னை-4.

முல்லை வழிவிளங்க முள்வழியை நாடுவதேன்?
கல்லுருகச் செய்வாய் கனிமனமே!—தொல்லைமொழி
மென்முறையாம் அண்ணாவின் மேன்மை வழிசென்று
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் முத்துவெங்கடேசன், திருமயம்.

அன்பால் உருவானோம், ஆதலினால் பூதலத்தில்
தென்பால் பிறந்துவளர் தென்றலென—என்தோழா!
நன்மை விளைவிக்க நாடிடுவோம்! தேவையிலா
வன்முறையை வேரறுப்போம் வா.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

அறத்துக்கும், நல்ல அமைதிக்கும், காணும்
மறத்துக்கும் பேர்போன மண்ணே!—புறத்திருந்து
சொன்முறை யாலன்றிச் சூழ்ச்சியாற் றாக்குகின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—மீரா மணாளன், மாயூரம்.

அன்பும் அறமும் அரசோச்சும் மாநிலமாய்
இன்பத் தமிழகம்தான் இன்றிருக்க—அன்னமே
சின்ன மனம்படைத்தோர் சீரழிக்கச் செய்கின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

தென்மறவா! செந்தமிழ்த் தேன்பெறவா! வெற்றிகள்
உன்னூறாவாம், ஊரறியு முன்பெருமை—அன்புறவாய்
நன்முறையில் நல்லின்பம் நாட்டில் குடிகொள்ள
வன்முறையை வேரறுப்போம் வா.

—இலக்கியன், புதுவை-1.

இன்மனத்தான் காந்திமகான் ஏற்றிவைத்த சத்தியத்தைப்
பொன்மனத்தில் முன்னிருத்திப் போரிடுவோம்—வன்மனத்
[தார்
மன்பதையை ஈரமின்றி மாய்த்ததிலே யின்பமுறும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—கோ. அநுத்தமா, சென்னை-16.

குத்துவதேன்? வெட்டுவதேன்? குண்டெடுத்து வீசுவதேன்?
பித்தப் பெருமயக்கோ? பேய்க்குணமோ?—முத்தமிழர்
பொன்னரசோ டொத்துழைத்துப் புல்லரிவர் நெஞ்சத்து
வன்முறையை வேரறுப்போம் வா.

—கோ. செந்தாமரை, குலசேகரன்பட்டினம்.

மாமரத்துச் சோலையிலே மந்தி புகுந்திருந்து
பூமணக்கும் பிஞ்சுகளைப் போர்த்தாற்போல்—பாமணக்கும்
இன்பத் தமிழகத்தின் ஏற்றம் குலைக்கின்ற
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் து. நடராசன், மெய்ஞ்ஞானபுரம்.

தியணைக்கும் தண்ணீராய், சீறுபுலி மாயம்பாய்
நோயொழிக்கும் மாமருந்தாய், நோன்மையொடு—தாயினமும்
தன்வீரம் காட்டும் தருணம், தமிழ்த்தோழீ!
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

ஆர்வளங்கள் சூழ அமைதிமிகு பூங்காவாய்ச்
சீர்விளங்கும் தாயகத்தைச் சீரழிக்க—நேர்மையிலார்
இன்வெளி ஓரம் இருக்கின்றார்; அன்னவர்தம்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

சீரான வாழ்வுக்குச் சிறுகுடும்பம் போதுமெனக்
கூரான வேல்விழியாள் கூறுகின்றாள்—தேராதோர்
இன்னும் இதற்கெதிராய்ப் பரப்பும் வதந்திஎனும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—இரா. கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்ஸி., கோயம்புத்தூர்-18.

சங்கத் தமிழ்மகனே, சான்றோர் குலவிளக்கே,
சிங்க மறவரினச் செல்வமே,—பங்கமிலா
தன்முறையில் வாழ்ந்துவரும் நாட்டையெல்லாம் பாழ்படுத்
[தும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—ஞா. பேகன், சோபுள்பட்டி.

நாட்டின் வளமோங்க நற்றமிழே ஆட்சிகொள
வாட்டும் பிணிச்சாதி வாழ்விக்க—வீட்டமைதி
நன்முறையில் வாழ நறுந்தமிழா! இன்றுமுதல்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர் நா. மரகதம், வெள்ளக்கோயில்.

வரட்டுக் கவுரவத்தால் வாய்பேசிப் பின்னர்
இருட்டில் மதுவோ(டு) இணையும்—திருட்டகற்ற
தன்முறையால் சட்டம் நடைமுறைக்கு வந்ததனல்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

தம்பினேர்க் காதரவை நல்கிய நற்குணத்தால்
அம்புவியில் பேர்பெற்ற அண்ணாவின்—தம்பிகள்
உன்னதமாய்ச் செங்கோலை ஓச்சுவதற் கூறுசெயும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—வெங்கடேசன், சேலம்-9.

கட்டிக் கரும்பே! கனிச்சுவையே! கற்பகமே!
எட்டிக் குணமுடைய ஈரமிலார்—வெட்கமுற
நன்முறையில் வாழ்ந்து நலிவுதரும் சாதிமத
வன்முறையை வேரறுப்போம் வா.

—பசுமலை வீர. முருகேசன், எம்.ஏ., பி.டி., மதுரை-20

தீமை உணர்வோம்; திருந்தக் குறள்கற்போம்;
'நாமே நமக்குதவி' நன்கறிவோம்—பூமிதனில்
நன்மைப் பயிர்விளைப்போம்; நாளும் தலைதூக்கும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-16.

இல்லாமை தீர்ந்திடவும் இன்பவாழ் வெய்திடவும்
எல்லார்க்கும் எல்லா நலமுமே—மல்கிடவும்
அன்பின் வழியாய் அமைதியே கண்டிடவும்
வன்முறையை வேரறுப்போம் வா.

—புலவர். வை. சுப்பிரமணியன், வடசேரி

குடமுருட்டிப் பாலத்தில் குண்டுகளை வைத்தோர்
உடலுருட்டி, ஊரார் உவப்பரே!—கடலலையாய்க்
கன்னித் தமிழ்க்குலத்துக் காவலரே! இந்நாட்டில்
வன்முறையை வேரறுப்போம் வா.

—தாமரைச்செல்வன், திருச்சிராப்பள்ளி-12.

நீயாவி நானுடல் நீயின்றி நானிங்கு
மாயாமல் வேற்றுடம்பு வாழுமோ! தூயவளே!
இன்னும் உலையேற்க இன்னலாம் சாதிவெறி
வன்முறையை வேரறுப்போம் வா.

—எஸ். ஆதினம், வீரசிகாமணி,

தென்னாடும் நன்னாடே! தென்னவரும் நல்லவரே!!
பொன்னாட்டின் ஆளுகையும் பூரிப்பே!!!—இந்நாட்டின்
முன்னவரைக் கொல்ல முடிவெடுத்த பாவிகளின்
வன்முறையை வேரறுப்போம் வா.

—ஆர். லலிதா, II பி.எஸ்ஸி., கடலூர்-1.



நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90. "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்

தந்தி: நீல்போபாங்க் தொலைபேசி எண்: 2420
கிளைகள்: கோத்தகிரி குன்னூர் கூடலூர்
தொலைபேசி எண்: 332 2684 24

(லட்சம்)

அனுமதிக்கப்பட்ட மூலதனம் ..	40·00
வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ..	29·87

வட்டி விகிதம்

(1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு ..	4%
(2) பிராவிடண்ட் பண்டு டெபாசிட்டு .	5%

நிரந்தர டெபாசிட்டுகள்

(1) 1 மாதம் முதல் 3 மாதங்களுக்குள்ளாக	3½%
(2) 3 ,, ,, 6 ,,	4½%
(3) 6 ,, ,, 12 ,,	5½%
(4) 12 ,, ,, 24 ,,	6½%
(5) 24 ,, ,, 36 ,,	6¾%
(6) 36 ,, ,, 60 ,,	7½%
(7) 60 ,, ,, 84 ,,	7¾%
(8) 84 மாதங்களுக்குமேல்	7¾%

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டு களுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதா கவுடர், எம்.பி., பெருந்தலைவர். இரா. க. வேலாயுதம், பி.எ. துணைப்பதிவாளர்-செயலாளர்.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH



நாளைய தலைமுறை

தமிழ்த் தட்டச்சைக் கண்டுபிடித்தவர் கதை

— அழகனார் —

மணிமணியான எழுத்துக்கள் பார்ப்பதற்கு அழகைத் தரும். அழகிய எழுத்துக்களைப் படிப்பதற்கு ஆவல் தோன்றும். கோணல் மாணலான கிறுக்கு எழுத்துக்களைப் படிப்பதற்கு வெறுப்பாக இருக்கும்.

அழகாக எழுதுவதற்கு எல்லாராலும் முடிவதில்லை. சின்ன வயதில் எப்படி எழுதிப் பழகினார்களோ அப்படித்தான் எழுத்து அமைந்து விடுகிறது.

அழகாக எழுத வேண்டும் என்பதற்காகத்தான் சிறிய வகுப்புகளில் பல பயிற்சிகளைக் கொடுக்கிறார்கள். ஆனால், எல்லாராலும் அழகாக எழுதுவதற்கு வருவதில்லை.

அழகாக எழுதுவதற்குக் குறைந்த அளவு நேரம் கூடுதலாகவும் ஆகிறது. அத்துடன் பல பிரதிகள் எடுக்க வேண்டும் நிலை வந்தால் நேரம் மேலும் மேலும் செலவாகும்.

அழகாகவும் பல படிகள் எடுப்பதற்கும் 'டைப்ரைட்டர்கள்' பயன்படுகின்றன. டைப்ரைட்டர்களைத் தமிழில் தட்டச்சுகள் என்று சொல்லுகின்றோம் நாம்.

அரசு அலுவல்கள் சீராகவும் சிறப்பாகவும் நடப்பதற்குத் தட்டச்சுப் பொறிகள் பெரும் துணை செய்கின்றன.

தட்டச்சுப் பொறியினால் மிக வேகமாக அச்சிட முடிகிறது. அழகாகவும் அச்சிட முடிகிறது. படிப்பவர்கள் சுலபத்தில் படித்துக்கொள்ளும் அழகிய எழுத்துக்களில் ஒரே சீராக அச்சிட முடிகிறது.

ஒருவர் சாதாரணமாகப் பத்து நிமிடங்களில் ஒரு பக்கம் கையால் எழுதுவதாக வைத்துக் கொள்வோம். அதே பத்து நிமிடத்தில் தட்டச்சுப் பொறியினால் மூன்று பக்கங்கள் எழுதி முடித்து விடலாம்.

தட்டச்சுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆங்கிலத்தில்தான் முதன் முதலாகத் தட்டச்சுப் பொறிகள் வெளிவந்தன. அதன் பெருமையை உணர்ந்த தமிழர் ஒருவர் தமிழிலும் தட்டச்சுப் பொறிகள் உருவாக உறுதி பூண்டார். அதற்காக ஆராய்ச்சிகள் செய்தார். அரும் பெரும் ஆராய்ச்சிக்குப் பிறகு உருவெடுத்தது நான் தமிழ்த் தட்டச்சு. இந்த அரும் பெரும் பணியைச் செய்தவர் ஒரு தமிழர்! அவர் பெயர் திரு. இரா. முத்தையா.

இரா. முத்தையா ஈழ நாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுண்டிக்குளியில் 1886-ஆம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தை பெயர் இராமலிங்கம். அவர் நன்கு கற்று அறிந்தவர். இரா. முத்தையாவுடன் பிறந்தவர்கள் எட்டுப் பேர்கள். எல்லாருக்கும் இளையவர் இவர்.

இவருடைய ஏழாம் வயதில் தந்தை இறந்து போனார். தாயாரின் விடா முயற்சியினால், கல்வி பெற்றார். வறுமை மிகுந்த குடும்பம் இவருடைய குடும்பம். என்றாலும் தாயின் தளராத ஊக்கம் இவரைப் படிக்கச் செய்தது. வறுமை மாறித் தம் மக்கள் சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்பதே அவர் தாயாரின் ஆவல்.

ஈழ நாட்டில் இருந்தால் வறுமை மாறாது. வறுமை மாறத் திரைகடல் கடந்து போனால் தான் திரவியம் கிடைக்கும் என்று நம்பினர், இவருடைய தாயார். தாயாரின் விருப்பப்படி உழைத்துப் பொருள் தேடுவதற்கு மலாயாவிற்குப் போனார் திரு. முத்தையா.

சிங்கப்பூர் இரயில்வேயில் சில காலம் வேலை செய்தார். அரசாங்க அலுவலில் அவருக்கு நாட்டம் இல்லை. அதனால் இரயில்வேயிலிருந்து விலகித். தனியார் ஒருவருடைய நிறுவனத்தில் சேர்ந்தார்.

வேலை நேரம் போக மீதி இருந்த நேரத்தில் அவர் சும்மா இருக்கவில்லை. கணக்கு, பொருளாதாரம், அச்சடித்தல், சுருக்கெழுத்து, ஆகிய கலைகளைக் கற்றார். அத்துடன் தமிழ் இலக்கியங்களையும் ஆங்கில இலக்கியங்களையும், கற்றுத் தேறினார். 1913-ஆம் ஆண்டில் நடைபெற்ற அகில உலகச் சுருக்கெழுத்துப் போட்டியில் கலந்துகொண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இந்தக் காலத்தில்தான் ஆங்கிலத்தில் இருந்ததைப் போலத் தமிழிலும் தட்டச்சுப் பொறி இல்லாதது ஒரு குறையாகப் பட்டது அவருக்கு. தமிழில் ஒரு தட்டச்சுப் பொறியை உருவாக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஆங்கிலத்தில் எழுத்துக்கள் மிகக் குறைவு. தமிழில் 247 எழுத்துக்கள். தட்டச்சில் 46 விசைகளே இருந்தன. இந்த 46 விசைகளுக்குள் 247 எழுத்துக்களையும் எப்படி அடக்குவது என்பது சுலபத்தில் செய்துவிடக் கூடிய செயலாக இல்லை.

அல்லும் பகலும் அதற்குரிய சிந்தனையில் ஈடுபட்டார். அவருடைய விடா முயற்சியும் ஆராய்ச்சியும் கடைசியில் நல்ல பலனைத் தந்தன.

தி, நி, பி, மி, சி முதலிய உயிர் மெய் எழுத்துக்களுக்குப் பொதுவாக வருகின்ற 'இ' என்னும் ஒலியைத் தருகின்ற மேல் பூட்டுகளைத் தனியே ஓர் எழுத்தாக்கி ஒரு விசையில் அமைக்க வழி கண்டார். இதன் மூலம் ஒரு பெரிய சிக்கல் தீர்ந்தது. இதைப் போலவே, ப், ம், வ், ய், ர் முதலிய மெய் எழுத்துக்களில் உள்ள மேல் புள்ளியையும் தனி ஒரு விசையில் அமைக்க வழி கண்டார்.

இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட மேல் பூட்டும், புள்ளியும் நகராத விசையில் அமைக்கப்பட்டுள்ளதைத் தட்டச்சுப் பொறியைச் சோதனை செய்து அறியலாம்.

ஒரு மெய் எழுத்தைப் பதித்திட வேண்டியிருந்தாலும், கி, மி போன்ற எழுத்தைப் பதித்திட வேண்டியிருந்தாலும் முதலில் மேல் புள்ளியையும் 'இ' என்று ஒலி தருகின்ற மேல் பூட்டையும் முதலில் இயக்க வேண்டும். இவ் வரிசைகள் இயங்கும் போது சிலிண்டர் இயங்காது. தன் நிலையிலேயே நிற்கும். இதற்கு நகரா விசை என்று கூறுவார்கள்.

முன்னர் தமிழ்த் தட்டச்சுக்கள் ஒரே சீரான அமைப்புடன் இல்லாமல் உருவாக்குகின்ற கம்பெனிகள் தத்தம் ஆராய்ச்சிக்கு ஏற்பத் தட்டச்சு விசைப் பலகை அமைத்து வெளிவந்தன. 1955ம் ஆண்டில் அரசு ஒரு குழுவை அமைத்து ஆலோசனைகளைக் கேட்டது. அதன்படிப் பல புதிய மாற்றங்களுடன் ஒரே சீரான விசைப் பலகையுடன் தட்டச்சுப் பொறிகள் வரத் தொடங்கின.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மாற்றங்கள் எல்லாம் திரு முத்தையா கண்டுபிடித்த விசை அமைப்பிற்கு ஏற்றதாகவே இருப்பதைக் காணலாம்.

முதலாவது உலகப் போர் முடிந்த பிறகு செர்மனியில் உள்ள சைடல் அண்டு நௌமான் என்னும் நிறுவனத்தாரிடம் தாம் கண்டுபிடித்த விசைப் பலகை அமைப்பை ஒப்படைத்துத் தட்டச்சுப் பொறிகளை உருவாக்கினார். அதற்கு வேண்டிய முதலீட்டை அவரே ஏற்றுக்கொண்டார். விற்கும் பொறுப்பையும் அவரே மேற்கொண்டார். அதற்குப் பிறகு மேலும் பல மாற்றங்கள் கண்டுபிடித்து, பிஜோ, ஐடியல் ஆகிய கையடக்கமுள்ள சிறு பொறிகளை அமைத்தார்.

இவற்றைப் பின்பற்றி [illegible]ர்சி, எரிகா, யுரேனியா, ஆல்டா, முதலிய தட்டச்சுக்கள் வெளிவந்தன.

24-2-1886-ஆம் ஆண்டில் பிறந்த திரு முத்தையா 10-2-1959-ஆம் ஆண்டில் காலமானார். தமது 22-ஆம் வயது முதல் நாள் தவறாமல் நாட்குறிப்பு எழுதி யிருக்கிறார். சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கினார்.

இலங்கையில் 'விசுவ கலாநிதி' என்ற செய்தி இதழைத் தொடங்குவதற்குத் துணையாக இருந்திருக்கிறார். இலங்கையில் நடந்த வகுப்புக் கலவரங்களால் விளைந்த பின் விளைவுகளைப் பற்றி ஆங்கிலத்தில் நூல் ஒன்று எழுதியிருக்கிறார்.

கண்ணுக்கினிய முத்து முத்தான தமிழ்த் தட்டச்சு திரு முத்தையா அவர்களை நமக்கு நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

அட்டை என்ன சொல்லுகிறது ?

அக்டோபர்த் திங்களில் கொண்டாடப்படும் வன விலங்கு வார நிகழ்ச்சியை நினைவூட்டுவது போன்ற இந்த அட்டை என்ன சொல்லுகிறது ?

முதுமலையிலுள்ள தெப்பக்காட்டில் மரங்களை எடுத்துச் செல்வது போன்ற வேலைகளைக் கவனிக்கப் பல யானைகளை நமது அரசின் வனத்துறையினர் வளர்க்கின்றனர். அந்த யானைகளில் ஒன்று தான் தேவி.

தேவி அண்மையில் இரண்டு குட்டிகள் போட்டது. ஒரு யானை இரண்டு குட்டிகள் போடுவது அதிசயமான நிகழ்ச்சியாகும்.

அந்த யானையையும் அதன் குட்டிகளையும் தான் இந்த இதழ் அட்டை அணி செய்கிறது.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்)
வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் அப்பாசாமி முதலி தெருவில் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 15—10—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

எண்.	பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.
1	I	முப்பது குடியிருப்புகள் கொண்ட கட்டடமும், 12 குடியிருப்புகள் கொண்ட கட்டடமும் கட்டுதல்.	ரூ. 1,70,000	ரூ. L. S. 2,550	ரூ. 15 மற்றும் விற்பனை வரி.

வரை படங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 30—9—1971 முதல் 14—10—1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 1—10—1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

தாண்டவராயச்சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

(த16)



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

கொரட்டூர்—புற நகர்த் திட்டம்.
வட சென்னை புறநகர்த் திட்டம்
தனி வீடுகளும்—இணைந்த வீடுகளும்
ஒதுக்குதல்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்தும் கொரட்டூர் புறநகர்த் திட்டத்திலும், வட சென்னை புறநகர்த் திட்டத்திலும் கீழ்க்கண்ட வகையான தனித்தனி வீடுகளும், இணைந்த வீடு களும், கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட புறநகர்களில் நல்ல குடிநீர் வசதி யும், தார்போட்ட சாலைகளும், தெரு மின் விளக்குகளும், பாதாள கழிவு நீர் வசதியும், உயர் நிலைப் பள்ளிக்கான இடமும் மற்றும் கடைகள், கல்யாண மண்டபம், தபால் அலுவலகம், பூங்கா முதலியவையும் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந் நகர்களிலிருந்து அருகாமையிலுள்ள தமிழ்நாடு அரசுப் பேருந்து நிலையங்களுக்குப் பேருந்து (பஸ்) வசதியும் செய்யத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

கொரட்டூர் புறநகர்த் திட்டம், சென்னை-ஆவடி சாலையை ஒட்டியும், டி.வி.எஸ்., விரை லூகாஸ் தொழிற்சாலைக்கும் கொரட்டூர் ரயில் நிலையத்திற்கும் அருகில் அமைந்துள்ளது. விரை வில் அமைக்கப்படவிருக்கும் சென்னை-அரக்கோணம் மின் ரயில் பாதையில் கொரட்டூர் ரயில் நிலையம் அமைந்திருப்பதால் இந் நகர் விரைவில் முன்னேற்றமடைய வாய்ப்புள்ளது.

வட சென்னை புறநகர்த் திட்டம் சென்னை-நெல்லூர் சாலையை ஒட்டியும், வியாசர்பாடி கூட்டுறவுத் தொழிற்பேட்டைக்கு அருகிலும், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து 4 கி. மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.

மேற்கண்ட புறநகர்களில் தனித் தனி வீடோ, இணைந்த வீடோ வேண்டுபவர்கள் தங்கள் பெயரைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்தில் 31—10—1971-ஆம் தேதிக்குள் பதிவு செய்துகொண்டு, 15—11—1971-ஆம் தேதிக்கு மேல் அதற்குரிய விண்ணப்பத் தாள்களை அவ்வலுவலகத்திலிருந்து ரூ. 5-க்கு வாங்கி, 15—12—1971-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 36. அண்ணாசாலை, சென்னை-35 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

வீடு ஒதுக்குவதற்குக் கீழ்க்கண்ட வரிசையில் முதலிடம் கொடுக்கப்படும்.

(1) முழுத் தொகையும் ஒரே தவணையில் செலுத்தல்.

(2) 25 சத வீதம் முதலில் செலுத்தி, மீதியை ஒரு வருடத்தில் மாதத் தவணையாகச் செலுத்தல்.

(3) 25 சத வீதம் முதலில் செலுத்தி, மீதியை மூன்று வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்தல்.

(4) 25 சத வீதம் முதலில் செலுத்தி, மீதியைப் பத்து வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்தல்.

தலைவர், வீட்டு வசதி வாரியம்,
சென்னை-35.

கொரட்டூர் புறநகர்த் திட்டத்திலும் வடசென்னை புறநகர்த் திட்டத்திலும்
கட்டப்படவிருக்கும் வீடுகளின் விவரம்

எண்.	வகை.	வீட்டின் பரப்பளவு.	வீட்டின் மதிப்பு. ரூ.	பண்படுத்தப் பட்ட நிலத்தின் மதிப்பு. ரூ.	மொத்த மதிப்பு. ரூ.
1.	**குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள்.**				
(அ)	தனி வீடு.	435 ச. அடி முதல் 575 ச. அடி வரை.	14,000 முதல் 18,500 வரை.	7,000	21,000 முதல் 25,500 வரை.
(ஆ)	இணைந்த வீடு.	460 ச. அடி	12,000	3,500	15,500
2.	**நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள்.**				
(அ)	தனி வீடு.	746 ச. அடி முதல் 855 ச. அடி வரை.	24,000 முதல் 27,500 வரை.	10,500	34,500 முதல் 38,000 வரை.
(ஆ)	இணைந்த வீடு.	855 ச. அடி.	24,000	5,000	29,000.
3.	**சிறு தொழில் நடத்துவோருக்கான வீடுகள்.**				
(அ)	தனி வீடு.	282 ச. அடி.	8,500	2,600	11,100.
(ஆ)	தனி வீடு.	314 ச. அடி	9,500	2,600	12,100.

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப்பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறை, அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17. சர் பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 20—10—1971 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—சிவகெங்கை குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை—9,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள உயர் மட்ட நீர்த்தொட்டி கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 5,500 (ரூபாய் ஐயாயிரத்து ஐந்நூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். செக்காக(காசோலை) னுப்புதல் கூடாது.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—12 மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 15·53 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து 48, கல்லூரிச் சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 16—10—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கே. கோவிந்தமேனன்,

மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ).,
தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்.

(த. 17)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு, குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 7—10—1971 வியாழக்கிழமை, பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்கார[ர்கள்] முன்னிலையில் மேற்பார்[வைப்] பொறியாளராலோ அல்லது அ[வ]ரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : புஞ்சைப் புகலூர் குடிநீர்த் திட்டம்—முதல் நிலை— 1·25 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த் தொட்டி கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை : ரூ. 550 (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்). இத் தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : (4) நான்கு மாதங்கள்

ஒப்பந்தப் படிவங்களின் விலை : ரூ. 5·18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 4-10—1971 திங்கள் மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கே. கோவிந்தமேனன்,

மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.பொ),
தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம்.

7—9—1971.

(த.23)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ் நாடு
பொதுப்பணித் துறை
சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :

மதுரை மாவட்டம்—கொடைக்கானல் வட்டம் பண்ணைக் காடு அரசாங்க மருத்துவ மனையில், ஓர் அறுவைச் சிகிச்சை நிலையமும், ஒவ்வொன்றும் பத்துப் படுக்கைகள் கொண்ட இரு வார்டுகளும் கொண்ட கட்டடம் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மேற்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 20—10—1971 மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு, மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். 9–10–1971 முதல் 16–10–1971 வரை ஒப்பந்தப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை : மொத்தத் தொகை.
கட்டுத் தொகை : ரூ. 4,700
வேலை முடிவுக் கெடு: ஆறுமாதங்கள்

ஒப்பந்தப் பத்திரத்தின் விலையான ரூ. 20 (ரூபாய் இருபது)தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ '' P. W. Remittances III. O.R.'' என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர்—கட்டடக் கோட்டம், மதுரை—பொ.ப.து. அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0·75 விற்பனை வரியை XII. Sales Tax (d) Miscellaneous'' என்ற தலைப்பிலுமாக, ஒரே சலானில் செலுத்தப்பெற்ற சலானைத் தாக்கல் செய்து, ஒப்பந்தப் பத்திரங்கள் பெறலாம். சலானைத் தாக்கல் செய்த பிறகே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் ''Deposit Call'' ரசீது அல்லது மாநில அரசாங்க செக்யூரிடிகள் அல்லது ஷெட்யூல் பாங்குகள் டிமாண்ட் டிராப்டுகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளின் உத்திரவாதம் ஆகிய உருவிலேயே கட்டுத் தொகை டிபாஸிட் ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசிய சேமிப்பு சர்ட்டிபிகேட்களும் கூட, மார்க்கெட் மதிப்பில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

ஜி. தேசிகசங்கர்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொதுப்பணித் துறை),
மதுரை வட்டம், மதுரை.

(த-25)

பரிசுப் போட்டி

தமிழ்நாடு அரசு

[புதிதாகக் கல்வி பயில்வோருக் கான (வயது முதிர்ந்தோர்) இலக்கியங்களுக்குப் பரிசுகள்].

(மத்திய அரசினர் நடத்தும் 16-வது பரிசுப் போட்டி)

புதிதாகக் கல்வி பயில்வோர் படிப்பதற்குத் தக்க சுவை யான நூல்கள் இலக்கியத் தேர்வுக்கு ஆசிரியர்களிடமிருந் தும், வெளியீட்டாளர்களிடமிருந் தும் மற்றும் இதர இந்திய மொழிகளில் வரவேற்கப்படு கின்றன. ஏறத்தாழ 40 நூல் கள் தேர்ந்தெடுக்கப்படும். ஒவ் வொரு நூலுக்கும் ரூ. 1,000 வீதம் பரிசு வழங்கப்படும்.

போட்டிக்கு அனுப்ப விரும் பும் நூல்கள் கீழ்க்கண்ட முக வரிக்கு 30—11—1971 அல்லது முன்னதாக அதற்கு வைக்கவேண்டும். அனுப்பி 30—11—1971-க்குப் பின்னர் வரும் எந்த நூலும் எக்காரணத்தைக் கொண்டும் போட் டிக்கு ஏற்றது ஆகாது.

முகவரி : உதவி கல்வி ஆலோ சகர், (எம்.இ.2 பிரிவு), அறை எண் 407, சி. பிரிவு, சாஸ்திரி பவன், இந்திய அரசு கல்வி, சமூக நலன் அமைச்சகம், புது டில்லி.

போட்டிக்குரிய விதிமுறை களையும் விண்ணப்பத்தாளையும் பெற விரும்புவோர் 50 காசு தபால் தலை ஒட்டிய தங்கள் முகவரி எழுதிய உறையைத் தனி அலுவலர் (நூலகமும், முதி யோர் கல்வியும்), பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை-6 என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள லாம்.

பள்ளிக் கல்வி இயக்குநர்,

சென்னை-6.

(த.8)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிறைத் துறை

ஒப்பந்த அறிவிப்பு

1971–72 ஆம் ஆண்டின் எஞ்சியுள்ள மாதங்களுக்குக்கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தம் 22–10–71-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள் :— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தங்கள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post—Ack. Due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் ''. . . . . .க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தமோ அந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தம் என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தங்கள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 23—10—1971 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவுப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

இ.பி.டி. தாமஸ்,
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்-பொறுப்பு,
குறளகம், சென்னை-1.

10—9—1971.

(த.21)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித் துறை

ஈட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

வேலையின்பெயர் : தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ஒரு சொற்பொழிவு அறை கட்டுதல். மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை, தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 15—10—1971 மாலை மணி 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1 ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

2 பிணைப்பணம்.—ரூ. 2,800.

3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் '' பொ. ப—செலுத்துத் தொகை—III மற்றைய செலுத்துத் தொகை '' எனும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்).— ரூ. 30.

4 விற்பனை வரி.— (அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் XII —விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு, மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்—பொது விற்பனை வரி '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்).—ரூ. 1·05

5 கால அளவு.—எட்டு மாதங்கள்.

6 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்.—24—9—1971

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 24)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித் துறை

ஒப்பந்தப் புள்ளி தேதி நீட்டிப்பு அறிவிப்பு

வேலையின் பெயர்.

மதுரை மாவட்டம், தோப்பூர் அரசினர் காசநோய் சானடோரியத்தில் கீழ்த் தளத்தில் 30 படுக்கைகளுக்கும், முதல் தளத்தில் 30 படுக்கைகளுக்குமான ஒரு இரண்டு தளக் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தேதி 6—10—1971 அன்று மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 28—9—1971 முதல் 4—10—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். அவை 6—10—1971 அன்று மாலை 4 மணிக்குக் கீழ்க் கையொப்பமிட்டவரால் திறக்கப்படும்.

மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர் (பொ.ப.து),
மதுரை வட்டம்,
மதுரை.

(த 22)

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

ஒப்பந்த அறிக்கை.

தமிழ்நாடு குடிசை மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், செனாய்நகரில் பல அடுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 6—10—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

எண்.	பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்த பத்திரங்களின் விலை.
			ரூ.	ரூ.	
1	I	32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள், A-1, A-2.	2,47,000	3,700	ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும்).
2	II	ஷை A-3, A-4.	2,47,000	3,700	
3	III	ஷை A-5, A-6.	2,47,000	3,700	
4	IV	32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள், A-7, A-8. 16 குடியிருப்புகள் கொண்ட C-1.	3,09,000	4,630	
5	V	ஷை A-9, A-10, C-2.	3,09,000	3,250	
6	VI	32 குடியிருப்புகள் கொண்ட கட்டடம், A-11, 24 குடியிருப்புகள் கொண்ட B-2.	2,16,500	3,250	
7	VII	ஷை A-12, B-1.	2,16,500	3,250	
8	VIII	ஷை B-3, C-3.	1,55,000	2,325	
9	IX	ஷை B-4, C-4.	1,55,000	2,325	

வரைபடங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 25—9—1971 முதல் 5—10—1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 6—10—1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ, நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

தாண்டவராயச்சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

(த27)

வேலை வாய்ப்பு

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

பொதுப்பணித் துறை, தொழில் துறை (நிர்மாணப் பிரிவு) நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, ஆகியவற்றின் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நிரந்தரமாக்குதல் (Regularisation).

பொதுப்பணித்துறை, தொழில் துறை, (நிர்மாணப் பிரிவு) நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை, ஆகியவற்றில் ஓராண்டுக்குக் குறையாமல் அதாவது 1—4—1971-ல், ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்கும், மேற்பார்வையாளர்கள், இளநிலைப் பொறியாளர்களிடமிருந்து விண்ணப்ப மனுக்கள் 2—11—1971 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு:—3—4—1971 அன்று வெளியிடப்பட்ட கழகத்தின் அறிவிப்பையொட்டித் தற்காலிக வேலைகளை நிரந்தரமாக்க மனுச் செய்திருந்தவர்கள், மீண்டும் இதற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

தகுதி I.—பொதுப் பணித் துறை, தொழில் துறையின் நிர்மாணப் பிரிவிலும் மேற்பார்வையாளர்களாகவும், இளநிலைப் பொறியாளர்களாகவும், நியமிக்கப்பட வேண்டியவர்களுக்கு :—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட, ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பெற்றுள்ள பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிகல்).

(அ) கிண்டி பொறியியல் கல்லூரியின் பொறியியல் பட்டம் (சிவில், மெக்கானிக்கல் அல்லது எலக்ட்ரிக்கல்)

அல்லது

(ஆ) கிண்டி பொறியியல் கல்லூரியின் எல்.சி.இ. டிப்ளமா அல்லது மேல்நிலை உதவியாளர் டிப்ளமா (Upper Subordinate)

அல்லது

(இ) சென்னை மாநில தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியம் அளித்த எல். சி. இ. அல்லது எல்.எஸ்.இ. டிப்ளமா,

அல்லது

(ஈ) ஏ. எம். ஐ. இ. (இந்தியா) தேர்வில் (ஜியோடெசி) பாடத்தைக் கூடுதல் பாடமாகவோ, அல்லது விருப்பப் பாடமாகவோ எடுத்து, ஏ, பி பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனுச் செய்யலாம்.

1. 'சர்வே' பயிற்சியில் ஓராண்டுக்குக் குறையாமல் பயிற்சி பெற்றதற்கு ஆதாரம் காட்டப்பட வேண்டும்; அல்லது

2. பொதுப்பணித் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, வேலை பார்த்திருக்க வேண்டும்; அல்லது

3. கிண்டி பொறியியல் கல்லூரியில் மேல் நிலைப் பணியாளர் (Upper Subordinate) அல்லது எல்.சி.இ. டிப்ளமா பெற்றவராகவோ, அல்லது, சென்னை மாநில தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தினால், அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல். எஸ்.இ. பட்டம் பெற்றவராகவோ அல்லது இதற்கு இணையான வேறு ஏதாவது ஒப்புதல் அளித்த தகுதி பெற்றவராகவோ இருக்க வேண்டும்.

குறிப்பு.—இளநிலைப் பொறியாளராகக் கவனிக்கப்படுவதற்கு விண்ணப்பம் செய்பவர்கள், ஏ.எம்.ஐ.இ. (இந்தியா) தேர்வில் ஏ, பி பிரிவுகளில் தேர்ச்சி அடைந்தவர்கள், தேர்ச்சி அடைவதற்கு முன்பாகவோ அல்லது தேர்ச்சி அடைந்த பின்னரோ, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல், வேலை பார்த்த அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

அல்லது

உ. சென்னை மாநில, தொழில் நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தின் எல்.எம்.இ. அல்லது எல். ஏ.இ. டிப்ளமா பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:—சென்னை மாநில, தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தினர் அளித்த எல்.எம். இ. அல்லது எல்.ஏ.இ. டிப்ளமா வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் மேற்பார்வையாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் போது, போதுமான அளவு வேலை அனுபவம் உள்ளவர்கள் என்று சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டால்தான், நியமனத்திற்குக் கவனிக்கப்படுவார்கள்.

மற்றும்

டிப்ளமா பெற்றபின் குறைந்தது இரண்டு ஆண்டுக் காலமாவது பொறியியல் பணியில் வேண்டிய அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

தகுதி II. நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறையில், மேற்பார்வை யாளர்கள், இளநிலைப் பொறியாளர்களை நியமித்தல்—

1. பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவினரால், நிதி உதவிக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏதாவது பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தில் பெற்றுள்ள பொறியியல் பட்டம் (ஹைவேஸ், சிவில், அல்லது மெக்கானிக்கல்)

அல்லது

2. (அ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(ஆ) கிண்டி, பொறியியல் கல்லூரியின் மேல்நிலை உதவியாளர் அல்லது எல்.சி.இ. டிப்ளமா.

அல்லது

(இ) மாநில, தொழில்நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியம், சென்னையினால் அளிக்கப்பட்ட எல்.சி.இ. அல்லது எல். எ.இ. டிப்ளமா.

அல்லது

(ஈ) கிராம உயர் நிலைக் கல்விக்கான தேசிய மன்றம் (National Council for Rural Higher Education) அளித்த சிவில் மற்றும், கிராமப் பொறியியல் டிப்ளமா.

அல்லது

(உ) சென்னை மாநில, தொழில் நுணுக்கக் கல்வி, பயிற்சி வாரியத்தினால் வழங்கப்பட்ட ஆட்டோமொபைல்ஸ் அல்லது மெக்கானிக்கல் பொறியியல் பட்டம்.

அல்லது

(ஊ) ஏ.எம்.ஐ.இ. (இந்தியா) தேர்வில், ஏ, பி, பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்படுவார்கள்.

ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 6—10—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பிரதிகள் கிடைக்கும் விலாசம்.
தஞ்சாவூர் மாவட்டம்.		
தஞ்சாவூர் கோட்டம்.		
1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலை கி.மீ. 63/6-8 (மை. 39/7)-ல் ஒரு பாலம் கட்டுதல்.	10,700	கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), தஞ்சாவூர்.
2 ஷை கி.மீ. 75/6-8 (மை. 47/1).	5,200	ஷை
3 ஷை கி.மீ. 58/2 (மை. 36/3).	7,400	ஷை
4 ஷை கி.மீ. 65/8 (மை. 41/1).	5,500	ஷை
5 ஷை கி.மீ. 20/0 (மை. 16/[illegible]).	11,300	ஷை
தஞ்சாவூர் மாவட்டம்.		
தஞ்சாவூர் கோட்டம்.		
6 பட்டுக்கோட்டை ஒன்றியம்-பலத்தலை கிராமச் சாலையில் நரையாற்றின் குறுக்கே மைல் 0/8-ல் ஒரு தரைப் பாலம் கட்டுதல்.	3,000	ஷை

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 விதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர், அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 22—9—1971 முதல் 5—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விபரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள், முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர்
(நெ.கி.ப.), திருச்சிராப்பள்ளி-1.

(த 70)

1. மனுதாரர்கள் கீழ்க் கண்ட பாடங்களை எடுத்திருக்க வேண்டும். 6 (எ) தாளில், A பிரிவில்

(1) Theory of Structures and Strength of Materials.

(2) Theory of Design of Structures.

(3) Geodosy.

(4) Roads and Hydraulics and Hydraulic Machinery.

2. ''ஸர்வே''யில் ஓராண்டுக்குக் குறையாமல் பயிற்சி பெற்றுள்ளதற்கான ஆதாரம் காட்ட வேண்டும்; அல்லது

3. பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறையில் ஓவர்சியராகவோ அல்லது மேற்பார்வையாளராகவோ, ஓராண்டு பணியாற்றியிருக்க வேண்டும்;

அல்லது

4. கிண்டி பொறியியல் கல்லூரி அளித்துள்ள மேல் நிலை உதவியாளர் அல்லது எல்.சி.இ. டிப்ளமா அல்லது சென்னை, மாநில தொழில்நுணுக்கக், கல்வி பயிற்சி வாரியத்தினரால் அளிக்க பட்ட டிப்ளமா அல்லது கிராம உயர் நிலைக்கல்விக்கான தேசிய மன்றத்தினால் அளிக்கப்பட்ட சிவில் மற்றும். கிராமப் பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:—இளநிலைப் பொறியாளர்களாகக் கவனிக்கப்படுகிறவர்கள், மேலே 6-ல் குறிப்பிட்டுள்ள தகுதியைப் பெற்றிருப்பதோடு, பல்கலைக்கழக நிதி உதவிக் குழுவிடம் ஒப்புதல் பெற்ற ஏதாவது நிதி உதவி பல்கலைக் கழக நிறுவனத்தில், இண்டர்மீடியட் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகவோ அல்லது அதற்கு இணையாக மாநில அரசினால் ஒப்புதல் பெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதோடு, ஏ.எம்.ஐ.இ. (இந்தியா) தேர்வில், ஏ,பி, பிரிவுகளில் தேர்ச்சி பெற்றபின் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது, அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

டிப்ளமா பெற்ற பின் குறைந்தது 2 ஆண்டுகளாவது. பொறியியல் பணியில் வேலை பார்த்த அனுபவம்பெற்றிருக்க [illegible]

இந்தப் பதவிகளின் சம்பள விவரம்—

1. மேற் பார்வையாளர்: மாதம் ரூ. 325–15–475–20–575—25–650.

2. இளநிலைப் பொறியாளர்—மாதம் ரூ. 400–15–475–20–575—25–650.

முழுவிவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும், செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வுக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக் குறிப்பிட்டு, 35 காசு அஞ்சல் தலை ஒட்டப்பட்டு, குறைந்தது 23 செ. மீ. நீளமுள்ள உறையில், நூலஞ்சல் என்று குறிப்பிட்ட உறையை உடன் வைத்து எழுத வேண்டும்.

(த. 6)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர்: ஆம்பூர் நீர் வழங்கு திட்டம்—நான்காவது இறுதிக் கட்டம்—மேல் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிஸர்வாயர் 18 லட்சம் லிட்டர் திறனுள்ள அல்லது ஒவ்வொன்றும் 9 லட்சம் லிட்டர் திறனுள்ள இரட்டை ரிசர்வாயர்கள் கட்டுமானம். அவசியமான குழாய் இணைப்புகள், வால்வு பிட்டுகள், பம்ப் முதலியன உள்பட முழுமையாக.

தமிழ் நாடு தண்ணீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், மேலே கண்ட வேலைக்காகத் துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின் உரிய பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை-8 அவர்கள் தமது அலுவலகத்தில் (52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8-ல்) 16-10-1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாளில் பிற்பகல் 3-30 மணிக்கு மேல் மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் சர்க்கிள், சென்னை அவர்களால் ஒப்பந்தப்புள்ளித்திறப்பின்போது ஆஜராக இருக்க விரும்புகின்ற ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூ. 7,125 (ரூபாய் ஏழாயிரத்து நூற்று இருபத்தைந்து மட்டும்). (அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத் தொகை கட்டப் பெறவேண்டும்.)

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 (பத்து ரூபாய் முப்பத்தைந்து காசுகள் மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணங்கள், நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதாரப் பொறியியல் டிவிஷன் வாணியம்பாடி, பி.டபிள்யூ III, ஓ. ஆர். அவர்கள் கணக்கிலும் விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை பொது விற்பனை வரியிலும் தனி சலான்களில் சேர்க்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் பெற—நிர்வாகப் பொறியாளர் (பொ.சு. பொ.)பொ.சு. பொறியியல் டிவிஷன் 301, ஜமாத் சாலை, வாணியம்பாடி (வ. ஆ.) அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம். (ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பணமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலையை முடிக்க வேண்டிய கால வரை—9 மாதங்கள்.

எம். துரைராஜன்,
மேற்பார்வைப் பொறியாளர்
(பொ. சு. பொ.)

(த. 2)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

1642 எஸ்.டி. 2. தேதி 1–9–1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் சார்பாக கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், 8–10–1971 மாலை 3·00 மணி முடிய, கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்றுவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 4·00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ. வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1 பணியின் பெயர்	..	சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—இரண்டாம் நிலை கட்டம்—இரண்டாம் (பகுதி-2)—20, 24 அங்குல கிராவிட்டி மெயின் பைப்புகளைப் பதித்தலும் இணைத்தலும் மற்ற வேலைகள் செய்தலும்.
2 ஒப்பந்தமுறை	..	மொத்தத் தொகை (L.S.).
3 பிணைப்பணம்	..	ரூ. 8,960 (ரூபாய் எட்டாயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபது மட்டும்.)
4 பணி முடிக்க வேண்டிய காலம்.		ஆறு மாதங்கள்.
5 ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.		ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட).
6 ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி.		10–9–1971 முதல் 6–10–1971 முடிய.

மேற்படிப் பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்ரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணியார்டர் மூலமாகவோ நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

பிணைப் பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் ''கேட்பு வரைவோலை'' சேலம் நிர்வாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தவோ அல்லது கஜானாவில் சேலம் நிர்வாகப் பொறியாளர், பி.டபிள்யூ. III. O. R. தலைப்பில் செலுத்தவோ செய்யலாம். அங்கீகாரம் செய்யப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகள் பிணைப் பணத்திற்காக ஒப்புக்கொள்ளப்படும். பிணைப்பணம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது அனைத்து ஒப்பந்தத்தையோ காரணம் இல்லாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த.5)

ஒப்பந்தப் புள்ளி

எண்ணூர் அனல் மின் திட்டம்

ஒப்பந்த விளம்பரம்

மொத்தத் தொகை ஒப்பந்தம்

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் 'தமிழ்நாடு மின்சார வாரியம்' எண்ணூர் அனல் மின் திட்டம் எண்ணூர் அனல் மின் நிலைய வேலைக் களத்திலிருந்தே 1—11—1971 முதல் ஓராண்டுக் காலத்திற்கு மரக்கறி உணவு விடுதி நடத்துதல் எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு, கீழ்க்கையொப்பமிட்டவரால் 12—10—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 3 (மூன்று மட்டும்) கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். இந்தத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

3. இந்த வேலைக்கான பிணைத் தொகை ரூ. 1,000 (ஆயிரம் மட்டும்) ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்தி, அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் வரும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதி தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கக் கீழ்க்கையொப்பமிட்டவரே உரிமையுடையவராவார்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர் சென்னை 57.

(த.32)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரை யிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1, விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 6—10—1971 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம்.
தஞ்சாவூர் மாவட்டம்.		
தஞ்சாவூர் கோட்டம்.		
1 முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் கி.மீ. 49/8 (மைல். 31/1)-ல் ஒரு பாலம் கட்டுதல்.	ரூ. 2,800	கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) தஞ்சாவூர்.

1. ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலாசத்திலிருந்து 22—9—1971 முதல் 5—10—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

2. மேலே குறிப்பிடப்பட்ட கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர, 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

3. மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் ஒப்புதலைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

5. முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஆ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர், (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி.

(த. 1)

ஏலம்

இணை மாநில நிலவியல் ஆய்வாளர் அலுவலகம்
தொழிற்பேட்டை
கிண்டி சென்னை-32.

ஏல விளம்பரம்

கிண்டி, தொழிற்பேட்டை, சென்னை-32-ல் உள்ள இணை மாநில நிலவியல் ஆய்வாளர் அலுவலகத்தில் இரண்டு 'காலிக்ஸ்' துளைபொறிகள் பம்புகள் அதைச் சார்ந்த தளவாடங்கள் முதலியவைகள் 15—10—1971 அன்று பிற்பகல் 2-00 மணி அளவில் பொது ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கேட்க விரும்புவோர் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் 10-30 மணியிலிருந்து 5-00 மணி வரை 12—10—1971-க்குள்ளாக விற்பனை வரையறைகளையும் நிபந்தனைகளையும் இணை மாநில நிலவியல் ஆய்வாளரிடமிருந்து நேரிடையாகவோ அல்லது விண்ணப்ப நமூனவுடன் சுய முகவரியிட்ட 20 பைசா அஞ்சல் தலையுடன் கூடிய உறையுடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இணை மாநிலக் கனிப்பொருள் ஆய்வாளர்.

(த.35)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், பொது சுகாதாரப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசு துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால், எண் 17. சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2, என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 19-10-1971 (செவ்வாய்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்	—	பழனி குடிநீர் வழங்கும் திட்டம்—நாலாம் கட்டம்—பழனியில் கோடை கால ஸ்டோரேஜ் டேங் கட்டுதல்
ஒப்பந்த வடிவம்	—	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை	—	ரூ. 37,000.

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலையை முடிக்கவேண்டிய காலம்.	18 மாதங்கள்.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூபாய் 25·88 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்தி சாலை, சொக்கிகுளம், மதுரை-2, என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், அவர்களிடமிருந்து 12-10-1971 அன்று மாலை 5 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.பொ.), மதுரை-2.

தேதி: 25-8-1971.
(த.4)

விளம்பரம்

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், வீரகேரளம் புதூர் கிராமத்தில் தமிழக அரசு தொழில் வணிகத் துறையினரால் நடத்தப்பட்டு வரும் பொது நோக்கு பொறியியல் பட்டறையில் 18 மாத காலத் தொழிற் பயிற்சி பிட்டிங் (Fitting) வெல்டிங் (Welding), டர்னிங் (Turning), கருமார் (Smithy) முதலிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட (D-notified tribes) வகுப்பைச் சேர்ந்த 12 மாணவர்களும், அட்டவணையில் கண்ட (Scheduled Caste) வகுப்பைச் சேர்ந்த 3 மாணவர்களும் இப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களோ, அட்டவணையில் கண்ட வகுப்பைச் சார்ந்தவர்களோ போதிய அளவில் முன் வரவில்லையென்றால் காலியுள்ள இடங்களில் பின்னிலை வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தி ஐந்து) வீதம் பயிற்சி உதவித் தொகை கொடுக்கப்படும். பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் தொடர்ந்து பயிற்சியில் இருப்போம் என்று உறுதிமொழி எழுதித் தர வேண்டும். அத்துடன் பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேருவதற்கு முன், முன் வைப்புப் பணம் ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) கட்ட வேண்டும். மேலும் குறிப்பிட்டுள்ள தொழில்களில் பயிற்சி பெறுவதற்கான உடல் ஆரோக்கியமானவர்கள் என்பதற்கு மருத்துவ அதிகாரிகளிடமிருந்து (சிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜன் அந்தஸ்துக்குக் குறையாதவர்கள்) சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் குறைந்த அளவு எட்டாவது வகுப்பு அல்லது மூன்றும் படிவம் படித்தவர்களாகவும், 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 30 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். நேரடித் தேர்வுக்கு வரும் மாணவர்களுக்குச் செலவுத் தொகை எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களைச் சாதாரண வெள்ளைக் காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் பெயர்.
2. வயது.
3. தகப்பனுரின் பெயர்.
4. வகுப்பு (ஜாதி).
5. கல்வித் தகுதி.
6. சொந்த ஊர்.
7. தற்போதைய விலாசம்.

முதலியவற்றை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். விண்ணப்பங்கள் கண்காணிப்பாளர், பொதுநோக்கு வசதி பொறியியல் பட்டறை. வீரகேரளம் புதூர் என்ற முகவரிக்கு 10-10-1971 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் செய்யும்போது அல்லது நேர் முகத் தேர்வுக்கு வரும்பொழுது அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு அல்லது அட்டவணையில் கண்ட வகுப்பு அல்லது பின்னிலை வகுப்பு சார்ந்தவர்கள் என்று வருவாய்த்துறை அதிகாரி (மணியக்காரர்) அவர்களிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும்.

தொழில் வணிக இயக்குநர்.

(த. 14)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை
ஒப்பந்த அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாகவும், உத்தரவுப்படியும் கோயம்புத்தூர் வட்டம், நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை அக்டோபர் திங்கள் 6-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3-00 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	கோட்டம்.	முன் வைப்புத் தொகை.
		ரூ.
1 தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரி, ராணிப் பேட்டை சாலையை 1971-72-ஆம் வருடத்திய வருடாந்திரத் திட்டத்தில் அகலப்படுத்தலும், உறுதிப்படுத்தலும்— கி.மீ. 1·6 முதல் 10·0 வரை.	கிருஷ்ணகிரி.	26,200
2 டிை கி. மீ. 10·0 முதல் 15·0 வரை.	டிை	17,800
3 டிை கி. மீ. 15·0 முதல் 23·0 வரை.	டிை	24,100

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளரிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 50 (ஐம்பது) உடன் விற்பனை வரியும் செலுத்தி, 17—9—1971 முதல் 5—10—1971 வரை பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த தாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானால், டிை பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர, ரிசர்வ் பாங்கு ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும்.

பா. சேக் உமர்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
கோவை-2.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2,
30—8—1971.

(த.3)

ஏலம்

தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர்-3.

எச். 5/968/71.

நாள் : 8—9—71.

கால்நடை ஏல விளம்பரம்

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள மத்தியப் பண்ணையிலும் பால் பண்ணையிலும் 31 உயர்ந்த ரக பசுக்களும், காளைகளும், காளைக்கன்றுகளும் 15—10—1971 (வெள்ளிக்கிழமை)-ம் தேதி மாலை 3 மணி அளவில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலம் கோருபவர்கள் ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) முன் பணம் செலுத்தி நேரில் ஏலம் கூறலாம். ஏலம் எடுத்தவர்கள் உடனேயே அதற்குரிய ஏலத் தொகையையும், விற்பனை வரியையும் செலுத்தி விடவேண்டும்.

மாடுகளின் ஏலத்தொகையை நிர்ணயிக்கவோ, ஏலத்தினைத் தள்ளிவைக்கவோ, ஏலத்தை நிறுத்தவோ ஏலம் விடும் வேளாண்மை நுண்ணறிஞர், மத்திய பண்ணை அன்னாரின் முடிவே இறுதியும் சட்டப்படி கட்டுப்படுத்துவதாகும்.

ஏ. பெ. மொரச்சன்
பேராசிரியர்,
வேளாண்மைப் பிரிவு.

(த.7)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

யு 3/30606/71 தேதி 16-9-1971

உணவுப்பொருள் வழங்குதுறை

காலி சாக்குகள் விற்பனை

சென்னை நகரத்திலும், ஆவடியிலும் உள்ள அரசாங்கக்கிடங்குகளில் அரசுக்குச்சொந்தமான உபயோகமுள்ள கோணிப்பைகளும், ஒட்டுப்போட்ட கோணிப்பைகளும் உபயோகத்திற்குத் தகுதி அற்ற கோணிப்பைகளும், டன்னேஜ் (Dunnage) கோணிப்பைகளும் அனுபந்தத்தில் கண்டுள்ளபடி, ஆணையாளர், உணவுப்பொருள் வழங்குதுறை, சென்னை அவர்களிடமிருந்து ஒப்பந்தம் மூலமாக விலைக்கு வாங்குவதற்காக அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) ஒப்பந்த நிபந்தனைகளடங்கிய விபரங்களை ஈ.டி. மில்ஸ், 2, டெமலலோஸ் ரோடு, சென்னை-7-ல் உள்ள உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டியது.

(2) ஒப்பந்த பாரங்களும், மேலே கூறிய அலுவலகத்தில் கிடைக்கும். ஒப்பந்த பாரத்தின் விலை ரூ. 5-ம் 3½ சதவிகிதம் விற்பனை வரியும் ஆக ரூ. 5·18 ரிசர்வ் பாங்கில் " Personal Deposit Account of the Commissioner of Civil Supplies " என்ற தலைப்பில் செலுத்தி செலானை ஈ. டி. மில்ஸ், 2, டெமலோஸ் ரோடு சென்னை-7-ல் உள்ள உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கொடுத்து மேற்படி பாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் கட்டுக் காப்புத் தொகைக்காக ரூ. 2,000-க்கு டிமாண்ட் டிராப்ட் வாங்கி அனுப்ப வேண்டியது.

(3) அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சேப்பாக்கம் (சென்னை-5) எழிலகம் கட்டடத்தில் உள்ள துணை ஆணையாளர் (விநியோகம்) உணவுப்பொருள் வழங்குதுறை, அவர்களால் 20—10—1971 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் அவர்களால் அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரியால் பிரிக்கப்படும்.

(4) டிை ஒப்பந்தங்கள், ஆணையாளர், உணவுப்பொருள் வழங்குதுறை " Commissioner of Civil Supplies Madras " அவர்களால் ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்படும்.

எண்	கிடங்கின் பெயர்.	உபயோக முள்ளவை 100 கி.	ஒட்டுப் போட்டவை 75 கி.	உபயோக மற்றவை 75 கி.	100 கி.	டன்னேஜ் கோணிகள் (Dunnage)
1	ஆவடி எம். 39	..	33,800	64,150	..	..
2	ஆவடி எம். 39	..	..	..	..	..
3	ஏ. எல். 4 கிடங்கு, சென்னை, ஈ. டி. மில்ஸ்	558	..	2,634	1,558	..
4	ஈ. டி. 23சென்னை ஈ. டி. மில்ஸ்	2,300	..	2,352	393	574
5	ஈ. டி. 25/27 சென்னை ஈ. டி. மில்ஸ்	15,018	..	5,568	1,096	1,600
6	தங்கசாலை கிடங்கு, சென்னை	2,172	..	3,052	606	2,350
7	நந்தனம் கிடங்கு, சென்னை	873	..	2,577	1,037	1,556
8	கோபாலபுரம் கிடங்கு, சென்னை	2,636	..	187	10	546
9	அண்ணா நகர் யூனிட் 1 சென்னை	72	..	3,188	538	476
10	அண்ணா நகர் யூனிட் 2 சென்னை	378	..	4,375	758	488
11	ஆவடி	935	..	225	50	..
12	எல்	..	..	..	..	22,340
	மொத்தம் ..	24,942	33,800	88,308	6,046	29,930

ஆணையாளர்,
சென்னை-5.

(த. 77)

தமிழ்நாடு அரசு பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ் நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 15—10—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும்.

1. வேலையின் பெயர் ... தஞ்சாவூரில் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கான மேல்நிலைப் பட்டப் படிப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்.
2. ஒப்பந்த வகை — மொத்தத் தொகை.
3. பிணைப் பணம் ... ரூ. 4,300.
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை — ரூ. 30.

அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "பொ. ப செலுத்துத் தொகை-III —மற்றைய செலுத்துத் தொகை" எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கல்லணைக் கால்வாய் தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.

விற்பனை வரி — ரூ. 1·05.

அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் XII விற்பனை வரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.

5. கால அளவு — — ஒன்பது மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள். 24—9—1971.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 36)

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் பொறியியல் பணித்துறை

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விபரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

(1) வேலையின் பெயர் ... திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை இளம் குற்றவாளிகள் பள்ளியில் ஒரு படுக்கைக் கூடக் கட்டடம் அமைத்தல்.

(2) ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித்தேதி மற்றும் நேரம். 20—10—1971 மாலை 3-00 மணி.

(3) பிணைப் பொறுப்புத் தொகை. ரூ. 3,800 (ரூபாய் மூவாயிரத்து எண்ணூறு மட்டும்).

(4) ஒப்பந்த முறை — மொத்தத் தொகை.

(5) முடிக்க வேண்டிய காலம் — பத்து மாதங்கள்.

(6) ஒப்பந்தப் பத்திரத்தின் விலை — ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).

(7) விற்பனை வரி — .. ரூ. 0·88 (எண்பத்தெட்டு பைசாக்கள் மட்டும்).

(8) ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. 1—10—1971.

(9) விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம். 20—10—1971 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் (XXXVII Public works State Revenue-Miscellaneous) மற்றும் (XII Sales Tax (b)receipts under the State Sales Tax Act General Sales Tax) என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும், விபரங்களும் விரிவாக ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தபால் பெட்டி எண் : 55

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 34)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 20—10—71 அன்று மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வ.எண்.	வேலை விபரம்.	முன் வைப்புத் தொகை. ரூ.	ஒப்பந்த நமூனு கிடைக்குமிடம்.
1	ஆரணி-தேவிகாபுரம் சாலை கி.மீ. 11/6ல் (மைல் 7/2) செய்யாற்றின் குறுக்கே ஓர் மூழ்கு பாலம் கட்டுதல்.	13,400	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை.

ஒப்பந்தங்கள் 20—10—1971 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 51·50 செலுத்தி 6—10—1971 முதல் 19—10—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), திருவண்ணாமலை பெயரில் செலுத்தி செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான "ரிசர்வ் வங்கி" யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

14—9—1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை), சென்னை வட்டம்.

(த. 45)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
போக்குவரத்துத் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

கான்வாஸ் பெல்ட் வழங்குவதற்காக முடி முத்திரையிட்ட விலைப் புள்ளிகள் 11—10—1971 மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், இதர விவரங்களைக் கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களிடமிருந்து வேலை நாட்களில் இலவசமாகப் பெறலாம்.

இயக்குநர்.

(த. 58)

ஏல ஒப்பந்தம்

கண்காணிப்பாளர் அலுவலகம்
அரசினர் காச நோய் சானடோரியம்
தாம்பரம், சென்னை-47

அரசினர் காச நோய் சானடோரியம், அம்ரித் நகர் குடியிருப்பு (சானடோரியம் சார்ந்த புனர்வாழ்வு நிலையம்) பகுதிகளில் உள்ள மரங்களின் பலன்களை எடுத்துக்கொள்ள 16—11—1971 முதல் 15—11—1972 வரை உரிமை காலத்துக்குக் குத்தகை உரிமை அரசினர் சானடோரியத்தில் 30—10—1971 மாலை 3 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும் என்று இதன் மூலம் அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கொண்டு விவரங்களை சென்னை-47 தாம்பரம், அரசினர் காச நோய் சானடோரியம் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

டாக்டர் கே. வி. கிருஷ்ணசாமி,
எம்.டி., எப்.சி.சி.பி.
கண்காணிப்பாளர்,

அரசினர் காசநோய் சானடோரியம், தாம்பரம், சென்னை-47.

(த. 61)

4½%. சென்னை மாநில மின்சார வாரியப் பத்திரம், 1971 மீட்பு அறிவிப்பு

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 30—9—1971 தேதி அறிவிப்பு எண். 1539 F.C/61-படி, அறிவிக்கப்பட்ட விதிகளின் படி, 4½ சதவிகித 1971-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படாத மீதி தொகையை 15—10—1971 வரையிலாக வட்டி உட்பட 16—10—1971 அன்று, அன்றைய நிலவரப்படி திருப்பி அளிக்கப்படும். 16—10—1971 தேதி முதற்கொண்டும் அதன் பிறகு கடன்மேல் எந்தவித வட்டியும், கொடுக்கப்பட மாட்டாது. (3-ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள விலக்குகளைப் பார்க்க.)

கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கான முறைகளில் ஏதாவது மாறுதல் இருப்பின் சூழ்நிலைக்குத் தக்கபடி மாற்றி அமைக்கப்படும். அரசாங்கக் கடன் பத்திரப் பாதுகாப்பு கைப்பிரதியிலுள்ள சட்டங்கள் மற்றும் வாரியத்தின் முக்கிய விதிகளுடன் இணைந்தும் சூழ்நிலைக்குத் தக்க அமலாக்கம் செய்யப்பட்ட மின் (வினியோக) சட்டம், 1948-ன் கீழ் தமிழ்நாடு மின் வாரியத்தினுல் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு மாறுதல் இருக்கும்.

தமிழ்நாடு மின் வாரியம் இந்த ஆண்டு அக்டோபர் 1971-ன் மத்தியில் ஒருபுதிய ஓப்பன் மார்க்கெட் கடனை (Open Market Loan) வெளியிடவிருக்கின்றது. 1971-ஆம் ஆண்டு 4½ சதவிகிதத் தமிழ்நாடு மின் வாரியக்கடன் பத்திரங்கள் வைத்திருப்பவர்கள், தாங்கள் விரும்பினுல் அதனை அதற்குச் சமமான புதிய கடன் பத்திரமாக மாற்றிக் கொள்ளலாம். இதனைப் பயன் படுத்திக்கொள்பவர்கள் தங்களுடைய புதிய கடன் பத்திரத்திற்குப் பழைய கடன் பத்திரத்திற்குக் குறையாத அளவிலான புதிய வட்டியைப் புதிய கடன் வெளியிடும் தினமான 16—10—1971-லிருந்து, பெற்றுக் கொள்ள தகுதியுடையவராவார். இதனைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் நபர்கள் கடன் தொகையைப் பெறுவதற்காகத் தங்களது கடன் பத்திரங்களை இச்சமயத்தில் சமர்ப்பிக்க வேண்டாம். ஆனுல் மாறுதல் செய்வதற்காக தக்கத் சமயத்தில் முறையாகத் தள்ளுபடி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

கடன் பத்திரங்களைப் பணமாக மாற்ற விரும்பும் நபர்கள் தங்கள் பத்திரங்களை முறையாகத் தள்ளுபடி செய்து அதனை நேரிலோ அல்லது அவர்களது கிளை மூலமாகவோ அல்லது அவர்களது பாங்கர்கள் மூலமாகவோ சென்னை பாங்க் ஆப் மைசூர் கட்டடத்திலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பொது நல நிறுவனக் கடன் பிரிவில் பத்திரங்களைச் சமர்ப்பித்துத் தமிழ்நாட்டின் கிளைகள் மற்றும் பெங்களூர் மற்றும் பெங்களூர் நகரங்களிலுள்ள கிளைகள் மற்றும் அகமதாபாத், பம்பாய், கல்கத்தா, ஹைதராபாத், கான்பூர், மற்றும் புதுடெல்லியிலுள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் லோக்கல் தலைமை அலுவலகத்தின் சரியான படிவங்களைப் பூர்த்தி செய்து கொடுத்தபின் மேற்கூறப்பட்டவை பிரிவில் மாற்றிக் கொள்ளத் தக்க அதிகாரப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தள்ளுபடி செய்வது சம்பந்தமான முறைகளைப் பற்றிய முழு விவரங்களை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பொது நலக் கடன் பிரிவிலிருந்தும், அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்த கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை.

(த.12)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித் துறை

சென்னை செங்கற்பட்டு வட்டம்
ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைப்பு அறிவிப்பு

வேலையின் பெயர் :சென்னை—10, கீழ்ப்பாக்கம், அரசினர் மனநோய் மருத்துவமனை, நர்சிங் அலுவலர்களுக்கான இல்லங்கள் கட்டுதல்.

பார்வை : இந்த அலுவலகத்தின் எண். டி3/19006/71—4 நாள் 23—8—1971.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்கான கடைசித் தேதி 13—9—1971 லிருந்து 11—10—1971க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இந்த அலுவலகத்திலிருந்து 5—10—1971 முதல் 9—10—1971 வரை கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கற்பட்டு வட்டம்.

(த-74)

பயிற்சி

அறிவிப்பு

பரிசோதனைச் சாலை தொழில் நுட்ப பணியாளர் கிரேடு I பயிற்சி அக்டோபர் 1971

அக்டோபர் 1971 முதல் ஆரம்பமாகவிருக்கும் பரிசோதனைச்சாலை தொழில் நுட்பப் பணியாளர் கிரேடு I பயிற்சிக்கு, பரிசோதனைச் சாலை தொழில் நுட்பப் பணியாளர் கிரேடு II சான்றிதழ் அல்லது அதற்கு ஈடான சான்றிதழ் பெற்றுள்ளவர்களிடமிருந்தும், அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பரிசோதனைச் சாலையில் 2 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றி யுள்ளவர்களிடமிருந்தும் மனுக்கள்வரவேற்கப்படுகின்றன: தற்பொழுது ப ணியில் உள்ளவர்கள் தங்களுடைய மனுக்களை, தங்கள் துறையைச் சார்ந்த சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மூலமாக, இயக்குநர், மருத்துவக் கல்வி, சென்னை-5 அவர்களுக்கு அனுப்ப வேண்டும். பயிற்சி, பின்கண்ட நிலையங்களில் நடைபெறும்.

1. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.
2. ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.
4. மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.
5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.
6. கிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி:

மனு வடிவங்கள், விவரத் தொகுப்புகள், இதர விவரங்கள் ஆகியவற்றை இயக்குநர், கிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி அவர்களிடமிருந்தோ அல்லது பயிற்சி பெற விரும்பும் மேற்கூறிய கல்லூரிகளின் தலைவர் (டீன்) மற்றும் முதல்வர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் இயக்குநர், கிங் இன்ஸ்டிட்யூட், கிண்டி அல்லது சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரிகளின் தலைவர் மற்றும் முதல்வர் அவர்களுக்கு 5-10-1971 அன்று மாலை 5·00 மணிக்கு அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்க வேண்டும்.

என். ஆர். ரத்னக்கண்ணன்,
இயக்குநர்,
மருத்துவக் கல்வி

13–9–71
(த. 42)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

ஸ்பீடா மீட்டர், காஜஸ் வழங்குவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 20—10—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், இதர விவரங்களை கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து, அண்ணு சாலை, சென்னை-2 அவர்களிடமிருந்து அலுவல் நாட்களில் இலவசமாகப் பெறலாம்.

(த.65)

இயக்குநர்.

ஏலம்

கோயம்புத்தூர் நகராட்சி

ஏல விளம்பரம்

நகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட் வண்டிப் பேட்டைக்கு அருகில் உள்ள புதிய பிளாக் கடை எண். என். பீ. 25-ல் 31-3-74 வரை தக்காளி வியாபாரம் செய்யும் உரிமை 19-10-71-ஆம் தேதியன்று மாலை 3·00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

கட்டவேண்டிய டெபாசிட் தொகை ரூ. 100 மற்ற நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆணையர்.

(த. 79)

ஒப்பந்தப் புள்ளி

விழுப்புரம் நகராட்சி

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

மெத்தைகள், தலையணைகள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13—10—1971 மாலை 4·00 மணி வரை விழுப்புரம் நகராட்சி ஆணையரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4·30 மணிக்கு ஆணையரால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 50 கட்டுத் தொகையுடன் அனுப்பப்பட வேண்டும். மேற்கொண்டு விவரங்களை அலுவலகத்திலிருந்து பெறலாம்.

பி. ஐ. பத்மநாப மேனன்,
ஆணையர்.

15—9—1971.
(த. 41)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் லிமிடெட்

ஆலங்குளம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், சிமெண்ட் பாக்கிங்கிற்காக 28" × 18" அளவுள்ள (இந்த அளவு இருந்தால் விசேஷம்) பயன்படத்தக்க பழைய கோணிப்பைகள் மாதம் சுமார் 2,00,000 எங்களுக்குத் தேவைப்படுகின்றன. இதை வழங்குவதில் விருப்பமுள்ளவர்கள், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைப் பெறுவதற்காக 1971 அக்டோபர் 9-ஆம் தேதிக்குள் கீழே கையொப்பமிட்டவரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பொருட்கள் நிர்வாகி.

150-ஏ அண்ணுசாலை,
அஞ்சல் பெட்டி எண் 5205,
சென்னை-2.

(த.50)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ் நாடு அரசு பொதுப்பணித் துறை

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும் கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, கோயம்புத்தூர்—நீலகிரி வட்டம் அவர்கள், கோயம்புத்தூரில் தமது அலுவலகத்தில் 14—10—71 மாலை 3·00 மணி வரை பெற்றுக் கொள்வார்.

வேலையின் பெயர் ..	கோயம்புத்தூர், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ஜிம்னேசியம், ஸ்போர்ட்ஸ் பவல்லியன், ரன்னிங் டிரக் கட்டுதல்.
ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை	ரூ. 4,000.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை வரைபடங்களுடன்.	ரூ. 10·35.
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களைப் பெற, நிருவாகி, நிருவாகப் பொறியாளர் அலுவலகம், பில்டிங்ஸ் டிவிஷன், கோயம்புத்தூர் அவர்களுக்கு எழுத்து மூலமாகக் கோரிக்கை அனுப்பியும் மேலே குறிப்பிட்டபடி கட்டணம் செலுத்தியும் (இக்கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது) 1—10—71 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் பெறலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.)
கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த.-37)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

நகராட்சி லாரி எம்.டி.இ. 2073-ஐப் பழுது பார்த்துப் புதுப்பிக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 11-10-71 மாலை 3·00 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலையே 3·30 மணிக்குப் பொதுப் பணிப் பொறியாளரால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளுக்கான விவரங்கள் அடங்கிய பட்டியலை ரூ. 2·06 செலுத்தி நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 80)

திருச்சிராப்பள்ளி நகராட்சி

"பைப் லைன் மெட்டீரியல்ஸ் வழங்குவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தனி அலுவலரால் 15-10-71 மாலை 4·00 வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளருக்கு மனுச் செய்து அல்லது நேரில் சென்று பெறலாம்.

(த—55)

டி. கோவிந்தராஜன்,
தனி அலுவலர்.

மாயூரம் நகராட்சி

பி. ஏ. அல்லது பி.எஸ்ஸி. யுடன் எல்.டி., பி.டி., அல்லது பி.இ.டி. கல்லூரிப் பயிற்சிச் சான்றிதழ் உள்ள பிசிக்ஸ் அல்லது கெமிஸ்ட்ரி முக்கிய பாடமாகவும் கணிதம் துணைப் பாடமாகவும் கொண்ட ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினரிடமிருந்து, சயன்ஸ் பட்டதாரி உதவியாளர் வேலைக்காகத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து மனுக்கள் 15-10-1971 மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ரூபாய் ஒன்று செலுத்தி மாயூரம் நகராட்சி அலுவலகத்திலிருந்து மனு வடிவங்களைப் பெறலாம்.

17-9-71

எஸ். வீரையன்,
ஆணையர்.

(த—75)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை

ரப்பர் மேட்டிங் (Rubber Matting) (Black with Hersain backing) வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட விலைப் புள்ளிகள் 12—10—1971 மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை கொள்முதல் அலுவலரிடமிருந்து அலுவல் நாட்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்.

(த. 47)

ஒப்பந்தப்புள்ளி

திருவள்ளூர் நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை நகர் மன்ற ஆணையரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 11—10—1971 திங்கட்கிழமை மாலை 4—00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

இதர நிபந்தனைகளும் ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கும் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவும்.

வ. எண்.	வேலை விவரம்.	மதிப்பீடு. ரூ.	கட்டுத் தொகை. முதல் தவணை ரூ.	2-வது தவணை ரூ.
1	ஆகூரி தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பிக்க.	6,200	155	155
2	கொண்டமாபுரம் தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பிக்க.	2,500	65	65

ஆணையர்.

(த-81)

ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறை அல்லது இதுபோன்ற இதர அரசுத் துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர் (பொ. சு. பொ.) அவர்களால், எண் 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை—2, என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலத்தில் 13—10—1971 புதன் கிழமை மாலை 3-00 மணி வரை துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் ...	குளித்தலை குடிநீர் வழங்கும் திட்டம்—முதற்கட்டம்—6 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள உயர் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் நீர்த் தேக்கம், அமைத்தல்.
ஒப்பந்த வடிவம் ...	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை ...	ரூபாய் 3,980—இந்தத் தொகையைக் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் செலுத்தி, ஒப்பந்தப்புள்ளியுடன் சேர்ப்பிக்கப்படவேண்டும்.
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	6 மாதங்கள்.
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூபாய் 10-35 (விற்பனை வரி உட்பட)

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் கோட்டம், பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி—3 அவர்களிடமிருந்து 9—10—1971 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணி வரை பெறலாம்.

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. சு. பொ.)
மதுரை—2.

6—9—1971

(த-29).

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித் துறை

ஒப்பந்தப் புள்ளி தேதி நீட்டிப்பு.

வேலையின் பெயர் .. (1) கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் பௌதிகத் துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

(2) கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் இரசாயனப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

(3) கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் கலைத்துறைப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.

(4) தோல் சம்பந்தமான வியாதிகட்குச் சிகிச்சையளிக்க தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் இரு பகுதிகட்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை .. "இந்தியன் எக்ஸ்பிரஸ்" தேதி 30—6—1971, 2—7—1971.

"தி மெயில்", தேதி 28—6—1971-ல் வெளியிட்ட சீட்டு ஒப்பந்த அறிக்கை.

"தமிழரசு", தேதி 1—9—1971-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 20—10—1971 அன்று மாலை 3-00 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 19—10—1971 அன்று மாலை 5-00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 33)

ஒப்பந்தப் புள்ளி

சிதம்பரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அவர்களால் தனது அலுவலகத்தில் 15-10-1971 அன்று மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குழாய் விளக்குகளுக்கான சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள் வழங்க வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலையே 4-15 மணிக்குத்திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 260. மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பொ. இராமலிங்கம்,
ஆணையர்.

10-9-1971
(த. 48)

ஏல விற்பனை

தமிழ்நாடு தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம்.எஸ்.ஒய். 7044—ஆஸ்டின் 1953 மாடல், பாளையங் கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் சனிக்கிழமை23-ஆம்தேதி யன்று காலை11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை, பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுகொள்ளலாம்.

எம். எஸ். சுப்பிரமணியம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
பாளையங்கோட்டை.

(த. 53)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களைக் கோட்டப் பொறியாளர் (நெகிப) திண்டுக்கல் விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 13–10–1971–ஆம் தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் 3-00 மணி வரையில் (அலுவலகக் கடியாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-05 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம்.
திண்டுக்கல் (நெ) கோட்டம்.			
1. மதுரை பாலமேடு சாலை கி.மீ. 6·6 முதல் கி.மீ. 12·0 வரை அவசர பழுது பார்த்தல்.	1,76,000	4,400	கோட்டப் பொறியாளர் (நெகிப) திண்டுக்கல்.
2. டி கி.மீ. 12.0–18·0.	1,62,500	4,065	டி
3. டி கி.மீ. 18·0–24·4.	1,68,500	4,215	டி

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 10·40 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப் பொறியாளர் (நெகிப) அலுவலகம், திண்டுக்கல் விலாசத்திலிருந்து 6-10-1971 முதல் 12-10-1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பி தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெகிப) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் 'ரெவின்யூ டெபாசிட்' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருடத் தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருடத் தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும், டிமாண்ட் டிராப்ட்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். பாங்க் காரண்டிகளைச் சமர்ப்பிக்கும் போது ரிசர்வ் பாங்கி ஒப்புதலைப்பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புக் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

மை. அ. சமத்,
கோட்டப் பொறியாளர் (நெகிப),
திண்டுக்கல்.

(த-66)

ஏல விற்பனை

தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட 2 வண்டிகள் வேலூர் தீயணைப்பு நிலையத்தில் 5—10—71 அன்று காலை 11·00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி இடத்தில் வண்டிகளைப் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஊர்திகளின் வகை.	பதிவு எண்.	வருடம், மாடல்:
1. நீர்தாங்கி வண்டி.	எம்.எஸ்.எக்ஸ். 1453.	பார்கோ, 1957 மாடல் பெட்ரோலில் ஓடுவது.
2. இழுக்கும் மோட்டார் வண்டி:	எம்.எஸ்.ஒய். 9249.	ஸ்டுடிபேக்கர், 1957 மாடல் பெட்ரோலில் ஓடுவது:

யூ. நாராயணு,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்;
வேலூர் கோட்டம்;

(த. 52)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர் : அம்பத்தூர் தொழிற் பேட்டையில் உள்ள சிறு கொட்டகைகளுக்கு உள்பகுதி மின்சார வசதி செய்வதற்குரிய வேலைக்கான தொழிலடிப் படையான அச்சு இணைப்புகள் (Industrial type fittings) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறப்பட்ட பொருள்களை வழங்குவதற்காகப் புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத்துறை அவர்களால் 6—10—1971 அன்று மாலை 3–00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை–2 அவர்களால் திறக்கப்படும்.

1. *கட்டுத் தொகை ... — — ரூபாய் 200.*
2. *மாதிரி வரைபடம்உட்பட (ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களின் விலை, விற்பனை வரி உட்பட.) ரூபாய் 5.20*
3. *வேலையை முடிக்க வேண்டிய காலம் ... 1 மாதம்.*

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை–2 என்ற முகவரியில் உள்ள, நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் அவர்களது அலுவலகத்தில், 25—9—1971 முதல், அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 5·20-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கிலோ " XXIX Industries other receipts) " என்ற தலைப்பில், நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், தொழில் வணிகத்துறை, சென்னை–2, அவர்களது கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, ' கால் டிபாசிட் ' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (கட்டுமாணம்) அம்பத்தூர் கோட்டம், சென்னை–2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்ட்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு பாதுகாப்புப் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்கள் ஆகியவை விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியின் டிமாண்ட் டிராப்ட்டும் கட்டுத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப் படுமானல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சி. பி. மேத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமாணப் பிரிவு.

12—9—1971.
(த. 51)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
பொதுப் பணித் துறை

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு
எண் 39

ராயபுரம் படகு கட்டும் தளத்தில் ரோலிங் ஷட்டர் இணைப்பு—அமைப்பு — 1-க்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந் தப் புள்ளிகள் கீழே கையொப் பமிட்டவரால் 19—10—1971 பிற்பகல் 1 மணி வரை வர வேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளி வரையறை கள், நிபந்தனைகள் விவரங் களைக் கீழே கையொப்பமிட்டவ ருக்கு மனுச் செய்து இலவச மாகப் பெறலாம்.

எஸ். சச்சிதானந்தம்,
பொதுக் கண்காணிப்பாளர்,
பொதுப்பணி பணிமனை கிடங்கு
(த.71)

தமிழ்நாடு அரசு
போக்குவரத்துத் துறை

சென்னை-2

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

ஹெட் லேம்ப் அசெம்பிளி அண்டு சீல்டு பீம் யூனிட்டுகள் வழங்குவதற்காக மூடி முத் திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 14—10—1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்களை, கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, அண்ணா சாலை, சென்னை-2 அவர் களிடமிருந்து இலவசமாகப் பெற லாம்.

இயக்குநர்.
(த.62)

ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட பொருள்கள் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட சாற்றுக் குறிப்பெண்ணும், தேதியும், குறியிட்ட விலை ஒப்பங்கள் (Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் எதிரே குறிப்பிட்ட தேதியில் பகல் 12-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்.	பொருள்.	சாற்றுக் குறிப்பெண்.	சாற்றுக் குறிப்பின் விலை (வரி உட்பட).	தவணைத் தேதி.
			ரூ.	
1	டின் சால்டர் 50 சதவீதம் (Tin Solder)	P. 131/71	10·00	20—10—71
2	பிளம்பிங் மெட்டல் 30 சதவீதம் (Plumbing).	P. 132/71	10·00	20—10—71
3	அலுமினியம் கேபிள் இணைப்பு சால்டர் (Solder for jointing Aluminium cable).	P. 133/71	10·00	20—10—71

ஒப்பந்தப் படிவங்கள் குறிப்பிட்ட முடிவு தேதிகளில் பிற்பகல் 3-00 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலம் தவறி வரும் விலை ஒப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேற்படிப் பொருள்களைப் பற்றி விவரங் களும் விலைப் புள்ளிகள் குறித்து அனுப்புவதற்குக் குறிப்புத் தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Copies of specification) வேண்டுவோர் பிரதி ஒன் றுக்கு மேலே குறித்த விலைக்கு பிரதி ஒன்று ரூ. 10·00 (விற்பனை வரி உள்பட) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின் அமைப்பு, 157, அண்ணா சாலை, சென்னை-2 (Accounts Officer, Madras Electricity System, 157, Anna salai, Madras-2.) என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand draft) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் அவை தவற நேரிட்டால் அதற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந் தங்களையோ, எவ்விதக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டுஅல்லது அதற்கு மேற்பட் விலை ஒப்பந்ததாரர்களுக்கிடையே ஆணையைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும், உரிமை பெற்றவ ராவார். ஒருவர் பெயரில் வாங்கப்பட்ட விலையொப்பத்தாள்களும், ஒப்புச் சாற்றுக் குறிப்பும் பிரதிகளும் மற்றொருவர் பயன்படுத்துவது செல்லாது. அரசாங்கக் கடன் பத்திரங்களோ அல்லது மின்சார வாரிய பாண்டு (Board Bonds) களோ கட்டுத் தொகைக்கு ஈடாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கட்டுத் தொகை (Earnest money Deposit) இல்லாமல், அனுப்பப்படும் விலை ஒப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஒவ்வொரு ஒப்புச் சாற்றுக் குறிப்புக்கும் கட்டுத் தொகை ரூ. 1,000 (ஒரு ஆயிரம்) கட்ட வேண்டும்.

பணச் செக்குகள் (Cheques) கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஆங்கிலத்திலுள்ள ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள்தான் (Copies of specification in English only) விற்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை மின்சார வாரியம்
சென்னை-2.

(த.59)

1—10—11

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பகுதி) சென்னை-25.

சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர்—

வேலை எண் 1.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக ஆடிட்டோரிய கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 2.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக நூலகக் கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 3.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக உலோகவியல் 5 ஆண்டு பட்டப்படிப்பிற்கான கூடுதல் கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 4.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காகச் சமையற்கூடம், சாப்பிடும் இடத்திற்கான கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்வதற்காக, தொழில்நுட்பக் கல்விப்பகுதிகளில் வேலைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர் சென்னை-25 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் முன்னிலையில் தொழில் நுட்பக்கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

	வேலை எண் 1.	வேலை எண் 2.	வேலை எண் 3.	வேலை எண் 4.
1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
2 கட்டுத் தொகை	ரூ. 5,750	ரூ. 4,500	ரூ. 5,000	ரூ. 2,500
3 மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 20 மற்றும் விற்பனை வரி.	ரூ. 20 மற்றும் விற்பனை வரி.	ரூ. 20 மற்றும் விற்பனை வரி.	ரூ. 20 மற்றும் விற்பனை வரி.
4 வேலையை முடிக்க வேண்டிய காலம்	10 மாதங்கள்.	8 மாதங்கள்.	10 மாதங்கள்.	8 மாதங்கள்.
5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடிய நாட்கள்.	4–10–1971 முதல் 16–10–1971	4–10–1971 முதல் 16–10–1971	4–10–1971 முதல் 16–10–1971	4–10–1971 முதல் 16–10–1971
6 ஒப்பந்தப் புள்ளிகளைக் கொடுக்கவேண்டிய நாள் ...	19–10–1971 மாலை 3-00 மணி.	19–10–1971 மாலை 3-00 மணி.	19–10–1971 மாலை 3-00 மணி.	19–10–1971 மாலை 3-00 மணி.
7 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கத் தகுதி வாய்ந்த பிரிவு.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P. W. Remittances—III Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், மண்டலப் பொறியியற் கல்லூரிக் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்கள் கணக்கில் செலுத்தவேண்டும். விற்பனை வரியைத் தனிச்சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII Sales-tax (b) Receipts under States Sales-tax Act—General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலானை இணைத்துக் கொடுத்தால்தான் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அலுவலக கட்டுமாணப் பகுதி வேலைகளை மேற்கொள்ள உரிய பிரிவில் பதிவுசெய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால் டிபாசிட்' வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் கட்டுத்தொகைக்காக, விற்பனை மதிப்பில், 5 சத விகிதம் குறைத்து அல்லது அடிப்படை மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகிறவர்கள் உரிய பிரிவுகளில் பெரிய கட்டுமான வேலைகளை மேற்கொள்வதில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எவ்விதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை-25.

(கு. 31)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

பொதுப் பணித்துறை

சீட்டு ஒப்பந்த அறிக்கை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 27–10–71 மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்: தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் குடும்பக்கட்டுப் பாடுத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை நிலையமும் 20 படுக்கைகள் கொண்ட பகுதிக்கான கட்டடத்தை, தாய்சேய் நல விடுதிக் கட்டடத்தின் முதல் மாடியில் கட்டுதல்.

2 ஒப்பந்த வகை ... ... மொத்தத் தொகை.

3 பிணைப்பணம்—செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும். ரூ. 3,800.

4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை. III மற்ற செலுத்துத் தொகை எனும் தலைப்பின் கீழ் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் கணக்கில் செலுத்துதல் வேண்டும். ரூ. 30·00.

5 விற்பனை வரி— அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும். ரூ. 1·05.

6 கால அளவு ... ... 8 மாதங்கள்.

7 ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். 8–10–1971.

10–9–71

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.60)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம், கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள துணை மின் நிலையங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் மொத்தத் தொகை ஒப்பந்த முறையில் கட்டுவதற்கான தனித்தனியாக முத்திரையிட்ட ஒப்பந்த விபரங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் கோரப்படுகின்றன

வரிசை எண்ணும், துணை நிலையத்தின் பெயரும் வேலையும்.	செலுத்த வேண்டிய முன்பணம் (திருப்பித் தரத்தக்கது).	தர விபர எண்.	ஒப்பந்த விபரங்கள் வரை படங்களுடன் ஒன்றின் விலை (திருப்பித் தரத்தக்கது அல்ல).	ஒப்பந்த விபர அறிக்கை அட்டவணை ஒன்றின்விலை (திருப்பித் தரத்தக்கது அல்ல).
1. மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் 110/22 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல்.	2,000 (ரூபாய்இரண்டாயிரம் மட்டும்).	ஜி. ஸி. 225	28·00 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்).	8·00 (ரூபாய் எட்டு மட்டும்).
2. கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொங்கலூர் 110/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் மற்றும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல்.	2,000 (ரூபாய்இரண்டாயிரம் மட்டும்).	ஜி.ஸி.ஸி. 226	28·00 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்).	8·00 (ரூபாய் எட்டு மட்டும்).
3. திருச்சி மாவட்டத்தில் ஆதனக்கோட்டை 66/22/11 ஆயிரம் வோல்ட் துணை நிலையத்தில் குடியிருப்பு வீடுகளும் மற்றும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல்.	2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்).	ஜி.ஸி.ஸி. 227	28·00 (ரூபாய் இருபத்தி எட்டு மட்டும்).	8·60 (ரூபாய் எட்டு மட்டும்).

தமிழ்நாடு மின்சார வாரியம், குடியிருப்புக் கட்டடங்களும் அதன் சார்பான வேலைகளும் கட்டுதல் என்பதுடன் துணை நிலையத்தின் பெயர், தர விபர எண் (ஸ்பெஸிபிகேஷன் நெ.) ஒப்பந்தக்காரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி முத்திரை செய்து, ஒப்பந்த விபரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 25—10—71 தேதி பிற்பகல் 3 மணி வரை அவரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். அன்றே பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்த விபரங்களும் வரை படங்களும் வேண்டுவோர் உரிய தொகையைச்செலுத்திக் கீழ்க்கண்டவர்களின் அலுவலகங்களில் 30—9—71 தேதிக்குமேல் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

1. கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகம்.
2. நிர்வாகப் பொறியாளர்,
   கட்டுமானம்/டிரான்ஸ்மிஷன் லைன் டிவிஷன்,
   83, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

இலாகா ஒப்பந்த பாரங்களில் எழுதாத, முன்பணம் கட்டாத, குறித்த காலத்தில் வராத ஒப்பந்த விபரங்கள் கண்டிப்பாய் நிராகரிக்கப்படும்.

கீழ்க் கையொப்பமிட்டவர் வேலைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட (அல்லது) எல்லா ஒப்பந்த விபரங்களையும் காரணம் கூறுமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவார்.

தபால் பெட்டி எண் 86,
மன்னார்புரம்,
திருச்சிராப்பள்ளி-1.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுநிர்மாண வட்டம்.

(தசு 63)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழ்க்காணும்—தேவைக்கு மேற்பட்ட/பழுதடைந்த/பழைய இயந்திரங்களையும் கருவிகளையும் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட நாட்களில் பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தனித் தனி உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும் முடிவு தேதியும் குறிப்பிட்டு, மேற்பார்வைப் பொறியாளர், மின் உற்பத்தி வட்டம், நீர் மின் நிலையங்கள், குந்தா பாலம் அஞ்சல், குந்தா-நீலகிரி என்ற அவர்களது அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

வரிசை எண்.	சாற்றுக் குறிப்பு எண்.		பொருட்களின் விவரம்.	கட்டுத் தொகை. ரூ.	இறுதி நாள்.
				1,00	14—10—71
1	கே.ஜி.சி.	xx/71–72	என்ஜின் & பம்ப் செட்	1,000	14—10—71
2	கே.ஜி.சி.	xxi/71–72	கான்கிரீட் மிக்சர்கள்	1,000	20—10—71
3	கே.ஜி.சி.	xxii/71–72	ஸ்டோன் கிரஷர்களும் கருவிகளும்	700	21—10—71
4	கே.ஜி.சி.	xxiii/71–72	ஏர் கம்ப்ரசர்கள்	400	21—10—71
5	கே.ஜி.சி.	xxiv/71–72	காஃப் டோசர்கள்	1,500	22—10—71
6	கே.ஜி.சி.	xxv/71–72	ரோடு ரோலர்	1,000	22—10—71
7	கே.ஜி.சி.	xxvi/71–72	ரஸியன் டம்ப்பர்	200	23—10—71
8	கே.ஜி.சி.	xxvii/71–72	இதர கருவிகள்-ஜாக்ஹாமர் முதலியன.	500	25—10—71
9	கே.ஜி.சி.	xxviii/71–72	பலதரப்பட்ட ஸ்கிராப் சாமான்கள்.	1,000	26—10—71
10	கே.ஜி.சி.	xxix/71–72	பழைய டிப் டிரக்குகள் ..		
11	கே.ஜி.சி.	xxx/71–72	டிப்டிரக் அங்கங்கள், டப் ஃபிரேம், ஆக்ஸில் முதலியன.	500	26—10—71

மேற்படி சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 2 (ரூபாய் இரண்டு) வீதம் தலைமைக் கணக்காயர் குந்தா நீர்மின் உற்பத்தி வட்டம் குந்தா பாலம் அஞ்சல் நீலகிரி என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ நேரிலோ செலுத்தி 25-9-71 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது,

ஒப்பந்தப் படிவங்கள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவருக்குச் சரிவரப் பட்டுவாடா செய்யப்படாமல் இருந்தால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒப்பந்தப் படிவங்கள் மாற்றிக் கொள்ளத் தக்கவை அல்ல. குறித்த காலத்திலும் தேதியிலும் வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் படிவங்களில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படியேதான் மேற்கூறிய பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சாற்றுக் குறிப்பிற்கும் குறிப்பிட்ட கட்டுத் தொகையை ஒப்பந்தப் படிவங்கள் அனுப்பும்போது கண்டிப்பாகக் கட்டியிருக்க வேண்டும். கட்டுத் தொகை கட்டாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தங்கள் மேலே குறித்துள்ள நாட்களில் மாலை 4-00 மணிக்குக் குந்தாஅலுவலகத்தில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குந்தாபாலம்,
நீலகிரி

(த. 76)

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்

(தமிழ்நாடு அரசுக்கு உரிமையானது)

'' அக்ரோ '' இல்லம், தொழிற்பேட்டை, கிண்டி,
சென்னை-32

டிராக்டர்கள் விற்பனை.

RSO 9 டிராக்டர் 20 H.P.

காற்றுல் குளிர்விக்கக்கூடியது GDR ல் செய்யப்பட்டது. வெர்சடைல் புதிய வகை யானது, பலவகை வேலைகளுக்கும் பயன்பட வல்லது—இந்திய தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. ஊராட்சிகள், நகராட்சிகள், ஆகியவை துப்புரவுப் பணியை மேற்கொள்ள எளிமையானது—விலையோ மிக மலிவு—வரி உட்பட ரூ. 11,601·70—(வேறெந்த டிராக்டரும் இவ்வளவு மலிவான விலையில் வாங்க முடியாது).

ஜெட்டார் 5511 டிராக்டர்—55 H.P. [ZETOR].

நீரால் குளிர்விக்கக்கூடியது—செக்கோஸ்லோவாகியாவில் செய்யப்பட்டது—நம்பிக்கை யான செயல்முறைகள் கொண்டது—கடினமான பயிர்த் தொழில் வேலைக்கு உகந்தது. கரும்பு பயிரிடுதல் மற்றும் சுத்திகரிப்பு வேலைகள்—விலை சுமார் ரூ. 32,000 வரி உட்பட.

T 25 டிராக்டர். 20 H.P.

காற்றுல் குளிர்விக்கக் கூடியது—USSR ல் செய்யப்பட்டது—புத்தம் புதிய மாதிரி—விலை சுமார் வரியுட்பட ரூ. 19,500.

U 650 M டிராக்டர் 65 H.P.

நீரால் குளிர்விக்கக்கூடியது—ருமேனியாவில் செய்யப்பட்டது—கட்டுக் கோப்பான செய் முறை—ஆழமான உழவு வேலைகள் மற்றும் கரும்பு பயிரிடுதல், வேலைக்கு ஏற்றது—பெருஞ் சுமைகளை 25 முதல் 30 டன் வரை இழுத்துச் செல்லவல்லது—விலை வரி உட்பட ரூ. 26,805·05—இவ்வளவு குறைந்த விலையில் 65 H.P.—ல் மற்றெந்த டிராக்டரும் வாங்க முடியாது.

ஜெட்டார் 2011 டிராக்டர் 25 H.P.

நீரால் குளிர்விக்கக்கூடியது—செக்கோஸ்லோவாகியாவில் செய்யப்பட்டது - விலை சுமார் ரூ. 24,000 வரிகள் உட்பட.

பவர் டில்லர்கள் விற்பனை.

கூபோதா பவர் டில்லர்கள் 12 H.P.

காற்றுல் குளிர்விக்கக்கூடியது.—ஜப்பானில் செய்யப்பட்டது—சிறு பண்ணைகள் மற்றும் தோட்டப் பயிர் வேலைகளுக்கு ஏற்றது—விலை சுமார் வரியுட்பட ரூ. 10,000.

" டாக்ரிகோ " டிஸ்க் ஹேரோஸ் விற்பனை.

டிஸ்க்ஹேரோஸ் (டிராக்டருடன் உபயோகப்படுத்தக்கூடியது)—மவுண்டட் டைப்—டிஸ்க்குகளுடன் U.K. விலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு—இக்கழகத்தால் விற்பனை செய்யப்படுவன

டிஸ்க்ஹேரோவ் 22'' டிஸ்க்குகள் 12 உடன் விலை ரூ. 2,450.
டிஸ்க்ஹேரோவ் 24'' டிஸ்க்குகள் 12 உடன் விலை ரூ. 2,500.
டிஸ்க்ஹேரோவ் 22'' டிஸ்க்குகள் 16 உடன் விலை ரூ. 2,950.
டிஸ்க்ஹேரோவ் 24'' டிஸ்க்குகள் 16 உடன் விலை ரூ. 3,000.

டிராக்டர் பவர் டிரில்கள்–வாடகைக்கு.

இக்கழகத்தால் வீல் டைப் டிராக்டர்கள், டிரெயிலர்கள் மற்றும் இதரக் கருவிகளுடன் உழு தொழில்கள் சம்பந்தப்பட்டவை—டிரான்ஸ்போர்டேஷன் தவிர பவர் டிரில்கள் (ரோட்டரி டிரில்கள் மற்றும் ஹேமர் டிரில்கள்) மணல், மற்றும் பாறையான இடங்களில் ஆழமான குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்காகவும் வாடகைக்கு விடப்படும். விவரங்களுக்கு அருகில் உள்ள கீழ்க்கண்ட இடங்களில் உள்ள வட்டார அலுவலகங்களில் தொடர்பு கொள்ளவும். (அல்லது சென்னை-32 கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்).

சிறு காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம், தொழிற்பேட்டை, மதுரை-7
219, நேரு சாலை, விழுப்புரம், பால்க்கீஸ் காம்பவுண்ட், சேலம்-10;
தொழிற்காலனி, திருச்சி-10.

(த. 15)

நிர்வாக இயக்குநர்

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வி இயக்குநரகம் (கட்டுமானப் பகுதி), சென்னை–25.

வேலையின் பெயர்:—சென்னை, அடையாற்றில் உள்ள படத் தொழில் நுட்ப நிலையத்திற்குத் தச்சுத் தொழிற்சாலை, கார் நிறுத்துமிடம் அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறிய வேலையைச் செய்வதற்காகத் தொழில் நுட்பக் கல்வி பகுதியில் III மற்றும் அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிட மிருந்து இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களால் 25–10–1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

1	ஒப்பந்த வடிவம் —	மொத்தத் தொகை.
2	கட்டுத் தொகை ...	ரூ. 2,500.
3	மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 20·00 (விற்பனை வரி. உட்பட)
4	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	6 மாதங்கள்.
5	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கூறிய அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கும் தேதிகள்.	11–10–1971 முதல் 23–10–1971.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P.W.D Remittances—III. Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், மண்டலப் பொறியியற் கல்லூரி கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை தனிச்சலானில் அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''XII. Sales-tax (b) Receipts under State Sales-tax Act. General Sales-tax'' என்ற தலைப்பில் செலுத்தவேண்டும். ஒப்பந்த அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களை ஒப்படைத்த பின்பே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகத்தின் கட்டுமானப் பகுதியில் உரிய பிரிவில் பதிவு செய்துகொள்ளாத ஒப்பந்தக் காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா.

கட்டுத் தொகை சலான் வடிவிலும், ஷெட்யூல்டு பாங்கு களின் ''கால் டிபாசிட்'' தொகை வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை கட்டுத்தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சதம் குறைத்தோ அல்லது அடிப்படை மதிப்புக்கோ இதில் எது குறைவாக உள்ளதோ அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். நாட் டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி மட்டுமே கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வடிவத்திலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் உரிய பிரிவில் பெரிய கட்டுமாண வேலைகளை மேற்கொள்ளுவதில் குறைந்த அளவு 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தையுமோ எவ்வித காரணமும் கூறுமல் நிராகரிக்க இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி, சென்னை.

(த.30)

ஒப்பந்தப் புள்ளி

எண் 65492/ஜ௵1/71,

நாள் 12-9-1971.

விண்ணமங்கலம் டான்சி தோல் பதனிடு தொழிற்சாலையில் உள்ள தோல் வகைகள் (Finished and crust leathers) அவை இருக்குமிடத்தில் உள்ள நிலைமையில் எடுத்துக்கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19-10-1971 காலை 11-00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும், பொதுக் கண்காணிப்பாளர், டான்சிடானரி, விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களிடம் ரூ.5·25 (ரூபாய் ஐந்து, காசுகள் இருபத்தி ஐந்து மட்டும்) ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

'' 19-10-1971-ல் Finished and crust leathers வாங்குவதற்கு '' என்று மேலே குறிப்பிட்டு ஒப்பந்தப் புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து, பொதுக் கண்காணிப்பாளர், டான்சி டானரி, விண்ணமங்கலம், மின்னூர் அஞ்சல், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களுக்கு 19-10-1971 காலை 11-00 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 19-10-1971 நண்பகல் 12-00 மணிக்கு, விண்ணமங்கலம் டான்சி பாக்டரியில் பிரிக்கப்படும்.

நிர்வாக இயக்குநர்.

(த.28)

91

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித் துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக் கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 20–10–1971 அன்று (புதன் கிழமை) பிற்பகல் 3-30 மணி (அலவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பி லும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தம் அதே தேதி யன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை ரூ.	ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம்.
வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலை கி.மீ. 24/4 (மைல் 15/2ல்) (ஹரிச்சந்திரா நதியில்) ஒரு பாலம் கட்டுதல்.	9,000	கோட்டப் பொறியாளர் (நெகிப) நாகப்பட்டினம்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள் வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ் சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), நாகப்பட்டினம் விலாசத்திலிருந்து 5–10–1971 முதல் 19–10–1971 வரையி லான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந் தனை விவரங்கள் நிர்ணய, பாரங்கள் ஷெட்யூல்கள், வரை படங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபா சிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) நாகப்பட்டினம் அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.)
திருச்சிராப்பள்ளி-12.

(த.43)

ஒப்பந்தப் புள்ளி நீட்டிப்பு

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்: வட ஆர்க்கா மாவட்டம் செங்கம் நக 38 படுக்கை வசதி உள்ள புதி அரசினர் மருத்துவ மனை கட்டு தல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப் பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு கடைசித் தேதி 6-10-1971 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது 6-10-1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப் படும். அதே நாள் மாலை 3-1 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திர கள் 20-9-1971 லிருந் 4-10-1971 வரை விற்பனைக்கு கிடைக்கும். மற்ற நிபந்தனைகளி மாற்றம் எதுவும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித் துறை,
செங்கற்பட்டு, வட ஆர்க்கா வட்டம்.

(த.38)

ஏல அறிவிப்பு.
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

அசோக் நகர் திட்டத்தி அசோகா தூண் அருகில் புதி தாகக் கட்டப்பட்டுள்ள கடை களைக் குத்தகைக்குப் பெறுப் உரிமை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் துணை-தலைமை வரு வாய்த் துறை அலுவலர் அவர் களால் 5-10-1971 அன்று காலை 10-00 மணிக்குக் கடைகள் உள்ள பகுதியில் ஏலம் விடப்படும்.

ஏலம் கோர விரும்புகிறவர் ஏலம் தொடங்குவதற்கு முன் ரூ. 50 கட்டுத் தொகை (செக் யூரிடி டெபாசிட்)கட்ட வேண்டும்

மேற்கொண்டு விவரங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மத்திய டிவிஷன் நிர்வாகப்பொறி யாளர் மற்றும் தலைமை வரு வாய்த்துறை அலுவலர் அவர் களிடமிருந்தும் பெறலாம்.

ராஜதுரை,
தலைமை வருவாய்த் துறை அலுவலர்

35, அண்ணா சாலை,
சென்னை-35,
நாள்: 9-9-1971.

(த.39)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

கீழே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மத்திய வருமானமுள்ளவர்கள், குறைந்த வருமானம் ள்ளவர்கள், மிகக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான குடியிருப்புகள் (Flats) ஒதுக்கீடு செய்ய விண்ணப்ப மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

எண்.	திட்டத்தின் பெயர், பகுதி.	தற்காலிக விலை மதிப்பீடு.	ஒதுக்கீடு முறை.	மனுச் செய்யத் தகுதியான ஆண்டு வருவாய்.
1	மத்திய வருமானக்காரர்களுக்கான (M.I.G.) குடியிருப்புக்கள் (2 படுக்கை அறை வசதி) அண்ணா நகர்—பிரிவு 2 (ஆவடி ரோடு அருகே) உடனே குடியேறுவதற்குத் தயாராகவுள்ளன. குடியிருப்புகள் எண் : கே. 44 ; எல். 47, எம். 50, எம். 51, என். 56, ஓ. 59. பி. 64.	ரூ. 23,000 முன்வைப்புத் தொகை.	முழுத் தொகைக்கு வாங்குதல்—வைப்புத் தொகை ரூ. 750+ மொத்த விலையில் கால் பங்கு. மீதித் தொகை குடியிருப்பு ஒதுக்கப்பட்ட பத்து வாரங்களில் கட்டப்பட வேண்டும்.	ரூ. 7,200-க்கும் ரூ. 18,000-க்கும் மத்தியில்.
2	ம.வ.கு. (M.I.G.) (2 படுக்கை அறை வசதி). அண்ணா நகர்—பிரிவு 3 (அரும்பாக்கம் அருகே). குடியிருப்பு எண்கள் எம். 13-3, எம். 15-2, எம். 15-4.	ரூ. 23,000 முன்வைப்புத் தொகை.	ஷை	ஷை
3	ம.வ.கு. (M.I.G.) (2 படுக்கை அறை வசதி). இந்திரா நகர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.	ரூ. 28,000 முன்வைப்புத் தொகை.	தவணை/முழுத் தொகை வழங்குதல். வைப்புத் தொகை ரூ. 750+ மொத்த விலையில் கால் பங்கு.	ஷை
4	கு.வ.கு. (L.I.G.) (ஒரு படுக்கை அறை வசதி.) டர்ன்புல்ஸ் ரோடு.	ரூ. 18,500 முன்வைப்புத் தொகை.	தவணை/முழுத்தொகை ரூ. 500+ விலையில் கால் பங்கு.	ரூ.7,200-க்கு அதிகம் இருக்கக் கூடாது.
5	மிகக் குறைந்த வ.கு. (Small L.I.G.) பெசந்த் நகர், கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.	ரூ. 14,000 முன்வைப்புத் தொகை.	தவணை/முழுத்தொகை ரூ. 250+ விலையில் கால் பங்கு.	ஷை
6	மிகக் கு.வ.கு. கலைஞர் கருணாநிதி நகர். (கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.)	ரூ. 14,000.	தவணை/முழுத்தொகை ரூ. 250+ விலையில் கால் பங்கு.	ஷை

தவணை மற்றும் மொத்தத் தொகைக்கு வாங்குதல் என்று குறிப்பிடப்பட்ட குடியிருப்பு களில், மொத்தத் தொகை கட்டுபவர்களுக்கே ஒதுக்கீட்டில் முக்கியத்துவம் தரப்படும்.

நந்தனத்திலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலகத்திலுள்ள காசுப் பிரிவில் ரூ. 5 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 முதல் நண்பகல் 2-30 வரை படிவத்தினைப் பெறலாம். அந்தக் குறிப்பிட்ட படிவத்தில் மனுதாரர்கள் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் மனுக்கள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி 1971 அக்டோபர் 25 ஆகும்.

ஏ. கிட்சனன்,
செயலாளர்.

36, அண்ணா சாலை,
சென்னை-35.

(த. 18)

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்கண்ட வேலை கஞக்காக உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிடப்பட்டு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிட மிருந்து நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், டிவிஷன் IV அவர்களால், அசோக் நகர், (அசோகா தூண் அருகில்), சென்னை-33 அவரது அலுவலகத்தில் 6-10-1971 மாலை 3-00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வரிசை எண்.	வேலையின் பெயர்.	வேலையின் சுமார் மதிப்பு ரூபாய்.	ஒப்பந்த வடிவம் கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (இது திருப்பித் தரப்பட மாட்டாது).	வேலையை முடிக்க வேண்டிய காலம்.
I	ஒன்றில் 24 (பி 1 & பி. 2) இரண்டு பிளாக்குகள் ஒன்றில் 32 (ஏ1) ஒரு பிளாக் ஓர் அறை நான்கு தள குடியிருப்புகளை நுங்கம்பாக்கம் மேயர் சம்பந்தம் நகரில் டைப் டிசைன் 217/70 படி கட்டுதல்.	4,43,800	L.S. 6,600	ரூ. 15 அத்துடன் விற்பனை வரி ஒவ்வொன்றிற்கும்.	எட்டு மாதங்கள் ஒவ்வொன்றிற்கும்.
II	ஒன்றில் 32, நான்கு பிளாக்குகள் (ஏ2, ஏ3, ஏ4, ஏ5) ஓர் அறை, நான்கு தள குடியிருப்புகளை, நுங்கம்பாக்கம் மேயர் சம்பந்தம் நகரில் டைப் டிசைன் 217/70 படி கட்டுதல்.	7,10,000	L. S. 10,650	,,	,,
III	ஒன்றில் 32, நான்கு பிளாக்குகள் (ஏ6, ஏ7, ஏ8, ஏ9) ஓர் அறை நான்கு தள குடியிருப்புகளை நுங்கம்பாக்கம் மேயர் சம்பந்தம் நகரில் டைப் டிசைன் 217/70 படி கட்டுதல்.	7,10,000	L. S. 10,650	,,	,,
IV	ஒன்றில் 18, நான்கு பிளாக்குகள் (பி-1, பி-2, பி-3, பி-4) ஓர் அறை மூன்று தள குடியிருப்புகளை டைப் டிசைன் 7-71 படி ராமகாமத்புரத்தில் ராமகாமத்புரம் திட்டத்தில் கட்டுதல்.	4,51,400	L. S. 6,780	,,	,,
V	ஒன்றில் 32, இரண்டு பிளாக்குகள் 1 டைப், ஓர் அறை நான்கு தள குடியிருப்புகள் டி. எஸ். எண் 4700, டைப் டிசைன் 7-71 படி, தியாகராயநகர் ராமகிருஷ்ணாபுரம் திட்டம் பகுதி I (கோடம்பாக்கம் ரயில் நிலையத்துக்கு எதிர்ப்புறம்) கட்டுதல்.	3,27,700	L. S. 4,920	,,	,,
VI	ஒன்றில் 32, இரண்டு பிளாக்குகள், ஓர் அறை, நான்கு தள குடியிருப்புகள், வரைபடம் எண் டைப் டிசைன் 7-71 படி தியாகராயநகர் ராமகிருஷ்ணா மிஷன் நிலத்தில்/பிரினின் டி. எஸ். எண் 7993 (வடக்கு உஸ்மான் ரோடு) கட்டுதல்.	3,27,700	L. S. 4,900	,,	,,

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், (குடிசைப் பகுதி மாற்று வாரியம்) டிவிஷன் IV அசோக் நகர், சென்னை-33-ல் 23-9-1971-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் முற்பகல் 11 மணியிலிருந்து முற்பகல் 3 மணி வரை பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அத்துடன் விற்பனை வரி செலுத்தியதற்குச் சலான் ரசீது காட்டி அவற்றைப் பெறலாம்.

எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க உரிமை உண்டு.

எஸ். மாரியப்பன்,
நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அசோக் நகர், சென்னை-33
டிவிஷன் எண் IV.

அசோக் நகர், சென்னை-33.
8-9-1971.

(த-10)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 16—11—1971 அன்று மாலை 5-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

தொழிற் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு தொழில் சார் நிலைப்பள்ளி ஆகியவற்றில், விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சிப் போதகருக்கான தற்காலிகப் பதவிகள்—4 நியமனங்கள்.

குறிப்பு : நான்கு நியமனங்களிலும் ஒன்று பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள நியமனங்களுக்குப் பெண்களும் மனுச் செய்யத் தகுதிபடைத்தவர்களாவர்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 275—10—375—15—450.

வயது : 1—7—1971-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தகுதி : 1. பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தில் உடற் கல்வி டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

உடற்கல்வி (மேல்நிலை) ஆசிரியர் சான்றிதழ் பெற்று ஓர் ஆண்டுக் காலத்திற்குக் குறையாமல் கற்பித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேற்பட்ட பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. இதர தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய திருமணமாகாத புதல்வர்கள், அவர்களின் புதல்விகள், மற்றும் தேசிய மாணவர் படையில் 1—1—1962-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார் ஜெண்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, வீமானப்படை ஆகியவற்றிலிருந்து படை கலைக்கப்பட்டதால் திரும்பியவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களே யானாலும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடி பெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களாக இருப்பினும், வயது வரம்பு உட்படத் தகுதி கள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 சென்டி மீட்டர் நீளமுள்ள 35 காசு சுய விலாசமிட்ட ,, நூல் அஞ்சல் தலை ஒட்டிய அஞ்சல் ,, என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 44)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

நில நீர் இயக்குநர் அலுவலகம்

ஒப்பந்தப்புள்ளி—காலநீடிப்பு—அறிக்கை.

வேலையின் பெயர்—நிலநீர் இயக்குநர் அலுவலகத் திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 30—9—1971 அன்று வரை பெறுவதாக இருந்த ஒப்பந்தப்புள்ளிகள், 29—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற் கூறிய அலுவலகத்தில் 29—10—1971 அன்று மாலை 4-00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், மேற்கூறிய அலுவலகத்தில், அலு வலக நேரங்களில், 22—10—1971 வரை கிடைக்கும். மற்ற நிபந்தனைகள் எதுவும் மாற்றப்படவில்லை.

எண்: உள்வேலை.

1. பெர்கூசன் ரிக்குகளுக்கு (Rigs.) சிறப்புக்கருவிகள் வழங்கல்.
2. (1) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (துண்டுகள் மற்றும் துணைத் திறப்பான்கள்) வழங்கல்.
   (2) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (மட் பம்பு மற்றும் குழாய் வெட்டும் கருவி) வழங்கல்.
   (3) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (டவுன்தி ஹோல் ஹேமர்ஸ் பிட்டுகள்) வழங்கல்.
3. கேசிங் பைப்புகள், துணைப் பொருள்கள் வழங்கல்.
4. ஹைடிராலிக் ஜாக் பம்பு, ஜாக் வழங்கல்.
5. ஜியோபிசிகல் தளவாடங்கள் வழங்கல்.
6. ஜியோ கெமிகல் தளவாடங்கள் வழங்கல்.
7. போட்டோ ஜியாலஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
8. ஹைட்ரோலாஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
9. ஹைடிரோ மீட்டிரியாலஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
10. ஹைடிரோ ஜியாலாஜிகல் தளவாடங்கள் வழங்கல்.
11. வரை தளவாடங்களும் புகைப்படக் கருவியும் வழங்கல்.

இயக்குநர்,
நிலநீர்.

(த.82)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

அறிவிப்பு எண் : 14166/டி8/72. நாள் :17—9—1971

சென்னை, நேப்பியர் பாலத்திற்குக் கீழே கூவம் ஆற்றின் வலது கரையில் நீச்சல் குளம், டைவிங் குளம் ஆகியவைகளில் இயக்கி வைத்தல் உள்பட, எல்லா உறுப்புகள், துணை உறுப்பு களுடன் நீர் வடிகட்டு இயந்திரம் வழங்கல், நிர்மாண வேலைக் காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் உரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை வீரா ணம் திட்ட வட்டம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால், பொதுப் பணித்துறையில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே 2.

கட்டுத் தொகை—ரூ. 5,000

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10-இத்துடன் நடைமுறையில் உள்ள விற்பனை வரி.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—4 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்— 10—10—1971 லிருந்து 21—10—1971 வரை.

ஒப்பந்தப்புள்ளித் தேதி—26—10—1971 மாலை 3-00 மணி வரை.

நிபந்தனைகள், வரையறைகள், மற்றும் இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டிருப்பவரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்.
TWS & DB
வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த.72)

ஒப்பந்தப் புள்ளி

திருச்சி வீட்டு வசதி நிலையம்

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடையது)

ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 43/71-72.

திருச்சி, காஜாமலைக் காலனியில், கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு, 27—10—1971 அன்று மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்குமாறு தனித்தனி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	வேலையின் தோராய மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.
	ரூபாய்.	ரூபாய்.	
டி.டி.எண் 151/70-ன் படி, மூன்று மாடி (1-ல் 12) வாடகைப் பிளாட்டுகள் கட்டுதல்.	1,28,200	1,930	ரூபாய் 10 விற்பனை வரி $3\frac{1}{2}$ சத வீதம்.
டி.எச்யூ.எண் 9/71-ன் படி மூன்று மாடி (1-ல் 12) வாடகைப் பிளாட்டுகள் கட்டுதல்.	77,000	1,555	ஷை
ஷை	77,000	1,555	ஷை

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, கோட்டக் கணக்காளர் அவர்களிடமிருந்து, எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-00 மணிக்கும் மாலை 4-00 மணிக்கும் இடையில் மேற் கூறப்பட்ட தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அஞ்சல் மூலமாக அனுப்பப்படவேண்டுமானால், அஞ்சல் கட்டணத்தையும் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளி அட்டவணைகள் 27—9—1971 முதல் 26—10—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். வந்து சேர்ந்த ஒப்பந்தப் புள்ளிகள், நிருவாகப் பொறியாளர், திருச்சி வீட்டுவசதி நிலையம் அவர்களால் 27—10—1971 அன்று, வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1,
14—9—1971.

ஆர். வெங்கடாச்சார்.
நிருவாகப் பொறியாளர் மற்றும் நிருவாக அலுவலர்.

(த-67)

மின் இணைப்புச் செய்ய....

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் மாநிலத் துறைமுக அலுவலர், சென்னை அவர்களால், சென்னை-1, முதல் கடற்கரைச் சாலை, பழைய உயர் நீதி மன்ற கட்டடத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் 15—10—71 மாலை 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

'' இராமேஸ்வரம் துறைமுகத்தில் பயணிகள் நிலையத்திற்கு மின் இணைப்பு செய்தல்'

ஒப்பந்தப் பத்திரம் வேண்டுவோர் செட் ஒன்றுக்கு ரூ. 7·25 (ரூபாய் ஏழு, காசு இருபத்து ஐந்து மட்டும்) (திருப்பி அளிக்கப் பட மாட்டாது) செலுத்தி மாநிலத் துறைமுக அலுவலர், சென்னை அவர்களுக்கு மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி வேலைக்கு முன் வைப்புத் தொகை மற்றும் செக்யூரிட்டி டிபாசிட் ஒவ்வொன்றிற்கும் ரூ. 400 (ரூபாய் நானூறு மட்டும்). ஒப்பந்தப் பத்திரங்கள் 12—10—71 வரை மட்டுமே வழங்கப்படும்.

எல். ஜி. ஹர்தாஸ்,

மாநில துறைமுக அலுவலர்.

(த. 88)

கால்நடைத் தீவனம்.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் 11—10—71 அன்று மாலை 4-00 மணி வரையில் மேற்படி பண்ணைக்கு இரண்டு மாதத்திற்கான கால்நடைத் தீவனங்களுக்கு உரிய முத்திரையிடப்பட்ட கொட்டேஷன் வரவேற்கப்படுகின்றன. முத்திரையிடப்பட்ட கொட்டேஷன்கள் 11—10—71 அன்று மாலை 4-00 மணிக்கு மேல் குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளரால் திறக்கப்படும்.

நிபந்தனை முதலானவை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

கண்காணிப்பாளர்,

மாவட்ட கால்நடைப் பண்ணை,
ஓசூர்.

(த. 86)

தமிழ்நாடு அரசு,

தொழில் வணிகத் துறை

எண் 170 66/டிபி/டி6/கியூ/71.

நாள் 16—9—1971

நார்த் லேட் வயர்டு கிளாசஸ் 6 எம். எம். (¼") கனத்தில் வழங்குவதற்காக, தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர் (சி) தொழில்துறை அவர்களால்தமது அலுவலகம் 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2-ல் 4—10—1971 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் மாலை 3-10 மணிக்கும் பிரிக்கப்படும்.

தேவைப்படும் பொருள் அளவு சுமார் : 830 சதுர மீ.

கட்டுத் தொகை : ரூ. 625.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (சி) வடக்கு டிவிஷன் தொழில் வணிகத் துறை, தொழில் பேட்டை, கிண்டி, சென்னை-32-ல் 20—9—1971 லிருந்து அலுவலக நாட்களில் காலை 10-30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

சி. பி. மாத்யூ,

மேற்பார்வைப் பொறியாளர்,
நிர்மாணப் பிரிவு.

16—9—71

(த.64)

தமிழ்நாடு சிறு தொழில் கழகம்.

35—2, உட்ஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2.

ஆர்.சி. எண் 15636—டி3—71,
தேதி : 1—9—1971

கும்பகோணம், டான்சி இரும்பு-பித்தளைக் கூடத்திலுள்ள F-5, & F-8. Man Section's வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–10–1971 மாலை 3 மணிவரையில் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களும் பிற தகவல்களும் இந்த அலுவலகத்தில் ரூ. 5·25-ஐக் கொடுத்தோ அல்லது கணக்கு அலுவலர் (காசு), தமிழ்நாடு சிறு தொழிற் கழகம், 35—2 உட்ஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளியின் மீது F-5, & F-8. Man Section's 15—10—1971 விலைக்கு வாங்க என்று குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட உறையிட்டு, நிருவாக இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழிற் கழகம், 35—2, உட்ஸ் ரோடு, சென்னை-2 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் 15—10—1971 மாலை 4 மணிக்குப் பிரிக்கப்படும்.

நிருவாக இயக்குநர்

(த. 9)—

தமிழ்நாடு அரசு.

குடிநீர் வடிகால் வாரியம்.

சிட்டு ஒப்பந்தப் புள்ளி.

அறிவிப்பு எண் : 317/டி2/71 டி2.

நாள் :15—9—1971

இறக்குமதியான உருக்கை, சென்னைத் துறைமுகத்திலிருந்து தென் ஆர்க்காடு மாவட்டம் பண்ருட்டி அருகே பணிக்குப்பம் வீராணம் திட்ட பாக்டரிப் பகுதிக்குக் கொண்டு செல்லும் வேலைக்காகத் தமிழ்நாடு. ஆளுநர் சார்பிலும்அவர் பொருட்டும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (உரிய வடிவங்களில்), மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை வீராணம் திட்ட சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித் துறையில் செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிய பிரிவினரிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே 2

கட்டுத் தொகை—ரூ. 5,500.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10-இத்துடன் விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்—5—10—1971லிருந்து 25—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதி—30—10—1971

நிபந்தனைகள், இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

T.W.S. & D.B.

வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த,57)

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித் துறை

சிட்டு ஒப்பந்த அறிக்கை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 15—10—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும்.

1. வேலையின் பெயர்—தஞ்சாவூரில் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கான மேல்நிலைப்பட்டப் படிப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்.

2. ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

3. பிணைப்பணம்—ரூ. 4,300

4. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை : ரூ 30.

அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற்பொறியாளர் கல்லணைக்கால்வாய் தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.

5. விற்பனை வரி: ரூ. 1·05

அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் விற்பனை வரி : '' பி '' பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.

6. கால அளவு—ஒன்பது மாதங்கள்.

7. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள் 24—9—1971

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர்.
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.36)

6 சத தமிழ்நாடு மின்சார வாரியக் கடன், 1983.

(2-ம் தொடர்) ரூபாய் 600 இலட்சத்திற்கு.

(வட்டி வழங்குதலும், அசலைத் திருப்பி அளித்தலும் தமிழ்நாடு அரசால் உறுதிமொழி அளிக் கப்பட்டுள்ளது).

கடன் பத்திரங்கள் இந்திய ட்ரஸ்ட் சட்டத்தின் கீழ், நம் பிக்கைக்குரிய பத்திரங்களாகும். மேலும், இவைகள் இன்ஷ்யூ ரன்ஸ் சட்டம், பேங்கிங் கம்பெனிகள் சட்டம் ஆகியவை களைப் பொறுத்தவரையில் அனு மதிக்கப்பட்ட பத்திரங்களா கும். இப் பத்திரங்கள் இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934, பிரிவு 17 (4) (ஏ)-ன் கீழ் முன் பணம் பெறும் காரணத் திற்கு அரசுப் பத்திரங்களைப் போலவே பாவிக்கப்படும்.

வெளியீட்டு விலை : ரூபாய் 99·75 சதவிகிதம்.

1983ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் மீட்கக் கூடியவை.

ரொக்கமாகவோ, அல்லது காசோலையாகவோ அல்லது 1971-ஆம் ஆண்டு 4½ சத சென்னை மாநில மின்சார வாரிய பாண்டு ஆகவோ, 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் முதல் ஏற்றுக் கொள்ளப் படும். மொத்தப் பங்குத் தொகை சுமார் ரூ. 600 இலட்சம் ஆகியவுடன், முன்னறிவிப்பு இன்றிக் கடன் பட்டியல் நிறுத் தப்படும். எப்படியும் பங்குத் தொகை பெறுவது 1971 அக்டோபர் 21-ஆம் நாள் அலு வல் நேர முடிவுக்குள் நிறுத்தப் படும்.

கடன் மனுக்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா, ஐத ராபாத் ஆகிய இடங்களி லுள்ள இந்திய ஸ்டேட் பாங் கின் உள்ளூர் தலைமை அலுவல கங்களிலும், தமிழ் நாட்டி லுள்ள ஸ்டேட் பாங்கின் கிளை களிலும் ஏற்றுக் கொள்ளப் படும்.

கடன் பத்திர வெளியீட்டின் நிபந்தனைகள் சம்பந்தப் பட்ட அறிவிப்பின் நகல்களும் மனு வடிவங்களும், மேலே குறிப் பிட்டுள்ள எல்லா அலுவலகங் களிலும், தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தமிழ் நாடு மின்சார வாரியத்தின் எல்லா அலுவலகங்களிலும் கிடைக்கும்.

சி. ஜி. ரங்கபாஷ்யம்,
தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்.

(த. 40)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி நீட்டிப்பு.

பொருள்: பல்வேறு குடிநீர்த் திட்டங்க ளுக்கான கிணறுகள் அமைத்தல்.

இதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித் தேதி 20—10—1971 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது. 20—10—1971 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும்; அன்று மாலை 3-30 மணிக்குச் சம்பந்தப் பட்ட வட்டங்களைச் சேர்ந்த மேற்பார்வைப் பொறியாளர் களால் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) அல்லது அவரால் அனுப்பப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந் தப் புள்ளிதாரர்கள் முன்னிலை யில் பிரிக்கப்படும்.

பிற நிபந்தனைகள் அனைத்தும் ஏற்கனவே வெளியிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பி லின்று மாறுபடவில்லை.

தலைமைப் பொறியாளர்
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் மற்றும் நீர்த் திட்டப் பணிகள்.

(த 84)

ஏல விற்பனை

தமிழ் நாடு அரசு

வேளாண்மைத் துறை.

ஒரு செவர்லட் லாரி (எம்.எஸ்.சி. 9656) 1945 மாடல் 11-10-1971 அன்று மாலை 3 மணிக்கு உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) அவர் களால் 34, தொரபாடி ரோடு, வேலூர்-2ல் பகிரங்க ஏலம் மூலம் விற்கப்படும்.

அலுவலக நாட்களில் அலுவல் நேரத்தில் மேற்கண்ட இடத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி, ஏலத் திலிருந்து பின்வாங்கவோ, ஒத்தி வைக்கவோ, ஏலத்தை ரத்து செய்யவோ, வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

மேற்கொண்டு விவரங்களையும் விற்பனை நிபந்தனைகளையும், உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு), வேலூர்-2 அவர்களிட மிருந்து பெறலாம்.

வேளாண்மைத் துறை இயக்குநர்.
சென்னை-5.

ஏல விற்பனை

பயனற்றதாக ஒதுக்கப்பட்ட ஜீப் எண்: எம்.எஸ்.எக்ஸ்.: 2768 பத்மநாபபுரம் வருவாய் கோட்ட அலுவலர் (ஆர்.டி.ஓ.) அலுவல கத்தில் 15—10—1971 அன்று 11 மணிக்குப் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஜீப் பற்றிய விவரம் பின்வருமாறு :

1. இயந்திர எண் 4 ஜே. 201012.
2. சேசிஸ் எண். 45536.
3. தயாரிப்பு ஆண்டு 1958.
4. மாதிரி சி.ஜே. 3, வில்லீஸ்-58.
5. ஓடிய மைல்கள் 17,00,45

வருவாய்க் கோட்ட அலுவலர்,
பத்மநாபபுரம்.

(த 83)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிட மிருந்து குறிப்பிட்ட படிவத்திலுள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளரால் (ம. ந. வாழ்வு பொறியியல்) 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2-ல் உள்ள அவரது அலுவலகத்தில் 13—10—1971 புதன்கிழமை மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகிறது. அவை அன்று மாலை 3-30 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்	புஞ்சை புகலூர் குடிநீர் வழங்கு திட்டம்—முதல் நிலை—4 லட்சம் லிட்டர் கொள்ளள வுள்ள மேல்மட்ட நீர்த் தேக்கம் கட்டுவதற்கு.
ஒப்பந்த முறை	மொத்தத் தொகை.
முன்வைப்புத் தொகை ..	ரூ. 2,900 (இரண்டா யிரத்துத் தொள்ளா யிரம் மட்டும்).
வேலை முடிக்க வேண்டிய காலம்:	ஆறு மாதம்.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை	ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட);

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணிப் பொறியியல் பிரிவு, பி-15, தில்லை நகர் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் கிடைக்கும். (8—10—1971 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி வரை.)

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(ம.ந.வா.பொ.), மதுரை—2.

(த. 11)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மக்கள் நல் வாழ்வுப் பொறியியல்துறை, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசு துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறி யாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் எண் 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 20—10—1971 (புதன்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் ..	மதுரை புதைச் சாக்கடைத் திட்டம் வைகை—ஆற்றுக்கு வடக்கே—முதல் கட்டம்—700 எம்.எம். நடு விட்டமுள்ள ஜி. ஐ. பைப்புகள், ஸ்பெஷல்கள் பம்பிங் மெயினுக்காக எல். எஸ். டு எல்.எஸ்.—7,850.
ஒப்பந்த வடிவம் ..	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை ..	ரூ. 4,500 (ரூபாய் நாலாயிரத்து ஐநூறு மட்டும்).

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகா தாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒன்பது மாதங்கள்.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்தி சாலை, மதுரை என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், அவர்களிட மிருந்து 16—10—1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கே. கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(ம.ந.வா.பொ.), மதுரை-2.

13—9—1971.

(த. 69)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

கொரட்டூர் கோட்டம்

கே. ஆர். 6/3072/71 நாள் 9—9—1971.

கொரட்டூர் புறநகர், 1-வது கட்ட திட்ட வேலைகளில் கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 8—10—71 மாலை 3 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

தொடர் எண்.	வேலையின் விவரம்.	வேலையின் மதிப்பு சுமார் ரூபாய்களில்.	கட்டுத் தொகை ரூபாய்.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை (இது திருப்பித் தரப்பட மாட்டாது).
1	(அ) கொரட்டூர் முதல் கட்ட திட்டத்தில் குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீடுகள். 1-வது தொகுதி, 8 வீடுகள் தனித் தனி முறையில் கட்டுதல்—உள் வசதிகள் உள்பட (டீ.டி. 28(i)/71; டீ.டி. 28(ii)/71; டீ.டி. 28 (iii) /71 ; டீ.டி. 28AI/71 இவை ஒவ்வொன்றின்படி இரண்டு வீதம் வீடுகள் கே. ஆர். 6/1213-ஏ/71 குருப் I.	91,900	1,380	10+வி.வ.
	(ஆ) ஃபைல் எண். கே. ஆர். 6/1213-பி/71, குருப் II.	91,900	1,380	10+வி.வ.
	(இ) கே. ஆர். 6/1213-சி/71 குருப் III ..	91,900	1,380	10+வி.வ.
	(ஈ) கே. ஆர். 6/1213-டி/71 குருப் IV ..	91,900	1,380	10+வி.வ.
2	கு. வ. பி. வீடுகள் தொகுதி 2 ஒன்றில் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 10 பிளாக்குகள் கட்டுதல். ஃபைல் எண். கே. ஆர். 6/1837/71.	7,00,000	10,500	15+வி.வ.
3	கு. வ. பி. வீடுகள் தொகுதி 4 ஒன்றின் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 10 பிளாக்குகள் கட்டுதல் கே. ஆர். 6/3079/71.	7,00,000	10,500	15+வி.வ.
4	(அ) நடுத்தர வருமானப் பிரிவினர் வீடு தொகுதி 1 ந. வ. பி. தனித் தனி வீடுகள் 7 கட்டுதல் உள் வசதிகள் செய்வது உள்பட. டீ.டி.5/70 படி 2 ; டீ.டி. 6/70 படி 2 ; டீ.டி. 7/70 படி 3 ; குருப் 1 கே. ஆர். 6/1214-ஏ/71 கீழ்.	1,35,350	2,030	10+வி.வ.
	(ஆ) ந. வ. பி. வீடுகள் 7 கட்டுதல் உள் வசதிகள் உள்பட. டீ.டி. 5/70 படி 2 ; டீ.டி. 6/70 படி 3 ; டீ.டி. 7/70 படி 2 ; ...... 1./71.	1,30,500	1,960	10+வி.வ.

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம்

கட்டுமானங்கள் பிரிவு, கிண்டி, சென்னை-25

வேலையின் பெயர்

வேலை எண் 1 .. மதுரை-தேனி சாலையில் உள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தில், மதுரைப் பல்கலைக் கழகத்தின் 2 பேராசிரியர்களுக்கும், 2 விரிவுரையாளர்களுக்கும், 9 கடைநிலைப்பணி ஊழியர்களுக்கும் இருப்பிடம் (Quarters) கட்டுதல்.

வேலை எண் 2 ... மதுரை-தேனி சாலையில் உள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் கட்டடம் (Humanities Block) கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்குறிப்பிட்ட வேலைகளை மேற்கொள்வதற்காக, தொழில் நுட்பக் கல்வி கோட்டத்தில் வேலைகளைச் செய்வதற்காக உரிய வகுப்பில் பதிவு செய்து கொண்டுள்ள வகுப்பு-2ம் அதற்கு மேற்பட்ட வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 11—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

	வேலை எண் 1.	வேலை எண் 2.
1. ஒப்பந்த வடிவம் ..	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
	ரூ.	ரூ.
2. கட்டுத் தொகை ...	7,500	10,500
3. மாதிரி வரை படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	20·00+ விற்பனை வரி.	20·00+ விற்பனை வரி.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம்.	8 மாதங்கள்.	10 மாதங்கள்
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கூறிய அலுவலகத்தில், அலுவல் நேரத்தில் கிடைக்கும் தேதிகள்.	1—10—71 முதல் 8—10—71 வரை.	1—10—71 முதல் 8—10—71 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " P. W. Remittances III other Remittances " என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பல்கலைக்கழகக் கட்டடங்கள் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை தனிச் சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " XII Sales Tax (b) Receipt under States Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்த அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களை இணைத்து ஒப்படைத்த பின்பே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகக் கட்டுமானப் பிரிவில், உரிய வகுப்பில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலும், ஷெட்யூல்டு வங்கிகளின் ' கால்டிபாசிட் ' ரசீது வடிவிலும், ஏற்றுக் கொள்ளப் படும். அரசு புரோ நோட்டுகள் மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சதம் குறைத்தோ அல்லது அடிப்படை மதிப்புக்கோ, இதில் எது குறைவாக உள்ளதோ அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியின் காரண்டி மட்டுமே கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வடிவத்திலும் கட்டுத்தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் உரிய வகுப்பில் பெரிய கட்டுமான வேலைகளைச் செய்வதில் குறைந்த அளவு 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையுமோ எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரிக்க தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை.

(த. 13)

	(இ) ந. வ. பி. தனித்தனி வீடுகள் 7 கட்டுதல் உள் வசதிகள் செய்வது உள்பட. டைடி. 5/70 படி 3 ; டைடி. 6/70 படி 2 ; டைடி. 7/70 படி 2 ; குரூப் 3 கே. ஆர். 6/1214–சி/71.	1,28,600	1,930	10+வி.வ.
5	ந. வ. பி. வீடுகள் தொகுதி 2 ஒன்றில் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 7, கே. ஆர். 6/1838/71.	6,02,000	9,030	15+வி.வ.
6	ந. வ. பி. வீடுகள் தொகுதி 4 ந. வ. பி. வீடுகள் தனித்தனி வீடுகள் 23 கட்டுதல்.	4,94,200	7,420	15+வி.வ.
7	ந. வ. பி. வீடுகள் தொகுதி 4 ஒன்றில் நான்கு உள்ள இரண்டு தளங்கள் அடுக்கு வீடுகள் 7 பிளாக்குகள் கட்டுதல் கே. ஆர். 6/3078/71.	6,02,000	9,030	15+வி.வ.
8	பேஸ்மெண்ட்டுக்கு மேல் சமுதாயக் கூடம் கட்டுதல் ஃபைல் எண் கே. ஆர். 6/3489/71.	1,16,200	1,745	10+வி.வ.
9	தொழில் வினைஞர் மனைத் திட்டம் தொகுதி 1ன் கீழ் தனித்தனி வீடுகள் கட்டுதல் கே. ஆர். 6/3160/71.	5,54,400	8,320	15+வி.வ.
10	தொழில் வினைஞர் மனைத் திட்டம் தொகுதி 2ன் கீழ் 74 தனித்தனி வீடுகள் கட்டுதல் கே. ஆர். 6/3159/71.	5,69,800	8,550	15+வி.வ.

வரைபடங்கள், ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் ஆகியவைகளை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கொரட்டூர் வட்டம், அண்ணா நகர், சென்னை-40-ல் குறிப்பிட்ட கட்டணத் தொகையை சலான் மூலம் செலுத்தி 1—10—71லிருந்து பெறலாம். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 8—10—71 மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

(த. 54)

டி. வி. காளியப்பன்,
நிர்வாகப் பொறியாளர் (கே).

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்.

(அறிஞர் அண்ணா நகர் பிரிவு)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளி அனுப்புவரின் பெயரும் உறையின் மீது எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அடியில் கையெழுத்திட்டவரால் 6—10—1971 மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலையில் 3-05 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் உத்தேச மதிப்பீடு.	முன் வைப் புத்தொகை.	ஒப்பந்த முறை.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை (திருப்பித்தரப்படமாட்டாது.)
	ரூ.	ரூ.		
1 அறிஞர் அண்ணா நகரில் ஒட்டேரி நுல்லா 3-வது பிரிவு பகுதியில் இருபுறமும் சிமெண்ட் காங்கிரீட் ரிவெட்மெண்ட் போடுவதற்கு (Reach I ch 3,000 to 5,000').	1,16,090	1,750	முழுத் தொகை.	ரூ. 10·00+ விற்பனை வரியும்.
2 தகவல் எண் : AN 2/56/71 (Reach II-Ch 5,000 to 7,000') report no. AN/2/56/71.	1,09,520	1,645	முழுத் தொகை.	10·00+ விற்பனை வரியும்.
3. (Reach III-Ch 7,000 to 9000') report no. AN/2/56/71.	1,12,640	1,690	முழுத் தொகை.	10·00+ விற்பனை வரியும்.

(த. 20)

நிர்வாகப் பொறி[illegible]

ஒப்பந்தப் புள்ளி

குழித்துறை நகராட்சி

கீழ்க்கண்ட பணிகளைச் செய்வதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1971-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு மேற்படாமல் ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அதே தேதியன்று பிற்பகல் 4-30 மணிக்குத் திறக்கப்படும். குறிப்பிட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் முன்வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்த புள்ளிகளும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். இதர விபரங்கள் அலுவலக நாட்களில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

வரிசை எண்ணும், பணியின் விபரமும்.	முன் வைப்புத் தொகை.	ஒப்பந்தப் படிவம் விலை (விற்பனை வரி உள்பட).	வேலை முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ.	
1. பெருந் தெருவிற்கு மறுமுறை தார்தளம் அமைக்க (Recoating).	200	5·18	2 மாதம்.
2. இடத் தெருவிற்கு மறு முறை தார் தளம் அமைக்க (Recoating).	100	2·07	2 மாதம்.
3. பி.பி.எம். பம்பிற்கு சமீபம் செல்லும் தெருவிற்கு தார் தளம் அமைக்க (Block Tapping).	90	2·07	2 மாதம்.
[illegible] கொடுங்குளம்-கெல்லக் குளம் தெருவில் உதவு சுவர் கட்ட. நகராட்சி.	90	2·07	2 மாதம்.
[illegible] நிலையத்தின் பக்கம் செல்லும் பாதையின் ஓரத்தில் பக்கச் சுவர் கட்ட.	55	2·07	2 மாதம்.
[illegible] மார்த்தாண்டம் ஆர். சி. தெருவில் உதவு சுவர் கட்ட (Re-coating wall).	90	2·07	2 மாதம்.
[illegible] மார்த்தாண்டம் தின சரிச் சந்தையில் உள்ள கட்டடங்களைப் பராமரிப்புச் செய்ய.	40	2·07	2 மாதம்

[illegible]த்துறை,
[illegible]—9—71.
(த. 87)

T. P. கோபு,
ஆணையர்.

107

ஒப்பந்தப் புள்ளி

எண். 38

தமிழ்நாடு அரசு

(பொதுப்பணி—பணிமனை & பண்டகசாலை)

பொதுப்பணித்துறை

மின்விசையால் இயங்கும் ஆழ் கிணறு பம்பு செட் ஒன்று வழங்குவதற்கு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத்திட்டவரால் 13—10—1971 நண்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகிறது.

இதற்கான ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் நிபந்தனைகள் ஆகியவற்றை அடியில் கையெழுத்திட்டவரின் நேர்முக உதவியாளரிடம் மனுச் செய்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சச்சிதானந்தம்,
பொதுக் கண்காணிப்பாளர்,
பொதுப்பணிமனை&பண்டகசாலை.

(த. 85)

ஒப்பந்தப் புள்ளி

தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம், விருத்தாசலம், திண்டிவனம், கோட்டாட்சியர்களுக்கு ரெவின்யூ நில அளவு கற்கள் வினியோகம் செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 6—10—1971 மாலை 4·00 மணி வரை கடலூர் நில அளவுப் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநரால் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட இடங்களுக்குக் கற்கள் சப்ளை செய்ய விரும்புகிறவர்கள், இது சம்பந்தமாக 28-8-1971 தேதிய தென்னார்க்காடு மாவட்ட கெஜட்டில் பக்கம் 52-54-ல் வெளியாகியுள்ள விளம்பரத்தைப் பார்த்து அதில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அனுப்பி வைக்கக் கோரப்படுகிறார்கள்.

உதவி இயக்குநர்,
நில அளவுப் பதிவேடுகள் துறை,
கடலூர்.

(த.73)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

தொழில் நுட்பக் கல்வித் துறை சென்னை-25

திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20ல் நடத்தப்படும் கீழ்க்கண்ட டிப்ளமா படிப்புகளில் முதலாண்டு வகுப்பில் சேருவதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

படிப்புகள்.	டிப்ளமா படிப்புகள் குறைந்த பட்ச கல்வித் தகுதி.	படிப்பின் கால அளவு.
1. ஸ்டில் போட்டோ கிராபி.	அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு (எந்தப் பிரிவானாலும்) அல்லது அதற்குச் சமமான பி.டி.சி.	2 ஆண்டுகள்.
2. எலக்ட்ரானிக்ஸ்.	புகுமுக வகுப்பு அல்லது பி. டி. சி. பிசிகல் சயன்சுடன் அதற்குச் சமமான தகுதி.	2 ஆண்டுகள்.

வயது வரம்பு : இதில் சேருவதற்கு வயது வரம்பு ஏதும் இல்லை.

மனுக்கள் குறிப்புத் தொகுப்புகள் :

முதல்வர், திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20 அவர்களுக்கு எழுதி, சுய விலாசமிட்ட உறை (22 செ. மீ.×9½ செ. மீ.) 50 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு, அதனையும், ஒரு ரூபாய் கிராஸ் செய்யப்பட்ட போஸ்டல் ஆர்டர், சென்னை-20, திரைப்படத் தொழில் நுட்ப நிறுவன முதல்வர் அவர்கள் கணக்குக்கு வாங்கி அதனையும் உடன் வைத்தனுப்பி மனுக்களைப் பெறலாம். போஸ்டல் ஆர்டர் 15—9—71க்கு முந்திய தேதியிட்டதாக இருக்கக் கூடாது.

சேர்த்தல் :

மனுதாரர்கள் தங்கள் சொந்தச் செலவில் சென்னைக்கு நேர்முகப் பேட்டிக்கு வரவேண்டியிருக்கும்.

கட்டணங்கள் :

1. ஆண்டுக்கு ரூ. 180 கட்டணம்; இதை இரண்டு தவணைகளில் செலுத்தலாம்.
2. சேரும்போது தனிக் கட்டணம் ரூ. 40 செலுத்த வேண்டும்.
3. எச்சரிக்கைக் கட்டுத் தொகை ரூ. 10 செலுத்தப்படவேண்டும். படிப்பு முடிந்ததும் இது திருப்பித் தரப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் 9—10—71-க்குள் முதல்வர், திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20 அவர்களுக்கு வந்து சேர வேண்டும்.

தொழில் நுட்பக் கல்வித் துறை
இயக்குநர்.

சென்னை-25.
(த. 56)

ஒப்பந்தப் புள்ளி

திருச்சி வீட்டு வசதி நிலையம்

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடையது)

எண் 42/71-72

கீழே குறிப்பிட்டுள்ள வேலையை மேற்கொள்வதற்காக, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு, 27—10—1971 அன்று மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவருக்குக் கிடைக்குமாறு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்	தமிழ்நாடு அரசு வாடகை வீட்டுவசதித்திட்டத்தின் கீழ், சாலை ரோடு திட்டத்தில் மூன்று மாடி (1-ல் 30) வாடகை பிளாட்டுகளை இரண்டு பிரிவுகளாகக் கட்டுதல்.
ஒவ்வொரு பிரிவின் தோராய மதிப்பு. ..	ரூபாய் 1,50,900.
கட்டுத் தொகை	ஒவ்வொரு பிரிவுக்கும் ரூபாய் 2,270.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்படமாட்டாது).	ரூபாய் 10+ விற்பனை வரி 3½ சதவீதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களைக் கோட்டக் கணக்காளரிடமிருந்து, எல்லா அலுவலக நாட்களிலும், காலை 11-00 மணிக்கும், மாலை 4-00 மணிக்கும் இடையில் மேற்கூறப்பட்டத் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளி அட்டவணைகள் 1—10—1971 முதல் 26—10—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். வந்து சேர்ந்த ஒப்பந்தப் புள்ளிகள் 27—10—1971 அன்று மாலை 3-15 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஆர். வெங்கடாச்சார்.
திருவாகப் பொறியாளர், மற்றும்
திருவாக அலுவலர்.

திருச்சிராப்பள்ளி-1,
14—9—1971.
(த. 68)

குறளகம் போவோமா?

"பக்கத்து வீட்டு அம்மா, கொலு பார்க்க வரீங்களா?"

"யார் வீட்டுக்கு?"

"வீட்டுக்கல்ல, கிராம கைத் தொழில் அங்காடி, குறளகம் இருக்கே, அங்கே கொலு வச்சிருக்காங்க"

"அப்படியா? அது எனக்குத் தெரியாதே!"

"ஆண்டுதோறும் அங்கே கொலு வைக்கறாங்களே! இந்த ஆண்டு அழகா அலங்காரம் பண்ணி, வண்ண விளக்குகளெல்லாம் போட்டு, பிரமாதமாக் கொலு வச்சிருக்காங்க".

"அப்படி என்னென்ன பொம்மைகள் இருக்கு?"

"அடடா .. அதை இல்லாத பொம்மையே இல்லை. மண்ணால் செய்து, வர்ணம் அடித்த பொம்மை, பேப்பரால் செய்த பொம்மை, இப்படிப் பலவிதமான பொம்மைகள் 30 காசிலிருந்து, ரூ. 200, ரூ. 250 வரை விலையுள்ள பொம்மைகள் இருக்கு."

"வழக்கமான பொம்மைகளாகத் தானே இருக்கும்!"

"அதுதான் இல்லை. இந்த வருஷம் பல புது விதமான பொம்மையெல்லாம் வந்திருக்கு. பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனையில் நீதி கேட்கும் கண்ணகியின் பொம்மை அரண்மனைக் காட்சியுடன் அமைச்சிருக்காங்க."

"அப்புறம், உழவர் நடுவது, அறுவடை செய்வது எல்லாம் ஒரு செட், கரகாட்டம், ஒரு செட், காவடியாட்டம் ஒரு செட்! இப்படிப் பலவித பொம்மைகளை செட்டு செட்டாக வைத்திருக்கிறார்கள். இவை தவிர, வழக்கமான எல்லாவிதமான பொம்மைகளும் இருக்கின்றன, மற்றும், மூங்கில், மரம் ஆகியவைகளால் செய்யப்பட்ட சின்ன சின்னப் பொம்மைகள் மைசூரிலுள்ள சென்னப் பட்டணத்திலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. ரூ. 2, 2½க்கு, அழகழகான பொம்மைகள் இருக்கின்றன. சாதாரணமாக வீடுகளை அலங்கரிக்கக் கூட இந்தப் பொம்மைகள் நன்றாக இருக்கும். போன ஆண்டு, இந்தக் கொலு பொம்மை மட்டும் நாற்பத்தெட்டாயிரம் ரூபாய்க்கு விற்பனையாச்சுதாம். இந்த ஆண்டு அதையும் மிஞ்சிவிடும் போலிருக்கு."

"இந்தக் கொலுப் பொம்மைக்காக யாராவது குறளகம் வரை போவாங்களா?"

"நீங்களே நேரில் வந்து பார்த்தால்தான் தெரியும். நாள்தோறும் ஐயாயிரம் பேருக்கு மேலே பார்க்க வர்றாங்க: இந்தக் கூட்டத்தை வேடிக்கை பார்க்கவே போகலாம்:

இங்கு பொம்மை மட்டும் அல்ல, நமக்கு வீட்டுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களும் அங்கே கிடைக்கின்றன. குறிப்பாக, திருமணங்கள் போன்ற விழாக்களுக்கு, நண்பர் யார் வீட்டுக்காவது, பரிசுப் பொருட்கள் வாங்கிட்டுப் போகணும்னு, எதை வாங்கறதுன்னு திகைக்கிறோமே, அங்கு ஏராளமான பரிசுப் பொருட்கள் உள்ளன. சந்தனக் கட்டையினால் செய்தவை, தந்தத்தினால் செய்தவை, பித்தளையினால் செய்தவை, இப்படிப் பலவித பரிசுப் பொருட்கள் அங்கே வைத்திருக்கிறார்கள்:

பட்டுத் துணியிலேயே அண்ணா படம், கலைஞர் படம், திருவள்ளுவர் படம், ஆகிய படங்களை நெசவு செய்து பிரேம் போட்டு வைச்சிருக்காங்க. கையால வரைஞ்ச மாதிரி தத்ரூபமா இருக்கு.

நான் போகும்போது ரிக்ஷாக்காரன் நூறாவது நாள் விழாவுக்காக, நடிகர், நடிகைகளுக்குத் தருவதற்காக ஆர்டர் கொடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். இந்தப் படம் தங்கநிற பிரேமும் சேர்ந்து ரூ. 110 முதல் 150 வரை ஆகுமாம். பிரேமுக்குத் தக்கபடி விலைகூடக் குறைவாக இருக்கிறது:

இம்மாதிரி ரூ. 30 லிருந்து 40 வரை, மெருகேற்றிய மரத்தில் அண்ணா படம் செய்து வச்சிருக்காங்க. அதுவும் பிரமாதமா இருக்கு.

தஞ்சாவூரிலிருந்து, நெட்டியால் செய்த மீனாட்சி அம்மன் கோவில், தாஜ்மஹால், தஞ்சாவூர் கோவில் மாடல்கள் செய்து வைத்திருக்கிறார்கள். பார்த்தா அசல் தந்தம் மாதிரியே இருக்கு, விலையைக் கேட்டா, ரூ. 35 தான்! இந்த மாதிரி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் கொடுக்கத் தகுந்த மாதிரி பல பரிசுப் பொருட்கள் வைத்திருக்கிறார்கள். அதோட, வெளியிலே விக்கிற விலையை விட, மிகக் குறைவான விலையிலே இங்கே தர்றாங்க".



"சேலை, துணி மணி இல்லை யாதா" ?

"நல்லாக் கேட்டீங்க, போங்க. சின்னக் குழந்தை முதல், பெரியவர்கள் வரை, அனைவருக்கும் வாங்கப்படும் எல்லா விதமான துணி மணி களும் கிடைக்கும். குறிப்பாக, சன்னல், கதவுகள், 'சோபா'க்களுக்குப் போடக் கூடிய துணிகளுக்கு, இதைவிட, வேறெங்கும், நல்ல துணிமணி கள் கிடைக்காது. அத்தனை புதுவிதமான டிசைன்கள் இங்கே வைச்சிருக்காங்க.

குழந்தைகளுக்கு ஏற்ற பலவித 'ரெடிமேட்' சட்டைகள் புதுப் புது வகையில் வைச்சிருக்காங்க, ரொம்பக் குறைஞ்ச விலையிலே! வெளிக் கடையில் 20 ரூபாய் மதிப்புள்ள துணி இங்கே பாதி விலையில் கிடைக்குது. தீபாவளி, பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு, காஞ்சிபுரம், தருமாபுரம், ஆரணி, காசி முதலிய இடங்களிலிருந்து ஏராளமான பட்டுப் புடவைகள் வரவழைச்சிருக்காங்க. மலிவான விலையில் நல்ல தரமான பட்டுப் புடவைகளை இங்கே தேர்ந்தெடுக்கலாம்.

புடவையின் அழகு தெரியும் வண்ணம் ஒரு பொம்மைக்குச் சேலை கட்டி, அங்கே காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். வருகிறவர்களெல்லாம் அந்தப் பொம்மைக்கு உடுத்தியுள்ள சேலையையே கேட்டு வாங்குகிறார்கள். இதனால் அந்தப் பொம்மைக்கு ஒரு நாளைக்கு ஏழெட்டுப் புடவைகள் மாற்றும்படி இருக்கிறதாம். அங்குள்ள நிருவாகி இதை வேடிக்கையாகச் சொன்னார்."

"நீ சொல்றதைக் கேட்கக் கேட்க, அங்கே உடனே போய்ப் பார்க்கணும் போல இருக்கு".

"போகும் போது, எனக்கும் ஞாபகப்படுத்துங்க. நான் இன்னொரு முறை குடும்பத்தோடு வருகிறேன். எல்லாரும் சேர்ந்துபோய்ப் பார்த்துவிட்டுப் பொருட்களெல்லாம் வாங்கிட்டு வருவோம்."

மொழிகள்

வறுமையில் அமிழ்ந்து கிடக்கும் மக்களுக்கு, வாழ்வின் இன்றியமையாப் பொருட்கள் தான் கண்கண்ட தெய்வம்! அதை வழிபடுவதற்கு வேளாண்மையே சரியான நெறி.

கற்களால் கட்டப்படும் கோயில்களை விட மனித உடல்களே உண்மையான கோயில்களாகும்.

மனிதன் செய்யும் சட்டம் எப்போது இயற்கையின் நியதிக்கு விரோதமாகிறதோ, அப்போதே அது செத்துப் போன சட்டமாகிவிடும்.

தீவிரமான சீர்திருத்தக்காரர்கள் மனிதத் தன்மையற்ற பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறிந்ததனால்தான் எந்தச் சீர்திருத்தமும் கொண்டு வரப்பட்டதே தவிர, சமூகம் அதற்குத் தயாராகும் வரை காத்திருப்பதனாலோ வேறு எந்த வழியினாலோ சீர்திருத்தம் வந்துவிடவில்லை.

சீர்திருத்தத்தில் கவலை, சீர்திருத்தக்காரனுக்கே உண்டு; சமூகத்திற்கு இல்லை.

பொய்யை உண்மையாலும், விரோதத்தை அன்பாலும், ஆத்திரத்தைச் சகிப்புத் தன்மையாலும் வெல்லலாம்.

அன்பு ஒரு போதும் எதையும் கேட்பதில்லை; ஆனால் கொடுக்கிறது. அன்பினால் எப்போதும் தொல்லைகள் தான் விளைகின்றன. அது பற்றி அன்புடையார் வருந்துவதில்லை; பழிக்குப்பழி வாங்குவதுமில்லை. அன்புள்ள இடமே இறைவன் உறைவிடம்.

மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திரமல்ல. அல்லது தூல உடலுமல்ல. உணர்ச்சி மட்டுமோ, அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்று கூடினால் தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு.
அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2;





தமிழரசு

மலர் 2 16-10

இந்த

யாதும் ஊரே யா

அமிழ்தும் அருங்கு

எதிர்கால ஆற்றல்

3001

நீலமலையில் தூரி

இதோ ஒரு பொன்

சிறுவர் சீதி

ஏன் இந்தக் காதல்

ஒத்துழைக்க வேண்

(செய்திக் கவிதை)

வெண்பாப் போட்டி

அண்ணாவைப் போற்றுதும்
—கல்வியமைச்சரின் உரை

காந்தியடிகளின்
103-வது பிறந்த நாள் விழாக் காட்சிகள்

மன்னிப்புக் கேட்கிறேன்

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி,
வேலைவாய்ப்பு விளம்பரங்கள்.

முகப்பில்:
தமிழகத் தலைநகரில்—காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் அணிவகுத்து வந்த அலங்காரத் தேர்களின் காட்சி.

END OF THE FILM ROLL

CAUTION

மன்னிப்புக் கேட்கிறேன்!

காந்தி அடிகளின் 103-ஆவது பிறந்தநாள் விழாவைத் தமிழகம் சீரோடும், சிறப்போடும் கொண்டாடும் இந்த நன்னாள் இன்று காலையில் அனைத்துலக இளைஞர் அமைதி அணியினருடன் காந்தி சிலைக்கு மாலையணிவித்ததுடன்தொடங்கப்பெற்றது-நானும் அந்த அனைத்துலக இளைஞர் அணியின் தலைவரும் மாலை அணிவித்தோம். அடுத்து காந்திக்கு மிகவும் பிடித்தமான பணியினைச் செங்கற்பட்டு மாவட்டம், பரனூர் கிராமப் பகுதியில் நிறைவேற்றி வைத்ததன் மூலம் பிச்சைக்காரர் மறுவாழ்வுப் பணியின முதற் கட்டம் தொடங்கி வைக்கப் பட்டது. இந்த ஆண்டு தொழுநோய்ப் பிணியாளர்களுக்கு மறுவாழ்வளிப்பது இந்த முதற் கட்டப் பணியாகி இருக்கிறது.

தமிழகத்தில் ஆறு இடங்களில் பிச்சைக்காரர் விடுதிகளைக் கட்டுவதற்குத் திட்டம் தீட்டியுள்ள தமிழக அரசு—அதன் முதல் கட்டப் பணியினை இன்று காலையில் பரனூரில் நிறைவேற்றியிருக்கிறது.

இந்த விடுதியில் 200-க்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிணியாளர்கள் வாழப் போகிறார்கள். இனிமேல் அவர்கள் பல்லை இளித்துக் கொண்டு தெருவில் நின்று தவிக்க வேண்டிய நிலைக்கு ஆளாக வேண்டியதில்லை. இதன் மூலம் அவர்கள் சோகம் துடைக்கப்படுகிறது. இது அண்ணல் காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தமான ஒரு பணி என்பதை உணர்ந்து பேரறிஞர் அண்ணாவின் அறவழியில் வந்தவர்களான நாம் நிறைவேற்றும் இந்த நன்னாளில்—நாமே பெருமைப் படும் வகையில், மாலையில்—அரசுத் துறைகளின் சார்பிலும், தனியார் துறைகளின் சார்பிலும் அலங்காரத் தேர்களை ஊர்வலம் நடத்திக் காட்டி—கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்தியாவின் பல இடங்களிலும் காந்தியார் பிறந்த நாள் கொண்டாடப்படும்போது—கட்சிச் சார்பற்ற முறையில் கொண்டாடுகிற ஓரே ஒரு மாநிலம் தமிழகம் தான் என்பதைப் பெருமையுடன் நிலைநாட்டியிருக்கிறோம். இந்த விழாவில் அனைத்துக் கட்சிகளையும் கலந்து கொள்ளச் செய்து—எல்லாக் கட்சியினருக்கும் பெருமான் காந்தியடிகளைச் சொந்தக்காரராக்கி இருக்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக அரசுச் சார்பில் கொண்டாடப்படும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் தமிழ் பெருங்குடி மக்களுக்கும் ஆதரவை வளர்த்து வரும் அனைத்துக் கட்சியினருக்கும் கலையுலகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த விழாவில் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

முதல்வர்

இங்குப் பேசிய சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த ஹண்டே அவர்கள் நாமெல்லாம் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறினர். அவசர அவசரமாகப் பேசிவிட்டு ரயிலுக்குப் போன அவர் சார்பிலும், காந்தியடிகளிடம் அவரும் மன்னிப்புக் கேட்க முடியாது என்பதால்—உங்கள் சார்பிலும் இந்த விழாவில் நானே மன்னிப்புக் கேட்க முன்வருகிறேன்.

ஒரு மகாத்மாவின் கொள்கைகள் அனைத்தினையும் பின்பற்றுவது என்பது முடியாத காரியம் தான். இதை இங்குப் பேசிய ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி அனந்தநாயகி அம்மையார் 'எல்லாரும் மகாத்மாவாகிவிட முடியாது' என்று வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கொள்கையில் காந்தியார் கொண்டிருந்த கருத்து அது மிகவும் பாக்கமான ஒன்று என்பதே. மக்கட் தொகைப் பெருக்கத்தைத் தடுத்தாக வேண்டிய அவசிய நிலை நாட்டுக்கு ஏற்பட்டபோது [illegible] தம் கொள்கையில் [illegible] மாற்றிக் கொள்ளவில்லை. அப்படியே குடும்பக் கட்டுப்பாடு தேவை என்கிறபோது அதை மன ஒருமைப்பாட்டின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

ஆனால் இன்று அவர் கொள்கைக்கு விரோதமாகக் கருத்தடை முறையைக் கொண்டுவந்து விட்டார்கள்.

அவர்களின் சார்பாக நான் காந்தியடிகளிடம் இப்போது மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

தாய் மொழியைப் பொறுத்த மட்டில் அந்தந்த மாநிலத்து மக்கள் அவரவர்களது தாய்மொழியில் தான் கல்வி பயில வேண்டும்! அதுதான் தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையின் நிலையைப் போன்றது: வேற்று மொழி பயில்வது புட்டிப்பால் குடிப்பதைப்போன்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். இது அவருடைய பொன்மொழியாகும். அந்தப் பொன்மொழியின்படி நானும் தி.மு.க. அரசின் சார்பில் தமிழைப் பயிற்றுமொழி என்று கொண்டுவந்தேன்.

ஆனால் அதை எதிர்க்கும்படி இங்கு. சிலர் மாணவர்களைத் தூண்டிவிட்டு எதிர்ப்புக்காட்டினார்கள்.

அந்த எதிர்ப்பாளர்களின் சார்பில் நான் காந்தியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினையில் இந்தியா முழுமையும் ஒரே சீரான கொள்கையைக் கடைப் பிடித்தாக வேண்டும். தமிழகத்தில் அது விரைவில் ஒத்தி வைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே கடந்த மூன்று ஆண்டுகளாக வாதாடி வாதாடிப் பார்த்தேன் அனைத்து இந்தியாவிலும் மதுவிலக்கு வர வேண்டும் என்று. நான் விரும்பிய நேரத்தில், காந்தியடிகளின் கொள்கைகளைக் கடைப் பிடித்து நடப்பவர்களின் பின்னால் கொடி பிடித்து அலைகிற மாநிலங்களில் முதலில் ரத்துச் செய்யப்பட்டது. சுதந் திராக் கட்சி ஆளும் ஒரிசாவிலும் ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

இப்படியெல்லாம் மதுவிலக்கை ரத்துச் செய்வதில் எங்களுக்கு முன்னால் ரத்துச் செய்தவர்களின் சார்பில் காந்தியடிகளிடம் இதற்காகவும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

தன் தாய்மொழியில் தான் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினர். அதன்படி ஆண்டவனைத் தமிழர்களின் தாய் மொழியான தமிழில் வணங்குவதற்கு இங்கே வழி வகுத்தோம். இப்படி அர்ச்சனைகள் தமிழில் செய்யலாமா என்று அதற்காகச் சிலர் நீதி மன்றம் வரையில் சென்று விட்டார்கள்.

தாய் மொழியில் வணங்க வழி வகுத்தவர்களை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ளவர்களின் சார்பிலும் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு, காந்தியடிகளின் கொள்கைகள் பலவற்றை ஔவை சண்முகம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இது ''ஔவை''யின் பேச்சுத்தான் என்றாலும் அதில் 'சிலம்பு' ஒலித்ததை நான் கவனிக்காமல் இல்லை.

கதர் போன்ற தொழிலுக்குத் தி.மு.க. அரசு காட்டி வரும் அக்கறையினையும், தீண்டாமையை ஒழிப்பதிலும், அரிசன நலத்திலும், சாதி ஒழிப்புப் பிரச்சினையிலும் வகுப்புவாதம் தலைதூக்க வொட்டாமல் தடுப்பதிலும் கழக அரசு எவ்வளவு கவலையோடு இருக்கிறது என்பதையும் அவர் நினைவு கூர்ந்து உங்கள்முன் எடுத்துச்சொன்னார்.

உத்தமர் காந்தியின் விழாவைக் கொண்டாடும் ஒவ்வொரு ஆண்டும் இந்த விழாவில் கலந்து கொள்ளும் பொது மக்களாகிய உங்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த விழாவில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ●

உண்மையே என் கடவுள் !
அகிம்சையே அதைக்
காணும் வழி !
—காந்தியடிகள்.

ஒத்துழைப்பை வேண்டுகின்றேன்!

மணமுள்ள மலருண்டு ; மண மில்லாத
மலர் [illegible]
மணமளிக்கும் மலருண்டு, அழகைப் பெற்றும்
மணமளிக்க மறந்திட்ட மலரும் உண்டு!
மணமில்லா எழில்மலரும் வனப்பில் லாத
மணமலரும் போன்றதே மக்கட் கூட்டம்.
மணமுடனே நல்லெழிலும் வாய்க்கப் பெற்ற
மலர்கட்கே எந்நாளும் தனிச்சிறப்பாம்!

எழிலோடு நறுமணமும் இணைந்தி ருக்கும்
இனியமலர் கொய்திட நாம் முனையும் போழ்து
விழிநோக நம்கரத்தே முட்கள் குத்தும் ;
வேதனையில் நமைஆழ்த்தும் ; குருதி பொங்கும்!
வழிகின்ற குருதியினை எண்ணிப் பார்த்து
மணமலரைப் பறிக்காமல் விடுவ தில்லை
எழில்முத்தை வெறுத்தோமா கடற்கு ளிக்கும்
இன்னலினை நம்மனத்தே எண்ணிப் பார்த்தே :

நாட்டினிலே ஏழைமக்கள் எளிய மக்கள்
நலிவுற்றோர் பிற்பட்டோர் தாழ்த்தப் பட்டோர்
வாட்டமுற்று இன்றுள்ளார் ; மணமில் லாத
மலர்போல இருக்கின்றார் ; எனினும் அன்பின்
கோட்டையெனும் நல்லமைச் சொன்றுள் ளார்கள்.
குறைபோக்கி அவர்வாழ்வில் நறுமணத்தைக்
கூட்டுகிற பெரும்பொறுப்பைக் கழக ஆட்சி
கொண்டுள்ள தென்பதனை உணர்க நன்றே!

மலர்பூத்துக் குலுங்குமெழில் உதகை தன்னில்
மலர்க்காட்சி காண்கின்ற போழ்தென் நெஞ்சில்
மலர்கின்ற நினைவலைகள் முகவை யென்னும்
வறண்டதொரு மாவட்டந் தனையே சுற்றும்
நிலையதனை உணர்கின்றேன் ! செழிப்பில் லோர்
நீந்துவதைக் காண்கின்ற போதென் உள்ளம்
நிலைகெட்டுச் சகதியிலே சாலை யோரம்
நெளிவோரை வட்டமிட்டுச் சுழன்று நையும்!

குளிர்பச்சைப் பட்டாடை போர்த்த நல்ல
கோலமிகும் நீலகிரி மலையைக் காணும்
பொழுதினிலே முகவைஎன் நினைவில் தோன்றல்
போன்றுநான் செல்வர்களைக் காணு கின்ற
பொழுதினிலே ஏழையர்கள் வாழ்வி ழந்தோர்
பொலிவிழந்து தோன்றுகிறார் ! இதனை மாற்ற
விழைகின்றோம் ! முகவையினை உதகை போல
வளங்கொழிக்கச் செய்திடவே எண்ணு கின்றோம்!

நீலகிரி தனைமுகவை போல மாற்ற
நினைக்கவில்லை ; அதுபோன்றே செல்வ வாழ்வில்
கோலமிகு மாளிகையில் திளைப்போர் தம்மைக்
குடிசைக்குக் கொண்டுவர எண்ண வில்லை!
சாலைகளின் ஓரத்தில் சகதி தன்னில்
சாக்கடையின் புழுப்போல நைவோர் தம்மை
மேலுயர்த்தி வாழ்வுதர எண்ணங் கொண்டே
மேதக்க செயல்முறைகள் மேற்கொண் டுள்ளோம்!

இத்தகைய மாற்றத்தைக் காண்ப தற்கே
ஏழையரை எளியவரை உயர்த்து தற்கே
இத்தரையில் எம்மைஆ ளாக்கி விட்ட
எம்அண்ணன் வழிநின்றித் தாய நாட்டை
நத்துமோ ரன்பாலே நானும் மற்ற
நண்பர்களும் அமைச்சர்களும் தோழர் தாமும்
நித்தமுநற் பணியாற்று கின்றோம் உங்கள்
நிகரற்ற ஒத்துழைப்பை வேண்டு கின்றேன்!

கடந்த 25—9—1971 ஆம் நாள் உதகையில் மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்துத் தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை இங்குக் கவிதையுருப் பெற்றிருக்கிறது.

கவிதை ஆக்கம்: சாமிபழனியப்பன்

இனிமை ! இனிமை !

அக்டோபர் 1-ஆம் தேதிய தமிழரசு இதழில் வெளிவந்துள்ள ''இனிமைத் தமிழில் இறை வழிபாடு'' என்ற கட்டுரை கருத்தாழமும், சொல்லாழமும் கொண்டு மிளிர்கிறது. பல்கலைக் கழக மாணவர்களின் ஆராய்ச்சிப் பிரிவுக்குப் பாடமாக வைப்பதற்குத் தகுதி படைத்தது, இக் கட்டுரை என்றால் அது மிகையாகாது! கட்டுரையாசிரியருக்கு எம் அளவற்ற பாராட்டுகள்!

—புலவர் மாணிக்கனார்,
திருச்சி

விளம்புக விஞ்ஞானப் புதுமை !

'பாலை சோலையாகிறது'—பயனுள்ள கட்டுரை. இதுபோன்ற விஞ்ஞானப் புதுமைகளை அவ்வப்போது 'தமிழரசு' வெளியிட வேண்டும்'.

—சித்ரா, மயிலாப்பூர்.

போதிக்கும் சுவர் !

'எதிர்ச் சுவரில்' சுவை மிக்க கட்டுரைக் கதை. குடும்பக் கட்டுப்பாட்டை மறந்து, தவிப்புக்கு ஆளாகும் இல்லற அன்பர்களுக்கு நல்லறத்தைப் போதிக்கிறது 'எதிர்ச் சுவர்.

—எம். முனியப்பன்,
மணப்பாறை.

சிறப்புமிகு குறிச்சி !

மணவாளக் குறிச்சியில் இவ்வளவு சிறப்பிருப்பது இதுவரை எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே!

—என். கோபாலசாமி,
தூத்துக்குடி.

சுவைமிகு காதல் !

அப்பா ... ...' ஏன் இந்தக் காதலில்' இப்போதுதான் சுவை தென்படத் தொடங்கியிருக்கிறது !

—கே. கமலாகாந்தன்,
பெங்களூர்.

ஆதாரமான கட்டுரை

தமிழக அரசு, அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளைப் பொன்னே போல் போற்றிப் பின்பற்றுகிறது என்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ள கட்டுரை 'சிற்றூர் செழிக்க, சிறு தொழில்கள்'.

—எஸ். நவநீதன்,
வத்தலக்குண்டு.

மூட்டைப்பூச்சிக்குப் பாராட்டு !

இறுதிவரை யாரோ நண்பர் தான் உடன் வந்தார் என்று நினைத்துக் கொண்டிருக்க, கடைசியில் அந்த நண்பர் 'மூட்டைப் பூச்சியார்' என்றுகூறிச் சுவைபட எழுதியிருக்கும் சுந்தருக்குப் பாராட்டு.

—எஸ். ஆர். சேகர்,
கோவை-9.

சென்னையிலிருந்து சோவியத் வரை.

வேலூரில் உள்ள கூட்டுறவு பழம் பதனிடும் தொழிற்கூடத்திலிருந்து (NAFCO) இந்த ஆண்டு சோவியத் நாட்டிற்கு இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள மாம்பழச் சாறு அனுப்பப்பட்டுள்ளது. அது போல, பிரெஞ்சு நாட்டிலிருந்து 70 டன், தோலுரித்துப் பதனிடப்பட்ட தக்காளிப் பழம் கேட்டு இத் தொழிற்சாலைக்குக் கோரிக்கை வந்துள்ளது.

மேற்கு ஆசிய நாடுகள் பலவற்றிலும் இந்த மாம்பழச் சாற்றிற்கு நல்ல வரவேற்புஇருப்பதால், அங்கிருந்து கணிசமான அளவு பழச்சாறு வேண்டிக் கோரிக்கைகள் வந்துள்ளன.

மேனாட்டு விருந்து !

இளைஞர் படையின் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்று சிங்கராஜன் தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கும் கட்டுரையில்—மேனாட்டுச் செய்திகளை விருந்தாக்கியிருக்கிறார்.

—ஆர். பரமசிவம்,
நெல்லை.

கண் போன்ற கட்டுரை

புகழ்பெற்ற டாக்டர் வெங்கடசாமியின் 'கண் நோய்' கட்டுரை, பயனுள்ள கட்டுரை. இதழுக்குக் 'கண்' போன்ற கட்டுரை.

—தி. கண்ணாயிரம்.
மதுரை-1

வெண்பாப் போட்டி

தமிழரசு இதழில் வெண்பாப் போட்டியில் பங்கு பெறும் கவிஞர்களின் முழு முகவரியினை வெளியிடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்... இளம் கவிஞர்களின் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள நல்லதொரு வாய்ப்பாக இருக்கும்.

—சி. வள்ளிநாயகம், திருச்சி-8



அண்ணல் காந்தியடிகள் இந்தியாவின் இந்த நூற்றாண்டில் ஒப்பாரும் மிக்காரும் அற்ற, அடுப்பாரும் எடுப்பாரும் அற்ற ஒரு பெரும் தலைவராவார். உலகில் வாழ்க்கைக்கு ஆண்டுகளைக் கூட்டுபவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் ஆண்டுக்கு வாழ்வினைக் கூட்டுபவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகிறார்கள். அப்படித் தாம் வாழ்ந்த நாட்கள் அனைத்தையும் உறுபயன் நாட்களாக ஆக்கிய பெருமை அண்ணல் காந்தி அடிகளுக்கு உண்டு. ஒருவர் எதையும் எளிதில் பெற்று விடலாம். பட்டம், பதவி, பணம், ஆதிக்கம், அதிகாரம், மாடமாளிகை, கூடகோபுரம், காடு, கழனி, தோட்டம், துரவு ஆகியவற்றை நேர் வழியிலோ, அல்லது குறுக்கு வழியிலோ பலரும் பெற்று விடுகிறார்கள். ஆனால் பிறருடைய இதயத்தில் ஒருவர் இடம் பெறுவது என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. உலகத்தில் ஒரு சிலர்தான் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் இடம் பெறுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். புத்தர், ஏசு, திருவள்ளுவர், நபிகள்நாயகம் போன்றவர்களைக் கோடானு கோடி மக்கள் தத்தம் இதயங்களில் வைத்துள்ளார்கள் என்பதை உலகெங்கணும் காணலாம். அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலிலேயேதான் அண்ணல் காந்தியடிகளும் இந்தியாவைப் பொறுத்து இடம் பெறுகிறார்கள். மனிதத் தன்மைக்கு மதிப்பளித்து, மனித மாண்புகளை வளர்த்து, தம் உடைமை, உடல், உயிர் ஆகியவற்றை நாட்டுக்கு ஈந்த பெருமக்களைத்தான் மக்கள் தங்கள் இதயங்களில் கொள்ள முன் வருகிறார்கள். அந்த வகையில் மனிதத் தன்மைக்கு மதிப்பு ஏற்படவும், மனித மாண்புகள் வளரவும், அல்லும் பகலும் உழைத்த அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளினைக் கொண்டாடுவதில் நாம் எல்லாரும் பூரிப்பும் பெருமையும் கொள்ளுகிறோம்.

அண்ணல் காந்தியடிகள், இந்தியாவின் ஊர்ப்புறங்களில் அறிவு ஆற்றலைப் பயன்படுத்தத் தெரியாமல், வசதி வாய்ப்புகளைப் பெற முடியாமல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியாமல், வறுமையிலும், ஏழ்மையிலும், போதாமையிலும் இல்லாமையிலும், அறியாமையிலும், கல்லாமையிலும், உழன்று கொண்டிருக்கின்ற கோடானு கோடி மக்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டுமென்று பெரிதும் கவலைப் பட்டார்கள். அதற்கான முயற்சிகள் பலவற்றையும் மேற்கொண்டார்கள். முயற்சிகளின் அடிப்படையில் அருந்தொண்டாற்றினார்கள். இந்த வகையில் அவர் தொடங்கிய பணிகளைத் தொடர்ந்து செய்யவும், அவரது குறிக்கோளை நிறைவேற்றவும், நாம் ஒவ்வொருவரும் சூளுரைகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சூளுரைகளை மேற்கொள்ளுவதற்குச் சிறந்த பொன்னாள் இந்நாளாகும்.

சிற்றூர் வளர்ச்சி, அண்ணல் காந்தியடிகளுடைய உயிர் நாடிக் கொள்கையாக இருந்து வந்தது. சிற்றூரெல்லாம் வசதிவாய்ப்புகளைப் பெற்றால்தான் இந்தியாவே வளர்ந்ததாகக் கருத முடியும் என்றுஅவர் எண்ணினார். சிற்றூர்கள் வளர்ச்சி பெற வேண்டுமானால், சிற்றூர்களில் வாழும் மக்கள்—சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லா வகைகளிலும் வளர்ச்சி பெறவேண்டும். ஊர் மக்களின் வாழ்க்கைத் தரம் எல்லா வகையிலும் உயரவேண்டும் என்பதற்காகவே சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் வளர்ச்சிப் பணிகள் பலவற்றையும் மத்திய அரசும், மாநில அரசும், மேற்கொண்டுள்ளன. சென்ற சில பல ஆண்டுகளாகத் தமிழக மாநில அரசு சமுதாய வளர்ச்சித் திட்டப் பணிகளில் நல்ல ஆர்வமும் அக்கறையும், ஊக்கமும் ஆக்கமும் கொண்டு செயலாற்றி வருவதன் காரணமாக ஓரளவுக்கு ஊர்ப்புறங்கள் வனிவோடும் பொலிவோடும் காட்சி அளிக்கின்றன. என்றாலும் நாம் அடைந்திருக்கும் வளர்ச்சி மிகக் குறைவு. அடைய வேண்டிய வளர்ச்சி மிகப் பெரிய அளவில் இருக்கிறது. இரண்டிற்கும்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
நாவலர் இரா. நெடுஞ்செழியன்

இடையே உள்ள இடைவெளியை விரைவில் அகற்றுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறேம்.

அண்ணல் காந்தியடிகளோடு நெருங்கிய தொடர்பு உடைய ஊர் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கம் தரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் அவர் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் முதல், அக்டோபர் 8-ஆம் நாள் வரையில் உள்ள ஒருவார காலத்தைச் சமுதாய வளர்ச்சித் திட்ட வாரமாகக் கொண்டு அதனை விழாவாகக் கொண்டாடுவது என்று தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது. கடந்த ஆண்டிலும் இதே போன்று இவ்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினேம். இந்த விழா, அறியாத மக்களுக்கு அறிவுறுத்தவும், புரியாத மக்களுக்குப் புரிய வைக்கவும், தெளியாதவர்களுக்குத் தெளிவுபடுத்தவும், உணராதவர்களுக்கு உணர்வூட்டவும் ஆன வகையில் பயன்படவேண்டும். ஒவ்வொரு சிற்றூரும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் எல்லா வசதிகளையும் பெற்றிருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டியது அந்தந்த ஊர் மக்களின் பெரும் பொறுப்பாகும். நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் ஊர்ப்புறங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் 73 பேர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஊர்ப்புறங்களில் வாழும் மற்ற 17 பேர்கள் வேளாண்மையைச் சார்ந்த தொழில்களைச் செய்பவர்களாகவும், வேளாண்மைக்கு உறுதுணை புரிபவர்களாகவும், வேளாண்மையை நம்பிவாழ்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மைப் பொருளாதாரம் வளர்ந்தால் தான் மற்றத் துறைகளின் பொருளாதார நிலையும் வளர முடியும். எனவே, நம்முடைய நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மையாகும். வேளாண்மை மிகுந்து வருவாய் மிகுந்தால், மக்களிடத்தில், வாங்கும் ஆற்றல் வளரும். வாங்கும் ஆற்றல் வளர்ந்தால் தொழில் உற்பத்தி பெருகும். தொழில் உற்பத்தி பெருகினால் நாட்டின் வருமானம் மிகும். நாட்டின் வருமானம் மிகுந்தால் வாழ்க்கைத்தரம் எல்லா வகையிலும் உயரும். ஆகவே தான் வேளாண்மை வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளையும் வேளாண்மைப் பெருங்குடி மக்களின் பேரொத்துழைப்போடு செய்யத் தமிழக அரசு திட்டங்கள் பல தீட்டி வருகிறது. வேளாண்மைக்கு ஏற்றவகையில் நிலத்தைப் பண்படுத்துதல், நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல், வாரி காணக்கூடிய பொறுக்கு விதைகளைப் பயன்படுத்துதல், ஊட்டம் தருகின்ற உரத்தைப் பயன்படுத்துதல், அழிவைத் தடுக்கும் முறையில் பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துதல் போன்ற பல வகையான திட்டங்களைச் சமுதாயத்தின் ஒத்துழைப்போடு, தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தமிழக அரசு முனைந்துள்ளது. விளைபொருள்களைப் பெருக்க, தமிழக அரசு உறுதுணை புரிவதோடு வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு மானிய உதவி, கடன் உதவி போன்றவற்றை எல்லா வகையிலும் அளித்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், மக்களின் அன்றாடவாழ்க்கைக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தருவதிலும் சமுதாய வளர்ச்சித்துறை மிக்க அக்கறையும் ஆர்வமும் காட்டிவருகிறது. மக்களின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகத் தேவைப்படுகின்ற குடிநீர் வசதியைச் செய்து தர வேண்டும் என்பதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்துள்ளது. 1972–73-க்குள்ளாக எல்லாச் சிற்றூர்களும் குடிநீர் வசதியைப் பெற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகள் பல வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தூய்மையான, பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அற்ற, நல்ல குடி

நீரை விரைவாகவும், செம்மை
யாகவும், எளிதாகவும் இ
வொரு சிற்றூரும் பெரு
பெற வேண்டும் என்பதற்காக
குடிநீர் வாரியம் ஒன்று நிறுவ
பட்டிருக்கிறது. ஊர்ப் பொ
மக்கள், ஊராட்சி மன்றங்க
ஊராட்சி ஒன்றியங்கள் ஆகி
வற்றின் ஒத்துழைப்போ
இந்தப் பணியைச் சிறப்பு
நிறைவேற்றத் தமிழக அர
திட்டங்கள் பல தீட்டி வருகிற

பெருவழிச் சாலைகளோடு
நெடுஞ்சாலைகள் இணைக்கப்பட
வேண்டும்; நெடுஞ்சாலைகளோடு
கிளைச்சாலைகள் இணைக்கப்பட
வேண்டும். கிளைச்சாலைகளோடு
சிற்றூர்கள் இணைப்புச்சாலைகள்
மூலம் இணைக்கப்பட வேண்டு
என்ற நோக்கத்தையும் தமிழ
அரசு உள்ளத்தில் கொண்டு
அதனை நிறைவேற்றுவதற்கா
முயற்சியில் ஈடுபட்டு வ
கிறது. இணைப்புச்சாலைகள்
நாடெங்கும் அமைந்தால்தா
போக்குவரத்து நல்ல முறையி
நடைபெறவும், விளைபொருள்க
விரைவாக அகற்றப்படவும் வ
ஏற்படும். ஆகவேதான் சமுதா
வளர்ச்சித்துறை இணைப்புச்சா
ஏற்படுத்துவதில் மிகுந்த அ
கறை காட்டி வருகிறது.

நாட்டின் வளர்ச்சிக்கு விளை
பொருள்களைத் தரும் வேளாண்
மையோடு, செயற்கைப்பொருள்
களை உற்பத்தியாக்கும் தொழி
சாலைகளும் பெரும் அளவி
ஏற்படவேண்டும். விளை
பொருள், செய்பொருள் ஆகி
இரண்டினையும் பெருக்க மின்
சாரத்தின் உதவி பெரிது
தேவைப்படுகிறது. எ
கெங்கு மின்சாரத்தின் உத
கிடைக்கிறதோ அங்கெல்லா
வேளாண்மையும் வளருகிறது
செய்பொருள் உற்பத்தியு
பெருகுகிறது. இந்த இரண்
வகையிலும் உற்பத்திப் பெரு
கத்தைப் பெற மின்சாரத்தை
எல்லா ஊர்களுக்கும் 1972–73-
குள் வழங்குவதென்ற தீவிர
திட்டத்தைத் தமிழக அர
மேற்கொண்டிருக்கிறது.

நிலத்துக்கு அடியில் உள்ள
நீரை மேலே கொண்டுவர
மின்சாரத்தின் துணை தேவைப்
படுகிறது. அதே போன்ற
சக்கரத்தைச் சுழற்ற, இயந்
திரங்களை இயக்க, பொருள்களை
உற்பத்தி செய்யவும் மின்

தேவைப்படுகிறது மின்சாரத்தைப் பயன்படுத்தி, விளைபொருள், செய்பொருள் இரண்டையும் ஏராளமாகப் பெருக்க ஊர்ப்பெருமக்கள் முன்வரவேண்டும் என்று இந்த விழா நாளில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய நாட்டில் ஏழ்மை ஏராளம் இருக்கிறது. ஏழ்மை இருப்பதிஞல் வறுமை இருக்கிறது. வறுமை இருப்பதிஞல் இல்லாமை நிலவுகிறது.

இல்லாமை நிலவுவதஞல் போதாமை இருக்கிறது. இந்த நான்கிற்கும் காரணம் எதுஎன்று பார்த்தால் அறியாமைதான். அறியாமைக்கு எது காரணம் என்று பார்த்தால் கல்லாமை தான். ஆகவே கல்லாமை நீங்கிஞல் ஒழிய அறிவுடைமை ஏற்படாது. அறிவுடைமை பெருமல் ஏழ்மை, வறுமை முதலியவற்றை அகற்ற முடியாது. எனவே முதலில் நாட்டைவிட்டுக் கல்லாமையை நீக்குவதில் சமுதாயத்தினர் அத்தனை பேரும் பெருமுயற்சியும், பெரும் பங்கும் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கல்லாமையை நீக்க வேண்டுமாஞல், கல்வி நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும். குறைந்தது 300 மக்கள் வாழ்கின்ற ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு துவக்கப் பள்ளியாவது இருக்க வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊராட்சி மன்றங்களின் உதவியோடு, ஊர்ப் பொதுமக்களின் உறுதுணையான ஆதரவோடு ஆங்காங்குக் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி வருகிறது. சமுதாயம் வளர்ச்சி பெறக் கல்வி எவ்வளவு இன்றியமையாத ஒன்ருகத் தேவைப்படுகிறது என்பதை, ஒவ்வொரு ஊர் மக்களும் உணர்ந்து நிலக்கொடை, நிதிக்கொடை, பொருள் கொடை, கல்விக் கருவிகள் கொடை வழங்க முன்வரவேண்டும்.

'' நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் '' என்பது பழமொழி. அந்தக் குறைவற்ற செல்வத்தை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற முயற்சியிலும் தமிழக அரசு பெரிதும் ஈடுபட்டு வருகிறது. நோய் வராமல், பரவாமல் தடுக்கும் முயற்சிகள் ஆங்காங்கு எடுக்கப்பட்டு வருகின்றன. அதே போது

பற்றிக்கொண்ட நோய்களை அகற்றும் முயற்சிகளும் ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிற்றூர் மக்களுக்கு ஒரு சேரப் பயன்படுகின்ற வகையில் ஆங்காங்கு மருத்துவ மனைகள் நிறுவுகின்ற முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

வசதிகளையும், வாய்ப்புகளையும் பெறப் பெற, சிற்றூர்கள் பேரூர்களாக மாறுகின்றன. பேரூர்கள் நாளடைவில் நகரங்களாக மாறுகின்றன. நகரங்கள் மாநகரங்களாக மாறுகின்றன. சமுதாய வளர்ச்சி தமிழகத்தில் பரவலாகக் காணப்படுவதால் தமிழகத்தில் மட்டும் மொத்தம் 443 நகரங்கள் உள்ளன. தமிழகத்தைப் போல் இரண்டு மடங்கு மக்கள் தொகை உள்ள உத்திரப் பிரதேசத்தில் 293 நகரங்கள் தான் உள்ளன. மராட்டியத்தில் 289 நகரங்களே உள்ளன. குசராத்தில் 217 நகரங்கள்தான் இருக்கின்றன. தமிழகம் எப்படிப் பட்ட வளர்ச்சியைப் பரவலாகப் பெற்று வந்திருக்கிறது என்பதை மேற்கண்ட புள்ளி விவரங்கள் உணர்த்தும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இணைப்புச் சாலைகளுக்கென ரூ. 700 இலட்சமும், பள்ளிக் கட்டடங்களுக்கென ரூ. 300 இலட்சமும், விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீன் வளம் ஆகியவற்றுக்கு ரூ. 593 இலட்சமும், சமூகக் கல்விக்கென ரூ. 100 இலட்சமும், மகளிர், குழந்தைகள் நலனுக்காக ரூ. 120 இலட்சமும், ஊர்க் கைத் தொழில்களுக்கென ரூ. 100 இலட்சமும் செலவிடுவதெனத் தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது. ஊர்களின்

வளாசசு ...ருஜ ... திட்
வேலை வாய்ப்பு விரைவுத் திட்
டம் '' துவக்கப்பட்டிருக்கிறது.

உடல் உழைப்பையும், உற்
பத்தியையும், இரண்டறக் கலக்
கச் செய்து, பல வகைப்பட்ட
ஊர் வளர்ச்சித் திட்டத்தின்
வாயிலாகக் கூடுதல் வேலை வாய்ப்
புகளை உருவாக்கும் வகையில்
இத் திட்டம் அமைக்கப்பட்டுள்
ளது. ஊர் மக்களின் நன்மைக்
குரிய சமுதாய வளர்ச்சிப் பணி
களை இத் திட்டம் உருவாக்கி
ஊர் மக்களுக்கு நல்ல வாழ்வு
அளிக்கும் என்று நம்பலாம்.

சமுதாய வளர்ச்சிப் பணிகள்
மேலும் சிறப்பாகவும், செம்மை
யாகவும், தன்னலமற்ற தொண்
டர்களின் பேருதவியோடு நடை
பெறவேண்டும் என்ற எண்ணத்தில்
தான், பேரறிஞர் அண்ணு அவர்
கள் தமிழகமெங்கும் சீரணிப்
படையைத் தோற்றுவித்தார்கள்.
ஊர் மக்களின் ஒத்துழைப்
போடு ஊர்களின் தேவைகளை
நிறைவேற்றுவதில் இந்தச் சீர
ணிப் படை மிகச் சிறப்பாக ஈடு
பட்டு வருகிறது. சீரணிப் படை
யின் பணிகளை மேலும் மேலும்
பயன்படுத்திக்கொள்ள வேண்டி
யது ஒவ்வொரு ஊர் மக்களின்
நீங்காக் கடமையாகும்.

பயன் தரும்—பழம் தரும்—
நிழல் தரும் மரங்களைச் சாலையின்
இரு புறங்களில் நிலைநாட்டுவது
கொல்லைப்புறங்களிலும், தோட்
டப் புறங்களிலும் வளர்ப்பது
பள்ளிக்கூடங்களைச் சுற்றிலும்
ஓரங்களிலும் அமைப்பது
போன்ற சீரிய பணிகளை ஒவ்
வொரு ஊர் மக்களும் இவ்
விழாவை ஒட்டிய செயலாக
கருத வேண்டும்.

ஊர்களின் வளர்ச்சி கருதி
ஊராட்சி மன்றங்களின் மூலம்
ஊராட்சி ஒன்றியங்களின் மூலம்
அவற்றின் மேற்பார்வையின் கீழ்
1971–72-ஆம் ஆண்டில் நிறை
வேற்றப்பட வேண்டிய பணி
களுக்காக நாம் ஒதுக்கியிருக்கி
தொகை ரூ.71.93 கோடியாகும்
இந்தத் தொகையைச் செலவழி
பதன் மூலம் ஏற்படுகின்ற பல
மக்களுக்கு உருவான, உறுதியா
பயன்களை உருவாக்க வேண்டும்
உருவாக்கும்படிப் பார்த்து
கொள்ள வேண்டிய பெரு
பொறுப்பு அதிகாரிகள், அலு
லர்கள், ஊராட்சித் தலைவர்க

ஆகியவர்களைச் சார்ந்ததாகும். எனவே, தமிழகமெங்கணும் விரிந்துள்ள ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சித் திட்ட வார விழாவில் பெரும் பங்கு கொள்வதோடு, மக்கள் தலைவர்களும், அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து விழாவைச் சிறப்புடையதாக ஆக்க வேண்டிய சீரிய பணியை மேற்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். '' மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலனே நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது '' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ள பொன்மொழிக்கேற்பப்பொறுப்பு உணர்ச்சியோடு கடமைகளை ஆற்றுவோமாக!

கலையேவளர்! தொழில்
மேவிடு!

கவிதைபுனை தமிழா!

கடலேநிகர் படைசேர்கடு
விடநேர் கருவிகள் சேர்!
நிலமேஉழு நவதானிய

நிறையூதியம் அடைவாய்;

நிதிநூல்விளை! உயிர்நூல்
உரை

நிசநூல்மிக வரைவாய்!

அலைமாகடல் நிலம்வானி
லுன்

அணிமாளிகை ரதமே
அவைஏறிடும் விதமேயுன

ததிகாரம் நிறுவுவாய்!

கொலைவாளினை எடடாமிகு
கொடியோர்செயல் அறவே

குகைவாழ் ஒரு புலியே
உயர்

குணமேவிய தமிழா!

தலையாகிய அறமேபுரி

சரிநீதியுதவுவாய்;

சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய்!

இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவேமுர
சறைவாய் முரசறைவாய்!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கொப்ப முரசொலி முழக்கத்தை எல்லாரும் எழுப்புவோமாக! வாழ்க அண்ணல் காந்தியடிகளின் புகழ்!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தி ஒன்றும் ஆண்டு, செப்டம்பர்த்திங்கள் இருபத்தி ஆறும் நாள் தமிழக வரலாற்றுப் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய நாள்.

''சுழன்றும்ஏர்ப் பின்னது
உலகம்; அதனால்

உழந்தும் உழவே தலை''

என்று திருவள்ளுவரால் பாராட்டப் பெற்ற உழவுத் தொழிலின் மேம்பாட்டிற்கு உதவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப் பெற்ற பொன்னாள்.

''பழைய முறைமாற்றிப்
பயிர் செய்தால்

நிறையப் பலன்
கிடைக்க வழியுண்டு;

உழக்குத்தான் மிச்சமென்னும்
இருட்டு நிலை

கிழக்கு வெளுத்ததுபோல்
மறைந்து விடும்.''

என்றுரைத்த நாலரைக் கோடி தமிழ் மக்களின் நாயகனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால், மேதகு தமிழ்நாடு ஆளுநரும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேந்தருமான திரு கே.கே. ஷா அவர்கள்தலைமையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்ட நன்னாள்!

அந்த நாள் — மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல்—தமிழகத்தின் வரலாற்று ஏடுகளில் ஓர் இன்றியமையாத நாளாகும். மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அந்த நாள் தமிழக வரலாற்றிலே பொன்னேடு ஒன்று சேர்க்கப்பட்ட நன்னாள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நன்னாள் ஏற்படுவதற்குக் காரணம் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களே என்றால் மிகையல்ல.

இந்தியாவில், முதலாவது வேளாண்மைக்கல்லூரி 1878-ஆம் ஆண்டு, சென்னைக்கு அருகில் உள்ள சைதாப்பேட்டையில் நிறுவப்பட்டது. அக்கல்லூரி 1907-ஆம் ஆண்டில் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டது. இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் தமிழ்நாட்டில்தான் துவக்க வேண்டுமென்பதற்கான முயற்சி 1958-ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. 1958-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறைச் செயலாளர் திரு. பி. பி. ஐ. வைத்தியநாதன், ஐ.சி.எஸ். அவர்களும், கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தலைவர் டாக்டர் கே. சி. நாயக்



அவர்களும், அமெரிக்கா சென்று அங்கு வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் செயல்படும் நடைமுறைகளைக் கண்டறிந்து வந்து, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பது பற்றிய அறிக்கையைத் தமிழ்நாடு அரசுக்குச்சமர்ப்பித்தனர். ஆனால் அன்றைய தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியை ஒத்தி வைத்து விட்டது. அதனால் இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் பெறும் வாய்ப்பைத் தமிழகம் இழந்து விட்டது; ஆனால் தமிழ்நாடு அரசுக்குப் பின்பு, வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட உத்திரப் பிரதேச மாநில அரசு 16,000 ஏக்கர் நில மானியம் அளித்து, இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களைக்கொண்டு இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை 1960-ஆம் ஆண்டில் துவக்கி வைத்து விட்டது.

ஆண்டுகள் ஓடின! ஆயினும் அன்றையத் தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியில் அக்கறை காட்டவில்லை. உத்திரப் பிரதேசத்தைத் தொடர்ந்து, பஞ்சாப், அரியானா, ஒரிசா, மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம், ராஜஸ்தான், மேற்கு வங்காளம், பீகார், ஆந்திரப் பிரதேசம், மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களில் மாநிலத்திற்கு ஒன்று வீதமும், மராட்டிய மாநிலத்தில் இரண்டுமாக மொத்தம் 14 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. புது டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும் பல்கலைக் கழக மதிப்பைப் பெற்றது.

இவ்வாறு இந்தியாவில் 15 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தோன்றிய பின்பும், வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியில் முதன் முதலில் ஈடுபட்ட தமிழகத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப் பெறாதிருந்தது, தமிழ்நாட்டிற்குப் பெருங்குறையாக இருந்தது. இப்பெருங்குறையைத் தீர்க்க இன்றையத் தமிழ்நாடு அரசு முன்வந்தது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இன்றியமையாமையை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முயற்சியால் இந்தியாவின் பதினாறாவது பல்கலைக் கழகமாகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மலர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு பிறப்பித்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டம் 1971-ன் படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1—6—1971 முதலே செயல்படத் தொடங்கியுள்ளது. இப் பல்கலைக் கழகத்

தின் முதல் துணை வேந்தராக டாக்டர் ஜி. ரங்கசாமி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முக்கிய நோக்கங்களாவன :—

(1) வேளாண்மையின் பல் வேறு பிரிவுகளிலும், பல்கலைக் கழகத்தால் முடிவு செய்யப்படும் வேளாண்மையைச் சார்ந்த அறிவியல்களிலும் கல்வி கற்பித்தல்.

(2) வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல்களில் மேற்படிப்புப் படிக்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வழி செய்தல்.

(3) தொடர்புடைய அரசுத் துறையின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களுக்கு நன்மைதரும் அறிவியல்களை விரிவுபடுத்தல்.

''வேளாண்மை'' என்றால், மண், நீர் ஆகியவற்றின் நிர்வாகத்தில் அடிப்படை மற்றும் சார்பு அறிவியல்கள், தோட்டப் பயிர்களின் உற்பத்தியும் அடங்கிய பயிர் உற்பத்தி, பூச்சி-நோய் தடுப்பு, மலர் வகை சாகுபடியும் சேர்ந்த தோட்டக்கலை, கால் நடை மற்றும் பால் பண்ணை சேர்ந்த கால்நடைப் பராமரிப்பு, மீனளம், பண்ணைக்காடு உட்பட்ட காட்டியல், மனை இயல், வேளாண்மைப் பொறியியல், மற்றும் தொழில் நுட்பவியல், வேளாண்மை மற்றும் கால்நடை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் பதனப் படுத்தல், கூட்டுறவு, நில உபயோகம் மற்றும் நிருவாகம், கிராமப்புற மக்களின் பொருளாதார சமுதாய மேம்பாடு என்று பொருள்படும்.

எனவே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப் பட்டுள்ளது 'பசுமைப் புரட்சி' பரவிடவும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், சமுதாயத்தில் வயிற்றுக்கும் வாய்க்கும் பற்றாத நிலையில் வாழும் ஏழை உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கவும், வேளாண்மை அடிப்படையான தொழில்கள் மலரவும், வேலை வாய்ப்பினை விரிவாக்கவும் வழிகோலும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ், பின்கண்ட நிலையங்கள் செயல்படுகின்றன:

1. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.

2. வேளாண்மைக் கல்லூரி, மதுரை.

3. வேளாண்மைக் கல்லூரி கோயம்புத்தூர் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள எல்லா ஆராய்ச்சி, மற்றும் கல்விப் பிரிவுகள்.

4. மதுரை வேளாண்மைக் கல்லூரியில் உள்ள எல்லா ஆராய்ச்சி மற்றும் கல்விப் பிரிவுகள்.

பல்கலைக் கழகத் துவக்க விழாவில் முதலவரும் வேளாண்மை அமைச்சரும்.

5. ஒட்டுவீரிய கம்புத் திட்டம், சத்தியமங்கலம்.

6. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்.

7. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆளியாறு நகர்.

8. நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம், பொள்ளாச்சி.

9. ஆப்பிள் ஆராய்ச்சி நிலையம், கோடைக்கானல்.

10. பழ ஆராய்ச்சி நிலையம் பெரியகுளம்.

கோவை வேளாண்மைக் கல்லூரியிலும், மதுரை வேளாண்மைக் கல்லூரியிலும் இதுவரை ஏறத்தாழ 4,800 பேர் படித்து பி.எஸ்சி (வேளாண்மை) பட்டம் பெற்றுள்ளார்கள். சென்ற 13 ஆண்டுகளில் கோவை வேளாண்மைக் கல்லூரி மட்டும் 53[illegible] எம்.எஸ்சி. (வேளாண்மை) பட்டதாரிகளையும், 21 பி.எச்டி. பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளது. சென்ற 3 ஆண்டுகளில் 16[illegible] எம்.எஸ்.சி (வேளாண்மை) பட்டதாரிகளை மதுரை வேளாண்மைக் கல்லூரி உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது :—

பொன்னேடு

''இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழா நடைபெறும் இந்நாள், தமிழக வரலாற்றுப் பொன்னேட்டில் இன்றியமையாத நாள்.

இந்தியாவில் 15 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இது 16-வது வேளாண்மைப் பல்கலைக் கழகமாகும். 16 என்பது தமிழகத்தில் போற்றிப்பாராட்டப்படும் எண்ணாகும். புதிதாகத் திருமணம் முடித்த தம்பதிகளை வாழ்த்துகிறபோது பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ் என்று வாழ்த்துவது வழக்கம். அந்தப் பதினாறு என்பது பிள்ளைகள் அல்ல! பேறுகள்! அது போல் நான், 16-வது பல்கலைக் கழகத்தைப் பெறும் தமிழகம் அந்தப் பேறுகளைப் பெற்றுப் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

தமிழகத்தில் வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைய வேண்டும் என்பது என் நீண்ட நாள் பேரவா.

பெருமை

முன்பெல்லாம் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களை எந்தக் கல்லூரி மாணவர் என்றால், மருத்துவக் கல்லூரிகளிலும், வேறு கல்லூரிகளிலும் இடம் கிடைக்காததால் இறுதியாக வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் நாணி, தலையைக் குனிந்து கொண்டு தங்கள் கல்லூரியைச் சொல்வார்கள். ஆனால் இனிமேல் இந்த மாணவர்கள் தலை நிமிர்ந்து பெருமையுடன் பல்கலைக் கழக மாணவர்கள் என்று சொல்லலாம். இன்று நம் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுகிறது என்று மாணவர்கள் பெருமையுடன் சொல்லிக்கொள்ளலாம்.

இந்தியாவின் 16-வது வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

நான் கல்லூரியில் படித்தது இல்லை என்றாலும் அடிக்கடி கல்லூரிக்குச் சென்றுவருகிறேன். ஆகவே, நான் இங்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மற்றையக் கல்லூரி மாணவர்களின் சீருடையை விட, வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் உடைப் பொருத்தத்தைப் பார்க்கப் பார்க்கக் கண் குளிர்கிறது. உடையிலுள்ள பசுமை நாட்டில் வராதா என்ற ஏக்கம் தோன்றுகிறது. அவர்களின் பசுமையான உடைகளைப் போன்று தமிழகமெங்கும் பசுமைப் புரட்சி பரவிடாதா என்ற ஆசை என்னுள்ளே எழுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் அதற்கு முயற்சி செய்ய வேண்டும். வேளாண்மைத் துறையில் புதுமைக் கருத்துக்கள் பூத்துக் குலுங்கிடவும், புது முயற்சிகள் செழித்திடவும் இந்தப் பல்கலைக் கழகம் உதவ வேண்டும்.

இந்தப் பல்கலைக் கழக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நான், லண்டன் மாநகரில் மாசெபெர்குசன் நிறுவனத்தினர் எனக்கு அன்பளிப்பாக அளித்த டிராக்டரை, உச்சவரம்புக்கு உட்பட்ட எனது சொந்த நிலத்தில் கூடப் பயன்படுத்தாமல் இந்தப் பல்கலைக் கழகத்துக்குக் கொடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இலச்சினையில் அகல் விளக்கு இடம் பெற்றுள்ளது. மனையியலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அடங்கும் என்பதை இது காட்டுகிறது.

இதில் மீன் சின்னம் இடம் பெற்று இருப்பது மீன்வளத் துறையும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருப்பதற்கு அடையாளம். எவ்வாறு நாற்று நட்டுப் பயிர் வளர்க்கின்றோமோ அதுபோல, மீன் குஞ்சுகளிலிருந்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதையும்குறிக்க அதில் மீன் இடம் பெற்றுள்ளது.

இதிலுள்ள மாடு வேளாண்மைத் துறைக்கும் கால்நடைத் துறைக்கும் உள்ள இணைப்பைக் காட்டுகிறது.

மரமும் இலச்சினையில் இடம் பெற்றுள்ளது. தனிமரம் தோப்பாகாது என்றாலும், அதிலுள்ள மரம் காட்டிலாகா வேளாண்மைத் துறையுடன் இணைந்திருப்பதைக் காட்டுகிறது.

மேலும் சின்னத்தில் ஏரும், டிராக்டரும் இடம்பெற்றுள்ளன. டிராக்டர் வருவதால் வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்று உழைக்கும் மக்கள் பயப்படத் தேவையில்லை. குறிப்பிட்ட அளவுவேளாண்மைவளர்ச்சி ஏற்படும் வரை, ஏரும் நிலைத்து இருக்கும் என்பதைக் குறிக்கவே ஏரும் இடம் பெற்றுள்ளது.

இவ்வளவுக்கும் மத்தியிலே சூரியன் இடம் பெற்றுள்ளது. இது அரசியல் ரீதியாக அல்ல— இயற்கையின் ரீதியாக என்பதை நாட்டிலுள்ள நல்லோர்—நல்லெண்ணத்தோர் உணர்வார்கள்.

இவ்வாறு இச்சின்னம் வேளாண்மைக் குறிக்கோளை நாட்டிற்கு உணர்த்தும் வண்ணம் உள்ளது.

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்கள் பழமைப்பட்டவர்கள். அவர்கள், விஞ்ஞானத்தால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள புதுமைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். 'வரப்புயர வயல் உயரும்' என்பதற்கேற்ப வேளாண்மைத் துறையில் புதுமை உயர்ந்தாக வேண்டும். சத்துணவுத் துறையிலும், உணவு உற்பத்

தியைப் பெருக்கித் தன்னிறைவு பெறுவதிலும்—தன்னிறைவு பெறுவதில் மட்டுமல்ல—மற்ற மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் விதத்தில் தன்னிறைவு பெறவும், புதிய முறைகளை உழவர்கள் கையாள வேண்டும். மற்ற நாடுகளில் வேளாண்மைத் துறை விஞ்ஞான வேகத்தில் வளர்ந்துள்ளதுபோல, நமது நாட்டிலும் வளர, புதிய புதிய கண்டுபிடிப்புகளைப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடிக்க வேண்டும். புதிய வேளாண்மை முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்கள் பாடுபடுவார்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி
முல்லைக்குப் பேர் கொடுத்தார் கலைஞர்

தமிழகத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் எனக்கு, நான் முதலமைச்சர் ஆன பின்பு ஒரு சில திங்கள் கழித்து பஞ்சாப் மாநிலம் சென்ற போது ஏற்பட்டது. பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மனையியல் கட்டடத்தைத் திறக்கும்படி எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அப்போது தான் நான் பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களையும் பேராசிரியர்களையும் சந்தித்துப் பேசினேன். தமிழகத்திலும் அப்படிப்பட்ட பல்கலைக் கழகத்தைத் துவக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அப்போது ஏற்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தின் மக்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்து வரும் மதிப்பு, பெருமதிப்பாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகம், கிராம சமுதாயத்தை எவ்வாறு மாற்றமுடியும் என்பதை நேரில் கண்டேன். பஞ்சாப் கிராமங்களில் மோட்டார் கார்களைவிட அதிக டிராக்டர்களைக் கண்டேன். காலை முதல் மாலை வரை வயல் வெளியில் உழைக்கும் மக்கள், மாலையில் நாடகங்களுக்கும், திரைப்படங்களுக்கும் டிராக்டர்களில் குடும்பத்துடன் குதூகலமாகச் செல்லுகிறார்கள். வேளாண்மை எந்த அளவிற்குப் பஞ்சாப் மாநிலத்தில் பெருகியுள்ளது என்பதை அவை எடுத்துக் காட்டின. அதுபோலத் தமிழ்நாட்டிலும் வேளாண்மை வளர்ச்சி பெற வேண்டும்.

அங்கு, கிராமங்களில் நிறைய வேளாண்மைக் கருவிகள் பழுது பார்க்கும் சிறுசிறு தொழிற்சாலைகள் வைத்துள்ளனர். அதைப் போல, வேளாண்மை உற்பத்தி சம்பந்தமான தொழிற் கருவிகளை உற்பத்தி செய்யவும், பழுது பார்க்கவும் சிறு சிறு தொழிற்சாலைகளை நாமும் தொடங்க வேண்டும் என்பதற்காக, பட்டம் பெற்ற 3,000 பொறியியல்பட்டதாரிகள் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் துவக்க முன்வந்தால் தமிழ்நாடு அரசு உதவிசெய்யும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே கூறி இருக்கிறேன். பஞ்சாப் மாநிலத்தைப் போன்று தமிழகத்தில் வேளாண்மைத் துறையில் புரட்சி ஏற்படப் புதுமைகளை வரவேற்றே ஆக வேண்டும்.

1966-ஆம் ஆண்டில் 5 இலட்சம் ஏக்கரில் மட்டுமே மிகுபயன் தரும் பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. இப்போது 40 இலட்சம் ஏக்கரில் மிகு பயன் தரும் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

இப்படிப்பட்ட வேகமான முன்னேற்றத்தைப் பரப்ப, வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் மாணவர்கள் பாடுபட வேண்டும். புதுமையை உழவர்களுக்குச் சொல்லித் தர மாணவர்கள் பயன்படவேண்டும்.

நமது நாட்டுப் பழமொழி "ஓதுவார் எல்லாம் உழுவார்—தம் தலைக் கடைக்கே" என்று கூறுகிறது. அதற்கேற்பப் படித்தவர்கள் உழவர் வீட்டுப் படியில் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். அந் நிலை ஏற்படாவிட்டாலும் படித்தவர்கள் உழவுத் தொழிலில் நாட்டம் செலுத்தவேண்டும்".

இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினர்.

தலைமை உரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிய மேதகு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் தமது தலைமை உரையில் கூறியதாவது:

" பசுமைப் புரட்சி காணும் விழையும் தமிழகத்தில், வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டிருப்பது மிகவும்முக்கியமான சாதனை ஆகும். வேளாண்மை உற்பத்திப் பெருகி விலைகட்டுப்பாட்டிற்குள் இருந்தால்தான் நமது பொருளாதாரம் சீராக முன்னேறும். உணவுப் பொருள்கள், பஞ்சு, எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தான் நமது வளர்ச்சி அடங்கி உள்ளது. வேளாண்மை உற்பத்தியில் இன்று மிகப்பெரிய சாதனை செய்துள்ளோம். தேவைக்கு மட்டும் உற்பத்தி செய்தால் போதாது. உணவு தானியங்களையும், இன்றியமையாத இதரப் பொருள்களையும் சேமித்துவைக்க வேண்டும். அப்போதுதான் தன்னிறைவு பெறுவதுடன், விலைவாசியையும் கட்டுப்படுத்த முடியும்.

இந்தியாவிலேயே வேளாண்மை வளர்ச்சியில் தமிழகம் தான் முன்னிலையில் நிற்கிறது! இங்குள்ள உழவர்கள் மிகவும் முற்போக்கானவர்கள்! அறிவியல் அடிப்படையான வேளாண்மை வளர்ச்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர்! இந்தியாவில் உள்ள இளம் வேளாண்மைப்பல்கலைக்கழகமாக இது இருந்தாலும், இதன் சாதனைப் பாராட்டத் தக்கது. இந்தப் பல்கலைக் கழகத்திற்கு, வெளிநாட்டு மாணவர்களும், இந்தியா முழுவதிலும் இருந்து மாணவர்களும் வர ஆர்வத்துடன் உள்ளனர் " என்று கூறினார்.

வரவேற்பு உரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துவக்க விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்று மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் உரையாற்றினர். அவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துவக்க விழாவை, தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய விழாவென்று குறிப்பிட்டார். அவர், " இப் பல்கலைக் கழகத்தில் பயிலுகின்றவர்கள் கிராம மக்களுக்குப் பணிபுரிய வேண்டும் என்ற அடிப்படை நோக்குடன் பயில வேண்டும்" என்றும், "கற்ற கல்வியை வைத்துக் கொண்டு தனியாக நிற்கமுடியும் என்ற நினைவுடன் பயிலவேண்டும்". என்றும் மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

"வேளாண்மையைச் சேற்றோடு புரளவேண்டிய ஒரு தொழிலாகக் கருதாமல், கிராம மக்களோடு ஒன்றி அவர்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்" என்றும் அவர் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

சிறப்பு மலர் வெளியீடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டதையொட்டி அச்சிடப் பெற்றிருந்த சிறப்பு மலரை மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டு உரையாற்றுகையில், "1966-67-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி 54 இலட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது 70 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் ஆராய்ச்சியும், கண்டுபிடிப்புகளுமேயாகும். கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் குடத்திலிட்ட விளக்காக இல்லாமல், குன்றின் மேலிட்ட விளக்காக இருக்க வேண்டும்" என்றார்.

"இயற்றலும் ஈட்டலும்
காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள முயற்சியில் ஈடுபட்டுள்ள அரசுக்குத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துணைபுரியும் என்றும், குறிப்பிட்டார்.

பொருட்காட்சி திறப்பு விழா

வேளாண்மைப் பொருட்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் திரு அன்பழகன் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினர். அவர் " வேளாண்மைத் துறை நன்கு வளர்ந்தால்தான் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வேலையுண்டு" என்று குறிப்பிட்டார். பல பயிர், தொடர்ப் பயிர் ஆகியவைகளின் அவசியத்தை விளக்கினர். படிப்பறிவு இல்லாத மக்களிடையே, வேளாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை, புது முறைகளைப் புகுத்த ஆங்காங்கே பொருட் காட்சிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பாரிமுல்லை

மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் " பாரி " என்று மாண்புமிகு முதலமைச்சரால் பயிரிடப்பெற்றப் புதியரக முல்லையை வெளியிட்டு உரையாற்றினர். அவர் தமது உரையில் மைய அரசு இரசாயன உரங்களின் விலையை ஏற்றிய பின்பும், ஏழை உழவர்களின் நன்மையைக்கருதி பழைய விலையிலேயே இரசாயன உரங்களை விற்பனை செய்து வருவதால் எற்பட்ட நட்டம் ரூபாய் 2 கோடியைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கோ. 7. மொச்சை

அறிவாலயம்

இவ்வாறு சீரோடும் சிறப்போடும் துவக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஏழை உழவர்களின் வாழ்வையும் வளப்படுத்தப் போவதால், "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக்காண்போம்" என்ற பேரறிஞர் அண்ணாவின் வழி நடக்கும் டாக்டர் கலைஞரின் அருமுயற்சியால் உருவான அறிவாலயமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை !





வழங்கியோர் பட்டியல்

முந்திய இதழின்படி தொகை	17,04,636	21
தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளர்	14,971	84
மதுரை மாவட்ட ஆட்சியாளர்	30,279	76
நீலகிரி மாவட்ட ஆட்சியாளர்	2,782	00
தஞ்சை மாவட்ட ஆட்சியாளர்	17,891	50
தர்மபுரி மாவட்ட ஆட்சியாளர்	21,336	00
செங்கற்பட்டு உதவி ஆட்சியாளர்	3,448	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீவைகுண்டம்.	2,435	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி.	1,565	00
வணிக வரித்துணை அலுவலர், தஞ்சை-2.	2,300	00
நகர ஊராட்சி இலுப்பூர்-திருச்சி மாவட்டம் நிர்வாக அலுவலர்.	101	00
மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், திருநெல்வேலி.	164	00
வட்டார வளர்ச்சி அலுவலரும், ஊராட்சி அலுவலரும், பூண்டி,	50	00
நகராட்சி ஆணையர், தூத்துக்குடி	241	00
ஸ்ரீ பாடலீஸ்வரர் தேவஸ்தானம், குமாரகுப்பம், வளவனூர், தென்னார்க்காடு மாவட்டம்.	100	00
தருமகர்த்தா, ஸ்ரீ அன்பநாக ஈஸ்வரர் தேவஸ்தானம், கிடங்கல் கோட்டை, திண்டிவனம்.	1,000	00
சேலம் மாவட்ட ஆட்சியாளர்	9,636	50
செயின்ட் ஜோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.	175	00
இந்தியன் நேவி குரு வெஸ்டன் கமாண்டு, பம்பாய்.	562	57
திரு அருணா நமசிவாயம், கொப்பம்பட்டி.	5	00
துணைப்பதிவாளர், திருப்போரூர், செங்கற்பட்டு மாவட்டம்.	25	00
கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப்பணி, தூத்துக்குடி-2.	100	00
லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கம்.	100	00
ஸ்ரீ திருவிக்ரமசாமி தேவஸ்தானம், திருக்கோயிலூர், தென்னார்க்காடு மாவட்டம்.	250	00
மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார நிலையம், நாகலாபுரம்.	20	00
வீர ஆஞ்சனேய சுவாமி தேவஸ்தானம், திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-2.	200	00
மாவட்டக் கல்வி அதிகாரி, கோவில்பட்டி.	85	00
கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி.	1,600	00
கிராமவளர்ச்சி இயக்குநர், சென்னை-1	88,100	00
துணை வணிகவரி அலுவலர், நெல்லை மாவட்டம்.	1,113	56
எம். ஹரிகரன், தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, அரசம்பட்டு.	20	00
நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, தூத்துக்குடிக் கோட்டம்.	1,000	00
கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை, தூத்துக்குடி-2.	50	00
துணை வணிகவரி அலுவலர், அம்பாசமுத்திரம்.	1,475	00
திரு ஜி. சுப்பிரமணியம், தாசில்தார், ஸ்ரீபெரும்புதூர்.	2,114	[illegible]
மொத்தத் தொகை	19,09,933	50

நீலமலையில் ஒளிவெள்ளம்

1971 செப்டம்பர் திங்கள் 25-ஆம் நாள் பச்சைப் பட்டாடை உடுத்துப் பூமித்தாய் புதுமணப் பெண் கோலம் கொண்டு-எழிலார் சிற்பமாக, நெஞ்சைக் கிறங்கவைக்கும் வஞ்சியாக-நீலகிரி மாவட்டமே விழாக்கோலம் கொண்டுவிட்டது. தமிழன்னையின் ஒளி மகுடமான உதகை உவகையால் பூரித்து அழகு நடம் புரிந்து கொண்டிருந்தாள்.

இலக்கியம் படைக்கும் மலை நாடு. இன்பத் தேன் சொரியும் எழிற் பூமி. மலைநாட்டு மண்ணத்தின் பழங்குடி மக்கள் உள்ளத்தில் உவகை மாதாவின் மடியிலே தவழ்ந்து விளையாடும் தமிழியுடன், ஒளி வீசும் கண்களுடன் தமிழ்த்தாயின் தலைமகனை, டாக்டர் கலைஞரை, தமிழக முதல்வரைக் காண-அவருடைய தெள்ளு தமிழ் உரையைக் கேட்கப் பல்லாயிரக்கணக்கில் கூடிவிட்டனர்.

மேட்டுக் குடியினருக்கு மட்டும்தான் உதகை சொந்தமா? அல்ல; அல்ல! ஓட்டைக் குடிசையில் வாழும் உழைப்பாளர் பெருமக்களுக்கும் அது சொந்தம் எனப் பார் அறியப் பறை சாற்றக் கூடிவிட்டனர் பாமர மக்கள் பல்லாயிரக்கணக்கில்!

நீலகிரி மாவட்டம் அனைத்துக் கிராமங்கள் மின் இணைப்பு முழுமை விழா—உதகை காணாத ஒரு புதுமை விழா. மேட்டுக் குடியினரின் விழா பல அங்கே நடந்திருக்கலாம். ஆனால், இன்றுதான் ஓட்டைக் குடிசையில் வாழும் மக்களின் உயர்வுக்கு ஒரு விழா நடத்தப்படுகிறது. இது ஏழை எளிய மக்களின்· சாமான்ய மக்களின் அரசு என்ற இலட்சியம், செயல் வடிவம் பெற்றுத் திகழும் ஒப்பரிய பெரு விழா.

நீலவானம், நீல மலை பச்சைப் பசேலென்று பசுமை கொஞ்சும் எழில் பூமி. எங்கு பார்த்தாலும் மின் விளக்குகள், அழகுப்பந்தல், வண்ணக் கொடிகள், கொள்ளை அழகுக் குவியல்!

''பொன்சாரம் இட்டிழைக்கும் பூமான்கள் வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலை மாற்றி
எழுபத்தி ரண்டுக்குள் எங்கணுமே மின் இணைப்பு
என் தமிழ்த் திருநாட்டில் ஏற்படவே உழைக்கின்றோம்''

தமிழக முதல்வரின்-கலைஞரின் கனவு நனவாகிக் கொண்டு வருகிறது.

மின்வாரியத் துறையினர் ஏற்பாடு செய்திருந்த நினைவுச் சின்னத்தை முதல்வர் திறந்து வைத்தார். முதலமைச்சர் அவர்கள் மின்சார சுவிட்சை அழுத்திய உடனே திரை விலகி, ஒரு கிராமத்தில் மின் வசதி செய்யப்பட்டுள்ளது போன்றும், அக் கிராமத்தின் மேல் பகுதியில் அண்ணா அவர்கள் ஆசி கூறுவதுபோலவும், அந்தக் கிராமத்திற்கு மின் வசதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைப்பது போன்றும் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னம் தெரிந்தது. விழாவிற்கு வந்திருந்த மக்கள் கூட்டம் அக்காட்சியைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியில் மிதந்தது!

அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு அளிப்பதிலே செங்கை மாவட்டம் முந்திக் கொண்டது; ஆலந்தூரிலே அழகு விழா எடுத்துப்பெருமை சேர்த்துக் கொண்டது. இரண்டாவது இடத்தை நீலகிரி மாவட்டம் தட்டிக் கொண்டது. நெல்லையில் இந்தப் பணி முற்றுப் பெற்றுவிட்டது என்ற தேனான செய்தி விழாப் பந்தலில் அறிவிக்கப்படுகிறது.

''அடுத்து நெல்லையில் அனைத்துக் கிராமங்கள் மின் இணைப்பு முழுமை விழா நடைபெறும். அதற்கடுத்த திங்களில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இதே மாதிரி விழா நடைபெறலாம். இப்படித் தமிழகத்தில் திங்கள் தோறும் மின் இணைப்பு முழுமை விழாக்கள் நடைபெற இருக்கின்றன.

''1972-க்குள் தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமமே இல்லை'' எனும் நிலையை நாம் வேகமாக அடைந்து கொண்டிருக்கின்றோம்.

''இந்தியாவிலே இதில் நமக்குப் பெருமை உண்டு.'' சிலர் கேட்கக் கூடும்.— 'இந்தியாவிலேயே முதன் முதலாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தந்தது அரியானா மாநிலம் தானே ? இதை அறியாதவரா கருணாநிதி?'' என்று !

''ஆனால், அரியானா மாநிலம், இந்த நீலகிரி மாவட்டமும் செங்கை மாவட்டமும் இணைந்தால் எவ்வளவு பெரிய இடமாக இருக்குமோ அவ்வளவு பெரிய இடம்தான் !

''ஆனால், நாமோ நாலரைக்கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய மாநிலத்திற்கு ஒளி வழங்கும் திட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறோம். இதற்காகப் பணியாற்றிய மின்துறை அமைச்சர் அவர்களையும், பொறியாளர்களையும், கணக்காளர்களையும், பிற தொழிலாளர்களையும் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.''

கலைஞரின் உரை கேட்டு எழுந்த கரவொலி அந்த நீலகிரி மலையையே அதிர வைக்கிறது.

தமிழகத்தின் உச்சியில் நின்று வீரக் குரல் எழுப்புகிறார் தாயகத்தின் முடிசூடா மன்னன் !

''கடந்த 33 ஆண்டுகளில் தமிழகத்தில் 40 சத விகிதம்தான் மின் இணைப்புச் செய்யப்பட்டது. ஆனால் கழக அரசில் நாலைந்து ஆண்டுகளில் 60 சத விகித மின் இணைப்புத்தர இருக்கிறோம்.

''திருச்சியிலிருந்து விமானமூலம் அமைச்சர்கள் அன்பிலும், மாதவனும் நானும் வந்தபொழுது, தென் ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து சென்னை வரை ஒரே மின் விளக்கு மயமாக்கிக் கீழே இருப்பதை நான் அவர்களுக்குக் காட்டினேன்.

''வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் அனைத்தும் பூமியில் கொட்டிக் கிடக்கின்றனவோ-ஒளி விடுகின்றனவோ-என எண்ணும் வகையில் அக்காட்சி இருந்தது.

''சாதாரணமானவர்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக உழைப்பவர்கள் என்று கூறியவர்கள்; படகர், தோடர், ஆகியோரது முன்னேற்றத்திற்காக உயிரைப் பணயம் வைத்துப் பாடுபடுவோம் என்று கூறியவர்கள் நாங்கள். இப்படிப்பட்ட அரிய சாதனையைச் செய்ய முடிந்ததே என இதயம் பெருமிதத்தால் விம்மிற்று'' என்று உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார் கலைஞர். கூடியிருந்த மக்கள் கூட்டம், கரவொலி எழுப்பி அவருடைய ஒவ்வொரு சொல்லையும் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக நிமிர்ந்து நிற்கிறது.

எத்தனை சிரமமானதாக இருந்தாலும் சரி-இடர்கள் எத்தனை ஏற்படினும் சரி-ஏழை எளிய மக்களின் ஏற்றமே தமிழக அரசின் இலட்சிய கீதம். நீலகிரி மாவட்ட மின் வசதி முழுமை விழா அதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு !

நீலகிரி மாவட்டம் தமிழகத்தின் மேற்கு ஓர எல்லைக் கோட்டில் அமைந்துள்ள சிறு மாவட்டம். தமிழகத்தின் ஒளிமகுடமெனத் திகழும் இந்த மலை நாட்டில் எங்கு நோக்கினும் இயற்கை எழில்! சிந்துபாடும்—சிற்றாறு, சீறிடும் காட்டருவி, கனிகுலுங்கும் பழத்தோட்டங்கள், கண்கவர் மலர்ச் சோலைகள் இன்னபிற இயற்கைச் செறிவு எங்கணும் நிறைந்து, அழகின் திருவுருவாய் இயற்கை அன்னை எழில் நடம் புரியும் கவின்மிகு காட்சிகள் நிறைந்த மாவட்டம்.

ஆனால், அடர்ந்த காடுகளும், மலைகளும், பாதை வசதி அற்றதும், பரவலுமான கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் கம்பிகளை இழுக்கும் பணி மிகவும் கடினமானது. சில இடங்களில் காட்டு யானைகள், நிறுத்தப்பட்ட கம்பங்களைச் சாய்த்தும் கீழே தள்ளியும் மின் பணியாளர்களுக்கு இன்னல் பல விளைவித்தன. தொடர்ந்து மழை பெய்யும் பூமி. பாதை வசதிக் குறை—இடர்ப்பாடுகள் பல இருந்தும், எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடித்து விட்டது மின் வாரியம். நீலகிரி மாவட் டத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கும் திட்டத்தைச் செய்துமுடிக்க ஆன செலவு சுமார் 40 இலட்சம் ரூபாய்!

2,542 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 4,913 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட நீலகிரி மாவட்டத்தில் 870 கிராமங்களும் சிற்றூர்களும் அடங்கியுள்ளன.

புதிய அரசு பொறுப்பேற்று, சென்ற நான்காண்டு களில் மட்டும் இந்த மாவட்டத்தில் 708 கிராமங் களுக்கும் சிற்றூர்களுக்கும் அதாவது மொத்தத் தில் 81 சதவிகிதம் மின் வசதி அளிக்கப்பட்டிருக் கிறது. 1967 வரை இந்த மாவட்டத்தில் மின் இணைப்புத் தரப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் 48 தான்! கடந்த நான்காண்டுகளில் மட்டும் மாவட் டத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர் களுக்கும் மின் இணைப்பு அளிக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அதுவும், சிறப்பாக 1—10—1969 முதல் 31—7—1971 வரை, அதாவது 1 வருடம் 10 மாதங்களில் மட் டும், இந்த மாவட்டத்தில் 481 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் தெரு விளக்குகளுக்கான மின் இணைப்புத் தரப்பட்டு, கலைஞரின் ஆட்சியில் இன்று நீலகிரி மாவட்டத்தில் ஒளி பெறாத கிராமங் களில்லை—சிற்றூர்களில்லை என்றதொரு சாதனையை ஈட்டித்தந்துள்ளது, மின் வாரியம்.

இவை தவிர, அம்மாவட்டத்தில் 43 அரிசனக் குடியிருப்புகளுக்கும் 100 மலைவாழ் மக்கள் வசிக் கும் குடியிருப்புகளுக்கும் மின் வசதி அளிக்கப்பட் டிருக்கிறது.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி 1933-ல் தொடங் கியது. அன்றிலிருந்து 1966 வரை இடையிலான 33 ஆண்டுகளில் 20 ஆயிரம் கிராமங்கள்தான் மின் வசதி பெற்றன.

ஆனல் 1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று நாலரை ஆண்டுகளில் மட்டும், 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் மின் வசதி பெற்றுள்ளன.

இத்தகைய மாபெரும் சாதனைக்கும், சிறப்பான முன்னேற்றத்திற்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு ஓ. பி. இராமன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும் பேரார்வமும், மக்களுக்குத் தொண்டு புரியவேண்டு மென்ற நல்லெண்ணமும், இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு எத்தனை இடர்வரினும் துவண்டு விடாமல் இடையறாது பாடுபட்டுவரும் மின் வாரி யத்தைச் சேர்ந்த அனைவருடைய உழைப்பும்தான் காரணம் என்பது வெள்ளிடை மலை.

உழைப்பதிலே மட்டுமல்ல, நன்கொடையளிப் பதிலும் மின் வாரியத்தைச் சார்ந்த அனைவரும் முன்னணியில் உள்ளார்கள் என்பதைப் பிச்சைக் காரர் மறுவாழ்வு நிதிக்கு அவர்கள் அளித்துள்ள நன்கொடை எடுத்துக் காட்டுகிறது. முதல் தவணை யாக ரூபாய் 2,02,000 நிதியளித்த மின் வாரி யம், இரண்டாவது தவணையாக 31,000 ரூபாயை நீலகிரி மாவட்ட மின்வசதி முழுமை விழாவின் போது வழங்கியுள்ளது.

உதகையில் அன்று மலர்க் கண்காட்சி திறப்பு விழா-மின் இணைப்பு முழுமை விழா-வணிக வரி அலுவலகத் திறப்பு விழா இப்படி ஒரே விழாக் கோலம்!

பணி முடிந்து, உள்ளம் துள்ள, மலையை விட்டுக் கீழே இறங்கு கிறோம். வளைந்து வளைந்து செல் கிறது பாதை; வண்டியும் வளைந்து வளைந்து கீழே கீழே இறங்கிக் கொண்டே இருக்கிறது. வளைவான பாதையின் இருமருங் கிலும் எங்குப் பார்த்தாலும் பசுமை வளம் கொழிக்கிறது; எழில் கொஞ்சுகிறது.

உதகையிலே மலர்க் கண் காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய கலைஞரின் கருத்தோவியம் இதயத்திலே ரீங்காரமிடுகிறது...

''மலர்களில் மணமுள்ள மலரி ருக்கும்; மணமில்லாத மலரிருக் கும். சில மலர்கள் அழகாக இருக் கும். மணம் இருக்காது. சிலமலர் களில் மணம் இருக்கும். அழகு இருக்காது. அழகும் மணமும் உள்ள மலர்களைப் பறிக்க கரம் நீட்டும்போது முள் குத்தும்.

இந்த நாட்டில் ஏழை எளிய-தாழ்த்தப்பட்ட பின்னடைந்த மக்கள் மணமில்லாத மலர்களாக இருக்கிறார்கள். ஆனல், நல்ல மணம் உள்ளவர் களாக அவர்கள் இருக்கிறார்கள். மணமில்லாத அவர்கள் வாழ்க்கையில் மணத்தை ஏற்றுகின்ற பொறுப்பை தி.மு. கழக அரசு ஏற்றிருக்கின்றது''

கலைஞரின் சொல்லோவியம் கேட்டு நெஞ்சு இனிக்கிறது.

வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதை. ஒரு திருப்பம். சற்றுத் தள்ளி ஒரு புள்ளிமான் ஓடு கிறது. அதன் பின்னல், ஒரு மலைவாழ் மங்கை. என் கூட வந்த நண்பருக்கு ஒரே மகிழ்ச்சி! இப் பொழுதுதான் அவர் 'ஊட்டிக்கு' முதல் தடவை யாக வருகிறார்.

மானைக்கண்டு வண்டியிலிருந்து துள்ளி எழுகிறார் அவர். சென்னையில் மிருகக் காட்சிச் சாலையில்தான் அவர் மானைப் பார்த்திருக்கிறார்.

இயற்கை அன்னை தாலாட்டுப் பாடும் இந்த நீலகிரி... அதனுடைய ஒப்பற்ற எழில்...

என் நெஞ்சு எங்கெங்கோ ஓடுகிறது. மருளும் மானையும் மிரட்சிப் பார்வை வீசும் மங்கையையும் நெஞ்சில் வைத்துப் பார்க்கிறேன்... கலைஞரின் கருத்தோவியம்—அந்த ஒப்பற்ற பேருரை காது களில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்க . . .

காலங்களையெல்லாம் கடந்து, நெஞ்சு சங்க காலத்திற்கே போய் விடுகிறது. பிறர் துன்பம் அடைவதைக் காணச் சகியாமல் தன்னையே தியா கம் செய்து கொள்கிற பேராண்மையைப் படம் பிடித்துக் கொடுக்கும் புறநானூற்றுக்காட்சி ஒன்று என் கண் முன்னே நிழற்படம் போல் ஒளி விடு கிறது. காட்டுப் பகுதியிலே ஒரு குடிசை. பெண் மான் ஒன்று குடிசையில் முகப்பில் கட்டப்பட்டுள் ளது. வேட்டைக்குப் போய் விட்டு வந்த குடும்பத் தலைவன்—வேடன்—களைத்துப் போய் குடிசையின் வெளியே முற்றத்தில் படுக்கிறான். இயற்கை தாலாட்ட அவன் அசதியில் கண்ணயர்ந்து விடு கிறான். அமைதியான பிற்பகல் நேரம். எந்தவிதச் சந்தடியுமில்லை. கட்டப்பட்டுள்ள பிணை மான் அருகே கலைமான் ஒன்று அதை நெருங்கி அதனு டன் விளையாடுகிறது. இரண்டும் காதலர்கள்! குடிசையின் வெளியே உள்ள மெழுகிவிட்ட மண் தரையில் கொஞ்சம் தினை எடுத்துக் காயவைத்திருக் கிறாள் அந்த வீட்டின் தலைவி—வேட்டுவச்சி. வெளியே சத்தம் கேட்டுக் குடிசையிலிருந்து வரு கிறாள் அவள். காயவைத்துள்ள தினையை ஒரு கோழி வந்து கொத்திக் கொத்தித் தின்கிறது. அவ ளுக்கு ஒரே பதட்டம்! அந்தத் தினைதான் இரவு ஆகாரம். அதை விட்டால் அன்றைக்கு வேறு ஆகாரம் குடிசையில் இல்லை. அவ்வளவு ஏழைமை! அதையும் இந்தப்பாழாய்ப்போன கோழி சாப்பிட்டு விடுகிறதே என்று அவளுக்கு ஒரே ஆத்திரம்! கோழியை விரட்டத் துடிக்கிறாள். ஆனல் அவள் நெஞ்சம் துணியவில்லை. ஒரு பக்கத்தில் தன் அருமை நாயகன் அயர்ந்து தூங்குகிறான். கோழியை விரட் டினல் அந்தச் சத்தத்தில் உழைப்பால் களைப் படைந்து உறங்கும் கணவன் எழுந்து விடுவானே. அவன் தூக்கம் கெட்டுவிடுமே என்ற கவலை அவ ளுக்கு. அது மட்டுமா? அன்பப் பிணைப்பால் மகிழ் ந்து இருக்கும் அந்த இரு மான்கள் . . . சத்தம் கேட்டால் கலைமான் ஓடிவிடும். மிருந்த சிரமப் பட்டுப் பயந்து பயந்து வந்து தன் காதலியுடன் உற வாடும் அந்தக் கலைமான் ஓடிவிடும். அந்தப் பயத் தில் அதற்குப் பிறகு அது திரும்பி வராமலே கூடப் போய்விடலாம். அந்த அன்புள்ளங்களைப் பிரிக்க அவள் மனம் ஒப்பவில்லை. பிறர் மனம் சஞ்சல மடையக் கூடாது என்ற நல்ல உள்ளம் அவளுக்கு. அந்தத் தினையைத் தவிர வேறு ஆகாரம் இரவுக்கு இல்லை என்ற நிலையில் கூட, கோழியை விரட்டா மல் அப்படியே இருந்து விடுகிறாளாம்.

பிறர் துன்பம் கண்டு வருந்துவது நல்ல மனம். பிறர் துன்பம் களையத் தன்னையே தியாகம் செய்து விடுவது அதைவிட நல்ல மனம்.

இந்த உயரிய பண்பைப் படம் பிடித்துக் காட்டும் புறநானூற்றுக் கருத்தோவியம் தான் கலைஞரின் உரை கேட்டு என் நினைவிற்கு வருகிறது. மாட மாளிகையில் இருந்தாலும் கோட்டையில் கொலு வீற்றிருந்தாலும் ஏழை எளிய மக்களின் வாழ்விலே ஏற்றம் காணத் துடிக்கும் நல்ல உள்ளம்-வளம் கொழிக்கும் நீலகிரியிலே இருந்தாலும் வறண்டு கிடக்கும் இராமநாதபுர மாவட்டத்தை நினைத்து நெக்குருகும் கலைஞரின் தியாக உள்ளம்-தமிழ்க் கவிஞர்களின் இலட்சிய புருடனாக என் கண்முன்னே கலைஞர் . . . .

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

... 2

நினைவு அசை போடுகிறது. ''என்ன தூக்கமா-மேட்டுப்பாளையம் வந்து விட்டோம்: எழுந்திருங் கள்'' என்ற நண்பரின் குரல் சிந்தனை ஓட்டத்தைக் கலைக்கிறது.

''அடுத்து நெல்லை அழைக்கிறது. நெல்லை மா வட்ட மின்இணைப்பு முழுமை விழாவிற்குத்தயாராக இருங்கள்'', என்கிறார் நண்பர்.

அதைவிட வேறு எனக்கென்ன வேலை! கரும்பு தின்னக் கூலியா வேண்டும்?

—வ. ச.

அண்ணல் விழாவில்

அணி திரண்ட சென்னை நகர்!

நேரம் நடு நிசியைக் கடந்துவிட்டது.

ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது சென்னை நகரின் அண்ணா சாலை. ஆறு சிறுவர்கள், வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் வேக வேகமாக நடந்து செல்கிறார்கள். எல்லாருமே பதினைந்து வயதுக்குட்பட்டவர்கள் தான்.

பொழுது விடிவதற்குள் அவர்கள் பத்துப் பனிரெண்டு மைல் நடந்தாக வேண்டும். வீட்டுக்குப் போய்ச் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டுக் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்படுவதற்குத்தான் நேரம் சரியாக இருக்கும்.

ஆம். அந்த ஆறு சிறுவர்களும் பள்ளி மாணவர்கள். அனகாபுத்தூரைச் சேர்ந்தவர்கள்.

முந்திய மத்தியானம் இரண்டு மணிக்கு அவர்கள் பெற்றோர்களின் அனுமதியுடன் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தார்கள். வேறு எங்கும் போகாமல், எதிலும் நாட்டம் கொள்ளாமல் அண்ணா சாலையில் இருந்த அரசினர் கலைக்கல்லூரிக்கு வந்து விட்டார்கள்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சி. 1968-ல் உலகத் தமிழ் மாநாட்டின் போது அந்த இடம் பெற்றிருந்த விழாக் கோலத்தை அவர்கள் இப்போதும் கண்டனர்.

பிற்பகல் மணி இரண்டரை. நல்ல வெயில். அந்த வெம்மையைப் பொருட்படுத்தாமல், நகரின் நாலாபுறங்களிலிருந்தும் இளைஞர், முதியவர், ஆடவர்-பெண்டிர் என்று மக்கள் புற்றீசல்களைப் போல் கலைக்கல்லூரிக்கு அருகே வந்து குழுமியிருந்தனர்.

இருபுறங்களிலும் பந்தல்கள். வண்ணத் தோரணங்கள். நீண்டு கிடக்கும் அண்ணா சாலையின் இருமருங்கிலும் மக்கள் வெள்ளம். அந்தச் சாலையே தனியானதோர் கம்பீரத்துடன் விளங்கியது.

சிறுவர்களுக்குக் கண்களும்-நெஞ்சும் நிறைந்துவிட்ட மகிழ்ச்சி. எவ்வளவு கூட்டம் ...... எத்தகைய விழாக் கோலம்! வியப்புப் பொங்கப் பார்த்துப் பார்த்து அதிசயித்துப் போகிறார்கள்.

அந்தச் சிறுவர்களுக்கு மட்டும் தான் அதிசயமா? "கண்டறியாதன கண்டோம்" என்ற பெருமிதம் மட்டுமா? இல்லை .... அவர்களுக்கு ஒவ்வொருவர் உள்ளத்திலும் அந்த உணர்வுதான்! அதே சமயத்தில் ஒரு கேள்விக்குறியும் கூட!

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது— எந்தவொரு நாளிலாவது இந்த விழா இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப்படுமா?

இந்த விழாதான் என்ன?

உலக உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் 103-ஆம் பிறந்த நாள் விழா. தாரணி மாந்தர் அனைவரும் தலைவணங்கிப் போற்றிய அந்தத் தன்னிகரற்ற தலைவன் பிறந்த நாளில் தமிழக அரசு எடுத்திட்ட தனிப் பெரும் விழா.

ஏந்திய இரண்டு குண்டுகளால் கொள்கைக்கு உயிர் கொடுத்தார் காந்தியடிகள். அந்தக் குணக்குன்றினைத் தமிழக மாந்தர் ஒருபோதும் மறக்கமாட்டார் என்னும் நன்றி உணர்வை நிலைநிறுத்திக் காட்டியது தமிழக அரசு—அந்த ஒரு நாள் விழாவில்.

விழா என்னவோ ஒரு நாள் தான். ஆனால் எத்தனை நிகழ்ச்சிகள்—எத்தனை சிறப்புகள்!

* * *

அலை வீசிச் சிரிக்கும் ஆழ் கடலுக்கு அருகே சிலையாகித் தமிழர்தம் நெஞ்சில் நிலையாக நிற்கிறார் அண்ணல்.

காலை நேரம். தமிழகத்தைப் பொன்மயமாக்கும் உதயசூரியன் மேலெழும்பி வந்துவிட்டான். உற்சாகம் கரை புரண்டோட ஒரு பெருங்கூட்டம் அந்தச் சிலைக்கு அருகே காத்திருக்கிறது.

இன்னும் சிறிது நேரத்தில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கு வருவார்கள். அண்ணலின் சிலைக்கு அழகு மலர் மாலை அணிவிப்பார்கள். பின்னர் அங்கிருந்து வள்ளுவர் முனைவரையில் "அமைதி நடையைத்" தொடங்குவார்கள் என்று ஆர்வத்தோடு காத்திருந்த கூட்டம் அது.

அதன்படி முதல்வர் வந்தார்— இந்திய நாட்டின் மூத்த மகனுக்கு மாலை அணிவித்தார். பின்னர் அனைத்துலக இளைஞர் அமைதி அணியினருடன் அவரது "அமைதி நடை" தொடங்கியது. அது இந்த விழாவின் தொடக்கமாகும்.

அதே சமயத்தில் அரசினர்த் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் ராட்டைகள் சுழலத் தொடங்கின. சக்கர வடிவான அந்தச் சிறு கருவியைக் கொண்டு சக்தி மிகுந்த ஒரு சாம்ராஜ்யத்தையே வெற்றி கண்டவரல்லவா அண்ணல் காந்தியடிகள்!

அந்த நினைவாக—அவருக்கு அஞ்சலியாக மாலை வரை இடைவிடாது நடைபெறுவதற்கான நூற்பு வேள்வியும் அந்தக் காலைப் பொழுதில் தொடங்கியது.

பெருமகனுக்கு எடுத்த பெரிய விழாவின் எளிமையான தொடக்கம்.

* * *

அரசினர் கலைக்கல்லூரி அருகே ....மணி 4·15.

அணிவகுத்தாற்போல் நிற்கும் ஆயிரமாயிரம் மக்களுக்கு மத்தியில் சிக்கிக் கொண்ட அந்த ஆறு சிறுவர்களும் முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்து இடம் பிடித்துக் கொள்கிறார்கள். இரு புறங்களிலும் பார்க்கிறார்கள். வெள்ளம்—வெள்ளம்— மக்கள் வெள்ளம்.

அண்ணா சாலையின் ஒரு கோடியில் சிறிய புள்ளிகள் போல் இரண்டு கார்கள் வருவது தெரிகிறது. தொடர்ந்து கை தட்டலும்—வரவேற்பு முழக்கமும் ...... மகிழ்ச்சி ஆரவாரமும்.

அறிவிப்பு கேட்கிறது.

"இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும்—யாரும் கொண்டாடாத அளவுக்குக் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவினைத் தமிழகத்தில் சிறப்புறக் கொண்டாடுவதற்குக் காரண நாயகராம் முதல்வர் டாக்டர் கலைஞர் வந்து கொண்டிருக்கிறார் . . ."

முதல்வர் அவர்கள் வந்து அமர்ந்த சில மணித்துளிகளில் மேதகு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் வந்து சேர்ந்தார்கள். முதல்வர் அவர்களின் முறைமையான வரவேற்புரைக்குப் பின்னர் ஆளுநர் ரத்தினச் சுருக்கமாகப் பேசினார்.

"தமிழ் மக்களின் பேரன்புக்குப் பாத்திரமான மக்கள் தலைவர் ஒருவர் இன்று முதலமைச்சராக இருக்கிறார். அவரது தலைமையின் கீழ்த் தமிழக அரசானது இவ்வளவு சீரும் சிறப்புமாகக் காந்தி அண்ணலின் பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடுவதால், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத பெருமை தமிழ் நாட்டிற்குக் கிட்டியுள்ளது" என்றார் ஆளுநர்.

அவரது சிற்றுரை முடிந்ததும் நெடுந்தொலைவிலிருந்து சிந்தை-அணு ஒவ்வொன்றினையும் சிலிர்க்கச் செய்திடும் நாயன ஓசை கேட்டது.

அத்துணை மக்களும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு வந்து கொண்டிருக்கிறது. அந்த அணிவகுப்பினை முன்னின்று நடத்திவரும் அரிய வாய்ப்பினைத் திருவையாறு நாதசுரக் கல்லூரி மாணவர்களுக்கு அளித்திருந்தது தமிழக அரசு. ஏனெனில் நாதசுர இசைக்கலை, தமிழர்களின் பழமையான கலைகளில் ஒன்றல்லவா!

முன்பெல்லாம் குடியரசு நாளில் மட்டும் தான் இத்தகைய அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு நடைபெறும். ஆனால் இன்றையத் தமிழக அரசானது, இந்தக் குடியரசு நாளுக்கே காரணமான குணக்குன்றும் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவிலும் அலங்கார வண்டிகள் அணிவகுப்பினை ஏற்பாடு செய்துவருகிறது.

அணிவகுப்பில் வந்த அலங்கார வண்டிகள் ஒன்றா-இரண்டா? ஐம்பதுக்கும் மேல். அரசின் பல்வேறு துறைகளோடு, பல தனியார் நிறுவனங்களின் சார்பில் இந்த வண்டிகள் அணிவகுப்பட்டன.

ஏ. எல். எஸ். நிறுவனம் ஏ. வி. எம். நிறுவனம், மகாலிங்கம் நிறுவனம், அசோக் லேலண்டு நிறுவனம், வாகினி ஜெமினி, சத்யா திரைப்படப் பிடிப்பு நிறுவனங்கள், ஒமேகா கேபிள்ஸ் நிறுவனம், பிரிட்டானியா நிறுவனம், சத்ய நாராயணா நிறுவனம், இ. ஐ. டி. பாரி நிறுவனம், அமால்கமேஷன்ஸ் நிறுவனம், பின்னி நிறுவனம் ஆகிய தனியார்த் துறை நிறுவனங்கள் தமிழக அரசு கொண்டாடிய இந்த விழாவில் சிறப்பான பங்கேற்று அண்ணலுக்குத் தங்கள் அஞ்சலியையும் தெரிவித்துக் கொண்டன.

ஒவ்வொரு அலங்கார வண்டியும் கண்களுக்கு மட்டுமல்ல— கருத்துக்கும் விருந்தாக அமைந்தது.

அண்ணலின் அன்புக் கொள்கையை ஒரு வண்டி அழகுற விளக்கியதென்றால் — அரிசனங்களை அழைத்துக் கொண்டு அவர் ஆலய நுழைவு நடத்தியதை மற்றொரு வண்டி சித்திரித்தது.

ஒரு வண்டியில் உப்புச்சத்தியாக்கிரகம்—மற்றொரு வண்டியில் உரிமை வேண்டி அவர் நடத்திய அமைதிப் போராட்டம்.

அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளை அணு அணுவாக ஆய்ந்து எடுத்ததுபோல், ஒவ்வொரு வண்டியும் ஒரு கருத்துக் கருவூலமாகவே அமைந்திருந்தது.

காந்தியடிகளின் சமுதாய—பொருளாதார—கிராம முன்னேற்றக் கொள்கைகளைத் தமிழக அரசு எந்தெந்த வடிவில் எவ்வளவு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது என்பதைத்—தமிழக அரசின் பல்வேறு துறைகளின் அலங்கார வண்டிகள் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டிய அழகே தனி.

வண்டிகளின் அணிவகுப்பின் இடையே, பள்ளி மாணவர்கள்——கல்லூரிக் காளையர்கள்——சாரணர் — மகளிர் — தேசிய மாணவர்ப் படையினர்—சீரணிப் படையினர் என்று பலரும் அணிவகுத்து வந்த சிறப்பே சிறப்பு. . . !

இந்த அணிவகுப்பானது குறிப்பிட்ட ஒரு இடத்தைக் கடப்பதற்கு ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் ஆயிற்று. அண்ணா

சாலே, வாலாஜா சாலே, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலே, பைகிராப்ட்ஸ் சாலே வழியே இந்த அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு கடற்கரைக்கு வந்து சேர்ந்த பொழுது—

நீலத்திரை கடலுக்குக் நிகரான மக்கள் கடல் ஒன்று சீரணி அரங்கத்தின் முன்பு குழுமியிருந்தது.

சீரணி அரங்கம் : அதன் உள் சுவரில் பெரிய அளவில் காந்தியடிகளின் புன்னகை முக ஓவியம் . . சுற்றிலும் அலங்காரச் சர விளக்குகள் — கண்டவர் மெய் சிலிர்த்தனர்.

தொகை தொகையாக வந்து குழுமி விட்டனர் இலட்சக்கணக்கான மக்கள்—சிறிது நேரத்தில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகி விடும் என்ற ஆர்வத்தில். அது வெறும் பொதுக்கூட்டம் அல்ல—அண்ணல்காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவினைத் தனிப்பட்டதோர் அரசியல் கட்சியின் விழாவாக மட்டும் ஆக்கிவிடாமல், அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ளும் விழாவாக ஆக்கிய தமிழக அரசின் மாண்பினை உணர்த்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒருமைப்பாட்டுக் கூட்டம் அது.

'' நீராரும் கடலுடுத்த'' என்று தேனெனும் குரலெடுத்துத் திரு டி. எம். சௌந்தரராஜன் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடிய பின்னர், பொதுக் கூட்டம் தொடங்கியது.

தொடக்கத்திலேயே. ஆளுநர், சட்டப்பேரவைத் தலைவர், கல்வி அமைச்சர் ஆகிய மூன்று நடுவர் தீர்ப்பின்படி, அலங்கார வண்டிகள் அணிவகுப்பில் கலந்து கொண்ட அரசுத் துறை வண்டிகளுள் மீன் துறைக்கு முதற் பரிசும், கூட்டுறவுத் துறைக்கு இரண்டாவது பரிசும், மின்சார வாரியத்திற்கு மூன்றாவது பரிசும் தனியார் துறை வண்டிகளுள் அமால்கமேஷன்ஸ் நிறுவனத்திற்கு முதற் பரிசும், சத்தியா ஸ்டுடியோவினருக்கு இரண்டாவது பரிசும், ஏ. எல். எஸ் நிறுவனத்தினருக்கு மூன்றாவது பரிசும் வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காந்தியடிகளுக்கு ஒரு காணிக்கையும் செலுத்தினார்.

அது அன்புக் காணிக்கை; அரிசன மக்களுக்கு உதவிடும் அரிய காணிக்கை!

கடந்த ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாள் விழாவின் பொழுது முதல்வர் ஓர் அறிவிப்புக் கொடுத்தார். மாவட்ட அளவில் கல்லூரிப் புகுமுகவகுப்பில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறுகின்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கும், மாணவிக்கும் தமிழக அரசு பரிசுப் பணமாக ரூபாய் 500-ம், தொடர்ந்து மேற்படிப்புப் படிப்பதற்காக மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஆண்டொன்றுக்குப் பத்து மாதங்களுக்கு ஐந்தாண்டுக்கால அளவுக்குத் தமிழக அரசு உதவி நிதியும் கொடுக்கும் என்று கடந்த ஆண்டில் முதல்வர்கூறிய அறிவிப்புக் கேற்ப,ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவிக்குக் காந்தியடிகள் நினைவுக் கல்விச் சலுகை வழங்கப்பட்டது.

இதற்குப் பின்னர் சட்டமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் அருமையான சொற்பொழிவு தொடங்கியது.

முஸ்லீம் லீகைச் சேர்ந்த திருப்பூர் மொகிதீன், நிறுவன காங்கிரசைச் சேர்ந்த திருமதி டி. என். அனந்தநாயகி, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் எச்.வி. ஹண்டே, தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த திரு டி. கே. சண்முகம், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு ஏ. ஆர் பெருமாள், உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த திரு எஸ். எஸ். ராமசாமி, சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் காந்தியடிகளின் சீரிய லட்சியங்கள் பற்றியும் அவர்தம் பிறந்த நாள் விழாவினைச் சீரும் சிறப்பும் மிளிரக் கொண்டாடும் தமிழக அரசின் நன்முயற்சி பற்றியும் பாராட்டிக் கருத்துரை வழங்கினார்கள்.

தி.மு.க. சார்பில் கருத்துச் சிறப்புரை வழங்கிய கல்வி அமைச்சர் நாவலர் பேசும் பொழுது—

'' நான் இப்போது ஒரு கருத்தைப் பற்றி எழுதும் போது, இதற்கு முன்னால் என்ன எழுதினேன் என்பதை ஒத்திட்டுப் பார்ப்பதில்லை. நிலைமைகள், சூழ்நிலைகள் இவற்றிற்கேற்பக் கருத்துக்களும் மாறக் கூடியனவே. அந்த மாறுபாட்டிற்கு அந்தந்த நேரத்தில்—சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பிரதிபலிப்புகளே அமைந்திருக்க முடியும். . . . . . . '' என்று காந்தியடிகள் ' யங் இந்தியா ' பத்திரிகையில் எழுதியிருந்ததை எடுத்துக் காட்டி, '' தமிழக அரசானது இயன்றவரையில் காந்தியடிகளின் கொள்கையை எந்தெந்த வகையில் கடைப்பிடித்து வருகிறது '' என்பதை அழகுற விளக்கினார்.

அடுத்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசினார்கள்.

அவருக்கே உரிய சொல் நயம், உணர்ச்சி வேகம்—வாதத்திறமை இவற்றோடு முதல்வர் வழங்கிய பேருரை காந்தியடிகளின் கனவைத் தமிழக அரசு நனவாக்கி வரும் சிறப்பினை எடுத்துக் காட்டியது.

முதல்வரின் பேருரை, கருத்துக்கு அளித்த விருந்தினைத் தொடர்ந்து இசையமைப்பாளர்களாகிய திருவாளர்கள் சங்கர்-கணேஷ் ஆகியோர் தம் குழுவினருடன் செவிக்கு விருந்தளிக்கத் தொடங்கினார்கள்.

திரு டி.எம். சௌந்தரராசன் திரு சீர்காழி கோவிந்தராசன், திரு வீரமணி, செல்வியர் எல். ஆர். ஈஸ்வரி, ராதா, அஞ்சலி ஆகியோரின் காந்தியடிகளைப் பற்றிய இன்னிசைப் பாடல்களுக்குப் பிறகு நாட்டுப் பண் பாடி, பொதுக் கூட்டமும்—அத்துடன் காந்தியடிகளின் 103-வது பிறந்த நாள் விழாவும் முடிந்த பொழுது இரவு பதினொரு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் கூட்டம் காந்தியடிகளின் இனிய நினைவுகளைச் சுமந்து கொண்டு கலைந்து சென்றது.

அனகாபுத்தூரிலிருந்து வந்திருந்த அந்த ஆறு சிறுவர்களும், தங்கள் ஊரை நோக்கிப் புறப்பட்டனர்.

காந்தியடிகள் வாழ்ந்த தலைமுறையைச் சேர்ந்தவர்களல்ல அவர்கள். அதற்குப் பிறகு தோன்றிய ஒரு இளந் தலைமுறை. இளந் தலைமுறையினரின் உள்ளங்களில் காந்தியடிகளின் நினைவு என்னும் தீபத்தை ஏற்றி வைத்திருக்கிறது தமிழக அரசு.








தமிழ்நாடு செய்தித் துறை
மகளிர் நலத்துறை
அண்ணலுக்கு அஞ்சலி















சீரணி அரங்கத்தில்...

முதல்வர்

வணக்கக் கட்சியினர் பொதுக் கூட்டம்

தனியார் துறை
அலங்கார
ஊர்திக்குப்
பரிசளிப்பு

இசை நிகழ்ச்சியிலே
பங்கு பெற்றோருக்
பரிசளிப்பு

இசையரங்கு

அமிழ்தும் அருங்குறளும்

சு. செல்லப்பன்

உண்டவர்க்கு இறவாத் தன்மையைக் காடுப்பது ; இனிமை மிக்கது ; கிடைத் தற்கரியது என்றெல்லாம் சொல்லப்படும் அமிழ்தத்தை மண்ணுலகோர் கற்பனையாகக் கதைகளில் கண்டுள்ளனரேயன்றி நேரிற் கண்டதில்லை. அது விண்ணுலகில் இருப்ப தாகக் கூறப்படுகிறது. " பொய்யொன்று கூறுவதால் விண்ணுலகம் அமிழ்தொடு கிடைப்பதாக இருந்தாலும் நீ அதைச் சொல்லாதவன் ; மெய்யுடன் நீங்கா நட் புக் கொண்டவன் " என்று பாண்டியன் நெடுஞ்செழியனை,

" உயர்நிலை உலகம் அமிழ்தொடு
பெறினும்

பொய்சேண் நீங்கிய வாய்நட்
பினையே "

மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதன் பாராட்டுகின்றார்.

இந்த உலகம் நின்று நிலவுவதற்குப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி கூறும் காரணம் எண்ணி மகிழ்தற்குரியது. தேவர்க்குரிய அமிழ்தமே ஆனாலும் தனித்து உண்ணார் ; தமக்கென இன்றிப் பிறர்க்கென உழைக்கும் பெற்றியார் இருப்பதாலேயே இவ்வுலகம் சிறப்புடன் வாழ்கிறது ; இப் பெற்றிருக்கிறது.

" உண்டாலம்ம இவ்வுலகம் ; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே — — —
— — — — — — — — —
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே
—(புறம். 182).

என்று குறிப்பிடுகின்றார்.

பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார்காலமே வந்துவிட்டது ! ஆயினும் தலைவன் வாரா மையைக் கண்ட தலைவி வருந்துகிறாள். அப்போது தோழி, " அன்னாய்! வருந் தாதே ! பெறற்கரிய மேலுலகத்தோடு அமிழ்தமே பெறுவதாக இருந்தாலும் நம் தலைவர் உன்னைப் பிரிந்து அங்குத் தங்கார் ; விரைவில் வந்துவிடுவார் "

' அரும்பெறல் உலகம்
அமிழ்தொடு பெறினுஞ்
சென்றுதாம் நீடலோ இலரே "
—(அகநானூறு).

என்று கூறித் தலைவியைத் தேற்றுகிறாள்.

தலைவன் தலைவியை வரைந்துகொள்ள வருகின்ற நற்செய்தியைச் செவிலி, தோழிக்கு அறிவிக்கின்றாள். தோழி அதைத் தலைவிக்குக் கூறி, ' அன்னை பெறற் கரிய அமிழ்தத்தையும் துறக்கத்தையும் பெறுவாளாக '

" அரும்பெறல் அமிழ்தம்
ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம்
பெறீஇயரோ அன்னை "
—(குறுந்தொகை).

எனச் செவிலியை வாழ்த்துகின்றாள்.

மேலே கூறியவைகள் அமிழ்து விண்ணுல கில் இருப்பது என்பதைத் தெரிவிக்கின்றன. ஒரு பண்பு அல்லது தன்மையைக் குறிக்க நேரும்போது அதில் விஞ்சி நிற்பது எடுத் துக் காட்டாக்கப்படும். கசப்பைக் கூறும் போது எட்டிக்காய் நினைவில் வருவது இயல்பு ; அதே போன்று சுவை மிக்கன வாய், கிடைத்தற்கரியனவாய் உள்ளவற்றை

' அமிழ்து ' என்று குறிப்பிடுவது வழக்க மாயிற்று. கீழேயுள்ள சில எடுத்துக் காட்டுக்கள் இதற்கு விளக்கமாக அமை கின்றன.

இனிய மொழியைப் பேசும் நா, ' அமிழ்து பொதி செந்நா ' என்று பாராட் டப்படுகிறது. தேமொழி மாதரார் எயிறு ஊறும் நீரைச் சுவைக்கின்ற காதலர், ' அமிழ்துபொதி துவர்வாய் ', ' அமிழ்தம் ஊறும் செவ்வாய் ', ' ஊறுநீர் அமிழ் தேய்க்கும் எயிற்றுய் ' என்று கூறி மகிழ் கின்றனர். தம் முயற்சியால் கிடைப்பது நீருணவேயாயினும் அஃதே அமிழ்தாகி இன்பம் தரும் என்பதைத் " தாளாண்மை நீரும் அமிழ் தாய்விடும் " என்று நாலடிப் பாடல் வரி அறிவிக்கிறது. உண்ண உண்ண அமையாத மணம் கமழும் தாளிப்பை யுடைய உணவு, அமிழ்தத்தைச் சுவையால் வெல்லும் தன்மை. ' அமிழ்தட்டானுக் கமழ்குய் யடிசில் ' எனக் கூறப்படுகிறது. இளங் குழந்தைகளின் தளர் நடையைக் காண்பது இனிது : அவர் மழலை கேட்டல் அமிழ்தினும் இனிது !

" குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர்மழலை கேட்டல் அமிழ்தின்
இனிதே "

என்பது சிறுபஞ்சமூலச் செய்யுள். இவை கொண்டு இனிமையானவையும் இன்றியமை யாத் தன்மை கொண்டவையும் ' அமிழ்து ' என்று அழைக்கப்படுகின்றன என அறிகிறோம்.

திருக்குறள் தமிழ் அமிழ்து. இந்த அமிழ்தினை உண்ணுகின்ற பேறு பெற்ற நாம் வேறு எந்த அமிழ்து பற்றியும் எண்ணத் தேவையில்லை. இத்தகைய சாவா இலக்கி யங்கள் தமிழிலிருப்பதாற்ருன்,

" இருந்தமிழே உன்னால் இருந்தேன்
—வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் "

என்று ' தமிழ்விடுதூது ' ஆசிரியர் தருக் குடன் குறிப்பிடுகின்ருர். " திருக்குறட் கருத்து உண்ண உண்ணத் தெவிட்டாதது. குறட்சுவை, அமுதச் சுவையினும் சிறந்தது. எவ்வாறெனில் அமிழ்தச் சுவையைத் தேவர் கள் மட்டுமே அறிவர். ஆனால் திருக்குறட் சுவையை எல்லா உலகமும் அறிந்து போற்றுகிறது " எனத் திருவள்ளுவ மாலை யில் புலவர் ஆலங்குடிவங்கனார் குறிப்பிடு கின்றார்.

" வள்ளுவர் பாட்டின்
வளம்உரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும்
ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர்
உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து

இப்பாடலுக்கு உரை எழுதியுள்ள தி[...] தணிகைச் சரவணப் பெருமாளையர் " அ[...] தம் வாயுள் பெய்தவழி நாவில் ப[...] சிறிது பொழுது அளவே தீஞ்சுவை ப[...] பது ; இப்பாட்டு (குறள்) நெஞ்சின்க[...] நிலைபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவை பய லின் இஃது அமிழ்தினி சிறந்த தாயிற்று" என்பா

மழையின்றேல் உல[...] எதுவுமில்லை ! உயிரினம் எது[...] வாழமுடியாது ! புல், பூண்[...] மரம், செடி, கொடிகள்[...] ஊர்வன, பறப்பன, விலங்[...] கள், மனிதர்கள் யாரு[...] இருக்க முடியாது. நீர்[...] உணவுப் பொருள்களை வி[...]வித்துத் தருவதோடு தானும் உணவா[...] அமைந்து உயிர்க்குலத்தை வாழ வை[...]கிறது. வான் மழை இல்லையே[...] வையகம் இல்லை. எனவே திருவள்ளுவர் மழையை அமிழ்தம் என்கிருர்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலா[...]
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று "

—(குறள் 11)

உரையாசிரியர் பரிமேலழகர், " அமிழ்[...] உண்டார் சாவாது நிலை பெறுதலின்[...] உலகத்தை நிலைபெறுத்துகின்ற வா[...] அமிழ்தமென்றார் " எனக் குறிப்பிடுகி[...]ருர். எல்லிஸ் துரை அவர்கள், " ம[...]யையே உண்மை அமிழ்தமாகக் கொ[...] வேண்டும் ! வேறு அமிழ்தம் இல்லை[...] பது திருவள்ளுவர் கொள்கையாக இ[...]கும் " என்கிருர். மழை அமிழ்தாக[...] குறிக்கப்படுவதை " அமிழ்துதிகழ் கருவி[...] கணமழை " என்ற பதிற்றுப் பத்து[...] சொற்ருெடராலும் அறிய முடிகின்ற[...] மழையையே அமிழ்து எனக் குறிப்பிட்[...] பாரதிதாசன் அவர்களும் பாடுகிருர்கள்

" வான்நின்று மண்ணில் வந்து
மக்களைக் காக்கும் ! அஃது
தேன்அன்று கரும்பும் அன்று !
செந்நெலின் சோறும் அன்று !
ஆன்அருள் பாலும் அன்றே !
அதன்பெயர் அமிழ்தாம் ! தொன்மை
ஆனபே ருலகைக் காக்க
அமிழ்வதால் மழைஅஃ தேயாம் "

விண் நின்று அமிழ்வதால் மழைத்துளி ' அமிழ்தம் ' எனப்படுவதாகப் பாவேந்தர் பாரதிதாசனார் கூறுகின்ருர். மொழியியல் அறிஞர் தேவநேயப் பாவாணர் ' அவர் களும், இருவகையுணவாய் விளங்கும் மழையே அமிழ்தம் எனப் பெயர்பெற் றுள்ளது என்பதை விளக்குகிருர்கள். அவர், ' அமிழ்தம் என்றது சாவா மருந்தாகிய இருவகை யுணவை ' எனக் குறிக்கிருர். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சோறும் நீரும் தொடர்ந்த பசிதகை (தாகம்) யால் நேரும் சாவைத் தவிர்த்தலால் இரு வகையுணவை இருமருந்து என விளக்கித், தம் கருத்துக்கு அரணாக " இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன் " என்ற புறநானூற்று வரியை மேற்கோள் காட்டு கிருர். வெந்து மலர்ந்த சோற்றுப் பருக்கை அமிழ் எனப்படும் என்று குறிப்பிட்டு, இந்த அவிழ் என்ற சொல்லே, அவிழ்—அவிழ்து—அவிழ்தம்—அமிழ்தம் என்ருகிறது எனப் பாவாணர் அவர்கள் விளக்குகிருர்கள். வள்ளுவர் கருத்துப்படி ' அமிழ்து ' என்று நாம் உணரத்தக்க வகையில் இருப்பது மழையேயாம் !



தொட்டால் இனிக்கும் சுவைக் கட்டியாகிய குழந்தையின் எச்செயலும் பெற்ருேருக்கு இன்பம் நல்குவதே ; ஆயினும் சோற்றில் கையிட்டு அளைந்து மேலும் கீழும் சிதறி உணவுண்ணும் காட்சி இன்ப மயக்கம் ஊட்டுவதாம். தத்தித் தளர் நடை பயிலும் குழந்தையின்முன் உணவைப்படைத்தால், அது கோழி தரையைக் கிளறுவதுபோல் சோற் றைக் குதறி மேலெல்லாம் இறைத் துக் கொண்டு சோருடு கோலத்தில் காண்போரைச் சொக்கச் செய்யும். சுன்றெடுத்த இளமகவின் தளிர் விரல்களி ஞல் கலக்கிக் குழப்பப்பட்ட உணவு, பெற்ருேர்க்கு அமிழ்தினும் இனியதாகி விடுகிறது. கூழினை அமிழ்தாக்கும் பெருஞ் சிறப்பு, குழந்தைகளின் பிஞ்சு விரல்களில் பொதிந்து கிடப்பதை வள்ளுவர் மகிழ்ந்து பாடுகிருர்.

" அமிழ்தினும் ஆற்ற
இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் "

—(குறள் 64).

' கூழ் ' என்பது இங்கு உணவுக்குப் பொதுப்பெயராய் உள்ளது. இதையே இழிந்த உணவாகக் கொண்டு, மக்கள் தம் கையால் அளைந்த கூழும் அமிழ்தினும் இனிதாகிவிடும் என்று கூறுவதும் பொருந் தும் என்பர் அறிஞர்.

வள்ளுவரின் " சிறுகை அளாவிய கூழ் ", பின்னர்த் தோன்றிய புலவர்களின் சிந்தையைக் கவர்ந்து சிறந்த பாடல்களைத் தோற்றுவிக்கின்றது. குலசேகர ஆழ்வார் கண்ணனைச் சேயாகப் பெற்று மகிழத் துடிக்கும் தாய்நிலையில் தன்னை வைத்துப் பாடுகின்ருர். தவழ்ந்து எழுந்து தளர் நடை பயின்று, செம்மணணில் ஆடிப் புழுதி படிந்த கோலத்தோடு வரும் குழந்தை கண்ணனை, மார்போடணைத்து மகிழத் துடிக் கிருள் அத்தாய். மண் படிந்த மேனி அவ ளுடைய மார்புக்கு மகிழ்வூட்டுகிறது. புழுதி படிந்த விரல்களில் அவன் வாரியுண்ட சோற்று மிச்சிலை உண்டு மகிழத் துடிக்கிறது தாயுள்ளம் ! ஆழ்வார் பாடல் இவ்வரிய ஓவியத்தை நமக்குத் தருகிறது !

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணு
தவழ்ந்தெ ழுந்து தளர்ந்ததோர்
நடையால்
மண்ணில் செம்பொடி ஆடி வந்துஎன்றன்
மார்பில் மன்றிடப் பெற்றிலேன்
அந்தோ !
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரியாய்க் கொண்ட அடிசிலின்
மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடு வினை
[யேன்
என்னையேன் செய்யப்பெற்றதெம்
மோயே

இருபதாம் நூற்ருண்டின் இணை யற்ற பாவேந்தர் பாரதிதாசனார், ' சிறுகை அளாவிய கூழைக் ' கொண்டு ஒரு சிறு கதையையே படைத்துக் காட்டுகிருர். வேடப் பன், நகைமுத்து என்ற இருவரின் இல்லறப்பயன், ' அமிழ்து ' என்ற பெண்மகவு. ஒரு நாள் அமிழ்து தூங்கியெழுகிருள் ; தத்தி நடந்து தாழ்வாரத்தை அடைகிருள். அங்கேயிருந்த தந்தையின் மைக்கூடு அவள் கண்ணில் படுகிறது. எடுத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் குறுக நடக்கிருள். முல்லைக் கொடியின் அடியில் மையைக் கவிழ்த்து மணலோடு பிசைகிருள். மலர்க்கை ' மை ' க்கை ஆகிறது. இக்கோலத் தோடு வீட்டினுள் நுழைகிருள். தந்தை தயிர்ச்சோறு உண்டு கொண்டிருக்கிருன். அமிழ்து தந்தையின் அருகே அமர்ந்து அவன் உண்ணும் சோற்றைத் தன் கையால் அளைகிருள். நிலா நிறத் தயிர் நீலத் தயிரா கிறது. ' ஆ ' காட்டச் சொல்லி அப்பனுக் குச் சோறு ஊட்டுகின்ருள் அமிழ்து. அப்ப னும் வாய் திறந்து அதை ஆவலோடு உண் கிருன். இதைக் கண்டு நிற்கும் தாயின் முகம் களிப்பால் மலர்கிறது. பாடுகிருர் பாவேந்தர் !

அறையில் தூங்கி யிருந்த அமிழ்து
சிறகுவிரித் துதறிச் செங்கா லன்னம்
நடைதொடங் கியதென நடந்து, தாழ்
வாரத் (து)

இடையி லிருந்தமைக் கூட்டை எடுத்து
கொல்லையின் முல்லைக் கொடியி னடியில்



சாய்த்து நீலம் சார்ந்த சேற்றல்
சிற்றில் ஒன்று செய்து முடித்தபின்
தந்தை உண்ணும் தயிரின் சோற்றை
அங்கையால் அள்ளி 'ஆ, ஆ' என்றன்
அப்பனும் வாய்திறந் ததைவாங்கி
உண்டான் !

தொடர்ந்து நடந்த இந்தத் தொண்டு !
சின்னவள் அன்னை யான திறத்தை
நகைமுத்து கண்டு மிகமகிழ்ந் திருந்தாள்
சேறும் சோறும் தந்தைக்குத் தேனே !
நீலத் தயிரும் நிலாநிறத் தயிரே !
'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்' எனச் செப்பிய
வள்ளுவர் வாய்ச்சொல் பொய்என
விள்ளுவர் உளரோ விரிநீர் உலகில் !

வள்ளுவர் வாய்ச்சொல்லுக்கு இவ்வகவல் வளமானதொரு விரிவுரையாக அமையக் காண்கிறோம்.

விருந்தோம்பல் தமிழினத்தின் தலையாய பண்பு. விருந்தினரை உண்பியாது தாமுண்பது சாதலின் இன்னாதது என்பது அவர்தம் கொள்கை. தாம் உண்பது சாவாத் தன்மையைத் தரவல்ல மருந்தாக இருந்தாலும், விருந்து புறத்தேயிருக்கத் தனித்து உண்பது முறைமையாகாது.

" விருந்து புறத்ததாத்
தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று "
—குறள் 82).

" அமிழ்தமே ஆனாலும் விருந்திருக்கும் போது தனித்து உண்ணற்க ", 'மருந்தே யாயினும் விருந்தோடுண்க' என்பது தமிழர் கொள்கை என்பதை இக்குறள் விளக்குகின்றது.

அவையின் தன்மையை அறிந்து பேச வேண்டும் என்பதை வலியுறுத்தத் திருவள்ளுவர் 'அவையறிதல்' என்ற அதிகாரத்தை வகுத்துள்ளார். பேசுபவர், கேட்பவரின் திறத்திற்கேற்பப் பேச வேண்டும். அவையின் தன்மையை உணராமல் பேசுவோர் சொல்லும் திறமறியாதவராவர். அறிவுடையோர் நிரம்பியுள்ள அவையில் நம் நூலறிவும் சொல்வன்மையும் தோன்றப் பேசவேண்டும். கூர்த்த அறிவில்லார் கூடியுள்ள அவையைக் கருத்து நிறைந்த பேச்சுக் கவராது. அங்கே அவர்கள் மதிக்கும் வண்ணம் எளிமையாகப் பேசுவதுதான் முறை ; நம் அறிவின் ஆழத்தைக் காட்டிப் பயனில்லை. இங்ஙனம் அவையறிந்து பேச வேண்டியதன் அவசியத்தைக் கூறும் குறளாசிரியர் கற்றறிந்த ஒருவர் தமக்கு ஏற்ற அவையின்கண் பேசுவதுதான் பொருத்தமே தவிர, புல்லவையுள் பேசுவது பயனற்றதாகும் எனக் குறிப்பிடுகின்றார். தாழ்ந்தோர் அவைக்கண் உயர்ந்த சொற்களைப் பேசுதல் தூய்மையில்லாத முற்றத்தின்கண் அமிழ்தத்தைக் கொட்டியதற்கு ஒப்பாகும் என்பது அவர் கருத்து.

" அங்கணத்துள் உக்க
அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல் "
—(குறள் 720).

உணபவர் கையில் கிடைத்தால் அமிழ்தம் பயன்படும். தரையிற் சிதறும்போது அவ்வமிழ்தத்தால் தரை எவ்விதப் பயனையும் அடையப் போவதில்லை ; பயன்பட வேண்டிய அமிழ்து அங்குப் பயனற்றுப் போகின்றது. நல்லோர் அவையில் நல்லோர் பேசுதல் அமிழ்தத்தை நுகர்பவர் கையில் கொடுப்பதற்கு ஒப்பாகும் ; அப்பேச்சைக் கேட்கும் தகுதியில்லாதவர் நிறைந்துள்ள அவையில் பேசுதலோ தரையில் சிந்திய அமிழ்தம் போலப் பயன்படாதொழியும்.

அங்கணம் என்பதற்குச் சாக்கடை என்று பொருள் கொள்ளுதல் 'முற்றம்' என்று கொள்வதைவிடப் பொருத்தமாம்.

" ஊரங்கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால் " என்ற நாலடிப் பாடலில் அங்கணம் என்ற சொல் சாக்கடை என்ற பொருளில் ஆளப்பட்டிருப்பதை அறியலாம். " அங்கணம் சேறு முற்றமாஞ் சலதாரைக்குப் பேர் " என்று நிகண்டும் சாக்கடைக்கு அங்கணம் என்ற பெயர் இருப்பதைத் தெரிவிக்கிறது. முற்றத்தில் சிதறிய அமிழ்து மக்களுக்குப் பயன்படாவிட்டாலும் எறும்பு, ஈ போன்ற உயிரினங்கள் மொய்த்துண்ணவாவது பயன்படும். அதுவே சாக்கடையில் விழுந்துவிட்டால் எதற்கும் பயன்படப்போவதில்லையல்லவா ? தக்கார் அல்லார்முன் பேசுதல் எந்த வகையிலும் பயன்தராது என்பதை அது சாக்கடையிற் சாய்க்கப்பட்ட அமிழ்து என்று கொள்வது பொருத்தமேயன்றோ !

தலைவன் தலைவியைப் பிரிந்திருக்கின்றான். அப்பிரிவு அவனை வாட்டுகிறது ; வதைக்கிறது. தீ தொட்டால் சுடும் ; விட்டால் சுடாது. தலைவியோ தொட்டால் குளிர்வதும் விட்டாற் சுடுவதுமான புதுமைத்

நீயாக இருக்கிறாள்; பிரிவினால் மழையற்ற பயிர்போல வாடிக் கிடக்கும் தலைவன் தலைவியின் தோள்களைத் தொட்ட மாத்திரத்தில் அவனுடைய வாட்டம் பறக்கிறது! உடல் குளிர்கிறது! உயிர் தளிர்கிறது. வாடியிருக்கும் தன் உயிரைத் தளிர்விப்பதால்—சாவினின்றும் தன்னைக் காக்கின்ற தன்மையால்—தலைவியின் தோள் அவனுக்கு அமிழ்தமாகிறது.

“உறுதோறு உயிர்தளிர்ப்பத்
தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்”

—(குறள் 1106).

தென்றற் கொடுமையாலும், சந்திரன்

கொடுமையாலும் வற்றின சரீரத்தை நாயகி தீண்டலால் சரீரம் தளிர்க்கையினாலே, நாயகிக்கு அமுதினால் பண்ணின தோள்” எனப் பரிதியார் இக்குறளுக்கு உரை பகர்கின்றார்.

வான் மழை அமிழ்து! அமிழ்தேயாயினும் விருந்திருக்கத் தாமே உண்ணுதல் ஆகாது! மழலை மக்கள் கைவிட்டளைவது கூழேயாயினும் பெற்றோர்க்கு அஃது அமிழ்தம்! தகாதார் முன் தகவுடையார் பேசுதல் சாக்கடையிற் சாய்த்த அமிழ்தமாகும்! பிரிவினால் வாடும் தலைவனுக்குத் தொட்டால் உயிரளிக்கும் தலைவியின் தோள் அமிழ்தாகிறது!—என்ற கனித் தமிழ்க் கருத்தமிழ்தை—குறளமிழ்தை—வாரி உண்போம்! வரைவிலா இன்பம் அடைவோம்!

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்:
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256.
பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி: 'CEMENT' போன்: 144.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் ஃப்ளவர் மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
“கோபுரம்” மார்க்
மைதா, சூஜி
மற்றும்
“கப்பல்” மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH





தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், நடப்பு 1971–72 கல்வியாண்டுக்குத் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்கென வெளியிட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் வகையில் அச்சிடப்பட்ட மொத்தப் பிரதிகள் ஒரு கோடியே 21 லட்சத்துக்கு மேல் ஆகும். அடுத்த ஆண்டுக்குக் கிட்டத்தட்ட மூன்றரைக் கோடிப் புத்தகங்களை வெளியிட வேண்டியிருக்கும். பள்ளிப் பாடப் புத்தகங்கள் ஏறத்தாழ அனைத்துமே அடுத்த ஆண்டிலே நாட்டுடைமையாக்கப்பட்டு விடும்.

தமிழகத்தில் 'கல்லூரித் தமிழ்க் குழு' வின் பணியை மிக விரிந்த அளவில் செயல்படுத்த வேண்டும் என்ற முடிவுடன் தமிழ் வெளியீட்டுக் கழகம் 1962 ஏப்ரல் முதல் நாள் தோற்றுவிக்கப்பட்டது. கலை, அறிவியல் துறைகளில் தேவையான நூல்களைத் தமிழில் பெருமளவுக்கு வெளியிடுவதுடன், மருத்துவம், பொறியியல், சட்டம், தொழில் துறை ஆகியவைகளிலும் வேண்டுமான நூல்களை வெளியிடுவதே குறிக்கோளாக இருந்தது. கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்களாகப் பயன்படும் முறையில் தனி நூல்களாகவும், சிறந்த ஆங்கில நூல்களின் மொழி பெயர்ப்பாகவும் வெளியிட்டு வந்தது.

1970-ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. இந்த நிறுவனம் இதுவரை சுமார் 269 நூல்களைத் தமிழில் வெளியிட்டுள்ளது. இவற்றுள் 72 நூல்கள் பி. எஸ்ஸி. பட்டப் படிப்புக்கும் 17 நூல்கள் புகுமுக வகுப்புக்கும் பாட நூலாக வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய நூல்கள் பொது நூல்களாகவும் பட்டப் படிப்புக்குப் பார்வை நூல்களாகவும் பயன்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்கென 1971–72 கல்வியாண்டில் வெளியிடப்பட்ட— தேசீய மயமாக்கப்பட்ட பாடப் புத்தகங்கள், பல்வேறு வகைகளிலும் அச்சிடப்பட்ட மொத்தப் பிரதிகள் 1 கோடி 21 லட்சத்துக்கு மேல் ஆகும். இவற்றுள் 1-லிருந்து 10-ஆம் வகுப்பு வரை தமிழ்ப்பாட நூல்கள் வகையில் மொத்தப் பிரதிகள் 67,30,000. நான்காம் வகுப்பிலிருந்து 10-ஆம் வகுப்புவரை ஆங்கிலப் பாட நூல்கள் வகையில் மொத்தப் பிரதிகள் 19,90,000 ; மூன்றும் வகுப்பிலிருந்து 11-ஆம் வகுப்பு வரை கணக்குப் பாட நூல் வகையில் மொத்தப் பிரதிகள் 18,97,000. மற்றும் அறிவியல், வரலாறு, புவியியல் வகையில் 11-ஆம் வகுப்புக்கு அச்சிட்ட பிரதிகள் 8,10,000. ஆங்கிலக் கையேடு மூன்றும் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்பு வரை மொத்தப் பிரதிகள் 1,60,000 ; மற்றும் 4, 5, 6-ஆம் வகுப்புகளுக்கு ஆங்கிலப் பயிற்சிப் புத்தகங்கள் வகையிலும் 10-ஆம் வகுப்புக்கு உயரியல் விருப்பப் பாடத்துக்குமாக அச்சிட்ட மொத்தப் பிரதிகள் 5,20,000 ஆகும்.

> மாணவர்கள் என்றால் யார்?
>
> அவர்கள் நமது ரத்தத்தின் ரத்தம். நமது சதையின் சதை. நமது குடும்பத்தின் பிள்ளைகள். நமது எதிர்கால உருவங்கள். அவர்கள் ஒன்றை (ஒரு நன்மையை) விரும்புகிறார்கள் என்றால் என்னால் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியது ஜனநாயகக் கடமையென்று கருதுகிறேன்.
>
> —பேரறிஞர் அண்ணா.

பாட நூல் நிறுவனம் மேற்குறிப்பிட்ட பிரதிகளை அச்சிடுவதற்கு 1970-ஆம் ஆண்டு இறுதியில் தக்க முன்னேற்பாடுகளைச் செய்திருந்தது. அச்சிடும் வேகத்திலே சிறிதும் தடங்கலின்றி உரிய காலத்தில் புத்தகங்களை அச்சிட்டுக் கொடுக்க முடிந்தது.

வருகின்ற கல்வியாண்டிற்கு, கணக்கு, இயல்பியல், வேதியல், வரலாறு ஆகிய விருப்பப் பாடங்களைத்தவிர, மற்ற எல்லாப்பாடங்களுக்கும் பாட நூல் நிறுவனமே பாடப் புத்தகங்களை வெளியிடும். அடுத்த ஆண்டிற்குக் கிட்டத்தட்ட 3½ கோடிப் புத்தகங்களை வெளியிட வேண்டியிருக்கும். பள்ளிப்பாடப் புத்தகங்கள் ஏறத்தாழ அனைத்துமே அடுத்த ஆண்டிலே தேசிய மயமாக்கப்பட்டுவிடும்.

மாநில மொழிகளில் கல்லூரிப் பாட நூல்களை வெளியிட மத்திய அரசு, ஒரு கோடி ரூபாய் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினையொட்டி இவ்வாண்டு எல்லாத் துறைகளிலும் மேலும் சுமார் 402 பாட நூல்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேதியல், கணிதம், இயல்பியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், மனையியல், உளவியல், பொருளியல், அரசியல் நிலவியல், புள்ளியியல் ஆகிய 13 துறையியல்களில் நூல்களை எழுதும் பணி, பல துறைகளைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்களிடமும் உதவிப் பேராசிரியர்களிடமும் மற்றும் பல வல்லுநர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுளது.

"அம்மா! நீங்க நீண்ட நாட்களாக ஒரு எவர்சில்வர் கரண்டி வாங்கி வா! வாங்கி வா! என்று சொல்லி வந்தீர்களல்லவா?" என்று கேட்டுக் கொண்டே வீட்டின் உள்ளே நுழைந்தான் மணி.

"வாங்கி வந்துவிட்டாயா?" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே, செய்து கொண்டிருந்த வேலையைப் போட்டு விட்டு வந்தாள் அந்த ஏழைத் தாய்.

"இந்தாங்க அம்மா! நன்றாக இருக்கிறதா பாருங்கள்!" என்று கூறித் தன் கையில் இருந்த எவர்சில்வர் கரண்டியைத் தன் தாயின் கையில் கொடுத்தான் மணி. எவர்சில்வர் கரண்டியைத் தன் கையில் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தத் தாய். பெருமதிப்புள்ள ஒரு பொருளைப் பெறும்போது ஏற்படும் பெருமகிழ்ச்சி அந்த அன்புத்தாயின் முகத்தில் மலர்ந்ததைக் கண்ட மணி, "எவர்சில்வர் கரண்டியைக் கண்டே இவ்வளவு மகிழ்ச்சி பெறுகின்றீர்களே அம்மா! பொன் நகையைக் கண்டால் எப்படி மகிழ்வீர்களோ?" என்று கேட்டான்.

"உன் அப்பா போக்குவரத்துத் துறையில் மெக்கானிக், உன் அண்ணன் டிரைவர், நீயோ பஸ் கட்டும் தொழிலாளி. நீங்க 3 பேரும் வேலை பார்த்தும், 9 பேர் உள்ள நம் குடும்பம் ஏழ்மையாகவே உள்ளது. இப்படி ஒரு எவர்சில்வர் கரண்டி வாங்க வேண்டும் என்று எத்தனை ஆண்டுகளாக உன் அப்பாவிடம் சொல்லி வந்தேன் தெரியுமா? ஆனால் அவர் அகப்பை போதாதா?, அலுமினியக் கரண்டி போதாதா? என்று கூறித் தட்டிக் கழித்து விட்டார். நீயாவது வாங்கி வந்தாயே! கரண்டி நன்றாக இருக்கிறது. விலை என்னப்பா?" என்று நீண்ட நாள் ஆசை நிறைவேறிய மகிழ்ச்சியுடன் அந்தத் தாய் கேட்டாள்!

"பணம் கொடுத்து வாங்கவில்லையம்மா? எங்கள் தொழிற்சாலையில் இதை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்களம்மா! அதுவும் இந்தக் கரண்டியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் தன் கையினால் வழங்கினாரம்மா!" என்று பெருமையுடன் கூறினான் மணி.

"போயும் போயும் எவர்சில்வர் கரண்டியையா பரிசாகக் கொடுத்தார்கள்?" என்று கேட்டுக் கொண்டே வேலையிலிருந்து திரும்பி வந்தார் மணியின் தந்தை இராமசாமி.

"தட்டுக் கொடுக்காமல், கரண்டி கொடுத்தார்களே! அதுவரைக்கும் விசேடம் இல்லையா அப்பா!" என்று சொன்னான் சாப்பிட்டுக் கொண்டிருந்த மணியின் அண்ணன் பாலு.

"அண்ணே! கரண்டியைப் பரிசாகக் கொடுத்தது உங்களுக்குக் கிண்டலாகத் தெரியலாம். உங்களைப் போலத்தான் எங்கள் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் சிலர், முதலில் கேலி பேசினார்கள். கரண்டியைப் பரிசாகக் கொடுத்ததன் நோக்கத்தை மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் விளக்கிய பின்புதான், கரண்டி கொடுத்ததன் தத்துவம் அவர்களுக்குப் புரிந்தது.

"அப்படி என்னப்பா பெரிய தத்துவம் அடங்கியுள்ளது?" என்று கேட்டான் பாலு.

"பானையில் இருந்தால்தானே கரண்டியில் வருவதற்கு" என்ற திருந்திய பழமொழியின் தத்துவத்தை நினைவுப்படுத்தவே கரண்டியைப் பரிசாகக் கொடுத்துள்ளார்கள். பானை என்பது அரசாங்கத்தின் கருவூலத்தைக் குறிக்கும். அரசாங்கக் கருவூலம் என்ற பானையில் பணம் என்ற அரிசி போடப்பட்டிருந்தால் தான், தொழிலாளர்கள் கோரிக்கை என்ற கரண்டியை விடும்பொழுது சோறு என்னும் பயன் கிடைக்கும். அரசாங்கக் கருவூலம் என்ற பானை காலியாக இருந்தால், கோரிக்கை என்னும் கரண்டியை விடும் பொழுது சோறு என்னும் பயன் கிடைக்காது. அதாவது அரசாங்கக் கருவூலம் காலியாக இருந்தால் தொழிலாளர்களின் கோரிக்கைகள், எவ்வளவுதான் நியாயமானதாக இருந்தாலும் வெற்றி பெறாது; கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தாலும், நிதிப்பற்றாக் குறையின் காரணமாகக் கோரிக்கைகள் நிறைவேறாமற் போய் விடுகின்றன. எனவே, அரசாங்கக் கருவூலத்தில் நிதி குவிய அரசாங்கத் தொழிற்சாலைகளை இலாபகரமாக நடத்த வேண்டும் என்ற தத்துவத்தைப் புகட்டவே கரண்டி கொடுக்கப்பட்டுள்ளது" என்று மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் விளக்கினார் என்று மணி கூறினான்.

"தத்துவம் நன்றாகத்தான் இருக்கு. ஆனா நம்ம போக்குவரத்துத் துறையில் பொதுவாக இலாபம் எடுப்பது அவ்வளவு சுலபமல்ல!" என்றான் பாலு.

"ஆமாண்டா! உன்னைப்போல 'பிரேக் டவுன்' என்று சொல்லி

கண்ட இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டால் போக்குவரத்துத் துறைக்கு நட்டம் வராமல் இலாபமா வரும்?'' என்று கூறி பாலு செய்த தவற்றை இடித்துக் காட்டினார் இராமசாமி.

''நீங்கள் சொல்வது சரியல்ல அண்ணே! போக்குவரத்துத் துறையின் ஓர் அங்கமான குரோம்பேட்டையில் உள்ள மத்தியத் தொழிற்சாலை இலாபகரமாக நடக்குதண்ணே! இதைக் குறிப்பிட்டு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் தொழிற்சாலையின் தொழிலாளர்களையெல்லாம் மிகவும் பாராட்டிப் பேசியதுடன், போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் டிரைவர்களும் கண்டக்டர்களும் எங்களைப் போல் திறமையாகப் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்'' என்றான் மணி.

கடமை தவறியதாக இடித்துக் கூறிய அப்பாவின் தாக்குதலைத் தாங்க முடியாத பாலு, மணி கூறியதைக் கேட்டதும் அயர்ந்து விட்டான். அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது. மேலும் சாப்பிட மனமின்றிக் கையைக் கழுவிக் கொண்டு எழுந்து விட்டான்.

''நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்ன பேசினார்?'' என்று கேட்டார் இராமசாமி.

'' அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் கார் உற்பத்தி செய்பவர்கள் தங்கள் புது மாடலை விளம்பரப்படுத்துவதற்காக விழா நடத்துவார்கள். அதுபோல இங்கேயும் 3,001-வது பேருந்தின் வெள்ளோட்ட விழாவை நடத்துகிறார்கள்.

' காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பார்கள். அதுபோல குரோம்பேட்டை தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இது ஒரு மாபெரும் சாதனை விழாவாகும்.

இப்போது 2,105 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம் 700 பேருந்துகள் வரவிருக்கின்றன. ஆகவே நீங்கள் 1,000 பேருந்துகளுக்குப் பொறுப்பாளர்களாக இருக்கப் போகின்றீர்கள்.

3,001-வது பேருந்தின் வெள்ளோட்டத்தை போக்குவரத்து அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.

இனி ஆண்டிற்கு 1,000 பேருந்துகளைக் கட்டித்தர வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை பேருந்துகளுக்கு பாடி கட்டினால் 40 சதவீதம்தான் ஊக்க போனசாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இனிமேல் ஆண்டிற்கு 1,000 பேருந்துகளைக் கட்டினால், ஊக்க போனஸ் என்ற நிலையை மாற்றி, இனி எவ்வளவு பேருந்துகளைக் கட்டுகிறீர்களோ அந்த அளவுக்கு ஊக்க போனஸ் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்'' என்றான் மணி.

''உங்கள் தொழிற் சங்கத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையா ?''—என்று கேட்டார் இராமசாமி.

''தொழிற்சங்கத்தைப் பற்றி மிகவும் அருமையான கருத்துக்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். தொழிலாளர்களின் கடமையைப் பற்றி நன்கு விளக்கினார். 'தொழிற் சங்கத்தில் உள்ளவர்கள் தங்களுக்கு நியாயம் என்று பட்டதைக் கேட்கலாம். அதுபோலவே அரசும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும்' என்றார்.

'பொதுத்துறையைப் பொறுத்த வரையில் மக்களுக்குப் பணியாற்றுவதற்காக, மக்களால் கட்டளை இடப்பட்டவர்கள் நாம். நமக்கு நாட்டு மக்கள்தான் முதலாளி' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது நெஞ்சைத் தொடுவதாக இருந்தது.

'இது அரசுத் துறைதானே! இது அப்படித்தான் இருக்கும் என்று சொல்லக்கூடிய விதத்திலே இல்லாமல் நீங்கள் நல்ல பெயர் எடுத்துக் கொடுக்க வேண்டும்' என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்' என்று மணி கூறினான்.

அதுவரை பேசாமல் இருந்த பாலு, ''அதிருக்கட்டும், நீங்கள் கோரிக்கைகள் எதையும் கூறவில்லையா?'' என்று கேட்டான்.

''25 கோரிக்கைகளைக் கொடுத்தோம். இந்தக் கோரிக்கைகளுக்கு நானே தீர்ப்புச் சொல்லிவிட முடியாது; முதல் அமைச்சருடன் கலந்துகொண்டு காரியமாற்ற வேண்டும்' என்று கூறிய போக்குவரத்து அமைச்சர் அவர்கள் எங்களின் நான்கு முக்கிய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிவிடுவதாக உறுதி கூறினார் '' என்றான் மணி.

'' 3,001 பஸ் கட்டிக் கொடுத்ததற்கு ஏதேனும் போனஸ் கொடுப்பதாக அறிவித்தாரா?'' என்றார் இராமசாமி.

''போனஸ் பற்றி அவர் அறிவித்தது மிகவும் பாராட்ட வேண்டிய ஒன்று அப்பா! இதுவரை ஒவ்வொரு 1,000 பஸ் கட்டி முடிந்ததும் தொழிலாளர்களுக்கு ஒரு சிறு தொகை ஊக்கப் போனசாக வழங்கப்பட்டு வந்தது. அந்த வகையில் ரூபாய் 2,500 வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்தத் தடவை நாங்கள் 3,001-வது பஸ் கட்டியுள்ளதை முன்னிட்டு, தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸாக ரூபாய் 2,500 என்று இருந்ததை மாற்றி ரூபாய் 5,000 ஆக வழங்கப்படும் என்றும், அத்துடன் இத்தொழில் சாலைக்குத் தேசிய பாதுகாப்பு விருதாகக் கிடைத்த ரூபாய் 2,500-மும், மாநில அரசுச் சார்பில் ரூபாய் 2,000-மும் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்'' என்றான் மணி.

''தீபாவளி போனஸ் சீக்கிரம் கிடைக்குமா தம்பி?'' என்று மணியின் தாயார் கேட்டார்.

தீபாவளிப் பண்டிகைக்குச் சில நாட்கள் முன்னதாகவே போனஸ் கொடுக்க, தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேசி, ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

''பஸ் பாஸ் பற்றிக் கேட்கப் போவதாகச் சொன்னீர்களே, அது என்னவாயிற்று?'' என்றான் பாலு.

''பேருந்துத்துறையின் தொழிலாளர்கள் எல்லாரும் பஸ் பாஸ் கேட்கிறார்கள். எல்லாருக்கும் கொடுக்க முடியுமா என்பதை யோசித்து வருகிறோம். ஆனால் குரோம்பேட்டை தொழிற்சாலை லாபத்தில் நடப்பதால் பஸ் பாஸ் தர முடிவு செய்து இருக்கிறோம்'' என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

''திருமணக் கடன் பற்றிக் கேட்டீர்களா ? என்றார் மணியின் தாயார்.

''தொழிலாளர்கள் யானை என்றாலும் கடனுக்குக் கொடுத்தால் வாங்கிக் கொள்வார்கள். அதைக் கட்டிவைத்துத் தீனி போட வேண்டும் என்று எண்ண மாட்டார்கள் என்று சொல்வார்கள். ஆகவே நீங்கள் கேட்பதைக் குறைவாகக் கேட்க வேண்டும்' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு திருமணக் கடனுக்காக ரூபாய் 2½ இலட்சம் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான உத்தரவை அரசு விரைவிலேயே பிறப்பிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

''அப்படியானால், 3,001-வது பேருந்தின் வெள்ளோட்ட விழா, குரோம்பேட்டை மத்திய தொழிற்சாலையில் பணியாற்றும் 1,172 தொழிலாளர்கள் வாழ்வின் நல்லோட்ட விழாவென்றே சொல்லலாம் போலிருக்கிறதே'' என்றான் பாலு.

''ஆமாம் அண்ணா! என்றான் மணி.

தந்தையுடன் மணி சாப்பிட அமர்ந்தான். மணியின் தாயார் எவர்சில்வர் கரண்டியினால் சாப்பாட்டிற்கு ரசத்தை ஊற்றினார்கள். தந்தையும், தனயனும் அமுதமெனச்சுவைத்துச் சாப்பிட்டனர். அதைக்கண்ட டிரைவர் பாலுவுக்குத் தானும் திறமையாகப் பணியாற்றி ஏதேனும் பரிசு பெற வேண்டும் என்ற ஊக்கம் பிறந்தது!

பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.



தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19

எதிர்கால ஆற்றல்

பொருள்களின் நான்காம் நிலை

ஏ. ஆர். இராமராஜ், எம்.எஸ்ஸி

இதுநாள் வரை, நாமறிந்த பொருள்கள் எல்லாம் சாதாரணமாகத் திடநிலை, திரவநிலை, வாயுநிலை என்ற முப்பெரும் நிலைகளில் மட்டுமே காணப்படுகின்றன என்பதைச் சிறுரும் அறிவர். ஆனுல், அண்மைக் காலத்தில் பொருள்களுக்கு ஒரு புதிய நாலாம் நிலையும் உண்டு என்ற உண்மையைக் கண்டறிந்துள்ளனர். இது ஒரு வியப்பான செய்தியாகவும், கற்பனைக் கெட்டாத ஓர் உண்மையாகவும் உள்ளது. ஏனெனில், பனிக்கட்டி, நீர், நீராவி என்ருல் நமக்குத் தெளிவாகப் புலனுகின்றது. இதற்கு மேலும் ஒரு நிலை அதாவது நான்காம் நிலை ஒன்று உண்டு என்ருல் நம் மனத்தில் உடனடியாக எழக் கூடிய வினுவும் ஒன்று உண்டு. 'அந் நிலையில் பொருள்கள் எப்படி இருக்கும்? அதை நாம் பார்க்கவோ, உணரவோ முடியுமா?' என்பதுதான் அவ் வினு. அதுவே பிளாஸ்மா நிலை (Plasma state) என்பது. இந் நிலையில் வெப்பம் அதிகமாக இருக்கும்.

இப் பிரபஞ்சத்தில் (Universe) பிளாஸ்மா நிலையே முதன்மையாக இருக்கும் பேறு பெற்றுள்ளது. பிரபஞ்சத்தில் 99:9 விழுக்காடு பொருள்கள் யாவும் பிளாஸ்மா நிலையில் உள்ளன. சுருக்கமாகக் கூறினுல், பிளாஸ்மா என்ற கடலில் மிதக்கக் கூடிய ஒரு வாய்வுக் குமிழில் தான் நாம் உண்மையில் வாழ்கின்ருேம் எனவும் கூறலாம்.

ஞாயிறு, நட்சத்திரங்கள் மற்றும் வானத்தில் உள்ள பொருள்கள் யாவும் இந்த நான்காம் நிலையிலேயே உள்ளன. இவைகளில் இடைவிடாது மிகப் பெரிய ஆற்றல் உண்டாக்கப்பட்டுவருகிறது. குறிப்பாக நமக்கு அண்மையில் உள்ள நட்சத்திரமாகிய சூரியன் ஏறத்தாழ சுமார் 10 மில்லியன் ஆண்டுகளாக ஒரு விஞடிக்கு ஒரு கிராமிற்கு 2 எர்க்ஸ் (Ergs) என்ற அளவீட்டில் வெப்ப ஆற்றலை வெளிவிடுகிறது என்று கண்டுள்ளார்கள். இது மீண்டும் தொடர்ந்து நடைபெறும். இங்ஙனமாக வெளியிடக்கூடிய அளப்பிலா ஆற்றல் எங்ஙனம் உண்டாக்கப்படுகிறது என்ற விஞவிற்குச் சரியான விளக்கம் 1929-ஆம் ஆண்டு கெளட்டர்மென், அட்கின்ஷன் என்ற இருவரும் முதன் முதலாகக் கொடுத்தார்கள். மிக அதிகமான வெப்ப நிலையில் இரு மெல்லிய அணுக்கள் சேர்க்கை ஏற்படும். அதாவது பிளாஸ்மா நிலையில் அணுச் சேர்க்கை நிகழும். அதனுல் கனமான ஓர் அணு ஏற்படுகிறது. அதே சமயத்தில், இவைகளில் பொருண்மை அணுச் சேர்க்கை முன் அதிகமாகவும், பின் கனமான புதிய அணுவின் பொருண்மைக் குறைந்தும் இருக்கும். அப் பொருண்மைக் குறைவு அதற்கேற்ற ஆற்றலாக மாற்றப்படுகிறது. அதனை 'ஐன்ஸ்டின் சமன்பாட்டின்' உதவியால் ($E = mc^2$) விளக்கலாம்.

தற்காலத்தில் மனிதனுக்குக் கிடைத்து வருகின்ற ஆற்றல் மிகத் துரிதமாக மிகுந்த அளவில் குறைந்துகொண்டே வருகிறது. இப்போது உலகம் முழுவதும் தொழில் மயமாகிக்கொண்டிருக்கிறது. அதற்கான ஆற்றலை மனிதன் நிலக்கரி, எண்ணெய் சில வாயுக்கள் ஆகியவற்றில் இருந்து பெற்று வந்தான். இப்போது உள்ள எரிபொருட்கள் இன்னுமோர் நூற்ருண்டிற்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது என்று கண்டுள்ளார்கள். அணுச் சிதைவின் மூலம் ஆற்றல் பெறலாம். ஆனுல், அதற்குத் தேவையான எரிபொருள்களின் இருப்பும் ஓர் அளவுக்குத்தான் மனிதனுக்குத் துணை நிற்கும். ஆனுல் புதிய முறையில் ஆற்றலைப் பெறவேண்டிய ஒரு நிலை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. அதனுல் கட்டுப்படுத்தப்பட்ட அணுச் சேர்க்கை என்ற முறையில் பிளாஸ்மா நிலையில் எல்லையற்ற ஆற்றலைப் பெற முடியும் என்று கண்டுள்ளார்கள்.

சென்ற பன்னிரண்டு ஆண்டுக் காலமாக இது சம்பந்தப்பட்ட இடைவிடாத ஆய்வுகளும், முன்னேற்றங்களும் உலகத்தின் பல பாகங்களில் நடைபெற்று வருகின்றன.

இவ் வணுச் சேர்க்கை பிளாஸ்மா நிலையில் நிகழ, மிகத் தேவையான மூலப் பொருள் கன ஹைடிரஜன் (Heavy Hydrogen) அல்லது டியூட்டீரியம் (Deuterium) ஆகும். இரு டியூட்டீரியம் அணுச் சேர்க்கையில் அளப்பற்ற ஆற்றல் கிடைக்கிறது. நாற்பது லிட்டர் கடல் நீரில் இருந்து ஒரு கிராம் அளவு டியூட்டீரியம் கிடைக்கிறது. கடல் நீர் பெருமளவில் கிட்டுகிறது. அதனுல் டியூட்டீரியம் மலிவாகவும் கிடைக்கும். ஒரு கிராம் டியூட்டீரியத்திலிருந்து சுமாராக 10 எர்க்ஸ் அளவு ஆற்றல் பெற முடியும். ஒரு கிராம் மதிப்புள்ள டியூட்டீரியத்தைக் கொண்டு 300 காலன் கேஸ்லின் லிருந்து கிடைக்கக்கூடிய ஆற்றலைப் பெறலாம். அணுச் சேர்க்கை முறை சீராக்கப்பட்டு விட்டா[ல்] தேவையான அளவுக்கு மே[...] ஆற்றல் குறைவின்றிக் கிட்டும். அதனுல், பிளாஸ்மாவை எப்படி உண்டாக்குவது, அதனை எப்படிக் காப்பது, அதனை நம்மிச்சைப்படி எப்படிக் கைய[ா]ளுவது, அதனை மனித குலத்திற்[கு] எவ்வாறு தொண்டு செய்[ய] வைக்க முயலுவது என்பன புற்[றி] ஆய்வுகள் பல கோணங்களி[ல்] நடைபெறுகின்றன.

1955-ஆம் ஆண்டில் ஜெனிவ[ா]வில் "அணு ஆற்றலின் பயன்கள்

அவசரமான காலைவேளையில் ஐந்து செகண்டு ஒதுக்குங்கள்

புத்துயிரளிக்கும் நெஸ்கா:பே ஒரு கப் தயாரித்து அருந்துங்கள்!

முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதற்கு முன்னரே ரகசியமாக பிளாஸ்மா பற்றிய ஆய்வுகள் நடைபெற்றன என்றும், இன்னும் 20 ஆண்டுகளில் அணுச் சேர்க்கை முறையில் ஆற்றலைப் பெறலாம் என்றும் காலஞ்சென்ற நமது நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபா என்பார் முன்பே அறிவித்து விட்டார்.

நிலைமின் விலகலின் காரணமாக ஏற்படும் தடங்கலை மீறி இரண்டு மெல்லிய அணுக்கள் ஒன்றையொன்று மிக நெருக்கமாக அணுகினால்தான் அணுச் சேர்க்கை ஏற்படக் கூடும் என்பது தெளிவாகும். மில்லியன் பாகைகள் அளவில் வெப்பத்தை உண்டாக்குதல் என்பது இச் சேர்க்கை நிகழ இன்றியமையாததொன்றாகும். இதனால் பிளாஸ்மா நிலை மிகவும் இன்றியமையாததொன்று என்பது பெறப்படுகிறது.

பிளாஸ்மா :

பொதுவாக பிளாஸ்மா என்றால் அயனிகள் (Ions) நிறைந்த வாயு என்று கூறலாம். அதன் வெப்ப நிலை மிக அதிகம். அவற்றில் நேர் மின்னேற்றம் கொண்ட அயனிகளும் எதிர் மின்னேற்றம் கொண்ட எலக்ட்ரான்களும் ஓரளவு சம எண்ணிக்கையில் இருக்கும். சாதாரணமாக, அந்நிலை மின்னேற்றமேதுமில்லா நிலைபோல் தோற்றமளிக்கும்.



ஒரு வாயு, வெப்பத்தினாலோ அல்லது மின்னோட்டத்தினாலோ பிளாஸ்மா நிலையை அடையமுடியும். முதலில் வாயுவில் உள்ள மூலக் கூறுகளும் அணுக்களும் அயனிகளாக மாற்றப்பட வேண்டும். வெப்பத்தின் ஆற்றலால் அல்லது மின்னோட்டத்தின் ஆற்றலால் அவைகள் உந்தப்பட்டுத் தன்னுள் உள்ள ஒரு எலக்ட்ரானை இழந்து நேர் மின்னோட்டம் கொண்ட அயனிகளாக மாறுபடுகின்றன. இந்நிலையில் மின்னேற்றமில்லாத வாயு மூலக்கூறுகளும், அணுக்களும் அதில் கலந்து இருக்கலாம். ஆனால், பிளாஸ்மா நிலையில் மின் கடத்தும் திறன் நன்கு புலப்படும். காந்தப் புலனால் பிளாஸ்மா நிலைக்குப் பாதிப்பு ஏற்படலாம். வாயுக்கு மின் கடத்தும் திறன் இல்லை. காந்தப் புலனால் வாயுக்கு ஒரு கேடும் ஏற்படாது.

சூரியனும் பிற நட்சத்திரங்களும் பிளாஸ்மா நிலையில் உள்ளன. நம்மைச் சுற்றிலுமுள்ள குழல் விளக்கு (Mercury Lamp) மற்றும் நியான் விளக்கு (Neon Lamp) ஆகியவற்றில் உள்ள வாயுக்கள் வெப்பநிலை மிக அதிகரிக்கப்பட்டு அவை பிளாஸ்மா நிலையில் உள்ளன.

பிளாஸ்மா தயாரிக்கும் முறை:

ஆய்வுக் கூடத்தில் குறைந்த வெப்ப நிலையில் குறைந்த அழுத்தத்தில் குளிர்ந்த மின்வாயைப் பயன்படுத்தி மின் உமிழ்பு குழாயைக் (Discharge tube) கொண்டு 'பிளாஸ்மா' தயாரிக்கலாம். பொதுவாக நேர்மின் வாய்க்கு, நேர்மின் உயர் அழுத்தத்தை (சில நூற்றுக்கணக்கான வோல்ட்கள்) செலுத்த வேண்டும். இதில் எதிர் மின் வாய் பூமியுடன் இணைந்திருக்க வேண்டும். AB என்ற பகுதிக்கு குருக்கின் (Crooks Dark's Space) இருள் இடைவெளி என்றுபெயர். BC என்ற பகுதி பிளாஸ்மா பகுதியைக் குறிக்கும். இப்பகுதிக்கு மேல் உள்ள மின்படலம் மிகச் சிறியதாகவும் ஒரே சீராகவும் இருக்கும். இப்பகுதிக்கு அதிக மின் கடத்தும் திறன் உண்டு என்பதும் புலனாகிறது. AB CD என்ற பகுதிகள் உறைகளாக இருக்கின்றன. ஆகவே, எதிர்க் கனல் ஒளிப்பகுதி, பாரடேயின் இருள் இடைவெளிப் பகுதி, நேர்க் கனல் ஒளிப்பகுதி, ஆகியவைகளை பிளாஸ்மா என்று கூறலாம்.

மற்றொரு வழியிலும் பிளாஸ்மா தயாரிக்கலாம். இம்முறை லாங்மூயர் (Langmuir), டாங்ஸ் (Tonks) என்ற இருவரால் பயன்படுத்தப்பட்டதாகும், வாயு ஊடகத்தில் எதிர்மின் வாயாக வெப்பப்படுத்தப்பட்ட டங்ஸ்டன் (Tungston) மின்னிழையைப் பயன்படுத்தியும் பிளாஸ்மா தயாரிக்கலாம்.

மூன்றாவதாக ஒரு முக்கியமான முறையிலும் பிளாஸ்மா தயாரிக்கலாம். அதைத் தயார் செய்யும் கருவிக்கு பிளாஸ்மா ஜெட் (Plasma Jet) அல்லது ஜெரிடியன் ஆர்க் (Geridian Arc) என்று பெயர். இது உலோகத் தொழிற்சாலைகளில் மிகவும் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவியில் A, B என்ற இரு மின்வாய்களுக்கு இடையில் ஆர்க் உண்டாக்கப்படுகிறது. இந்த ஆர்க் அதிக அளவு மின்சாரம்கொண்ட ஆர்க் ஆகும். இங்கு எதிர்மின் வாய் B, அதிக ஒளிவிலகல் கொண்ட பொருள்களான டங்ஸ்டன், மாலிபிடினம் போன்ற பொருள்களால் ஆனவை. மின்வாய்களில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு இடையூறு விளைவிக்காமலிருக்க ஆர்கான்போன்ற மந்த வாயு உள்ளே செலுத்தப்படுகிறது. அதிக அழுத்தமுள்ள ஒரு வாயு உருளையில் இருந்து தொடர்ந்து இவ்வாயு பெறப்படுகிறது. நேர்மின் வாயில் உள்ள சிறிய துவாரத்தின் வழியே வெப்பத்தோடு பிளாஸ்மா வெளியேறும் போது நேர்மின்வாய் அதிக வெப்பத்தால் தாக்கப்படுகிறது. பிளாஸ்மாவின் அதிக வெப்ப நிலைக்குக் காரணம் அது தாங்கியுள்ள மித மின்னோட்டமேயாகும். நேர்மின்வாய் அதிக வெப்பத்தைத் தன்னைச் சுற்றியுள்ள நீருக்குக் கொடுத்து விடுகிறது. நேர்மின் வாயைச் சுற்றி நீர் பாயும்படியான ஓர் அமைப்பு உள்ளது. இம் முறையில் வெப்பத்தின் அளவை 30,000 முதல் 50,000° (கெல்வின்) உற்பத்தி செய்யமுடியும்.

பிளாஸ்மா கொள்கலன்:

பிளாஸ்மாவிற்குத் தேவையான வெப்ப நிலையை அடைவதற்குள் எல்லாப் பொருள்களும் ஆவியாகி விடுகின்றன. ஆனால், இது ஒரு முக்கியமான பிரச்சினை அல்ல. பிளாஸ்மாவின் வெப்பநிலை சுமார் நூறு மில்லியன் பாகைகளாகும். இவ்வளவு அதிக வெப்ப நிலையில் பிளாஸ்மா இருந்தாலும் கூட, குறைந்த அழுத்தத்தின் காரணமாகப் பிளாஸ்மாவினுள் வெப்பம் அதிகமாக இருப்பதில்லை. ஆனால், பிளாஸ்மா கொள்கலனின் சுவர் மீது பட்டால் வெகு விரைவில் தன் வெப்பம் முழுமையையும் இழந்து விடுகிறது. இதுவே, மிக சிக்கலான பிரச்சினையாகும். இதன் காரணமாகவே பிளாஸ்மாவைக் கொள்கலனின் சுவர் மீது படாது பாதுகாப்பாக இருக்கும்படிக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதனால் அறிவியல் வல்லுநர்கள் ஒரு சீரிய கொள்கலனை உண்டாக்கினர்.

அக் கொள்கலன் கண்ணுக்கும் புலப்படாது. மேலும், அது எப்பொருளாலும் ஆனதல்ல. இதற்கு, ''காந்த சீசா'' (Magnetic Bottle) என்று பெயர். இக் கொள்கலனில் சுவர்கள் காந்தப் பலன் விசைக் கோடுகளால் (Magnectic field line) ஆனது. ஆனாலும், இக்கொள்கலம் பிளாஸ்மாவை ஒரு சிறிதும் தன்னிடத்துத் தப்பித்துச் செல்லாமல் பாதுகாக்க இயலவில்லை. இதைச் சரி செய்ய இடைவிடாது ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதிக ஆற்றல் வாய்ந்த காந்தபுலனுடைய சீட்டா (Zetozen energy Thermonuclear Assembly) என்ற கொள்கலனை பிரிட்டிஷ் வல்லுநர்கள் தயாரித்துள்ளார்கள். இக்கருவியைக் கொண்டு பிளாஸ்மாவின் அதிக அளவு வெப்ப நிலை (5 மில்லியன் பாகை) வரை அடையலாம் என்று கண்டுள்ளார்கள்.

பிளாஸ்மாவின் பயன்கள் :

பிளாஸ்மா ஜெட் (Plasma Jet), பிளாஸ்மா டார்ச் (Plasma torch) பிளாஸ்மா புல்லட் (Plasma Bullet) இரசாயன முறையில் 5,500. பாகை வெப்ப நிலை வரை தான் உண்டாக்க இயலும். ஆனால், பிளாஸ்மா ஜெட் மூலம் இதைப் போல் 5 மடங்கு அதிக வெப்பநிலை வரை உண்டாக்கலாம். இதன் விளைவாகப் பல பயன்கள் உண்டு. மிகக் குறுகிய காலத்தில் இரும்பு போன்ற உலோகங்களைத் துண்டாக்க இச் சாதனம் பயன்படுகிறது. விண்வெளிக்கலங்களுக்குத் தேவையான உந்து விசையை (Propellant) பிளாஸ்மா ஜெட் மூலம் பெற இயலுகிறது.

மிக எளிதாகச் செய்யக் கூடியதும், இயக்கக்கூடியதுமான பிளாஸ்மா டார்ச்(Plasma Torch) என்ற ஒரு சாதனம் ஒரு சீரான மிகுந்த வெப்பங்கொண்டபிளாஸ்மாவைக் கொடுக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் இதனை நம் நாட்டு டிராம்பே அணுசக்தி நிலையத்தார் (Atomic Energy .. tablishment) தயாரித்தார்கள். அதன் பிறகு, பிளாஸ்மா ஜெட் ஒன்றையும் செய்து முடித்தார்கள். இத் துறையில் நம் நாடும் அமெரிக்கா, இரஷ்யா போன்று முன்னேறி வருகிறது. இது நமக்கு மிகவும் பெருமை தருவதாகும்.

பிளாஸ்மா புல்லட்டுகள் (Plasma Bullet) மின்சாரத் துப்பாக்கியால் சுடப்பட்டு அவை விநாடிக்கு 120 மைல் வேகத்தில் செல்கின்றன. இவை காந்தப் புலன்வழியாகச் செல்லும் போது உருமாறி பிளாஸ்மாய்டுகள் (Plasmoids) ஆக மாறுகின்றன. இதன் மூலம் பல உண்மைகளைக் கண்டறிய ஏதுவாகும்.

காந்த இயக்க நீரியல் இயற்றி

பிளாஸ்மா மூலம் ஆற்றலைப் பெறஇயலும். இதுவன்றி வெப்ப ஆற்றலை மின் ஆற்றலாக நேரடியாக மாற்றவும் முடியும் என்று கண்டார்கள். இத்துறையில் பிளாஸ்மா பெரும் பங்கு வகிக்கிறது. இம்மாற்றம் '' காந்த இயக்கிய நீரியல்'' [Magneto hydrodynamic generator (M.H.D.)] இயற்றியால் ஏற்படுகிறது.

இவ்வியற்றியில்வெப்பம்மிகுந்த பிளாஸ்மா காந்தப் புலனின் குறுக்கே செலுத்தப்படுகிறது. பிளாஸ்மா ஒரு மின் கடத்தும் பொருள். காந்தப் புலனில் ஒரு கடத்தி வேகமாக நகருமானால் மின் இயக்கு விசை உண்டாக்கப்படுகிறது. இவ்விசையைத்தகுந்த மின்வாய்கள் மூலம் பெறலாம். இதன் செயல் டி. சி. மின் இயற்றியைப் போல் உள்ளது. அதில் திடப் பொருள் கடத்தியை பயன்படுத்துகிறார்கள்.

பிளாஸ்மா கொடுக்கும் தொல்லை

விண் வெளிக் கலன்கள் சந்திரனுக்கு அனுப்பப்படுகின்றன. மனிதனைக் கொண்டுள்ள கலன்கள் திரும்பி வரும்போது உராய்வினால் அதிக வெப்பமுடைய பிளாஸ்மா உண்டாக்கப்படுகிறது. இந்த பிளாஸ்மாவினுள் அதிக அதிர்வு எண் கொண்ட மைக்ரோ அலைகளும் ஊடுருவிச்செல்ல இயலாது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு இயக்கு நிலையத்திற்கும் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் விண்வெளி வீரர்களுக்கும் இடையே உள்ள வானொலித் தொடர்பு தடைப்பட்டு இருக்கும். இதற்கு ஒரு மாற்றுமுறை கண்டு பிடிப்பதற்கு அறிவியலார் பிளாஸ்மாவினுள் மின்சாரத்தை ஓடவிட்டு அதனை வெப்பப்படுத்தினார்கள். ஆனால், இதிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. பிளாஸ்மா ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலைவரை ஏற்பட்டு, அதன் பின் கடத்தும் திறன் (Conductivity) இழுக்க நேரிடுகிறது. அப்போது மின்சாரம் பிளாஸ்மாவினுள் ஓடு



வது நின்று விடுகிறது. அதனால் மின்சாரம் பாயும் கம்பி மட்டுமே உருகு நிலைவரை வெப்பப்படுத்தப்பட்டு உருகி விடுகிறது. இதனால் பல்வேறு வழி முறைகள் தேடப்பட்டன. இப்போது பிளாஸ்மாவின் வெப்ப நிலையைக் கோடிக் கணக்கான பாகை வரை வெப்பப் படுத்த முடியும். ஒரு பிரச்சினை தீரும் போது மறு பிரச்சினை எழுவது உலக இயல்பு. அதன் படி பிளாஸ்மாவின் வெப்ப நிலையும், அடர்த்தியும் உயரும்போது அதில் ஒரு மாதிரியான நிலையா நிலை (Instability) ஏற்படுகிறது.

இந்தியாவில் சக்காரோவ் (Sakharov) என்பாரும், டாம் (Tamm) என்பாரும் காந்தப் புலத்தின் துணை கொண்டு பிளாஸ்மாவைத் தேக்கி வைக்க இயலும் என்ற உண்மையைக் கண்டு பிடித்துள்ளார்கள். அவர்களே அதே போல் பிளாஸ்மாவின் நிலையா நிலையைத் தடுக்கவும் காந்தப் புலனால் முடியும் என்று கண்டுள்ளார்கள். பிளாஸ்மா வெப்ப அணுச் சேர்க்கை முறை பிற்காலத்தில் நன்கு வளர நிறைய இடமுண்டு. அத்துறையில் நன்மை பல விளைய உள்ளன என்ற நிலை இன்று இருந்து வருகிறது. வல்லுநர்கள் கடினமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பேச்சு, சமிக்ஞை மனத்தினால் கருத்தை அறிவித்தலே (telepathy) இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவாக இருக்குமென்று சிலர் கருதுகிறார்கள்.



அயனி மண்டல பிளாஸ்மா

நம் பூமியைச் சுற்றி அயனி மண்டலப் பிளாஸ்மா இருக்கிறது. இது இல்லாவிடில் நாம் வானொலியின் பயனை அனுபவிக்க முடியாது.

'A' நிலையத்திலிருந்து வரும் ரேடியோ அலைகளை அயனி மண்டலப் பிளாஸ்மா பிரதிபலித்து 'B' நிலையத்திற்கு அனுப்புகிறது.

A நிலையத்தில் இருந்து ரேடியோ அலைகள் பூமியைச் சுற்றியுள்ள அயனி மண்டலத்தால் பிரதிபலித்து 'B' நிலையத்திற்கு அனுப்புகிறது. பொதுவாக இவ்வலைகள் பூமியின் வளைவு காரணமாகத் திரும்பி வர இயலாமல் அயனி மண்டலத்தில் பிரதிபலிக்கும். மேலும், இதனுடைய அதிர்வு எண்ணைக் (WC) கண்டு பிடிப்பதன் மூலம் பிளாஸ்மாவில் உள்ள மின் அணுவின் கன அடர்த்தியைக் காணலாம்.

இக்காலத்தில் பிளாஸ்மா அணுச்சேர்க்கை முறை, ஆராய்ச்சி நிலையில் இருந்து வருகிறது. பிளாஸ்மா அணுச் சேர்க்கைக்குத் தேவையான வெப்பநிலை மிக உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

பிளாஸ்மா வெப்ப அணுச் சேர்க்கை முறை பூரணத்துவம் அடைந்து விட்டால் நமக்கு ஆற்றலைப் பற்றிய கவலையே இல்லாமல் பல நூற்றாண்டுகள் வாழ இயலும்.

நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90 "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்

தந்தி: நில்போபாங்க் தொலைபேசி எண்: 2420
கிளைகள்: கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
தொலைபேசி எண்: 332, 2684, 24

	(லட்சம்)
அனுமதிக்கப்பட்ட மூலதனம் ..	40·00
வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ..	29·87

வட்டி விகிதம்

(1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு ..	4%
(2) பிராவிடண்ட்பண்டு டெபாசிட்டு	5%

நிரந்தர டெபாசிட்டுகள்

(1) 1 மாதம்	முதல்	3	மாதங்களுக்குள்ளாக	3½%
(2) 3	,,	6	,,	$3\frac{3}{4}$%
(3) 6	,,	12	,,	$4\frac{3}{4}$%
(4) 12	,,	24	,,	$5\frac{1}{4}$%
(5) 24	,,	36	,,	$6\frac{1}{4}$%
(6) 36	,,	60	,,	$6\frac{3}{4}$%
(7) 60	,,	84	,,	$7\frac{1}{4}$%
(8) 84 மாதங்களுக்குமேல்			,,	$7\frac{1}{2}$%

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. $7\frac{3}{4}$%

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதாகவுடர், எம்.பி., பெருந்தலைவர். இரா. சு. வேலாயுதம், பி.எ. துணைப்பதிவாளர்-செயலாளர்.

வெண்பாப் போட்டி-21

ஈற்றடி: ஞாலமே காட்டிடும் நன்றி

முடிவுத் தேதி 1—11—1971

பரிசு: ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

ம. நடராசன், எம்.ஏ.,

"தென்னாடுடைய சிவனே
போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா
போற்றி
பராய்த்துறை மேவிய பரனே
போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே
போற்றி."

என்ற பாடலில் திருச்சிராப்பள்ளியையும் — திருப்பராய்த்துறையையும் இணைத்துப் பாடிச் சிவனடியார்கள் மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு. அப்பரும், சம்பந்தரும், மாணிக்கவாசகரும், அருணகிரிநாதரும் பாடிப் பரவிய புண்ணிய இடம். அத்தகைய பாடல்கள் பெற்ற சைவத்திருத்தலமான திருப்பராய்த்துறையில் இன்று சைவத்தோடு கலந்த 'சன்மார்க்க' முறையில் நடைபெறும் கல்வி நிலையந்தான் இராமகிருஷ்ண குடில் என்பதாகும். திருச்சியிலிருந்து மேற்கே 10 கல் தொலைவில் அகண்ட காவேரியின் அழகைப் பருகிய வண்ணம் அமைந்துள்ள தென்கரையில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது—அமைதி நிறைந்த இவ்வழகிய "குடில்". சரித்திரத்தில் சாந்தி நிகேதனத்தைப் பற்றிப் படித்திருக்கிறோம்; அச் சாந்திநிகேதனத்தையும் விஞ்சுகின்ற முறையில் நம் தமிழகத்தே தன்னிகரற்ற முறையில் "குருகுல ஆசிரம வாழ்க்கை" இக் குடிலில் நடைபெற்று வருகிறது.

கொள்கை வகுத்த குடிலின் தந்தை

"அன்ன சத்திரம் ஆயிரம்
வைத்தல்;
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம்
கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி
வித்தல்"

என்பதற்கிணங்க மட்டுமல்ல இதற்கு மேலும் பலபடி சென்று பாங்குற உதவுவதுதான் பராய்த்துறை "குடில்" எனில் மிகையாகாது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் எனும் இம் மூன்று அடிப்படைத்தேவைகளையும் தந்து இவற்றிற்கு மேலாக எழுத்தறிவிக்கும் இறைதொழிலை ஈடிணையற்ற முறையில் நாளும் செய்து வருகிறது.

" உணர்ச்சியை முழுமைப் படுத்தும் காரியத்தில் நண்பர் ராமசுவாமி அவர்கள் நல்லமுறையில் வெற்றி பெற்றிருக்கிறார் என்ற காரணத்திற்காக அவரை நான் போற்றுகிறேன் " என்று மறைந்த மாமேதை 'அண்ணா' அவர்கள் 1967-ஆம் ஆண்டு குடில் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். இத்தகு பெருமைக்குரிய பெரியவர் திரு ராமசாமி அவர்கள் 1949-ல் ஏகாங்கியாக இருந்து, அன்பர்களின் உதவியால் 56 சென்ட் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'குடில்' இன்று 50 ஏக்கரா பூமியைத் தனதாக்கிக் கொண்டு, பல லட்ச ரூபாய் மூலதனத்தில் 'இண்டஸ்டிரியல் எஸ்டேட்' ஒன்றையும் அண்ணா அவர்களின் திருக்கரத்தால் திறக்கப் பெற்றுத் திகழ்கின்றது.

அனாதைகளின் அரும்புகலிடம்

" ஏழை மக்கள்தான் நான் வணங்கும் கடவுள். அவர்களுக்குக் கல்வி இல்லை, கஞ்சி இல்லை, கந்தையில்லை. முன்னேற்றம் அடைவது எப்படிஎன்பதே அவர்களுக்குத்தெரியாது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை யார் தான் செய்து கொடுப்பார்கள்? யாரொருவர் இம்மாதிரி ஏழை மக்களின் பொருட்டு நெஞ்சு

புண்ணை வருந்துகிறாரோ அவர்தான் மகாத்மா" என்ற விவேகானந்தரின் விவேக உரையால் ஈர்க்கப் பெற்ற பிரம்மச்சாரி ராமசாமி அவர்கள், இறைவனைத் தேடி எங்கும் செல்லாது, ஆண்டவனுக்கெனத் தனி ஆலயம் கட்டாது 'ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான்' எனவே ஏழைகளை, ஆதரவற்ற அனாதைகளை அழாமல் பார்த்துக் கொள்வதே, தான் ஆண்டவனுக்குச் செய்யும் அருந் தொண்டாகக்கருதி 1—6—1954 அன்று 5 அனாதை மாணவர்களுடன் குருகுலம் தொடங்கினார். இன்று 350 மாணவர்களைப் பெற்றுப் பெருந்தொண்டு புரிந்து பெருமையுடன் விளங்குகிறது.

"இல்லை, இல்லை! இனி தனக்கென உலகில் எவருமே இல்லை, உற்றார் பெற்றார் ஒருவரும் இல்லை" என்ற நிலையில் தமிழகத்தில் உள்ள அனாதைக் குழந்தைகளைப் பொருள் பொருது சேர்த்துக் கொண்டு ஆதரவளித்து வரும் ஒரே இல்லம் இக் குடில் தான். "இனி இங்குப் புகலிடம் பெறக்கூடிய நிலையிலுள்ள, தாய் தந்தை இருவருமேயற்ற ஏழை அனாதைச் சிறுவர்களே தமிழகத்தில் இல்லை" என்ற நிலையினை ஏற்படுத்தும் முகத்தான், ஆண்டுதோறும் நிபந்தனை ஏதுமின்றி எச் சமயத்திலும் அனாதைகளைக் குருகுலத்தில் ஏற்றுக் கொள்கிறது இக்குடில்.

மாணவர்களின் அன்றாடக் கடமைகள்

குருகுல மாணவர்களுக்கென்றே அரசு அனுமதி பெற்ற சீனியர் பேசிக், போஸ்ட் பேசிக் பள்ளிகள் (உயர்நிலைப்பள்ளிவரை) குடிலில் நடைபெற்று வருகின்றன. 12 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

"மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே !
மரத்தை வெட்டிமனை செய்குவீரே !
உண்ணக் காய்கனி தந்திடுவீரே !
உழுது நன்செய் பயிரிடுவீரே !
எண்ணெய், பால்நெய் கொணர்ந் திடுவீரே!
இழையை நூற்றுநல் லாடை செய்வீரே ?

என்று பாரதி பாடியபோது இத்தனையும் செய்ய ஒருவனுக்குப் பயிற்சி கிட்டுமா, என்று பாரதி கூடச் சிந்தித்திருக்கக் கூடும். ஆனால் இவ்வாறு பல்வேறு வேலைகள் செய்திட, அன்றாடம் படிப்போடு, நடைமுறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாள்தோறும் காலை 4-45 மணி அளவில் எல்லா மாணவர்களும் துயிலெழுகிறார்கள். 5-00 மணிக்குக் கடவுள் வழிபாடு செய்கின்றனர்.

5-15 மணி முதல் 6-15 வரை படிக்கிறார்கள்.

6-15 மணி முதல் 7-15 வரை துப்புரவு செய்தல், பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், சமையல் செய்தல் போன்ற வேலைகளைச் செய்கிறார்கள்.

7-15 மணி முதல் 8-15 வரை காவிரியில் நீராடல், துணிகளைத் தூய்மை செய்தல்.

8-15 மணி முதல் 8-30 வரை வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் வழிபாடு செய்யும் கூடத்தில் எல்லா மதக் கடவுளர்களின் படமும் வைக்கப் பெற்றுள்ளன.

8-30 மணி முதல் 9-30 வரை உணவு உட்கொள்கிறார்கள்.

9-45 மணி முதல் 12-45 வரை பள்ளி சென்று பயில்கிறார்கள்.

12-45 மணி முதல் 1-00 வரை கைகால் சுத்தம் செய்து பின்னர் வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள்.

1-00 மணி முதல் 2-00 வரை நண்பகல் உணவு உட்கொள்கிறார்கள்.

2-15 மணி முதல் 3-30 வரை மாலைநேர வகுப்பு.

மாலை 3-45 மணி முதல் 4-30 வரை வாரத்தில் மூன்று நாட்கள் விளையாட்டிலும் மூன்று நாட்கள் வயல்வெளியிலும் வேலை செய்கிறார்கள். இரவு 7-30 மணிவரை படிக்கிறார்கள். இரவு உணவிற்குப் பிறகு வழிபாடு முடித்து உறங்கச் செல்கின்றனர்.

விவசாயம்

குடிலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நன்செய் நிலத்தில் நெல்லும், காவிரிப் படுகையில் 6 ஏக்கரில் காய்கறித் தோட்டமும், சுமார் 15 ஏக்கர் மணற் பாங்கான நிலத்தில் தென்னந் தோப்பும், 5 ஏக்கரில் மாந் தோப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தை உழுவது, நாற்று நடுவது, களை பறிப்பது, நீர் பாய்ச்சுவது போர் அடிப்பது போன்ற எல்லா விவசாய வேலைகளையும் மாணவர்களே செய்கின்றனர். இதனால் இவர்கள் படிப்பு, கெடுவதில்லை. ஆரம்பத்தில் 1,000 தென்னைகள் எழுப்பப்பட்டுள்ளன. காந்தி நூற்றாண்டு விழா நினைவாக 1,000 கன்றுகள் மாணவர்களால் இரண்டே நாளில் வைக்கப் பெற்றன. 1961-ல் பத்து ஏக்கர் நிலத்தில் சவுக்குக் கன்றுகள் நடப்பட்டு, 1966-ல் 40,000 ரூபாய்க்குச் சவுக்கு வெட்டி விற்பனை செய்யப்பட்டன. இதில் முழுக்கவும் ஈடுபடுத்தப்பட்டோர் இங்குள்ள மாணவர்களே ஆவர். இவ் வருவாயைக் கொண்டுதான் தென்னைகள் வைக்கப்பெற்றன. 2,500 தென்னைகளும் பலன்தர முற்படும்போது ஆண்டிற்கு ரூ. 1 லட்சம் வருமானம் கிட்டுமெனக் குடில் சகோதரர் ரத்தினம் பெருமையுடன் கூறுகையில் இவ்வளவும் இச்சிறார் தம் உழைப்பினால் வரும் பலன்தானா என வியந்திட வேண்டியுள்ளது.

குடிநீர் மேல்நிலைத் தொட்டி

குருகுல மாணவர்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைக்கவும், காவிரி நதியில் குளிக்க இயலாத போதெல்லாம், குளிக்கவும், துணிகள் துவைக்கவும், நந்தவனம், செடி, கொடி, மரங்களுக்கெல்லாம் தண்ணீர் பாய்ச்சவும், ப்ளஷ் அவுட் கக்கூஸ்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கவும், மற்றும் அவசியமான இடங்களிலும் குழாய்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. நாற்பது அடி ஆழத்தில் (பில்டர் பாயிண்ட்) வடிமுனைக் குழாயிறக்கி, எலெக்ட்ரிக் மோட்டார் பம்ப் செட் வைத்து நீர் இறைக்கப்படுகிறது. எல்லா வகைக் கழிவு நீரையும் ஒன்று சேர்த்து மாட்டுப் பண்ணைக்கும் அப்பால் குழாய் மூலம் கொண்டு போய் நிலத்தில் பாய்ச்சி, சீமைப்புல் தோட்டம் உண்டாக்கப் பட்டிருக்கிறது.

குடில்போக்குவரத்தும் தொழிற் பயிற்சி நிலையமும்.

ஆல மரம் போல் மிகப் பெரிய அளவில் வளர்ந்து விட்டிருக்கும் இந் நிறுவனம் நிர்

வாகச் செலவிற்கு ஆண்டு தோறும் மூன்று லட்சம் ரூபாய் செலவிடுகிறது. சராசரி ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டில் செய்யப்படும் பல்வேறு செலவுகள் ரூ. 500 ஆகும். அரசு வழங்கும் தொகை ரூ. 144. அரசாங்கம் தரும் உதவிக்கு மேல் செலவு ஆவதால், தனியார் நன்கொடைக்கு ஆண்டு தோறும் காத்திருக்கவேண்டியுள்ளது. இந்நிலைபோக்கிடவும், பள்ளி இறுதி வரை பயின்றவர்க்குத் தொழில் நுட்ப அறிவை வழங்கிடவும் ஏற்ற முறையில் '' ராமகிருஷ்ண இண்டஸ்டிரியல் இன்ஸ்டியூட்'' எனும் அமைப்பு உருவாக்கப் பெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சரான ஆண்டு தொடங்கி வைத்தார்கள். இங்கு ஆயிரக்கணக்கான பம்புசெட்டுகள் தயாரிக்கப்படுவதுடன் அவைகள் குறைந்த விலைக்கு லாப நோக்கின்றி விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. அத்துடன் குடில் பேருந்துப் போக்குவரத்தும் மக்கள் நலனுக்காக நன்முறையில் நடத்தப்பட்டுவருகின்றது. 1949-ல் தொடங்கப்பட்டது முதற்கொண்டு இது நாள் வரை ஏறத்தாழ ரூ. 50 லட்சம் வரை இவ்வமைப்பின் பல்முனை வளர்ச்சிக்கும் செலவிடப்பட்டுள்ளது. எல்லாவிதக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ஆன செலவு சுமார் ரூ. 12 லட்சமாகும். ஆசிரியர் குடியிருப்பு ரூ. 1½ லட்சம் செலவில் தற்பொழுது கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. ஆண்டுத் தேவைக்கான நெல்லைச் சேமித்து வைக்க, 3,000 மூட்டைகள் கொள்ளளவுள்ள நெற்களஞ்சியம் ஒன்று ரூ. 65,000 செலவில் கட்டப்பட இருக்கிறது.

அண்ணா புகழ்ச்சி:—கொள்கை வழி நிற்கும் குடில் நிறுவனத்தின் குன்றா உழைப்புக்கண்டு மகிழ்ந்து அழகில் மயங்கிப் பின் வருமாறு குறிப்பிட்டார் அண்ணா.

''நம்முடைய ஆசைகளை அடக்கிக் கொண்டு, அடுத்த



தலைமுறைக்கு வசதியைத் தேடிக் கொடுக்கவேண்டும். அப்படிப் பட்ட மன அடக்கத்தை, அப்படிப் பட்ட தன்னலமற்ற தன்மையை, உழைக்கின்ற தன்மையை இந்தக் குடில் தருவதிலேயே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்கள் இங்கு உழைப்புத் திறமையைப் பெறுகிறார்கள்; அறிவுத் திறமையைப் பெறுகிறார்கள்''

இது எவ்வளவு உண்மை என்பதை இதனை நேரில் காண்போரே உணர முடியும்.

சாதாரணமாக ஒரு மாணவன் கல்விக் கூடத்தை விட்டு வெளியேறும்போது, உழைக்கத் தெரியாதவனாக உலகம் இன்னதென்றே அறியாதவனாக இருக்கின்றான். ஆனால் இக்குடிலில் படித்துப் பயிற்சி பெற்று வெளியேறும் ஒரு மாணவன் தன்னை எந்தச்சூழ்நிலைக்கும் தயார் படுத்திக் கொண்ட நிலையில், உழைக்க முடியும், உயர முடியும் என்ற தன்னம்பிக்கையோடு வாழ்க்கையில் நுழைகிறான்.

எனவே இக்குடில் பத்து-பன்னிரண்டு தென்னை மரங்கள் உள்ள இடம் மட்டுமல்ல; நல்ல முத்துச் சுடர்போல நிலாவொளி முன்னே வரும் இடமட்டுமல்ல—கத்தும்குயிலோசை வந்து காதில் விழும் இடம் மட்டுமல்ல; சித்தம் மகிழ்ந்து தென்றல் வரும் இடம் மட்டுமல்ல;

குடில் குணக்குன்றுகளை உருவாக்கும் கூர்மதிக் கோயில்.

அண்ணா சொன்ன கதை

ஒரு மன்னன் காலையிலே எழுந்து வீதியிலே ஓர் ஏழை போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது கதவு இடித்துத் தலையிலிருந்து ரத்தம்கொட்டியதாம்.

மன்னன் இரத்தம் சிந்துவதைக் கண்ட மந்திரி, ஏழையை இழுத்து வரச் சொல்லிக் கட்டளையிட்டார்.

'காலையில் உன் முகத்தைப் பார்த்ததால் அவர் ரத்தம் சிந்தினார்; ஆகவே பாவியாகிய நீ உயிர் வாழக் கூடாது' என்று மரண தண்டனை விதித்தார் மந்திரியார்.

உடனே ஏழை சிரித்தான்!

"ஏன் சிரிக்கிறாய்?"—மன்னன் கேட்டான் ஆத்திரத்தோடு!

"நீங்கள் என் முகத்தைப் பார்த்ததால் ரத்தம்மட்டும் சிந்தினீர்கள்! நான் உமது முகத்தைத்தான் பார்த்தேன். இப்போது என் தலையையே இழக்கிறேன்'' என்றான் ஏழை!

18. நாட்டுக்கென் செய்தோம் நவில்

எத்தனைதான் கல்லூரி! எத்தனைதான் பட்டங்கள்!
அத்தனையும் பெற்றும் அனுபவித்தும்—இத்தரையில்
ஏட்டுப் படிப்போ எழுத்தறிவோ இல்லாக்கை
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவதென்று
நொந்துபோய் உள்ளவர்கள் நோய்தீர்க்க—வந்தவுடன்
திட்டினேம் திட்டமய்யா தீங்காக வேறிந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கே. ஒ. எஸ். பகுருதீன், மாங்குளம்.

வீடும் நலம்பெறவே விற்பனர்கள் வாழ்ந்திடவே
கூடும் கொடியவர்கள் தாழ்ந்திடவே—தேடியே
நாட்டின் உயிர்களெல்லாம் நல்வாழ்வு பெற்றிடவே
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—மு. கண்ணப்பன், சென்னை-2

மண்டும் புகழ்மலர மாண்பின் மணம்நுகரத்
தொண்டர் பணியே துணைநிற்கும்—ஒண்டொடியே!
ஏட்டில் பெயர்நிலைக்க இன்பம் நமையழைக்க
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் முத்து வேங்கடேசன், திருமயம்.

காற்றடித்தால் வீழ்கின்ற காய்வாழ்வை நச்சாமல்
மாற்றரும் ஒப்புகின்ற மாப்பணியை—ஆற்றியதால்
ஏட்டில் தமிழ்நெஞ்சில் என்றும்வாழ் அண்ணனைப்போல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

நாட்டால் நமக்கென்ன நன்மை எனக்கருதி
ஏட்டறிவைப் பெற்றதனால் ஏதுபயன்?—நாட்டினரை
வாட்டும் உறுதுன்பம் ஓட்டிடநாம் வாணாளில்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் பால. உலகநாதன், ஆரணி.

துஞ்சுபுலி ஒத்தே தொடர்ந்துபணி ஆற்றியபின்
பஞ்சுமலி மஞ்சம் படுத்திட்டோம்—அஞ்சுகமே!
வீட்டினை வோடே வெறும்பணி நின்றிட்டால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—அரங்கசாமி, கிழக்குத் தவுட்டுப்பாளையம்.

வெய்ய கொடுமையும், வேதனையும் பாராமல்
பொய்மைக் குழிபுதைந்த புல்லியராய்—அய்யகோ!
வீட்டிலிருந் துண்டுறங்கி வீணுரைத்த தன்றியிந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சமா. அருணன், சோழ கிராமணி.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்—

நெல்லை ஆ. கணபதி,
டி. 165, டாடண்டர் நகர்,
சைதாப்பேட்டை,
சென்னை-15.

சிங்களத்தைப் பொன்கொழிக்கச் செய்த தமிழர்களை
இங்கிருக்க லாகா தெனவிரட்டும்—சிங்கள
நாட்டை அரசாளும் நாயகியே ! நீதுன்றன்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—குழ. அண்ணாமலை, கோவை.

முத்தத்தின் முத்திரையை முந்நூறு நாட்களுக்குள்
இத்தரையின் ஒருயிராய் ஈன்றெடுக்கும்—வித்தகத்தைக்
காட்டுதற்கும் ; தன்னலத்தைக் காப்பதற்கும் கற்றதன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் அ.வே. காசிநாதன், அமிர்தராயன்பேட்டை.

திண்ணையில் குந்தி திமிராகப் பேசிவிட்டு
மண்ணில் மரமாய் மடிவோனே !—திண்ணமுடன்
வீட்டுக் குதவாத வீணனே ! நம்வாழ்வில்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் வ. கலியமூர்த்தி, பிரக்கலைக்காடு.

பகுத்தறிவுக் கல்விதந்து, பஞ்சநிலை போக்கி,
தொகுத்த கலப்புமணம் தோற்றி,—வகுத்திருந்த
கேட்டுக்கே வேட்டுவைத்துக் கீர்த்திபெற்ற செந்தமிழர்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—வொ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

மாண்பிறவி யன்றோ மனிதப் பிறவியிதை
வீண்பிறவி யாக்கி விடலாமோ ?—பூண்பாவாய் !
வீட்டுக்கென் செய்வதென வெந்தழிந்த தல்லாது
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நாரை. மாசப் புலவர், வில்லிசேரி.

கன்றோடு நிற்பதில்லை ; காணும் பசுநமக்கும்
அன்போடு பால்தந்தே ஆதரிக்கும் !—அன்பே!நாம்
வீட்டோடு நிற்கின்றோம் ; விண்வாழ்வு வாழ்கின்றோம் ;
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—மலை. மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

பாரதியார், காந்திய ண்ணல், பண்பாளர் போற்றுகின்ற
பேரறிஞர் அண்ணு ; பெரியார்;நற்—சீருயர்த்திக்
காட்டிப் பணிசெய் கலைஞர்தம் சொற்படிநம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நெல்லை சி. தமிழ்வென்றி, சுத்தமல்லி·

' நாமிருவர் ; பிள்ளை நமக்கிருவர் ' என்றரசு
சேமமுடன் வாழவழி செப்பிடினும்—நாமிருவர்
வீட்டைப் பெருக்கியிங்கு வேதனைகள் சேர்த்ததன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கோம்பை கா. செயபாலன், பி.இ., சென்னை-1.

கஞ்ச மலர்முகமே ! கற்கண்டே ! தேன்பாகே !
நெஞ்சங் கவர்கிளியே ! நீணிலவே !—மஞ்சமதில்
நாட்டுக்குப் பாரமாய் நாம்பலரைப் பெற்றதல்லால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நா. சுந்தரராசன், தர்மபுரி.

மண்ணிற் பிறந்த மனிதருள் தாம்பிறந்த
மண்சிறக்கச் செய்தவர்கள் மாண்புடையோர்—கண்மணியே
ஏட்டுச் சுரைக்காய்போல் இல்லாமல் நாம்பிறந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

நாளும் உழைத்துழைத்து நல்வாழ்வு கிட்டாமல்
வேலைக்கு வேலை வெறுப்படைந்து—தாளாமல்
வாட்டமுறும் ஏழை வறுமையைப் போக்காமல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் ந. அ. அண்ணாமலை, வடஆர்க்காடு.

குண்டுமழை தாங்கிக் குலுங்கு நிலந்திருத்தி
மண்டுபுகழ் சப்பான் வளர்வதையே—கண்டும்நாம்
கூட்டங்கள் முற்றுகை கோரிக்கை என்பதல்லாமல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—இளங்கோ, ஆலங்குளம்.

மண்டுதமிழ் உண்டு,புகழ் கண்டுதிகழ் நம்முதல்வர்
குண்டுவெடி கொண்டுசதி செய்பவர்பால்—விண்டுரைப்பர்
நாட்டமெல்லாம் மக்கள் நலமல்லால் தீமையுற
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நெல்லை எஸ்.முத்து, திருநெல்வேலி-6.

நாட்டால் அரசால் நமக்கென் பயனென்றே
கூட்டிக் கழித்தே குறிபெருக்கித்—தேட்டமதில்
நாட்டமே கொள்ளும் நயமில் மனிதா ! நம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்·

பற்றும் பகைநெருப்புப் பாசறையைப் பாழ்செயினும்,
தொற்றும் பிணிநமரைச் சூழ்ந்திடினும்—வெற்றெலும்புக்
கூட்டுக்கே சோறூட்டிக் குந்திக் கிடந்ததன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் காவிரிக் கபிலன், இளங்காடு.

செந்தமிழ் வேலுடையோன், தென்னாட்டுக் காந்தி,நம்
சிந்தைவாழ் தெய்வமாம் சிலரண்ணு!—இந்நாட்டில்
பாட்டாளி மக்களைப் பாராளச் செய்தார்;நாம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—அ. பெரியசாமி, பி.ஏ.,பி.டி., மங்கைபுரம்.

வங்கத்துச் சிங்க வரலாற்றைப் பார்த்தாயா ?
தங்கமகன் பேச்சைத் தலைக்கொண்டே—பொங்குகிறார்!
வீட்டை உயிரை விளைநிலத்தை வேண்டார்போல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் சோம. சிவப்பிரகாசம், நாச்சியாபுரம்.

தன்னை விளைவிக்கும் தாரணிக்கு நல்லெருவாய்
மன்னும் பயிரினங்கள் மாய்வனபோல்—நன்னூலாம்
ஏட்டில் வரலாற்றில் ஏறிவிடு மாறுநாம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

இரண்டுக்கு மேலென்றும் வேண்டாமே என்ற
திரண்ட கருத்தைத் தெரிந்தும்—முரண்பாடாய்
வாட்டம் வரும்வரைக்கும் மக்களைப் பெற்றோமே
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கலைப்பிரியன் மு. நாராயணன், சந்திரப்பட்டி.

பாட்டுக் கொருபுலவன் பாரதியின் ' பா 'கேட்டும்
நாட்டின்மேல் பற்றின்றி நாமிருந்(து),—ஓட்டுகின்றோம்!
ஓட்டுகின்றோம்! ஒப்பரிய நற்பொழுதை ; இன்றுவரை
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ஆ. இராசரத்தினம், பி.எஸ்சி.பிடி., தாமரங்கோட்டை.

உழைத்தேதான் உண்போன் ஒடுங்கக் கொடுமை
இழைத்தேதான் தின்போன் இனிதாய்த்—திளைத்திடவே
ஈட்டிய செல்வத்தை ஏழையர்க்குத் தந்திடற்கிந்
நாட்டிற்கென் செய்தோம் நவில்.

— ரா. கணபதி, உ. அம்மாப்பட்டி.

கூடிக் குலவித்தான் குட்டிகளும் போட்டுவிட்டு
தேடிநிதம் சோறிட்டுச் சோர்ந்திட்டோம்—ஏடநாம்
கூட்டி, வறுமைதனைக் குன்றாமல் செய்ததன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ஆதினம், விரசிகாமணி·

என்னுள் புதிராய் இருந்துவரும் என்உணர்வே!
உன்னைநீ முன்னர் உணர்ந்திடுக—உன்இயல்பால்,
நாட்டைக் குறைகூற நின் நாவை நீட்டுமுனர்,
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பூவை. வாலறிவன், பூலாம்பாடி.

மூடப் பழக்கத்தால் மூண்ட மடிமையிருள்
ஓடப் பகுத்தறிவை ஓதிநிதம்—நாடிதனை
மீட்ட பெரியார்போல் மெய்யறிஞர் அண்ணாபோல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சு. நாராயணசாமி, தில்லைநகர்.

கண்ணாய்த் திருநாட்டைக் காத்தடிமைப் பூட்டுடைத்த
அண்ணலென வாழ்ந்தோமா? அன்பறிவாம்—அண்ணாபோல்
கேட்டை மனந்தெளிந்து கிள்ளி எறிந்தோமா ?
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—க. ஒப்பிலாள், திருச்சி-1.

இன்னு நிறவெறியால் இன்னுயிரைத் தானிழந்து
கென்னடியார் அன்று கிளர்ந்தெழுந்து—சொன்னதுபோல்
நாட்டின்கண் ஏதேனும் நாடினமே அல்லாது
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சி.சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-16.

ஆடிக் களித்தோம் ; அறுசுவைகள் நாமுண்டோம் ;
கூடிக் கலந்தோம் ; குறைவின்றி—மாடியிலே
நீட்டிப் படுத்தங்கே நிம்மதியாய்க் கண்ணயர்ந்தோம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சி.எஸ். விசாலாட்சி, மதுரை-11.

தாயாய்க் கருணைத் தருவான கற்பகமாய்த்
தோயும் குருதித் துடிப்பினிலே—ஓயாது
மீட்டும் இசைகூட்டும் மேன்மைத் தமிழ்வழங்கும்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் காளியப்பன், பி.ஏ., காரைக்குடி-4.

ஈட்டும் பொருளெல்லாம் எங்கேயோ சென்றுறைய
வாட்டும் பசியோடும் வாழ்மக்கள்—கூட்டத்தின்
வாட்டமதைப் போக்கி வளம்பெருக்கும் சீர்மணக்க
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கணியமணி ஜே.வி. எஸ். சுவாமி, முத்துவயல்.

முக்கோண மந்திரத்தை முன்னமே நான்சொன்னேன்
எக்கோணம் ஆயென்ன வென்றாயே !—இக்கோணல்
வீட்டில் இடமின்றிப் பெற்றதல்லால் ; மேல்நமது
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—காங்கேயன், வெங்கல் பாளையம்.

உண்டோம் ; உறங்கினோம் ; நாளும் உடல்வளர்த்தோம் ;
தொண்டாற்றி, இந்நாளில் தொய்ந்தநம்—பண்டைநலம்
மீட்டுதற்(கு) என்செய்தோம் ? மேன்மைபெற் றோங்கிடநம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

ஈட்டினோம் செல்வங்கள், எட்டினோம் வானிலவை !
ஏட்டில் எழுதிட்டோம் இன்கவிதை —நாட்டமாய்
வீட்டுக் குறைதீர்த்தோம் வெறெதுவும் செய்தோமா ?
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—வை. வாணி, சென்னை-4.

ஆண்மயிலே! தேனே! அழகொழுக நாமிருவர்
சேய்மையிலே கூடிச் செழிப்பதுபோல்—வாய்மையுற
ஏட்டுக்கென் செய்தோம்? எழுச்சிபெற் ருேங்கிடத்தான்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பசுமலை வீர. முருகேசன், எம்ஏ., பி.டி., களிமங்கலம்.

கற்ருரும் கல்லாரும் கண்டு களிகூரப்
பிற்பட்டோர் வாழ்வுநலம் பேணுதலால்—நற்புகழை
ஈட்டும் கலைஞர்போல், இன்னமுதே! நாம்பிறந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

நாட்டின் நிலையெண்ணி நாம்பாடு பட்டோமா?
கேட்டை யழிக்கக் கிளர்ந்தோமா?—நீட்டுபுகழ்ப்
பாட்டைத் தமிழில் படைத்தோமா? ஏதமிழா!
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பூ.அ. இரவீந்திரன், சுண்டப்பாளையம்.

செங்குருதி கொட்டிச் சிறைப்பட்டுச் செக்கிழுத்துத்
தங்கச் சுதந்திரத்தைத் தாம்பெற்ருர்—இங்கேநாம்
வீட்டுக்(கு) உழைத்துழைத்தே வீழ்ந்ததன்றி நாம்பிறந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சிவ. மு. சிவலிங்கம், பி.எஸ்.சி., சிவகாசி.

ஆண்டான் அடிமை அகற்றி ஒழித்தோமா?
தீண்டாமை தன்னைத் தீய்த்தோமா?—ஆண்டாண்டாய்
வாட்டமுற்றுத் தாழ்நிலையில் வாழ்ந்திடுவோர் சீர்பெறவே;
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—தமிழரசன், மகேந்திரபள்ளி.

தனியொருவன் நல்வாழ்வும் தாய்நாட்டின் மாண்பும்
இனிதுயர நாட்டினருக் கென்றும்—புனிதரெல்லாம்
தீட்டி வகுத்திட்ட திட்டங்கள் ஈடேற
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—தி. செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

தென்னகத்தின் தேன்குடமே! தென்பாண்டி நன்முத்தே!
முன்னகத்தே முற்றிவந்த முத்தமிழே—உன்நலத்தைக்
கேட்டிருந்தும் பாடமொழி ஆகுமோ என்றஇந்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பலவர் அ. கன்னையா, தொப்பூர்.

மண்ணகத்துத் தோன்றி மகிழ்வுடனே வாழ்த்திருக்க
எண்ணற்ற நற்பொருளை ஈட்டிடினும்—கண்மணிபோல்
நாட்டமுடன் காத்திருந்து நாளும் நலமளிக்கும்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் க. ஆ. இராசன், சேலம்.

சுவைமிக்க உண்டியுடன் சுற்றத்தா ரோடே
எவைவரினும் வந்திடுக வென்றே—அவரவர்
பாட்டுக்கென் னென்றே பயமின்றி வாழ்ந்தாலும்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

தொழிலை வளர்த்தோமா? தொல்லை தவிர்த்தோமா?
மொழியை வளர்த்தோமா? மோகம்—ஒழித்தோமா?
வீட்டை வளர்த்தே வீணவதிப் பட்டதல்லால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சொ. அழகப்பன், சென்னை-17.

ஆண்டுதோறும் பிள்ளை; அளவின்றித் துன்பங்கள்!
ஆண்டவன் தந்ததென்பார்! ஐயகோ!—மூண்டெழும்
கூட்டம் படைத்தோம்! கொடுமை இதைத்தவிர
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., சென்னை-5.

நாயும் தனைப்புரந்த நல்லோர்க்கும் நன்றிசெயும்
ஆயப் புகுந்தால் அவனியிலே—நேயமுடன்
நாட்டிலுள இன்பம் நமக்கீந்த அன்னையாம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ந. கருணநிதி, வங்கனூர்.

நோயொன்றும் காணமல் நூருண்டு வாழ்ந்தாலும்
போயடங்கும் யாக்கையிது; பொய்யல்ல—ஓயாது
வீட்டுக்(கு) உழைப்பதன்றி வேறுண்டோ? தாய்த்திரு
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—தடாகம் புஷ்பன், கோவை—2

நம்பெண்டிர் நம்பிள்ளை நஞ்சுற்றம் நம்முடைமை
நம்வாழ்வு என்றென்றே நாமெண்ணி—நம்பொழுதை
வீட்டுநலங் காக்க விரயஞ்செய் தோமல்லால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் மா. கணபதி, திருச்செங்கோடு.

ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

மாதவன், ஒளிக்கடலில் மிதக்கும் கப்பலைப் போல் காட்சி தரும் அந்த அழகான மாளிகைவீட்டை அடைந்த பொழுது இரவு மணி எட்டு.

முன் தாழ்வாரத்தில் தம் மகளோடு உரையாடியவாறே அங்கும் இங்குமாய் உலவிய வண்ணம் இருந்தார் பேரின்பமுத்து.

அந்த நேரத்தில் அவர் அப்படி வீட்டில் இருக்கக் கூடும் என்று மாதவன் எதிர்பார்க்கவே இல்லை. வெளியே 'கிளப்'புகளுக்கோ, வேறு எங்குமோ சென்று விட்டு இரவில் பொதுவாக ஒன்பது-ஒன்பதரைக்கு மேல்தான் அவர் தமது இல்லத்திற்குத் திரும்புவது வழக்கம் என்று தேன்மொழி மட்டுமல்ல மற்றவர்களும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிருன் அவன்.

இன்ருே. . . . தனக்காகவே அவர் காத்துக் கொண்டு நிற்பது போல் தோன்றியது மாதவனுக்கு; அதற்குத் தகுந்தமாதிரி தான் அவருடைய கலகலப்பான வரவேற்பும் அமைந்திருந்தது. ஒரு வாரத்திற்கு முன்னர்த் தாம் கரடியாக உறுமியதை— கடுமையாகச் சீறியதை—யெல்லாம் அறவே மறந்து விட்டு முற்றிலும் புதிய மனிதராக—புதிய கனிவுடன்—அவர் வழங்கிய வாஞ்சைமொழிகள் அவனுக்கு மிகுதியான இனிப்பையே அளித்தன.

'. . . . இந்தத் தேன்மொழி என்னைப் பற்றி நிறையச் சொல்லி வைத்திருப்பாளோ? . . . . தன் தந்தையை எனக்காகக் காத்திருக்கும் அளவுக்குக் கூட மாற்றி . . . . . !'— மனத்திற்குள்ளேயே வியக்காமல் இருக்க முடியவில்லை மாதவனுல்.

• • •

சிறிது நேரம் வெல்வெட்டுக் கம்பளம் விரிக்கப் பெற்ற, முன் கூடத்தில், சோபாக்களில் அமர்ந்தவாறே, மூவருமாகக் 'கிரிக்கெட்' ஆட்டத்திலிருந்து 'கிட்டிப்புள்' ஆட்டம் வரை ஓர் அலசு அலசி விட்டு உணவுக் கூடத்தினுள் நுழைந்த பொழுது அவனுக்காக அங்கே அறு சுவை விருந்தே காத்திருந்தது.

பால்கோவா நிறத்தில் பளபளக்கும் அந்தநீண்ட மேசையின் ஒரு புறத்தில் பேரின்பமுத்தும், எதிர்ப் புறத்தில் மாதவனுமாக அமர்ந்து கொண்டனர்.

''சண்பகம் எல்லாவற்றையும் இங்கே கொண்டு வந்து வச்சுட்டு

7. காவியமோ? ஓவியமோ?

நீ வெளியே போயிடு; நாங்க முக்கியமான சில சேதியெல்லாம் பேசவேண்டியிருக்கு''
—என்று சமையற்காரியை அங்கிருந்து அனுப்பி விட்டார் பேரின்பமுத்து. பிறகு தம் மகளின் பக்கம் திரும்பி, ''ஏம்மா, நீயும் உட்காரேன்; மூணு பேருமா சேர்ந்தே சாப்பிடுவோம்'' என்ருர்.

''வேண்டாம்பா; நாமாக இருந்தால் பரவாயில்லை; இன்ஞெரு விருந்தாளியும் வந்திருக்கும்போது, அவரையே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுங்கள் என்று சொல்வது அழகாக இருக்குமா?''

என்ருள் தேன்மொழி இள நகையுடன்.

''ஆமாம்மா! அது சரி இல்லேதான்; அப்போ நீயே பரிமாறிடு!''—என்ருர் பேரின்பமுத்து சிரித்தவாறே.

மாதவனுக்கோ ஒரே மலைப்பாகவே இருந்தது. அந்தப் பெரிய நுனி வாழை இலையில் இப்படி வகைவகையான உணவுப் பண்டங்களை வடித்துத் தன்னைத் திணற அடிப்பாள் தேன்மொழி என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

அவனுடைய வாய் அந்தப் பண்டங்களை உள்ளுக்குத் தள்ளி வயிற்றை நிரப்பிக்கொண்டிருக்கும் அதே வேளையில், அவனுடைய கண்களோ . . . . . ?

தேன்மொழியின் பேரெழிலை இமைக்காமல் பருகி அவன் நெஞ்சை நிரப்பிய வண்ணமே அவை இருந்தன!

மெல்லிய கத்தரிப்பூச் சேலையுடுத்தி, முன்தானையை இடுப்பிலே செருகிக் கொண்டு, கரண்டியும் கையுமாக அவள் பரிமாறுகின்ற பக்குவமே, ஒரு தனி ஒயிலாக—தனிக் கவர்ச்சியாக—அவன் மனத்துக்கு மகிழ்வூட்டியது.

அவள் தன் அருகே வந்து மிக நெருக்கமாக நின்று தன் இலையிலே காய்கறிகளைத் . தள்ளும் பொழுது.

"எதற்கு இவ்வளவு தடபுடலான விருந்து?" என்று தணிந்த குரலில் கேட்டான் மாதவன்.

"இந்த வீட்டு மாப்பிள்ளை ஆச்சே! சாதாரணச் சாப்பாடு போடலாமா?"

—குறும்பு முறுவலுடன் குசுகுசுத்தாள் தேன்மொழி. அத்துடன்,

"....என்னையே பார்க்காமல் இலையிலே இருக்கிறதைப் பார்த்துத் தின்னுங்க; உங்களை 'நல்லபிள்ளை' என்று அப்பா விடம் சொல்லியிருக்கிறேன்; அதைக் கெடுத்துக்காதிங்க, உங்க கண்ணுலே!"

—என்றும் எச்சரித்தாள்.

நல்ல வேளையாக அப்போது பேரின்பமுத்துக்கு நன்றாகப் புரையேறிக்கொண்டு விட்டது; அதனால், அந்த இளஞ்சிட்டுகளின் வார்த்தைப் பரிமாறல்கள் அவருடைய செவியை எட்டியிருக்க வழியில்லை. நீரைப் பருகித் தொண்டையைச் சரி செய்துகொண்ட அவர்,

"மாதவா!"—என்று அழைத்தார்.

தேன்மொழி அவனைவிட்டு நகர்ந்து இப்பால் வந்துவிட, அவன் அவரை நிமிர்ந்து நோக்கினான்.

"எதுக்கு இந்த விருந்துன்னு உனக்குக்கூட வியப்பா இருக்கும் இல்லையா? ...... ஒரு முக்கியமான ஏற்பாட்டுக்கு முன்னறிவிப்புதான் இது. ஆனா, அது என்னன்னு நான் தெரிவிக்கிறதுக்கு முந்தி, நீ என்னை மன்னிச்சிட்டதா ஒரு வார்த்தை மனந்திறந்து சொல்லணுமே!"

—அவருடைய இந்தச் சொற்களைக் கேட்டதும் மாதவனின் உடம்பே குன்றிக் குறுகிவிட்டது; திகைப்போடு கூடிய வெட்கத்தால் முகமும் வெளிறிவிட்டது.

"நான் ரொம்பச் சின்னவன்; உங்க நிழல்லே உயிர்வாழ்கிறவன் உங்க மாதிரிப் பெரியவர்களைப் போய்....."

—அதற்குமேல் என்ன கூறுவதென்றே தெரியாமல் திணறினான் மாதவன்.

உண்பதைக் கூட நிறுத்திவிட்டு அவனையே கண் கொட்டாமல் பார்த்தார் பேரின்பமுத்து.

"உன்னோட இந்த அடக்கம் தாம்பா என் இருதயத்தை இன்னும் பிழிஞ்சு எடுக்குது ......ஒரு மனிதன் பெரியவனா, சின்னவனா என்கிறதுக்கு அளவுகோல் அவன் மனமும் குணமும் தானே யொழிய, அவனோட பணமோ பகட்டோ இல்லே. என்கிட்டே எவ்வளவு பணம் இருந்து என்ன? அதனாலேயே நான் பெரிய மனிதன் ஆயிடுவேனா? அன்னைக்கு நான் எவ்வளவு மோசமா நடந்துக்கிட்டேன்.. ஆனா, அதுக்கு அந்தத் திரோபதையும் ஒரு காரணம். எனக்குப் பொதுவா 'பெருநோய்' கொண்டவங்களைக் கண்டாலே பிடிக்காது...."

அதற்குள் தேன்மொழி குறுக்கிட்டு—

"எனக்கும் அப்படித்தான்; அவங்களைப் பார்த்தாலே எனக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வரும். ஆனா, சிலபேர் அவங்க கிட்டே எப்படித்தான் மனம் சகிச்சுப் பழகுறாங்களோ தெரியலே?"

—என்று தன் தந்தைக்கு ஒத்து ஊதினாள்.

மாதவன் ஒரு பலாச்சுளையை எடுத்து வாயில் வைத்தவனாக,

"இந்தச் சுளையிலே தேனும் ஊற்றி இருக்கோ?" — என்று தொடர்பில்லாத கேள்வியொன்றைத் தொடுத்தான்.

"ஆமா, அது இனிக்கிறதிலே இருந்தே அதைக் கண்டுபிடிக்கத் தெரியலையா?"—என்றாள் தேன்மொழி.

"இந்தத் தேனைப் பிழிஞ்சு எடுக்கிற கூடு கூடச் சில சமயம் பெருநோய் கொண்டவங்க முகம்மாதிரி தான் தோணும், இல்லே"—என்று வறட்சியாகச் சிரித்தான் அவன்.

தேன்மொழியின் மலர்ந்த முகம் சட்டென்று உலர்ந்து சுருங்கிவிட்டது. ஆனால் அவளைப் போல அவனது வார்த்தைகள்—வறண்ட சிரிப்பு —இவற்றிலே பொதிந்துள்ள உட்பொருளைத் துழாவிப் பார்க்கும் அளவுக்குக் கூர்மையோ பொறுமையோ இல்லை பேரின்ப முத்துக்கு. அவர் மேலே தொடர்ந்தார்:—

"அது போகட்டும்; அன்னைக்கு நீ பணத்தைக் கொடுக்கலேன்னா அவ இந்த இடத்தை விட்டு நகர்ந்தே இருப்பாளா? அது மட்டுமா? இன்னும் இல்லாததும் பொல்லாததும் சொல்லி என் மானத்தையே வாங்கியிருக்க மாட்டாளா? அவ்வளவு சிக்கிரம் அவளை இந்த வீட்டைவிட்டு நீ அப்புறப்படுத்தினதுக்காக உனக்கு நான் நன்றியே சொல்லியிருக்கணும். நானோ முரட்டுத்தனமா — மூர்க்கத்தனமா — உன்னைப் பேசிட்டேன். ஆனா நீ ......? ஒரு வார்த்தை கூடச் சொல்லாமே, தலையைக் குனிஞ்சுக்கிட்டே போயிட்டே? அந்த உன் அடக்கத்தையும் பணிவையும் இப்ப நினைச்சாலும் ....."

—திடீரென்று அவரது நெஞ்சம் நெகிழ்ந்து விழிகளை நீரில் மிதக்கவிட்டு விட்டது. குரலும் தழுதழுத்துவிட்டது. எனினும் சமாளித்துக் கொண்டு மேலே தொடர்ந்தார்:

"உண்மையாத்தான் சொல்றேன், மாதவா? உன் சகிப்பு உணர்ச்சிங்கிற மழை வெள்ளத்திலே என் மனசிலே குவிஞ்சு கிடந்த குப்பை—கூளமெல்லாம் அடிச்சுக்கிட்டுப் போயிட்டதா ஒரு தெளிவை நான் உணர்கிறேன். தேன்மொழியும் உன்னைப்பத்தி நிறைய எடுத்துச் சொல்லிச்சு. இதுக்கிடையிலே எனக்கு அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி ஒண்ணும் நடந்து போச்சு."

"என்னசார், அது?"

—திடுக்கிட்டுப் போய்க் கேட்டான் மாதவன்.

"நம்மோட நிறுவனத்துக்கு ஏராளமான கிளைகள் இருக்கிறது தான் உனக்குத் தெரியுமே? அவைகள் எல்லாத்தையும் என்னாலே அடிக்கடி போய்ச் சோதனை செய்ய முடியறதில்லே. அதைப் பயன் படுத்திக்கிட்டு ஒரு அலுவலகத்திலே உள்ள "கேஷியர்" ("கருவூலக்காரர்") பத்தாயிரம் ரூபாய்ப் பணத்தைச் சுருட்டிக் கொண்டுவிட்டார்."

"அய்யய்யோ! அப்புறம்?"

"அப்புறம் என்ன? நான் மிரட்டிய மிரட்டல்லே எப்படியோ பணத்தைக் கொண்டு வந்து கட்டிட்டார். ஆனா, இந்த மாதிரி இனியும் நடக்கிறதுக்கு இடம் கொடுக்கக்கூடாது இல்லையா? அதுக்குத்தான் நம்மோட ஒவ்வோர் அலுவலகத்தையும் திடீர் திடீர்னு சோதனை செய்யவும் மற்ற சில என் அந்தரங்கமான பண விவகாரங்களைக் கவனிச்சுக்கவும் "கண்காணிப்பாளரா" — ஒருத்தரை அமர்த்திக்கிறதா முடிவுக்கு வந்திட்டேன். உடனே உன் நினைப்புத்தான் எனக்கு வந்தது. தேன்மொழியோட கலந்து பேசினப்போ அதுவும் நீதான் பொருத்தமான ஆள்னு சொல்லிடிச்சு. இல்லேம்மா?"

"ஆமாம்பா; இவர் மாதிரி நாணயம் உள்ளவரா—நம்பிக்கைக்கு உரியவரா — இருக்கிறவங்களைக் கண்டுபிடிக்கிறதேதான் கஷ்டமா இருக்கே? நல்ல கத்தரிக்காய் என்று நம்பி வாங்கினதெல்லாம் சொத்தைக் கத்தரிக்காயாய்ப் போயிட்டுதே?"

"ஆமா, நானும் அப்படி ஒரு சொத்தைக் கத்தரிக்காயாக இருக்கமாட்டேன் என்று எப்படி நம்புறீங்க?"

—விளையாட்டாகச் சிரித்துக் கொண்டே கேட்டான் மாதவன்.

"அப்படிச் சொல்லாதே மாதவா! நானும் உன்னைப் போலக் கிராமத்திலேயிருந்து வந்தவன்தான். நீயும் முயலைப் பார்த்திருப்பே; நானும் பார்த்திருக்கிறேன். முக அமைப்பு ஒண்ணா இருக்கிறதாலே முயல் குட்டியை மூஞ்சுறுன்னு சொல்லிட முடியுமா? கொஞ்ச காலந்தானாலும் நீ எங்களோடு பழகியிருக்கிற பழக்கம் — வார்த்தையைக் காப்பாத்துகிற நாணயம்—வேலையைச் செய்து முடிக்கிற நேர்த்தி—வேகப்படாத பொறுமை—எல்லாத்தையும் ஆற அமர சிந்திச்சுப் பார்த்த பிறகுதான் நான் இந்த முடிவுக்கு வந்தேனே ஒழிய வேறே இல்லே......"

—பேரின்ப முத்து இவ்வாறு தம் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுதே

சமையற்காரி சண்பகம் தலையை நீட்டினாள்;

''யாரோ அய்யாவுக்குப் பழைய நண்பராம்; சாப்பிடுறீங்கன்னு சொல்லிப் பார்த்தேன்; கேட்க மாட்டேங்கிறாரு. சாப்பிடுற கையோடேயே வந்து போனில் பேசச் சொல்லுன்னு வற்புறுத்துறாரு. பேர் பொன்னம்பலமாம்''

—என்றாள்.

'' ஓ, பொன்னம்பலமா? அவன் பொல்லாதவனாச்சே! உடனே போய்ப்பேசிடவேண்டியதுதான்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து போனார் பேரின்பமுத்து.

தனித்து விடப்பட்ட நிலையிலே தன் ஆருயிர்க்காதலனைக் கிறக்கத்தோடு நோக்கினாள் தேன்மொழி. அவளுடைய பளபளப்பான கருந்திராட்சைக் கண்களோடு தன் பார்வையையும் பதித்துத் திளைத்த மாதவன்,

''என்ன தேன்மொழி, இப்படி ஒரு முக்கியமான முடிவுக்கு உன் அப்பாவைக் கொண்டு போய்த் தள்ளிட்டே? உங்கள் நிறுவனத்திலே என்னைவிடப் பல ஆண்டுகள் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர்கள் எத்தனையோ பேர் இருக்கும்போது, என்னைக் கொண்டுபோய் அந்தப் பொறுப்பான பதவியிலே அமர்த்தினால் அவர்கள்எல்லாரும் பொறாமைப் பட மாட்டார்களா?''

—என்றான்.

'' அதற்கென்ன செய்கிறது? அவரவர்களுக்குள்ள தகுதிக்கும் திறமைக்கும் தகுந்தபடி தானே பதவிக்கும் ஆசைப்படணும்? பூப்போல மிருதுவா இருக்கிற 'பேட்மின்டன்' பந்தை வைத்துக் கொண்டு நாம் 'டேபிள் டென்னிஸ்' ஆட முடியுமா? இல்லே, 'டேபிள் டென்னிசு'க்குள்ள சின்ன மட்டையைக் கொண்டு 'கிரிக்கெட்' பந்தைத்தான் அடிக்க முடியுமா? இதிலே பொறாமைப்பட்டு என்ன நடக்கும்? மேலும் அப்பா ஏற்படுத்த நினைக்கிற புதிய பதவிக்கு வெறும் அனுபவம் மட்டும் போதாதே! நாணயம்—நன்னடத்தை—நேர்மை—கூர்மை—இன்னும் எவ்வளவோ வேணுமே? அதோட, நீங்க ஏன் அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படணும்?''

'' அதுக்கில்லே தேன்மொழி. உன் அப்பா எப்படியோ என்னை நிரம்பத் திறமை உள்ளவனா நினைக்கிறார். ஆனா, பக்கத்திலே நெருங்கி வந்த பிறகு என் பலவீனங்கள் வெளிச்சமாகி, என்னை அவர் அலட்சியப்படுத்தக் கூடிய நிலைமை உருவானால் என்ன செய்கிறது என்கிற அச்சந்தான் எனக்கு; பொதுவா, அழகான ஓவியந்தான் என்றாலும் எட்டி இருந்து பார்க்கிற போது தெரிகிற தனிப்பொலிவு கிட்டே வைத்துப் பார்க்கிறபோது தெரியாதில்லையா?''

'' உங்களை ஓவியமா மட்டும் நான் பார்க்க வில்லையே!''

''பின்னே?''

'' காவியமாகவும் உங்களை நான் பார்க்கிறேன். காவியங்கள் நம்மை விட்டு எட்டி இருக்கலாமா? கிட்டேயே தான் இருக்கணும்; அப்போது தான் அவை நம் கருத்திலே பதியும்; இனித்துக் கொண்டேயும் இருக்கும். உங்களையும் ஒரு காவியமாகவே தான் என் கிட்டேயே நான் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோட, உங்களிடம் இயற்கையாகவே திறமை இருக்கும்போது நீங்க ஏன் தன்னம்பிக்கை இல்லாமல் தாழ்வு மனப்பான்மைக்கு இடங்கொடுக்கணும்?''

—தேன்மொழி இவ்வாறு அவனைத் தேற்றிக் கொண்டு இருக்கும்பொழுதே—

தொலை பேசியில் பேசிவிட்டுத் திரும்பிய பேரின்பமுத்து,

'' உங்கள் ரெண்டு பேருக்கும் ஒரு தித்திப்பான செய்தி: என்னுடைய பழைய நண்பன் பொன்னம்பலம், நம்ம மாநில விளையாட்டுக்கள் கழகத்துக்கு இப்பத்தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறானாம். அவனுக்கு உங்க ரெண்டு பேரோட 'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்திலேயும் ரொம்ப ஈடுபாடாம். . . . . சீக்கிரமா தெற்கு மாநிலங்களுக்கிடையே மைசூரில் நடக்கப் போகிற பந்தயத்துக்கு உங்க ரெண்டு பேரையும் அனுப்பலாம்னு மத்தக் கழக உறுப்பினர்கள் கிட்டே சொன்னானாம்; அவங்களும் ஏத்துக்கிட்டாங்களாம். ஆகையாலே நீங்க ரெண்டு பேரும் இன்னும் கொஞ்சநாளிலே மைசூர் போகப் போறீங்க!''

—என்று உவகை பொங்கக் கூறினார்.

அதைக் கேட்டதும், மாதவனும் தேன்மொழியும் அடைந்த மகிழ்ச்சி வெள்ளத்திற்குக் கேட்க வேண்டுமா?

* * *

மைசூரில் நடைபெற்ற 'டேபிள் டென்னிஸ்' இரட்டையர் ஆட்டப் பந்தயங்களில் தமிழ் நாட்டின் பெருமையைத் தலைநிமிரச்செய்து விட்டார்கள் மாதவனும் தேன்மொழியும். மற்ற மாநிலங்களிலிருந்து வந்த அணிகளையெல்லாம் மிக எளிதாகவே அவர்கள் தோற்கடித்து வெற்றி வாகையினைச் சூடினர்.

அதுவும், கடைசி நாள் ஆட்டத்தின் போது, அவர்கள் காட்டிய அற்புதமான திறமை—சுறு சுறுப்பு—நளினம்—நிதானம், எல்லாரையுமே மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்தன; வியப்புக் கடலிலே தள்ளின.

மைசூரில் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமின்றி கன்னடர்களும் கூட, தங்களுடைய பழைய திராவிட இன உணர்வை மறந்துவிடாதவர்களாகத் தமிழக விளையாட்டு வீரருக்கும் வீராங்கனைக்கும், அடிக்கடிக் கரவொலிகள் எழுப்பி ஊக்கமூட்டினர்; உற்சாகம் அளித்தனர்.

ஆட்டம் முடிந்ததுமே மலைமலையாக மாலைகளைக் கொண்டுவந்து சூட்டி அவர்களைத் திணறும்படியாகவும் செய்து விட்டார்கள், அந்தத் திராவிட உடன்பிறப்புக்கள்.

அன்று தாங்கள் இருவரும் சேர்ந்து ஈட்டிய வெற்றிக்கனியை நினைந்து நினைந்து தேன்மொழிக்கு உள்ளமெல்லாம் புல்லரித்தது. எங்காவது மாதவனோடு தனியாகச் சென்று மிகத் திறமையாக ஆடிய அவனது விளையாட்டு நுணுக்கங்களையெல்லாம் வியந்து பேசி—நினைவு கூர்ந்து—அந்த மகிழ்ச்சியினைக் கொண்டாட வேண்டும்போல் அவள் மனம் குறுகுறுத்தது.

அப்போது மணி ஆறு தான் ஆகிக் கொண்டிருந்தது.

தன் அப்பாவின் படகு போன்ற 'பிளைமவுத்' காரில் ஏறியமர்ந்த அவள்,

''ஏன்னா, இன்னொரு தரம் கண்ணம்பாடி அணைக்கட்டுக்குப் போய் வருவோமா? எதுக்கு அதுக்குள்ளே ஓட்டலுக்குப்போய் அடைபட்டுக் கிடக்கணும்?'' என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன்!'' என்றான் மாதவன்.

கார் பறக்கத் தொடங்கிற்று, கண்ணம்பாடி அணைக்கட்டை நோக்கி!

அன்று சனிக்கிழமையாதலால் அந்த நீளமான அணைக்கட்டின் அடிவாரப் பகுதி முழுவதும், ஒரே ஒளிக்கடலாகவே காட்சியளித்தது.

வான மண்டலத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் நிலவுக் கன்னிகள் கீழே இறங்கிவந்து நீச்சலடிப்பதைப்போல் வண்ண வண்ண மின் விளக்குகள் ஒளி வெள்ளத்தை வாரி இறைத்த வண்ணம் சிரித்தன.

பசுமை கொழிக்கின்ற—மலர்கள் சிரிக்கின்ற—அந்த மண்ணுலகச் சொர்க்கத்திலே ஒளி மழையிலே நனைந்தவாறே, மாதவனின் மிடுக்கான உடலோடு ஒட்டி நடப்பதிலே ஒரு தனி இன்பமே கண்டாள் தேன்மொழி.

அணையின் பெருஞ்சுவரை ஒட்டிக் கரத்தின் குடமேந்தி நிற்கும் காவிரி அன்னையின் சிலைப் பக்கம் வந்ததும் தேன்மொழி தேங்கி நின்றாள். மாதவனின் தோளையும் அழுத்திப் பற்றி அவனை மேலே நடக்க விடாமல் தடுத்து நிறுத்தினாள்.

''இந்தச் சின்னச் சிலை ரொம்ப அழகாக இருக்குது இல்லே?''

—என்று முறுவலோடு கேட்டாள்.

''ஆமா, உன் முகத்தைப் போலவே ரொம்ப அழகாகத் தான் இருக்குது.''

—என்று நகைத்தான் மாதவன்.

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி

தமிழரசு அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை - 2

தேன்மொழிக்கு வேறு என்ன நினைப்பு வந்ததோ?

''சரி நில்லுங்கள்; இதோ வந்து விட்டேன்.''

—என்று சிட்டாகப் பறந்து சென்றாள்.

தங்களுடைய 'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தைக் கண்டு களித்தவர்கள் சூட்டிய மாலைகள் காரின் பின்னிருக்கையில் தான் கிடந்தன; அவற்றில் சிலவற்றை எடுத்துக் கொண்டு திரும்பவும் ஓடி வந்தாள் மாதவனை நோக்கி.

ஒரு சிறிய மல்லிகைப் பூ மாலையை அந்தக் காவிரித் தாயின் சிலைக்கு அணிவித்துக் கும்பிட்டாள்.

பிறகு . . . . . .

தன் பூங்கரத்தில் தொங்கிய இன்னொரு ரோஜாப் பூ மாலையைச் சட்டென்று மாதவன் கழுத்திலே போட்டுவிட்டாள்.

திகைத்துப் போனான் அவன்!

அந்தத் திகைப்பிலிருந்து அவன் மீள்வதற்குள்ளேயே, இன்னொரு ரோஜாப்பூ மாலையை அவன் கைகளிலே திணித்து, தன் தலையைத் தாழ்த்தி, அதனைத் தன் கழுத்திலே சூட்டுமாறு செய்துவிட்டாள் தேன்மொழி.

மற்றவர்கள் சிலர் தங்களை வேடிக்கை பார்ப்பதைக்கூட அவள் பொருட்படுத்த வில்லை; அதற்காக வெட்கப்படவும் இல்லை.

''என்ன, தேன்மொழி, இது! சின்னக் குழந்தை மாதிரி—விளையாட்டுத்தனமா—''

—என்று மாதவன் கூறும்பொழுதே சற்றுத் தொலைவில் வந்துகொண்டிருந்த ஒரு பெண்ணின் மீது அவன் பார்வை விழுந்தது. அவள் அருகில் நெருங்கியதும் — திடுக்கிட்டுப் போனான் அவன்!

(தொடரும்)

உறுதியான கட்டடங்கள்: பொதுப்பணிக்-2

நாளைய தலைமுறை

சிறுவர் நீதி

1 அன்னைதாள் வணங்கு
2 ஆற்றுயர் தந்தைக்கு
3 இன்சொல் மொழியும்
4 ஈவார் மேலோர்
5 உண்மை உரைமேல்
6 ஊதியம் தேடு
7 எண்ணித் துணிவாய்
8 ஏர்த்தொழில் செய்மேல்
9 ஐயம் அறச்செய்
10 ஒன்றே குலம்நாம்
11 ஓதுயர் நன்னூல்
12 ஔடதம் தேர்ந்துண்
13 கலைகள் பயிலு
14 காண்பது சொல்நலம்
15 கிளிபோல மொழியும்
16 கீதங்கள் பாடு
17 குணமுடன் பழகு
18 கூடுநல் இடமே
19 கெடுப்பது நினையேல்
20 கேடெதும் செய்யேல்
21 கையுழைத் துன்மேல்
22 கொடுப்பது மேலாம்
23 கோழையாய் வாழேல்
24 கௌரவம் தேடு
25 சஞ்சலம் நீக்கு
26 சாதி மதிமேல்
27 சினம்பழி போக்கு
28 சீராய் நடப்பாய்
29 சுயநலம் விடுப்பாய்
30 சூதிடம் கூடேல்
31 செய்வினை புகழ்மேல்
32 சேமித் தறஞ்செய்
33 சைவம் பழகு
34 சொகுசாய் இருப்பாய்
35 சோதனை வெல்வாய்
36 சௌந்திர உடைபூண்
37 தற்பெரு மைவிடு
38 தாவின பந்து
39 தினமும் குளிப்பாய்
40 தீவிர மனங்கொள்
41 துணையுடன் வழிபோம்
42 தூய்மை அகம்படை
43 தெருவழி சுற்றேல்
44 தேடேல் பழியை
45 தைரியம் உளம்கொள்
46 தொகுத்தே வாழ்வாய்
47 தோழமை கண்டிணை
48 பயில்வாய் கல்வி
49 பாதகம் செய்யேல்
50 பிறரைப் பழியேல்
51 பீடைகள் போக்கு
52 புகழுற வாழ்வாய்
53 பூசல் தவிர்ப்பாய்
54 பெரியார் துணைக்கொள்
55 பேதமை ஒழிப்பாய்
56 பைந்தமிழ் புவிமேல்
57 பொறுமை வெல்லும்
58 போதைகள் போக்கு
59 பௌந்திரம் அணிபொன்
60 நன்றே செய்வாய்
61 நாடே தாயாம்
62 நித்திரை போக்கு
63 நீந்திப் பழகு
64 நுண்மதிபடை வெல்
65 நூதனம் கண்டிணை
66 நைந்தநு உண்ணேல்
67 நொண்டப் பழியேல்
68 நோன்புதைப் பொங்கல்
69 மதியால் விதிவெல்
70 மானம் அழியேல்
71 மிதமாய் உண்ணேல்
72 மீட்பாய் அபயம்
73 முகங்கடுத் துரையேல்
74 மூர்க்கம் அடக்கு
75 மையல் தவிர்ப்பாய்
76 மொத்தமாய் அழியேல்
77 மோகம் விலக்கு
78 மௌனம் துணைகொள்
79 யாசகம் இழிவாம்
80 இரத்தினம் ஊக்கம்
81 வஞ்சகம் வீழ்த்தும்
82 வாடேல் வினைமேல்
83 வினையா டிணையுடன்
84 வீரம் படையகம்
85 வெறுவாய் மொழியேல்
86 வேடிக்கை செய்யேல்
87 வைடம் இகழேல்
88 அறவழி போற்றும்
89 ஆணவம் அழிவாம்
90 இடர்படச் செய்யேல்
91 உயர்வினை செய்யும்
92 ஊரைப் பகையேல்
93 எழுவாய் காலை
94 ஏக்கம் சிதைக்கும்
95 ஐவகை நிலமாம்
96 ஒழுக்கம் உயர்த்தும்
97 ஓரம் பேசேல்

— புலவர் சி. துரைசுவாமி:

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சென்னை வடக்குக் கோட்டம்

கோப்பு எண்: எம்.என். 3/6092—71.

வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளி அனுப்புபவரின் பெயரும் உறையின்மீது எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அடியில் கையெழுத்திட்டவரால் 20—10—71 மாலை 2-30 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலையில் 2-35 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் உத்தேச மதிப்பீடு.	ஒப்பந்த வடிவமும் முன்வைப்புத் தொகையும் மொத்தத் தொகையில்.	ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை (திருப்பித்தரப் படமாட்டாது)
	ரூ.	ரூ.	
1 அறிஞர் அண்ணா நகர் 4-வது தொகுதி 2-வது பிரிவு நடுத்தர வருமானப் பிரிவினர் குடியிருப்புகள் ஒன்றில் நான்கு என்று 3 கட்டடங்கள்.	3,00,000	4,500	ரூ. 15 (4 சதவிகித விற்பனை வரி)
2 அறிஞர் அண்ணா நகர் 4-வது தொகுதி 3-வது பிரிவு நடுத்தர வருமானப் பிரிவினர் குடியிருப்பு ஒன்றில் நான்கு என்று மூன்று கட்டடங்கள்.	3,00,000	4,500	ரூ. 15 (4 சதவிகித விற்பனை வரி)

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை வடக்குக் கோட்டம் நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் 16—10—71-லிருந்து அலுவல் நாட்களில் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை, பத்திரங்களுக்குரிய தொகையையும் விற்பனை வரியையும் செலுத்தியதற்கான ரசீதைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

36, அண்ணா சாலை,
சென்னை-35,
27—9—1971.

வி. எஸ். இராமகிருஷ்ணன்,
நிர்வாகப் பொறியாளர் (செ.வ.)

(த-52)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

எண். 4/196-71, டி.4   நாள் 22—9—1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம் சார்பாகக் கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், கீழே குறிப்பிட்ட தேதிகளில் மாலை 3.00 மணி முடிய, கோவை மக்கள் நல்வாழ்வு மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்றுவது வீதி, டாட்டாபாத், கோவை 12-ல் வரப் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்டடும்.

1· பணியின் பெயர்	...	கிருஷ்ணகிரி குடிநீர் திட்டம் இரண்டாம் நிலை—இரண்டாம் கட்டம் பூஸ்டர், சென்ட்ரி பியூகல் பம்பு செட்டுகள், து உறுப்புகள் உள்பட விநியோகம் சப்ளை, டெலிவரி, நிர்மாணம்.
2. ஒப்பந்த முறை	...	மொத்தத் தொகை.
3. கட்டுத் தொகை	...	ரூ. 750 (ரூபாய் எழுநூற்றி ஐம்பது மட்டும்).
4. பணிமுடிக்க வேண்டிய காலம்.	..	4 மாதங்கள்.
5. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.		ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட—இது திருப்பித் தரப்படாது).
6. ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி.		10—10—1971 முதல் 3—11–71 மாலை 5 மணி வரை.
7. ஒப்பந்தப் புள்ளி பெறும் தேதியும், திறக்கும் தேதியும்.		5—11—1971.

மேற்படிப் பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்ரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணியார்டர் மூலமாகவோ நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத் தொகையை, ஷெடியூல் வங்கி ஒன்றின் டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது கருவூல சலான் வடிவிலோ நிர்வாகப்பொறியாளர் (மக்கள் நல்வாழ்வு), தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம்—5 அவர்கள் கணக்குக்குச் சேர்க்கவேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கால் அங்கீகரிக்கப் பட்ட, தேச உடைமையாக்கப்பட்ட பாங்கின் பாங்க் காரண்டியும், கட்டுத் தொகைக்காக ஏற்கப்படும்.

வேலையின் பெயர் உறைமீது தெளிவாக எழுதப்பட வேண்டும். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர் (மக்கள் நல்வாழ்வு) கோயம்புத்தூர் அவர்களுக்கு உரிமை உண்டு.

எஸ். எம். சாஹுல் ஹமீத்,
மேற்பார்வைப் பொறியாளர்

25-1. மூன்றுவது தெரு
டாட்டாபாத்,
கோயம்புத்தூர்-12,
22—9—1971.
(த. 17)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம் மேற்பார்வைப் பொறியாளர், கோயம்புத்தூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 3—11—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப் படும்.

வேலையின் பெயர் :	உதகை அரசினர் கலைக்கல்லூரியில் மாணவர் விடுதிக் கட்டடம் கட்டுதல்.
ஒப்பந்தவகை :	மொத்தத் தொகை.
கட்டுத்தொகை :	ரூ. 16,000.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, வரைபடம் விற்பனை வரி உள்பட.	ரூ. 25.88
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	10 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை, நிருவாகி, நிருவாகப்பொறியாளர் அலுவலகம், கட்டடப் பகுதி, கோயம்புத்தூர்—அவர்களிடமிருந்து எழுத்து மூலம் கோரி, மேலே குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி (இத் தொகை திருப்பித் தரப் படமாட்டாது) 20—10—71-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.ப.து.), கோயம்புத்தூர்-நீலகிரி
வட்டம், கோயம்புத்தூர்-1.

(த.47.)

17

ஒப்பந்தப் புள்ளி

நிர்வாகப் பொறியாளர் அலுவலகம்,
குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
கோட்டம் எண் II.

35/37, ஜஹாங்கீர் தெரு, இரண்டாம் கடற்கரைச் சாலை, சென்னை-1.

எண்: ஆர். ஸி. 1908—எச்.டி. (II) 71, தேதி 30—9—1971.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பிலும் அதற்காகவும் மூடி முத்திரையிடப்பட்டு வேலையின் பெயர் எழுதப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், நிர்வாகப் பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் II 35/37 ஜஹாங்கீர் தெரு, இரண்டாம் கடற்கரைச் சாலை, சென்னை-1 அவர்களால் 26—10—1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையிலோ அல்லது அவரது ஒப்புதல் பெற்றவர்கள் முன்னிலையிலோ நிர்வாகப் பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம் கோட்டம் II அவர்களால் பிற்பகல் 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திர விலை.
1. என்.எம்.என்.எச். திட்டம் 1-வது தொகுதியில் ஒரு குடியிருப்பில் 30 இல்லங்கள் அடித்தளத்திற்கு மேல் கட்டுதல் (2 பிளாக்குகள்).	ஏழு மாதங்கள்	எல். எஸ்.	ரூ. 7,320	ரூ. 1·00 விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 10—10—1971 முதல் 25—10—1971 வரை காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எல்லா அலுவலக நாட்களிலும் நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் II 35/37, ஜஹாங்கீர் தெரு, இரண்டாம் கடற்கரைச்சாலை, சென்னை-1 அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குப் பணம் அத்துடன் விற்பனை வரி கட்டிய சலானை வழங்கிப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா சைதாப்பேட்டையில் பெர்சனல் டெபாஸிட் அக்கவுண்ட் (பி.டி.எ.ஸி.) நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் II என்ற தலைப்பிலும் விற்பனை வரி XII விற்பனை வரி—மாநில விற்பனை வரிச் சட்டம், பொது விற்பனை வரி என்ற தலைப்பிலும் கட்டப்பட வேண்டும்.

துறை வழங்கும் வடிவத்திலேயே ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்கப்படவேண்டும். கடிதப் போக்கு வரத்தில் ஏற்படும் காலதாமதத்திற்கோ அல்லது அவை காணாமற்போனாலோ துறை பொறுப்புடையதன்று.

எக்காரணமும் காட்டாமல் எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ அல்லது எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ நிராகரிக்க உரிமை உண்டு.

எம். ஆத்மநாதன்,
நிர்வாகப் பொறியாளர் (கோட்டம் II).

(த-62)

16—10—9எ

மேற்பார்வைப்பொறியாளர் அலுவலகம்

பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம்,
திருச்சிராப்பள்ளி-1.

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர் பொறியியல் பணித்துறை திருச்சி வட்டம் திருச்சி அவர்களால் கீழே குறிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.—

1 வேலையின் பெயர்	(1) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், கீழப் பெரம்பலூர் கிராமத்தில் வடக்கு ஏரிக்குத் தண்ணீர் வழங்க நரி ஓடையின் குறுக்கே ஒரு அணை கட்டுதல். (2) திருச்சி மாவட்டம்—புதுக்கோட்டை குடுமியா மலையிலுள்ள அண்ணா பண்ணையில் புல்லபுறம் குளத்தில் 50 அடி விட்டமுள்ள ஒரு பெரிய திறந்த வட்டக் கிணறு வெட்டுதல்.
2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித்தேதி மற்றும் நேரம்.	27–10–71 மாலை 3-00 மணி.
3 வேலைகளுக்கான பிணைப் பணத்தொகை.	(1) ரூ. 1,950 (2) ரூ. 1,150
4 ஒப்பந்த முறை	கே. 2
5 ஒப்பந்தக் காலம்	12 மாதங்கள்.
6 ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 15 (ரூபாய் பதினைந்து மட்டும்) (ஒவ்வொன்றுக்கும்).
7 விற்பனை வரி	0-53 (ஐம்பத்தி மூன்று காசுகள் மட்டும்) (ஒவ்வொன்றுக்கும்)
8 ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி.	14–10–71
பந்தம் திறக்கப்படும் தேதி மற்றும்நேரம்.	27–10–71 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில் "XXXVII Public Works State Revenue Miscellaneous" என்ற கணக்குத் தலைப்பின் கீழும், விற்பனை வரியை கருவூலத்தில் "XII Sales Tax-receipt under the State Sales Tax Act-General Sales Tax" என்ற கணக்குத் தலைப்பின் கீழும் ஒரே சலானில் செலுத்த வேண்டும். மேற்கண்ட சலானை ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்க வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் ஏதாவது அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க தானே உரிமை பெற்றுள்ளார்.

மற்ற விதி முறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்.
திருச்சி வட்டம்.

(த.72)

பயிற்சி

தொழில் வணிகத் துறை

திண்டுக்கல் அரசினர் கருவி அச்சு அமைக்கும் பயிற்சி நிலயத்தில் 1971–1974 வருடத்திற்கான பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31–10–1971 மாலை 5·00 மணிக்குள் திண்டுக்கல் அரசினர் கருவி அச்சு அமைக்கும் பயிற்சி நிலயம், தலைமைப் பயிற்றுவிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும்.

பயிற்சிக்காலம் ... 36 மாதங்கள்.

பயிற்சிக்கான ஊதியம் மாதம் ரூ. 50 விதம்.

படிப்புத் தகுதி ..எஸ்.எஸ்.எல்.சி. தேறி இருக்க வேண்டும் அல்லது அதற்குச் சமமான படிப்பு.

வயது:—1–7–1971-ல் விண்ணப்பதாரர் 21 வயதிற்கு மேற்பட்டிருக்கக்கூடாது. முன் தொழில் அனுபவம் உள்ள நபர்களுக்குச் சலுகை தரப்படும். மாதிரி விண்ணப்பப் படிவங்கள் பெற விண்ணப்பதாரர்கள் 20 காசு தபால் தலை ஒட்டிய விலாசமிட்ட கவருடன் தலைமைப்பயிற்றுவிப்பாளர், அரசினர் கருவி அச்சு அமைக்கும் பயிற்சி நிலயம், திண்டுக்கல்-3 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் விண்ணப்பதாரர், சான்றிதழ்களின் நகல்கள் மட்டும் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே இந்தப் பயிற்சி நிலயத்திற்கு நேர்காணலுக்கு வரவேண்டும்.

இயக்குநர்,
தொழில் வணிகத் துறை

(த.42)

177

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர் சார்பாகவும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால், தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப்பகுதியின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளைச் செய்வதற்காகக் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-00 வரையில் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் துறை, 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதிகளில் பிற்பகல் 3-10 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திர விலை.	முடிக்க வேண்டிய காலம்	பத்திரம் கிடைக்கும் தேதி	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் பெறும் கடைசி நாள்.
1. ஒப்பந்தப் புள்ளி எண் I அடையாறு எலக்ட்ரானிக் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் 2 டைப் I தொழிற்சாலைகள் கட்டுதல்.	ரூ. 1,900	ரூ. 10·40	எட்டு மாதங்கள்.	11–10–71	26–10–71
2. ஒப்பந்தப் புள்ளி எண் II அடையாறு எலக்ட்ரானிக் இன்டஸ்டிரியல் எஸ்டேட்டில் 2 டைப் I தொழிற்சாலைகள் கட்டுதல்.	1,900	10,40	எட்டு மாதங்கள்	11–10–71	27–10–71
3. ஒப்பந்தப்புள்ளி எண் III அடையாறு எலக்ட்ரானிக் இன்டஸ்டிரியல் எஸ்டேட்டில் 2 டைப் I தொழிற்சாலைகள் கட்டுதல்.	1,900	10·40	எட்டு மாதங்கள்.	11–10–71	28–10–71

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், இண்டஸ்டிரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32 என்ற இடத்தில் உள்ள நிர்வாகப் பொறியாளர். (கட்டுமானம்) வடக்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ளதேதிகளில்விற்பனைக்குக்கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையும், விற்பனை வரியும் உட்படத் தொகையான ரூ. 10·40 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசினர் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries—other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், இண்டஸ்டிரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32 அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-32 அவர்கள் கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

ஓ. பி. மேத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர், (கட்டுமானப்பகுதி.)

சென்னை-2.

(த-64)

நிலநீர்க் கோட்டம்

எண்: டி. 21/1971–72.

வேலையின் பெயர்—சி.ஐ. பைப்புகள் இணைப்புக்காக சணல் நூல் (Hemp yarn) வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிர்வாகப் பொறியாளர், நில நீர்க் கோட்டம், எண் 5, வெங்கட்நாராயண சாலை, தியாகராய நகர், சென்னை-17 அவர்களால் 25–10–1971 மாலை 3·00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17 அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்	வடிவம் 9, எம்.எப்.சி.—வால்யூம் 1.
கட்டுத் தொகை ..	ரூ. 400.
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை	ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும் விற்பனை வரி 20 காசுகள்.
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	2 மாதங்கள்.
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்.	7–10–1971 முதல் 24–10–1971 வரை—மேற்கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில்

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III other Remittances" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம் சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், வரவினம், பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்தபின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

வி. நடராஜன்,
நிர்வாகப் பொறியாளர்.

(த.43)

எண் டி. 22/71–72.

வேலையின் பெயர்	சி. ஐ. பம்பிங் மெயினில் அமைப்பதற்காக பல்வேறு அளவுகளில் சி.ஐ. வால்வுகள் வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், நிர்வாகப் பொறியாளர், நில நீர்க் கோட்டம், எண் 5, வெங்கடநாராயண சாலை, தியாகராய நகர், சென்னை-17 அவர்களால், 27—10—71 மாலை 3-00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர் அவர்களால் மேற்கண்ட அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்	வடிவம் 9, எம்.எப்.சி.—வால்யூம் I.
கட்டுத் தொகை	ரூ. 900.
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை.	ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) விற்பனை வரி 20 காசுகள்.
வேலையை முடிக்க வேண்டிய காலம்.	3 மாதங்கள்.
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்	7—10—71 முதல். 27—10—71 வரை—மேற்கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம், பொது விற்பனை வரி" எனத் தலைப்பிட்டுச் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப்பத்திரங்கள் வழங்கப்படும்.

வி. நடராஜன்,
நிர்வாகப் பொறியாளர்.

(த. 54.)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : சென்னை எழும்பூரில் உள்ள தாய், சேய் மருத்துவ மனையில் (1) புறப்பிணியாளர் பகுதி கட்டுதல் (2) தாய் சேய் பகுதி கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறிய வேலைகளுக்கு மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கற்பட்டு வட்டம் அவர்களால், சேப்பாக்கம், சென்னை-5-ல் உள்ள தனது அலுவலகத்தில் 25—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—(1) முதல் வேலை ரூ. 5,370
   (2) இரண்டாம் வேலை ரூ. 3,000.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—முதல் வேலை—4 மாதங்கள் ; இரண்டாம் வேலை—4 மாதங்கள்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை— முதல் வேலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) ; இரண்டாம் வேலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III other Remittances" என்று தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறைக் கட்டடக் கோட்டம்-2, சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

5 விற்பனை வரி—(1) முதல் வேலை 0·60 (அறுபது காசுகள்) ; (2) இரண்டாம் வேலை—0·60 (அறுபது காசுகள்)

மேற்படி தொகை அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) receipts under State sales tax Act." என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். சலானை கொடுத்தபின்தான் ஒப்பந்தப்பத்திரங்கள் வழங்கப்படும்.

6 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக் காலம்—16—10—71 முதல் 23—10—71 வரை.

7 ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளக் கடைசி நாள் 25—10—1971.

மற்றைய விவரங்கள், மேற்பார்வைப் பொறியாளர் சென்னை-செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம்; சென்னை-5, அவர்களுக்கு, காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது ஒப்பந்தங்கள் அனைத்தையும் நிராகரிக்க உரிமை உண்டு.

பி. கே. கந்தசாமி
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5.

(த. 81)

ஒப்பந்தப் புள்ளி

சின்கோனா துறை

ஆனமலை அரசினர் சின்கோனா தோட்டங்கள் எல்லாவற்றிலும், ஆனமலை அரசினர் கொய்னா தொழிற்சாலைப் பகுதியிலும் ரூ. 1.50 லட்சம் மதிப்பில் தொழிலாளர், அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் கீழ்க்கண்டவரால், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 1—11—1971 மாலை 3-00. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3-30 மணிக்குக்கீழே கையொப்பமிட்டவரால் அல்லது அவருடைய அரசிதழ் பதிவு உதவியாளரால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிவிவரங்களடங்கிய தாள்களைக் கீழ்க்கண்ட அலுவலர்களிடமிருந்து அலுவல் நாட்களில் ரூ. 2.07 (விற்பனை வரி உள்பட) ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

1	கண்காணிப்பாளர், அரசினர் சின்கோனா தோட்டம், ஆனமலை, சின்கோனா (அஞ்சல்), வழி வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.	ஆனமலை அரசினர் சின்கோனா தோட்டங்களுக்கு.
2	உற்பத்தி ரசாயன வல்லுநர், அரசினர் சின்கோனா தொழிற்சாலை, சின்கோனா (அஞ்சல்), வழி வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.	ஆனமலை கொய்னா தொழிற்சாலைக்காக.

எம். மோகன்ராவ்
இயக்குநர்,
சின்கோனா துறை.

(த.57.)

179

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித்துறை

வேலையின் பெயர்	பொன்னேரியிலுள்ள லோக நாதா நாராயணசாமி அரசினர் கலைக்கல்லூரிக்கு அதிகப்படியான வகுப்பறைகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாகவும் உத்தரவுப்படியும், சென்னை செங்கற்பட்டு வட்டம் மேற்பார்வைப் பொறியாளர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மேற்படி வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களை அக்டோபர் திங்கள் 27-ஆம் நாள் (27—10—71) மாலை 3 மணி வரையில் சேப்பாக்கம், சென்னை-5லுள்ள மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3-15 மணியளவில் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2 கட்டுத் தொகை	ரூ. 4,000 (ரூபாய் நாலாயிரம் மட்டும்).
3 வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஆறு மாதங்கள்.
4 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.	ரூ. 20 (இருபது மட்டும்) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ' Public works Remittances III other Remittances)' என்று தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர் பொ. ப. து. சைதைக் கோட்டம் சென்னை -5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.
5 விற்பனை வரி	ரூ. 0.70 (எழுபது காசுகள் மட்டும்). மேற்படித் தொகை அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் (XII Sales Tax (b) Receipts under Sales Tax Act) என்ற தலைப்பில் சலான் செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.
6 ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக் காலம்.	19—10—71 முதல் 26—10—71 வரை.
7 ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ளக் கடைசி நாள்.	27—10—71 (மாலை 3-00 மணி வரை).

மற்ற விவரங்கள் மேற்பார்வைப்பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்கள், காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமையுண்டு.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து.
சென்னை செங்கற்பட்டு வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த 74)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைப்பு அறிக்கை எண் 23/8585/71–10, நாள் 4—10—71.

வேலையின் பெயர்	அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 30 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மனைப் பகுதிக் கட்டடத்திற்காக 'பைல்' (Pile) அஸ்திவாரம் அமைத்தல்.
பார்வை	இவ்வலுவலக எண் 23/8585. 71–5 நாள் 6—9—71.

மேற்கண்ட வேலைக்காக இவ்வலுவலக எண்ணில் அறிவிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி ஒப்பந்தப் புள்ளிக்கான கடைசித்தேதி 11–10–71 என்ற கெடு 25–10–71 தேதி மாலை 3-00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் கீழ்க்கண்ட அலுவலகத்தில் 14–10–71 முதல் 23–10–71 வரை அலுவலக நேரங்களில் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் எவ்வித மாறுதலும் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து.
சென்னை செங்கற்பட்டு வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த.75)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 20—10—71 அன்று (புதன்கிழமை) பிற்பகல் 3-30 மணி (அலுவலக நேரப்படி) வரையில் தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

எண்ணும், வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை	ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம்.
	ரூ.	
1. வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலை கி. மீ. 24/4, (மைல் 15/2-ல்) (ஹரிச்சந்திரா நதியில்) ஒரு பாலம் கட்டுதல்.	9,000	கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப) நாகப்பட்டிணம்.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகைச் செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), நாகப்பட்டிணம் விலாசத்திலிருந்து 5—10—71 முதல் 19—10—71 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள் ஷெட்யூல்கள் பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), நாகப்பட்டிணம் அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்திய தற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்கு காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அமைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.), திருச்சிராப்பள்ளி-1.

(த. 5)

16-10—10

ஏல விற்பனை

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் கோட்டத்தைச் சேர்ந்த பண்ணுருட்டி ஊராட்சி ஒன்றிய ஜீப் MSY 0843 (Willy's Jeep) தற்போதுள்ள நிலைமையில் உள்ளது உள்ளபடி கீழே கையொப்ப மிட்டுள்ளவரால் 27—10—1971 அன்று புதன் கிழமை பகல் 3 மணிக்கு பொது ஏலத்தில் விற்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. ஏலம் கேட்கவிருப்பமுடையோர் ஏல நிபந்தனைகளுக்குத் கீழ்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

கோட்ட ஆட்சியர்,
சிதம்பரம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த. 13)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின் வாரியம்

33 கே. வி. சர்க்யூட் பிரேக்கர்ஸ் வழங்குவதற்கான ஒப்பந்த புள்ளி அறிக்கை எண். E1496க்கு திருத்தம்.

மேற்கண்ட பொருள்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கு முடிவுத் தேதியும் நேரமும் 23—9—1971 மதியம் 12 மணியிலிருந்து 4—11—1971 மதியம் 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் 4—11—1971 அன்று 3—00 மணி அளவில் பிரிக்கப்படும்.

என்.எஸ்.எஸ்.ஆரோக்கியசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுட்பம் (மின்சாரம்),
157, அண்ணாசாலை,
சென்னை-2.

(த. 22)

ஒப்பந்தப் புள்ளி

செங்கற்பட்டு மின் பெருவட்டம்

விற்பனை அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழ்க்காணும் பொருள்கள் ''அவை இருக்கும் நிலையிலேயே'' வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் (tenders) அடியிற் கையொப்பமிட்டவரால், செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் ரயில்வே சாலையிலுள்ள அவரது அலுவலகத்தில் கீழ்க்கண்டவாறு பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் சாற்றுக்குறிப்பு எண்ணும்.	பொருள்களின் விவரம்.	தேவையான பிணைத் தொகை. (ரூ.)	விலை ஒப்பங்கள் விற்பனையின் முடிவு நாள்.	விலை ஒப்பங்கள் பெற்றுக் கொள்ளும் முடிவு நாள்.	விலை ஒப்பங்கள் திறக்கப் படும் முடிவு நாள்.
1 எஸ்.இசி./ஒ.டி. 13/71-72.	இரும்பு கழிவுத் துண்டுகள்.	1,000	22-11-71	23-11-71	24-11-71
2 எஸ்.இசி./ஒ.டி. 14/71-72	ஈய கழிவுத் துண்டுகள்.	1,700	22-11-71	23-11-71	24-11-71
3 எஸ்.இசி./ஒ.டி. 15/71-72.	செம்பு கழிவுத் துண்டுகள்.	2,850	22-11-71	23-11-71	24-11-71
4 எஸ்.இசி./ஒ.டி. 16/71-72.	மோட்டார் வாகன கழிவுத் துண்டுகள், டியூபுகள்.	350	22-11-71	23-11-71	24-11-71
5 எஸ்.இசி./ஒ.டி. 17/71-72.	தேக்குமரத் துண்டுகள் இன்ன பிற மரப்பலகைகள்.	400	22-11-71	23-11-71	24-11-71
6 எஸ்.இசி./ஒ.டி. 18/71-72.	எரியும் நிலையில் இல்லாத பல்புகள், டியூபுகள்.	1,300	22-11-71	23-11-71	24-11-71
7 எஸ்.இசி./ஒ.டி. 19/71-72.	இரும்புத் துண்டுகள் பைப் துண்டுகள்.	1,250	22-11-71	23-11-71	25-11-71
8 எஸ்.இசி./ஒ.டி. 20/71-72.	உபயோகமற்ற மிதி வண்டி, காலி பீப் பாய்கள், பீங்கான் ஜாடிகள், கிளாஸ் ஜாடிகள்.	1,000	22-11-71	23-11-71	25-11-71
9 எஸ்.இசி./ஒ.டி. 21/71-72.	உபயோகப்படுத்திய காலி கோணி, கிழிந்த காலி கோணி பைகள்.	1,500	22-11-71	23-11-71	25-11-71
10 எஸ்.இசி./ஒ.டி. 22/71-72.	சி.ஐ. கப்ளிங்குகள்	1,000	22-11-71	23-11-71	25-11-71

11 எஸ்.இசி./ஒ.டி. 23/71-72.	தேவையற்ற எடைகள் அளவுகள்.	120	22-11-71	23-11-71	25-11-71
12 எஸ்.இசி./ஒ.டி. 24/71-72.	இரும்பு எண்ணெய் தொட்டிகள்.	800	22-11-71	23-11-71	25-11-71
13 எஸ்.இசி./ஒ.டி. 25/71-72.	உபயோகமற்ற வேன், லாரி.	800	22-11-71	23-11-71	25-11-71

மேற்கூறிய கழிவுத் துண்டுகளுக்கான ஒப்பந்த சாற்றுக்குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ.5 வீதம் தலைமை கணக்கர் (செலவுப் பிரிவு) செங்கற்பட்டு மின் பெருவட்டம், ரயில்வே சாலை, காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு பண அஞ்சல் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்திக் கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய சாற்றுக்குறிப்பு எண்ணையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பிரதிகள் உரியவருக்கு அஞ்சல் மூலம் சேராவிட்டால் அதற்கு மின் வாரியம் பொறுப்பல்ல.

முத்திரையிட்ட விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் மாலை 2·00 மணியளவில் விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

பி. கே. இலட்சுமி நரசிம்மன்,
மேற்பார்வை மின் பொறியாளர்,
செங்கற்பட்டு மின் பெருவட்டம், காஞ்சிபுரம்.

17-9-1971.
(த. 14)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், வரை குறிப்பு எண். E1511-ஆம் முடிவு தேதியும் மேலே குறிப்பிடப்பட்ட உறைகளில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க் கண்ட பொருள்களை வழங்குவதற்கு அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன.

எண். Size of Aluminium Bus Bars.	விவரம்.	அளவு	வரை குறிப்பு எண்.	வரை குறிப்பு விலை.	கட்டுத் தொகை.	முடிவுத் தேதியும் நேரமும்.
1. 3''	(75 மி.மீ.)	3,600	E.1511	ரூ. 25+ வரி.	ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்.)	2-12-71 மதியம் 12 மணி.
2. $2\frac{1}{2}$''	(62 மி.மீ.)	4,500				
3. 2''	(50 மி.மீ.)	1,900				
4. $1\frac{1}{2}$''	(37 மி.மீ.)	3,500				

ஒப்பந்தப் புள்ளிகள் முடிவுத் தேதியன்று மாலை 3·00 மணிக்கு, அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும். மேலே குறிப்பிட்டபடி பணம் கட்டி, பணத்தை ரொக்கமாகவோ, மணியார்டர்மூலமாகவோ, கணக்கு அலுவலர், சென்னை மின்சாரத் திட்டம் (விநியோகம்) 157, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு வரை குறிப்புஎண்ணைக் குறிப்பிட்டு, ரொக்கம் அல்லது மணியார்டர் அனுப்பியதற்கான ரசீதை இணைத்து, அடியில் கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பம் செய்து, முழு முகவரியையும் தந்து, வரை குறிப்பு எண்ணின் நகலை பெற்றுக் கொள்ளலாம். குறைந்த ஒப்பந்தப்புள்ளியையோ, அல்லது வேறு எந்த ஒப்பந்தப்புள்ளியையோ, தள்ளி விடும் உரிமை, வாரியத்திற்குண்டு. ஒப்பந்தப் புள்ளிகளைப் பிரிக்கவும் அளவுகளை மாற்றவும் ஒருவருக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளி தாரர்களுக்கோ, வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கவும் வாரியத்திற்கு உரிமை உண்டு. முடிவு தேதிக்குப் பின் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளிவிடப்படும்.

157, அண்ணாசாலை, சென்னை-2.
(த. 21)

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுணுக்கம் (மின்சாரம்).

தேவை விளம்பரம்

1. தே. கல்லுப்பட்டி கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த தொழிற்கூடப் பகுதிக்கு மின்சார, மோட்டார் வைண்டிங் (Electric Motor Winding) வேலையில் தேர்ச்சியும் அனுபவமும் கொண்ட ஒரு மெக்கானிக் பதவிக்கு நியமனம்.

2. சம்பள விகிதம் — 200-5-250—10—300 மற்றும் அரசினரால் கொடுக்கப்படும் இதர படிகள்.

3. வயது .. — 25 வயதிற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

4. தகுதிகள் — மின்சார மோட்டார், பம்ப் செட் தயாரிக்கும் தொழிற்கூடங்களில் குறைந்தளவு இரண்டு ஆண்டு அனுபவம் இருத்தல் வேண்டும். மேலும் எலக்ட்ரிக் மோட்டார் வைண்டிங் தொழிலில் சிறந்த விரிவான அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

5. இதர விபரங்கள் — மேலே கூறப்பட்ட தகுதியுடையவர்கள் தங்கள் மனுக்களை வெள்ளைத்தாளில் எழுதிக் கையொப்பமிட்டு " முதல்வர், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் " என்ற முகவரிக்கு 30—10—71 தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். அதற்குப் பின் வரும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மேலும் நேரிடைத் தேர்வுக்கு அழைக்கப்பட்டால் தங்கள் சொந்தச் செலவிலேயே தங்களுடைய சான்றிதழ்களுடன் குறித்த நேரத்தில் வருதல் வேண்டும்.

முதல்வர்,
கிராமிய வளர்ச்சி பயிற்சி நிலையம்,
தே. கல்லுப்பட்டி.

(த. 19)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும், முறையான படிவங்களில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், மக்கள் நல்வாழ்வுத் துறை (தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம்), பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் அல்லது அது போன்ற அரசு துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளரால் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) எண். 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரிக்கு 27—10—1971 மாலை 3 மணி அளவில் வந்து சேரும்படியாக வரவேற்கப்படுகிறது. அதே நாள் மாலை 3-30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்—பல்லப்பட்டி குடிநீர் திட்டம்—2-வது கட்ட முதன்மைப் பணிகள்—பம்ப் செட்டுகளும், மற்றும் பிற கருவிகளும் வழங்குதலும், நிறுவுதலும்.

ஒப்பந்த வகை—முழுத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 2,600 (ரூபாய் இரண்டாயிரத்தி அறுநூறு).

இத்தொகை ஒப்பந்தப்புள்ளியுடன் கட்டப்படவேண்டும். அது கருவூல செலான் ஆகவோ டிமாண்ட் டிராப்ட் ஆகவோ, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பிரிவின் கணக்கிற்கு தரப்படக்கூடிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் காரண்டிகளாகவோ இருக்க வேண்டும்.

வேலை முடிவடையவேண்டிய காலம்—9 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளியின் விலை—ரூ. 15·45 (ரூபாய் பதினைந்தும், காசு நாற்பத்தைந்து மட்டும்—விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப்புள்ளிகள், நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பிரிவிடமிருந்து (25—10—1971 மாலை 5 மணி வரை) கிடைக்கும்.

கே. கோவிந்தமேனன்,
நிருவாகப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப்
பொறியியல் துறை.

மதுரை-2,
தேதி : 17—9—1971.

(த-23)

திருச்சி வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 44/71-72

வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளி தாரர்களின் பெயரும் உறை மீது எழுதப்பட்ட, தனித்தனி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், திருச்சி புற நகர் திட்டத்திற்கு கீழ்க் கண்ட பணிகளுக்காக, அடியில் கையொப்பமிட்டவரால் 29—10—1971 அன்று மாலை 3 மணிக்கு மேற்படாமல் வந்து சேரும்படியாக வரவேற்கப்படுகின்றன.

பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் உத்தேச மதிப்பீடு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்படமாட்டாது).
		ரூ.	ரூ.	ரூ.
1	T.D.S./ 1 & 5/70ன் படி 3 தனி வீடுகள் கட்டுதல்.	47,700	720	10·40
2	T.D.S./ 2ன் படி 10 தனி வீடுகள் கட்டுதல்.	1,40,000	2,100	10·40
3	T.D.S./ 3ன் படி 7 தனி வீடுகள் கட்டுதல்.	1,08,500	1,630	10·40
4	T.D./ 6/70ன் படி 4 வீடுகள் கட்டுதல்.	69,400	1,045	10·40
5	T.D./ 74/68ன் படி 12 வீடுகள் கட்டுதல்.	1,51,800	2,290	10·40
6	T.D./ 65/64ன் படி 4 வீடுகள் கட்டுதல்	62,000	930	10·40

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11·00 மணியிலிருந்து மாலை 4·00 மணி வரை, அதற்குரிய பணம் செலுத்தி, கோட்டக் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அஞ்சலில் அனுப்பப்பட்டவேண்டுமானால் கூடுதலாக அஞ்சல் கட்டணம் செலுத்தப்படவேண்டும். 20—10—1971-லிருந்து 28—10—1971 வரை ஒப்பந்தப்புள்ளிகள் விற்பனைக்குக் கிடைக்கும். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வந்திருக்கும் ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் 29—10—1971 அன்று திருச்சி வீட்டு வசதிப் பிரிவின் நிர்வாகப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

ஆர். வெங்கடாச்சார்,
நிர்வாகப் பொறியாளர், நிருவாக அலுவலர்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி-1.
தேதி : 18—9—1971.

(த. 24)

ஏல விற்பனை

நில அளவைத் துறையைச் சேர்ந்த பழுதடைந்த 1956 மாடல் வில்லீஸ் ஜீப் (எம். டி. ஒ. 1956) ஒன்று, 158, அழகர் கோவில் ரோடு, மதுரை என்ற இடத்தில் 17—11—1971 அன்று பிற்பகல் 2 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

மேற்கண்ட இடத்தில் எந்த வேலை நாளிலும் அலுவல் நேரத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

ஏல நிபந்தனைகளையும், மற்றைய விவரங்களையும் கீழ்கண்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேல்கண்ட விற்பனை சென்னை போக்குவரத்துத் துறை ஆணையாளர் அவர்கள் அங்கீகாரத்துக்குட்பட்டது.

இ. ச. சிதம்பரம்,
உதவி இயக்குநர்,
மாவட்ட நிலஅளவை அலுவலகம்,
சிவகங்கை.

(த. 16)

தமிழ்நாடு மின்சார வாரியம்

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அனல் மின் நிலையத்தில் அமைக்கப்பட்டிருப்பதும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கீழ்க் கண்ட இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், துணை உறுப்புகள், கண்ட்ரோல் பானல்கள், டிரான்ஸ்பார்மர்கள், சுவிச்கியர்கள் மற்றும் உள்ள வரை துணை உறுப்புகள் இவைகளை வாங்கிக் கொள்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இந்த இயந்திரங்கள் '' இருக்குமிடத்தில் உள்ள நிலைமையில் '' என்ற முறையில் தரப்படும். இவை நன்முக இயங்கும் நிலையில் உள்ளன. வேறு வழிகளில்/நிலையங்களில் மின்சாரம் கிடைப்பதால் இந்த இயந்திரங்கள் மேற்கொண்டு தேவைப்படாத காரணத்திஞல் இவை விற்கப்படுகின்றன.

தொடர் எண்ணும்	விற்கப்படும் இயந்திரங்கள் பற்றி குறிப்பு.	வரைகள் எண்.	வரைகள் விலே.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி தேியும் நேரமும்.
			ரூ.	ரூ.	
1.	3 Nos. Babcock and wilco Boilers 36,000 lbs/hour 275 PSI and 7.t°F with auxiliaries and spares.	E. 1502	10	10,000	நண்பகல் 12 மணி 5—11—71
2.	2 Nos. Steinmuller Boilers 55,000 lbs/hour, -75 PSI and 725°F with auxiliaries and spares.	E. 1503	10	10,000	,,
3.	1 No. 4 MW Parson's Turbo Alternator set 3.3/6.6 KV with auxiliaries and spares (Steam being supplied from 3 Nos. B&W boilers)	E. 1504	10	10,000	,,
4.	1 No. 10 MW Hitachi Turbo-Alternator set 11 KV with auxiliaries and spares (Steam being supplied from 2 Nos. Steinmuller Boilers)	E. 1505	10	10,000	,,
5.	Coal handling Plant Capacity 60 tons/hour.	E. 1506	5	1,000	,,
6.	Base exchange water Softening plant capacity 20,000 G.P.H.	E. 1507	5	1,000	,,
7.	'Avery' 40 tons Railway wagon weigh bridge.	E. 1508	5	1,000	,,
8.	2 Nos. Metre gauge 30 H.P. Diesel locos.	E. 1509	5	1,000	,,
9.	2 Nos. Coal crushers—	E. 1510	5	1,000	,,

ஒப்பந்தப் புள்ளிகள் 6—11—1971 முற்பகல் 11·00 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். உரிய தேதிக்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்படமாட்டாது. வரைகள் சம்பந்தப்பட்ட பத்திரங்களைப்பெற கட்டணத்தை ரொக்கமாகவோ மணியார்டர் மூலமாகவோ, கணக்கு அலுவலர், தமிழ்நாடு மின்சார வாரியம் (வினியோகம்)157, அண்ணுசாலை, சென்னை-2 அவர்களுக்குச் செலுத்தி, ரொக்கம் செலுத்திய ரசீதையோ அல்லது மணியார்டர் ரசீதையோ, கீழ்க் கண்டவருக்கு ஒரு கோரிக்கைக் கடிதத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். முழு அஞ்சல் முகவரி தரப்படவேண்டும். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் ஏற்காதிருக்க மின்சாரவாரியத்திற்கு உரிமை உண்டு. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு, ஒப்பந்தத்தைப் பிரித்துத் தரவும், அளவைத் திருத்தவும், வழங்கவும் மின்சார வாரியத்திற்கு உரிமை உண்டு. ஒரு இனத்தின் ஒரு பகுதிக்காக ஒப்பந்தப் புள்ளிகள் எற்கப்படமாட்டாது.

உரிய தேதிக்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

157, அண்ணுசாலை,
சென்னை-2.
(த. 15)

என். எஸ். எஸ். ஆரோக்யசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்
தொழில் நுட்பம் (மின்சாரம்).

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 27—10—1971 மாலை 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1.	வேலையின் பெயர்	தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில்குடும்பக்கட்டுப் பாடுத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சைநிலையமும் 20 படுக்கைகள் கொண்ட பகுதிக்கான கட்டடத்தை, தாய்—சேய்நல விடுதிக் கட்டடத்தின் முதல் மாடியில் கட்டுதல்.
2.	ஒப்பந்த வகை ..	மொத்தத் தொகை.
3.	பிணைப்பணம்—செலுத்துச் சீட்டுமூலம் பெற்றுக் கொள்ளப்படும்.	ரூ. 3,800
4.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை. III. மற்ற செலுத்துத் தொகை எனும் தலைப்பின் கீழ் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.	ரூ. 30·00
5,	விற்பனை வரி— அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், பொதுவிற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.	ரூ. 1·05
6.	கால அளவு	8 மாதங்கள்
7.	ஒப்பந்தப் பத்திரம்.. கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.	8—10—1971

ஆர். வேணுகோபால்

10—9—1971

மேற்பார்வைப் பொறியாளர்:
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 10)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

9579/71 நாள் 20—9—71.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், கீழ் கண்ட பொருள்கள் வழங்குவதற்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, வீராணம் திட்ட வட்டம், சென்னை—5 அவர்களால், பதிவு செய்து கொண்டுள்ள அல்லது புகழ் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

போர்ட்டபிள் டைப் டில்ட்டிங் டிரம் கான்கிரீட் மிக்சர்ஸ் (10/7 cft.) 280/200 லிட்டர் திறன்—5 அல்லது 6 குதிரை விசை குளுமை டீசல் இயக்க இஞ்சின், எல்லாத்துணை உறுப்புகளுடன் முழுமையாக.

தேவைப்படுவவை சுமார்—4

நிபந்தனைகள்

1. சொல்லப்பட்ட விலைப் புள்ளியில் உறுதிப்பாடு; சென்னை—5 சேப்பாக்கம்த்தில் இலவச விநியோகம் (Free delivery)

2. விலைப் புள்ளிகள், மூடி முத்திரையிட்ட உறைகளில் உள் வைத்துத் தரப்பட வேண்டும். கான்கிரீட் மிக்சர்களுக்கான விலைப் புள்ளிகள் என்று உறையின்மீது குறிப்பிட வேண்டும். 25—10—1971 மாலை3—00க்குள் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகம் வந்து சேரவேண்டும்.

3. ரேட் காண்ட்ராக்டில் தருவதஞல் விவரங்கள் தரப்பட வேண்டும். சொல்லப்படும் ரேட், ரேட் காண்ட்ராக்ட் ரேட் படியே இருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த. 18)

ஒப்பந்தப் புள்ளி

மேற்பார்வை மின் பொறியாளர் அலுவலகம்
வேலூர் மின் திட்டம், காட்பாடி நகர் விரிவு

காட்பாடி நகர் விரிவு மத்தியப் பண்டகசாலையில் "இருக்கும் நிலையிலேயே விற்கப்படுவதற்காக" உள்ள கீழே விவரித்துள்ள கழிவுத் துண்டுப் பொருட்களையும் வாகனங்களையும் வாங்குவதற்கும் மற்றும் அகற்றுவதற்குமான முத்திரையிடப்பட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் அடியில் கையொப்பமிட்டவரால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் அழைக்கப்படுகின்றன.

வரிசை எண், ஒ.டி. எஸ். எண்.	விபரம்.	சுமாரான அளவு அல்லது எண்ணிக்கை.
1. 27/71-72	3 டன் லாரி (Condemned)	1
2. 28/71-72	3 சக்கர வண்டி (Condemned)	1
3. 29/71-72	10 டன் இரஷ்யன் டிராக்டருக்குரிய டிரெய்லர்.	2
4. 30/71-72	ஜீப் டிரெய்லர்	2
5. 31/71-72	லாரிடிரக்கிற்குரிய டிரெய்லர் (6 ton cross ladder weight)	1
6. 32/71-72	செம்புக் கழிவுத் துண்டுகள்.	3,500 கிலோ கிராம்.
7. 33/71-72	பித்தளைக்கழிவு துண்டுகள்.	650 கிலோ கிராம்.
8. 34/71-72	செம்புக்கேபிள் கழிவுத் துண்டுகள். (VIR and WPTC)	850 கிலோ கிராம்.
9. 35/71-72	அலுமினியம் கேபிள் கழிவுத்துண்டுகள். (VIR and WPTC).	660 கிலோ கிராம்.
10. 36/71-72	(U.G) கேபிள் கழிவுத்துண்டுகள்.	2,310 கிலோ கிராம்.

கழிவுத் துண்டுகளின் அளவு கடைசி தேதி, கட்டவேண்டிய முன் தொகை, கழிவுத் துண்டுகளைப் பார்வையிடல் ஆகிய விபரங்களுடன் கூடிய குறிப்புப்பிரதிகளை பிரதியொன்றிற்கு ரூ. 5 வீதம் 30—10—1971 தேதி வரை தலைமைக் கணக்காயர் (செலவு) வேலூர் மின் திட்டம், எண் 10, கிழக்கு நெடுஞ்சாலை, காட்பாடி நகர் விரிவு (அஞ்சல்) வடார்க்காடு என்னும் முகவரியில் நேரில் பணம் கொடுத்தோ பணவிடை மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வேலூர் மின் திட்டம், காட்பாடி நகர் விரிவு.

(த.27)

ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

அண்ணா நகர் பிரிவு

தகவல் எண் 3454/AAN-D1/71

உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயரும் முறையாக எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க்கண்ட பணிக்காக அடியில் கையொப்பமிட்டவரால் 29—10—1971 அன்று மாலை 3-00 மணிக்கு மேற்படாமல் வந்து சேரும்படியாக வரவேற்கப்படுகின்றன. அன்று மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்—அறிஞர் அண்ணா நகரில் 37 அடி உயரத்தில் 2·50 இலட்சம் கேலன்கள் கொள்ளளவு கொண்ட ஆர்.சி.சி. உயர்மட்ட நீர்த்தேக்கம் கட்டுதல்.

வேலையின் உத்தேச மதிப்பு—ரூ. 3·4 இலட்சம்.

கட்டுத் தொகை—ரூ. 5,100

ஒப்பந்த முறை—முழுத் தொகை.

ஒப்பந்தப் புள்ளி விலை (திருப்பித்தரப்பட மாட்டாது) ரூ. 10+ விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளி படிவங்கள், நிர்வாகப் பொறியாளர், வீட்டு வசதி வாரியம், சென்னை-40 என்ற முகவரியில் 7—10—1971-க்குப்பின் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மதியம் 12-00 மணி வரை பணம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகப் பொறியாளர்,
(அறிஞர் அண்ணா நகர்).

அண்ணா நகர்,
சென்னை-40.
(த.25)

ஒப்பந்தப் புள்ளி

மறு ஒப்பந்த அறிக்கை

K-2 ஒப்பந்தம்

[குறிப்பு எண் SCE 419]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல், குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவு தேதி அன்று மாலை 3-30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலையே 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

குறிப்பு எண்.	வேலையின் பெயர்	முன்வைப்பு பணம்.	ஒப்பந்தப் பிரதிவிலை.	முடிவுத் தேதி.
SCE 419	எண்ணூர் அனல் மின் திட்டம் கட்டடங்களுக்கு மின்னல் இடி தாங்கிகள் பொருத்துதல்.	ரூ. 1,000	ரூ. 10	21-10-1971

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 செலுத்தி கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்கள் குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணாமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம், எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண்: 59556 (5 கிளைகள்)

தந்தி : "ENTERMAL"

(த. 33)

ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இது போன்ற வேறு அரசுத் துறைகளில் உரிய பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் எண் 17. சர்.பி.டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 20—10—1971 (புதன்) மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர் ..	மதுரை புதைச் சாக்கடைத் திட்டம் வைகை—ஆற்றுக்கு வடக்கே—முதல் கட்டம்—700 எம்.எம்.நடுவிட்டமுள்ள ஜி. ஐ. பைப்புகள், ஸ்பெஷல்கள் பம்பிங் மெயினுக்காக எல்எஸ்டு. எல். எஸ்,—7,850.
ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை .	ரூ. 4,500 (ரூபாய் நாலாயிரத்து ஐநூறு மட்டும்).

இந்தத் தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது தேசீய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம், மதுரை அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம். ...... ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை 14, ராமமூர்த்தி சாலை, மதுரை என்ற முகவரியில் உள்ள நிர்வாகப் பொறியாளர் பொது சுகாதாரப் பொறியியல் கோட்டம் அவர்களிடமிருந்து 16—10—1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கே· கோவிந்தமேனன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(ம.ந.வா.பொ.) மதுரை-2.

13—9—1971.

(த. 9)

ஏல ஒப்பந்தம்

கண்காணிப்பாளர் அலுவலகம்
அரசினர் காசநோய் சானடோரியம்
தாம்பரம்—சென்னை-47

அரசினர் காச நோய் சானடோரியம், அம்ரித் நகர் குடியிருப்பு (சானடோரியம் சார்ந்த புனர்வாழ்வு நிலையம்) பகுதிகளில் உள்ள மரங்களின் பலன்களை எடுத்துக்கொள்ள 16—11—1971 முதல் 15—11—1972 வரை உள்ள காலத்துக்குக் குத்தகை உரிமை அரசினர் சானடோரியத்தில் 30—10—1971 மாலை 3 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும் என்று இதன் மூலம் அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கொண்டு விவரங்களை சென்னை-47 தாம்பரம், அரசினர் காச நோய் சானடோரியம் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

டாக்டர் கே. வி. கிருஷ்ணசாமி,
எம்.டி., எப்.ஸி.ஸி.பி.
கண்காணிப்பாளர்,
அரசினர் காசநோய் சானடோரியம், தாம்பரம், சென்னை-47.

(த. 8)

ஏல விற்பனை

தமிழ்நாடு தீயணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம்.எஸ்.ஒய். 7044—ஆஸ்டின் 1953 மாடல், பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம்சனிக்கிழமை 23-ஆம்தேதியன்று காலை 11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை, பாளையங்கோட்டைத் தீயணைப்பு நிலையத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எஸ். சுப்பிரமணியம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
பாளையங்கோட்டை.

(த. 6)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிறைத் துறை

1971–72-ஆம் ஆண்டின் எஞ்சியுள்ள மாதங்களுக்குக்கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தம் 22-10-71-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள் :— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தங்கள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post - Ack Due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "...................க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தமோ அந்த நிறுவனத்தின்பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தம் என்று தவறுமல் எழுதி, தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தங்கள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 23—10—1971 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவுப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுகொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

இ.பி.டி. தாமஸ்,
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்-பொறுப்பு,
குறளகம், சென்னை-1.

10—9—1971

(த-1)

வேலைவாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 16—11—1971 அன்று மாலை 5-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

தொழில் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு தொழில் சார் நிலைப்பள்ளி ஆகியவற்றில், விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சிப் போதகருக்கான தற்காலிகப் பதவிகள்—4 நியமனங்கள்.

குறிப்பு : நான்கு நியமனங்களிலும் ஒன்று பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள நியமனங்களுக்குப் பெண்களும் மனுச் செய்யத் தகுதிபடைத்தவர்களாவர்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 275—10—375—15—450.

வயது : 1—7—1971-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தகுதி : 1. பல்கலைக் கழக மானியக் குழுவினுல் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தில் உடற் கல்வி டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

உடற்கல்வி (மேல்நிலை) ஆசிரியர் சான்றிதழ் பெற்று ஓர் ஆண்டுக் காலத்திற்குக் குறையாமல் கற்பித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேற்பட்ட பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. இதர தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத அவர்களின் புதல்விகள், மற்றும் தேசீய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜென்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னுள் தேசீய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து படை கலைக்கப்பட்டதால் திரும்பியவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானுலும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடி பெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டவர்களாக இருப்பினும், வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செண்டி மீட்டர் நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் தலை ஒட்டிய "நூல் அஞ்சல்" என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த-4)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பகுதி) சென்னை-25

வேலையின் பெயர்—

வேலை எண் 1.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக ஆடிட்டோரிய கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 2.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக நூலகக் கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 3.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக உலோகவியல் 5 ஆண்டு பட்டப்படிப்பிற்கான கூடுதல் கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 4.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காகச் சமையற்கூடம், சாப்பிடும் இடத்திற்கான கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்வதற்காக, தொழில் நுட்பக் கல்விப்பகுதிகளில் வேலைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர் களிடமிருந்து மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் முன்னிலையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

		வேலை எண் 1.	வேலை எண் 2.	வேலை எண் 3.	வேலை எண் 4.
1	ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.	மொத்தத் தொகை.
2	கட்டுத் தொகை	ரூ. 5,750	ரூ. 4,500	ரூ. 5,000	ரூ. 2,500
3	மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 20 மற்றும் விற்பனை வரி	ரூ.20 மற்றும் விற்பனை வரி.	ரூ.20 மற்றும் விற்பனை வரி.	ரூ.20 மற்றும் விற்பனை வரி
4	வேலையை முடிக்க வேண்டிய காலம் .. — —	10 மாதங்கள்.	8 மாதங்கள்.	10 மாதங்கள்.	8 மாதங்கள்
5	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடிய நாட்கள்.	4-10-1971 முதல் 16-10-1971	4-10-1971 முதல் 16-10-1971	4-10-1971 முதல் 16-10-1971	4-10-1971 முதல் 16-10-1971
6	ஒப்பந்தப் புள்ளிகளைக் கொடுக்க வேண்டிய நாள் ..	19-10-1971 மாலை 3-00 மணி.	19-10-1971 மாலை 3-00 மணி.	19-10-1971 மாலை 3-00 மணி.	19-10-1971 மாலை 3-00 மணி.
7	ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கத் தகுதி வாய்ந்த பிரிவு	— 2-ம் பிரிவும் அதற்கு மேலும்.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.	2-ம் பிரிவும் அதற்கு மேலும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P. W. Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், மண்டலப் பொறியியற் கல்லூரிக் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியைத் தனிச்சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII.Sales-tax (b) Receipts under State Sales-tax General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளி அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலானை இணைத்துக் கொடுத்தால்தான் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அலுவலக கட்டுமானப் பகுதி வேலைகளை மேற்கொள்ள உரிய பிரிவில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால் டிபாசிட்' வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில், 5 சதவிகிதம் குறைத்து அல்லது அடிப்படை மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ, அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புகிறவர்கள் உரிய பிரிவுகளில் பெரிய கட்டுமான வேலைகளை மேற்கொள்ளுவதில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எவ்விதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்,
சென்னை-25.

(த.3)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு
குடிநீர் வடிகால் வாரியம்

அறிவிப்பு எண் : 317/டி 2/71 டி 2

நாள் : 15—9—1971

இறக்குமதியான உருக்கை, சென்னைத் துறைமுகத்திலிருந்து தென்ஆர்க்காடு மாவட்டம் பண்ருட்டி அருகே பணிக்குப்பம் வீராணம் திட்ட பாக்டரிப் பகுதிக்குக் கொண்டு செல்லும் வேலைக்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (உரிய வடிவங்களில்), மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, வீராணம் திட்ட சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் பொதுப்பணித் துறையில் செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிய பிரிவினரிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே 2

கட்டுத் தொகை—ரூ. 5,500

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10-இத்துடன் விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்—5—10—1971-லிருந்து 25—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதி: 30—10—1971.

நிபந்தனைகள், இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
T.W.S. & D.B
வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த-7)

ஒப்பந்தப் புள்ளி

கோவை நகராட்சி

கீழ் குறிப்பிட்டுள்ள வேலைக்களுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 27—10—1971-ந் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப்புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 27—10—1971 தேதி மாலை 3-30 மணிக்கு ஆணையர் அல்லது அவர் அங்கீகாரம் பெற்றவரால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான ஷெட்யூல் பாரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	வரை குறிப்பு விலை.	முடிக்க வேண்டிய காலம்.
		ரூ.		
1	கோவையில் டாடாபாத்தில் 6 கடைகள் கட்டுதல்.	1,000	10·35	5 மாதம்.
2	கோவையில் ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல்.	1,130	10·35	6 மாதம்
3	கோவை சித்தாபுதூரில் உள்ள உயர் நிலைப்பள்ளியில் முதல் மாடிக்கட்டடம் கட்டுதல்.	3,450	15·53	8 மாதம்.
4	ரங்கநாதபுரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மேல் மாடிக்கட்டடம் கட்டுதல்.	3,525	15·53	8 மாதம்.

(த. 29)

ஆணையர்,
கோவை நகராட்சி.

பரிசு

குழந்தைகளுக்கான இலக்கியங்களுக்குப் பரிசுகள்

மாநில அரசினர் நடத்தும்
11-வது பரிசுப் போட்டி

குழந்தைகள் படிப்பதற்குத் தக்க சுவையான இலக்கியத் தேர்விற்கு ஆசிரியர்களிடமிருந்தும், வெளியீட்டார்களிடமிருந்தும் தமிழில் நூல்கள் வரவேற்கப் படுகின்றன. ஏறத்தாழ பத்து நூல்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு நூலுக்கும் ரூபாய் ஐந்நூறு பரிசு கொடுக்கப்படும்.

போட்டிக்கு அனுப்ப விரும்பும் நூல்களைக் கீழ்கண்ட முகவரிக்கு 25—10—1971 அன்றோ அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்க வேண்டும். 25—10—1971க்கு பின்னர் வரும் எந்த நூலும் எக்காரணத்தைக் கொண்டும் போட்டிக்கு ஏற்றது ஆகாது.

முகவரி: நேர்முக உதவியாளர் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை—6.

மேற்குறிப்பிட்ட முகவரிக்கு 35காசு தபால் தலை ஒட்டிய, தங்கள்முகவரி எழுதிய உறையை அனுப்பிப் போட்டிக்குரிய விதி முறைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை-6.

(த-28)

ஏல விற்பனை

தமிழ்நாடு தீ அணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம். எஸ். ஓய். 7043 (ஜி. எம். சி. 1953ஆம் வருட மாடல்) கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் தீயணைப்பு நிலையத்தில் 1971ஆம் வருடம் அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளை கீழே கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வி. ஜெயபெருமாள்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கடலூர்.

(த-55)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

ஒப்பந்தப் புள்ளி எண். டி.7/71–72 நாள் 22—9—1971.

வேலையின் பெயர்—கடலூர் துறை வளர்ச்சித் திட்டத்திற்காக, கடலூரில் டிரான்ஸ்பார்மர் இல்லம் கட்டுதல்.

1. தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை—வரைவுகள், நீர்நிலைப் பணி வட்டம்—சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்த முறை—முழுத் தொகை.

3. அ. கட்டுத் தொகை—ரூ. 2,500

ஆ. கூடுதல் காப்புத் தொகை—ரூ. 2,500 அல்லது மேற்பார்வைப் பொறியாளர் குறிப்பிட்டபடி.

4. ஒப்பந்தப் புள்ளிகளின் விலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

5. ஒப்பந்தப் புள்ளி விற்பனை வரி—ரூ. 0·60 (காசு அறுபது மட்டும்).

6. வேலையை முடிக்க வேண்டிய காலம்—5 மாதங்கள்.

7. ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், வரைவு, நீர் நிலைப் பணி வட்டம்—சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரியில் 5—10—1971 லிருந்து 22—10—1971 வரை கிடைக்கும்.

8. மேலே 4, 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளி பத்திரத்தின் விலை, விற்பனை வரி ஆகியவை, அரசு கருவூலத்திலாவது, ரிசர்வ் பாங்கிலாவது "P.W. Remittances, Marine Works Division, Cuddalore" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். 5-ல் குறிப்பிட்டுள்ள விற்பனை வரியும் அதே செலானில் "II Sales Tax—(B) Receipt under State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். மேற்கண்ட செலானை கொடுத்தால்தான் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். இச் செலானின் தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது.

9. ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, கட்டுத் தொகையைக் கட்டினால்தான் ஒத்துக்கொள்ளப்படும்.

10. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், இந்தத் துறையினால் அளிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவ முறையுடன் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வேலையின் பெயரையும் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

11. ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லாவற்றையுமோ நிராகரிக்கும் உரிமை, மேற்பார்வைப் பொறியாளர், வரைவு, நீர் நிலைப் பணி வட்டத்திற்கு உண்டு.

12. மேலே, 9, 10 குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள்படி அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஏ. இ. சாந்தப்பன்,
மேற்பார்வைப் பொறியாளர், வரைவு,
நீர்நிலைப் பணி வட்டம்.

(த.26)

விற்பனை

திருச்சி வீட்டுவசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

60 அடி சாலையைப் பார்த்து அமைந்திருக்கும், 150 மனைகள் முன்பு ஏலத்தில் விடுவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டவை, தற்போது ஒதுக்கீடு மூலமாக விற்பனை செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனையும் 1½-யிலிருந்து 2 கிரவுண்ட் (ground) அளவுள்ளன. ஒரு கிரவுண்டு விலை ரூ. 3,600. ஓரத்திலுள்ள மனைகள் கிரவுண்டு ரூ. 4,100 வீதம் விற்கப்படும்.

விருப்பமுள்ளவர்கள், இதற்கான விண்ணப்பப் படிவத்தில் அடியில் கையெழுத்திட்டவரின் முகவரிக்கு 31—10—1971 அல்லது அதற்கு முன்னரே விண்ணப்பம் செய்ய வேண்டும். விண்ணப்பப் படிவத்தையும், விவரத்தையும் 5 ரூபாய் பணம் கட்டி பெற்றுக்கொள்ளலாம். (பதிவு அஞ்சலில் செலுத்த ரூபாய் 6.50).

ஆர். வெங்கடாச்சார்,
நிருவாகப் பொறியாளர்,
&
நிர்வாக அலுவலர்,

சர்க்யூட் ஹவுஸ்ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
தேதி: 25—9—1971.

(த. 20)

விற்பனை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
கல்லூரித் தமிழ் பாடநூல்கள்
புத்தகக் கிடங்கு

நுங்கம்பாக்கம், சென்னை

வாரீர் ! காணவாரீர் !! பயன் பெறுவீர் !!!

புத்தக விற்பனை :—
காலை 10 மணி முதல்
மாலை 4–30 மணி வரை.

மகளிர் கிறித்துவக் கல்லூரி அருகில் (பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு அண்மையில்).

(த. 12)

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகம் கட்டுமானப்பகுதி சென்னை-25

வேலையின் பெயர்.—சென்னை, அடையாற்றில் உள்ள படத் தொழில் நுட்ப நிலையத்திற்குத் தச்சுத் தொழிற்சாலை, கார் நிறுத்துமிடம் அமைத்தல்,

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறிய வேலையைச் செய்வதற்காகத் தொழில் நுட்பக் கல்வி பகுதியில் III மற்றும் அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிட மிருந்து இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களால் 25—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

1	ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2	கட்டுத் தொகை ..	ரூ. 2,500
3	மாதிரி வரை படத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்தி ரங்களின் விலை.	ரூ. 20·00 (விற்பனை வரி. உட்பட)
4	வேலையை முடிக்க வேண் டிய காலம்.	..6 மாதங்கள்.
5	ஒப்பந்தப் புள்ளிப் பத்தி ரங்கள் மேற்கூறிய அலு வலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கும் தேதிகள்	11—10—1971 முதல் 23—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P.W.D. Remittances—III—Other Remittances" என்ற தலைப்பில் நிர்வா கப்பொறியாளர், மண்டலப் பொறியியற்கல்லூரி கோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை தனிச்சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII. Sales-tax (b) Receipts under State Sales-tax Act-General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்தவேண்டும். ஒப்பந்த அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களை ஒப்படைத்த பின்பே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகத்தின் கட்டுமானப் பகுதியில் உரிய பிரிவில் பதிவு செய்துகொள்ளாத ஒப்பந்தக் காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா.

கட்டுத்தொகை சலான் வடிவிலும், ஷெட்யூல்டுபாங்கு களின் " கால் டிபாசிட் " தொகை வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை கட்டுத்தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5சதம் குறைத்தோ அல்லது அடிப்படை மதிப்புக்கோ இதில் எது குறைவாக உள்ளதோ அந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்படும். நாட் டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி மட்டுமே கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வடிவத்திலும் கட்டுத்தொகை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் உரிய பிரிவில் பெரிய கட்டுமான வேலைகளை மேற்கொள்ளுவதில் குறைந்த அளவு 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையுமோ எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரிக்க இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி, சென்னை.

(த.2)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும், அதன் பொருட்டும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், இத் துறை யில் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம், சென்னை-8 அவர்களால் 3-11-1971 மாலை 3.00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப் பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-30 மணிக்கு மேல் மேற்கண்ட, மேற்பார்வைப் பொறி யாளரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

தொடர் எண்ணும், வேலையின் விவரமும்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் புள்ளி பத்திரங் கள் விலை.
		ரூ.		ரூ.
1 திருக்கோயிலூர் நீர் வழங்கு திட்டம் III-வது கட்டம்-மேல் மட்டப் பகுதி களுக்காக 4.00 லட்சம் லிட்டர் திறன் உள்ள ஆர்.சி.சி. மேல்மட்ட சர்வீஸ் ரிஸர்வாயர் கட்டுதல்.	மொத்தத் தொகை.	2,630	8 மாதங் கள்.	10.35
2 திருக்கோயிலூர் நீர் வழங்கு திட்டம் III-வது கட்டம், கீழ்மட்டப் பகுதிக ளுக்காக 2.00 லட்சம் லிட்டர் திறன் உள்ள ஆர். சி. சி. மேல் மட்ட சர் வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்.	மொத்தத் தொகை.	1,265	8 மாதங் கள்.	10.35

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார, பொறியியல் 28, ராஜாஜி தெரு, ஸ்ரீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு எழுதிப் பெறலாம். பத்திரங்களுக்கான தொகையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ உடன் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது. ஒப்பந்தப் புள்ளிகள் எதையும் அல்லது அனைத்தையும் எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க அல்லது ரத்துச் செய்ய மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களுக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொது சுகாதாரப் பொறியியல் வட்டம், சென்னை-8.

(த.39)

ஏல விற்பனை

தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை

வில்லிஸ் ஜீப் (எம்.டி.எச். 1679) ஒன்று 29-10-1971 மாலை 4 மணிக்கு கோயில்பட்டி மண் சோதனை ஆய்வுக்கூட, உதவி மண் பரிசோதனை வல்லுநரால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வேலை நாட்களில் மேற்கண்ட அலுவலகத் தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி ஏலக் கோரிக்கையை ஏற்கவோ, நிராகரிக்கவோ, ஏலத்தை ரத்துச் செய்யவோ, ஒத்திவைக்கவோ வேளாண் மைத் துறைக்கு உரிமை உண்டு.

ஏல நிபந்தனைகள் மற்றும் இதர விவரங் களை மேலே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெறலாம்.

இயக்குநர்,
வேளாண்மைத் துறை.

சென்னை-5.
(த.44)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை)
ஒப்பந்தப்புள்ளி எண் 38/71-72/டி 3

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் 27-10-1971-ஆம் நாள் பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க் கையொப்பமிட்டவரால் வரவேற்கப் படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களை கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் 20-10-1971-ஆம் நாளிலிருந்து 26-10-1971-ஆம் நாள் வரை காலை 10-30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பிணைப்புத் தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேர வேண்டிய நாளான 27-10-1971-ஆம் நாள் பிற்பகல் 1.00 மணி வரைதான் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 27-10-1971-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் செயற்பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீடு கட்டும் திட்டம்
சர்ச்ஹில் பகுதி—உதகமண்டலம்—நீலகிரி மாவட்டம்

வரிசை எண்ணும், வேலையின் விபரமும்.	வேலையின் சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.	நமூனுக்களின் விலை.
	ரூ.	ரூ.	ரூ.
1. இரண்டு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட (2 in 1) கட்டடங்கள், எட்டு (Blocks) கட்டுவது.	1,87,000	2,820	ரூ. 10-ம் மற்றும் மூன்று சத விற்பனை வரி.
2. இரண்டு குடியிருப்புகளுக்கான இரண்டு அறை கொண்ட (2 in 1) கட்டடங்கள் எட்டு, (Blocks) கட்டுவது.	2,35,000	3,540	,,

இல. அரங்கநாத சாஸ்திரி,
செயற்பொறியாளர்-
கோவை வீட்டுவசதிப் பிரிவு,
கோவை.

11/22, திவான்பகதூர்சாலை,
இரத்தனசபாபதிபுரம்
(அஞ்சல்),
கோவை-2.

ஏலம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

இந்திரா நகர் திட்டப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைகளில் (26 கடைகள்) குத்தகை உரிமையும், ஒரு உணவகத்தின் குத்தகை உரிமையும் அந்த இடமுள்ள பகுதியில் 30-10-1971 காலை 10·00 மணிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் துணைத் தலைமை ரெவின்யூ அலுவலரால் ஏலம் விடப்படும்.

ஏலம் கோர விரும்புவோர், ஏலத்திற்கு முன்னதாக ரூ. 50 கட்டுத் தொகை கட்ட வேண்டும். மேற்கொண்டு விவரங்களைத்தலைமை ரெவின்யூ அலுவலரிடமிருந்து பெறலாம்.

இந்திரா நகரில் 20 தனி நபர் குடியிருப்புகள் ஒதுக்கீடு பெறுவதற்காகவும் பொது மக்களிடமிருந்து மனுக்கள் கோரப் படுகின்றன.

ஏ. ராஜதுரை,
தலைமை ரெவின்யூ அலுவலர்,
36, அண்ணசாலை,
சென்னை-35.
(த.50)

ஏல விற்பனை

காஞ்சிபுரம் நகராட்சி

1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20—ஆம் நாள் புதன் கிழமை மாலை 3-00 மணிக்கு நகராட்சிக்குச் சொந்தமான 10 இரும்பு ரோலிங் சட்டர்கள் நகராட்சி அலுவலகத்தில் ஏலம் போடப்படும். ஏலம் கேட்கும் நபர் ரூ. 100 பொறுப்புத் தொகை செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். இதர நிபந்தனைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளவும்.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்.
4-10-1971
(த.59)

ஒப்பந்தப் புள்ளி

தொடர் உருக்கு வார்ப்புத் தொழிற்சாலை

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழில் பிரிவு

தமிழ்நாடு அரசினர் நிறுவனம் தபால் பை எண் 5, அரக்கோணம், வட ஆர்க்காடு மாவட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 11140/பி./c/Elec./71-2.

வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்புத் தொழிற்சாலை பிராஜக்ட் பொறியாளர், அவர்களால் குடியிருப்புகளுக்காக உள் மின்சார அமைப்புகளுக்காக மின்சார சாதனங்கள் வழங்க 15-11-1971 மாலை 3·00 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-30-க்கு பிராஜக்ட் பொறியாளரால் அல்லது அவருடைய பிரதிநிதியால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியுடன் தரப் படவேண்டிய கட்டுத் தொகை குறுப்பிடப்பட்ட மதிப்பில் 2½ சதவிகிதம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 16-10-1971-லிருந்து அரக்கோணத்தில் இத்தொழில் பிரிவின் அலுவலத்தில் விற்கப்படும். ஒரு செட்டுக்கு விலை ரூ. 5 ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ இதனைச் செலுத்த வேண்டும். இத் தொகை திருப்பித் தரப்படாது. 12-11-1971-க்குப் பிறகு ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படாது.

காரணம் எதுவும் கூறுமல் எந்த ஒப்பந்தப்புள்ளியையும் முழுதுமாகவோ, அல்லது பகுதியாகவோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ பிராஜக்ட் பொறியாளருக்கு உரிமை உண்டு.

பிராஜக்ட் பொறியாளர்.
(த. 45)

ஏல விற்பனை

(ந.க. எண் 58913/பி2/71.)

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 28-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10·30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 26-10-1971 செவ்வாய்க்கிழமை அன்றும் 27-10-1971 புதன்கிழமை அன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஆணையர்.

(த. 58)

ஒப்பந்தப் புள்ளி

தூத்துக்குடி துறைமுக வாரியம்

தூத்துக்குடித் துறைமுகத்தின் வடக்குப் பகுதியில் சிமெண்ட் காங்கிரீட் சிலாப்புகளைப் பாவுதல் (காண்டிராக்ட் மதிப்பு—ரூ. 23,000) என்ற வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அனுபவம் வாய்ந்த காண்டிராக்டர்களிடமிருந்து 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் நாளன்று பிற்பகல் 4-00 மணி வரை தலைவர், தூத்துக்குடித் துறைமுக வாரியம், அவர்களால் வரவேற்கப் படுகின்றன. தூத்துக்குடித் துறைமுக வாரியத்தில் பதிவாகியுள்ள காண்டிராக்டர்களது ஒப்பந்தங்களைத் தவிர இதர எந்த நபர் ஒப்பந்தமாவது ஏற்கப்பட்டால், அவர் தற்காலிக உத்தரவு கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், துறைமுக சகல விதி முறைகளையும் அனுசரித்து, தமது பெயரை பதிவு செய்து கொள்ளவேண்டும்; இல்லையேல் வேலைக்கான உத்தரவு ரத்துச் செய்யப்படும். மற்றும் அவர் செலுத்திய முன் பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப் பத்திரங்களை கீழ்க் கையொப்ப மிட்டுள்ளவரிடமிருந்து 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதி வரை பிரதி ஒன்றுக்கு ரூ. 10 செலுத்திப் பெறலாம். இத்தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

டி.டீ. ராமச்சந்திரன்,
துறைமுக அதிகாரி,
காரியதரிசி.
துறைமுக வாரிய அலுவலகம்,
தூத்துக்குடி-1.
(த. 56)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம்,
தபால் பெட்டி எண் 55,
திருச்சிராப்பள்ளி-1.

சிறு ஒப்பந்த ரத்து அறிக்கை

வேலையின் பெயர்—திருச்சி மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசினர் மருத்துவ மனையில் 16படுக்கைகள்கொண்ட ஒரு பகுதிக் கட்டடம் கட்டுதல்.

ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி தேதியாகிய 8-10-1971-க்கு உடைய மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படுகிறது.

நா. முத்துகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
திருச்சி வட்டம்.
(த. 76)

ஒப்பந்தப் புள்ளி

மாயூரம் நகராட்சி

நகராட்சி சாலைகளைப் பராமரிக்க கருங்கல் ஜல்லி, சிகப்பு கப்பி ஆகியவை சப்ளை செய்ய ரூ. 6,000 மதிப்பீடுள்ள வேலைக்கு 25—10—1971 மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளபடும். அந்த வேலையின் விபரங்களை நகராட்சி கருவூலத்தில் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வீரைய்யன்,
ஆணையர்.
(த.34)

தமிழ்நாடு கீழ்முக காவல் துறை

இராமநாதபுரம் மாவட்டம் ஆயுதப்படை பிரிவில் இரண்டு இளநிலை உதவி ஆய்வாளர்கள் பதவிக்கும், மதுரை வட பாகம் ஆயுதப் படைப் பிரிவில் ஒரு இளநிலை உதவி ஆய்வாளர் பதவிக்கும் தகுதி பெற்ற நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. நேர்முக தேர்வின்படி நியமனங்கள் செய்யப்படும்.

3. கீழ்க்கண்ட தகுதி உடையவர்கள் மட்டுமே ஆயுதப் படை இளநிலை உதவி ஆய்வாளர் வேலைக்கு தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

தகுதிகள்.

(அ) 1–7–1971 அன்று 18 வயது முடிந்திருக்க வேண்டும். ஆனால், 25 வயதுக்கு மேற்பட்டு இருக்கக் கூடாது.

(ஆ) இந்தியப் பாதுகாப்புப் படையில் ஏதாவது ஓர் பிரிவில் பணியாற்றியவர்களுக்கு பணிபுரிந்த காலத்தைக் கழித்து வரும் வயது 25-க்குக் கீழ் இருக்க வேண்டும்.

(இ) உடலளவு: உயரம் 5' 6'' (168 செ. மீட்டர்). மார்பு சாதாரண நிலையில் 34'' (86 செ. மீட்டர்). மார்பு விரியும் பொழுது: 2'' (5 செ. மீட்டர்)-க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(ஈ) கல்வி: குறைந்த பட்சம் உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்வு ஆகியிருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் கீழ்க்கண்ட தேர்வு எண் பெற்றிருக்க வேண்டும்.

ஆங்கிலம்—40.

தமிழ்—40.

விஞ்ஞானம், கணிதம், சமூகப்பாடம்–குறைந்தது இரண்டு பாடங்களில் 35-ம் மூன்றாவதில் 30-ம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) மொழி: பிராந்திய மொழியில் (அதாவது தமிழ் மொழியில்) போதிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—இந்தியப் பாதுகாப்புப் படையில் ஏதாவது ஓர் பிரிவில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற அல்லது படை கலைப்பு காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஜூனியர் இந்தியன் கமிஷன் ஆபீசர்கள் மேற்படி பதவியில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணி புரிந்திருப்பார்களாயின் அவர்களுக்கு மேற்கண்ட வயது உச்சவரம்பு பொருந்தாது. அவர்கள் ஆங்கிலமும் தமிழும் படிக்க எழுதத் தெரிந்தவர்களாகவும் வயது 45-ஐப் பூர்த்தி செய்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

4. ஊதிய விகிதம்: ரூ. 250—10—400.

5. மேற்கண்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்தவர்கள் கீழேகண்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட காவல் துறை, கண்காணிப்பாளர்கள் மதுரை வட பாகம், மதுரை அல்லது இராமநாதபுரம் மாவட்டம், மதுரை அவர்களுக்கு மேலுறையில் எழுதி 20—10—1971-ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவம்

(Application Form)

1. மனுதாரரின் முழுப் பெயர் —
(Full name of the applicant)
2. தகப்பனார் பெயர் —
(Father's name)
3. பிறந்த இடமும், முழு முகவரியும்.
(Place of birth and full address)
4. தற்கால முகவரி —
(Present address)
5. கல்வி .. ..
(Educational qualification)
6. கடைசியாகப் படித்த கல்வி நிலையத்தின் பெயரும், முகவரியும், அதன் தலைவரிடம் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழும்.
(Name of the last High School or institution in which studied. A conduct certificate obtained from the Head of the institution should be furnished)
7. பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தால் பிரிவும் அத்தாட்சியும்.
(If belonging to S.C., S.T. or B.C. name of caste. A certificate in proof of the caste should be furnished from a Revenue authority)
8. உயரம்—
மார்பு (சாதாரணம்) அளவு.
(Chest normal)
மார்பு விரியும்போது அளவு.
(Chest inspriation)
9. மற்ற விசேஷத் தகுதிகள் இருப்பின் உண்மை நகல்களுடன்.
(Additional qualification if any should produce certificate of proof in original)

குறிப்பு.—படிப்பு, ஜாதி இவைகள் அனைத்துக்கும் உண்மை நகல்கள் கெஜட் பதவியிலுள்ள ஒரு அதிகாரி ஒப்பம் செய்திருக்க வேண்டும். விண்ணப்ப படிவத்துடன், படிப்பு, ஜாதி இவைகளுக்குரிய அசல் சான்றிதழ்கள் இணைக்கக் கூடாது. உண்மை நகல்கள் மட்டும்தான் இணைக்க வேண்டும்.

N. B.—The copies and testimonials in proof of educational qualification, caste, etc. should be got attested by a Gazetted Officer, attached copies of certificates only to be attached with the application and original certificates should not be attached with the application form.

மேலே குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

10. தகுதி பெற்ற மனுதாரர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் பொழுது குறிப்பிட்ட இடத்திற்கு மனுதாரர் அவருடைய சொந்தச் செலவில் வந்து போக வேண்டும். நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

11. மனுதாரர் நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மேற்பணி பற்றி அவ்வப்பொழுது செய்யப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

சி. துரைராஜ்,

காவல் துறை கண்காணிப்பாளர், திருநெல்வேலி, சேர்மன், தென் பிராந்தியத் தேர்வுக் குழு.

(த. 36)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

தக்கைகல் திட்டப் பிரிவு

எண்ணூர்—சென்னை-57

குறிப்பு எண் சி. சி. பி. 5/3429/71

கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் (உறையின்மீது வேலையின் பெயரைக் குறித்து) பெருந்திட்ட அதிகாரி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு, எண்ணூர்-57 அவர்களால் மாலை 3-00 மணிக்கு 25—10—71 அன்று வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 25—10—71 அன்று மாலை 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்த நமூனாவின் விலை.
எரித்த சுண்ணாம்பு எண்ணூரில் வழங்குதல் அளவு (முதலில் ஒரு நாளைக்கு 30 டன்கள் வீதம்).	ரூ. 2,430	ரூ. 10-ம் மூன்று சதம் விற்பனை வரியும்.

ஒப்பந்த நமூனாவின் விலை திரும்பப் பெற முடியாதது. ஒப்பந்த நமூனாக்களையும் மற்ற விபரங்களையும் எண்ணூரிலிருக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு அலுவலகத்திலிருந்து 7—10—1971 முதல் 23—10—1971 முடிய எல்லா அலுவலக வேலை நாட்களிலும் காலை 9-45 மணியிலிருந்து மாலை 4-15 மணி வரையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனாக்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, எவ்வித காரணமுமின்றி, மறுப்பதற்குத் திட்ட அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

பூ. தா. ஜெயராமன்,

திட்ட அதிகாரி,

தக்கைக்கல் தொழிற்சாலை.

இடம் : எண்ணூர், சென்னை-57.

தேதி : 30—9—1971.

(த. 35)

விற்பனை

மதுரை வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மதுரை வீட்டு வசதிப் பிரிவு செயல்படுத்தும் மதுரை கிழக்கு புறநகர்ப் பகுதியாகிய தல்லாகுளம், சாத்தமங்கலம் ஆகிய பகுதிகளில் கீழ்த்தர மத்தியதர, வருவாய் உள்ளவர்களுக்கு கட்டியுள்ள இணைந்த வீடுகளும் (Flats) சாத்தமங்கலம் பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டு மனைகளும் ஞான ஒளிவுபுரத்தில் கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்காக கட்டப்பட்டுள்ள இணைந்த வீடுகளும் தவணை, முழுமை விலை விற்பனைக்குத் தயாராக உள்ளன. மனு செய்வோர் 8—11—1971 தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும்படி அதற்குரிய மனு படிவங்களில் வைப்புத் தொகையுடன் அனுப்ப கோரப்படுகின்றன.

மேற்படி இடங்களில் நகர பஸ் வசதி, குடி தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், பாதாள கழிவு நீர் வசதி, உயர் நிலைப் பள்ளி வசதி, கடைகள், தபால் அலுவலகம் ஆகியவை உள்ளன.

வீடுகள் ஒதுக்குவதற்குக் கீழ்க்கண்ட வரிசையில் முதலிடம் கொடுக்கப்படும்

1. முழுத் தொகையும் ஒரே தவணையில் செலுத்துதல்.
2. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை ஒரு வருடத்தில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
3. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை மூன்று வருடத்தில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
4. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியைப் பத்து வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
5. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை 15 வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
6. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை 20 வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.

தயாராக உள்ள இணைந்த வீடுகளின் விபரம்

மத்தியதர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில்

வரைபட எண்.			உத்தேச விலை. ரூ.	விஸ்தீரணம். சதுர அடி.
8எ/66	—	—	25,000	852

கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில்

2எ/68	—	—	19,000	565
1ஜ/69	—	—	12,000	417
1ஜி/68	—	—	10,000	306

கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஞானஒளிவுபுரம் பகுதிகளில்

48/63	—	—	10,000	298
68/63	—	—		

இணைந்த விடுகளுக்கான மனு படிவங்களுக்கு ரூபாய் ஐந்தும், மனைகளுக்கான மனு படிவங்களின் ரூ. 3 கொடுத்து நேரடியாக எல்லா அலுவலக நாட்களிலும் 3 மணிக்குள்ளாக பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் மேலும் ரூபாய் ஒன்று அனுப்ப வேண்டும்.

ஜவகர் தெரு,
காந்தி நகர்,
மதுரை-20.

நிர்வாக அதிகாரியும், நிர்வாகப் பொறியாளரும்,
மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

(த. 41)

ஏல விற்பனை

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

இவ்விவாக்காவின் பயன்படுத்த முடியாத பழுதடைந்த இயந்திர சாமான்கள் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் தேதி மாலை 2—30 மணியளவில் சென்னை-25 நெடுஞ்சாலைப்போக்குவரத்து இயந்திரக் கோட்டத்தில் பொது ஏலத்திற்கு விடப்படும்.

ஏலத்திற்குட்பட்ட பொருள்களின் விவரங்களையும், மற்ற விவரங்களையும் வேலை நேரத்தில் எந்த வேலை நாளிலும் நெடுஞ்சாலைப் போக்குவரத்து இயந்திரக் கோட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கோ. விசுவநாதன்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.பொ.ப.)
போக்குவரத்து
இயந்திரக் கோட்டம்,
சென்னை-2.

(த.32)

திருத்தம்

''சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்'' என்ற தலைப்பில் ''தமிழரசு'' தமிழ் 1-9-1971 & 16-9-1971 இதழ்களில் வெளிவந்தலற்றில் தொடர் எண் 7-ல் கல்வி, உளவியல் என்று வெளியிடப்பட்டுள்ளதை திருத்தி ''கல்வி, உளவியல்'' என்று மாற்றிக் கொள்ளவும்.

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு அரசு

குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண்—13238/71.2.
நாள் 23—9—1971.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், தென் ஆர்க்காடு மாவட்டம் வடக்கூத்துவில் தூய நீருக்கான பம்பு இல்லம் கட்டுவதற்காக பொதுப்பணித் துறையின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் உரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 6,400.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் விலை ரூ. 20.00 ''பி.டப்ளியூ. III ஓ.ஆர்'' என்ற தலைப்பில் அரசு கருவூல சலான் மூலம், நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்டம், வட்டம் வடக்கூத்து, அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனை வரி—அமலில் உள்ள விகிதத்தில் விற்பனை வரி ''XII (b) விற்பனை வரி, பல்வகை'' என்ற கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் கிடைக்கும் காலம்—25-10-1971 முதல் 10-11-1971 வரை.

ஒப்பந்தப் புள்ளி தேதியும் நேரமும்—20-11-1971 மாலை 3-00 வரை.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த.38)

தமிழ்நாடு அரசு

குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண்—13847/71, டி-1.
நாள் 23-9-1971.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், தென் ஆர்க்காடு மாவட்டம் சேத்தியாதோப்பில் கச்சா நீருக்கான பம்பு இல்லம் கட்டுவதற்காக பொதுப்பணித் துறையின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் உரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 6,600.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் விலை ரூ. 20.00—''பி. டப்ளியூ. III ஓ.ஆர்.'' என்ற தலைப்பில் அரசு கருவூல சலான் மூலம், நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்டம், வட்டம் வடக்கூத்து, அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனைவரி—அமலில் உள்ள விகிதத்தில் விற்பனை வரி ''XII (b) விற்பனை வரி, பல்வகை'' என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் கிடைக்கும் காலம்—25-10-1971 முதல் 10-11-1971 வரை.

ஒப்பந்தப் புள்ளி தேதியும் நேரமும்—20-11-1971 மாலை 3.00 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த.37)

விற்பனை

செங்கற்பட்டு மாவட்ட நிலக்கடலை வணிகப் பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள் !

1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்களின் சட்டம் 1962-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருட்களைக் குறித்த விதிகள் அவைகளின் துணைவிதிகள் இம்மாவட்டத்தில் செங்கற்பட்டு விற்பனைக்குழுவின் மூலம் நிலக்கடலைக்கு அமலாக்கத் தமிழக அரசினர் உத்திரவிட்டுள்ளனர். எனவே, செங்கற்பட்டு மாவட்ட நிலக்கடலை வணிகப் பெருமக்கள் அனைவரும் செங்கற்பட்டு விற்பனைக் குழுவினுடன் ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அச்சட்டத்தின்படி நிலக்கடலை வியாபாரிகள் செங்கற்பட்டு விற்பனைக் குழுவினரிடமிருந்து உரிமையாணை பெற்றுத்தான் வாணிகம் செய்ய வேண்டும்.

(அ) பிரிவு உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 25.

(ஆ) பிரிவு உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 15.

(இ) பிரிவு உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 5.

தரகர்கள் உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 10.

உரிமையாணையர்கள் எடையாளர் உரிமையாணையர்களைக் கொண்டுதான் எடை போட வேண்டும்.

(அ) பிரிவு (ஆ) பிரிவு உரிமையாளர்களின் எடையாளர் உரிமையாணை ரூ. 10.

(இ) பிரிவு உரிமையாளர்களின் எடையாளர் உரிமையாணை ரூ. 3.50

விற்பனைக் கட்டணம் ரூ 100 மதிப்புள்ள பொருளுக்கு 25 காசுதான்.

சட்டப்படி இவ் வுரிமையாணைகளை பெறுவிட்டால், நீதிமன்றத்தினரால் ரூ. 500வரை அபராதம் விதிக்க சட்ட சம்மதம் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே செங்கற்பட்டு மாவட்ட விற்பனைக்குழு நிலக்கடலை வியாபாரிகள் அனைவரும் விற்பனைக் குழு அலுவலகத்திலோ அல்லது அதிகாரம்பெற்ற விற்பனைக்குழுவின் மேற்பார்வையாளர்களிடமோ பணம் செலுத்தி பணவரவு சீட்டு பெற்றுக்கொண்டு உரிமையாணை பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

தனிநிலக்கடலை வியாபார பெருமக்களையுமன்றி, நிலக்கடலை வியாபார பெருமக்களின் சங்கங்களையும் இக்குழுவுடன் ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

முழு விபரங்கட்கும் விற்பனைக் குழு செயலாளரையோ அல்லது விற்பனைக் குழுவின் மேற்பார்வையாளர்களையோ அணுகி தெரிந்து கொள்ளலாம்.

சி.வி.எம். அண்ணாமலை,
எம்.எல்.ஏ.,
தலைவர்,
செங்கற்பட்டு விற்பனைக்குழு,
காஞ்சிபுரம்.

(த.31)

ஒப்பந்த புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியம்

எண்ணூர் அனல் மின்திட்டம்—இரண்டாம் கட்ட விரிவுபடுத்தல்— அனல் மின் நிலையம்—ஐந்தாவது அனல் மின் உற்பத்திச் சாதனம் அமைப்பதற்கான தரைமட்டத்தின் கீழே உள்ள கான்க்ரீட் கட்டத்தின் முதற் கட்ட வேலைகள். (Construction of R. C. C. protective raft over piles, Supplying and laying water proofing and first stage concreting of the Power House R. C. C. substructure for the 5th unit.)

1. தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் மேலே குறிப்பிட்டபடி. உறையின் மீது எழுதப்பட்ட முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், மேலே கூறிய வேலைக்காக இரண்டு நகல்களில் 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி (3—11—1971) புதன் கிழமை நண்பகல் 12—00 மணிவரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே தினத்தன்று மாலை 2—30 மணிக்கு கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாக பெறக்கூடிய ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

2. ஒப்பந்தம் தனி குறிப்பு எண் சி. 1104 நகல் ஒன்றின் விலையான ரூபாய் ஐம்பது மட்டும் (ரூ. 50 .00) ரொக்கமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ 157, அண்ணா சாலை, சென்னை—2 என்ற விலாசத்திலுள்ள " அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் " (ஸ்பெசிபிகேஷன்), சென்னை மின்சார திட்டம் (விநியோகம்) அவர்களுக்குச் செலுத்தி, பெறப்பட்ட ரசீதை இணைத்து விண்ணப்பித்துக் கொள்வதின்பேரில் நகல்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அக்கவுண்ட்ஸ் ஆபீஸர், (ஸ்பெசிபிக்கேஷன்) சென்னை மின்சார திட்டம் (விநியோகம்) அவர்களுக்கு மேற்படி பணம் செலுத்தும் போதும் மற்று எல்லாவித மான கடிதப்போக்கு வரத்திலும் தனிக்குறிப்பு எண் சி. 1104 என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திரும்பிப்பெறக்கூடியதல்ல.

3. குறைந்த அல்லது எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் காட்டாமல் எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்கும் முழு உரிமை இவ்வாரியத்திற்குண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்,
தொழில் நுட்பம்(பொதுவியல்).

(த-30)

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பந்தங்கள் (Tenders) அதன் உறையில் "தமிழக மின்சார வாரியம், பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம் இரும்புக் கழிவுத் துண்டுகள், பித்தளைக்கழிவுத் துண்டுகள் பழைய டயர்கள், காலி பீப்பாய்கள் வாங்குவதற்கான விலை ஒப்பந்தங்கள்" விளக்க விவரம் எண் SEG BB. 42 மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டுக் கீழ்க் கையொப்பம் இட்டவரால் 30—10—71 அன்று பிற்பகல் 1-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5 ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளி விளக்க விவரப் பிரதிகள் (Tender specification copies) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் துணைத் தலைமைக் கணக்கர், மின் உற்பத்தி நிலையம், பேசின் பிரிட்ஜ் மின் நிலையம். சென்னை-12 (Deputy Chief Accountant, Generation Basin Bridge Power Station, Madras-12) என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்பட மாட்டாது. இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (Specification Number) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச்சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்துக்கும் ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) கட்டுத் தொகையாக பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் நேரில் செலுத்தி அதற்கான ரசீதை விலை—ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மேற்படி ரசீது—இல்லாத ஒப்பந்தங்களும், உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 30—10—71 அன்று மாலை 4-00 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில் அடியில் கையெப்பமிட்டுள்ளவரால் அவரது அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை மின் பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
பேசின் பிரிட்ஜ் மின் நிலையம்,
சென்னை-12.

(த. 84)

கருங்கல் சல்லி

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் பொருட்டும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வையாளர், அரசினர் சின்கோனாத் தோட்டங்கள், ஆனைமலை—அவர்களுக்கு கருங்கல் சல்லி வழங்குவதற்காக வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் 25-11-71 பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி பற்றிய விவரங்களையும் நிபந்தனைகளையும் பெற விற்பனை வரி உட்பட ரூ. 2.07 (ரூபாய் இரண்டு, காசு ஏழு) செலுத்திக் கீழே கையெழுத்திட்டுள்ளவரிடம் விண்ணப்பிக்கவும்.

இயக்குநர்,
சின்கோனாத் துறை,
அஞ்சல் பெட்டி எண் 6,
உதகமண்டலம்,
நீலகிரி மாவட்டம்.

(த.49)

ஒப்பந்தப்புள்ளி.

காவல் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும், காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளர், இராமநாதபுரம் இருப்பு மதுரை அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள போலீஸ் லாரி ஏலத்திற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—10—71 காலை 11-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. விற்கப்பட்ட தொகையின் பேரில் பதினைந்து சதவிகிதம் விற்பனை வரி வசூலிக்கப்படும். லாரி சம்பந்தப்பட்ட மற்ற விவரங்களை மதுரையிலிருக்கும் இராமநாதபுரம் மாவட்ட ஆயுதப்படை உதவிக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து தெரிந்து கொள்ளவும்.

போலீஸ் லாரி எண்—

எம்.டி.ஆர். 2937—பர்கோ—பெட்ரோல் வண்டி—1956 மாடல்.

ஒப்பந்தப் புள்ளிதாரர் கட்டுத் தொகையாக ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) இராமநாதபுரம் கண்காணிப்பாளர் அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். கட்டுத்தொகை ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். எவ்விதக் காரணமும் கூறுமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

கோ. செல்வராஜ்,
காவல்துறைக் கண்காணிப்பாளர்
இராமநாதபுரம் (இருப்பு)
மதுரை.
2—10—71

(த.82)

5. வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள்.

சென்னை-8,
4—9—1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்.

(தூ-80)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் மக்கள் நல்வாழ்வுப் பொறியாளர் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை, அல்லது அவை போன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளரால் (ம.ந.வா.பொ.) எண் 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் அவரது அலுவலகத்தில் 29-10-1971 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன. அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு அவை அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : திருப்பத்தூர் ஊராட்சி (இராமநாதபுரம் மாவட்டம்) குடிநீர் வழங்கு திட்டம் 1-வது கட்டம் 10·00 லட்சம் லிட்டர் திறன் உள்ள மேல்மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 5,400 (ரூபாய் ஐயாயிரத்து நானூறு மட்டும்).

இந்தத் தொகையில் ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூல செலாணக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கின் பாங்க் காரண்டியாக நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 48, காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் : 12 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை: ரூ. 15.53 (விற்பனை வரி உள்பட)

ஒப்பந்தப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 48, காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற முகவரியில் 25-10-1971 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையிலும் பெறலாம்.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.)
மதுரை-2.

தேதி: 22-9-1971.
(தூ. 63)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர் : சோளிங்கர் குடிநீர் வழங்கும் திட்டம் —முதற் கட்டம்— வழங்கும் முறை—சி.ஐ.ஏ.சி. குழாய்கள், ஸ்பெஷல்கள் அமைத்தல் மற்றும் இணைத்தல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையைச் செய்வதற்காக, இத்துறையில் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களால், 52, செங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை -8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 5—11—1971 அன்று மாலை 3-00 மணி வரை, துறைக்குரிய முறையான வடிவத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிறகு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், பொது நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களால், திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் : கே. 2.

2. கட்டுத் தொகை : ரூபாய் 1,515 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூற்றுப் பதினைந்து மட்டும்).

(கருவூலச் சலான் வடிவிலோ, அல்லது ஒப்பந்தப் புள்ளி அட்டவணையில் குறிப்பிட்டபடி ஏற்கத் தக்க வடிவங்களில் ஏதேனும் ஒன்றாகவோ இருக்க வேண்டும்).

3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை : ரூபாய் 10.35 (ரூபாய் பத்து காசு முப்பத்தி ஐந்து மட்டும்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் செங்கற்பட்டு அவர்கள் கணக்கில் "P.W. III OR" என்ற தலைப்பிலும், விற்பனை வரியை "XII Sales Tax (D) Misc. I. General Sales-Tax" என்ற தலைப்பில் தனிச்சலானிலும் செலுத்த வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம்: நிருவாகப் பொறியாளர், (பொ. ந. பொ), மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 24, பெரிய மணியக்காரர் தெரு, செங்கற்பட்டு அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம்.

(ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணத்தை ரொக்கமாக அல்லது பண அஞ்சல் மூலமாக செலுத்தப்படவேண்டும்).

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநரின் சார்பில் பொதுப் பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர், கடலூர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 10—11—71 மாலை 3 மணிவரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தகுந்த வகுப்பில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில், உறையின் மேல் வேலையின் பெயர் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல்லூரி முதல் மாடி கட்டடங்கள் கட்டுதல்—ஒப்பந்த அறிக்கை சம்பந்தமாக—

(1) ஒப்பந்தவகை—மொத்தத் தொகை ஒப்பந்தம் (L.S)

(2) கட்டுத் தொகை—(E. M. D.)—ரூ. 5,400

(3) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

(4) விற்பனை வரி—0·60· (பைசா அறுபது மட்டும்).

(5) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள்—25—10—1971 முதல் 8—11—1971 வரை. அலுவலக நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்

(6) ஒப்பந்தங்கள் 10—11—1971 அன்று மாலை 4 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 20ஐ (ரூபாய் இருபது PWIII ORஎன்ற கணக்குத் தலைப்பில் '' நிர்வாகப் பொறியாளர், (பொ.ப.து.) கடலூர் கோட்டம், கடலூர் அவர்கள் கணக்கிலும், விற்பனை வரிக்காக 0·60 காசுகளை'' ''XII Sales Tax (d) Miscellaneous-I General Sales Tax'' என்ற கணக்குத் தலைப்பிலும் தமிழ்நாடு அரசினர் கருவூலத்தில், மேற்படி ரூபாய் ரூ. 20·60ஐ ஒரே சலானில் தனித் தனிக் கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பத்திரங்கள் கோரிவரும் மனுக்கள் பணம் கட்டிய தற்கான அசல் சலானுடன் அனுப்பப்படவேண்டும்.

வெ. இராமனுதன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து, தென்னுர்க்காடு மாவட்டம்,
கடலூர்-2.

(தூ. 83)

ஒப்பந்தப் புள்ளி

மணப்பாறை நகராட்சி

மணப்பாறை நகராட்சிக்குச் சுமார் 95,000 ரூபாய் மதிப்பிற் குரிய 39 வேலைகளைச் செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27-ம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணிவரை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலைகளின் பெயர்களையும் மற்றும் விவரங்களையும் அலுவலக நேரத்தில் நகராட்சிப்பொறியாளரிடம் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

எஸ். ஜார்ஜ்,
ஆணையர்.

மணப்பாறை,
8—10—71.
(தூ.85)

ஒப்பந்த நீட்டிப்பு அறிவிப்பு

பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்—
செங்கற்பட்டு மாவட்டம்—பூந்தமல்லியில் அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளியில் பொன்விழாக் கட்டடம் கட்டுதல்.

இவ்வேலைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறக் கடைசித் தேதி 27—10—1971 வரை நீட்டிக்கப் பட்டிருக்கிறது. 27—10—1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 25—10—71 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.ப.து.)
செங்கற்பட்டு வட ஆர்க்காடு வட்டம்.

(தூ.79)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்காக மனுக்கள் 1971 நவம்பர் 11 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பதவியின் பெயர்.	பதவிகள் எண்ணிக்கை.
முழு நேர விரிவுரையாளர், சட்டக் கல்லூரி, சென்னை.	4
பகுதி நேர விரிவுரையாளர், சட்டக் கல்லூரி, சென்னை.	17

தகுதிகள் : கீழ்க்கண்ட அல்லது அதற்குச் சமமான தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

அ. 1. சென்னைப் பல்கலைக்கழகத்தின் எம்.எல் பட்டம் அல்லது

2. சென்னைப்பல்கலைக்கழக முதல் வகுப்பு பி.எல். பட்டம் மற்றும் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. அல்லது பி.காம் பட்டம்

அல்லது

3. (1) சென்னைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வகுப்பு பி.எல். பட்டம்.

மற்றும்

(2) தமிழ் நாட்டில் ஒரு பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வகுப்பு பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. பட்டம் இரண்டு பகுதிகள் ; அல்லது தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றில் இரண்டாம் வகுப்பில் பி. காம். பட்டம் அல்லது தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றில் எம்.ஏ., எம். எஸ்ஸி. அல்லது எம்.காம் பட்டம் ; அல்லது சென்னைப் பல்கலைக் கழகம் பழைய ரெகுலேஷன் பி.எஸ்ஸி. இரண்டாம் வகுப்புப்

மற்றும்

(ஆ) எம்.எல். பட்டம் பெற்றவர்கள் விஷயத்தில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும், பி.எல். பட்டம் பெற்றவர்கள் விஷயத்தில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமலும் வழக்குரைஞராக அனுபவம்.

சம்பள விகிதம் :—

மாதம் ஒன்றுக்கு—

முழுநேர விரிவுரையாளர்கள்—ரூ. 800—40—1,000—50—1,250.

பகுதி நேர விரிவுரையாளர்கள்—ரூ. 525—25—600—30—690—35—900.

வயது—முழு நேர விரிவுரையாளர்களுக்கு :

1—7—1971-ல் 50 ஆண்டு நிறைவு பெறாதவராக இருக்க வேண்டும், சென்னை சட்டக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியிருந்தால் மற்றவர்கள் விஷயத்தில் 40 வயது.

பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு :

58 வயது ஆகியிருக்கக் கூடாது.

முழுநேர விரிவுரையாளர்கள் விஷயத்தில் ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள் திருமணமாகாத பெண்கள் மற்றும் தேசீய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசீய மாணவர் படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா ஆகியவைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் " செயலாளர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 " என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரியிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(ரூ. 48)

ஒப்பந்தப்புள்ளி

குற்றால நகரியம்

கீழ்க்காணும் நகரியப் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் அதற்குரிய செடியூலுடனும், முன்வைப்புத் தொகை கட்டிய ரசீதுடனும் 30-10-1971 ஆம் தேதி மாலை 4-00 மணிவரை நிர்வாக அதிகாரியால் பெற்றுக் கொள்ளப்படும். கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் ஆஜராகியுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் 30-10-1971-ந் தேதி மாலை 4-30 மணிக்கு நிர்வாக அதிகாரியால் திறக்கப்படும். இதற்கான செடியூல் அன்று மாலை 2-00 மணி வரை நகரிய அலுவலகத்தில் ரூ. 5 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இதர விவரங்கள் அலுவலக தினத்தில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரம்.	மதிப்பீடு தொகை. ரூ.	முன்வைப்புத் தொகை. ரூ.
ஐந்தருவி புதிய கார் நிறுத்தும் இடத்தில் ஆற்றோரம் தடுப்புச் சுவர் கட்டும் வேலை.	15,000	345

குற்றால நகரியம்,
5-10-1971.

சா. நா. பழனிச்சாமி,
நிர்வாக அதிகாரி.

(த.86)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர்—நீலகிரி மாவட்டத்தில் உள்ள பந்தலூரில் தேயிலைத் தொழிற்சாலை கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக, தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை, அவர்களால் 26—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூபாய் 3,200 (ரூபாய் மூவாயிரத்து இருநூறு மட்டும்).

3. மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, விற்பனை வரியும் சேர்த்து—ரூபாய் 10·40.

4. வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ' 4, தியாகராஜபுரம், வேலூர் ' என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மேற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 12-10-71 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ " XXIX industries other receipts " என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மேற்குக் கோட்டம், 4, தியாகராஜபுரம், வேலூர், அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, ' கால் டிபாசிட் ' ரசீது வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், வேலூர் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால், ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

ஏ. பி. மேத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

சென்னை-2.
(த. 61)

சிறுதொழில்களுக்குக் கடன்

அரிசன நலத் துறை

1971–72-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச்சேர்ந்த இந்து அரிசன வகுப்பினர் சிறு தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் அளிப்பதற்கான விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தொழில்களுக்கு மீண்டும் வரவேற்கப்படுகின்றன.

குறிப்பாக, கீழ்க்கண்ட தொழில்களுக்காகத் தொழில் கூடங்களில் பயின்று, தொழில் நுட்பத் தகுதியும், முன் அனுபவமும் பெற்றவர்கள், விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட நல அதிகாரிக்கு 31–10–71 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

1. மோட்டார் மெக்கானிக்.
2. டிங்கரிங் மற்றும் ஸ்பிரே பெயிண்டிங்.
3. லேத் மற்றும் டர்னிங் பணி.
4. எலக்டிரிக் மற்றும் காஸ் வெல்டிங், ட்ரில் வேலை.
5. வாடகை சைக்கிள் கடைகள், சைக்கிள் மற்றும், மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் தொழில்.
6. டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்.
7. மெடிகல் ஸ்டோர்ஸ்.
8. தச்சு வேலை.
9. பிரம்பு வேலை.
10. ஸ்லேட் தயாரித்தல்.

விண்ணப்பதாரர்களில், 22 முதல் 40 வயதிற்குள் உள்ள நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள், கடன் வழங்கும் சாதனங்கள், கருவிகள் ஆகியவைகள் உள்படச் சொத்து மதிப்பு, கடன் தொகையைப் போல் ஒன்றரைமடங்கு அதிகமாகயிருந்தால் தான் விண்ணப்பிக்கவேண்டும். தகுந்த ஜாமீனும் கொடுக்கவேண்டும். மற்ற எல்லா விவரங்களுக்கும் மாவட்ட நல அதிகாரியை அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட மாவட்ட நல அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

இயக்குநர்,
அரிசன நலத்துறை.

(த. 68)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிக்காக 11—11—1971 அன்று மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியாளர் தொகுதியில், **உதவிக் கண்காணிப்பாளர்** இயந்திர செங்கல் தொழிற்சாலை, **திருமழிசை.**

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 550—25—600—35—950.

கல்வித் தகுதிகள்:(1)பீங்கான் அல்லது சிலிகேட் தொழில் நுட்பக் கலையில் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட யாதேனும் ஒரு பல்கலைக் கழகத்தின் அல்லது இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது கழகத்தின் பட்டம் அல்லது டிப்ளமா அல்லது விருத்தாச்சலத்தில் உள்ள பீங்கான் தொழில் பயிற்சிப் பள்ளியினால் வழங்கப்பட்ட பீங்கான் தொழில் நற்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அத்துடன்

(2) பீங்கான் தொழிற்சாலை அல்லது சிலிகேட் தொழில் நுட்பக் கலை அல்லது சால்ட் கிளேஸ்டு குழாய் தொழிற்சாலை அல்லது ஆய்வுக்கூடம் அல்லது பரிசோதனை அல்லது ஆராய்ச்சி நிலையம் அல்லது நிறுவனம் அல்லது பீங்கான் தொழில் ஆய்வியலில் பட்டதாரிகள் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும் டிப்ளமா பெற்றவர்கள் 5 ஆண்டுகளுக்குக் குறையாமலும் செய்முறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

வயது: 1—7—1971-ல் 40 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

குறைந்தபட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேம்பட்ட பொதுக் கல்வித் தகுதி பெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைசாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. இதர தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைசாதி வகுப்பினர், ஆகியோருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்களுடைய புதல்வர்கள், அவர்களுடைய திருமணமாகாத புதல்விகள், மற்றும் தேசிய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்கு பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்டரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றிலிருந்து விடை கலைக்கப்பட்டதால் திரும்பியவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானால் கல்வித் தகுதிகள் தளர்த்தப்படும். கிழக்குபாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லதுஅதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்களாகஇருப்பினும்,இலங்கை,பர்மா ஆகியவற்றிலிருந்து வந்துள்ள அகதிகளாக இருப்பினும் வயது வரம்பு உட்பட கல்வித் தகுதிகள் தளர்த்தப்படும். மனுவடிவங்களையும் இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம் சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு கடிதம் எழுதி 23 சென்டி மீட்டர் நீளமுள்ள, சுய விலாசமிட்ட, 35 காசு அஞ்சல் தலை ஒட்டிய " நூல் அஞ்சல் " என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த-46)

ஒப்பந்தப் புள்ளி

சங்கரன்கோவில் நகராட்சி

அடியிற்கண்ட தண்ணீர்க் குழாய்களுக்கான நல்லிகள் சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சங்கரன் கோவில் நகராட்சி ஆணையர் அவர்களால் 21—10—1971—ஆம் தேதி வியாழக் கிழமை மாலை 4-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு, 4-30 மணிக்குத் திறக்கப்படும். நகராட்சியில் ரூ.1 செலுத்தி குறிப்பிட்ட நமூனாவில் ஒப்பந்தப்புள்ளி அனுப்புவதுடன் ரூ. 50 வைப்புத் தொகையும் அனுப்பப்படவேண்டும். மற்ற விவரங்கள் அலுவலகம் நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

		உத்தேச தேவையான எண்ணங்கள்.
1.	அரை அங்குல தெருக்குழாய்களுக்கான வில்டைப் நல்லிகள். முக்கால் அங்குலம் ஷை	80
2.	அரை அங்குல தெருக்குழாய்களுக்கான புஸ் பட்டன் டைப் நல்லிகள். முக்கால் அங்குலம் ஷை	60

வி. ஞானகிராமன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
சங்கரன்கோவில்,
தேதி : 1—10—1971.
(த.77)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாகவும் அதன் பொருட்டும், உரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுத் துறை, 17, சர்பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 அவர்களால் 3-11-1971 புதன் கிழமை மாலை 3 மணி வரையிலும் பொதுப்பணித் துறையில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் மாலை 3-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில்திறக்கப்படும்.

வேலையின் பெயர்: சிவகங்கை குடிநீர் வழங்கு மேம்பாடுத் திட்டம்—II-ம் நிலை—விநியோக முறை சி-1 & எ.சி.குழாய்களும் ஸ்பெஷல்களும் அமைத்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வடிவம் : கே. 2.
கட்டுத் தொகை : ரூ. 1,550 (ஓராயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்.)

இத் தொகை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துடன் தேசிய உடமையாக்கப்பட்ட பாங்குகளின் டிமாண்ட் டிராப்ட் மூலமோ அல்லது கருவூலங்களின் சலான் மூலமோ நிருவாகப் பொறியாளர், மக்கள்நல்வாழ்வுப் பொறியியல் பணிவட்டம், காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற கணக்கில் கட்ட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலை : ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், மக்கள்நல்வாழ்வுப் பொறியியல் பணி வட்டம், 48, காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற விலாசத்தில் 30-10-1971 சனிக் கிழமை மாலை 5 மணி வரையிலும் பெறலாம்.

ஆர். கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பணி வட்டம், மதுரை-2.

தேதி : 27-9-1971.
(த.66)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டுவசதி வாரியம், சென்னை கிழக்குக் கோட்டம்

எண்: எம். இ. 4/674/71, நாள் 5-10-1971.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரையும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரையும் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 28-10-1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05-மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்: வியாசர்பாடியில் கிரயத்துக்கு வாங்கும் திட்டத்தில் குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீடுகள் 10 கட்டுதல்.

வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 1,40,000.
கட்டுத் தொகை: ரூ. 2,100.
ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை: ரூ. 10.00 விற்பனைவரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் முதலியவைகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிழக்குக் கோட்ட நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் 20-10-1971 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11-00 முதல் மாலை 3-00 வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜெகதீசன்,
(த. 70) நிர்வாகப் பொறியாளர், கிழக்கு

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்.

எண் : எம். இ. 4/466/71 நாள் : 5—10—1971.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரையும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரையும் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 28—10—1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : வட சென்னை புறநகர்த் திட்டத்துக்கு நீர் வழங்குமுறை—பகுதி 1-க்கு பைப் லைன்கள் அமைத்தல்.
வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 99,500.
கட்டுத் தொகை : ரூ. 1,500.
ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 10.00 + விற்பனைவரி.

ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் முதலியவைகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிழக்கு டிவிஷன் நிர்வாகம் பொறியாளர் அலுவலகத்தில் 20—10—1971-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11-00 முதல் மாலை 3-00 மணி வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜகதீசன்,
(த-65) நிர்வாகப் பொறியாளர், கிழக்கு.

அரசாங்கத் தொழில் நுட்ப (டெக்னிகல்) தேர்வுகள், அக்டோபர் 1971

[அக்கவுண்ட்டன்சி, சுருக்கெழுத்து (ஆங்கிலம், தமிழ்), தட்டச்சு (ஆங்கிலம், தமிழ்).]

அக்கவுண்ட்டன்சி, சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவைகளில், லோயர், ஹையர் கிரேடு களுக்கு அரசாங்கத் தொழில் நுட்பத் தேர்வுகள் சம்பந்தமாக எழுதத் தேர்வுகள், கீழே தரப்பட்டுள்ள கால அட்டவணையின்படி நடத்தப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. தட்டச்சில் வாய்மொழி, செயல் முறைத் தேர்வு, இத்தேதிக்குப் பின்னர், காலக் கிரமத்தில் தமிழ்நாடு அரசு, அரசிதழில் பாகம் 2, பிரிவு 3-ல் அறிவிக்கப்படுகிறபடி நடத்தப்படும்.

குறிப்பு.—(1) தட்டச்சில் வாய்மொழி : செயல்முறை தேர்வுகளில் ஏமாற்றம் நேராமல் காத்துக்கொள்வதற்காகத் தமிழ்நாடு அரசினர் அரசிதழ், பாகம் 2, பிரிவு 3-ஐ அவ்வப்போது பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளலாகிறது. தனித்தனியாகத் தகவல் ஏதும் தரப்படமாட்டாது.

2. ஏற்கெனவே ஆங்கிலம் தட்டச்சில் ஹையர் கிரேடு தேறியவர்கள், தமிழ்த் தட்டச்சில் ஹையர் கிரேடு தேர்வுக்குச் செல்லும்போது செயல்முறைத் தேர்விலிருந்து விலக் களிக்கப்பட்டு, சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளார்கள். இதேபோல ஆங்கிலத் தட்டச்சு ஹையர் கிரேடு அல்லது லோயர் கிரேடில் தேறியவர்கள், தமிழ்த் தட்டச்சு லோயர் கிரேடுக்குச் செல்லும் போது செயல்முறைத் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டு, ஏற்ப சான்றிதழ் வழங்கப் பெறுவார் கள். தமிழ்த் தட்டச்சு லோயர் அல்லது ஹையர் தேர்வு பெற்றவர்கள், ஆங்கிலத் தட்டச்சு லோயர் அல்லது ஹையர் செல்லும்போது செயல் முறைத் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டு, ஏற்ப சான்றிதழ் வழங்கப் பெறுவார்கள்.

2. எழுத்துத் தேர்வு நடத்தப்படுகின்ற, நாள், நேரம், பாடம் ஆகியவை பற்றிய ஆணையைக் காட்டும் அட்டவணை

குறிப்பு.—(1) இந்தக் கால அட்டவணை வெளியிடப்பட்ட பின்பு, தேர்வு நடைபெறுகின்ற நாட்களில் ஏதாவது ஒருநாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டாலும், இந்தக்கால அட்டவணை, உள்ளபடி கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படும். இந்த அலுவலகத்தின் எழுத்து மூலமான ஆணைப்படி அல்லது, எக்காரணம் முன்னிட்டும், தேர்வு நிறுத்தப்படாது.

(2) ஒருவர் ஒரே பாடத்தில் ஒரு கிரேடுக்கு மேல் தேர்வுக்கு வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். தட்டச்சில் (ஆங்கிலம்) லோயர், ஹையர் ஆகியவைகளுக்கு ஒரு தேர்வுத் தொடரில், ஒரு தொகுதிக்கு மேல் வர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கால அட்டவணை

நாளும் தேதியும்.	தேர்வு நேரம்.	தேர்வுப் பாடம்.	கிரேடு.	எந்தப் பிரிவு என்னும் விவரம்.
1971 அக்டோபர் 29 வெள்ளிக்கிழமை.	காலை 10-00 முதல் பிற்பகல் 1-00வரை.	அக்கவுண்ட்டன்சி	லோயர்	முதல் தாள்.
		அக்கவுண்ட்டன்சி	ஹையர்	முதல் தாள்.
	பிற்பகல் 2-00 முதல் மாலை 5-00 வரை.	அக்கவுண்ட்டன்சி	லோயர்	இரண்டாவது தாள்.
		அக்கவுண்ட்டன்சி	ஹையர்	இரண்டாவது தாள்.
அக்டோபர் 30 சனிக்கிழமை.	காலை 11-00 முதல் 11-10 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்)	லோயர்	முதல் தாள் டிக்டேஷன்.
	11-15 முதல் 12-45 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்)	லோயர்	மேற்சொன்ன தன் டிரான்ஸ் கிருப்ஷன்.
	பிற்பகல் 2-00 முதல் மாலை 4-30 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்)	லோயர்	இரண்டாவது தாள் பிரின் சிபில் முதலி யன குறித்து.
	பிற்பகல் 2-15 முதல் 2-25 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்)	ஹையர்	முதல் தாள் டிக்டேஷன்.
	பிற்பகல் 2-30 முதல் மாலை 4-30 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்)	ஹையர்	முதல் தாள் டிரான்ஸ் கிருப்ஷன்.

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

தமிழ்நாடு பணியாளர் கீழ்நிலைத் தொகுதியில் கல்வி சென்னை திரைப்பட தொழில் நுட்பக் கலை நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட பதவிகள் ஒவ்வொன்றிலும் ஒருவரை நியமனம் செய்வதற்காக 16-11-1971 அன்று மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) ஆராய்ச்சி உதவியாளர்:

சம்பளம்: ரூபாய் 450—25—750.

கல்வித் தகுதி: (அ) (1) பல்கலைக் கழக மானியக் குழுவினால், மானியம் கொடுக்கும் காரணத்திற்காக அங்கீகரிக்கப் பட்ட யாதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறு வனத்தின் கலையியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(2) இந்திய வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றில் அறிவுபெற்றிருக்க வேண்டும்.

(3) பிரெஞ்சு மொழியறிவு பெற்றிருக்க வேண்டும்; அத் துடன்

(4) இலக்கியப் பணியில், வெளியிடப்பட்ட எழுத்தோவி யங்களுடன் கூடிய மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) திரைப்படக் கதை எழுதுதல், இயக்குதல் ஆகியவற்றில் இந்திய திரைப்பட நிறுவனம், பூனா அளித்துள்ள டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

(2) பராமரிப்புப் பொறியாளர்:

சம்பளம் :ரூபாய் 400—15—475—20—575—25—650

கல்வித் தகுதி : (அ) (1) சென்னையிலுள்ள மாநில தொழில் நுட்பக் கல்விப் பயிற்சிக் கழகம் அளித்துள்ள மின்சார இயல் அல்லது ஒலி பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். மற்றும்

(2) திரைப்படமெடுக்கும் நிறுவனம் ஒன்றின் ஸ்டுடியோ கருவிகளைப் பராமரிப்பதில் 3 ஆண்டுகளுக்குக் குறையா மல் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) (1) ஆங்கிலம் படிக்கவும், எழுதவும் திறமை உடைய வராக இருக்க வேண்டும்; மற்றும்

(2) திரைப்படமெடுக்கும் நிறுவனம் ஒன்றின் ஸ்டுடியோ கருவிகளைப் பராமரிப்பதில் 7 ஆண்டுகளுக்குக் குறை யாத செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(3) தயாரிப்பு மேலாளர்:

சம்பளம்: ரூபாய் 400—15—475—20—575—25—650.

கல்வித் தகுதி: (அ) இயக்குதல் அல்லது உற்பத்தித் தொழில் நுட்பக் கலையில் பூனா நகரில் உள்ள இந்திய திரைப்பட நிறுவனம் அளித்துள்ள டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) (1) பல்கலைக் கழக மானியக் குழுவினால், மானியம் கொடுக்கும் காரணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதே னும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தின் கலை அல்லது விஞ்ஞான பட்டம் பெற்றிருக்க வேண்டும்; மற்றும்,

(2) திரைப்பட மெடுக்கும் நிறுவனம் ஒன்றின் உற்பத்தி நிர்வாகத்தில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(4) திரையிடுதல் பற்றிய விரிவுரையாளர்

சம்பளம்: ரூபாய் 475—25—650—30—800:

கல்வித் தகுதி: (அ) எலக்ட்ரானிக்ஸ் மற்றும் செய்தி பரப்புப் பொறியியல் பட்டம் அல்லது பௌதிகத்தை முக்கிய பாட மாகக் கொண்ட பட்டம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

(ஆ) (1) இந்திய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசு அங்கீகரித்துள்ள நிறுவனம் அல்லது கழகம் வழங்கி யுள்ள சினிமாடோகிராபி மற்றும் ஒலி பொறியியல் அல்லது ஒலி பொறியியலில் மட்டும் டிப்ளமா பெற்றி ருக்க வேண்டும். மற்றும்

(2) ஒலிப் பதிவு செய்வதிலும், மறு உற்பத்தி செய்வதி லும் தனித்து நின்று பதிவு செய்பவராக 3 ஆண்டுக ளுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது: எல்லாப் பதவிகளுக்கும் 1-7-1971-ல் 40 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(த.53)

ஒப்பந்த ஒத்திவைப்பு அறிவிப்பு.

எண்: டி-3 20280 71-7, நாள் 27-9-1971.

வேலையின் பெயர் : தாம்பரம் காச நோய் சானடோரியத் தில் 40 நர்சுகளுக்கும் 5 ஸ்டாப் நர்சுகளுக்கும், சமையல் லறை, உணவுக்கூடம் ஆகியவைகளுடன் குடியிருப்புகள்.

பார்வை : இந்த அலுவலகத்தில் எண். டி. 3/20280/71-1, நாள் 7-8-1971.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறக் கடை சித் தேதி 27-9-1971 லிருந்து 25-10-1971 மாலை 3-00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் பத்திரங் கள் இந்த அலுவலகத்தில் 19-10-1971லிருந்து 23-10-1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாறுதல் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சென்னை, செங்கல்பட்டு வட்டம்.

(த.69)

நவம்பர் 1 திங்கட் கிழமை.	காலை 11-00 முதல் 11-05 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்).	ஹையர்	இரண்டாவது தாள் டிக்டேஷன்.
	காலை 11-15 முதல் பிற்பகல் 1-15 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்).	ஹையர்	இரண்டாவது தாள் குறிப்பினை விளக்கி வரைதல்.
	பிற்பகல் 2-15 முதல் 2-25 வரை.	சுருக்கெழுத்து (ஆங்கிலம்).	ஷை	மூன்றும் தாள் பிரிவு 1 டிக்டேஷன்.
	பிற்பகல் 2-30 முதல் மாலை 5-30 வரை.	ஷை	ஷை	மூன்றும் தாள் மேற் சொன்னதைச்சுருக்கி எழுதுதல், பிரிவு 2, டிரான்ஸ்கிருப்ஷன் பிரின்சிபில்ஸ் முதலியன பற்றிய தாள்
நவம்பர் 2. செவ்வாய்க்கிழமை.	காலை 10-00 முதல் 10-10 வரை.	சுருக்கெழுத்து (தமிழ்).	ஷை	முதல் தாள் டிக்டேஷன்.
	10-15 முதல் 12-15 வரை.	ஷை	ஷை	முதல் தாள் டிரான்ஸ்கிருப்ஷன்.
	11-00 முதல் 11-10 வரை.	ஷை	லோயர்.	முதல் தாள் டிக்டேஷன்.
	11-15 முதல் 12-45 வரை.	ஷை	ஷை	முதல் தாள் டிரான்ஸ்கிருப்ஷன்.
	பிற்பகல் 12-50 முதல் 1-50 வரை.		ஷை	இரண்டாவது தாள் பிரின்சிபில்ஸ்.
	பிற்பகல் 1-00 முதல் 3-00 வரை.	ஷை	ஹையர்.	இரண்டாவது தாள் டிக்டேஷன் குறிப்புகளை விளக்கி வரைதல்.
	பிற்பகல் 3-30 முதல் மாலை 5-00 வரை.	ஷை	ஷை	மூன்றும் தாள் பிரின்சிபில்ஸ் முதலியன.
நவம்பர் 3, புதன் கிழமை.	பிற்பகல் 1-00 (எ)	தட்டெழுத்து (ஆங்கிலம்).	லோயர்.	முதல் இரண்டாவது தாள்.
நவம்பர் 4, வியாழக் கிழமை.	12-35 பிற்பகல் (எ)	ஷை	ஹையர்.	முதல் & இரண்டாவது தாள்.
நவம்பர் 5, வெள்ளிக்கிழமை.	பிற்பகல் 1-00 (எ)	தட்டெழுத்து (தமிழ்).	லோயர்.	முதல் & இரண்டாவது தாள்.
நவம்பர் 6 சனிக் கிழமை.	பிற்பகல் 12-35 (எ)	ஷை	ஹையர்.	முதல் & இரண்டாவது தாள்.

லோ : லோயர் கிரேடு. ஹை : ஹையர் கிரேடு.

* வினாத்தாளில் குறிப்பிடப்பட்ட நேர அளவு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(அ) தேர்வு எழுத வருவோர் தொகுதி தொகுதியாகத் தேர்வுக்கு வர நேருமானால் தட்டச்சில் தேர்வுகள் (ஆங்கிலம் அல்லது தமிழ்) கீழே குறிப்பிட்டபடி நடைபெறும்.

லோயர் கிரேடு

	முதல் தாள்.	இரண்டாவது தாள்.
முதல் தொகுதி ...	காலை 8-30 முதல் 8-45 வரை.	8-55 முதல் 10-25 வரை.
இரண்டாம் தொகுதி	காலை 10-45 முதல் 11-00 வரை.	காலை 11-10 முதல் பிற்பகல் 12-40 வரை.
மூன்றுவது தொகுதி ...	பிற்பகல் 1-00 முதல் 1-15 வரை.	பிற்பகல் 1-25 முதல் 2-55 வரை.
நான்காவது தொகுதி ..	பிற்பகல் 3-15 முதல் 3-30 வரை.	பிற்பகல் 3-40 முதல் மாலை 5-10 வரை.

ஹையர் கிரேடு

	முதல் தாள்.	இரண்டாவது தாள்.
முதல் தொகுதி ...	காலை 7-15 முதல் 7-30 வரை.	காலை 7-40 முதல் 9-40 வரை.
இரண்டாவது தொகுதி	காலை 9-55 முதல் 10-10 வரை.	காலை 10-20 முதல் பிற்பகல் 12-20 வரை.
மூன்றுவது தொகுதி ..	பிற்பகல் 12-35 முதல் 12-50 வரை.	பிற்பகல் 1-00 முதல் 3-00 வரை.
நான்காவது தொகுதி ...	பிற்பகல் 3-15 முதல் 3-30 வரை.	பிற்பகல் 3-40 முதல் மாலை 5-40 வரை.

குறிப்பு.—(1) தட்டச்சு (ஆங்கிலம்)—தட்டச்சு (ஆங்கிலம்) லோயர் அல்லது ஹையர் கிரேடு ...தேர்வுக்கு வருவோர், ஒவ்வொரு தொகுதிக்கும், தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு தேர்வு மண்டபத்துக்கு வந்துவிட வேண்டும். பாரா 10 (ஆ)-வில் உள்ள குறிப்புகளையும் கவனிக்க; தட்டச்சு ஆங்கிலத் தேர்வுக்கு வரும் யாரும், முதல் தாளுக்கும், இரண்டாவது தாளுக்கும் இடையே இடைவெளி நேரத்தில் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(2) தமிழ்த் தட்டச்சு—தமிழ்த் தட்டச்சு லோயர் அல்லது ஹையர் வருவோர் முறையே 12-40-க்குப் பின்பும் 12-20-க்கு முன்பும் வருவார்களேயானால், தேர்வு மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வு முறையே 20 நிமிடங்களுக்கும் 15 நிமிடங்களுக்கும் அப்புறம் நடப்பதானாலும் இது கடைப்பிடிக்கப்படும். முதல் தாளுக்கும் இரண்டாவது தாளுக்கும் இடையே இடைவெளி நேரத்தில் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள். (தமிழ்த் தட்டச்சு) லோயர் அல்லது ஹையருக்கு முதலாவது இரண்டாவது தொகுதிகளைச் சேர்ந்தவர்களில் தேர்வுக்கு வருபவர்கள், மூன்றுவது, நான்காவது தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் (லோயர் அல்லது ஹையர்) தேர்வு மண்டபத்திற்கு வந்த பின்னர் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

(3) சுருக்கெழுத்துத் தேர்வுக்கு வருபவர்கள் டிக்டேஷனுக்கும், தொடர்பான டிரான்ஸ்கிருப்ஷன் அல்லது விளக்கி எழுதுதல் அல்லது சுருக்கி எழுதல் ஆகியவைகளுக்கும் இடைப்பட்ட இடைவேளைக் காலத்தில் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள். முதலாவது, இரண்டாவது, மூன்றுவது தாள்களுக்கிடையே அனுமதிக்கப்பட்டுள்ள இடைவேளையைப் பயன்படுத்திக்கொள்வதை இவ் விதி தடை செய்யாது.

தேர்வு நடைபெறும் ஊர்கள், இடங்கள், விவரம்

முக்கியக் குறிப்பு.—1971 அக்டோபர் தேர்வுக்கு வருவோர், தேர்வு எழுத எந்த இடத்திற்கு வர வேண்டும், பாடம், அனுமதிக்கப்பட்ட கிரேடு முதலிய விவரங்கள், ஹால் டிக்கட்டிலேயே பதிவு எண்ணுடன் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

எழுத்து மூலமான தேர்வு நடத்தப்படும் ஊர்கள் (சென்டர்கள்) பின் வருமாறு :

தேர்வுகள் குறித்து மேற்கொண்டு தகவல்கள் வேண்டுமானால், எழுத்து மூலமான தேர்வு சென்டர்களின் தலைமைக் கண்காணிப்பாளருக்கு எழுத வேண்டும். பல்வேறு ஊர்களிலும் உள்ள தலைமைக் கண்காணிப்பாளர் முகவரி பின்வருமாறு

ராணிப்பேட்டை	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஆர்க்காடு (பேசிக்) ரேஞ்சு ஆர்க்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளி (சிறுவர்), ராணிப் பேட்டை.
ஆரணி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஆரணி ரேஞ்சு, ஆரணி அரசினர் (கழக) ஆண்கள் உயர்நிலைப் பள்ளி.
திருவண்ணுமலை	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருவண்ணுமலை ; டேனிஷ் மிஷன் உயர்நிலைப் பள்ளி, திருவண்ணுமலை.
செங்கற்பட்டு	தலைமை ஆசிரியர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, செங்கற் பட்டு.
காஞ்சிபுரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.
தாம்பரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், சைதாப்பேட்டை ரேஞ்சு, பரங்கிமலை, சென்னை-16. சென்னை சேவாசதன் உயர்நிலைப் பள்ளி, தாம்பரம், சென்னை-45.
கடலூர்	மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், கடலூர்-1; நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கடலூர்-1.
சிதம்பரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கீழமூங்கிலடி, ஆதார ரேஞ்சு, சிதம்பரம் ஆர்.சி.டி. உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம்.
விழுப்புரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், விழுப்புரம் ; நவாப் தோப் நகராட்சி உயர்நிலைப் பள்ளி, விழுப்புரம்.
திண்டிவனம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திண்டிவனம் ; செயின்ட் வால்டர் ஸ்கடர் உயர்நிலைப் பள்ளி, திண்டிவனம்.
நாகப்பட்டினம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், நாகப்பட்டினம் ; தேசிய உயர்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம்.
மன்னார்குடி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மன்னார்குடி ரேஞ்சு ; மன்னார்குடி தேசிய உயர்நிலைப் பள்ளி, மன்னார்குடி.
மாயூரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மாயூரம் ; நகராட்சி உயர் நிலைப் பள்ளி, மாயூரம்.
திருவாரூர்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருவாரூர்; வி.எஸ். ஆண் கள் உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.
சீர்காழி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், சீர்காழி ; எஸ். எம் இந்து உயர்நிலைப் பள்ளி, சீர்காழி.
கும்பகோணம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கும்பகோணம்; நேடிவ் உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம்.
தஞ்சாவூர்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர் தஞ்சாவூர்; அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி (ஆண்கள்), தஞ்சாவூர்-1.
திருச்சிராப்பள்ளி	தலைமை ஆசிரியர், அரசினர் பயிற்சிப் பள்ளி, திருச்சிராப்பள்ளி-2.
திருச்சிராப்பள்ளி	மேல் நிலை உதவியாளர், அரசினர் பயிற்சிப் பள்ளி, திருச்சிராப் பள்ளி, அரசினர் சையத் முர்த்துஸா உயர்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி-8.
புதுக்கோட்டை	தலைமை ஆசிரியர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, புதுக் கோட்டை,
கரூர்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கரூர் ரேஞ்சு, கரூர்; நக ராட்சி உயர்நிலைப் பள்ளி, கரூர்.
மதுரை	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருப்பரங்குன்றம் ரேஞ்சு, திருநகர், மதுரை-6 ; எம்.ஸி. உயர்நிலைப் பள்ளி, மதுரை-1.
மதுரை	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மதுரை தெற்கு ரேஞ்சு, மதுரை-1; சேதுபதி உயர்நிலைப் பள்ளி, மதுரை-1.
பெரியகுளம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், பெரியகுளம் ; வி.எம். அரசினர் உயர்நிலைப் பள்ளி, பெரியகுளம்.
திண்டுக்கல்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திண்டுக்கல் பிளாக் ரேஞ்சு, திண்டுக்கல் ; டட்லி உயர்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.
காரைக்குடி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், காரைக்குடி, எஸ்.எம்.எஸ். வித்தியாசாலா உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி-1.
இராமநாதபுரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், இராமநாதபுரம் ; ஸ்வராஜ் உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.
விருதுநகர்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், விருதுநகர் ரேஞ்சு, விருது நகர் ; கே. வி. உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்.
ஸ்ரீவில்லிபுத்தூர்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஸ்ரீவில்லிப்புத்தூர், ரேஞ்சு ஸ்ரீவில்லிபுத்தூர்; சி.எம்.எஸ். உயர்நிலைப் பள்ளி, ஸ்ரீவில்லி புத்தூர்.
சிவகங்கை	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், சிவகங்கை ; இராஜா உயர் நிலைப்பள்ளி, சிவகங்கை.
திருநெல்வேலி	திரு எஸ். வெங்கடாசலம் பிள்ளை, பள்ளி உதவியாளர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, திருநெல்வேலி.
தென்காசி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தென்காசி, மேற்கு ரேஞ்சு, தென்காசி ; அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளி, தென்காசி.
தூத்துக்குடி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தூத்துக்குடி ரேஞ்சு, தூத்துக்குடி-1; எஸ். ஏ. வி. உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி-2.
சேலம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், வலப்பாடி (அஞ்சல்), சேலம், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சேலம்-1.
நாமக்கல்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், நாமக்கல் பிளாக் ரேஞ்சு, நாமக்கல் ; அரசினர் உயர்நிலைப்பள்ளி, நாமக்கல் தெற்கு, நாமக்கல்.
தர்மபுரி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தர்மபுரி பிளாக் ரேஞ்சு, தர்மபுரி-3, அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, தர்மபுரி-2.
கிருஷ்ணகிரி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கிருஷ்ணகிரி பிளாக் ரேஞ்சு, கிருஷ்ணகிரி; அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணகிரி.
கோயம்புத்தூர்	பள்ளிகளின் இன்ஸ்பெக்டர், கிழக்கு ரேஞ்சு, ராஜ வீதி, கோயம் புத்தூர்-1; செயின்ட் மைக்கேல் உயர்நிலைப்பள்ளி, பெரிய கடை வீதி, கோயம்புத்தூர்-1.
கோயம்புத்தூர்	பள்ளிகளின் இன்ஸ்பெக்டர், கிழக்கு ரேஞ்சு, ராஜ வீதி, கோயம் புத்தூர்-1; யூனியன் உயர்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர்.
பொள்ளாச்சி	பள்ளிகளின், டெபுடி இன்ஸ்பெக்டர், பொள்ளாச்சி புது ரேஞ்சு, பொள்ளாச்சி ; நகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பாலக்காடு சாலை, பொள்ளாச்சி.
ஈரோடு	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஈரோடு, செங்குந்தர் உயர் நிலைப்பள்ளி, ஈரோடு-1.
உதகமண்டலம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், உதகமண்டலம்; நகராட்சி உயர்நிலைப்பள்ளி, உதகமண்டலம்.
நாகர்கோயில்	தலைமை ஆசிரியர், அரசினர் எஸ்.எல்.பி. உயர்நிலைப்பள்ளி, நாகர்கோயில்.
தக்கலை	தலைமை ஆசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, தக்கலை.
மார்த்தாண்டம்	தலைமை ஆசிரியர், அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, மார்த் தாண்டம்.
புதுச்சேரி	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், பிராந்தியம்-1, நூறு நடராஜ அய்யர் தெரு, புதுச்சேரி ; அரசினர் சிறுவர் ஆரம்பப்பள்ளி, வைசியாள் தெரு, புதுச்சேரி.
அம்பாசமுத்திரம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், அம்பாசமுத்திரம்; திருத்த பதி உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம்.
கோபிசெட்டிபாளையம்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கோபிசெட்டிபாளையம்; வைரவிழா உயர்நிலைப்பள்ளி, கோபிசெட்டிபாளையம்.
குன்னூர்	பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், அறிஞர் அண்ணு நகராட்சி உயர்நிலைப்பள்ளி, குன்னூர்.

சென்னை நகரில் தேர்வு எழுதுவோருக்கு

5. சென்னையில் தேர்வு எழுதுவதற்கு மனுச் செய்து கொண்டு இருப்பவர்கள் கீழே குறிப் பிடப்பட்டுள்ள இடங்களில் எழுதவேண்டும்.

	தேர்வு நடைபெறும் இடம்.	தலைமைக் கண்காணிப்பாளர்.
(1) சென்னை	முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளி, 258, தம்பு செட்டி தெரு, சென்னை-1.	திரு ஜி. பெருமாள், பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ராய புரம் ரேஞ்சு; 5, டேவிட்சன் தெரு, சென்னை-1.
(2) சென்னை	டாக்டர் குருசாமி முதலியார், டி.டி.வி. உயர்நிலைப்பள்ளி, 98, அம்மன் கோயில் தெரு, சென்னை-1.	திருமதி மீனுட்சி நடராஜன், பள்ளி களின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஜார்ஜ்டவுன் ரேஞ்சு; 5, டேவிட் சன் தெரு, சென்னை-1.
(3) சென்னை	சர். எம். சி. டி. முத்தையா செட்டி யார் உயர்நிலைப்பள்ளி, புரசை வாக்கம், சென்னை-7.	திருமதி ருக்மணிகாதர், பள்ளி களின் டெபுடி இன்ஸ்பெக்டர், புரசைவாக்கம் ரேஞ்சு; 18, ஜெர்மையா சாலை, வேப்பேரி, சென்னை-7.

(4) சென்னை	...	தர்மமூர்த்தி, ஆர். பி. சி. சி. சி. உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர், சென்னை-11.	திரு எம். எஸ். சம்சுதீன், பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், பெரம்பூர்ரேஞ்சு; 18, ஜெர்மையா சாலை, சென்னை-7.
(5) சென்னை	...	சிந்தாதிரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.	திருமதி அலைஸ் சுந்தரேசன், பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், எழும்பூர், சென்னை-8.
(6) சென்னை	...	முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை-5.	திரு எஸ். எம். பார்த்தசாரதி, பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருவல்லிக்கேணி ரேஞ்சு; டேவிட்சன் தெரு, சென்னை-5.
(7) சென்னை	...	அரசினர் உயர்நிலைப்பள்ளி, கோடம்பாக்கம், சென்னை-24.	திரு என். கிருஷ்ணவேணு, பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மயிலாப்பூர் ரேஞ்சு; சென்னை-6.
(8) சென்னை	...	ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, (மெயின்) தியாகராயநகர், சென்னை-17.	திருமதி ஏ. டி. புஷ்பவல்லி, பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தியாகராயநகர் ரேன்சு; சென்னை-6
(9) சென்னை	...	அரசினர் மதரஸா-இ-ஆஸாம், அண்ணா சாலை, சென்னை-2.	திரு பத்துருவ் ஹுஸேன், பள்ளி உதவியாளர், அரசினர் மதரஸா-இ-ஆஸம், சென்னை-2.

தேர்வுகள் சம்பந்தமாக ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய முறை விவரங்கள் ஹால் டிக்கட்டுடன் அனுப்பிவைக்கப்படும்.

(த.67.)

தலைவர்,
தேர்வுகள் வாரியம்.

ஒப்பந்தப் புள்ளி

சென்னையில் சுகாதாரப் பார்வையாளர் அரசினர் பயிற்சிப் பள்ளியோடு இணைக்கப்பட்டுள்ள விடுதியில் குறைந்தது 150 பெண்களுக்கு, சைவ, அசைவ உணவு வழங்கற்குரிய உணவகம் நடத்துவதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் இணை இயக்குநர் சுகாதாரப் பணி, குடும்ப நலத்திட்டம் சென்னை, அவர்களால் 20—10—1971 பிற்பகல் 2 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த நிபந்தனைகள் வடிவம் ஆகியவை இயக்குநர், சுகாதாரப்பணி, குடும்ப நலத்திட்டம் (பொதுச் சுகாதாரப் பகுதி) அவர்கள் அலுவலகத்திலிருந்து அலுவலக நேரத்தில் அதற்குரிய தொகை ரூ. 5-ஐ இந்திய ரிசர்வ் வங்கியில் '' பப்ளிக் ஹெல்த் மிஸலேனிஸ் '' என்ற கணக்கிலும் அதன் விற்பனைவரிக்கு 0·10 காசு ''ஓ.டி. அண்டு டியூட்டீஸ், எக்ஸ்ட்ரா, எம்.ஜி.எஸ்.டி.'' என்ற கணக்கிலும் கட்டி சலானைக் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். நாராயணன்,
இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், குடும்ப நலத்திட்டம்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சி வணிகத் துறையைச் சார்ந்தது—தமிழ்நாடு அரசின் பொறுப்பிலுள்ளது.)

ஒப்பந்தப்புள்ளி குறிப்பு எண் 7207/G.L. 1/71.

1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல், ஓராண்டுக் காலத்திற்கு, நாள் ஒன்றுக்குச் சுமார் 1,300 டன் அளவுள்ள சிமெண்ட் மூடைகளை லாரியில் அல்லது ரயில் வாகன்களில் ஏற்றுவதற்கும், பழைய சிமெண்ட் சாக்கு (கோணி) களில் கையினால் முத்திரைகள் இடுவதற்கும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—11—71 வரை வரவேற்கப்படுகின்றன.

விவரங்கள், சாற்றுக்குறிப்பு, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ஆகியவற்றைப் பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் (அஞ்சல்), இராசபாளையம் (வழி), என்ற முகவரிக்கு ரூ. 10-30 மணியார்டர் செய்து (இந்தப் பணம் திருப்பித்தரப் படமாட்டாது) 16—10—71-லிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொது மேலாளர்.

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் கோயம்பேடு என்னுமிடத்தில் பலஅடுக்குக் கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 19—10—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

எண்.	பிரிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை.
1	I	32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் ஏ5 & ஏ5a.	3,00,000	4,500	(ரூ. 15 மற்றும் விற்பனை வரி) ஒவ்வொரு வகைக்கும்.
2	III	24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி8, பி9 & பி10.	3,60,000	5,400	
3	V	24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி14 & பி15.	2,40,000	3,600	
4	VI	24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி20 & பி21.	2,40,000	3,600	

வரைபடங்களையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 11—10—1971 முதல் 18—10—1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 19—10—1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த.71)

நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண். 3.

ஏல விற்பனை

எழுதுபொருள் அச்சகத் துறை

இரண்டு பைண்டிங் இயந்திரங்கள், பழுதடைந்ததும் கண்டனம் செய்யப்பட்டதுமான 56 டி.சி. மோட்டார்கள், மின்சாரப் பொருட்கள், ஸ்டோர் சாமான்கள், முதலியன சென்னை1-ல் உள்ள அரசினர் அச்சகத்தில் (தங்கச்சாலைக் கட்டடம்) 27—10—1971 முதல் 29—10—1971 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மற்றைய விவரங்களுக்கும், ஏல அறிக்கையின் பிரதிகளுக்கும், எழுதுபொருள் அச்சகத் துறை இயக்குநர், அரசினர் அச்சகம், தங்கச்சாலைக் கட்டடம், சென்னை-1, அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்,
எழுதுபொருள் அச்சகத்துறை அலுவலகம்.

சென்னை-1.
நாள்; 24-9-1971.
(த.[illegible])

ஒப்பந்தப் புள்ளி ரத்து

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை எண் 7-ஐ மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரிப் பகுதியை மேம்பாடு செய்தல் (கி.மீ. 33.015 முதல் கி.மீ. 199.0 வரை), மற்றும் தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் பவானி குமாரபாளையம் மாற்று வழிப் பாதை அமைத்தல் ஆகிய வேலைகளுக்கு 20—10—1971-ல் ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்புமாறு "தமிழரசு" 1—9—1971, 16—9—1971, 1—10—1971 இதழ்களில் வெளியிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

(த. 60)

3065

பி. எஸ். உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.) கோயம்புத்தூர்.



தமிழரசு

மலர் 2. 1—11—1971. இதழ் 9.

ஐ. நா. மன்றம் பற்றி அண்ணா
முல்லைக்குத் தேர் தந்தான் பாரி
முல்லைக்குப் பேர் தந்தார் கலைஞர்
பரனூரில் ஒரு பயனுள்ள இல்லம்
ஏழையின் வாழ்வும் வளம் பெற்றது
சிலம்பு விளம்பும் தமிழக ஒருமைப்பாடு
செலவைக் குறைக்கும் உழவுக் கருவி
கல்வியமைச்சரின்
பட்டமளிப்பு விழாப் பேருரை
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
எனை ஈன்ற நாடு (கவிதை)
வெண்பாப் போட்டி

இருப்பிடம் மாற்றும் பணியல்ல
இனிய வாழ்வின் அடித்தளம்

அரசுத் துறை ஒப்பந்தப் புள்ளிகள்,
வேலைவாய்ப்பு விளம்பரங்கள்.

எனையீன்ற நாடு

வெ. கலைக்கூத்தன்

இதுதானே எனையீன்ற நாடு—கலை
எழிலோடு வளமேவும் தமிழன்னை வீடு
பொதுத் தொண்டு பூத்த மலர்ச் சோலை—நிலைப்
புகழ்மிக்க புலவர்சூழ் தமிழ்ச்சங்கச் சாலை
எதுவுண்டு என்னாட்டுக் கிடு—மகிழ்ந்
தியம்புவேன் அவனிக்கு அறைகூவ லோடு !

முப்புறம் கடல்சூழ் [illegible] தென்று—எங்கள்
முந்தைய ரழைத்தனர் திருவிட மென்று
எப்புறம் நோக்கினும் வெற்றி—மனித
எழுச்சியைப் பண்பாட்டை வளர்க்குமே சுற்றி
இதுதானே எனையீன்ற நாடு—வீரம்
ஈகையைக் கலந்தூட்டும் தமிழன்னை வீடு !

விலலம்பு விளையாட்டுக் கருவி—இங்கு
வீழ்ந்துள்ள எதிரிகள் குருதிதா னருவி
சொல்லிலே சுவைசேர்த்து மருவி—இன்பச்
சுகங்காண விழைந்தது தமிழ்மக்கள் பிறவி
இதுதானே எனையீன்ற நாடு—வெற்றி
இறுமாப்பில் திளைத்திடும் தமிழன்னை வீடு !

தென்னாட்டி லோடிடும் பொன்னி—தமிழ்
திக்கெட்டும் புகழ்வீசு மெழிலிளங் கன்னி
என்னாடு செழுமைசூழ் மேடு—தமிழ்
இலக்கிய வெறியூட்டும் மதுமலர்க் காடு
இதுதானே எனையீன்ற நாடு—அன்பு
இணையிலாப் பரிவூட்டும் தமிழன்னை வீடு !

கடலெலாம் அடிப்பாகம் முத்து—பாரில்
கலமெங்கும் பொருளீட்டத் தவழும்பூக் கொத்து
உடலுக்குள் எழிலெலாம் சேர்த்து—நீரில்
உறவாடி விளையாடும் மீன்களோ சொத்து
இதுதானே எனையீன்ற நாடு—அன்பு
எதிர்கால வழிகாட்டும் தமிழன்னை வீடு !

பொற்புடை அணங்குகள் கூட்டம்—அழகு
பொலிகின்ற அறிவிலும் நல்லாற்றல் நாட்டம்
கற்புடை மங்கையர் கோட்டம்—பழகக்
கவரிமா னினத்தவர் நிறைந்துள்ள தோட்டம்
இதுதானே எனையீன்ற நாடு—மானம்
இணைந்தது உயிரோடென் தமிழன்னை வீடு !

தவத்திறம் பூண்டதிந் நாடு—மனிதத்
தன்மானம் பண்பாடு அனைத்திற்கும் ஈடு
கவனித்தால் செல்வம் நிறை காடு—புனிதக்
கலைஞரும் அறிஞரும் வாழ்கின்ற மேடு
இதுதானே எனையீன்ற நாடு—கல்வி
ஏற்றத்தில் தெளிவூட்டும் தமிழன்னை வீடு !

ஐ. நா. மன்றம் பற்றி அண்ணா

(வானொலிப் பேச்சின் ஒரு பகுதி)

ஐ.நா. வை வலுப்படுத்தி அதற்குப் பக்கபலமாக நிற்குமாறு ஒவ்வொருவருக்கும் வேண்டு
கோள் விடுப்பதற்காகவே இன்றையத் தினத்தைக் கொண்டாடுகிறோம். மதிப்புக்குரிய
டாக்டர் ராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டி யிருப்பதைப்போலப் ''புதிதாய் உருவாகிவரும்
உலகச் சமுதாயத்திற்கு ஆத்மாவை, மனச்சாட்சியைக் கொடுக்க முடியும் என்று ஐ. நா.
நம்புகிறது.''

ஆனால், ஐ. நா. ஸ்தாபனம் போரைத் தடுத்து அநீதியை ஒழிக்கும் திறமையுள்ள
ஸ்தாபனமாக மாறவேண்டுமென்றால், ஒரு தடவை உட்ரோ வில்சன் குறிப்பிட்டுள்ளதுபோல
அது இமைப் பொழுதும் உறங்காத கண்ணாக இருக்க வேண்டும். எங்கும் விழிப்புடனும்
கவனத்துடனும் இருக்கும் கண்ணாகத் திகழவேண்டும்.

ஐ. நா. ஸ்தாபனம் வலிமையற்றது, ஆதலால் அதைப் பராமரிக்க வேண்டாம் என்று
வாதாடுவது, அந்தக் கண்ணையும் குருடாக்கு[illegible]க்கு ஒப்பாகும். பிறகு இருளில் அலைந்து
திரிந்து அழிவதைத் தான் வரவேற்க வேண்[illegible]. ஐ. நா. வின் அவசியத்தைச் சுட்டிக்
காட்டுவதற்கு அமெரிக்காவின் முன்னாள் [illegible] திரு ஐஸன் ஹோவர் கூறியதைவிட வேறு
எதைத் தான் ஆதாரமாகக் காட்ட மு[illegible]வெற்றிக்கொடி நாட்டிய வீரரான அவர் கூறு
கிறார்: படைபலத்தைப் பயன்படுத்[illegible] தகராறுகளைத் தீர்க்கலாம் என்று ஐ. நா.
ஸ்தாபனம் எப்போதாவது ஒப்புக் கொ[illegible]டுவிட்டால் அப்போது அந்த ஸ்தாபனத்தின் அடிப்
படையையும், உலக முறைமை ஒன்றை [illegible]ருவாக்குவதற்கான நமது சிறந்த நம்பிக்கையையும்
அழித்திருப்போம்—இது எல்லாருக்கும் [illegible]ழிவாகத் தான் இருக்கும்.

ஐ. நா. வின் உடன் பிறந்த குறைகளையும், பிறகு சேர்ந்த குறைகளையும் நன்கு உணர்ந்
திருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு ஐ. நா. வுக்காக மிகப் பலமாக வாதாடினார்.
''ஐ. நாவின் இயல்பை மாற்ற முயன்றால் அமைதிக்காகப் பாடுபடும் மேலும் வலுவான ஒரு
அமைப்பை இதனால் உருவாக்க முடியாது. [illegible]றெனவே இருக்கும் சிறந்த ஒரு அமைப்
பைக் குலைப்பதாகத்தான் அதற்குப் பொருள். இதற்குப் பதிலாக வேறு எதையும் உருவாக்க
முடியாது.

ஆதலால்தான், இந்த ஸ்தாபனத்தை வலுப்படுத்தி உலக விவகாரங்களில் அதிகாரம்
படைத்த ஒரு அமைப்பாக மாற்ற வேண்டுமே யொழியப் போர் வெறியர்களின் வெறியாட்டத்
தால் விழிக்கக் கூடிய நிலையில் உலகை விட்டுவிட வேண்டாம் என்று சிந்தனையாளர்கள் அனை
வரும் எல்லாரையும் கேட்டுக் கொள்கிறார்கள். ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஊதாண்ட்
கூறியிருப்பதைப் போல, ''எவ்வளவு வலிமை இருப்பினும், எவ்வளவு செல்வம் கொழிப்
பினும் எந்த ஒரு நாடும் இன்று தன்னிறைவு பெற்றதாக இருக்க முடியாது.''

தனித்து வாழ்வதோ, மற்ற நாடுகளின் சிதைவுகளுக்கு மேல் இருப்பதோ சாத்தியமல்ல
என்பதைப் பல நாடுகளும் இப்போது உணர்ந்துள்ளன. மற்ற நாடுகளுடன் தான் வாழ
முடியும். மனித சகோதர உணர்வு எனும் நன்னெறியை ஏற்று அதன்படி நடந்தால்தான்
இது சாத்திய மாகும்.

ஐ. நா. ஸ்தாபனம் பலவீனமாக இருந்துங்கூடப் பல பகுதிகளில் போரைத் தடுத்திருக்
கிறது. தகராறுகளைப் பரவ விடாமல் தடுத்திருக்கிறது. அமைதியைத் துரிதமாக நிலைநாட்டி
யிருக்கிறது. சில சமயங்களில் ஐ.நா.வின் சாதனைகள் விஷயத்தில் நமக்குப் பூரண திருப்தி
ஏற்படாவிட்டால்கூட, ஐ. நா.வுக்கு அதன் எல்லா முயற்சிகளிலும் நாம் தொடர்ந்து ஆதர
வளித்து வந்திருக்கிறோம். ஏனென்றால், ஜவாஹர்லால் நேரு கூறியிருப்பதுபோல, ஐ. நா.
ஸ்தாபனம் பலவீனமடைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் பலவீனமாயிருப்
பதுதான்; நாடுகள் பலவீனமாயிருப்பதுதான்; அவை கொள்கை பலமற்றவையாய் இருப்
பதுதான்; அவை நேர்மையற்றவையாய் இருப்பதுதான் என்பதை நாம் உணர்கிறோம். நமது
மன உறுதியும் பலமும் மட்டுமே மனித குலத்தின் இந்த நம்பிக்கைக்கு, உலக நீதியின்
அரணுக்கு உயிர்நாடியாக இருக்கமுடியும். இந்நாட்டிலுள்ள நாம் ஐ. நா.வைப் பலப்படுத்த
உத்தேசித்திருக்கிறோம். எனவேதான் இந்தக் கொண்டாட்டம்.!

இது பட்டம் மாற்றும் பணியல்ல
இனிய வாழ்வுக்கு அடித்தளம்!

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணு அவர்களின் மொழிக்கேற்ப அவர்களால் உருவாக்கப்பட்டது இந்த அரசு. அவர் மறைந்த பிறகும் அவர் வழி நின்று தொண்டாற்றுவோம் என்று இந்த அரசின் சார்பில் தூய முழக்கத்தை அறிவித்து நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்ரேம்.

குடிசைப் பகுதிகளை மாற்றுவது மட்டுமல்ல; தமிழகத்தில் இருக்கின்ற ஏழை—எளிய—பாட்டாளிகள்—தொழிலாளர்கள்—கிராமத்து விவசாயிகள் ஆகியோரது வாழ்வில் நல்லொளி பாய்ந்திட வேண்டும் என்ற உறுதிபடைத்த நெஞ்சத்தோடு இந்த ஆட்சியை நடத்தி வருகின்ரேம்.

குடிசை வாழ் மக்களை நல்ல வீடுகளில் குடியமர்த்த வேண்டும் என்கிற அதே நேரத்தில், இரந்து வாழ்கின்ற மக்களுக்கு—பிச்சையெடுத்து வாழ்கின்ற மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் திட்டத்தை — இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் அறிமுகப்படுத்தப்படாத திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தி நடத்தி வருகின்ரேம்.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, 72-ஆம் ஆண்டுக்குள் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி செய்துதரப்படும் என்கிற தீவிரத் திட்டத்தை வகுத்து, அதனடிப்படையில் மூன்று நான்கு மாவட்டங்களில் மின்சார வசதி வேலை முழுமையாக முடிவுற்று மிச்சமிருக்கின்ற மாவட்டங்களிலும் 72-ஆம் ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும் என்கிற நிறைந்த நம்பிக்கையை அரசின் சார்பில் அறிவித்துக் கொள்கிறேன்.

முழுமையாக எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெறுவதென்றல் பெரிய கிராமங்கள் என்பவை மட்டுமல்ல; பத்துப் பன்னிரண்டு பேர்கள் வாழ்கின்ற இடங்களிலும்கூட விளக்கு வசதி செய்து தரப்படவேண்டும் என்கிற முறையில் திட்டம் தீட்டிச் செயல்படுத்தி வருகின்ரேம்.

சென்னை நகரில் தீராத பிரச்சினையாக இருந்து வந்தது, குடிசை வாழ் மக்களுக்கு நல்ல வீடுகள் தரவேண்டும் என்ற பிரச்சினையாகும்.

பல்வேறு மாநிலங்களில்—டில்லி போன்ற இடங்களில் குடிசைகளை மாற்றி இருக்கிருர்கள். ஆனால் அங்கே வாழ்ந்த மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

குடிசைப் பகுதிகளால்—நகரத்தின் அழகு குறைகிறதே; நகரத்தின் எழில் குலைகிறதே; ஆகவே, நல்ல வீடுகளாக மாற்றினல்தான் வெளி நாட்டுக்காரர்கள் பாராட்டவும்—புகழவும் ஏற்றதாக இருக்கும்; சுற்றுலாவுக்கு உகந்ததாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் மற்ற மாநிலங்களில் குடிசைப் பகுதிகள் மாற்றப்படுகின்றன.

நகரத்தின் அழகு சோபிதமாக இருக்கத்தான் குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளை அமைக்கிருர்கள்.

அப்படிப்பட்ட வீடுகளில் குடியேற வருகிறவர்கள் இலட்சாதிபதிகளாகவோ — தொழிலதிபர்களாகவோ—வசதி வாய்ப்புள்ளவர்களாகவோஇருக்கலாம்.

குடிசைகள் மாற்றப்படுவதன் மூலம் இருக்கின்ற கோரம் போக்கப்பட வேண்டும்—அலங்கோலம் மாற்றப்படவேண்டும்—அழகு மிளிர வேண்டும்—என்ற அடிப்படையில் அவர்கள் பிரச்சினைகள் முடிகின்றன.

ஆனல், தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கின்ற இந்த வாரியம் குடிசைப்பகுதிகளை மட்டும் மாற்றவேண்டும் என்று கருதவில்லை; அங்கிருக்கின்ற மக்கள் வாழ்வையே மாற்ற வேண்டும் என்று கருதுகிறது.

அந்தப் பகுதிகளில் யார் யார் வாழ்ந்தார்களோ அதே மக்கள்—அதே நபர்கள் மாற்றப்பட்ட இடத்தில் வாழும் உரிமையைச் செய்து அளிக்கும் அரசு இந்தியாவிலேயே தமிழக அரசுதான்!

நமது இலட்சியமே குடிசையில் வாழ்கின்ற மக்களை அதே இடத்தில் கட்டப்படும் மாடி வீடுகளில் குடியமர்த்த வேண்டும் என்பதுதான்.

குடிசையில் வாழ்கின்ற மக்களை வேறு இடங்களுக்குச் செல்லும்படிச் சொல்லும்போது அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது மட்டுமல்ல, தொழில் வசதியையும் பார்க்க வேண்டும்.

பார்வதி கக்கன் காலனியில் குடியிருக்கிறவர்களைக் கோட்டூருக்குப் பக்கத்தில் குடியிருக்கச் சொல்கிரேம் என்ருல், அவர்களின் தொழில், மற்ற வாழ்க்கை வசதிகள் இந்தப் பகுதியில் இருக்கும். ஆகவே, தொழில் வசதி கெடாத அளவுக்குக் குடியேற்றப்படவேண்டும் என்கிற கொள்கையையும் ஏற்றுக் கொண்டு பணி செய்து வருகிரேம்.

சென்னையில் மொத்தம் 602 குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் இன்னும் ஏழாண்டுக் காலத்தில் வேரோடு மாற்றி, இந்த இடங்களெல்லாம் 'முன்பு குடிசைப்பகுதிகளாக இருந்த இடங்கள்' என்று சொல்லத்தக்க விதத்தில் மாடி வீடுகளாக ஆக்குவோம் என்ற சபதத்தை எடுத்துக் கொண்டிருக்கிரேம்.

மொத்தமுள்ள 602 குடிசைப் பகுதிகளில் இந்த ஆண்டு 75 குடிசைப் பகுதிகள் மாற்றி அமைக்கப்படும்.

இந்த ஆண்டு 75 பகுதிகள் என்ருல் அடுத்த ஆண்டு இதைவிட அதிகமாக மாறும்.

ஆகவே, அடுத்த ஆண்டு 100 இடங்களுக்கு மேல் மாற்றப்படும். அதற்கும் அடுத்தடுத்த ஆண்டுகள் மேன்மேலும் வேகமாக இந்தப்பணி நிறைவேற்றப்படும்.

ஏழாண்டுக் காலத்தில் திட்டத்தை முடிக்க வேண்டும் என்று கருதினலும் போகிற போக்கில் ஐந்து, ஆருண்டுக் காலத்திலேயே குடிசைப்பகுதிகள் எல்லாம் மாடி வீடுகளாக மாற்றப்படும் நிலை இருக்கிறது.

சென்னையில் இந்த வேலை நடக்கிற அதே நேரத்தில் தமிழகத்தில் படிப்படியாக இந்த மாவட்டத்தில் இன்ன நகர் என்கிற அளவுக்கு இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டு வேலை தொடரும்.

மற்றவர்கள் பெயரை மாற்றுவதில்—பெயரைச் சூட்டுவதில் அக்கறை காட்டினர்கள். ஆனல், மக்கள் வாழ்வை மாற்றிட அக்கறை காட்டவில்லை. இந்த அரசு அதைச் செய்து வருகிறது. ஏற்கெனவே இருந்த பெயர்களை மாற்ற வேண்டும் என்று இந்த அரசு கிஞ்சிற்றும் எண்ணவில்லை. அந்த அளவுக்கு நமது பரந்த மனப்பான்மைக்கு அடையாளமாகத்தான்—இருக்கின்ற அந்தப் பெயரே நல்லபெயர்—நிலைத்திருக்கட்டும் என்று கருதுகிரேம்.

பார்வதி கக்கன் காலனியா? மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேறியதா — மாநகராட்சியின் ஒப்புதல் பெறப்பட்டதா? என்றெல்லாம் ஆராயவில்லை—அப்படிப்பட்ட மிகக் குறுகிய மனப்பான்மையோடு ஆராய்ச்சி நடத்தவில்லை.

பார்வதி கக்கன் யார்? கக்கனின் துணைவியார். கக்கனவது அமைச்சராக இருந்தவர். ஏன் துணைவியார் பெயர்? என்று கேட்கவில்லை. கேட்க மாட்டோம். ஏனென்ருல் நாம் படித்த பள்ளி—நாம் பயின்ற பாசறை அப்படிப்பட்டதல்ல! பெருந்தன்மைக்கே பெயர் பெற்ற அண்ணுவின் பாசறையில் பயின்றவர்கள் நாம்!

''பார்வதி கக்கன் காலனி'' என்ற பெயரை மாற்றினல்தான் இந்தப் பகுதியை மாற்றுவோம் என்று சொல்லிடவில்லை—எண்ணிடவில்லை.

மத்திய அரசு தகுந்த உதவி செய்யவில்லை என்ருலும் எத்தனையோ இடையூறுகளுக்கிடையே இந்தக் காரியத்தை நிறைவேற்றி வருகிரேம்.

யார் உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும் கவலையில்லை என்று தமிழக அரசு 4 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. காரியம் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொகுதியில் 75 குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு 10 பகுதிகளாவது மாற்றப்படும்.

பெரம்பூர்த் தொகுதியில் அதிகப்பகுதிகள் இந்தத் திட்டத்தினல் பயன் அடைகின்றன. இந்த ஆண்டு மட்டும் ரூ. 1 கோடியே 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனது சைதைத் தொகுதியைவிட, அதிக வசதியைப் பெரம்பூர்த் தொகுதி பெறுகிறது என்பதைப் பார்க்கும்போது கொஞ்சம் பொருமையாகக் கூட இருக்கிறது. என்ருலும் சைதைத் தொகுதியைவிட இந்தத் தொகுதியில் குடிசைகள் ஏராளம். பள்ளத்தாக்குகள் நிரம்பிய சேறும் சகதியும் உள்ளது இந்தத் தொகுதி.

இங்கே வாழ்கின்ற மக்களை புழுவாய் நெளிந்தும், வளைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிற தன்மையிலிருந்து விடுவிக்க—உய்விக்க இந்த அரசு கடமையாற்றி வருகிறது.

வள்ளலார் பாடினர்;

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்ருர்.

நாங்களும் ஏழைகள்—பாட்டாளி மக்கள் வாடிக்கொண்டிருக்கக் கண்டு வாடுகிரேம். அவர்கள் வாழ்வின் மலர்ச்சிக்காகப் பாடு படுகிரேம். மக்கள் வாழ்வின் ஒளியை மையமாக வைத்துப் பாடுபட்டுப் பணியாற்றுகிரேம்.

இன்னும் ஆருண்டுக் காலத்தில் இந்தப் பகுதி எப்படியெல்லாம் மாற்றம் அடையப் போகிறது என்கிற நினைப்போடு அந்தக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிரேம்.

கிரேநகர் பள்ளம் — என்கிற பகுதி, பெயரே பள்ளம்; அப்படிப்பட்ட இடத்தில் அடிக்கல் நாட்டி இரும்புத் தூண்களை அங்கேயெல்லாம் நட்டு அங்கு இருக்கட்டடம் கட்டப்பட இருக்கிறது.

இப்படியெல்லாம் சிரமங்கள் ஏன்? மந்திரிகளுக்கு வீடு கட்டவா? வாரியத் தலைவருக்குப் பங்களா கட்டவா? இலட்சாதிபதிகளுக்கோ—சீமான் வீட்டுப் பிள்ளைகளுக்கோ இடம் தரவா? அல்ல! அல்ல!

எங்களின் தோழர்களாகிய பொதுமக்களுக்காக—உடன் பிறவாச் சகோதர சகோதரிகளாகிய பொது மக்களுக்காக—எங்களின் இரத்தமாய்—உணர்ச்சியாய்—விளங்கும் சொந்தக்காரர்களாகிய பொது மக்களுக்காக—எங்கள் உறவினர்களாகிய பொதுமக்களுக்காக - பொது மக்களால் அமைக்கப்பட்ட இந்த அரசு—பாடு பட்டு வருகிறது.

—முதல்வர்



சென்னை நகர்,
தஞ்சை, மதுரை
கோவை மாவட்-
டங்களின் ஆலயத்
திருப்பணிக்காக
ரூ. 4·75 கோடி
செலவு செய்ய
அரசு திட்டமிட்டு
உள்ளது.
தலைமை நீதி
மன்றம்
தமிழகச் சட்டமன்றத்தில்
நிறைவேற்றப்பட்ட நில உச்ச
வரம்புச் சட்டம் செல்லாது
என்று தனிநபர் ஒருவர்
தொடர்ந்த வழக்கில்,
மேற்படி சட்டம் செல்லுபடி
யாகும் என்று இந்தியத்
தலைமை நீதி மன்றம்
தீர்ப்பளித்திருக்கிறது.
அரசுப் போக்கு
வரத்துத் தொழி
லாளர்களான
ஓட்டுநர், நடத்துநர்
பரிசோதகர், நேரங்
காப்பாளர், ஆய்வர்
மேலாளர் ஆகியோர்க்கு
இந்த ஆண்டு 8⅓
சதவீத போனஸ்
தரப்பட்டிருக்கிறது.



தனியார் கல்லூரிகளில்
உள்ள ஆசிரியர் அல்லாத
ஊழியர்களுக்கும் அக்டோபர்
முதல், வீட்டு வாடகைப் படி
கொடுப்பதற்கு அரசு
முடிவு செய்துள்ளது.
சென்னை நகரை அழகு
நகராக்கும் திட்டத்தின்
அடிப்படையில் - ஐ.நா.
நிபுணர் ஒருவர்
வரவழைக்கப்பட்டுள்ளார்.
சம்பளம்
1
சனவரி
அ. ஆ
இ
வருகின்ற சனவரித்
திங்கள் முதல், தொடக்கப்
பள்ளி ஆசிரியர்களுக்கு
இவ்வொரு மாதமும், முதல்
தேதியன்றே சம்பளம்
கிடைப்பதற்கு, அரசு
ஏற்பாடு செய்துள்ளது.



முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி!

முல்லைக்குப் பேர் கொடுத்தார் கலைஞர்

கொழு கொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தன் தேரையே ஈந்தான் கடை எழு வள்ளல்களில் ஒருவனான பாரி! அந்தப் பாரி வள்ளலின் நினைவாகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள உயர் விளைச்சல் தரும் முல்லைக்குப் ''பாரி முல்லை'' என்று பெயரிட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர்!

கலைஞர் அவர்களால் பெயரிடப் பெற்ற ''பாரி'' முல்லையை மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 26–9–71 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவின்போது, வெளியிட்டார். பாரி முல்லை மலர்களால் அமைக்கப்பட்டிருந்த இரு பூச்செண்டுகளை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் வழங்கினார். பாரி முல்லையின் மணம், விழா மேடையில் அமர்ந்திருந்தோரின் மனத்தைக் கவர்ந்து மகிழ வைத்தது!

முல்லையில் பலரகங்கள் உள்ளன! அவற்றில் சில நீண்ட பூக்காம்புகளை உடையனவாயும், சில குட்டையான பூக்காம்புகளை உடையனவாயும் இருக்கின்றன. ஆனால் நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகங்களையே முல்லை மலர் விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகள் விரும்பி அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். ஏனெனில், நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகப் பூக்களே சரமாகத் தொடுப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றன. ஆனால் நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகங்களைச் சிலந்திப் பூச்சிகள் (Gall mites) அதிக அளவில் தாக்கிப் பெருஞ் சேதம் விளைவிக்கின்றன. முல்லைச் செடியின் இலைகள், தண்டுகள், துளிர்கள் ஆகியவற்றைச் சிலந்திப் பூச்சிகள் தாக்கி முல்லை சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகங்களைப் பயிரிட, முல்லைச் சாகுபடி செய்யும் உழவர்கள் முன்வருவதில்லை.

முல்லைச் சாகுபடி செய்யும் உழவர்களின் இப்பெருங் குறையைத் தீர்ப்பதற்காகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் தற்பொழுது இணைக்கப்பட்டுள்ள, கோவை வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு பிரிவான மலர்வகை ஆராய்ச்சி நிலையத்தில், முல்லை ரகங்கள் குறித்துப்பல ஆண்டுகளாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த ஆராய்ச்சியின் பயனாகவே, சிலந்திப் பூச்சிகள் தாக்காத, உயர் விளைச்சல் தரக்கூடிய முல்லை இனம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது!

அந்தப் புதிய ரக முல்லைக்குத்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''பாரி முல்லை'' என்று பெயரிட்டார்கள்.

பாரி முல்லையின் சிறப்புகள்

*தற்பொழுது சாகுபடியில் உள்ள ரகங்களைக் காட்டிலும் 4 மடங்கு பூக்களைத் தரக் கூடியது.

*மற்ற முல்லை ரகங்கள் 9 அல்லது 10மாதமே பூக்களைக் கொடுக்கும். ஆனால் பாரி முல்லையோ பிப்ரவரி முதல் டிசம்பர் வரை 11 மாதங்களும் பூக்கின்றன.

*நீளக்காம்பு வகையைவிடச் சிறிதளவே குறைவாக இருப்பதால், வியாபாரிகள் விரும்பி வாங்குகின்றனர்.

*சிலந்திப் பூச்சிகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது.

*ஏக்கருக்கு 4,300 கிலோ கிராம் பூக்களைக் கொடுக்கும். கோவை வேளாண்மைக் கல்லூரியில் ஏக்கருக்கு 7,888 கிலோ கிராம் பூக்களைப் பாரி முல்லை கொடுத்துள்ளது.

*அதிக மணமுள்ளது.

*பாரி முல்லை ஏக்கருக்கு ரூபாய் 7,000 முதல் ரூபாய் 8,000 வரை நிகர வருவாய் அளிக்கும் ஆற்றல் படைத்தது.

பாரி எவ்வாறு ஏழை எளிய உழவர் பெருமக்களைக் காப்பாற்றினானோ அதுபோலவே பாரி முல்லையும், முல்லைச்சாகுபடி செய்யும் ஏழை எளிய உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கிக் கொடுத்து, அவர்களின் வாழ்வை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

''பாரி முல்லை'' பயிரிடும் முறையைச் சற்று பார்ப்போம்.

பாரி முல்லைச் சாகுபடிக் குறிப்புகள்

வயது: பாரி முல்லைச் செடிகள் 50 ஆண்டுகட்கு மேலும் உயிருடன் இருந்து பூக்கும் தன்மையுடையது. ஆனால், ஒரே நிலத்தில் 15 முதல் 18 ஆண்டுகள் வரை பயிரிடுவதே சிறந்தது.

பதியம் போடுவதற்கு ஏற்ற பருவம்: ஜூன்-ஜூலை முதல் அக்டோபர்-நவம்பர் வரையான மழைக் காலமே பதியம் போடுவதற்கு ஏற்றப் பருவமாகும்.

பதியம் நடும் பருவம்: ஜூன் முதல் டிசம்பர் வரையுள்ள காலமே சிறந்தது.

இடைவெளி: பதியங்களை நடுவதற்கு ஒரு வாரம் முன்பாக, குழிக்குக் குழி 1½ மீட்டர் இடைவெளி விட்டு, 45 முதல் 60 சென்டி மீட்டர் வரை நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளைத் தோண்டிக் காய விட வேண்டும். இந்தஇடைவெளியில் பதியங்களை நடுவதற்கு, ஏக்கருக்கு 1,500 முதல் 2,000 பதியங்கள் தேவைப் படும்.

அடி உரமிடுதல்: ஒவ்வொரு குழிக்கும் 20 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட் எரு விட்டு, மண்ணைக்கொண்டு மூடி நிரப்பித் தண்ணீர் விட்ட பின்பே பதியங்களை நடவேண்டும்.

ஊடு சாகுபடி: (1) பாரிமுல்லை நடப்பட்ட முதலாண்டில் செடிகளுக்கு இடையில் காய்கறிச் செடிகளையோ அல்லது கனகாம்பரம், சாமந்தி போன்ற மலர்ச் செடிகளையோ ஊடு பயிராகச் சாகுபடிசெய்யலாம். (2) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர், ஜனவரியில் காவாத்து செய்ய வேண்டும். காவாத்து செய்ய நில மட்டத்திலிருந்து 2 அடி உயரம் வரை கிளைகளை விட்டு, மீதிப் பகுதியை வெட்டி எடுத்துவிட வேண்டும். கிளைகளில் உள்ள இலைகளையும் உருவி எடுத்துவிட வேண்டும். இவ்வாறு காவாத்துச் செய்வதால் அதிக பூக்கள் கிடைப்பதுடன், கிளைகளிலிருந்து பூக்களை எளிதாகவும் கொய்ய முடியும். (3) மூன்று மாதத்திற்கு ஒரு முறை மண் வெட்டியால் நிலத்தைக் கொத்திவிட வேண்டும்.

மேலுரமிடுதல்: டிசம்பர்—ஜனவரியில் செடிகளுக்குக் காவாத்துச் செய்த பின்பு ஒரு தடவையும், ஜூன்-ஜூலையில் ஒரு தடவையும் ஆக ஆண்டிற்கு இரு முறை கீழ்க்கண்ட அளவு உரத்தை ஒவ்வொரு செடிக்கும் ஒவ்வொரு தடவையும் இட வேண்டும்.

அமோனியம் சல்பேட்— 300 கிராம்.

சூப்பர் பாஸ்பேட்— 750 கிராம்.

மூரியேட் ஆப் பொட்டாஷ்— 200 கிராம்.

தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு—15 கிலோ.

செடியைச்சுற்றி உரங்களை இட்டு நன்கு கொத்திவிட வேண்டும். உரமிட்டவுடன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நீர்ப்பாசனம்: பூக்கும் காலம் வரை, வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் காலத்தில் வாரம் இருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அக்டோபர் மாதத்தில் பூப்பது நின்றவுடன் தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: 15 நாட்களுக்கொருமுறை பாஸிடாலும், கந்தகமும் கலந்து தெளித்து மொட்டுப் புழுக்களையும், சிலந்திப் பூச்சிகளையும் தடுக்கலாம். பாரி முல்லை, சிலந்திப் பூச்சிகளின் தாக்குதலைப் பெருமளவில் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. இந்த ரகத்தில், சிலந்திப் பூச்சிகளின் தாக்குதல் 4 சதத்திற்கும் குறைவாகவே காணப்படும். சிலந்திப் பூச்சியின் தாக்குதல் மிகவும் கடுமையாகக் காணப்படின் வாரமொரு முறை கந்தகம் தூவ வேண்டும். அல்லது தியோவிட் மருந்து 1 பவுண்டை 50 காலன் தண்ணீரில் கலந்து வாரமொருமுறை தெளித்துத் தாக்கப்பட்ட இலைகளை அப்புறப்படுத்திவிட வேண்டும். அல்லது 'டிரைதியான்' (150 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து வாரமொரு முறை தெளிக்க வேண்டும்.)

மலர் கொய்தல்: இரண்டாம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மலர் கொய்யலாம். மார்ச்சு மாதத்திலிருந்து அக்டோபர் வரை தொடர்ந்து பாரி முல்லை அதிகமாக மலரும். மற்ற மாதங்களிலும் ஓரளவு மலரக் கூடும்.

மகசூல்: ஒரு ஏக்கரிலிருந்து ஆண்டுதோறும் சராசரியாக 4,000 கிலோ முதல் 4,300 கிலோ வரை, மகசூல் கிடைக்கும். முறையான சாகுபடி முறைகளையும், சிறந்த பராமரிப்பினையும் மேற் கொண்டால்ஏக்கருக்கு 7,800 கிலோ மகசூல் வரை பெறமுடியும்.

செலவும் வரவும்: பாரி முல்லையைப் பயிரிட முதலிரண்டு ஆண்டுகளில் ஆண்டுதோறும் ஏக்கருக்கு ரூபாய் 2,000 முதல் ரூபாய் 3,000 வரையிலும் செலவாகும். மூன்றும் ஆண்டிலிருந்து ரூபாய் 4,000 முதல் ரூபாய் 5,000 வரைச் செலவாகும். மூன்றும் ஆண்டிலிருந்துஅதிகமாக மலர்களைக் கொடுக்கும்பொழுது ஒரு ஏக்கரிலிருந்து மொத்த வருவாயாக ரூபாய் 12,000 கிடைக்கும். பாரி முல்லைத் தோட்டத்தைப் பராமரிப்பதில் செலுத்தப்படும் கவனத்திற்கேற்ப, மூன்றும் ஆண்டிற்குப் பிறகு ஆண்டுதோறும் நிகர லாபமாக ரூபாய் 8,000 பெற முடியும்

வீட்டுத் தோட்டத்திற்கும் ஏற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மலர் வகை ஆய்வுக் கூடத்தில் 1970-ஆம் ஆண்டில், எட்டு வயதான ஒரு பாரி முல்லைச் செடியிலிருந்து 6,489 கிராம் மலர்கள் கிடைத்துள்ளன. எனவே, பாரி முல்லையை வணிகத்திற்காக மட்டுமல்லாமல், வீட்டுத் தோட்டங்களிலும் ஒரு சில செடிகளை நட்டு, நன்கு பேணி வளர்த்தால், வீட்டிற்கு வேண்டிய மணமுள்ள மலர்களைப் பெற்று மகிழலாம்.

பாரி முல்லை மலர், இதர மல்லிகை இன மலர்களை விட மண முள்ளதாகவும், நன்றாக மலர்ந்த பின்பும் 24 முதல் 36 மணி நேரத்திற்கு வாடாமலும், அதிக தூரமுள்ள இடங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லும்போது கெட்டு விடாத தன்மையுடையதாகவும் இருக்கிறது. ஆனால், மற்ற மல்லிகை இனங்களின் மலர்கள் குறுகிய காலத்திற்கே தாங்கக்கூடியவை. மல்லிகை மொட்டுகள் கொய்த 12 மணி நேரத்திற்குள் மலர்ந்து, விரைவில் வாடிவிடும் தன்மையுடையவை. இத்தகைய சீரிய பண்புகளைப் பெற்றுள்ள பாரி முல்லையை வீட்டுத் தோட்டத்திலும், வணிக முறையிலும் பயிரிட்டுப் பயனடையலாம்.

கீரையோ கீரை.....

வெந்தயக் கீரை	—	மார்பு வலிக்கும், இடுப்பு வலிக்கும் ஏற்றது.
முள்ளங்கி இலை	—	மதுமேக நோயாளிகளுக்கேற்றது.
வல்லாரைக் கீரை	—	அண்ட வீக்கத்தைப் போக்கும்.
வள்ளைக் கீரை	—	பிரசவித்த பெண்களுக்குப் பால் சுரப்பு உண்டாக்கும்.
சோலிக் கீரை	—	குதகச் சிக்கலை நீக்கும்.
துத்தி இலை	—	மூலாதாரத்திலுள்ள வாயுவைக் கண்டிக்கும்.
சிறு பசலைக் கீரை	..	வெள்ளை நோயுள்ளவர்கள் தினமும் ஒருவேளை இதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
அரைக்கீரை	..	நீரிழிவுக்காரர்களுக்கு ஏற்ற கீரை இது.
கரிசலாங்கண்ணிக் கீரை.	..	கையாந்தகரை என்று சொல்லப்படும் இந்த இலையை வாயில் போட்டு மென்று பல்லினைத் தேய்க்கப் பல் சம்பந்தமான வியாதிகள் போகும்.
சிறு கீரை	—	காச நோயுள்ளவர்கள் தினசரி உணவில் இதை உட்கொள்ள வேண்டும்.

அரசு ஆணைகள் - அறிவிப்புகள்

(இப் பகுதியில் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின் சுருக்கமும், அறிவிப்புகளின் சுருக்கமும் அரசு ஊழியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வெளியிடப்பட்டுள்ளது).

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குக் காலத்தில் சம்பளம் வழங்குவது பற்றிய தமிழ்நாடு அரசின் ஆணை.

அரசு ஆணை எண் 2281, நாள் 11–10–1971. கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை.

ஊராட்சி கல்வி நிதி விசாரணைக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கூடங்களிலும், ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ள உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை, ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் இதர அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது போலவே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே அரசாங்கக் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதன்படி, ஆசிரியர்களுக்குரிய சம்பளம் முழுவதும், முதலில் ஊராட்சி ஒன்றியத்திடம் கொடுக்கப்படும். அதன்பின் ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகை மீண்டும் அரசாங்கக் கணக்கில் ஈடு கட்டப்படும். ஊராட்சி ஒன்றியத்தின் பங்கினை நிர்ணயிக்க ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ள 6 வகைகளைப் பின்பற்றலாம்.

இந்தத் திட்டம் 1–1–1972 முதல் நிறைவேற்றப்படும். (அதாவது 1971-ஆம் ஆண்டின் டிசம்பர் மாதச் சம்பளம், ஜனவரி 1972-ல் வழங்கப்படும்).

இத் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றிய தனித்தனி விவரமான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

தனியார் கல்லூரி ஊழியர்கட்கு வீட்டு வாடகைப் படி:—

தமிழ்நாட்டில் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதுபோல், அந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி கொடுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காகும் செலவில் பாதியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

இச் சலுகை 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்படுத்தப்படும்.

இத் தகவலை மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

அழகான கண்கள் அமைய வேண்டுமா?

நெஞ்சத்தின் நிலையை உணர்த்தும் கருவியாக விளங்குவது கண்களே! இதனுல் தான் ஒருவருடைய கண்களைப் பார்த்தே அவரது நெஞ்சத்தில் குடிகொண்டுள்ள எண்ணங்களை அறிய முடிகிறது.

அழகான ஒளிவிடும் கண்கள் அமைய வேண்டுமானுல், நாள்தோறும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கண்களின் மேல் குளிர்ந்த நீரைத் தெளித்துத் துடைக்க வேண்டும்.

கண்கள் சோர்வு அடைந்திருக்கும்பொழுது, பருத்திப் பஞ்சினுல் ஆகிய இரு சிறு அட்டைகளைக்(Pads) குளிர்ந்ததேநீரில் நனைத்து எடுத்து, ஒவ்வொரு கண்ணின் மேலும் ஒரு பஞ்சு அட்டையை வைத்துக்கொண்டு, கொஞ்ச நேரம் ஓய்வு எடுக்கவேண்டும். அதன்பின் அவைகளை அகற்றிவிட்டு எழுந்திருக்கும் பொழுது, கண்களில் இருந்த சோர்வு மறைந்து, புத்துணர்வும் புத்தொளியும் ஏற்பட்டுள்ளதை உணர்வீர்கள்.

நீண்ட கண்ணிமை மயிர்கள் பெற விரும்பினுல் ஒவ்வொரு நாளும், இரவில் தூங்குவதற்கு முன்பு, சில துளி தூய்மைப்படுத்தப்பட்ட விளக்கெண்ணெய்யை (Refined Caster Oil) உங்கள் கண்ணிமை மயிர்களின் மேல் தடவிக் கொள்ளுங்கள். இம்முறையில் மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து செய்துவந்தால், உங்கள் கண்ணிமை மயிர்கள் நீண்டு வளர்ந்தும் கருமையாகவும், அடர்த்தியாகவும் காணப்படும்.

உங்கள் புருவம் மிகவும் கருமையாகத் தோன்ற வேண்டுமானுல், புருவங்களின் மேல் கொஞ்சம் விளக்கெண்ணெய் தடவி வாருங்கள்.

மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு வந்தால், பிறர் உள்ளம் கவரும் கண்கள் உங்களுக்கு அமையும்.

பரனூரில் ஒரு பயனுள்ள இல்லம்

பரனூர்.

இயற்கை வளம் நிறைந்த சூழ்நிலை. நோயாளிகள் இருப்பிடத்திற்கேற்ற அமைதியும், நல்ல காற்ருேட்டமும், பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சியும், அழகிய குன்றுகளும் அமைந்த இடந்தான் பரனூர். செங்கற்பட்டுக்கு அருகே, அதாவது சென்னையிலிருந்து 51 கி. மீட்டர் தூரத்திலிருக்கிறது இச்சிற்றூர்.

இங்குதான் ''தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்'' முதல்வர், டாக்டர், கலைஞர் அவர்களால், அக்டோபர் 2-ல் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 7 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கும் இந்த மறு வாழ்வு இல்லம், தமிழ்நாட்டில் முதல் கட்டமாகப் பரனூரில், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இன்னும் ஐந்து இடங்களில் இம்மாதிரியான இல்லங்கள் அமைக்கப்படும். அவை. 1. உளுந்தூர்ப்பேட்டை, 2. பருகூர், 3. புதுக்கோட்டை. 4. இராமநாதபுரம், 5. திருவண்ணமலை. பரனூரைச் சேர்த்து ஆறு இடங்கள் ஆகின்றன.

பரனூரை அடுத்து, உளுந்தூர்ப்பேட்டையிலும், பருகூரிலும் உடனடியாக இந்த இல்லங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன.

பிச்சைக்காரர் மறு வாழ்வுக்காக முதன் முதலில் துவக்கப்பட்ட பரனூர்இல்லத்தில், தொழுநோயாளருக்கான எட்டுக் குடியிருப்புகள் இருக்கின்றன. ஆடவருக்கும், மகளிருக்கும் தனித் தனியாக இல்லங்கள் இருக்கின்றன. ஆடவருக்கான இல்லங்கள் நான்கும், பெண்களுக்கான இல்லம் ஒன்றும், குடும்பத்தோடு (மனைவி மக்களோடு இருப்பவர்கள்) இருப்பவர்க்கான இல்லம் ஒன்றும், தொழிற்கூடத்துக்கும், தற்காலிக அலுவலகத்துக்கும் ஒவ்வொன்றுமாக இல்லங்கள் இங்கு உள்ளன.

இந்த மறு வாழ்வு இல்லத்தில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட வர்கள் 118 பேர் தங்கிச் சிகிச்சை பெறுகிருர்கள். அவர்களில் 84 ஆண்களும், 7 பெண்களும் இருக்கின்றனர். இவர்களைத் தவிர, 13 குடும்பங்களும் உள்ளன. அதாவது மனைவி மக்களோடு இருப்பவர்கள் இவர்கள் மூன்று குடும்பங்களுக்கு ஒ ு குழந்தை வீதம் இருக்கிறது.

குழந்தைகளுக்கு இந்நோய் பரவாமலிருக்க, இவர்களுக்காகத் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தலாமா என்ற யோசனையும் இருக்கிறது.

இது சம்பந்தமாக மாநிலத் தொழு நோய் அதிகாரி அவர்கள் கூறுவதாவது:

'' இங்குள்ளவர்களெல்லாம் பல இடங்களிலிருந்தும் வந்தவர்கள். செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, வியாசர்பாடி வில்லிவாக்கம் ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டுச் சிகிச்சை பெறுகிருர்கள்.

'' இங்குள்ள தொழு நோயாளிகள் மிகவும் தெம்பாக இருக்கிருர்கள். அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் இங்குத் தரப்படுகின்றன. மனத்துக்கு இதம் அளிக்கும் அமைதியான சூழ்நிலையில் அவர்கள் இங்குப் பல்வேறு பயனுள்ள காரியங்களில் ஈடுபடுகின்றனர்.''

அவர் வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை இங்கு வருகிருர். நோயாளிகளைப் பரிசோதித்து, அவரவர்களுக்கேற்றவாறு மருந்துகளை எழுதித் தருகிருர்.

'' காலை பகல், இரவு மூன்று வேளையும் மருந்து, மாத்திரைகள் தருகிருேம். சிலருக்கு டாக்டர் யோசனைப்படி ஊசியும் போடுகிருேம். சிகிச்சை செய்துகொள்ளக் கூட வழியில்லாமல், தெருத் தெருவாய் அலைந்து வந்த இவர்கள், இங்குச் சிகிச்சையும், வேளாவேளைக்கு நல்ல உணவும் பெற்று, ஓரளவு தம் நோயை மறந்து மகிழ்ச்சியுடன் இருக்கிருர்கள்'' என்று மருந்தாளுநர் கூறுவதிலிருந்து அவர்கள் நன்கு கவனிக்கப்படுவதை நாம் பார்க்க முடிகிறது.

ஆடவர் இல்லத்திலும் சரி, மகளிர் இல்லத்திலும் சரி, அவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து உரையாடி மகிழுவதையும், குடும்பத்தினர் தம் குழந்தைகளோடு குதூகலமாய் இருப்பதையும் கண்டால், நமக்கே மகிழ்ச்சியாக இருக்கிறது. முன்பு போலத் தெருக்களிலும், நடைபாதைகளிலும் அலைய வேண்டியதில்லை. உட்கார்ந்த இடத்திலிருந்தே தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைத்தால் யார்தான் மன நிம்மதி பெற மாட்டார்கள்?

அதனுல்தாேேன என்னவோ, முதல்வர் இங்கு வந்தபோது, '' தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளித்த மன்னவனே வருக, வருக'' என்ற வைர எழுத்துக்களைப் பொறித்தனர் போலும்.

காலை 7-30 மணிக்கு உப்புமாவும், தேநீரும் எல்லாத் தொழு நோயாளிகளுக்கும் வழங்கப்படுகின்றன. பகல் 12 மணிக்கு

அ ிசிச் சாதம், சாம்பார், பொரியல்; மாலை 4 மணிக்குத் தேநீர். இரவு 7 மணிக்கு அரிசிச் சாதம், ரசம், அல்லது புளிக் குழம்பு, பொரியல். இப்படி உணவுக்கு மட்டும் ஓர் ஆளுக்கு ரூ. 1·50 செலவு ஆகிறது.

இங்கேயே சமையல் எல்லாம் செய்யப்படுகிறது. இதற்காக இரண்டு சமையற்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆண்களுக்குக் கைத்தறி வேட்டியும், சட்டையும், பெண்களுக்குப் புடவையும் இரவிக்கையும் கொடுக்கப்படுகின்றன.

ஒரு கூடத்தில் தற்காலிகமாக அலுவலகம் ஒன்று செயல்படுகிறது. இங்குக் கண்காணிப்பாளர், மருத்துவ வல்லுநர், நிருவாக அலுவலர், பண்டகக் காப்பாளர், கணக்கர், செவிலியர், மருந்தாளுநர், மற்ற ஊழியர்கள் இருந்து பணிபுரிகின்றனர். இவர்களனைவரும் இந்நோயாளிகளிடம் மிகப் பரிவுடன் பேசிக் கவனித்து வருவதைக் கண்டால், ' ஒருவருக்கொருவர் உதவி செய்வதாலன்றோ இவ்வுலகம் வாழ்கிறது ' என்ற உண்மை புலப்படுகிறது.

இந்த மறு வாழ்வு இல்லத்தில் நிரந்தர மருத்துவ அதிகாரி ஒருவரை அரசு நியமித்திருக்கிறது. இவர் இங்கேயே தங்கி, இந்நோயாளிகளுக்கு உறுதுணையாக இருந்து வருவார். மாநிலத் தொழுநோய் அதிகாரிக்கு உதவியாக இன்னும் ஒரு டாக்டரும் பணிபுரிகிறார். இவர்கள் தமிழ் நாட்டில் இன்னும் ஐந்து இடங்களில் துவக்கப்படவிருக்கும் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்களைப் பார்வையிடுவார்கள்.

இந்தப் பரனூர் மறு வாழ்வு இல்லத்துக்கு இன்னும் அறுபது தொழு நோயாளிகள் வரவழைக்கப்பட விருக்கின்றனர். ஓரிரு நாட்களில் அவர்கள் இங்கு வந்து தங்கிச் சிகிச்சை பெறுவார்கள்.

நோயாளிகள் தம் நோயை மறந்து, செயல்பட இங்குத் தொழிற்கூடம் ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். இப்போது முதல் கட்டமாகப் பாய் நெசவு நடைபெறுகிறது. தொழு நோயாளிகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும் நெய்வதைக் கண்டு களிப்படையாதார் யார் ?

படிப்படியாகக் கைத்தறித் துணி நெசவு, தோட்ட வேலை, தச்சுவேலை, காலணிகள் செய்தல், கோழிப் பண்ணை நடத்துதல் போன்ற பயனுள்ள வேலைகளில் இவர்களுக்குப் பயிற்சிதரப்படும். இதற்கென ஒவ்வொரு தொழிலிலும் தேர்ந்தவர்கள், இவர்களுக்கு அந்தந்தத் தொழிலைக் கற்றுக் கொடுப்பார்கள்.

யார் யாருக்கு எந்தத் தொழிலில் விருப்பமோ, அவரவர் அந்தந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ளலாம். காலை 8 மணியிலிருந்து 11 மணி வரையும், பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் இந்தத் தொழிலில் நோயாளிகள் ஈடுபட்டு, ஒரு பயனுள்ள பொழுது போக்கினையும், மனத் தெம்பினையும் பெறுகின்றனர்.

டாக்டர் ஒரு நோயாளியைப் பார்த்து " நீ எந்தக் குழு? (Group) " என்று கேட்கிறார். அதற்கு அந்த நேயாளி " நான் வில்லிவாக்கம் குழு " என்று பதில் சொல்கிறார். ஒவ்வொரு ஊரிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களை, அந்த ஊர்ப் பெயரிலேயே ஒரு ' குருப் ' பாக அமைத்திருக்கிறார்கள். உதாரணமாக, சைதாப்பேட்டையிலிருந்து வந்தவர்கள் சைதாப்பேட்டைக் குழு.

பரனூரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மறு வாழ்வு இல்லத்தில் 750 பிச்சைக்காரர்கள் தங்க வசதி இருக்கிறது. இதே போல் தமிழ்நாட்டில் துவக்கப்படவிருக்கும் மற்ற மறுவாழ்வு இல்லங்களிலும் இதே தொகையினர் தங்க வசதி செய்யப்படும்.

இந்த மறு வாழ்வு இல்லத்தில் ஓரளவு படித்தவர்களும் இருக்கிறார்கள். எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு முதியோர் கல்வித் திட்டமும் விரைவில் இங்குச் செயல்படவிருக்கிறது. ஒரு தொழு நோயாளி எட்டாவது வரை படித்திருக்கிறார். அவர் அலுவலக வேலைக்கு உதவியாகவும் இருக்கிறார்.

முதல்வர் அவர்கள் இந்த இல்லத்தைத் துவக்கி வைக்கும்போது, தொழு நோயால் பாதிக்கப்பட்ட முகமது அலி என்ற கவிஞர் வாழ்த்துப்பா பாடினார். அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் கலைஞர் அவர்கள், " இங்கு முகமது அலி என்ற தோழர் கவிதை இயற்றி அதனை இசையாக உணர்ச்சி கொப்புளிக்கப் பாடினார். அவருக்குக் கை விரல் இல்லை. ஆனால் கவிதை வளம் இருக்கிறது. உடலில்தான் நோயே தவிர, உள்ளம் புனிதமானது. சிலருக்கு உடை பளபளப்பாக இருக்கும். ஆனால், உள்ளே தொழு நோய் தேம்பி அலையும் " என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு கூறிய முதல்வர், " முகமது அலி உணர்ச்சிப் பிழம்பாகப் பாடினார் அதில் என்னைப் புகழ்ந்து பாடினார் என்பதற்கு அவர்களிடம் நான் கொண்டிருக்கிற பற்றுதான் காரணம் " என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

முப்பத்தைந்து வயது இளைஞரான முகமது அலி தொழு நோய்க்குச் சிகிச்சை பெற்றுவரும் கவிஞர். கலைஞருக்கு வாழ்த்துப்பா பாடித் தனது வெள்ளை உள்ளத்தை வெளிக்காட்டினார். இவர் தொழு நோயாளிகள் நலனில் மிகுந்த அக்கறை செலுத்துபவர். தொழு நோயாளர் சங்கத்தின் செயலாளராக இருக்கும் இவர் நிறைய நாடகங்கள் எழுதியுள்ளார். சில நாடகங்கள், கவிதைகள் வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. தமிழ் உள்ளம் கொண்ட இவர் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், " நான் தமிழால் வாழ்கிறேன். தமிழ் என் நோயை மறக்கச் செய்கிறது " என்கிறார் இவர். இவர் எழுதிய நாடகங்களில் நடித்தவர்கள், பரனூர் இல்லத்தில் கூடச் சிலர் இருக்கிறார்கள்.



பரனூர் இல்லத்தில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளி என். எஸ். சுகதேவன் சொல்கிறார் :

" நான் பிறந்தது மதுரை. என் நோயைக் குணப்படுத்திக் கொள்ள முதலில் செங்கல்பட்டு வந்தேன். அங்கு இடமின்மையால் ஒரு தனியார் நடத்தும் வியாசர்பாடி இல்லத்துக்கு வந்தேன். இப்போது அங்கிருந்து இங்கு வந்துள்ளேன். இங்கு எனக்கு எல்லாவிதமான வசதிகளும் கிடைக்கின்றன.

"உண்ண உணவு, உடுக்க உடை, படுக்கப் பாய், குளிக்கச் 'சோப்பு' எல்லாம் தருகிறார்கள். நல்ல காற்றோட்டமான இந்த இடத்தில் இருந்து சிகிச்சை பெறுவது மனத்துக்கு இதமாக இருக்கிறது. டாக்டரும் எங்களிடம் பரிவாக இருக்கிறார். விரைவில் என் நோய் குணமாகிவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. உடல் நிலை குணமானதும், எனக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொல்லியுள்ளார்கள்."

இருபத்தாறு வயதுள்ள இலட்சுமி என்ற பெண்மணி என்ன சொல்கிறார் ?

" நான் திருத்தணி வங்கனூரைச்சேர்ந்தவள். நான் அங்கு இருக்கும்போது மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இங்கு அந்தக் கஷ்டமில்லாமல் இருக்கிறேன். வேளா வேளைக்குச் சோறு கிடைக்கிறது. குளிப்பதற்குத் தனிஅறை இருக்கிறது. அரசாங்கம் எங்களை வாழவைக்க இவ்வளவு வசதியும் தருகிறது. இதற்கு நாங்க என்ன கைம்மாறு செய்வோம்....."

பரனூர் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லத்துக்கான இந்தப் பரந்த இடத்தின் பரப்பளவு 22·5 ஏக்கர். இன்னும் 16 குடியிருப்பு இல்லங்கள் கட்டப் போவதாக ஒரு கட்டட அதிகாரி கூறினார். மருத்துவ மனையோடு சேர்ந்த அலுவலகம், கண்காணிப்பாளர் இல்லம், செவிலியர் இல்லம் ஆகியவை கட்ட வேண்டியுள்ளதாம்.

இப்போதுள்ள ஒவ்வொரு குடியிருப்பும் 85 அடி நீளமும் 16 அடி அகலமும் உடையதாக, வசதி மிக்கதாக இருக்கிறது. இந்த இல்லத்துக்கு அருகே இருக்கும் ' வெட்டியான் குன்று ' என்னும் மலையில் குடி தண்ணீர்த் தொட்டியொன்றை அமைத்திருக்கிறார்கள். இது 6,000 காலன் நீர் கொள்ளும் அளவு உடையதாகும். குன்றுக்கு அருகே ' பெரிய ஏரி ' என்ற பெயரில் ஒரு ஏரி நீண்டு வளைந்து ஓடுகிறது.

பரனூர் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லம், ஒரு பயனுள்ள இல்லமாகத் திகழ்கிறதென்றால் அதற்கு மூலகாரணம் கலைஞரின் வெள்ளை உள்ளமும், அவருக்குப் பக்க பலமாக நிதிகளை அள்ளி அள்ளித் தந்த பொதுமக்களுமே என்றால், அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

—பி. வி. கிரி.



அரசுக்குச் சொந்தமான முதல் வணிகவரி அலுவலகம்

தமிழ்நாட்டின் மொத்த வருமானத்தில், ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு, வணிக வரி மூலம் தான் கிடைக்கிறது! ஆண்டொன்றுக்குச் சுமார் ரூபாய் 100 கோடி வணிக வரி மூலம் கிடைக்கிறது! ஆயினும் வணிக வரி வசூலிக்கும் அலுவலகத்திற்கென்று இதுவரை ஒரு கட்டடம் கூடத் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமாக இருக்கவில்லை! அந்தக் குறையைப் போக்கி விட்டது நீலகிரி மாவட்டம்!

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான முதலாவது வணிகவரி அலுவலகக் கட்டடம், ரூபாய் ஒன்றரை இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் கட்டப் பெற்றுள்ளது. இந்தக் கட்டடம் இரண்டு மாடிகளைக் கொண்டது. இதில், வணிகவரி செலுத்த வரும் மக்கள் வசதியாக உட்காருவதற்கும், அலுவலக வேலைகள் தடையின்றி நடைபெறுவதற்கும் ஏற்ற வகையில் 14 அறைகள் உள்ளன.

அந்த 14 அறைகளும், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஆண்டு தோறும் 14 இலட்சம் ரூபாய் வணிக வரியாக வசூலிக்கப்படுகிறது என்பதை நினைவூட்டுவதாக அமைந்துள்ளன!

14 அறைகள் கொண்ட நீலகிரி மாவட்ட வணிக வரி அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25—9—1971 அன்று திறந்து வைத்தார். அக்கட்டடத்தைத் திறந்து வைத்த முதல்வர் அவர்கள் தமிழ்நாடு அரசின் வரி வசூலிக்கும் கொள்கையைத் தெளிவுபடுத்திப் பேசினார். அவர் குறிப்பிட்டதாவது : —

''நீலகிரியை, மலைகளின் ராணி என்று சொல்வார்கள். ராணிக்குத் தேவையானது மலர். ஆகவே, உதகை நிகழ்ச்சிகளில் முதலாவதாக நான் மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்தேன், ராணிக்காக, அடுத்தபடியாக, ராஜா போடுவது வரிதான். அந்த வரிகள்—அந்தக் கேளிக்கைகள் தாங்க முடியாதவை என நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது ராணியும் இல்லை! ராஜாவும் இல்லை! மந்திரிகள் தான் இருக்கிறோம்!

அதுவும் இந்த அமைச்சரவை தாங்கக் கூடியவர்களுக்கு வரி-தாங்க முடியாத ஏழை எளியவர்களை வாழவைப்பதற்காகப் போடும் வரி-என்ற வரிக் கொள்கையைத் தான் கடைப்பிடித்து வருகிறது.

வரியில்லாமல் எந்த அரசையும் நடத்த முடியாது! தாங்கக் கூடியவர்கள் மீது, தாங்கும் அளவில், வரி விதிப்பதுதான் தமிழக அரசின் கொள்கையாகும்.

மலரிலே இருக்கின்ற தேனை, வண்டு எப்படி மலரும் நோகாமல்-தானும் நோகாமல் எடுக்கிறதோ-அப்படி வரி கொடுப்பவர்களும் நோகாமல்-வாங்குகிறவர்களும் நோகாமல் இருக்கும் அளவில் வரி விதிக்கப்பட வேண்டும் என்பதே நமது கொள்கையாகும்.

மக்களுக்கு வசதி பெருக்கிட முயற்சி செய்யும் அரசுக்கு வரி தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் நமது வரிக் கொள்கை இருக்கிறது.

அண்ணா வழி அறவழி; அமைதி வழி; அவ்வழி நின்று அதிகாரிகளும்-பொது மக்களும் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க, வரி வசூலிப்பதில் அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோமாக.



நெற்பயிரையும் களையையும் வேறுபிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிறோம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34—குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!



இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா
STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

P.9068

ஏழையின் வாழ்வும் வளம் பெற்றது

"பத்தொன்பது ஆண்டுகளாகப் பட்டா கிடைக்காமல் கஷ்டப் பட்டு வந்த நான், தங்கள் ஆட்சியில் தான் பட்டா பெற்றேன். நீங்கள் என் மகன் மாதிரி. தாங்கள் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து மகராசனுக இருக்க வேண்டும்!" என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் மு. கருணநிதி அவர்களை வாழ்த்தி மாலை அணிவித்துவிட்டுத் திரும்பினுர் 65 வயது மூதாட்டி ஒருவர்.

யாரும் எதிர்பாராமல் ஒரு நொடியில் நிகழ்ந்துவிட்ட இவ்வரிய நிகழ்ச்சியைக் கண்டு, சுண்டப்பாளையம் கலைமகள் திரையரங்கில், 26—9—1971 அன்று நடைபெற்ற 20,428 நில, வீட்டுமனை, தனிப்பட்டா வழங்கு விழாவிற்கு வந்திருந்த அனைவருமே வியப்படைந்தனர்.

கள்ளங் கபடற்ற அந்த ஏழைத்தாயின் வாழ்த்தைக் கேட்டு நம் முதலமைச்சர் அவர்கள் மகிழ்ந்தாரோ இல்லையோ தெரியவில்லை! ஆனல், நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

பறவைக்கும் கூடு உண்டு. பாம்புக்கும் புற்று அல்லது புதர் உண்டு. பூச்சிப் பூரான்களுக்கும் பொந்து உண்டு. ஆனல், பாவம் ஏழைக்கோ வீடில்லை என்றிருந்த அவல நிலையை மாற்றி, ஏழை எளியவர்களுக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கச் செய்து வரும் கலைஞரின் கருணையை எண்ணி வியந்தேன். என் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் சுரந்து, கன்னங்களில் வழிந்தது!

அதுகண்டு அருகில் இருந்த செய்தியாளர் ஒருவர், "என்ன தம்பி" ஏன் அழுகிருய்?" என்று கேட்டார்.

"நான் அழவில்லை! ஆனந்தக் கண்ணீர் இது!" என்றேன்.

முதல்வருக்கு ஏழை எளிய மக்கள் அன்புடன் மாலையணிவித்துக் கொண்டிருந்தனர்! விழா மேடைக்கு அருகில் ஏராளமான பேர் மாலை போடுவதற்காக அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர்! எல்லாரையும் மாலை போட அனுமதிப்பதானல், மாலை போடுவதற்கு மட்டுமே குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும் போலிருந்தது! அடுத்து, வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவிற்கு முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் செல்ல வேண்டியிருப்பதால், மாலை போடும் நிகழ்ச்சியைக் குறைத்துக் கொள்ளுமாறு ஒருவர் ஒலிபெருக்கி மூலம், அன்பு வேண்டுகோள் விடுத்தார். ஒரு சில அலுவலர்கள் மாலை போட வருபவர்களைத் தடுத்துக் கூடப் பார்த்தனர். ஆனல், அன்பினுல் உந்தப்பட்ட மக்கள், அலுவலர்களின் தடுப்பையும் மீறி, ஆர்வத்துடன் விரைந்து ஓடி வந்து முதல்வருக்கு மாலை போட்டுக் கொண்டே இருந்தனர். மக்களின் அன்பு வெள்ளத்தை யாரால்தான் தடுக்க இயலும்? மாலைகள் மலையெனக் குவிந்து கொண்டிருந்தன!

ஏழை, எளிய, பாட்டாளி, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் முதலமைச்சரிடம் காட்டும் அன்பை எண்ணிச் சிந்தையிலாழ்ந்தேன்! என் உடல் தான் அங்கு இருந்ததே ஒழிய உள்ளம் அங்கே இல்லை! எங்கெங்கோ எண்ணச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது! பட்டா வழங்கும் விழாவிற்கு வரும் வழியில் கண்ட காட்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக, என் மனத்திரையில் ஓடியது!

சுண்டப்பாளையத்தை நோக்கி நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த ஜீப் விரைந்து சென்று கொண்டிருந்தது. கோவை நகரின் வீதிகளிலே புத்தம் புதிய வண்ண வண்ணக் கார்கள், எண்ணற்றுப் போய்க் கொண்டிருந்தன. அந்த வீதிகளின் இரு மருங்கிலும் அழகு மிளிர் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் காட்சியளித்தன. இந்தக் காட்சிகளைக் கண்ட என் உள்ளம் கோவை நகரின் வளர்ச்சி கண்டு பெருமிதமடைந்தது. மேட்டுக் குடியினர் எனப்படும் மாளிகைவாசிகளும், தங்கள் மாளிகையை விட்டு வெளியே வந்து சாலையின் இரு மருங்கிலும், தங்கள் குடும்பத்தினருடன் முதலமைச்சர் அவர்களின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் முகம் மலர்ந்திருந்தது! அவர்களின் கண்கள், மேட்டுக்குடியினராகிய எங்களிடம் இறுமாப்பு இல்லை என்று எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன.



அண்ணு வழியில் அமைதியாக ஆட்சி நடத்தும் முதல்வரைக் காணப் பணக்காரர்கள் காத்துக் கொண்டிருந்த காட்சி உண்மையிலேயே கண்கொள்ளாக் காட்சியாகும்! ஏழையின் தோழனும் முதல்வரைக் காண

ஏழை எளிய மக்கள் திரண்டிருப்பதில் வியப்பில்லை. ஆனால், பணக்காரர்கள், அதுவும் தொழிலதிபர்கள், தங்கள் குடும்பத்துடன் முதல்வர் அவர்களைக் காணக் காலை இளம் வெய்யிலிலே காத்திருந்தது, முதல்வர் அவர்களின் பாரபட்சமற்ற ஆட்சியை வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

நகர எல்லையின் முடிவில் ஓர் குடிசைப் பகுதி. அந்தப் பகுதியில் வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிசை வாழ் மக்கள் கூடியிருந்தனர். அவர்களின் கையிலே மலர்கள்! மனத்திலே மகிழ்ச்சி! உழைத்து உழைத்துக் கூனிக் குறுகிப் போன அவர்கள் தாங்கள் அன்றாடங் காய்ச்சிகள் என்பதையும், அன்று வேலைக்குச் செல்லாவிட்டால் அன்றிரவு அவர்கள் வீட்டு அடுப்பு, புகையாது என்பதையும் பொருட்படுத்தாது கலைஞர் அவர்களைக் கண்டு, மலர் தூவி, வாழ்த்துத் தெரிவிக்கக் கூடியிருந்த காட்சி என் நெஞ்சை உலுக்கியது! நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன்! எங்கள் ஜீப்பைக் கண்ட குடிசை வாழ் மக்கள், முதலமைச்சர் அவர்கள் விரைவில் வரப் போகிறார் என்பதை உணர்ந்து கொண்டு, முதல்வரைக் கண்டு களிக்க வேண்டும் என்ற பேரார்வத்தோடு முன்னேக்கிச் சாலையின் குறுக்கே வர ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கண்களை உற்றுக் கவனித்தேன்! அப்பப்பா! என்ன ஆசை! எத்தனை ஆர்வம்! குழி விழுந்த கண்கள் என்றாலும் அவைகளிலே எத்துணை ஒளி!

'கலைஞர் வாழ்க!' என்ற ஒரு குரல் ஒலி கேட்டது! அதைத் தொடர்ந்து அங்குக் கூடியிருந்த மக்கள், 'கலைஞர் வாழ்க!' என்று விண்ணதிர முழக்கினர். அவர்களுடைய வாழ்த்தொலிகள் கலைஞர் அவர்களின் மேல் ஏழை எளிய மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவே இருந்தன! என் கண்களில் மகிழ்ச்சியால் கண்ணீர் துளிர்த்தது!

அதுபோலவே வழி நெடுகிலும் கிராமப்புற மக்கள் சுண்டப் பாளையம் வரை—ஏழு மைல் தூரத்திற்கு நின்றிருந்த காட்சி—அரும்புகள் என்று சொல்லக் கூடிய கிராமப்புறச் சிறுவர்கள் ஆவலோடு காத்திருந்த காட்சி—எவர் மனத்தையும் தொடக் கூடியதாகவே இருந்தது!

சுண்டப்பாளையம் கலைமகள் திரையரங்கை நெருங்கினோம். மேளதாளங்கள் முழங்க, முதல்வரை வரவேற்க மக்கள் திரண்டிருந்தனர். விழா மேடைக்குச் செல்லும் வழியின் இருபுறத்திலும் சேரணிப் படையினர், தமிழகத்தின் தளபதி கலைஞர் அவர்களுக்கு மரியாதை செலுத்த அணிவகுத்து நின்றனர்.

கலைமகள் திரையரங்கில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பட்டாப் பெறவந்த ஏழைமக்கள், வட்டம் வாரியாக அமர்ந்திருந்தனர்.

சற்று நேரத்தில் முதலமைச்சர் வந்துவிட்டார்! மாலைகள் அவர் கழுத்திலே குவிந்தன! குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவ்வாறு நினைவு அலைகளுக்கிடையே நீந்திக் கொண்டிருந்த பொழுது "கழக அரசை அமைத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்ட மன்றத்தில் முதன் முதலாகப் பேசுகிற நேரத்தில், இந்த அரசு தீட்டும் திட்டங்கள் எதுவானாலும் ஏழை, எளிய, பின்தங்கிய, கிராம மக்களின் நன்மையைக் கருதி—திட்டத்தின் பயன்கள் அவர்களுக்குச் சென்றடையும் விதத்தில் திட்டங்கள் தீட்டப்படும் என்று கோடிட்டுக் காட்டினார்" என்று முதலமைச்சர் அவர்கள் தமக்கே உரிய, வெண்கலக் குரலில், குறிப்பிட்டது என் காதில் விழுந்தது! நினைவு அலைகளிலிருந்து விடுபட்டேன்! முதலமைச்சரின் பேச்சை எழுதுவதற்கு ஆயத்தமானேன். அவர் பேசினார். உணர்ச்சி மயமான அவர் பேச்சைக் கேட்கும் உள்ளக் களிப்போடு குறித்துக் கொண்டேன். அந்தக் குறிப்புகள் இதோ!



'ஏழை எளியவர்களை வாழ வைக்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் விதத்தில் அண்ணா அவர்கள் தனது பணியைத் தொடங்கினார். அவரே அவற்றை முடித்து வைப்பார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இயற்கை செய்த சதி அவரை நம்மிடமிருந்து பிரித்து விட்டது. அவரது சிந்தனையோட்டத்தைப் பல ஆண்டுகளாக அறிந்து அன்புத் தம்பிகளாகிய நாங்கள், தொடர்ந்து அவர் வழியில் சென்று, ஏழைஎளிய மக்களாகிய உங்களுக்காகப் பணியாற்றி வருகிறோம். அந்த வகையில் தான் வீட்டுமனை நிலப்பட்டாக்களை ஏழைகளுக்கு வழங்கி வருகிறோம்.

இந்தியா சுதந்திரம் அடைந்த 22 ஆண்டுக் காலமாக இப்படிப் புட்டது கிடைக்கும் என்று எண்ணிய ஏழை மக்களுக்கு மிஞ்சியது ஏமாற்றம் தான்! கிராமத்துப் பாமர மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் நாங்கள் பணியாற்றி வருகிறோம். எங்களது ஆட்சியில், தங்களது வாழ்வில் புதிய ஒளி ஏற்படும் என்று ஏழை மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது.

குடிசை வாழ் மக்களின் அன்பைப் பெற்றுத்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். நீங்கள் விவசாயிகள்—கள்ளங்கபட மற்றவர்கள்—பால்போன்ற உள்ளம் படைத்தவர்கள்! வெகுளித்தனமான இயல்பு படைத்தவர்கள்! முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் இந்தக் காரணங்களாலேயே உங்களை அலட்சியப் படுத்தி வைத்தார்கள்! இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் இந்தக் காரணங்கள் பற்றியே உங்களை விரும்புகிறார்கள்!

நாட்டின் நாடி நரம்புகளாகிய உங்கள் நெஞ்சம் நெகிழாமல் இருந்தால்தான், ஏழை எளிய மக்களின் வாழ்வு குளிர்ந்தால் தான், நாடு நலம் பெறும் என்பதை அறிந்து நாங்கள் திட்டங்களைத் தீட்டி வருகிறோம். நல்லரசு நிலைத்தால்தான் ஏழைகளுக்கு வசதி ஏற்படும்.

'1960-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு வரை கோவை மாவட்டத்தில் 3,117 பேருக்குத் தான் நிலஒப்படை செய்யப்பட்டு இருந்தது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நாலரை ஆண்டுக் காலத்தில்கோவைமாவட்டத்தில் 8,471 பேர்களுக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது' என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏழு ஆண்டுகளில் 9,981 ஏக்கர் நிலத்தைக் கடந்த ஆட்சி, வீட்டு மனைக்காக ஒப்படை செய்தது.

இந்த நாலரை ஆண்டுக் காலத்தில் 22,776 ஏக்கர் நிலம், ஏழை மக்களுக்கு, வீட்டு மனைகளுக்காக, வழங்கப்பட்டு இருக்கிறது.

1960 முதல் 1967 வரை, வீட்டு மனைப் பட்டா பெற்ற மக்களின் எண்ணிக்கை 8,578

நாலரை ஆண்டு ஆட்சியில் 46,595 பேருக்கு நாங்கள் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி இருக்கிறோம்.

அடுத்து, கூட்டுப் பட்டாப் பிரச்சினை! கோவை மாவட்டத்தில் முன்பிருந்த ஆட்சியாளர்களால் 13,000 பேருக்கு மட்டுமே பட்டாப் பிரச்சினை தீர்க்கப் பட்டது.

இந்த நாலரை ஆண்டுக் காலத்தில் 65,000 பேர்களுக்குப் பட்டாப் பிரச்சினை தீர்க்கப் பட்டுள்ளது.

1972 க்குள் மின் வசதி

மின்சார வசதி 1933 முதல் 1966வரை 33ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் 25 சதவிகித கிராமங்களுக்குத்தான் தரப் பட்டிருக்கிறது. 1972-க்குள் எஞ்சியுள்ள 75 சதவிகித கிராமங்களிலும் மின்வசதி செய்துதரப் படவிருக்கிறது. 1972-க்குள் தமிழ்நாடு முழுவதிலும் மின்சார வசதி இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லும் அளவுக்குத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்.

குடிநீர் வசதி

சுதந்திரம் அடைந்த 22 ஆண்டுகளில் எல்லாக் கிராமங்களிலும் குடிதண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்த்து வைத்து இருக்க முடியும். ஆனால், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தயக்கம் காட்டி வந்து இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டுக் குடிதண்ணீர் வசதி அளிக்கப் பலகோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி (Protected water supply) அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இணைப்புச் சாலை வசதி

கிராமப்புறங்களில் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் இறந்துவிட்டால் அவனது பிணத்தைப் புதைக்க இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லவும் வழியில்லை. வயல் வரப்புகளின் வழியாகத் தூக்கிச் செல்லும் இழிநிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையினைப்போக்கக் கிராம இணைப்புச் சாலைகளை (Link roads) அதிகமாக்கத் தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

வேலை வாய்ப்பு

விவசாயம் செய்யும் நேரம் போக மிச்சமுள்ள நேரத்தில், வேறு வேலைவாய்ப்புகளில் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழகம் முழுவதும் 30,000 பேருக்குவேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்ற இனிமையான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்படி ஏராளமான திட்டங்கள் கிராமங்களுக்கு—கிராம மக்களுக்கு—இன்றைய ஆட்சியில் போடப்பட்டிருக்கிறது.

இரண்டே போதும்

திட்டங்கள் போடுகின்ற அதே நேரத்தில் மக்கள் தொகையும்



கூடுகிறது! கூடுகிறது என்பது கூடச் சரியல்ல; மக்கள் பெருக்கம் அதிகமாகிறது!

மூன்றும் ஐந்தும் எட்டு என்று கணக்கிடுவதும், ஏழும் நான்கும் பதினொன்று என்று கணக்கிடுவதும் கூட்டல்!

ஆனால் ஏழு— நான்கு என்று கணக்கிட்டு, இருபத்தெட்டு என்றால் அது பெருக்கல்! இந்த விகிதத்தில்தான் மக்கள் தொகை பெருகிவருகிறது!

இந்தப் பெருக்கத்தை நிறுத்த வேண்டும். ஏதோ ஆண்டவன்

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை 2

தந்தான் என்று பிள்ளைகுட்டிகளைப் பெருக்கிக் கொண்டிருந்தால், அரசு போடும் திட்டங்களின் பயன் சரிவர மக்களுக்குப் போய்ச் சேராது.

ஒரு குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் இருந்து 200 ரூபாய் வருமானம் என்ற அளவுக்குக் குடும்பம் இருந்தால், 100 ரூபாய் வீட்டுச் செலவுக்கும். 100 ரூபாயைக் குழந்தைகள் படிப்புக்கும் செலவிடலாம். ஆனால் 4 பிள்ளைகள் என்று குடும்பம் வளர்ந்தால், 25 ரூபாய்தான் ஒவ்வொரு குழந்தைக்கும் செலவிடக்கூடிய இக்கட்டான நிலை ஏற்படும். ஆகவே வீட்டுக்கும், நாட்டுக்கும் ஏற்படும் சங்கடத்தைத் தவிர்த்துக் குடும்பத்தைக் கட்டுப்பாட்டோடு வைத்துக்கொள்வதுதான் சாலச் சிறந்ததாகும். இரண்டு குழந்தைகள் போதும் என்ற முடிவைக் கிராம மக்கள் எடுக்க வேண்டும்.

தமிழக அரசின் நல்ல திட்டங்களை ஏழை எளியமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசு எடுக்கும் நல்ல காரியங்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்" என்று கூறி முதலமைச்சர் தன் உரையை முடித்துக் கொண்டார்.

கூடியிருந்த மக்கள் கூட்டம் எழுப்பிய கையொலி, அரசுக்கு உறுதுணையாக இருப்போம் என உறுதியளிப்பதுபோல் இருந்தது! திருவிழா ஒன்றிற்குக் குதூகலமாகச் சென்று வந்ததைப்போல் மக்கள் கலைந்து சென்றனர்!

அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டுவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்கு விரைந்து சென்றோம். வழிநெடுகிலும் ஏழைஎளியமக்கள் திரண்டு நின்று முதலமைச்சருக்கு வாழ்த்துக் கூறக் காத்து நின்றனர். அவர்களின் கனவுகளை நினைவாக்கும் கலைஞரை, கோவை மாவட்ட மக்கள் இதுவரை இல்லாத அளவுக்கு வாழ்த்தி வணங்கினர். ஏழைகள் வாழ்வும் வளம் பெறுகிறது என்பதற்கு இதைவிடச் சான்று வேறென்ன வேண்டும்!

செய்திகள்

திருடனைக் காட்டிக் கொடுக்கும் புதிய கருவி ஒன்று குனோப் நிறுவனத்தின் சார்பில் அண்மையில் சென்னையில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கருவி "குனோப் டிடெக்டிவ் ஏஜன்சி பிரைவேட் லிமிடெட்" என்னும் தனியார் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் பிரேம் குமாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

மிக மலிவான, அழகான அதன் விலை ரூ. 350. இதிலே சிறியதும் இருக்கிறது. இதைத் தொழிற்சாலைகளில் மட்டுமின்றி, வீடுகளிலும் வைக்கலாம். கதவு, சாளரம் இவற்றை யாராவது திறந்தால் இந்தக் கருவி உடனே சத்தம் எழுப்பிக் காட்டிக் கொடுத்துவிடும்.

• • •

தமிழ்நாட்டின் சிறந்த ஆசிரியர் என்ற பெயரைப் பெல்ஜியம் நாட்டுப் பெண்மணி ஒருவர் பெற்றுள்ளார்! அவருடைய பெயர் 'லிண்ட்ரிடா.'

நாகர்கோவிலுள்ள புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் 1963–ஆம் ஆண்டிலிருந்து தலைமைஆசிரியையாகப் பணியாற்றி வரும் 'லிண்ட்ரிடா' அவர்களுக்கு 8-10-1971 அன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் பரிசு வழங்கப்பட்டது.

இந்தியாவுக்கு 1954–ஆம் ஆண்டில் வந்த 'லிண்ட்ரிடா' அவர்கள், அதுமுதல் 1963–ஆம் ஆண்டு வரை திருவில்லிப்புத்தூரில் உள்ள புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார்.

• • •

புது டில்லியிலுள்ள இந்தியக் கூட்டுறவுக் கழகம், மாநிலங்களிலுள்ள மாநிலக் கூட்டுறவுக் கழகங்கள், வேறு சில மாநிலக் கூட்டுறவு நிறுவனங்கள், சில மத்திய வங்கிகள், மாவட்டக் கூட்டுறவுக் கழகங்கள் ஆகியன, கூட்டுறவு இயக்கச் சம்பந்தமாகக் கிழமை

செய்திகள்

வெளியீடுகள், திங்கள் வெளியீடுகள், இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியீடுகள், எனச் சுமார் 1,000 கூட்டுறவு இயக்கச் சம்பந்தமான பத்திரிகைகளை வெளியிடுகின்றன. அனைத்திந்தியாவிலும் உள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு பத்திரிகைகளில், கூட்டுறவுப் பத்திரிகைகள் மட்டும் 10 சதமாகத் திகழ்கின்றன.

• • •

1972, சனவரி, பிப்ரவரி திங்கள்களில் புது டெல்லியில் உலகப் புத்தகச் சந்தை நடைபெற இருக்கிறது. 1972–ஆம் ஆண்டினை அனைத்துலகப் புத்தக ஆண்டாகக் கொண்டாட வேண்டுமென்று 'யுனெஸ்கோ' முடிவு செய்திருக்கிறது.

• • •

சோவியத் நிபுணர்கள் அனுப்பிய லூனகோட் என்ற 'ஜீப்' கார் 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் நிலவில் இறங்கியது. ஆள் இல்லாத அந்தக் காரை, பூமியில் இருந்தபடியே சோவியத் நிபுணர்கள் இயக்கி வைத்தார்கள்.

அந்தக் கார் நிலாத் தரையில் ஓடி, பல ஆராய்ச்சிகளை நடத்தியது. அந்தக் காருக்குத் தேவையான மின்சாரம் சூரிய வெளிச்சத்திலிருந்து கிடைத்துவந்தது.

நிலவில் பகற் காலமான 14 நாட்களில் மட்டும் அந்தக் கார் ஓடிக்கொண்டிருந்தது. இரவுக் காலமான 14 நாட்களில் அந்தக் கார் ஓடாமல் நின்றுவிட்டது. அதற்குக் காரணம், சூரிய வெளிச்சம் இல்லாததால் மின்சாரம் கிடைக்காமலிருந்ததே யாகும்.

கடந்த ஓராண்டுக் காலமாக அந்த 'ஜீப்' கார் மொத்தம் 6½ மைல் தூரம் ஓடி, ஆராய்ச்சி செய்து, ஏறத்தாழ 20,000 படங்களைப் பூமிக்கு அனுப்பியுள்ளது.

இனிமேல் அந்த 'ஜீப்' கார் ஓடாது! பரிசோதனையும் செய்யாது! ஏனெனில், நிலா ஜீப் காரின் உட் பகுதியை எப்பொழுதும் சூடாக வைத்திருக்

செய்திகள்

கும் கருவி தற்பொழுது ஆற்றல் இழந்து விட்டது.

நிலாத் தரையில், முதன் முதலில் ஆள் இல்லாமல் ஓடி, சாதனை புரிந்த அந்த 'ஜீப், கார் நிபுணர்கள் எதிர்பார்த்ததைவிட அதிக நாட்கள் வேலை செய்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

• • •

பிரான்சு நாட்டில் ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஏழாண்டுகளாக ஒரு குகையில் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார். ஆராய்ச்சியின்போது ஒரு மண்டை ஓடு கிடைத்திருக்கிறது. அந்த மண்டை ஓடு 2 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதனின் மண்டை ஓடு என்று கருதப்படுகிறது. கல்லில் செய்யப்பட்ட 1 இலட்சம் ஆயுதங்களும் அந்தக் குகையில் கிடைத்துள்ளன.

• • •

அமைதிக்குப் பாடுபட்டதற்காக, இந்த ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த வில்லி பிராண்ட் என்பவருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. இதுவரை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த நான்கு பேர்களுக்கு அமைதிக்குரிய நோபல் பரிசு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

• • •

உலகத்தில் மிக அதிகமாக சைக்கிள் தயாரிக்கும் நாடுகளில் இந்தியா ஐந்தாவது இடம் வகிக்கிறது. இங்கே ஆண்டுக்கு மொத்தம் 19 இலட்சம் சைக்கிள்கள் உற்பத்தி ஆகின்றன. சோவியத் யூனியன், அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில்தான் இந்தியாவை விட அதிகமாக சைக்கிள்கள் செய்கிறார்கள்.

இந்தியாவில் 1965-ஆம் ஆண்டு உற்பத்தி 37,000 சைக்கிள்கள்தான். 1969–70-ல் மொத்தம்1,32,911 சைக்கிள்கள் ஏற்றுமதி செய்து, ரூ. 1·56 கோடி வருமானத்தை ஈட்டியது.

• • •



சிலம்பு விளம்பும் தமிழக ஒருமைப்பாடு!

கோவை இளஞ்சேரன்

சிலப்பதிகாரம் ஒரு வரலாற்றுக் காப்பியம். இது கண்ணகி, கோவலன் வரலாற்றைக் காப்பியச் சுவை கூட்டிக் காட்டும் நூல். கண்ணகியது கால் அணிகலனும் சிலம்பு, இவ்வரலாற்றில் சுக்கானக அமைந்தது. இச்சிலம்புபற்றிய நிகழ்ச்சி மேம்பட்டு- அதிகாரப்பட்டு—வரலாற்று முனையை இட்டுச்செல்வதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. இது கட்டுக் கோப்பான நூலமைப்பில் அமைந்தது. ஆற்றொழுக்கான நிகழ்ச்சி ஓட்டத்தை உடையது.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நிகழ்ந்து, தனிமனை வாழ்வு தொடங்கியது முதல், அவர்கள் இருவரும் மதுரைப் பயணத்தை மேற்கொண்டு கவுந்தியடிகள் துணையுடன் சோழநாட்டின் வளங்களைக் கண்டவாறே உறையூரை அடையும் வரையுள்ள நிகழ்ச்சிகள் சோழநாட்டில் நிகழ்ந்தவை. இவை பத்துக் காதைகளாய் உள்ளன. காதை என்பதற்குச் செய்யுள் என்பது பொருள். செய்யுளால் அமைந்த ஓர் உட்பகுதி என்னும் கருத்தில் இங்கு அமைந்துள்ளது. பத்துக் காதைகளும் ஒரு காண்டமாய்ச் சோழ நாட்டின் தலைநகராம் புகார் நகரின் பெயர் பெற்றுப் புகார்க்காண்டம் என அமைந்துள்ளது.

வரலாறு பயணத்தோடு தொடர்கிறது.

பயணத்தை உறையூரினின்றும் மேற்கொண்டது முதல் கண்ணகி மதுரையின் மேற்கெல்லையில் உள்ள கொற்றவை முன்னர்த்தன் பொற்றொடியைத் தகர்த்து, வையையாற்றின் கரைவழியே நெடுவேள்குன்றத்தில் அடிவைத்தேறி, 14 நாட்கள் அவனத்தோடு நின்று, கோவலன் காட்சி கண்டு மறைந்தது வரையுள்ள நிகழ்ச்சிகள் பாண்டிய நாட்டில் நிகழ்ந்தவை. இவை பதின்மூன்று காதைகளாய் உள்ளன. பதின்மூன்று காதைகளும் ஒரு காண்டமாய்ப் பாண்டிய நாட்டின் தலை நகரமாம் மதுரை நகரின் பெயர்பெற்று மதுரைக் காண்டம் என அமைந்துள்ளது.

மேலும் வரலாறு அமைகிறது.

கண்ணகி குன்றின்மேல் நின்று மறைந்ததைக் கண்ட குன்றத்துக் குறவர்கள் குரவையாடிப் போற்றியது முதல், கண்ணகிக்குச் செங்குட்டுவன் கோட்டம் அமைத்துக் கண்ணகியிடம் வரம்பெற்றது வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சேரநாட்டில் நிகழ்ந்தவை. இவை ஏழு காதைகளாய் உள்ளன. இவை ஒரு காண்டமாகிச் சேர நாட்டின் தலைநகரமாம் வஞ்சி நகரின் பெயர்பெற்று வஞ்சிக் காண்டம் என அமைந்துள்ளது.

இவ்வமைப்பில் சிலம்பு மூன்று காண்டங்களில் முப்பது காதைகளாய் விரிந்து ஒலிக்கிறது. இம்முப்பதும் வேறு பல முப்பது ஒலிகளாய் ஒலிக்கின்றமையும் ஒரு அமைப்பாகிறது.

தமிழ் மூன்று (இயல், இசை, கூத்து). மூன்று நாடு (சோழ, பாண்டிய, சேரநாடு). மூன்று நகர்

(புகார், மதுரை, வஞ்சி). மூன்று ஆறு (காவிரி, வையை, பேரியாறு). மூன்று தலைமக்கள் (கண்ணகி, கோவலன், மாதவி). மூன்று மன்னர் (சோழர், பாண்டியர், சேரர்). மூன்று இலாஞ்சனை (புலி, மீன், வில்). மூன்று மலர் (ஆத்தி, வேம்பு, பனை). மூன்று சமயம் (சமணம், சைவம், வைணவம்). மூன்று கருத்து (கற்பு, செங்கோல், ஊழ்). இவ்வாறு உள்ளொளிகள் மூன்று மூன்றாய் முப்பதாகி நூலெங்கும் பரவலாய் ஒலித்து நெஞ்சை அள்ளுகின்றது.

தமிழகம் முற்காலத்தில் சோழநாடு, பாண்டியநாடு, சேர நாடு எனப் பிரிந்திருந்தது. இவ்வரலாறு இயல்பாகவே அம் முப்பெருநாடுகளிலும் நிகழ்ந்தது. இவ் வியல்புக்கு ஏற்பவே இந்நூல் மூன்று பெரும் பகுப்புகளாக—காண்டங்களாக— அமைக்கப் பட்டுள்ளது. இவ்வமைப்பு நூல் அமைப்புக் குரிய நிறைவுகளில் ஒன்றாகிறது.

இவ்வமைப்பையே வேறு ஒரு வகையில் குறையாக நோட்டமிடலாம்.

'தமிழ் மன்னர் தமக்குள் பகைத்துப் பிரிந்து நின்றவர் ஆவாரே; தமிழர்க்குள் பிரிந்த அப்பகை நிலையை நினைப்பூட்டும் வகையில் இந்த மூவகைப் பகுப்பு நிற்கிறதே; மன்னர்தாம் தனித்தனியே பிரிந்து நின்றார்களே; நூலிலும் அப்பிரிவோ வேண்டும்? நூல் அமைப்புக்கு இப்பிரிவு பாங்கானாலும், கருத்து நோட்டத்தில் தீங்காகிறதே'—என்னும் கருத்துத் தோன்றலாம்.

இக்கருத்தோடு நூலில் நுழைந்து நோக்கினால் இதற்கு மாறுபட்ட முடிவே முடிசூடித் தோன்றும்.

நூலாசிரியர் இளங்கோவடிகளாரது நோக்கங்களில் ஒன்று முடிமன்னர் மூவரையும், மூன்று நாட்டையும் தம் நூலிலாவது ஒன்றுபடுத்தித் தமிழகத்து ஒருமைப்பாட்டைக் காணவேண்டும்—காட்டவேண்டும் என்பது. இதனை வாய்ப்பில் காட்டியும், அமைப்பில் நாட்டியும் நிறைவேற்றுகின்றார்:

நூலில் வாய்ப்பு என்பது, ஆசிரியன் தன் உட்கிடக்கையைத் தனியாகத் தலைப்பிட்டுக் கருத்து விளக்கமாகக் கூறுவது அன்று. வரலாற்று ஓட்டத்தில் தன் கருத்தைத் குறிப்பதற்கு ஓரளவேனும் பொருந்தும் இடத்தில் புகுந்துகொண்டு கூறுவது.

இளங்கோவடிகள் பல முனையான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு பிளவுபட்டுக் கிடந்த மன்னரையும், நாட்டையும் ஒன்றித்துக் கண்டு தமிழ்நாட்டு ஒருமைப் பாட்டை உருவாக்கிக் காட்டினார்.

வேனிற் காதையைத் தொடங்குகின்றார். இளவேனிற் பருவத்தில் மாரவேள்(மன்மதன்) ஆட்சியை வண்ணிக்கிறார். அப்பருவத்தில் மாரவேள் மூன்று நாடுகளிலும் கொட்டம் போடுகின்றான். இங்குக் குறிக்கப்பட வேண்டியது சோழ நாடு ஒன்றே. எனினும், பரந்த மனப்பாங்கை முன்வைத்து வட வேங்கடம், தென்குமரிக்கடல் எல்லைக்கு உட்பட்ட தமிழகம் என்று தொடங்குகின்றார்

''நெடியோன் குன்றமும், தொடியோள்
பௌவமும்

தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு''

—என்று முழுமைத் தமிழகத்தைக் கூறி அத் தமிழகத்திற் சிறந்த,

''மாட மதுரையும், பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும், ஒலிபுனற் புகாரும்
(மாரவேள்) அரைசு வீற்றிருந்து''—என

நான்கு நகரங்களைக் குறிக்கிறார். மூன்று நாட்டுப் பிரிவைக் காட்டுதல் அவருக்கு எண்ணமாக இருக்குமானால், மூன்று தலை நகரங்களை மட்டும் குறித்திருக்க வேண்டும். நான்கு நகரங்களைக் குறித்துள்ளதை நோக்கின் நாட்டுப் பிரிவைக் காட்டுதல் அவரது நாட்டம் அன்று என்பது விளங்கும்.

கட்டுரைக்காதையில் மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் பாண்டியரது சிறப்பைச் செப்பிச் செல்கிறது. ஒரு கதை சொல்கிறது. அதை ஒரு வாய்ப்பாக்கினார் அடிகளார்.

'சோழநாட்டுப் பராசரன் என்பான், சேரநாட்டில் அறக்கொடை பெற்று, அதைப் பாண்டிய நாட்டில் வழங்கினான்'

—என ஓர் இரவலன் கதைவழியே தமிழகத்தை ஒருமைப்படுத்திக் காட்டுகிறார்.

இடைக்குல மடந்தை மாதரி பாண்டியனது அரண்மனையில் எழுந்த காலை முரசொலியைக் கேட்கிறாள். தனக்கு அன்று அரண்மனைக்கு நெய் படைக்கும் முறை எனத் தன்மகள் ஐயையிடம் சொல்கிறாள். தன் மன்னனும் பாண்டிய மன்னனது இமய வெற்றியைக் குறித்து வாழ்த்தத் தொடங்குகின்றாள். இங்கே இளங்கோவடிகள் மற்றிரு மன்னர்களது இமய வெற்றியையும் கூட்டிப் பேச வைக்கிறார்.



''கயல் எழுதிய இமய நெற்றியின்
அயல் எழுதிய புலியும் வில்லும்''—என்கிறாள் மாதரி. இவள் கூற்றில் கயல் முதற்கண் சிறப்பாய் அமைந்து புலியும் வில்லும் அதற்கு அயலாய் அமைந்துள்ளனவே என்று எண்ணலாம். அரசன் தொடர்பில் குடிமக்களோ அரசு அலுவலரோ பேசினால் அரசனை வாழ்த்திவிட்டுப் பேச்சைத் துவங்குதல் அக்கால மரபு. அம்மரபுப்படி பாண்டியன் ஒருவனே வாழ்த்தப்பட வேண்டிய முறையினன். அதனால், அவனை முற்கூறவைத்துப் பின்இரண்டு இலாஞ்சனைகளையும் இணைத்தார்.

இவ்வாறு ஒன்றோடு இரண்டை இணைக்காமல் மூன்று இலாஞ்சனைகளையும் ஒரு சேரக் கூறும் வாய்ப்பைப் பகைவன் பேச்சில் வைப்பது ஒரு திறம் எனலாம்.

வடவாரிய அரசராம், கனக விசயர் பேசியதைக் குறிக்கும் இடம்: ''இமய நெற்றியில் விளங்கு வில், புலி, கயல் பொறித்த நாள் எம் போலும் முடிமன்னர் சங்கிலைப் போலும்'' என்பது பகைவர் பேச்சு. அவர் வாயில் மூன்றும் ஒருங்கு இணைந்துவரச் செய்கிறார். இவ்வாறு செய்தவர் பகைவரைத் தாக்க எழும் பேச்சிலும் ஒன்றிப்பை வைக்கிறார்:

கல் கொணரச் சேரன் செங்குட்டுவன் வட நாடு செல்ல விரும்புகின்றான். வில்லவன் கோதை என்னும் அமைச்சன் இதனை ஓலைவழி வடநாட்டு மன்னர்க்கு அறிவிக்கச் சொல்கிறான். இவன் உள்ளத்தில் தென்னாட்டாரது பிளவு—பகைப்பு தோன்றுகிறது. சேரனிடம் சொல்கிறான்:

''நும்போலும் வேந்தர் நும்மொடு இகலிக்
கொங்கர் செங்களத்துக் கொடுவரிக்
கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தனர் ஆயினும்''

—என மற்றிரு தமிழ் மன்னரது தோல்வியைக் குறித்தவன் வடபுலத்தாரை எண்ணி ஒருமைப்பாட்டில் முடிக்கிறான்:

''வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி
மண்டலை யேற்ற வரைக''

—என வடவர்க்கு அனுப்பும் ஓலையில் முத்திரையாக மூன்று இலாஞ்சனைகளையும் பொறிக்கச் சொல்கிறான். இவ்வாறு இவனைச் சொல்லவைத்து இளங்கோவடிகளார் தமிழக ஒருமைப்பாட்டைக் காட்டினார்.

அடுத்து ஒன்று.

கண்ணகி மறைந்த நெடுவேள் குன்றத்து வேங்கைக் கானலில் கண்ணகி கோவிலாம் ''மங்கல மடந்தைக் கோட்டம்'' உருவாகியுள்ளது. அங்கு நடு கல்லாய் நாட்டக் கண்ணகிச் சிலையைச் சேரன் செங்குட்டுவன் உரியாருடன் கொண்டு செல்கிறான். இவ்விடத்தில் கண்ணகியின் பெருமையைப் பேச முனைகிறார் இளங்கோவடிகளார். இமயத்தில் கல்லெடுத்துச் சிலை செய்த சேரன் இவ்விடத்தில் பாராட்டப்பட உரியவன். அவ்வெண்ணத்தை முந்திக்கொண்டு மூவேந்தரையும் ஒன்றுபடுத்திக் காட்டும் நோக்கம் முனைகின்றது. இந்நோக்கத்தைத் திறமையாகக் கொண்டு செலுத்துகின்றார்:

'செங்கோல் ஆட்சி யின்றேல் பெண்டிரது கற்பு சிறக்காது. இது பண்டையோர் நல்லுரை. கண்ணகி தன் கற்புத் திறத்தை வெளிப்படுத்தியதால் சோழனுக்குச் செங்கோல் ஆட்சிப் பெருமையை அளித்தவள் ஆனாள்'.

'கண்ணகியது வழக்குரையின் வெற்றியால் பாண்டியன் உயிர் துறந்த வகையில் செங்கோல் கெடின் உயிர் வாழார் பாண்டியர் எனப் பாண்டியனுக்குச் செங்கோல் ஆட்சிப் பெருமையை அளித்தவள் ஆனாள்.'

'சிலைக்குரிய கல்லாய்க் கண்ணகி கனக விசயர் தலைமேல் வந்தாள். இமயக் கல்லைக் கொணர்வேன் என்று வஞ்சினம் கூறிய சேரன் அதில் தவறாதவன் எனக் கல்சுமந்த பகைவரையே அறியச் செய்தவள் ஆனாள்.'

இவ்வாறு கண்ணகிச் சிலையை வாய்ப்பாக்கி முரண்பட்ட மூவரையும் அரண்கட்டி ஓரிடத்தே அமைத்தார்.

இவ்வொற்றுமைப் பாடலின் அடிகள் இவை:

''அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர் கற்புச் சிறவா
தெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ்
நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாதலின்
ஆர்புனை சென்னி அரசர்க் களித்துச்
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலங் காவல் மன்னவர்க் களித்து
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னர் அறியக்
குடதிசை வாழுங் கொற்றவர்க் களித்துச்''

சிலையான நங்கை என்கிருர். கண்ணகியின் வாய்ப்பில் இவ்வாறு ஒன்று சேர்ப்பினும், மூவர் பெயரையும் தனித்தனியே குறிக்க நேர்ந்தது. இவ்வாறு தனித்தனியன்றி ஒன்ருகவே குறிக்க ஒரு வாய்ப்பில் புகுந்தார் அடிகளார்.

அது ஒரு பெண் ஒப்பாரி தொடங்கும் இடம். அப்பெண் கண்ணகியின் தோழி தேவந்தி என்பாள். இவள் கண்ணகி கோட்டத்திற்கு வந்து கண்ணகி முன் நின்று ஓல மிடுகின்ருள். ஒற்றுமைக் கருத்தை வைக்க இவ்விடம் பெரிதும் இயைபுடையது அன்று. உள்நோக்கம் இவ்விடத்தையும் வாய்ப்பாக்கிக் கொண்டது. கண்ணகிச் சிலை இமயக்கல்லில் உருவான கருத்தை அமைத்துத் தேவந்தியை,

''முடிமன்னர் மூவரும் காத்தோம்பும்
தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து''

—என்று அரற்ற வைக்கிருர். இது ஒப்பாரி. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து புறப்படும் சொற்களைக் கொண்டது ஒப்பாரி.

அந்த ஒப்பாரியிலும், முட்டிக்கொண்டிருந்த மூவரையும் ஒட்டிக்கொண்டு இமயத்தைக் காக்க வைக்கிருர்.

இவ்வாறு இளங்கோவடிகளார்,
இயற்கை வண்ணனையை,
கதை ஓட்டத்தை,
வாழ்த்து மரபை,
பகைப் பேச்சை,
அறிவிப்புப் போக்கை,
கற்புத் திறத்தை,
ஓலமிடும் அவலத்தை
வாய்ப்பாகக் கொண்டு,

நகர்களை ஒன்றித்தார்;
மூன்று நாடுகளை இணைத்தார்;
இலாஞ்சனைகளை ஒருசேரப் பொறித்தார்;
மன்னர்களை ஒருமைப்படுத்திஞர்,

இவை நமக்கு வாய்ப்பில் காட்டப்பட்ட தமிழக ஒருமைப்பாடு.

அடுத்து,

நூல் அமைப்பில் இளங்கோவடிகள் எவ்வாறு ஒருமைப்பாட்டை நாட்டியுள்ளார்?

நூலின் அமைப்பு என்பதைப் பெரும் பகுப்புகள், உட்பிரிவுகள், அவற்றின் விரிகள் ஒரு முறைப்படத் திட்டமிடப்பட்டு அமைத்தல் எனலாம். இதனை இலக்கண நூல்,

''நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
—என உவமை.

காட்டி விளக்கும். இதற்கேற்பச் சிலப்பதிகாரம் எந்த அமைப்பில் நடக்கிறது என்பதைக் காணலாம்.

நூலின் முன்னுரையாகப் பதிகம் என்னும் பகுதி அமைந்துள்ளது. நூல் முன் காட்டப்பட்டவாறு மூன்று காண்டங்களில் முப்பது காதைகளாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் கட்டுரை என்று ஒவ்வொரு அகவற்பா அமைந்துள்ளது. இவை அவ்வக்காண்டத்தின் உள்ளீடான கருத்தைச் சுருக்கித் தருபவை. இதுபோன்றே நூலின் இறுதியில் நூற்கட்டுரை ஒன்று அகவற்பாவில் உள்ளது. இது நூற்கருத்தைக் குறிப்பது.

இவையன்றிக் காதையின் உள்ளீடான கருத்தைக் கூறும் வெண்பா ஒன்ருே, இரண்டோ, மூன்ருே ஒவ்வொரு காதையின் இறுதியிலும் அமைந்தமை தெரிகின்றது. இவ்வமைப்பு பத்துக் காதைகளில் ஒவ்வொரு வெண்பாவும், வேனிற் காதையில் இரண்டும், வழக்குரை காதையில் மூன்றுமாக உள்ளது. பிற காலப் போக்கில் காலமாயின போலும்.

இவ்வெண்பாக்களுக்கு அருஞ்சொல் உரையாசிரியரும், அடியார்க்குநல்லாரும் உரை எழுதியுள்ளனர். காணப்படாத வெண்பாக்களுக்கு இவர்களது உரைகளும் காணப்படாமையால் இவர்கள் காலத்திற்கு முன்னரே பிற வெண்பாக்கள் காணுமற்போயின என்று கொள்ளலாம். இவ் வெண்பாக்களின் நடையையும், சொல்வழக்கையும் கூர்ந்துநோக்கின் இவை நூல் எழுந்து அதற்குப் பதிகம் எழுந்த காலத்திற்குப் பின்னரும், இருபெரும் உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்னருமாகிய இடைக்காலம் ஒன்றில் எவராலோ எழுதிச் சேர்க்கப்பட்டவை என்பது புலனுகும்.

எனவே, சிதைந்துள்ள இவ்வெண்பா அமைப்பைக் கைவிட்டுப் பிற அமைப்புகள் கொண்டு எடுத்துக் கொண்ட ஒருமைப்பாட்டுக் கருத்தைக் காண நேர்கிறது.

ஒவ்வொரு காண்டமும் ஒவ்வொரு நாட்டு நிகழ்ச்சியைக் கொண்டது என்பதைக் கண்டோம். காண்டத்தின் இறுதியில் அமைந்த கட்டுரை அக்காண்டத்தை முடித்துவைத்துக் கடைகாப்புச் செய்வது. இக்கட்டுரை என்பது முதலில் அரசர் குலத்தைச் சுட்டிக் கூறித் தொடர்ந்து மூதூர், ஊர்நிகழ்ச்சி, ஆறு, இசை, கூத்து, காண்டக்கருத்து எனச் செல்கிறது. மூன்று காண்டத்துக் கட்டுரைகளும் இப்போக்கிலேயே மாற்றமின்றி அமைந்துள்ளன. ஒவ்வொன்றின் முடிவும்,

''ஒருபரிசா நோக்கிக் கிடந்த
புகார்க் காண்டம் முற்றிற்று''
''. . . . . . .ஒருபரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்டம் முற்றிற்று''
''. . . . . . .ஒருபரிசா நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்டம் முற்றிற்று''

—என ஒரே முறையில் ஒரு வகைச் சொற்ருெடரில் அமைக்கப்பட்டுள்ளது. இடையில் அமைந்த கருத்துக்களும் ஏறத்தாழ ஒரே வகையான சொற்ருெடர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலாவது சில சொல் மாற்றங்களைக் காண முடிகிறது. தொடக்கமோ, ஏமாற்றம் இல்லாத ஒத்த சொற்ருெடராக இளங்கோவடிகளின் உள்ளக் கிடக்கையை வெளியிடுகின்றது.

சோழ நாட்டின் காண்டமாம் புகார்க் காண்டக் கட்டுரை சோழரையும், சோழ நாட்டையும் குறிப்பதாக அமைவதாயினும், அதனைத் தொடங்கும் இளங்கோவடிகள் சோழகுலத்தைத் தனித்து மொழியாமல்,

''முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழகுலத்
துதித்தோர்''

—என மூவரையும் ஒன்றுபடுத்தி ஒருமை காட்டி அவருள் ஒருவரைச் சுட்டிக் காட்டுகின்ருர்.

இது போன்றே,
''முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டிய
[குலத்தோர்''

என மதுரைக் காண்டத்தும்,

''முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
குடதிசை யாளும் கொற்றங் கொண்டு
ஆர மார்பிற் சேரகுலத் துதித்தோர்''

—என வஞ்சிக் காண்டத்தும் ஒருங்கு கூறிச் சுட்டுகின்ருர். ''முடிகெழு வேந்தர் மூவர்'' என மீண்டும் மீண்டும், கூறிக் கூறி மகிழ்ந்தார் போலும்.

காண்டக் கட்டுரைகளில் தமிழக மன்னர்களது ஒருமைப்பாட்டைக் குறித்தவர் நூற்கட்டுரையில் தமிழ்நாட்டு ஒருமைப்பாட்டை நாட்ட எண்ணிஞர். தமிழ் நாட்டின் சுற்றெல்லை கூறி ஒருமைப்பாட்டிற்கு வேலி கோலுகின்ருர்:

''குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கில் தண்டமிழ் வரைப்பு''

—என்பது நூற்கட்டுரையின் தொடக்கம். நான்கு எல்லையிலும் தெற்கெல்லையை முதற்கண் அமைத்து ஒரு புதுமையையும் சிறப்பையும் கூட்டிஞர். நூலின் முடிவுரையாய் அமைந்த இந்த நூற் கட்டுரையில் தமிழக ஒருமைப்பாடு எவ்வகைப் பிரிவும் இன்றி நாட்டப்பட்டுள்ளது.

நூலுக்குள்ளும் மேலும் ஓர் அமைப்பால் இளங்கோவடிகள் தம் உட்கிடக்கையை நாட்டியுள்ளார்.

...முத்துக் காதை,
தேவந்தி காவற்பெண்டு, அடித்தோழி
ஆகியோரது பேச்சு, அரற்று,
செங்குட்டுவன் வியப்பு,
கண்ணகியாரது தெய்வநிலைப் பேச்சு,
வஞ்சிமகளிர் விளி,
வஞ்சிமகளிர் மன்னரை வாழ்த்தல்,
அம்மனை வரி, கந்துக வரி,
ஊசல் வரி, வள்ளைப்பாட்டு,

—எனும் அமைப்புக்களை உடையது.

புகார்ப் பெண்களாகிய தேவந்தி முதலியோர் அரற்றி ஓலமிட்டனர்; செங்குட்டுவன் வியந்து பேசினன்; கண்ணகியார் ஒலி தந்தார். வஞ்சிமகளிர் வம்மின் என்று அழைத்தனர். இவற்றின் பின்னர் அமைந்த அமைப்புக்களே இங்கே கொள்ளத் தக்கவை.

வஞ்சிமகளிர் கண்ணகியாரைப் போற்றி அவள் தொடர்பில் தமிழகத்து மும்மன்னர்களை வாழ்த்திப் பாடுகின்றனர். அப்பாடல்கள் பலவகை மகளிர் விளையாட்டுகளுக்கேற்பப் பாடப்படும் வரிப்பாடல்கள். பாடி விளையாடத் தொடங்குமுன் பொதுவில் வாழ்த்திப்

பாடுகின்றனர். இத்தொடக்கத்தில் இளங்கோவடிகளார் மும்முடி மன்னரையும் பாட வைக்கிருர் ; பாடுகின்றனர்;

''வாழியரோ வாழி, வருபுனல்நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்றன் தொல்
[குலமே''

''வாழியரோ வாழி வருபுனல்நீர்
[ஆன்பொருனை

சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன்
[தொல்குலமே''

''காவிரி நாடனைப் பாடுதும்
பூவிரி கூந்தற் புகார்''

—இவ்வாறு ஒரே அமைப்பில் மூவரையும் அடுத்தடுத்து அமைத்துப் பாடுகின்றனர்.

தொடர்ந்து அம்மனை வரி (அம்மனைக்காய்கள் மூன்று அல்லது நான்கை இரு கைகளிலுமாகக் கொண்டு மூன்று பெண்கள் நின்று, எறிந்தும், பிடித்தும் ஆடும் ஆட்டத்தின்போது பாடப்படும் பாடல்), கந்துகவரி (பந்தாடிக் கொண்டு பாடப்படும் பாடல்), ஊசல் வரி (ஊஞ்சலை ஊக்கிக்கொண்டும் ஆடிக்கொண்டும்

பாடப்படும் பாடல்) ஆகியவற்றைப் பாடி விளையாடுகின்றனர்.

இவற்றுள், முதற்கண் அம்மனை வரிப்பாடலைச் சோழனை வாழ்த்துவதற்கு அமைத்தார். அடுத்த கந்துக வரிப்பாடலைப் பாண்டியனை வாழ்த்துவதற்கு அமைத்தார். அடுத்த ஊசல் வரிப்பாடலைச் சேரனை வாழ்த்துவதற்குஅமைத்தார். இவை ஒவ்வொன்றும் மும்மூன்று பாடல்களைக் கொண்டவை. அவ்வவற்றின் ஒவ்வொரு அடியை மட்டும் காண்பதே போதுமானது ஆகும்.

அம்மனை வரி:

"சோழன் புகார்நகரம் பாடேலோர்
[அம்மானை"

கந்துக வரி:

"தென்னன் வாழ்க வாழ்கவென்று
[சென்றுபந்த டித்துமே"

ஊசல் வரி:

"விறல்விற் பொறிபாடி ஆடாமோ
[ஊசல்"

இவ்வாறு மூன்று வகையில் மூவரையும் தனித் தனியே வாழ்த்திய பின் முடிவாக வள்ளைப்பாட்டுப் (பெண்கள் நெல்லைக் குற்றும் போது பாடும் உலக்கைப் பாட்டு) பாடுகின்றனர். இளங்கோவடிகளார் மூன்று மன்னர்களையும் ஒரு சேர இந்த வள்ளைப் பாட்டில் அமைத்துப் பாடச் செய்துள்ளார்.

அவற்றின் பகுதிகள் :

"ஆழிக் கொடித்திண்டேர் செம்பியன்
[வம்பலர்தார்
பாழித் தடவரைத்தோட் பாடலே
[பாடல்" (சோழன்)
"மீனக் கொடிபாடும் பாடலே பாடல்,
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே
[பாடல்" (பாண்டியன்).
"பனந்தோடு உளங்கவரும் பாடலே
[பாடல்" (சேரன்)

பொதுவாழ்த்தாக வஞ்சி மகளிர் தொடங்கியது முதல் இவ்வள்ளைப் பாட்டு முடிய இளங்கோவடிகளார் அமைத்த அமைப்பை நோக்கின்,

தொடக்கத்தில் முடிமன்னர் மூவரையும்
[வாழ்த்தி,
மூன்றுவகை வரிப்பாடல்களில் தனித்
[தனியே வாழ்த்தி,
வள்ளைப் பாட்டில் முடிந்த முடிபாக மூவ
ரையும் வாழ்த்தித்

தமிழ் மன்னரிடையே ஒருமைப்பாடு திகழ வேண்டும் என்பதைக் குறிப்பில் உணர்த்தினார். இதன் வாயிலாகத் தமிழக ஒருமைப்பாட்டைக் கருத்தால் நாட்டினார்.

"வாழ்க இளங்கோ வடிகள் திருப்பெயர்" என்று நாம் வாழ்த்துவோம். இன்று அரசியல் இயக்கத்தால் பிளவுற்றுக் கிடக்கும் தமிழகத்தைச் சில பொது நிகழ்ச்சிகளில் யாவரையும் ஒன்றுகூட்டி ஒருமைப்பாட்டைக் காட்டும் டாக்டர் கலைஞரை நாம் வாழ்த்தி மகிழ்வோம்; "வாழ்க டாக்டர் கலைஞர்".

தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்

Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இது! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்— விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற முன்பே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்- வைத்திய ரத்னா

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND),V.V.S.,A.M.I.E

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி, S.I.

போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்!

41, நைனியப்பன் தெரு, G. T., சென்னை 1.

போன்: 21448

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண், 52670 - 52671
52672 - 52673

தந்தி, MONARCH

செலவைக் குறைக்கும் உழவுக் கருவி - 1

ஏக்கருக்கு 3,000 கிலோ புரதச் சத்து மிகுந்த தானியத்தையும், 15 முதல் 20 டன் வரை சத்துள்ள கால்நடைத் தீவனத்தையும் 100 முதல் 110 நாட்களுக்குள் கொடுப்பதால், வீரிய மக்காச்சோளம் தீவிரச் சாகுபடிக்கும், பரவலான சாகுபடிக்கும், பலபயிர் சாகுபடிக்கும் ஏற்றதாக இருக்கிறது. இதன் காரணமாகவே, இந்தியாவில் வீரிய மக்காச் சோளச் சாகுபடி விரைவாகப் பரவி வருகிறது. வீரிய மக்காச் சோளத் தானிய உற்பத்தியும் ஆண்டுக்காண்டு அதிகமாகி வருகிறது.

வீரிய மக்காச்சோளத்தைப் பயிரிடும் உழவர்கள், மக்காச் சோளக் கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்து எடுப்பதற்குப்படும் சிரமம் சொல்லுந் தரமன்று! பெரும்பாலான உழவர்கள், ஏராளமான கூலியாட்களைக் கொண்டு மக்காச் சோளக் கதிரை மூடியுள்ள தோகைகளை அகற்றிவிட்டு கதிர்களைத் தடிகொண்டு அடித்து மணிகளைப் பிரித்துத் தூற்றி எடுக்கின்றார்கள். ஏராளமான கூலியாட்கள் இவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுவதால், அதிகக் கூலிச் செலவு ஏற்படுகிறது; கால விரயமும் ஏற்படுகிறது. அத்துடன் இம்முறையில் மக்காச் சோள மணிகள் உடைந்து சேதமாவதுடன் தரமும் குறைந்துவிடுகிறது.

ஆனால் வசதி படைத்த சில உழவர்கள் மட்டும் மக்காச் சோளக் கதிரை மூடியுள்ள தோகைகளை கைகளால் அகற்றிவிட்டு, அவைகளைக் கையால் இயங்கும் அல்லது விசையினால் இயங்கும் மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியில் ஒவ்வொன்றாகச் செலுத்தி, மணிகளைப் பிரித்தெடுக்கின்றார்கள். ஆனால் இம்முறையிலும் மக்காச் சோளக் கதிரிலிருந்து மணிகளைப் பிரித்தெடுக்க அதிகச் செலவும், கால தாமதமும் ஏற்படுகிறது.

வீரிய மக்காச் சோளக் கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்தெடுப்பது பெரும் சிக்கலானதும் செலவு மிகுந்ததுமான செயலாகவும் இருப்பதால், பெரும்பாலான உழவர்கள் பெரும்பரப்பில் வீரிய மக்காச் சோளத்தைப் பயிரிடத் தயங்கி வந்தார்கள். குறைந்த செலவிலும், விரைவாகவும், மக்காச்சோளக் கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்தெடுப்பதற்கு ஏற்ற ஒரு கருவி இல்லையே என்று கவலைப்பட்டார்கள்.

அவர்களின் கவலையைப் போக்கிட முன் வந்தது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சித்தொழிற் கூடம்! ஆராய்ச்சிப் பொறியாளர்களின் அரு முயற்சியால், அந்த ஆராய்ச்சித் தொழிற் கூடத்தில், புதிதாக மக்காச் சோளக் கதிரடிக்கும் பொறி ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியில் மக்காச்சோளக் கதிர்களை மூடியிருக்கும் தோகைகளை உரிக்காமலேயே அப்படியே போட்டுத் தோகை வேறாகவும், தூசு வேறாகவும், மணிகள் வேறாகவும், மணிகள் ஒட்டியிருக்கும் தக்கைகள் (வெற்றுப் பூட்டைகள்) வேறாகவும் பிரிக்க முடிகிறது. இக்கருவியில் கதிர்களைப் போடும் வாய், சுழலும் உருளை, மணி நீக்கிய வெற்றுப் பூட்டையை வெளியே எறியும் பகுதி, மணிகளைத் தூய்மைப்படுத்தும் பகுதி, தூய்மைப்படுத்தப்பட்ட மணிகளை மேலே தூக்கிச் சென்று வெளியே கொண்டுவரும் பகுதி முதலியன உள்ளன. இக்கருவியைக் கொண்டு மக்காச் சோளக் கதிர்களிலிருந்து குறைந்த செலவிலும், விரைவாகவும் மணிகளைப் பிரிக்க இயலுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சித் தொழிற்கூடம், மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியில் 2 வகைகளை உருவாக்கியுள்ளது. அவற்றில் ஒன்று 5 குதிரை ஓட்டச் சக்தி கொண்ட மின்சார மோட்டாரினால் இயங்குவது. மற்றொன்று

டிராக்டருடன் இணைந்து இயங்கும் திறன் கொண்டது.

சிறு நிலக்கிழார்கள் மின்சாரத்தால் இயங்கும் மக்காச்சோளக் கதிரடிக்கும் கருவியை வாங்கி உபயோகித்துப் பயன் பெறலாம். இக்கருவியை எண்ணெய் இயந்திரம் மூலமாகவும் இயக்க இயலும்: இக்கருவியின் விலை (மின்சார மோட்டாரின் விலை நீங்கலாக) ரூபாய் 750. இந்த இயந்திரம் 8 மணி நேரத்தில், 6 டன் மக்காச் சோளக் கதிர்களை அடித்து மணிகளைப் பிரித்துக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தது.



டிராக்டர் வைத்துள்ள பெரு நிலக்கிழார்கள், டிராக்டருடன் இணைந்து இயங்கும் திறன்கொண்ட மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியை வாங்கி உபயோகிப்பது பெரும் பயன் அளிக்கும். டிராக்டரின் பின்புறம் அமைந்துள்ள சக்தி தரும் தண்டுடன் இணைந்து இக்கருவியை இயக்க இயலுமாதலின், டிராக்டர் வைத்துள்ளவர்களுக்கு இக்கருவியே ஏற்றதாகும். இக்கருவியின் விலை ரூபாய் 1,500. முப்பத்தைந்து குதிரை ஓட்டச் சக்தியுள்ள டிராக்டரால் இயக்கப்படுமானால், இக்கருவி 8½ மணி நேரத்தில் 10 டன் மக்காச் சோளக் கதிர்களை அடித்து, மணிகளாகவும், வெற்றுக் கதிர்களாகவும் பிரித்துக் கொடுக்க வல்லது.

இவ்விருவகைக் கருவிகளும், எளிதில் மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியான அமைப்புகளைப் பெற்றிருக்கின்றன. இக்கருவிகளில் சக்கரங்கள் பொருத்தப் பட்டுள்ளதால், விளை நிலங்களுக்கே கொண்டு சென்று கதிரடிக்கலாம்.

சிறுநிலக் கிழார்களும், பெருநிலக் கிழார்களும் மேற்கூறிய மக்காச் சோளக்கதிரடிக்கும் கருவிகளை வாங்கி உபயோகித்தால், மக்காச் சோளக் கதிரடிக்கும் செலவைக் குறைத்து அதிக இலாபம் பெறலாம். செலவைக் குறைத்துச் சிக்கனத்தை ஏற்படுத்தும் இக்கருவியை, உழவர்கள் கூட்டு அடிப்படையில் வாங்கி உபயோகித்தும் பயன் பெறலாம்.



கற்ப மூலிகை
வல்லாரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கும் முற்பட்டது நமது மூத்த தமிழ், என்றும் சீரிளமைத் திறம் பெற்றுத் திகழ்கின்ற நம் அருமைக் கன்னித் தமிழ் தன்னிடத்தே பல்கலைகளைக் கொண்டு ஒளிர்கின்றது. அப்பல்கலைகளுள் ஒன்றாகச் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்வது தமிழ் மருத்துவக் கலையாகும்.

தமிழ் எவ்வாறு காலத்தால் முற்பட்டதோ, காலக்கணக்கீட்டிற்கெல்லாம் அப்பாற்பட்டதோ அவ்வாறே அதனுடன் தொடர்புடைய தமிழ் மருத்துவமும் காலத்தால் முற்பட்டது. சித்தர்கள் என அழைக்கப்பெறுகின்ற அறிவியல் அறிஞர்களால் இம்மருத்துவம் வளர்க்கப்பட்டது. எனவே தமிழ் மருத்துவம், சித்த மருத்துவம் எனவும் வழங்கப்பட்டு வருகின்றது.

உலகின்கண் தோன்றுகின்ற கலைகள் அந்தந்த நாட்டின் இயற்கை, சமுதாயச் சூழ்நிலைகளுக்கும், மக்கள் பண்பாட்டிற்கும் ஏற்ப அமைகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. எனவே பண்பாட்டின் உறைவிடமாம் தமிழகத்தில் தோன்றிய இம்மருத்துவம் தன்னகத்தே பல சிறப்புகளையும் நுட்பங்களையும் பெற்றுத் திகழ்கின்றது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடாத்திய தமிழ்மக்கள் இயற்கை அன்னை அளித்த செல்வங்களையே, சிறப்பாக மூலிகைகளையே பிணிநீக்கும் மருந்தாகப் பயன்படுத்தினர். மூலிகை மருத்துவத்திற்குப் பின்பே மற்ற தீவிர அல்லது கடுமையான மருந்துகளைப் பயன்படுத்துவர்.

''வேர்பாரு, தழைபாரு
மிஞ்சினக்கால் மெல்ல
மெல்லப் பற்பச் செந்தூரம்
பாரே''

என்ற அடிகளால் இதை அறியலாம். தமிழகத்திற்கேயுரிய தமிழ் மருத்துவத்திலேயே சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்ற மூலிகைகள் பலவுண்டு. குப்பைமேனி, மிளகரனை, வல்லாரை முதலியவைகள் அவைகளில் சில. இக்கட்டுரையின் கீழ் கற்ப மூலிகைகளுள் ஒன்றாகிய வல்லாரையைப் பற்றிக் காண்போம்.

வல் ஆரை வல்லாரை எனப்பட்டது. இது ஆரை இனத்தைச் சார்ந்தது. ஆரை பல வகைப்படும். அவைகள் முறையே (1) ஆரை அல்லது நீராரை, (2) புளியாரை, (3) வல்லாரை, (4) செவ்வாரை, (5) புல்லாரை அல்லது நெடுவாரை, (6) வெள்ளாரை, (7) கடலாரை, (8) கல்லாரை அல்லது காட்டாரை, (9) வறலாரை எனப்படும்.

வல்லாரை நம் நாட்டிலும் இலங்கையிலும் குட்டை குளம், ஏரி, வாய்க்கால் வரப்பு இவைகளின் அருகே நீர்ப்பாங்கான ஓதம் நிறைந்த இடங்களிலும், சிறப்பாக சதுப்பு நிலப்பகுதிகளிலும் வளர்கின்றது. இது பூண்டு இனத்தைச் சேர்ந்தது.

டாக்டர் இரா. கண்ணன்

கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ இரண்டாயிரம் அடி உயரம் வரையில் வளரும். இலைகள் வட்டமாகவும் தொட்டுப்பார்க்க மிருதுவாகவும் இருக்கும். இதன் இலை ஓரங்களில் கதிர் அரிவாள் முனையை யொத்த பற்கள் காணப்படும். சுற்றளவு ஏறத்தாழ 1·3 முதல் 6·3 செ.மீ. உள்ளதாக இருக்கும்.

சிலர் வல்லாரையையும் வடமொழியில் பிரம்மி என்று வழங்கப்படுகின்ற பிரம்மி வழுக்கையையும் ஒன்று என்று கூறுவர். சில குணங்களிலும் இவைகளில் அடங்கியுள்ள இரசாயனப் பொருட்களிலும் சிறிது ஒற்றுமை உள்ளது எனினும் இரண்டும் முற்றிலும் வேறுபட்டதே.

வேறு பெயர்கள் :-

இதற்குப் பிண்டரி, சண்டகி, யோசனவல்லி சரஸ்வதி என்ற வேறு பெயர்களும் உண்டு. வடமொழியில் மண்டூகபரணி, மண்டூகி, மகோஷதி என்றும் தெலுங்கில் சரசுவதி ஆகு, பிரம்மி, பாபசா, போகுடு சீட்டு என்றும் மலையாளத்தில் குடுக்கம் என்றும், கன்னடத்தில் வொண்டிலாகி என்றும் இந்தியில் பிரம்மி, மண்டூகி, கூலகுடி என்றும் வழங்கப் பெறுகிறது. மேலும் பம்பாய் மாநிலத்தில் காரிவாணு எனவும், பீகாரில் பேங்சாக் எனவும் வங்காளத்தில் ஜலநீம் எனவும் வழங்கி வருகின்றார்கள். தாவர இயலில் ஹைடுரோகாடில் அசையாடிகா (Hydrocotyle Asiatica, Linn) என்பர்.

பயன்படும் உறுப்புகள் :-

இதன் எல்லா உறுப்புகளுமே மருத்துவப் பயனுள்ளது.

சுவை :-

துவர்ப்பு, கைப்பு, இனிப்பு.

வீரியம் :-

சீதம்.

பிரிவு :-

இனிப்பு.

செய்கைகள் :-

இதன் பொதுவான செய்கைகள் யாதெனில் இளைத்த உடலைத் தேற்றி (Alterative

உடல்தன்னை உரமாக்கும்' (Tonic) மேலும் உடலுக்கு மிக வெப்பத்தை உண்டாக்கி (Stimulant) சிறுநீரைப் பெருக்கித் (Diuretic) தள்ளும் தன்மையும் உடையது. இதற்கு ருதுவுண்டாக்கிச் (Emmenagogue) செய்கையும் உண்டு.

குணம் :-

அக்கரம், மலச்சிக்கல், இரத்தக்கிராணியால் பிறக்கும் வயிற்றுக்கடுப்பு ஆகியவை நீங்கும் என்பதைக் கீழ்க்கண்ட செய்யுளால் அறிகின்றோம்.

''அக்கரநோய் மாறும் அகலும் வயிற்றிழிவு
தக்க விரத் தக்கடுப்புத் தானேகும்—பக்கத்தில்
எல்லாரையும் அருள் மருந்தென்றேயுரைத்து நன்மனையுள்
வல்லாரையை வளர்த்துவை''
—தேரன் குணபாடம்.

மேற்கண்ட நோய்களையன்றி அடியிற்கண்ட நோய்களையும் போக்கும் குணம் இதற்குண்டு. சுரம், சயரோகத்திலுண்டாகும் தொண்டைக்கம்மல், பைத்தியம், யானைக்கால், அண்டவீக்கம், குட்டம், நெறிகட்டு, மேகம், மேகப்புகள், காயம், கட்டி வாதவீக்கம், புடை, கண்டமாலை, மார்பாணி, சூதகக்கட்டு முதலியனவாகும்.

மிக்க மருத்துவப் பயன் அளிக்க வல்லதும், கற்ப மூலிகையுமான வல்லாரையை அடிக்கடியோ அளவுக்கதிகமாகவோ பயன்படுத்தின் தீக்குணத்தைத் தந்து அதனால் தலைவலி, தலைச் சுற்றல் உடலெல்லாம் ஒருவித வலியும் உண்டாகும். இதன் தீக்குணத்திற்கு முறிவு கொத்துமல்லி எனச் சில நூற்களில் கூறப்பட்டுள்ளது.

இதிலடங்கியுள்ள இரசாயனப் பொருட்கள் :—

ஹைடிரோ காடிலின் C22 H33 (Hydrocotylin C22 H 33)
அசியாடி கோசைடு (Asiaticoside)
வல்லாரின் (Vellarine)
பெக்டிக் ஆசிட் (Pectic Acid)
அஸ்கார்பிக் ஆசிட்(Ascorbic acid)
சென்டோயிக் ஆசிட் (Centoic Acid C30 H48 O6)
சென்டலிக் ஆசிட் (Centelic acid C30 H4 C6)

வழங்குமுறையும் குணமும்:-

நன்கு முற்றிய வல்லாரை இலைகளை எடுத்து தூய்மை செய்து நிழலிலுலர்த்தி இடித்துத் தூள் செய்து மெல்லிய துணியில் சலித்து மேற்கண்ட நோய்கட்குப் பொதுவாகத்தினம் இருவேளை ஐந்து அரிசி எடை பசு நெய்யில் குழைத்துண்ணக் குணமாகும்.

கய நோயில் தொண்டைக் கட்டு, குரல் கம்மல் ஏற்பட்ட காலத்தும் மூச்சுறுப்புகளில் சளி தங்கி தொல்லை தருகின்ற நேரத்திலும் வல்லாரை, தூதுவளை இலைகளைச் சம அளவு எடுத்துச் சாறு எடுத்து 5—10 துளி பசுவின் பாலில் கொடுக்கக் குணமுண்டாகும்.

எல்லாச் சுரங்களுக்கும் இதன் இலை, துளசியிலை, மிளகு இவைகளைச் சமவெடை எடுத்து அரைத்துக் குன்றியளவு மாத்திரையாக உருட்டித் தினம் இருவேளை கொடுத்துவர அவைகள் சாந்தப்படும்.

இலையைச் சிற்றாமணக்கு எண்ணெய்விட்டு வதக்கி இளஞ்சூடாக அரைத்துக் கட்ட யானைக்கால், அண்ட வீக்கம், நெரிகட்டு, வாதவீக்கம், கட்டிகளின் வீக்கம் குணமாகும். வல்லாரை இலை ரசத்தையும் 4 துளி வீதம் பசும்பாலில் உள்ளுக்கும் சாப்பிட்டு வர மேற்கண்ட காரணத்தால் வரும் காய்ச்சலும் வராது.

'' வல்லாரைக் கற்பமுண
வல்லாரை யார்நிகர்வார்
கல்லாரைப் போல்கலங்காமல்—வல்லாரைச்
சாறுமல வணஞ்சாதி பத்திரியு முண்ணப்
பேருமடு வல்லைப்பிணி''
—தேரன் வெண்பா.

வல்லாரை இலையைக்கற்பமாய் உண்ணில், அறிவு துலங்கும். வல்லாரைச் சாற்றில், உப்பும் சாதிபத்திரியும் கூட்டிக் கொடுக்கப் பெருவயிறு வல்லை முதலிய பிணிகள் போம்.

குழந்தைகட்குண்டாகும் சருமவியாதிகள், இரத்தக்கேடு நரம்பு வியாதிகள் முதலியவைகளுக்கும் வயதானவர்கட்கு உண்டாகும் மேகம், வயிற்றுநோய், சுரம் முதலியவைகளுக்கும் இலைச் சாறும் பசுவின்பாலும் அதிமதுரத்தூளும் சேர்த்துக்கலந்து கொடுத்துவர மிகுந்த பலன் தரும்.

அதிக வெப்பம், சிறுநீர் கழியும்போது உண்டாகும் எரிச்சல் இவை நீங்க வல்லாரை, கீழாநெல்லி இவ்விரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துச் சுண்டையளவு தயிர், மோர் இவைகளில் கலந்து கொள்ளத் தீரும்.

குழந்தைகட்கு உண்டாகும் சீதபேதி, இரத்தக்கிரகணி, வயிற்றுக்கடுப்பு முதலியவைகளுக்கு 3, 4 இலைகளைச் சீரகம் கற்கண்டு கூட்டியரைத்துக் கொடுத்தும் அல்லது தனி இலையை அரைத்துக் கொப்பூழ் மீது பற்றிட்டும்வர குணமுண்டாகும்.

பெண்கட்குண்டாகும் குருதிச் சிக்கல் நீங்க வல்லாரை, வேலிப் பருத்தி இலைகளைச் சம அளவெடுத்து அரைத்துக் கழற்சிக் காயளவு வெந்நீரில் நான்கு நாள் கொள்ளவேண்டும்.

இரத்தக் கொதிப்பாலுண்டாகும் கொப்புளங்களைப் போக்க இலை சுரசத்துடன் கடப்பம் பட்டை, கருஞ்சீரகம், நெய் சேர்த்தரைத்துப் பூசி வரலாம்.

''வல்லாரையிலை மருவு
கற்பமாய்க் கொள்
வெல்லாப் பிணிகளுமிலா
மையா மெய்யினில்''

என்றவாறு இதைக்கற்பமுறையாயேனும், உணவு முறையேயானும் புசித்துவரின் அஃது உடற்கு வன்மையை ஈந்து நோயணுகா வகையைச் செய்யும்.

தொழுநோய்க்கு இது சிறந்ததாகக் கருதப்படுகின்றது. மேல்நாட்டு அறிஞர் சிலர் ஆராய்ச்சிக்குப்பின் இக்கருத்தை உறுதி செய்துள்ளனர். குறை நோயின் தொடக்கக் குறிகுணங்கள் கண்டவுடன் வல்லாரைச் சூரணம் பறங்கிப்பட்டைச் சூரணம் இரண்டையும் கலந்து பத்து அரிசி எடை வீதம் பசுவெண்ணெய்யில் தினம் மூவேளை பத்தியத்துடன் உண்ண சிறந்த குணத்தைத்தரும். பத்தியமாவது உப்பு, காரம், இனிப்பு பெண்போகம் நீக்கிப் பால்சோறு அல்லது மோர்ச் சோறேயுண்ண வேண்டும்.

வாழ்வில் முன்னேற்றமடைய மிகவும் தேவையான ஞாபகச் சக்தியைப் பெருக்கும் தனிச் சிறப்பு வாய்ந்தது வல்லாரையாகும். இதன் சூரணத்தையோ அல்லது இலையையோ தக்க அளவு பசும்பாலில் உண்ண மூளை நரம்புகளை வன்மைப் படுத்தி நல்ல ஞாபகச் சக்தியை வளர்க்கும்.

குழந்தைகட்குண்டாகும் தெத்துவாய்க்கு இதன் இலைகளை மெல்ல, குணத்தைத்தரும்

இலையுடன் வெந்தயமும் சேர்த்துக் குடிநீரிட்டு $\frac{1}{4}$-$\frac{1}{2}$ அவுன்சு வீதம் குழந்தைகட்குப் புகட்டச் சுரம் வயிற்றுக் கோளாறுகள் போம்.

இதனிலையிலிருந்து வல்லாரை உப்பு தயாரிக்கிறார்கள். இதைத் தக்க அனுபானங்களில் மேற்கண்ட நோய்கட்கு வழங்க குணம் தரும்.

வல்லாரைக்கற்பம் :—

வல்லாரையை யுண்ணில்
வயிற்றுவலி
யெல்லாமறு மெய்யினிளைப்
பகலும்
நல்லாயது சூரகண நாற்பது
நாளை
மெல்லா மனையோடு விழுங்கு
வதே.
—தேரன் சேகரப்பா.

வல்லாரையிலையை நிழலிலுலர்த்திப் பொடி செய்து 40 நாட்கள் பசுவின் பாலில் உட்கொள்ள வயிற்றுவலி, உடல் இளைப்பு நீங்கும். நல்ல ஞாபக சக்தியுண்டாகும்.

மேலும் வல்லாரையைக் கொண்டு பாவனைத்திப்பிலி வல்லாரை நெய், வல்லாரைத்தைலம் எண்ணெய், முதலியவைகளும் தயாரிக்கலாம். அவைகளின் செய்முறைகளை விவரிக்கின் மிக நீளும் என்ற காரணத்தால் விடப்பட்டது.

மேற்கோள்கள்

'தேரன் குணபாடம்'

'அகத்தியர் குணபாடம்'

'தேரன் சேகரப்பா'

'' குணபாடம் (மூலிகை வகுப்பு)— க. ச. முருகேசமுதலியார்.

'' குணபாடம் (தாது, பிராணி வகுப்பு)— தியாகராஜன். L.I.M.

'' நம்நாட்டு மூலிகைகள் ''— A. R. கண்ணப்பர்.

"Cyclopaedic Dictionary" of Indian Medicinal Plants" —T.V. Sambasivam Pillai.

"The Indigenous Drugs of India" —R. N. Chopra and others.

"The Indian Meteria Medica" K.M. Nadkarni.

"Glossary of Indian Medicinal plants" R. N. Chopra and others.

"Bava Prakasa"–Hindi Commentary- —Bramha Shankar Shastri.

"Unani Dravviagun Vigyan" Vaidyaraj Hakim Daljit Simhaji.

காலக் கண்ணாடி

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



கேளுங்கள் கொடுக்கப்படும்!

வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

வினா : எண்ணெய் பிழிந்தெடுப்பதற்கென்றே, சூரிய காந்திப் பயிர் செய்து, விதை பொறுக்கி, எண்ணெய் பிழிந்தெடுப்பவர் எவரேனும் தமிழ்நாட்டில் உண்டா? உண்டென்றால் அவர் முகவரி தரமுடியுமா? எனது தொழிலுக்குச் சூரிய காந்தி விதை எண்ணெய் வழக்கமாக வழங்கக் கூடியவர் எவராயிருப்பினும் சரியே!

—ரா. மதன்சிங்,
சமயபுரம்.

விடை : தற்பொழுது, வணிக முறையில் சூரிய காந்தி பயிர் செய்து, விதை எடுத்து, எண்ணெய் பிழிந்தெடுப்பவர் எவரும் தமிழ்நாட்டில் இல்லை. சூரிய காந்தி பயிரிட்டு, எண்ணெய் எடுத்துப் பயன்படுத்தும் ஆராய்ச்சியில் கோயம்புத்தூரில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. ஒரு சில உழவர் பெருமக்களும் தற்பொழுதுதான், சூரிய காந்தி பயிரிடுவதில் ஆர்வம் கொண்டு, பரிசோதனையாகக் கொஞ்சம் கொஞ்சம் நிலப்பரப்பில் பயிரிட்டுள்ளார்கள். கோவையில் நடைபெறும் ஆராய்ச்சியில் சூரிய காந்திக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகவே தெரியவருகிறது. தாங்கள் மேற்கூறப்பட்ட ஆராய்ச்சி நிலைய இயக்குநர் அவர்களுடன் தொடர்பு கொள்வதே நல்லது. தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

வினா : என்னுடைய நிலங்கள் நல்ல செவ்வல் தரையாகவும், சத்துள்ள பூமியாகவும் உள்ளது. கிணற்றுத் தண்ணீர் போதுமானதாக உள்ளது. ஆப்பிள் உற்பத்தி செய்ய விரும்புகிறேன். என் ஊர் சீதோஷ்ண நிலையில் வளருமா? அதற்கான ஆலோசனையைத் தயவு செய்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

—சி. சீனிவாசப் பாண்டியன்,
சவலாப்பேரி.

விடை : ஆப்பிள் பயிரிட குளிர்ச்சியான மலைப்பிரதேசமே ஏற்றது. மற்ற இடங்களில் ஆப்பிள் கன்றுகளை நட்டு என்னதான் பராமரிப்புச் செய்தாலும், ஆப்பிள் கன்றுகள் இறந்து விடும். கொடைக்கானல் பகுதியில் காணப்படும் பருவநிலையும், மண் வளமும் தங்கள் ஊரில் இருக்குமானால் ஆப்பிள் பயிரிட முயற்சி செய்யுங்கள். இல்லாவிட்டால் இம் முயற்சியில் தயவு செய்து இறங்க வேண்டாம்.

வினா : தமிழரசு சிறு விவசாயிகளுக்கு மோட்டார் கடன் தருவதாக அறிந்தோம். அதன்படி நான் 3 H.P.-க்கு பணம் வாங்கியுள்ளேன். எலெக்ட்ரிக் கடைக்காரரிடம் பணம் உள்ளது. கடைக்காரர் 3 H.P. மோட்டார் மட்டும் தந்துள்ளார். மீதிச் சாமான்கள் இன்னும் தரவில்லை. சாமான்களில் உறுதியும், இடமும் உள்ளவற்றை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? கடைக்காரர் இன்றுபோய் நாளை வா என்று கூறிக்கொண்டே இருக்கிறார். கம்பம் போடுவதற்கு யாரை அணுக வேண்டும்? இரண்டு கம்பங்களுக்கு ஆகும் செலவையும் விரிவாகக் கூறவும்.

—சீரங்கக்கோனார்,
வாழப்பாடி.

விடை : தாங்கள் எந்த அலுவலகத்தின் மூலம் கடன் வாங்கினீர்களோ, அந்த அலுவலகத்திற்குச் சென்று, கடைக்காரர் மீதிச் சாமான்களைக் கொடுக்கவில்லை என்று கூறி, உடன் அவைகளைக் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுங்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லாச் சாமான்களையும் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டே, கடைக்காரர் பணம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடும். கடைக்காரர் உண்மையாகவே காலம் தாழ்த்துவதாகத் தாங்கள் கருதினால் கடன் அனுமதித்த அலுவலரிடம் தாங்கள் புகார் செய்யலாம்.

மின்சாரக் கம்பம் போடுவதற்கு உங்கள் பகுதியில் உள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குச் சென்று, பிரிவு அலுவலர் (Section Officer) அவர்களை அணுகவும். அவர்தான் இரண்டு கம்பங்களுக்கு எவ்வளவு செலவு ஆகும் என்பதைத் தெரிவிக்க இயலும். எனவே அவரைச் சந்தித்துக் கலந்தாலோசியுங்கள்.

வினா : எங்கள் கிராம நன்செய் நிலங்களுக்கு ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்க யாரை அணுக வேண்டும்?

—அருமுளை உழவர்
விவாதக் குழு,
தஞ்சை மாவட்டம்.

விடை: ஆகாயவிமானம் அல்லது ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிக்க வேண்டுமானால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலமாக மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களை அணுக வேண்டும். உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார். ஆனால், அதற்கு முன்பாக உங்கள் ஊராட்சி மன்றத்தைக் கூட்டி, உங்கள் ஊரில் வானவெளி மருந்துத் தெளிப்பு (Aerial Spraying) மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, அத்தீர்மானத்தை உங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பி, ஊராட்சி ஒன்றிய கௌன்சில் கூட்டத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் வானவெளி மருந்துத் தெளிப்பு மேற்கொள்ள முடியும். தங்கள் ஊரில் 50 ஏக்கர் அல்லது 100 ஏக்கரில் மட்டுமே விமானம் மூலம் மருந்து தெளிக்க வேண்டுமென்று கேட்டால், அதை நிறைவேற்றி வைப்பது எளிதல்ல. குறைந்தது ஒரே தொடர்ச்சியாக 500 ஏக்கர் நிலத்திலாவது ஒரே வகைப் பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்தால்தான் விமானம் மூலம் மருந்து தெளிக்க முடியும். எனவே இதையெல்லாம் நன்கு கவனித்த பின்பு வானவெளி மருந்து தெளிக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வினா : விமானம் மூலம் மருந்து தெளித்த பின் அதற்கான செலவு விவசாயிகளிடமிருந்து எவ்வாறு வசூலிக்கப்படுகிறது? மருந்து தெளிக்க முன் பணம் கட்ட வேண்டுமா? அரசு என்ன சலுகையளிக்கிறது?

—கபிலமலை வானொலி மன்றம்,
சேலம் மாவட்டம்.

விடை : விமானம் மூலம் மருந்து தெளிப்பதற்கான செலவு, உழவர்களிடமிருந்து மறு ஆண்டு நிலத் தீர்வையுடன் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. இதற்கு வட்டி கிடையாது. மருந்து தெளிக்க முன்பணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. ஊராட்சி மன்றத் தீர்மானமும், ஊராட்சி ஒன்றியத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டாலே போதுமானது.

விமானம் மூலம் தெளிக்கப்படும் மருந்துகளுக்கு 15 சத மானியம் வழங்கப்படுகிறது.

மருந்து தெளிப்பதற்காக விமானத்திற்கு ஆகும் செலவில் ஏக்கருக்கு ரூபாய் 5 மட்டுமே உழவர்களிடமிருந்து மறு ஆண்டு வசூலிக்கப் படுகிறது.

மீதிச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது.

வினா : விவசாயிகள் தெளிப்பான் மூலம் சொந்தமாக மருந்து தெளிக்கும் அளவு, விமானம் மூலம் மருந்து தெளிப்பது பலன் தராது என்று ஒரு அங்கத்தினர் கூறுகிறார். இது சரியா?

—வரிச்சிக்குடி உழவர் விவாதக்
குழு, புதுவை மாநிலம்.

விடை : தெளிப்பான் மூலம் சொந்தமாகக், குறிப்பிட்ட பரப்பில், மிகவும் கவனத்துடனும், சரியான முறைப்படியும் தெளிப்பதால் நல்ல பலன் ஏற்படுகிறது என்று உங்கள் அங்கத்தினர் கருதி இருக்கக்கூடும். ஆனால் அவருடைய கருத்து முழு அளவில் சரியல்ல.

பூச்சிகள் ஒவ்வொரு நாளும் கணக்கிட முடியாதபடி பெருகி வருகின்றன. உழவர் ஒருவர் மருந்தடித்தால், அந்தச் சமயத்தில் பூச்சிகளில் சில, மருந்து தெளிக்காத வயலுக்குச் சென்று பிழைத்துக்கொள்வதுடன், தன் இனத்தைப் பெருக்கிவிடுகின்றன. நோயும் இவ்வாறே பெருகிவிடுகின்றது. இதைத்தடுக்க வேண்டுமானால், ஒரே சமயத்தில் பூச்சிகள் தாண்டிச் செல்ல முடியாத அளவிற்குப் பெரும் பரப்பில் விரைந்து மருந்து தெளிப்பதுதான் பூச்சிகள் அல்லது நோய்களை அறவே ஒழிப்பதற்குள்ள சரியான வழியாகும். இது விமானம் மூலம் மருந்து தெளிப்பதன் மூலம்தான், சாத்தியமாகும். மேலும் விமானம் மூலம் மருந்து தெளிப்பது சுலபமானது; சிக்கனமானது; விரைவானது.

கையில் பணமில்லை என்பதால் எத்தனையோ சிறு உழவர்கள் மருந்து தெளிக்காமல் விட்டுவிடுகின்றார்கள். இதனால் அவர்களது வயலில் உள்ள பயிர்கள் பூச்சிகள் அல்லது நோய்களால் பாதிக்கப்படுவதுடன், அக்கம் பக்கத்து வயலில் உள்ள பயிர்களுக்கும் அவை பரவுவதற்கு ஏதுவாகிவிடுகிறது.

ஹெலிகாப்டர் மூலம் ஒரே நாளில் சுமார் 1,500 ஏக்கரிலும், ஆகாய விமானம் மூலம் ஒரு நாளில் சுமார் 2,500 ஏக்கரிலும் மருந்து தெளிக்க முடியும். இதனால் பூச்சிகளையும், நோய்களையும் நன்கு கட்டுப்படுத்த முடியும். எனவே விமானம் மூலம் மருந்து தெளிப்பதுதான் மிகுந்த பலனைத் தருவதாகும். ஆகவே உங்கள் அங்கத்தினர் கூறுவது சரியல்ல.

தமிழரசு
இதழுக்கு
அனுப்பப்படும்
கவிதை-கதைகள்
முதலியன
எக்காரணம்
கொண்டும்
திருப்பி
அனுப்பப்படமாட்டா.
அவை வெளியிடுதல்
பற்றிய
கடிதத் தொடர்பு
வைத்துக் கொள்ள
இயலாது!
அஞ்சல் தலைகளோ
அஞ்சல்அட்டைகளோ
அனுப்ப வேண்டாம்
என்றும்
தெரிவித்துக்
கொள்கிறோம்.
— ஆசிரியர்

அன்பியலா ; அறிவியலா ; பண்பாட்டியலா, பகுத்தறிவியலா; இல்லறமா, துறவறமா; நட்பா, காதலா ; உழவா, மருத்துவமா—எத்துறை பற்றியதாயினும் அவ்வத்துறைகளைக் கட்டிக் காத்து, வழிகாட்டி, நடத்திச் செல்லும் அறிவுரைகளையும் தெளிவுரைகளையும் வாரி வழங்கி வாழ்வளிப்பவர், வான்புகழ்த் திருவள்ளுவரே யன்றோ !

ஆம்!

''எல்லாப் பொருளும்
இதன்பால் உளவிதன்பால்
இல்லாத எப்பொருளும்
இல்லையால் ....''

என்பது மதுரைத் தமிழ்க் குமரனாரின் திருக்குறளைப் பற்றிய மதிப்புரையாகும்.

எனில், இன்று, சிவப்பு முக்கோணத்துணையோடு, 'அளவோடு பெற்றுவளத்தோடு வாழ்வோம்', 'நாமிருவர், நாம் பெறுவதும் இருவர்'; 'இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்.'' என்ற கருத்துத்தெளிவுற்று தமிழகத்தே மட்டுமின்றி, நமது இந்தியத் துணைக் கண்டம் முழுவதும்—ஏன், உலகின் பற்பல பகுதிகளிலும் கூட, வாழ்க்கையில் கையாளப்பட்டு வருகின்ற 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றி, திருவள்ளுவர் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை—என்பன பற்றி நாம் சிந்திக்க வேண்டுமன்றோ ?

ஆம்! வாழ்க்கை முறைகளை—அறங்களை—தத்துவங்களை எல்லாம் வகைப்படுத்தி உரைத்திட்ட திருவள்ளுவர், வாழ்க்கையில் எண்ணற்ற பிள்ளைகளைப் பெற்று, இடிபட்டு, நலிபட்டு, துன்பத்திற்காளாகித் தவிக்கும் குடும்பங்களைக் காண விரும்புவாரா? மக்கள் தொகை மிக்கதாகி நாடும் உலகும் நலியும் நிலையினை விரும்பி வரவேற்பாரா? இல்லை; இருக்கமுடியாது !

மேலும், தம்மக்கள், அறிவறிந்த மக்களாய், பழி பிறங்காப் பண்புடை மக்களாய், தம் பொருள் என்று உரிமை கொள்ளுதற்குரிய மக்களாய் இருந்து, உடல் தீண்டும்போதும் சொற் கேட்கும்போதும் இன்புறுதற்குக் காரணமான மக்களை, அவர்களுடைய அறிவுடைமை, தமக்கு மகிழ்ச்சியினைத் தருவதனை விட மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இருக்க வேண்டும் என்று கருதுதற்குரிய மக்களை, சான்றோராகக் கேட்டு மகிழ்தற்குரிய மக்களை அவர்தம் சிறப்பாய், 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என்று உலகு போற்றுதற்குரிய புகழைத் தருகின்ற மக்களை அளவற்றுப் பெற்று, நலமற்று வாழ வழி வகுத்திருப்பாரா, வள்ளுவர் ?

என்றால், ஆசிரியர் திருவள்ளுவர் குடும்பக் கட்டுப்பாடு பற்றி யாது கூறுகின்றார்?

'அளவோடு பெற்று வாழ்க !' என்றே சொல்லுகின்றார். அதுவும், 'இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்' என்பவர் போல் சொல்லி இருக்கின்றார்.

எப்படி? திருக்குறள் 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில், திருவள்ளுவர் மழலைச் சொல்லின்பத்தினை எடுத்தியம்புகின்றார் அன்றோ?

' குழலினிது யாழினிது
என்பதம் மக்கள்
மழலைச்சொல்
கேளா தவர்.'

என்று, 'அம்மழலைச் சொல்லின்பத்திற்கு ஈடு, இணை ஏதேனும் உண்டோ ?' என்று எண்ணிப் பார்த்து, இரண்டு உவமைகளை எடுத்து இயம்பக் கருதி, அவையும் இம்மழலைச் சொல்லுக்கு ஈடு இல்லை என்று முடிவு செய்து, இம் மழலைச் சொல்,

தமிழில் வழிபடக்கூடாது என்பது, தமிழர்களுடைய உணர்ச்சிகளைக் குத்துகின்ற பிரச்சினை! கோவில்களில் தமிழுக்கு இடம் கிடைக்காவிட்டால் "தமிழ் தெரியாத ஆண்டவனுக்கும் நமக்கும் என்ன தொடர்பு? வடமொழி மட்டுமே தெரிந்த ஆண்டவன் வடநாட்டுக்கே போய் விடலாமே!" என்று கேள்வி கேட்க வேண்டிய அளவுக்குத் தமிழ் மக்கள் ஆர்த்தெழுவார்கள் என்பது நிச்சயம்.

தாம் உவமை கூறக் கருதிய குழலிசையினும் யாழிசையினும் சிறந்ததாய்—சிறப்பில் மிக்கதாய் இருப்பதனைச் சிந்தித்து, அம்மழலைச் சொல் கேளாதவர்தாம், 'குழலினிது, என்று கூறி மகிழ்வர்' என்று சொல்லி, மழலைச் சொல்லின்பத்தைச் சிறப்பிக்கின்றார்.

இக் குழலின் இசையும் யாழின் இசையும் எவ்வளவு இனிமையுடையன என்று எடுத்துக் கூறுதல் இயலுமோ! குழலிசைக்குத் தம் உள்ளத்தைக் கொள்ளை கொடுக்காத மக்களும் உளரோ ? பாம்பும் பசுக்களும் போன்ற அஃறிணை உயிர்களும் மயங்கும் போது, மக்களைப் பற்றி உரைத்திடல் வேண்டுமோ ? யாழ் இன்று இல்லை என்பர். ஆனால், யாழின் வழிவந்த வீணை இன்று இருக்கின்றதன்றோ ? இதன் இசைக்கு ஈடாகக் கூறும் இசையும் வேறு உண்டோ?

அதிலும், இக்குழல், யாழ் இசையோ, மனிதனின் உள்ளுணர்வினைத் தொட்டிழுத்து, இன்பப் புளகத்தை மட்டின்றிப் பெய்து, மெய் மறக்கச் செய்து, ஐம்புலன்களையும் ஒருவழிப் படுத்தித் திகட்டாத தேன் சுவை கொட்டும் மகிழ் நலத்தைத் தந்து, திளைக்கச் செய்வதன்றோ!

இப்படிக் காட்டி மழலை மொழியைச் சிறப்பிப்பதற்குத் திருவள்ளுவர் எடுத்துக் கொண்டவை, குழலும் யாழும் ஆகிய இரண்டு மட்டுமே யன்றோ ! இஃது ஏன், என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவர் கருதியிருந்தால் இந்த இரண்டு என்ன, இவற்றினும் அதிகமாக, மேலும், சில பல வற்றைக் குயிலிசை, கிளி மொழி போன்ற எத்தனையோ பொருள்களை எடுத்துக் கூறியிருக்கலாம்.

' ஏரினும் நன்றாம் எரு
விடுதல் ; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு '

' உற்றவன், தீர்ப்பான்,
மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'.

' கண்டு, கேட்டு, உண்டுயிர்த்து,
உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள'.

என்றெல்லாம் பற்பல செய்திகளையும், செயல்களையும் ஒவ்வொரு குறட்பாவிலும் நிறைத்துக் கூறும் ஆற்றலுடைய திருவள்ளுவருக்கு இஃது ஒன்றும் முடியாத தன்று.

எனினும், 'குழல், யாழ்' இரண்டினை மட்டுமே மழலை நலத்தைக் காட்டுவனவாக எடுத்துக் கூறுகின்றார், என் பதில்தான் வள்ளுவரின் குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைச் சிறப்பினை நாம் சிந்தித்துப் பார்க்க இடம் கிடைக்கின்றது.

' குழலும் யாழும் போல இரண்டு குழந்தைகள்—இரண்டே இரண்டு மக்களைப் பெற்றால், பெற்றுக்கொண்டு மகிழ்ந்தால், மகிழ்ந்து வாழ்ந்தாலே ஒரு குடும்ப வாழ்வு நிறைவு பெறு

வதற்குப் போதுமானதாகும்' என்று கருதியே இவ் விரண்டினை மட்டும் எடுத்துக் கூறியுள்ளார்.

அப்படிப் பெறும் இரு பிள்ளைகளும் தமது இனிய தோற்றத்தாலும் பயனாலும் பிறர்க்கும் பிற உயிர்க்கும் மகிழ்ச்சி நலம் பொழிகின்ற குழலும் யாழும் போலச்சிறந்தவர்களாகஇருத்தல் வேண்டும் என்பது மட்டுமன்று, திருவள்ளுவரின் கருத்து.

'மக்கட் பேறு' அதிகாரத்தில் காட்டும் ஏனைய ஒன்பது குறட்பாக்களில் கூறும் சிறப்புகளை எல்லாம் உடையவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார்.

மேலும், அவ்விரு மக்களும் ஆண்பிள்ளைகளாகவோ பெண் குழவியராகவோ இருந்துவிடாமல், ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக அமைந்திடப் பெற்றால் நல்லது என்றும் கருதியுள்ளார்.

எப்படி ? குழல்—ஆண் இயல்பினை உடையது. குறிஞ்சி நிலங்களில் ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில் காடுகளில் நுழைந்து, தேடித் தேர்ந்தெடுக்கும் பெருமுயற்சியின் அரும்பயனாய்க் கொண்டு வரப்பெற்ற மூங்கிலிலிருந்து செப்பனிட்டுச் செய்யப் பெறும், இக்குழல், இசைக் கலைஞருள் ஆடவர்களாலேயே பயன்படுத்தப் பெறுவதனைக் காணலாம்.

அன்றியும், குழலின் ஆரவாரமற்ற தன்மையோடுள்ள எழிலும் ஏற்றமும் கூடிய தோற்றமும் ஓர் ஆண்மகனையே நினைவு படுத்துவதனைக் கருதலாம்.

கண்ணனும் ஆநாய நாயனாரும் போன்ற ஆடவரோ குழலிசைத்துச் சிறப்புச் செய்தவராகவும் சிறப்புப் பெற்றவராகவும் புராண நூல்களும் புகலுகின்றன.

ஆனால், யாழோ, பெண்மை இயல்பினதாகும். அந்த யாழ் வழி வந்துள்ள இன்றைய வீணையும் கலை நலனும் செயல் சிறப்பும் எழில் வளமும் பெற்ற ஏற்றமுடையதாய் — பெரும்பாலும் பெண்களாலேயே பயன் படுத்தல் பெறுவதனைக் காணுகின்றோம்.

இன்னும், இவ்வீணை எழில் நலமும் செழுமையா அமைப்பும் இனிய தோற்றமும் எழில் நல மகளிரை நம் நினைவின் முன் நிறுத் இன்புறுத்துவதனையும் உண கின்றோம்.

புராணங்களோ கலை மகளும் மலை மகளும் போன்ற மகளிர் தம் கைகளிலேயே இவ்விசை நல வீணையின் கொடுத்து நமக்குக் காட்டு கின்றன.

இவற்றினும் மேலாக, இசை நூல்களில், இவ்விசைக் கருவி களைப் பற்றிக் கூறும் விளக்கங்களில், குழல், ஆண்மை இயல்பினதாகும் என்றும், யாழ் பெண்மைச் சிறப்பினதாகும் என்றும் சொல்லப்படுவதனை யும் நோக்குக !

ஆக, வள்ளுவரும், 'நாமிருவர், நமக்கிருவர்' என்பது போல ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கையில், 'ஆணும் பெண்ணுமாகிய இரு மக்களையே பெற்று இன்புற்று வாழ்க !' என நம்மை வாழ்த்துவதனை உணர்கின்றோமல்லவா ?

எழில்குலுங்கும் நீலமலையில் தொழில் பெருக்க வாய்ப்புகள்!

நல்ல மழை, மலை வளம், அருவிகள், பலவகையான மரங்கள் அடர்ந்த காடுகள், மின் நிலையங்கள், தேயிலைத் தோட்டங்கள், இவை அனைத்தையும் கொண்டு இயற்கைப் பூங்காவாக எழில் குலுங்க நிற்கும் நீலகிரி மாவட்டத்திற்கு வேறு தனிச் சிறப்புகளும் உண்டு. கோடையிலே இளைப்பாறுவதற்கேற்ற குளிர் நகராய், மலை நகரங்களின் ராணி என விளங்கும் உதக மண்டலம், நீலகிரி மாவட்டத்தின் தலைநகராகப் பேரும் புகழும் பெற்றுள்ளது. இதன் அழகை வெளிநாட்டுத் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். வேறு மலைப் பகுதிகளில் இல்லாத அளவில் நல்ல சாலைகள், ரயில் பாதைகள், இத்துடன் எல்லா ஊர்களும் மின்சார வசதி பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு இயற்கை எழில் மண்டிக் கிடக்கும் அளவுக்கு இந்த மாவட்டத்தில் இயற்கை வளங்கள் நிறைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. இருக்கும் வசதிகள் கூட, முழு அளவுக்கு இயந்திரத் தொழில் பெருக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. அண்மைக் காலத்தில்தான் பெருந் தொழில்கள் வகையில் இரண்டு தொழிலகங்கள் ஏற்பட்டன. பொதுத் துறையில் ஒன்றும் தனியார்த் துறையில் ஒன்றுமாக இப்பெருந் தொழிற்சாலைகள் வந்த பின்புதான் மாவட்டத்தைத் தொழில் மயமாக ஆக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மாவட்ட மக்கள் நல்ல முறையில் உணர்ந்தனர்.

லாரி–ரயில் போட்டி

மலைகள் நிறைந்ததும் மொத்தம் 2.54 (982 சதுர மைல்) ஹெக்டேர் பரப்புள்ளதுமான நீலகிரி மாவட்டம் மூன்று வட்டங்களைக் கொண்டது. அவை; உதகமண்டலம், குன்னூர், கூடலூர் ஆகும். உதக மண்டலம் கடல் மட்டத்துக்கு மேல் 2,287 அடி உயரம் உள்ளது. மாவட்டத்தில் 1,349 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் உள்ளன. உதகை, குன்னூர் நகரங்களும் மற்றும் சில இடங்களும் ரயில் வசதி பெற்றுள்ளன. மாவட்டத்தின் மக்கள் தொகை சுமார் 5 லட்சம்.

இந்த மாவட்டத்தில் சரக்குப் போக்குவரத்துக்கு ரயில் வசதியை விடச் சாலை வசதியைத் தான் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனெனில் சாலைப் போக்குவரத்துத்தான் மலிவானதாகவும் விரைவானதாகவும் இருந்து வருகின்றது. மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு லாரியில் சரக்குக் கொண்டு செல்லக் குவிண்டாலுக்கு ரூ. 2·15 ஆகின்றது. ஆனால் ரயிலில் கொண்டு சென்றால் ரூ. 6·00 ஆகின்றது.

நீலகிரி மாவட்டத்தில் புதிய தொழில்கள் தொடங்குவது குறித்தும் தொழில் பேட்டை அமைப்பது பற்றியும் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வு ஒன்றைத் தமிழக அரசு மேற்கொண்டது. அந்த ஆய்வு அறிக்கையின் சுருக்கம் கட்டுரை வடிவில் இங்குத் தரப்படுகின்றது.

சக்தியின் கோயில்கள்

நீர் மின்சார உற்பத்தியில் தலை சிறந்து விளங்குவது நீலகிரி மாவட்டம். மாநிலத்தின் மூன்று முக்கிய நீர்மின்சார நிலையங்களான பைகாரா, மோயார், குந்தா ஆகியவை இம் மாவட்டத்தில்தான் அமைந்துள்ளன. இம் மாவட்டத்தில் தோன்றக் கூடிய புதுத் தொழில்களுக்கு மின்சாரப் பஞ்சம் வராது.

இம்மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி, மாநிலத்தின் சராசரி அளவை விட உயர்ந்தே உள்ளது. கல்வி அறிவைப் பெருக்க அரசு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இப்பகுதியில் முனைந்து பணியாற்றுவதே இதற்குக் காரணம். மாவட்டத்தில் தற்சமயம் மூன்று கல்லூரிகள் உள்ளன. தொழில் பயிற்சி வசதிகளிலும் இம்மாவட்டம் சிறப்பான இடம் பெற்றுள்ளது. தொழில் நுட்ப ஊழியர்கள் விஷயத்திலும் இம்மாவட்டத்தில் பற்றாக்குறை கிடையாது.

தயக்கம் நீங்குமா?

மாவட்ட மக்களின் முக்கியத் தொழில், விவசாயம். மலைத் தோட்டங்கள் வைத்திருப்போ

ரும் சரி, மற்ற விளைபயிர்களைப் பயிரிடுவோரும் சரி, குறைந்த அளவில் நிலம் வைத்துள்ளவர்களே யாவர். ஒரு வரம்புக் குட்பட்ட வருமானமே கிடைக்கிறது. பெரிய அளவில் மலைத் தோட்டங்களும், விவசாய நிலங்களும் வைத்திருப்போர் கூடத் தொழில் முயற்சிகளில் ஈடுபடத் தயங்குகின்றனர். இதிலே ஆறுதலாகக் கொள்ளத் தக்க ஓர் அம்சம், அண்மையில் உள்ள கோவை மாவட்டம் தொழில் மிகுந்த பகுதியாக இருப்பதும் அங்குள்ள தொழில் முனைவர்கள், இந்த மாவட்டத்திலும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்பக்கூடும் என்பதுமாகும்.

எனவே, நீலகிரி மாவட்டத்தைத் தொழில் மயமாக்குவதில் முன்னேடியாக உள்ள தேவைகள் மூன்று —

1. மாவட்டத்தின் வளங்களைக் குறித்து, அவற்றைத் தொழில் பெருக்கத்துக்கு எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறித்து நல்ல முறையில் எடுத்துச் சொல்லி விளம்பரப் படுத்த வேண்டும்.

2. தொழில்கள் தொடங்கச் சலுகைகள், மற்றும் ஊக்க மூட்டும் செயல் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. பொதுத் துறையில் மேலும் மேலும் தொழில்களை அமைத்துச் சிறு அளவு தொழில் முனைவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

தேயிலைத் தொழில்கள்

நீலகிரி மாவட்டத்தின் மலைத் தோட்டங்களில் தேயிலையும் காப்பியும் முக்கியமான விளை பொருள்கள். தேயிலை தயாரிக்க 160-க்கு மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. தேயிலை, காப்பித் தோட்டங்களிலும், தேயிலைத் தொழிற்சாலைகளிலுமாகச் சுமார் 70,000 பேர்கள் வேலை செய்கிருர்கள்.

சிறு தொழில்கள் வகையில், மாநிலத் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட 62 தொழிலகங்கள் மட்டுமே உள்ளன. சுமார் 24 தேயிலைத் தொழிற்சாலைகள் இதில் உள்ளடங்கியவை. மற்றச் சிறு தொழில்களில் குறிப்பிடத் தக்கவை: தேயிலைத் தொழில் இயந்திரங்கள், துணை உறுப்புகள், பெட்டிகள் செய்தல், மரச் சாமான்கள், அட்டைப் பெட்டிகள், பிளாஸ்டிக் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், வீட்டு உபயோகங்களுக்கான பொருட்கள், பழம் பதனிடுதல் முதலியன.

நீலகிரித் தைலம்

உதகை, குன்னூர் வட்டங்களில், நீலகிரித் தைலம் இறக்குவது பேர் பெற்ற குடிசைத் தொழிலாக இருந்து வருகின்றது. மாவட்டத்தில் நீலகிரித் தைலம் இறக்கும் சுமார் 350 தொழிலகங்களில் 1,500-க்கு மேற்பட்ட நபர்கள் வேலை செய்து வருகிருர்கள். மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 70 இலட்சம் பெறுமான நீலகிரித் தைலம் உற்பத்தியாகிறது. புல்லிலிருந்து சத்தெண்ணெய்களும் இறக்கப்படுகின்றன. தோல், பாத அணிகள், மூங்கில் கூடைகள் முதலியன இம் மாவட்டத்தின் மற்ற குடிசைத் தொழில்களாகும்.

நீலகிரி மாவட்டத்தின் பெருந்தொழில்கள் மூன்று. அவற்றுள் இரண்டு பொதுத்துறையாலும், ஒன்று தனியார் துறையாலும் நடத்தப்படுகின்றன.

166 வயது இளைஞர்!

சோவியத் நாட்டில் அசர்பைஜான் பகுதியைச் சேர்ந்த சிவிலிமிஸ்லினேவ் என்பவர் தமது 166-வது பிறந்த நாளைச் சுறுசுறுப்போடு கொண்டாடினுர். இந்த வயதில் கூட அவர் தமது தச்சுப் பட்டறைக்குச் சென்று பணி செய்து வருகிருர்.

மிஸ்லினேவ் குடும்பம் பெரியது. பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன் எல்லாம் சேர்த்து மொத்தம் 209 பேர் இவர் குடும்பத்தில் உள்ளனர்.

ரஷியாவில் இதுபோல் நூறு வயதைத் தாண்டியவர்கள் 4200 பேர் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

வெடிமருந்து

அரவங்காட்டில் உள்ள கார்டைட் தொழிற்கூடம், பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ்ச் செயல்படுகின்றது. பாதுகாப்புத் துறைக்குத் தேவையான வெடி மருந்துப் பொருட்கள் அதில் தயாரிக்கப்படுகின்றன.

உதகையில் அமைந்துள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, போட்டோ பிலிம்களை உற்பத்தி செய்யும் மிக நவீன தொழிற்சாலையாகும். இதற்காக 300 ஏக்கர் பரப்புள்ள இடத்தை மாநில அரசு இலவசமாக வழங்கியது. இத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறன், முன்பு திட்டமிட்டபடி, ஆண்டு ஒன்றுக்கு 58 இலட்சம் சதுர மீட்டர் பிலிம்களாகும். நான்காவது திட்டக் காலத்தில் இதன் உற்பத்தித் திறனை 87 இலட்சம் சதுர மீட்டராக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

போட்டோ பிலிம் தொழிற்சாலைக்கு மிக முக்கியமான கச்சாப் பொருட்களில் ஒன்று, சில்வர் நைட்ரேட். இதன் உற்பத்திக்காக இந்த ஆலை தனி உற்பத்திச் சாலை தொடங்கியுள்ளது. நகரமைப்பு உள்பட, இந்தத் தொழிற்சாலைக்கு முதலீடு சுமார் ரூ. 12 கோடி ஆகும்.

வகை வகையான ஊசிகள்

தனியார்த் துறையில், தையல் இயந்திர ஊசி, கிராமபோன் ஊசி போன்ற பலவகை ஊசிகள் தயாரிக்கும் ஊசிகள் தொழிற்சாலை (நீடில் இண்டஸ்ட்ரீஸ், கெட்டி) இயங்கி வருகிறது. இதன் மூலதனம் 11 இலட்சம் ரூபாய்.

இது தவிரப் பெருந்தொழில் வகையில் புரொட்டீன் பிராடக்ட் ஆப் இந்தியா லிமிடெட் உருப்பெற்று வருகின்றது. ஜிலேடைன், ஒஸ்ஸீன், டைகால்சியம் பாஸ்பேட் ஆகியவற்றின் உற்பத்திக்கான இத்தொழிற்சாலைக்கு முக்கியக் கச்சாப் பொருட்கள் எலும்புத் தூள், ஹைட்ரோ குளோரிக் ஆசிட், சுண்ணும்பு ஆகியனவாகும்.

தொழிலில் பின்னடைந்துள்ள நீலகிரி மாவட்டம், தொழிலாளர்களுக்குக் கணிசமான அளவில் வேலை வசதி தரமுடியாத நிலையில் இருக்கின்றது. வேலை வாய்ப்புக்காகவும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இம் மாவட்டம் தொழில் மயமாவது இன்றியமையாததாகின்றது. ஓரளவுக்கே உள்ள செல்வ வள ஆதாரங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி அதிக அளவு நன்மை காண வேண்டும், இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, இந்த ஆய்வு அறிக்கை தொழில் பெருக்கத்துக்கான வாய்ப்புகள் வழி துறைகளைப் பின்வருமாறு எடுத்துக் காட்டியிருக்கிறது.

நாட்டுப் பழம்; சீமைப் பழம்

மாவட்டத்தில் சுமார் 1,740 ஹெக்டேரில் பழ மரங்கள் பயிராகின்றன. வாழை, ஆரஞ்சு வகைகள், பீச்சஸ், பேரி, பலா ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. 1969–70-ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உற்பத்தியான பழங்கள் சுமார் 7,260 டன்கள், இப்பழ வகைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே கிடைக்கின்றன என்றுலும், நீண்ட காலம் பலன் அளிப்பனவும் உண்டு. குறிப்பிட்ட விளைவுப் பருவங்களில் பழங்கள் விலை மிக மலிவு. அவைகளை வாங்கி, குளிர்பதனம் செய்து, மற்ற பருவங்களில் பயன்படுத்தலாம்.

பழங்கள் அதிக அளவில் கிடைத்தபோதிலும், தொழில் வகையில் அவை பெருமளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. ஊறுகாய், ஜாம், ஜெல்லி, சர்பத் முதலியன தயாரிக்கக் குன்னூரில் குடிசைத் தொழில் வகையில் ஒரு தொழில் நிலையம் மட்டுமே உள்ளது. பெருமளவில் பழங்கள் கிடைப்பதைப் பார்க்கும்போது, நவீன முறையில் பழப் பதனத்துக்காக இயந்திரங்களைக் கொண்டு இயங்கும் தொழிற்சாலை ஏற்படுத்த நல்ல வாய்ப்பு இருக்கின்றது. பதனம் செய்யப்பட்ட பழங்களுக்கு மாநிலத்தில் மட்டுமின்றித் தேசம் முழுவதிலும் நல்ல விற்பனை வசதி கிடைக்கும். ஏற்றுமதியும் செய்ய வாய்ப்பு உண்டு.

இவ்வகையில் பழப்பதனத் தொழிற்சாலை ஏற்படுத்த இயந்திரங்களுக்கு ரூ. 0·90 இலட்சமும், மூன்று மாதங்களுக்கு நடைமுதல் மூல தனத்துக்கு ரூ. 0·59 இலட்சமும் ஆக 1·49 இலட்சம் ரூபாய் மூலதனம் தேவைப்படும்.

வங்கம் செல்லும் கிழங்கு

நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விளைபொருள் உருளைக்கிழங்கு. சுமார் 8,700 ஏக்கரில் உருளை பயிரிடப்படுகின்றது. 1969–70-ல் விளைச்சல் சுமார் 76,000 டன்கள். கோஸ் பீன்ஸ், ரேடிஸ், காரட், பட்டாணி ஆகியவை சுமார் 750 ஹெக்டேரில் பயிரிடப்படுகின்றன. உருளைக்கிழங்கை உள்ளூர்ப் பகுதிகளில் பயன்படுத்துவது குறைவே. நீலகிரி உருளைக் கிழங்குக்கு, மாநிலத்தில் இதர வட்டாரங்களிலும் கேரளம், ஆந்திரம், ஒரிசா, மாராட்டியம், மேற்கு வங்கம் போன்ற வெளி மாநிலங்களிலும் கிராக்கி இருக்கிறது. இதன் காரணமாக நீலகிரி உருளைக் கிழங்கின் விலை அறுவடைப் பருவத்தில் கூடக் குறைவதில்லை. ஆகவே உருளைக் கிழங்கைத் தொழிலுக்குப் பயன்படுத்துவது இலாபகரமானதல்ல. ஆயினும் மிகக் குறைந்த விலை பெறும் கழிவு உருளைக் கிழங்குகளையும் அதிகக் கிராக்கி இல்லாத மிகப் பெரிய ரக உருளைக் கிழங்குகளையும் தொழில்களுக்குப் பயன்படுத்தலாம். உருளைக்கிழங்கிலிருந்து வற்றல் தயாரிக்கலாம்.

எங்கு? என்ன?

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழகத்திலும் உத்தரப் பிரதேசத்திலும் மாக்னசைட் என்ற உலோகத் தாதுக்கள் கிடைக்கின்றன. இவ்விரு பகுதிகளிலும் ஏறத்தாழ 710 லட்சம் டன் மாக்னசைட் உள்ளன.

மூன்று பகுதிகளில் மைக்கா கிடைக்கிறது. பீகார் மாநிலத்தில் 3880 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும், ராஜஸ்தானத்தில் 3110 ச.கி. மீட்டர் பரப்பிலும், ஆந்திரத்தில் 1550 ச.கி. மீட்டர் பரப்பிலும் மைக்கா கிடைக்கிறது. இதே மாநிலங்களில் தாமிரமும் பெருமளவில் கிடைக்கிறது.

காய்கறிகள் உலர்ப்பதனம்

மற்றக் காய்கறிகளைப் பொறுத்த வரை, அவை அழுகும் பண்டங்கள் என்ற காரணத்திஞல், அறுவடைக் காலத்தில் மிக மலிவான விலைக்கே விற்பனையாகின்றன. எடுத்துக் காட்டாகச் சொல்வதென்ருல் அறுவடைப் பருவத்தில் முட்டைக் கோஸ் கிலோ 10 காசுக்கும் பீன்ஸ் கிலோ 60 காசுக்கும் விற்கப்படுகின்றது. எனவே அறுவடைக் காலத்தில் அவற்றை வாங்கித், தொழில் காரியங்களுக்குப் பயன்படுத்த நல்ல வாய்ப்பு உள்ளது. காய்கறிகளை Dehydration முறையில் பாதுகாப்பது என்பது நல்ல முறை. இப்படி உலர வைக்கும் முறையிஞல், அவற்றின் இயற்கைத் தன்மைகள் பழுதடையாமல் காக்கலாம். இப்படி உலர்த்தப்பட்ட, வற்றலாக்கப்பட்ட காய்கறிகள் இராணுவத்தினருக்குப் பெரிதும் தேவைப்படுகின்றன.

மற்ற அங்காடிகளிலும் இதற்கு நல்ல கிராக்கி இருக்கும். இப்படிக் காய்கறிகளை வற்றலாக்கும் தொழிற்சாலை நிறுவ ரூ. 1·21 இலட்சம் மூலதனம் தேவைப்படலாம்.

தேயிலைக் கழிவிலிருந்து கேஃபின்

தேயிலை, இந்த மாவட்டத்தின் மிக முக்கியமான மலைத் தோட்டப் பயிர். மாவட்டத்தில் 160-க்கு மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. 1969–70-ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 18,320 டன்கள். தேயிலையைப் பதனம் செய்யும் போது கிடைக்கப் பெறும் கழிவு, ஆண்டுக்குச் சுமார் 550 டன்கள். அக்கழிவு தற்சமயம் உரமாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தக் கழிவில் 2·5 சத விகிதம் கேஃபின் உள்ளது. மருந்துத் தயாரிப்புக்காக, இதனை பிரித்தெடுத்து நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். தேயிலைக் கழிவிலிருந்து கேஃபின் எடுக்க நாட்டில் தற்சமயம் ஒரு சில தொழிற்சாலைகள் உள்ளன. ஆனல் அவற்றின் உற்பத்தி, தேவையைச் சரிக்கட்டப் போதுமானதாக இல்லை. எனவே

தேயிலைக் கழிவிலிருந்து கேஃபின் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தொடங்கலாம். மாதம் ஒன்றுக்கு 34 டன் தேயிலைக் கழிவை இவ்வகையில் பயன்படுத்திக் கொள்ளும் தொழிற்சாலை தொடங்க 4·81 இலட்சம் ரூபாய் மூலதனம் தேவைப்படும்.

தைலம்—தூய்மைப்பணி

மாவட்டத்தில் சுமார் 5,500 ஹெக்டேரில் யூகலிப்டஸ் மரங்கள் பயிராகின்றன. குடிசைத் தொழில் முறையில் நீலகிரித் தைலம் இறக்கும் 350 தொழிலகங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரிய வர்த்தகர்கள் இந்த குரூட் நீலகிரித்தைலத்தை வாங்கித் தூய்மைப்படுத்தி ஐ.பி. கிரேடு தைலமாக ஆக்குகிறார்கள். அரசு சின்கோனாத் துறையும் யூகலிப்டஸ் மரங்களைப் பயன்படுத்தித் தைலம் எடுப்பதோடு, இதர சத்தெண்ணெய்களையும் தயாரிக்கிறது.

ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 70 இலட்சம் மதிப்புள்ள ஐ.பி. கிரேடு நீலகிரித் தைலம் உற்பத்தி ஆகிறது. இந்த எண்ணெய் ஒரு கிலோ ரூ. 16·50-க்கு விற்பனை ஆகிறது. இவ்வெண்ணெய்யை மேலும் தூய்மைப்படுத்தி பி.பி. கிரேடு எண்ணெய் ஆக்கினால் அதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 19-க்கு விற்பனை ஆகிறது. எனவே ஐ.பி. கிரேடு தைலத்தை பி.பி. கிரேடு தைலமாகத் தூய்மைப்படுத்துவது இலாபகரமான ஏற்பாடு. இதற்கான சில தொழிலகங்களை ஏற்படுத்தலாம்.

வாசனை மிகுந்த எண்ணெய் தரும் ஜிரேனியம் செடி, கடல் மட்டத்துக்கு மேல் 1,500 அடி உயரமுள்ள பகுதிகளில் மணல் பாங்கான நிலத்தில் நன்கு வளர்கின்றது. மாவட்டத்தில் 400 ஏக்கர் பரப்பில் இது பயிரிடப்பட்டுள்ளது. அரசு சின்கோனாத்துறையும், தனியார் துறைத் தொழிலகங்கள் கல்ஹட்டியில் ஒன்றும் குன்னூரில் ஒன்றும், வாசனைத் தைலம் எடுக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஜிரேனியம் வாசனை எண்ணெய் இறக்கும் தொழிலகங்கள் இரண்டு செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஜிரேனியம் வாசனைத் தைல உற்பத்தி சுமார் 1,470 கிலோ; மாநிலத்தில் இதன் உபயோக அளவு 1,100 கிலோ ஆகும். எஞ்சிய சரக்கு முக்கியமாக பம்பாய்க்கு அனுப்பப்படுகின்றது.

ஜிரேனியம் தைலம்

நாடு முழுவதிலும் ஜிரேனியம் வாசனைத் தைலத்தின் தேவை சுமார் 12,000 கிலோ; உற்பத்தி அளவு 3,500 கிலோ. இந்தப் பற்றுக்குறை இப்போது இறக்குமதி மூலம் சரிக்கட்டப்பட்டு வருகின்றது. உலகின் பல்வேறு நாடுகளுக்கும் ஜிரேனியம் வாசனை எண்ணெய் அனுப்புவதில் பிரான்ஸ் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்தியா செய்யும் இறக்குமதியில் 80 சதவிகிதம் பிரான்சிலிருந்தே வருகின்றது. எனவே, தமிழகத்தில் குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் இத்தொழிலை மேம்படுத்த நல்ல வாய்ப்பு உள்ளது.

ஜிரேனியம் எண்ணெய்யிலிருந்து ரோடினால் செய்ய முடியும். ஜிரேனியம் எண்ணெய் கிலோ ரூ. 430; ஆனால் ரோடினால் விலை ரூ. 900. மாவட்டத்தில் போதிய அளவு ஜெரேனியம் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதையடுத்து ரோடினால் தயாரிப்பு குறித்தும் சிந்திக்கலாம்.

நீலகிரியில் பசு : சென்னையில் பால்

நீலகிரி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு மொத்தப் பால் உற்பத்தி 17,000 லிட்டர்கள். ஆனால் அங்கு உபயோகிக்கப்படும் பாலின் அளவு 7,500 லிட்டர்கள். நாள் ஒன்றுக்கு உபரியாக உள்ள 9,500 லிட்டர் பால், சென்னை நகருக்கு அனுப்பப்படுகிறது. பால் பொருட்கள் இறக்குமதிக்கு அண்மைக் காலத்தில் விதிக்கப்பட்ட தடையினால் உள்நாட்டில் இறுகிய பால் உற்பத்தியும் இதர பால் பொருட்களின் உற்பத்தியும், தேவைக்குப் போதுமானதாக இல்லை. பால் பதனத் தொழிலை மேற்கொள்வதற்கு இயந்திரங்கள் வகையில் ரூ. 5·06 இலட்சமும், மற்றும் மூன்று மாதக் காலத்துக்கு நடைமுதல் மூலதனத்துக்கும் சேர்த்து மொத்தம் ரூ. 13·58 இலட்சம் மூலதனம் தேவைப்படும். இதனைக் கொண்டு நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலைப் பதனம் செய்யலாம்.

மாவட்டத்தின் காடுகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு தேக்கு, ரோஸ்வுட், அயினி, வெண் தேக்கு மற்றும் நானாவித வெட்டு மரங்கள் சுமார் 41,000 கன அடி கிடைக்கிறது. மட்டரகமான மரங்கள் கார்குடி டிப்போவில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உயர்வகை மரங்கள், குறிப்பாக, தேக்கு மேட்டுப்பாளையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மரவேலை செய்யும் தொழிற்சாலைகள் இந்த மாவட்டத்தில் இருப்பினும் கூட, மாவட்டத்தில் கிடைக்கும்படியான மர வகைகள், தேர்ந்த தச்சர்கள் இருக்கும் அளவுக்கு இத்தொழில் நன்கு வளரவில்லை. கெட்டி, நீடில் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை, அரவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை ஆகியவைகளின் மரச்சாமான்கள், மரப்பெட்டிகள் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மரவேலைத் தொழிற்சாலைகளைத் தொடங்கலாம். வேண்டுமான பிளைவுட் போன்றவைகளை, அண்டை மாநிலமான கேரளத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம். அலுவலகங்கள், பள்ளிகள் முதலியவைகளுக்கு வேண்டிய மரச்சாமான் தொழிற்சாலை தொடங்க வேண்டிய தேவையும் வெகுவாக உணரப்படுகின்றது.

உருளைக் கிழங்குகளை அனுப்பவும், மற்றும் இரசாயன உர வகைகளை வழங்கவும் பெருமளவில் கோணிப் பைகள் தேவைப்படுகின்றன. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு, இரசாயன உரங்கள் வழங்கும் வகையில் மட்டும் ஆண்டுக்கு இரண்டரை லட்சம் கோணிப்பைகள் வேண்டியிருக்கின்றன. சாதாரணச் சணல் கோணிப் பைகளை விட உறை பொருத்திய பைகளாக இருந்தால் இரசாயன உரக் கலவைகள் சேதமடையாமல் இருக்கும். எனவே உறை அமைந்த சணல் கோணிப் பைகள் தயாரிக்க ஒரு தொழிலகம் தொடங்குவது நல்லது. சணலைக் கல்கத்தாவி

லிருந்து வரவழைத்து இங்குப் ஸ்பகள் தயாரிக்கலாம்.

மாவட்டத்தில், அச்சு வேலைகள் சம்பந்தமாக பிளாக் செய்யும் பிரிவை ஏற்படுத்துவதும் அவசியமான ஒன்று.

மாவட்டத்தில் தற்சமயம் விவசாயக் கருவிகள் வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2·5 இலட்சம் பெறுமான கருவிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வேளாண்மை விரிவாக்க வேலைகள் காரணமாக இனி ஆண்டுக்கு ரூ. 3·5 இலட்சம் பெறுமான கருவிகள் தேவைப்படலாம். தற்சமயம் கேரளத்திலிருந்து கருவிகள் வரவழைக்கப்படுகின்றன. எனவே விவசாயக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றை அமைக்கலாம். இதற்காக இயந்திரங்கள் வகையில் ரூ. 43,000-மும், மூன்று மாதக் காலத்துக்கு நடை முதல் மூலதனத்துக்கு ரூ. 27,000-மும் ஆக ரூ. 70,000 முதலீடு தேவைப்படும்.

கட்டட வேலைகளுக்காக இரும்புச் சாமான்கள் தயாரிக்கும் வகையில் தமிழ்நாட்டில் 46 உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன என்றாலும் அவ்வகையில் இந்த மாவட்டத்தில் ஒன்றுகூட இல்லை. இதற்கான தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தலாம். இதற்கு மொத்த மூலதனத் தேவை சுமார் ரூ. 1·65 இலட்சமாகும்.

1,350 கிலோ மீட்டர் (840 மைல்) நீளமுள்ள சாலைகள் உள்ள இந்த மாவட்டத்தில் 2,571 வண்டிகள் ஓடுகின்றன. சரக்குப் போக்குவரத்துக்கு ரயிலை விட, உந்துவண்டிகளை நாடுவோர்தான் அதிகம். இங்கு உந்துவண்டிகள் பழுது பார்க்கும் தொழிலகங்கள் போதுமான அளவு இல்லை. ஆகையால் பழுது பார்க்கக் கோவைக்குப் போகவேண்டியநிலையும் உள்ளது. எனவே நல்ல முறையில் உந்து வண்டிப் பட்டறைகள் தொடங்குவதற்கு வாய்ப்பு உள்ளது.

மாவட்டத்திலுள்ள மூன்று பெரும் தொழிற்சாலைகளான பிலிம் தொழிற்சாலை, ஊசிகள் தொழில் நிறுவனம், வெடி மருந்துத் தொழிற்சாலை, இனி ஏற்பட இருக்கும் புரோட்டீன் பொருட்கள் தொழிற்சாலை ஆகியவைகளுக்குத் தேவைப்படும் பொருட்களை வழங்கப் பல்வேறு துணைத் தொழில்களைத் தொடங்குவதற்குத்தேவையும் வாய்ப்பும் உள்ளன. தகரப் பெட்டிகள், தகர டப்பாக்கள், பாலித்தீன் பைகள் ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத் தக்கவையாகும். தேயிலைத் தோட்டங்களில் செடி வளர்ப்புக்குப் பாலித்தீன் பைகள் பெருமளவில் தேவைப்படுகின்றன.

போட்டோ காமிராக்கள் இணைப்புக்கான தொழிலகங்கள் தமிழகத்தில் ஏதும் இல்லை. நீலகிரி மாவட்டத்தில் புழுதி, தூசு இல்லாத சூழல், காமிரா தொழிற்சாலை தொடங்குவதற்கு ஏற்றதாக உள்ளது. எல்லா வகையான காமிராக்களையும் அண்டை மாநிலங்களின் தேவைகளையும் நிறைவு செய்யத் தக்க வகையில் இத்தொழிற்சாலையை அமைக்கலாம். எக்ஸ்-ரே கருவிகளையும் தயாரிக்கலாம்.

நீலகிரி மாவட்டத்தின் தட்பநிலை, கைக்கெடிகாரத் தொழிற்சாலை தொடங்க ஏற்றதாக இருக்கின்றது. மாநிலத்தில் அத்தகையத் தொழிற்சாலை ஏதும் இல்லை. எனவே இம்மாவட்டத்தில் கைக்கெடிகாரத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஆய்வுக் குரியதாகும்.

தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை–1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'
தொலைபேசி எண் : 20367
தபால் பெட்டி எண்: 226

	(வருடத்திற்கு சதவீதம்)
கரண்ட் அக்கௌண்ட்	0·50
சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட்	4·00
சிசன் டெபாஸிட்டுகள்—1,000-ம் அதற்கு மேலும்	
15 நாட்கள்	2·00
46 நாட்கள்	3·00
பிக்செட் டெபாஸிட்டுகள்—ரூ. 100-ம் அதற்கு மேலும்.	
91 நாட்கள்	4·75
6 மாதங்கள்	5.25
12 மாதங்கள்	6·25
2 வருடங்கள்	6·75
3 வருடங்கள்	7·25
5 வருடங்கள்	7·50

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களின் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள்:

	தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.						
மாதத் தவணை	12	24	36	48	60	72	84
ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ.	62	128·50	201	278	362·50	452	548·50

ஆர். கனகசபை,
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.

வழங்கியோர் பட்டியல்

	ரூ.	பை.
முந்திய இதழின் கூடு தொகை ..	19,09,933	50
மாவட்ட துணை ஆட்சியாளர், செங்கல்பட்டு.	400	00
துணை மாவட்ட ஆட்சியாளர், புதுக் கோட்டை.	1,000	00
மாவட்ட ஆட்சியாளர், கன்னியாகுமரி.	4,783	00
கூடி	1,260	50
மாவட்ட ஆட்சியாளர் நீலகிரி ..	150	00
மாவட்ட ஆட்சியாளர் சேலம் ..	250	00
மாவட்ட ஆட்சியாளர், தென் ஆர்க்காடு	5,115	00
கூடி	7,180	00
மாவட்ட ஆட்சியாளர், வட ஆர்க்காடு.	6,457	84
கூடி	2,000	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி (காசோலை).	415	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், குத்தாலம் (காசோலை).	101	00
தாசில்தார், மதுரை (காசோலை).	215	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உத யன்குடி (காசோலை).	900	00
துணைப் பதிவாளர், கோவில்பட்டி (காசோலை).	99	75
மாவட்ட வனத்துறை அதிகாரி, பாளையங்கோட்டை (காசோலை).	50	00
திரு டி. கே. மூர்த்தி, பிலி. 1700 எப்.காய்.எம்.எஸ். பி-1 (இனுன்) போஸ்ட், ராயிங் நேபா (வழி) சதியா.	10	00
டாக்டர் எம். சக்திவேல், மருத்துவ அதிகாரி, பொது சுகாதார நிலை யம், கயமோளி, திருநெல்வேலி (காசோலை).	20	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தி. பரூர் (காசோலை).	350	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், டி. பழூர் (காசோலை)	350	00
திருமதி அலமேலு அம்மாள், சந்திரா நகர்.	35	00

	ரூ.	பை.
திரு என். வீராசாமி, எம.எல்.ஏ., ஆர்க்காடு.	15	00
திருமதி பி. ஏ. பெரியநாயகி, நெ. 5, சர் தியாகராய ரோடு, சென்னை-17.	201	00
வனஜா ஜெயராமன், 33, பச் சையப்பன் உயர்நிலைப் பள்ளி, ரோடு.	101	00
குமாரி டி. உஷா, 306, குன்னமிட்டா தெரு, திருப்பத்தூர். (காசோலை).	15	00
தி தமிழ் சாம்பர் ஆப் காமர்ஸ் (காசோலை).	1,051	00
மெட்ரூஸ் டையோசீசன் கவுன்சில் (காசோலை).	10,000	00
மணியார்டர் மூலம் வசூலான தொகை	20	50
ஆனந்த் கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட் மெண்டிலிருந்து வசூலானவை.	23	00
ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் தென்காசி. (காசோலை)	450	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தென்காசி. (காசோலை),	100	00
தாசில்தார், திருநெல்வேலி (காசோலை).	750	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஊதாங்குடி (காசோலை).	200	00
திரு தங்கராஜ முதலியார், ஸ்ரீசெல்வி யம்மன் கோவில் டிரஸ்டி, சிதம்பரம்.	25	00
கல்லக்குடி, தி.மு. கழகம்	5	00
நிர்வாக அலுவலர், ஆலங்குடி பேரூராட்சி, திருச்சி மாவட்டம்.	101	00
ஆணையர், கருங்குளம், ஊராட்சி ஒன்றியம், செய்தங்கநல்லூர்.	1,690	00
ஆட்சியாளர், கோயம்புத்தூர் ..	47,616	00
எம். சம்பந்தம், (40-வது வட்டம், எஸ்.ஐ.டி.எ. பொருட்காட்சியின் முடிவில் கொடுத்தது).	1,001	00
வட்சுமிபதி, நகராட்சி உறுப்பினர்	10	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், முத்துப் பேட்டை.	250	00

விவசாய வருமான வரி உதவி ஆணையர், நெல்லை.	245	00
துணைப் பதிவாளர், நிலவளவங்கி, மதுரை.	2,950	00
துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், காஞ்சிபுரம்.	490	00
துணைப் பதிவாளர், காயல்பட்டிணம்	10	00
திரு. எம். சதாசிவராவ், தலைமை ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, பண்ணந் தூர், தர்மபுரி மாவட்டம்.	30	00
துணை வணிகவரி, அலுவலர். நான்குநேரி	400	00
மாவட்ட ஆட்சியாளர், திருச்சிராப்பள்ளி.	16,222	62
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொரடாச் சேரி.	750	00
துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், திண்டுக்கல்.	1,550	00
ஆட்சியாளர், இராமநாதபுரம் (மதுரை)	24,883	50
தலைமையாசிரியர், பி. எம். உயர்நிலைப் பள்ளி, பழனிச் செட்டிப்பட்டி, மதுரை மாவட்டம்.	25	00
உரிமையாளர், பாலஸ்டிவேல்ஸ், திருநெல் வேலி சந்திப்பு.	95	02
நிர்வாக அலுவலர், பன்னைக்காடு ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம்.	200	00
தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, வகராயன் பாளையம், கோவை மாவட்டம்.	50	00
செயலாளர், ஆல்காட்டு, அரசினர் இலவசப் பள்ளி, அடையாறு, சென்னை.	250	00
ஆணையர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றி யம், படப்பை, செங்கல்பட்டு மாவட் டம்.	1,100	00
தில்லை கங்காநகர் நலச் சங்கம், சென்னை-6 (முதல்வர் அலுவலக மூலம்).	10	00
இ. ரங்கநாதன், நகராட்சி உறுப்பினர், பார்த்தசாரதி நகர், ஆதம்பாக்கம், சென்னை.	101	00
ஆலந்தூர் நகராட்சி ஊழியர் நலச் சங்கம், ஆலந்தூர்.	101	00
தமிழ் நாடு கடை நிலை அரசு ஊழி யர் சங்கம், சேப்பாக்கம், சென்னை-5	101	00
தொழிலாளர் நல அமைச்சர் அலுவலக மூலம்.	6	81
எஸ். தியாகராஜன், வழக்கறிஞர், நாகப் பட்டிணம்.	51	00
இயக்குநர்கள், குளோப் தியேட்டர்ஸ், சென்னை-2.	101	00
உரிமையாளர், சரவண தியேட்டர், சென்னை-12.	101	00

எம். ஜி. ஆர். மூலம் ஒருவர்	5	00
கெ. காளிமுத்து, உதவியாளர், உள்துறை தலைமைச் செயலகம்.	5	00
புலவர் டி. வடிவேலன், எம். ஏ., தூய யோவன் உயர்நிலைப் பள்ளி, இருங்கலூர், திருச்சி மாவட்டம்.	20	00
எஸ், ஸ்ரீராமு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, கோவில்பட்டி.	2	00
தலைவர், பொன்மனச் செம்மல், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம், புதுவயல், இராம நாதபுரம் மாவட்டம்.	6	00
மாணவர் திராவிட முன்னேற்றக் கழகம், என்.வி.என். செல்வம் மூலமாக.	344	44
தமிழ்நாடு மின்வாரியம்	2,02,200	00
நிர்வாக அலுவலர், டவுன் பஞ்சாயத்து, அதிராம் பட்டிணம்.	200	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சி புரம்.	860	00
துணை வணிக வரி அலுவலர், அம்பாசமுத் திரம்.	500	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆர்க்காடு.	700	00
நிர்வாக அலுவலர், டி. பி. உடையார் பாளையம்.	101	00
துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், சிவகங்கை.	442	00
ரெவின்யூ டிவிஷனல் அலுவலர், காஞ்சி புரம்.	125	00
சோளிங்கர் கூட்டுறவு நகர்ப்புற வங்கி, லிமிடெட்.	50	00
என். வி. என். செல்வம் (எ. எல். எஸ். புரடக்ஷன்ஸ்).	100	00
கார்போரண்டம் யூனிவர்சல், லிமிடெட்.	500	00
மதராஸ் ரப்பர் பாக்டரி	500	00
கெ. சி. பி., லிமிடெட், திருவொற்றியூர்.	500	00
இ.ஐ.டி. பாரி, லிமிடெட்	500	00
பின்னி லிமிடெட்	500	00
பெஸ்ட் அன் கம்பெனி, பிரைவெட், லிமி டெட்.	500	00
பி. நாகிரெட்டி, விஜயா இண்டர் நாஷ னல்.	20,000	00
என். வி. என். செல்வம், சென்னை மாவட்ட தி.மு.க மாணவர் சங்கம்.	1,001	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செம்பொன் னார் கோயில், தஞ்சை மாவட்டம்.	1,927	00
தலைமையாசிரியர், இந்து உயர்நிலைப்பள்ளி, மதுராந்தகம்.	100	00
நூலகர், கிளை நூலகம், மாதவரம்	5	50

அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை கோட்டம்.	10	00
தலைமையாசிரியர், பரப்பாடி	12	50
தலைமையாசிரியர், ராதாபுரம்	12	50
மாவட்டக் கல்வி அலுவல், திருநெல்வேலி தெற்கு மூலம் தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, மூலக் கடைப்பட்டி.	12	50
தலைமையாசிரியர், திருக்குறுங்குடி ..	12	50
தலைமையாசிரியர், ஏர்வாடி	12	50
தலைமையாசிரியர், நாங்குநேரி ..	12	50
தலைமையாசிரியர், சி. சி. எம்எச். எஸ். உடன்குடி.	25	00
தலைமையாசிரியர், ஸ்ரீ பரம கல்யாணி உயர்நிலைப்பள்ளி, ஆழ்வார்க்குறிச்சி.	17	50
தலைமையாசிரியர், பண்ணை வெங்கடராமய்யர் உயர்நிலைப்பள்ளி, கோபால சமுத்திரம்.	25	00
தலைமையாசிரியர், பி. எல். டபுள்யூ. ஏ. உயர்நிலைப்பள்ளி, விக்ரமசிங்கபுரம்.	17	50
தலைமையாசிரியர், தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளி, அம்பாசமுத்திரம்.	25	00
தலைமையாசிரியர், செயின்ட் மேரி உயர் நிலைப்பள்ளி, விக்ரமசிங்கபுரம்.	17	50
தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, சேரன்மாதேவி.	12	50
தலைமையாசிரியர், சொக்கலால் உயர் நிலைப்பள்ளி, முக்கூடல்.	25	00
தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, கூடங்குளம்.	10	00
தலைமையாசிரியர், மருதகுளம் ..	10	00
தலைமையாசிரியர், இட்டமொழி ..	12	50
தலைமையாசிரியர், செயின் ஜோசப் உயர்நிலைப்பள்ளி, குட்டப்புளி.	17	50
தலைமையாசிரியர், தாலுக் வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம்.	25	00
தலைமையாசிரியர், சத்திரம் உயர்நிலைப் பள்ளி, கடையம்.	17	50
போலீசு சூப்பிரண்டண்டு, திருநெல்வேலி	1,000	00
வாணி பார்மஸி கெமிஸ்ட்ஸ் அண்டு டிரக்கிஸ்ட்ஸ், மேற்கு ரத வீதி, சிதம்பரம்.	1,002	00
மாணிக்கம், ஹைதராபாத்	11	00
தலைவர், டி. என். சி. டி. சர்வீஸஸ், அசோசியேஷன், வேலூர்.	501	00
கல்யாணி சுந்தரம், ஸ்ரீனிவாச காந்தி நிலையம்.	101	00
அரிமா சங்கம், ராசிபுரம்	100	00
(ஒரு நபர்)ஆந்திர பாங்கு செக் 705808 (மூலம்) ..	5,000	00
கெ. செவன் வெள்ளன் கோவில், வேப்பம் பாசாயம் அஞ்சல், கொளப்பலூர் வழி, கோவி.	5	00
கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி ..	1,830	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவேலங்காடு.	625	00
நிர்வாக அலுவலர், ஆர்க்காடு பேரூராட்சி.	200	00
கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி ..	1,150	00
புங்கனூர் கிராம அதிகாரி, தஞ்சை மாவட்டம்.	51	00
பொறையனூர் பொதுக்கூட்டத்தின் மூலம் பொது மக்கள் அன்பளிப்பு.	5	00
நிர்வாக அலுவலர், பேரூராட்சி அன்ன வாசல், திருச்சி மாவட்டம்.	100	00
மாவட்டப் பதிவாளர், திருநெல்வேலி மாவட்டம்.	1,638	30
மாவட்டக் கல்வி அலுவலர்,கோவில்பட்டி.	745	00
ஸ்ரீ அரையர், ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம், சரபோஜிபுரம், துளசியாபட்டினம், திருத்துறைப் பூண்டி, தஞ்சை மாவட்டம்.	100	00
உதவி இயக்குநர், தொழில், வணிகத் துறை, திருநெல்வேலி.	207	00
தாசில்தார், செங்கோட்டை	300	00
நிர்வாக அலுவலர், ஸ்ரீ கற்பகநாத சுவாமி தேவஸ்தானம், திருத்துறைப் பூண்டி.	250	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்.	350	00
வணிக வரி துணை அலுவலர், பாளையங் கோட்டை.	2,177	75
கோட்ட அலுவலர், என். எம். இ. பி. பாளையங்கோட்டை.	20	00
என். உமாபதி, கூட்டுறவு அச்சகம் தஞ்சாவூர்.	3	00
கோட்ட வருவாய்த்துறை அதிகாரி சேரண் மாதேவி, திருநெல்வேலி மாவட்டம்.	11,272	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பருதூர்	800	00
வேளாண்மை உதவிப்பொறியாளர், பிரை வேட் டியூப் வெல்ஸ் ஸ்கீம், திருவள்ளூர்.	50	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவாரூர்.	1,250	00
மொத்தத் தொகை..	23,17,394·53	

அவளது முட்டை வடிவ முகத்தின் மீதே நிலைகுத்தி நின்று விட்டன மாதவனின் கண்கள்.

திகைப்பினால் திறந்தவாய் திறந்திருக்க, அவனிடமிருந்து பறந்து வந்த பார்வையின் கூர்மையை அழுத்தத்தை—அந்தப் பாவையால் தாங்கவோ சந்திக்கவோ முடியவில்லை போலும் !

அவளது விழிகளிலே மிரட்சி தெறித்தது ; அச்சம் அலைமோதியது ; 'என்ன இப்படிப் பண்பாடு இல்லாமல் வெறிக்கப்பார்க்கிறானே !' என்கிற அருவருப்பும் நிழலாடியது.

அவள் வேறு திசை நோக்கித் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அதோடு, அந்த இடத்தை விட்டே நழுவவும் தலைப்பட்டு விட்டாள் மெதுவாக.

மாதவனோ . . . . .

தன் அருகே மாலையுங் கழுத்துமாய் நிற்கும் தேன்மொழியைக் கூட மறந்து விட்டான் ; அவளையும் தன்னோடு அழைத்துச்செல்ல வேண்டும் என்கிற உணர்வையும் அவன் இழந்து விட்டான். எதிரே வந்தவர்களையெல்லாம் இடித்துத் தள்ளிக் கொண்டு அந்தப் பெண்ணைப் பிடித்து விட்டால் போதும் என்கிற ஒரே முனைப்போடு 'சரேல்' என்று பாய்ந்தோடினான்.

ஒரு செம்பருத்திச் செடியை ஒட்டி மறைவாக விரைந்துகொண்டிருந்த அவளுக்குப் பின்புறமாகவே சென்று தன் வலிய கரத்தினால் அவளது தோளை அழுத்திப் பற்றி நிறுத்தினான். அவளது முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பியவாறே,

''அக்கா . . . ! வள்ளியக்கா . . . . ! ஏன், என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரி போறே?'' —என்று கேட்டான் உணர்ச்சி பொங்க.

அவளோ மருண்டு போய் மிரள மிரள விழித்தாள். அவனுடைய கரம் பட்டதால் உண்டான அதிர்ச்சியினால் அவளது மெல்லுடல், குட்டை நீரில் தவறிவிழுந்து விட்' கோழியைப் போலத் 'தட

8. அக்காள் எங்கே?

தட' வென்று ஆடிற்று— நடுங்கிற்று. 'குப்'பென்று வேர்வை கொப்புளித்து அவளது முகமெங்கும் சிறு சிறு மாதுளை முத்துக்களாகப் பளபளத்தது.

''என்னக்கா அப்படிப் பார்க்கிறே? என்னை அடையாளம் தெரியலையா? நான்தான் மாதவன்!'' —அவனது குரலிலே துயர வெள்ளத்தின் செருமலோசை பிசிறு விழுந்து இரைந்தது.

ஆனால் அந்தப் பெண், அவனுக்காக இரக்கப்பட்டு எந்த விடையும் கூறவில்லை. அதே சமயம் அச்சத்தின் உச்சத்திற்கே சென்றவளாக,

''ஏ, மல்லப்பா! மல்லப்பா!'' என்று உயிரைக் கொடுத்து உரக்கக் கூறினாள். தொடர்ந்து கன்னட மொழியிலே எதேதோ கத்தவும் கத்தினாள்.

அடுத்த நொடியே, அவளது அழைப்புக் குரலுக்கு அடைக்கலக் குரல் கொடுத்தவாறே முரடன் ஒருவன் எங்கிருந்தோ மின்னல் வேகத்திலே ஓடோடி வந்தான். என்ன நடந்தது—யாது காரணம்—என்றெல்லாம் அவன்விசாரிக்கவும் இல்லை— யோசிக்கவும் இல்லை. அந்தக் காரிகையின் கன்னடப் பேச்சைக் கேட்டதுமே மலைத்துப் போய் நின்றிருந்த மாதவனின் முகத்தை நோக்கி ஓங்கி ஒரு குத்து விட்டான்.

அந்த ஒரு குத்திலேயே சற்று முன் வெற்றிக் கொடி நாட்டி விட்டு வந்திருந்த நம் விளையாட்டு வீரன், தடுமாறிப்போனான்; தள்ளாடியும் விழுந்துவிட்டான் பின்புறமாக !

அவன் நினைத்திருந்தால்! உடனே எழுந்தோடி வந்து அந்த முரடனை நன்றாகப் புரட்டியெடுத்திருக்கலாம். அப்படியொன்றும் உடல் வலிமையிலே கடன் வாங்க வேண்டிய அளவுக்குப் பஞ்சம் இல்லையே நம் மாதவனுக்கு!

ஆனால், இயற்கையாகவே, எதையும் ஆழமாகச் சிந்தித்துத் தன்னுடைய எந்த ஒரு செயலுக்கும் பின் விளைவு என்னவாக இருக்கும் என எண்ணக்கூடிய நிதானப் போக்கு உடையவன் அல்லவா

ஆ. மறைமலையான்

அவன்! அத்துடன், எவனோ ஒருத்தியை தன் தமக்கை என்று தவருகத்தொட்டுவிட்டோமே என்கிற குற்ற உணர்வும் சேர்ந்து கொண்டு விட்டது. அதனுல் எதிர்த்துத் தாக்கிவிட வேண்டும் என்னும் ஆத்திரமோ அவசரமோ இன்றி அவன் அமைதியாகவே எழுந்திருக்க முயன்ருன்.

ஏதும் செய்யாத பூனை என்று தெரிந்து விட்டால் எலிக்குக் கூடப் 'புலிப்பாய்ச்சல்' வந்து விடாதா?

அப்படித்தான் மாதவனின் அமைதிப் போக்கு மேலும் மனத்துணிவைக் கொடுத்து விட்டது அந்த முரடனுக்கு. அவன் மறுபடியும் தாக்குதல் கொடுக்கப் பாய்ந்து வந்தான்.

அதற்குள் கும்பல் கூடி விட்டது தேன்மொழியும் ஓடிவந்து விட்டாள். மாதவனும் எழுந்து விட்டான்.

அடுத்த குத்து விடுவதற்கு அந்த ஆத்திரக்காரன் கையை ஓங்கிய பொழுது மாதவன் தன் மீது குத்து விழாத படிதடுத்துக் கொண்டதோடு அவனுடைய கையை அப்படியே இறுக்கிப்பற்றி வளைத்து விட்டான். அவனைத் திமிற விடாமல் தன் பிடியை வலுப்படுத்தியவாறே,

''ஆத்திரப் படாதீங்க, நண்பரே! மன்னித்து விடுங்கள்; என் தமக்கை என்று தவருகக் கருதித்தான் இந்தப் பெண்ணை நெருங்கினேனே ஒழிய வேறொன்றும் இல்லை''

—என்று தன் செய்கைக்கு விளக்கமும் அளித்தான் ஆங்கிலத்தில்.

முரடனே, அந்த வார்த்தைகளைச் சரியாகத்தான் காதில் வாங்கிக் கொள்ள வில்லையோ. இல்லை ஆங்கிலமே புரியவில்லையோ! எப்படியோ மீண்டும் ஒரு குத்து விட்டு விட்டான் மாதவனை நோக்கி. அவன் கழுத்தில் கிடந்த ரோஜாப்பூ மாலையையும் 'வெடுக்' கென்று பிய்த்து எறிந்தான்.

உடனே கும்பலில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு வாட்ட சாட்டமான ஆள், அவனைப் பின்புறமாக வந்து பிடித்துக் கொண்டார்.

''அவர்தான், மன்னிப்புக் கேட்டுவிட்டாரே! அதற்குப் பிறகு மறுபடியும் நீ தாக்குவது முறை இல்லையே!''

—என்று அவன் மனத்தில் தைக்குமாறு எடுத்துச்சொன்னர். 'ஆமாம், ஆமாம்' என்று மற்றவர்களும் ஒத்துப் பாடினர்.

அந்தக் குட்டிக் கலகம் ஒருவாருக ஓய்வதற்குள், தேன்மொழி அடைந்த அதிர்ச்சிக்கு——பதற்றத்திற்கு—அளவே இல்லை

கண்ணம்பாடி அணைக்கட்டின் கவின் எழிலைக் காணப் போகும் பொழுதெல்லாம், அங்குள்ள ஆடம்பரமான உண்டி விடுதிக்குள் மாதவனை இட்டுச் சென்று சுவையான விருந்தளிப்பது தேன்மொழிக்கு வழக்கம்.

இன்ருே . . . . ?

அந்த நினைப்பே எழவில்லை அவளுக்கு. இருவரும், பூங்காப் பகுதிகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கார் அருகே வருகிற வரை எதுவுமே பேசிக்கொள்ளவும் இல்லை.

காரை அடைந்ததும், ''நானே ஓட்டுகிறேன்'' என்ருள் தேன்மொழி.

மாதவன் மறுமொழி ஏதும் பகர வில்லை, பேசாமல் முன் இருக்கையில் போய் அமர்ந்தான்.

படகு போன்ற அந்த 'பிளைமவுத்' கார், மைசூரை நோக்கிப் பறந்தது.

அதைவிடக் காற்று வேகத்தில் தேன்மொழியின் எண்ணங்களும் பறந்தோடின.

காரை ஓட்டியவாறே தன் அருகில் அமர்ந்திருக்கும் மாதவன் மீது தன் ஓரக் கண்ணை அவள் ஓடவிட்டாள்.

அவன் கடுமையான காய்ச்சலிலிருந்து மீண்ட களைப்புக்கு இலக்கானவனைப் போலத் தொய்ந்து, சரிந்து உட்கார்ந்திருந்தான். தலை அண்ணுந்திருந்தது; இமைக் கதவுகளோ மூடிக் கிடந்தன. முகம் முழுவதுமோ சோர்வு, துயரம் இரண்டினுலும் ஏற்பட்ட இருளின் நிழல்.

தேன்மொழியின் நெஞ்சினுள்ளே நினைவுகள் இவ்வாறு பின்னலிட்டன.

''. . . என்னதான் காணுமல் போயிருந்தவளைக் காண நேர்ந்த போதிலும், தன் சொந்தத் தமக்கைக்கும் வேருெரு அந்நியப் பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு கூடத் தெரியாமல் போகுமா என்ன? அந்த அளவுக்கு இவரது சிந்தனை எப்படித் திசை மாறிற்று? . . . எவ்வளவுதான் பாச வெள்ளம் பெருக்கெடுத்தாலும் அப்படித்தான் சின்னப் பிள்ளை மாதிரி இவர் துள்ளிக் குதித்து ஓட வேண்டுமா? அவள் தோளையும் போய்த் தொட்டிதொட்டு முக்க வேண்டுமா? அதற்காக அடி வாங்கவும் வேண்டுமா! . . . . சே! கணப் பொழுதில் எத்துணை பெரிய அவமானமே நிகழ்ந்து-விட்டது.''

—கார், ஒரு திருப்பத்திற்கு வந்து வளைந்தது.

அந்தக் கன்னடப் பெண்ணின் தோற்றத்தைப் பற்றியும் தேன்மொழியின் எண்ணங்கள் இழைந்தன.

'அவளுக்கென்ன அப்படியொரு சிலிர்த்த முகம்—சேதாரம் அடைந்த உடல்?

மடந்தையரின் முகத்தை மலருக்கு- குறிப்பாகத் தாமரை மலருக்கு — ஒப்பிடுவதுதான் கவிஞர்களின் மரபு. ஆனுல் அந்தக் கன்னடக்காரியின் முகமோ 'காலி ஃபிளவரை'யே தேன்மொழிக்கு நினைவூட்டிற்று. 'காலிஃபிளவர்' கறி பண்ணித் தின்பதற்குச் சுவையாக இருக்கலாம். புழுக்கள் நெளிகின்ற அதுவே ஒருத்தியின் முகமாகவும் அமைந்துவிட்டாலோ..!

அப்படியொரு கற்பனை செய்வதே மாருத சுசப்பைக் கொடுத்தது—குமட்டிக் கொண்டும் வந்தது—தேன்மொழிக்கு.

எதிரே ஒரு பேருந்து வந்தது. அதை ஓட்டுகின்றவன், தலையைத் தாழ்த்திச் சாலையை அடைத்துக் கொண்டு ஒதுங்காமல் காரை ஓட்டுகிருனே என்பதற்காக அவனைப் பார்த்து ஏதோ கன்னட மொழியில் வசை பாடி விட்டு மறைந்தான்.

அவன் சென்ற திக்கையே முறைத்துப் பார்த்து விட்டு வண்டியை மேலே எடுத்தாள் அவள்.

தேன்மொழியின் ஓரப்பார்வை மீண்டும் மாதவன் பக்கம் விழுந்தது. அவனது விழிகள் இன்னும் மூடியே இருந்தன.

'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்திலே வெற்றிக்கொடி நாட்டி விட்டு இருவரும் கண்ணம்பாடிக்குவரும்பொழுது எவ்வளவு உற்சாகமாக அவன் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வந்தான்!

அப்போது அவன் காரை ஓட்டினுன். அவள் அவனை ஒட்டி அமர்ந்திருந்தாள். அவளது வாளிப்பான வாழைக் குருத்துக் கரம் அவனது கழுத்தை வளைத்துத் தலைமுடியைக் கோதி விளையாடியது. ஆண்மையும் அழகும் பின்னிப் பிணைந்த அவனது முகத்தையே அவள் பார்வையால் பருகித் திளைத்தாள் ; அவனும் காரை ஓட்டிய வாறே அவளை மெள்ளத் திரும்பிப் பார்ப்பதும் மென்னகை புரிவதும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளைக் கூறி அவளைச் சிரிக்கவைப்பதுமாக இருந்தான்.

இப்போதோ . . . . ?

தேன்மொழி பெருமூச்செறிஇருள்; இதயம் விம்மிப் புடைக்கிறது.

அதுவும் அவனுடைய தமக்கையும் அந்தக் கன்னடக்காரியைப் போலத்தான் இருப்பாளோஎன்று எண்ணிய பொழுது......

கார் மைசூர் வந்து விட்டது.

மாதவனும், தேன்மொழிதட்டி எழுப்பாமலே தானுகக் கண்களைத் திறந்து கொண்டு விட்டான்.

* * *

அரண்மனை மாளிகை போல் அழகாகத் தோன்றும் அந்தப் பெரிய உணவு விடுதியில்—ஓட்டலில் — அவர்கள் நுழையும் பொழுதேஅவர்களை வழக்கமாகக் கவனித்துக் கொள்ளும் 'பணிப் பையன்' — 'கால்பாய்'—எதிர்ப்பட்டு விட்டான்.

"எப்போதும் போல, இட்லி, சப்பாத்தி, பால்-தான்"

—என்று அவனுக்குக் கட்டளையிட்டு விட்டு தேன்மொழி மாடிப் படிகளில் ஏறிஞள் மாதவனைப் பின்தொடர்ந்து.

அங்கே அவர்கள் ஒன்ருகத் தங்கியிருக்கிருர்கள் என்று பெயரேயொழிய, இருவருக்கும் தனித் தனியாகத் தான்—ஆனுல், அடுத்தடுத்து— அறைகள் . . . . .



உள்ளங்கள் ஒன்றிப் பிணைந்த பிறகு மற்றவர்கள் என்ன 'அலர்' தூற்றிஞல்தான் என்ன என்கிற துணிச்சலாலோ என்னவோ தேன்மொழி கூட, இரண்டுபேர் தங்கக் கூடிய ஒரே அறையை எடுத்துக் கொள்ளலாமே என்ருள். ஆனுல் மாதவன் அதற்கு உடன்படவில்லை.

" . . . ஏன், என்னைக் கண்டு பயமா? ' என்று கிண்டலாகக் கூடக் கேட்டு விட்டாள் அந்தக் குறும்புக்காரி.

"உன்னைக் கண்டு எனக்குப் பயம் இல்லை ; என்னைக் கண்டே தான் எனக்கு இப்போது பயம்! ஏன் தெரியுமா? உன் அழகு இருக்கிறதே அது ரொம்பப் பொல்லாதது; உணர்வுகளோ இந்தஅழகைவிடப் பொல்லாதவை! மணமாகிற வரை எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது இருவருக்குமே நல்லது அல்லவா?''—என்று நகைத்தான் மாதவன்.

அதற்கு மேல் வற்புறுத்த அவள் என்ன பெண்மைச் செருக்கே இல்லாதவளா? எனவே தனித் தனியாகவே இருவரும் தங்கினர். வெளியே கிளம்பும் போது மட்டும் இருவரையும் ஒன்ருகவே பார்க்கலாம்.

இப்போது, கண்ணம்பாடியிலிருந்து திரும்பிய அவர்கள் தங்கள் தங்கள் அறையினுள் நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டளையிடப்பட்டவாறே "பணிப் பையன்' சிற்றுண்டியைக்கொண்டு வந்து வைத்து விட்டான்.

தேன்மொழிக்கு என்னவோ அதை அருந்துவதற்கு மனமே செல்லவில்லை. மாதவனைப் பற்றி நினைவுகள் அவளைப் பாடாய்ப் படுத்தின. அவன் எப்படி இருக்கிருன் என்று பார்த்து வரவேண்டும் என்கிற ஓர் ஆவல் அவளை உந்தித் தள்ளியது.

அவனுடைய அறைக் கதவு என்றாழ் போடப்படாமல் சாதாரணமாகவே சாத்தப்பட்டிருந்தது.

அதைத் தள்ளிக் கொண்டு தேன்மொழி உள்ளே சென்ற போதோ . . . . .

கட்டில் மெத்தையில் குப்புறப் படுத்துக் கொண்டு மாதவன் குலுங்கிக் குலுங்கிஅழுதவண்ணம் இருந்தான்.

சிற்றுண்டியும் பாலும் தீண்டுவாரற்று ஆறிக் கிடந்தன.

தேன்மொழி அவன் அருகே சென்ருள். அவனுடைய தோளைத் தொட்டாள், பின்னர் தலைமாட்டுப்பக்கம் உட்கார்ந்து அவன் முகத்தை மல்லாத்திஞள்.

கண்ணீர் அருவி பொங்கிப் பெருகி அவனது கன்னங்களைச் சதுப்பு நிலமாக மாற்றிக் கொண்டிருந்தது. அந்த அவலத் தோற்றத்தைக் கண்டதும் அவளுக்கும் தன்னை மீறி அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

மிகுந்த வலுக்கட்டாயத்தோடு அதனை அடக்கிக் கொள்ள முயன்ற அவள்,

"இப்போ என்ன குடி முழுகி விட்டது? எதுக்கு இப்படிநீங்க பச்சைக் குழந்தை மாதிரி அழணும் ?"

—என்று ஆறுதல் அளிக்கும் தோரணையில் கேட்டாள்.

அந்த வார்த்தைகள் அவனது துயரப் பேராற்றின் கரையை மேலும் கெந்தி விடுவதாகவே அமைந்து விட்டன.

"அழாமல் என்ன செய்வேன், தேன்மொழி? நான் அழாமல் என்ன செய்வேன்? . . . அவள் மட்டும் கன்னடம் பேசாமல் இருந்திருந்தால் அவள் என் அக்காவேதான்! சந்தேகமே இல்லை, அவள் என் அக்காவே தான்! அதே முகம்—அதே கண்கள்— கீழுதட்டுக்கு அடியிலே அதே கறுப்புப் பரு—அதே கைகள் ! . . என் அக்காவையே அச்சிலே வார்த்தெடுத்த மாதிரி இன்ஞெரு பிறவியும் இந்த உலகத்திலே இருக்க முடியும் என்று என்ஞல் நம்பவே முடியவில்லை, தேன்மொழி, நம்பவே முடியவில்லை! . . . . . "

—அவன் குமுறிக் குமுறிக் கதறிப் புலம்புவதைக் கண்டு அவளுக்கே பரிதாபமாக இருந்தது. பாகாகவும் கரைந்து அவளது உள்ளம்.

அவனை எவ்வாறு தேற்றுவது என்றே தெரியாமல் திணறிஞள் அவள்.

சில விஞடிகள் சுடுகாட்டின் அமைதியிலே கரைந்தன.

பின்னர், தன்தொண்டையைக் கனைத்துக் கொண்ட தேன்மொழி

"உங்க அக்கா சின்ன வயதிலேயே காணுமல் போய்விட்டாங்களா ?"

—என்று பரிவோடு கேட்டாள்.

"அதை ஏன் கேட்கிருய்? . . . அது பெரிய கதை ! . . . ஆனுல் அதை உனக்கும் நான் இப்போதேசொல்லிவிட வேண்டியது தான்" என்று நிமிர்ந்து உட்கார்ந்தான் மாதவன்.

(வளரும்)

வெண்பாப் போட்டி

19. வெல்லும் உலகை விரைந்து

துப்பாக்கி ஈட்டி சுருட்கத்தி பீரங்கி
அப்பொழுதே கொல்லுமணுக் குண்டெல்லாம்—எப்
பொழுதும்
வெல்லாவே இவ்வுலகை வேல்விழியே ! அன்பொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு

தேனைச் செழும்பாகாய்த் தித்திக்கும் இன்னமுதாய்
ஊனை உயிர்வளர்க்கும் ஒண்டமிழ்தான்—வானுர்ந்த
எல்லை யுளமட்டும் எங்கும் புகழ்பரப்பி
வெல்லும் உலகை விரைந்து.

—மா. கணபதி, திருச்செங்கோடு.

கடமையுடன் கண்ணியமும் கட்டுப்பா டுற்றே
திடமுடனே சேவைகளைச் செய்தால்—உடனடியாய்
எல்லோரும் வாழ்ந்திடலாம் என்றுரைத்த அண்ணசொல்
வெல்லும் உலகை விரைந்து.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

பேதங்கள் நீங்கிப் பிறந்தோர் அனைவருமே
ஏதமின்றி வாழும் எழிலடைந்து—சாதனைசெய்
வல்லார் கலைஞர் வழியில் தமிழகந்தான்
வெல்லும் உலகை விரைந்து.

—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

கலம்விட்டு நாகரிகக் ...
வலம்வந்த வண்டமிழர் மாண்பை—உலகெல்லாம்
சொல்லுவதைக் கேட்டுச் சுவைப்பீர் ! தமிழ்க்கீர்த்தி
வெல்லும் உலகை விரைந்து.

—க. குணசேகரன், சென்னை-61.

சந்திரனும் செவ்வாயும் சாத்திரக்கோள் என்பதெல்லாம்
விந்தை யுலகைஇனி வெல்லாது !—சிந்தனையால்
அல்லும் பகலும் அறிவியலார் கூறுவதே
வெல்லும் உலகை விரைந்து.

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, பி.ஏ., சென்னை-15.

பிள்ளைக் கனியமுதே ! பேசும்பொற் சித்திரமே!
துள்ளும் அழகொளிரும் தூமணியே !—கள்ளமிலுன்
பல்சுவை தானளிக்கும் பாமழலை ஒன்றேதான்
வெல்லும் உலகை விரைந்து.

—அன்பரசன், தேவதானப்பட்டி.

தமிழில் வழிபாடு தாய்மொழியில் கல்வி
அமிழ்தூறும் இந்நிலையில் ஆழ்ந்தோம்—இமிழ்திரைசூழ்
நல்லுலகில் நாம்உயர நம்திட்டம் நாள்தோறும்
வெல்லும் உலகை விரைந்து.

—நா. தண்டபாணி, வடகாடு.

தொல்தமிழ் நாட்டினது தோற்றம் கொணர்ந்திடுவோம்
பல்வளமும் இங்கே பரந்திருக்க—எல்லாரும்
வல்லாங்(கு) உழைத்திங்கே வாழ்ந்திடுவோம் நம்பணிகள்
வெல்லும் உலகை விரைந்து.

—சின்னக்கண்ணன், அம்பல்.

வெந்தீயை நீர்தானே வென்றிடும் ; தீயன்று ;
செந்தீமை தீமையால் தீயுமோ ?—காந்தியமாம்
கல்லும் கரைந்துருகச் செய்யும்நல் லன்புதான்
வெல்லும் உலகை விரைந்து.

—அ. சு. இராமலிங்கம், மெணசி.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு நாகு. ஆறுமுகம்,
அரிக்காரன்வலசு (அஞ்சல்),
(வழி) ஈரோடு.

கத்துகடல் மல்லை ; கவின்மதுரைக் கோபுரங்கள் ;
சித்தன்ன வாசலெழிற் சித்திரங்கள் ;—முத்தமிழ்நாட்(டு)
எல்லைக் குமரிமுனை ; என்றும் கலைச்சிறப்பில்
வெல்லும் உலகை விரைந்து.

—குழ. அண்ணாமலை, கோவை-1.

ஈரா யிரமாண்டாய் எக்கருத்தும் மாறுமல்
தேரார் உளந்தெளியத் தேன்மொழியே—நேராக
எல்லாப் பொருளும் எடுத்துரைக்கும் முப்பாலே
வெல்லும் உலகை விரைந்து.

—நா. மதிவாணன்,அறந்தாங்கி.

அன்பாலே மக்கள் அணிதிரட்டி மாற்றுரைத்
தன்பாலே ஈர்த்த தனித்தலைவன்—பொன்போலச்
சொல்லியதோர் முக்கருத்தைச் சுட்டும் விரலசைவே
வெல்லும் உலகை விரைந்து.

—த. குப்பால், வேப்பங்குளம்.

சொல்லைச் செயலாக்கிச், சூழ்தடையைத் தூளாக்கி,
வெல்லும் திறம்விளைத்து, வேல்விழியே !—பொல்லாத
இல்லாமைப் பூண்டழித்(து), இன்பச் சமத்துவத்தால்
வெல்லும் உலகை விரைந்து,

—நிலவை, நிலவழகன், நிலக்கோட்டை.

பாசக் கரநீட்டிப் பாலகனைத் தாலாட்டி
நேச எழிலூட்டும் நீடுறவாம்—காசினியில்
கல்லும் உருகும் கனிவன்புத் தாய்மைதான்
வெல்லும் உலகை விரைந்து.

—சுசு. முத்து, கொட்டாரம்.

ஏடு பிடிக்குங்கை எல்லாரும் போற்றுங்கை
பாடுபடும் பாட்டாளி பார்க்குங்கை—நாடுபுகழ்
செல்லும் தமிழ்முதல்வன் செங்கையே என்றென்றும்
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் மா. பரமசிவம், வடுகப்பட்டி.

தள்ளாடுங் காலத்தும் தன்கருத்தா விந்நாட்டின்
பள்ளத்தை மேடாக்கப் பாடுபட்டே—கள்ளத்தைக்
கொல்லும் '' பெரியாரின் '' கொள்கை யினியென்றும்
வெல்லும் உலகை விரைந்து.

—சுதா. கல்லக்குறிச்சி.

நிலவுலகை விண்வெளியை, நீலக் கடலைப்
பலவகையில் ஆராய்ந்து பாரில்—நலமதிகம்
நல்கும் அறிவியலே நானுரைப்பேன் ஐயமின்றி
வெல்லும் உலகை விரைந்து.

—பாக்கியசாமி, சென்னை-.

எல்லா மதத்தார்க்கும் ஏற்புடைய நற்கருத்தாய்
வெல்லுஞ்சொல் கொண்டிங்கு வேட்புடன்-தொல்லுலகில்
நல்லறம் நல்கிய வள்ளுவனின் வாயமுதே
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் ஆ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

பொய்யா உழைப்பும், பொதுநலப் பற்றுளமும்,
செய்யாப் புதுமைகள் செய்திறமும்—மெய்யறிவும்
சொல்லும் உரைக்காப்பும் சூழுங்கால் : செந்தமிழே
வெல்லும் உலகை விரைந்து.

ச. பன்னீர்ச்செல்வன், பெருமாள்பேட்டை.

பார்புகழும் வள்ளுவன்றன் பாநலத்தில் ஊறியநற்
சீர்மிகுந்த செங்கோல் திறமதனில்—தேர்தமிழன்
சொல்லும் செயலும் சுடர்போன் றிருளறுத்து
வெல்லும் உலகை விரைந்து.

—செல்வி நா. பொன்முடி பி.எஸ்.ஸி. விருதுநகர்.

தங்கும் அமைதியினைச் சட்ட ஒழுங்குதனைப்
பங்கமுறச் செய்து பயனடைதல்—எங்ஙனம் ? சொல் !
எள்ளளவும் வன்முறையே இல்லாத கொள்கையன்றோ
வெல்லும் உலகை விரைந்து.

—சிவ. மு. சிவலிங்கம், சிவகாசி.

தன்னைப்போல் மற்றவரைத் தானினைந்து வாழ்வதுவும்
பொன்னைப்போல் நற்செயலைப் போற்றுவதும்—
என்றென்றும்
நல்லதையே நாடோறும் நாடுகிற நற்பண்பும்
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் மு. இராமலிங்கம், கொட்டம்பட்டி.

சொல்லாட்சி நற்கருத்துத் தூய்மை எளிமையுடன்
பல்லாட்சி கொண்ட பழமையினால்—தொல்லுலகில்
எல்லாரும் போற்றிடவே என்னுயிராம் செந்தமிழே
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் ச. சுந்தரேசன், பூட்டுத்தாக்கு.

அன்பும் அகந்தைமுன் அஞ்சாத நெஞ்சகமும்
என்றும் பிறர்க்குழைக்கும் ஏற்றமும்—கொண்டோர்கள்
சொல்லும், செயலாகிச் சோர்வை விரட்டியே
வெல்லும் உலகை விரைந்து.

—மா. இல. குப்புசாமி, பி.எஸ்.சி., சென்னை 30.

தத்தித் தளிர்நடையால் தாவித் தரைவிழுந்து
முத்துப்போல் எச்சில் விழமுந்தும்—தத்தைஎன்
செல்வன்அம் மாவென்னும் தேனமுத மென்சொல்லே
வெல்லும் உலகை விரைந்து.

—[illegible], அசோக் நகர், அரக்கோணம்

நாணயத்தால் நாநயத்தால் நல்லுளத்தால் நற்பணியால்
நீணிலத்தார் நெஞ்சில் நிறைந்தோரின்—மாணரிய
சொல்லும் செயல்திறனும் தூய திருத்தொண்டும்
வெல்லும் உலகை விரைந்து,

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

துன்பம் துடைத்துத் துணையாகி எல்லார்க்கும்
என்பும் உதவுகின்ற எண்ணமுடன்—நன்னெறியிற்
செல்லும் மனமுடையோர் செய்கின்ற அன்பன்றோ
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

கொஞ்சும் மழலைக் குரலும் குளிர்விழியாள்
அஞ்சும் நடையும் அறிவியலும்—வஞ்சகரால்
அல்லற்பட் டேழை அழுதகண் ணீரொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—கே. டி. அரசு, மணமேடு.

யாழின் இசையினிலே யாம்பெற்ற இன்பமெலாம்
ஏழைச் சிரிப்பினிலே எய்திடலாம்—ஊழினையும்
வல்லமையால் வென்றிடலாம் ; வாய்மைவழி வாழ்வ
[தொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—தி. செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

செங்கதிராய்த் தண்ணிலவாய்ச் செம்மைத் திருவுருவாய்ப்
பொங்குதமிழ் பூத்த புதுமணமாய்—இங்கண்ணு
நல்ல நெறிநடக்கும் நற்றமிழர் ஆட்சிமுறை
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் அ. நாராயணன், மதுரை-9.

அந்நாளில் மூவேந்தர் ஆண்டுவந்த ஆட்சியேபோல்
இந்நாளில் எம்கலைஞர் ஆளுவதால்—இந்நாடு
கொல்லும் குறையாவும் குப்பைக் குழிசேர்த்து
வெல்லும் உலகை விரைந்து.

—வே. குருநாதன், மதுரை-2.

கற்ற தமிழர் தமதாங் கிலவறிவை
உற்ற தமிழ்க்கே உரித்தாக்கில்—முற்றவும்
சொல்லிற் சிறந்தநம் செந்தமிழ்த் தேன்மொழியே
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் தமிழ்க்குமரன், பணகுடி.

நூறு யிரங்கோடி நோதக்க செய்தாலும்
மாறுநற் பேரன்பால் மன்னிக்கும்—பேறன்றே
கல்லைக் கரைக்கும் ; கடற்சீற்றம் மாய்த்திடுமே
வெல்லும் உலகை விரைந்து.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., அமரபூண்டி.

எண்ணே(டு) எழுத்தேபோல், இங்கிரண்(டு) ஈந்திட்ட
பின்னுமேன் செய்கள் பெருக்குவ(து)—அன்னமே
எல்லைகாண் ! ஏற்றதடை இன்றேல், பசிப்பிணியே
வெல்லும் உலகை விரைந்து.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

வாழ்வால் வளநிலையால் வண்ணத்தால் சாதியால்
கீழ்என்பார் மேல்என்பார் கீழோர்கள்—தாழ்வகற்றி
எல்லாரும் ஓரினமாய் இன்புறுவோம், சூழ்நிலையை
வெல்லும் உலகை விரைந்து.

—கு. சென்னையா, தேவதானப்பட்டி.

தண்டமிழ் நாட்டில் தமிழாட்சி செய்வதனால்
பண்டிருந்த மேன்மை பளிச்சிடுதே—ஒண்டொடியே !
கல்லும் கவிபாடக் கண்ட தமிழொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—ஆ. தங்கவேல், பி.எஸ்சி., நரிக்கல்பட்டி.

இப்புவியில் நாம்பெற்ற ஏற்றமிகு வாழ்நாளில்
செப்பமுடை நற்பணியைச் செய்திடவே—ஒப்பின்றி
ஒல்லும் வகையெல்லாம் நன்றாய் உழைப்பதொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—கோமதி, கூகலூர்.

புத்தம் புதிதாகப் பூத்த அறிவியலுக் (கு)
ஒத்த புதுச்சொற்கள் ஒண்டமிழில்—மெத்தவுமே
நல்ல விதமாக நாம்காணின் நந்தமிழே
வெல்லும் உலகை வுரைந்து.

—ப. மீனாட்சிசுந்தரி, மதுரை.

சோற்றுக்கில் லாதார் ; சுரண்டிச் சுகங்காண்போர்
ஏற்றத்தாழ் வாமிவ் விழிநிலைஏன் ?—மாற்றியுடன்
நல்ல பொதுவுடைமை நாமேற்போம் அஃதேதான்
வெல்லும் உலகை விரைந்து.

—கொ. மா. கோதண்டம், இராசபாளையம்.

எதிர்பாராத
விருந்தினர்களா?

மகிழ்ச்சியூட்டும்
நெஸ்கா:பே வழங்கி
அவர்களை இனிய முகத்துடன்
உபசரியுங்கள்—5 செகண்டில்
ஒருகப் தயார்!

முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

ஒரு நெஸ்லே தயாரிப்பு

கல்வி அமைச்சர் நாவலரின் பட்டமளிப்பு விழாப் பேருரை

சென்னைப் பல்கலைக் கழகம் தனது ஒப்பற்ற உழைப்பின் மூலம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உயர் கல்வி—ஆராய்ச்சி ஆகியவற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்து வருகிறது.

இந்தியாவின் முதல் தரப் பல்கலைக் கழகத்தில் ஒன்றாக இடம் பெற்ற காலத்திலிருந்து, இந்தப் பல்கலைக் கழகம் முன்னேறும் உயர் கல்வியினைப் பலப்படுத்தவும், கல்வித் துறையில் ஆராய்ச்சியை மேற்கொள்ளவுமான பணியை இது செய்தது என்பதில் மாறுபாடான கருத்தில்லை.

இந்தியப் பல்கலைக் கழகக் கல்வியின் வரலாற்றில் ஒளி விடும் அத்தியாயத்தை ஏற்படுத்தியதுதான் இந்தப் பல்கலைக் கழகம், தனது வேறு வழிகளின் மூலம் பொதுவாக இந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் தந்த செய்தியாகும்.

இந்த மகிழ்ச்சி விழாவில்—இந்தப் பல்கலைக் கழகத்தைத் தலைமைக்குரிய பயிற்சிப் பாசறையாகவும், தெளிவான அறிவும், கலாச்சாரமும் உள்ள இருப்பிடமாகவும், எண்ணங்களின் நாற்றங்காலாகவும் ஆக்கிட உதவிய ஞானமும் உள்ளொளியும், கற்பனைக் காட்சியும் படைத்த எல்லா மனிதருக்கும் நமது பணிவான மரியாதைகளைத் தெரிவித்துக் கொள்வோமாக.

இந்த வருடத்தின் பட்டதாரிகளாகிய உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் போற்றுதல்களையும் நீங்கள் அடைந்த சிறப்புக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நாள் உங்களது வாழ்நாளில் என்றென்றும் நினைவில் நிற்கும் நாள் ஆகும். ஏனெனில், இந்நாள் ஒரு தொடக்கமும் ஒரு துவக்கமும் படைத்தது. தயாரிப்புக் காலத்தின் வெற்றிகரமான முடிவு இது. அறைகூவல் விடும் தேசிய வளர்ச்சியிலும், சமூக மறுவாழ்விலும் பங்கேற்கப் போகும் நாளின் துவக்கமும் ஆகும்.

ஆசையூட்டும் வாய்ப்புகளின் களத்தில் இறங்கும்போதும், பல் வேறு அறைகூவலைச் சந்திக்கும் போதும், பல்கலைக் கழகத்தில் நீங்கள் அடைந்த அறிவும் திறனும் கொண்டு பயன் படுத்த வேண்டியிருக்கும். இந்த நேரத்தில் உங்களுக்கு எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன்.

எனது இளைய நண்பர்களே!

இந்த வேளையில் நான் அறிவுரைகளைக் கூறப்போவதில்லை. ஏனெனில் அவை இப்போது எளிதான பொருளாகிவிட்டது.

கல்வித்துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றிக் கருத்து எதிரொலிப்பதில் என்னுடன் உங்களையும் அழைப்பதே பொருத்தமானது என நம்புகிறேன்.

ஏனெனில் கற்றறிந்த இந்நாட்டு இளைஞர்களான உங்களால்தான் இந்த நெருக்கடி தீர—சரியானதும், முக்கியமானதுமான பங்கை ஆற்றிட முடியும்!

கல்வியின் அடிப்படை நோக்கங்கள் யாவை? ஒரு நாட்டின் வாழ்வில் பல்கலைக் கழகத்தின் இடம் என்ன? துயர இழுபறியுகமான இன்றைய யுகத்தில் அது சந்திக்க வேண்டிய பிரச்சினைகள் என்ன? அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அது கூறும் யோசனை என்ன? கல்வி அமைச்சர் என்ற முறையில் இதில் உங்களது ஒத்துழைப்பைக் கோருகிறேன். அறைகூவல் விடும் வினாக்களுக்குச் சரியான பதில்களைக் கண்டு பிடிப்பதன் மூலம்—நமது கல்வி உண்மையில் நமது நாட்டிற்கேற்பத் திருத்தப்படும் — பலப்படுத்தப்படும்—நாளைய பொறுப்புகளை உணர்த்துவதாக இருக்கமுடியும்.

ஸ்டீபன் லீகாக் எனும் நகைச்சுவையாளர் ஒரு முறை கூறினார்: 30 வருடங்களுக்கு முன்பு பல்கலைக் கழகத்தில் பயின்ற தகவல்களை மீண்டும் நினைவுப்படுத்திக் கூறுவது என்றால் யாருக்கு வேண்டுமானாலும் 50 நிமிடத்தில் பல்கலைக் கல்வியைத் தந்துவிடலாம் என்றார். அதன்படி இரசாயனத்தில் லிட்மஸ் (வண்ணக்) காகிதத்தைத் திராவகத்தில் தோய்த்தால் நீல நிறமாகுமா? சிவப்பு நிறமாகுமா? என்பதை அவனால் நினைவில் வைத்திருக்க முடியாது. பொருளாதாரம் 'தேவையும் — வழங்கீடும்' என்பதையே மையம் கொண்டிருப்பது.

கல்லூரிகளில் நாம் பெற்ற அறிவைத்தொகுத்து வழங்குமாறு அழைக்கப்பட்டால் ஸ்டீபன் லீகாக்கைவிட மேம்பாடாக நம்மில் பலர் செய்ய முடியாமலிருக்கலாம்!

தகவல் அறிவைச் சேகரிப்பதே கல்வி என நம்பும் மனிதர்கள் இன்னும் இருப்பதைக் காண வருத்தமாக இல்லையா?

ஆனால் பேராசிரியர் ஒயிட்ஹெட் சொன்னது போல் தெரிந் ''நிறையத் தகவல் திருக்கும் மனிதன், உலகிலேயே உபயோகமற்ற வறட்டிழுப்பு மனிதனே!''

ஆகவே தகவல்களைக் கூடை கூடையாக ஒருவர் தலையில் கொட்டுவதல்ல கல்வி! நினைவாற்றலை விட ஆர்வத்தையும்—கூர்மைமிக்க உத்வேகத்தையும் தூண்டுவதுதான் கல்வி! நினைவாற்றலுக்குப் பயிற்சி தருவதும் தகவல் திணிப்பும் எளிதான முறைகளே. எனினும் அவை அறிவு வளர்ச்சிக்குத் தடையானவைதான்!

ஆனுல் ஆர்வத்தையும்
உண்மை ஆராய்ச்சியையும்
தூண்டிவிடுதல் என்பது கடின
மானது. ஆனுல் அது மாண
வன் வளரவும்—மென்மேலும்
வளரவும் தூண்டுகிறது.

ரோனல் கவ்லல்டு சரி
யாகவே சொன்னுர்:

''கல்வியின் மேன்மையானது
எதுவெனில் ஒரு குழந்தைக்கு
எதைப் பற்றிச் சிந்திக்க வேண்
டும் என்று சொல்லித் தருவ
தல்ல! எப்படிச் சிந்திக்க
வேண்டும் என்று சொல்லித்
தருவதே!''

அதன் மூலம் அந்தக் குழந்தை
—விஷயங்களைத் தேர்ந்தெடுத்து
சிந்தித்துக் கொண்டே செல்லும்!
விசாரித்தலும்—காரணம் கண்டு
பிடித்தலுமான நிரந்தரப்
பழக்கத்தில் குழந்தை வளர்ச்சி
பெறும்!

சில வருடங்களுக்குப் பின்னர்,
பள்ளியறிவு அவனது நோக்கிற்
குத் தொடர்பில்லாததாகப்
போய்விட்டாலும், இறந்த
காலத்தின் கல்வியாக மாறி
விட்டாலும், மறந்து விட்டாலும்
அவனுக்குப் புத்தறிவைப் பெறு
வதற்கான திறன் இருக்கவே
செய்யும். தெளிவாக நிகழ்ச்சி
களைப் புரிந்து கொள்ளவும்,
புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ற
வாறு தன்னை ஆக்கிக்கொள்ள
வும் அவனுல் இயலும்!

நவீன விஞ்ஞானம்—தொழில்
முறை இவற்றின் வளர்ச்சிக்
கேற்ப 'மாறுதல் வளர்ச்சி'
எனும் போக்கை இணைப்பதும்
கல்வியின் இன்னெரு கடமை
யாகும்.

இதன் பொருள், மரபு தத்துவ
வேர்களில் அடி கொடுப்ப
தாகும்! நவீனப்படுத்தும்
சக்திகளை விரைவுபடுத்தலு
மாகும்! இந்த இடத்தில்
மரபுக்கும் மரபுத்தத்து
வத்திற்கும் உள்ள வேறு
பாட்டை விளக்குவது எனது
கடமை! மரபு என்பது
நம்பிக்கைகள்,பழக்கவழக்கங்கள்
முதலியவை கடந்த காலத்தி
லிருந்து தொடர்ந்து வருவதைக்
குறிப்பதாகும். முறையான
வழியில் மறு பரிசீலனை மூலம்
நமது மரபுப் பழக்கங்கள்
மாறுகின்றன. ஆனுல் இதற்கு
எதிராக மரபுத் தத்துவம்
என்பது பழைய நம்பிக்கைகள்,
பழக்க வழக்கங்கள் மாறுதலுக்கு
உரியன அல்ல என நினைப்ப
தாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவ
தானுல் அந்தத் தத்துவம்
மரபு என்பதை மாரு நிலை
யுடையது என்றும் முன்னர்
செய்தது போலவே மக்கள்
கூட்டம் இப்போதும் செயல்பட
வேண்டும் என்றும் எதிர்பார்க்
கிறது. இந்தக் காரணத்தால்
தான் பொருளற்ற மூட நம்
பிக்கையும் ஆரவார மூட
நோன்புகளும் படைத்த ஒரு
சமுதாயத்தைப் பகுத்தறிவு
வாதிகள் தாக்குகின்றனர்.

பல்கலைக் கழகக் கல்வியைப்
பற்றிப்பேசுகிறநேரத்தில் பயிற்சி
மொழியைப் பற்றிக் குறிப்பிடு
வது பொருத்தமானதாக இருக்
கும். தமிழக அரசின் இரு
மொழிக் கொள்கையைப் பற்றித்
தெளிவான அடிப்படையில் பல
நேரங்களில் விளக்கம் கூறியிருக்
கிறேம்.

தாய் மொழியிலும், ஆங்கிலத்
திலும் போதிய பயிற்சி பெறுவ
தற்கு மாணவர் சமுதாயத்துக்கு
ஏராளமான வாய்ப்புகள் இருக்
கின்றன.

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரி
களிலும் தாய்மொழியே பயிற்சி
மொழியாக இருந்தால்தான்
மாணவர்கள்பயனுள்ள அறிவைப்
பெற முடியும். தாங்கள் கற்ற
கருத்துக்களைப் பொருள் பிற
ழாது எடுத்துக் கூற முடியும்.
—என்பது கல்வித் துறையின்
பொருத்தமான கொள்கையாக
ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாங்கள் கற்கும்
கல்வியின் பொருளை உணர்வதற்
காக மட்டுமின்றி சமுதாயத்தி
னின்று விலகி விடாமல் இருப்ப
தற்கும், தாய் மொழி மூலம்
கல்வி கற்பதுதான் சிறந்தமுறை
என்பதை மகாத்மா காந்தி உட்
பட பல தேசியத் தலைவர்கள்
வலியுறுத்தியுள்ளனர்.

டாக்டர் ராதாகிருஷ்ணன்
தலைமையில் அமைக்கப்பட்ட கல்
லூரிக் கல்விக் கமிஷன் 1948-ஆம்
ஆண்டிலேயே பின்கண்ட பரிந்
துரையை வழங்கியது.

''கல்விக் கண்ணேட்டத்தின்
படி பார்த்தாலும், ஒரு ஜன
நாயக சமூகத்தின் கண்ணேட்டத்
தின்படி பார்த்தாலும், மாணவர்
களுக்கு அளிக்கப்படும் கல்வி
அவர்களின் தாய்மொழி
வாயிலாகவே அமைய வேண்டும்.
இயல்பாகத் தாய்மொழி மூலம்
கல்வி கற்கிறவர்கள்—உயர்மட்
டக் கல்வி பெறுவதுடன் தங்கள்
சிந்தனை வளத்தின் மூலமாக
அறிவின் எல்லைகளாக விளங்கும்
ஆராய்ச்சித் துறைக்கு மிகப்
பெரும் ஊக்கம் அளித்திட
முடியும்.''

டாக்டர் ராதாகிருஷ்ணன்
குழு அளித்த இந்தப் பரிந்துரை
யைத் தேசியக் கல்விக்குழு அப்
படியே ஏற்றுக் கொண்டது.

நம் நாட்டின் அறிவாற்றலை
யும் ஒழுக்க உயர்வையும் பெருக்
குவதற்கான கல்வி முறை
அமைய வேண்டுமானுல் தாய்
மொழிக் கல்வி ஒன்றின் மூலம்
தான் அதைச் சாதிக்கமுடியும்
என்பது வலிமையான ஒரு
காரணமாகும். இந்தக்
காரணத்தின் அடிப்படையில்
தமிழக அரசின் பயிற்சி மொழிக்
கொள்கையைப் பலரும்
பாராட்டவே செய்வார்கள்.

ஆங்கில மொழியில் உள்ள
விஞ்ஞானச் சொற்களுக்கு
இணையான தமிழ்ச் சொற்
களை நாம் கண்டு பிடித்தாக
வேண்டும்.

தாய் மொழியை அறிமுகப்
படுத்துவதனுல் ஆங்கிலத்தின்
இடத்துக்கு எந்த விதக் கேடும்
வந்துவிடப்போவதில்லை. ஆங்
கிலப் பயிற்சிக்கு நாம் உரிய
இடம் அளித்து வருகிறேம்.
மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்
கிலம் கற்பிக்க வழி செய்திருக்
கிறேம். ஆங்கில மொழி
யைப் படிக்க வேண்டும் என்ப
தில் அரசுக்கு இருக்கிற அக்
கறைக்கு இது நல்ல சான்
ருகும்.

ஆங்கிலத்தைக் கற்பது என்
பது வேறு. ஆங்கிலத்தின்
மூலம் கற்பது என்பது வேறு.
ஆங்கில நூல்களைப் படிக்கும்
வாய்ப்பை மாணவர்கள் பெற
வேண்டும் என்பதற்காகத்தான்
ஆங்கிலமொழியில் நல்லபுலமை
பெறத்தக்க வகையில் மாண
வர்களுக்குக்கு வாய்ப்புக்களை உரு
வாக்கியுள்ளோம்.

தேர்வு பற்றிய சீர்திருத்தம்
கல்வியாளர்களிடையேயும் கல்வித்
துறை நிபுணர்களிடையேயும் ஒரு
பிரச்சினையாக எழுந்துள்ளது.
இந்தத் தேர்வு முறை பல

நவம்பர் முதல் வாரத்தில் எங்கும் கிடைக்கும்

வெள்ளி விழா மலர்

விலை ரூ. 2·50

மில்லாதது—குறைவுடையது
என்பதில் இரண்டு கருத்தில்லை.
நமது தேர்வுகள் ஒரு சூதாட்
டத்தைப்போல் ஆகிவிட்டன.
திறமைகளை இனம் காண்பதில்
எந்தவிதமான உறுதியான வழி
காட்டுதலும் இல்லை.

தேர்வுகள் பெருவாரியான
அளவில் நடத்தப்படுவதால் அது
வெறும் நிர்வாக அளவில் உள்ள
தாக இருக்கிறதே தவிர, மாண
வர்களின் கல்வி மேன்மையைக்
கண்டறியும் தேர்வாக இல்லை.
இந்தக் குறையுள்ள தேர்வு முறை
யைநீக்கி ஒவ்வொரு மாணவனின்
அன்ருடப் பணிகள் மீதான
கணக்கெடுப்பும் தனித் திறமை
களும் காணப்பட வேண்டும்.

இந்தப் புதிய முறைத்
தேர்வுகள் முயன்று வகுக்கப்
படவேண்டும். வாய்மொழித்
தேர்வு என்பது உச்சரிப்புத்
தயார் நிலையிலான நகைச்சுவை
வெளிப்பாட்டின் சக்தி. இவற்
றைக் கண்டுபிடிக்க உதவும்
மாணவனது கல்விச் சாதனை
களைப் பற்றிக் கல்வி நிறுவனம்
தான் சரியான கணக்கீட்டைத்
தரமுடியும். எல்லாவற்றையும்
பொறுமையாகவும்—புத்திசா
லித்தனமாகவும் கையாண்டால்
நன்னிலை திரும்பும்.

நான் இதற்கொரு யோசனை
கூறுகிறேன். ஒவ்வொரு கல்
லூரியிலும் மாணவர் நலக்குழு
அமைக்க வேண்டும். மாண
வர் ஆசிரியர் பெற்றேர் ஆகியோ
ருக்குக்காக மூன்று பிரதிநிதிகள்
வீதம் அக்குழுவில் அங்கம்
வகிக்க வேண்டும். கல்லூரி
முதல்வர் அக் குழுவின் தலைவராக
இருக்க வேண்டும்.

இந்தக் குழு மாணவர் நலம்
பற்றிய எல்லாப் பிரச்சினைகளையும்
விவாதிக்கும் அரங்கமாக மாற
வேண்டும். மோதல்கள்—தவ
ருன நினைப்புகள் இவற்றின்
காரணங்கள் களைய வேண்டும்.
மாணவச் சக்தியைப் பொருள்
உள்ள ஆக்க வழியில் திருப்ப
வேண்டும்.

பல்லாயிரம் பிரச்சினைகளிடை
யே இவற்றையும் உறுதியோடு
அணுக வேண்டும். நமது
பேரன்பிற்குரிய அறிஞர் அண்ணு
அவர்கள் சொன்ன மறக்க
முடியாத வார்த்தைகளான

''உறுதியாக இருப்போம்;
வளைந்து கொடுக்கமாட்டோம்

கொள்கைகளுக்குப் பதிலாக
வெறியைத் தவறுதலாக மேற்
கொள்ள மாட்டோம்.

உண்மை என நினைத்துப்
போலியின் பின் செல்லமாட்
டோம்!''

மறைந்தும் மறையாத
வள்ளுவர் சொன்ன—'' வினைத்
திட்பம் என்பது, ஒருவன் மனத்
திட்பம்; மற்றைய எல்லாம் பிற''
என்ற குறளை நினைவு கூர்வோம்.

இந்த ஆண்டின் பட்டதாரி
களே ! உங்கள் வாழ்வு ஒளிமய
மாக இருக்கவேண்டும்; என் விருப்
பத்தைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

பழங்காலக் கவிஞர் ஒருவர்
சொன்ன கீழ்க்காணும் கருத்தை
மனத்தில் எடுத்துச் சொல்லுங்
கள்.

உதய நேரத்தின் அறிவு
கொளுத்தும் முறையைக்
கவனியுங்கள் ! இந்த நாளைப்
பாருங்கள்! ஏனெனில் இந்
நாளே— வாழ்க்கையாகும்!
வாழ்க்கையின் வாழ்க்கையா
கும் ! அதனுடைய குறுகிய
காலத்தில் உங்களது வாழ்வி
னுடைய உண்மைகளின்
அனைத்தும் பல்வேறு உருவங்
களும் கிடக்கின்றன!

வளர்ச்சியின் மகிழ்ச்சி !
செயலின் கீர்த்தி!
அழகின் மேன்மை!

இவை அடங்கிய நேற்று என்பது
ஒரு கனவு ! நாளை என்பது ஒரு
காட்சி ஆனுல் நன்ருக வாழும்
'இன்று' என்பது .. ..
ஒவ்வொரு 'நேற்று' என்ப
தையும் மகிழ்ச்சிக் கனவாக்கும்!
ஒவ்வொரு 'நாளை' என்பதை
யும் நம்பிக்கையின் காட்சி
ஆக்கும்!

■

கூட்டுறவே நாட்டுயர்வு

வாழ்க !   வளர்க !!

திருபுவனம் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., Z 322

திருபுவனம், திருவிடைமருதூர் அஞ்சல், தஞ்சை மாவட்டம்

குறைந்த இலாபம் !   நிறைந்த பயன் !!

எங்கள் சங்கத்தில் பரம்பரையாகத் தொழில்நுணுக்கம் தெரிந்த கைதேர்ந்த நெசவாள உறுப்பினர்களைக் கொண்டு பட்டுச் சேலைகள், டிஷ்யூ, ஜாங்ளா, கிராஸ் கொடி, பாவாடை, சோளி முதலிய உயர்ந்த ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

கண்கவர் கலர், நவநாகரீக டிசைன்கள், பலவண்ண வேலைப்பாடுகள் உடையன. உயர்ந்த ரக ஜரிகை, வண்ணம் இவைகளுக்கு உத்தரவாதமுடையது.

இலாபம் பாராது பொதுமக்களின் சேவையையே குறிக்கோளாகக்கொண்டு இச் சங்கம் இயங்கி வருகிறது. இதனால் இச்சங்கத்தில் தயாரிக்கப்படும் பட்டு ஜவுளிகள் தமிழ்நாடு முழுவதும் நன்மதிப்பினைப் பெற்றும், பம்பாய், மைசூர் வரை பொதுமக்களால் போற்றப் பட்டும் வருகின்றன.

ஒரு முறை சங்கத்திற்கு வருகை தந்து பார்வையிட்டால் உண்மை விளங்கும்:

ஆர்டர்கள் ஏற்றுக்கொண்டு குறித்த காலத்தில் மேம்படச் செய்து கொடுக்கப்படும். பெயர்கள் போட்டுப் பொன்னாடைகள் தயாரித்துக் கொடுக்கப்படும்.

ஞாயிறு மற்ற எல்லா விடுமுறை நாட்களிலும் வியாபாரம் உண்டு.

உங்கள் பணம் நல்ல வகையில் முதலீடு செய்ய—திருமணம் மற்றும் முக்கிய வைபவங்களுக்குத் தேவையான பட்டுச் சேலைகள் வாங்க சங்கத்திற்கு வருகை தரக் கேட்டுக் கொள்கிறோம்.

எஸ். ராஜகோபாலன், எம்,ஏ.,பி,எல்.,
தலைவர்.

சிவ. பாலசுப்ரமணியன்,
கைத்தறி அதிகாரி/செயலாளர்.

" ஏழைகளுக்காக ஏழைகளால் உருவாக்கப்பட்ட இந்த அரசு ஏழை மக்களின் அடிப்படைக் குறைகளைப் போக்குவதில் தலையாய கவனம் செலுத்தும் ''— என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

அந்த நோக்கத்தை ஈடேற்றும் வகையில் முதல்வர் தமிழவேள் கலைஞர் அமைத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தன் அரும்பணிகளால் தலைநகரத்தில் குடிசைகளைக் கோபுரங்களாக்கி வருகின்றது.

பல அடுக்கு மாடிக்குடியிருப்புகள் வசதிக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் நான்கு அடுக்கு மாடிக் கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த நான்கு மாடிக் குடியிருப்புகளில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு படுக்கை அறை, முன் வரவேற்பு அறை, நவீனக் கழிவறை, குளிக்கும் அறை, சாமான்கள் வைக்கும் வசதிகளோடு கூடிய சமையல் அறை முதலியன உள்ளன.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டிக் கொடுக்கும்

அட்டை சொல்லும் செய்தி

ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூபாய் 6,000 முதல் ரூபாய் 7,000 வரை செலவாகிறது.

அரசின் புதிய முடிவின்படி ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனி மீட்டர் [illegible] மின்சார வசதியும் தண்[illegible] குழாயும் போட்டுக் கொடு[illegible] மற்ற வசதிகளும் செய்து த[illegible] தென்றால் மாதந்தோறும் ஒரு குடியிருப்புக்கு வாடகை[illegible] ரூ. 55 வசூலித்தாக வேண்டு[illegible] ஆனால், நமது அரசு ரூபாய் 15 மட்டும் வாடகை வாங்கினால் போதும் என்று சொல்லியுள்ளது. இதனால் குடிசைப்பகுதி மாற்று வாரியம் கட்டிவரும் குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும் நமது அரசு ரூ. 40 மான்யம் தருகிறது.

அக்டோபர் திங்களில் மட்டும் சென்னை நகரில் நான்கு இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் புதிய குடியிருப்புகள் கட்டும் பணியினை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஏழையரின் வாழ்வில் இனி எல்லையில்லா மகிழ்ச்சி வந்து சேரப்போகிறது என்பதைத் தான் அட்டைப்படத் தம்பதிகள் சொல்லாமல் சொல்கிறார்கள்.

நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90 "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்

தந்தி நில்போபாங்க் தொலைபேசி எண் 2420
கிளைகள்: கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
தொலைபேசி எண்: 332, 2684, 24

	(லட்சம்)
அனுமதிக்கப்பட்ட மூலதனம் ..	40·00
வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ..	29·87
வட்டி விகிதம்	
(1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு ..	4%
(2) பிராவிடண்ட்பண்டு டெபாசிட்டு	5%
நிரந்தர டெபாசிட்டுகள்	
(1) 1 மாதம் முதல் 3 மாதங்களுக்குள்ளாக	3½%
(2) 3 ,, ,, 6	4¼%
(3) 6 ,, ,, 12 ,,	4¾%
(4) 12 ,, ,, 24 ,,	5¼%
(5) 24 ,, ,, 36 ,,	6¼%
(6) 36 ,, ,, 60 ,,	6¾%
(7) 60 ,, ,, 84 ,,	7¼%
(8) 84 மாதங்களுக்குமேல் ,,	7½%
36 மாதங்களுக்கும்	7¾%

அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதாகவுடர், எம் பி., பெருந்தலைவர். இரா.க.வேலாயுதம், பி.ஏ. துணைப்பதிவாளர்-செயலாளர்.

வெண்பாப் போட்டி-22

ஈற்றடி: வீரர் எழுக விரைந்து

முடிவுத் தேதி: 15—11—1971

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை,

சென்னை வட்டம், சென்னை-25.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 10-11-1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வ.எண்.	வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி கிடைக்குமிடம்.
1	அழகியநத்தம் கிராமத்திற்கு அருகே பெண்ணாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் (தென்னார்க்காடு மாவட்டம்).	20,750	கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலை), கடலூர்.

ஒப்பந்தங்கள் 10-11-1971 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 51.75 செலுத்தி, 27-10-1971 முதல் 9-11-1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப்பணித் துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை), கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ''ரிசர்வ் வங்கி''யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை), சென்னை வட்டம்.

சென்னை-25,
11-10-1971.

(த. 16)

கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில் துறை
ஒப்பந்த அறிவிப்பு

1971-72ஆம் ஆண்டுக்குக் கதர் கிராமத் தொழில் துறைக்கு வேண்டிய எழுது பொருள் (ஸ்டேஷனரி) சாமான்கள் சப்ளை செய்வதற்கான முத்திரையிடப் பெற்ற ஒப்பந்தங்கள் 30-11-1971 மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு 3-12-1971 காலை 11 மணிக்கு ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

கீழ்க்கண்ட முகவரியில் ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் விற்பனை வரியுடன் ரூ. 10-க்கு டிமாண்ட் டிராப்ட் அல்லது ரொக்கம் கீழே கண்ட முகவரியில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். 1-11-1971-க்கு முன்னதாக வாங்கப் பெற்ற டிமாண்டு டிராப்டுகள் ஏற்கப்பட மாட்டாது.

பொ. சோமசுந்தரம்,
இயக்குநர், கதர் கிராமத் தொழில் துறை, சென்னை-4.

(த. 14)

ஏல விற்பனை

தீ அணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம். எஸ். ஓய். 6707 ஸ்டுடிபேக்கர்—1953 மாடல், பாளையங்கோட்டை தீயணைப்பு நிலையத்தில் 1971-ம் வருடம் நவம்பர் மாதம் திங்கட்கிழமை 22-ம் தேதியன்று காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை பாளையங்கோட்டை தீயணைப்பு நிலையத்தில், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எம். எஸ். சுப்பிரமணியம்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
பாளையங்கோட்டை.

(த. 15)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாட்சி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 11—11—1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரைப் பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் விதி முறைகள் வேண்டுவோர் முதல் வேலைக்கு ரூ. 5-ம், விற்பனை வரி ரூ. 3-50 சதவீதமும் மற்ற வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும்ரூ. 2-ம், விற்பனை வரி ரூ. 3-50 சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி செலுத்துச் சிட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 9—11—1971 வரைப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலைநேரங்களில் விசாரிக்கவும்.

வரிசை எண்.	கட்டின் நடப்பு எண்.	வேலையின் பெயர்.	மதிப்பீடு தொகை. ரூ.	முன் வைப்புத் தொகை. ரூ.	வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.
1	இ1/23452/70	காந்தி சந்தையில் மாடு வதைக் கட்டடம் கட்டுதல்.	20,387	510	3 மாதம்.
2	இ1/529/71	வடுகபாளையம் நகராட்சிப் பள்ளியின் கீழ்புற தென்புறச் சுற்றுச் சுவரைப் புதுப்பித்துக் கட்டுதல்.	8,283	207	,,
3	இ1/13042/71	மரப்பேட்டை சுண்ணாம்புக் காளவாய் இட்டேரி ரோடுக்கு ஓடையிலிருந்து தெற்கே ரயில்வே லைன் வரை கருங்கல் கப்பிப் போட்டு தார் தளம் போடுதல்.	8,510	213	,,
4	இ1/19498/70	வடுகபாளையம் இடையர் வீதிக்குத் தார் தளம் போடுதல் மற்றும் ஒரு சிறுபாலம் கட்டுதல்.	13,942	349	,,
5	இ1/3151/71	புதிய உர உற்பத்தி நிலையத்தில் உள்புறம் ஒரு பகுதிக்குக் கருங்கல் கப்பி ரோடுகள் போடுதல்.	19,247	482	,,
6	இ1/7719/70	ஜுபிலி கிணறு இடத்தில் தண்ணீர்த் தொட்டி மோட்டார் ரூம் கட்டுதல், கிணற்றுக்கு கம்பி அளி போடுதல் மற்றும் கிணறுஆழப்படுத்துதல்.	8,686	217	,,
7	இ1/7695/71	தரை மட்ட தண்ணீர்க் கிடங்கில் காவலாளி குடியிருப்பு மற்றும் ஆபீஸ் அறைக் கூரைகளைப் பிரித்துவிட்டு சிமெண்ட் கான்கிரிட் கூரை போடுதல் மற்றும் தளவாட அறை கட்டுதல்.	13,893	348	,,

ஒப்பந்தப் புள்ளி

தர்மபுரி மின் இயக்கத் திட்டம் குத்தகை விளம்பரம்

கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்வதற்கான மூடிமுத்திரையிட்ட குத்தகைகள், அடியிற் கையொப்பமிட்டவரால் தர்மபுரியில் உள்ள அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட முடிவு நாட்களில் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்:

சாற்றுக் குறிப்பு எண்:	வேலைக் குறிப்பு:	சேர்ப்பிடம்:	முடிவு நாள்:
த.மி.தி./84/71	பார்கோ 165 W. B. 5 டன் உள்ள இரண்டு லாரிகளுக்கு கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல்.	தர்மபுரி.	8—11—1971
த.மி.தி./85/71	இந்துஸ்தான் பெட்போர்டு 179 W.B. 5 டன் உள்ள இரண்டு லாரிகளுக்கு கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல்.	தர்மபுரி.	8—11—1971
த.மி.தி./71 ..	பார்கோ மாடல் B6/B. 800—188 W. B. பிக்கப் வேனுக்கு பாடி கட்டுதல்.	தர்மபுரி.	8—11—1971

சாற்றுக்குறிப்புப் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 [(ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத்தக்கதல்ல)] பண அஞ்சல் (M.O.) மூலமாகவோ அல்லது நேரிலோ தர்மபுரி மின் திட்டத் தலைமைக் கணக்காய ரிடம், சாற்றுக் குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு பெற்றுக் கொள்ள வேண்டப்படுகிறது. கூப்ப னில் தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்தால் பண அஞ்சல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பண அஞ்சல்கள் குறிப்பிட்டுள்ள முடிவு நாட்களுக்கு ஐந்து நாட்கள் முன்வரையில் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திற்கும் பிணைத்தொகையாக, பணத்தையோ அல்லது பண மாற்றோலையையோ (Demand Draft) தர்மபுரி மின்திட்ட அலுவலகத்தில் நேரில் செலுத்தி முன் இரசீது பெற்று குத்தகைகளுடன் இணைக்கப்பட்டோ அல்லது பணமாற் றோலையைக் குத்தகைகளுடன் இணைத்தோ அனுப்புதல் வேண்டும். பிணைத்தொகை இல்லாத குத்தகைப் பாரங்கள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அஞ்சல் மூலம் பணம் அனுப்பினவர்களுக்கு சாற்றுக்குறிப்புகள் சாதாரணத் தபாலில் அனுப் பப்படும். சாற்றுக் குறிப்புகள் கிடைக்கா விட்டாலோ அல்லது தாமதமாகக் கிடைத்தாலோ தமிழ் நாடு மின்வாரியம் பொறுப்பேற்காது. மேற்படி சாற்றுக் குறிப்புகள் பிறருக்கு மாற்றிக் கொள்ள தக்கதல்ல.

விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு நாள் அன்று பிற்பகல் 3 மணியளவில் அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்கு (2 மணி) பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கீழே கையொப்ப மிட்டவர் எந்த ஒரு குத்தகையையோ அல்லது எல்லா குத்தகைகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைதாரர்களுக்கிடையே உத்திரவைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வைப் பொறியாளர்,

தர்மபுரி மின் இயக்கத்திட்டம்,
தர்மபுரி.

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3·00மணிவரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமண சாலையில்மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3·15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	கோட்டம்.	முன் வைப்புத் தொகை.
1 கொடநாடு காணும் அடிப்படைக்கு செல்லும் அணுகு பாதைக்கு மேம்பாடு.	நீலகிரி ..	ரூ. 2,080
2 ஆவல்பூந்துறை பண்ணைக் கிணர் சாலையில் மைல் 2/1, 2/3ல் உள்ள வெள்ளத்தால் சேதமடைந்த தாம்போகிகளைப் புதுப்பித்துக் கட்டுதலும் அவற்றிற்கு அணுகு பாதை அமைத்தலும்.	ஈரோடு ..	ரூ. 6,600

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20 உடன் விற்பனை வரியும் செலுத்தி 20—10—1971 முதல் 9—11—1971 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்ட பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேயும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானால் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர ரிசர்வு பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

பா. சேக்உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப)

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2:

(த. 2.)

ஒப்பந்தம் ரத்துச் செய்தல்

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—வடார்க்காடு மாவட்டம் — செங்கத்தில் 38 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவமனை கட்டுதல்.

மேற்குறிப்பிட்ட வேலைக்காக அழைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு ரத்துச் செய்யப்படுகிறது.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து., செங்கை-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த.4)

ஒப்பந்தப் புள்ளி

போக்குவரத்துத் துறை சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2, அவர்களால் கீழ்க்கண்ட ஸ்டால்கள் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் 10—11—1971 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 1-வது நெம்பர் ஸ்டால்.

2. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 4-வது நெம்பர் ஸ்டால்.

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப்பத்திரங்கள் முதலியவற்றை, நிர்வாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2, அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்த பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

இயக்குநர்.

(த.6)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழ்க்காணும் வேலைகளை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் (Separate Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் சாற்றுக் குறிப்பு எண்ணுக்கு எதிர்ப்புறமாக உள்ள தேதிகளில் பிற்பகல் 1-30 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் விவரமும்.	சாற்றுக் குறிப்பு எண்.	கட்டுத் தொகை.	கடைசியாக நிர்ணயிக்கப்படும் தேதி.
1 திருவலம் துணை மின் நிலையம் குடியிருப்புக் கட்டட வேலைகள் சம்பந்தமாக.	Gcc (vm) 69.	2,500	25-11-1971
2 மோரூர் துணை மின் நிலையம் குடியிருப்புக் கட்டட வேலைகள்.	Gcc (vm) 70.	2,500	25-11-1971

வேலைகளுக்கான ஒப்பந்தங்களை இவ்வலுவலகத்தில் 25-10-71 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ உரிய தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட ஒவ்வொரு துணை மின் நிலையங்களிலும் உள்ள வேலைகளுக்கான ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதிகள் (Tender Specification) வரைபடங்கள் ரூ.30 அல்லதுஒப்பந்தங்கள் (Tender Schedule) மட்டும் வேண்டுவோர் ரூ. 15 செலுத்தித் தலைமைக் கணக்காயர் (Chief Accountant) பொது நிர்மாண வட்டம், காட்பாடி நகர் விரிவு (வட ஆர்க்காடு மாவட்டம்) அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ (கூப்பனில் சாற்றுக் குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு) செலுத்தவும். சாற்றுக் குறிப்பு எண் கூப்பனில் தெளிவாக குறிப்பிடப்படாமல் இருந்தால் மணி ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தங்கள் சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்படும். அஞ்சல் துறையினால் ஏற்படும் காலதாமதத்திற்கோ, இழப்பிற்கோ மின் வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் புள்ளியும் ஸ்பெசிபிகேஷனும் மாற்றத்திற்குரியன அல்ல. ஒப்பந்தப் புள்ளியின் விலை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தங்கள் அனுப்பும் பொழுது முன்பணமாக (கட்டுத் தொகை) ஒவ்வொரு ஸ்பெஸிபிகேஷனுடனும் அனுப்பப்படாவிட்டால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவுத் தேதியன்று 3-30 மணிக்கு ஆஜராக விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

ஒப்பந்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட பாரத்தில் இல்லாவிடினும் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அனுப்பாவிடினும் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எல்லா ஒப்பந்தங்களையும் காரணம் காட்டாமல் தள்ளுபடி செய்வதற்கோ அல்லது வேலைகளைத் தனித்தனியாக வெவ்வேறு ஒப்பந்ததாரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கோ கீழே கையொப்பமிட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு.

எஸ். வெங்கட கிருஷ்ணன்;
மேற்பார்வைப் பொறியாளர், விழுப்புரம் நிர்மாண வட்டம், காட்பாடி நகர் விரிவு அஞ்சல்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

(த.19)

விவரங்கள் தேவை

சமுதாய நலத்துறை

தமிழ்நாட்டில் சமுதாய நலத் தொண்டு செய்யும், மத, அற, தனியார் தொண்டு நிறுவனங்கள் பற்றிய விவரங்களைக் கொண்ட குறிப்பு நூல் (Directory) ஒன்றினைத் தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இக் குறிப்பு நூலில் அகில உலக நிறுவனங்கள் மற்றும் தமிழ் நாட்டில் தொண்டு செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் விவரங்களும் சேர்க்கப்பெறும். இக்குறிப்பு நூலைத் தயாரிக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கீழ்க்கண்ட விவரங்களை 10—11—1971 தேதிக்குள் அரசு செயலாளர், சமுதாய நலத்துறை, சென்னை-9 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் :

(1) சமுதாய நலத் தொண்டு செய்யும் மத, அற, மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயரும் முகவரியும், தலைவரின் பெயரும்.

(2) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனத்துடன் ஒருங்கிணைந்துள்ள நிறுவனத்தின் பெயரும் முகவரியும்.

(3) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனம் செய்யும் தொண்டின் விவரம்.

(4) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனத்தால் நிர்வகிக்கப் பெறும் சமுதாய நல நிலையங்களின் பெயர்.

(5) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனத்தின் வருமான இனங்கள் பற்றிய சுருக்கமான விவரங்கள்.

(6) குறிப்புரை.

(த.7)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

(ந. க. எண். 25595/71/வ7, நாள் 5-10-1971.)

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும், செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. வேலூர், அவர்களால் கீழ்க் கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-11-1971 பிற்பகல் 3-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும், வேலையின் பெயரும்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். 228 மீட்டர் முதல் 258 மீட்டர் முடிய கட்டுதல்.	2,800
2. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். மீட்டர் 258 முதல் 288 மீட்டர் முடிய கட்டுதல்.	2,800
3. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். மீட்டர் 288 முதல் 318 மீட்டர் முடிய கட்டுதல்.	2,600
4. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். 318 மீட்டர் முதல் 350 மீட்டர் முடிய கட்டுதல்.	2,800

1. ஒப்பந்த விபரம்.—கே-2.

2. முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட்டு வகையிலோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் மதிப்பில் 5 சதவீதம் குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 20 (கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ) P. W. Remittance—III other Remittance என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் பொ. ப து., தண்டரை அணைக்கட்டுக் கோட்டம், செய்யார், அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரி ரூ. 0.60 விற்பனை வரி XII Sale Tax (d) பல்வகை என்ற தலைப்புக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

5. வேலை முடிப்பதற்குரிய காலம்.—6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

மேற்பார்வைப் பொறியாளர், செங்கற்பட்டு, வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1, அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்த புள்ளிப்பத்திரங்கள் கிடைக்கக் கூடிய தேதி:—27-10-1971 முதல் 10-11-1971 வரை.

மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(ந. 17)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்களால், தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 2-12-1971 மாலை 3-00 மணி வரைப் பெற்றுக்கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்:—திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள், 18 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

2 ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

3 பிணைப்பணம் செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்:—ரூ. 5,325.

4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் செயற் பொறியாளர், கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.—ரூ. 30.00.

5 விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி "டி" பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்தல் வேண்டும்.—ரூ. 1.05.

6 கால அளவு.—பத்து மாதங்கள்.

7 ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்:—10-11-1971 முதல் 1-12-1971 முடிய.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(ந. 18)

சென்னை மின்சார அமைப்பு (விநியோகப் பிரிவு)

சாற்றுக் குறிப்பெண் எஸ். 27

ஏலம் நடத்துவதற்கான ஒப்பந்த விவரம்

சென்னை மின்சாரத் (விநியோகம்) திட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கழிவுச்சாமான்கள், காலி டின்கள் மற்றும் வழக்கிறந்த உபயோகமில்லாத பொருட்களும் எந்திரத் தொகுதிகளையும் வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கையொப்பமிட்டவரால் 9—11—1971 பகல் 12 மணிவரை வரவேற்கப்படுகிறது. மூடி முத்திரையிட்ட உறைகளின் மேல் "கழிவுச் சாமான்கள், காலி டின்கள் மற்றும், வழக்கிறந்த பொருட்களை வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி" என்று தவறுமல் எழுதி அனுப்பவேண்டும்.

Item number.	Description.	Quantity.	Available at.
1	M.S. Melting Scrap	5,339 Kgs.	Central Stores, M.E.S./Distn Mylapore, Madras-4.
2	G.I. & M.S. Wire Scrap	6,281 ,,	Do.
3	Light Sheet Scrap	13,718 ,,	Do.
4	Steel Stamping Scrap	7,019 ,,	Do.
5	G.I. & M.S. Pipe Scrap	5,313 ,,	Do.
6	Auto & Machinery Scrap	1,506	Do.
7	Cast Iron Scrap	15,950 ,,	Do.
8	Tubular Pole Scrap	5,404 ,,	Do.
9	Condemned Transformer Tank Scrap	8,590 ,,	Do.
10	Aluminium Cable Scrap	11,141 ,,	Do.
11	All Aluminium Scrap	4,657 ,,	Do.
12	A.C.S.R. Scrap	4,787 ,,	Do.
13	M.S. Rod Cut bits below 2'	7,485 ,,	Do.
14	M.S. Rod Cut bits above 2'	16,889 ,,	Do.
15	Copper Cable Scrap	48,779 ,,	Do.
16	M.S. Structural Cuttings	98,535 ,,	Do.
17	Rail & R.S. Joists cut bits Scrap	7,444 ,,	Do.
18	V.I.R. & W.P. Wire Scrap (Copper)	1,982 ,,	Do.
19	V.I.R. & Wire Scrap (Aluminium)	2,317 ,,	Do.
20	Brass Scrap	807 ,,	Do.
21	Lead Scrap	772 ,,	Do.
22	Hoop Iron Scrap	661 ,,	Do.
23	G.I. Metal Parts Scrap	556 ,,	Do.
24	Empty Tin 1 Gln. Cap	43 Nos.	Do.
25	Empty Tin 4 Gln. Cap	39 ,,	Do.
26	Empty Tin 5 Gln. Cap	120 ,,	'D' Section at Central Stores, M.E.S. (D), Tondiarpet.
27	Empty tin 1 Pint & 1 to 3 Litre Capacity	153 ,,	
28	Empty Tin 40/45 Gln. Capacity	320 ,,	
29	Empty Jar	1 No.	Central Stores, M.E.S. (D), Mylapore, Madras-4.
30	Empty Bottles of sizes	135 Nos.	Do.
31	Fused Tube lamps assorted sizes	18,067 ,,	11,452 Nos. at Mylapore Stores and 6,615 Nos. at Pallavaram Stores.
32	Defective Tube light chokes Scrap	3,274 ,,	Central Stores, Mylapore, Madras-4.
33	Fused Tube light Starters	3,252 ,,	Do.
34	Moulding Ash	500 ,,	Do.
35	Sub-station battery cells	44 ,,	Do.

Item number.	Description.	Quantity.	Available at.	
36	Scarp Batteries 6 Volt	2 ,,	Central Stores, Mylapore Madras-4.	
37	Condemned Pedestal Fans	2 ,,	Do.	
38	Condemned D.C. Ceiling fans with blades	4 ,,	Do.	
39	Bicycle Scrap	3 ,,	Do.	
40	Cycle Tyre Scrap	3 ,,	Do.	
41	Cycle Tube	3 ,,	Do.	
42	Motor Type Scrap of sizes	132 ,,	Do.	
43	Motor tube Scraps	103 ,,	Do.	
44	Scrap flaps	2 ,,	Do.	
			At Tondiarpet Stores.	At Adyar Stores.
45	Empty Cable drums (Wooden) Big	10 Nos.	10	Nil.
46	Empty Cable drums (Wooden) Medium	38 ,,	33	5 Nos.
47	Empty Cable drums (Wooden) Small	85 ,,	48	37 ,,
48	Empty Conductor Drums (Wooden)	34 ,,	At Tondiarpet Stores.	
49	Deal Wood Scrap	14,340 Kgs.	Do.	
50	Wood Pole Scrap	4,089 ,,	Do.	
51	Empty Cement Gunnies	9,800 Nos.	Do.	
52	Defective Unserviceable 1/2 H.P. SP. Elecl. Motor No. 31401009.	1 No.	Central Stores, M.E.S. (D), Mylapore.	
53	D.C. Motor 8 H.P. 450V/15.7 Amps. 1440 RPM. Sl. No. 4473753/SH.	1 ,,	Do.	
54	Condemned Spot Welding Set Indian make	1 ,,	Do.	
55	Condemned Band Sae machine	1 ,,	Do.	
56	Condemned Rems Threading machine	1 ,,	Do.	
57	Condemned Upright drilling machine	1 ,,	Do.	
58	Condemned Vehicles—			
	(a) Bedford Station Wagon MSZ 8116		Available at Transport Office, M.E.S. (D.), Wallajah Road, Madras-2.	
	(b) Fargo Pick up Van MSY 3144		Do.	
	(c) Fargo Pick up Van MSY. 3125		Do.	
	(d) Fargo Station Wagon MDY. 3621		Do.	
	(e) Tempo Van (Triwheeler) MSV. 6117		Do.	
	(f) Tempo Van (Triwheeler) MSV. 3750		Do.	
	(g) Willy's Van MDU. 7588		Central Stores, M.E.S. (D), Cooks Road, Otteri, Madras-12.	
	(h) Fargo Van MDN. 3825		Do.	

குறிப்பிட்ட தேதி நேரம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். குறிப்பிடுகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம், விற்பனை நிபந்தனைகள் நகல் வேண்டுவோர் நகல் ஒன்றுக்கு ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின்சார அமைப்பு (விநியோகம்) 157, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ள லாம். மேற்படித் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது. அஞ்ச லில் அவை தவர நேரிட்டாலோ அல்லது தாமதம் ஏற்பட்டாலோ அவற்றிற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒப்பந்தப் புள்ளியில் சாமான்கள் வாங்குவதற்குகாகக் குறிப்பிடும் மொத்தத் தொகையில் 10 சதவிதத் தொகையை ரொக்கமாகவோ, அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ கட்டுத் தொகையாக அக்கௌண்ட்ஸ் ஆபீஸ், சென்னை மின்திட்ட (விநியோகம்), 157, அண்ணாசாலை, சென்னை-2ல் கட்ட வேண்டும். கட்டுத் தொகையான 10 சதவிகிதத் தொகையைப் பணமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்தியதற்கான சான்று இணைக்கப் பெருமல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

விற்பனைக்காக மேலே குறிப்பிட்டுள்ள சாமான்களின் எண்ணிக்கைகளும் அவற்றின் அளவை களும் மாற்றப்படவோ அல்லது நீக்கப்படவோ தக்கதாகும். கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமைப் பெற்றவராவார்.

157, அண்ணாசாலை, சென்னை-2.

மேற்பார்வை மின் பொறியாளர்,
சென்னை மின்சாரத் திட்டம்
(விநியோகம்).

(த. 3)

வீட்டு வசதி வாரியம்

(தெற்குக் கோட்டம்)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண். எஸ். 4/6037/71

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட, மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால், கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 வரை வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

எண்ணும் வேலையின் விவரமும்.	சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.	ஒப்பந்தப் புள்ளி பெற கடைசித் தேதி.
	ரூ.	ரூ.	ரூ.	
1 டி. பி. ஆர். திட்டத்தில் டைப் டிசைன் 129/71 படி 40 இணைப்பு வீடுகள் கொண்ட ஒரு பிளாக் கட்டுதல்.	2,75,000	4,125	15+ வி. வ.	9-11-1971
2 ஒரு படுக்கை அறை உள்ள, நான்கு தள 16 இணைப்பு வீடுகள் கொண்ட ஒரு பிளாக்கை சாமியர்ஸ் ரோடு நந்தனத்தில் கட்டுதல்.	2,00,000	3,000	15+ வி. வ.	9-11-1971
3 நந்தனம் சாமியர்ஸ் ரோடில் கிரவுண்டு ஃபுளோரில் 6 கடைகள் கொண்ட ஒரு பிளாக், மேல் தளங்களில் 9 இணைப்பு வீடுகள் கட்டுதல்.	1,60,000	2,400	10+ வி. வ.	11-11-1971
4 நந்தனம் சாமியர்ஸ் ரோடில் 12 இணைப்பு வீடுகள் கொண்ட ஒரு பிளாக் கட்டுதல்.	1,60,000	2,400	10+ வி. வ.	11-11-1971

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும் நிர்வாகப் பொறியாளர் (தெ.) அலுவலகம், வீட்டு வசதி வாரியத்தில் 28-10-1971லிருந்து எல்லா அலுவல நாட்களிலும் காலை 10-00 மணிமுதல் பிற்பகல் 2-00 மணிவரை கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். குமரேசன்,
நிர்வாகப் பொறியாளர் (தெற்கு.)

(த.25)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்குக்
கடைசித்தேதி நீட்டிப்பு

பொருள் : பல்வேறு நீர்வழங்கு திட்டங் களுக்கு ஒருமித்தக்கிணறு (Collector well) அமைப்பு.

ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசித் தேதி 5-11-1971 வரை நீட்டிக்கப் பட்டிருக்கிறது. 5-11-1971 பிற்பகல் 3-00 வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப் பட்டு அதே நாள் பிற்பகல் 3-30-க்கு சம்பந் தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) வட்டம் அவர்களால் அல்லது அவர்களால் அதிகார மளிக்கப்பட்டவர்களால், அப்போது வந் துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலை யில் பிரிக்கப்படும்.

மூல ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் கண் டுள்ள மற்ற நிபந்தனைகள் எதிலும் மாற்றம் இல்லை.

எம். மியாகான்,
தலைமைப் பொறியாளர், (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் நகராட்சிப் பணிகள்),
குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.

(த. 10)

1-11—10

வரிசை எண்.	கட்டின் நடப்பு எண்.	வேலையின் பெயர்.	மதிப்பீடு தொகை.	வைப்புத் தொகை.	வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.
			ரூ.	ரூ.	
8	இ1/14386/71	கோட்டூர் வழி நடுநிலைப் பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக்கழிப்பிடம் கட்டுதல்.	8,143	204	1 மாதம்.
9	இ1/1438/71	தெப்பக்குளம் வழிப்பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக்கழிப்பிடம் கட்டுதல்	8,143	204	,,

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
6—10—1971.
(த. 35)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்

கோப்பு எண். எம். இ.6/437/71, 7—10—1971

உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு, தனித் தனியான, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், பட்டினப்பாக்கத்தில் கீழே கையொப்பமிட்டவரால் 22—11—1971 மாலை 3-00-மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

எண்.	வேலையின் பெயர்.	சுமார் வேலை மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.
		ரூ.	ரூ.	ரூ.
1	தற்போதுள்ள 7 பிளாக்குகளிலும் எல்லா வசதிகளுடன் இரண்டாம் தளம் கட்டுதல்	4,59,800	6,900	15 இத்துடன் விற்பனை வரி.
2	ஷை	4,59,800	6,900	ஷை
3	ஷை	4,59,800	6,900	ஷை
4	தற்போதுள்ள 8 பிளாக்குகள் மீது எல்லா வசதிகளுடன் இரண்டாம் தளம் கட்டுதல்.	5,25,400	7,880	ரூ. 20 இத்துடன் விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மாலை 3-05 மணிக்கு பிரிக்கப்படும். மேற்கொண்டு விவரங்களையும், பத்திரங்களையும், பிரதிகளையும் 6-11-71 முதல் கட்டணம் செலுத்தி (இது திருப்பித்தரப்படமாட்டாது) எல்லா அலுவல் நாட்களிலும் காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணிவரைக் கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் பெறலாம். காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் ஏற்கவும் எதையும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கவும் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

டி. ஜகதீசன்,
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 31)

மறு ஒப்பந்தப்புள்ளி

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம். பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், தபால் பெட்டி எண் 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சிராப்பள்ளி, அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படிப் பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்:—திருச்சிராப்பள்ளி தலைமை மருத்துவமனையில் இரண்டு அறுவைச் சிகிச்சை அரங்கங்களுக்குக் குளிர் சாதன வசதிகள் அமைத்தல்.

2 ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி, மற்றும் நேரம்:—11-11-1971 மாலை 3-00 மணி.

3 பிணைப் பொறுப்புத் தொகை:—ரூ. 3,900 (ரூபாய் மூவாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்).

4 ஒப்பந்த முறை:—மொத்தத் தொகை.

5 முடிக்க வேண்டிய காலம்:—ஆறு மாதங்கள்.

6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை:—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).

7 விற்பனை வரி.—ரூ. 0.88 (எண்பத்தெட்டு பைசாக்கள் மட்டும்).

8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி:—27-10-1971.

9 விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம்:—11-11-1971 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் "XXXVII. Public Works—State Revenue—Miscellaneous," மற்றும் "XII. Sales-tax—(b) Receipts under the State Sales-tax Act—General Sales-tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச்சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்

(க. 12)

ஒப்பந்தப் புள்ளி

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 15-11-1971 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	கட்டுத் தொகை.
	ரூ.	ரூ.
1 உடன் தணிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இடவசதி செய்ய, ஓர் அறை கட்ட.	10,500	525
2 குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய், சேய்நல விடுதியைப் பழுதுபார்க்க.	6,700	335
3 பாரதி கலை அரங்கின் மேடையை அகலப்படுத்த.	5,000	250
4 ஒலிமுகம்மது பேட்டை தாய், சேய்நல விடுதிக்கட்டடத்தை விரிவுபடுத்த.	9,000	450
5 ஒ. வி. அளகேசன் நகராட்சிப் பேருந்து நிலைய நுழைவாயிலின் அருகில் டாக்கி ஸ்டாண்டு அமைக்க.	8,000	400
6 தீரவிப்புச் சாமான்கள் வாங்க	16,000	400

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

காஞ்சிபுரம்,
11-10-1971.
(த. 20)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி.

பொள்ளாச்சி நகராட்சிக்கு மரம் மற்றும் ஹார்டுவேர் சாமான்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—11—1971 மாலை 3-00 மணி வரை ஆணையர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். அவை அன்று 3-30-க்குத் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 20·00 செலுத்த வேண்டும்.

பி. கே. முகமது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
11—10—1971.
(த. 22)

நவீன மீன்பிடி பயிற்சி

கடலூர் (தென்னார்க்காடு மாவட்டம்)

கடலில் சென்று மீனவர்களுக்கு நவீன முறையில் இயந்திரப் படகிலிருந்து மீன் பிடித்தல், நேவிகேஷன், இயந்திரப் பராமரிப்பு ஆகியவற்றில் மேற்கூறிய பயிற்சி நிலையத்தில் பத்து மாதப் பயிற்சி அளிக்கப்படும்.

விண்ணப்பதாரர் 18 வயதிற்கு மேற்பட்டும், 35 வயதிற்கு உட்பட்டும் இருக்க வேண்டும். குறைந்தது 5 வருடம் கடலில் மீன் பிடி அனுபவம் உள்ளவர்களாகவும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவும் நல்ல தேக ஆரோக்கியமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆனால், எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது தகுதியற்றதாகக் கருதப்பட மாட்டாது. விசைப் படகுகளை நடத்தும் மீனவர் குழுவினர்களுக்கும், மீன் இலாகாவிலிருந்து விசைப் படகு பெறுவதற்கு முன் பணம் கட்டி மனுச் செய்துள்ள மீனவர்களுக்கும் சலுகை அளிக்கப்படும். பயிற்சிக்காலத்தில் மாதம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உபகாரச் சம்பளமும், மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லும் தினங்களில் 0·50 காசு (ஐம்பது காசுகள் மட்டும்) படியும் அளிக்கப்படும். இப்பயிற்சிக்காக ஐம்பது மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டோர் இந்த இலாகாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமே கடலூரில் அளிக்கும் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். விண்ணப்பத் தாள்களைத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மீன் இலாகா உதவி இயக்குநரிடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்தாள் அனுப்பும் உறையின் தலைப்பில் ' நவீன மீன்பிடி பயிற்சி ' என்று எழுத வேண்டும். நேர்முகத் தேர்வின் தேதியும், இடமும் முன் கூட்டியே தெரிவிக்கப்படும்.

எல்லா விண்ணப்பங்களும் மீன் துறை உதவி இயக்குநர், மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3, தென்னார்க்காடுமாவட்டம் என்ற விலாசத்திற்கு 9-11-1971-ஆம் தேதி காலை பத்து மணிக்குள் தபாலின் மூலம் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். அரசு ஆணை எண் 1121, விவசாயத்தின்படி இம் முறை மட்டும் 17 வயது நிரம்பியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இப் பயிற்சிக்காக வேண்டி 15-9-1971-ஆம் தேதிக்கு முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

தி. மா. ஆறுமுகம்,
மீன்துறை துணை இயக்குநர்,
(மண்டலம்), சென்னை-6.

(த. 13)

ஒப்பந்தப் புள்ளி

வேளாண்மைத் துறை

கீழே கையொப்பமிட்டவரால் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டை அரசினர் விதைப் பண்ணையில், நவீன நெல் உலர்த்தும் (Paddy seed processing plant) கருவி வழங்கவும், அமைக்கவும், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10-11-1971 அன்று மாலை 3 வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் அன்றே 3-30 மணிக்கு முதுநிலை ஆராய்ச்சிப் பொறியாளர் அவர்களால், அவரது அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நியந்தனை பத்திரங்கள் நமூனக்கள் முதலியவற்றைக் கீழேகையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து, ரூ. 20.70 (ரூபாய் இருபதும் காசுகள் எழுபதுமட்டும் விற்பனை வரி உட்பட) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். (செலுத்தப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது). நிபந்தனைப் பத்திரம் வாங்கப் பணம் செலுத்துவோர் காசோலையில் (1) XXV வேளாண்மை— வேளாண்மை வருவாய் — பலதரப்பட்டவை என்றும் (ii) விற்பனை வரிக்கு XII-A விற்பனை வரி (d) பலதரப்பட்டவை— I. பொது விற்பனை வரி என்றும் தலைப்பு எழுதி அவற்றினைக் கருவூலத்திலோ, அல்லது ரிசர்வ் வங்கி, ஸ்டேட் வங்கியிலோ செலுத்தி அதன் மூன்றும் பிரதியை அனுப்ப வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும் ரூ. 5,000 முன் வைப்புத் தொகை கொண்டதாகவும், அதாவது இயந்திரத்தின் தொகையில் ஒரு சதம் கொண்டதாகவும் உள்ள மூன்றும் பிரதியுடன் வருமான வரி, விற்பனை வரி நீக்கம், பெற்ற சான்றிதழுடன் அனுப்ப வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், இயந்திரத்தின் மொத்த விலையில் 10 சதம் உறுதி முன் பணம் செலுத்தி, வேளாண்மை இயக்குநர், சென்னை, அவர்களுடன் ஒப்பந்தப் பத்திரம் செய்துகொள்ள வேண்டும்.

காரணங்களை ஒப்பந்தப் புள்ளிதாரர்களுக்கு விளக்காது அவர்களது ஒப்பந்தப் புள்ளிகளை நிராகரிக்கும் உரிமை உண்டு.

முதுநிலை ஆராய்ச்சிப் பொறியாளர், மண்டல ஆராய்ச்சி நிலையம், லாலி ரோடு அஞ்சல், கோவை-3.

இயக்குநர்,
வேளாண்மைத்துறை.

(த. 9)

ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக்குத் திருத்தம் எண்: பி 21-50 டன் டிராக்டர்கள், டிரெய்லர்கள் குறித்து.

மேலே குறிப்பிடப்பட்ட இனத்துக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெற தேதியும், நேரமும் 27-10-1971 நண்பகல் 12 மணி என்பதிலிருந்து 27-11-1971 நண்பகல் 12-க்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 27-11-1971 பிற்பகல் 3 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
கொள்முதல்
மற்றும் ஸ்டோர்ஸ்,
157, அண்ணா சாலை,
சென்னை-2.

(த. 5)

ஒப்பந்தப் புள்ளிகள்

திருச்சிராப்பள்ளி நகராட்சி

சி. ஐ. மற்றும் ஏ. சி. பிரஷர் பைப்புகள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 23-11-1971 மாலை 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நிபந்தனைகள், இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது மனுச்செய்தோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
தனி அலுவலர்.

(த. 26)

சின்கோனா துறை

இந்தியாவுக்கு வெளியே ஏற்றுமதிக்காக, 30 மெட்ரிக் டன் (Cinchona Feprifuge I.P.) வழங்குவதற்கு தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசித் தேதி 15-11-1971 மாலை 3-30 மணி. அதே நாள் மாலை 4-00 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகள் விவரங்களை கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து இலவசமாகப் பெறலாம்.

இயக்குநர்,
சின்கோனா துறை, அஞ்சல் பெட்டி எண் 6, உதகமண்டலம்.

9-10-1971.

(த. 24)

விருதுநகர் நகராட்சி

4'' அஸ்பெஸ்டஸ் சிமெண்டு பிரசர் குழாய் மற்றும் அதற்குரிய இணைப்புச் சாமான்களும் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 12-11-71-ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சிஅலுவலகத்தில் வைத்து பெற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தமான மற்ற விவரங்களை அலுவலக வேலை நாட்களில் நகராட்சிப் பொறியர் அவர்களிடமிருந்து எழுதிக் கேட்டு பெற்றுக் கொள்ளலாம்.

சி. சுப்பாராஜ்,
நகராட்சிப் பொறியாளர் &
ஆணையர் பொறுப்பு.

நகராட்சி அலுவலகம்,
விருதுநகர்,

8-10-1971.

(த. 37)

எழுதுபொருள் அச்சுத்துறை

எழுதுபொருள் அச்சுத் தொழில் துறை இயக்குநர், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களால் அரசினர் அச்சகம் மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1-ல் சேர்த்து வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருளிலிருந்து கிடைக்கப்பெறும் உலோகத்தைப் பிரித்தெடுக்கும் உரிமையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களுடன் 15-11-71-ஆம் தேதி மாலை 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் உலோகம் கலந்த கழிவுப் பொருளின் எடை ஏறத்தாழ 6 மெட்ரிக் டன்கள் தேறும். ஒப்பந்தங்கள் முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு பதிவு அஞ்சல் ஒப்பந்தத்துடன் எழுதுபொருள் அச்சுத் தொழில் துறை இயக்குநர்,மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். மற்றபடி வேறு முறையில் அனுப்பலாகாது என்பதுடன் 'கழிவுப் பொருளிலிருந்து கிடைக்கப்பெறும் உலோகத்தைப் பிரித்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள்'' என்ற குறிப்போடு வரும் உறைகளை 15-11-1971 மாலை 4-00 மணி அளவில் பிரிக்கப்பெறும். கழிவுப் பொருளிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கும் விலைவாசிக் குறிப்பானது 1 கிலோ கிராமிற்கான வீதத்தில் இருக்க வேண்டும்.

கழிவுப் பொருளிலிருந்து கிடைக்கப் பெறும் உலோகத்தை பிரித்தெடுக்கும் வேலையை அரசினர் அச்சக கட்டடத்திற்குள்ளேயே செய்யப்பட வேண்டும்.

இயக்குநர்.

மின்ட் பில்டிங்ஸ்,
சென்னை-1.

(த. 38)

ஏல விளம்பரம்

பொங்கலூர் ஊராட்சிஒன்றியம்

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் தாலூகா, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான எலவந்தி வடுகபாளையத்திலுள்ள பிரதம சுகாதார நிலையத்தில் அலுவலர் குடியிருப்புக் கட்டடங்களுக்குப் பின்புறமும் ரோட்டிற்கு முன்புறமும் உள்ள இவ் ஊராட்சி ஒன்றியத்துக்கு தேவைப்படாத மூன்று கட்டடங்களிலுள்ள (சுமார் ரூ. 12,500 மதிப்புள்ள) ஓடுகள், விட்டங்கள் மற்றும் ஜன்னல்கள் மரச் சாமான்கள் முதலியவைகளை 10-11-1971-ஆம் தேதி புதன் கிழமை காலை 10 மணிக்கு தனித்தனியாக ஆணையர் அவர்களால் அல்லது ஆணையர் அதிகாரம் பெற்றவர்களால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் பொங்கலூர் ஊராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்,
பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்.

(த. 27)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

எடைபோடும் இயந்திரம் ஒன்று Weighting machine with a Capacity of 1,000 k.g. plattform scale வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரால் 16-11-1971 மாலை 4.00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவங்கள் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்றோ, மனுச்செய்தோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
தனி அலுவலர்.

(த. 30)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்
சென்னை நகர நீர் வழங்கும் திட்டம்
வீராணம் செயல் திட்டம்

ஒப்பந்த அறிவிப்பு எண் : சி.இ. 15, நாள் 11–10–1971.
வேலையின் பெயர் : உப்பங்கழிக்குக் குறுக்கே (ஒக்கியம் பகுதி) வலுவேற்றப்பட்ட கான்கிரிட் குழாயைத் தாங்க வலுவேற்றப்பட்ட கான்கிரீட் பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்துக்காகவும் அதன் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக பொதுப்பணித்துறை அல்லது இதர அரசுத் துறைகளில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், புகழ் வாய்ந்த நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து தனி தலைமைப் பொறியாளர் பொ.ப. துறை (வீரணம் நீர் வழங்கு திட்டம், கூவம் சீர்திருத்தத் திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால், மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24—11—1971 மாலை 3-00 மணி வரை ஏற்கப்பட்டு, அதே நாள் காலை 4-00 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை : ரூ. 9,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 20.00+ விற்பனை வரி 74 காசுகள்.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தனித் தலைமைப் பொறியாளர் (வீ.நீ.வ.தி.கூ.சீ.தி.) சேப்பாக்கம், சென்னை-5ல் இடைக்கும் காலம் } 26–10–1971 முதல் 20–11–1971 முடிய அலுவலகநேரத்தில்

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம், விற்பனைவரி ஆகியவைகளை (இது திருப்பித் தரப்படாது), தமிழ் நாட்டில் அரசுக் கருவூத்திலோ, 'இந்திய ரிசர்வ்' பாங்கிலோ "Public Works Department Remittances III Other remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்ட வட்டம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தி, அதற்கான சலானையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோரும் கடிதத்தையும், தனித் தலைமைப் பொறியாளர் அலுவலகம், (வீராணம் திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5ல் தந்து பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்க தனித் தலைமைப் பொறியாளர் (வீராணம் நீர் வழங்கு திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

ஏ. வி. ஆழ்வார்,
தனித் தலைமைப் பொறியாளர்,
(வீ.நீ.வ.தி. & கூ.சீ.தி.).

சென்னை-5.
(த. 23)

ஒப்பந்தப் புள்ளி

பொறியியல் பணித்துறை

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், திருச்சி வட்டம், த.பெ.எண். 55, திருச்சிராப்பள்ளி—1

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின் படி பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், பஞ்சப்பட்டி அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதிக் கட்டடம் கட்டுதல்.
2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்:—17—11—1971 மாலை 3-00 ம ணி.
3. பிணைப்பொறுப்புத் தொகை—ரூ. 1,700 (ரூபாய் ஆயிரத்து எழுநூறு மட்டும்).
4. ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
5. முடிக்க வேண்டிய காலம்—ஐந்து மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7. விற்பனை வரி—0.88 (எண்பதெட்டு காசுகள் மட்டும்).
8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி—2—11—1971.
9. விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்:—17–11–71 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில். "XXXVII Public Works—State Revenue—Miscellaneous" மற்றும் "XII. Sales-tax (b) Receipts under the State Sales-tax Act—General Sales tax" என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவருமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 45)

தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்.

இடம் : அரசாங்க தடிமண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும் : 10, 11-11-71 முற்பகல் 9-00.

அளவு : ஏறத்தாழ 1,200 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

(த. 28)

ஏலம்

கோயம்புத்தூர் நகராட்சி

கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் நகராட்சிக்குச் சொந்தமான 464 புளியமரங்களின்பலன்களை 1971-ஆம் வருடம் நவம்பர் மாதம் 15-ஆம் தேதி முதல் 1972-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய அனுபவிக்கும் பாத்யதையை 15-11-1971-ஆம் தேதி காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளையும் மற்ற விபரங்களையும் நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆணையர்.

(த.50)

ஏல விளம்பரம்

திருச்சிராப்பள்ளி நகராட்சி

திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு சொந்தமான கீழ்அரண் சாலையில் ஓார்துசாமி பிள்ளை பூங்காவிற்குத் தென்புறத்தில் புதியதாக கட்டப்பட்டிருக்கும் 4 கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை 31-3-73 உள்ள காலத்திற்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலரால் 26-10-1971-ஆம் தேதி காலை 11 மணிக்கு ஏலம் விடப்படும். ஏலக் கட்டுப்பாடுகளும் மற்ற நிபந்தனைகளும் அலுவலக நாட்களில் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தெ. கோவிந்தராசன்,
தனி அலுவலர்.

13-10-1971.
(த.49)

ஒப்பந்தப் புள்ளி

இராஜபாளையம் நகராட்சி

நகராட்சி சுகாதாரப் பிரிவில் உபயோகப்படும் பென்ஸ்லாரியை தேவையான புதிய சாமான்கள் மாற்றி ரிப்பேர் செய்து கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 10-11-1971 ஆம் தேதி மாலை 3-00 மணிக்குள்ளும் அதன் முன்பும் நகராட்சி ஆணையர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தம் அனுப்பும் கவர் மேல் "பென்ஸ் லாரி ரிப்பேர் செய்ய ஒப்பந்தம்" என்று குறிப்பிடவேண்டும். மேலும் அத்துடன் ரூ. 450 ஒப்பந்தக் கட்டுத் தொகையை நகராட்சி கஜானுவில் கட்டி அதன் அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும். ஒப்பந்தங்கள் 10-11-1971-ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிக்கப்படும்.

நகராட்சி ஆணையர் ஒப்பந்தங்களைக் காரணமின்றி ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம்.

ஆணையர்,
இராஜபாளையம் நகராட்சி.

(த.48)

ஒப்பந்தப் புள்ளி

இராசா மிராசுதார் மருத்துவ மனைக்குத் தேவையான மருந்து வகைகளை ஜனவரி 1972, 1-ஆம் தேதி முதல் ஜூன் 1972, 30-ந் தேதி முடிய சப்ளை செய்வது பற்றிய ஒப்பந்த அறிவிப்பு.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (2 நகல்களில்) தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனை கண்காணிப்பாளர் அவர்களால் 3-12-1971 முற்பகல் 11 மணி வரை மேற்படி மருத்துவ மனைக்கு 1-1-1972 முதல் 30-6-1972 முடியும் காலத்திற்கானமருந்துகள் சப்ளை செய்வது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தங்கள் இவ்வலுவலக நமூனுக்களில்தான் (இரண்டு நகல்கள்) அனுப்ப வேண்டும். அவசியப்பட்டால் கூடுதலாகச் சாதாரணத் தாள்களை இடம்பற்ருக்குறைகாரணமாக உபயோகிக்கலாம். அந்த ஒப்பந்தப் பத்திரங்களை ரூ. 5-ம் வரி ரூ. 0.20 காசுகளும் செலுத்தி கண்காணிப்பாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இந்த ரூபாய் 5ஐ XXIII Medical II–Director of Medical Education J.Miscellaneous என்ற கணக்கிலும் 0.20 காசுகளை XII Sales Tax–Receipt under the Sales Tax- Act General Sales Tax என்ற கணக்கிலும் கட்டி மேற்படி சலான்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பினுல் ஒப்பந்தப் பத்திரங்களும் ஒப்பந்தச் சட்ட திட்டங்களும் மருந்து வகைக்கான அனுபந்தமும் அனுப்பப்படும்.

ஒப்பந்தம் திறக்கும் நாளாகிய 3-12-1971 அன்று வரும் சலான்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

டி. பூபதி, எம். டி.,
கண்காணிப்பாளர், இராசா மிராசுதார் மருத்துவ மனை
தஞ்சாவூர்.

(த.54)

ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை
வனப்பொறியாளர் கோட்டம்
மறு ஒப்பந்தப் அறிக்கை

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப் பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிருர்.

"சிக்கள்ளி-திகனுரி சாலை அமைத்தல் 3.8 கிலோ மீட்டர். தலைமலை வனச்சரகம், கோவை வடக்கு வனக் கோட்டம்."

கட்டுத்தொகை: ரூ. 1,530 (இ.எம்.டி.)

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 15-11-1971. நேரம், முறையே மாலை 3-00—மணி, 3-05 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களை 'வனப் பொறியாளர், 1-எ. ராயல்ரோடு கன்டோன்மென்ட், திருச்சி- 1" என்ற முகவரியிலிருந்து ரூ. 1-04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமோ செலுத்தி 25-10-1971 முதல் 12-11-1971 முடிய அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
திருச்சி, வனப் பொறியாளர்.
19-10-1971.
(த.56)

தேவகோட்டை நகராட்சி

கீழ்க்கண்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் 15—11—1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்பட்டு பின்னர் குறிப்பிடும் தேதிகளில் முடிவு செய்யப்படும். ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் ஒன்று 0·25 காசுகள் வீதம் செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தேவையான பிற விபரங்களை அலுவலகத்தில் நேரிலோ கடித மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	மதிப் பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.	பின் வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.	ரூ.
1 வெள்ளையன் ஊரணி கிழக்கில் கடைகள் கட்டுதல்.	32,000	800	800
2 வீரபாண்டியபுரம் நடுத் தெரு, கிழக்குத் தெரு மற்றும் சிலம்பணி தெற்குத் தெரு ஆகிய தெருக்களுக்குத் தார் சாலை போட.	28,000	700	700
3 இரவுசேரி பாதை, சிவன் கோவில் குளக்கால் தெரு, ஜெயங்கொண்டார் தெரு, அள.சுப. தெரு ஆகிய தெருக்களுக்குத் தார் சாலை போட.	20,000	500	500

வெ. முத்துக்குமாரசாமி,

13—10—1971. ஆணையர், தேவக்கோட்டை நகராட்சி

(த. 36)

சென்னை கிழக்கு வட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

கோப்பு எண். எம்.இ. 4/1431/71, 7—10—1971.

கீழ்க்கண்ட வேலைக்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 19—11—1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05-க்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதார்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்: 6'' மற்றும் 9'' நடு விட்டமுள்ள எஸ். டபிள்யூ. பைப்புகள் ஒவ்வொரு வகையிலும் 15,000 சப்ளை டெலிவரி.

சுமார் மதிப்பு—ரூ. 1,65,000.

கட்டுத் தொகை—ரூ. 2,475.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை—ரூ. 10 விற்பனை வரி.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மற்றும் விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 1—11—1971 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் ஏற்கவும் எதையும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கவும் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

டி. ஜகதீசன்,

நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 32)

விற்பனை விளம்பரம்

"TRAP VACCUM CABINET" (ENGLISH MAKE)

With Accessories in Good Condition

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

துணை இயக்குநர் (பட்டுப் புழு வளர்ப்பு),

தொழில் வணிக இலாகா,

50, கார்ன்வால் சாலை,

கூனூர்-1, நீலகிரி.

(த. 1)

மதுரை வீட்டுவசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மதுரை வீட்டு வசதிப் பிரிவு செயல்படுத்தும் மதுரை கிழக்கு புறநகர்ப் பகுதியாகிய தல்லாகுளம், சாத்தமங்கலம் ஆகிய பகுதிகளில் கீழ்த்தர, மத்திய தர வருவாய் உள்ளவர்களுக்குக் கட்டியுள்ள இணைந்த வீடுகளும் (Flats) சாத்தமங்கலம் பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுமனைகளும் ஞானஒளிவுபுரத்தில் கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள இணைந்த வீடுகளும் தவணை, முழுமை விலை விற்பனைக்குத் தயாராக உள்ளன. மனுச் செய்வோர் 3-11-1971 தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும்படி அதற்குரிய மனுப்படிவங்களில் வைப்புத் தொகையுடன் அனுப்ப கோரப்படுகின்றன.

மேற்படி இடங்களில் நகர பஸ் வசதி, குடி தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், பாதாளக் கழிவு நீர் வசதி, உயர்நிலைப் பள்ளி வசதி, கடைகள், தபால் அலுவலகம் ஆகியவை உள்ளன.

வீடுகள் ஒதுக்குவதற்குக் கீழ்க்கண்ட வரிசையில் முதலிடம் கொடுக்கப்படும்.

1. முழுத் தொகையும் ஒரே தவணையில் செலுத்துதல்.

2. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி, மீதியை ஒரு வருடத்தில் மாதத் தவணையாக செலுத்துதல்.

3. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி, மீதியை மூன்று வருடத்தில் மாதத் தவணையாக செலுத்துதல்.

4. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி, மீதியை 10 வருடங்களில் மாதத் தவணையாக செலுத்துதல்.

5. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி மீதியை 15 வருடங்களில் மாதத் தவணையாக செலுத்துதல்.

6. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி மீதியை 20 வருடங்களில் மாதத் தவணையாக செலுத்துதல்.

தயாராக உள்ள இணைந்த வீடுகளின் விவரம்.

மத்திய தர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில் :

வரைபட எண்.	உத்தேச விலை.	விஸ்தீரணம்.
	ரூ.	சதுர அடி.
3எ/68	25,000	852
கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில்—		
2எ/68	19,000	565
1ஐ/69	12,000	417
1சி/68	10,000	306
கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஞானஒளிவுபுரம் பகுதியில்—		
48/63, 68/63	10,000	298

இணைந்த வீடுகளுக்கான மனு படிவங்களுக்கு ரூபாய் ஐந்தும், மனைகளுக்கான மனு படிவங்கள் ரூ. 3 கொடுத்து நேரடியாக எல்லா அலுவலக நாட்களிலும் 3 மணிக்குள்ளாக பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் மேலும் ரூபாய் ஒன்று அனுப்ப வேண்டும்.

நிர்வாக அதிகாரியும், நிர்வாகப் பொறியாளரும்,

மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

ஜவகர் தெரு, காந்தி நகர்,

மதுரை-20.

(த.60)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலைத் துறை

பாம்பன் வட்டம், சென்னை-15

குறுகிய கால ஒப்பந்த விளம்பரம்.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 4, ஸ்ரீநகர் காலனி, சென்னை-15-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 10—11—1971 அன்று மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். (அலுவலகக் கடிகாரப்படி).

வரிசை எண் ணும் வேலை விபரம்.	முன்வைப்புத் தொகை.	ஒப்பந்தப்புள்ளி கிடைக்குமிடம்.
1 ஜி. என். டி. சாலையில் 26/2 29/0-ல் உள்ள லெவல் கிராசிங் தவிர்ப்பதற்காகக் குறுக்குச் சாலை அமைத்து மேம்பாடு செய்தல்.	ரூ. 12,120	ஜெமினி மேம் பாலக்கோட்டப் பொறியாளர் அலுவலகம்.

ஒப்பந்தங்கள் அன்றே மாலை 3—30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்காக நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம் சென்னை—25, அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 26 செலுத்தி 1—11—1971 முதல் 8—11—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம் சென்னை-25 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம் பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப்பத்திரங்களாக அனுப்பினுல் அதற்கான ''ரிசர்வ் வங்கி ''யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 57)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 12—11—1971 அன்று மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரம் விதி முறைகள் வரைபடங்கள் வேண்டுவோர் ரூ. 30-ம் விற்பனை வரி ரூ.3½ சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி, செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப்பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 10-11-71 வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.

வரிசை எண்ணும் வேலையின் விவரமும்.	சுமார் மதிப்பீடு ரூபாய்.	முன் வைப்புத் தொகை ரூபாய்.	வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்.
1 பாலக்காடு ரோடில் டச.எண். 59-1-ல் ஒரு பொது அரங்கம் கட்டுதல்.	2,01,200	5,030	9 மாதம்

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
6—10—1971.

(த.51)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, கடலூர் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் கடலூர் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அவர்களுடைய அலுவலகத்தில் 4-11-1971 மாலை 3-00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். கிடைத்த ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், நமூனுக்கள் முதலியன அலுவலக நேரங்களில் மேலாளரிடமிருந்து 28-10-1971 முதல் 3-11-1971 வரை ரூபாய் 10-35 (ஒவ்வொரு வேலைக்கும்) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது; 4-11-1971 அன்று எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் விற்கப்படமாட்டா.

குறிப்பிடப்பட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவின்யூ டெபாசிட்' என்ற தலைப்பின்கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

வரிசை எண்.	வேலையின் விவரம்.	கி. மீ.	முன்வைப்புத் தொகை. ரூ.
1	பொன்னேரி கரை சாலையை அபிவிருத்தி செய்தல் ..	0/0—1/0	990
2	,, ..	1/0—2/0	990
3	,, ..	2/0—2/8	800
4	திருநாரையூர் சாலையை அபிவிருத்தி செய்தல்	0/0—2/0	1,200
5	,,	2/0—4/0	1,230
6	,,	4/0—6/0	1,220
7	அக்கரவல்லிக்குடி, அகரநல்லூர், காட்டுக்கூடலூர் சாலையை அபிவிருத்தி செய்தல்.	0/0—1/0	640
8	,,	1/0—2/0	730
9	,,	2/0—3/0	700
10	,,	3/0—4/0	690
11	,,	4/0—5/0	810
12	,,	5/0—6/4	970
13	கரைமேடு கோலக்குடி மருதூர் சாலையை அபிவிருத்தி செய்தல்.	0/0—1/0	845
14	,,	1/0—2/0	820
15	,,	2/0—3/0	875
16	,,	3/0—4/0	875
17	,,	4/0—5/0	790
18	,,	5/0—5/6	550
19	லால்புரம் மண்டபம் சாலையை அபிவிருத்தி செய்தல்.	0/0—1/0	1,065
20	,,	1/0—2/0	1,075
21	,,	2/0—2/6	560
22	குண்டியமல்லூர், கொத்தவாச்சேரி சாலையை இணைக்கும் சாலையைப் புதியதாகப் போடவும் அபிவிருத்தி செய்தலும்.	0/0—1/0	1,055
23	,,	1/0—2/0	1,030
24	,,	2/0—2/5	465

இரா. வேணுகோபால்,
கோட்டப் பொறியாளர்,
கடலூர்.

10-10-1971.

(த. 46)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

சேப்பாக்கம், சென்னை-5.

கோயம்புத்தூர் விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் உற்பத்தி பயிற்சி நிலையத்திற்காக, கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 15-11-1971 அன்று மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1. கிளாஸ் பிளோயர் : ஒன்று.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 200—5—250—10—300.

2. பயிற்சி பெற்ற வேலையாள் (முதல் தரம்) : ஒன்று.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 200—5—250—10—300.

3. பயிற்சி பெற்ற வேலையாள் : (இரண்டாம் தரம்) : ஒன்று.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 150—4—170—5—225.

4. பயிற்சி பெறாத வேலையாள் : இரண்டு.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 130—3—160—4—180—5—195.

தகுதி:—

கிளாஸ் பிளோயருக்கும், பயிற்சி பெற்ற வேலையாள் முதல் தரத்திற்கும் கீழ்க்கண்ட தகுதிகள் இருக்க வேண்டும்.

(அ) பள்ளி இறுதி வகுப்பில் தேறியவர்களாகவும், கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விஞ்ஞானக் கண்ணாடிப் பயிற்சி நிலையம், கிண்டியில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று, தொழில் வணிக இயக்குநரால் சான்றிதழ் பெற்றவர்கள் அல்லது தொழில் வணிகத் துறையால் வழங்கப்பட்ட சான்றிதழுக்கும் சமமாகவும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற பயிற்சி நிலையங்களால் சான்றிதழ் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) மேஜை முறையில் விஞ்ஞானக் கண்ணாடி பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடத்திலோ அல்லது ஆய்வுக் கூடத்திலோ அல்லது பயிற்சி நிலையத்திலோ இரண்டாண்டுக்குக் குறையாமல் வேலை செய்து அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது : 1-11-1971-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

பயிற்சி பெற்ற வேலையாள் இரண்டாம் தரத்திற்கும் மேலே குறிப்பிட்ட தகுதிகள் இருக்க வேண்டும். வேலை அனுபவம் ஓராண்டு இருந்தால் போதுமானது.

பயிற்சி பெறாத வேலையாள் வேலைக்கு மூன்றும் படிவம் அல்லது எட்டாவது வகுப்புத் தேறியவர்களாகவும், மேஜை முறையில் விஞ்ஞானக் கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடத்திலோ அல்லது ஆய்வுக்கூடத்திலோ அல்லது பயிற்சி நிலையத்திலோ குறைந்தது மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது ; 1-11-1971-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

மனுதாரர்கள் தங்களுடைய மனுவை தங்களுடைய கையாலேயே வெள்ளைக் காகிதத்தில் எழுதி ''கண்காணிப்பாளர், கோயம்புத்தூர் விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் பயிற்சி நிலையம், 73-டி சின்னசாமி நாயுடு தெரு, புதிய சித்தாப்புதூர், கோயம்புத்தூர்-18'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மனுதாரர்கள் பொருக்குத்தேர்வுக்கு; சென்னைக்கு அழைக்கப்பட்டால், அவர்களுடைய சொந்தச் செலவில் வரவேண்டும்.

தொழில் வணிக இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த.34)

ஒப்பந்தப் புள்ளி

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 15-11-1971 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.
1 உடன் தணிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இடவசதி செய்ய ஓர் அறை கட்ட.	10,500	525
2 குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய் சேய் நல விடுதியைப் பழுது பார்க்க.	6,700	335
3 பாரதி கலை அரங்கின் மேடையை அகலப்படுத்த.	5,000	250
4 ஒலிமுகம்மது பேட்டை தாய் சேய் நல விடுதி கட்டடத்தை விரிவு படுத்த.	9,000	450
5 ஓ. வி. அளகேசன் நகராட்சிப் பேருந்து நிலைய நுழைவாயிலின் அருகில் டாக்ஸி ஸ்டாண்டு அமைக்க.	8,000	400
6 நீரளிப்புச் சாமான்கள் வாங்க.	16,000	400

காஞ்சிபுரம்,
11-10-1971.

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

(த.68)

ஒப்பந்தப் புள்ளி

தேதி நீடிப்பு

வேலையின் பெயர்:

(1) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ஒரு சொற்பொழிவு அறை கட்டுதல்.

(2) தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கான மேல் நிலைப் பட்டப் படிப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்.

பார்வை:

தமிழரசு—தேதி 1-10-71-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீடிப்பு.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்டஒப்பந்தஅறிவிப்புகள்பெறும் தேதி 17-11-1971 அன்று மாலை 3-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 16-11-1971 அன்று மாலை 5-00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்,

தஞ்சை வட்டம்,
தஞ்சாவூர்.

(த.66)

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 168 ஆரம்பப்பள்ளிகளுக்கும், 34 உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும், போதனை விஞ்ஞானக் கருவிகள் (Teaching aids & Equipments) சப்ளை செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் திருச்சி மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் நேர்முக உதவியாளர் அவர்களால் 6-11-71 தேதி மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. மேற்கொண்டு ஒப்பந்த விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியாளரின் தனி
உதவியாளர் (ப.வ.),
திருச்சி.

(த.67)

தமிழக ஆளுநருக்காக, கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 16-11-1971 மாலை 3-00 மணி வரைஆப்செட்மற்றும் ரோட்டா பிரிண்ட் பொருள்கள், சென்னை அரசாங்க அச்சகத்திற்கு 1971-72-ஆம் ஆண்டில் சப்ளை செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் டைப் செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1, அவர்களுக்கு எழுதவும்.

ஜி. ரங்காராவ்,

இயக்குநர்,
எழுது பொருள் அச்சுத் துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.

(த.69)

பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சிக்கு மரம் மற்றும் ஹார்டுவேர் சாமான்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-11-71 மாலை 3-00 மணி வரை ஆணையாளர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். அவை அன்று 3-30-க்குத் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 20-00 செலுத்த வேண்டும்.

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
11-10-71

(த.70)

மறு அறிக்கை
அரக்கோணம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 11-11-1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்றையதினமே 4-15 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள், வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—

தலைமை நீரேற்று நிலையப் பராமரிப்புக்கான பொருட்கள் சப்ளை செய்ய.

மதிப்பீடு—

ரூ. 1,000.

மேலும் விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி நமூனுக்களும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் ரூ. 1-00-ம் விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

க. ரா. குட்டியப்பன்,
ஆணையர்.

(த.71)

கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சி ஆணையர் அவர்களால், தெரு விளக்குப்பராமரிப்புக்குத் தேவையான 4' 40 வாட் டியூப் லைட் ஸ்டார்டர்கள் & சோக்குகள் வழங்க 19-11-71 மாலை 4-00 மணி முடிய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரம் வேண்டுவோர் நகராட்சிப் பொறியாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அனுப்ப வேண்டும்.

ஆணையர்.

கும்பகோணம்,
15-10-71.

(த.65)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

பார்வை எண் : ந.எ. 23270/69/வ6, தேதி 16—10—71.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை காவிரி வளர்ச்சிப்பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 2—12—1971 மாலை 4·00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கு மொத்தப் பிரிவிற்கும் அல்லது தனித்தனிப் பிரிவிற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

(ஒப்பந்த வகை—கே.2.)

வேலையின் பெயர் :—தூரியாறு மன்னையாறு வடிகால் அபிவிருத்தித் திட்டம்.

பிரிவு எண்.	வேலையின் விவரம்.	கட்டுத் தொகை ரூ.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ.	விற்பனை வரி. ரூ.
பிரிவு 1	தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலைகள் பகுதி 1 (எல்.எஸ்.7570 மீ. முதல் 10,060 மீ. வரை)	840	10 00	0 35
பிரிவு 2	தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலை பகுதி 2 (எல்.எஸ். 10,060 மீ. முதல் 11,720 மீ. வரை).	660	10 00	0 35
பிரிவு 3	தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலை பகுதி 3 (எல்.எஸ். 11,720 மீ. முதல் 13,920 வரை).	760	10 00	0 35
பிரிவு 4	தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலை பகுதி 4 (எல்.எஸ். 13,920 மீ. முதல் 15,860 மீ.வரை) அதாவது மன்னையாறு வடிகாலில் கலக்கும் வரை)	540	10 00	0 35
பிரிவு 5	மன்னையாறு வடிகால் அபிவிருத்தி வேலைகள் பகுதி 5 (எல்.எஸ்.15,860 மீ. முதல் 19,000 மீ. வரை) அதாவது தூரியாறு வடிகால் கலக்கு மிடத்திலிருந்து 19,000 மீ.வரை).	870	10 00	0 35
பிரிவு 6	சோமேஸ்வரபுரம் ரெகுலேட்டர் எண் 1-க்குத் துணை ரெகுலேட்டர் அமைத்தல் (எல்.எஸ். 13,530 மீ.)	1,450	10 00	0 35

1. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்—15—11—1971.

2. பிணைப்புப் பணம் (E.M.D.) நிர்வாகப் பொறியாளர் திட்ட ஆய்வுக்கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் கட்டப்படவேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் '' பொதுப் பணித்துறை—செலுத்துத் தொகை III, மற்றைய செலுத்துத் தொகை'' என்னும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் என்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் ''XII—விற்பனை வரி பி. பற்று சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ்—பொது விற்பனை வரி'' என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 30—11—71 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளர், நேர் உதவியாளர், காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

அ. சேஷாத்திரி,

தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம்,
தஞ்சாவூர்.

(த 39)

ஒப்பந்தப் புள்ளி

இராஜபாளையம் நகராட்சி

ரூபாய் 24,000 உத்தேச மதிப்பில் துப்புரவுத் தொழிலாளர் காலனியில் இரண்டு வீடுகள் கொண்ட 5 பிளாக்கு வீடுகள் கட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் நகர் மன்ற ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ நாளது 1971-ஆம் வருடம் நவம்பர் மாதம் 16-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை அவரது அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்று மாலை 4-15 மணிக்கு ஷெ ஒப்பந்தங்கள் அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன் திறக்கப்படும். ஒப்பந்த டிபாசிட் ரூ. 600 கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிக் குறிப்புப் பத்திரங்கள் 1-க்கு ரூ. 2 வீதம் 13—11—71 மாலை 4-00 மணிக்குள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி நகர் மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. எஸ். சுப்பையா பி.ஏ.,

நகராட்சி ஆணையாளர்.

(த.61)

ஒப்பந்தப் புள்ளி ஒத்திவைப்பு
பொதுப்பணித் துறை
செங்கை மாவட்டம்

எண்: வ-3/19006/71-9
நாள் 16—10—71.

வேலையின் பெயர்;

சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள அரசினர் மன நோய் மருத்துவ மனையில் பணிபுரியும் செவிலியர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள் (குவார்டர்ஸ்) கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தரக் கடைசி நாள் 11—10—71 மாலை 3-00 மணி என்று இருந்த கெடு 9—11—71 மாலை 3-00 மணிவரை ஒத்தி வைக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கீழ்க்கண்ட அலுவலகத்தில் 2—11—71 முதல் 8—11—71 வரை எல்லா அலுவலக நேரங்களிலும் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,

மேற்பார்வைப் பொறிஞர்,
(பொ.ப.து.)
சென்னை, செங்கை வட்டம்,
சென்னை-5.

14—10—71
(த.62)

குடிசைப் பகுதி மாற்றும் வாரியம்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காக செனய் நகரில் கட்டடங்கள் கட்டுவதற்காக 28—10—71 அன்று இறுதி நாளிட்டு அழைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தற்போதைக்குக் காலவரம்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகப் பொறியாளர்,

கோட்டம்-3.

தாண்டவராயச்
சத்திரம்,
சென்னை-10.
(த.63)

பொதுப் பணித் துறை

எண் வ. 2/21641/71,
நாள் 16—10—71.

வேலையின் பெயர்;

நந்தனம் அரசினர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தரக் கடைசி நாள் 15—10—71 மாலை 3-00 மணி என்று இருந்த கெடு 15—11—71 மாலை 3-00 மணிவரை ஒத்தி வைக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் சென்னை-செங்கற்பட்டு சர்க்கிள், பொதுப் பணித் துறை சென்னை-5-ல், 8—11—71-லிருந்து 12—11—71 வரை எல்லா அலுவல் நாட்களிலும் எல்லா அலுவல் நேரத்திலும் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,

மேற்பார்வைப் பொறிஞர்,
சென்னை, செங்கை வட்டம்,
சென்னை-5.

(த.64)

ஏல விற்பனை

2—12—1971 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு இராசா மிராசுதார் மருத்துவமனை தஞ்சையில், பயனற்ற ஒரு '' டீப் எக்ஸ்ரே கருவி (Deep X-Ray Therapy unit) Watson Type மருத்துவமனைக் கண்காணிப்பாளரால் ஏலம் விடப்படும்.

ஏலம் கேட்பவர்கள் ரூ. 1,000 உறுதிப் பணம் ஏல தினத்தன்று 2.00 மணிக்குள் மேற்படி மருத்துவ மனை அலுவலகத்தில் கட்ட வேண்டும்.

மேற்படிக் கருவியை ஏலம் எடுக்காதவர்களுக்கு அவர்கள் கட்டிய உறுதிப் பணம் ரூ. 1,000 ஏலம் முடிந்தவுடன் திருப்பித் தரப்படும். இந்தக் கருவியை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-00 மணி முதல் பகல் 12 மணி வரை பார்வையிடலாம்.

ஏலம் எடுத்தவர் ஏலத் தொகை பூராவையும் வரிகள் உட்பட உடனே கட்டிவிட வேண்டும். ஏலம் எடுத்த கருவியை இவ்வலுவலக உறுதி உத்தரவு வந்து 10 தினங்களுக்குள் மருத்துவ மனையிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

அவ்வாறு ஏலத் தொகையை (வரிகள் உட்பட) கட்டாமலும் அன்றி உத்தரவு வந்து 10 தினங்களுக்குள்ளாகக் கருவியை அப்புறப்படுத்தாமலும் இருந்தால் மறு ஏலத்தில் அக் கருவியை விற்கப்படும். அந்த மறு ஏலத்தினுல் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் ஏதாவது இருந்தால், அதை முந்திய ஏலதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும். மேலும் உறுதிப் பணம் ரூ. 1,000-ம் பறிமுதல் செய்யப்படும்.

டி. பூபதி எம். டி.,

கண்காணிப்பாளர், இராசா மிராசுதார் மருத்துவ மனை,
தஞ்சாவூர்.
(த. 11)

கோயமுத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

[தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை]

ஒப்பந்தப் புள்ளி எண் 41/71-72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் 17—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3·00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களை கோட்டக்கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் அதாவது 4—11—1971-ஆம் நாளிலிருந்து 16—4—1971-ஆம் நாள்வரை, காலை 10-30 மணி முதல் பிற்பகல் 3·00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பிணைப்புத் தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 17—11—1971-ஆம் நாள் பிற்பகல் 1·00 மணி வரைதான் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 17—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3·30 மணியளவில், ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் செயற் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

குடிசைப் பகுதி மாற்றும் திட்டம்—கோஷா ஆஸ்பத்திரி பின்புறம்—சேலம்.

வரிசை எண்.	வேலையின் விவரம்.		வேலையின் சுமார் மதிப்பு.	பிணைப்புத் தொகை.	நமூனுக்களின் விலை.
			ரூ.	ரூ.	ரூ.
1	இருபத்தி நான்கு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட நான்கு மாடிக்கட்டடங்கள் இரண்டு (2 Blocks) கட்டுவது—				
	பகுதி எண் 1	... ...	2,40,000	3,600	15 மற்றும் விற்பனை வரி.
	பகுதி எண் 2	... ...	2,40,000	3,600	15 மற்றும் விற்பனை வரி.
	பகுதி எண் 3	... ...	2,40,000	3,600	15 மற்றும் விற்பனை வரி.
	பகுதி எண் 4	... ...	2,40,000	3,600	15 மற்றும் விற்பனை வரி.
2	பதினாறு குடியிருப்புகளுக்கான ஒரு அறைகொண்ட நான்கு மாடிக் கட்டடங்கள் நான்கு (4 Blocks) கட்டுவது—				
	பகுதி எண் 5	... ...	3,00,000	4,500	15 மற்றும் விற்பனை வரி.
	பகுதி எண் 6	... ...	3,00,000	4,500	15 மற்றும் விற்பனை வரி.
3	பதினாறு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட நான்கு மாடிக் கட்டடங்கள் (5 Blocks) ஐந்து கட்டுவது—				
	பகுதி எண் 7	... ...	3,75,000	5,630	15 மற்றும் விற்பனை வரி.

11/22, திவான் பகதூர் சாலை,
இரத்தினசபாபதிபுரம் (அஞ்சல்),
கோவை-2.
(தூ. 55)

இல. அரங்கநாத சாஸ்திரி,
செயற் பொறியாளர், கோவை வீட்டு வசதிப்பிரிவு,
கோயமுத்தூர்.

ஒப்பந்தப் புள்ளி

கே-2 ஒப்பந்தம்

[குறிப்பு எண் SCE 420]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல், குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவுத் தேதி அன்று மாலை 3-30 மணிவரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

குறிப்பு எண்.	வேலையின் பெயர்.	முன் வைப்புப் பணம்.	ஒப்பந்தப் பிரதி விலை.	முடிவுத் தேதி.
		ரூ.	ரூ.	
SCE 420.	எண்ணூர் அனல் மின் திட்டம்—1971-72-ஆம் ஆண்டில் கட்டுமான வேலைகளுக்கான சாமான்கள் ஏற்றிச் செல்லுதல்.	1,000	10	18—11—71

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும் முன்வைப்புப் பணம் கட்டியதற்கான இரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் குறித்த காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ்வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவர்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் காணாமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலை பேசி எண் : 59556
(5 கிளைகள்)
தந்தி : "ENTERMAL"
(தூ. 86)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் அதற்காகவும் கீழ்க்கண்ட பொருட்களை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.பொ.) வட்டம், 52, கெங்கு ரெட்டி ரோடு, எழும்பூர், சென்னை, அவர்களால் சிறந்த உற்பத்தியாளர்கள், வழங்குவோர்களிடமிருந்து 5-11-71 பிற்பகல் 3 மணிவரையிலும் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப்பொறியாளர், சென்னை-8 அவர்களால் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்	காஞ்சிபுரம் வடிகால் திட்டத்துக்காக Stoneware slants and uprights and uplefts of various sizes from 4" 18" dia வழங்கலும் டெலிவரியும்.
ஒப்பந்த வடிவம்	'கே. 2' பீஸ் ஓர்க்.
கட்டுத் தொகை	ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) இக் கட்டுத் தொகை டிமாண்டு டிராப்டாக நிர்வாகப் பொறியாளர் (ம.ந.பொ.) கோட்டம், செங்கற்பட்டு அவர்கள் பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியிலும் கட்டலாம்.
வேலை முடிக்கும் காலம்	6 மாதங்கள்.
ஒப்பந்தப்புள்ளிப் பத்திர விலை.	ரூ. 10.40 (ரூபாய் பத்தும் நாற்பது காசுகள் மட்டும்) வணிக வரி உட்பட.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நேரிலோ மணியார்டர் மூலமாகவோ அதற்குரிய தொகையைச் செலுத்தி நிர்வாகப் பொறியாளர் (ம.ந.பொ.) கோட்டம், 24, பெரிய மணியக்காரத் தெரு, செங்கற்பட்டு அவர்களிடமிருந்து 12-10-71-லிருந்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை திருப்பித்தரப் படமாட்டாது.

எக்காரணமும் காட்டாமல் ஏதேனும் ஒப்பந்தப்புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ தள்ளும் உரிமை மேற்பார்வைப் பொறியாளருக்கு (ம.ந.பொ.) உண்டு.

ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கும் உரிமை மேற்பார்வைப் பொறியாளருக்கு (ம.ந.பொ.) உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்
ம.ந. பொறியாளர் வட்டம்.
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-8.

(த. 58)

ஒப்பந்தப் புள்ளி

பழனி நகராட்சி

பழனி நகராட்சி துப்புரவு இலாகா துப்புரவு வேலைகளுக்கு 71-72-ஆம் வருடத்திற்குத் தேவைப்படும் மூங்கில் கூடை, மூங்கில் மார், சாக்கடை தள்ளும் தகடு, குப்பை இழுக்கும் கொக்கி, வாளிகள், கயிறுகள், கொச்சம், இரும்புச்சட்டி முதலியன சப்ளை செய்தவற்கு ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் 12-11-71-ஆம் தேதி மாலை 4·00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இதர விவரங்கள் நகராட்சி சுகாதார அதிகாரி, பழனி அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

பழனி,
16—10—1971.

(த. 75)

ஒப்பந்தப் புள்ளி
ஒத்தி வைப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்: மதுரை மாவட்டம் பண்ணைக் காட்டில் அரசினர் மருத்துவமனையில் ஒரு ஆபரேஷன் தியேட்டரும், ஒவ்வொன்றும் 10 படுக்கைகள் கொண்டதாக இரண்டு வார்டுகளும் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறக் கடைசித் தேதி 10—11—1971 மாலை 3 மணிவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 3—11—1971-லிருந்து 8—11—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். 10-11-71 மாலை 4 மணிக்குக் கீழே கையொப்பமிட்டவரால் ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்படும். கட்டப்பட வேண்டிய கட்டடத்தில் சிறிது மாற்றங்கள் இருக்கும். தரப்படும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களில் அவ்விவரம் தெரிவிக்கப்படும்.

மூல ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் உள்ள இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

சி. தேசிக சங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து., மதுரை வட்டம்
மதுரை.

(த 47)

ஒப்பந்தப் புள்ளி மறு அறிவிப்பு

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்ட பணிகளுக்காக, மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் (த.கு.வ. வாரியம்), பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் அல்லது அவை போன்ற பிற அரசுத் துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதுரை, மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்ட, மேற்பார்வைப் பொறியாளரால், 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் உள்ள அவரது அலுவலகத்திற்கு 18-11-71 மாலை 3-மணி வரை வரவேற்கப்படுகின்றன.

எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்த முறை.	பத்திர விலை.	கட்டுத் தொகை.
1	கோவில்பட்டி குடிநீர் வழங்கு திட்டம் — II-வது நிலை—CI, A.C. & P.V.C. பைப்புகள் போடுதல், இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி பகுதி—I.	K 2	5.18	ரூ. 960 (தொள்ளாயிரத்து அறுபது ரூபாய்).
2	ஷை திட்டப்படி பகுதி—II.	K 2	5.18	ரூ. 1,140 (ஆயிரத்து நூற்று நாற்பது ரூபாய்).
3	ஷை திட்டப்படி பகுதி—III.	K 2	5.18	ரூ. 1,250 (ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்).
4	ஷை திட்டப்படி பகுதி— IV.	K 2	5.18	ரூ. 1,180 (ஆயிரத்து நூற்று எண்பது ரூபாய்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் "நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி" என்ற முகவரியில் 15-11-71 திங்கள் வரை எல்லா அலுவலக நாட்களிலும் வேலை நேரங்களில் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிட்ட உரைமீது வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

18-11-71 மாலை 3-30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் மேற்பார்வைப் பொறியாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

முடிவுத் தேதிக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் கவனிக்கப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர், (PHE).
மதுரை-2.

(த. 81)

தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்—

கிண்டி, தொழில்பேட்டை, தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையத்தில் கூடுதலாக இரண்டு ஷெட்டுகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், நிர்மாணப் பிரிவு, தொழில் வணிகத்துறை அவர்களால் தொழில் வணிகத்துறை நிர்மாணப் பிரிவு—மற்றும் அரசுத் துறை—ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 29–11–71 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், நிர்மாணப் பகுதி, தொழில் துறை 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் வந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் அதே நாளில் பிற்பகல் 3-10 மணிக்குத் திறக்கப்படும்.

1	ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2	கட்டுத் தொகை	ரூ. 3,200.
3	வணிக வரி உட்பட: ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை.	ரூ. 10.40
4	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	8 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (ஸி) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி—அவர்களிடமிருந்து 14–11–71 தேதியிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனை வணிக வரி உட்பட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10.40 (எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது).

அரசினர் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX இண்டஸ்டிரீஸ் ஏனைய ரசீட்ஸ்" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (நிர்மாணம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

கட்டுத் தொகை ஷெடியூல்டு வங்கிகளில் கால் ரசீது செலான் வடிவில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். ஷெடியூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்ட்ஸ், நிர்வாகப் பொறியாளர், (நிர்மாணம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை கிண்டி அவர்கள் பேரில் செலுத்தப்பட்ட கட்டுத் தொகை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு உத்தரவாதப் பத்திரங்களும் தமிழ்நாடு அரசு மின் வாரிய உத்தரவாதப் பத்திரங்களும் மார்க்கட் மதிப்பிலிருந்து 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் அது சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்தின் அறிவின் பேரில் ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உத்தரவாதமும் ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் செலுத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பெரிய நிர்மாணப் பணிகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவமுள்ளவர்களாக ஒப்பந்தக்காரர்கள் இருக்க வேண்டும்.

சென்னை-2.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
நிர்மாணப்பிரிவு.

(த. 59)

பால்பண்ணை வளர்ச்சித்துறை

தமிழ்நாடு ஆளுநர்க்காகவும், அவர் சார்பிலும் மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தற்போதுள்ள 2×5,000 லிட்டர்கள் கொள்ளத்தக்க தற்போதுள்ள மின் குளிர்விப்பு பிரிசில்லர், 2×5,000 லிட்டர் கொள்ளத்தக்க பால் ரைஸ்ரைகளும், கவுண்ட்டர் புளோமீட்டர் வெந்நீர்ப் பம்புகள் ஆகியவற்றைப் பிரிக்கவும், அவற்றை நிர்மாணிக்கவும் ஆன பணிகளுக்கு வரவேற்கப்படுகின்றன. இதற்குரிய ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களும் இது பற்றிய விதிகளும் நிபந்தனைகளும் பெற ஆணையர், பால் உற்பத்தி கால்நடை வளர்ச்சி அலுவலகம், பால் காலனி (அஞ்சல்), சென்னை-51 என்ற இடத்தில் ரூ. 10-ம் வணிக வரியும் உரிய சர்சார்ஜும் செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் 5—11—1971 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் பிற்பகல் 3 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையிலோ அல்லது அவர் தம் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையிலோ திறக்கப்படும்.

எம். கே. கோமேதகவேலு.
ஆணையர்.

(த.52)

ஏல விற்பனை

கோவை நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள புதிய பிளாக் கடை எண் பீ. 30-ல் 31–3–72 வரை இனிப்பு வகைகள் வைத்து வியாபாரம் செய்யும் உரிமை 16–11–71-ஆம் தேதியன்று காலை 11-00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

கட்ட வேண்டிய டிபாசிட் தொகை ரூ.100. மற்ற நிபந்தனைகள் நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆணையாளர்,

(த. 72)

மீன் துறை

சென்னை நகரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆரம்பாக்கத்திலும் பனிப்பொறி குளிர்பதன நிலையங்களை நிறுவுவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 25–11–71 பிற்பகல் 2-00 மணி வரை சென்னை மீன்துறை இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும். இது பற்றிய விவரங்களை மீன்துறை இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மு. அ. க. தம்பி,
மீன்துறை இயக்குநர்.

நிர்வாக அலுவலகக் கட்டடங்கள்,
சென்னை-6.

(த. 73)

ஒத்தி வைப்பு

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—

சென்னை எழும்பூரிலுள்ள தாய் சேய் மருத்துவ மனையில் (1) புறப்பணியாளர் பகுதி கட்டுதல் (அடித்தளமும், முதல் மாடியும் கட்டுதல்), (2) தாய் சேய்ப் பகுதி கட்டுதல்(அடித்தளம் மாத்திரம்)

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளும் கடைசி நாள் 18–11–71 மாலை 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 9–11–71 முதல் 17–11–71 வரை கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளும், அறிக்கைகளும், முன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கைப் பிரகாரம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை செங்கை வட்டம்,
சென்னை-5.

21–10–71

(த 74)

தாம்பரம் அரசினர் காசநோய் சானிடோரியத்துக்கு மருந்துகள், மருந்துப் பொருட்கள் முதலியவைகளை 1–12–71 முதல் 31–3–72 வரை உள்ள காலத்துக்கும் வரையறுக்கப்பட்ட வேறு கால அளவுக்கும் வழங்குவதற்காக தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் ஒப்பந்தப் புள்ளிகள் தாம்பரம் அரசினர் காசநோய் சானிடோரியம் மேற்பார்வையாளரால் 15–11–71 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள், நிபந்தனைகள், விதிகள் இதர விவரங்களை மேற்பார்வையாளர், அரசினர் காசநோய் சானிடோரியம், தாம்பரம் அவர்களிடம் ரூ. 2 கட்டணமும் இத்துடன் $3\frac{1}{2}$ சதவிகித விற்பனை வரியும், விற்பனை வரி மீது 5 சதவிகித சர்சார்ஜும் செலுத்திப் பெறலாம். பத்திரத்துக்குரிய கட்டணத்தை "XXIII Medical superintendent, Government T. B. sanatorium—J.mis—other receipts. என்ற தலைப்பிலும், விற்பனை வரி சர்சார்ஜ்ஆகியவைகளை XII sales tax receipts under the sales tax general sales tax Act. என்ற தலைப்பிலும் இந்திய ரிசர்வ் பாங்கிலோ, இந்தியா ஸ்டேட் பாங்கின் ஏதாவது ஒரு கிளையிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ கட்டித் தமிழக அரசுக்குச் சேர்ப்பிக்க வேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கில் கட்டுவதென்றால், சலான்கள் அசல் காட்டப்பட வேண்டும். கருவூலங்களில் கட்டினால், சலானின் எண், தேதி, கட்டப்பட்ட தொகை, ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர், தொகை செலுத்தப்பட்ட பாங்கு அல்லது கருவூலத்தின் பெயர் ஆகியவை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் பெறுவதற்கான மனுவில் குறிப்பிடப்பட வேண்டும். இத்தொகை திருப்பித் தரப்படாது.

ஒப்பந்தப் புள்ளிகள், மருத்துவ மேற்பார்வையாளர், அரசினர் காச நோய் சானிடோரியம், தாம்பரம் அவர்களுக்கு முகவரியிட்டு, அவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

குறிப்பு:—ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000-த்தை மீறுமானால், ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளிதாரரும் வருமான வரி கிளியரன்ஸ் சான்றும், நேஷனலிடி சான்றிதழ் அல்லது, அரசிதழ் பதிவு அலுவலரால் சான்றிடப்பட்ட அவற்றின் உண்மை நகல்கள் அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளி விதிகள் நிபந்தனைகளில் ஒப்பந்தக்காரர் முறையாக சான்றிட்டிருக்க வேண்டும்.

டாக்டர் கே.வி. கிருஷ்ணசாமி,
மருத்துவ மேற்பார்வையாளர்,
அரசினர் காசநோய்
சானிடோரியம்,
தாம்பரம் சானிடோரியம்,
சென்னை-47.

(த 29)

தொழில் வணிகத் துறை.

எண் 5488; சி. டபிள்யூ. 10/71.

தூத்துக்குடியிலுள்ள மக்னிசியம் கார்பனேட் யூனிட்டுக்கு மேலும் தேவைப்படும் இயந்திரங்கள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கூட்டு இயக்குநர் தொழில் வணிகத் துறை (ரசாயனங்கள்) தொழில் பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களால் 15–11–71 பிற்பகல் 1 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் 15–11–71 அன்று பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் கூட்டு இயக்குநர் (ரசாயனங்கள்) தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32, அவர்களிடமிருந்து அதன் விலையாகிய ரூ. 2-க்குச் செலானைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விலை ரூ. 2 (இரண்டு ரூபாய் மட்டும்) எந்தக் கருவூலத்திலாவது இந்திய ரிசர்வ் பாங்கியிலாவது, அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலாவது தமிழக அரசுக் கணக்கில் 'XXIX இண்டஸ்டிரீல்—எ. இண்டஸ்டிரீஸ், மிஸலேனியஸ் ரசீப்ட்ஸ்'' என்ற தலைப்பிலும் விற்பனை ஏழு '' XII காசுகள் தனிச் செலானில் '' & மிஸலேனியஸ்'' வணிக வரி, என்ற தலைப்பிலும் கட்ட வேண்டும். இது திருப்பித்தரப்படமாட்டாது ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கு வேறு வகையில் தொகை ஏற்றுக் கொள்ளப்படாது.

கூட்டு இயக்குநர்,
(ரசாயனங்கள்)

(த.41)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம் (மையக் கோட்டம்)

கோப்பு எண் பி 2/5113/71

கலைஞர் கருணாநிதி நகரில் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்வதற்காக மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், கீழே கையொப்பமிட்டுள்ளவரால் 10-11-1971 மாலை 3-00 மணிக் குள் கிடைக்குமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி வைத்தனுப்பும் உறையின் மீது வேலையின் பெயரையும், ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	வேலையின் சுமார் மதிப்பு (ரூபாய்).	ஒப்பந்த வடிவம் கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களின் விலை (திருப்பித்தரப் படமாட்டது.)
1 தொகுப்பு 'ஏ'யின் கீழ், டீ.டி. 124எ/70-ன் படி, 3 எம்.ஐ.ஜி பிளாக்குகளை எல்லா வசதியுடனும் கட்டுதல்.	2,18,900	எல்.எஸ். ரூ. 3,284	ரூ. 15 + விற்பனை வரி
2 தொகுப்பு 'பி'-யின் கீழ் டீ.டி. 124எ/70-ன் படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகளை எல்லா வசதியுடனும் கட்டுதல்.	2,18,900	எல்.எஸ். ரூ. 3,284	ரூ. 15 + விற்பனை வரி.
3 தொகுப்பு 'சி'-யின் கீழ் டீ.டி. 124எ/70-ன் படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகளை எல்லா வசதியுடனும் கட்டுதல்.	2,18,900	எல்.எஸ். ரூ. 3,284	ரூ. 15 + விற்பனை வரி.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, விற்பனை வரி ஆகியவற்றைச் செலுத்தியதற்கான சலான் ரசீதைக் கொடுத்து, மேற்பார்வைப் பொறியாளர், மையக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அவர்களது அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் முதலிய வற்றை 25-10-1971 அன்று அல்லது அதற்குப் பிறகு எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 2-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

36, அண்ணாசாலை,
நந்தனம் அஞ்சல்,
சென்னை-35,
15-10-1971.
(த. 53)

மே. ஜார்ஜ்,
மேற்பார்வைப் பொறியாளர் (மையம்).

பொதுப்பணித் துறை

எண்: ஆர்.ஓ.சி. 6662/71/ஜே. நாள் 11-10-1971.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் கீழ்க் கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 8-11-71 மாலை 3 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை குடும்ப நலத்திட்டக் கட்டட சர்க்கிள், மதுரை-1 அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4 மணிக்குப் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 22-10-71 முதல் 30-10-71 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

வேலையின் பெயர்	பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் டுபெக்ட மிக்கு 20 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்
கட்டுத் தொகை	ரூ. 2,500.
ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
வேலையை முடிக்கவேண்டிய காலம்.	9 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 20. இது திருப்பித் தரப்படமாட்டாது. "P.W. III O.R." என்ற தலைப் பில் பாளையங்கோட்டையில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை குடும்ப நலத் திட்டக் கட்டட டிவிஷன், திருநெல்வேலி அவர்கள் கணக்கில் கட்டவேண்டும். விற்பனை வரியுடன் சர்சார்ஜ் 75 காசுகள் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ XII விற்பனை வரி (டி) பல்வகை என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங் களுக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களின் அசலுடன் அனுப்பப்பட வேண்டும்.

கட்டுத் தொகை, கால் ரசிப்ட், சலான் டிபாசிட் வடிவில் அல்லது ஷெடியூல் வங்கிகளின் டிமாண்டு டிராப்ட் வடிவில், அரசு செக்யூரிடிகள், தேச உடைமையாக்கப்பட்ட 14 பாங்கு களின் பாங்கு காரண்டி வகையில் தமிழ்நாடு மின்சார வாரிய பாண்டுகள் வடிவில் ஏற்கப்படும். தேசீயச் சேமிப்புப் பத்திரங் களும் ஏற்கப்படும். மார்க்கெட் மதிப்புக்கு 5 சதவிகிதம் குறைத்து இவை ஏற்கப்படும். வேறு வகையில் தொகை ஏற்கப்படமாட்டாது.

வி. துரைராஜ்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து. குடும்ப நலத்திட்டக் கட்டட சர்க்கிள், மதுரை-1.

(த. 21)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

மத்தியக் கோட்டம்

பார்வை பி. 3/5126/71.

கீழ்க்கண்ட வேலைக்காக உறை யின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கள் கீழே கையொப்பமிட் டவரால் 1—12—1971 மாலை 3·00 வரை வரவேற்கப்படுகின் றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : சென்னை 35, அண்ணாசாலை, எண். 33-ல் பழைய சென்னை வீட்டு வசதிப் பிரிவு காம்பவுண்டில் கடைகள், அலுவலகங்கள் ஆகி யவைகளுக்கான 5 அடுக்குக் கட்டடம், டிசைன் அமைத்துக் கட்டுதல் (சிவில் வெர்ச்ஸுக் காக மட்டும்).

வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 20 லட்சம்.

கட்டுத் தொகை—ரூ. 30,000.
ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை— ரூ. 25 மற்றும் விற்பனை வரி (இது திருப்பித்தரப்படாது).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங் கள் விவரங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிர்வாகப் பொறி யாளர் (மத்திய) அலுவலகத்தில் 25—10—1971-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மே. ஜார்ஜ்,
நிர்வாகப் பொறியாளர், (மத்தியக் கோட்டம்).

36, அண்ணா சாலை,
சென்னை-35.
(த. 43)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

இராமநாதபுரம் மின் திட்டம், பரமக்குடி.

இராமநாதபுரம் மின் திட்டம் பரமக்குடி மத்திய பண்டக சாலையிலுள்ள நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகள் (லாரி எம்.டி.யு. 8071, ஜீப் எம்.டி.என். 3946) மற்றும் கழிவு இரும்பு, செம்பு, அலுமினியம் இதர பொருள்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 19—11—1971, மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 19—11—1971 மாலை 4-00 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட முழு விவரங்களடங்கிய தஸ்தாவேஜிகள் அனைத்தும் மதுரை கோசாகுளம் புதூர் மத்திய அலுவலகத்தில் 3 முதல் 17—11—1971 முடிய எந்த வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலே கண்ட ஒப்பந்தத்துக்குக் கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) இராமநாதபுரம் மின்திட்டம் தலைமைக் கணக்காயரிடம் செலுத்திச், செலுத்தியதற்கான ரசீது அல்லது டிராப்டை ஒப்பந்தம் சம்மந்தப்பட்ட தஸ்தாவேஜிகளோடு அனுப்பி வைக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளையும் கழிவுப் பொருட்களின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் நேராகவோ அல்லது பண விடைத்தாள் மூலமாகவோ ரூ. 5 தலைமைக் கணக்காயர் (செலவினம்) இராமநாதபுரம் மின் இயக்கத் திட்டம், கோசாகுளம் புதூர், மதுரை-7, அவர்களிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த விலையான ரூ. 5-ம் திருப்பித் தரத்தக்கதல்ல. ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில் தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயானத்தின் போது ஒப்பந்த நகல் தவறினல், அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது. பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் பரமக்குடி மத்தியப் பண்டகசாலையில் அலுவலக தினங்களில் அலுவலக நேரங்களில் அனுமதிக்கப்படுவார்கள்.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்க தல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,

இராமநாதபுரம் மின் திட்டம்

20—10—71.

(த. 77)

ஒப்பந்தப் புள்ளி

ஸ்ரீரங்கம் நகராட்சி

(1) கிராம்ப்டன் மின்விசிறிகள் 48'' ஸ்வீப்புள்ளது (அதற்குரிய சகல பாகங்களுடன்) சப்ளை செய்து ஏற்கனவே மின்விசிறி பாயின்ட்டுகள் போடப்பட்டுள்ள இடங்களில் பொருத்திக் கொடுக்கவும், 16'' போகஸ் விளக்குகள் ரப்பர் வளையங்களில் பொருத்தப்பட்ட கான்கேவ் கண்ணுடியுடன், கிளாம்ப் செட், 15 ஆம்பியர் ஏரியல் ஃபியூஸ் வயரிங், போர்செலின் ஹோல்டருடன் 100 வாட்ஸ் பல்புகளுடனும் போட்டுக்கொடுக்க, மின்சார லைசென்சு பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 15—11—1971 தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகை மின் விசிறி சப்ளைக்கு ரூ. 50-ம், போகஸ் விளக்குகள் சப்ளைக்கு ரூ. 200-ம் முனிசிபல் கஜானுவில் செலுத்திய ரசீதுடன் ஒப்பந்தங்கள் சேர்ப்பிக்கப்பட வேண்டும். மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ, எழுத்து மூலமாகவோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

14—10—1971.

(த. 76)

தேர்வு

தமிழ்நாடு எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் ஓ.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகள் மார்ச்—1972.

மேற்கண்ட தேர்வுக்கு பிரைவேட் மாணவர்கள் மனுக்களை அளித்திடக் கடைசித் தேதி, அபராதம் இல்லாமல் 1-11-71ம், ஒரு ரூபாய் அபராதத்துடன் அளித்திட கடைசித் தேதி 16-11-1971ம் ஆகும்.

1971 நவம்பர் 2-ந் தேதிக்கும் 1971 நவம்பர் 16-ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில், ரூ. 1 அபராதம் உடன் இல்லாத மனுக்களும் 1971 நவம்பர் 16-க்குப் பின்பு வரும் மனுக்கள் அபராதத் தொகையுடன் இருந்தாலும் கூட அவையும் நிராகரிக்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு 13—10—1971 தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழின் பாகம் 2, பிரிவு 3-ல் வெளியாகியுள்ள அறிவிப்பினைக் காண்க.

கே. ஏ. சுவாமிநாதன்,

செயலாளர்,

அரசுத் தேர்வுகள்

செகண்டரி கல்வி போர்டு,

சென்னை-6.

ஆணையர் அலுவலகம்,

சென்னை-6,

15—10—1971.

(த. 42)

ஏல விற்பனை

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

நெடுஞ்சாலை கிராமப் பொறியியற் பணித்துறையினைச் சார்ந்த போக்குவரத்து இயந்திரக் கோட்ட மத்திய பணிமனையில் உள்ள (கிண்டி ஆளுநர் மாளிகைக்கு எதிரில் உள்ள) சிற்றுண்டிச் சாலையை 1971–72 (5–12–1971முதல் 4–12–1972) வரை குத்தகை எடுத்து விற்பனை செய்யும் உரிமையை 8—11—1971 அன்று மாலை 3-00 மணியளவில் மேற்படி போக்குவரத்து இயந்திரக் கோட்ட மத்தியப் பணிமனை உதவிப் பொறியாளர் (தொழிலகம்) அவர்களால் ஏலம் விடப்படும். சென்னை நகர எல்லைக்குள் ஏற்கனவே அதிகாரபூர்வமாகக் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வருபவர்கள் மட்டுமே மேற்படி ஏலத்தில் பங்கு கொள்ளும் உரிமை பெற்றவர்களாவார்கள்.

ஏலம் எடுக்க விரும்புபவர்கள் ஏலம் துவங்கு முன்னர் ரூ. 100 முன்பணம் செலுத்த வேண்டும். மேற்படி செலுத்தப்பட்ட முன்பணம் ஏலம் முடிந்த பின்னர் திரும்ப அளிக்கப்படும்.

ஏலம் எடுத்தவர் ஏலம் முடிந்தவுடன் ஏலப்பணத்தின் 25 சத விகிதத் தொகையை உடனடியாகக் கட்ட வேண்டும். மீதமுள்ள ஏலப்பணத்தை 3½ சத விகித விற்பனை வரி உட்பட கோட்டப் பொறியாளரால் மேற்படி நபரின் பெயரில் ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் கட்ட வேண்டும். மேலும் ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் உரிய அலுவலக பாரத்தில் கோட்டப்பொறியாளருடன் ஓர் ஒப்பந்தமும் கையெழுத்திட வேண்டும். தவறினல் ஏற்கனவே கட்டியுள்ள பணம் அரசாங்கத்துக்குப் பறிமுதலாவதுடன் விற்பனை செய்யும் உரிமை மறுபடியும் பொது ஏலத்தில் விடப்படும். ஏலம் திரும்பவும் உறுதி செய்யப்படவில்லை என்ருல் ஏற்கனவே கட்டியுள்ள ஏலப்பணத்தின் 25 சத விகிதத் தொகை இவ்வேலத்தில் அதிகபட்சம் ஏலம் கேட்பவருக்குத் திரும்ப அளிக்கப்படும்.

இவ்விஷயத்தில் சர்ச்சைகளோ தகராறுகளோ எழும் பட்சத்தில் நெடுஞ்சாலை போக்குவரத்து இயந்திரக் கோட்டத்தின் கோட்டப் பொறியாளருடைய முடிவே இறுதியானதும் சட்டபூர்வமானதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுமாகும்.

மற்ற நிபந்தனைகள் அதாவது மாதாந்தர வாடகை முதலிய விவரங்களை மேற்குறித்த போக்குவரத்து இயந்திரக் கோட்ட அலுவலகத்தில் 7—11—1971 மாலை 5 மணி வரை எந்த வேலை நாளிலும் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

கோட்டப் பொறியாளர்,

போ. இய. கோட்டம்,

சென்னை-25 (த. 85)

கிராமங்களில் பணியாற்ற நாட்டங் கொண்ட டாக்டர்களுக்கு வாய்ப்பு

வீட்டு வசதி வாரியம்

கிராமப் பகுதிகளில், நல்ல 'கிளினிக்' குடன் கூடிய வசதியான குடியிருப்பு வீடு பத்து மாதங்களில் அமைத்துத் தரப்படும். இதற்குச் செலவு ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000 வரை ஆகும். இதை விடக் குறைந்த செலவில் முடியக் கூடிய டிசைன்களையும் பரிசீலிக்கலாம். டாக்டர்கள் முதலில் இவ்விலையில் 20 சத விகிதத்தைக் கட்டிவிடவேண்டும். பாக்கியை எளிய மாதாந்தரத் தவணைகளில், மாதத்துக்கு ஆயிரத்துக்கு சுமார் ரூ. 10 என்ற அளவில் செலுத்தி முடிக்கலாம்.

இத் திட்டத்தில் சேர விரும்பும் டாக்டர்கள் 30—11—71-க்குள் பதிவு செய்து கொள்ளலாம். 1—12—1971-க்குப் பிறகு முழு விவரங்களையும் பெறலாம். பொறுப்புகள் ஏற்பது அதற்குப் பின்னர்.

டி. வி. வாசுதேவன்,

தலைவர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,

36, அண்ணு சாலை, (த. 44)

சென்னை.

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், கழிவுநீர் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், கழிவு நீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவு நீர் வாரியம்) பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 17—11—1971 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம்—முதல் நிலை—பகிர்தல் முறை—சி.ஐ., ஏ.ஸி. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வகை : கே 2.

முன்வைப்புத் தொகை : ரூ. 1,160 (ரூபாய் ஆயிரத்து நூற்றி அறுபது மட்டும்). இத் தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச்சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 5·18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளர் அவர்களிடமிருந்து 48, கல்லூரிச் சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்காக மேற்குறித்த விலையினைச் செலுத்தி 15-11-1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

(பொ.சு.). (த. 80)



ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு

பொதுப்பணித்துறை.

1-11—13 எ

வேலையின் பெயர்—

1. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் பௌதிகத்துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
2. கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் இரசாயனப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
3. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் கலைத் துறைப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
4. தோல் சம்பந்தமான வியாதிகட்குச் சிகிச்சையளிக்க தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவமனையில் இரு பகுதிக்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை—இண்டியன் எக்ஸ்பிரஸ், தேதி 30—6—71, 2—7—71. ''தி மெயில்'' தேதி 28—6—71-ல் வெளியிட்ட ஒப்பந்த அறிக்கை தமிழரசு தேதி 1—9—71, 1—10—71-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்கண்ட வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 2—12—71 அன்று மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 1—12—71 அன்று மாலை 5-00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

(த.90)

ஏல அறிவிப்பு

கதர் கிராமக் கைத்தொழில் வாரியம்
குறளகம்
சென்னை-1.

குறளகத்தின் ஐந்தாவது மாடியில் சைவ உணவு சிற்றுண்டி விடுதி நடத்துவதற்கான உரிமையைப் பொது ஏலத்தின் மூலம் 1971 நவம்பர் 27-ஆம் தேதி மாலை 3 மணிக்குத் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் செயலாளரால் முடிவு செய்யப்படும்.

அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் இந்த இடத்தைப் பார்வையிடலாம்.

விண்ணப்ப மனு, குத்தகை பற்றிய நிபந்தனைகள், விதிமுறைகள் பற்றிய விவரங்களைப் பராமரிப்புப் பொறியாளர், குறளகம் (4-வது மாடி) சென்னை-1 என்ற முகவரியில் பெறலாம்.

செயலாளர்.

(த. 83)

மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.

34, அண்ணாசாலை, வி.எஸ்.டி. மோட்டார் கட்டடம்,
சென்னை-2.

வேலையின் பெயர்—உதகமண்டலத்தில் ஒரு தங்கும் அறை கட்டடம் (Dormitory Block) கட்டுதல்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், மத்தியப் பொதுப் பணித்துறை ஆகியவற்றில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேலே குறிப்பிட்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நேரமும் தேதியும்—30—11—71 மாலை 3 மணிவரை.
2. ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் தேதி—30—11—71 மாலை 3-30 மணி.
3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 30+ விற்பனை வரி ரூ. 1-10+அஞ்சல் செலவுக்காக ரூ. 3.
4. ஒப்பந்த முறை—முழுத் தொகை.
5. கட்டுத் தொகை—ரூ. 11,100.

கட்டுத் தொகை, கிராஸ்ட் பாங்க் டிராப்டாக, ''தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை'' யின் பெயரில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான பணம் ரொக்கமாகவோ, மேலுள்ள முகவரியின் பெயரில் எடுக்கப்பட்ட பாங்க் டிராப்டாகவோ இருக்கலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இந்தக் கழகத்தின் திட்டப் பொறியாளரிடமிருந்து மனுச் செய்து பெறலாம்.

அலுவாலியர்,
நிருவாக இயக்குநர்.

(த. 89)

321

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், கழிவு நீர் வாரியம்.

தமிழ்நாடு குடிநீர், கழிவுநீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவுநீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 16—11—1971 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3·30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் —முதல் நிலை பகிர்வு முறை— கீழ்ப்பகுதியில் ஏ.சி., சி.ஐ. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வகை : கே. 2.

முன்வைப்புத் தொகை : ரூ. 1,450 (ரூபாய் ஆயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்). இத்தொகைக் கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை:— ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 13-11-71 சனிக்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

(ந. 84) (பொ.சு.)

ஏல விளம்பரம்

பழுதடைந்த 1948-ஆம் வருட மாடல், சவர்லேட் லாரி, வேலூர் மத்தியச் சிறைச்சாலையில் 6—11—1971 மாலை 4 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மற்ற விவரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து நேரிலோ, தபால் மூலமோ தெரிந்து கொள்ளவும்.

ஆ. பா. வாசுதேவன், பி.ஏ.

கண்காணிப்பாளர், மத்தியசிறை, வேலூர்.

(த. 79)

ஒப்பந்தப்புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காகக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்களால், சுப்ரமணியபுரம், புதுக்கோட்டை சாலை, திருச்சிராப்பள்ளி முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 8–12–1971 அன்று மாலை 4-00 மணி வரை (அலுவலகக் கடிகாரம்), மூடி முத்திரையிடப்பட்ட அட்டவணை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 4-15 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகள் கிடைக்குமிடம்.
மாவட்டம்: திருச்சிராப்பள்ளி. திருச்சி— கோயம்புத்தூர் சாலைக்கு, சிந்தாமணிக்கு அருகில். மைல் 0/1 முதல் 0/7-க்கு இடையில் உருவாகவிருக்கும் மாற்றுவழிச் சாலையில் (Bye pass Road) வடிகால் வாய்க்காலின் குறுக்கே, சி.எச். 2280 அடியில் பாலம் கட்டுதல்.	3,550	கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை, திருச்சிராப்பள்ளி.

ஒப்பந்தப் புள்ளியின் நிபந்தனை விவரங்கள், நமூனுக்கள், அட்டவணைகள், வரை படம் முதலியவைகளை, கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருச்சிராப்பள்ளி அவர்களது அலுவலகத்தில் 10–11–71 முதல் 7–12–71 வரை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் விற்பனை வரி உட்பட ஒவ்வொரு தொகுப்புக்கும் ரூ. 20.60 செலுத்தி (திருப்பித் தரப்படமாட்டாது) எழுத்து மூலமாக விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

வேறுமாதிரித் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேற்குறிப்பிட்ட கட்டுத் தொகையை, கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்களது அலுவல் எல்லைக்குள் இருக்கும் ஏதேனும் ஒரு அரசுக் கருவூலத்தில் "Revenue Deposit" என்ற தலைப்பில் செலுத்தி, அந்தச் சலான் ரசிதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

கட்டுத் தொகையை, 12 ஆண்டு தேசிய பாதுகாப்புப் பத்திரம், 10 ஆண்டு பாதுகாப்புப் பத்திரம், மாநில அரசுப் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்கள், வங்கி உறுதிகள், டெபாசிட் கால் ரசீதுகள், ஷெட்யூல்டு வங்கி அளித்துள்ள டிமாண்ட் டிராப்டு ஆகிய வடிவங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்.

வங்கி உறுதிகளுக்கு, இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெற்று, அதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பாவிட்டால், வங்கி உறுதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கட்டுத் தொகை செலுத்தாமல் அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

எம். டி. பால்மாணிக்கம்,

கோட்டப்பொறியாளர் (நெ.கி.ப.து)

திருச்சிராப்பள்ளி.

(த. 33)

குத்தகை விளம்பரம்

போக்குவரத்துத் துறை, சென்னை-2

தமிழ்நாடு அரசாங்க ஆளுநரின் சார்பில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து இலாகாவின் கட்டடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையிலுள்ள மாதவரம் பணிமனையில், சிற்றுண்டி சாலைக் குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்கு வரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2, ஒப்பந்தங்கள் 10—11—1971 மாலை 3 மணி முடிய வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1.04 கட்டி, பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பி தரப்படமாட்டாது.

இயக்குநர்

(த. 87)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், கழிவுநீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவுநீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர் பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 16-11-1971 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் முதல் நிலை-பகிர்வு முறை-மேற்குப் பகுதியில் சி.ஐ., ஏ.சி., குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வகை—கே. 2.

முன்வைப்புத் தொகை ரூ. 2,610, (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்றுப் பத்து மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி, பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 13—11—71 சனிக்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்
(பொ.சு.)

(த.88)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியம்
எண்ணூர் அனல் மின் திட்டம்.
(இயக்குதல், பேணுதல் பிரிவு.)

ஒப்பந்த விளம்பரக் குறிப்பு எண். P.T.4/71-72:

1. தமிழக மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழக மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்—(இயக்குதல், பேணுதல் பிரிவு) குறிப்பு எண். P.T.4/71-72 எனவும் மற்றும் ஒப்பந்ததாரின் பெயரும் எழுதப்பட்டுகீழ்கையொப்பமிட்டவரால் 30—11—71 மாலை 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருள்கள்—

S/No.	Description	Quantity
(1)	High grade Burnt lime with not less than 80% eao content	60 Tonnes

3. ஒப்பந்தத்தின் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து) கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

4. இந்த வேலைக்கான முன்பணம் ரூ. 400 (நானூறு மட்டும்) இந்தத் தொகையை ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி முன் செலுத்த வேண்டும்.

5. துறையினரைச் சார்ந்த நமூனக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதித் தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, காரணம் காட்டாது நிராகரிக்கவும், வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ் கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

6. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்
எண்ணூர் அனல் மின்
திட்டம் எண்ணூர், சென்னை-57

தொலைபேசி எண், 59569.
தந்தி "ENTERMAL"
(த.78)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்கண்ட பணிகளுக்காக அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-30 மணிவரை, வேலையின் பெயரும், வரை குறிப்பு எண்ணும் குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத்திட்டவரால் அவரது அலுவலகத்திற்கு வரவேற்கப்படுகின்றன.

அதேநாள் மாலை 4 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வரைகுறிப்பு எண்.	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளியின் விலை.	முடிவுத் தேதி.
		ரூ.	ரூ.	
NDS.30 ..	நடுவட்டம் ஓட்டத்தினை CH.2630m-லிருந்து, 5903 m Reach-2-க்குத் திருப்ப (குறுக்கு வடிகால் பணிகள் உள்பட) flume channel அமைத்தல்.	11,500	15	3-12-71
NDS. 31 ..	நடுவட்டம் ஓட்டத்தினை CH. 5903 m -லிருந்து 7736 m Reach-3-க்குத் திருப்ப (குறுக்கு வடிகால் பணிகள் உள்பட) flume channel அமைத்தல்.	8,000	15	8-12-71

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு, வரைகுறிப்பு, அளவுகள் ஆகிய குறிப்புகளடங்கிய ஒப்பந்தப் புள்ளி செட் நகல்களை, அடியில் கையெழுத்திட்டவரின் அலுவலகத்தில் பணம் கட்டிப் பெறலாம். இந்தப் பணம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

இந்தப் பணிக்கான கட்டுத்தொகை முன்பணமாக, ரொக்கமாகவோ அன்றி டிமாண்ட் டிராப்டாகவோ அடியில் கையெழுத்திட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதினை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

வாரியத்தின் குறிப்பிட்ட படிவத்தில் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகளும், முடிவுத்தேதி, நேரத்திற்குள் வராதவையும் தள்ளி விடப்படும்.

வேலையை எல்லாருக்குமோ, அல்லது சிலருக்கோ பிரித்து வழங்கவோ, ஒன்றையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் தள்ளி விடும் உரிமை அடியில் கையெழுத்திட்டவருக்கு உண்டு.

ஒப்பந்தப் புள்ளிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்படுகையில் தொலைந்துவிட்டால் அதற்கு வாரியம் பொறுப்பாகாது. ஒப்பந்தப் புள்ளிகள் பிறருக்கு மாற்றக்கூடியவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்-ஆளியாறு,
நீர் மின் திட்டம்.

மின்பாறை அஞ்சல்,
கோவை மாவட்டம்.
தந்தி : PARAMBYDEL, பொள்ளாச்சி,
தொலைபேசி : 39, மலையாண்டி பட்டணம்.
(த. 82)

ஆசிரியர், வெளியிடுபவர்; செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.

327

தமிழரசு

திங்கள் இருமுறை நவ 16-1971 35 காசு

SECRETARIAT LIBRARY
12 NOV 1973
GOVERNMENT OF TAMIL NADU



தமிழரசு

மலர் 2 16-11-1971 இதழ் 10

இந்த இதழில்

இலட்சியப் பணி புரியும்
இளைஞர் அணி
நேருவின் வாழ்விலே....
கண்ணாடிப் பொருள்கள் செய்ய
முன்னோடிப் பயிற்சி நிலையம்
தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி
வெண்பாப் போட்டி
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
முந்திரி நாள்-சிறப்புப் பகுதி

முதல்வரின்

சிலை வடிவில்
செந்தமிழ்க் காப்பியம்

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி, வேலை வாய்ப்பு விளம்பரங்கள்
60 ஆம் பக்கத்திலிருந்து.....

சிலை வடிவில் செந்தமிழ்க் காப்பியம்

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற வேளையில் தமிழ்ச் சான்றோருக்கும்—தமிழகத்து வீரப் பெருமக்களுக்கும் அண்ணன் தலைமையிலே சிலை வைத்தோம்.

அன்றைக்கே இளங்கோவடிகளின் சிலை வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதற்கு ஒரு தூண்டுகோல்தேவை என்பதைப்போல்......

சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் இளங்கோவடிகள் விழா ஒன்றில் சிலம்புச் செல்வரும் மற்றவர்களும் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். நானும் ஒப்புக்கொண்டேன்.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் இன்னும் சிலை வைக்கப் படவில்லையே என்று அவர்கள் குறிப்பிட்டபோது, நான்—இளங்கோவடிகளின் சிலை தயாராகிவிட்டது; விரைவில் சிலை அமைக்கப் படும் என்று உறுதியளித்தேன்.

அதன்படி இந்த விழா யார் தலைமை ஏற்று நடத்த வேண்டுமோ அவர் தலைமை ஏற்க — யார் சிறப்புரை ஆற்ற வேண்டுமோ அவர் சிறப்புரையாற்றிட, பல்லாயிரக்கணக்காகக் கூடியுள்ள மக்களின் வாழ்த்துக்களோடு நடைபெறுகிறது.

இங்கே பேசிய சிலம்புச் செல்வர் அவர்கள் தமிழ் உணர்ச்சியுடன் தமிழுக்குப் பெருமைசேர்க்கும் விழாவில் பங்கேற்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நான் மேடையிலிருந்தே காண்கிறேன்—கட்சிச் சார்பில்லாமல் பலர் இங்கே வந்து கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களது பரந்த உள்ளத்தைப் பாராட்டுகிறேன். அவர்களது பெருந்தன்மையை மெச்சுகிறேன். தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறார். கட்சிப் பற்றற்ற முறையில் பெருந்தன்மையோடு இந்த விழாவில் பங்கேற்றதற்காகத் தமிழர்கள் சார்பில் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலப்பதிகாரத்தில் சிலம்புச் செல்வர் அவர்கள் எவ்வளவு ஆர்வமும் எழுச்சியும் கொண்டவர் என்பது நாம் அறிந்ததே!

அதே போன்று தி.மு. கழகத்திலுள்ள நாவலரும் பிற தமிழ் அறிஞர்களும், அவர்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களும் சிலப்பதிகாரத்தில் அதிக உடன்பாடு கொண்டவர்கள்.

புலவர்கள் மத்தியில் மட்டுமே இருந்த சிலப்பதிகாரத்தை நாடக உருவில்— திரைப்பட உருவில், மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டும் எனப் பணியாற்றி அதில் வெற்றியும் பெற்றோம்; பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறோம்.

முதல்வர்

இங்கே சீரோடும் சிறப்போடும் இளங்கோவடிகள் சிலை நாட்டப்படும் இதே நேரத்தில் இளங்கோ யாத்த சிலப்பதிகாரம் காட்டும் காவிரிப்பூம் பட்டினத்தில்—கடலில் அமிழ்ந்து போன காவிரிப்பூம்பட்டினத்தில்- பல புதைபொருட்களும் அவற்றில் இறைந்து கிடக்கும் ரோமானிய நாணயங்களும் இருக்கும் காவிரிப் பூம் பட்டினத்தில் — சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்று அமைக்கும் பணி உருவாக்கப்பட்டு— அந்தப் பணி, வேகமாக நடைபெற்று வருகிறது.

சிலப்பதிகாரக் காவியம்— சிலைகள் உருவத்திலேயே அமைக்கப்படும் கலைக்கூடம் அது.

பூம்புகாரில் தொடங்கும் கதையில், கண்ணகி மணக்கோலம் பூணுவது முதல் .... மதுரையில் வீரத்தோடுவழக்குரைத்த காதை தொட்டு—சேரன் செங்குட்டுவன் போர்க்கோலம் பூண்டு வடபுலம் சென்று கனகவிசயர் தலை மீது கல்லேற்றிக் கொண்டு வந்து —வஞ்சி மூதூரில் கண்ணகி சிலை அமைத்து வழிபட்டது வரை, சிலைகளாலேயே சிலப்பதிகாரக் காவியம் சொல்லும் வகையில் அமைக்கப்படும் அந்தக் கலைக்கூடப் பணி வெகு விரைவில் முடியவிருக்கிறது.

அதன் பின்னர் அந்தக்கலைக் கூடத் திறப்பு விழா விரைவில் நடைபெற்று...... வெளிநாட்டினர் சிலம்பு படிக்காமலேயே சிலப்பதிகாரக் கதையை அறிந்து கொள்ளும் அற்புத முயற்சி அந்தக் கலைக் கூடத்தால் நிறைவேறவிருக்கிறது. இப்படிப்பட்ட கலைக்கூடம் இந்தியாவிலேயே இது தான் முதலாவதாக இருக்கும்.

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம்

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியும் சொல்ல விரும்புகிறேன். கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் கோவிந்தராசன் கல்வெட்டுகளை ஆராய்ந்து வருபவர்- குறிப்பாக இளங்கோவடிகள் புகழ்ந்து வாழ்த்திய கண்ணகி சிலை—சேரன் செங்குட்டுவன் வடித்துத் தந்த கண்ணகி சிலை எது என்று நாடு முழுவதும் சுற்றிச் சுற்றி ஆராய்ந்தார்.

கடைசியில் மதுரை மாவட்டத்து எல்லையில் உள்ள சுருளி மலை என்றோர் மலைக்கு ஒரு கல் தொலைவில்—உயர்ந்த பாறை ஒன்றில் மங்கலத்தேவி கோவிலில் உள்ள சிலையைக் கண்டார்.

அந்தச் சிலை காளியைப் போல் —துர்க்கையைப் போல்— மாரியம்மையைப் போல்—இலக்குமியைப்போல் — சரசுவதியைப் போல் நான்கு கரங்கள் உள்ள சிலையாக இல்லை. இரண்டு கையுள்ள பெண் சிலையாக அது இருக்கக் கண்டார்.

அந்தச் சிலை கூட—இங்கே உள்ள இளங்கோ வடிகள் சிலையைப் போல் பெரிதாக இல்லாமல் இருக்கிறது. இமயத்திலிருந்து கனக விசயர் தூக்கி வந்த கல்— எவ்வளவுஅளவினதாக— சிறியதாக இருந்திருக்குமோ— அந்த அளவில்—சிறிய உருவில் அந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; அந்தச்சிலை செய்யப்பட்ட கல் அந்தப் பகுதியிலுள்ள மலைகள்—பாறைகள் இவற்றைச் சாராததாகவும், இமயத்துக் கல்லைப் போன்று இருப்பதாகவும் கோவிந்தராசன் என்ற அந்தப் பேராசிரியர் அறிவித்திருந்தார். இதைக் கேள்விப்பட்டு நானும் நாவலரும் அவரை அழைத்து உரையாடி விவரங்கள் அறிந்து—அந்தக் கோவில் இருக்கும் பகுதி கேரள நாட்டைச் சார்ந்தது என்ற காரணத்தால் இது பற்றிக் கேரள முதல்வர் அச்சுத மேனனுக்குக் கடிதம் எழுதினோம்.

''இந்தச் சிலை பற்றிய ஆராய்ச்சியை உங்கள் பகுதியில் தொடங்க வேண்டும்; அதற்கான அனுமதி எங்கள் ஆராய்ச்சிப் பகுதியினருக்கு வேண்டும்''— எனக் கடிதம் எழுதியிருந்தோம்.

கேரள முதல்வர் அச்சுத மேனன் அதற்குப் பதில் தந்திருந்தார்.

''ஏற்கனவே இதுபற்றி நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அதன் தொடர்பாக உங்களது ஆராய்ச்சியை நடத்தலாம்''—என்று அவர் பதில் அனுப்பியிருக்கிறார். விரைவில் நல்ல முடிவு எடுத்து அவர் அறிவிப்பார் என்று நம்புகிறேன்.

இளங்கோவடிகள் வாழ்த்திய அச் சிலையை—கனக விசயர் சுமந்து வந்த அச்சிலையை — தமிழர் தம் வீரம் பேசும் அதே சிலையை—நாம் காணக் கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை.

சென்னையில் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைப்பது பற்றி இங்கே எழுந்த 'புகார்' பற்றி சிலம்புச் செல்வர் குறிப்பிட்டார்.

இளங்கோவடிகளே தமது காப்பியத்தைப் 'புகாரில்' தான் துவக்குகிறார்.

அண்ணா கல்லறைக்குப் பக்கத்தில் கம்பனும், இளங்கோவடிகளும் இருப்பது 'துவார பாலகர்கள்' போல் இருப்பதாகச் சிலர் குறை கூறுகிறார்கள்.

அண்ணாவே இருந்தால் கூட '' என்னைத் தாழ்த்தினாலும் கம்பனையும், இளங்கோவையும் உயர்த்திப் பேசிவிட்டார்களே! அந்த அளவுக்குப் பாராட்டிவிட்டார்களே! அந்த அளவு தமிழுணர்ச்சி பெற்று விட்டார்களே '' என்றுதான் கூறுவார்.

எங்களைத் தாக்குபவர்கள் ஒரு புதிய முறையைக் கையாளுகிறார்கள்.

எங்களை இறக்கிப் பேசிட — அண்ணாவை உயர் தூக்கிப் பேசிட அண்ணாவை உயர்வாகப் புகழ்ந்து பேசத்தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால், இதே ராஜ தந்திரத்தோடு 10 ஆண்டுக் காலம் இருந்தாலாவது பலன் கிடைக்கும். ஆனால் அடுத்த மாதமே சுயரூபத்தைக் காட்டி விடுகிறார்கள்! அண்ணாவுக்குத் துவார பாலகர்களா கம்பனும்—இளங்கோவும்— என்று கேட்டு விடுகிறார்கள். பாவம் அவர்களது ராஜ தந்திரம் பலவீனமானது!

அண்ணா அவர்கள் இருந்து இந்த விழாவைக் காணவில்லையே என்று வருத்தப்பட்டார் சிலம்புச் செல்வர். நானும் இந்த எழில் மிகுந்த விழாவைப் பார்க்கிறேன். அதில் எழுச்சியோடு வந்து கலந்து கொண்ட உங்களையெல்லாம் பார்க்கிறேன். இந்த விழாவை வாழ்த்த வந்த பைந்தமிழ் மனம் கொண்டோரையும் பார்க்கிறேன்!

ஆனால் எனது நெஞ்சம் — பேதை நெஞ்சம் ஒரு கனவு காண்கிறது; ஒரே ஒரு கண நேரக் கனவு காண்கிறது!

அந்த வெண் மணற் பரப்பில் நீள் துயில் கொண்ட அண்ணன் ஒரு நிமிடம் எழுந்து வந்து....

'' தம்பிகளே! நான் நினைத்ததை யெல்லாம் நீங்கள் செய்கிறீர்கள் ''

—என ஒரு வார்த்தை சொன்னால் போதும்!

ஆனால், அண்ணன் எழுந்து வராத துயிலில் இருக்கிறார்....! ஆனால் அண்ணன் வடிவில் இங்கே பல்லாயிரக் கணக்கில் தமிழ் நெஞ்சங்கள் கூடியிருந்து வாழ்த்துகின்றன. அந்த வாழ்த்துகளில் '' அண்ணன் இருக்கிறார்—அண்ணன் இருக்கிறார் '' என மகிழ்ந்து இந்த விழாவை நடத்துகிறோம்!

நம் இதயங்களிடையே

இனிய உடன்பிறப்புகளே! அமெரிக்க நாட்டிற்குச் சென்றுவந்தோர் பலரும் சென்று திரும்பியவர்கள் அந்த நாட்டின் சிறப்புகளைப் பேசிட நான் இதுவரைக் கேட்டுக்கொண்டு பூரிப்படைந்திருந்தேன். உலகத்தில் அந்த நாட்டின் செல்வச் செழிப்பான காட்சிகள் அவ்வளவும், நமது தாய்நாட்டையும் அதுபோல் செழிப்புக் கொழிக்கும் நாடாக ஆக்கிட வேண்டுமே என்ற ஆவலைத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன என்பதை நான் அறிவேன்.

அமெரிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப்பயணம், மேனாட்டுச் சிறப்பு, அங்குத் தொழில் வளர்ச்சிக்கும் விஞ்ஞானத்திற்கும் அந்நாடு தந்துள்ள பெருமையும், அந்த நாட்டின் அறிவியலும் தொழில் நுட்பமும் ஒருங்கிணைந்த வளர்ச்சியும், இந்திய நாட்டின் நிலைமை பற்றி

பலவற்றை விளக்கிடவும், உலகத் தின்பால் இந்திய சொந்தங்களின் மனதிற்கு மிகப் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சிகளும், தமிழகத்தின் சார்பில் தமிழ்மக்களின் சார்பில் உலகமனைவரின் அன்பையும் பெற்றிடவும் இந்தப் பயணத்தை ஏற்றுக்கொண்டேன். பயணத்தின் போதே திரண்டிருந்த மக்கள் என்னை வாழ்த்தி வரவேற்ற அந்த நாட்டுத் தமிழர்கள் நெஞ்சத்தில் நிறைந்து நின்றனர். பெருமைப்படுகிறேன். அவர்களுக்கும் உங்கள் வாழ்த்துக்களை எடுத்துக் கூறி மகிழ்கிறேன்.

நான் தமிழகத்தில் இல்லாத இந்த நாட்களில் கட்சிப் பணிகளை மேற்கொண்டு தமிழகத்தின் அமைதியைப் பாதுகாத்து, அமைதி

[illegible]

அன்புடன்
[illegible]



இன்னும் தருக!

நமது நிலை, நமது குரல், நமது விளக்கம் போன்ற கருத்துமிக்க இலவச இணைப்புகளை எங்களுக்குத் தந்த 'தமிழரசு' நமது பரிசுத் திட்டம், நமது சாதனைகள், நமது வேளாண்மை என்ற தலைப்புகளில் தமிழக அரசின் அருந்தொண்டுகளின் விளக்கங்களையும் தந்தால் நாங்கள் பெரிதும் மகிழ்ச்சியுறுவோம்.

—தி. ரா. சாம்பமூர்த்தி.
அந்தமான்.

ஏங்கவிடாதீர்!

ஐ.நா. மன்றம் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் பல வருடங்களுக்கு முன்பு வானொலியில் பேசிய சொற்பொழிவின் ஒரு பகுதியை வெளியிட்டிருந்தீர்கள். முழுப்பேச்சையும் வெளியிட்டிருக்கக்கூடாதா என்ற ஏக்கம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது அண்ணா அவர்களின் கட்டுரைகளையோ பேச்சுக்களையோ வெளியிடுங்கால், குறைக்காமல் அப்படியே வெளியிடுவீர்களா?

—இரா. சு. வேலன்
மானாமதுரை.

முதல்வரின் பரந்த உள்ளம்.

''இருப்பிடம் மாற்றும் பணியல்ல—இனிய வாழ்வுக்கு அடித்தளம்'' என்ற முதல்வரின் கட்டுரையில் அவரது பரந்த மனப்பான்மை தெளிவாகத் தெரிகிறது.

—எம். கண்ணன், கோவை.

பயனுள்ள கட்டுரை!

'பரனூரில் ஒரு பயனுள்ள இல்லம்' படித்தோம். தொழுநோயாளர்களுக்கும் சங்கம் இருக்கிறது. அவர்களுக்கும் தலைவர் இருக்கிறார் என்ற புதுமையைத் தெரிந்துகொண்டோம். புறக்கணிக்கப்பட்டவர்களுக்குத் தமிழக அரசு எவ்வளவு நன்மைகளைச் செய்து வருகிறது என்பதைக் கட்டுரை விளக்குகிறது.

—கே. செந்தாமரை.
வாலாஜா.

ஒருமைப்பாட்டின் உயர்வு!

கோவை இளஞ்சேரனின் ''சிலம்பு விளம்பும் தமிழக ஒருமைப்பாடு'' சுவையாக இருந்தது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று மிகப் பழங்காலத்திலேயே உலக ஒருமைப்பாட்டுக்குப் பாடுபட்ட பூங்குன்றனாரின் பொன்னான தமிழகத்தில் பொன்மணிச் சிலம்பும் ஒருமைப்பாட்டை வலியுறுத்தியதில் வியப்பென்ன இருக்கிறது?

—புலவர் இலக்குவன்,
நெல்லை.

திரைப்படமா?

'ஏன் இந்தக் காதலில்' திடீர்த் திருப்பம். தேன்மொழியும் மாதவனும் (சென்ற இதழில்) மைசூர் போகிறார்களே, திரைப்படம் போல் டூயட் பாடப் போகிறார்களோ என்று நினைத்தேன். இப்போது மல்லப்பனுடன் மல்யுத்தம் செய்யத் தொடங்கியதும்—என் நினைப்பு உறுதிப்பட்டு விட்டது. திரைப்படமாக்க வேண்டிய கதை தான் 'ஏன் இந்தக் காதல்?'

—ராமமூர்த்தி,
கெங்கை.

பாடம் புகட்டும் பேருரை!

கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் பட்டமளிப்பு விழாப் பேருரையைப் படித்தேன். பேருரை வாயிலாக மாணவ சமுதாயத்துக்குப் புதுப்பாடமே போதித்திருக்கிறார் — அவரது உரை பாராட்டுக்குரியது.

—குமாரசாமி,
துடியலூர்.

பாமணி உரம்

குருணை வடிவில் இருப்பதால்
இதனை நிலத்தில் இடுதல் வெகு எளிது
காற்றில் பறக்காது!
கட்டியாகப் போய்விடாது !
கலப்படமும் செய்ய முடியாது !
முச்சத்தும் அமைந்தது !
எப்பயிர்க்கும் ஏற்றது !

பாமணி உரத்தின் சேவை !
உங்கள் பயிர்களுக்குத் தேவை.

கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கும் !

நாட்டின் உயர்வுக்கு வழிவகுக்கும் !

ஏறக்குறையப் பத்து வருடங்களுக்கு முன்பு — — — அதாவது 1961-ஆம் ஆண்டு — — —

காந்தியடிகளின் சீடரும் பூதான இயக்கத்தின் தலைவருமான விநோபா பாவே மத்தியப் பிரதேசத்தில் தனது பாதயாத்திரைப் பணியினைத் தொடர்ந்தார். கிராமங்களுக்கெல்லாம் சென்றார்.

அங்கே ஒரு குக்கிராமம். காந்தியடிகளின் சீடர், பூமிதானம் கேட்டு வருகிறார் என்று அந்தக் கிராமத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததால், கிராமத்து விவசாய மக்கள் அவரை ஆவலுடன் வரவேற்றார்கள்.

அந்த விவசாயிகளில் ஒருவர், விநோபா பாவேயின் முன் வந்து நின்றார்.

"காந்தி ஊரிலிருந்து நீங்கள் வருகிறீர்களாமே! நாங்களெல்லாம் காந்தியைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டன! காந்தி இப்போ சௌக்கியமாக இருக்கிறாருங்களா?'' என்று கேட்டார்.

மறுகணம் விநோபா பாவே திகைத்து விட்டார்.

விவசாயி விடவில்லை. மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

''என்னங்க, பேசாம இருக்கீங்க? இப்பல்லாம் இந்த ஊருப் பக்கம் காந்தி வர்றதைக் காணோமே..! அதனால்தான் கேக்குறேன். அவரு சௌக்கியமாக இருக்கிறாரா? சொல்லுங்க''—கிராமத்து விவசாயி மிக உருக்கமுடன் கேட்டார்.

பாவே ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, காந்தி சௌக்கியமாக இருக்கிறார்'' என்று பதில் சொல்லிவிட்டுத் தனது சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. கிராமத்து மக்கள் மிகவும் பிற்பட்ட நிலையிலேதான் வாழ்ந்து வருகிறார்கள் என்ற செய்திதான் அது. காந்தியடிகள் இறந்து பல வருடங்கள் கழிந்த பிறகும் கூட, அவர் சௌக்கியமாக இருக்கிறாரா என்று ஒருவர் கேட்டால் அதன் பொருள் என்ன? காந்தியடிகள் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கூட அவர் அறிந்து கொள்ளவில்லை—அந்த அளவுக்கு அவர் அறியாமையின் வயப்பட்டிருக்கிறார் என்பதுதான்!

கிராம மக்களின் இந்த கைய அறியாமையை நீக்க வேண்டும் என்றுதான் அண்ணல் அரும்பாடுபட்டார். அண்ணலின் கொள்கையைப் பொன்னே போல் போற்றிய அண்ணாவின் வழியில்தான் இன்றையத் தமிழக அரசு நடைபோடுகிறது என்பதைத்தான் தமிழகத்தின் முதல்வர்கலைஞர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் அண்மையில் குறிப்பிட்டுள்ளார்.

''அறியாமைதான் துயரத்தின் தாய்'' என்பது மேல்நாட்டுத் தத்துவ வாதி ஒருவரின் வாசகம். அறியாமைத் துயரத்தை அறவே நீக்கும் அரும் பணியில் நாட்டம் கொண்ட நமது முதல்வர், கண்டுபிடித்த அருமையான திட்டம்தான் இளைஞரணி அமைப்பு.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பார்களே, அதைப் போல ஒரே நேரத்தில் இரண்டு விதமான நன்மைகளை இந்தத் திட்டம் உருவாக்கியிருக்கிறது.

கிராமமக்களிடம் அறிவொளிப் பிரச்சாரமும் நடைபெறுகிறது; படித்துப் பட்டம் பெற்று வேலையின்றித் திரியும் பட்டதாரிகளில் சிலருக்கு ஓரளவு வேலையும் கிடைக்கிறது. அவர்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளாதாரத்தில் மாதம் ரூ. 175 ஊதியமாகவும், கிடைக்கிறது. இந்த அணியில் தொண்டாற்றுவோருக்கு அரசுப் பணியில் சேரச் சிறப்புச் சலுகைகள் காட்டப்படுகின்றன.

சேரணியை உருவாக்கித் தமிழ் மக்களின் இதயத்தில் எல்லாம் நீங்காத இடம் பெற்றிருக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர்

15-ஆம் நாளில் இந்த இளைஞர அணியைத் திருச்சியில் தமிழக முதல்வர் கலைஞர் துவக்கி வைத்தார்கள்.

இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களுக்கு சத்திய விசய நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்), கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்), பவானிசாகர் (கோவை மாவட்டம்), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) முதலிய ஐந்து இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சமூகப் பொருளாதாரம், கிராமச் சூழ்நிலை இவைதான் இந்தப் பயிற்சியின் முதற்பாகம். பயிற்சிக் காலம் 28 நாட்கள்தான். முதல் பத்து நாட்கள் வகுப்பறைப் பயிற்சி நடைபெறுகிறது. கிராமவளர்ச்சியைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் இங்கே கற்றுத்தரப்படுகின்றன. பதினொன்றும் நாளிலிருந்து இருபதாம் நாள் முடியப் பத்து நாட்கள் கிராமத்தில் இடம்பெறுதல் (Village placement) என்ற பயிற்சிக் கல்வி நடைபெறுகிறது. கிராமத்தில் உள்ள மக்களுக்கு—பழமையில் ஊறிப்போயிருக்கும் மக்களுக்குப் — புத்துலகத்தைப் பற்றித் தெரிவித்துப்—புதுவித வேளாண்மை முறைகளை எல்லாம் கையாளச் சொல்லிச்—சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பயிற்சி இது. அதன் பிறகு இருபத்தொன்றும் நாளிலிருந்து இருபத்தெட்டாம் நாள் முடியப் பயிற்சியின் முடிவுப் பகுதி நடைபெறுகிறது. இதுவும் வகுப்பறைப் பயிற்சிதான். இவ்வாறு 28 நாட்களுக்குள் புதிய உலகத்தைக் காண்கிறார்கள் இளைஞர் அணியினர்.

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த சத்திய விசய நகரத்தில் நடைபெறும் இளைஞர் அணிப் பயிற்சியைப் பார்ப்போம்.

செப்டம்பர் 16-ஆம் நாள் துவக்கப்பட்ட இளைஞரணிப் பயிற்சியில் 62 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் இருவர், தங்களது பயிற்சிக் காலத்திலேயே அரசுத்துறையைச் சேர்ந்த வேறு அலுவல் வாய்ப்புக் கிடைத்துவிட்டதால் சென்றுவிட்டனர். தற்போது இரண்டாம் பகுதியினருக்குப் பயிற்சி நடைபெறுகிறது. இந்த இரண்டாம் பகுதியில் 57 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்களது வகுப்பறைப் பயிற்சியின் முதற்கட்டம் முடிவடைந்து—அவர்கள் தாமரைப்பாக்கம், ஆனைமநல்லூர், காரனூர், மாம்பாக்கம், வேளூர் ஆகிய கிராமங்களில் கிராமத்துக்கு 11 பேர் விதம் சமூகப் பணி செய்யும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிராமங்களில் அவர்கள் செய்யும் பணிகள் மகத்தானவை; அவற்றை இங்கே பார்ப்போம்:

சுடர் விளக்கு என்றாலும் தூண்டுகோல் வேண்டும் அல்லவா? அந்தத் தூண்டுகோலாகத்தான் இந்த இளைஞர் அணியினர் விளங்குகிறார்கள். கிராமத்து மக்கள் தங்களின் தேவைகளையும் அறியாமல், அந்தத் தேவைகளைப் பெறுவதற்குரிய வழிவகைகளையும் அறியாமல் இருக்கின்ற அவல நிலையை இந்த இளைஞர் அணியினர் போக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

தாமரைப் பாக்கத்தில் பல விவசாயிகள் தங்களின் கால்நடைச் செல்வங்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து வந்தனர். கால்நடைகள்தான்—வேளாண்மைத் தொழிலுக்கு மிகவும் ஒத்துழைப்பாக இருக்கும் மாடுகள்தான்—உழவர்களுக்குப் பெருஞ்செல்வங்கள் என்பதை இந்த இளைஞரணியினர், அவர்களுக்கு எடுத்துக் கூறிக் கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசிகள் போட வைத்தனர். குணப்படுத்துவதைவிடத் தடுத்துக் கொள்வதே சிறந்தது (Prevention is better than Cure) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், வேளாண்மைத் தொழிலுக்கு இடையூறு ஏற்படும். வேறு கால்நடைகளைத் தேடவேண்டும். அவை கிடைத்து வேளாண்மைத் தொழிலைச் செய்வதற்குள் பெரும்பாடாகிவிடும். ஒருவரின் வேளாண்மை பாதித்தால் கூட, அது இந்த மொத்த நாட்டின் வேளாண்மையைப் பாதித்துவிடும். அதனால்தான் வருமுன் காப்போம் என்ற தத்துவத்தைக் கிராமத்தில் வாழும் வேளாண் குடியினருக்கு எடுத்துக் கூறி, அவர்களுக்கும், நாட்டுக்கும் நன்மையை உருவாக்குகிறார்கள், இளைஞர் அணியினர். ஒரு நாளில் மட்டும் 150-க்கு மேற்பட்ட மாடுகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடும் அருந்தொண்டினைச் செய்தார்கள், தாமரைப்பாக்கத்தில் பாடிவீடு அமைத்திருந்த இளைஞர் அணிப் பகுதியினர்.

விஞ்ஞான வளர்ச்சி அதிகரித்துள்ள இந்த நாட்களில் வேளாண்மைத் தொழிலில், பழைய முறைகளையே கடைப்பிடித்து வருகிறார்கள் பலர். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இரண்டு அல்லது மூன்று விசைத் தெளிப்பான்கள் உண்டு. இவற்றின் முக்கியத்துவத்தை வேளாண் பெருமக்கள் உணருவதில்லை. அதனால் அந்தக் கருவிகள் அனாதைகளாக இருந்துவருகின்றன. அவற்றைப் பயன்படுத்தும்படி வேளாண் குடியினரிடம் எடுத்துரைத்து வருகின்றனர் இளைஞர் அணியினர். மருந்துகளை எப்படித் தெளிக்க வேண்டும் என்பதையும் இளைஞர் அணியினரே, வேளாண் குடியினருக்கு விளக்கிச் சொல்கிறார்கள். தாமரைப் பாக்கத்தில் முகாமிட்டிருக்கும் இளைஞர் அணிக்குழுவில் உள்ள மின்துறைப் பொறியியல் பட்டதாரியான திரு பாலகிருஷ்ணன் விசைத் தெளிப்பானைத் தானே முதுகில் சுமந்துகொண்டு, வயல் வெளியில் அனாயாசமாக நடந்து பயிர்களில் மருந்து தெளித்து ஒரு விவசாயிக்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தார். சில நிமிட இயக்குதலைப் பார்த்துவிட்டு, அந்த விவசாயி தானும் அவ்வாறே இயக்கக் கற்றுக் கொண்டார்.

இந்த இளைஞரணியினர் சமூகத்தின் பல துறையினரையும் சந்தித்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு தங்களின் பணியைத் தொடங்குகின்றனர். பொதுவாக, கிராம அதிகாரி, பஞ்சாயத்து உறுப்பினர், தலைவர் ஆகியோரைச் சந்தித்துத் தங்களின் இலட்சியத்தை எடுத்துக் கூறி, சமூகப் பணிக்குத் தங்களுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்கிறார்கள். ஏனென்றால், ஒரு கிராமத்தினுள் நுழைந்து அங்கிருப்போருக்கு நல்வழிகள் சொல்வதற்கு ஓரளவு அறிமுகமானவர்களாக இருக்கவேண்டும். ஆனால், அந்தப் பகுதிக்கு முற்றிலும் புதியவர்களாகச் செல்லும் இளைஞர் அணியினர், பொது மக்களுடன் நல்ல முறையில் உறவு கொள்வதற்குக் கிராம நிர்வாகத்திலுள்ள முக்கியமான பெருமக்கள் பாலங்களாகத் திகழ்கிறார்கள்.

திடீரென்று எந்த ஒரு மாறுதலையும் ஏற்றுக்கொள்வதற்குப் பொதுமக்கள் தயக்கம் காட்டுவது இயல்பு. மிகப் பெரும் நன்மைகளை அவர்களுக்கு உருவாக்கித் தந்தாலும் கூட அவற்றைப் பற்றிக் கிராமத்து மக்கள் ஐயப்படுவது வாடிக்கை. துவக்கத்தில் ஐ. ஆர். நெல்லைப் பயிரிடும்படிச் சொன்னபோது பலர் மறுத்தார்கள். அந்த நெல் சாப்பாட்டுக்கு ஏற்றதல்ல—உடல் நலத்தைக் கெடுத்துவிடும் என்றெல்லாம் சிலர் கூறினார்கள். நாளாக, நாளாக, அவர்களே ஐ.ஆர். 8 நெல்லின் சிறப்பை அறிந்து, ஆர்வத்துடன் பயிரிடத் தலைப்பட்டுவிட்டார்கள். அதைப் போலத்தான் எந்த ஒரு விஷயமும்! அதனால்தான் கிராம நிர்வாகத்துப் பெருமக்களின் உதவியுடனேயே இளைஞர் அணியினர் தங்களின் அருந் தொண்டுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

சுற்றுப்புறச் சுகாதாரம்—இளைஞர் அணியினால் கவனிக்கப்படும் மற்றொரு முக்கியமான குறிக்கோள்.

நவீன உலகத்தில்—நகரங்களில் கழிவு நீரைப் புதை குழாய்களின் வாயிலாகக் கடத்துகிறோம். ஆனால், கிராமங்களில் இந்த வடிகால் முறைகள் சரிவர உருவாகவில்லை. வடிகால்களினால் ஏற்படுகின்ற நன்மைகளைக் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. கிராம மக்கள், கிராமங்களில்—வெளிப் பரப்பில்—மக்கள் நடமாடும் பரப்பில்—மலங்களைக் கழிக்கின்றனர்! பொதுமக்களின் பயனுக்காக இருக்கும் நீர்க் குளத்தையும் அசுத்தப்படுத்திவிடுகின்றனர். இது போன்ற செய்கைகளால் கிராமத்தின் சுகாதாரத்தையே பாதிப்புக்கு ஆட்படுத்திவிடுகிறார்கள்.

இத்தகையவர்களிடம் எல்லாம் சென்று, வீடுகளில் மலம் கழிக்கும் அறையைக் கட்டிக்கொள்ளுமாறு வலியுறுத்த வேண்டியிருக்கிறது. வலியுறுத்தும் இந்தத் தொண்டினையும் இளைஞர் அணியினர் செய்து வருகிறார்கள். கிராம மக்கள் அவரவர்கள் சக்திக்கேற்ற விதத்தில் தங்கள் வீட்டில் கழிவறையை உருவாக்கிக் கொள்ளலாம். மிக மிகக் குறைந்த வசதியுடையவர்கள்

கூடப் பயன்படுத்திக் கொள்வதற்கு வார்தா முறைக் கழிவறை இருக்கிறது. அந்த அலறயலுை மற்றொரு பயனும் இருக்கிறது. அதிலுள்ள கழிவுப் பொருள் உரமாகவும் பயன்படுகிறது.

காவலூர் என்ற பகுதியில் பணிபுரியும் இளைஞர் அணியினர் இந்த வார்தா முறைக் கழிவறை ஒன்றை உருவாக்கிப் பொது மக்களுக்குக் காண்பித்தனர். இந்த அணியினரின் தொண்டு, கிராம மக்களின் உள்ளத்தில் ஓரளவு வேலை செய்திருக்கிறது. இளைஞர் அணியினர் வலியுறுத்துவது நியாயம்தான் என்பதைக் காவலூர் மக்கள் ஒப்புக்கொண்டு அதற்குரிய பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இளைஞர் அணியின் மற்றொரு இலட்சியம் — கூட்டுறவு வங்கிகளைப் பயன்படுத்துவதற்குக் கிராம மக்களைத் தூண்டும் அருந் தொண்டாகும்.

கூட்டுறவுச்சங்கம், தொடக்கப் பள்ளி, ஊராட்சி மன்றம் இவை மூன்றும் கிராமத்தின் அடிப்படை அமைப்புகள் என்று, மறைந்த நேரு அவர்கள் சொல்லியிருப்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

எத்தனையோ கூட்டுறவு வங்கிகளில் உள்ள பணம், விவசாயப் பெருமக்களால் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. திமிரி வட்டாரத்தைப் பொறுத்த அளவில் இந்தச் செய்தி உண்மைதான் என்பது தெளிவாகியிருக்கிறது. அந்த ஒன்றியத்தைச் சேர்ந்த கூட்டுறவு வங்கியில், கடன்கேட்க ஆளில்லாமல் 50 ஆயிரம் ரூபாய் தேங்கிவிட்டதாம். பிறகு, தற்போது, இளைஞர் அணியின் முயற்சியால, வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வேளாண் குடியினர் கூட்டுறவு வங்கியைப் பயன்படுத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

ஆனைமநல்லூரில் தங்கியிருந்த இளைஞர் அணியினரின் தொண்டு —ஓயாத தொண்டு என்று தான் குறிப்பிட வேண்டும்.

குழாய்களிலிருந்து வெளியேறும் தண்ணீர் தெருவெல்லாம் பெருகாமல் இருப்பதற்காகக் குழி வெட்டினார்கள். தினமும் ஒவ்வொருவரும் குறைந்தது எட்டு விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் உள்ளக் கிடக்கையை அறிந்து பணிபுரிகிறார்கள்.

மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்துக் கல்வி வளர்ச்சியை உருவாக்குவது இளைஞர் அணியின் மற்றொரு நோக்கமாகும்.

வேலூர் பகுதியில் தங்கியிருந்த இளைஞர் அணியினர், புது வகை அனுபவத்தைச் சந்தித்திருக்கிறார்கள்.

முதியவர்களுக்குக் கல்வி கற்றுத் தரும பணியில் ஈடுபட்ட அவர்களைக் கண்டு, முதலில் கிராம மக்கள் பயந்துவிட்டார்களாம். இளைஞர் அணியினர் அவர்களை நெருங்கி அவர்களது அச்சத்தைப் போக்கி, அவர்களுக்குக் கல்வியைக் கற்றுத் தந்திருக்கிறார்கள். அன்றைய நாளிதழில் வெளியாகியுள்ள செய்திகளில் குறிப்பிடத்தகுந்தவற்றைக் கரும் பலகையில் எழுதிக் காண்பித்து—அன்றாட நிகழ்ச்சியுடன் அவர்களை இணைத்து வைத்துக் கல்வியைக் கற்றுத் தந்தபோது அந்த முதியவர்களின் இதயங்கள் மகிழ்ச்சியடைந்தன.

இளைஞர் அணியினர் இவ்வாறு உன்னதமானகுறிக்கோள்களுடன் பணி புரிந்து வருகின்றனர். அனைவருமே இந்தப் பணியில் அகம் நிறைந்த மகிழ்ச்சியுடனும் அன்பு நிறைந்த தொண்டுணர்ச்சியுடனும் ஈடுபட்டிருக்கின்றனர்.

" நீங்கள் எல்லாம் கல்லூரியில் இருந்து வெளிவந்தவர்களாயிற்றே? கிராம மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள இந்தப் பணி உங்களுக்குச் சுவையாக இருக்கிறதா, அல்லது அலுப்புத் தட்டுகிறதா " என்று கேட்டபோது அனைவரின் முகங்களும் மாறுதல் அடையத் தொடங்கி விட்டன.

" சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் இந்தப் பணியில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். நகரங்களில் நவீன நாகரிகத்தில் மோகம் கொண்டு வாழ்ந்த எங்களுக்கு இந்தக்கிராமவாசிகளுடன் பழகுவது இனிமை தருகிறது. அது மட்டுமல்ல—அறியாமை என்ற இருளில் இருப்பவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கு அறிவொளிப் பிரச்சாரத்தைச் செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்"

—அனைவரும் ஒரே குரலில் தெரிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்த இளைஞர் அணியின் இத்தனை உற்சாகத்திற்கும் காரணம் இவர்களுக்குப் பயிற்சி தரும் தலைமைப் பயிற்றுவிப்பாளர் திரு பிரான்சிஸ் அவர்கள்தான் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்த இளைஞர் அணியினரையும் இவர்களது அருந்தொண்டுகளையும் நாம் காணும்போது, நாம் இளைஞர்களாக இருந்த காலத்தில் இப்படி அருமையான திட்டம் ஏற்படாது போய்விட்டதே என்ற ஏக்கம் ஏற்படுகிறது; என்ன செய்வது ? புதிய சமுதாயத்தைப் பார்த்து மன மகிழ்ச்சி கொள்வதன் வாயிலாகவாவது நமது ஏக்கத்தைக் குறைத்துக் கொள்வோமாக !



விண்வெளி ஜீப்

விஞ்ஞானிகள் எதையும் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று பொதுவாகச் சொல்லப்படும் கருத்து, விஞ்ஞானிகள் விஷயத்தில் கடைப்பிடிக்கப்படக் கூடாது. விஞ்ஞானிகள் எப்போதும் பேராவல்கொண்டவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் விஞ்ஞானம் வளர முடியும்; இயற்கையின் நுட்பங்களை எல்லாம் ஆராய்ச்சி செய்து, மனிதகுலத்திற்கு முன்னேற்றத்தை உருவாக்க முடியும். அந்த வகையில் உருவானதுதான் டர்போ—போர்ட்டர் என்ற புதுவகை விமானம்.

இந்த விமானம் சுவிஸ் நாட்டுத் தயாரிப்பு. ரூபாய் 10 இலட்சம் மதிப்புள்ளது. இந்த விமானத்தில் 10 பேர் பயணம் செய்யலாம்.

இந்த விமானத்தை எளிதாக இயக்கலாம். மிகக்குறைந்த தூரத்திற்குள்ளேயே செங்குத்தாக உயரே செல்லும். மலைப்பகுதியானாலும் அங்கே இந்த விமானம் இறங்கும். நீர்ப் பரப்பிலும், மிதப்புகளில் இணைக்கப்பட்டு, மிதக்கவல்லது. ஏரிகளில் இறங்கக் கூடியது. பனிப் பாறைகளிலும் கூட இந்த விமானம் இறங்கும் இதனால்தான் இந்த விமானத்தை விண்வெளி ஜீப் (The Jeep of the air) என்று கூறுகிறார்கள்.

பலவகையிலும் இந்த விமானம் பயன்படுகிறது. பறக்கும் ஆம்புலன்சாகப் பயன்படுகிறது. ஆபத்துக் காலங்களில் உணவுப் பொட்டலங்களையும் மருந்துப் பொட்டலங்களையும் போடுவதற்கு இந்த விமானம் மிகவும் பயன்படுகிறது. இயக்கும் பணிக்கு இந்த விமானம் தக்க சாதனமாகத் திகழ்கிறது. மற்றும் சர்வே வேலைகள் நடத்த, விமானத்திலிருந்தே முக்கிய இடங்களைப் படம் எடுக்க இந்த விமானத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறைக்கும் இந்த விமானம் மிகவும் பயன்படுகிறது. இந்தோனேஷியா-தாய்லாந்து-போன்ற நாடுகளில் வயல்களில் மருந்து தெளிக்க இந்த விமானத்தை அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள்.

இது எந்தவிதமான பருவ நிலையிலும் பறந்து செல்லும். 25,000 அடி உயரம் வரை பறக்க வல்லது. மணிக்கு 280 கிலோ மீட்டர் வேகம் செல்லும் இந்த விமானத்தின் பெட்ரோல் தொட்டி முழுதாக நிறைக்கப்பட்டால், சுமார் 1,100 கி.மீட்டர் வரை செல்ல முடியும்.

எல்லா விமானங்களும் பறப்பதற்கு முன்பு நீண்ட தூரம் ஓடிச்செல்ல வேண்டும் ; ஆனால் இந்த விமானம் மிகக் குறைந்த அளவு தூரம் ஓடினாலே போதும். எளிதில் எழும்பி விடுகிறது. மிகக் குறைந்த அளவு தூரத்துக்குள்ளேயே இதைத் திருப்பிவிடலாம். சிறு குழந்தைகள் நடைவண்டியைத் திருப்புவதுபோல, இந்த விமானத்தைத் திருப்புகிறார் இதன் ஓட்டுநர் ஜே.விக்.

வினா:—விவசாயிகளுக்கான கேள்வி பதில் பகுதியில கூட்டுறவு 'இப்கோ' உரம் பற்றிய தகவல் வந்தது. இப்பொழுது அந்த உரம் எங்கள் பகுதிக்கும் வந்துள்ளது. ஆனால் அதன் விலை 15:15:15 காம்ப்ளெக்ஸ் விலையை விட அதிகமாக உள்ளது. அதாவது 15:15:15 காம்ப்ளெக்ஸ் 50 கிலோ மூட்டை ரூபாய் 48.00 தான். ஆனால் 'இப்கோ' 10:26:26 உரம் 50 கிலோ மூட்டை ஒன்று ரூபாய் 58.10 ஆகிறது. அதாவது ஒரு மூட்டைக்கு ரூபாய் 10.10 அதிகம். ஆனால் ஏதோ பயிர்ச்சத்து அடிப்படையில் அது 15:15:15-ஐ விட விலைக் குறைவு என்று கூறுகிறார்கள். தயவு செய்து இதுபற்றிய உண்மையை என்போன்ற விவசாயிகளுக்கு 'தமிழரசு' பத்திரிகை மூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக ஐ. ஆர். 8 நெல்லிற்கு எந்தஉரம் உபயோகித்தால் எவ்வளவு செலவு மிச்சம் என்றுகூறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—கே. ராஜு,
திருவள்ளூர்.

விடை:—தாங்கள் கூறியுள்ள விலை விவரம் சரியானவையாக இருக்குமானால், 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தை விட, இப்கோ 10:26:26 உரமே குறைந்த செலவில் உரமிடுவதற்கு ஏற்றது என்பது உண்மையாகும். இவ்வுண்மையை பின்கண்ட விவரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். 15:15:15 காம்ப்ளெக்ஸ் என்றால் 100 கிலோ உரத்தில் 15 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து உள்ளதாக பொருள்படும். அது போலவே 10:26:26 'இப்கோ' உரமென்றால், 100 கிலோவில் 10 கிலோ தழைச்சத்து, 26 கிலோ மணிச்சத்து, 26 கிலோ சாம்பல் சத்து உள்ளதென்று பொருள்.

உதாரணமாக ஐ. ஆர். 8 நெல்லிற்கு அடியுரமிடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல் பயிரிட 85 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும் என்று வேளாண்மைத் துறையால் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த அளவு சத்துக்களை 15:15:15 காம்ப்



வேளாண்மை வினாக்களே கேட்கப்படவேண்டும் !

ளெக்ஸ் உரம் மூலம் அளிக்க 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 233-½ கிலோ அல்லது 234 கிலோ இட வேண்டும். ஆனால் 'இப்கோ' 10:26:26 உரம் மூலம் அடியுரமிடுவதென்றால் மேற்கூறிய அளவு சத்துக்களைக் கொடுக்க, 'இப்கோ' 10:26:26 உரத்தில் 134.6 கிலோ அல்லது 135 கிலோவும், யூரியா உரத்தில் 47·3 கிலோ அல்லது 48 கிலோவும் இட வேண்டும்.

50 கிலோ மூட்டை ரூபாய் 48.00 வீதம், 234 கிலோ 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தின் விலை ரூபாய் 224.64 ஆகக் கூடும். ஒரு ஏக்கர் ஐ. ஆர். 8 நெல்லிற்கு 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரத்தின் மூலம் அடியுரமிடுவதென்றால் ரூபாய் 224.64 செலவு ஆகிறது.

50 கிலோ மூட்டை ரூபாய் 58.10 வீதம், 135 கிலோ இப்கோ 10:26:26 உரத்தின் விலை ரூபாய் 186.87 ஆகக்கூடும். இத்துடன் 48 கிலோ யூரியாவுக்கு, 1 கிலோ 98 பை வீதம் ரூபாய் 47.04 ஆகக்கூடும். ஆக 135 கிலோ 10:26:26 இப்கோ உரமும், 48 கிலோ யூரியாவும் கொண்டு ஒரு ஏக்கர் ஐ. ஆர். 8 நெல் பயிரிடுவதற்கு அடியுரமிட ரூபாய் 203.91 (ரூபாய் 156.87 + ரூபாய் 47.04) தான் ஆகிறது.

எனவே ஐ. ஆர். 8 நெல்லிற்கு 15:15:15 காம்ப்ளெக்ஸ்உரத்தை அடியுரமாக இடுவதை விட, 'இப்கோ' 10:26:26 உரமும், யூரியாவும் கொண்டு அடியுரமிடுவதால் ரூபாய் 20.73 (ரூபாய் 224.64—ரூபாய் 203.92) மீதமாகிறது.

எனவே 'இப்கோ' 10:26:26 உரத்தின் மூலம் அடியுரமிடுவதைச் சிக்கனமான முறை என்பது தெளிவாகிறது.

வினா:—எங்கள் தோப்பில் 100 தென்னை மரங்கள் உள்ளன. இவற்றின் வயது சுமார் 85 ஆண்டுகள் இருக்கும். இம்மரங்கள் நல்ல தடிப்புடனும், ஓங்கி வளர்ந்தும், நல்ல தளர்ச்சியுடனும் உள்ளன. இம் மரங்கள் 10 ஆண்டுகளுக்கு முன், நல்ல மகசூல் கொடுத்துக் கொண்டிருந்தன. ஆனால் இப்போது 80 மரங்களில் மகசூலே கிடையாது. மற்ற மரங்கள் சிறிதளவு காய்ப்புடன் உள்ளன. எல்லா மரங்களின் பாளை விடும் தன்மை குட்டையாகவும், பிஞ்சுகள் பிடிக்காத தன்மையுடனும், பாளை போடுகின்றன. அவ்வாறு போடும் பாளையில் பிஞ்சுகள் பெரிதாகி வந்தவுடன் உதிர்ந்து விடுகின்றன. மரங்களைப் பார்த்தால் வெறும் பாளையாகத்தான் உள்ளன. நாங்கள் நல்ல முறையில் தண்ணீர் பாய்ச்சியும், உழவு முதலியவைகள் போட்டு நல்ல முறையில் கவனித்து வருகிறோம்.

இவ்வாறு உள்ள மரங்கள் நல்ல மகசூல் கிடைக்க என்ன செய்ய வேண்டும்? என்பதை தயவு செய்து தெளிவான முறையில் பதில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

—த. இரகுபதி,
குச்சனூர்.

விடை:—பத்து ஆண்டுகளுக்கு முன்பு நன்கு காய்த்து வந்த தென்னை மரங்கள் தற்போது காய்க்கவில்லை என்றால், அவைகளுக்குப் போதிய சத்துக்களைக் கொடுக்காததே காரணமாகும். உங்கள் தென்னை மரங்களுக்கு இரசாயன உரமிட்டால், மீண்டும் நன்கு காய்க்கத்தொடங்கும். தங்கள் தென்னை மரங்களுக்கு 35 வயதிற்கு மேல் ஆகிவிட்டதால் ஒவ்வொரு மரத்திற்கும் 5 கிலோ 8-ஆம் எண் தரப்படுத்தப்பட்ட கலப்பு உரம் (Standard Mixture No—8.) (6:6:12) இட வேண்டும். இவ்வுரத்தை பருவமழை ஆரம்பித்தவுடன், பெருமழை தொடங்குவதற்கு முன்பாக இட வேண்டும். ஒவ்வொரு மரத்தைச் சுற்றிலும் 3 அடி தூரம் விட்டு வட்டமாக 1 அடி ஆழ, அகல குழி தோண்ட வேண்டும். அதில் 50 கிலோ தொழு எரு அல்லது தழை எரு இட்டு, அத்துடன் மேற்கூறிய அளவு கலப்பு உரத்தையும்இட்டு, மண்ணால் மூடி, தண்ணீர் விட வேண்டும். இவ்வாறு ஆண்டு தோறும் செய்து வந்தால் மீண்டும் உங்களுடைய தென்னை மரங்கள் நன்கு காய்க்க ஆரம்பிக்கும். இந்த ஆண்டுஇரசாயன உரமிட்ட தன்பலனை அடுத்த ஆண்டில்தான் நீங்கள் நன்கு காண இயலும்.

வினா:—எனது வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் பயிரிட்டுள்ளேன். நன்கு வளர்ந்து குருத்து இலை மஞ்சள் நிறத்தில் அழுகிப்போய் விடுகிறது. இதற்கு என்னமருந்து இடவேண்டும் ?

—பி. கே. சுகுமார்,
தோணிமுடி, 2-வது பிரிவு,
முடீஸ்.

விடை:—குருத்து இலை மஞ்சள் நிறத்தில் அழுகிப்போய்விடுகிறது என்றால், இலைப்புள்ளி நோய் தாக்குதலாக இருக்கக்கூடும். இந்நோய் தாக்கியிருந்தால் இலைகளில் கருமையான முட்டை வடிவமுள்ள புள்ளிகளும் காணப்படும். இப்புள்ளிகள் விரைவில் நீண்டு பெரியதாகி இலையின் பெரும் பாகத்திலும் பரவிவிடும். அதன் பின் இலைகள் வாடிவிடும். இவ்வறிகுறிகள் எல்லாம் காணப்பட்டால், இலைப்புள்ளி நோய் தாக்கியுள்ளது என்று முடிவு செய்து கொண்டு, ''டைத்தேன்'' மருந்தை, (ஏக்கருக்கு 1 கிலோ மருந்தும் 500 லிட்டர் தண்ணீரும் என்ற விகிதத்தில் கலந்து)தெளிக்கலாம். மேற்கூறிய அறிகுறிகள் காணப்படாவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர்(வளர்ச்சி) அவர்களையோ அல்லது ஊர் நல ஊழியரையோ அழைத்து வந்து நேரில் காட்டி, அவர்கள் பரிந்துரைக்கும் மருந்தைத் தெளிக்க முயற்சிசெய்யுங்கள்.

வினா :—தற்பொழுது இறைவையாக எள் விதைக்கஎந்த ரகத்தை விதைக்கலாம்? என்ன இரசாயன உரம் இட வேண்டும் ! ஒரு ஏக்கர் நிலத்தில் எள் சாகுபடி செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி ஆரம்பம் முதல் கடைசி வரை தெரிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—செல்வி கோ. ஞானம்பிகை,
கன்வீனர், மகளிர் வானொலி
விவாதக்குழு, சென்னக்கல்
பாளையம்.

விடை:—நவம்பர் – டிசம்பர் மாதங்களில் இறைவையாக எள் சாகுபடி செய்ய டி.எம். வி. 2 எள் ரகமும், டிசம்பர்-ஜனவரி மாதங்களில் விதைக்க டி.எம்.வி. 3 அல்லது கே. ஆர். ஆர்: 1 அல்லது கே. ஆர். ஆர். 2 ரகமும் சிறந்தது. ஒரு ஏக்கரில் இறைவையாக எள் சாகுபடிச் செய்ய 10 வண்டி தொழு எரு, 66கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 29 கிலோ யூரியா, 55 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவேண்டும். அத்துடன் ஏக்கருக்கு 2 கிலோ மாங்கனீஸ் சல்பேட்டையும் அடியுரமாக இட்டால் மகசூல் பெருகும். எள் சாகுபடிச் செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி ஆரம்பம் முதல் கடைசி வரை தெரிந்து கொள்ள ''தமிழரசு'' டிசம்பர் 1, 1970 இதழில் பக்கம் 35 முதல் 36—வரை படித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

வினா:—நான் தென்னம் பிள்ளை நட்டு 3 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் மண்டை வரவில்லை. வீட்டுத் தோட்டத்தில் வைத்திருக்கிறேன். என்ன உரம், எவ்வளவு வைக்க வேண்டும் ?

—டி. வீரமுத்து,
டி.என். பாளையம், புதுவை.

விடை:—தமிழ்நாடு வேளாண்மைத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட கலப்பு உரம் எண் 3-ல் (6:6:12) ஒவ்வொரு மரத்திற்கும் 3 முதல் 4 வயது வரை 1½ கிலோவும், 5 முதல் 6வயது வரை 3½ கிலோவும் 7 முதல் அதற்கு மேற்பட்ட வயதிற்கு 5 கிலோவும் இடவேண்டும்.

வினா:—''கருணை'' நெல்லும், ஐ. ஆர். 8 நெல்லும் பயிரிட விதைப்பது முதல் அறுவடைக் காலம் வரை நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சுருக்கமாகக் கூற வேண்டுகிறேன்.

—இ. சுப்பிரமணியன்,
திருமலையப்புரம்.

விடை:—தங்கள் வினாவிற்கு விடையளிக்கக் குறைந்தது 8 பக்கம் தேவைப்படும். முன்பே ''கருணை'', '' ஐ.ஆர். 8'' நெல். பற்றி வெளியிடப்பட்டுள்ளது. எனவே, கருணை நெல் சாகுபடி முறைப் பற்றி அறிய "தமிழரசு" ஜூன் 16, 1971 இதழையும், ஐ. ஆர். 8 நெல் சாகுபடிக்கு ''தமிழரசு'' ஜூலை 1, 1971 இதழையும், படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.



ஏன் இந்தக் காதல்?

"அந்தக் கதையைச் சொல்வதற்கு முன்னுலே இதைக்கொஞ்சம் தின்று விடுங்களேன்!''

—என்றவாறே தேன்மொழி எழுந்தாள்.

அங்கே கிடந்த 'டீபாயை'——சிறு மேசையை—அவன் எதிரே இழுத்துப் போட்டு, அதன் மீது இட்லி, சப்பாத்தி, பால், மூன்றும் அடங்கிய சிற்றுண்டித் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள்.

'' எனக்குப் பசியே, இல்லையே தேன்மொழி எப்படித் தின்பது?''

—அலுத்துக் கொண்டான் மாதவன்.

''பசி இருக்கிறதோ, இல்லையோ இரவிலே வெறும் வயிற்ரோடு படுக்கவே கூடாது என்று என் அப்பா அடிக்கடி சொல்வார். தயவு செய்து எனக்காக....''

—அவளது கெஞ்சும் குயிலோசை——கிறங்கும் மதுப்பார்வை——அவன் பிடிவாதத்தைக் கரையச் செய்துவிட்டன.

'' நீ சாப்பிட்டு விட்டாயா?'' —என்றுகேட்டான் மாதவன்.

''இன்னும் இல்லை ''

—புன்னகையினூடே பல்விடுக்கில் மென்று விழுங்கினுள் தேன்மொழி.

'' அப்போ என்னை மட்டும் ஏன் வற்புறுத்துகிருய்?''

'' இதற்கு மேலே நீ எப்போது சிற்றுண்டியைத் தின்பது? எப்போது தூங்கப் போவது? இன்றைக்குக் கடுமையாக '' டேபிள் டென்னிஸ்' வேறே ஆடி இருக்கிருய்; அதுவே உடம்பெங்கும் ஓரே அலுக்கையைக் கொடுக்காதா?''

'' எனக்கு அப்படியெல்லாம் எதுவுமே இல்லைங்க; உங்க பேச்சையே கேட்டுக் கொண்டு——உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டு——உங்கள் பக்கத்திலேயே இருக்கிறபோது அலுக்கையாவது——அசதியாவது —— பசியாவது——களைப்பாவது? ''

——சொல்லும் பொழுதே தேன்மொழியின் இதழ்கள் கொஞ்சின; இமைகள் கொஞ்சின ; அவளது பறங்கிப்பூ முகமே கொஞ்சியது.

மீண்டும் கட்டில் மெத்தையருகே சென்று மாதவனோடு ஒட்டி உட்கார்ந்தாள் அவள். தன் கைவிரல்களைப் பின்னிக் கொண்டு மலர்க்கரங்களையே மாலையாக்கி அவனது இடப்புறத் தோளிலே தொங்கவிட்டு அவன் பரந்த முகத்தையே ஆசை பொங்கப் பார்க்கவும் பார்த்தாள் அவள்.

சந்தடிகள் அடங்கிவிட்ட இரவின் அந்த நடுக்கண்டமான வேளையில் எங்கோ புகை வண்டி எழுப்பிச் செல்லும் ஓங்காரக் கூவல் தெளிவாக ஒலித்தது.

'' என்ன இருந்தாலும் தேன்மொழி! இனிமேலும் நீ உண்ணுமல் —— ஓய்வெடுக்காமல் —— விழித்துருப்பது உன் உடம்புக்கு ஆகாது. என் கதைக்கு என்ன? அதை எப்போது வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாம். அதோடு, எனக்கு வேறொரு யோசனையும் தோன்றுகிறது.''

'' எனக்கு வழக்கமாக இரவிலே சாப்பிட்ட உடனேயே கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்து விடும். இப்போது சிற்றுண்டியை உள்ளுக்குத் தள்ளினேனுனல், பிறகு நீங்கள் சொல்லப் போகிற கதையை என்னுலே கவனமா கருத்தா—— கேட்க முடியுமா என்கிற சந்தேகந்தான் ''.

"ஆமா, இப்போ மணி என்ன?"

'' பதினொன்றைத் தாண்டி விட்டது ''

9. மாதவனின் வேதனைக் கதை

அ. மறைமலையான்

—சிற்றுண்டித் தட்டில் கை வைத்த நிலையிலும் எங்கோ சிந்தனையில் ஆழ்ந்தவனாகக் கூறினான் மாதவன்.

'' என்னங்க, அது?''

''ம் .. ...சிலசமயம் நம் நெஞ்சில் சுரக்கின்ற நினைவு ஊற்றுக்களை வாயினுல் சொல்வதைவிட கையினுல் எழுத்திலே வடிக்கும் பொழுது அவைகளுக்கு என்று புது வடிவம்——புதுமெருகு——முழுமை—— நிறைவு ——எல்லாமே கிடைக்கலாம் இல்லையா? அதனுலே உனக்கு நான் எழுதியே கொடுத்துவிடுகிறேனே!''

''அதுவும் சரிதாங்க.''

'' அப்போ நீ உடனே உன் அறைக்குப் போய்த் தூங்கு.''

—மாதவனின் குரலில்தெறித்த அழுத்தம் தேன் மொழியை அங்கிருந்து விரட்டியே அடித்தது.

*   *   *   *   *

மறு நாள் காலை.

கதிரவனின் ஒளிக்கதிர்கள் சன்னல் வழியே அறையினுள் நுழைந்து தன் கன்னக் கதுப்பை வருடிய பிறகே தேன்மொழி படுக்கையை விட்டு எழுந்தாள்.

குளித்து முழுகிக் கூந்தலின் நுனியை முடிந்து போட்டுக்கொண்டு, இரண்டு நாட்களுக்கு முன்னர் வாங்கிய புதுவகையான மைசூர் பட்டுப் புடவையை யும், அதற்கு இணையான சோளியையும் அணிந்து கொண்டு, மாதவனைச் சந்திப்பதற்காக அவள் அறைக் கதவைத் திறப்பதற்கும், அவனே அவளை நோக்கி வருவதற்கும் சரியாக இருந்தது.

அவன் கையிலே நாட்குறிப்பு—'டயரி'— தென் பட்டது.

இருவருமே இதமான முறுவலுடன் இமைக்காத பார்வை விருந்தைப் பரிமாறித் திளைத்தனர்.

"என்னை முந்திக் கொண்டுவந்து விட்டீர்களே!"—என்று இதழ்களை அசைத்தாள் தேன் மொழி.

"என்னுடைய நண்பர் அமலன் என்பவர் இங்கே புகை வண்டி நிலையத்திலே அலுவல் பார்ப்பதாகச் சொன்னேன் இல்லையா? அவரைப் போய்ச்சந்திப்பதற்குத்தான் இவ்வளவு விரைவில் கிளம்பி விட்டேன். நான் திரும்பி வருவதற்குள்ளே நீ இந்த நாட்குறிப்பிலே நேற்றைய தேதிக்குக் கீழேநான்எழுதி இருப்பதைப் படித்துவிடு. வரட்டுமா?"

—என்று விடை பெற்றுச் சென்றான் மாதவன்.

அறைக் கதவைச் சாத்தி உள் தாழ் போட்டுக் கொண்ட தேன் மொழி சோபாவில் வந்து சாய்ந்த வாறே அவன் கொடுத்துச் சென்ற நாட்குறிப்பைப் பரபரப்பான உள்ளத்தோடே படிக்கத் தொடங்கினாள்.

*   *   *

"....இன்று கண்ணம்பாடி அணைக்கட்டிலே ஒரு கன்னடக் காரியைக் கண்டுவிட்டு அவளை 'அக்கா! அக்கா'—என்று நான் அழைத்துக் கொண்டு ஓடியதை யும்—அதனாலேயே அடி வாங்க நேர்ந்ததையும் — நினைக்கும் பொழுது என்மீதே எனக்குச் சிரிப்புத்தான் உண்டாகிறது.

என்னுடைய அந்தத் தடுமாற்றத்திற்கு—மனமயக்கத்திற்குப்—பின்னணி இல்லாமலும் இல்லை.

அதனை விளக்குவதற்கு முன்னர், நான் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளையும் சிறிது தொட்டுச் செல்வதே நல்லது.

தங்கத் தொட்டிலிலே தவழ்ந்து விளையாடி, வெள்ளிக் கரண்டியிலே பாலைப் பருகுகின்ற வாய்ப்பு எல்லாருக்குமா எளிதில் அமைகிறது? மண் தரையிலே உருண்டு புரண்டு, சாதாரண வெண்சங்கைக்கூடக் காணாத எத்தனையோ ஏழைப் பிள்ளைகள் நித்தம்நித்தம் செத்துப் பிறக்க வில்லையா? பிறந்தும் செத்திட வில்லையா? இந்த இரண்டாவது படுபாதாளத்திலேதான் நானும் பிறவியெடுத்தேன்.

நான் பிறந்த ஊர் என்று பெருமை பேசிக்கொள்ள முடியா விட்டாலும் என் முன்னோர்கள் வாழ்ந்து சலித்த என் சொந்த ஊரிலே என் அப்பா மட்டும் ஒரு விந்தையானமனிதர்; வேறுபட்ட தனிமரம்!

சித்தர்கள் பாடல்களையும், இராமலிங்க அடிகளின் திருவருட் பாவிலே ஆறுந்திருமுறையையும் இன்னும் சில ஞானிகளின் அமுத மொழிகளையும் கரைத்துக் குடித்துவிட்டு, அந்த 'அறிவுச் செருக்கிலே'— ஆலயங்களுக்கே போகமாட்டேன் என்று அடம்பிடித்தவர் அவர்; சிறு தெய்வ வணக்கத்தையெல்லாம் உதறித்தள்ளியவர் அவர்; அதே சமயம், மார்க்கோனி, மைக்கேல் பாரடே, தாமஸ் ஆல்வா எடிசன் முதலான விஞ்ஞானிகளின் படங்களையெல்லாம் எங்கோ நகரத்திற்குப் போய் வாங்கி வந்து அவற்றுக்குக் கண்ணாடி போட்டுச் சுவரிலே மாட்டி, பூமாலைகளும் சூட்டி அந்த வித்தகர்களை விழுந்து விழுந்து வணங்கியவரும் அவரே! சுருங்கச் சொன்னால் எங்கள் ஊரிலே முளைத்தெழுந்த முதல் பகுத்தறிவுப் பகலவன் என் அப்பாதான்!

தமக்குச் சரியென்றுபட்ட சீர் திருத்தத் தென்றலைத் தம்மைச் சுற்றி மட்டுமே அவர் தவழவிட்டுக் கொண்டு நின்றிருக்கக் கூடாதா? சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் நடைபெறும் அட்டூழியங்களைக் காணப் பொறுக்காமல், பேதமற்ற சமுதாயத்தைத் தோற்றுவிக்கத் துடித்த அவரது 'பெரிய உள்ளம்', தாழ்த்தப்பட்ட மக்கள் நெளியும் சேரிவரை அவரைக் கொண்டுபோய்த் தள்ளிற்று; அந்தத் தோழர் களைத் தம் வீட்டுக்கே அழைத்து வந்து விருந்துவைக்கும் அளவுக்கும் அது விரிந்துபோயிற்று.

அவருடைய புரட்சிப் போக்கு, சாதியென்னும் சப்பாத்திக் காட்டுக்குத் தங்களையே குத்தகைதாரர்கள் ஆக்கிக் கொண்டுவிட்ட எங்களூர்ப் 'பெரிய மனிதர்' களுக்கு எப்படிப் பிடிக்கும்? அதுவும் ஊர் நடுவிலேயே அந்தத் தாழ்த்தப்பட்ட தோழர்களைத் தலைநிமிர்ந்து நடக்கவைத்து விட்டார் என்றபோது அவர்கள் அடைந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை.

எனவே—

என் அப்பாவை ஒரு சிறைக் கைதியினும் கீழாகத் தனிமைப் படுத்தி ஒதுக்கி வைத்தனர்; அவரால் தெருவிலே நடக்க முடியாதபடி, கொச்சைமொழி களால் குத்திக் குத்திப் பேசினர்; உயிரோடு வைத்து அவரைக் கொலையே செய்தனர்; நாலைந்து பேராகக் கூடிக்கொண்டு குடித்து விட்டு வந்து அவர்மீது வேண்டுமென்றே விழுந்தனர்; கால் களைத் தட்டிவிட்டு அவரைத் தடுமாறி விழவும் வைத்தனர்; தோளிலே கிடந்த துண்டையும் உருவிக்கொண்டு பொல்லாத கேலியெல்லாம் புரிந்து அவரைப் புண் படுத்தியும் சிரித்தனர்.

எத்தனை நாழிகைக்குத்தான் அவரும் பொறுமைக் கடலாகத் தம்மை ஒடுக்கிக் கொண்டு —நாவை அடக்கிக்கொண்டு கிடக்க முடியும்? அவரும் ஆத்திரந் தாங்காமல் தம்மை வதைப்பவர்களை வசைபாடத் தொடங்கி விட்டார்.

அநியாயத்தையே நியாயமாகவும் அநீதியையே நீதியாகவும் சாதிக்கக் கூசாதவர்கள் தங்களுடைய கத்திக்குத்தை விட எதிரியின் குச்சிக்குத்து தானே பெரியது என்று பேசுவார்கள்?

எனவே என் அப்பா திட்டிய தையே செய்யக் கூடாத குற்ற மாக்கி அவரை ஓர் ஆலமரத்தின் விழுதிலே கட்டி வைத்துத் திருக்கை வாலினாலேயே அடி அடி யென்று அடித்திருக்கிறார்கள் ; முகத்திலே காறிக்காறி உமிழ்ந் திருக்கிறார்கள் ; காலணிகளாலும் அவரது மேனியைப் பதம் பார்த் திருக்கிறார்கள்.

ஏதன்சு நகர இளைஞர் களிடையே அறிவொளியைப் பாய்ச்சினார் என்னும் ஒரே குற்றத்திற்காக நாடாண்டவர் களிடம் நச்சுக்கோப்பையையே பரிசாகப் பெற்றாரே சாக்ரட்டீஸ். அந்த ஒருவரைப் பற்றித்தான் இந்த உலகம் இன்று அறிந்து வைத்திருக்கிறது. ஆனால், இந்தத் தமிழ் மண்ணிலே சாதி வெறியர்கள் சாட்டையடி களுக்கு — சவுக்கடிகளுக்கு — இரையாகி எத்தனைபேர் ஊர்— பேர் தெரியாத 'சாக்ரட்டீசுகள்' எல்லாரும் உயிரைக் கொடுத் திருக்கிறார்கள் தெரியுமா ? அவமானத்தை — அபாண்டப் பழியைத்— தாங்கவே முடியா மல் சவமாகிச் சாம்பலாகி யிருக்கிறார்கள் தெரியுமா ?

பழைமைவாதிகளின் அகங்கார வெறிக்கு — அகோரப்பசிக்கு — உணவான அந்த அப்பாவிகளின் பட்டியலிலேதான் இறுதியிலே என்னுடைய அப்பாவுக்கும் இடம் கிடைத்தது.

ஆம்; ஆலமர விழுதோடு 'சேர்த்து அடிபட்ட அவர் நெடுநாட்கள் உயிரோடு வாழ வில்லை.

அவர் இறந்த பொழுது என் அக்காள் வள்ளியம்மைக்கு இரண்டு வயது ; நானோ என் அம்மாவின் வயிற்றில்.

எங்கள் சிற்றூருக்குப் பதினைந்து கல் தொலைவில் ஒரு பெரிய நகரம். அங்கே என் அப்பாவுடன் நெருங்கிப் பழகிய 'உபதேசியார்' கிறித்துவ ஒருவர் வாழ்ந்து கொண்டிருந் தார். தம் நண்பர் இறந்துவிட்ட செய்தி அவருக்கு எப்படியோ எட்டியிருக்கிறது. உடனே துக்கம் கேட்பதற்காக எங்கள் சிற்றூருக்கு அவர் வந்திருக் கிறார். எங்களுடைய குடும்பம் ஒதுக்கப்பட்டு — ஒடுக்கப்பட்டு துயரப்படும் அவநிலையை அறிந்து கொண்ட அவர், பிள்ளைப்பேற்றுக் காகவாவது தம்மோடு நகரத் திற்கு வருமாறு என் அன்னையை வற்புறுத்தி அழைத்திருக்கிறார். அண்டை அயலில் உள்ளவர்கள் எல்லாரும் பகைவர்களாகிவிட்ட பிறகு, அவர்களிடமிருந்து எத்த கைய இரக்கத்தையும் எதிர் பார்க்க முடியாது என்று தெரிந்து கொண்டுவிட்ட என் அம்மா, அந்த உபதேசியார் சொற்படியே என் அக்காளைக் கூட்டிக்கொண்டு நகரத்திற்கு வந்துவிட்டார்.

கணவனைப் பிரிந்த அதிர்ச்சி யைத் தாங்கமுடியாமல் சாவைத் தழுவுவது பற்றியே எந்நேரமும் ஆவலை வளர்த்துக்கொண்டிருந்த ஒரு தாய்க்கு நானும் ஒரு தேவை யில்லாத பிறவியாகவே அப் போது வந்து பிறந்தேன்.

அந்த 'உபதேசியார்'— கிழவர் மிகவும் தங்கமானவர். என் தாயைத்தம் சொந்த மகளைப் போலவே கவனித்துக் கொண்டார். நானும் என் அக்காளும் எந்தக் குறையும் இல்லாமல் வளர்வதற்கான ஏற் பாடுகளையெல்லாம் செய்தார். அவரைப் போன்ற ஒரு கருணைக் கடவுளை இதுவரை நான் கண்டதே இல்லை.

'கருணை வாழும் உள்ளம்—அது கடவுள் வாழும் இல்லம்.'

—என்னும் கவிஞர் கண்ணதாச னின் திரைப்படப்பாடல் என் காதில் வந்து மோதும்போதெல் லாம், நான் அந்த உபதேசி யாரைத்தான் இன்றும் நினைத்துக் கொள்கிறேன்.

ஐந்து ஆண்டுகள் ஆவியாகப் பறந்து சென்றன.

கால மாறுதல் என்னும் தென்றல் காற்று பகுத்தறிவு என்னும் மணத்தை—குளிர்ச்சி யைச்—சுமந்து கொண்டு எங்கள் ஊரிலும் வேகமாக வீசத் தொடங்கிவிட்டது.

தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர்ந்து நடைபோடக் இளம்பி விட்டனர். அதுவும், தங்களால் அவமானப்பட்ட என் தந்தையின் இறப்பே அவர்கள் இதயங்களில் மாபெரும் எழுச்சித் தீயை மூட்டியிருக்கிறது.

உயர்ந்த சாதிக்காரர்களிடம் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள முற்பட்ட அவர்கள், எங்களுக்குச் சொந்தமான நில புலன்களையெல்லாம் யார்யாரோ அனுபவித்துக் கொண்டிருந்ததை யெல்லாம் தடுத்து நிறுத்து வதிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

பிறகு நகரத்திற்கு வந்து என் அம்மாவை ஊரோடு வந்துவிடுமாறு அழைத்திருக் கின்றனர்.

உபதேசியாரும் இசைவுதரவே என் அம்மா ஊருக்குப் போய்ச் சேர்ந்தார் என் அக்காளைக் கூட்டிக்கொண்டு. ஆனால் என்னை மட்டும் அனுப்புவதற்கு மறுத்து விட்டார் உபதேசியார். எனக்குக் கல்விச் செல்வத்தை வழங்கி என்னைப் பெரிய மனிதன் ஆக்கி விட வேண்டும் என்னும் அவரது பேரார்வமே அதற்குக் காரணம்.

படிக்கும் பொருட்டு நகரத் திலேயே நான் தங்க நேர்ந்த போதிலும் விடுமுறை நாட்களில் நான் தவறாமல் எங்கள் ஊருக்குச் செல்வேன். என் அருமைத் தமக் கையோடு விளையாடிக் களிப் பேன்.

பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.

தி என்பீல்டு இந்தியா லிமிடெட்
சென்னை-19

நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:



மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சார நிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

கட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லிக்கோ வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்சுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க ... உயர்தரமான வெள்ளைக் களிமண் ...

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக அமிலம், ஆர்த்தோ கிரிஸால, மற்றும் எம் பி கிரிஸால், சைலினல், பாலிவாலெண்ட் பினால்கள்.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி 1

நான் அப்படி என் தாயையும் தமக்கையையும் காணப்போகும் பொழுதெல்லாம், நான் அவர்களுக்குக் கொண்டு செல்லக் கூடிய பரிசுகள் என்ன தெரியுமா?

உபதேசியார்—கிழவர் உவப்போடு வாங்கிக் கொடுக்கும் ஆறு சாத்துக்குடி அல்லது கமலா ஆரஞ்சுகள், இரண்டு ரொட்டிப் பொட்டலங்கள், மூன்று முழத்தில் மல்லிகை அல்லது கதம்பச் சரம்!

அந்தப் பூச்சரங்களையோ நானேதான் என் பிஞ்சுக்கைகளால் என் அக்காவின் தலையிலே பாசத்தோடு சூட்டி விடுவேன்.

சின்ன வயதிலிருந்தே என் அக்காளின் கைகளில் எப்போதுமே சொறி பிடித்திருக்கும்; அல்லது கட்டி வந்திருக்கும்.

அதனால் தான் நான் அதற்குப் பூச்சூட்டி விடுகின்ற பழக்கம் முதன் முதல் உண்டாயிற்று; அதுவே பிறகு வழக்கமான செயலாக—வாஞ்சையின் அடையாளமாக—வளரலாயிற்று.

எனக்கு ஏன் பொசுக்கென்று கோபம் வந்துவிடுகிறது தெரியுமா? நான் இந்திய மக்களிடமிருந்து பெரிய சாதனைகளை எதிர்பார்க்கிறேன். அவர்கள் திறமையில் எனக்கு அபார நம்பிக்கை உண்டு. பணிகள் விரைவாக நடக்கவேண்டும்; நாடு விரைவில் வளர்ச்சியடைய வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறேன். எவராவது மந்தமாக நடந்துகொண்டால் என்னையும் மீறி எனக்குக் கோபம் வந்துவிடுகிறது. ஆனல், அவர்கள் நண்பர்கள், தோழர்கள் என்ற உணர்ச்சி என்னை உரிமையுடன் கோபம் கொள்ளச் செய்கிறது.

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது எனக்காக வேருெரு ஏற்பாடு செய்து விட்டார் உபதேசியார். தமக்குத் தள்ளாமை மிகுதியாகி விட்டதால் தம்மை நம்பியே நான் எந்தக் காலமும் இருக்கக் கூடாது என்கிற எண்ணம் வந்துவிட்டது போலும் அவருக்கு. தமது செல்வாக்கைப் பயன்படுத்திப் பள்ளிக் கூடத்தோடு ஏழைப்பிள்ளைகளுக்கு உணவு-உடை-எல்லாம் இலவசமாக அளிக்கக் கூடிய ஒரு கல்வி நிலையத்திலே என்னைச் சேர்த்துவிட்டுவிட்டார். எனினும் மாதந்தோறும் என்கைச் செலவுக்கு என்று சிறிது பணம் அனுப்பவும் அவர் தவறவில்லை.

அந்தப் பணத்திலும் நான் கொஞ்சம் மிச்சப் படுத்தி விடுவேன். விடுமுறை வந்ததும், என் அக்காளுக்கென்று பூ, பழம் எல்லாம் வழக்கம் போல் வாங்கிக் கொண்டு செல்வேன்.

நான் பள்ளி இறுதி வகுப்பிலே அடிவைக்கப் போகும் சமயம் ஒரு திடுக்கிடும் விபத்து ஏற்பட்டது என் அக்காளுக்கு. பசுங் கன்றுக்குப் புல் பறிக்கப் போயிருந்த இடத்தில் அதைப் 'புடையன் பாம்பு' கடித்து விட்டதாம்! நல்ல வேளையாகச் சாவிலிருந்து தப்பி விட்டது என் அக்கா.

உயர் நிலைப் பள்ளிப் படிப்பின் இறுதியில் தேர்வுகள் முடியுந்தறுவாயில் என்னை வளர்த்து ஆளாக்கிய உபதேசியாருக்கு ஒரு 'யோகம்' அடித்தது; அந்த யோகத்தின் குளிர் நிழல் என் மீதும் குடை விரித்தது.

உபதேசியாரின் சமயத் தொண்டைக் கண்டு உள்ளம் பறிகொடுத்த சுவீடன் நாட்டுப் பாதிரியார் ஒருவர், தம்முடைய விருந்தினராகத் தம் நாட்டுக்குத் தம்முடைய செலவிலேயே அவரை அழைத்திருந்தார். தமது முதுமையை முன்னிட்டுத் துணைக்கு என்னையும் கூட்டிக் கொண்டு செல்வதற்குப் பாதிரியாரிடம் அனுமதி கேட்டார் உபதேசியார். பெருந்தன்மை மிக்க அந்தப் பாதிரியார் என்னுடைய பயணத்திற்கும் ஏற்பாடு செய்து விட்டார்.

உலக இயக்கத்தில் இந்தியா ஓர் அங்கமாகவே விளங்குகிறது. நம் முன்பு நமது பிரச்சினைகள் இருக்கின்றன என்பது உண்மைதான்! ஆனல், உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் புறக்கணித்து நாம் வாளாவிருக்க முடியாது. அப்படி நாம் செய்தால் அது நம் அழிவிலேதான் முடியும். நாகரிகம் என்பது எல்லா நாடுகளும் சேர்ந்தேதான் உருவாக்கியது. இந்தியா பிற நாடுகளுக்கு வழி காட்ட முடியும் என்ருல், அது பிற நாடுகளிடமிருந்தும் சில படிப்பினைகளைத் தெரிந்து கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

—நேரு

ஏறத்தாழ ஓராண்டுக் காலம் சுவீடன் நாட்டிலேயே எனக்கு இன்பமாக பொழுது கழிந்தது. பசுமையான மரங்களும், பாலாடை போன்ற பனிப் படலங்களும், கவினழகுமிளிரும் கலைச் செல்வங்களும், விட்டுக் கொடுத்து ஒப்புரவோடு வாழ்கின்ற அந்நாட்டு மக்களின் உயரிய பண்பாடும் என் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன.

அங்கிருந்து உபதேசியாருடன் நான் தமிழகத்திற்குத் திரும்பி, எங்கள் சிற்றூருக்குச் சென்ற போதோ—

எங்கள் வீட்டிலே நான் கண்ட காட்சி என் இதயத்தை அப்படியே இடிந்து நொறுங்கிச் சிதையச் செய்தது!

என் கையிலிருந்த பூச்சரமோ என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது!

"அக்கா! அக்கா!"—என்று நான் கதறிக் கதறி அழுதேன்.

(வளரும்)

"முந்திரி நாள்"

(சிறப்புப் பகுதி)

சத்தற்ற சாமானிய நிலத்தில் சாகுபடி
செய்யப்படுவது முந்திரி. சாமானிய நிலத்
தில் சாகுபடி செய்யப்படுவது தான் என்று
லும், ஆண்டு தோறும், இந்தியாவிற்குப் பல
கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித்
தருவதில் முந்தி நிற்பது முந்திரியே! ஆனால்
முந்திரிச் சாகுபடி செய்துவரும் உழவர்கள் சராசரி
யாக ஒரு ஏக்கரிலிருந்து பெறும் மகசூல் ஒரு மூட்டைக்
கும் (80 கிலோ) குறைவாகவே உள்ளது! இந்தக் குறைந்த
மகசூலைக் கொண்டு வாழ்வை நடத்திவரும் உழவர்கள்
தமிழ்நாட்டில் ஏராளம்! ஏராளம்! சமுதாயத்தின் அடித்
தளத்தில் உள்ள சாமானிய மக்களின் வாழ்வை வளப்படுத்திச்
சமதர்ம சமுதாயம் அமைக்க விழையும் தமிழ்நாடு அரசு, முந்திரி
உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழி முறைகளை உழவர்
களிடையே பரப்புவதற்காக ஆண்டு தோறும் முந்திரி நாள் (Cashew
Day) விழா நடத்தி வருகிறது. முந்திரித் தோப்பில் ஊடு உழவு செய்தல்,
உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்புச் செய்தல் ஆகியவைகளின் மூலம், முந்திரி
உற்பத்தியை மும்மடங்கிற்கும் மேலாக உயர்த்த முடிகிறது. இம் முறைகளை
முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களிடையே பரப்புவதற்காகவும் முந்திரிச்
சாகுபடி செய்ய அரசு அளிக்கும் உதவிகளை விளக்கிடுவதற்காகவும், மேலும்
புதிதாக முந்திரித் தோப்புகளை ஏற்படுத்தி முந்திரி உற்பத்தியைப் பெருக்க
வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்துவதற்காகவும், இந்த ஆண்டில்
தென்னார்க்காடு, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில்
மூன்று இடங்களில் "முந்திரி நாள்" விழாக் கொண்டாடத் தமிழ்நாடு
அரசு ரூபாய் 1,500 நிதி வழங்கியுள்ளது. அவ் விழாக்களை போட்டி,
இச் சிறப்புப் பகுதியைச் சாமானிய மக்களின் வாழ்வை வளப்படுத்து
வதற்கு வழிகாட்டிவரும் "தமிழரசு" பெருமையுடன் அளிக்கிறது.

முந்திரி பேசுகிறது!



"என் தாயகம் தென் அமெரிக்கா. நான் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் குடியேறினேன். போர்த்துக்கீசியர்கள் என்னைத் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரத்தில் மண்ணரிப்பைத் தடுப்பதற்காகப் பயிரிட்டனர்.

எந்தப் பயிரும் சாகுபடி செய்ய முடியாத, சத்தற்ற, சாமானிய நிலத்திலும்—வறட்சி வாட்டிய போதிலும்— நான் நன்கு வளர்ந்து மகசூல் தருவதால், உழவர்கள் என்னை மிகவும் விரும்பிப் பயிரிட ஆரம்பித்தனர். அதனால் நான் இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரங்களிலும், கிழக்குக் கடற்கரையோரங்களிலும் பெருமளவில் பரவியுள்ளேன்.

பொதுவாகப் பழங்களின் உள்ளேதான் கொட்டை இருக்கும். ஆனால் நான் தரும் பழத்தில் கொட்டை வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். இந்த அமைப்பைக்கண்ட இந்திய மக்கள் வியப்புற்றனர்! அதுமட்டுமா? எதிலும் முந்திக் கொண்டு பேசுகின்றவர்களை "முந்திரிக் கொட்டை" என்றே அழைக்க ஆரம்பித்தனர்.

நான் தரும் பழத்தில் வைட்டமின் "சி" சத்து நிறைந்துள்ளது. பழச் சாற்றிலிருந்து ஒயின்கார், ஊறுகாய், பழப்பாகு (ஜாம்), சர்பத், மற்றும் 'பெனி' போன்ற பானங்கள் தயாரிக்கலாம்.

சிப்பியின் உள்ளே முத்து இருப்பதுபோல, முந்திரிக் கொட்டையின் உள்ளே முந்திரிப் பருப்பு உள்ளது. இது சுவையும், மணமும் கொண்டிருப்பதுடன் மிகுந்த ஊட்டச் சத்துக்களைக் கொண்டுள்ளது. முந்திரிப் பருப்புகளில் மாவுப் பொருள் (Carbohydrates), கொழுப்புச் சத்து (Fats) காரத்தன்மை (Alkalinity) ஆகியவை குறைந்த அளவிலேயே இருப்பதால் உலகெங்கிலும் முந்திரிப் பருப்புக்கே பெருஞ் சிறப்பு உண்டு. முந்திரிப் பருப்பில் குறிப்பிடத் தகுந்த அளவில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து, வைட்டமின் "ஏ", வைட்டமின் "பி" ஆகியவைகள் உள்ளன. இப்பருப்பு பச்சையாகவோ, வறுத்தோ, உப்பிட்டோ அல்லது சர்க்கரை சேர்த்தோ சிறந்த சிற்றுண்டியாக உலகெங்கணும் உண்ணப்படுகிறது. ரொட்டி, கேக் முதலியவைகளின் தயாரிப்பில் மணம் கூட்டும் பொருளாகவும் முந்திரிப் பருப்புகள் உபயோகமாகின்றன.

எனது ஓடுகளிலிருந்து ஒரு வித எண்ணெய் எடுக்கலாம். இந்த எண்ணெய் பல்வேறு வகைகளில் பயன்படுகிறது. தண்ணீரினால் ஏற்படும் சேதத்தைத் தடுக்கும் பொருளாகவும் (Water-proofing agent) படகுகள், மீன்வலைகள், மரச் சாமான்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருளாகவும் (preservative) பயன்படுகிறது. இந்த எண்ணெய்யிலிருந்து செயற்கைப் பிசின்கள் (Synthetic Resins) தயாரிக்கப்படுகின்றன. இப்பிசின்கள் "பெயிண்ட்" மற்றும் பிளாஸ்டிக் தொழில்களில் மூலப் பொருளாகப் பயன்படுகின்றன.

பல்வேறு வகைகளில் பயன்படும் நான், இந்தியாவின் அயல் நாட்டு வாணிபத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளேன். உலகத்தின் முந்திரிப் பருப்புத் தேவையில் 84 சதவீதத்தை இந்தியாவே வழங்கி வருவதால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் எனக்குப் பெரும் பங்குண்டு என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவிலிருந்து முதன் முதலாக 1923-ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 45டன் முந்திரிப்பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் பின், முந்திரிப் பருப்பு ஏற்றுமதி ஆண்டிற்காண்டு பெருகி வருகிறது. 1968—69-ஆம் ஆண்டில் முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்த வகையில் 60.9 கோடி ரூபாயும், முந்திரி ஓடு எண்ணெய் ஏற்றுமதி செய்ததன் மூலம் 1.23 கோடி ரூபாயும் கிடைத்துள்ளது. ஆக மொத்தம் 62.13 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி இந்தியாவிற்கு என்னால் கிடைத்துள்ளது.

இந்தியாவில் உற்பத்தியாகும் முந்திரிப் பருப்பின் அளவு உலகத்தின் தேவையை ஈடு செய்ய முடியாத அளவுக்கு இருப்பதால், இந்தியா ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள முந்திரிக் கொட்டைகளைக் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வரவழைத்து, அவைகளை நம் நாட்டுத் தொழிற்சாலைகளில் உடைத்துப் பதப்படுத்தி மீண்டும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறது. இவ்வாறு முந்திரிக் கொட்டைகளை இறக்குமதி செய்வதனால் நமது நாட்டிற்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி பாதியாகக் குறைந்து விடுகிறது.

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், 1969—70-ஆம் ஆண்டில் 60,627 டன் முந்திரிப் பருப்பும், 8,644 டன் முந்திரி ஓடு எண்ணெய்யும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதால், இந்தியாவிற்கு 58·44 கோடி ரூபாய் கிடைத்தது. ஆனால் அந்த ஆண்டில் டான்சானியா, கென்யா, மற்றும் இதர கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து 27·60 கோடி ரூபாய் மதிப்புள்ள, 1,63,426 டன் முந்திரிக் கொட்டைகளை இறக்குமதி செய்துள்ளது இந்தியா. இதனால் இந்தியாவிற்குக் கிடைத்த நிகர அந்நியச் செலாவணி 30·84 கோடி ரூபாயாகக் குறைந்து விடுகிறது. எனவே இந்த இழப்பைத் தவிர்க்க நம் நாட்டிலேயே முந்திரிப்பருப்பு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாகிறது.

அடுத்து டான்சானியா, கென்யா, மற்றும் இதர கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலேயே தற்பொழுது முந்திரிக் கொட்டைகளை உடைத்துப் பதப்படுத்தும் நிலையங்கள் துவக்கப்பட்டு வருவதால், அந்த நாடுகள் தற்பொழுது இந்தியாவிற்கு முந்திரிக் கொட்டைகளை வழங்குவதில் சுணக்கம் காட்டுகின்றன. அத்துடன் அந்த நாடுகளே இந்தியாவிற்குப் போட்டியாக முந்திரிப் பருப்பு வியாபாரத்தில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றன. இதனாலும் இந்தியாவின் முந்திரிப் பருப்பு ஏற்றுமதி குறைந்து வருகிறது. சோவியத் ரஷ்யா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பிரான்சு யூகோஸ்லேவியா, முதலிய நாடுகள் இந்தியாவிலிருந்து முந்திரிப் பருப்பு இறக்குமதி செய்யும் அளவைக் குறைத்துக் கொண்டுள்ளன. இதற்கு, முற்கூறப்பட்டுள்ள நாடுகளின் போட்டியும் மூல காரணமாக இருக்கிறது.

முந்திரி எண்ணெய் தந்திடும் பெரும் பயன்



நான் சொல்லுவதை நீங்கள் நம்பாமல் இருக்கலாம். ஏற்றுமதி செய்யப்பட்ட புள்ளி விவரங்களைத் தயவு செய்து படித்துப் பாருங்கள். அப்போதாவது நான் சொல்லுவது உண்மையென்று நம்புவீர்கள்.

50 நாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதியாகிறது

1970—71-ஆம் ஆண்டில் வெளி நாடுகளுக்கு 52·02 கோடி ரூபாய் மதிப்புள்ள 50,292 டன் முந்திரிப் பருப்புகளையும், 78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஓடு எண்ணெய்யும் ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியாவிற்கு மொத்தத்தில் 52·80 கோடி ரூபாய்தான் கிடைத்துள்ளது. முந்திரிப் பருப்பு மற்றும் முந்திரி ஓடு எண்ணெய் வியாபாரம் மூலம் 1968—69-ஆம் ஆண்டில் 62·13 கோடி ரூபாயாக இருந்த வருவாய், 1969—70-ஆம் ஆண்டில் 58·44 கோடி ரூபாயாகக் குறைந்து, 1970—71 ஆம் ஆண்டில் மேலும் குறைந்து 52·80 கோடி ரூபாய் மட்டுமே கிடைத்துள்ளது.

எனவே, இதே நிலை நீடிக்க விடக்கூடாது. இதைத் தவிர்க்க

இந்திய முந்திரிக்கு எங்கும் சிறப்பு

வேண்டுமானால், இந்தியாவில் முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது உங்களுடைய தலையாய கடமை என்று வலியுறுத்த விரும்புகிறேன். முந்திரி உற்பத்தியைப் பெருக்கத் தமிழ்நாடு அரசும், இந்திய அரசும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றன. அந்த உதவிகளையெல்லாம் பயன்படுத்தி முந்திரிப்பருப்பு உற்பத்தியையும், முந்திரி ஓடு எண்ணெய் உற்பத்தியையும் பெருக்கிட முன்வர வேண்டுமென்று உழவர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

முந்திரி உற்பத்தி பெருகினால், உங்கள் வருவாய் அதிகமாகும். அதே நேரத்தில் இந்தியாவிற்குத் தேவையான அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

யாரோ ஒருவர் இதற்கு என்ன செய்வதென்று கேட்பது என் காதில் விழுகிறது. தற்பொழுதுள்ள தோட்டங்களில் உழவு செய்தல், உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்புச் செய்தல் ஆகியவைகளை மேற்கொள்ளுங்கள் என்றும் மேலும் புதிதாக முந்திரித் தோப்புகளைத் தரமான முந்திரிக் கொட்டைகள் அல்லது விண்பதியங்கள் கொண்டு ஏற்படுத்துங்கள். இவைகளே முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழி வகைகளாம்.

இம்முறைகளை மேற்கொண்டு முந்திரி உற்பத்தியைப்பெருக்கிட முன்வாருங்கள் என்று மீண்டும் அன்புடன் வேண்டிக் கொண்டு விடை பெறுகின்றேன்.

வணக்கம்..."

பல்வேறு வகை மண்ணிலும், பல்வேறு பருவ நிலையிலும் பயிரிடுவதற்கு ஏற்றதாக முந்திரி இருப்பதனாலேயே முந்திரிச் சாகுபடி செய்யும் பரப்பு, தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் அதிகமாகி வருகிறது. தமிழ் நாட்டில் 1951–52-ஆம் ஆண்டில் முந்திரி சாகுபடியாகிய பரப்பு 27,000 ஏக்நர்கள் தான்! ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் சற்றேறக்குறைய 1,77,000 ஏக்கர்களில் முந்திரி சாகுபடியாகிறது. நான்காவது திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் 26,000 ஏக்கர்களில் புதிதாக முந்திரி பயிரிடத் திட்டமிட்டு, அதைச் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.

முந்திரிச் சாகுபடியாகும் பரப்பை மேலும் விரிவு படுத்தத் தமிழ் நாட்டில் பெரும் வாய்ப்பு உள்ளது. கடலோரப்பகுதிகளிலும், கடலிலிருந்து சுமார் 60 முதல் 70 மைல் தூரம் வரை உள்ள பகுதிகளிலும் முந்திரிச் சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் இருப்பதால், அப்பகுதிகளை முந்திரி பயிரிடப் பயன்படுத்தலாம்.

முந்திரிச் சாகுபடி செய்யத் தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகள்.

1. புதிதாக முந்திரித் தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை மூலம் ஏக்கருக்கு ரூபாய் 150 (முதல் தவணை ரூபாய் 100; இரண்டாம் தவணை ரூபாய் 50). வீதம், தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 3,000 வரை நீண்ட காலக் கடன் (Long term loan) கொடுக்கப் படுகிறது. இக்கடனை முந்திரி நட்ட 6-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கொரு தவணை வீதம் 5 தவணைகளில் 5½ சத வட்டியுடன் சேர்த்துத் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் ஊராட்சி மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கோயில்கள் ஆகியவைகளுக்கும் வழங்கப் படுகிறது.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும், முந்திரி-தென்னை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், முந்திரி, தென்னை பயிரிடுவதற்காக ஏக்கருக்கு ரூபாய் 370 வீதம் தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 3,500 வரை நீண்டகாலக்கடன் வழங்கப்படுகிறது.

3. விதைகளாகப் பயன் படுத்துவதற்காகத் தரமான முந்திரிக் கொட்டைகளைத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது.

4. பூச்சி, பூஞ்சாள மருந்துகளை 15 சத மானிய விலையில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது.

5. முந்திரித் தோப்பில் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்வதற்காகத் தெளிப்பான்களும் (Sprayers) தூவான்களும் (Dusters) பாதி விலையில் தனிப்பட்ட உழவர்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் வழங்கப் படுகின்றன. அது போலவே ஊராட்சி மன்றங்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் சலுகை விலையில் தெளிப்பான்களும் தூவான்களும் வழங்கப்படுகின்றன.

6. முந்திரி மரங்களுக்கு மருந்து தெளிப்பதற்குத் தேவையான தெளிப்பான்களையும் தூவான்களையும் குறைந்த வாடகைக்கு வேளாண்மைத் துறை கொடுத்து உதவுகிறது. அது போலவே ஊராட்சி ஒன்றியங்களும் கொடுத்து உதவுகின்றன.

மேற்கூறிய உதவிகளைப் பயன்படுத்திப், புதிதாக முந்திரித் தோப்புகளை ஏற்படுத்தி, முந்திரி உற்பத்தியைப் பெருக்குமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மகசூலைப் பெருக்குவதற்குரிய வழிமுறைகள்

முந்திரி உற்பத்தியைப் பெருக்க முந்திரிச் சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்துவதுடன் தற்போதுள்ள முந்திரி மரங்களின் காய்க்கும் தன்மையையும் அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், தற்போதுள்ள முந்திரி மரங்களின் காய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது. பெரும்பாலான முந்திரித் தோப்புகளில், ஒவ்வொரு மரமும் ஆண்டிற்கு 1 கிலோ முந்திரிக் கொட்டை என்ற அளவில்தான் மகசூல் கொடுக்கிறது.

நன்கு பராமரித்து வந்தால், தனியொரு முந்திரி மரமே ஆண்டிற்கு 80 கிலோ முந்திரிக் கொட்டைகளைக் கொடுக்கும் என்பது சோதனைகளின் மூலம் தெளிவாகியுள்ளது. ஏக்கருக்குச் சராசரியாக 80 கிலோ முந்திரிக் கொட்டைகளைப் பெற்றுவரும் உழவர்கள், ஒரு முந்திரி மரத்திலிருந்தே 80 கிலோ முந்திரிக் கொட்டைகள் பெற முடியும் என்பதை நினைவில் கொண்டு பழைய முந்திரித் தோப்புகளைக் கவனிப்பதில் பராமுகமாக இருக்காமல், நன்கு பராமரிக்க முன்வர வேண்டும்.

முந்திரிச் சாகுபடிக் குறிப்புகள்

மண் அமைப்பு—

முந்திரிச் சாகுபடி செய்வதற்குச் செம்மண், சரளை கலந்த செம்மண், மணற்பாங்கான நிலம் மிகவும் ஏற்றது.

மண் ஆழமாகவும், ஒரே சீராகவும், ஈரப் பிடிப்புள்ளதாகவும் இருக்க வேண்டும். மண் கண்டம் 4 அடிக்குக் குறையாமல் 6 அடி ஆழம் வரை இருக்க வேண்டும்.

களி மண், உவர் மண், களர் மண் முந்திரிச் சாகுபடிக்கு ஏற்றதல்ல.

நிலத்தைச் சீர்திருத்துதல்—

முந்திரிச் சாகுபடி செய்யவிருக்கும் நிலத்திலுள்ள செடிகள், கொடிகள், முட்புதர்கள், மரங்கள் ஆகியவைகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

சரிவான நிலங்களில் மண்ணரிப்பைத் தடுப்பதற்குச் சமமட்ட வரப்புகளை அமைக்க வேண்டும்.

முந்திரித்தோப்பில் சுலபமாக வேலை செய்வதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் ஏற்றவாறு நிலத்தை 5 அல்லது 10 ஏக்கர் துண்டுகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும்.

ஆடு, மாடுகளாலும், இதர விலங்குகளாலும் சேதமுறாவண்ணம் இருக்க முந்திரித் தோப்பு அமைக்க விருக்கும் நிலத்தைச் சுற்றி வேலி அமைத்தல் வேண்டும். வேலிச் செடிகளை வளர்த்து உயிர் வேலி அமைத்தல் சிறந்தது.

இடைவெளி விடுதல்—

முந்திரி பயிரிடச் செடிக்குச் செடியும் வரிசைக்கு வரிசையும் 22 அடி இடை வெளி விடுதல் நல்லது.

மண்வளத்தையும், ஆழத்தையும் பொறுத்து 20 முதல் 50 அடி வரையும் செடிக்குச் செடி இடைவெளி தேவைப்படும்.

முந்திரி பயிரிட முதலில் 12 அடி×12 அடி அல்லது 15 அடி× 15 அடி இடைவெளியில் நட்டு சுமார் 10 முதல் 12 ஆண்டுகளில் மரங்களின் வளர்ச்சிக்குத் தக்கவாறு 24 அடி அல்லது 30 அடி இடைவெளிவிட்டு, ஊடேயுள்ள மரங்களைவெட்டி விடுவது நல்லது. இதனால் ஆரம்பக் காலத்தில், அதிக எண்ணிக்கையுள்ள மரங்களிருப்பதனால், அதிகமகசூல் கிடைக்கும். ஆரம்பக் காலத்தில் அதிக இடைவெளி தேவையில்லாததாலும், அதன் பின் அதிக இடைவெளி தேவைப்படுவதாலும், இம்முறையை மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு ஏக்கரிலிருந்தும் அதிக அளவு மகசூல் அடைய முடியும்.



குழி எடுத்தல்

முந்திரி நடுவதற்கு முன்பே 1½ அடி × 1½ அடி × 1½ அடி அளவுள்ள குழிகளை வெட்டி ஆறவிட வேண்டும். 22 அடி × 22 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 82 குழிகள் தோண்ட வேண்டும்.

குழிகளினின்று எடுத்த மண்ணுடன் குழிக்கு ஒரு கூடை வீதம் நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட்டு எருவைச் சாம்பலுடன் கலந்து போட வேண்டும். இவ்வாறு செய்தால் முந்திரிக் கொட்டைகள் நன்கு முளைத்து, வேர் விட்டு வளரப் பயன்படும்.

விதை அல்லது கன்று நடுதல் :—

வேளாண்மைத்துறை வழங்கும் விதைகளையே உபயோகிக்க வேண்டும். ஒரு கிலோ எடையில் நன்கு முதிர்ந்த முந்திரிக் கொட்டைகள் 125 இருப்பின், அவை நல்ல விதைகளாகக் கருதப்படும். ஏக்கருக்கு 1½ கிலோ விதை தேவைப்படும்.

முந்திரிக் கொட்டைகளைக் குழிகளில் நடுவதற்கு முன்பு, தண்ணீரிலோ அல்லது சாணப் பாலிலோ 24 மணி நேரம் ஊற வைப்பதால், சீக்கிரம் முளைக்கும்.

குழிக்கு 2 அல்லது 3 முந்திரிக் கொட்டைகளை ஆவணி, புரட்டாசி மாதங்களில் ஊன்ற வேண்டும்.

விதையின் காம்புப் பக்கம் மேல் நோக்கியும், சற்றுச் சாய்வாகவும் இருக்கும்படி வைத்துக் குழியில் ஒரு அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும். இவ்வாறு செய்வதால் நேராக முளைவந்து, செடியும் நேராக வளரும்.

விதைகளைக் குழிகளில் நடுவதைக் காட்டிலும், முந்திரிக்



கன்றுகளை பாலித்தீன் பைகளில் வளர்த்து நடுவதே சிறந்தது. 9 அங்குலம் × 5 அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் 6 அங்குல உயரத்திற்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட் எருக் கலந்த, செம்மண்ணை நிரப்ப வேண்டும். பாலித்தீன் பையின் அடியில் இரு நுனிகளிலும், நடுவிலும் சிறு துவாரங்கள் ஏற்படுத்த வேண்டும். தரமான முந்திரி விதைகளைப் பைக்கு ஒன்றாக ஒரு அங்குல ஆழத்தில், விதையின் காம்பு மேலே இருக்கும்படி வைத்துப் பதிக்க வேண்டும். நிழற்பாங்கான இடத்தில் விதைகள் பதிக்கப்பட்ட பைகளை வரிசையாக வைத்துத் தண்ணீர் விடவேண்டும். இவ்வாறு பாலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்ட, 2 மாத வயதுடைய கன்றுகளை மழைக்கால ஆரம்பத்தில் (ஆடி-ஆவணி அல்லது ஐப்பசி மாதத்தில்) நடுவதே சிறந்தது.



பாலித்தீன் பையை அகற்றிவிட்டுக் குழியில் முந்திரிக் கன்றை மிகவும் கவனத்துடன் நட வேண்டும்.

இளங்கன்றுகளுக்குப் பாதுகாப்பு

முந்திரிக் கன்றுகள் 15 அல்லது 20 நாட்களில் முளைத்து வரும்: முளைத்து வந்ததும் அதிக சூரிய வெளிச்சத்தினால் பாதிக்கப்படாமலிருக்கப் பனைஓலைகள் கொண்டு மூடுதல் வேண்டும்.

பாலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளாயின், நட்டவுடன் செடியைச் சுற்றி மண் அணைத்துச் செடிகள் ஆடாது இருக்கக் கொம்புகள் நட்டுக் கட்டுதல் வேண்டும்.

இளங்கன்றுகள் பூச்சிகளினால் தாக்கப்பட்டால் பி.எச்.சி. 10 சதத் தூள் தூவ வேண்டும்.

பின்செய் நேர்த்தி

கன்று முளைத்து 2 மாதம் ஆகிய பின்பு, நன்கு திடமாக வளர்ந்துள்ள ஒரு கன்றை மட்டும் ஒவ்வொரு குழியிலும் விட்டு விட்டு, மற்றவைகளைப் பிடுங்கி விடவேண்டும்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கன்று முளைக்காமல் உள்ள குழிகளில், 30 அல்லது 40 நாள் வயதுள்ள முந்திரிக் கன்றுகளை நட வேண்டும். இதற்காக முந்திரிக் கொட்டைகளை முதலில் நடும் பொழுது, சில தொட்டிகளில் தனியாக முந்திரிக் கொட்டைகளை நட்டு கன்று வளர்த்து வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இளம் முந்திரிக் கன்றுகளைச் சுற்றிக் காய்ந்த சருகுகளைப் பரப்பி ஈரம் காய்ந்து போவதைத் தடுக்கவேண்டும். மழை இல்லாவிட்டால், கன்று நன்கு வளரும் வரை, வாரம் ஒருமுறை கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

முந்திரித் தோப்பில் முதல் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு நிலக்கடலை, பயறு வகைகள் ஆகியவைகளை ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம். இவ்வாறு ஊடுபயிர் செய்தால் ஊடு பயிருக்குப் போதிய உரமிட வேண்டும். இல்லாவிட்டால் ஊடு பயிர் முந்திரி வளர்ச்சியைத் தடைப்படுத்தும். ஊடுபயிர் செய்வதனால், ஆரம்பக் காலத்தில்—முந்திரி பலன் கொடுப்பதற்கு முன்பாக—ஓரளவு வருவாய் கிடைப்பதுடன், முந்திரிச் செடிகளுக்கு மறைமுகமாகப் பயன் கிடைக்கும்.

கடற்கரையோரங்களில் முந்திரி, புயல் காற்றினால் பாதிக்கப்படுவதைத் தடுக்க முந்திரித் தோப்புகளின்ஓரத்தில் 3 முதல் 5 அடி இடைவெளியில் 3 வரிசைச் சவுக்கு நடுதல் வேண்டும்.

உரமிடுதல்

இளம் முந்திரி மரங்களின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து சத்துக்கள் தேவைப்படுவதால், இளம் முந்திரித் தோட்டங்களுக்கு ஆண்டுதோறும் உரமிட வேண்டும். வெவ்வேறு வயதுடைய இளம் முந்திரி மரங்களுக்குக் கீழே குறிப்பிட்ட அளவில் உரமிட வேண்டும்.

கன்று முளைத்த அல்லது கன்று நட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொரு கன்றுக்கும் ¼ கிலோ அமோனியம் சல்பேட், ¼ கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும்.

2 அல்லது 3 ஆண்டு வயதுடைய மரங்களுக்கு ஒவ்வொரு மரத்திற்கும் ½ கிலோ அமோனியம் சல்பேட், ½ கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ், 10 கிலோ பசுந்தழை அல்லது பசுந்தாளுரம் வீதம் இட வேண்டும்.

4 முதல் 10-வது ஆண்டு வரை ஒவ்வொரு மரத்திற்கும் 1 கிலோ அமோனியம் சல்பேட், ¾ கிலோ சூப்பர் பாஸ்பேட், 200 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ், 20 கிலோ பசுந்தழை அல்லது பசுந்தாளுரம் இட வேண்டும்.

10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடைய ஒவ்வொரு மரத்திற்கும் 1¼ கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், ¼ கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ், 50 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது பசுந்தழை அல்லது பசுந்தாளுரம் இடவேண்டும்.

* இளம் முந்திரிச் செடியின் அடிப்பாகத்தைச் சுற்றிலும் 3 முதல் 4½ அடி இடைவெளியில் 1 அடி அகலமும், 9 அங்குல ஆழமும் உள்ள வட்ட வடிவக் கிடங்கு வெட்டி அதில் உரங்களை இட்டு நிரப்பி மண்ணால் மூட வேண்டும்.

* முந்திரிச் செடி வளர்ந்து கிளைத்து மரமாகிய பின்பு, கிளை பர்வியுள்ள தூரத்திற்கு 1 அடி தூரம் உள்ளே தள்ளி 1 அடி அகலமும், 9 அங்குலம் ஆழமும் உள்ள கிடங்கு வெட்டி உரங்களை நிரப்பி மண்ணால் மூட வேண்டும்.

* உரமிடுவதற்கு ஐப்பசி (அக்டோபர்-நவம்பர்) மாதமே ஏற்றது.

* காய்க்கும் நிலையில் உள்ள மரங்களுக்கு, பூ பூப்பதற்கு 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பே உரமிட வேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு

* பொதுவாக முந்திரி மரங்கள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் புதிய துளிர் விடும். அப்பொழுது பூச்சிகளும், நோய்களும் முந்திரியைத் தாக்கி, முந்திரிச் சாகுபடியாளர்களுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்துகின்றன. இந்த நட்டத்தைத் தவிர்க்க வருமுன் தடுப்பாக மருந்து தெளிப்பதே நல்வழியாகும். ஒரு ஏக்கர் முந்திரித் தோப்பிற்கு 250 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 500 கிராம் தாமிர பூஞ்சாளக் கொல்லி மருந்தையும் (Copper Fungicide) 250 லிட்டர் தண்ணீரில் கலந்து புது துளிர் வரும் சமயத்தில் விசைத் தெளிப்பான் மூலம் தெளிப்பது சிறந்தது.

* முந்திரிப்பூக்கள் மலர்ந்த பின்பு 2—வது முறையாக மேற்கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்

*2-வதுமுறை மருந்து தெளித்த 20 நாட்களுக்குப் பிறகு, 3-வது முறையாக மேற்கண்டவாறு மருந்து தெளிக்க வேண்டும்.

* முந்திரி நட்ட 3-வது ஆண்டு முதல் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். ஆனால் அவ்வாறு காய்க்க விடக்கூடாது. 5 ஆண்டு முடிந்த பிறகு காய்க்க விடுதலே நிறைந்த மகசூல் கிடைக்க வழியாகும். எனவே 5-வது ஆண்டுவரை பூங்கொத்துகளை ஒடித்து விடுதல் வேண்டும்.

* முந்திரி நட்ட 6-வது ஆண்டு முதல் முந்திரி கொட்டை அறுவடை செய்ய முடியும். ஆனால் நட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகே பெருமகசூல் கிடைக்கும்.

* ஆரம்ப பூக்களிலிருந்து உருவாகும் முந்திரிக்கொட்டைகள் முற்றிட 60 நாட்கள் ஆகும். பிந்திய பூக்களிலிருந்து உருவாகும் முந்திரிக் கொட்டைகள் முற்றிட 45 நாட்கள் ஆகும். கோடை காலத்தில் முந்திரிக் கொட்டைகள் குறுகிய காலத்தில் முற்றிவிடும்.

* ஆரம்பத்தில் முந்திரிக் கொட்டைகள் இளஞ்சிவப்பாகவோ, அல்லது பச்சையாகவோ இருக்கின்றன. முந்திரிக் கொட்டைகள் 45 நாட்களில் முழு வளர்ச்சி பெறுகின்றன. அதன்பின் அவைகள் உறுதி பெற்று சுருங்குகின்றன. முந்திரிப்பழம் 60 நாட்களில் பழுக்கின்றது. பழங்கள் முழுவதும் பழுத்தவுடன்கீழே விழுந்து விடுகின்றன. கீழே விழுந்தப் பழங்களைச் சேகரித்து கொட்டைகளைத் தனியே பிரித்து எடுக்க வேண்டும். இவ்வாறு எடுக்கப்பட்ட முந்திரிக் கொட்டைகள் சாம்பல் நிறமாகவும், வழவழப்பாகவும் பருப்புகள் ஆடாமல் நிறைந்தும் இருக்கும். முந்திரிக்கொட்டைகளின் ஈரத்தை 10 முதல் 12 சத அளவிற்குக் குறைத்திட 1 முதல் 3 நாட்கள் வரை காயவைக்க வேண்டும். நன்கு காயவைக்கப்பட்டு, ஆல்கத்தீன் உள்ளுறையுள்ள கோணிகளில் சேமிக்கப்பட்ட முந்திரிக் கொட்டைகள் 6 மாதங்களுக்குக் கூட கெடாமல் இருக்கும்.

வரவும் செலவும்

* முந்திரிச் சாகுபடி செய்ய 5 ஆண்டு வரை ஏக்கருக்கு ரூபாய் 150 செலவு ஆகும்.

* ஆனால் இச்செலவு இடத்திற்கேற்ப ரூபாய் 125 முதல் 175 வரையும் ஆகலாம்.

* காய்ப்பிற்கு வந்த பின் (6—வது ஆண்டு முதல்) ஒரு ஏக்கரிலிருந்து குறைந்தது 150 கிலோ முந்திரிக்கொட்டைகள் கிடைக்கும். அதிலிருந்து குறைந்தது ரூபாய் 150 வருவாய் கிடைக்கும். உழுதல், உரமிடுதல் போன்ற திருந்திய முறைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தால், ஆண்டு தோறும் ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 500 முதல் ரூபாய் 1,000 வரை நிகர லாபம் பெறலாம்.

வேண்டுகோள்

முந்திரியின் உற்பத்தி பெருகினால், உங்கள் வாழ்வு வளமடைவதுடன், இந்தியாவின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலவாணியைப் பெருமளவில் ஈட்டவும் வழிபிறக்கும். எனவே, மேற்கூறப்பட்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு முந்திரித் தோப்புகளை ஏற்படுத்தி, முந்திரி மகசூலைப் பெருக்கிட முந்திவருவீர் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

முந்திரி செயல் விளக்கம் தந்தது பெரு மகசூல்

முந்திரி மரங்களுக்கு இரசாயன உரமிட்டு, பூச்சி, பூஞ்சாள மருந்துகளைத் தெளித்தால் உயர்ந்திடும் முந்திரி மகசூல்! இதை முந்திரிச் சாகுபடி செய்து வரும் உழவர்களுக்கு விளக்கிட வேண்டுமென்பதற்காக, முந்திரி கட்டுக்கோப்பு சாகுபடி திட்டத்தின் (Cashew Package Scheme) கீழ், 1970–71-ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 140 செயல் விளக்கத் தளைகளும், திருச்சி மாவட்டத்தில் 100 செயல் விளக்கத் தளைகளும் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு செயல் விளக்கத் தளையும் (Demonstration Plot) 160 முந்திரி மரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டது. அதற்கு அருகிலேயே 160 மரங்களைக் கொண்ட தடுப்புத் தளையும் (Control Plot) அமைக்கப்பட்டது. செயல் விளக்கத் தளையில் உள்ள ஒவ்வொரு மரத்திற்கும் 250 கிராம் தழைச்சத்து, 150 கிராம் மணிச்சத்து, 150 கிராம் சாம்பல் சத்து அளிப்பதற்காக, 1¼ கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், ¼ கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்கள் அளிக்கப்பட்டன.

செயல் விளக்கத் தளையில் உள்ள முந்திரி மரங்களுக்குக் கீழே கொத்தி விடப்பட்டது. மரங்களுக்கு இடையேயுள்ள இடைவெளிகளில் ஊடு உழவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு செயல் விளக்கத் தளையிலும், பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலைத் தடுப்பதற்காக, வருமுன் தடுப்பு முறையாக (Prophylactic measures), 250 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 500 கிராம் பைட்டலான் மருந்தையும், 250 லிட்டர் தண்ணீரில் கலந்து, நன்கு கலக்கி விசைத் தெளிப்பான் மூலம் 3 முறை தெளிக்கப்பட்டது.

தடுப்புத் தளையில் இரசாயன உரமிடுதல், கொத்திவிடுதல், ஊடுஉழவு செய்தல், மருந்து தெளித்தல் ஆகிய எதுவுமே செய்யப்படவில்லை.

செயல் விளக்கத் தளையில் உள்ள மரங்கள் தடுப்புத் தளையில் உள்ள மரங்களை விட நன்கு பூத்து, காய்த்து, அதிக மகசூல் கொடுத்தன. இதனால் தடுப்புத் தளைகளில் கிடைத்த மகசூலைவிட செயல் விளக்கத் தளைகளில் சராசரியாகக் கீழ்க்கண்டவாறு அதிக மகசூல் கிடைத்துள்ளது.

ஊராட்சி ஒன்றியப் பெயர்.	அமைக்கப் பெற்ற செயல் விளக்கத் தளைகள்.	அதிகம் கிடைத்த மகசூல் சதவீதம்
கடலூர்	18	135
விருத்தாசலம் } கம்மாபுரம்.	36	105
குறிஞ்சிப்பாடி.	18	77
பண்ணுருட்டி	68	70
தென்னார்க்காடு.	140	85
ஆண்டிமடம்	56	76
செந்துறை	29	60
செயங்கொண்டம்.	15	45
திருச்சிராப்பள்ளி	100	74

மேற்கூறப்பட்ட 240 செயல் விளக்கத் தளைகளில் தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தொண்டமாநத்தம் ஊரில், திரு கே. தேவநாத ரெட்டியார் அவர்கள் செயல்விளக்கத் தளையில் 160 முந்திரி மரங்களிலிருந்து 1,575 கிலோ முந்திரிக் கொட்டைகள் கிடைத்துள்ளன. அவருடைய தடுப்புத் தளையில் 977 கிலோ முந்திரிக் கொட்டைகள் மட்டுமே கிடைத்தன. எனவே இரசாயன உரமிட்டு மருந்து தெளித்ததால் 160 மரங்களிலிருந்து 598 கிலோ முந்திரிக் கொட்டைகள் அதிகமாகக் கிடைத்துள்ளன.

இந்த ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 180 செயல் விளக்கத் தளைகளும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 180 செயல் விளக்கத் தளைகளும் அமைக்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் செயல் விளக்கத் தளைகள் 3 ஆண்டு காலத்திற்கு தொடர்ந்து இருக்கும். ஒவ்வொரு செயல் விளக்கத் தளைக்கும், ஒவ்வொரு ஆண்டும், இந்திய அரசு அளிக்கும் நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு ரூபாய் 300·00 மானியம் வழங்கப்படும்.

	ரூபாய்
இரசாயன உரம்	220
பயிர்ப்பாதுகாப்பு	70
செயல் விளக்கத் தளைக்குரிய விளம்பரப் பலகை.	10
மொத்தம்	300

செயல் விளக்கத் தளைகளில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கூறிய சாகுபடி முறைகளை முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் அனைவரும் மேற்கொள்ளவேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

சூழ்நிலைச் சீர்கேடு...

— அ. இரா. இராமராசு —

மனித குலம் பகுத்தறிவின் துணை கொண்டு நாள்தோறும் முன்னேறிக் கொண்டே உள்ளது. அறிவியலிலும், தொழிலியலிலும் இன்றையக் கண்டுபிடிப்புகள் நாளை பழையனவாகிக் கழிய, புதியன புகுந்து கொண்டே உள்ளன. அதன் விளைவாகப் பல வாழ்க்கை வசதிகள் பெருகி வந்துள்ளன; மக்கள் தொகைப் பெருக்கத்தையும் சமாளிக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். தொழில் துறையில் எல்லையில்லாத புதுமைகள், உணவுத் துறையில் பசுமைப் புரட்சி, போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சி இவ்வாறு முன்னேற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. காட்டை அழித்து நவநாகரிக நகரங்கள் பல தோன்றியுள்ளன. இத்தகைய வியத்தகு முன்னேற்றப் பாதையிலே முன்னேறும் நாம், நம்மை அறியாமல் ஒரு நச்சுக் சூழலை நாமே உண்டாக்கி வருகிறோமென்பது வருந்தத் தக்க ஒன்று. சான்றாக, வாழ்க்கைக்கு உயிர் நாடிகளான முப்பொருளாம் நிலம், நீர், காற்று ஆகியவற்றின் தூய்மை நஞ்சாகிக் கொண்டேவருகிறது. அது மட்டுமல்ல உலகில் திட, திரவ, வாயு என்ற நிலைகளில் அடங்கும் பொருள்கள் யாவும் தூய்மை கெட்டு வருகின்றன. மிகப் பெரிய ஆபத்து நம்மைச் சூழ்ந்து வருகிறதென்பது இதனால் சொல்லாமலேயே புலனாகும். இவ்வாறு உருவாகும் நச்சுச் சூழலைத் தடுத்து நிறுத்த வழி வகைகளைச் செய்யாவிடில் ' யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொண்ட' கதையாகத்தான் முடியும். மனித குலமே இதனால் மாய வழியுண்டு. மனிதன் தன்னை அழிக்கத் தானே வழி தேடிய வனாகிவிடுவான்.

எத்தனையோ முன்னேற்றத்திற்குக் காரணமான மனிதனே இந்நச்சுச் சூழலுக்குக் காரணமானின்றானென்பதை நினைக்கும் போது " தீதும் நன்றும் பிறர் தர வாரா " என்ற புறநானூற்றுத் தொடரின் பொருட்செறிவு நமக்குப் புலனாகின்றது. காற்றின் நச்சுத் தன்மை பற்றி இங்கு எடுத்துக் கொள்வோம். காற்றின்கண் நச்சுச் சூழலின் தோற்றம், விளைவு, அதனைக் குறைக்க, தடுக்க, நீக்க வழிகள் ஆகியன குறித்து ஈண்டு விரிவாகக் காணலாம்.

இயற்கையின் விந்தைச் சமநிலை

மனிதன் பல வழிகளில் கரியமில வாயுவை வெளிப்படுத்துகிறான். சுவாசிக்கும் பொழுது கரியமில வாயு வெளியிடப் பெறுகிறது. மனிதனால் ஆக்கப்பட்ட பல விந்தைச் சாதனங்கள் இடைவிடாது கரியமில வாயுவை உமிழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

தாவரங்களை நாம் நன்கு கூர்ந்து நோக்கினால் அதுவும் ஓர் ' இயற்கைத் தொழிற்சாலை ' என்பது நன்கு புலனாகும். சூரிய ஒளியில் பச்சைத் தாவரங்கள் உணவைத் தயாரிக்கும்போது நமக்கு வேண்டாத கரியமில வாயுவை உட்கொண்டு நமக்கு வேண்டிய ஆக்ஸிஜனை வெளிவிடுகின்றன. மரங்கள் செடி, கொடி, புதையுண்டு மண்ணில் எரி பொருளாக மீண்டும் நமக்குப் பயன்படுகின்றன. இவ்வெரி பொருள் மடியும்போது ஆக்ஸிஜனைப் பயன்படுத்திக் கொண்டு கரியமில வாயுவைத் தான் வெளியிடுகின்றன. இவ்வாறு தாவரங்களின் வாழ்க்கையின் தொடக்கத்தில் உட்செல்லும் கரியமில வாயு அவற்றின் முடிவு நிலையின்போது—மடிவு நிலையின்போது அவ்வாயு வெளிவரக் காண்கிறோம். இப்படி ஒரு சமநிலை இருக்கிறது.

மனிதனின் முன்னேற்றம் இச்சமநிலையைத் தற்பொழுது நன்கு கெடுத்து விட்டது. ஆகவே நச்சுக் சூழல் அதிகரித்துக் கொண்டேயுள்ளது.

காற்றின் நச்சுத்தன்மை அதிகரிப்பதேன்?

1. தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் காற்றில் புகை, புகைக் கரி, கரியமில வாயு, தூசிகள், ஹைட்ரோகார்பன்கள் அதிகப்படுத்தப்படுகின்றன.

2. போக்குவரத்துச் சாதனங்களின் முன்னேற்றச் சின்னங்களான ஜெட் விமானங்கள், பேருந்து வண்டிகள், பஸ், லாரி, ஆட்டோ, ஸ்கூட்டர் ஆகியவற்றின் அதிகரிப்பால் இவை வெளிவிடும் கழிவுகள் கூடுதலாகிக் காற்றின் தன்மையைக் கெடுக்கின்றன.

3. தாவரங்கள் நாள்தோறும் குறைந்து வருகின்றன. காட்டை அழித்து நாடாக்குவதில் பெருமிதம் கொள்ளும் காலமிது. ஆகவே, இயற்கையிலேயே ஏற்படுத்தப்பட்ட நச்சுத் தன்மையைக் குறைக்கும் கருவிகளை நாம் குறைத்து வருகிறோம். எனவே நச்சுச் சூழல் அதிகரித்த வண்ணமிருக்கின்றன.

4. தரம் குறைந்த எரி பொருள்களைப் பயன்படுத்துதல், தாவரங்களுக்குப் பயன்படுத்தும் நச்சுக் கொல்லிகளின் அதிகரிப்பு ஆகியவற்றாலும் காற்றின் நச்சுத் தன்மை கூடுதலாகின்றது.

5. புதிய அணு ஆற்றல் அளப்பரிய அளவில் பயன்படுத்தப் படுவதாலும் காற்றின் நச்சுத் தன்மை ஓரளவு அதிகரிக்கின்றது.

6. மக்கட்தொகைப் பெருகுவதாலும் புகை பிடிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் காற்றின் நச்சுத் தன்மை கூடுதலாகி வருகின்றது.

இவ்வாறு பல முனைகளிலிருந்தும் நச்சுச் சூழலைப் பெருக்கி வருகிறோம்.

நச்சுச் சூழலால் விளையும் கேடுகள்

1. உடல் நலம் கெடுகின்றது. இரத்தத்தின் தன்மை கெடுகிறது. " நோயற்ற வாழ்வே

குறைவற்ற செல்வம்'' என்ற மொழிக்கே எடுத்துக் காட்டு இல்லாத நிலை இதனால் உருவாக்கப்படலாம்.

2. உடல் நலமில்லாதோர் இந்நச்சுக் காற்றைச் சுவாசிப்பதால் அவர்கள் வாழ்க்கையின் எல்லையை விரைவில் எட்டிப் பிடித்து விடுவார்கள்.

3. காற்றின் வெப்ப தட்ப நிலை மாறுபடுகின்றது. இதனால் மழை, நீரின் தன்மை, நிலத்தின் தன்மை ஆகியன சீர்கேடு அடைகின்றன. தாவரங்களின் வளர்ச்சியும் தடைப்படுகின்றன.

4. காற்றிலேற்படும் களங்கங்கள் பல திசைகளிலும் பரவி அதன் கேடுகளைப் பரப்பிய வண்ணமிருக்கின்றன.

5. காற்றின் இயற்கைச் சமநிலை கெட்டுவிடுகிறது. இதனால் விளையும் இன்னல்கள் எண்ணிலடங்கா.

6. நமது செயல்களெல்லாம் சீர்கெட்டு, செம்மைகெட்டு இழிநிலை அடையும்.

7. ' இப்பூவுலகின் முடிவு வெகு தொலைவிலில்லை ' என்ற ஒரு கற்பனைக் கெட்டாத கனவு நினைவாக மாறலாம். மனித சமுதாயமே வேரோடு அழிந்து படலாம் என்ற பேரறிஞர்கள், கருத்து விரைவில் செயலாகலாம்.

8. புகை பிடிப்போர் தங்கள் உடல் நலனைக் கெடுத்துக் கொள்வதோடு ஓரளவு காற்றின் தன்மையைக் கெடுத்துப் பிறர் உடல் நலனுக்கும் தீங்கிழைக்கின்றனர்.

9. நச்சுக் காற்று, கட்டடங்களையும், தொழிற்சாலைக் கருவிகளையும் சேதப்படுத்துகின்றன.

இத்துணை அழிவாற்றல் கொண்ட சிக்கலை அறவே ஒழிக்க வழிகள்தாம் என்ன ? அல்லது அதனைத் தடுத்து நிறுத்த நாமென்ன செய்தல் வேண்டும் ?

நச்சுச் சூழலைத் தடுத்து நிறுத்தும் வழிகள்

1. தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் புகையினை வடிகட்டிச்சுத்தமாக்கி வெளிவிடுதல்

2. பேருந்து வண்டிகள் வெளியிடும் புகையினை வடிகட்டுதல் அல்லது ஒருகுறிப்பிட்ட அளவினை வரையறுத்து அதற்குமேல் வெளிவிடும் வண்டிகளை நடமாடவிடாமல் இருக்கச் செய்வது.

3. முடிந்த அளவுத் தாவரங்களையும், காடுகளையும், அழிக்காதிருத்தல்.

4, தாவரங்களையும், காடுகளையும் உயர்ந்த அளவு உண்டாக்கி வளர்த்துப் பாதுகாத்தல்.

5. நம்மைச் சுற்றியுள்ள காற்றின் நச்சுத் தன்மையை அடிக்கடி கணக்கிட்டறிதல். நச்சுத் தன்மை கூடிய இடத்தில் அதனைக் குறைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல்.

6. தொழிற்சாலை நிறைந்த நகரங்களில் மேலும் மேலும் அதிகமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தாதிருத்தல். புதிய தொழிற்சாலைகளைப் போதிய இட வசதி உள்ள இடங்களில் மட்டும் நிறுவுதல் ஆகியவற்றால் நகரங்களில் உள்ள காற்றின் நச்சுத் தன்மை கூடுதலாகாமல் காக்க இயலும்.

7. தற்போது பேருந்து வண்டிகள் இயங்குவதற்கான எரிபொருள்களுக்கு (பெட்ரோல்) சிறிது தற்காலிகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. லாரி உரிமையாளர்கள் கூடுதல் விலை கொடுக்க இயலாத நிலையில் தரம் குறைந்த எரிபொருளைப் (மண்ணெண்ணெய்) பயன்படுத்தி இயந்திரத்தையும் சுற்றுச் சூழலையும் கெடுத்து வருகிறார்கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பது ' மிகவும் இன்றியமையாதன.

8. எரிபொருள் குறித்து ஆராய்ச்சிகள் பல இன்னும் நடைபெற வேண்டும். குறைந்த விலையில் சிறந்த எரிபொருள் கண்டுபிடிக்க வழிவகைகள் செய்யலாம். சிறந்த மென்புகை வடிகட்டிகளை மேலும் கண்டு பிடித்தல். காற்றின் நச்சுத் தன்மையைக் கண்டுபிடிக்கச் சிறந்த எளிய முறைகளைக் கண்டு பிடிக்கலாம். தாவரங்களின் செயலை ஊக்குவித்து நச்சுத் தன்மையைப் போக்கப் புதிய தாவரங்களைக் கண்டு பிடிக்கலாம்.

9. மக்கட்தொகைப் பெருக்கத்தை வேண்டிய அளவில் நிறுத்துதல் வேண்டும். புகை பிடிப்போரின் எண்ணிக்கையை ஓரளவு குறைக்க வேண்டும்.

10. மேற் கூறியவற்றைச் செயல்படுத்துவது மிக எளிது.

அரசியல்வாதியோ, விஞ்ஞானியோ, ஆளுநர்களோ தனித்தனியாக இப்பிரச்சினையை நோக்கினால் அது ஒரு தீராத தலைவலியாக இருக்கும். இம்மூவரும் சேர்ந்து இப்பிரச்சனையின் உண்மையான உருவத்தைக் கண்டு பிடித்து, அதன் தொல்லைகளை அலசிப் பார்த்து, அதற்கு ஓர் முடிவுகட்ட, இடைவிடாத முயற்சி எடுத்தலே சாலச் சிறந்ததாகும். ஒன்று பட்டால்தானே உண்டு வாழ்வு! எனவே இப்பிரச்சினையை இருந்த சுவடு தெரியாமல் செய்ய ஒன்றுகூடிச் செயல்பட வேண்டும்.

நமது நாட்டில் நாகபுரியில் மத்திய பொதுநல்வாழ்வுத் துறை பொறியியல் ஆராய்ச்சிக் கழகமும், பம்பாயில் பாபா அணு ஆராய்ச்சிக் கழகமும் காற்றின் நச்சுத் தன்மையைப் பற்றிய ஆய்வு நடத்தி வருகின்றன. பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை ஆகிய . இடங்களில் காற்றின் தன்மையைக் கண்டறிந்துள்ளார்கள். காற்றின் குறைகளைக் கண்டு நிறைவு செய்ய அவை பயன்படும் என்று எதிர் நோக்கப்படுகிறது.

மெக்சிகோ நகரத்தில் உள்ள (5,000) தொழிற்சாலைகள் அந்நகரத்தையே நச்சுக் சூழலில் மிதக்க வைக்குமளவுக்கு மிக அதிகமாக உள்ளனவென்று கண்டுள்ளார்கள். பல வடிகட்டிகள் மூலம் அதனைத் தூய்மைப் படுத்தினர். இருப்பினும் அந்நச்சுச் தன்மையினால் விளையும் இன்னல்களைக் கண்டு அதிர்ந்து போய் இயற்கையை நாடி உள்ளனர். அந்நாட்டு அரசினர் 1,00,000 சிறிய மரங்களை ஹாலந்து நாட்டிலிருந்து பெற்றுப் பயிர் செய்ய உள்ளார்கள். மேலும், 4,00,000 மரங்களை நடுவதற்கான திடமான தீவிர திட்டத்தையும் கையாண்டுள்ளனர். இம்மரங்கள் காற்றில் ஆக்ஸிஜன் அளவை அதிகப்படுத்தி நச்சுத் தன்மையைத் திட்டவட்டமாகக் குறைத்துத் துன்பச் சூழலை நீக்கி இன்பச் சூழலை நல்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள்.

நாமும் ஏன் ஒரு சிறு புரட்சியை ஈண்டு நம் நாட்டில் கொண்டு வருதல் கூடாது? ' தனி மனிதன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு மரம் வைத்து நாள் தோறும் காக்கவேண்டும் ' என்ற முறை அமைவது சிறந்ததோர் ஆக்கப் பணியாகும். மனித சமுதாயத்திற்கென நாம் செய்யும் இக்கடுகளவுத் தொண்டு கடலினும் பெரிதாகும்.

கடந்த 1969–70-ஆம் ஆண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள தியாக துர்க்கம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இந்தியாவிலேயே அதிகம் பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 2,849 பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தனை அறுவைச் சிகிச்சைகளையும் செய்த டாக்டர் கே. தட்சிணாமூர்த்திக்கு, ரூபாய் 5 ஆயிரம் பரிசு வழங்கியுள்ளது மைய அரசின் குடும்ப நலக் குழு.

இப் பிரச்சினையை உலக நாடுகள் சபை நன்கு ஆராயத் தொடங்கியுள்ளது. அச்சபை இவ்வழியில் சில நாடுகளில் சோதனைகளை நடத்திக் காற்றின் தன்மையை ஆராய்ந்து வருகிறது. இம் முயற்சி ஒரு சீரிய முயற்சியேயாகும். நச்சுச் சூழலைக் குறைப்பதற்கு இதனால் விளையும் தொல்லைகளைப் பல நாடுகளும் உணரும் வகையில் அறியச் செய்தல் வெண்டும். இப் பிரச்சினையை மேலும்வளர விடாமல் இருப்பதற்கான வழி வகைகளையும் இது செய்ய இருப்பது வரவேற்கத்தக்கது. நம் நாட்டில் சென்னை போன்ற நகரங்களிலும் இவர்களது திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நம் நாட்டில் சென்னை நகரம்தான் குறைவான நச்சுச் சூழலையுடைய நகரமென்று கணக்கிட்டுள்ளனர். '' வருமுன் காப்பது நல்லதல்லவா !'' ஆகவே மிகவும் எச்சரிக்கையாயிருந்து சிறந்த வழி முறைகளைக் கையாண்டு நச்சுச் சூழலால் வரும் ஆபத்தை வருமுன்னர் களைதல் வேண்டும்.

நாமும் நமது நாட்டினரும் இப்பிரச்சினையை ஒழிக்க வழி முறைகளைப் பின்பற்றுதல் தலையாய கடமையாகும். இப் பிரச்சினை ஒரு பெரிய மலையாக வளர்ந்தொரு சில நாடுகளில் சிலர் ஆக்ஸிஜனை விலைக்கு வாங்கி நுகரும் நிலையை ஏற்படுத்தி உள்ளது. தொழில் துறையில் சிறந்து விளங்கும் சில நாடுகளில் மூக்கிற்கு மூடி அணிந்துதான் வெளிச் செல்ல வேண்டுமென்ற நிலையும் உருவாகியுள்ளது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது நம்நிலை இறும்பூதெய்தவேண்டிய ஒன்றேயாயினும், மேற்சொன்ன நிலை நமக்கும் வந்து விடாமல் காப்பதில் நாம் மிகவும் கவனம் செலுத்துவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

வழங்கியோர் பட்டியல்

	ரூ.	காசு
முந்திய இதழின்படி தொகை	23,17,394	53
டாக்டர் எஸ். மகாதேவன், எம்.பி., பி.எஸ்., மாவட்டச் சுகாதார அதிகாரி, சேலம்.	42	00
தலைமையாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, கீரனூர்,	30	00
மாவட்ட ஆட்சித் தலைவர்	8,844	00
தாசில்தார், மேலூர்	1,100	00
நிர்வாக அலுவலர், ஆலத்தூர், டி. பி. மேலக்கால் கண்டார் கோட்டை, திருச்சி.	101	00
அரசினர் உயர்நிலைப்பள்ளி, திருப்போரூர்.	50	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், எல்லா புரம், பெரியபாளையம் அஞ்சல்.	100	00
மாவட்டக் கல்வி அதிகாரி, கோவில்பட்டி.	37	00
துணைப்பதிவாளர், (பால்பண்ணை), காஞ்சி புரம்.	190	00
தாசில்தார், திருச்செந்தூர்	1,109	00
மருத்துவ அதிகாரி, ஆரம்பச் சுகாதார நிலையம், ஆலங்குளம், தென்காசி.	20	00
ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பாபநாசம்.	1,945	00
நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, தூத்துக்குடி.	550	00
ஆதரைஸ்டு ஆபீசர், நிலச்சீர்திருத்தம், திருநெல்வேலி.	595	00
முத்திப்பாளையம் அரிஜன குடியிருப்பு, நிர்வாக அதிகாரி, பேரூராட்சி, கோவை மாவட்டம்.	10	11

	ரூ.	காசு
கூட்டுறவுப் பால் விநியோக ஒன்றியம் ..	10,525	75
தமிழ்நாடு முக்கிய சேவிகை, கிராம சேவிகைகளிடமிருந்து.	10	00
திரு ஸி. டி. நடராஜன், செயலாளர், தமிழ் நாடு சட்டசபைத் துறை.	75	00
,, கே. புஜங்கராவ், துணைச் செயலாளர் ..	20	00
,, டி. ராதாகிருஷ்ணன், உதவிச் செய லாளர், சட்ட மன்றத் துறை.	20	00
,, ஜி. ராகவன், உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை.	20	00
,, சி. கே. ராமசாமி, உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை.	20	00
,, ஆர். மாணிக்கம், உதவிச் செயலாளர், சட்ட மன்றத் துறை.	20	00
,, கே. சுந்தரராஜன், சட்ட மன்றத் துறை துறை விவாதக் குறிப்பேடாசிரியர்.	20	00
,, வி. ராஜமாணிக்கம், சட்ட மன்றத் துறை கண்காணிப்பாளர்,	10	00
,, பி. கே. கந்தசாமி, கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, பெஞ்சமின் நெல்சன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, டி. எஸ். [illegible], கண்காணிப்பாளர், சட்டமன்றத் துறை.	10	00
,, ஆர். பாலகுரு, கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, சி. ரங்காராம், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, சி. எஸ். ஜானகிராம், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00

	ரூ.	காசு
திரு பி. எம். பத்மனுபன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, பி. பாலகிருஷ்ணன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, பி. எஸ். கனகசபாபதி, கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, டி. ஜே. சைமன், கண்காணிப்பாளர், சட்ட மன்றத் துறை.	10	00
,, பி. கே. லட்சுமி நாராயணன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, பி. சி. ஜெயதேவ், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, ஆர். வெங்கடேசன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, கே. டி. சுந்தரமூர்த்தி, நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, வி. ராமச்சந்திரன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, எம். முருகேசன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, ஜி. எஸ். அனந்தநாராயணன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, ஏ. எஸ். பாலசுப்ரமணியம், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, கே. ஸ்ரீகண்டன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, எம். சந்திரசேகரன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, எஸ். நம்பி ஐயங்கார், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, ஏ. கண்ணப்பன், நிருபர், சட்ட மன்றத் துறை.	10	00
,, பி. ராஜமாணிக்கம், நிருபர், சட்ட மன்றத் மன்றத் துறை.	10	00
செல்வி கே. கலாவதி, நூலகர், சட்ட மன்றத் துறை.	10	00
திரு பி. கோதண்டராமன், அவைத்தலைவர், நுணுக்க உதவியாளர்.	10	00
,, ஆர். ராமன், உதவியாளர்	5	00
,, எப். வி. சைமன், உதவியாளர்	5	00
,, வி. சி. ஜான், உதவியாளர்	5	00
செல்வி வி. என். உமா, உதவியாளர் ..	5	00
திரு கே. கண்ணன், உதவியாளர் ..	5	00
,, வி. சி. இராஜேந்திரன், உதவியாளர் ..	5	00
,, ஜி. வெங்கடராமன், உதவியாளர் ..	5	00
,, என். அரிச்சந்திரன், உதவியாளர் ..	5	00

	ரூ.	காசு
திரு கே. தியாகராசன். உதவியாளர் ..	5	00
,, எம். கே. ஜோசப், உதவியாளர் ..	5	00
,, எம். ஆர். சீனிவாசன். உதவியாளர் ..	5	00
,, எஸ். கேசவராம்	5	00
,, ஜெ. ரெஜினல்டு ஜான்	7	00
,, எம். கோபாலன்	5	00
,, சி. ஏ. சண்முகம்	5	00
,, சாலமன் ஜெயபால்	5	00
,, டி. சேக்கப் ஆர்தர், பண்டகசாலைக் காப்பாளர்.	5	00
திருமதி பானுமதி ஆனந்தராஜன், உதவியாளர்.	5	00
முனீர் உன்னிசா	5	00
திரு சி. கோபாலகிருஷ்ணன், பேரவைத் தலைவரின் அணுக்க உதவியாளர்.	5	00
,, கே. பி. ராஜன், உதவியாளர் ..	5	00
,, கே. சி. சுந்தரராஜன், உதவியாளர் ..	5	00
,, வி. ராஜாராமன், உதவியாளர் ..	5	00
,, எஸ். கணேசன், இளநிலை உதவியாளர் ..	3	00
,, சி. கே. ராஜசேகரன், இளநிலை உதவியாளர்.	3	00
,, ஆர். ராமசுப்ரமணியம், இளநிலை உதவியாளர்.	3	00
,, திருமதி பவானி சுப்பையா, இளநிலை உதவியாளர்.	3	00
திரு எல். ஆர். தேசிகாச்சாரி, இளநிலை உதவியாளர்.	3	00
,, எஸ். சிங்காரவேலு பாபு, இளநிலை உதவியாளர்.	3	00
,, நடராஜ சுந்தரம், இளநிலை உதவியாளர்.	3	00
,, வி. எஸ். கிருஷ்ணகுமார், இளநிலை உதவியாளர்.	3	00
,, எஸ். பெரியசாமி, இளநிலை உதவியாளர்.	3	00
,, எஸ். குருநாதன், இளநிலை உதவியாளர்.	3	00
,, எம். ஜே. பாய், இளநிலை உதவியாளர்.	3	00
,, எஸ். ராஜசேகரன், இளநிலை உதவியாளர்.	3	00
,, ஆர். சீனிவாசராகவன், சுருக்கெழுத்தாளர்.	3	00
,, என். தண்டாயுதபாணி, சுருக்கெழுத்தாளர்.	3	00
,, ஆர். பாலசுப்பிரமணியம், ஏ.டி.ஏ.,	3	00
செல்வி என். துளசிபாய், சுருக்கெழுத்தாளர்.	3	00

திருமதி எஸ். ரேவதி, சுருக்கெழுத்தாளர்	3	00
திரு ஆர். பாலன், சுருக்கெழுத்தாளர் ..	3	00
,, என். கிருஷ்ணன், தட்டெழுத்தர் ..	3	00
,, ஆர். அனந்தகிருஷ்ணன், தட்டெழுத்தர்.	3	00
செல்வி பி. சரஸ்வதி, தட்டெழுத்தர் ..	3	00
,, ஜே. லலிதா, தட்டெழுத்தர் ..	3	00
,, எஸ். ஸாலமன் ஜான்சன், தட்டெழுத்தர்	3	00
திருமதி சின்னசாமி, தொலைபேசி ஆப்ரேட்டர்	3	00
திரு பி.கே சுந்தரராஜ், எழுத்தர்	3	00
,, பி. டி. சம்பத்குமார், எழுத்தர் ..	3	00
,, ஏ. டி. மூர்த்தி, எழுத்தர்	3	00
,, பி. சுப்பிரமண்யன், எழுத்தர்	3	00
,, ஏ. குப்பன், எழுத்தர்	3	00
,, வி. மதிவாணன், எழுத்தர்	3	00
,, எம். வி. கோவிந்தன், நூலக உதவியாளர்.	3	00
,, டி. நந்தீசன், சுகாதார ஆய்வர் ..	3	00
,, வி. பச்சையப்பன், தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, டி. மனோகரன், தொலைபேசி ஆப்ரேட்டர்	3	00
,, எம். ஆர். சுந்தரம், தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, கே. செல்லப்பன் பிள்ளை, தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, ஏ. நடேசன், தொலைபேசி ஆப்ரேட்டர்	3	00
,, ஏ. நடனசேகர், தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, ஆர். கிருபானந்தம், தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, கே. சீனிவாசன், தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, சிவராஜ், தொலைபேசி ஆப்ரேட்டர் ..	3	00
,, சாரங்கபாணி, தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, ஐ. ராமதாஸ், தொலைபேசி ஆப்ரேட்டர்.	3	00
,, ரங்கநாதன், தொலைபேசி ஆப்ரேட்டர்.	2	00
,, ராஜேந்திரன், தொலைபேசி ஆப்ரேட்டர்.	1	00
,, ஜி. ஜோசப், சார்ஜண்டு ..	3	00
,, பெருமாள்சாமி, துணைப் பேரவைத் தலைவரின் அணுக்க உதவியாளர்.	5	00

செல்வி ஆர். கிருஷ்ணவேணி, இளநிலை உதவியாளர்.	3	00
நாகர்கோவில் தி.மு.க. பொதுக்கூட்ட வசூல்.	5	01
குற்றலம் தி.மு.க. பொதுக்கூட்ட வசூல்.	15	00
தொட்டியம் அரசினர் உயர்நிலைப்பள்ளி ..	10	00
திரு எஸ். ஆர். நடராஜன், மணமேடு ..	5	00
,, கே. எஸ். ராஜா சண்முகவேல், கூத்தனூர்.	101	00
கிருஷ்ணு ஆண்டு கம்பெனி, ஒயின் மெர்ச்சண்டு, சென்னை.	101	00
திரு பெரியசாமி, தலைவர், கோவில்பட்டி நகராட்சி.	101	00
திரு தேவராசன், அறிவகம், ராயபுரம் ..	101	00
,, எம். எஸ். பாண்டியன், பள்ளத்தூர், காவல்நிலையம்.	5	05
தென்னிந்திய பரிசுச் சீட்டுச் சங்கம், அண்ணு சாலை, சென்னை-2.	201	00
தமிழ்நாடு இளநிலை உதவியாளர் சங்கம், சென்னை.	51	00
தி.மு.க. கிளை பெரியபட்டிணம், இராமநாதபுரம் மாவட்டம்.	51	00
திரு தேவநாதன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	3	00
,, பாலகிருஷ்ணன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	1	00
,, நடேசன், (கோடம்பாக்கம், பொதுக்கூட்டம்).	2	00
,, மருதாசலம், கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	2	00
,, ரங்கநாதன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	5	00
,, மயில்வாகனன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	1	00
,, சுயம்புராமன், (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	10	00
,, ஆர். பிரகாஷ் (கோடம்பாக்கம் பொதுக்கூட்டம்).	20	00
அண்ணு சமூகப்பணி மன்றம் ..	25	00
திரு பாலன், அண்ணு சமூகப் பணி மன்றம் ..	2	00
ஆட்சியாளர், வட ஆர்க்காடு மாவட்டம்,	700	00
சென்பகம் தியேட்டர், பொன்னமராவதி,	104	27
நிர்வாக அலுவலர், பெரம்பலூர் பேரூராட்சி.	45	00
நிர்வாக அலுவலர், குரும்பலூர் டி. பி. திருச்சி மாவட்டம்.	101	00,
மொத்தத் தொகை ..	23,45,131	72

387

பெரியவனுனதும் நான் ஒரு டாக்டர் ஆவேன்

அவனது ஆசை நியாயமானது. உங்கள் சிறுவனும் அதைப்போல் ஆசைப் படலாம். ஆசை நிறைவேறத் தேவையான பணத்திற்கு நீங்கள் இப்பொழுதே எல்.ஐ.சி. யின் 'கல்வி ஆண்டுத் தொகை பாலிசி' மூலம் வகை செய்யுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை.



நேருவின் வாழ்விலே...

நேருவின் சமையற்காரர் இருதய நோய்க்கு ஆளாகிவிட்டார். நீண்ட காலமாக இருந்து வரும் சமையற்காரர் அவர். அதனுல் அவரிடம் மிகுந்த அன்பு செலுத்திவந்தார் நேரு. '' இருதய நோய்க்கு ஆளானதால், மாடிப்படிகளில் ஏறி வரவேண்டாம். நான் பயன்படுத்தும் லிப்டிலேயே ஏறி வரவேண்டும் '' என்று அவருக்குக் கட்டளையிட்டிருந்தார் நேரு. அதன்படியே அந்தச் சமையற்காரர் நடந்து கொண்டார். ஆனுல் எப்படியோ ஒருநாள் லிப்டை மறந்துவிட்டு, மாடிப் படிகளில் ஏறிச் சென்ருர் அந்தச் சமையற்காரர். அதனைப் பார்த்துவிட்டார் நேரு.

'' இன்னெரு முறை மாடிப் படிகளில் ஏறி வந்தால் உன்னைக் கூண்டில் அடைத்து, திஹார் சிறைச் சாலைக்குள் தள்ளுவேன் ''—என்ருர்.

மற்றெரு சமயம் :

சமையற்காரர் விடுமுறையில் தனது சொந்த ஊருக்குப் புறப்பட்டார். நேருவிடம் விடை பெற்றுக் கொள்ளச் சென்ருர். அப்போது '' பணம் இருக்கிறதா '' என்று நேரு கேட்டார். '' போதிய பணம் இல்லை '' என்று இழுத்தவாறே பதிலுரைத்தார் சமையற்காரர்.

உடனே அவருக்கு அறுபது ரூபாய் கொடுத்தார் நேரு.

'' இதை இந்துவிடம் (இந்திரா காந்தி) சொல்ல வேண்டாம். சொன்னுல் உன் சம்பளத்தில் பிடித்துக் கொண்டு விடுவார் '' என்று ஓர் எச்சரிக்கையும் கொடுத்தார் அவர் சமையற்காரருக்கு.

* * *

ஒருநாள் புதுடெல்லி புத்தகக் கடை ஒன்றினுள் சென்ருர் நேரு. அங்குள்ள புத்தகங்கள் எல்லாம் அவரைக் கவர்ந்தன. எதை வாங்குவது என்பதறியாமல் திகைத்தார். எப்படியோ ஒரு சில புத்தகங்களை மட்டும் தேர்ந்தெடுத்துவிட்டார். அவைகளை வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்.

வெளியே பொது மக்கள் கூட்டம் அவரைக் காண்பதற்குக் கூடி விட்டது. அந்த மக்கள் வெள்ளத்தைத் தாண்டித் தனது ஊர்திக்கு எப்படிச் செல்வது என்று சிந்தித்தார். அங்கு பலூன் விற்றுக் கொண்டிருந்த ஒருவனிடம் ஒரு கொத்து பலூன்களை வாங்கிக் கொண்டார். பிறகு அதைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நடந்தார். அந்த பலூனை அடையாளம் வைத்துக்கொண்டு அவரைப் பின் தொடர்ந்தார்கள் பொதுமக்கள். கையிலிருந்த பலூனைச் சட்டென்று அருகிலிருந்த ஒருவரிடம் கொடுத்துவிட்டு, நேரு, வேறு பக்கம் திரும்பி நடந்து தமது ஊர்தி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். பொது மக்கள், பலூன் வைத்திருந்தவரையே பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். நேரு அதுதான் சமயம் என்று தனது ஊர்திக்குள் ஏறிக் கொண்டார். மறுவினுடி, ஊர்தி புறப்பட்டு விட்டது. ஊர்தி புறப்படும் ஒலியைக் கேட்ட பிறகுதான், நேரு தங்களை ஏமாற்றிச் சென்று விட்டார் என்பது பொது மக்களுக்குப் புரிந்தது.

* * *

நேருவும் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் நெருங்கிய நண்பர்கள். ஒருவர்க்கொருவர் உடன் பிறப்பாகக் கருதிக் கொண்டவர்கள். ஒருவர்க்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளும் போதெல்லாம் '' அன்புச் சகோதரா '' என்றுதான் இருவருமே குறிப்பிட்டு வருவார்கள்.

ஒரு சமயம் நேரு அவர்கள் வெளியிட்டிருந்த ஒரு கருத்துப் பற்றி, ஜெயப்பிரகாஷ் ஆத்திரம்



கொண்டு விட்டார். அதன் பிறகு நேருவுக்கு, அவர் கடிதம் எழுத வேண்டி வந்தபோது, வழக்கமான "அன்புச் சகோதரா" என்ற வாசகத்தை ஒதுக்கி வைத்துவிட்டு "அன்புள்ள இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களே" என்று குறிப்பிட்டிருந்தார் ஜெயப்பிரகாஷ்.

இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் நேரு உடனடியாக ஜெயப்பிரகாஷுக்குப் பதில் கடிதம் எழுதினார்.

"அன்புச் சகோதரா!

நம்முடைய சகோதர பாசத்தைக் கருத்து மாறுபாடுகள் ஏன் பிரிக்க வேண்டும்? என்றும் நாம் சகோதரர்களாகவே இருப்போம். அரசியல் அபிப்பிராய பேதங்கள் நம் அன்புக்குக் குறுக்கே நிற்க வேண்டாம்"—இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் நேரு.

அதனைப் படித்த ஜெயப்பிரகாசர் நேருவின் அன்புள்ளத்தை எண்ணி வியந்தார்; ஆத்திரத்தில் நிதானம் தவறிவிட்ட தனது கோப உள்ளத்தை எண்ணி வேதனையடைந்தார்.

* * *

1946-ஆம் ஆண்டு; நேரு அவர்கள் லாகூரிலிருந்து அமிருதசரசுக்குப் போய்க் கொண்டிருந்தார். வழியில் அவரது ஊர்தி பழுதடைந்துவிட்டது. அப்போது அந்த வழியிலே வந்த ஒருவர் அந்தக் காட்சியைப் பார்த்தார். தனது ஊர்தியை நேருவுக்குக் கொடுத்துதவினார். நேருவும் குறித்த நேரத்தில் அமிருதசரசுக்குப் போய்ப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

சில வருடங்கள் கழித்து அதே நபர் அலகாபாத்துக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது நேரு அங்கே இருந்தார்; எனவே, அவரைக் காண விரும்பினார். வழக்கமான ஆங்கிலப் பாணியில் உடையணிந்திருந்த அந்த நண்பர், தனது இல்லத்தரசியின் தூண்டுதலால் புதிதாகக் கதர் ஆடை வாங்கி அணிந்து கொண்டு ஆனந்தபவனத்துக்குச் சென்றார். அங்கே நேருவைச் சந்தித்தார்.

"என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான் தான் முன்பு ஒரு முறை— —" என்று இழுத்தார்.

உடனே நேரு குறுக்கிட்டார்.

"உங்களை எனக்கு அடையாளம் புரியவில்லை. அமிருதசரசுக்குப் போவதற்கு ஊர்தி கொடுத்துதவிய நண்பர் "சூட்" அணிந்திருந்தார். அவர் என்னை மீண்டும் பார்க்க வரும்போது தனக்குப் பழக்கமில்லாத உடையை அணிந்து இப்படி "பபூன்" போல வருவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை" என்றார்.

ஒருமுறை ஒருவரைப் பார்த்திருந்தாலும் கூட, அவரைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் திறமை நேருவிடம் இருந்தது என்பதற்கு இந் நிகழ்ச்சி சான்று.

* * *

இந்திய விடுதலைக்குப் பின்னர் — — —

ஒருநாள்.. — — — ....காலை!

நேரு தனது அலுவலகத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். ரோஜா மலரை அவருக்கு அணிவிப்பதற்காக, ஒரு சிறுமி, அவரது இல்லத்தில் காத்திருந்தாள். ஆனால் அவளால் அம்மலரை அவரிடம் சேர்ப்பிக்க முடியவில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாள். என்றாலும் அவள் தனது முயற்சிக்கு ஓய்வு கொடுத்துவிடவில்லை. ஒவ்வொருநாள் காலையிலும், அன்று மலர்ந்த புது ரோஜா மலருடன் நேருவின் இல்லத்து வாயிலில் காத்திருந்தாள். ஒருநாள்! அவள் ரோஜா மலரை ஏந்திக் கொண்டு காத்திருந்ததைக் கண்டுவிட்டார் நேரு. புன்னகை புரிந்தவாறு அம்மலரை வாங்கிக் கொண்டார். மிகுந்த விருப்பமுடன் தனது அங்கியில் பொருத்திக் கொண்டார். அந்தச் சிறுமியின் இதயம் கொள்ளை மகிழ்ச்சியடைந்தது. வீடு திரும்பினாள். அந்தக் காட்சியைக் கவனித்த அவர் வீட்டுத் தோட்டக்காரன், நேருவுக்கு ரோஜாவென்றால் பிடிக்கும் என்பதை அறிந்து கொண்டான். அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அன்றலர்ந்த ரோஜா மலரைப் பறித்து அவருக்கு அளித்துவந்தான். அவரும் தொடர்ந்து, அங்கியில் அணிந்து வந்தார். டெல்லியில் இருந்தபோது மட்டுமல்ல — அவர் எங்குச் சென்றாலும் ரோஜா மலரை அணிந்து வந்தார்.

—தொகுப்பு: எஸ். எஸ். சுந்தரம்.

"ரோகிணி—125" என்ற தலைப்பைக் கண்டதும், இது ஒரு நட்சத்திரமோ என்று எண்ணிவிடாதீர்கள்! "ரோகிணி-125" என்பது கேரளாவில் உள்ள 'தும்பா' ராக்கெட் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ராக்கெட்டின் பெயராகும்.

"ரோகிணி—125" என்ற இந்தியாவின் முதல் ராக்கெட், 9-10-1971 அன்று, சென்னையிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள 'சிகரி கோட்டா' (ஆந்திர மாநிலம்) ராக்கெட் தளத்திலிருந்து பறக்க விடப்பட்டது. பரிசோதனை வெற்றிகரமாக முடிந்தது. அதைப் பார்வையிட வந்த அணுசக்திக் குழுவின் இயக்குநர், திரு விக்ரம்சாராபாய் அவர்கள் "இன்னும் 10 ஆண்டுகளில் மற்ற நாடுகள் வான வெளி ஆராய்ச்சியில் எந்த அளவு முன்னேறி இருக்கிறதோ அந்த அளவு இந்தியாவும் முன்னேறி விடும்" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

10-10-1971 அன்று காலை மேலும் 2 ராக்கெட்டுகள் சிகரி கோடா தீவில் இருந்து பறக்க விடப்பட்டன. இரண்டு ராக்கெட்டுகளும் வெற்றிகரமாகப் பறந்து சென்றன. கடல் மட்டத்திலிருந்து 13 கிலோ மீட்டர் உயரம் பறந்து சென்றன. ராக்கெட்டில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்கள் தொடர்ந்து பூமிக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தன. இந்த ராக்கெட் ஒவ்வொன்றும் $2\frac{1}{2}$ மீட்டர் உயரமும், 40 கிலோ எடையும் கொண்டது.

371

அந்நியச் செலாவணிக்கு இந்தியக் காஃபி!

"இந்திய காபி என்றாலே, இன்னும் கொஞ்சம் அருந்த வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது!"

இப்படிக் கூறுகிறார்கள் அயல்நாட்டார் பல.

இந்திய காபி மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, பிரான்சு, பிரிட்டன், ஸ்வீடன், நார்வே, கிழக்கு ஜெர்மனி, யூகோஸ்லேவியா, சோவியத் யூனியன், போலந்து, ஹங்கேரி முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்திய காபியின் தரம் வெளி நாட்டில் பெரும் புகழ் பெற்றுள்ளது.

அயல் நாடுகளிலும் பெரும் புகழ் பெற்றுள்ள இந்திய காபி, சென்ற ஆண்டில் ஏற்றுமதியின் மூலம் 22·41 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இந்தியாவுக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது!

ஆனால், அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் இந்திய காபியில், 99 சதம் தென்னகத்தில் தான் விளைகிறது என்பது பலருக்குத் தெரியாது.

நம்நாட்டில் 1,28,475 ஹெக்டேர் நிலப்பரப்பில் காபி பயிரிடப்படுகிறது. இப்பரப்பில் 60 சதம் மைசூர் மாநிலத்திலும், 21 சதம் கேரள மாநிலத்திலும் 18 சதம் தமிழ் நாட்டிலும் தான் உள்ளது. ஆந்திரம், மராட்டியம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான்-நிக்கோபார் தீவுகளிலும் மிகவும் குறைந்த பரப்பில்தான் காபி பயிராகிறது. எனவே, இந்தியாவின் வளர்ச்சிக்குத் தேவையான அந்நியச் செலாவணியை இந்திய காபி மூலம் ஈட்டித் தருவதில் தமிழ் நாடும் கணிசமான அளவில் துணை நிற்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமையளிக்கும் செய்தியாக உள்ளது.

இந்தியாவில் 47,882 காபித் தோட்டங்கள் உள்ளன. இந்தியாவில் 'அராபிகா' என்ற ரகமும், 'ரொபாஸ்டா' என்ற ரகமும் தான் முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன. 'அராபிகா' ரகம் 76,739 ஹெக்டேரிலும், 'ரொபாஸ்டா' ரகம் 51,736 ஹெக்டேரிலும் பயிரிடப்படுகின்றன.

நம் நாட்டில் காபி உற்பத்தி ஆண்டிற்காண்டு அதிகரித்து வருகிறது. காபி வாரியம் 1970–71 ஆம் ஆண்டில் 1,08,000 டன் காபி விதைகளைப் பெற்றுள்ளது. இதில் 58,000 டன் 'அராபிகா' ரகமும் 50,000 டன் 'ரொபாஸ்டா' ரகமும் அடங்கியுள்ளன. இந்திய காபித் தொழில் கணிசமான முன்னேற்றம் அடைய காபி வாரியமே காரணம் என்றால் மிகையாகாது.

காபி வாரியம் வெளிநாட்டு வர்த்தக அமைச்சகத்தின்கீழ், சுய அதிகார நிறுவனமாக இயங்கி வருகிறது. காபி வாரியம் பின்கண்ட பணிகளைச் செய்கின்றன.

(1) காபிச் சாகுபடியாளருக்கு உதவி வழங்குவது.

(2) காபிச் சாகுபடி பற்றிய ஆராய்ச்சிக்கு உதவுவது.

(3) காபித் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வுப் பணிகளைச் செயல்படுத்துவது.

(4) காபி விற்பனை செய்வது.

(5) இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் காபி உபயோகத்திற்கு உதவுவது.

இந்திய காபித் தொழில் உறுதி பெற்றுள்ளது! இந்தியாவில் உள்ளவர்களுக்கு மட்டுமின்றி உலகின் மற்ற பகுதிகளிலும் உள்ள காபி பிரியர்களுக்கு இந்திய காபி ஊக்கத்தை ஊட்டுகிறது!



கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்கு யுகங்கள் உண்டென்றும் தற்போது நடப்பது கலியுகம் என்றும் நமது நாட்டில் சிலர் சொல்லி வருகிறார்கள். மூன்று யுகங்கள் போய்விட்டன என்பதை நாம் வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும் கூட இந்த யுகத்தைக் கலியுகம் என்று ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. காரணம் இந்த யுகம், விஞ்ஞான யுகம் என்பதை அகில உலகமே உணர்ந்து வருகிறது.

முன்பெல்லாம் வாழ்க்கையைப் பற்றி எவரும் அக்கறை கொண்டது கிடையாது; ஆனால் இப்போது .... அப்படியில்லை. முன்பெல்லாம் எதைச் சொன்னாலும் நம்பி வந்த காலம் ஒன்றிருந்தது. இப்போது எதையும் சாரண காரியம் கொண்டு அலசிப் பார்த்துத் தெளிவடையத் தொடங்கி விட்டனர் மக்கள். மக்களின் இந்தத் தெளிவுக்குக் காரணம், பகுத்தறிவாளர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரம் மட்டுமல்ல—விஞ்ஞான மேதைகளின் விஞ்ஞானமெய்ம்மைகளும் ஆகும்.

விஞ்ஞானத் துறையில் நமது இந்திய நாடு, வியத்தகு முன்னேற்றம் அடையவில்லை என்றாலும் கூட, விரும்பிப் பாராட்டத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

நமது தமிழ்நாடு அண்மைக் காலமாக, விஞ்ஞானத்தில் ஓரளவு முன்னேற்றம் கண்டு வருகிறது. பழமைக் கருத்துக்களும், மடமைக் கருத்துக்களும் நம்மை விட்டு விலகிச் செல்வதே ஒரு வகை முன்னேற்றம் என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனையோ ஆண்டுகளாக மூட நம்பிக்கை என்னும் இருளில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட தமிழ்நாடு, விஞ்ஞானக் கதிரவனின் கதிரொளிபட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக விழிப்படைவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்குச் சான்றுதான் கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள "விஞ்ஞானக் கண்ணாடிப் பொருள்கள் உருவாக்கும் பயிற்சி நிலையம்."

இந்தியாவிலேயே இது போன்ற பயிற்சிப் பள்ளி இதைத் தவிர வேறேதும் கிடையாது என்பதிலிருந்து நமது தமிழ் நாட்டின் விஞ்ஞான முன்னேற்றம் தெளிவாகப் புலப்படும்.

இங்கே தயாரிக்கப்படும் கண்ணாடிப் பொருள்களை டெல்லி பம்பாய், ஆந்திரம், கேரளம் முதலிய மாநிலங்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றன என்ற உண்மையை அறியும் போது, தமிழ்நாடு விஞ்ஞானத் துறையில் முன்னேறி வருகிறது என்ற கருத்து உறுதியாகிறது.

விஞ்ஞான ஆய்வுகளுக்குத் தேவைப்படும் கண்ணாடிச் சாதனங்களைத் தயாரிப்பதற்குரிய பயிற்சியைத் தரும் இந்தப் பயிற்சி நிலையம் 1950-ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது. ஒவ்வோர்ஆண்டும் 10 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தனர். அவர்களது பயிற்சிக் காலம் ஓராண்டு.

1965-ஆம் ஆண்டிலிருந்து, பயிற்சிக் காலம் இரண்டாண்டுகளாக மாறியிருக்கிறது. இதில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையும் 20 ஆக உயர்ந்திருக்கிறது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர்த் திங்களில் பயிற்சி தொடங்குகிறது. கல்லூரியில் சேர்வதற்குத் தகுதி படைத்த வகையில் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்ற பதினாறு வயதிலிருந்து 20 வயது வரை உள்ளவர்கள் தான் இந்தப் பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். எல்லாப் பயிற்சியாளர்களுக்கும் முதல் ஆண்டு நாற்பது ரூபாயும், இரண்டாம் ஆண்டு ஐம்பது ரூபாயும் உதவித் தொகை தரப்படுகிறது. பயிற்சி அனைத்தும் செயல் முறைப் படிப்புத்தான்.

இது போன்ற பயிற்சிப் பள்ளி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. நமது தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. டெல்லியில் உள்ள தேசிய இயல்பியல் ஆய்வுச் சாலையிலும் (National Physics Laboratory) பம்பாயில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையத்திலும் (Tata Institute of Fundamental Research) இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவை நமது பயிற்சி நிலையத்தைப் போல அல்ல. பயிற்சியாளர்கள் (Trainees) சிலரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். நான்கு அல்லது ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் "தொழில் கற்றுக் கொள்வோர்" (Apprentices) என்ற முத்திரையைத் தந்து விடுகிறார்கள். இந்த

நிலையைப் பார்க்கும் போது நமது சென்னைப் பயிற்சி நிலையம் சிறந்த பயிற்சி நிலையம் என்பது தெளிவாகிறது.

அண்மையில் அறிஞர் அண்ணாவின் 63-வது பிறந்த நாள் விழாவின் போது, கோவையிலும் இது போன்ற பயிற்சி நிலையம் ஒன்று சிறிய அளவில் துவக்கப்பட்டிருக்கிறது.

சென்னைப் பயிற்சி நிலையம் 10 இலட்ச ரூபாய்த் திட்டத்தில் பெரிய அளவில் உருவாவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகள் அனைத்துக்கும் அனுமதி கிடைத்துவிட்டது. 1972-க்குள் இந்தத் திட்டம் நிறைவேறிவிடும். தற்போது நிலையம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகிலேயே 4,880 ச. அடி பரப்பில் கட்டடம் உருவாக இருக்கிறது.

இங்குள்ள இயந்திரங்களில் பல, இங்கிலாந்து நாட்டிலிருந்து இறக்குமதியானவை. வர இருக்கும் இயந்திரங்களில் சில இங்கிலாந்திலும், சில, ஜெர்மனியிலும் தயாரானவை.

இங்கு உருவாக்கப்படும் விஞ்ஞானக் கண்ணாடிப் பொருட் கருவிகள் தரம் மிகுந்தவை. வணிகச் சந்தையில் முதல் தரமாகக் கருதப் படுபவை. 'ஏ' சான்றிதழ் கொண்டவை. இந்த நிலையத்தைத் தவிர வேறு எந்த நிலையமும் தனது தயாரிப்புகளுக்கு 'ஏ' சான்றிதழ் தருவதில்லை.

திரவங்களின் கனபரிமானத்தை அளவிடுவதற்குப் பயன்படும் கருவி, இங்கே மிகமிகச் சரியான முறையில்—துல்லிதமான முறையில் தயாரிக்கப்படுகிறது. தரம் இங்கே கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தச் சிறப்பினால் தான் இவை 'ஏ' சான்றிதழ் பெறுகின்றன.

சூரத்தின் அருகில் உள்ள உத்னா என்ற ஊரில் உள்ள பரோடா ரேயான் கழகம் என்னும் நிறுவனம், சென்ற ஆண்டு, இந்தப்பயிற்சி நிலையத்தின் 'ஏ' சான்றிதழ் பெற்ற கண்ணாடிப் பொருள்களை ஏராளமான அளவில் வாங்கிப் பயன்படுத்தியிருக்கிறது.

அளவை உருளைகள் (Measuring Cylinder) முன்பெல்லாம் வெளி

கிரோசின் வாயுவின் உதவியினாலும் வாயினால் ஊதுவதின் மூலமும் கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கப்படும் காட்சி



நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு வந்தது. அந்தக் கருவியை நமது சென்னைப் பயிற்சி நிலையம் சிறந்த விதத்தில் தயாரிப்பதால் அனைவரும் தங்கள் தேவைக்கு இந்தப் பயிற்சி நிலையத்தையே நாடுகிறார்கள்.

கண்ணாடிப் பொருள்கள் அழுகும் பொருள்களல்ல; ஆகவே அவற்றைத் தயாரித்துக் குவித்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் இந்தப் பயிற்சி நிலையம் அப்படிச் செய்வதில்லை. தேவைக் கேற்பவே இங்கே தயாரிப்பு நடைபெறுகிறது. உணவுக் கடைகளில் உத்தரவு கொடுத்ததும் சூடாக உருவாக்கித் தரும் உணவுப் பொருள்களைப் போலவே, வெளியாரின் தேவைக் கடிதங்களைக் கண்டதும் உடனடியாகக் கண்ணாடிப் பொருள்களை உருவாக்கி அனுப்புகிறார்கள்.

விஞ்ஞானத் துறை—தொழில் நுணுக்கத் துறை—தொழில் துறை ஆகிய துறைகளில் பயன்படும் கண்ணாடிக் கருவிகள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

கண்ணாடிப் பொருள்களை உருவாக்குவதற்குச் சில மூலப் பொருள்கள் தேவை. அவற்றை உலைகளில் போட்டு உருக்கவும் வேண்டும். ஆனால் விஞ்ஞானப் பொருள்கள் செய்யும் இந்தப் பயிற்சி நிலையம் இது போன்ற மூலப் பொருள்களைத் தேடுவதில்லை. அரை அங்குலம், முக்கால் அங்குலம், ஓர் அங்குலம் இப்படிப் பலவகைச் சுற்றளவுகள் கொண்ட கண்ணாடிக் குழாய்களைப் (Tubes) பம்பாயிலிருந்து வரவழைத்து, அவற்றைக்கொண்டு உருவாக்குகிறது.

முன்பெல்லாம் இந்தக் கண்ணாடிக் குழாய்கள் கூட, வெளிநாட்டிலிருந்து தான் வரவழைக்கப்பட்டன. தற்போது, நமது இந்தியாவிலேயே தரமான கண்ணாடிக் குழாய்கள் தயாரிக்கப்படுவதால் அவற்றையே இந்தப் பயிற்சி நிலையம் வாங்கிப் பயன்படுத்துகிறது.

கிரோசின்—ஆக்சிஜன் இரண்டையும் இணைத்து கிரோசின் வாயு உருவாக்கப்படுகிறது. இந்த வாயுவின் உதவியினால் கண்ணாடிப் பொருள்கள் செய்யப் படுகின்றன. இதன் உருகுநிலை 1,000 டிகிரி சென்டிகிரேட் ஆகும்.



பயிற்சி நிலையத்தில் தயாரிக்கப்பட்டுள்ள பலவித விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள்

கிரோசின் வாயுவை வாயினால் ஊதுவதன் மூலம் கண்ணாடிப் பொருள்களை உருவாக்குகிறார்கள். இது மிகவும் நுணுக்கமான கலை.

பொதுவாக, அரசினர் தொடர்புள்ள நிறுவனம் என்றால், அதில் நட்டம் ஏற்படும் என்ற கருத்து பரவலாக உள்ளது. அந்தக் கருத்து இங்கே பொய்யாக்கப்பட்டிருக்கிறது. நல்ல இலாபத்துடன் நடைபோடுகிறது இந்தப் பயிற்சி நிலையம்.

20 தொழிலாளர்கள்தான் இங்கே பணிபுரிகிறார்கள். அதிலும் 10 பேர்தான் தொழில் நுணுக்கம் அறிந்தவர்கள் (Skilled) என்ற பெயரைப் பெற்றவர்கள். அவர்களைக் கொண்டே ஆண்டொன்றுக்கு 2 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்களை இந்தப் பயிற்சி நிலையம் தயாரித்து வருகிறது என்றால், இது மகத்தான பணி என்றுதான் கூற வேண்டும்.

இதில் இன்னொரு சிறப்பும் இருக்கிறது. இங்கே பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிலாளர்களாக மட்டும் பணிபுரிவதில்லை; பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழி காட்டிகளாகவும் பணிபுரிகிறார்கள். பயிற்சியாளர்கள், நவீன வணிகச் சந்தைக் கேற்ற பொருள்களைத் தயாரிப்பதற்கு இந்த வழிகாட்டிகள் உதவுகிறார்கள்.

கலை நுணுக்க உதவியாளர் நால்வர், பயிற்றுவிப்போர் நால்வர் இங்கே பணிபுரிகிறார்கள். அவர்களெல்லாம் ஏறக்குறைய 12 ஆண்டு அனுபவங்களுக்குச் சொந்தக்காரர்கள். அவர்களின் அனுபவம்தான் இந்தப் பயிற்சி நிலையத்திற்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது. இவர்களில் சிலர், இதே பயிற்சி நிலையத்தின் முன்னாள் பயிற்சியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ந்து வெளியேறும் மாணவர்கள் உண்மையிலேயே பட்டை தீட்டப்பட்ட வைரங்களாகத் திகழ்கிறார்கள். அவர்களில் சிலர், சொந்தத்தில் தயாரிப்பு நிறுவனங்களைத் திறம்பட நடத்தி வருகிறார்கள். சிலர், புகழ் பெற்ற நிறுவனங்களான இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிலையம், அணு ஆராய்ச்சித் துறை, பாரத் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய ஆய்வுச் சாலை போன்ற ஆராய்ச்சி நிலையங்களிலும் பணிபுரிகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், இங்கே பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர்கள் இந்தியா முழுவதும் பணிபுரிகிறார்கள்.

இந்தப் பயிற்சி நிலையம் ஓரளவு புகழ் பெற்றுக் கொண்டு வருகிறது. ஏனென்றால் இங்குத் தயாரிக்கப்படும் கண்ணாடிப் பொருள்கள் பயன் படாத துறையே இல்லை.

கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், மதுரை வேளாண்மைக் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏனைய மருத்துவக் கல்லூரிகள், பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் உள்ள பள்ளிகள், மாநில அரசின் கீழ் உள்ள சின்கோனாத் துறையில் இணைக்கப்பட்ட ஆய்வுக் கூடங்கள், வருவாய் ஆராய்ச்சி ஆய்வுச் சாலைகள், புது டெல்லியிலுள்ள மைய அரசின் அகில இந்திய விஞ்ஞான நிலையம், அரவங்காட்டிலுள்ள கார்பைட் தொழிற்கூடம் போன்ற அரசுத் துறைகளின் தேவைகளை நிறைவேற்றி வைக்கிறது.

பெரும் பெரும் முதலீட்டுடன் நடத்தப்பெறும் சில தனியார் தொழிலகங்களான மதராஸ் ரீபைனரி லிமிடெட் நிறுவனம், திருச்சி பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம், மேட்டூர் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், தூத்துக்குடி சால்ட் அண்ட் மெரின் கெமிக்கல்ஸ் நிறுவனம் போன்றவைகளுக்கும், இந்தப் பயிற்சி நிலையம் கண்ணாடிப் பொருள்களை அனுப்பி வருகிறது.

வளர்ச்சித் திட்டம் உருவாகத் தொடங்கி விட்டால்—நிறைவேறிவிட்டால்—இந்தப் பயிற்சி நிலையத்தின் புகழ் ஓங்கிவிடும் என்பது உறுதி. இந்தியாவின் முழுத் தேவையையும் நிறைவேற்றும் வகையில்—தன்னிறைவு பெற்று ஒளி வீசும் நிலையமாக இந்தப் பயிற்சி நிலையம் திகழப் போவது திண்ணம். இந்த இலட்சியத்தை நோக்கித்தான் இந்தப் பயிற்சி நிலையம் நடைபோடுகிறது.

இங்கே நடைபெறும் மற்றொரு நுணுக்கமான கலைப் பயிற்சி—நிறமிகு மின் விளக்குத் (Neon Sign Light) தயாரிப்பாகும். இதைப் பற்றிய சுவைமிகு செய்திகளை அடுத்த இதழில் பார்ப்போம்.





மாவட்டச் செய்திகள்

செங்கை மாவட்டத்தின் முப்பெரும் சாதனைகள்

செங்கற்பட்டு மாவட்டம் மூன்று அரும் பெரும் சாதனைகளைச் செய்துள்ளது. அந்தச் சாதனைகளின் விவரம் வருமாறு:—

மின்சாரம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டு, மின்சாரம் பெறுத கிராமம் 'செங்கையில் இனி இல்லை' என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

குடிநீர்

செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் சேர்ப்பு

செங்கற்பட்டு மாவட்டத்தில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் வயது வந்த எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

மேற்கூறிய முப்பெரும் சாதனைகளைச் செய்து செங்கற்பட்டு மாவட்டம், மற்ற மாவட்டங்களை விட முன்னணியில் நிற்கிறது. இந்தத் தகவல்களைச் செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சித்தாராமதாஸ், ஐ. ஏ. எஸ். அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதலிடம்

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகக் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3,00,000 பட அட்டைகள் மூலம் ரூபாய் 1,50,000-மும், ரொக்க நன்கொடை வசூல் மூலம் ரூபாய் 1,00,000-மும் ஆக ரூபாய் 2½ இலட்சம் வசூலிக்க வேண்டுமென்று குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், கோவை மாவட்டம் 26-9-71 அன்று காலை 10-00 மணிவரை ரூபாய் 8,19,000 ரூபாயைப் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு வழங்கியுள்ளது. இத்தகவலைக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச். பி. என். ஷெட்டி, அவர்கள் சுண்டப்பாளையத்தில் நடைபெற்ற பட்டா வழங்கு விழாவில் அறிவித்தார்.

தமிழகத்திலேயே கோயம்புத்தூர் மாவட்டந்தான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி வசூலில் முதன்மை வகிக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிருவாகத் திறமை

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், வரிகள் அனைத்தையும் நிலுவை ஏதுமின்றி இரண்டாண்டுகளாக வசூலித்து ஒரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில் 34 ஊராட்சிகள் அடங்கியுள்ளன. பாபநாசம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சேரவேண்டிய மொத்த வரித்தொகை ரூ. 65,266-12 யும் வசூலித்துள்ளனர். இத்தொகையை வசூலிப்பதற்கென எவ்வித வழக்கு மன்ற நடவடிக்கையோ, சொத்துக்களைக் கைப்பற்றி வரி திரட்டும் முறைகளையோ மேற்கொள்ளாமல், பொது மக்களைப் பன்முறை அணுகி, வரி செலுத்துவதன் இன்றியமையாமையைப் பற்றி எடுத்துக் கூறி, வரிகள் அனைத்தையும் இரண்டே திங்களில் வசூலித்துள்ளது மிகவும் குறிப்பிடத் தகுந்த செயலாகும்.

பாபநாசம் ஊராட்சி ஒன்றியம் சென்ற ஆண்டிலும் இதே போன்று மொத்த வரித்தொகையான 61,321-36, ரூபாயை நிலுவை ஏதுமின்றி வசூலித்துள்ளது.

இனிக்கும் தகவல்

செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டுவிட்டது என்று கிடைத்துள்ள செய்தி, 1972-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் மின்சார வசதி பெறுத கிராமமே இல்லையென்று கூறும் நிலையை இன்றைய தமிழ்நாடு அரசு உருவாக்கிவிடும் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளதுடன், தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களின் அயராத முயற்சியையும், ஓயாத உழைப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து இன்னொரு புரட்சி

இன்றையத் தமிழ்நாடு அரசின் இடைவிடா முயற்சியால் ''பசுமைப் புரட்சி'' (Green Revolution) தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகளிலும் வெகு வேகமாகப் பரவி வருகிறது. இதன் பயனாக, நந்தமிழ் நாட்டில் நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த உணவுப் பற்றுக்குறை மறைந்து, பசிப்பிணி அகன்று, உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்பட்டுள்ளதுடன், அண்டை மாநிலங்களுக்கும் அரிசி அனுப்பி வரும் உன்னத நிலை மலர்ந்துள்ளது.

பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து, இன்றையத் தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஊக்கத்தாலும், ஆக்கத்தாலும் தமிழ்நாட்டில் தற்பொழுது ''வெண்மைப்புரட்சி'' (White Revolution) அரும்பியுள்ளது. பருத்தி உற்பத்தியில் ஏற்பட்டுள்ள விரைவான முன்னேற்றங்களையே ''வெண்மைப் புரட்சி'' என்று பருத்தித் தொழில் நுட்பக்கலைஞர்களும், வேளாண்மை வல்லுநர்களும் வர்ணிக்கின்றார்கள். தற்பொழுது அரும்பாக உள்ள ''வெண்மைப் புரட்சி'' மலர்ந்து விடுமானால், தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே ''பணம்'' என்னும் 'மணம்' அதாவது 'பொருளாதார மணம்' கிடைக்கும்.

செயற்கை நூலிழைகளின் போட்டி

இன்றைய நாகரிக உலகில் செயற்கை நூலிழைகள் (Synthetic Fibres) கண்டு பிடிக்கப் பட்டுப் புகழ் பெற்றிருந்தாலும், பலகோடி மக்களுக்கு வாழ்வளிக்கும் பருத்தியே, இந்தியாவின் வணிகப் பயிர்களில் அரசனாகவும் (King), பருத்தித் துணிகளே இந்தியத் தொழிற் பொருள்களில் அரசியாகவும் (Queen) விளங்குகின்றன. 'டெரின்', 'நைலான்', 'ஆர்லான்' முதலிய செயற்கை நாலிழைகளுடன், பருத்தி நூலிழைகள் கடும் போட்டியிட்டு வருகின்றன. நூலிழைகளில் முக்கிய இடத்தைப் பெற்று வரும் பருத்தியின் நிலைமைசிர்குலையாதிருக்கப் பருத்தி நூலிழைகள் விலை மலிவானதாகவும், தரம் மிகுந்ததாகவும் இருக்க வேண்டும். எனவே, மிகு பயன் தரக்கூடிய, தரம் மிகுந்த, அதி நீள இழைகொண்ட பருத்தி ரகங்களை உருவாக்கி, உழவர் பெருமக்களுக்கு வழங்கிடவும், பருத்திச் சாகுபடி செய்வதற்குத் தேவையான இரசாயன உரம், பூச்சி-பூஞ்சாள மருந்துகள், கருவிகள், கடன் தொகைகள் ஆகியவை காலத்தில் கிடைத்திடவும் தமிழ்நாடு அரசு ஆவன செய்து வருகிறது.

பருத்தி உற்பத்தியில் பற்றுக்குறை ஏன்?

இந்தியாவில் தற்பொழுது ஆண்டுதோறும் 80 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்படுகிறது. இதில் 82 சதம் மானாவாரியாகச் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் 4.2 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி பயிரிடப்படுகிறது. இப் பரப்பளவில் 59 சதம் மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது.

பருத்திச் சாகுபடியாகும் பரப்பளவைப் பொறுத்த வரையில், உலகிலேயே இந்தியாதான் முதலிடம் வகிக்கிறது. பருத்தி உற்பத்தியைப் பொறுத்த வரையில், உலகிலேயே இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால் பருத்தியின் சராசரி ஹெக்டேர் விளைச்சலைப் பொறுத்த வரையில், பருத்தி உற்பத்தி செய்யும் பெரிய நாடுகளில் இந்தியாதான் கடைசியாக உள்ளது என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நாடு.	சராசரி ஹெக்டேர் மகசூல் பஞ்சு (கிலோவில்).
ஐக்கிய அரபுக் குடியரசு.	747.5
சோவியத் நாடு.	733.5
சிரியா ..	615.2
அமெரிக்க ஐக்கிய நாடுகள்.	581.0
சூடான் ..	339.8
சைனு ..	269.2
பாகிஸ்தான் ..	257.2
இந்தியா ..	123.7
தமிழ்நாடு ..	207.0

இவ்வாறு சராசரி ஹெக்டேர் மகசூலில் பின் தங்கி இருப்பதனுலேயே நமது தேவையை ஈடு செய்து கொள்ள வெளிநாடுகளிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறோம்.



இறக்குமதியால் ஏற்படும் இழப்பு

இந்தியாவில் உள்ள பருத்தி ஆலைகள் ஆண்டு தோறும் சுமார் 58 இலட்சம் பேல் பஞ்சிலிருந்து நூலையும், துணிகளையும் உற்பத்தி செய்து வருகின்றன. ஆனால் இந்தியர்வில், ஆண்டு தோறும் சராசரியாக 50 அல்லது 51 இலட்சம் பேல் பஞ்சு மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, இந்தியா ஆண்டு தோறும் சுமார் 7 அல்லது 8 இலட்சம் பேல் பஞ்சை, வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பஞ்சில் ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1—6/32 அங்குலமும், அதற்கு மேற்பட்ட நீள இழையும் கொண்ட அதி நீள இழைப் பருத்தி (Extra-long staplo cotton) வகையைச் சார்ந்ததாகும். இவைகள், தற்பொழுது முக்கியமாக ஐக்கிய அரபுக் குடியரசு, சூடான் ஆகிய நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் 3 இலட்சம் பேல் அதி நீள இழைப் பஞ்சின் மதிப்பு ஆண்டிற்குச் சுமார் 40 கோடி ரூபாய் ஆகிறது. மீதி 4 அல்லது 5 இலட்சம் பேல் பஞ்சு, 1-2/32 முதல் 1-6/32 அங்குல இழை நீளமுள்ள பருத்தி ரகத்தைச் சேர்ந்ததாகும்; இவ்வகைப் பஞ்சை, இறக்குமதி செய்வதற்காக இந்தியா ஆண்டு தோறும் சுமார் 45 கோடி ரூபாயைச் செலவிட்டு வருகிறது. ஆகவே, இந்தியா ஒவ்வொரு ஆண்டும் சுமார் 85 கோடி ரூபாயை அந்நியச் செலாவணியாக இழந்து வருகிறது. இந்தப் பேரிழப்பைத் தவிர்க்க வேண்டுமானல், நம் நாட்டுப் பருத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டியதும், அதுவும் குறிப்பாகத் தரம் மிகுந்த அதி நீள இழைப்பருத்தி ரகங்களின் உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டியதும் நமது தலையாய கடமையாகும்.

வாழ்வளிக்கும் பருத்தி

பருத்தி, பல கோடி மக்களுக்கு வாழ்வளித்து வருவதால், பருத்தியை நம்பியுள்ள மக்களின் வாழ்வு வளம்பெற, நமது நாட்டில், தரம் மிகுந்த அதி நீள இழைப் பருத்தி ரகங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது.

கிறிஸ்து பிறப்பதற்குநெடுநாட்களுக்கு முன்பே, நமது நாட்டின் நெசவுத் தொழில் தனித்திறமை பெற்றுச் சீரோடும் சிறப்போடும் விளங்கி வந்திருந்தாலும், இந்த நூற்றுண்டின் துவக்கத்திலேயே பருத்திச் சாகுபடியிலும், பருத்தி பற்றிய தொழில் நுட்பவியலிலும் அறிவியல் அடிப்படையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டதில் தமிழ்நாட்டிற்கே பெரும்பங்கு உண்டு என்பதை நாம் பெருமையோடு கூறிக்கொள்ளலாம்.

வெண்மைப் புரட்சி அரும்பிய காரணம்

1929 ஆம் ஆண்டில் 950 கிலோவாக இருந்த பாசனப் பருத்தியின் சராசரி ஹெக்டேர் மகசூல், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் கொண்ட அரு முயற்சியின் விளைவாக, 1968-ஆம் ஆண்டில் 1,350 கிலோவாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் 28/32 அங்குலமாக இருந்த பருத்தியின் இழைநீளம் 1-6/32 அங்குலமாகவும், 33 சதமாக இருந்த அரைவைச் சதவீதம் 37 சதமாகவும் உயர்த்தப் பட்டுள்ளது. இதுபோலவே, மானாவாரி கருங்கண்ணிப் பருத்தியின் சராசரி ஹெக்டேர் மகசூல் 300 கிலோவிலிருந்து 470 கிலோவாகவும், இழை நீளம் 25/32 அங்குலத்திலிருந்து 31/32 அங்குலமாகவும், அரைவைச் சதவிகிதம் 28-லிருந்து 36ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. எனவே, இந்தியாவில் "வெண்மைப் புரட்சி" அரும்புவதற்குத் தமிழ்நாடே மூல காரணம் என்றுல் மிகையல்ல!

தமிழ்நாட்டின் மாபெரும் சாதனை

தமிழ் நாட்டில் 1968-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் 165 நாட்கள் வயதுடைய எம்.சி.யூ.5(M.C.U.5)என்ற பருத்திரகம் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப் பட்ட இந்த ரகம் ஒரு மாபெரும் சாதனையாகும். இந்தியாவில் அமெரிக்கப் பருத்தியின் தரம் மேம்படுத்தும் பணியில், எம்.சி.யூ. 5 ரகப் பருத்தி வெளியிடப் பட்டது யாராலும் அழிக்க முடியாத ஒரு அடையாளச் சின்னமாக அமைந்துள்ளது. உண்மையிலேயே, இந்த ரகம் 3 அல்லது 4 ஆண்டுகள் முன்பாகவே வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் துறைஆராய்ச்சியாளர்கள் காலத்தைப் பொன்னுகக் கருதி, ஒரே ஆண்டில் 2 தடவை இந்த ரகத்தைப் பயிரிட்டு, அதே நேரத்தில் பல்வேறு நிலைச் சோதனைகளையும் தவருமல் நடத்தியதாலேயே இந்தரகப் பருத்தியை, 3 அல்லது 4 ஆண்டுகள் முன்கூட்டியே வெளியிட முடிந்தது. இந்த அரும் பணியை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களையும், அதற்கு வேண்டிய நிதி உதவி செய்த இன்றைய தமிழ்நாடு அரசையும், பருத்திச்

சாகுபடி செய்யும் உழவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள் என்பது உறுதி.

எம். சி. யூ. 5 ரகப் பருத்தியின் இழைநீளம் 1-6/32 அங்குலம் இருப்பதாலும், இழைகள் வலிமையாகவும், நுண்ணியதாகவும் இருப்பதாலும், இந்த ரகப்பருத்தியைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடிகிறது. எனவே எம்.சி.யூ. 5 ரகப் பருத்திச் சாகுபடியாளர்களுக்கு ஹெக்டேருக்கு ரூபாய் 1,000 கூடுதல் இலாபம் கிடைக்கிறது. அத்துடன் இந்த ரகம், பருத்தி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், நெசவு ஆலைகளுக்கும் பயன் தரக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு பருத்திச் சாகுபடியாளர்கள், வியாபாரிகள், நெசவு ஆலையினர் ஆகிய முத்தரப்பினருக்கும் பெரும் பயனளிப்பதாக இருப்பதனுலேயே, வெளியிடப்பட்ட இரண்டாம் ஆண்டிலேயே (1970–71), இந்த ரகம் ஆந்திர மாநிலத்திலும், மகாராட்டிர மாநிலத்திலும் குறிப்பிடத் தகுந்த பரப்பளவில் பரவியுள்ளதுடன், தமிழ் நாட்டில் 50,000 ஹெக்டேர் பரப்பில் பரவியுள்ளது. இந்த ஆண்டு (1971–72) குளிர் காலத்தில், தமிழ்நாட்டில் குளிர்காலப் பருத்திச் சாகுபடியாகும் 80,000 ஹெக்டேர் பரப்பு முழுவதும் எம்.சி.யு. 5 பரவி விடும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

இதன் பயனய், இந்த ஆண்டின் குளிர் காலப் பருத்தியிலிருந்து மட்டும் ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1-6/32 அங்குல இழை நீளமுள்ள பஞ்சு உற்பத்தியாகிவிடும். இதனல், ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1-6/32 அங்குல இழை நீளமுள்ள பஞ்சு இறக்குமதியைக் குறைத்துவிடக் கூடுமாதலின், 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடிவதுடன், தமிழ் நாட்டில் எம்.சி.யு. 5 பருத்திச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கும் ஏறத்தாழ 8 கோடி ரூபாய் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

"சுஜாதா" தோன்றியது

எம்.சி.யு. 5 ரகப் பருத்தி வெளியிடப்பட்டதற்கு அடுத்தாற்போல், தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி அரும்புவதற்கு முக்கிய காரணமாக உள்ளது "சுஜாதா" என்று பெயரிடப்பட்ட எகிப்திய 'பார்படென்ச்ஃ' பருத்தி வெளியிடப்பட்டதேயாகும்.



சுஜாதா பருத்தியின் இழை நீளம் 1¼ அங்குலம் உள்ளதாலும், அதன் இழைகள் அதிக வலிவுள்ளதாக இருப்பதாலும் 80 முதல் 100-ஆம் எண் நூல் வரை நூற்க முடிகிறது. இந்த அதிநீள இழைப் பருத்தியை ஆராய்ச்சி மூலம் உருவாக்கியவர்கள் தமிழ்நாட்டு ஆராய்ச்சியாளர்களே என்பதும், அந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டதும் தமிழ் நாட்டில் தான் என்பதும் இந்திய "வெண்மைப் புரட்சி" வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவைகளாகும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின், கோயம்பத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் "சுஜாதா" உருவாக்கப்பட்டு, 1969-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பகுதியில் சாகுபடி செய்ய வெளியிடப்பட்டது. இந்த ரகம், ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் "கிசா-68", "மெனேபி" என்ற ரகங்களை விடச் சிறந்தது.

முன்னேடித் திட்டம்

எம்.சி.யு. 5, சுஜாதா ஆகிய இரு ரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பருத்தியை, நெசவு ஆலைகளின் தேவையுடன் ஈடுபடுத்திடவும், இந்த ரகங்களைக் கொண்டு இறக்குமதி செய்யும் பஞ்சின் அளவைக் குறைத்திடுவதற்குள்ள வாய்ப்பை விளக்கிடவும் வேண்டி, கோயம்புத்தூர் பகுதியில், ஒரே இடத்தில் அவைகளைப் பயிரிடும் ஒரு முன்னேடித்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. புதிய முயற்சிகளில் துணிவுடன் ஈடுபட்டு உழவர்களுக்கு நலம் பயக்கும் பணிகளைச் செய்யும் கூட்டுறவுச் சங்கமாக விளங்கும் துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம் இம்முன்னேடித் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு குளிர் காலத்தில் (ஆகஸ்ட்—செப்டம்பர் விதைப்பு) எம்.சி.யு. 5, சுஜாதா ரகங்கள் ஒவ்வொன்றிலும் 2,000 ஏக்கர் பயிரிடும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ரகப் பருத்திகளுக்கும் உறுதியான விற்பனை வசதியை ஏற்படுத்தவேண்டுமென்பதற்காக துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம், இறக்குமதி செய்யப்படும் பஞ்சில் பெருமளவைத் தற்சமயம் பயன்படுத்தி வரும் பம்பாயிலுள்ள, முற்போக்கு நெசவு ஆலை ஒன்றுடன் (கட்டாவ் நெசவு ஆலை) ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அந்த நெசவு ஆலை, உழவர்களுக்குப் பயன் தரக்கூடிய அடிப்படை விலை கொடுப்பதாக உறுதியளித்துள்ளது. கூட்டுறவுச்சங்க உறுப்பினராக உள்ள, பருத்தி சாகுபடி செய்யும் உழவர்களால் உற்பத்தி செய்யப்படும் எம்.சி. யு. 5, சுஜாதா ரகங்களின் மகசூல் முழுவதையும் அடிப்படை விலையிலோ அல்லது அதற்கும் அதிகமான விலையிலோ, அந்த நெசவு ஆலை வாங்கிக் கொள்ளும். இவ்விரு ரகங்களையும் பயிரிடுவதற்குத் தேவையான விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள், கடன் தொகைகள் ஆகியவற்றைக் கூட்டுறவுச் சங்கம் வழங்கி வருகிறது.

இந்த முன்னேடித் திட்டம் இந்த ஆண்டில் (1971–72) வெற்றிகரமாக நிறைவேறிவிடுமானல், நம் தமிழ் நாட்டில் கண்டுபிடிக்கப் பட்ட எம்.சி.யு. 5, சுஜாதா ரகங்கள் தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் நீண்ட இழைப் பஞ்சுகளுக்கு மாற்றுப் பொருளாக (import substitution) விளங்கவல்லது என்பது புலனகிவிடும். அத்துடன் தமிழ் நாட்டில் வெண்மைப் புரட்சியும் மலர்ந்து மணம்வீசத் தொடங்கிவிடும்.

இவ்விரு அதிநீள இழைப் பருத்திகளின் உற்பத்தியும், அவைகளின் விற்பனையும் திறமையாக இணைக்கப்படுமானல், இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகளில், தமிழ் நாட்டில் கோடையிலும் குளிர் காலத்திலும் பாசனப் பருத்தியாகச் சாகுபடி செய்யப்பட்டு வரும் பரப்பளவு முழுவதிலும் எம்.சி.யு. 5 பரவிடக்கூடும்; அதுபோலவே, சுஜாதா ரகமும் குறைந்தது 10,000 ஹெக்டேரிலாவது பரவிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது மாற்றுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும், தற்பொழுது ஆண்டு தோறும் இந்தியா இழந்து வரும் அந்நியச் செலாவணியைச் சிக்கனப்படுத்துவதற்கும் வழி பிறக்கும்.

மைய அரசின் உதவி

மைய அரசின் மூன்ருண்டுத் திட்டப்படி, கோவை மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் முறையே பாசன, மானவாரிப் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் புதிய ரகப் பருத்தி விதைகள் பிரபலமாக்கப்படுகின்றன. அத்துடன்

தேவையான அளவு உரமிடுதலும், பயிர்ப் பாதுகாப்பு முறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவைகளுக்கு மைய அரசு நிதியளித்து வருகின்றது.

மேலும் ஒரு புதிய பருத்தி

தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் எகிப்தியப் பருத்தியில் சிறந்து விளங்கும் "கிசா-45" என்ற ரகத்திற்குச் சமமாக உள்ள "சுவின்" (Suvin) என்ற புதிய ரகமும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கோயம்புத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சுஜாதாவின் சாகுபடி, விற்பனை, பயன்படுத்தல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேடித் திட்டம் வெற்றியளித்தபின், "சுவின்" என்ற புதிய ரகத்தையும் வெளியிட்டுத் தமிழ் நாட்டில் தகுந்த இடங்களில் சாகுபடி செய்யப்படும்.

புதிதாகத் துவக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின், வேளாண்மைத் தாவர இயல் பிரிவில், தமிழ்நாட்டின் பல்வேறு பருத்தி சாகுபடியாகும் பகுதிக்கும் ஏற்ற புதிய பருத்தி ரகங்களை உருவாக்க மிகவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் கோயம்புத்தூர் மண்டல ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர்களும் "வெண்மைப் புரட்சி" விரைவில் மலர்வதற்குப் பெருந்துணை புரிந்து வருகின்ருர்கள்.

பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்துத் தானும் உயர்ந்து, இந்தியாவின் நிலையையும் உயர்த்திவரும் தமிழ்நாடு, வெண்மைப் புரட்சியை விரைவில் மலரச்செய்து இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கப் போவதுடன், பருத்தித் தொழிலில் இந்தியா இன்று அனுபவித்துவரும் இடர்ப்பாடுகளையெல்லாம் அகற்றி, அனைத்துலகத்தோடும் பருத்தித் தொழிலில் போட்டியிடும் நிலைக்கு இந்தியாவை உயர்த்திவிடும் என்பதில் ஐயமில்லை.

எனவே, தமிழ் நாட்டில் அரும்பியுள்ள "வெண்மைப் புரட்சி" மலர்ந்து "பொருளாதார மணம்" வீச அனைவரும் பாடுபடுவோமாக.

வெண்பாப் போட்டி

20. நாளும் விளையும் நலம்

● இன்னகத்தி னின்றும் எழுந்துவரும் இன்சொற்கள்
புன்னகையி னூடே புகுந்துவரும்—நன்சொல்லால்
ஆளுந் திறனுடைய ஆரணங்கின் இல்லறத்தில்
நாளும் விளையும் நலம்.

—ஆர். லலிதா, II பி. எஸ்ஸி., கடலூர்-1.

சொல்லைச் சுருக்கியே தூய செயல்பெருக்கி
எல்லாரும் வாழ இனிமுயல்வோம்! —முல்லையே !
தாளாண்மை கொண்டு தளரா துழைத்திட்டால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

இடைநோக இன்னுயிரும் எங்கெங்கோ ஏக
இடையரு(து) ஈனல் இனிதோ?—இடையிடையே
மூளும் அவாவினை முற்றெச்ச மாக்கிவிட்டால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் இரா. வெற்றிவேற்செழியன், சென்னை.

நாடுயர வேண்டுமெனில் நாமெல்லாம் ஒன்றுபட்டு
வாடுகின்ற ஏழையர்க்கு வாழ்வளிப்போம்—பீடுமலைத்
தோளுடைய சீரணியின் தொண்டால் தமிழகத்தில்
நாளும் விளையும் நலம்.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

கொடுப்பாரும் இல்லாமல் கொல்பசியால் பிச்சை
எடுப்பாரும் இல்லாநாள் எந்நாள் ?—துடித்தெழுந்தால்
மூளுந் தனியுடைமை, மாண்புசம தர்மத்தால்
நாளும் விளையும் நலம்.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

உழைப்பைப் பெரிதாக்கி உண்ணும் வயிற்றுப்
பிழைப்பைக் கருதாமல் பீடு—தழைப்பதற்கே
தோளுயர்த்திக் கொள்கை துவளாமல் வாழ்ந்துவந்தால்
நாளும் விளையும் நலம்.

—பாவளவன், நாட்டார்மங்கலம்.

கச்சிப் பதிக்கொருவன் கண்டவிடந் தோயமுதன்
கச்சிதனக் காமாட்சி கைப்பிடித்தான்—இச்சையிலான்
நீளுசிவன் அண்ணுவும் நேர்கலைஞர் ஆட்சியினால்
நாளும் விளையும் நலம்.

—அ. அண்ணாமலையார், அவளூர்ப்பேட்டை.

ஓடாதே தம்பி ! உடலுழைப்பே ரூக்கத்தால்
கூடாத செல்வமில்லை ; கூரறிவு—கோடாது
தோளும் மனமும் தொழில்விரைந்து செய்தால்தான்
நாளும் விளையும் நலம்.

—இரா. ஜனார்த்தனம், ஞானஒளிவுபுரம்.

கோளுங் குளிர்மழையும் கொஞ்சிக் குலவுவதால்
நாளும் விளைகின்ற நந்நெல்லைத்—தாளுடனே
தோளில் சுமக்கின்ற தோகையே! உன்னுழைப்பால்
நாளும் விளையும் நலம்.

—பெ. அறநேசவன், பி.ஒ.எல்., குடியேற்றம்.

பாலற்ற வீடுகளில் பைங்குழந்தை ஏராளம்
தோலும் எலும்புமாய்த் துன்புறவோ ?—சிலமுடன்
கோலக் குழந்தை இருவருடன் வாழ்வதனால்
நாளும் விளையும் நலம்.

—பழ. கோவிந்தன், பழவேற்காடு

மாசற்ற வள்ளுவனார் மாமறையைக் கற்றுநீ
ஆசற்ற வாழ்வில் அகமகிழ்க ! —பாசநெஞ்சில்
ஆளும் பகைமை அழிந்திவ் வுலகினில்
நாளும் விளையும் நலம்.

—இரா. பழனிச்சாமி, சிங்காநல்லூர்.

நோய்க்கு மருந்தாம்போல் நொந்தார்க்கே நம்முதவி
வாய்க்கு மெனக்கூறி வாழ்வளிக்கும்—தாய்போலே
நாட்டஞ் செலுத்திப் பணியாற்றும் நம்மரசால்
நாளும் விளையும் நலம்.

—த. இராசரத்தினம், பொள்ளாச்சி.

கொஞ்சும் விழிகளால் கொவ்வை இதழ்களால்
மிஞ்சுஞ் சிரிப்பை விளைவித்தே—நெஞ்சத்தை
ஆளுங் குழந்தை அளவாய் அமைத்திட்டால்
நாளும் விளையும் நலம்.

இரா.உமா, மேட்டுப்பட்டி.

நாமணக்க நாடோறும் நற்றமிழைப் பேசியுயர்
பாமணக்கத் தண்டமிழில் பாவியற்றிப்—பூமணக்க
ஆளுகின்ற நம்கலைஞர் ஆட்சியில் தோழனே
நாளும் விளையும் நலம்.

—சு. துளசிங்கம், சென்னை-1.

தென்றல் தவழ்ந்தாடுந் தென்பொதிகைச் சாரலெனும்
மன்றத்தில் நின்றாடும் மாமயிலே ! —இன்றமிழே !
ஆளுந்திறமுடையோய் ! அன்பே ! உனைப்போற்றின்
நாளும் விளையும் நலம்.

—செ. நாச்சிமுத்து, ஒடையகுளம்.

''உயிர்தமிழ் ! நாட்டின் உயர்வே குறிக்கோள் !
அயரா துழைத்தல் அறமென்''—றுயர்நோக்கில்
ஆளுங் கலைஞர் அருந்திறத்தா லன்றேவெந்
நாளும் விளையும் நலம்.

—புலவர் ச. சுப்பையா, மங்களம்கொம்பு.

தாழும் வினைநீக்கித் தாழ்வில்லா ஊக்கமுடன்
வாழும் மனிதயினம் வாழ்வாங்கு—வாழ்ந்துயரச்
சூழுந் துயரெல்லாம் மாளும் வகைகண்டோம் ;
நாளும் விளையும் நலம்.

—புலவர் அ. ரீந்தாமேரி, கிருட்டிணகிரி.

வறுமை துடைக்கும் வலிமையால் வந்த
சிறுமை அகற்றும் செயலால்—அறிவுவழி
ஆளுந் துணிவால் அருந்தமிழர் ஆட்சிக்கு
நாளும் விளையும் நலம்.

—கே. டி. அரசு, மணமேடு

பொன்னிப் புனலதனின் போக்கைத் தடுக்கின்றார்
கன்னித் தமிழகத்தைக் காடாக்க ; என்னுயிரே!
மூளுந் துயர்துடைக்க முந்துந் தமிழரசால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் இல. கிருட்டிணன், திங்களூர்.

கோள்பார்த்துக் கையின் குறிபார்த்துச் சோம்பலினால்
நாள்பார்த்து வாழ்வோரே ! நல்லகுறிக்—கோள்பார்த்துத்
தோளும் மனமும் துயர்வரினும் சேர்ந்துழைப்பின்
நாளும் விளையும் நலம்.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

நேர்மை வழிநின்று நேயமனப் பான்மையுடன்
ஓர்மை உணர்வோர்(டு)உலகினர்தாம்—பார்மீதில்
மூளும் பகைமறந்து முற்றச் செயலாற்றின்
நாளும் விளையும் நலம்.

—ந. இராமசாமி, குன்னுவாரன்கோட்டை.

சித்திரத்துப் பூவழகே ! செங்கனியே ! உன்னைநான்
முத்தமிட எத்தனிக்கும் போழ்திலே—கொத்துவதுன்
கோல நுதலின்முக் கோணப்பொட் டாம் ; உணரில்
நாளும் விளையும் நலம்.

—புலவர் அரசு, வெண்ணந்தூர்.

தெள்ளமுதே ! தேன்சுவையே ! தித்திக்குந் தீங்கனியே !
விள்ளரிய ஞான விளக்கொளியே ! —உள்ளமதை
ஆளுந் தமிழணங்கே ! அன்புருவே ! உன்சிரிப்பில்
நாளும் விளையும் நலம்.

—அ. வெ. அழகுசுந்தரம், குளமங்கலம்.

தேரோட்டங் கண்ட தெருவெங்கும் நல்வாழ்வின்
நீரோட்டங் காணலாம் ; நின்றதமிழ்—ஏரோட்டி
ஆளுங் கலைஞர் அழைப்பில் அணிவகுப்பில்
நாளும் விளையும் நலம்.

—கதிரவன், சென்னை-14.

சாதிமதம் நீக்கிச் சமதர்மத் தத்துவத்தால்
தீதின்றி வேற்றுமையைச் சீர்திருத்தி—நீதியுடன்
ஆளும் கழக அரசமைந்த இந்நாட்டில்
நாளும் விளையும் நலம்.

—பொ. தங்கம், கேரளம்

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—
செல்வி ஆர். லலிதா, II பி.எஸ்ஸி.,
கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரி,
கடலூர்—1.

சொல்லைச் சுருக்கிச் சுறுசுறுப் பைப்பெருக்கிப்
பிள்ளை சுருக்கிப் பயிர்பெருக்கிக்—கல்வி, தொழில்
கேளிர் பெருக்கிக் கிளர்ந்துழைப் பின்கேளீர் !
நாளும் விளையும் நலம்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

ஏதேதோ கேட்பதுபோல் ஏங்கி வெளைப்பார்ப்பாள்
தீதேதும் எவ்வுயிர்க்கும் செய்தறியாள்—கோதையாள்
பாலைச் சிரிப்பினிலே பன்னூறு முத்துதிர
நாளும் விளையும் நலம்.

—சீனி. செம்பியன், திருவண்ணாமலை.

கைம்பெண் மறுமணத்தில் கற்றோர் பணிவாய்ப்பில்
பைம்புனல் காணும் பயிர்வளத்தில்—ஐம்புலனில்
மீளும் உணர்வதனில் மீளுக் குடும்பமதில்
நாளும் விளையும் நலம்.

—வலங்கொண்டான், திருவண்ணாமலை.

இல்லாத மக்களுக் கெல்லாங் கிடைத்திடவே
நல்லபல திட்டங்கள் நாட்டியிங்கு—வல்லமையாய்
ஆளுந் தமிழ்மகனின் ஆட்சியிலே தட்டாமல்
நாளும் விளையும் நலம்.

—செ. தங்கவேல்சாமி, இராமேச்சுரம்.

யாண்டும் தொழில்பெருக்கி யாவரும் ஓரினமாய்
ஆண்டான் அடிமைத் தளையறுத்து—மீண்டுமிங்குச்
சூளுரைத்தே மேலாம் பொதுமைப் பயிர்வளர்த்தால்
நாளும் விளையும் நலம்.

—மா. சிவப்பிரகாசம், குரும்பேரி.

எங்குந் தொழிற்சாலை இன்பத் திருநாட்டில்
திங்களுக் கொன்று திறந்துவைக்கும்—நங்கலைஞர்
ஆளும் திறத்தில் அனைவரும் ஒத்துழைப்போம்
நாளும் விளையும் நலம்.

—கலைநம்பி, சீர்காழி.

பெற்றதைக் காக்கப் பெறுவதை நாம்தடுக்கும்
உற்ற வழியை உறுதியாய்ப்—பற்றிடுவோம்
ஆளுந் தமிழரசின் ஆக்கவழி நற்பணியால்
நாளும் விளையும் நலம்.

—என்.சி. கிருட்டிணசாமி, பொன்மலை.

பொய்யால் விளையும் புகழின்மை ; சூதுபல
செய்தால் விளையும் சிறப்பின்மை—மெய்யாகக்
கோளால் விளையும் கொடியபகை ; நற்குணத்தால்
நாளும் விளையும் நலம்.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

வாட்டி வதைக்கின்ற வன்முறையை நாடாமல்,
நாட்டின் நலமுயர்த்தும் நல்லவற்றில்—போட்டிகொண்டு
ஆளுங் குடியரசை ஆக்கமுறச் செய்துவிட்டால் !
நாளும் விளையும் நலம்.

—பாலதண்டபாணி, ரெட்டியாரூர்.

ஓடெடுத்தால் எவ்விடத்தும் உய்திடலா மென்றெண்ணிப்
பாடெடுத்த வாழ்வில்லாப் பாமரரின்—கேடெடுக்கச்
சூளுரைத் தாற்றும் சுறுசுறுப் பாட்சியினால்
நாளும் விளையும் நலம்.

—நா. இளங்கோவன், பி.எஸ்ஸி., சென்னை-17.

உருசியாவோ டிந்தியாசெய் ஒப்பந்தந் தன்னால்
வருமிங்கு நல்லவைதாம் ; வாழும்—பெருமையினி
மூளும் பகைமடியும்; முன்னேற்றந் தான்சிறக்கும்
நாளும் விளையும் நலம்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், நகரம்.

நெற்றி வியர்வை நிலத்தில் விழநீயும்
பற்றுடனே பாடுபடின் பைந்தமிழா—தெற்றெனவே
மாளுமுன்தன் நல்குரவு ; மாநிலமு மின்பமுற
நாளும் விளையும் நலம்.

—க. முத்துக்கருப்பன், பேரையூர்.

கற்கண்டே ! தேனே ! கனியமுதே ! காவியமே
பொற்குடமே ! பூங்குயிலே ! புத்தமுதே —நற்கலைஞர்
ஆளுந் தமிழகத்தில் ஆக்கத்திற் கென்னகுறை ?
நாளும் விளையும் நலம்.

—எஸ்.சி. சுப்ரமணியம், எம்.ஏ.பி.டி.,
வேம்படிதாளம்.

இருகுழந்தை போதும் ; எதிர்கால வாழ்வின்
இருளகலச் சேமிப்போம் ; ஏற்றம்—உருவாக
ஆளுகின்ற நம்மரசின் ஆக்கமிகும் திட்டத்தால்
நாளும் விளையும் நலம்.

—க.ச. சூசை, சம்புகுட்டப்பட்டி.

நாட்டிற்கென் செய்வோம் நவிலென்று கேட்டவளே
வேட்டையிட்டு வன்முறையை வேரறுக்கப்—பாட்டெழுதி
ஆளுந் தலைவன் அழைத்தான் ; இனிமேலே
நாளும் விளையும் நலம்.

—செல்வி ஞா. சித்திரை, சோழன்பட்டி.

நாமிருவர் ஆசையாய் நற்குழந்தை ஓரிரண்டைப்
பூமியினில் பெற்றெடுத்துப் போற்றிடுவோம்—நாமிருவர்
ஆளும் உடலாசை ஆர்வமுடன் நீக்கிவிட்டால்
நாளும் விளையும் நலம்.

—செ. அ. உசைனி, பி.எஸ்ஸி., பி.டி.,
அலங்காநல்லூர்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காக்கும் என்னருமைச் சுந்தரியே—அற்புதமாய்
ஆளுந் தமிழரசின் ஆணைவழி நாம்நின்றால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் எ. மாணிக்கம், விசூர்.

பசுமைப் புரட்சிதான் பைந்தமிழர் நாட்டில்
விசும்பின் நிலைக்கு விரைய—வசையில்லா
வேளாண்மை மேன்மையுடன் வெற்றிக் கனியீந்தால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் செம்பியன், கெசல்நாயக்கன்பட்டி.

வாழுங் குடிகள் வளமை அடைந்திட
வீழுங் கொடிய செயலெல்லாம்—தோழியே
ஆளும் பெரியோர் அருகிருக்க அஞ்சாதே
நாளும் விளையும் நலம்.

—சு. நீலாவதி, கோவை-14.

ஊன்றிப் பயின்றுணர்ந் தூக்கா துழைத்துயர்ந்
தின்றோர் மகிழ, விருமக்கள்—ஈன்றுகுறிக்
கோளாய்த் தமிழர் குடும்பநலம்; பேணிவர,
நாளும் விளையும் நலம்.

—ச. பன்னீர்ச்செல்வன், பெருமாள்பேட்டை.

வருவாய்க்குத் தக்க வகையறிந்து வாழ்ந்தால்
ஒருபோதும் ஏழ்மையுனக் கில்லை—சிறுமுதலே
நாளும்நீ சேர்க்கின்ற நற்பழக்கம் வைத்துக்கொள்
நாளும் விளையும் நலம்.

—அரங்க. வேலுச்சாமி, சூரியநல்லூர்.

பிற்பட்டோர் வாழப் பெருந்திட்டம் கண்டுநிதம்
உற்பத்தி கூட்டும் உயிர்கஞ்சாச்—சொற்கொண்டல்
மூளுமிடர் நீக்கும் முதல்வர்பண் டாரகர்க்கு
நாளும் விளையும் நலம்.

—உலகத் தமிழ்க் கழகம், (கிளை), இரும்புதலை.

நன்றான திட்டங்கள் நாட்டில் நடைபெறவே
ஒன்றாகி எல்லோரும் ஒத்துழைத்தால்—அன்றாடம்
ஆளும் அரசுடையார் ஆக்கிவரும் நல்வினையால்
நாளும் விளையும் நலம்.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

உண்ண உணவும் உடுக்க உடையும்நல்
எண்ண உயர்வும் எழிற்குடிலும்—மண்மீதில்
வாழும் மனிதகுலம் வற்றுமல் பெற்றுலெந்
நாளும் விளையும் நலம்.

—ப. வெங்கடாசலன், கருகாடிப்பட்டி.

ஆட்சி புரிவோர் அறநெறியில் நின்றொழுக
மாட்சியுடன் மக்கள் மனமொன்றிக்—காட்சிதரின்
வாளும் விளக்காத வண்ணமிகு வெற்றிகளால்
நாளும் விளையும் நலம்.

—பசுமலை வீர. முருகேசன், எம்.ஏ.,பி.டி.,
மதுரை-20.

கோளுங் குறைமனமும் கொண்டோர் மனந்திருந்தி
ஆளுந் தமிழரசை ஆதரித்தால்—நீளும்
வேளாண்மை நன்கு விளையுங்கால் நம்நாட்டில்
நாளும் விளையும் நலம்.

—முத்து-ரெங்கராசன், கோம்பை.

எவ்வா றெழுதினாலும் என்''பா'' தமிழரசைக்
கவ்வா திருப்பதேன் ? கண்டிலேன்!—கவ்வுகின்ற
தேளுங் கடித்தால் சுகந்தெரியும் கண்டிடுவீர் !
நாளும் விளையும் நலம்.

—த. இளங்கண்ணன், மதுரை-2.

நாட்டுக் குடிதழுவும் நற்றமிழே கோலோச்சிக்
காட்டுங் கலைவிரிக்கக் கற்றவராம் !—கூட்டுறவாய்
ஆளும் அமுதரசின் ஆக்கம் உலகறிய
நாளும் விளையும் நலம்.

—எழிற்கோவன், ஒசூர்.

ஏடெடுத்துப் பாட்டெழுதும் ஏற்றமிகு பாவலரே !
நாடெடுத்துப் போற்றிடுமே நன்றில்லாக்—கேடெல்லாம்
நாளும் விரைந்தோட நற்கவிதை யாப்பீரேல்
நாளும் விளையும் நலம்.

—ஆ. சாக்ரடீஸ், மட்டப்பாறை.

வற்றாப் பெருவளத்தால் வன்பசிபோம் ; கல்லாமை
இற்றொழியும், கற்றோர் இனம்பெருகும்—நற்றமிழால்
ஆளும் எழிலரசால் ஆக்கம் பெருகும்; எந்
நாளும் விளையும் நலம்.

—மு. அ. முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

காடுங் கரம்பும் களர்நிலமும் சீராக்கிப்
பீடுடனே பாடுபடும் பெற்றியினால்—நாடுதனில்
மாளும் வறுமை மதிப்போங்கும் மற்றுமிவண்
நாளும் விளையும் நலம்.

—க. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ.,பி.டி., அரியூர்.

காராளர் சிந்துங் கடும்வியர்வை நீர்த்துளியால்
ஏராள மாய்விளையும் நெல்மணிகள்—நீராலே
மூளும் நெருப்பணையும் ; மூன்றால் குடும்பத்தில்
நாளும் விளையும் நலம்.

—எஸ். சுந்தரம், பாலையூர்.

நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்
நெ. ஜே. 90 "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்

தந்தி: நில்போபாங்க் தொலைபேசி எண் 2420
கிளைகள்: கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
தொலைபேசி எண்: 332, 2684, 24

		(லட்சம்)
அனுமதிக்கப்பட்ட மூலதனம்	..	40·00
வழங்கப்பட்ட பங்கு மூலதனம்	..	29·87
வட்டி விகிதம்		
(1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு	..	4%
(2) பிராவிடண்ட்பண்டு டெபாசிட்டு		5%
நிரந்தர டெபாசிட்டுகள்		
(1) 1 மாதம் முதல் 3 மாதங்களுக்குள்ளாக		3½%
(2) 3 ,, ,, 6		3¾%
(3) 6 ,, ,, 12 ,,		4¼%
(4) 12 ,, ,, 24 ,,		5¼%
(5) 24 ,, ,, 36 ,,		6¼%
(6) 36 ,, ,, 60 ,,		6¾%
(7) 60 ,, ,, 84 ,,		7¼%
(8) 84 மாதங்களுக்குமேல் ,,		7½%
36 மாதங்களுக்கும்		7¾%

அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதாகவுடர், எம் பி., பெருந்தலைவர். இரா. க. வேலாயுதம், பி.எ. துணைப்பதிவாளர் செயலாளர்.

உறுதிக்கும் உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

செட்டிநாடு சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள்:

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.

தந்தி: 'BESTCEMENT' போன்: 27256

பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.

தந்தி: 'CEMENT' போன்: 144.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

1/4, சூரியநாராயண செட்டி தெரு சென்னை-81

உயர்ந்த தரமுள்ள "கோபுரம்" மார்க் மைதா, சூஜி மற்றும் "கப்பல்" மார்க் ஆட்டா

கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

வெண்பாப் போட்டி-23

ஈற்றடி: மாண்பதனைக் காத்தல் மரபு

முடிவுத் தேதி: 1—12—1971

பரிசு: ஒராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப் படும்.

16 11—8ள

ஒப்பந்தப் புள்ளிகள் வேலைவாய்ப்பு விளம்பரங்கள்

தொழில் வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச்சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

தொடர் எண்ணும், வேலையின் பெயர்.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் ரூ.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி.	ஒப்பந்தப் புள்ளிப் பெற கடைசித் தேதி.
1. திருச்சி திருவெறும்பூர் துணைத் தொழில்கள் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலாளர்களுக்கான மூன்று பிளாக்குகள் கட்டுதல்.	3,300	10·40	8 மாதங்கள்.	19—11—71	6—12—71
2. கும்பகோணம் தொழில் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.	1,100	10·40	6 மாதங்கள்.	22—11—71	7—12—71

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சி கோட்டம் அவர்களது அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries and other receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சி கோட்டம், 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சி டிவிஷன் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(த. 31)

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
(கட்டுமானப் பகுதி)

வேலை வாய்ப்பு

மாநிலத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சுகாதாரப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுவதற்காக, பயிற்சி பெற்ற நர்சுகளிடமிருந்து மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

மனுதாரர்கள் சென்னை நர்சுகள் மருத்துவக் கவுன்சிலில் நர்சாக செக்ஷன்—ஏ சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். தமிழில் பேச, படிக்க, எழுத தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் மூன்று மாதப் பயிற்சியை மேற்கொள்வது அவசியம். (சென்னை எழும்பூரில் உள்ள வட்டார குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையத்தில் ஒரு மாதம் ; சென்னை-5 சுகாதாரப் பார்வையாளர்கள் பள்ளியில் 2 மாதங்கள்) பயிற்சிக் காலத்தில் முழுச் சம்பளமும் படிகளும் தரப்படும். பெண் சுகாதாரப் பார்வையாளர்களாக, துறையில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுக் காலம் பணியாற்ற பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். இதில் தவறினால் பயிற்சி செலவுகளையும், பயிற்சிக் காலத்தில் பெற்ற சம்பளம், படிகள் ஆகியவைகளையும் அரசாங்கத்துக்குத் திருப்பித் தரவேண்டியவர்களாவர்.

இந்த வேலைக்குச் சம்பள விகிதம் ரூ. 250—10—400. தொடக்கச் சம்பளம் மாதம் ரூ. 270-ம் அத்துடன் பர்சனல்பே ரூ. 5-ம் இந்த வேலைக்குரிய படிகளும் அளிக்கப்படும்.

மனுக்களைத் தங்கள் கைபட எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் சான்றிதழ்களின் நகல்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்றொப்பத்துடன் வைத்து இயக்குநர், மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் திட்டம், மாநில குடும்ப நலத் திட்ட பீரே, எண், 49, பாந்தியன் சாலை, சென்னை-8" அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

மனுக்களைப் பெற கடைசித் தேதி 22-11-71. அத்தேதிக்குப் பின் வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

டாக்டர் பி. ஆர். பால
கிருஷ்ணன்.

(த. 24)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்
கோப்பு எண். எம்.இ. 6/978/71,
நாள் 26—10—1971.

10 அங்குலம் 250 எம்.எம். சி. ஐ. பைப்புகள், பெண்டுகள் ஆகியவைகளைப் பட்டினப்பாக்கம் 'சைட்' அலுவலகத்தில் வழங்க பார்வை எண், கெடு தேதி, வழங்கப்படும் பொருட்கள் ஆகியவைகளை உறையின் மீது குறிப்பிட்டு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 2-12-71 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பொருள்கள் அளவு, வரை அளவுகள் விவரம், நிபந்தனைகள் முதலிய விவரங்களை ரூ. 10-ம் விற்பனை வரியும் செலுத்தி (இது திருப்பித் தரப்படமாட்டாது) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத் தொகை ரூ. 1,750 ஒப்பந்தப் புள்ளிகள் 2—12—71 அன்று மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

டி. ஜெகதீசன்,
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு)

(த. 36)

ஒப்பந்தப் புள்ளி

மத்தியச் சிறை

1,000 காலன் தண்ணீர் கொள்ளத்தக்க நீர்த் தொட்டி இணைக்கப்பட்ட நான்கு சக்கர டிரைலர் வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கண்காணிப்பாளர், மத்தியச் சிறை, கோயம்புத்தூர் அவர்களால் 30-11-71 பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

1,000 காலன் தண்ணீர் கொள்ளத்தக்கதாய், 4 சக்கரங்களையுடைய டிராக்டர் டிரெயிலர், பிரேக்கிங் கருவியுடனும் அபாய விளக்குடனும் மற்றும் டிராக்டருக்குள்ள துணைக்கருவிகள் பொருத்தப்பட்ட நிலையில் நீர்த்தொட்டி 5 m.m. M. S. தகட்டில் செய்யப்பட்டதாய் ஒரு ஆள் செல்லத் தக்க துவாரத்துடன் (a man hole) உள்ள மூடியுடனும் 2" ஜி.எம். கேட்வால்வு அமைந்ததாய், பின்பக்கம் வளைந்ததாய், உள்ளே தேவையான பாபிள் தகடு அமைக்கப்பட்டு இரு முறை எனமல் வண்ணம் (Enamal paint) பூசப்பட்டதாய் இருக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரமும், நிபந்தனைகளும், கண்காணிப்பாளர், மத்தியச் சிறை, கோயம்புத்தூர்—அவர்களிடமிருந்து ரூ. 1·04 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மூடி முத்திரையிட்ட உறையில் பதிவு அஞ்சல் ஒப்பத்துடன் ஒப்பந்தப் புள்ளி, நான்கு சக்கர டிரெயிலர் தண்ணீர்த் தொட்டி இணைப்புடன் 30-11-71 என எழுதி திரு வாசுதேவன், பி.ஏ. கண்காணிப்பாளர், மத்தியச் சிறை, கோயம்புத்தூர் அவர்கள் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கண்காணிப்பாளர்,
மத்தியச் சிறை, கோயம்புத்தூர்.

(த. 35)

ஒப்பந்தப் புள்ளி

சின்கோனத் துறை

அலுமினியம், அலுமினியம் அல்லாய் பைப்புகள் தேவை

பாசன வேலைகளுக்காக அலுமினியம், அலுமினியம் அல்லாய் குழாய்கள், ஃபிட்டிங்குகள் வழங்குவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—12—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களைப் பெறப் பத்திரங்கள் விலைத் தொகை விற்பனை வரி உள்பட ரூ. 2·07 உடன் கீழ்க்கண்டவருக்கு மனுச் செய்க.

இயக்குநர்,
சின்கோனத் துறை,
உதகமண்டலம், நீலகிரி.

(த. 23)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக, தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் புள்ளி எண் 1:—காட்பாடி தொழிற் பேட்டையில் பிளாக் ஒன்றில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.

2. ஒப்பந்தப் புள்ளி எண் 2:—அரக்கோணம் தொழிற் பேட்டையில் பிளாக் ஒன்றில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.

இவை ஒவ்வொன்றுக்கும் கட்டுத் தொகை ரூ. 1,000.

இந்த ஒப்பந்தப் புள்ளிகளில் ஒவ்வொரு வகைப் பத்திரத்திற்கும் விலை ரூ.10.40.

இந்த வேலைகள் ஒவ்வொன்றையும் முடிக்க வேண்டிய காலம் 6 மாதங்கள்.

இவ்வொப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 18–11–1971.

இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒவ்வொன்றையும் பெறுவதற்கு கடைசித் தேதி : 4–12–1971.

ஒப்பந்த படிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் எண். 4, தியாகராஜபுரம், வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம் என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10.40-க் (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ XXIX Industries other receipts என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம் எண். 4 தியாகராஜபுரம், வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ தான் ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மேற்குக் கோட்டம், 4, தியாகராஜபுரம், வேலூர், வட ஆர்க்காடு மாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்மந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சென்னை-2.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

(த. 33)

ஏல அறிக்கை.

வனத்துறை

கடலூர் வனக் கோட்ட முந்திரி மகசூல் ஏல விளம்பரம்

கடலூர் வனக்கோட்டத்தைச் சார்ந்த விருத்தாசலம், உளுந்தூர்ப்பேட்டை, திருக்கோவிலூர், திண்டிவனம் வனச்சரகங்களில் உள்ள முந்திரித் தோப்புகளில் விளையும் முந்திரி மகசூல்களைச் சேகரித்து அப்புறப்படுத்தும் 1972 ஆம் ஆண்டுக்கான உரிமையின் ஏலம் 15—12—1971 முதல் 17–12–1971 முடிய தினசரி காலை 10–30 மணிக்கு கடலூர் மாவட்ட வன அலுவலகத்தில் பகிரங்கமாக நடத்தப் பெறும்.

இது தொடர்பான இதர விவரங்களை நெ. 25, முதல் கிராஸ் தெரு, சீத்தாராம் நகர், கடலூர் 1-லிருக்கும் மாவட்ட வன அலுவலரிடமாவது அல்லது சம்பந்தப்பட்ட வனச்சரக அலுவலரிடமாவது' தெரிந்து கொள்ளலாம்.

சி. பவித்திரன்,
மாவட்ட அலுவலர்.

(த. 39)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே தரப்பட்டுள்ள தேதிகளில் மாலை 3–00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் புள்ளி எண் : 1:—சக்கலூர் தொழிற் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர்களுக்கான பிளாக் ஒன்று கட்டுதல், இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 1,100.

2. ஒப்பந்தப்புள்ளி எண் 2:—மாதவரம் தொழிற் பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலாளர்களுக்கான இரண்டு பிளாக்குகள் கட்டுதல். இந்த வேலைக்குக் கட்டுத் தொகை ரூ. 2,100.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ஒவ்வொரு இனத்துக்கும் ரூபாய் 10–40.

இந்த வேலையை முடிக்க வேண்டிய காலம், ஒவ்வொன்றுக்கும் 6 மாதங்கள்.

இந்த இரண்டு வேலைகள் வகையிலும் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 17–11–1971.

இந்த இரு வேலைகளிலும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குக் கடைசித் தேதி 3–12–1971.

ஒப்பந்தப் படிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், சென்னை-32, கிண்டி, தொழிற்பேட்டை, வடக்குக் கோட்டம் நிர்வாகப் பொறியாளர் (க) அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து அலுவல் நேரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி, உட்பட்ட தொகையான ரூபாய் 10.40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ XXIX Industries—Other Receipts என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம், தொழிற் பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்)வடக்குக்கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ் நாடு மின்சார வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சென்னை-2.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

(த. 32)

ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

வீராணம் திட்டவட்டம்
சேப்பாக்கம், சென்னை-5

அறிக்கை எண் 14166/71-2.

நாள் : 23–10–71.

வேலையின் பெயர் :

சென்னை, நேப்பியர் பாலத்துக்குக் கீழே கூவம் ஆற்றின் வலக்கரையில் நீச்சல் குள அமைப்புக்காக நீர் வடிகட்டு இயந்திரங்கள் எல்லாத் துணை உறுப்புகளுடனும் வழங்குதல், நிர்மாணித்தல் (இயந்திரங்களை இயக்கி வைத்தல் உள்பட).

பார்வை : இந்த அலுவலகத்தின் 17–9–1971 தேதியிட்ட அறிவிப்பு எண் 14166/டி. 8/71.

மேலே கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கு கடைசித்தேதி 26–10–1971 என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அத்தேதி 26–11–71 மாலை 3·00 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 22–11–1971 வரை கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4·00 மணிக்கு மேல் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

ஏற்கனவே விற்கப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்களும் செல்லும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

593

குடிநீர் வடிகால் வாரியம்

எண். 1372/எஸ்.டி. 1/தேதி 21—10—71.

தமிழ்நாடு, குடிநீர், வடிகால் வாரியம் சார்பாக கீழ் வரும் வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 22—11—1971 மாலை 3-00 மணிக்குள் கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்றுவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரியாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1.	வேலையின் பெயர் ...	கோயம்புத்தூர் சாக்கடைத் திட்டம். மண்டலம் 3 பகுதி நான்கு—முதல் கட்டம்—சாக்கடை நீர் கொண்டு செல்லும் குழாய் போடுதலும் இணைத்தலும், அது சம்பந்தப்பட்ட வேலைகளும்.
2.	ஒப்பந்த முறை ...	மொத்தத் தொகை (2.5).
3.	முன் வைப்புத் தொகை:	ரூபாய் 8,855 (ரூபாய் எட்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தைந்து மட்டும்).
4.	பணி முடிக்க வேண்டிய காலம்..	12 மாதங்கள்.
5.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ...	ரூபாய் 10.35 (விற்பனை வரி உட்பட).
6.	ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி	20—10—71 முதல் 20—11—71 முடிய)

மேற்படிப் பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்களை, நிர்வாகப் பொறியாளர், 11/8, பாசியகாரஞ ரோடு கிழக்கு, ர. ச. புரம், கோயம்புத்தூர்-2 விலாசத்திற்கு மணியார்டர் மூலமாகவோ அல்லது நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

முன் வைப்புத் தொகையை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் 'கேட்பு வரைஓலை' (Demand Draft) கோயம்புத்தூர் நிர்வாகப் பொறியாளரின் பெயரில் செலுத்தவோ அல்லது கஜானவில் கோயம்புத்தூர் நிர்வாகப் பொறியாளரின் பெயரில் '' பி. டபிள்யூ III O.R.'' தேசிய தலைப்பில் செலுத்தவோ செய்யலாம். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகளையும் முன் வைப்புத் தொகைக்காக ஒப்புக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் காட்டாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்

(த. 7)

நிலநீர் இயக்ககம்

அறிக்கை எண் 4/71-72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான கால வரம்பு நீடிப்பு.

வேலையின் பெயர் : 36 அங்குலம் உள் விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்த மேற்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி அமைப்புகளும் (Pre-stressed concrete pipes and specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக்கொண்டு சென்று சரியான வரிசைப்படியும், சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைப்புகளால் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில், முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கால வரம்பு 20-12-1971 மாலை 3-00 மணிவரை நீடிக்கப்படுகிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 20-12-1971 அன்று மாலை 4-00 மணிக்கு, அச்சமயம் வந்திருக்கும், ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 16-12-1971 வரை கிடைக்கும். நிலநீர் இயக்குநர் அலுவலகம் 1-11-1971 முதல் எண் 10-ஏ, தண்டபாணி தெரு, தியாகராயநகர் சென்னை-17 என்ற முகவரியில் செயல்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்,

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
82, இராயப்பேட்டை
நெடுஞ்சாலை, சென்னை-4.

(த. 3)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிட்ட தேதிகளில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் புள்ளி எண் : 1:—அம்பத்தூர் தொழிற் பேட்டையில், பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

2. ஒப்பந்தப் புள்ளி எண் 2:—அம்பத்தூர் தொழிற் பேட்டையில் பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

3. ஒபபந்தப் புள்ளி எண் 3:— அம்பத்தூர் தொழிற் பேட்டையில், பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

4. ஒப்பந்தப் புள்ளி எண் 4:—அம்பத்தூர் தொழிற் பேட்டையில் பிளாக் ஒன்றுக்கு 6 குடியிருப்புகள் வீதம் உள்ள, தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.

இந்த வேலைகள் ஒவ்வொன்றுக்கும் கட்டுத் தொகை ரூ. 2,100.

ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விஷயத்திலும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ரூ. 10.40.

இந்த நான்கினுள் ஒவ்வொரு வேலையையும் முடிக்க வேண்டிய கால அளவு 6 மாதங்கள்.

இவற்றுள் முதலாவது, இரண்டாவது ஒப்பந்தப் புள்ளிகள் விஷயத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 15-11-1971. மூன்றுவது, நான்காவது ஒப்பந்தப் புள்ளிகள் விஷயத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி 16-11-1971.

இந்த ஒப்பந்தப் புள்ளி ஒவ்வொன்றும் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி 2-12-1971.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு சென்னை என்ற முகவரியில் உள்ள அவர்களது அலுவலகத்தில், மேல் குறிப்பிட்ட தேதிகளிலிருந்து அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''XXIX Industries—Other Receipts'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ : ''கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து, கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு வகையில் கட்டுத் தொகை செலுத்தப்படுமானல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

சென்னை-2.
(த.12)

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
(கட்டுமானப் பகுதி.)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்வதற்கான, தனித் தனியான மூடி அரக்கு முத்திரையிட்ட உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும், தவணை நாளும் குறிப்பிட்ட விலைப்பட்டியல்கள் 30–11–1971 பிற்பகல் 2–00 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

விலைக் குறிப்புகளைக் குறித்தனுப்புவதற்குரிய நமூனு படங்கள் அடங்கிய குறிப்புப் பிரதிகள் (Copies of specification) வேண்டுவோர், சாற்றுக் குறிப்புப் பிரதி ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) தலைமைக் கணக்காயர், செலவினப் பகுதி, திருநெல்வேலி மின்சார அமைப்பு, திருநெல்வேலி-3 என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தொகை எந்த காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. சாற்றுக் குறிப்புப் பிரதிகள் 11–11–1971 முதல் 27–11–1971 முடிய விலைக்குக் கிடைக்கும்.

பண அஞ்சல்கள் 19–11–1971 வரை பெற்றுக்கொள்ளப்படும். பண அஞ்சல் அனுப்புவோர், தமது முகவரியையும், சாற்றுக் குறிப்பெண்ணையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

சாற்றுக் குறிப்புப் பிரதிகள் மற்றவருக்கு மாற்றத்தக்கதல்ல. சாற்றுக் குறிப்புப் பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவருக்கு சேராவிட்டாலும், அல்லது தாமதமாகக் கிடைத்தாலும் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பில்லை.

கட்டுத் தொகை (Earnest Money Deposit) செலுத்தாமல் அனுப்பப்படும் விலையொப்பங்களும், குறிப்பிட்ட நமூனுக்களில் அனுப்பப்படாத விலையொப்பங்களும், காலதாமதமாக வரும் விலையொப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மிகவும் விலை குறைந்த ஒப்பந்தத்தையோ அல்லது வேறு எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் வாரியத்திற்குக் கிடையாது.

எந்த விலையொப்பந்தத்தையும் காரணம் காட்டாமல் தள்ளுபடிச் செய்யவும், அல்லது குத்தகையை இரண்டு அல்லது மேற்பட்ட விலையொப்பதாரர்களுக்கு இடையே பிரித்துக் கொடுப்பதற்கும் கீழ்க்கையொப்பமிட்டவருக்கு முழு உரிமையுண்டு.

விலையொப்பங்கள் அனைத்தும் 30–11–1971 அன்று மாலை 3–00 மணிக்கு வந்திருக்கும் விலையொப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வரிசை எண்.	சாற்றுக் குறிப்பு எண்.	வேலைக்குறிப்பு.	சேர்ப்பிடம்.
1	ஒ.டி. 7/71-72.	பார்கோ 4191 எம்.எம். (165'') W.B. 5 டன் உள்ள நான்கு லாரிகளுக்குக் கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல்.	தாழையூத்து.
2	ஒ.டி 8/71–72	இந்துஸ்தான் பெட்போர்டு 4547 எம்.எம். (179'') W.B. 5 டன் உள்ள நான்கு லாரிகளுக்குக் கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல்.	

மேற்பார்வை மின் பொறியாளர்,

திருநெல்வேலி மின்சார அமைப்பு.

வண்ணாரப்பேட்டை,
திருநெல்வேலி-3

(த. 4)

ஒப்பந்தப் புள்ளி

பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சி அம்பராம்பாளையம் தலைமை நீர் ஏற்று நிலையத்திலுள்ள 85 குதிரை வேகமுள்ள ஜி.இ.சி. மின் மோட்டாரில் "ரீவைண்டிங்" செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30—11—71 மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 250 செலுத்த வேண்டும்.

ஆணையர்,

பொள்ளாச்சி நகராட்சி.

(த.16)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை(குடிநீர்,வடிகால் வாரியம்)பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 24–11–1971 புதன் கிழமை பிற்பகல் 3–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கபடும்.

வேலையின் பெயர் : சங்கரன்கோவில்—புளியங்குடி நீர் வழங்கும் திட்டம்—ஐந்தாம் நிலை, இரண்டாம் பாகம்—2,27,300 லிட்டர் கொள்ளளவுள்ள உயர் மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த் தொட்டி கட்டுதல்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை : ரூ. 1,250 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசியவங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

வேலையிலே முடிப்பதற்குரிய கால அளவு: நான்கு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 5.18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து 15/2, பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, திருநெல்வேலி–2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 22–11–1971 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.)

(த.9)

ஒப்பந்தப் புள்ளி

சேலம் மாவட்டம் கொங்கணபுரம் ஊராட்சி ஒன்றியம்

கொங்கணபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ½ டன் எடையும் 5 குதிரைகள் விசையும் உள்ள ஒரு மண் லாரி இயந்திரம் (கிரேன்) வாங்க முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகிறது. வைப்புத்தொகையாக மண்வாரி இயந்திரத்தின் விலையில் 5 சதவீதத்தை இவ்வலுவலக கஜானாவில் 23–11–71–ஆம் தேதிக்குள் கட்டி விடவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் 25—11—71–ஆம் தேதி மாலை 4 மணிக்குள் கிடைக்கப் பெற வேண்டும். வைப்புத் தொகைக் கட்டப்படாத ஒப்பந்தப் புள்ளிகளும், குறித்த தேதிக்குள் கிடைக்கப்பெறாத ஒப்பந்தப் புள்ளிகளும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. இது குறித்து மேற்கொண்டு தகவல் வேண்டுதலின், கீழ் குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்பு கொள்க.

ஆணையர்,

ஊராட்சி ஒன்றியம்,
கொங்கணபுரம்,
சேலம் மாவட்டம்.

(த.14)

ஏல விற்பனை

மாயூரம் நகராட்சி

இந் நகராட்சிக்குச் சொந்தமான பழைய கெஸ்டட்னர் டூப்ளிகேட்டர் மிஷின் ஒன்றும் பழைய பெரிய அளவு "அண்டர்வுட்" தட்டெழுத்து இயந்திரம் ஒன்றும் பழைய ரெமிங்டன்-12 தட்டெழுத்து இயந்திரம் ஒன்றும் நகராட்சி அலுவலகத்தில் 30—11—71 மாலை 4 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ரூ. 50 வீதம் கட்டுத் தொகைச் செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். மற்ற விவரங்கள் அலுவலகத்தில் நேரிலோ கடிதங்களின் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீரய்யன்,

ஆணையர்.

(த.21)

ஒப்பந்தப் புள்ளி

மதுரை பால் திட்டம், மதுரை-20

அறிவிப்பு எண் 29567/71எச் 1.

மதுரை பால் திட்டத்துக்கு 1–1–1972 முதல் 31–12–1972 முடிய கீழ்க்கண்ட தற்போதைய வழிகளில் தனியார் லாரிகளில் பால் எடுத்து வர மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்களின் சார்பாக மதுரை பால் திட்ட மேலாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

வரிசை எண்ணும் வழிகளின் விவரமும்.

1 திண்டுக்கல்—பாப்பம்பட்டி வழி.
2 திண்டுக்கல்—வத்தலக்குண்டு, கணவாய்ப்பட்டி வழி.
3 மதுரை—திண்டுக்கல் வழி.
4 மதுரை—சாப்டூர் வழி.
5 மதுரை—உசிலம்பட்டி வழி.
6 மதுரை—மானாமதுரை வழி.
7 மதுரை—திருப்புவனம் வழி.
8 மதுரை—அலங்காநல்லூர், காரியாபட்டி வழி.
9 கோயில்பட்டி—கலிங்கபட்டி, விருதுநகர் வழி.
10 ஸ்ரீவில்லிப்புத்தூர்—வத்திராயிருப்பு வழி.
11 ஸ்ரீவில்லிப்புத்தூர்—சங்கரன்கோவில் வழி.
12 மதுரை—மேலூர் வழி.
13 மதுரை நகருக்குள் பால் விநியோகம்(5 வழிகளில்).

ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும், ரூ. 1,000 மதுரை அரசாங்கக் கருவூலத்தில் 'ரெவின்யூ டிபாசிட்' என்ற தலைப்பில் மதுரை பால் திட்ட அதிகாரி அவர்களுக்காகக் கட்டி செல்லுச் சீட்டு ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகளுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் மதுரை பால் திட்ட அலுவலகத்திலிருந்து ரூபாய் 5-ம் அதற்கான விற்பனை வரி 19 காசும் ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் வழிகளின் மீதல்லாது மைலுக்கு மொத்த அடிப்படையில் கொடுக்கப்படல் வேண்டும்.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29–11–1971-ஆம் தேதி மாலை 3 மணிக்குள்ளாக இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-00 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

திட்ட மேலாளர்,

மதுரை பால் திட்டம்,
மதுரை-20.

(த.5)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : கோடிக் கரையில் ஓர் ஆய்வாளர் மாளிகைக் கட்டுதல் பற்றி.

மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 16–12–1971 மாலை 3–00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1	ஒப்பந்த வகை ..	மொத்தத் தொகை.
2	பிணைப்பணம் ..	ரூ. 4,000.
3	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ''பொ. ப.—செலுத்துத் தொகை-மற்றைய செலுத்துத் தொகை'' எனும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் வெண்ணாறுக் கோட்டம், தஞ்சாவூர், அவர்களின் பெயரில் செலுத்தப்படவேண்டும்.)	ரூ. 30 (முப்பது மட்டும்.)
4	விற்பனை வரி (அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு-மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.)	ரூ. 1.05 (ரூபாய் ஒன்று காசு ஐந்து மட்டும்.)
5	கால அளவு	10 மாதங்கள்.
6	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்.	25–11–1971.

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.10)

அச்சக எழுது பொருள் துறை

தமிழ்நாட்டிலுள்ள பதின் மூன்று மாவட்டங்களின் மாவட்ட மக்கள் தொகைக் கையேடுகள் '' அச்சிடுவதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் 30—11—1971 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் பெறு சான்று ரசீது (Acknowledgement) இணைக்கப்பட்ட பதிவுத் தபாலில் அச்சக எழுதுபொருள் துறை இயக்குநர், தங்கசாலைக் கட்டடம், சென்னை-1 அவர்கள் பெயரில் அனுப்பப்பட வேண்டும். வேறு எவ்விதத்திலும் அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. உறையில் '' மாவட்ட மக்கள் தொகைக் கையேடுகள் அச்சிடுவதற்குரிய ஒப்பந்தப்புள்ளி—இறுதி நாள் 30—11—1971 '' என்று குறிப்பிட வேண்டும்.

அச்சிட வேண்டிய பணியின் முழு விவரங்களும் விதி முறைகளும், ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளின் பின்னர் அனுப்பி வைக்கப்பெறும்.

ஜி. ரங்காராவ்,

இயக்குநர்,
அச்சக எழுது பொருள்
துறை, சென்னை-1.

(த.1)

குடிநீர் வடிகால் வாரியம்

எண் 941/எஸ்.டி. 2/71,
நாள் 23–10–1971.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக கீழ் வரும் பணிக்குக், கோவை பொதுச் சுகாதார வட்ட மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம், 25–1, மூன்றாவது வீதி, டாட்டாபாட், கோவை-12-ல் 27-11-1971 மாலை 3 மணி முடிய அரக்கு முத்திரைப்பட்ட ஒப்பந்தப் புள்ளியுடன் வரவேற்கப்படுகின்றன. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4 மணி அளவில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

பணியின் பெயர் : மேட்டூர் நகர அமைப்புக் கமிட்டி—தண்ணீர் அபிவிருத்தித் திட்டம்—(பகுதி 2) கட்டம் 1—கீழ்மட்டப் பகுதிக்குத் தண்ணீர்ப் பகிர்வு முறை, குழாய்கள் பதித்தல் (மேட்டூர் கேம்ப்)—(குழாய்கள் பதித்தலும், இணைத்தலும்).

ஒப்பந்த முறை : கே. 2. பிணைப்பணம் : ரூ. 2,520 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூற்றிருபது மட்டும்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை : ரூ. 10.35(விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி : 1–11–1971 முதல் 25–11–1971 முடிய.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதாரக் கோட்டம், 28, ஔவையார் தெரு, சுப்பிரமணிய நகர், சேலம்-5, அலுவலகத்தில் நேரில் பணம் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ பெறலாம்.

பிணைப்பணம் மத்திய அரசால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கேட்பு வரைவோலை மூலமாகவோ. அல்லது மேற்படி வங்கிகளின் பொறுப்புறுதி மூலமாகவோ சேலம் நிருவாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தலாம் ; மேற்படி பிணைப்பணம் அரசுக் கருவூலத்தில் பி.டப்ளியூ. 3 ஓ.ஆர். சேலம் பொது நிருவாகப் பொறியாளரின் தலைப்பிலும் செலுத்தலாம். பிணைப்பணம் இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

எஸ். எம். சாகுல் அமீது,

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 6)

சங்கரன் கோவில் நகராட்சி

இந்நகராட்சி உபயோகத்திற்கு வாங்கியுள்ள ஜே. 6 பெட்போர்டு லாரிக்கு பாடி கட்டுவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் ஆணையரவர்களால் 9—11—1971 மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு 4-30 மணிக்கு ஆஜராயுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். நகராட்சியில் ரூ. 1 செலுத்தி குறிப்பிட்ட நமூனாவில் ஒப்பந்தம் எழுதி அனுப்புவதுடன் கட்டுத் தொகையாக ரூ. 250 அனுப்பவேண்டும். லாரி கட்டுவதற்கான ஸ்பெஸிபிகேஷன் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வெ. ஜானகிராமன்,

ஆணையர்,

நகராட்சி அலுவலகம்,
சங்கரன் கோவில்,
23—10—1971.

(த.19)

திருவள்ளூர் நகராட்சி

1971–72-ஆம் ஆண்டுக்கு திருவள்ளூர் நகராட்சிக்குத் தேவைப்படும் 100 குப்பை தொட்டிகள் வழங்க 27—11—71-ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் வைப்புத் தொகை ரூ. 100 நகராட்சி கஜானாவில் செலுத்தப்பட்ட ரசீதுடன் கொடுக்கப்பட வேண்டும். மற்ற விபரங்களுக்கு வேலை நேரங்களில் நேரிலோ அல்லது கடித மூலமாகவோ நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

ஜி. சுப்ரமணியன்,

ஆணையர் (பொறுப்பு).

(த.17)

ஒப்பந்தப்புள்ளி

ஆத்தூர் நகராட்சி (சேலம் மாவட்டம்)

அடியிற்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்கள் 26—11—71-ஆம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4-00 மணிவரை நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-15 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்த ஷெட்யூல்கள் 25—11—71-ந் தேதி மாலை 5-00 மணிவரை தான் விற்பனை செய்யப்படும். ஒப்பந்த கட்டுத் தொகை ரொக்கமாக நகராட்சி கஜானாவில் செலுத்த வேண்டும்.

வேலையின் பெயர்.	மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.	காப்பீட்டுத் தொகை
	ரூ.	ரூ.	ரூ.
1. ஆத்தூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து காந்திநகர் ஓவர் ஹெட் டேங்க் வழியாக அரசினர் உயர் நிலைப்பள்ளி வரை செல்லும் பாதைக்கு தார் போடுதல்.	10,943	275	275
2. கோரித் தெரு தார் போடுதல்.	5,451	140	140

கே. வி. லட்சுமிநாராயணன்,
ஆணையர்.

(த. 15)

வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு வனத்துறையில் வனத்துறை உதவிக் காப்பாளர் பணியில் நேரடி நியமனம் செய்ய (மூன்று நியமனம்) பி.ஏ. பட்டதாரிகளின் தகுதியில் போட்டித் தேர்வுக்கும், எழுத்துத்துறைத் தேர்வுக்கும், வாய்மொழித் தேர்வுக்கும் (பேட்டி) பி.ஏ. பட்டம் பெற்றவர்களிடமிருந்து 25—11—1971 மாலை 5 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு 575—25—600—40—1,000

கல்வித் தகுதிகள்:—பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில், தாவர இயல், விலங்கியல், இயல்பியல், இரசாயன இயல், கணித இயல், புள்ளி விவர இயல், புவி இயல், பொருளாதார இயல் இவற்றில் ஏதேனும் ஒன்றில் மாஸ்டர் டிகிரி (குறைந்தது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள்), அல்லது வேளாண்மை, பொறியியல் (இயந்திர இயல், சிவில், அல்லது இரசாயனப் பொறியியல்) துறையில் பேச்சிலர் பட்டத்தில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் அல்லது பட்டமேல் படிப்புப் பெற்றவர்களாக இருப்பின் புகுமுகத் தேர்வில் (அ) உயிரியல், (ஆ) இயல்பியல், (இ) இரசாயன இயல் பாடங்களில் ஏதேனும் ஒன்றை எழுதியவர்களாக இருக்க வேண்டும்.

உடற்கூறுத் தகுதிகள் :

(அ) 163 செ. மீட்டருக்குக் குறையாத உயரம்.

(ஆ) மார்புச் சுற்றளவு 79 செ. மீட்டருக்குக் குறையக் கூடாது.

(இ) 5 செ. மீட்டராவது, மூச்சிழுக்கும்போது மார்பளவு விரிவடைய வேண்டும்.

வயது : 1972 ஏப்ரல் முதல் நாளன்று 19 வயதிற்கு மேலும் 24 வயதுக்குக் கீழும் இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங் குடியினர், பிற்பட்ட வகுப்பினர் விஷயத்தில் உச்ச வயது 29. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீஸ் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவர்களாக இருந்தால் வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற்படை, விமானப்படை, ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—4—72 அன்று 40 வயதுக்குக் குறைவானவர்கள், 1—1—64-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்கு—பதவிப் பெயரைக் குறிப்பிட்டு கடிதம் எழுதி, 23 செ. மீட்டர் உள்ள தன் முகவரி குறிப்பிடப்பட்ட 0.35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த.2)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

(வீட்டுவசதி வாரியத்தின் கிளை)
கோவைப்புதூர்—கோயம்புத்தூர்

எண்.42/71–72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் 24—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை அடியிற் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப்புள்ளி நமூனுக்களைக் கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் அதாவது 8—11—1971-ஆம் நாளிலிருந்து 23—11—1971-ஆம் நாள் வரை 10·30 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை ஒப்பந்தப்புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 24—11—1971-ஆம் நாள் பிற்பகல் 1·00 மணி வரைதான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 24—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் செயற் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

வரிசை எண்.	வேலையின் விவரம்.	வேலையின் சுமார் மதிப்புத் தொகை.	கட்டுத் தொகை.	நமூனுக்களின் விலை.
		ரூ.	ரூ.	ரூ.
1	நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் B. P./S. H. B. 61/64 என்ற வரை படத்தின்படி ஒரு வீடு கோயம்புத்தூருக்கருகாமையில் கோவைப்புதூரில் கட்டுவது ;			
	(அ) பிளாக் நெம்பர் 13	20,000	300	5 மற்றும் விற்பனை வரி.
	(ஆ) பிளாக் நெம்பர் 14	20,000	300	ஷை
	(இ) பிளாக் நெம்பர் 15	20,000	300	ஷை
	(ஈ) பிளாக் நெம்பர் 18	20,000	300	ஷை
	(உ) பிளாக் நெம்பர் 19	20,000	300	ஷை
2	குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் C. H. U. No. 74/68 என்ற வரைபடத்தின்படி ஒரு வீடு கோயம்புத்தூருக்கருகாமையில் உள்ள கோவைப்புதூரில் கட்டுவது :			
	(ஊ) பிளாக் நெம்பர் 13	10,300	160	ஷை
	(எ) பிளாக் நெம்பர் 14	10,300	160	ஷை
	(ஏ) பிளாக் நெம்பர் 15	10,300	160	ஷை
	(ஐ) பிளாக் நெம்பர் 16	10,300	160	ஷை
	(ஒ) பிளாக் நெம்பர் 17	10,300	160	ஷை

இல. அரங்கநாத சாஸ்திரி,
செயற்பொறியாளர், கோவை வீட்டு வசதிப்பிரிவு,
கோவை.

11/22இ, திவான் பகதூர் சாலை,
ஆ.எஸ்.புரம் (அஞ்சல்),
கோவை-2
22—10—1971.
(த.29.)

சமூகநலத்துறை

அறிக்கை 3/71–72.

தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம் அசீசு நகர் பகுதியில் உள்ள தொழில் நிலையங்கட்கு 1971–72-ஆம் ஆண்டிற்கான பலவகைப்பட்ட நூல் ரகங்களும், மரங்களும் (Yarn and Timber) வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த விவரங்கள் (Sealed Tenders) பெயர் பெற்ற நிறுவனங்களில் இருந்தும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் (Contractors) இதனடியில் கையொப்பமிட்டவரால் 30—11—1971-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12·00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த விவரங்கள் வந்து சேரவேண்டிய தேதியை ஒத்தி கொடுப்பதற்கானக் கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2. நெய்வேலி நகரியம் கிளைக் கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 500 (ஐநூறு மட்டும்) கட்டுத்தொகை கட்டிய சலானுடன் இணைந்து வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஒப்பந்த விவரங்கள் மேற்கூறப்பட்ட அதே தேதியில் பிற்பகல் 1·00 மணிக்குத் திறக்கப்படும். அப்போது ஒப்பந்த விவரங்கள் கொடுத்து இருப்பவர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் வந்து இருக்கலாம். ஒப்பந்த விவரங்களில் கொடுக்கப்படும் விலைப்பட்டியலை அசீசு நகர் பகுதியில் இப்பொருள்களைக் கொண்டுவந்து கொடுப்பதற்கு உடன்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. குறைந்த பட்ச விலைப் பட்டியல் உள்ள ஒப்பந்த விவரங்களைத்தான் இதன் அடியில் கையொப்பமிட்டிருப்பவர் அங்கீகரிக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. காரணம் கூறாமல் எந்த ஒப்பந்த விவரத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ அவருக்கு அதிகாரமுண்டு. இந்த நிபந்தனைகட்கு உட்படாத ஒப்பந்த விவரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் சரக்குகளை விநியோகம் செய்வதற்கு முன்னதாகவே அவைகளின் விலை மதிப்பீட்டுத் தொகையில் 10 சதவிகிதமோ அல்லது அடியிற் கையொப்பமிட்டிருப்பவரால் நிர்ணயிக்கப்படும் மற்றெந்தத் தொகையோ வைப்புத் தொகையாக (Deposit) செலுத்துவதுடன் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை (Agreement) ஒன்றும் எழுதி கொடுக்கவேண்டும். வைப்புத் தொகையைக் கட்டத் தவறினாலோ அல்லது உடன்படிக்கைப் பத்திரத்தை எழுதி கொடுக்கா விட்டாலோ பொருள்களை விநியோகம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு எந்த நேரத்திலும் ரத்துச் செய்யப்படும்.

6. தேவையான நூல் மற்றும் மர வகைகள் பற்றிய குறிப்பீடுகைகள் (Specifications) நிபந்தனைகள் (Conditions) ஆகியவற்றை இதன் அடியில் கையொப்பமிட்டிருப்ப வரிடம் இருந்து விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

எம். ஏ. கிருஷ்ணசாமி,
மேலாளர்,
அசீசு நகர் பகுதி,
ஊமங்கலம் அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த. 22)

உதகமண்டலம் நகராட்சி

ஆர்.ஓ.சி.எண்.சி. 3/11232/70
நாள் 23—10—1971.

இந்த அலுவலகத்தில் குவிந்துள்ள கழிவுக் காகிதங்களை வாங்குவதற்ககா உதகமண்டலம் நகராட்சி ஆணையரால் அல்லது அவர் இல்லாத நேரத்தில் நகராட்சி அலுவலக நிர்வாகியால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27—11—1971 மாலை 3-30 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளை இந்த அலுவலகத்திற்கு மனுச் செய்து பெறலாம்.

ஆர். மகாலிங்கம்,
ஆணையர் (பொறுப்பு).

உதகமண்டலம்,
23—10—1971.
(த. 26)

அரசினர் தலைமை மருத்துவமனை

தூத்துக்குடி
திருநெல்வேலி மாவட்டம்

தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனைக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் மற்ற வெளியூர் மருத்துவ நிறுவனங்களுக்கும் மருந்துகள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1—11—1971-லிருந்து 31—3—1972 வரை உள்ள காலத்துக்காக வரவேற்கப்படுகிறது.

தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 1—12—1971 நண்பகல் 12·00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படும்.

தேவைப்படும் மருந்துகள், ஒப்பந்த நிபந்தனைகள் முதலிய விவரங்களை திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி அரசினர் தலைமை மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெறலாம்.

கண்காணிப்பாளர்,
அரசினர் தலைமை மருத்துவமனை,
தூத்துக்குடி-3.

(த. 30)

தொழில் வணிகத்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்ளுவதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால், கீழே குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்தப்புள்ளிகள் பெறும் கடைசித் தேதியன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

தொடர் எண்ணும், வேலையின் பெயர்.	கட்டுத் தொகை ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி.	ஒப்பந்தப் புள்ளிகள் பெறக் கடைசி தேதி.
1. மதுரை தொழில்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்கான 3 பிளாக்குகள் கட்டுதல்.	3,300	10·40	8 மாதங்கள்.	23—11—71	8—12—71
2. மதுரை தொழில்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்கான 2 பிளாக்குகள் கட்டுதல்.	2,200	10·40	6 மாதங்கள்.	23—11—71	8—12—71
3. திண்டுக்கல் தொழில்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் உள்ளதாகத் தொழிலாளர்களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.	1,100	10·40	6 மாதங்கள்.	24—11—71	9—12—71

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (க), மதுரை டிவிஷன் தொழிற்பேட்டை, மதுரையில் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10.40ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''இண்டஸ்டிரீஸ் அண்டு அதர் ரசிப்ட்ஸ்'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மதுரை டிவிஷன் தொழிற்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, ''கால் டிபாசிட்'' ரசீது வடிவிலோ ஷெட்யூல் வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), மதுரை டிவிஷன் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீயச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூடக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர் (கட்டுமானப் பகுதி).

சென்னை-2.

(த. 27)

16—11—10

அறிக்கை

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத் திட்டத்தின் கீழ், குறிப்பிடும் பகுதிகளுக்கு பரிசுச்சீட்டுகள் விற்பனை செய்ய அவற்றிற்கெதிராகக் குறிப்பிட்டிருக்கும் முகவர்கள்இடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலியிடங்களில் நியமனம் செய்வதற்கான விண்ணப்ப நமூனுக்கள் (நமூனு-1) கோரப்படுகின்றன. இந்த நமூனுக்கள் முறையாக நிரப்பப்பட்டு ஒரு ரூபாய் மதிப்புள்ள கோர்ட் ஸ்டாம்பு ஒட்டி 1971, நவம்பர் 30ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். முகவர்கள் குலுக்கல் மூலம் தேர்ந்து எடுக்கப்படுவர்.

காலியிடங்கள் இருக்கும் பகுதிகள்.		காலியிடங்களின் எண்ணிக்கை.
அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்	...	3
இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்	...	4
குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம்	...	1
திருவெட்டார் ஊராட்சி ஒன்றியம்	...	3
கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்	...	1
மேல்புறம் ஊராட்சி ஒன்றியம்	...	2
முன்சிறை ஊராட்சி ஒன்றியம்	...	1
நாகர்கோவில் நகராட்சி	...	4
பத்மனபபுரம் நகராட்சி	...	2
குழித்துறை நகராட்சி	...	3
கன்னியாகுமரி நகராட்சி	...	3

ஏ. பி. முத்துசுவாமி,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்.

(த. 64)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 8–12–1971 மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர் ... நந்தலாற்றிலிருந்து பிரியும் ஏ. 14 இடியார் கால்வாய் 0/0 கி.மீ. முதல் 7·520 கி.மீ. வரை நவீனப் படுத்துதல்.

2 ஒப்பந்த வகை ... .. கே. 2

3 பிணைப்பணம் ... .. ரூ. 3,100

4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. ரூ. 5

அரசினர் கருவூலத்தில் ''பொதுப் பணி செலுத்துத் தொகை III மற்ற செலுத்துத் தொகை'' எனும் தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், கால்வாய் புதுப்பிக்கும் கோட்டம், தஞ்சாவூர் கணக்கில் செலுத்த வேண்டும்.

5 விற்பனை வரி .. , ... ரூ. 0·20

அரசினர் கருவூலத்தில் ''XII விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.

ஒப்பந்தப் பத்திர நமூனு 16–11–1971 முதல் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.

அ. சேஷாத்திரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
காவிரி வளர்ச்சிப் பணிகள் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 46)

ஒப்பந்தப்புள்ளி ஒத்தி வைப்பு

பொதுப்பணித்துறை, சென்னை செங்கற்பட்டுவட்டம்

எண் டீ3/20280/71-8, தேதி 29–10–1971.

வேலையின் பெயர்.—தாம்பரத்திலுள்ள காச நோய் மருத்துவ மனையில் பணிபுரியும் 40 செவிலியர்களுக்கும் (நர்சஸ்) 5 ஸ்டாப் (ஸ்டாப் நர்சஸ்) செவிலியர் களுக்கும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

பார்வை.—(1) இவ்வலுவலக எண் டி.3/20280/71-1, தேதி 7–8–1971.

(2) இவ்வலுவலக எண் டி.3/20280/71-7, தேதி 27–9–1971.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி பெறுவதற்கான கடைசி நாள் 25–10–1971 என்ற கெடு 30–11–1971 மாலை 3-00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம் அவர்கள் அலுவலகத்தில் 23–11–1971 முதல் எல்லா அலுவலக நாட்களிலும் வேலை நேரங்களில் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றமில்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
25–10–1971, சென்னை, செங்கை வட்டம், சென்னை-5.

(த. 43)

அச்சகத் துறை

சென்னை அரசினர் அச்சகத்திற்கு காமிரா ஒன்று மற்றும் ரெக்டாங்லர் ஸ்கிரீன் ஒன்றும் சப்ளை செய்வதற்காக 30-11-71 அன்று பிற்பகல் 3 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

தேதி : 26-10-1971.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

(த.55)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :— பூந்தமல்லி அரசினர் (போர்டு) உயர்நிலைப் பள்ளியில் பொன் விழாக் கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 24—11—1971 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 24—11—1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 22—11—1971 வரை அலுவல் நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.) செங்கல்பட்டு—வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த.45)

பொள்ளாச்சி நகராட்சி மின் துறை

கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரூபாய் 1,500 காப்புத் தொகையுடன் நகராட்சி ஆணையர் அவர்களால் 30-11-1971-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், வரைபடங்களுடன் கூடிய வேலை விவரங்கள் வேண்டுவோர் நகர மன்ற மின் பொறியர் அவர்களிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வேலை விவரம்.

நகர எல்லைக்குள் மார்க்கெட் ரோடில் திருவள்ளுவர் திடலிலிருந்து ரயில்வே பாலம் வரை, சாலையின் இருமருங்கிலும் பாதரச விளக்குகள் அமைத்தல்.

ஆணையர்.

(த.62)

கோவை நகராட்சி

கோவை நகராட்சி பொதுப் பட்டறைக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24—11—1971 மாலை 3-00 மணி வரை நகராட்சி ஆணையரால் பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றைய தினமே மாலை 3-30 மணிக்கு பொதுப்பணிப் பொறியாளரால் திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 500 செலுத்த வேண்டும். மற்ற விவரங்களை ரூ. 2.06 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கி. அப்பாநாராயணன்,
ஆணையர்.

(த.61)

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27-11-1971 அன்று மாலை 4-00 வரை மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பார்கோ (Fargo) 109-பி6-165 வீல் பேஸ் டீசல் சாசிஸ் லாரிக்கு பாடி கட்டுவதற்கு வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலை 4-05 மணிக்குத் திறக்கப்படும். கட்டுத் தொகை ரூ. 250. மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

காஞ்சிபுரம்,
2—11—1971.

(த.60)

திருப்பூர் நகராட்சி

நகராட்சி செவிலித் தாய், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள் ஆகியவர்களுக்கு 1971-72-ஆம் ஆண்டிற்குச் சீருடைகள் வழங்குவதற்கான ஜவுளி ரகங்களுக்கு மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10—11—1971 மாலை 4-00 மணி வரை ஆணையர் அவர்களால் அல்லது அவர் அதிகாரம் பெற்றவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் பொதுச் சுகாதாரப் பிரிவில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆர். சீனிவாசன்,
ஆணையர்.

(த.66)

திருச்சிராப்பள்ளி நகராட்சி

2 குதிரைத் திறன் மோட்டார் பம்பு செட்டு வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 30-11-71 மாலை 4-00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் ஏற்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்துக்கு மனுச் செய்தோ, நேரிலோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
தனி அலுவலர்.

(த.56)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 24—11—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும், வேலை விவரமும்.	முன் வைப்புத் தொகை. ரூ.
1. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 4/0 வரை மேம்பாடு செய்தல்.	4,250
2. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 4/0 முதல் கி.மீ. 8/0 வரை மேம்பாடு செய்தல்.	4,550
3. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 8/0 முதல் கி.மீ. 12 வரை மேம்பாடு செய்தல்.	4,550
4. வடவார் கரைச் சாலையில் கி.மீ. 12/0 முதல் கி.மீ. 16/2 வரை மேம்பாடு செய்தல்.	5,050
5. சிதம்பரநாதம்பேட்டை—சி. மாணும்பதி சாலையில் கி.மீ. 0/0 முதல் கி.மீ. 5/0 வரை மேம்பாடு செய்தல்.	5,450
6. சிதம்பரநாதம்பேட்டை—சி. மாணும்பதி சாலையில் கி.மீ. 5/0 முதல் கி.மீ. 10/0 வரை மேம்பாடு செய்தல்.	5,450

ஒப்பந்தங்கள் 24—11—1971 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைபடங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 51-75 கட்டி 12—11—1971 முதல் 23—11—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைகளைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

சென்னை-25,
27—10—1971.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

(த. 37)

அச்சுத்துறை

சென்னை அரசினர் அச்சகத்திற்கு '' லெட்டர் பிரஸ் பவர் ஆப்பரேட்டட் சிலிண்டர் பாம்ஸ் ப்ரூப் பிரஸ் '' சப்ளை செய்வதற்காக 30—11—1971 அன்று பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

ஜி. ரங்கா ராவ்,
இயக்குநர்.

(த. 47)

திருச்சி நகராட்சி

'' பைப் லைன் பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 30—11—1971 மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள், மற்றும் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்துக்கு மனுச் செய்தோ, நேரிலோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
ஆணையர்.

(த. 40)

ஸ்ரீரங்கம் நகராட்சி

1971-ஆம் ஆண்டு வைகுண்ட ஏகாதசி உற்சவத்தின்போது 18—12—1971 தேதி முதல் 7—1—72 முடிய 21 நாட்களுக்குச் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதை 3—12—71 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் அல்லது அவரின் அதிகாரம் பெற்றவரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலக் கட்டுத் தொகை ரூ. 100. மற்ற விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(த. 50)

ஆணையர்.

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

உதகை, உதகமண்டலம் அரசினர் கலைக் கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்டுதல்.

மேற்கண்டவேலைக்குஒப்பந்தப் புள்ளிகள் பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த கடைசித் தேதி 3–11–71 என்பது 26–11–71 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், பில்டிங்ஸ் டிவிஷன், கோயம்புத்தூரில் 24–11–71வரை கிடைக்கும்.

முந்தைய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

எம்.எஸ், கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயம்புத்தூர்–நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்–1.

(த. 57)

ஒப்பந்தப் புள்ளி

அரசினர் மன நல மருத்துவமனை

1–1–72 முதல் 31–3–72 வரையுள்ள காலத்தில் மருந்துகள் (Drugs and Medicines) வழங்குவதற்குப் புகழ் பெற்ற வட்டார நிறுவனங்களிடமிருந்து '' Tender for the supply of Medicines 15–12–71 '', என்று உறையின் மீது தலைப்பிடப்பட்ட ஒப்பந்தங்கள் 15–12–71 அன்று 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரம் அடியில் தரப்பட்ட முகவரியில் 14–12–71 வரை எல்லா வேலை நாட்களிலும் கிடைக்கும். ''XXIII. Medical–J. Miscellaneous Other Receipts'' என்ற தலைப்பில் ஒப்பந்தப் பத்திரத்தின் விலையான ரூ. 3-ஐ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் கட்டி அந்தச் செலானைத் தந்து ஒப்பந்தப் புள்ளி பெறலாம். 11 காசுக்குத் தனியான ஒரு செலான் '' XII. Sales-tax-receipts under state sales-tax Act M. G. S. T. for sale of Tender Forms'' என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தலைப்பில் கட்டப்பட்ட கட்டணம் எந்தச் சூழ்நிலையிலும் ஒப்பந்ததாரர்களுக்குத் திருப்பித்தரப்படமாட்டாது.

டாக்டர் (திருமதி)
எம். சாரதாமேனன்,
எம்.டி., டி.பி.எம்.,
கண்காணிப்பாளர்.

20—10—71.

(த. 77)

ஒப்பந்தப் புள்ளி

வேளாண்மைத்துறை

கீழே கையொப்பமிட்டுள்ளவரால் தமிழ் நாடு மாநில ஆளுநர் சார்பில் அடியிற்கண்ட இயந்திரங்களுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 15–12–71ம் தேதி மாலை 2-30 மணிவரை வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தத்திற்கான முழு விவரங்கள் அடங்கிய பத்திரங்களும், மற்ற குறிப்புரைகளும் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து 20–11–71-ம் தேதிமுதல் 10–12–71-ஆம் தேதி வரை எல்லா அலுவலக நாட்களிலும் ரூ. 10-ம் (ரூபாய் பத்து மட்டும்) விற்பனை வரியாக காசு 35-ம் (முப்பத்தைந்து காசுகள் மட்டும்) காசோலை மூலமாகவோ, அல்லது Demand Draft மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் செய்யும் ஒப்பந்ததாரர்கள் கீழ்க்கண்ட இயந்திரங்களில் முன் அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அடியிற் கையொப்பமிட்டவருக்கு எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் காரணங்களை விளக்காமல் ஏற்கவோ அல்லது மறுக்கவோ முழு உரிமையுண்டு. கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் விருப்பமுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் 15–12–71-ஆம் தேதி மாலை 3 மணிக்குத் திறக்கப்படும். கீழ்க்கண்ட இயந்திரங்கள் உடனடித் தேவையாக உள்ளன.

இயந்திரங்களின் பெயர்கள். (மொத்த மதிப்பு ரூ. 1,00,000) லேத் (நடுத்தரமானது 2 nos) 2, இயந்திர வாள் 1, யுனிவர்சல் ரேடியல் டிரில்லிங் இயந்திரம் 1, கார் கழுவும் அழுத்தக் கருவி 1, கார் அழுத்த லூபிரிக்கேட்டர் 1, மோட்டார் வாகனங்கள் கழுவ உபயோகமாகும் ஹைட்ராலிக் லிப்ட் 1, சர்பேஸ் கிரைண்டர் (Surface grinder) 1, ஸ்விங் பிரேம் கிரைண்டர், (Sw,ng frame grindor) 1, பிரேக் ஷூ லைனிங், ரிவெட்டிங் மற்றும் கிரைண்டிங் இயந்திரம் (Brake shoe lining revorting and grinding Machine) பிரேக் டிரம் ட்ருயிங் லேத்(Brako drum Truing lathe) 1, சிலிண்டர் ரிபோரிங் இயந்திரம் 1, இஞ்சின் அனலைசர் 1, வீல் அலைன்மெண்ட் கேஜ் 1, ஹெட்லைட் பீம் சரி செய்யும் ஸ்கிரீன்—மோட்டார் வாகனங்களுக்குரியது, களேக்டிங் அலைனர் 1, வால்வு ரிபேஸர் 1, வால்வு கிரைண்டிங் இயந்திரம் 1.

வேளாண்மைத்துறைக் கருவிகள் தொழிற் கூடம்,
இலவங்கார்குடி (அஞ்சல்),
திருவாரூர் (வழி).

(த. 91)

ஏல விற்பனை

காவல் துறை

மணிமுத்தாறு, மதராஸ் சிறப்பு காவற் படைக்குச் சொந்தமான அடியிற்கண்ட போலீஸ் வாகனங்கள் புதன்கிழமை (8–12–71 ஆம் தேதி) காலை 10 மணி அளவில் மணிமுத்தாறு மேற்படி படையின் தளவாய் அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. M.D.H. —2932—பார்கோ 1960 பெட்ரோல் திறந்த மாதிரி லாரி.
2. M.S.Y. 7965—ஸ்டுடிபேக்கர் 1955 பெட்ரோல் திறந்த மாதிரி லாரி.

மேற்கண்ட வாகனங்களை மணிமுத்தாறில் உள்ள தலைமையகத்தில் எல்லா அலுவலக வேலை நாட்களிலும் பார்வையிடலாம். மேலும் விவரம் தேவையெனில் அடியிற் கையொப்பமிட்ட அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ந. கோவிந்தராஜ்,
தளவாய், மதராஸ் சிறப்புக் காவற்படை, மணிமுத்தாறு.

(த. 88)

சிறுதொழில்கள் நிறுவனம் லிமிடெட்

35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2.

ஒப்பந்த அறிவிப்பு எண். 101504/பி.பி.1/71 நாள் 28—10—1971.

இந்த நிறுவனத்தின் தச்சுவேலைத் தொழிலகங்களுக்கு ஓராண்டுக் காலத்துக்கு கீழே குறிப்பிட்டுள்ள பொருட்களை வழங்குவதில் வருடாந்திர ஒப்பந்தத்தை வரைப்படுத்திக் கொள்வதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அவை திறக்கப்படும் நாள் பிற்பகல் 2-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

தொடர்	பொருள் வகை.	ஒப்பந்த அறிவிப்பு எண்.	ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் தேதி.
1	கமர்ஷியல் பிளைவுட்	101504/பிபி1/71 ..	22—11—1971 மாலை 3-00.
2	ஒருபுறம் தேக்கு முகப்பு பிளைவுட் ...	101505/பிபி1/71 ..	23—11—1971 மாலை 3-00.
3	பார்ட்டிகிஸ் போர்டுகள்	101506/பிபி1/71 ...	24—11—1971 மாலை 3-00.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களை இந்த நிறுவனத்தின் துணை நிர்வாகி(கொள்முதல்)அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில் பெறலாம். ஒப்பந்தப்புள்ளி வடிவத்தின் விலை ரூ. 5·25 (விற்பனை வரி உள்பட) இது திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான கட்டணத்தை இந்த நிறுவனத்தின் தலைமைக் கணக்கருக்கு (கேஷ்) ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ அனுப்பலாம்.

(த.28.)

நிர்வாக இயக்குநர்.

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27–11–1971 அன்று மாலை 4-00 மணி வரை மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைக்கு வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலை 4-05 மணிக்குத் திறக்கப்படும். மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	கட்டுத் தொகை.
நகரமன்ற நூற்றாண்டு விழா மண்டபக் கட்டடத்திற்கு சிமெண்ட் பெயிண்ட் அடிக்கவும் அழகு முகப்பு வேலை செய்யவும்.	ரூ. 10,500	ரூ. 525

(த. 59)

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

சிகிச்சை

ஸ்டான்லி மருத்துவ மனையில் ''செல்குழாய் நாளஞ்சார்ந்த புறநோய்ப் பகுதி நிலையம்'' அக்டோபர் திங்கள் 26-ஆம் நாள் செவ்வாய்க் கிழமையன்று காலை 11 மணியளவிலிருந்து செயல்படுகிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையில் இந்தப் பகுதி நிலையம் ஒரு புதிய முயற்சியாகும். இதனால் பொதுமக்கள் சிகிச்சை பெற்றுப் பயனடையலாம். மற்ற அரசு மருத்துவ மனைகளாலும், பிற மருந்துவர்களாலும் அனுப்பப்படும் நோயாளிகளும் கவனிக்கப் படுவார்கள்.

63)

இயக்குநர்,
மருத்துவக் கல்வி·

வீட்டு வசதி வாரியம் சென்னை கிழக்குக் கோட்டம்

[illegible]ாப்பு எண்.674/71.
நாள் 23—10—1971.

வியாசர்பாடியில் சுத்தக் கிரயத் திட்டத்தின் கீழ், குறைந்த வருமானப் பிரிவினருக்காக 10 வீடுகள் கட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித் தேதி 22—11—1971 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

டி. ஜெகதீசன்,
நிர்வாகப் பொறியாளர்(கிழக்கு)

(த. 34)

போக்குவரத்துத் துறை

ஆர்.எச். மெட்டல் ஸ்க்ரூஸ் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 24—11—1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களைக் கொள்முதல் அலுவலர், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2 அவர்களிடமிருந்து அலுவல் நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குநர்,
போக்கு வரத்துத் துறை,

(த. 11)

மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிப் பராமரிப்பிலுள்ள நான்கு சாலைகளுக்குத் தார் ரோடு போடவும் டவுன் எக்ஸ்டன்ஷன் போஸ்டாபீஸ் சாலையில் பேருந்து நிலையத்தில் வெளி வாயிலுக்கு வடபுறம் உள்ள தடுப்புச்சுவரைப் புதுப்பித்துக் கட்டவும், நகராட்சிப் பேருந்து நிலையத்தில் உள்ள டவுன்பஸ் தங்குமிடத்தை மாற்றி வடபுறம் கட்டுவதற்குமாக ரூ. 81,700 மதிப்பீடுகளுக்கான வேலைக்கு 30—11—1971 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் ஒவ்வொரு வேலைக்கும் ஒரு ரூபாயும், விற்பனை வரி நான்கு காசும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீரையன்
ஆணையர்.

மாயூரம்,
1—10—71.
(த. 49)

போதனைப் பொருள்கள் விநியோகிக்க

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு 1971–72-ஆம் ஆண்டிற்குப் போதனைக்கான பொருள்களும் உபகரணங்களும் விநியோகிப்பதற்குக் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரால் 29—11—1971 காலை 10-30 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. நிபந்தனைகள் கொண்ட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களைக் காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களிடமிருந்து பெறலாம்.

மாவட்ட வளர்ச்சி அலுவலர்,
செங்கற்பட்டு மாவட்டம்.

நாள்: 27—10—71.
காஞ்சிபுரம்.
(த. 38)

உணவுப் பொருள் வழங்கு துறை.

ந.க.கே. 11—42449–71

நாள் : 26–10–71

ஒட்டுப்போட்ட உபயோகமில்லாத சாக்குகள் விற்பனை

தமிழக அரசுக்காகவும், தமிழக அரசின் சார்பாகவும், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர், தென்னார்க்காடு மாவட்டத்தில் தாலுகா மத்தியிலுள்ள பல கிடங்குகளிலுள்ள ஒட்டுப் போட்ட உபயோகமுள்ளதாயும், மற்றும் உபயோகமில்லாத 43,972 (நாற்பத்து மூவாயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திரண்டு) சாக்குகளை விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்.

ஒட்டுப்போட்ட சாக்குகளையும் மற்றும் உபயோகமில்லாத சாக்குகளையும் விற்பனை செய்ய 29–11–1971 மாலை 2-00 மணி முடிய தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சேருமாறு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன. முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அன்றே மாலை 3-00 மணிக்குத் திறக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட தினம் அரசாங்க விடுமுறை நாளாக இருந்தால், மறுநாள் ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். ஷெ தேதியில் மாலை 2-00 மணிக்குப் பின்வரும் ஒப்பந்தங்கள் கண்டிப்பாகப் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த சம்பந்தமான படிவங்களும், விற்பனை நிபந்தனைகளும் பெற ரூ. 5-ஐ ''P. D. Accounts of the Commissioner of Civil Supplies'' என்ற தலைப்பில் செலுத்தியும், 0.18 காசு விற்பனை வரிக்காக தனியே மேற்படி தலைப்பில் செலுத்தியும் சலான்களை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

கடலூர்-1,
26—10—71.
(த. 51)

ஏல விற்பனை

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ஆம் வருடம், நவம்பர் மாதம் 25-ஆம் தேதி, வியாழக் கிழமை காலை 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப் படும். பொருள்களின் பட்டியலை 23—11—1971 செவ்வாய்க் கிழமையன்றும், 24—11—1971 புதன் கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

காவல் ஆணையர்,

நகரக் காவல் ஆணையர் அலுவலகம், எழும்பூர், சென்னை-8,
1—11—1971,
(த. 53)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் துறை, தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை அல்லது இதுபோன்ற இதர அரசுத் துறைகளில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் கெங்குரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 7—12—1971 மாலை 3 மணி வரை, துறைக்குரிய சரியான படிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா பொ.) த.கு.நீ. வ. வா. சென்னை-8 அவர்களால் திறக்கப்படும்.

எண், வேலையின் விவரம்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.
1 கும்பகோணம் புதை சாக்கடைத் திட்டம்—2வது கட்டம் (பகுதி-1 திருத்தப்பட்டது. Tretutment works—Construction of 2 Nos. Anaerolic lagoons with division Box; inlet & outlet arrangements	கே. 2	ரூ. 2,710	6 மாதங்கள்	ரூ. 10·35
2 கும்பகோணம் புதை சாக்கடைத் திட்டம்——2-வது கட்டம் (பகுதி 1) திருத்தப்பட்டது. Construction of aerated lagoons with inlet & outlet arrangements, aerated platform scour etc.	கே. 2	ரூ. 1,440	4 மாதங்கள்	ரூ. 10·35

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணம், நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், த.கு.நீ.வ. வாரியம் அவர்கள் கணக்கில் "PW III OR" என்ற தலைப்பிலும், விற்பனை வரியை "XII Sales Misc. 1 General Sales Tax" என்ற தலைப்பிலும். தனிச் சலான்களில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம் : நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், த.கு.நீ.வ. வாரியம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

(ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணத்தை ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் மூலமோ செலுத்த வேண்டும்).

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம்,
சென்னை-8.

சென்னை,
25—10—1971

(த. 94)

ஒப்பந்தப் புள்ளி

தாராபுரம் நகராட்சி

26–11–1971-ஆம் தேதி மாலை 4-00 மணிவரைக்கும் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே தினம் மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். விரிவான ஒப்பந்த அறிக்கையையும் ஒப்பந்த ஷெட்யூல்களையும் அதற்கான கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் விவரம்.	மதிப்பீட்டுத் தொகை.	கட்டுத் தொகை.	பத்திரத்தின் விலை.
	ரூ.	ரூ.	ரூ.
1 நஞ்சியம்பாளையம் நாடார் தெருவுக்குத் தார் ரோடு போட.	11,000	275	2
2 மேற்குக் கச்சேரித்தெரு, புது பிமராயர் அக்ரஹாரம் உடையார் தெரு, நாராயணபிள்ளைத் தெருக்களுக்குத் தார் ரோடு போட.	11,400	285	2

வி. நாகராஜன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
தாராபுரம்,
28–10–1971.
(ந. 41)

பொதுப்பணித் துறை

செங்கல்பட்டு—வட ஆர்க்காடு வட்டம்

என் 20913/71/வ5/தேதி 30–10–1971.

வேலையின் பெயர்:—காஞ்சிபுரம் வட்டம் தலைமை மருத்துவ மனையில் இரட்டை அறுவை நிலையக் (Twin operation theatre) கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசினரின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 10–12–1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்பொழுது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை	...	மொத்தத் தொகை.
2 முன்வைப்புத் தொகை	..	ரூ. 2,400.
3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரை படத்துடன்.		ரூ. 20·60 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து
4 முடிக்க வேண்டிய காலம்.		6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 22–11–1971 முதல் 8–12–1971 வரை, விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20. (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் "P.W.D. Remittances" என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர் பொ.ப.து., காஞ்சிபுரம் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0·60 கருவூலம்அல்லது ரிசர்வ் பாங்கில் "XII Sales tax (b) receipt under state sales act general sales tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படிக் கருவூல செலுத்துச் சீட்டுக்களை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகைக் கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளில் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளில் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன்பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்தத் தபால் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.ப.து.) செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(.44)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே கூறப்பட்டுள்ள வேலைக்காக, இந்தத்துறையில் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-8அவர்களால், அவரது அலுவலகத்தில் 52, கெங்கு ரெட்டிசாலை, சென்னை-8-ல் 7—12—1971 மாலை 3·00 மணிவரை துறைக்குரிய சரியான படிவத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3·30 மணிக்குப் பிறகு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,சென்னை-8 அவர்களால் திறக்கப்படும்.

எண்.	வேலையின் விவரம்.	ஒப்பந்த வடிவம்.	கட்டுத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரங் களின் விலை.
			ரூ.	மாதங்கள்.	
1	பட்டுக்கோட்டை நீர்வழங்கு திட்டம் 3-வது கட்டம். பகுதி 1—ஹெட் ஒர்க்ஸ் மற்றும் டிரீட்மெண்ட் ஒர்க்ஸ் 181840 லிட்டர் தேக்கம் திறனுள்ள தூயநீர் ரிசர்வாயர் கட்டுதல் உரிய குழாய்கள் இணைப்புகள் உள்பட.	மொத்தத் தொகை.	885	6	10·35
2	ஷை பம்பு விடுதி கட்டுதல் —	கே.2	695	6	10·35

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணம், நிருவாகப் பொறியாளர் மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் த.கு.நீ.வ.வா. எண். 28. ராஜாஜி தெரு, ஸ்ரீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்கள் கணக்கில் " P. W. III OR " என்ற தலைப்பிலும். விற்பனை வரியை " XII Sales D. Misc—I General Sales Tax " என்ற தலைப்பிலும் தனிச்சலான்களில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம் : நிருவாகப் பொறியாளர், (ம.ந.வா) மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், த.கு.நீ.வ. வாரியம். எண். 28, ராஜாஜி தெரு, ஸ்ரீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு மனுச்செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணத்தை ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் மூலமோ செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப்பத்திரக் கட்டணம், எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
சென்னை-8.

சென்னை,
21—1—1971.

(த. 54)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—வடசென்னை, அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு, பெண்கள் விடுதி (ஆஸ்டல்) கட்டுதல் (அடித் தளமும் அதன்மேல் இரண்டு அடுக்குத் தளங்களும்)

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற்கூறிய வேலைக்கு மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கல்பட்டு வட்டம், அவர்களால் சேப்பாக்கம், சென்னை 5-ல் உள்ள, அவருடைய அலுவலகத்தில் 15—12—1971 அன்று மாலை 3·00 மணிவரை, அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர். சென்னை- செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் அதே நாள் மாலை 3·15 மணிக்கு அந்தச்சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் .. ... மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை ... ... ரூ. 8,000.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம். 6 மாதங்கள்.
4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. ரூபாய் 20 மட்டும் அரசாங்கக் கருவூலம் (அ) ரிசர்வ் வங்கியில் P. W. Remittances III other Remittances என்ற தலைப்பிட்டு நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை கட்டடக் கோட்டம் எண் 2, சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.
5. விற்பனை வரி — — — ரூ. 0·60 (அறுபது காசுகள் மட்டும்) மேற்கூறிய தொகை அரசாங்கக் கருவூலம் (அல்லது) ரிசர்வ் வங்கியில் XII Sales Tax (b) Receipts under State Sales Tax act என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். சலானைக்கொடுத்த பின்னர்தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் காலம் (அலுவலக நேரங்களில்). 8—12—1971 முதல் 14—12—1971 வரை.
7. ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ளக் கடைசி நாள். 15—12—1971

மற்றைய விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை, செங்கற்பட்டு வட்டம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். மேற்பார்வைப் பொறியாளர் சென்னை செங்கல்பட்டு வட்டம் சென்னை-5 அவர்கள் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உள்ளவர்,

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப்பொறியாளர்,
சென்னை செங்கற்பட்டு வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.

(த.80)

ஒப்பந்தப்புள்ளி

வீடு விற்பனை.

கடலூர் கோட்டம், பண்ணுருட்டி கிளைக்கோட்டம், பண்ணுருட்டி மதுரா வைத்திரெட்டி பாளையம்,தட்டாஞ்சாவடி ரோடு என்கிற காந்தி ரோடிலுள்ள தென்னூர்க்காடு மார்க்கட் கமிட்டிக்குச் சொந்தமான வீடு, அதைச் சேர்ந்த காலிமனை, கீத்துக் கொட்டகை, குழாய்க் கிணறு உள்பட வாங்குவதற்காக மூடி, முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரால் கோரப்படுகின்றன. குறித்த படிவங்களில் ஒப்பந்தங்கள் [illegible] 1971 [illegible] 4 மணிக்குள் வந்து சேரவேண்டும். 4-12-1971 அன்றே மாலை 4-15 மணிக்கு ஒப்பந்தங்கள் பிரிக்கப்படும். ரூ. 3,000 கட்டுத் தொகையுடன் ஒப்பந்தம் அனுப்பப்படவேண்டும். மேற்படி சொத்துக்களைப் பண்ணுருட்டி விற்பனைக் கழக கண்காணிப்பாளரின் உதவியுடன் பார்வையிடலாம். ஒப்பந்தப் பத்திரங்களும் நிபந்தனைகளும் தென்னூர்க்காடு மார்க்கட் கமிட்டி, கடலூர் செயலாளர்-பொறுப்பினரிடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர் (பொறுப்பு)

(த. 67)

தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்
(தமிழ் நாடு அரசின் நிறுவனம்)

வேலை 1 : அம்பத்தூரில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (சிட்கோ) பகுதியில் 90'×40' தொழிற்சாலைக் கொட்டகைகள். இரண்டு ; 80'×40' கொட்டகை ஒன்று ; 65'×30' கொட்டகை இரண்டு கட்டுதல்

வேலை 2 : அம்பத்தூர் சிட்கோ பகுதியில் 65'×30' அளவில் மூன்று தொழிற் சாலைக் கொட்டகைகள் 60'×40' அளவில் இரண்டு கொட்டகைகள் கட்டுதல்.

வேலை 3 : அம்பத்தூர் சிட்கோ பகுதியில் 60'×40' தொழிற்சாலைக் கொட்டகைகள் மூன்று ; 50'×30' கொட்டகைகள் இரண்டு; 36'×30' கொட்டகை ஒன்று.

தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்டின் பொது மேலாளரால், மத்திய மாநில அரசுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மேற்கண்ட வேலைகளுக்காக 9—12—1971 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் பொது மேலாளரால், கன்னெம்மை பில்டிங்ஸ் 7-வது தளம், 122, அண்ணா சாலை, சென்னை-6-ல் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தவடிவம்;	வேலை 1 மொத்தத் தொகை;	வேலை 2 மொத்தத் தொகை;	வேலை 3 மொத்தத் தொகை;
கட்டுத் தொகை	ரூ. 5,900	ரூ. 5,125	ரூ. 5,435
வரைபடத்துடன் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.	ரூ. 20 அத்துடன் 75 காசு விற்பனை வரி.	ரூ. 20 அத்துடன் 75 காசு விற்பனை வரி;	ரூ. 20 அத்துடன் 75 காசு விற்பனை வரி;
வேலையை முடிக்க வேண்டிய காலம் ..	4 மாதங்கள்;	4 மாதங்கள்;	4 மாதங்கள்;
மேலே கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கத் தொடங்கும் தேதி.	15—11—71	15—11—71	15—11—71
பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிய பிரிவினர்.	கிளாஸ் 2-ம் அதற்கு மேலும்.	கிளாஸ் 2-ம் அதற்கு மேலும்.	கிளாஸ் 2-ம் அதற்கு மேலும்;

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரியுடன் ரூ. 20·75 எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ரொக்கமாக மட்டுமே இது ஏற்கப்படும்.

கட்டுத் தொகை ஷெடியூல்டு பாங்க் அல்லது தேச உடைமையாக்கப்பட்ட பாங்கின் டிமாண்ட் டிராப்ட் வடிவில் மட்டுமே ஏற்கப்படும். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட் கணக்கில் இது கட்டப்படவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புவோர் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

எவ்வித காரணமும் கூறுமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவருக்கும் நிர்வாக இயக்குநருக்கும் உரிமை உண்டு.

(த. 70)

பொது மேலாளர்,
தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்.

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்), பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர்.பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30—11—1971 பிற்பகல் 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3·30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் — — —	சி.ஐ. மேல்மட்டமூடி (C. I. Surface box) சப்ளை செய்தல்.
ஒப்பந்த வகை ... — —	மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை — —	ரூ. 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்). இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கிஉத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொது சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.
வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.	இரண்டு மாதங்கள்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை —	ரூ. 10·37 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர்களிடமிருந்து 14, ராமமூர்த்தி சாலை, சின்னச் சொக்கிகுளம், மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 27—11—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப்படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

(த,72)

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொதுச்சுகாதாரம்).

மின்சார வாரியம்
எண்ணூர் அனல் மின் திட்டம்
(மொத்தத் தொகை ஒப்பந்தம்)

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம், எண்ணூர் அனல் மின் நிலைய களத்தின் அருகே 1-1-1972 முதல் ஓராண்டுக் காலத்திற்கு மரக்கறி உணவு விடுதி நடத்துதல் எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 9-12-1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

2. ஒப்பந்தங்களின் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும்) கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். இத்தொகை எக் காரணத்தைக்கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. இந்த வேலைக்கான கட்டுத் தொகை ரூ. 1,000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்; அவ்வாறு இல்லாமல் வரும் ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதித் தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கக் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணுமல்போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவை அல்ல;

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின்திட்டம்.
தொலைபேசி எண் : 59389,
59556 (Five lines)
தந்தி : ENTERMAL.
(த. 48)

ஒப்பந்தப்புள்ளி

பொதுப்பணித்துறை

வேலையின் பெயர் ! சென்னை அண்ணா சாலையிலுள்ள கலைவாணர் அரங்கத்தைத் திருத்தி அமைத்தல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற் கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறிஞர், பொதுப் பணித்துறை, சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5, அவர்களால், சென்னை-5 சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலு வலகத்தில் 15—12—1971 பிற்பகல் 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறிஞர், சென்னை, செங்கற்பட்டு வட்டம், பொதுப் பணித்துறை, சென்னை-5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன் னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூ. 15,000

3. வேலை முடிக்க வேண்டிய காலம்—8 மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூபாய் 30 (ரூபாய் முப்பது மட்டும்) கருவூலத்திலோ (அ) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ Public works Remittances III other Remittances என்ற தலைப்பில் நிர்வாகப் பொறிஞர், கட்டடக்கோட்டம்-1 சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப் படல் வேண்டும்.

5. விற்பனை வரி ரூ. 1·05 (ரூபாய் ஒன்றும் ஐந்து காசுகளும் மட்டும்) அதே செலானில் குறித்துக் கருவூலத் திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ " XII விற்பனை வரி " மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் " என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள்—அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி 6—12—1971 முதல் 14—12—1971 முடிய.

7. ஒப்பந்தப் புள்ளித் தேதி—15—12—1971 (பிற்பகல் 3-00 மணி).

மேற்கண்ட விவரங்களை மேற்பார்வைப் பொறிஞர் அலு வலகம், பொதுப்பணித் துறை சென்னை—செங்கை வட்டம் சேப்பாக்கம், சென்னை-5-ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளி யையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறுமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறி ஞர் பொதுப்பணித் துறை, சென்னை—செங்கை வட்டம், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம்,
சென்னை-5.

25—10—1771

(த. 90)

ஒப்பந்தப் புள்ளி

உதகை நகராட்சி

1971-ஆம் வருடம் நவம்பர் மாதம் 29-ஆம் தேதி திங்கட் கிழமை மாலை 3-30 மணிக்குள் புச்சர் தெருவிலுள்ள 2" ஜி.ஐ. பழைய மெயினை மாற்று வதற்காக ஜி.ஐ. பைப்புகளும், உபகரணங்களும் விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தங்கள் உதகை ஆணையர் அவர்களால் வரவேற்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களும், நிபந்தனைகளும் 27-11-1971 மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத் திற்கும் ரூ. 4-12 செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை நகராட்சிப் பொறி யர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப் பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 4-12, 27-11-1971-ஆம் தேதிக்குள் நகராட்சி கருவூலத் தில் செலுத்தப்படவேண்டும்.

சி. சங்கரலிங்கம்,
ஆணையர்.
நகராட்சி அலுவலகம்,
உதகமண்டலம்,
(த. 65)

வேலைவாய்ப்பு

மதுரை மாவட்டம், தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றி யத்தைச் சேர்ந்த பேரையூர் மருத்துவ மனைக்கு எல்.எம்.பி. அல்லது ஜி. சி. ஐ. எம்., அல்லது எல்.சி.எம். கல்வித் தகுதி உள்ள ஒரு மருத்துவ அதிகாரி இடத்திற்கு விருப் பமுள்ளவர்கள் 30-11-1971 மாலை 5-00 மணிக்குள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்பிக்கக் கோரப்படுகிறார்கள்.

வயது—30 வயதுக்குட்பட்டோர்
சம்பளம்—400—15—475—20 575—25—650 மற்றும் கூடிய கிராக்கிப்படியுடன்.

விண்ணப்பத்துடன் தகுதிச் சான்றுகளின் உண்மை நகல்கள் அனுப்பிவைக்க வேண்டும்.

த. பாலசுப்பிரமணியம்
ஆணையர்.
ஊராட்சி ஒன்றியம்,
தே. கல்லுப்பட்டி,
நாள் : 27—10—71.
(த. 52)

ஒப்பந்தப் புள்ளி

வட ஆர்க்காடு மார்க்கெட் குழு—வேலூர்.

கீழ்க்கண்ட இனங்களுக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந் தப் புள்ளிகள் 19—11—1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகளுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு கட்டுத் தொகை கட்டப்பெற வேண் டும். பத்திரங்கள் இதர விவரங்களைக் கீழே கையொப்ப மிட்டவர்களிடமிருந்து பெறலாம்.

விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1. 4,200 புதிய பி. டிவில் கோணிகள் வழங்கல்.	375
2. திருவண்ணாமலை 3-வது டிரான்சாக்ஷன் கொட்டகைக்கு மின் வசதி.	75
3. வந்தவாசி டிரான்சாக்ஷன் மின்வசதி	90
4. திருவண்ணாமலை புறநீர் வழங்கும் ஏற்பாடு களுக்கு ஜி.ஐ. பைப்புகள், ஸ்பெஷல்கள் வழங்கல்.	65

டி. ஆர். தம்பு ரெட்டி,
செயலாளர்.

(த. 96)

பொதுப்பணித் துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலையை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு ஆளுநர் சார்பில், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம் அவர் களால் கோயம்புத்தூரில் உள்ள அவரது அலுவலகத்தில் 8—12—1971 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்—நீலகிரி மாவட்டம் உதகமண்டலத் தில் மக்கள் நல்வாழ்வு ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 3,000.

வரை படத்துடன் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, விற் பனை வரி உள்பட—ரூ. 10·35

வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களை, மேலாளர், நிர்வாகப் பொறி யாளர் அலுவலகம், கோயம்புத்தூர் கோட்டம், கோயம்புத் தூர் என்ற முகவரியில் எழுத்து மூலம் கேட்டும் மேல் குறிப் பிட்டுள்ள தொகையைத் தந்தும் (அது திருப்பித் தரப் படமாட்டாது) 22—11—1971 முதல் அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்.

(த .92)

ஏல விற்பனை

வனத் துறை

தமிழ்நாடு வனத் துறையின ரால் 6—12—1971 திங்கட்கிழமை யன்று வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் கிடங்கில் சுமார் 525 டன்னும், 8—12—1971 புதன் கிழமையன்று கோயமுத்தூர் மாவட்டம், சத்தியமங்கலம் கிடங்கில் சுமார் 250 டன்னும் எடையுள்ள சந்தனக் கட்டை களும், இருப்பிலுள்ள வெள்ளை டைக் கட்டைகளும் ஏலத்தில் விற்கப்படும்.

விவரங்கள் வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் கோட்ட மாவட்ட வன அலுவலரையும், கோவை மாவட்டம், ஈரோடு, கோவை வடக்குக் கோட்ட மாவட்ட வன அலுவலரையும் கேட்டறியலாம்.

கி. வெங்கிடகிருஷ்ணன்,
வனப் பாதுகாவலர்,
சேலம் வட்டம்.

(த. 97)

சான்றிதழ்த் தேர்வு

சானிடரி இன்ஸ்பெக்டர்கள் சான்றிதழ்த் தேர்வு பாகம் 2 சப்ளிமெண்டல்—ஜனவரி, 1972.

1972 ஜனவரி 4-ல் தொடங் கும் மேற்கண்ட தேர்வில் கலந்து கொள்வதற்கான மனுக்கள், மக் கள் நல்வாழ்வுப் பணி குடும்ப நலத் திட்டம், அடிஷனல் இயக் குநர், சென்னை-6, தேர்வு நடத் தும் குழுத் தலைவர் அவர்களுக்கு 10—12—1971-க்குள் வந்து சேர வேண்டும்.

சானிடரி இன்ஸ்பெக்டர் சான் றிதழ்த் தேர்வு பாகம் 2-ல், கலந்து கொண்டவர்க்கும் தவறியவர் களுக்குமான மனுதாரர்கள் மட் டுமே, மேற்கண்ட தேர்வில் கலந்துகொள்ள உரியவர்களாவர்.

மனு வடிவங்கள், இதர விவ ரங்களைப் பெற 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டதும் சுய விலாசமிட்டதுமான உறைகளை உடன் வைத்து எழுதவேண்டும்.

அடிஷனல் இயக்குநர்,
மக்கள் நலப்பணிகள் குடும்ப நலத் திட்டம் மற்றும் தலைவர், தேர்வு நடத்தும் குழு,
சென்னை—6.

(த. 58)

இராணுவத்திற்குத் தேர்வு

இராணுவத்தில் நிரந்தரக் கமிசன்கள்—டேராடூன் இந்திய இராணுவ அகாடமி 54 ஆவது பயிற்சி 1973 ஜனவரி—சேர்ப்பதற்கான தேர்வு.

1. மத்திய அரசு ஊழியர் பணியாளர் தேர்வுக் கழகம், 1972 ஏப்ரல் 28-ல் ஆமதாபாத், அலகாபாத், பெங்களூர், போபால், பம்பாய், கல்கத்தா, கட்டாக், டில்லி, ஹைதராபாத் ஜெய்பூர், ஸ்ரீநகர், சென்னை, நாகபுரி, பாட்டியாலா, பாட்னு, சில்லாங், திருவனந்தபுரம் ஆகியவைகளில் நுழைவுத் தேர்வு தொடங்கும்.

2. வயது வரம்பு.—மனுதாரர்கள் 1952 ஜனவரி 2-க்கு முன் பிறந்தவர்களாகவோ, 1955 ஜனவரி 1-க்குப் பின் பிறந்தவர்களாகவோ இருத்தல் ஆகாது. இந்த வயது வரம்பு யாருக்கும் தளர்த்தப்படமாட்டாது.

3. குறைந்த பட்ச கல்வித் தகுதி.—இந்தத் தேர்வில் இடம் பெற இன்டர்மீடியேட், அல்லது இதற்காக அங்கீகரிக்கப்பட்ட வேறு கல்வித் தகுதி இருக்க வேண்டும். மெட்ரிகுலேஷனுக்குப் பிறகு இரண்டு ஆண்டுக்குக் குறையாத பொறியியல் டிப்ளமாப் படிப்பு, மாநில அரசினரால் வேலைக்கு அங்கீகரிக்கப்பட்டதாய் இருப்பின், அத்தகைய டிப்ளமா ஏற்கப்படும். இத்தகைய தேர்வில் எழுதியிருப்பவர்கள் அல்லது எழுத உத்தேசித்திருப்பவர்களின் மனுக்கள் பூர்வாங்கமாக ஏற்கப்படுவதற்குரியவை.

ஆனல் 1971 டிசம்பர் 1-ல் இந்தத் தேர்வில் தேர்வு பெற்றதற்குச் சான்று காட்டப் பெற வேண்டும்.

4. தேர்வு.—எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்கள் பணித் தேர்வுக் குழு ஒன்றின் முன் நேரடிப் பேட்டிக்கு வரவேண்டும்

5. மனுச் செய்வதற்கான படிவங்கள், இதர விவரங்களை அருகிலுள்ள படை ஆட் சேர்ப்பு அலுவலகம், இராணுவ ஏரியா, இராணுவ சப் ஏரியா தலைமை அலுவலகம், தேசிய மாணவர் படை யூனிட்டுகள் அலுவலகம், ஆகியவைகளிலிருந்து பெறலாம்.

மனு வடிவங்கள், இதர விவரங்களைச் செயலாளர், மத்திய அரசு பணியாளர் தேர்வுக் கழகம் (யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்), டோல்பூர் இல்லம், புது டெல்லி-11-ல் ரூ. 1 செலுத்தியோ, அல்லது மணியார்டர் செய்தோ பெறலாம். அஞ்சல் ஆணைகள், காசோலைகள் தபால் மூலம் கோரிக்கைகளுடன் வரும் பண நோட்டுகள் ஏற்கப்படமாட்டா. மணியார்டர் கூப்பனில் ''Indian Military acadamic Examination—April 1972'' என்று குறிப்பிட்டுப் பெயரையும், முகவரியையும் கொட்டை எழுத்துக்களில் எழுதவேண்டும்.

6. திருமணமாகாத ஆண்கள் மட்டுமே இந்தத் தேர்வுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

7. மனுக்கள் இந்தியாவிலுள்ள மனுதாரர்களைப் பொறுத்த வரை மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்திற்கு 1971 டிசம்பர் 6-க்குள் வந்து சேர வேண்டும். வெளி நாடுகளிலும், அந்தமான், நிக்கோபார், இலட்சத் தீவு, மினிகாய், அமின்திவி தீவுகளிலும் வசிப்பவர்களின் மனுக்கள் 1971 டிசம்பர் 20-ஆம் தேதிக்குள் வரவேண்டும்.

8. இந்திய ராணுவ அகாடமியில் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. பெற்ருேர் அல்லது பாதுகாவலர்கள் வருமானம் எல்லாத் துறைகளிலிருந்தும் மாதம் ரூ. 350-க்கு மேற்படாமல் இருந்தால் அத்தகைய கேடட்களுக்கு அரசு நிதி உதவியும் அளிக்கும்.

ஏல விற்பனை

பொதுக் கண்காணிப்பாளர்

செங்கற்பட்டு பிராஞ்சு செட்டில்மெண்ட் அலுவலகத்தைச் சேர்ந்த அரசாங்க ஜீப் எம்.எல்.எக்ஸ். 3642 செங்கற்பட்டு உதவி செட்டில்மெண்ட் அலுவலரால் பிராஞ்சு செட்டில்மெண்ட் அலுவலகம் எண் 35, பஷீத் சாஹிப் தெரு, செங்கற்பட்டு-2ல் 22–12–1971 காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ஏல நேரத்தின் போது விற்பனை நிபந்தனைகள் விவரங்கள் அடங்கிய குறிப்பு தரப்படும்.

ஏலம் கோர விரும்புவோர் மேலே குறிப்பிட்ட இடத்தில் அலுவலக நாட்களில் காலை 11-லிருந்து மாலை 5 மணி வரை வண்டியைப் பார்வையிடலாம்.

ஏலம் தொடங்குவதற்கு முன்பு கட்டுத் தொகை ரூ. 100 கட்ட வேண்டும். ஏலத்தில் எடுத்து கோரப்பட்ட தொகையில் 25 சத விகிதம் உடனே கட்ட வேண்டும்.

உதவி செட்டில்மெண்ட்
அலுவலர், செங்கற்பட்டு.

(த. 82)

ஒப்பந்தப்புள்ளி

போக்குவரத்துத் துறை

சூபர் எனுமல்டு வயர்கள் வழங்குவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 26–11–1971 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள் இதர விவரங்களை கொள்முதல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை, சென்னை-2 அவர்களிடமிருந்து அலுவல் நாட்களில் இலவசமாகப் பெறலாம்.

(த. 89)

வேலை வாய்ப்பு

உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பச்சைமலை, தென்புறநாடு கிராம மருந்தகத்தில் பணிபுரிய எல்.ஐ.எம் டாக்டர் தேவை. பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் திருச்சி மாவட்டத்திலுள்ள உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு விண்ணப்பிக்கக் கோரப்படுகிறது.

சி. சுப்ரமண்யம்,
ஆணையர்.

(த. 20)

வேலை வாய்ப்பு.

நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆயுர்வேத சிரோன்மணி (R. M. P.) பயிற்சிபெற்ற ஓர் மருத்துவர் தேவை. அதுகுறித்த விவரங்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

பி. எம். அப்துல் லத்திப்,
ஊராட்சி ஒன்றியம்,
நம்பியூர்.

(த. 103)

ஒப்பந்தப் புள்ளி

சுருளியாறு நீர் மின் திட்டம்

குறிப்பிடுகை எண் Sur 3-A, Sur 6-A, Sur 7-A, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தங்களை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் 34 எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி, மாவட்டம் என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் 30—11—1971 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னல் திறக்கப்படும்.

எண்.	குறிப்பிடுகை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்தப் பிரதிப்படி விலை உள்பட. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி.
1	Sur 3-A	நிரந்தரமான ஒன்றாவது இரண்டாவது 2F Type கட்டடம்.	10·35	1,400	30—11—1971
2	Sur 6-A	நிரந்தரமான 2E Type கட்டடம் இரண்டிற்கு.	10·35	2,000	30—11—1971
3	Sur 7-A	நிரந்தரமான AE Type கட்டடம்.	10·35	750	30—11—1971

ஒப்பந்த செட்டுகளின் நகல்களை (மாற்றத்தகாதவை) ஒவ்வொரு விலைக்கும் மேலே குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். அல்லது கோட்டப் பொறியாளர், சுருளியாறு நீர் மின் திட்டம், சின்னமனூர், மதுரை மாவட்டம் என்ற அலுவலகத்திலும் இத்தொகையைச் செலுத்தி ஒப்பந்தப் படிவத்தைப் பெறலாம். இத்தொகை எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப்பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வரும் ஒப்பந்தங்களையும் கட்டுத் தொகையை (Earnest Money Deposit) இணைக்கப் படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் காசோலைகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் ட்ராப்ட்ஸ் முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தங்களுடன் அனுப்பக்கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ சில அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்,
34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(த. 86)

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பொதுப்பணித் துறை

செங்கல்பட்டு—வடார்க்காடு வட்டம்

எண். 29214/வ2-70/நாள். 1—11—1971.

வேலையின் பெயர் — செங்கல்பட்டு மருத்துவ மனைக் கல்லூரியில் இரண்டாவது பகுதியின் முதல் மாடியும் இரண்டாம் மாடியும் கொண்ட கட்டிடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப் பணித்துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கல்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வையின ரால் 10—12—1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப் படுகின்றன. அதே நாள் 3·15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு—வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப்பொறியாள ரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை
2. முன்வைப்புத் தொகை ..	ரூ. 18500.
3. ஒப்பந்தப்புள்ளி பத்திரங்களின் விலை வரைபடத்துடன்.	ரூ. 51·50 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.
4 முடிக்க வேண்டிய காலம்—ஒப்பந்தப் புள்ளி.	18 மாதங்கள்

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் செங்கல்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 22—11—1971முதல் 8—12—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 50·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப் படமாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் "P.W.D. Remittances" என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து., கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி ரூ. 1·50 கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்கில் "XII Sales Tax (b) receipt under State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுக்களை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகை கருவூலச்சீட்டு வடிவிலோ. தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லதுஷெடியூல்டுபேங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பேங்குகளின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப்பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்தந்தத் தபால் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப்புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கை—வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்.

(த. 83)

ஏல விற்பனை

வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பயன் இழந்த ஜீப் எம். எஸ். ஓ. 2469 கீழே கையொப்பமிட்டவரால் 26-11-1971 பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். விவரங்களைக் கீழ்க்கண்டவரிடமிருந்தோ, அல்லது வள்ளியூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்தோ அலுவல் நாட்களில் பெறலாம்.

கோட்டாட்சி அலுவலர்.

(த. 95)

தென்னை மரக் குத்தகை ஏலம்

திருவாரூர் பவித்திரமாணிக்கத்தில்உள்ள வேளாண்மைக் கருவிகள் தொழிற் கூடத்திற்குச் சொந்தமான 37 தென்னை மரங்களை 1-12-1971 முதல் ஓர் ஆண்டுக் காலத்திற்குக் குத்தகை விட 22-11-1971 அன்று மாலை 3-00 மணி அளவில் மேற்படி தொழிற்கூடத்தின் பொதுக் கண்காணிப்பாளரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மற்ற விவரங்களைத் தொழிற்கூட அலுவலக நேரத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

பொதுக் கண்காணிப்பாளர்,
விவசாயக் கருவிகள் தொழிற் கூடம், திருவாரூர்.

(த. 98)

ஒப்பந்தப் புள்ளிகள்

நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

பாம்பன் வட்டம், சென்னை-15.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் நெம்பர் 4, ஸ்ரீநகர் காலனி, சென்னை-15-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 24—11—1971 அன்று மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்.	வேலை.	விவரம்.	முன்வைப்புத் தொகை.
1	கிழக்குக் கடற்கரைச்சாலையில் தேன் பாக்கம் அருகே கழிமுகத்தின் குறுக்கே சங்கிலித் தொடர் 3873·94 முதல் 6047·96 வரை மூன்று பாலங்கள் கட்டி, பாலங்களை இணைக்கும் அணுகுசாலைகள் அமைத்தல்.		ரூ. 41685

ஒப்பந்தங்கள் 24-11-1971 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர், சென்னை-25 (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) ஜெமினி மேம்பாலக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 51·75-ம் செலுத்தி 16—11—1971 முதல் 23—11—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை), ஜெமினி மேம்பாலம்,சென்னை-25 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை), ஜெமினி மேம்பாலம் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான 'ரிசர்வ் வங்கி 'யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 73)

வீட்டு வசதி வாரியம்,
சென்னைக் கிழக்குக் கோட்டம்.

குறிப்பாணை எண்-எம்.இ.4/910/71, நாள் 21—10—71.

வடசென்னை புறநகர்த் திட்டத்தில் புதை சாக்கடை வேலைகளுக்கு வியாசர்பாடியில் உள்ள செக்ஷன் ஸ்டோர்ஸில் வழங்குவதற்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 29—11—1971 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. 18" C. I. manhole frame and cover (2 CWT.) 519 Nos.
2. 24" C.I. manhole frame and cover (4 CWT.) 10 Nos.
3. 20' Long 6" C.I. pipe with suitable base and C.I. Cowl 75 Nos.
4. Tarred Yarn 14 to 15 ply 4,800 Kgs.
5. Lead Wool 1,900 Nos.
6. C.I. Steps 1,580 Nos.

இந்த வேலையின் மதிப்பு சுமார் ரூ. 1,25,000.
கட்டுத் தொகை ரூ. 1,875.

மேற்கொண்டு விவரங்களையும் ஒப்பந்தப்புள்ளி விவரங்களையும் பெற, ரூ. 10-ம் அத்துடன் விற்பனை வரியையும் இந்த அலுவலகத்தில் 8—11—1971-லிருந்து அலுவல் நாட்களில் காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஜகதீசன்,
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 8)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தனி மேற்பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் அவர்களால் 16—12—1971 மாலை 4·00 மணி வரை கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர் — — அரசலாற்றிலிருந்து பிரியும் ஏ.28 கூத்தானூர் கால் வாயைப் புதுப்பித்தல்.
2. வேலைகளுக்கான தொகை. பிணைப்பணத் ரூ. 240.
3. ஒப்பந்தவகை — — கே.2.
4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை. ரூ. 5.
5. விற்பனை வரி — — — 20 காசுகள்.
6. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி. 2—12—1971 முதல்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில் பி.டபிள்யூ. 3 ஓ.ஆர். என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், கால்வாய் புதுப்பிக்கும் கோட்டம், தஞ்சாவூர், கணக்கில் செலுத்தப்பட வேண்டும். • விற்பனை வரியை அரசினர் கருவூலத்தில் XII Sales Tax b. receipt under sales tax Act-General Sales tax" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

மற்ற விதிமுறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அ. சேஷாத்திரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
காவிரி வளர்ச்சிப் பணிகள் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 74)

மாநிலத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கு 1972—73ஆம் ஆண்டுக்குத் தேவைப்படும் எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்கள், அப்சார்பெண்ட் காட்டன் உல் ஆகியவை களை வழங்குதல்.

மாநிலத்தில், மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழ் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லது அதற்குப் பிற்பட்ட தேதியிலிருந்து 1973 மார்ச் 31 வரை உள்ள காலத்துக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்கள், அப்சார்பென்ட் காட்டன் வுல் ஆகியவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலக மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் அவர்களால், தமிழ்நாடு ஆளுநர் சார்பில் 1972 ஜனவரி 11, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், நிபந்தனைகள், இதர விவரங்களை மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை-5-க்கு 25-12-71 தேதியிலிருந்து மனுச் செய்து பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10. இத்துடன் மூன்றரை சத விகித விற்பனை வரி செலுத்த வேண்டும். பத்திரத்துக்கான தொகை, இந்திய ரிசர்வ் பாங்க் கிளைகளிலோ, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளைகளிலோ அல்லது அரசு கருவூலத்திலோ "XXIII. Medical II. Director of Medical Education—Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை "State Sales Tax Act—General Sales Tax" என்ற கணக்கில் செலுத்த வேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கில் செலுத்தினால், அசல் சலான்களைக் கொடுக்க வேண்டும். கருவூலங்களில் செலுத்தினால், சலானின் எண், தேதி, கட்டப்பட்ட தொகை, ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயர், தொகை செலுத்தப்பட்ட பாங்க் அல்லது கருவூலத்தின் பெயர் முதலியன, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தைக் கோரும் மனுவில் தெரிவிக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-ந் தேதிக்குப் பிற்பட்ட சால்வன்சி நேஷனலிட்டி சான்றிதழ், தாசில்தார் கையொப்பத்துடனும் ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000-ஐ மீறுவதானால் வருமான வரி வெரிபிகேஷன் சான்றும், ஒப்பந்த மதிப்பு ரூ.1,000-ஐ மீறுவதானால் விற்பனை வரி கிளியரன்ஸ் சான்றும், அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் கையொப்பமிடப்பட்ட சரியான நகல்கள், ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப்பட வேண்டும்.

ஆர். பசுபதி,
தலைமைக் கணக்கு அலுவலர்,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்.

சென்னை-5.
31-10-1971.

(த. 68)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் நகராட்சிப் பணிகள் துறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை அல்லது இது போன்ற இதர அரசுத் துறைகளில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தலைமைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) அவர்களால் சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 1—12—1971 மாலை 3-00 மணி வரை, துறைக்குரிய சரியான படிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் தலைமைப் பொறியாளராலோ (ம. ந. வா. பொ.) அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும்.

வேலையின் பெயர்—தூத்துக்குடி தொழில் மையத்துக்கான நீர் வழங்கு திட்டம், தண்ணீர் சம்பந்தப்பட்ட 95 எம்.எல்.டி. திறன் எல்லா இயந்திரக் கருவிகள் வழங்கல் டெலிவரி, நிர்மாணம் குளோரினேஷனுக்கு முற்பட்ட, பிற்பட்ட அமைப்புகள் முழுதும்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 40,000 (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்).

இந்தத் தொகையைக் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்டாகவோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டியாகவோ, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், சென்னை-4 அவர்கள் கணக்கில் செலுத்தி, அதை ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்ப்பிக்க வேண்டும். கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—15 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20·60 (விற்பனை வரி உள்பட இது திருப்பித் தரப்படமாட்டாது).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை, நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் எட்வர்டு, எலியட்ஸ் சாலை, சென்னை அவர்கள் அலுவலகத்திலிருந்து 6—11—1971 முதல் 30—11—1971 வரை பெற்றுக் கொள்ளலாம்.

எம். மியாகான்,
தலைமைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்,
மற்றும் நகராட்சிப் பணிகள்.

சென்னை-5,
1—11—1971.

(த. 85)

பொதுப்பணித் துறை

கீழே குறிப்பிட்டுள்ள வேலையைமேற்கொள்வதற்காக தமிழ்நாடு ஆளுநர் சார்பில்மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, கோயம்புத்தூர், நீலகிரி சர்க்கிள் அவர்களால் கோயம்புத்தூரில் உள்ள அவரது அலுவலகத்தில் 30—11—1971 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்—கோயம்புத்தூரில் உள்ள கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ஜிம்னேசியம் மற்றும் விளையாட்டுத் திடல் ஓட்டத்திடல்கள் அமைத்தல்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 4,000

வரைபடத்துடன் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை மேலாளர், நிர்வாகப் பொறியாளர், அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயமுத்தூர் என்ற முகவரியில் எழுத்து மூலம் கேட்டும் மேலே குறிப்பிட்டுள்ள கட்டணத்தைத் தந்தும் (அது திருப்பித்தரப்படமாட்டாது) 18—11—1971 முதல் அலுவல் நாட்களில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
கோயம்புத்தூர்—நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த.84)

எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் நுண் கருவித் தொழில்கள் அமைப்பதற்காக அடையாறு எலக்ட்ரானிக்ஸ் மற்றும் நுண் கருவிகள் ஃபங்ஷனல் தொழில் பேட்டையில் வசதியான, தவணை—கொள்முதல் திட்டத்தில், குறிப்பிட்ட வடிவமைப்புத் தரப்பட்ட தொழிற்சாலைக் கொட்டகைகள் உள்ளன.

இந்தத் தொழில் பேட்டை, விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சி மையக் கவுன்சில், இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம், மற்றும் இதர உயர்தரத் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கு மிக அருகாமையில் உள்ளது.

மேற்கொண்டு விவரங்களுக்கு அணுகுக :
தொழில் வணிக (வணிக) துணை இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை-5,
தொலைபேசி : 84314—13

(த. 71)

42

வேலை வாய்ப்பு

கல்லூரிக் கல்வித் துறை.

அரசு கலைக் கல்லூரிகளில் தற்காலிகமாக நியமனங்கள் ; உதவிப் பேராசிரியர்கள், ட்யூடர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஆகிய வேலைகளுக்காக.

தமிழ்நாடு சபார்டினேட் பணியில் கீழ்க்கண்ட பாடங்களில் உதவிப் பேராசிரியர்கள், ட்யூடர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்கள் வேலைக்கு தற்காலிகமாக நியமனங்களுக்காக மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

பாடங்கள் :

1. பௌதிகம் .. (தகுதி—பெண்கள் கல்லூரிகளுக்கு எம்.எஸ்.ஸி, பௌதிகம் அல்லது பி.எஸ்.ஸி. பௌதிகம் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு. ஆண்கள் கல்லூரிகள் எம். எஸ்ஸி., பௌதிகம்.)
2. இரசாயனம் .. (தகுதி—ஆண்கள் கல்லூரிகள் எம். எஸ்ஸி., இரசாயனம். பெண்கள் கல்லூரிகள் எம்.எஸ்.ஸி., இரசாயனம் அல்லது பி.எஸ்ஸி., முதல் அல்லது இரண்டாம் வகுப்பு).
3. வரலாறு .. .. எம்.ஏ.
4. பூகோளம் .. .. எம்.ஏ. அல்லது எம்.எஸ்ஸி.
5. உயிரியல் .. .. எம்.எஸ்ஸி.
6. ஆங்கில இலக்கியம் .. எம்.ஏ.
7. வணிக இயல் .. எம்.காம்.
8. தமிழ் இலக்கியம் .. எம்.ஏ.
9. தாவர இயல் .. எம்.எஸ்ஸி.
10. கணிதம் .. .. எம்.எஸ்ஸி.
11. மலையாள இலக்கியம் .. எம்.ஏ.
12. புவியியல் .. எம்.எஸ்ஸி.
13. சம்ஸ்கிருதம் .. எம்.ஏ.

இந்த வேலைகளுக்குரிய மனுதாரர்கள் சிறப்புக்குழு அமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர், அலுவலகம், சென்னை-6-ல் மனுக்களைப் பெற்றுக் கொள்ள இறுதி நாள் 22—11—1971

மனுதாரர்கள் தங்கள் மனுக்களில் பெயர், வயது, தகுதி, ரேடுகள், விண்ணப்பித்துள்ள வேலைகள் குறித்துச் சரியான தகவல்கள் குறிப்பிட வேண்டும்.

சான்றிதழின் நகல்கள் மட்டுமே இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

இயக்குநர்,
கல்லூரிக் கல்வித்துறை.

கல்லூரிக் கல்வித் துறை,
இயக்குநர், அலுவலகம்,
(த.93) சென்னை-6.

ஒப்பந்தப் புள்ளி

திண்டுக்கல் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையரால் அல்லது அவருடைய அங்கீகாரம் பெற்றவரால் 30–11–1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். வந்த ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களடங்கிய அறிக்கைகளை நகராட்சிப் பொறியர் அலுவலகத்திலிருந்து அலுவலக நேரத்தில் நேரிலாவது தபால் மூலமாவது அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களுக்கு மனு 26–11–1971 தேதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டும்.

வரிசை எண்ணும், வேலையின் விவரமும்.	மதிப்புப் பட்டியல் தொகை.	கட்டுத் தொகை.	முடிக்கும் காலம்.
	ரூ.	ரூ.	
1. திண்டுக்கல் நகரத்தில் குறிப்பிட்ட இடங்களில் 3 கல்தளம் பாவி தார்த்தளம் போடும் வேலை.	33,200	830	ஆறு மாதம்.
2. திண்டுக்கல் நகராட்சியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் தார்த்தளம் புதுப்பிக்கும் வேலை.	31,390	785	ஷை
3. திண்டுக்கல் நகராட்சியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 3'' கல் தளம் புதுப்பித்துத் தார்த்தளம் போடும் வேலை.	28,780	720	ஷை

(த. 99) **ஆணையர்.**

423

ஒப்பந்தப் புள்ளி

தேதி : 4—11—1971

கடித எண் 244—த.வ.—71,

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க் கண்ட பணிகளுக்காக உறையின் மீது வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயர் எழுதப் பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிர்வாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 1 35—37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது கடற்கரைச் சாலை, சென்னை-1. அவர்களால் 2—12—1971 மாலை 3-மணி வரை வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத்திட்டவரால் அன்றே மாலை 3-05 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்.	ஒப்பந்த விவரம்.	வேலையின் தோராய மதிப்பீடு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்படமாட்டாது.)
		ரூ.	ரூ.	ரூ.
1 தண்டையார்பேட்டை வ.உ.சி. நகரில் 2·73 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நீர் நிலைத் தேக்கம், 21 மீட்டர் உயர கீழ் நீர் அடிமட்டத்திற்குக் கட்டுதல்.	முழுத் தொகை.	1,48,000	2,220	ரூ. 15-ம் விற்பனை வரியும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 1, 35—37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது கடற்கரைச் சாலை, சென்னை-1, அலுவலகத்திலிருந்து 19—11—1971 முதல் 1—12—1971 வரை எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-மணியிலிருந்து மாலை 3 மணி வரை, விற்பனை வரியுடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்குப் பணம் கட்டிய செலானைத் தந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்திற்கான விலையினை சென்னை, சைதாப்பேட்டை ஸ்டேட் பாங்கில் Personal Deposit Account (P. D. Account) of the Executive Engineer, Slum Clearance Board, Division No. 1 என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். விற்பனை வரி XII-Sales Tax B receipt under Sales Tax Act" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ, அல்லது எல்லாவற்றையுமோ, எந்த விதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிடும் உரிமை உண்டு.

எம். ஆத்மநாதன்,
நிர்வாகப் பொறியாளர், கோட்டம்-1
குடிசைப் பகுதி மாற்று வாரியம்.

(த. 69)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்—தூத்துக்குடியில் உப்புக்கடல் ரசாயனங்கள் ஆராய்ச்சிநிலையத்திற்கு முக்கியக் கட்டடமும் பணிமனையும் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 14—12—1971 அன்று மாலை 3·00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில்துறை 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்	.. ..	மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை	.. ..	ரூ. 4,800.
3. மாதிரி வரை படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து.		ரூ. 10·40.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம்.		8 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அலுவலகம், தெற்கு டிவிஷன், மதுரை தொழில்பேட்டை, மதுரையில் 24—11—1971 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்கரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசு கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ XXIX Industries other receipts என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) தெற்குக் கோட்டம் மதுரை தொழில் பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும்.

நிருவாகப் பொறியாளர்(கட்டுமானம்), தெற்குக்கோட்டம் மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்ட் வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின் வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

சென்னை-2.

(ந. 78)

ஒப்பந்தப் புள்ளி

சின்கோனாத் துறை

ஆனைமலை அரசினர் சின்கோனா தோட்டம், ஆனைமலை அரசினர் கொய்னா தொழிற்சாலை ஆகியவைகளில் தொழிலாளர், பணியாளர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்கு கடைசித் தேதி 30-11-1971 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிகள் இமே கையொப்பமிட்டவராலோ அல்லது அவரது அரசிதழ் பதிவு உதவியாளராலோ அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிரிக்கப்படும்.

இயக்குநர்,
சின்கோனாத் துறை.

(ந. 100)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

பாம்பன் வட்டம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்காக, தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள், பாம்பன் வட்டம்) அவர்களால், எண் 4, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை-15-ல் அவரது அலுவலகத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24-11-1971 மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்வார்.

தொடர் எண்ணும், வேலையின் விவரமும்.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்.
1. சென்னை கல்கத்தா சாலை தே. நெ. 5 (மைல் 24/8) கி.மீ.39.10-ல் சிறு பாலம் கட்டுதல், நுழை வழிகள் அமைப்பது உட்பட.	2,250	கோட்டப் பொறியாளர் (நெ.கி.பொ. ப.து. ஜெமினி ஃபிளைஓவர் பாலக் கோட்டம்.
2. சென்னை கல்கத்தா சாலை தே.நெ. 5 (மைல் 25/1) கி.மீ. 40.2-ல் சிறு பாலம் கட்டுதல். நுழை வழிகள் அமைப்பது உட்பட.	3,400	ஷை

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 24-11-1971 மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், பாம்பன் பாலம் வட்டம், சைதாப்பேட்டை, அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், பத்திரங்கள், வரை படங்கள், முதலியவைகளைக் கோட்டப் பொறியாளர் அலுவலகம், (நெ. கி.பொ. ப.), ஜெமினி ஃபிளை ஓவர் பாலக் கோட்டம், சென்னை-25-ல் ஒவ்வொரு வேலைக்கும் தனித்து எழுதியும், விற்பனை வரி உட்பட ரூ. 25.90 கட்டியும், 16-11-1971 லிருந்து 23-11-1971 முடிய எல்லா அலுவல் நாட்களிலும் அலுவல் நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப் பத்திரங்கள் விலை ரூ. 25·90 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது).

மேலே சொல்லப்பட்டுள்ள கட்டுத் தொகையை, கோட்டப் பொறியாளர், (தேசிய நெடுஞ்சாலைகள்) ஜெமினி ஃபிளை ஓவர்பாலக் கோட்டம் அவர்களின் அலுவல் வரம்புக்குட்பட்ட பகுதிகளில் ஏதாவது ஒரு அரசுக் கருவூலத்தில் " ரெவின்யூ டிபாசிட் " என்ற தலைப்பில் கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலைகள்), தேசிய நெடுஞ்சாலைகள், ஜெமினி ஃபிளை ஓவர் பாலக் கோட்டம் அவர்கள் கணக்கில் கட்டி, சலானை ஒவ்வொரு வேலைக்கும் உரிய ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

கட்டுத் தொகையானது, ஷெட்யூல் பாங்கிடமிருந்து பெற்ற பாங்க் உத்தரவாதத்துடன் தரப்படுமானால், அந்த உத்தரவாதம், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் ஒப்புதலுடன் வர வேண்டும்.

உரிய கட்டுத் தொகை இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டா.

துறை குறிப்பிட்டதற்கு மாறுபடாது உள்ள டிசைன்களின் அடிப்படையில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படமாட்டா.

ஜி. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(ந.81)

பொதுப்பணித் துறை

மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9-12-1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்	..	தஞ்சை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நாகரெத்தினம் பள்ள கிராமத்தருகில் வெள்ளாற்றின் வலது பிரிவின் குறுக்கே வண்டிப் பாலம் கட்டுதல்.
2. ஒப்பந்த வகை	...	கே. 2.
3. பிணைப்புப் பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்).		ரூ. 2,400 (ரூபாய் இரண்டாயிரத்து நானூறு மட்டும்).
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை, அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகைஎனும் தலைப்பில் செயற் பொறியாளர், பட்டுக்கோட்டைக் கோட்டம், பட்டுக்கோட்டை அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.		ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்)
5. விற்பனை வரி .. .. அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி 'பி' பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.		0·35 காசு.
6. ஒப்பந்த விவர அட்டவணை கிடைக்க ஆரம்பிக்கும் நாள்.		20-11-1971.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(ந. 102)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

எண்: 16480/எஸ்.டி.2/71 நாள் 27—10—1971.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் 25-1, மூன்றுவது தெரு, டாட்டாபாத், கோயம்புத்தூர்-12 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29—11—1971 அன்று மாலை, 3·00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4·00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏதேனும் ஒரு அலுவலர் அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஈரோடு மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் பல்வேறு வேலைகளுக்காக :

Piglead of 99.8./· purity confirming to I.S.S. 27/65 and 782/66 and as amended upto date.

பொருட்கள் வழங்குதல் டெலிவரி.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூபாய் 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்).

வழங்குதல் முழுவதையும் முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூபாய் 5·18(விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 18, சாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி. ஈரோடு-3, அவர்கள் அலுவலகத்தில் ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டுத்தொகை, நாட்டுடைமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியிலிருந்து பெறப்பட்ட 'டிமாண்ட் டிராப்ட்டு' வடிவிலோ அல்லது பாங்க் உத்தரவாத வகையிலோ நிர்வாகப் பொறியாளர், ஈரோடு—3, அவர்கள் கணக்கில் ஏற்கப்படும். பி.டபிள்யூ.-3 ஓ.ஆர். என்ற கணக்குத் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (ப.ந.பொ.டி.) ஈரோடு-3, கணக்கில கருவூலச் சலான் வடிவிலும் கட்டுத் தொகை ஏற்கப்படும். கட்டுத்தொகை செலுத்தாமல் வரப்பெறும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

எவ்விதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு உரிமை உண்டு.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த.42)

ஸ்ரீ கலியுக வரதராஜப் பெருமாள் கோயில், கல்லங்குறிச்சி

மேற்படி கோயில் ஆதீன பரம்பரை தருமகர்த்தா அவர்களால் கீழ்க்காணும் வேலையைச் செய்ய 23—11—1971ஆம் தேதி மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஷெட்யூல்டு ஒப்பந்தப் புள்ளிகள் பொதுப்பணித்துறை,ஹைவேஸ் மற்றும் இதர இலாக்காக்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகையுடன் கோரப்படுகிறது.

வேலையின் விவரம்.	கட்டுத் தெகை.	ஒப்பந்தப் பத்திரத் தின் விலை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.
கல்லங்குறிச்சி ஸ்ரீ கலியுக வரத ராஜப் பெருமாள் கோயிலின் வடபுறம் 3 சேவார்த்திகள் குவார்ட்டர்ஸ் கட்டுதல்.	(2½·/·) ரூ. 900	ரூ. 10-ம் தமிழக அரசின் விற்பனை வரியும் 3½·/.	ஆறு மாதங்கள்.

மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 23—11—1971-ஆம் தேதியன்று மாலை 4-15க்கு திறக்கப்படும்.

ஒப்பந்தப் படிவம் முழுத்தொகை.

ஒப்பந்த ஷெட்டியூல்டு பாரம், ஒப்பந்த விதிகள் முதலியன 12—11—1971-ஆம் தேதி முதல் 22—11—1971-ஆம் தேதி வரை கோயில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு ரூ. 10 (பத்து) மட்டும் அதற்குண்டான விற்பனைவரி 3½ சத வீதத்துடன் (திருப்பிக் கொடுக்க முடியாது) எழுத்து மூலமாக விண்ணப்பித்து ஒப்பந்தப் பாரம் வாங்கிக் கொள்ளவேண்டும். ஷெ கட்டடத்தின் வரைபடத்தை மேற்கண்ட நாட்களில் அலுவலக நேரங்களில் பார்த்துக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையைக் கோயில் அலுவலக நேரத்தில் ரொக்கமாகக் கட்டி ரசீதை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகைக்கான ரசீதை இணைக்காமல் அனுப்பும் ஒப்பந்தங்கள் ஏற்கப்படமாட்டாது. ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது ஆதீனப் பரம்பரை தருமகர்த்தா அவர்களின் முடிவைப் பொறுத்தது.

கல்லங்குறிச்சி,
3—11—1971.

கோ. கோவிந்தசாமி படையாட்சி.
ஆதீன பரம்பரை தருமகர்த்தா.

(த. 75)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டுவசதி வாரியம்

கிழக்குக் கோட்டம்

பார்வை எண்—எம். இ. 7/1025/71.

கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் குறிப்பிடப்பட்டு 13—12—1971 மாலை 3-00 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண், வேலையின் பெயர்.	வேலையின் சுமார் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்த வடிவம்.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை.
1 லாயிடு எஸ்டேட்டில் ஒவ்வொன்றும் நான்கு அடுக்குகள் கொண்ட (1-ல் 8) flats பிளாக்குகள் இரண்டும் (1-ல் 16) பிளாக்குகள் இரண்டும், (1-ல் 24) பிளாக்கு ஒன்றும் கட்டுதல்.	5,68,000	8,525	மொ.தொகை	ரூ. 20 இத்துடன் விற்பனை வரி. (திருப்பித் தரப்படமாட்டாது.)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கிழக்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35-ல் 22—11—1971 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரை ரொக்கம் கொடுத்துப் பெறலாம்.

86, அண்ணா சாலை,
சென்னை-35.

டி. ஜெகதீசன்,
நிர்வாகப் பொறியாளர்
(கிழக்கு).

(த. 79)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு வனத்துறைப் பணியில், வனத்துறை உதவி கன்சர்வேட்டர் வேலைக்காக எமர்ஜன்சி கமிசண்டு அலுவலர்கள்—குறுகிய சர்வீஸ்—ரெகுலர் கமிசண்டு அலுவலர்கள் இடையே இருந்து எடுத்தல்.

தமிழ்நாடு வனத்துறைப் பணியில் நேரடி நியமன முறையில் வனத்துறை உதவி கன்சர்வேட்டர் ஒரு நியமனத்திற்காக எமர்ஜன்சி கமிசண்டு அலுவலர்கள் குறுகிய சர்வீஸ்—ரெகுலர் கமிசண்டு அலுவலர்கள், ஏற்கனவே விடுவிக்கப்பட்டு வந்தவர்கள் அல்லது 31-3-1972-க்குள் விடுவிக்கப்படுமென எதிர் பார்ப்பவர்களிடையே இருந்து பேச்சலர் பட்டத் தரத்தில் 1971 டிசம்பரில் சென்னையில் எழுத்துத் தேர்வு ஒன்றிலும் பின்னர் வாய்மொழித் தேர்விலும் கலந்து கொள்வதற்காக மனுக்கள் 1971 டிசம்பர் 2-ஆம் தேதி மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்.—575—25—600—40—1,000 மாதம் ஒன்றுக்கு.

தகுதி.—(கல்வி) பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றிலிருந்து தாவர இயல், விலங்கியல், பௌதிகம், இரசாயனம், கணிதம், புள்ளியல், பூவியல் அல்லது பொருளாதாரம் பாடங்களில் குறைந்த பட்சம் இரண்டாம் வகுப்புப்பட்ட மேற்படிப்பு அல்லது வேளாண்மை, பொறியியல் (மெக்கானிக்கல், சிவில் அல்லது கெமிக்கல்) இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். கணிதம், புள்ளியியல், அல்லது பொருளாதாரத்தில் பட்ட மேற்படிப்பு உள்ளவர்கள் என்றால் அவர்கள் புகுமுகத் தேர்வுக்கு (அ) உயிரியல், (ஆ) பௌதிகம், (இ) இரசாயனம், ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்று எடுத்திருக்க வேண்டும்.

உடலளவு.—(1) உயரம் 163 செ.மீ.க்குக் குறையாமலும்,

(2) மார்புச் சுற்றளவு 79 செ.மீ.க்குக் குறையாமலும்,

(3) மார்பு விரிவு குறைந்த பட்சம் 5 செ.மீ இருக்க வேண்டும்.

பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர்களாயிருப்பின் உச்ச வயது வரம்பு 29 ஆண்டுகள்.

எமர்ஜன்சி கமிசன் அலுவலராக—குறுகிய சர்வீஸ்—ரெகுலர் கமிசண்டு அலுவலராகப் பணியாற்றிய காலம் பயிற்சிக் காலத்துடன் சேர்த்து—வயதைக் கணக்கிடும்பொழுது விலக்கிடப்படும்.

இத்துடன் வயது விசயத்தில் கீழ்க்கண்ட சலுகைகளும் அனுமதிக்கப்படும்.

(அ) செட்யூல்டு வகுப்பு, செட்யூல்டு பழங்குடி, பிற்பட்ட வகுப்பு ஆகியவைகளைச் சாராதவர்கள் விசயத்தில் 1-4-1972-ல் அவர்கள் 40 வயதை மீருத நிலை இருக்குமானல்—5 ஆண்டுகள் வரை.

(ஆ) செட்யூல்டு வகுப்பினர், செட்யூல்டு பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் விசயத்தில் 1-4-1972-ல் அவர்கள் 45 வயதை மீருதவர்களாயிருப்பின் 10 ஆண்டுகள் வரை.

முழு விவரங்களையும், மனு அடிவத்தையும் பெற, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்கு வேலையின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 50 காசு அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட தங்களது முகவரி உள்ள 23 செ.மீ. நீளமுள்ள உறையில் நூல் அஞ்சல் என எழுதிக் கடிதத்துடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். இப்படி உறையில்லாமல் வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(த. 87)

பெயர் மாற்றம்

தமிழக அரசின் செய்தி விளம்பரத் துறை 6—11—1971 முதல் "செய்தி—மக்கள் தொடர்புத் துறை" என்னும் பெயர் பெறுகிறது.

ஒப்பந்தப் புள்ளி

எண்ணூர் அனல் மின்திட்டம் (இயக்குதல், பேணுதல் பிரிவு)

குறிப்பு எண். PT 4/71-72.

தமிழக மின் வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் "தமிழக மின் வாரியம்—எண்ணூர் அனல் மின்திட்டம்—(இயக்குதல். பேணுதல் பிரிவு).

குறிப்பு எண் PT 4/71-72 எனவும், மற்றும் ஒப்பந்த தாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்ட வரால் 30—11—1971—மாலை 3·30 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னி யில் திறக்கப்படும்.

தேவையான பொருட்கள்:

Description	Quantity
High grade Bunnt lime with not less than 80./· cao content.	60 Tonnes

ஒப்பந்தத்தின் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலு வலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த வேலைக்கான முன் பணம் ரூபாய் 400 (நானூறு மட்டும்). இந்தத் தொகையை ஒப்பந்தப் பிரதி யில் கூறியுள்ளபடி முன் செலுத்த வேண்டும்.

துறையினரைச் சார்ந்த நமூனக்களில் இல்லாத ஒப்பந்தங் களும், இறுதித்தேதிக்கும் நேரத்திற்கும், பின்னர் சமர்ப்பிக்கப் பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, காரணம் காட்டாது நிராகரிக்கவும், வேலையை ஒப்பந்ததாரர் களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சாரவாரியம் பொறுப் பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்.
எண்ணூர் அனல் மின்திட்டம்,
எண்ணூர்,
சென்னை-57.

எண்ணூர்,
சென்னை-57.

தொலைபேசி எண்—59569
தந்தி—Enternal (Operation)

(த. 76)

ஆசிரியர், வெளியிடுபவர்; செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு; அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணு சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2


தமிழரசு
திங்கள்இருமுறை டிச 1-1971 35 காசு

அரசு சிமெண்ட்

வலிவும் வனப்பும் வாய்ந்தது



நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

A.C.11.



மலர் 2] 1-12-1971 [இதழ் 11

திறமிகு மின்தூசி விளக்கு
மக்களைத் தாக்கும் விந்தை நோய்
முந்திரி ஒரு முழு உணவு
திலம், கவனி, புறப்படு
சிலம்பை விளம்பும் பாரதி
வழி காட்டும் வட ஆர்க்காடு
சாமிநாதன் சேவை சமுதாயத்திற்குத் தேவை!
திருச்சி தந்த மேதை
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
வெண்பாப் போட்டி

மற்றும்

திரைப் படப் பரிசளிப்பு விழாக்காட்சிகள்

4, 5-ஆம் பக்கங்களில்

20—11—71 அன்று
தமிழக முதல்வர் கலைஞர்
அமெரிக்காவில்
ஆர்லங்தோ நீரூற்றுக்கள் பற்றிப் பாடிய கவிதை

திரு முரசொலி மாறன் அவர்களால் வழங்கப்பட்டுத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்ற—சிலம்பு தந்த இளங்கோவின் திருவுருவச் சிலை.


செய்திப்
படங்கள்
நகரவை மதுராந்தகம்
இதுவரை நகரப் பஞ்சா யத்துக்களாக இருந்த மதுராந்தகம் (செங்கை மாவட்டம்) சூரமங்கலம் (சேலம் மாவட்டம்) இரண்டையும் நகரவைகளாக்க அரசு முடிவு செய்துள்ளது.
மதுரை, கோவை, கரூர் பொள்ளாச்சி, தஞ்சை நகராட்சிகளின் மின்-தொழிலாளர்களுக்கான ஊதியக்குழு சிபாரிசுகளின் அடிப்படையில், 2-10-70 முதல் ஊதிய உயர்வை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.
ஊதிய உயர்வு மின்தொழிலாளர்க்கு
2-10-70
முதல்...
அரசு முடிவு
அரியானா
மைசூர்
பஞ்சாப்
தமிழ்நாடு அரசு
வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகளைத் தமிழகத்தில் விற்பனை செய்யக் கூடாது என்று அரசு தடை விதித்துள்ளது.
கோபன்


தமிழ்நாடு
அரசு
அக்டோபர்
1
புறநகர் பகுதி கோவை
கோவை நகரம், புறநகர்ப் பகுதிகளில் பணியாற்றும் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்பு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நகர ஈட்டுப் படியையும் வீட்டு வாடகைப் படியையும் அக்டோபர்த் திங்கள் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது.
கிழக்குக் கடற்கரையிலுள்ள மீன்வளப் பகுதிகளில் எந்தெந்த மீன்கள் கிடைக்கும் என்பதைக் கண்டு பிடிக்கும், ஒவ்வொன்றும் 9 லட்சம் ரூபாய் விலையுள்ள இழுவைப் படகுகள் இரண்டைத் தமிழ்நாடு அரசு வாங்க முடிவு செய்துள்ளது.
பயிர்ப் பாதுகாப்புக்காக 50 லட்சம் ரூபாய் செலவில் ஐந்து ஹெலிகாப்டர் விமானங்களை வேளாண்மைத் துறைக்காக வாங்கத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

நியூயார்க் எனும் நகரில் அரியதோர் சோலையிலே
விடுதலை மாதாவின் உருவொன்று கண்டேன்
ஒளிவிளக்கு போலொன்று ஏந்திநின்று
அடிமைகளும் பிசாசுகளும் அஞ்சிநின்று
நிமிர்ந்து கிடக்கின்ற நாட்டியத்தின்
ஏற்றத்தை என்னென்ன சொல்வேன்!

பசும்புல் தரை மீது பால் நிலவு –
பனித்துளி உதிர்வது போல் இக்காட்சி
– என்னை
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
'படக்'கென மாறிவிடும் மற்றோர் காட்சி
இருப்பதான் இங்கில்லை போலும்!
நிலப்பிறவி என்னும்
இலை உதிர்த்து வானையும் நீலின் தாங்கும்
பொன்னொளிச் பட்டாடையில்
பொன் பூப்பும் மஞ்சள் ஒளி
விழுவது மிகப் போல
வீழ்கின்ற எழிற்பயமும்

அந்திமாலைப் பொன்னை மனிதர்
கடலலையில் கரைந்திடும் - 435
காயத்தையும் உதைக்கும் வெட்டுப் போல
பிறர் தோல் மீண்டும் நின்று நீந்தும் போல
இருக்குமான் நிலவுகளோ நிலப்பு வளமாம்
மாக்கழித்திருவாயில் நம்பிக்கை
மங்கையர்கள் நிறைவாயில்
பாவிருந்து ஆக்கும் தெய்வாயில் பழுதில்
புவிநிறைந்து வைத்தொன்று கோலம் போல்
இன்றைக்கோ நாளைக்கோ காட்சி தந்தனை
நினைவே அமா –
நினைவாக நிலைத்தின்று வாழ்வெனக்கு
நட்பினோர் அழகுலே!
பெண்ணுருவத்தில் விடுதலைத் தாய் நீயே தான்
வண்ணத்தமிழ் கூட்டத்து – மனிதனே
வணக்கம் என்றும் இனிய கேட்பாம்.

அன்பு
மு. கருணாநிதி
22/11/71

வீட்டிற்கோர் மாமரம்

மாம்பழம் சுவையும், சத்தும் மிகுந்தது மட்டுமல்ல; மனித வாழ்வுக்கு இன்றியமையாத சக்தியையும் அளிக்கிறது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு சத்துணவு வல்லுநரின் ஆராய்ச்சியின்படி தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஓர் ஆண்டிற்கு 14,00,000 கலோரி சத்துக் கொடுக்கும் உணவு தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் ஓர் ஆண்டிற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து கொள்ள 1·45 ஏக்கரில் கோதுமை அல்லது 0·09 ஏக்கரில் வாழை அல்லது 0·05 ஏக்கரில் மா சாகுபடி செய்ய வேண்டும். இதிலிருந்து மா சாகுபடி செய்வதே மிகுந்த பயனுள்ள சிக்கனமான செயல் என்பது புலனாகின்றது. எனவே அனைவரும் தங்கள் தேவைக்கேற்ப ஒரு சில மாமரங்களையாவது வளர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அவ்வாறு செய்ய முடியாவிட்டாலும் வீட்டிற்கு ஒரு மாமரம் வளர்ப்பது எளிய செயலல்லவா? வீட்டிற்கோர் மாமரம் வளர்க்க இன்றே விரைந்து செயல்படுவீர்!

இந்திய நாடு காக்க—

இன்று தோன்றியுள்ள பதட்டமான சூழ்நிலை முற்றி, இந்தியாவில் போர் மூளாமல் இருக்கும் வழி வகைகளை நாம் தேடிக்கொண்டிருந்தாலும் போர் எனும் நெருக்கடியில் நாம் ஈடுபட நிர்ப்பந்திக்கப் பட்டோம் என்றால் இறுதியாக வெற்றியடையும் வகையில் தமிழகத்தின் தியாகம் இருந்தது என்பதுதான் தமிழ் மக்கள் கேட்டு மகிழக்கூடிய செய்தியாகும்.

இந்திய எல்லையில் பகைவரிகளால் நேரவிருக்கும் பேராபத்து எத்தகையதாக உருவெடுக்க விருக்கிறது என்பதை இன்றுள்ள சூழ் நிலைகள் நமக்குக் காட்டுகின்றன.

ஆகவே, அந்த ஆபத்தை நீக்கிட—தடுத்திட-தகர்த்திட தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொரு தமிழ் மகனும் சூளுரை எடுத்துக் கொள்ளவேண்டும்!

எத்தகைய ஆபத்து வந்தாலும் இந்தியாதான் வெல்லும் என்ற தன்னம்பிக்கை நமக்கு உண்டு.

எந்த நாட்டினருடனும் நமக்குப் பகைமையில்லை. ஆதிக்க உணர்வோடு யாரிடமும் போரிட நாம் செல்லவில்லை. ஆனால், நம் உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் வலுச் சண்டைக்கு வருவோருக்கு வகையான பாடம் புகட்டிய வரலாறு நமக்குண்டு.

இந்திய நாட்டிற்காகச் செய்யப்படும் எந்தத் தியாகத்திலும்—அது நாட்டு எல்லைக்கான போராட்டமானாலும் விடுதலைப் போராட்டமானாலும் குறிப்பாகத் தமிழ் மண்—தனது மான உணர்வை-தனது வீரப்பண்பை உலகம் வியக்க நிரூபித்துக் காட்டிடும் பெருமை படைத்தது.

மீண்டும் அத்தகைய ஒரு வாய்ப்பு வருமாயின் அந்தத் தியாக உணர்வை-வீர உணர்வை-மான உணர்வை நிரூபித்துக்காட்டத் தமிழகம் தயங்காது; தயங்காது என்ற சூளுரையை ஏற்போம்.

பார்த்தோம் படித்தோம்

வாழ்க முதல்வர்

அமெரிக்க நாட்டிற்கு உடலாற பிரிந்து சென்றிருக்கும் உத்தமர் கலைஞர் முதல்வர் டாக்டர் அவர்கள் விடுத்திருக்கும் விடை பெறு மடங்கல் அன்பூற்றினைப் பெருக்கி நிற்கிறது! இதயத் தொலைவில்லா இப்பிரயாணம், ஏந்திச் சென்றிருக்கும் இலட்சியப் பணிகளை நிறைவு செய்து தரும் இனிய பயணமாகத் திகழ எல்லாம் வல்ல தமிழிறையை இறைஞ்சுவோம். தமிழரசியின் தவப்புதல்வன் தாயகம் திரும்பியதும் தனிப் பேருவகைத் திருவிழா நடத்துவோமாக!

—சு. அ. கேசவன்,
புளியங்குடி.

பயனுள்ள 'சீர்கேடு'

'சூழ்நிலைச் சீர்கேடு' பயனுள்ள கட்டுரை. நம்மை அறியாமலும்-அறிந்தும் காற்றில் பரவு கின்ற நச்சுப் புகைகள் மனித இனத்துக்கு

எத்தகைய கெடுதிகளை உருவாக்குகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார் கட்டுரை ஆசிரியர்.

—கே. பத்மநாபன்,
கோவை.

விவசாய வெண்மைப் புரட்சி

பசுமைப் புரட்சியைத் தொடர்ந்து உருவாகியுள்ள 'வெண்மைப் புரட்சி' கட்டுரை படித்தேன். பருத்தி உற்பத்தியை வெண்மைப் புரட்சி என்று குறிப்பிட்டுள்ளது, நயமாக இருக்கிறது.

—ஏ. ஞானபாண்டியன்,
சிவகாசி.

தமிழரசுக்கு இணை தமிழரசே

கண்ணாடிப் பொருள்கள் செய்வதற்குப் பயிற்சி நிலையம் ஒன்று இருப்பதும்-அந்தப் பயிற்சி நிலையம் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் இருக்கின்றது என்பதும்-அதுவும் சென்னையிலே-கிண்டித் தொழிற்பேட்டையில் இருக்கின்றது என்பதும் தமிழரசு நவம்பர் 16-ஆம் தேதி இதழைப் படித்த பின்புதான் தெரிந்தது. இதுபோன்ற பயனுள்ள செய்திகளைத் தெரிவிப்பதில் தமிழரசுக்கு இணை தமிழரசேதான்'!

—வீரகண்டாமணி,
கோடம்பாக்கம்.

முந்திரிச் செலவு!

முந்திரி சிறப்புப் பகுதி வெளியிட்டாலும் வெளியிட்டீர்கள் எனக்கு இரண்டரை ரூபாய் செலவாகிவிட்டது. கருவுற்றிருக்கும் என் மனைவி, முந்திரி பற்றிய கட்டுரைகளைப் படித்ததாலும், சுவையூறும் முந்திரியின் படங்களைத் தமிழரசு ஏட்டில் பார்த்ததாலும், முந்திரி வேண்டுமென்று அடம் பிடித்துவிட்டாள். என்ன செய்வது? 200 கிராம் வாங்கித் தந்து தொலைத்தேன்!

—எஸ். ஆர். சிதம்பரம்.
மதுரை.

செந்தேன் செய்தி

இளங்கோவடிகளுக்குச் சிலை வைத்த அரும்பணிக்கு, மாசு கற்பிக்கும் சில தமிழ் ஏடுகளுக்கு, அறிவுரை கூறும்வகையில் அமைந்திருக்கிறது டாக்டர் கலைஞரின் கட்டுரை. சேரன் செங்குட்டுவனால் எழுப்பப் பட்ட கண்ணகியின் சிலை தமிழ்நாட்டுக்கு விரைவில் வந்து சேரும் என்று முதல்வர் கூறியிருக்கும் செய்தி, செவியில் செந்தேனாக விழுகிறது. வாழ்க கலைஞர்.

—எஸ். ஆர். சந்திரன்,
தஞ்சை.

இளைஞரணிக்குப் பாராட்டு

'இலட்சியப் பணி புரியும் இளைஞர் பணி' கட்டுரையைப் படித்தேன். சுவையும் பயனும் நிறைந்திருந்தது; சிற்றூர்கள் செழிப்பதற்கும் அங்கு வாழ்கின்ற மக்கள் சீர் பெறுவதற்கும் தொண்டு புரியும் இளைஞர் அணியினர் பாராட்டுக்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை. இந்தப் பயனுள்ள திட்டத்தை உருவாக்கிய நமது முதல்வரும் பாராட்டுக்குரியவர்தான்.

—செல்வி மீனாட்சி, திருச்சி.

பாராட்டுக்குரிய ஏடு

தமிழரசு ஒரு கட்சி ஏடு போலில்லாமலும் ஆட்சி ஏடு போலில்லாமலும், அரசுச் செய்திகளைக் கதை, கட்டுரை வாயிலாகத் தெரிவித்து வருவதால், ஒரு குடும்ப ஏடு போல எல்லாரும் விரும்பிப் படிக்கும் வண்ணம் வந்து கொண்டிருப்பது பாராட்டும் படியாக உள்ளது.

—எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

நிறமிகு மின் ஒளிவிளக்கு

நிறமிகு மின் ஒளி விளக்கு எனும் பெயரைக் கேட்டதும் வியப்பு ஏற்படுகிறதல்லவா! நியான் விளக்குகளுக்குத்தான் இந்தத் தனித் தமிழ்ப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பெயரைச் சூட்டியவர் யார் தெரியுமா? பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்! 1967 ஆம் ஆண்டு, காஞ்சி கூட்டுறவு மத்திய வங்கியில் நியான் விளக்கு அமைத்த போதுதான் மேலே குறிப்பிட்ட பெயரைச் சூட்டினார் அவர். தத்தித் தவழும் குழந்தைகளுக்கு மட்டுமல்ல. தரைக்கு ஒளி கொடுக்கும் அஃறிணைப் பொருளான விளக்குக்கும் தமிழ்ப்பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார் அண்ணா. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற இலட்சியத்தை உருவாக்கியவரல்லவா? அதனால்தான் மின் விளக்குக்கும் தமிழ் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

இன்று, உலகத்தில், பல நாடுகளும் நிறமிகு மின்ஒளி விளக்குகளைப் பயன் படுத்தி வருகின்றன. குறிப்பாக ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தெருப்பெயர்களைக் கூட நிறமிகு மின் ஒளி விளக்குகளால் குறிப்பிட்டிருக்கின்றனர்; வீடுகளிலும், சிறு கடைகளிலும் கூட இந்த விளக்குகளைப் பயன் படுத்துகிறார்கள். ஜப்பான் நாட்டில் இந்த விளக்குகள் மிகுதியாகப் பயன் படுத்தப் படுகின்றன.

இப்படி உலகமெல்லாம் புகழடைந்துவரும் இந்த நிற மிகு மின் ஒளி விளக்கின் வரலாற்றைச் சிறிது பார்ப்போம்.

மிகப் பழங்காலத்தில் மக்கள் இரவு நேரங்களில் ஒளியைப் பெறுவதற்கு ஆமணக்கு எண்ணெய் விளக்குகளைப் பயன் படுத்தினர். பிறகு மண்ணெண்ணெய் விளக்கு வந்தது. பிறகு சிறிது சிறிதாக விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாகப் பெட்ரோமாக்ஸ் விளக்கு வந்தது.

1879-ல் அமெரிக்க நாட்டு விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன், மின் விளக்கைக் கண்டு பிடித்தார். டங்க்ஸ்டன் என்ற மெல்லிய கம்பியில் மின் ஓட்டத்தைச் செலுத்தி ஒளியை உருவாக்கினார். வெளிச்சம் கிடைத்தது. ஆனால் பல்பில் சூடு அதிகமாக இருந்தது. ஆகவே. விஞ்ஞானிகள் மீண்டும் சிந்தித்தனர். பல்பின் உள்ளே இருக்கும் காற்றை அப்புறப்படுத்தி அதனை வெற்றிடமாக்கி எரிய வைத்தால் சூடும் இருக்காது. ஒளியும் அதிக அளவில் கிடைக்கும் என்று முடிவு செய்தார்கள். அவ்வகையில் உருவான முதல் விளக்கை ஜெர்மானிய விஞ்ஞானி உலகுக்கு அறிமுகப் படுத்தினார். விஞ்ஞானிகள் மேலும் சிந்திக்கத் தொடங்கினார்கள். வாயுக்களைப் பயன்படுத்தி விளக்குகளை எரிய வைக்கலாம் எனும் முடிவுக்கு வந்தார்கள்.

1910-ஆம் ஆண்டு, ஜார்ஜ் கிளாட் என்பவர் முதல் குழாய் விளக்கைப் பாரிசில் உருவாக்கிக் காட்டினார். துவக்கத்தில் அந்தக் குழாய் விளக்குக்குள்ளே நியான் வாயு கிடையாது. நைட்ரஜன், கார்பன்-டை-ஆக்சைடு இரண்டும் சேர்ந்த வாயுக்களே முதலில் பயன் படுத்தப்பட்டன. ஆனால் அந்த வாயுக்களினால் உருவாக்கப் பட்ட குழல் விளக்குகள் நீண்ட காலத்துக்குப் பயன்படவில்லை. கிளாட் மேலும் சிந்தித்தார். நீண்ட காலத்துக்குப் பயன்படும் குழாய் விளக்குகளை அதிக அளவில் உருவாக்கிவிட வேண்டும் எனும் முயற்சியில் மிகமிகத் தீவிரமாக ஈடுபட்டார். அவரது முயற்சி வீண் போகவில்லை. 1925-ஆம் ஆண்டில். அநேக நிறுவனங்கள், நியான் வாயு செலுத்தப்பட்ட ஒளிமிகு விளக்குகளைத் தயாரிக்கத் தொடங்கின.

இந்த விளக்கிலே சில சிறப்புகள் உண்டு.

மற்றப் பல்புகளைப் போல இதில் ஃபிலமெண்ட் கிடையாது.

வாயுக்களினால்தான் மின்சாரம் பாய்கிறது.

'டிரான்ஸ்பார்மர்' எனச் சொல்லப்படும் கருவி தேவையான மின் ஆற்றலை உற்பத்தி செய்து கொடுக்கிறது.

சாதாரண விளக்குகளை விட 5 மடங்கு அதிக ஒளியைக் கொடுக்கிறது.

வணிக நிறுவனங்கள், ஆலயங்கள், வங்கிகள் இங்கெல்லாம் விளம்பரங்களுக்காகப் பயன் படுத்தப் படும் இந்த விளக்குகள் கவர்ச்சியாக இருப்பதுடன், மின் செலவைக் குறைப்பதற்கும் பயன்படுகின்றன. அது மட்டுமல்ல. மிகக் குறைந்த பராமரிப்பு இருந்தால் கூடப் போதும். ஒரு 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு நீடித்து உழைக்கக் கூடியது.

இந்த நிறமிகு மின் ஒளி விளக்குகளை எப்படி உருவாக்குவது? அந்தப் பயிற்சியை, [illegible] தொழிற் பேட்டையில் [illegible]

•• விஞ்ஞானக் கண்ணாடிப் பொருட்கள் உருவாக்கும் பயிற்சி நிலையம்'' கற்றுத் தருகிறது. பயிற்சியாளர்களுக்குக் கற்றுத் தருவது மட்டுமல்ல. வெளியாரின் தேவைகளுக்கேற்ப நிறமிகு மின்ஒளி விளக்குகளை உருவாக்கி விநியோகம் செய்கிறது இந்தப் பயிற்சி நிலையம்.

தஞ்சையில்— அறிஞர் அண்ணா மன்றம், கலைஞர் கருணாநிதி நகராட்சி அங்காடி, தஞ்சை நகராட்சி, சென்னையில் கலைவாணர் அரங்கம் ஆகிய இடங்களில் உள்ள நிற மிகு மின் ஒளி விளக்குகள் எல்லாம் இந்தப் பயிற்சி நிலையத்தால் உருவாக்கப்பட்டவையே !

அரசினர் காதி கிராமத் தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசினர் விற்பனை நிலையங்கள்— இன்னும் எத்தனையோ இடங்களிலும் இந்த நிலையத்தார் செய்த நிற மிகு மின் ஒளி விளக்குகள்தான் காட்சி தருகின்றன.

ஆந்திரம், மைசூர் ஆகிய மாநிலங்களுக்குக் கூட, இந்தப் பயிற்சி நிலையம் நிறமிகு மின் ஒளி விளக்குகளைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறது. ஆந்திரத்திலுள்ள அநேக வங்கிகளில் இந்த நிலையத்தார் செய்து தந்த விளக்குகள்தான் இடம் பெற்றிருக்கின்றன.

குறித்த தேதியில் செய்து கொடுப்பது இந்தப் பயிற்சி நிலையத்தின் குறிப்பிடத்தக்க சாதனை. இந்தச் சாதனையினால்தான் வெளி மாநிலத்தார் தங்கள் தேவைகளுக்கு இந்த நிலையத்தை நாடி வருகிறார்கள் ! பயிற்சி நிலையத்துக்கு மட்டுமல்ல— நமது தமிழ் நாட்டு அரசுக்கும் பெருமை தேடித் தரும் செய்தியாகும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரை நிறமிகு மின்ஒளி விளக்கினைத் தயாரிப்பதில் இந்தப் பயிற்சி நிலையம் தனிச் சிறப்புடனும் தனித் திறமையுடனும் காட்சி தருகிறது.

என்றாலும் நமது உள்ளத்திலே ஓர் ஏக்கம் !

"தமிழ்நாட்டில் இந்த விளக்குகள் அதிக அளவில் காணப்படவில்லையே! ஏன் ?"

இந்தக் கேள்வியை நிலையத்தின் கண்காணிப்பாளரிடம் கேட்ட போது அவர் சொல்லிய பதில்—

"நியான் விளக்குகள் என்றவுடன் சிலர் பயப்படுகிறார்கள். அதிக மின் ஆற்றல் தேவை என ஒதுக்கி விடுகிறார்கள். பலர், அதிக மின்சாரக் கட்டணம் கொடுக்க நேரும் என்றெல்லாம் தப்புக் கணக்குப் போடுகிறார்கள். சாதாரண விளக்குகளைவிட மிகக் குறைந்த அளவு மின்சாரச் செலவுதான் ஆகும். அதை அறியாமல், அச்சப்படுகிறார்கள். அதனால்தான் தமிழ் நாட்டில் இந்த விளக்குகள் அதிகமாக இல்லை"

மற்றொரு செய்தியையும் அவர் குறிப்பிட்டார்.

"மேல் நாடுகளில் 8 முதல் 10 வோல்ட் வரை மின் சக்தியைப் பயன்படுத்தி நியான் விளக்குகளை எரியவைக்கிறார்கள். நாம் 220 வோல்ட் பயன்படுத்துகிறோம். இது உச்ச அளவு ஆகும். எனவே நாம் ஆய்வு செய்து பார்த்து மேல் நாடுகளைப் போலக் குறைந்த அளவு வோல்ட்டுகளைக் கொண்டு இந்த விளக்குகளைப் பயன்படுத்துவதற்கு வழி வகை செய்தால் மின் செலவு இன்னும் குறையும்.'' எனச் சொல்லும் நிலையக் கண்காணிப்பாளரிடம் ஆராய்ச்சி உள்ளம் அமைந்திருப்பது தெளிவாகிறது.

இந்த விளக்குகள் உருவாகும் விதத்தைப் பார்ப்போம்.

முதலில், தேவைப்படும் எழுத்துக்களின் வரை படங்களை உருவாக்கிக் கொள்ளுகிறார்கள். 12 மி. மீட்டர் சுற்றளவுள்ள கண்ணாடிக் குழாய்களை 'ரிப்பர்ன் பர்னர்' என்று சொல்லப்படும் விளக்கின் உதவியால் சூடாக்கி, உருக்கித் தேவையான எழுத்துக்களின் வரைபடங்கள் மீது வைத்து மடக்கி, வடிவங்களை உருவாக்குகிறார்கள்.

குழாய்களின் இரு முனைகளிலும் மின் கடத்திகளைப் பொருத்திக் குழாய்களின்

வெண்பாப் போட்டி—24

முறிப்பு : தைமொழியைப் போற்றல் தலை

முடிவு நாள் : 16—12—1971

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

விளக்கம் :

மூன்றும் அடியின் இறுதிச் சீரின் எழுத்து, அல்லது சொல், கொடுக்கப்பட்டுள்ள நான்காம் அடியோடு பொருந்திப் பொருள்தரும் வகையில் நேரிசை வெண்பா அமைத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

....
....
....
மெனவே நடந்திடுதல் மேல் அன்ன

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் !

அஞ்சலட்டையில் எழுதப்படும் வெண்பாவே கவனிக்கப்படும்.

மற்ற விதிகள் வழக்கம் போல்:

ஆசிரியர் (வெண்பாப் பேட்டி),
"தமிழரசு"
அரசினர் தோட்டம்,
சென்னை 2.

உள்ளே உள்ள காற்றின் அழுத்தத்தைச் சூடாக்கி, வெளியேற்றுகிறார்கள். சூடு ஆறிய பின்னர், தேவையான நியான் அல்லது ஆர்க்கான் வாயுவை மிகமிகத் துல்லியமான அளவு. கண்ணாடிக் குழாய்க்குள் செலுத்துகிறார்கள். பிறகு வெற்றிடமாக்கப்பட்ட முனையிலிருந்து கண்ணாடி வடிவத்தைத் திரித்து விடுகிறார்கள். பிறகு இவைகளை ட்ரான்ஸ்பார்மருடன் பொருத்தும் போது, சீரான வாயுக்கள், எழுத்து வடிவக் கண்ணாடிக் குழாயின் எல்லா முனைகளிலும் சமமாகப் படிகிறது. இவ்வாறு படிந்த பின்பு தேவைப்படும் வரி வடிவ எழுத்துள்ள நிறமிகு மின் ஒளி விளக்கு உருவாகி விடுகிறது.

கண்ணாடிக் குழாய்க்குள் நியான் வாயுவைச் செலுத்தினால் சிவப்பு வண்ணமும், நியான் ஆர்கான் இரு வாயுக்களையும் இணைத்துச் செலுத்தினாலும் பாதரசத்தைத் தனியாகச் செலுத்தினாலும் நீல வண்ணமும், ஹீலியம் வாயுவைச் செலுத்தினால் மஞ்சள் வண்ணமும் கிடைக்கிறது. இன்னும் வெவ்வேறு விதமான வண்ணங்களையும் உருவாக்குகிறார்கள்.

ஜப்பான் நாட்டில் ஒரே குழாய்க்குள் பல வண்ணங்களையும் உருவாக்கி வருகிறார்கள்.

ஓர் அடி உயரத்திலிருந்து நான்கு அடி உயரம் வரைதான் எழுத்துக்களை உருவாக்க முடியும். அதற்கு மேற்பட்ட உயரத்திற்குச் செய்ய வேண்டுமென்றால், இரண்டு அல்லது மூன்று தனித் தனித் துண்டுகளாகச் செய்து இணைத்துக் கொள்ள வேண்டும். தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் 1 அடி உயர எழுத்து ஒன்று செய்வதற்கு 25 ரூபாய் ஆகிறது. 1 அடி உயரத்துக்கும் மேலுள்ள எழுத்துக்கள் என்றால், மொத்த நீளத்தை அளந்து கணக்கிடுகிறார்கள். ஓர் எழுத்து, சுமார் 30 ரூபாய் ஆகலாம். சாதாரணமாக ஒரு விளம்பர விளக்கு 400 ரூபாய்க்குள் அடங்கி விடும். ஆனால் அதனுடைய உழைப்பு-குறைந்தது 10 ஆண்டுகளுக்காவது கிடைக்கும் ! அப்படியென்றால், ஆண்டுக்குச் சராசரி 33 ரூபாய்தான் செலவாகிறது.

இந்த நிறமிகு மின் ஒளி விளக்கிலே குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. மழை பெய்து கொண்டிருக்கும் போது கூட இதனைப் பயன்படுத்தலாம். ஆனால், மழை பெய்வதற்கு முன்பு இது பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடாது.

இந்த விளக்குகளைத் தயாரித்து வரும் இந்தப் பயிற்சி நிலையத்தில் தேர்ச்சி பெற்ற ஒருவர் ஜெர்மனிக்குச் சென்று வந்திருக்கிறார். இங்கே தயாரிக்கப்பட்ட கண்ணாடிப் பொருட்கள், ஜப்பான் நாட்டுக்குச் சென்றிருக்கின்றன. ஜப்பான் நாட்டினரைத் திருப்தி செய்திருக்கின்றன. அந்த நாட்டினரின் புகழ் மொழியை— பாராட்டுரையைப் பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டில் நிறமிகு மின் ஒளி விளக்கைத் தயாரித்து வரும் இந்தப் பயிற்சி நிலையம் விரைவில் மாபெரும் புகழை அடையப் போவது உறுதி.



மக்களைத் தாக்கும் விந்தைநோய்

டாக்டர் ஆர். நாராயணன்

இளம்பிள்ளை வாதம் என்னும் நோய்வருவதற்கு ஒரு நுண்ணிய கிருமியே காரணமாகிறது. இந்தக் கிருமியை மின்சாரத்தால் இயங்கும் உருப்பெருக்கிக் கருவியின் மூலம்தான் (Electro microscope) காணமுடியும். இது அவ்வளவு சிறியது.

இந்த நோயினால் பலபேர் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் மிகக் குறைந்த சதவீதத்தினருக்கே நோய் முற்றி இளம்பிள்ளை வாதமாக வெளிப்படத் தோன்றுகிறது. இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் 2 முதல் 10 சதவீதத்தினர் தான் மரணம் அடைகின்றனர். இந்த நோய் ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு மிகுதியாக வருவதில்லை. ஒரு வயதுக்கு அதிகமான பேர்களுக்குத் தோன்றுகிறது. பொதுவாக உலகில் எல்லாப் பகுதிகளிலும் இந்நோய் பரவிய போதிலும் தொழில் வளம் மிக்க நாடுகளில் மிகுதியாய்த் தோன்றுகிறது. இந்தியாவைப் போன்ற முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் இந்த நோய் குறைவாகவே இருந்து வருகிறது.

விந்தை நோய்

ஆனால் சுகாதாரம் வளர, வளர இந்த நோய் அதிகமாகக்காணப்படுகின்றது. சுருங்கக் கூற வேண்டுமானால், சுற்றுப்புறத் துப்புரவு வளர்ந்துள்ள நாடுகளில் இந்த நோய் மிகுதியாக வருகிறது. சுற்றுப்புறத் துப்புரவு ஏற்பாடுகள் குறைவாக உள்ள நாடுகளில், இளம் வயதினருக்கு இந்நோய் பீடிப்பதுகுறைவாகவே உள்ளது. சுற்றுப்புறம் துப்புரவாக இருக்கும் நாடுகளில் மிகுதியாக வருவதென்பது விந்தையானது தான்.

இளம்பிள்ளை வாதம் இங்கு மங்குமாகத் தனித்தனியே வருவதுண்டு. பெரிய அளவில் கொள்ளை நோய் போல வருவதுமுண்டு.

பொதுவாக இது சிறுகுழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் வரும் நோயாகும். செயற்கையில் அல்லது இயற்கையில் நோய்த் தடுப்புச் சக்தி பெறாத பெரியவர்களுக்கும் இந்நோய் வரலாம்.

இதற்கு முன்பெல்லாம் இந்தியா போன்ற நாடுகளில் இந்த நோய் குறைவாகத் தோன்றி வந்தது. ஆனால் இப்பொழுது இங்கும் இந்நோய்சற்று அதிகரித்துள்ளது.

தடுப்பு ஊசியின் பலன்

தடுப்பு ஊசி போடப்படும் நாடுகளில்இந்நோய் தோன்றுவது குறைவாக இருக்கிறது. இளம்பிள்ளை வாதம் நோயாளியிடமிருந்து உடல் நலமுள்ளவருக்குப் பரவுகிறது. நோயாளியின் மூச்சுக் காற்றில், தும்மலில், பேசும் போது, வாய் வழி வெளியேறுகின்ற நோய்க்கிருமிகள் உடல் நலமுள்ளவர்களைப் பாதிக்கிறது. மேலும் மலத்தின் மூலம் வெளியேறும் கிருமிகளும் மற்றவர்களை பாதிப்பது மற்றொருவழி. பால் முதலான உணவுப்பொருள்களின் மூலமும். புழுப்பூச்சிகள் மூலமும் இந்தநோய் பரவுகிறது என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை. சுற்றுப்புறத் துப்புரவு முன்னேறியுள்ள நாடுகளில் இந்த நோய் வாயுவழியாகவும், குறைந்த துப்புரவு வசதியுள்ள நாடுகளில் மலத்தின்மூலமாகவும் பரவுகிறது எனலாம்.

ஒருவருக்கு நோய் தொற்றிய பின் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் கழிந்த பின்னரே நோயின் அறிகுறிகள்வெளிப்படத் தோன்றும். இந்தக் காலத்தைத் தான் நோய் உருவாகும் காலம் என்பார்கள். இந்த நோய்க் கிருமிகள் அநேகமாக எல்லோரையும் தாக்கலாம்; எல்லாருக்கும் நோய் தொற்றலாம்; ஆனால் நோய் தொற்றிய எல்லாருக்கும் நோய் வருவதில்லை. ஆனால் சிலருக்கே, குறிப்பாக மிகச் சிலருக்கே வாதமாக உருவெடுக்கிறது. இது "Ice-Borne phenomenix" எனப் பெயர்படும். அதாவது நமக்குத் தெரிகிற நோய்வாய்ப் பட்டவர்கள், கிருமிகளால் தாக்கப்பட்டவர்களைவிட மிகக் குறைவு.

வாய்வழி மருந்து

எல்லாருக்கும் நோய் தொற்றிய போதும் மிகச் சிலரே வாதத்துக்குட்படுகின்றனர். இதற்குக் காரணம் என்ன? சமீப காலத்தில் தொண்டையில் டான்சில், அடினாய்டு முதலான அறுவைகள் செய்து கொண்டவர்கள், மூன்று நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டவர்கள், அளவுக்கு மீறிய உடற்பயிற்சி செய்பவர்கள் முதலியவர்களுக்கு வாதம் வருகின்ற ஆபத்து மிகுதி. கர்ப்பிணிகளுக்கு எளிதில் வாதம் வரக்கூடும். இளம்பிள்ளை வாத நோய்க்கு இரண்டு விதத் தடுப்பு மருந்துகள் உள்ளன. ஒன்று, ஊசி மருந்தாக உடலில் செலுத்துவது. மற்றது வாய் வழிக்கொடுப்பது. ஊசி மருந்தில் மூன்று வகை நுண் கிருமிகள் உள்ளன. வாய் வழிக்கொடுக்கும் மருந்து சிரப் அல்லது, சிறு துளிகள் அல்லது இனிப்பு மாத்திரை வடிவத்தில்இருக்கும். இவற்றில் மூன்றுவகை நுண் கிருமிகள் உள்ளன. இவை எளிதில் குழந்தைகள் உட்கொள்ளும் வகையில் உள்ளன.

இந்த மருந்து மூன்று தடவை மருந்தாகக் கொடுக்கப்படும். முதலில் குழந்தையின் மூன்றாவது மாதத்திலும் அடுத்த இரண்டு தடவை மருந்துகள் ஆறு வாரக் கால இடைவெளிகள் விட்டு விட்டும் கொடுக்கப்படும். பின்னர் பள்ளி செல்லும் பருவத்தில் மிகுதி அளவாக (Booster Dose) ஒரு வேளை மருந்து கொடுக்கப்படும்.

முன்னெச்சரிக்கை முறைகள்

இந்த மருந்துகளைக் கொடுக்கும் கால அளவு நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இந்தியாவில்

இன்னமும் இக் கால அட்டவணை வரையறுக்கப்படவில்லை. கூடுதலாக மற்றொரு முறையும் இந்த மருந்தை, நோய் பரவுகின்ற காலங்களில் தரலாம். மக்களுக்கு இந்நோயின் தன்மைகளையும், பரவும் வகையையும் முன்னெச்சரிக்கை முறைகளையும், சிறு குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதனுல் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக் கூறி விளக்கவேண்டும். இந்த நோய் விஷயத்தில் ஏனைய தொற்று நோய்களுக்குச்செய்வது போல் நோயாளியைத் தனிப்படுத்தல், தொற்றுத் தடுப்பு முறைகள், ஏனையவர்களைப் பிரித்து வைத்தல் முதலான நடைமுறை பயனற்றதாகும். ஏனெனில் இளம்பிள்ளை வாதம் நோய் வெளிப்பட்டு அறிவிக்கப்படும் நிலையில் ஏற்கனவே மற்றவர்களுக்கு அது தொற்றிக் கொண்டிருக்கும்.

இந்த நோய்க்குக் குறிப்பிடத்தக்க சிகிச்சை ஏதும் கிடையாது. நோயாளியை உடனே மருத்துவமனையில் சேர்ப்பதன் மூலம் அவருடைய உபாதை குறையும். மேற்கொண்டு ஏற்படத் தக்க விளைவுகளைத் தவிர்க்கவும் முடியும். பெரிய அளவில் நோய் பரவும்போது சமுதாயத்தில் குறிப்பாக இளம் குழந்தைகளுக்கு வாய் வழித் தடுப்பு மருந்து கொடுக்கும் இயக்கத்தை நடத்தவேண்டும். இவ்வாறு சமுதாய அளவில் தடுப்புமருந்து கொடுக்கும் போது, பள்ளிக்கூடங்களை மூடிவிடுதல், மக்கள் கூடும் பிற பொது நிகழ்ச்சிகளை நிறுத்திவிடுதல் முதலியன தேவையற்றவை.

குன்னூர் நிலையம்

இத்தகைய நிலைமைகளில் தொண்டை அறுவைகள், மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடுதல் முதலியவற்றை நிறுத்தி வைக்க வேண்டும். அதிகத் தேகப்பயிற்சி செய்தல் கூடாது. கர்ப்பிணிகளைக் கவனமுடன் பராமரிக்க வேண்டும். குறிப்பிட்ட இடங்களில் சிகிச்சை வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

குன்னூரிலுள்ள இளம்பிள்ளை வாதத் தடுப்பு நிலையம்தான் ஆசியாவிலேயே முதன் முதலாக வாய்வழிக்கொடுக்கும் தடுப்பு மருந்து தயாரித்துள்ளது. 1967 ஜூன் மாதத்தில் இந்த நிலயத்தில் இத் தடுப்பு மருந்து உற்பத்தி தொடங்கியது.

1960-ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரையில் உலகெங்கும் சுமார் இலட்சக்கணக்கான பேருக்கு வாய்வழி இளம் பிள்ளை வாதத்தடுப்பு மருந்து கொடுக்கப் பட்டுள்ளன. இதனுல்இம்மருந்து கொடுக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 95 சதவிகிதம் நோய் வருவது தடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக அமெரிக்கா போன்ற நாடுகளில் 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பேர்களை நோய் தாக்கும் நிலை இருந்தது. இப்போது மிகக்குறைவானவர்களுக்கே நோய் ஏற்படுகிறது. அதுவும் தடுப்பு மருந்துபோட்டுக் கொள்ளாதவர்களே இந்நோயினுல் தாக்கப்படுகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

தந்தி முகவரி : 'அர்பாங்க்' 19/20, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1.
அஞ்சல் பெட்டி எண்: 226

தொலைபேசி எண் : 20367

(வருடத்திற்கு சதவிதம்)

கரண்ட் அக்கௌண்ட்
சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்ட் .. .. — 0·50
ஈசன் டெபாஸிட்டுகள்—1,000-ம் அதற்கு மேலும் .. .. 4·00
15 நாட்கள்
46 நாட்கள்
பிக்செட் டெபாஸிட்டுகள்—ரூ. 100-ம் அதற்கு மேலும். — — 2·00
91 நாட்கள் — .. 3·00
6 மாதங்கள்
12 மாதங்கள் .. .. — 4·75
2 வருடங்கள் 5.25
3 வருடங்கள் .. — — 6·25
5 வருடங்கள் .. .. .. 6·75
.. .. .. 7·25
.. 7·50

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது:
மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களின் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள்:

மாதத் தவணை	12	24	36	48	60	72	84
ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ.	62	128·50	201	278	362·50	452	548·50

தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

ஆர். கனகசபை,
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.

திரு சந்திர சேகர வெங்கட்ட ராமன் என்ற முழுப் பெயருக்குச் சொந்தக்காரரான சர். சி. வி. ராமன் 1888-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7—ஆம் தேதி, திருச்சியில் பிறந்தார். அவருக்கு நான்கு வயதாகும் போது, அவரது தந்தையார் விசாகப் பட்டினத்திலுள்ள கல்லூரி ஒன்றில் இயல்பியல் விரிவுரையாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இராமனின் உயர் நிலைப் பள்ளிக் கல்வி விசாகப்பட்டினத்தில் தான் முடிவுற்றது. தனது கல்லூரிக் கல்வியை, 1903-ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் தொடர்ந்தார். பி. ஏ., எம்.ஏ. தேர்வுகளில் தனித்தன்மை பெற்றுப் பரிசுகளை வாங்கினுர். மாநிலக் கல்லூரியில்மாணவராக இருந்த காலத்திலேயே அறிவியல் ஆராய்ச்சியில்இராமனுக்குத் தனி அக்கறையும் ஆர்வமு இருந்து வந்தது. அந்நாளில் அந்த ஆராய்ச்சி இந்தியாவிற்குப் புதுமையான செய்தி தான்! என்ருலும் இராமன் தனது ஆராய்ச்சிகளின் முடிவுகளைப் பற்றியசெய்திகளை அவ்வப்போது, அகில உலக ஏடுகளில் எழுதி வந்தார்.

அவர் அன்போடு பேணி வந்த விஞ்ஞானத் துறையிலிருந்து விலகிச் செல்ல வேண்டிய ஒரு சூழ் நிலை அவருக்கு 1907-ல் ஏற்பட்டது. இந்திய நிதித் துறையினரால் நடத்தப் பட்ட அலுவல் போட்டித் தேர்வில் கலந்து கொண்ட இராமன் முதல் இடத்தைப் பெற்றதால் கலகத்தாவில் உதவி மாநிலக் கணக்காயராக (Assistant Accountant General) நியமிக்கப் பட்டார்.

ஏறக்குறையப் பத்தாண்டுகள் இந்திய நிதித் துறையில் பணியாற்றிய இராமன், தனதுபணிக் காலத்தில் விஞ்ஞானத்தை மறந்துவிடவில்லை. எப்படியாவது அறிவியல் துறைக்குப் பணி புரிவதற்கு அவகாசத்தை ஏற்படுத்திக் கொண்டார். இயல்பியலின் ஒவ்வொரு கிளையைப் பற்றியும் பல பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதி வந்தார்.

1917—ஆம் ஆண்டு, கல்கத்தாப் பல்கலைக் கழகம் இயல்பியல் துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி திரு இராமன் அவர்களைக் கேட்டுக் கொண்டபோது, அவர் மனப் பூர்வமாக ஒப்புக் கொண்டார். கணக்காயர் பதவியை ராஜிஞமாச் செய்து விட்டுப் பல்கலைக்கழக இயல்பியல் துறைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில், புதிய பொறுப்பில் அவருக்குப் பண நஷ்டம்தான் ஏற்பட்டது. என்ருலும் " இலட்சியம் ஈடேறுகிறது " என்ற இதய மகிழ்ச்சி அவரிடம் காணப்பட்டது.

1917—ஆம் ஆண்டு முதல் 1932—ஆம் ஆண்டு வரை 16 ஆண்டுகள், இராமனின் விஞ்ஞானப் பணிகளின் தீவிரமான காலம். இந்தப் பொற்காலத்தில் இராமனைச் சுற்றிலும் எண்ணற்ற இளைஞர்கள் குழுமியிருந்தார்கள். குறிப்பிடத்



தக்க அவரது சாதனைகளில் பல நிறைவேறியதும் இந்தக் காலத்தில்தான்.

1928-ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஒளிச் சிதறல் பற்றி ஒரு புதுக் கொள்கையை அவர் கண்டு பிடித்தார். "இராமன் விளைவு " என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. 1930-ம் ஆண்டு, இயல்பியல் துறைக்குரிய நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது.

அடுத்தடுத்து வெளி நாட்டிலிருந்தும் — உள் நாட்டிலிருந்தும் இராமனுக்குப் புகழ் மாலைகள் கிடைத்தன. புதிய புதிய கௌரவப் பட்டங்கள் அவரைச் சரணடைந்தன. 1924-ஆம் ஆண்டு இலண்டன் நகரத்திலுள்ள அரசர் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வீரர் பட்டம் 1929-ல் கிடைத்தது.

1934—ஆம் ஆண்டு இராமன் இந்திய விஞ்ஞான நிலயம் (Academy of sciences) ஒன்றினைப் பெங்களூரில் நிறுவினுர். இந்த நிறுவனத்தைத் தனது இறுதிக்காலம் வரை நடத்திஞர். 1933—ஆம் ஆண்டு இந்திய விஞ்ஞானப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப் பட்டார்.

1948-ஆம் ஆண்டு முதல் அவரது கடைசி மூச்சு இருக்கும் வரையிலும் அவர் பெங்களூரில் உள்ள "இராமன் ஆராய்ச்சி நிலையத்தின் " இயக்குநராக இருந்தார். இந்த நிலயத்திற்கு அவரே பலவகையிலும் உதவி செய்திருக்கிருர். குறிப்பாகப் பண உதவி நிறையச் செய்திருக்கிருர். மனத்தைச் கவரும் வைரங்கள், உப்புகள் ஆகியவற்றைச் சேர்த்து வைத்திருக்கும் சிறப்புக்குரியது இந்த நிலையம். இவற்றை உலகெங்கிலும் இருந்து திரட்டிக்கொண்டு வந்து சேர்த்தவர் திரு இராமன் அவர்கள்தான் ! தமது பிற்காலத்தில் வைரங்களின் அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் இராமன்.

சர். சி.வி. ராமன் எதையும் பரபரப்போடும் வேகமாகவும் செய்து முடிப்பார். எவருடனும் உரையாடும் போதும் கூட அவரது கரங்கள் அமைதியாக இருப்பதில்லை; புத்தகத்தை எடுப்பார், பூதக் கண்ணுடியை எடுப்பார்; சாவிக் கொத்தை எடுப்பார் இப்படி ஏதாவது செய்து கொண்டிருப்பார் இராமன்.

நாடகங்கள், திரைப்படங்கள் என்ருல் இராமனுக்குப் பிடிக்காது. இசையில் அவருக்குப் போதிய அறிவு கிடையாது. என்ருலும் ஒரு காலத்தில் வயலின் கருவியை வைத்துக் கொண்டு இரவு பகலாக வாசித்துக்கொண்டே இருந்தார். நூலின் அதிர்வு (Vibration of String) பற்றிய நூல் எழுதுவதற்காகவே அந்த வயலின் கருவியை இசைத்துப் பார்த்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்.

மிகப் பெரிய விஞ்ஞானிகளுக்குண்டான ஞாபக மறதி சி.வி.இராமனிடமும் இருந்திருக்கிறது. சில சமயங்களில், உலாவச் செல்வதாகச் சொல்லிச் செல்வார். பல மைல் தூரம் சென்று விடுவார்; பிறகு யாராவது அவரைத் தேடிச் சென்று அழைத்து வருவார்கள்.

காலில் போட்டுக் கொள்ளும் 'ஸாக்ஸ்' இரண்டும் ஒரே நிறத்தில் அமைந்திருக்கின்றனவா என்பதைக் கூடப் பார்க்காமல் வெவ்வேறு நிற 'ஸாக்ஸை' அணிந்து கொண்டு வெளியே சென்று விடுவார்.

வானொலி இசையும், தொலைபேசி மணி ஓசையும் கூட அவரது அறைக்குள் ஒலிக்கக் கூடாது.

அவரது உள்ளத்தைக் கவர்ந்த மேல் நாட்டு நாவலாசிரியர்கள்! தாமஸ் ஹார்டி, ஆர்.எல். ஸ்டீவன்ஸன்.

சிறந்த அறிவியல் துறை மேதையாகத் திகழ்ந்த இராமன் ஆற்றல் படைத்த மேடைப் பேச்சாளராகவும் இருந்தார். அவரது சொற்பொழிவு பொது மக்களைக் கவர்ந்து வந்தது. அவரது எளிய தன்மை-நகைச்சுவை உணர்வு இசைப் பற்று அவருக்குப் பலதுறைகளைச் சேர்ந்த பல நண்பர்களை உருவாக்கித்தந்தன. சென்ற ஆண்டு இராமன் திடீரென்று நோய் வாய்ப்பட்டார். மிகக் குறுகிய நாட்களுக்குள் அவரது நோய் அதிகரித்து விட்டது. 1970-ஆம் ஆண்டு நவம்பர் 21-ஆம் நாள் அவர் இயற்கை அடைந்துவிட்டார். அவரது உடல், அவரால் உருவாக்கப்பட்ட விஞ்ஞான நிலையத்திலேயே புதைக்கப்பட்டிருக்கிறது.

நவீன உலகம் என்னும் வரைபடத்தில் இந்தியாவையும் எழிலுடன் இடம் பெறச் செய்த அந்த மேதையின் முதலாம் நினைவு நாளை நினைவுறுத்தும் வகையில் இந்திய அஞ்சல் தந்தித் துறை, அஞ்சல் தலையும், உறையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்திருக்கிறது. அஞ்சல் தலையில் திரு இராமனின் உருவமும்— வைரக்கல்லின் படமும் அச்சிடப்பட்டிருக்கிறது. வைரத்தின் அமைப்பை ஆராய்ந்தார் என்பதற்காக மட்டுமல்ல. வைரமுள்ள நெஞ்சு படைத்தவராக அவர் விளங்கினார் என்பதையும் தெரிவிப்பதற்காக!



முந்திரி ஒரு முழு உணவு

முந்திரிப் பருப்பில் ஊட்டச் சத்துகள் மிகுந்து காணப்படுவதால், முந்திரிப் பருப்பும், பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளைப் போன்று ஒரு முழு உணவாகக் (A complete food) கருதப்படுகிறது. முந்திரிப் பருப்பில் உள்ள சுவையும், மணமும் மற்றெந்த முழு உணவுக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும்.

முந்திரிப் பருப்பில் 20·80 சதம் தாவரப் புரதச் சத்து உள்ளது. இப்புரதச் சத்தில் அதிக அளவு 'அமினோ அமிலங்கள்' (Amino Acids) அடங்கியுள்ளன. எனவே முந்திரிப் பருப்பு, சோயா மொச்சைக்கு இணையானதாகக் கருதப்படுகிறது. புரதப் பொருள் அடிப்படையில் முந்திரிப் பருப்பில் உள்ள புரதச் சத்து பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளில் உள்ள புரதச் சத்துக்கு ஈடானது.

முந்திரிப் பருப்பில் உள்ள புரதச்சத்தில் 50 சதம், விரைவாக நமது உடலால் தன்வயப்படுத்தப்படுகிறது. முந்திரிப் பருப்பிலிருந்து எடுக்கப்பட்ட புரதச் சத்தில் பின்கண்டவாறு முக்கிய அமினோ அமிலங்கள் அடங்கியுள்ளன.—

			சதம்.
குளுட்டாமின் அமிலம்.			6·51
லியூசின்	..	..	2·62
அலமைன்		..	2·35
ஆர்ஜினின்	..	..	2·14
டைரோசின்		..	1·42
கிளைசின்	..	..	1·12
இஸ்டிடின்	..	..	0·88
லைசின்	..	..	0·20
சிஸ்டின்	..	..	0·21

முந்திரிப் பருப்பில் பின் கண்ட வைட்டமின்கள் அடங்கியுள்ளதாக ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது.—

வைட்டமின் பி. 1.
வைட்டமின் பி. 2.
வைட்டமின் பி. 6.
வைட்டமின் பி.பி.
பென்டோடெனிக் அமிலம்.
வைட்டமின் ஏ.
வைட்டமின் டி.
வைட்டமின் இ.

முந்திரிப் பருப்பில் உள்ள கொழுப்புச்சத்து உயிரியல்படி முழுத்தன்மை வாய்ந்தது; திறன் மிகுந்தது; வெகு எளிதில் செறிக்கப்படக் கூடியது. இதில் முக்கியமாக வைட்டமின் "ஏ", வைட்டமின் "டி", வைட்டமின் "இ" ஆகியவை உள்ளன. இவ்வைட்டமின்கள் மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதவைகளாகும். இம்மூன்று வைட்டமின்களும் கொழுப்புச்சத்து உடலில் தன்மயமாவதற்கும், சுண்ணம்புச் சத்து கிடைப்பதற்கும், வழவழப்பான தசைகள் பாதுகாக்கப்படுவதற்கும், தொற்று நோய்களின் தாக்குதலிலிருந்து உடலைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் பயன்படுகின்றன.

முந்திரிப் பருப்பில் சுண்ணம்புச்சத்து, பாஸ்பரஸ் சத்து, இரும்புச் சத்து ஆகியவைகள் அங்கக வடிவில் பெருமளவில் உள்ளன. இம்மூன்று சத்துக்களும் அன்றாட உணவில் இல்லாவிட்டால் 'அனிமியா' (Anaemia) நோய் ஏற்படும். இதைத் தவிர்க்க முந்திரிப் பருப்பு மிகவும் துணை புரியும். அத்துடன் இம்மூன்று சத்துக்களும் நம் உடல் நலம் பேணவும், நரம்பு மண்டலம் பாதுகாக்கப்படவும் வழி வகுக்கும்.

முந்திரிப் பருப்பில் 1 சத அளவுக்கே மாவுப் பொருள் உள்ளது. இவ்வாறு மிகவும் குறைந்த அளவு மாவுப்பொருள் உள்ளதனுலேயே முந்திரிப் பருப்பு நமது உடலைக் கொழுக்க வைக்காமல், ஒரே அளவில் சீராகவும், அழகாகவும் வைத்திருக்கிறது. இதன் காரணமாகவே வெளிநாட்டினர் முந்திரிப் பருப்பை விரும்பி உண்கின்றனர்.

உடல் நலத்திற்குத் தேவையான ஊட்டச்சத்துகள் அனைத்தையும், இன்றைய ஊட்டச் சத்து ஆராய்ச்சிக் கேற்ப, தேவையான அளவில், இயற்கையிலேயே முந்திரிப் பருப்பு பெற்றுள்ளது. நீண்ட நெடுநாள், வலிவோடும், வனப்போடும், நலமாகவும், வளமாகவும் வாழ்வதற்கு, மனித இனத்திற்குத் துணை செய்யும் நல்ல நண்பனுக முந்தி வருவது முந்திரிப் பருப்பே!



முந்திரியில் விண்பதியம்

முந்திரி விதைகளின் மூலம் செடிப் பெருக்கம் செய்தால், மகசூலில் மாபெரும் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. ஒரே தாய் மரத்திலிருந்து கிடைத்த விதைகளிலிருந்து வளர்க்கப்பட்ட மரங்களுக்குள்ளும், மாபெரும் மகசூல் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மகசூலில் காணப்படும் வேறுபாடுகளைப் போக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் மரத்தினைப் போன்று மகசூல் அளிக்கும் தன்மையுடைய சந்ததிகளைத் தோற்றுவிக்கவும் விண்பதியம் (Air-layering) மூலம் முந்திரி தாவரப் பெருக்கம் செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது.

நடுத்தரப் பருமனும், கனமானதுமான கொட்டைகள், அதிக மகசூல் அளிக்கும் தன்மை, வீரியமாக வளரும் தன்மை, பூச்சி பூஞ்சாளங்களின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி ஆகிய விரும்பத்தக்க ஆதாய விகிதம் மிகுந்த (பொருளாதார) குணங்களைக் கொண்ட நல்ல தாய் முந்திரி மரத்தினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்ந்தெடுத்த தாய்மரத்தில், பென்சில் அளவு தடிப்புள்ள தண்டில், நுனியிலிருந்து 15 முதல் 25 செ.மீ. தூரத்தில் 0.3 முதல் 0.6 செ.மீ. அகலமுள்ள பட்டையை வளையம்போல் நீக்கிவிட வேண்டும். பட்டை நீக்கப்பட்டப் பகுதியில் வெட்டுப்பட்ட பட்டை வளருவதைத் தடுக்கவும், வெட்டுப்பட்ட இடம் குணமாகவும், முறுக்கிய நூலிஞல் சுற்றப்படுகிறது. நனைக்கப்பட்ட தேங்காய் நார்த்தூளையோ, அல்லது மரத்தூளையோ வெட்டுப்பட்ட பாகத்தின் மேல் வைத்து அதைச் சுற்றிலும் ஆல்கத்தீன் துண்டுத் தாளினை (150 கேஜ்) வைத்து, ஆல்கத்தின் தாளின் முனைகளை (23 செ.மீ. நீளத்திற்கும் 15 செ.மீ. அகலத்திற்கும்) ஒன்று சேர்த்து அடியிலும் நுனியிலும் நன்கு கட்டப்படுகிறது. இவ்வாறு விண்பதியம் அமைத்தபிறகு, பதியம் போடப்பட்டுள்ள பகுதிக்கு அவ்வப்போது தண்ணீர்விட வேண்டிய அவசியமில்லை. சுமார் 20 நாட்களில் வெட்டுப்பட்ட பாகத்தின் முனை வீக்கம்போல் பெருத்துவிடுகிறது (கேலஸ்). 45 முதல் 50 நாட்களுக்குப் பிறகு இளஞ்சிவப்பு—வெண்மையான நுனியுடன் கூடிய சிறு வேர்கள், வளையம்போல் வெட்டப்பட்ட பட்டையின் மேற் பரப்பிலிருந்து கொத்துக் கொத்தாகத் தோன்றுகின்றன.

இச்சமயமே வேர்விட்ட பதியத்தை வெட்டிப் பிரிப்பதற்கு ஏற்றதாகும். 'பதியம்' என்று வழங்கப்படும் வேர்விட்ட கிளையைத் தாய் மரத்திலிருந்து ஒரே தடவையில் வெட்டிப் பிரித்துவிடக் கூடாது. அப்படிச் செய்தால் பதியத்திற்கு அதிர்ச்சி ஏற்பட்டுத் திடீரென இறந்துவிடும். ஆல்கத்தீன் தாள் கட்டப்பட்டுள்ள முடிச்சுக்குக் கீழே பருமனின் பாதி அளவுக்குச் செல்லுமாறு 'V' வடிவமாக வெட்டி எடுக்க வேண்டும். ஒரு வாரம் கழித்து முதலில் வெட்டப்பட்ட இடத்திலேயே மேலும் அதிகமாக வெட்டி எடுக்க வேண்டும். அடுத்த 4-வது நாளில் இறுதியாக வெட்டிப், பதியத்தை தாய்ச் செடியிலிருந்து பிரித்துவிடலாம். விண்பதியம் அமைக்க ஆரம்பித்த நாளிலிருந்து, அதைத் தாய்ச் செடியிலிருந்து பிரித்தெடுக்க ஏறத்தாழ 75 நாட்கள் ஆகக் கூடும்.

முந்திரி மரத்தில் விண் பதியம் ஏற்படுத்த மார்ச்சு, ஏப்ரல் மாதங்களே சிறந்த பருவமாகும்.

விண்பதியத்தைத் தாய் மரத்திலிருந்து பிரித்தெடுத்து, தொட்டிக்கு மாற்றும் வேலையை ஜூன், ஜூலை மாதங்களில் செய்யலாம். தாய் மரத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட விண்பதியத்தின் மேல் சுற்றப்பட்டுள்ள ஆல்கத்தின் தாளை, வேர்களுக்குத் தீங்கு ஏற்படாமல் எடுத்து, செம்மண்ணும், இலைமக்கும் சம அளவில் கலந்து நிரப்பப்பட்டுள்ள மண் தொட்டிக்கு அல்லது ஆல்கத்தின் பைக்கு மிகவும் கவனமாக மாற்ற வேண்டும்.

வயலில் நடுவதற்கு முன்பு சுமார் 4 வாரங்கள் வரை, விண்பதியத்தை மண் தொட்டியில் அல்லது ஆல்கத்தின் பையில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். தாய் முந்திரி மரத்திலிருந்து பிரித்த உடனேயே நேரடியாகவும் விண் பதியத்தை நடலாம். ஆனால் இம்முறையில் ஏராளமான கன்றுகள் இறந்து விடக்கூடும்.

விண்பதியம் சரியான முறையிலும், கவனமாகவும் ஏற்படுத்தப் படுமானல், ஒவ்வொரு 100 பதியங்களிலிருந்தும், குறைந்தது 80 வேர்விட்ட பதியங்கள் தொட்டிகள் அல்லது ஆல்கத்தின் பைகளுக்கு மாற்றுவதற்குக் கிடைக்கும். அவைகளிலிருந்து குறைந்தது 65 நல்ல பதியங்களாவது வயலில் நடுவதற்குக் கிடைக்கும்.

விண்பதியங்களை நடுவதற்கு 2 அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி ஆழம் உள்ள குழிகள் தோண்டுதல் சிறந்தது. விண்பதியங்களை வயலில் நடுவதற்கு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்கள் மிகவும் ஏற்றது.

மேற்கூறிய முறையில் ஒரு விண்பதியம் தயாரிக்க 30 காசு செலவு ஆகக்கூடும். எனவே, விண்பதியங்கள் தயாரித்து, முந்திரித் தோப்பு ஏற்படுத்தி, முந்திரி மகசூலைப் பெருக்குமாறு உழவர் பெரு மக்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

உரமிட்டு மருந்து தெளித்தால் உயர்ந்திடும் மகசூல்

நாட்டில முந்திரிச் சாகுபடி வரலாற்றில் சென்ற செப்டம்பர் மாதம் வரை யாரும் பெருந் தொகையைச் செலவு செய்து இரசாயன உரம் வாங்கி முந்திரி மரங்களுக்கு வைத்துள்ளதாகச் சான்று கிடையாது! ஏன்? இந்தியாவின் முந்திரிச் சாகுபடி வரலாற்றில் கூடச் சான்று இல்லை! ஆனல், அக்டோபர் மாதம் விருத்தாசலம் பக்கத்தில் உள்ள ஊத்தங்கால் மங்கலத்தில் வாழும் திரு. இராஜசுந்தரம் அவர்கள் முந்திரி மரங்களுக்கு உரமிடுவதற்காக ரூபாய் 2,009 செலவு செய்து இரசாயன உரம் வாங்கி வைத்துத் தமிழ்நாட்டின் முந்திரி வரலாற்றிலும், இந்தியாவின் முந்திரி வரலாற்றிலும் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியுள்ளார்.

திரு. இராஜசுந்தரம் அவர்களுக்கு முதனை என்ற கிராமத்தில் 35 ஏக்கர் முந்திரித் தோப்பு உள்ளது. அதில் உள்ள முந்திரி மரங்களுக்கு இரசாயன உரமிட 1 டன் 975 கிலோ அமோனியம் சல்பேட், 1 டன் 700 கிலோ சூப்பர் பாஸ்பேட், 400 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை வாங்கி வைத்துள்ளார்.

இதுவரை முந்திரி மரங்களுக்கு அவர் இரசாயன உரமிட்டதில்லை. ஆயினும், அவர் துணிந்து ரூபாய் 2,009-க்கு இரசாயன உரம் வாங்கி அதனை முந்திரி மரங்களுக்கு இடப்போகிருர்.

'' முந்திரி மரங்களுக்கு இரசாயன உரமிடவேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?'' என்று '' தமிழரசு '' இதழின் சார்பில் 31—10—71 அன்று பேட்டி கண்டபோது கேட்டேன்.

'' முதனை கிராமத்தில் திரு ரெங்கசாமி என்பவர் முந்திரித் தோப்பில் சென்ற ஆண்டு செயல் விளக்கத்தை ஒன்றை வேளாண்மைத் துறையினர் அமைத்திருந்தார்கள். சென்ற ஆண்டு அந்தச்செயல் விளக்கத்திடலில் ஏக்கருக்கு $3\frac{1}{2}$ மூட்டை (80 கிலோ கொண்ட மூட்டை) மகசூல் கிடைத்தது. இந்தச் செயல் விளக்கத்தை அமைப்பதற்கு முன்பு திரு ரெங்கசாமி அவர்களுக்கு ஏக்கருக்கு 2 மூட்டைதான் மகசூல் கிடைத்தது. அவருடைய செயல் விளக்கத்திடலில் இரசாயன உரமிட்டதையும், மருந்து தெளித்ததையும் நான் கவனித்து வந்தேன். இரசாயன உரமிட்டாலும், மருந்து தெளித்தாலும் தான் செயல் விளக்கத் திடலில் ஏக்கருக்கு $1\frac{1}{2}$ மூட்டை அதிக மகசூல் கிடைத்தது என்று எனக்குத் தெளிவாகியது. அதனுலேயே என் முந்திரி மரங்களுக்கும் இரசாயன உரமிட வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது '' என்ருர்.

'' இவ்வளவு ஆர்வத்துடன் முந்திரிக்கு இரசாயன உரமிட முன் வந்துள்ளீர்களே, உங்களால் ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் எடுக்க முடியும் என்று நம்புகின்றீர்கள்?'' என்றேன்.

நான் இரசாயன உரமிடுவதுடன், மருந்தும் தெளிக்கப் போகின்றேன். என்னுடைய முந்திரித் தோப்பில் 4 சால் ஊடு உழவு செய்துள்ளேன். அத்துடன் ஊடு பயிராகக் கொள்ளும் விதைத்துள்ளேன். இந்த ஊடு உழவும், ஊடு பயிரும், இரசாயன உரமிடுதல் பயிர்ப் பாதுகாப்பு முறை ஆகியவைகளுடன் சேர்ந்து முந்திரி மகசூலைப் பெருக்கும். என்ஞல் குறைந்தது ஏக்கருக்கு 4 மூட்டை முந்திரிக் கொட்டை விளைவிக்க முடியும் என்று நம்புகின்றேன் '' என்ருர்.



அவர் முந்திரி மரங்களைச் சுற்றிலும், உரமிடுவதற்காக கிடங்கு வெட்டி வைத்துள்ளார். இன்னும் ஒரு வாரத்தில் உரம் வைக்கப்போகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

'' முந்திரி பயிரிடுவதைக் காட்டிலும், மற்றப் பயிர்களைச் சாகு

படி செய்வது இலாபமில் லில்லையா? '' என்று கேட்டேன்.

''மற்றையப் பயிர்கள் சாகுபடி செய்யச் செலவும் அதிகம்; கஷ்டமும் அதிகம். முந்திரிச் சாகுபடி செய்யச் செலவும் குறைவு; அதே நேரத்தில் அதிகம் பாடுபட வேண்டிய அவசியமும் இல்லை. முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கி எடுப்பதுதான் கொஞ்சம் சிரமம். காவலும் வேண்டும். மற்றபடி முந்திரி பயிரிடுவதில் எந்தத் தொல்லையும் இல்லை. தற்பொழுது என் முந்திரித் தோப்பில் சராசரியாக 2 மூட்டை முந்திரிக் கொட்டை கிடைத்து வருகிறது. மூட்டை ரூபாய் 140 விற்கிறது. எனவே, ஒரு ஏக்கர் முந்திரியின் மூலம் ரூபாய் 280 கிடைக்கும். இதில் செலவெல்லாம் போகக் குறைந்தது ரூபாய் 200

முந்திரி மகிமை

மனித இனத்தின் இனப் பெருக்கப் பண்பை விரைவு படுத்த முந்திரிப் பருப்பு உதவுகிறது. அதாவது ஆண் பெண் இருபாலரிடையேயும் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்பே இனப்பெருக்கத் திறன் ஏற்படுவதை, தொடர்ந்து முந்திரிப் பருப்பு உண்பதால் விரைவு படுத்த முடிகிறது. முந்திரிப்பருப்பில் அடங்கியுள்ள வைட்டமின் 'இ' தான் இதற்குக் காரணம்.

கிடைக்குமுங்க. ஆனல் மானாவாரியாக மற்றப் பயிர்ச் சாகுபடி செய்தால் இவ்வளவு சுலபமாக ரூபாய் 200 கிடைக்காதுங்களே.

அத்துடன் எந்தப் பயிரும் சாகுபடி செய்ய முடியாத நிலையிலும், ஆள் வைத்துச் சாகுபடி செய்ய முடியாத நிலையிலும் முந்திரியே இலாபம் தருகிறது!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

''முந்திரி பற்றி வேறு ஏதாவது கூறுகின்றீர்களா? '' என்றேன்.

'' உரமிட்டு மருந்து தெளித்தால், உயர்ந்திடும் முந்திரி மகசூல் என்பதை விளக்க வேளாண்மைத் துறையினர் நடத்தும் செயல் விளக்கத்தலை மிகவும் பயனுடையது! எனவே அவர்களது பணி பாராட்டிற்குரியது! '' என்றார்.

'பொய்ப்பழம்' சாப்பிட்டிருக்கியளா ?

''சுட்ட பழம் வேண்டுமா ? சுடாத பழம் வேண்டுமா ?'' எனக் கேட்பது போல், முந்திரியைப் பொறுத்த வரையில் ''பொய்ப்பழம் வேண்டுமா ? உண்மைப்பழம் வேண்டுமா ?'' எனக் கேட்க முடியும் ! வியப்பாக உள்ளதா? விளங்கவில்லையா? விளக்கம் இதோ !

தாவர இயலின்படி முந்திரிக் கொட்டையே உண்மையான பழமாகும் (True fruit). ஆனல் முந்திரிப் பழம் எனத் தற்பொழுது கூறப்பட்டு வரும் பழம், உண்மையிலேயே பழமல்ல; அது உண்மையான பழமான முந்திரிக் கொட்டையின் காம்புதான்; ஆனல், பருத்துப் பழத்தைப் போல் காணப்படுகிறது.

பருத்துக் காணப்படும் காம்புதான் (Swollen pedunele) பழமாகப் பயன்படுவதால், தாவர இயல் வல்லுநர்கள் முந்திரிப் பழத்தைப் '' பொய்ப் பழம் '' (False fruit) எனக் கூறுகின்றார்கள். இதற்கு '' முந்திரி ஆப்பிள் '' (Cashew apple) என்றும் பெயர் வழங்கப்படுகிறது. இப்பழம் உண்மையான பழத்தைத் (முந்திரிக் கொட்டை) தாங்கும் பீடமாக (Receptacle) அமைந்துள்ளது.

பொய்ப்பழமான முந்திரிப் பழத்தில் வைட்டமின் 'சி' நிறைந்துள்ளது. அத்துடன் சர்க்கரையும். உலோகச் சத்துகளும் உள்ளன. இந்தியாவில் ஆண்டு தோறும் 3,00,000 டன் முந்திரிப் பழம் உற்பத்தியாகிறது. ஆனல் அவற்றில் பெரும் பகுதி, பயன்படுத்தப் படாமல், வீணுக்கப்படுகிறது. முந்திரிப் பழத்திலிருந்து காடி, பழக்கூழ், பழச்சாறு, ஊறுகாய், சர்பத் முதலியன தயாரிக்கலாம். கோவாவில் ''ஃபெனி'' (Feni) என்ற ஒருவகை மதுபானம் செய்யவும் முந்திரிப் பழம் பயன்படுத்தப்படுகிறது.

காராதேன்® நீரில் கலங்கும் பொடி செம்பேன்களை அழிக்கிறது. தூள் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த வல்லது.

மூன்று விவசாயப் பல்கலைக் கழகங்களின் பல்வேறு பரிசோதனைகள், சர்வதேச ஆராய்ச்சியின் நிரூபணங்களை ஆதரித்து காராதேன் ஒரு பூஞ்சண நாசினி, தூள் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்தவல்ல பூஞ்சண நாசினிகளில் பலவற்றுள் உயர்ந்தது என்றும், காய்கறிப் பயிர், புகையிலை, சீரகப்பயிர், கோதுமை, பட்டாணி, திராட்சை, பருத்தி, மா, ஆப்பிள் மற்றும் பல புஷ்பச் செடிகளில் தோன்றும் செம்பேன்களைக் கட்டுப்படுத்துவதிலும் சிறந்தது என்று உறுதி கூறியுள்ளது.

தப்புரவாக நோய்களைக் கட்டுப்படுத்த பயிர்நோய், பயிர்களில் பரவும் முன்பே மருந்து பிரயோகத்தைத் தொடங்கவும்.

இண்டோபில் கெமிகல்ஸ் லிமிடெட், பம்பாய்-25.

® காராதேன் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல் ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யூ. எஸ். பேட்டண்ட் ஆபீஸிலும் இதர நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இண்டோபில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு

செலவைக் குறைக்கும் உழவுக் கருவி – 2

"தமிழ்நாட்டில் அறிவுக்கும், திறமைக்கும் பஞ்சமில்லை. ஆனால், நிதிக்குத்தான் பஞ்சம். எந்தத் திட்டமானாலும் அதைச் சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அலுவலர்கள் இங்கே இருக்கின்றார்கள்!" என அன்றொரு நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதை மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள்.

ஆமாம்! அவர்கள் புதிதாகக் கண்டு பிடித்துள்ள நெல்லடிக்கும் பொறி தமிழ்நாட்டில் அறிவுக்கும், திறமைக்கும் பஞ்சமில்லை என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

"ஜப்பானிய நெல்லடிக்கும் பொறியைவிடவா இப்புதியநெல்லடிக்கும் பொறி உயர்ந்தது?" என்று ஒரு சிலர் கேட்கலாம்.

ஜப்பானியநெல்லடிக்கும்பொறியைவிட, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சிப் பிரிவினர் கண்டுபிடித்துள்ள புதிய நெல்லடிக்கும் பொறி சிறந்தது மட்டுமல்ல, சிக்கனமானதும் கூட! 'எப்படி?' எனவினு எழுப்புவோர்க்கு இதோ விளக்கம்!

ஜப்பானியக் கதிரடிக்கும் பொறியைக் கொண்டு நெல் அடிக்கலாம். ஆனால் அப்பொறியில்நெற் கதிர்களை மட்டுமே சுழலும் பாகத்தில் கொடுத்து நெல் மணிகள் பிரிக்கப்படுகின்றன. மணிகள் பிரிக்கப்பட்ட பின்பு தாள்களைப் பரப்பி மாடு கட்டிப் போரடிப்பதால் கிடைக்கும் வைக்கோலை மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்த முடியும். மாடுகட்டிப் போரடிக்கா விட்டால் தாள்கள் விறைப்பாகவே இருக்கும். அவைகளை மாடுகள் விரும்பி உண்ணுவதில்லை. தமிழ்நாட்டு மாடுகளுக்கு வைக்கோலே முக்கிய உணவாக இருப்பதால், ஜப்பானிய நெற்கதிரடிக்கும் பொறியைக் கொண்டு நெல் மணிகளைப் பிரித்த பின்பு, மாடுகட்டிப் போரடிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப் பட்டுள்ள இப்புதிய பொறி நெல்மணிகளைப் பிரித்தல், தாள்களை நசுக்கி வைக்கோலாக்குதல் ஆகிய இரண்டு பணிகளையும் ஒருங்கே செய்து விடுகிறது. அறுவடை செய்யப் பட்ட நெல்தாள்களை அப்படியே இப்பொறியில் கொடுத்து நெல் மணிகள், பதர், வைக்கோல் ஆகியவைகளைத் தனித்தனியே பிரிக்கலாம். நெல்மணிகளைத் தூற்றும் பணியினையும் இப்பொறி திறம்படச் செய்கிறது. இப்பொறியிலிருந்து வெளியே வரும் வைக்கோலை மீண்டும் மாட்டுக் காலடியில் போட்டு மிதிக்கத் தேவையில்லை. வைக்கோல் நன்றாக நசுக்கப்பட்டு, கசங்கியே வெளியேற்றப்படுவதால், மாடுகள் விரும்பி உண்ணும்.

நெல்லடிக்கும் பொறி

தற்பொழுது நெல் அடிப்பதில் பின்கண்ட சிரமங்களை உழவர் பெருமக்கள் அனுபவித்து வருகின்றனர்.

1. ஆடுதுறை-27, ஐ.ஆர். 8, ஐ.ஆர். 5, கருணை, காஞ்சி, காவேரி, பெண்ணை, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22 ஆகிய உயர் விளைச்சல் தரும் நெல்வகைகளின் நெற் கதிர்களிலிருந்து நெல் மணிகள் எளிதில் தாமாக உதிர்வதில்லை. சாதாரண நெல் வகைகளைப் போன்று அடித்தாலும் மணிகள் எளிதில் பிரியா.

2. குறிப்பாகக் குறுவை நெல் அடிக்கும்பொழுதும், முன்சம்பா நெல் அடிக்கும் பொழுதும் அடை மழை பெய்வதால், நெல்லடிப்பது, மாடுகளைக் கொண்டு போரடிப்பது, தூற்றுவது ஆகிய பணிகளைச் செய்ய முடிவதில்லை.

3. நெல்லடிக்கும் சமயத்தில் ஆள் பற்றாக்குறை ஏற்படுவதால், நெல்லடிக்கும் பணியைக் காலத்தில் செய்ய முடியாமல், காலங்கடந்தே மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு காலங் கடத்தினால், நெல்மணிகள் பலவிதச் சேதத்திற்கு உள்ளாகின்றன. அறுவடை செய்யப்பட்ட உடனேயே அடிக்க வேண்டுமென்றால், ஆள் பற்றாக்குறையின் காரணமாக, அதிகக் கூலி கொடுத்தே நெல்லடிக்க வேண்டியுள்ளது.

இச்சிரமங்களையும், சேதத்தையும், அதிகச் செலவையும் தவிர்க்கப் புதிதாதக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நெல்லடிக்கும் பொறி பெரிதும் துணை செய்கிறது.

இப்புதிய பொறி, ரம்பம் போன்ற பற்கள் கொண்ட சுழ

லும் பாகம் (Rotor), தூற்றும் சாதனம், வைக்கோலை வெளியே கொண்டுவரும் பகுதி (conveyor) ஆகிய 3 பகுதிகளைக் கொண்டது. அறுவடை செய்யப்பட்ட தாள்கள் அப்படியே இப்பொறியில் செலுத்தப் படுகின்றன. அப்பொழுது சுழலும் பாகத்தி



லுள்ள ரம்பம் போன்ற பற்கள் கொண்ட உருளைகளின் இடையில் நெற்கதிர்கள் நசுக்கப்பட்டு நெல்மணிகள் தனியே பிரிக்கப் படுகின்றன. பிரிக்கப்பட்ட நெல் மணிகள் சல்லடை வழியே வெளியே வரும்போது, தூற்றும் பகுதியினால் பதர் நீக்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

சுழலும் பகுதி 3 அல்லது 5 குதிரைத் திறன் (H.P.) கொண்ட மின்சார மோட்டாரால் இயங்குகிறது. இப்பகுதியில் ஏறக்குறைய எல்லா நெல் மணிகளும் நெற்கதிரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றன.

நெல்மணிகள் பிரிக்கப்பட்ட பிறகு வைக்கோல், வெளியே கொண்டுவரும் பகுதிக்கு வருகிறது. இப்பகுதி சிறு மரப் பலகைகளாலும், தோல்பட்டை (பெல்ட்) யினாலும் ஆனது. மரப் பலகைகள் இரண்டு அங்குல இடைவெளியில் தோல் பட்டையினால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. சுற்றும் தோல் பட்டையின் மீது வைக்கோல், செல்லும்போது வைக்கோலில் சிக்கியுள்ள நெல்மணிகள் மரப் பலகைகளுக்கு இடையில் இருக்கும் இடைவெளிகளின் வழியாகக் கீழே விழுந்துவிடுகின்றன. பிறகு வைக்கோல் தோல்பட்டை சுழலும் வேகத்தினால் தூக்கியெறியப்படுகிறது.

இவ்வாறு இப்புதிய பொறி நெற்கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்து, தூற்றிக்கொடுப்பதுடன் வைக்கோலையும் தனியே பிரித்துக் கொடுக்கிறது.

ஒருமணி நேரத்தில் இப்பொறி 2,500 கிலோ நெல்லைப் பிரித்துக் கொடுக்கும். இதன் விலை (மின்சார மோட்டாரின் விலை சேர்க்கப்படாமல்) ரூபாய் 1,500 ஆகும். இது, நெல்லடிக்கும் விலை மற்றப் பொறிகளைவிட மலிவானது. எனவே, இதை உழவர் வாங்கிப் பயன்படுத்தினால் உழவர் பெருமக்கள் நலம் பெறுவது திண்ணம்.

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவினமிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை. மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



தமிழகக் கடற்கரையின் கருமணல் — அணுசக்திக்கான அரிய கனிப்பொருள்!

கேரள நாட்டு ஆல்வாயில் 1952 டிசம்பரில் ஏற்படுத்தப்பட்ட கனிப்பொருள் திட்டம், இப்பொழுது பிஃலோரைட் தேவை சம்பந்தமாக உலகத் தேவையில் மூன்றில் பங்கைப் [பூர்]த்தி செய்[கி]றது. இது இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி சம்பாதித்து அளிப்பதோடு நாட்டின் தேவைக்கான டிரிசோடியம் பாஸ்பேட் முழுமையாகக் கிடைக்கச் செய்கிறது.

அணுசக்திக் கமிஷன் 1948-ல் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் இந்தியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை அமைத்தது. அது மோனஜைட்டை ஆராய்ந்து தோரியம், யுரேனியம், அரிய கனிப் பொருள் ஆகியவற்றைப் பிரித்தெடுக்கும். இதில், இரண்டு நிறுவனங்கள் உள்ளன. அரிய கனிப் பொருள் பிரிவு, ஆல்வாயைக் களமாகக் கொண்டும் இயங்கும். தவிர, டிராம்பேயில், மைய அரசுக்காகத் தோரியம் சம்பந்தமான நிறுவனத்தையும் நடத்தும். இதில் ஆராய்ச்சிப் பிரிவும் இணைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் 1948-ஆம் ஆண்டில் பிரஞ்சு நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு இங்கே இயந்திர அமைப்புக்கான வேலை துவங்கியது. டிசம்பர் 1952-ல் காலஞ்சென்ற ஜவாஹர்லால் நேரு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அன்று முதல் உற்பத்தி ஆரம்பமாகியது.

அரிய கனிப் பொருளான க்ளோரைட், பார்வைக் கண்ணாடிகளுக்கு மெருகிடவும், உலோகங்களைப் பதப்படுத்தவும், உலோகக் கலப்புகளுக்கும் பயன்படுகிறது. உலகத் தேவையின் மூன்றில் ஒரு பங்கை இந்தத் திட்டம் நிறைவு செய்யும்.

இதே திட்டம் செரியம் ஆக்ஸைட், செரியம் பிஃலோரைட், லேந்தனம் நைட்ரேட் போன்றவற்றையும் தயாரிக்கின்றது. இங்கே தயாராகும் அரிய கனிப் பொருள்களைப் பக்குவமாகச் சேர்த்து வைக்க அவசியமான பீப்பாய்களையும் தயாரிக்கிறார்கள்.

உலோகப் பொருட்கள் சேமிப்பு

இத்தொழிற்சாலைக்கான கச்சாப் பொருள் தமிழக, கேரள நாட்டுக் கடற்கரையில் காணப்படும் கருப்பு மணலேயாகும். இம்மணல், நாட்டின் உலோகப் பொருளைப்போல் வளமிக்கது. இந்த மணல் உலகத்திலேயே வளமிக்க மணலாகும். காயங்குளத்தின் நீண்டகரை கேரளத்தில் உள்ளது. இது இரண்டு மைல் அளவிற்குப் பரவித் தமிழ் நாட்டைச் சேர்ந்த மணவாளக் குறிச்சிவரை எட்டியுள்ளது. இதில் இல்மனைட், ஜிர்கான், ருடைல், மோனேஜைட், சிலிமனைட், கார்னெட் போன்றவை அடங்கியுள்ளன.

மணவாளக்குறிச்சியில்

இந்திய அரிய கனிப்பொருள் நிறுவனம் மணவாளக் குறிச்சியிலும் ஓர் இயந்திரச் சாலையை நடத்துகிறது. இதில் ஆண்டுதோறும் 50,60,000 டன் இல்மனைட், 3,300 டன் மோனேஜெட், 1,500 டன் ருடைல், 5,700 டன் ஜிர்கான், கார்னெட் 1,200 டன், லிமனைட் 300 டன், 350 டன் லியூகாக்சின் (பழுப்பு இல்மனைட்) உற்பத்தியாகின்றன.

சாவராவில் உள்ள தொழிற்சாலையில் 1,00,000 டன் இல்மனைட், 5,850 டன் ருடைல், 7,000 டன் ஜிர்கான், 585 டன் மோனேஜைட், 4,000 டன் சிலிமனைட் தயாரிக்கப் ஆண்டுதோறும் படுகின்றன.

தோரியம் தொழிற்சாலை

ஆல்வாயில் உற்பத்தியாகும் மட்ட ரக தோரியம் ஹைட்ராக்ஸைடைப் பயன்படுத்த டிராம்பேயில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது 1955 முதல் உற்பத்தியில் இறங்கியுள்ளது.

ஆல்வாய் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் தோரியம், ஹைட்ரோக்ளோரிக் அமிலத்தில் கரையக்கூடியது. சுத்தமான தோரியம் சல்பேட் ஹைட்ராக்ஸைடாகச் சுருங்கி, நீரில் கரையக் கூடிய அசுத்தங்களை அகற்றி விடுகின்றன. சுத்தப் படுத்தப்பட்ட ஹைட்ராக்ஸைட் மிகச் சுத்தமான நைட்ரிக் அமிலத்தில் கரையக்கூடியது. பிறகு முறையாகக்கெட்டிப்படுத்தப்பட்டுப் பீப்பாய்களில் அடைக்கப்பட்டுப் பிறகு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

தோரியத்தையும் யுரேனியத்தையும் பூரணமாகப் பெற ஆதார திரவமாகிய தோரியம் சல்பேட், ஹைட்ரோ குளோரிக் அமிலத்தினால் பதப்படுத்தப்படுகிறது. தோரியம், அரிய கனிப் பொருள் ஹைட்ராக்ஸைடாகவும் யுரேனியம் பிலோரைடாகவும் மாறிய பிறகு மறுபடியும் பதப்படுத்தப்படுகிறது.

நாளையத் தலைமுறைகளான இன்றையப் பிள்ளைகளுக்குச் சாலை விதிமுறைகளைக் கற்றுத் தருவோமானால், நாளை விபத்துக்கள் ஓரளவு குறையும் அளவுக்கு நாம் வழி செய்தவர்களாவோம்.

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், ஏழை, பணக்காரர் இப்படி எல்லாத் திறத்தாரும் விபத்தென்னும் கோரப் பிடியில் சிக்கிச் சீரழிகின்றனரே; இந்த அவல நிலைக்கெல்லாம் காரணம் என்ன ?

' நில், கவனி, புறப்படு' என்ற திருவாசகங்களைக் கடைப் பிடிக்காததே காரணம் என்றால் அது முற்றிலும் உண்மை. எல்லாருடைய நன்மைக்காகவும் ஏற்பட்டதே சாலை விதிமுறைகள். பலர் வேலைக்காக ஏதோ படித்துவிட்டு, விதி முறைகளைக் கடைப்பிடிக்காதகாரணத்தாலும், அவற்றைத் தெரிந்திருந்தும், தெரியாதவர்கள் போல நடந்து கொள்வதாலும் விபத்து என்னும் படுகுழியில் வீழ்ந்து அவர்கள் பலியாகிறார்கள். சாலை விதியே தெரியாதவர்கள், ஏதோ அனுபவ வாயிலாகக் கொஞ்சம் அறிந்தவர்கள் கூடச் சாலைகளில் 'கன்னாபின்னா' வென்று நடப்பதை நாம் பார்க்கிறோம்.

அண்மையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவர் ஓடும் பஸ்சில் ஏறியபோது, கீழே விழுந்து இறந்தாராம். இப்படி 1970-ல், ஓடும் பேருந்தில் ஏறிக் கீழே விழுந்து இறந்தவர்கள் பதினொரு பேராம்; நடப்பு ஆண்டிலோ பத்துப் பேர். ஆகவே, 'ஓடும் பேருந்தில் ஏறாதீர்கள்' என்று எச்சரிக்கிறார் காவல்துறை ஆணையாளர்.

இன்று சுமார் 150 பேர் வரை சாலை விபத்துக்களில் உயிரிழந்திருக்கிறார்களென்றால், இது அவர்கள் தலைவிதியாலா ? அல்லது ஆயுள் முடிந்துவிட்டது என்பதாலா ? இதெல்லாம் வெறும் மூடநம்பிக்கை. ' நில், கவனி, புறப்படு ' என்னும் மந்திரத்தை மனத்தில் கொள்ளாததே அதற்குச் சரியான, உண்மையான காரணம்.

இதனை முற்றிலும் உணர்ந்த ஓர் உயர்நிலைப்பள்ளி—சென்னை மாநகரின் மையமாம் அண்ணா சாலையிலுள்ள கிறித்தவ சர்ச் உயர்நிலைப்பள்ளி (Christ church high school) சாலை விதி முறைகளை மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறது ; அத்தோடு நின்றுவிடவில்லை. அவர்களையே போக்குவரத்துள்ள இடங்களுக்கு அனுப்பி, போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணிகளில் ஈடுபடவும் செய்கிறது.

காலை 8 மணியிலிருந்து 8-45 வரையிலும், பிற்பகல் 3 மணியிலிருந்து 4-30 வரையிலும், இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள், அண்ணா சாலையில் மட்டும் இத்தகு பயனுள்ள பணிகளில் ஈடுபடுகின்றனர். இந்த அருமையான காட்சியை நாம் நாள்தோறும் பார்க்கிறோம். போக்குவரத்துப் போலீசாரின் உதவியோடு இந்த மாணவர்கள், அதுவும் போக்குவரத்து மிகுதியுள்ள இடங்களில் கடமையாற்றுகின்றனரென்றால் அவர்களின் ஆர்வத்தை, அக்கறையை என்னென்று சொல்வது !

பள்ளிப் பருவத்திலேயே இப்படி ஒரு நல்ல பழக்கத்தை ஊட்டி வளர்த்து வரும் இந்தக் கிறித்தவ சர்ச் உயர்நிலைப் பள்ளியின் வயது என்ன தெரியுமா ? 130 ஆண்டுகள். பழமையான இப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் பயனுள்ள இந்தப் பணிகளில் எப்படி ஈடுபடுகின்றனர் ? அது ஒரு சுவையான கதை !

'' மாணவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியால் மட்டும் அனுபயனடைய முடியாது. அனுபவ வாயிலாக அவர்கள் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அப்போது தான் அவர்கள் தாம் கற்ற கல்வியில் முழுமை அடைகிறார்கள். இந்த வகையில்தான் எங்கள் பள்ளி மாணவ, மாணவிகளை நாங்கள் தயார் செய்கிறோம். சமூகத் தொண்டில் ஈடுபடுவது போன்றதே இப்பணியும். மாணவர்கள் தனித்து வாழாமல் ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். போலீசாருக்கும் மாணவர்க்கும், பொதுமக்களுக்கும் தொடர்பும், ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எழுந்ததுதான், மாணவர்கள் போக்குவரத்துக் கண்காணிப்புக் குழு '' என்கிறார் இப்பள்ளியின் முதல்வர் திரு டேவிட் சாமுவேல். இவர் இதே பள்ளியில் 15 ஆண்டுகள் ஆசிரியராகவும், 12 ஆண்டுகளாக முதல்வராகவும் இருந்து வருகிறார்.

1966 ஏப்ரலிலிருந்து இந்தப் பள்ளி மாணவர்கள், சாலைப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போது மொத்தம் 120 மாணவ, மாணவிகள் இந்தப் பணியைச் செய்து வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் ஐம்பது பேருக்குச் சாலைப் போக்குவரத்து விதிமுறைகளைக் கற்றுக் கொடுத்துத் தயார் செய்கிறார்கள்.

திங்கள் முதல் வெள்ளிவரை, காலையிலும் மாலையிலும் இந்த மாணவ, மாணவிகள் தங்கள் பணியினை அனைவரும் பாராட்டும் வகையில் செய்து வருகிறார்கள். ஒரு வாரத்தில் ஒரு மாணவருக்கு ஒருநாள் மட்டுமே இந்தப் பணி வருமாறு, பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இதனால் மாணவர்கள் உற்சாகமாக இதனைச் செய்ய முன் வருகின்றனர்.

''பள்ளியில் எல்லாப் பாடங்களையும் போல, வாரத்துக்கு ஒரு முறை சாலைப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றி ஒரு பாடத்தையும் நடத்தலாம். இதனால் பெரும்பயன் விளையும். எங்கள் பள்ளியைப் போலவே மற்றப் பள்ளிகளும் இந்தத் தொண்டில் மாணவர்களை ஈடுபடுத்தலாம்'' என்று தம் கருத்தினைத் தெரிவிக்கும் பள்ளியின் முதல்வருக்கு இந்த யோசனை எப்படித் தோன்றியது?

பள்ளி முதல்வர் திரு டேவிட் சாமுவேல் அவர்களே இதைப் பற்றிச் சொல்கிறார்:

''நானும், முன்னாள் காவல் துறை ஆணையாளர் திரு சிங்காரவேலுவும் ஒன்றாகப் படித்தவர்கள். ஒரு சமயம் திரு சிங்காரவேலுவிடம் நான் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது எங்கள் பள்ளி பற்றியும் பேச்சு வந்தது. அப்போது அவர் சொன்னார்: 'புது தில்லியிலும், பம்பாயிலும் மாணவர்கள் சாலைப்போக்கு வரத்து ஒழுங்குக் கட்டுப்பாட்டுப் பணியைக் காவல்துறை ஒத்துழைப்போடு செய்கிறார்கள். சென்னையிலும் அதைப்போலச் செய்தால் மிக்கப் பயனுள்ளதாக இருக்கும்; ஏன் நீங்களே அதைச் செய்ய முயற்சிக்கலாமே!' என்றார்.

''எனக்கு ஒரே மகிழ்ச்சி. போக்குவரத்துச் சாதனங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வரும் இவ்வேளையில், குறிப்பாகத் துள்ளித் திரியும் மாணவர்கள் சாலை விதிமுறைகளைத் தெரிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்தேன். உடனே அவரிடம், உங்கள் உதவி இருந்தால் நாளையே இதனைத் தொடங்குகிறேன் என்றேன், உற்சாகமாக. அவரும் அதற்கு ஆவன செய்வதாக வாக்களித்தார் !

அதன் விளைவு?

அடுத்த நாளே ஒரு துணை ஆணையாளர் இந்தப் பள்ளிக்கு வந்தார். முதல்வரிடம் கலந்தாலோசித்துக் காவல்துறைப் போக்குவரத்துத் துணை ஆணையாளர் அலுவலகத்திலிருந்து ஒருவரை இப்பள்ளிக்கு அனுப்பிச் சாலை விதிகளைப் பற்றி மாணவ, மாணவிகளுக்குக் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். அன்றுமுதல் இன்றுவரை இப்பள்ளி மாணவர்கள், தம் படிப்புப் போக மற்ற நேரங்களில் இப்பணியைச் செவ்வனே செய்து வருகின்றனர். இப்போதுங்கூட ஆண்டுக்கொரு முறை, காவல் துறையிலிருந்து ஒருவர் வந்து மாணவர்களுக்குப் போக்குவரத்துச் சம்பந்தமான விதிமுறைகளை விளக்கிச் சொல்கிறார்.''

காவல்துறை சம்பந்தப்பட்ட விழாக்களுக்கு வருமாறுஇப்பள்ளி மாணவர்கள் அழைக்கப்படுவதை இங்குக் குறிப்பிட வேண்டும். காவல்துறைக் குறிப்பேட்டிலும்கூட இம்மாணவர்களைப் பற்றி நல்ல கருத்துக் கூறப்பட்டுள்ளது; மாணவர்கள் சிறந்த முறையில் இப்பணியைச் செய்து வருகின்றனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மக்கள் நடமாட்டம் மிகுதியுள்ள அண்ணாசாலையில் மாணவர்கள், அதுவும் மாணவிகள் இப்பணியைச் செய்வது எளிதான செயலல்ல. தில்லியிலும், பம்பாயிலும் மாணவர்கள், சாலையில் குறுக்கே செல்பவர்களுக்கு மட்டுமே வழி காட்டுகின்றனர். ஆனால், இப்பள்ளி மாணவர்களோ அதற்கும் ஒருபடி அதிகமாகச் சென்று, அதாவது அண்ணா சாலையின் நாற்சந்திக்கும் மத்தியில் நின்று, மிகத் திறமையாக ஊர்திகளுக்கு வழி காட்டுகின்றனர். அறிஞர் அண்ணா சிலையின் பக்கம் இந்தக் காட்சியை நாம் நாள்தோறும் கண்டு களிக்கலாம்.

தமிழ்நாட்டிலேயே இந்தப் பள்ளி ஒன்றுதான் இத் துறையில் ஈடுபாடு கொண்டு செயல்படுகிறது. ஆனால், 'நாற் சந்தியில் நின்று' போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது, இந்தியாவிலேயே, இந்தப் பள்ளி மாணவர்கள்தான் என்று அறியும்போது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

இதைவிடப் பெருமைப்படுகிறார், இந்தப் பள்ளியில் பத்தாவது படிக்கும் மாணவி டி. பத்மினி. அவர் தம் அனுபவத்தை இங்கே கூறுகிறார்:

''போக்குவரத்து நெரிசலான அண்ணா சாலையில் நின்று, சாலை விதிமுறைகளைக் காட்டிய போது, முதலில் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. போலீசாரின் உதவியால் நான் படிப்படியாகக் கற்றுக்கொண்டேன். இப்போது மிக எளிதாக இதனைச் செய்கிறேன். இந்தப் பணியைச் செய்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது''.

பத்தாவது படிக்கும் மாணவர் கே. பால்ஜெயகர் என்ன சொல்கிறார்?

''அண்ணா சிலையின் பக்கம் நாற்சந்தி கூடுமிடத்தில் நான் பணியாற்றியிருக்கிறேன். என்னைப் போல ஒவ்வொரு பள்ளி மாணவரும், மாணவியரும் இது போன்ற பணிகளில் ஈடுபடுவது நாட்டுக்கும் நமக்கும் நல்லது. ஒவ்வொருவரும் சாலை விதிகளைத் தெரிந்து கொண்டு, அதன்படி நடந்து வந்தால், நாளை விபத்தே இல்லை என்ற நிலையை உருவாக்கலாம்''.

பாடுபட்டுத் தேடிப் பணிபுரியும் மக்கள், சாலை விபத்தென்னும் அகால மரணத்தால் ஆட்கொள்ளப்படுவதேன்? படித்துப் பட்டம் பெற்று, நாளைய உலகின் நாயகர்களாக விளங்கவேண்டியவர்கள் ஒரே நொடியில் விபத்தென்னும் மடியில் விழ்வதேன்? துள்ளியோடும் பள்ளிப் பிள்ளைகள் வீடு திரும்பும்போது, விபத்தில் சிக்கிச் சிரழிவதேன்?

எல்லாவற்றுக்கும் ஒரே பதில்:

நில்! கவனி!! புறப்படு!!!

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தாமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, சூஜி
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்

DR. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி, புத்துணர்ச்சிதந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00 பாதியளவு அனுப்ப இயலாது. வி.பி.பியில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்.
டாக்டர் S. காளிமுத்து, R M.P. (IND), V.V.S., A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி. S.I.
போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபிஸ்;
41, நைனியப்பன் தெரு, G.T., சென்னை-1
போன்: 21448

தாய் உள்ளத்திலே ஊற்றெடுக்கும் கவிதை இன்பம், இயல்பான பண் வடிவம் பெறும்போது தாலாட்டுப் பிறக்கின்றது. அது அன்றும் இன்றும் என்றும் உள்ள இயற்கை இசை. குழந்தை அழுகையும் அதை ஆற்றத்துடிக்கும் தாய்உள்ளமும் இருக்கும் வரை தாலாட்டும் இருக்கும்.

ஒரு தாய் தன் குழந்தைக்கு நீராட்டித், தலைசீவிப், பொட்டிட்டு அமுதூட்டித் தூங்காத கண்ணுக்குத் துரும்பு கொண்டு மையெழுதித், தொட்டிலிலே போட்டு உறங்க வைக்கிறாள். அந்தச் செஞ்சொற்களில் தான் எத்தனைச் சுவை!

கண்ணே கருமணியே
  கற்கண்டே கனிரசமே
பொன்னே புதுமலரே
  பொற்சரமே பூச்செண்டே
முத்தே பவளமே
  முக்கனியே சர்க்கரையே
முத்திரைப் பசும்பொன்னே
  முழுநிலவே கண்வளராய்!

தான் பெற்றெடுத்த செல்வத்துக்குக் கண்ணிலிருந்துவிண்ணிலவு வரை எத்தனை உவமைகளைக் காட்டுகிறது அந்த உள்ளம்.

மேலும் அந்தத் தாய் பாடுகிறாள்:

பத்து மலைகடந்து
  பறித்துவந்த அதிசயப்பூ
கொத்து மருக்கொழுந்தே
  கோமளமே கண்வளராய்!

உடல் நோக நோக ஐயிரு திங்கள் சுமந்துபெற்றதைப்பத்து மலைகள் கடந்துவந்ததாகக் குறிப்பிடுவதில் எத்தகைய கவிதை நயம்!

நூற்றுக்கல முத்திலே
  தூற்றியெடுத்த முத்தே
மாற்றுயர்ந்த பொன்னே—இந்த
  மண்டலத்து அதிபதியே!

சதுரகிரி மலையேறிச்
  சாதிலிங்கக் கட்டைவெட்டிப்
புதிதாக ஆசாரி
  பார்த்துச் செய்திட்ட
சித்திரப்பூந் தொட்டிலிலே
  சிங்காரப் பட்டுடுத்தி
நித்திரைசெய் நித்திரைசெய்
  நித்திலமே நித்திரைசெய்!

பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறுவது போலத், தன் குழந்தை படுத்திருக்கும் தொட்டிலும் உயர்த்தப் படுகிறது. மேலும் அந்தச் செல்வன் தனக்குச் சேர்த்த சிறப்புகளையும் தாயுள்ளம் கணக்கிடுகிறது.

வாடிய நாளெல்லாம்
  வருந்தித் தவமிருந்து
தேடிய நாள்தன்னில்
  செல்வமாய் வந்தகண்ணே
மலடி மலடிஎன்று
  வையகத்தார் ஏசாமல்
மலடி என்றசொல்லை
  மாற்றப் பிறந்தவனே!

குழந்தை தூங்கவில்லை; எனவே பாட்டும் நிற்கவில்லை.

யாரடித்து அழுகின்றாய்
  அழுதகண்ணில் நீர்ததும்ப!
பேரை உரைத்தக்கால்
  பெருவிலங்கு பூட்டிடுவேன்!
தாத்தா அடித்தாரோ
  தாலாட்டும் கையாலே!
பாட்டி அடித்தாளோ
  பாலூட்டும் கையாலே!
அத்தை அடித்தாளோ
  அமுதூட்டும் கையாலே!
மாமி அடித்தாளோ
  மல்லிகைப்பூச் செண்டாலே!

துறைமுகத்து வியாபாரி
  துரைமார்கள் உங்களம்மான்
திரைகடல் கடந்துமே
  தேடிவருவார் உங்களம்மான்

கோட்டை அதிகாரி
  கொடிகாரர் உங்களம்மான்
கேட்டதெல்லாம் தருவார்
  கண்மணியே நீயுறங்கு!
பக்குவத்து மாங்கனியும்
  பருவத்துப் பலாச்சுளையும்
கோதுபடா நெற்றும்
  கொண்டுவருவார் நீயுறங்கு!
சின்னஞ்சிறு விரலுக்குச்
  சித்திரம்போல் மோதிரங்கள்
பொன்னால் உனக்களிப்பார்
  புத்திரனே கண்வளராய்!

கடைசியிலே குழந்தையின் அழுகைக்கு ஒரு காரணம், முத்தாய்ப்பான காரணம் சொல்லி முடித்து வைக்கிறது அந்தத் தாய் உள்ளம். தம்பி துணை வேண்டுமென்று அழுதானும் அந்தப் பாலன்!

யாரும் அடிக்கவில்லை
  எவர்விரலும் தீண்டவில்லை
தானே அழுகின்றான்
  தம்பிதுணை வேண்டுமென்று;
சீக்கிரமே நான்பெற்றுச்
  செல்வமே உனக்களிப்பேன்
பிள்ளைக்கலி தீர்க்கவந்த
  பெம்மானே கண்வளராய்!

அந்தப் பையன் மிக நல்ல பையன். தம்பிகள், தங்கைகள் வேண்டுமென எண்ணிக்கையைப் பெருக்கிக் கேட்கவில்லை. ஒரே ஒரு தம்பியைப் பெற்றுத் தருவதாகக் கூறி நிறைவு காண்கிறது தாயின் நெஞ்சம்.



சிலம்பை விளம்புதும்

பாரதியாரின் தமிழ்ப்பற்றும், இலக்கியப் பேரார்வமும் ஓர்ந்து கண்டு மகிழத்தக்கவை. அவர் தமக்குக் கிட்டிய தமிழ் இலக்கியங்களை ஆர்வ உள்ளத்தோடு அணுகினார்; அமுதச் சுவைகளை நுகர்ந்தார்; நுகர்ந்தவற்றை எண்ணிப் பெருமிதங் கொண்டார்.

அந்தப் பெருமிதத்தின் வெளிப்பாடுதான்,

'' யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ''

எனும் அடிகள். தமிழ்ப் 'புலவர்களை நினைந்து பெருமிதம் கொள்ளும் பாரதி அப்புலவர்களை நினையாத தமிழரை நினைந்தவராய்

'' ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்
களாய் வாழ்கின்றோம்''

—என்று குரல் தாழ்த்திப் பாடினார்.

இவ்விடத்தில் அவர் இலக்கியத்தின் திறவுகோலராய் வெளிப்படுகிறார். அவர் புகழ்ந்த புலவர்களையும், அவர் தம் இலக்கியங்களை அணுகாதவர்களையும் அறிமுகப்படுத்தியுள்ள முறையைப் பொதுவாகவும், சிறப்பாகவும் நினைத்தால் ஓர் இலக்கியத் திறவுகோல் கிடைக்கும். ஓர் இலக்கியத்தின் முழுப்பயனையும் பெற அதனை முதலில் வாயாரப் பேசி, அடுத்துச் செவிகுளிரக் கேட்டுப் பின் கண்குளிரக் கண்டு பயின்று சுவைக்க வேண்டும் எனும் குறிப்பை ''ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்க்ளாய் '' என்பதனுள் வைத்துள்ளார். இக்குறிப்பு இலக்கியங்களைப் பொதுவாக அணுகுவதற்கும், சுவைப்பதற்கும் அவர் கொடுக்கும் திறவுகோல்.

இதற்குமேலும் அவர்தம் சொல்லமைப்புகளைக் கூர்ந்து நோக்கினால் மற்றொரு திறவு கோலையும் தருவார்.

மூன்று புலவர்களை அறிவித்த அவர் அம்மூவரை அணுகாதவர்களை மூவகையினராக அறிவித்தமையைக் கூர்ந்து நோக்கவேண்டும். அவர்களை அமைத்துள்ள வரிசையை நிரலே காணவேண்டும். கம்பரை அணுகாதவர் ஊமையராம்; வள்ளுவரை அணுகாதவர் செவிடர்களாம்; இளங்கோவை அணுகாதவர் குருடர்களாம்.

கம்பரது கலை இலக்கியத்தைச் சுவைத்துப் பயன் கொள்ள அவ்விருத்தங்களை வாயாரப் பாட வேண்டும்—பேச வேண்டும் என்கிறார். வள்ளுவரது அறவுரை இலக்கியத்தைச் செவியாரக் கேட்டு, அக்கேள்வியறிவால் வாழ்வைச் செம்மை செய்து கொள்ள வேண்டும் என்கிறார். இளங்கோ வடிகளது நாடக இலக்கியத்தை மனக்கண் குளிரக் கண்டு மகிழ வேண்டும் என்கிறார்.

இலக்கியத்தின் வல்லமை

பொதுவாக, வாழ்வினைச் செம்மை செய்யும் வல்லமை பெற்றது இலக்கியம். சிறப்பாகத் தமிழ் இலக்கியம் அகவாழ்வு, புறவாழ்வு என்னும் வாழ்வியற் சட்டகத்தைக் கொண்டெழுந்த வளமார் பெட்டகம். ஒருபெரும் மன்பதையான தமிழ்மக்கட்குச் சாவா வாழ்வளித்து வருவன தமிழ் இலக்கியங்கள். இவ்வுண்மை பாரதியா

கோவை இளஞ்சேரன்

தன் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது. தமிழரால்—தமிழ் இலக்கியங்களால்—அவற்றிலும் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் என்னும் மூன்று செம்மாந்த இலக்கியங்களின் துணையினால் தமிழர் வாழ்வு செழித்திருந்தது—செழிக்க வேண்டும் என்னும் உறுதிப்பாடு பாரதியால் பளிச்சிடுகிறது.

தமிழ் மன்பதைக்குச் சாவா வாழ்வளிக்கும் வல்லமை சிலப்பதிகாரச் செய்யுளுக்கு உண்டென்று பாரதி திண்ணங் கொண்டிருந்தார். திருக்குறள் அதற்கேற்ற உறுதியையும், தெளிவையும் கொண்டிருப்பதை உணர்ந்தார். திருக்குறளின் பொருளாழமும், விரிவும், கருத்தழகும், தமிழ் மன்பதையின் ஊட்டச் சத்துக்கள் என்று உறுதி கொண்டிருந்தார். தமிழ்ச் சாதியின் மேம்பாட்டிற்குக் கம்பன் தனியொரு புதுமுயற்சி செய்துள்ளான் என்று நம்பினர். இத்திண்ணத்தையும், உறுதியையும், நம்பிக்கையையும் ஒன்று கூட்டிச் செம்மைக் குரலெடுத்து,

" சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்ததென்
றுறுதி கொண்டி ருந்தேன்."

—என்று தமிழச்சாதி எனுந் தலைப்பில் பாடினர். பாடும் போக்கில், " உறுதி கொண்டிருந்தேன் "

—என இறந்த காலத்திற் கூறும் போக்கில் இன்றையத் தமிழ் மக்களது இழப்பை மின்னவிட்டுக் காட்டுகின்றார். தமிழகத்துத் தலையாய இலக்கியங்களைப் படைத்துத் தன்னுள்ளங் கவர்ந்த மூவரையும் குறித்தார். அத்துடன் அவர்க்கெல்லாம் முதுகெலும்பாய் உதவிய தமிழ் மன்னர்களையும் குறித்தார்.

" கம்பன் என்ெருரு மானிடன் வாழ்ந்ததும்"

—என்று தொடங்கி, இடையே, காளிதாசன், பாஸ்கரன், பாணினி, சங்கரன் ஆகியோரைச் சுட்டிக்காட்டி,

" சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்'

—எனத் தொடர்ந்து

" அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர் "

—என்று முடிவு கூற எண்ணியவர் உள்ளம் எரிகிருர். ' இவையாவும் அறியாது பேடிக் கல்வி பயின்று உழல் பித்தர்கள் ' என்று மக்களைச் சாடுகிருர். சாடிவிட்டு,

" என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே."

—என நொந்து கொள்கிருர்.

தான் தேர்ந்தெடுத்த முப்புலவரது தன்மைகளையும், அவர்தம் இலக்கியங்களின் இயல்புகளையும் வாய்ப்பு நேரும் போதெல்லாம் முறையாகப் பதித்துள்ளார் என்பதும் வெளிப்படுகின்றது.

ஆம், 'முறையாகப் பதித்துள்ளார்' என்றே அதனைக் குறிக்க வேண்டும். ' மறவாமல் மேற்கோள் காட்டியுள்ளார் ' எனக் குறித்தல் பொருந்தாது.

தம் நாட்டு மக்களது தன்னுணர்வற்ற போக்கையும், குறிக்கோளற்ற கோணலையும் பலதுறைகளிலும் கண்டு நொந்த அவர் மிக வெறுத்துச் சாடுகின்றார். அச்சாடலில் காப்பியம் கற்போர்தம் நுனிப்புல் மேயும் முறையை,

" அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளங் காண்கிலார்"

—எனக் கூறிக் கவல்கின்றார். இக்கவற்சியுடையவர் இலக்கியத்தில் தம் பார்வையை எவ்வாறு செலுத்தியிருப்பார் என்பதை அறிய முடிகிறது. மேற்கண்ட அடி பாரதியாரது தன்வரலாற்றுப் பாடலில் உள்ளது. அவர் தன் வரலாற்றுப் பாடல்களில் தனது உள்ளுணர்வுகளையே வடித்துள்ளார். எனவே, அவர் தாம் கற்றுச் சுவைத்த இலக்கியங்களில் அவற்றை யாத்த கவிஞர்களது உள்ளம் ஆழ்ந்து கிடப்பதைக் கண்டு உணர்ந்தவர் எனக் கொள்ளலாம்.

தம் உள்ளங் கவர்ந்த மூன்று புலவர்களது உள்ளங்களை அவரவரது இலக்கியங்களில் கண்டிருப்பாரன்றே ? அவ்வுணர்வை அவர் வெளிப்படுத்தியுள்ள பாங்கைக் காணலாம்.

தனது இராமாயணத்தைப் படிப்பதன் வாயிலாக மனிதத்தன்மை புலனாக வேண்டும் எனும் குறிக்கோளைக் கம்பர் கொண்டுள்ளார் எனக் கருதுகிருர். அதனால் கம்பன் மனித இனத்தின் செம்மைப்பாட்டை விளக்குங் குறிக்கோளில் ஊன்றி நிற்கிருன் எனக் கூறுபவராய்

" கம்பன் என்ெருரு மானிடன் வாழ்ந்ததும்"

—எனக் குறித்தார்.

இதனையொட்டித் தொடர்ந்து நோக்கினல் இராமாயண வாயிலாகச் சில மனிதத் தன்மைகளைக் குறித்துக் காட்டும் நோக்கோடு கம்பர் இலக்கியத்தை யாத்துள்ளார் என்று பாரதி கருதுகின்ருர் என்பது தெளிவாகும்.

இராமாயணக் கதையும், தெய்வம் மனிதப் பிறவி எடுத்து, அம்மனிதப் பிறவியின் மேம்பட்ட தன்மைகளுக்குக் குறியாக விளங்குகிறது எனும் அடிப்படையைக் கொண்டது. இதனை யாவரும் ஒப்புவர். இறையோ எல்லையற்றது. அவ்வெல்லை யற்றதைக் கம்பன் தான் எடுத்துக் கொண்ட கதையின் வாயிலாகத் தன் திறமையையும் குழைத்துச் சில குறிகளால் தெளிவாக்கிவிட

முயல்கிருர். இதனைப் பாரதி கண்டு கொள்கிருர்; இதனையே,

" எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிய முயற்சி."

—என்று பாடுகிருர்.

மேலும், " கல்வியிற் பெரியன் கம்பன் " எனும் இலக்கண நூலின் மேற்கோள் தொடர் பாரதிக்கு நினைவில் நிற்கிறது. அந்நினைவினைச் செந்தமிழ் நாட்டைப் பாடிப் பூரிக்கும்போது முன்னே இழுத்துத் தொடர்புப் படுத்தி,

" கல்வி சிறந்த தமிழ்நாடு ; புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு "

—என்று பாடுகிருர்.

தெய்வ வள்ளுவன்

இதுபோன்று திருவள்ளுவப் பெருந்தகையை அவர் காணும் முறையும் நோக்கற்பாலது. 'திருக்குறளைச் செவியாரக் கேட்டு நல்லுணர்வும், நல்லறிவும் பெற்று வாழ்வைச் செம்மை செய்யவேண்டும்; அவ்வாறு செம்மை செய்யாதவர் செவிடர்' என்று பாரதி அறிவித்த பாங்கை முன்னர்க் கண்டோம்.

" திருக்குற ளுறுதியும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் "

கருதினேன் என்று விரித்துப் பாடுகின்ருர். இக்கருத்துக்களால் திருவள்ளுவர் மக்களை எந்நிலைக்குக் கொண்டு செல்லுகிருர் என்பதையும் பாரதி எண்ணிப் பார்க்கிருர். திருக்குறளுக்குள் புகுந்து நின்று நோக்குகிருர். வள்ளுவர், மக்கள் வாழ்வாங்கு வாழ வகை சொல்லுவதைக் காண்கிருர். அவ்வாறு வாழ்வாங்கு வாழ்பவன் மனித நிலையைக் கடந்த வானுறையும் தெய்வமாக ஆவான்

என்னும் அறிவிப்பு பாரதியை அகல விழித்துநோக்க வைக்கிறது. ' தெய்வ வள்ளுவன் வான்குறள் செய்ததும் ' என்று வள்ளுவரைத் தெய்வமாக்குகிருர்.

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

—என்று செந்தமிழ்நாட்டை நினைத்துப்பூரித்துப் பாடினர். வான்குறள் செய்தவரைத் தந்து தமிழ்நாடு வான்புகழ் கொண்டதாகக் குறித்த பொருத்தம் நினைந்து மகிழத். தக்கது.

முத்தமிழுக்கும் மூன்று சொல்

கம்பரை மானிடனுகவும், வள்ளுவரைத் தெய்வமாகவும் உணர்த்திய பாரதியார் இளங்கோவடிகளைப் புலவராகக் கண்டு உணர்த்துகின்ருர்.

இளங்கோவடிகளது சிலப்பதிகாரத்தை மனக்கண் குளிரக் கண்டு சுவைக்காதவர் குருடர்கள் என்று குறித்ததை முன்னர்க் கண்டோம்.

" தமிழச்சாதி " என்னுந் தலைப்பில் சிலம்பின் திறத்தை எண்ணி ஓர் அடியை அமைத்தார் :

" சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும் "

—என்பது அது. இவ்வடியில் சிலப்பதிகாரத்தினைச் செய்யுளின் குறியோடு குறித்துள்ளமை நோக்கத்தக்கது. இளங்கோவடிகளைப் புலவராக அறிமுகப்படுத்துவதாக அதனைக் கொள்ளவேண்டும்.

சிலம்பில் பல்வகைச் செய்யுட்களும் அமைந்துள்ளன. ஆசிரியப்பாவும், வெண்பாவும், கலிப்பாவும் இவற்றின் வகைகளும், சில இனங்களும், இக்காலத்து வழக்கிறந்து போனசெய்யுட்களும் சிலம்பில் உள்ளன. உரைப்பாட்டு மடை, கட்டுரை, கொளு என்பனவும் செய்யுள் யாப்பு முறையை ஓரளவு ஒத்து அமைந்தவை. இசையிலக்கணச் செறிவு கொண்ட வரிப்பாடல்களும் தனியான செய்யுள் யாப்பு முறை கொண்டவை. அவை, கூடை, வாரம் எனத் தனித்தனியான யாப்பிலக்கணம் பெற்றவை. இவ்வாறு பல வகைச் செய்யுட்களும் அமைந்த தொடர்நிலைச் செய்யுள் இலக்கியம்-அதாவது காப்பிய இலக்கியம் இதுபோன்று வேறென்று அமைந்ததில்லை எனலாம்.

இவ்வாறு செய்யுள் என்று குறித்ததன் வாயிலாக இளங்கோவின் புலமைத் திறம் அவர்தம் இலக்கியத்தில் ஆழ்ந்துகிடப்பதைக் கண்டு உணர்த்தியவராகிருர். செய்யுளைச் சுட்டிக் கூறியதால் இளங்கோ இயற்றமிழ்ப் புலவர் என்பதையும் குறித்தவராகிருர்.

இளங்கோ இயற்றமிழில் எத்துணை வல்ல புலவராக மிளிர்கின்ருரோ அத்துணை இசைத்தமிழிலும் வல்லுநர். சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை தமிழிசை இலக்கணத்தின் வடிவம் ; பலவகை இசை நுணுக்கங்களை வியப்புறும் வண்ணம் கொண்டு மிளிரும் இசைத்தமிழ்க் கருவூலம்.

அம்மனைவரி, கந்துகவரி, ஊசல்வரி என்பன சிலம்பின் இறுதிப் பகுதியாகிய வாழ்த்துக்காதை யில் அமைந்துள்ளன. இவை பெண்கள் விளையாடுங் கால் பாடப்படுபவை. வள்ளைப்பாட்டு என்று ஒன்று உண்டு. இது பெண்கள் உலக்கை கொண்டு குற்றும் போது பாடப்படுவது. தேவந்தி அரற்று, அடித்தோழி அரற்று என அமைந்துள்ள பாடல் கள் துக்க மேலீட்டால் கையற்றுப் பாடப்படுவன. இவை இக்காலத்தே நாட்டு வழக்கில் கூறப்படும் 'ஒப்பாரி' வகையன.

விளையாட்டு, இல்லத் தொழில், துயரநிலை ஆகியவற்றிற்காகும் இசை முறைகளையும் கொண்டு சிலப்பதிகாரம் இசையிலக்கியப் பெட்டகமாகத் திகழ்கிறது. இதுபோன்று இசை நிறைவாய் அமைந்த வேறொரு தொடர்நிலைச் செய்யுள்—காப்பியம் இல்லை எனலாம். இவற்றின் வாயிலாக இளங்கோ வடிகளின் இசைப் புலமையையும் இசை உணர்வையும் சிலம்பில் காணலாம். பாரதி சிலம்பில் ஆழ்ந்திருக்கும் இளங்கோவடிகளது இசைஉணர்வைக் கண்டார்;

'' சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் '' என்று பாடினார்.

சேரன் தம்பி சிலம்பை எழுதியதும் ' என்று பாடவில்லை; 'சிலம்பை யாத்ததும்' என்று பாட வில்லை. '' சிலம்பை இசைத்ததும் '' என்று பாடி னார். இளங்கோவடிகள் சிலம்பில் இசைத்திருப்ப னவற்றை எல்லாம் பாரதி நிரலே காண்கிறார்.

சிலம்பில் இளங்கோவின் இயற்றமிழ்ப் புலமை யையும், இசைத்தமிழ்ப் புலமையையும் இரு சொற்களால் குறித்தவர் அவரது கூத்துத்தமிழ் அதாவது நாடகத் தமிழ்ப் புலமையைக் காணாது விடுவரோ? கண்டார்; சிலம்பில் பலவகையான வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் இளங்கோவடி கள் கூத்தை அமைத்துள்ளதைக் கண்டார்.

அரங்கேற்ற காதையில் கூத்தின் முழு இலக்க ணமும், இலக்கியமும் அமைந்துள்ளன. ஆடல் ஆசிரியனும் நட்டுவனின் இலக்கணத்தைப் புலப் படுத்தும் வாயிலாகக்கூத்தின் அடிப்படை குறிக்கப் பட்டுள்ளது. ஆடும் அரங்காம் மேடையின் அமைப்பு வியக்கத்தகும் வண்ணம் கட்டப்பட்டுள் ளது.

யாவற்றிலும் மேலாகச் சிலம்பில் ஆங்காங்கு நாடகக் காட்சிகளாகப் பல பகுதிகள் அமைந் துள்ளன. அவை படிப்போர் மனக்கண்முன் நிழற்படங்களாகக் காட்சியளித்து உள்ளத்தை இழுக்கின்றன. பாரதியார் அவற்றைக் கண்டுள் ளார்.

எத்தனையோ சுவைக் காட்சிகள். ஒன்பான் சுவைகளும் மாறி மாறித் தலை தூக்குகின்றன. உள்ளத்தை உலுக்குகின்றன; குலுக்குகின்றன. மனத்தை மகிழ்விக்கின்றன; நெகிழ்விக்கின் றன. நெஞ்சத்தை நயப்பிக்கின்றன; வியப்பிக் கின்றன. எல்லாக் காட்சிகளும் சேர்ந்து பாரதி

யின் நெஞ்சை அள்ளுகின்றன. அள்ளிவிட்ட நெஞ்சோடு துள்ளி எழுந்து பாடுகிறார்.

'' நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்
றோர்—மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு.''

—என்று:

ஏன் சிலப்பதிகாரத்தை நெஞ்சை அள்ளும் என் னும் அடைமொழியால் சிறப்பித்தார்? எது நெஞ்சை அள்ளும்?

இயற்றமிழ் உள்ளத்தைத் தொடும். இசைத் தமிழ் மனத்தை மீட்டும். நாடகத்தமிழ் நெஞ்சை அள்ளும்.

இவ்வாறாக,

'' சிலப்பதிகாரச் செய்யுள் ''
'' சிலம்பை இசைத்தது ''
'' நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் ''

—என இத்தொடர்களை அமைத்த பாங்கு எண்ணி எண்ணி மகிழத்தக்கது. சிலப்பதிகாரத் தின் இயற்றமிழ்க் கடலில் மூழ்கித் திளைத்த அவர் 'செய்யுள்' என்னும் முத்தான சொல்லைத் தேர்ந் தெடுத்துள்ளார். அச்சொல்லாற் சிலம்பின் இயற் தமிழ்ப் பெருமையைப் பறைசாற்றுகிறார். சிலப்பதிகாரத்தின் இசைத்தமிழ் ஓடையில் நீந் தித் திளைத்த அவர் ' இசைத்தது ' என்னும் முத்தான சொல்லைக் கண்டுள்ளார். அச்சொல் லால் சிலம்பின் இசைத்தமிழ்ப் பெருமையை முழக்குகிறார். சிலப்பதிகாரத்தின் நாடகத்தமிழ் அருவியில் ஆடிக்களித்த அவர் ''நெஞ்சை அள் ளும்'' என்னும் முத்துத் தொடரைத் தேர்ந்துள் ளார். அத்தொடரால் சிலம்பினது நாடகத் தமி ழின் பெருமையைக் கொட்டி முழக்குகிறார். மூத் தமிழின் அமைப்பை மூன்று முத்துச் சொற்களால் குறித்துள்ள திறம் நோக்கத்தக்கது.

அம்மூன்று சொற்களையும் சிலப்பதிகாரம் என் னும் நூற்பெயரோடு சேர்த்தே அமைத்திருப்பது மேலும் மேலும் எண்ணி மகிழ்தற்குரியது.

''தமிழ்நாட்டு நாகரிகம்'' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில் அவரது தமிழ் இலக்கிய ஈடுபாட்டைப் பளிச்சென்று காணமுடிகிறது. 'இந் தியப் பெருநாட்டின் ஆட்சி உரிமையை இழப்பி னும் இழப்போம்; எம் சேக்சுபியரின் இலக்கி யத்தை இழக்க ஒப்பமாட்டோம்' என்னும் மெக் காலே பெருமகனாரின் கருத்தைக் காட்டிப் பின் வருமாறு தொடருகிறார்....

''இந்த மாதிரியாகப் பெருமைப்படுத்தி
நம்மவர், கம்பனைச் சொல்லலாம்;
திருவள்ளுவரைச் சொல்லலாம்; சிலப்பதி
காரம் இயற்றிய இளங்கோவடிகளைக்
கூறலாம். இன்னும் பல புலவர்களைக்
காட்டலாம் .. ..
தமிழ்நாட்டின் மற்றச் செல்வங்களை
யெல்லாம் இழந்துவிடப் பிரியமா;
ஔவையார் நூல்களை இழந்துவிடப்
பிரியமா, என்று நம்மிடம் கேட்பார்க
ளாயின் 'மற்றச் செல்வங்களையெல்லாம்
பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை;
அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் அமைத்துக்
கொள்ள வல்லது. ஔவைப்பிராட்டியின்
நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்
படமாட்டோம். அது மீட்டும் அமைத்துக்
கொள்ள முடியாத தனிப்பெருஞ்செல்வம்'
என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்
பட்டிருக்கிறோம்.''

இதனைக் காண்போர் பாரதியார் தமிழ் இலக் கியம்பற்றிக் கொண்டிருந்த பூரிப்பை உணரலாம்.

இவற்றிற்கெல்லாம் முடி சூட்டுவதுபோல் பிறிது ஓரிடத்தில்,

''கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய
மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும்,
வருஷோற்சவங்களும் ஏற்பாடு செய்ய
வேண்டும்''

—என்று குறித்துத் தன் பேரார்வத்தை வெளிப் படுத்தியுள்ளார். இக் கருத்து இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. தமிழ் இலக்கியத்திற்கு அக்காலத்தில் இருந்த வரவேற் பை உள்ளத்தில்கொண்டு இக்கருத்தை எடை போடவேண்டும்.

(மூன்று கவிகளுக்கும் சிலைகள் வைக்கவேண்டும் என்னும் பாரதியாரின் கனவை அறிஞர்பெருந்தகை அண்ணா அவர்கள் கம்பருக்கும், திருவள்ளுவருக் கும் சிலையமைத்து நனவாக்கினார்கள். இதுபோது டாக்டர் கலைஞர் அவர்கள் இளங்கோவடிகளார்க் குச் சிலையமைத்து, பாரதியாரின் கனவை நிறைவேற்றி வைத்திருக்கிறார். எங்கிருந்தோ பாரதியார் வாழ்த்தொலிக்கிறார்).

''கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும்சேர்த்துத்,
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்துகொடுத்தார்''

—என்று அவர் பாடியிருப்பதில் தமிழ்க் காப் பியம் பற்றிய அவரது உள்ளுணர்வு கொப்புளிக் கிறது.

எதை நோக்கினும் அதில் பொதிந்து கிடக்கும் உண்மையை உடனே விரைந்து அறியவேண்டும் என்னும் துடிப்பான, கூர்த்த அறிவுடையவர் பார தியார். இதனை, ''அறிவு வேண்டுகிறேன்; எந்தப் பொருளை நோக்குமிடத்தும் அதன் உண்மையை உடனே தெரிந்துகொள்ளும் நல்லறிவு வேண்டு கிறேன்'' எனக் குறித்த அவரது தொடர் நுணுகி நோக்கத்தக்கது.

தன் அறிவுப் பார்வையில் படுகின்றவற்றின் உள் வீட்டை, பார்வை பட்ட அளவிலேயே உணரும் திறன் வாய்ந்தவர் பாரதியார் என்பதை அவரது கவிதைகளாலும் உணரலாம். சிலம்பில் அவ்வாறு அவர் கண்ட இழையோட்டமான கருத்து ஒன்றை இத்துறை கொண்டு காணலாம்.

சிலப்பதிகாரத்திற்கு 'நெஞ்சை அள்ளும்' எனும் அடைமொழி கொடுத்தார். அதே மூச்சில் என்ன பாடினார்?

''சிலப்பதி காரம் என்றோர்
மணி ஆரம் படைத்த தமிழ்நாடு''

என்று சிலப்பதிகாரத்தை ஒரு 'மணி ஆர மாக' உருவகித்துப் பாடினார். தமிழ் நாட்டிற்கு ஒரு '**மணி** மாலை' சூட்டிப் பூரித்தார்.

சிலப்பதிகாரத்தை ஓர் அணிகலனாக உருவகம் செய்தவர் ஏன் மணி ஆரம்—மணிமாலை என்றார்? ஏன் **பவளமாலை** என்று பாடியிருக்கக் கூடாது? ஏன் பொன் மாலை என்று பாடியிருக்கலாமே? மலர் மாலை என்று தொடுத்திருந்தால் மணக்காதா? செய்யுள் அமைதிக்கும் ஒத்திசைக்கும் வகையில்,

'சிலப்பதிகாரம் என்றோர்
துகிர் ஆரம் படைத்த தமிழ்நாடு'
'சிலப்பதிகாரம் என்றோர்
பொலன் ஆரம் படைத்த தமிழ்நாடு'
'சிலப்பதிகாரம் என்றோர்
மலர் ஆரம் படைத்த தமிழ்நாடு.'

—என்று பாடியிருக்கலாம். ஏன் மணிகள் கோத்த கோவையாகப் பாடினார்? மணியாகச் சிலப்பதிகாரத்தைக் குறித்துள்ளதுதான் நோக்கத் தக்கது. நம் நோக்கம் கூர்ந்து நுழைய நுழையப் புதுப் புது வியப்புக்கள் மேலிடுகின்றன.

'மணிஆரம்' என்ற தொடரில் 'மணி' என்னும் சொல் ஒரு திறவு கோலாகப் புகுந்து சிலப்பதி காரப் பேழையைத் திறக்கிறது.

கவிமாமன்னன் பாரதி கையாண்ட இந்த மணிச் சொல் அமைப்பு, சிலம்பை மற்றொரு முனையில் விளம்புவதாகும். அது தனிக் கட்டுரையாகக் காணத்தக்கது.

செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

தங்கள் ஓய்வு நேரத்தைப்பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெற லாமே ! ஆமாம் செல்வி கன்னு தனது ஓய்வு நேரத்தைச்சிறுசேமிப்பு முகவராகப் பணியாற்றுவதில் செலவிட்டார்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கை யாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி சுசிலா ரோஹட்கி யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறி வீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்றொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
தேசிய சேமிப்பு நிறுவனம்
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
தமிழ்நாடு அரசு

வெண்பாப் போட்டி

21. ஞாலமே கைகூப்பும் நன்கு

தற்சுகம் போக்கியே தன்னரிய செய்கையால்
பற்பல செய்து பணிபுரிந்த—நற்காந்தி
ஞாலம் நனிவாழச் செய்த செயலுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சா. காளியப்பன், மத்திய சிறை, சென்னை.

உலகத் தலைவீர் ! உவந்தொருசொற் கேளீர் !
கலகங்கள் நீங்கிக் களிக்கப்—பலகாலும்
சிலத்தைக் காட்டுங் குறள்நெறியிற் சென்றீரேல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் கி. காளியப்பன், பி.ஏ., காரைக்குடி-4.

நீலப் பெருங்கடல் நீர்சுமந்த கார்மேகக்
கோலங்காண் மஞ்ஞை குதூகலிக்கும்—சீலமுடன்
காலந் தவறுமற் காக்கும் பெருமழைக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கோ. கலியாணசுந்தரன், திருமணமங்கலம்.

மாற்றுரின் தோட்டத்து மல்லிகைக்கும் உண்டுமணம்
ஏற்ற இறைவன்தான் ஏழையர்கள்—ஏற்றமுற்ற
கோலச் சிரிப்பதுவாய் கொண்ட அண்ணு கொள்கைக்கே
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—என். சி. கிருஷ்ணசாமி, பொன்மலை.

என்றோ மறைந்திட்ட ஏசுவையுங் காந்தியையும்
இன்றும் உலகத்தார் எண்ணுவதேன் ?—அன்றவர்கள்
காலத்தி னற்செய்த நன்றி தனக்கிந்த
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—பொ. வேலம்மாள், கொட்டாரம்.

சென்னை அரசைத் தமிழ்நா டரசாக்கி
அன்னைத் தமிழையே ஆட்சியிலும்—இன்னுமின்(று)
ஆலயத்தும் வைத்தார்க்கே அல்லால்யார்க் கித்தமிழர்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—எம். மார்கபந்து, அரக்கோணம்.

போர்தொடுத்து மக்களெல்லாம் பூமிதனில் யாங்கணுங்கண்
நீர்சொரியும் காட்சிகள்தாம் நெஞ்சுறுத்த—ஓர்ந்திங்கு
மேலாம் அறப்போரால் வென்றிட்ட காந்தியார்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ஆர். கோபாலகிருஷ்ணன், அளக்குடி.

வறுமை நெருப்பினில் வாடுகின்ற மக்கள்
வெறுமை வாழ்வென்று வெம்பப்—பொறுமையுடன்
காலமெலாம் ஏழையின் கண்ணீர் துடைப்பார்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கு. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ., கரூர்.

காய்த்த மரமே கனிகளை உண்பதில்லை
மாய்த்ததனை உண்டுவப்பர் மானிடர்கள்—வாய்த்திடவே
காலமே வான்மழையுந் தண்ணொளியுந் தந்ததற்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் சோ. கருப்பசாமி, ஷாநகர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு சா. காளியப்பன்,
எண்: 7483,
மத்திய சிறை,
சென்னை-1.

467

காவிரியிற் கல்லணை காவலன் கட்டியதால்
பூவிரியச் செய்து புகழ்படைத்தான்—பாவிரிக்கும்
கோலக் கலைஞரின் கொள்கையாலிந் நாடுயர்ந்தால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் இரா. அங்கப்பன், அளவிபடகாண்.

ஒற்றைத் தமிழேட்டில் ஓரா யிரங்கவிதை
எற்றைக்கும் காணு இனியசெயல்—மற்றுமிதில்
கோலக் குயில்பாடிக் கொஞ்சிக் குலவுவதால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—நா. நாகப்பன், கோனுபட்டு.

மெழுகுவர்த்தி போல்நாளும் மேனி யழுகும்
தொழுநோயர் துன்பத் துடைக்க—முழுநிறைவாய்க்
காலத்தால் திட்டமிட்டுக் காக்குங் கலைஞருக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—க. துளசிங்கம், திருநின்றவூர்.

நாட்டிலுள்ள மக்களுக்கு நல்ல சுதந்திரத்தை
வாட்டுந் துயரேற்று வாங்கியதால்—ஏட்டிலெல்லாம்
காலத்தை வென்றுநிற்குங் காந்தி புகழ்பாடி
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—க. முத்துசாமி, மணப்பாறை.

நாடி வருவாரை நண்ணி வரவேற்றுத்
தேடி இடங்கொடுக்குந் தேன்மொழியே !—கூடியே
காவமெலாம் வாய்மையே காட்டிவரும் நம்மவர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் பூமாலை நடராசன், சேத்துப்பட்டு, (வ.ஆ.)

மக்கள் நலனை மதித்தொழுகும் நம்மரசே
தக்க அரசென்றூர் தாரணியோர்—எக்காலுஞ்
சீலமே கொண்டொழுகும் செந்தமிழர் நாட்டுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சி. இராமகிருட்டிணன், மேல்பட்டாம்பாக்கம்.

வைகறைபின் வந்துதித்து வையத்தோர் வாழ்ந்திடவே
கைகள் வணங்காணக் காய்வித்துப்—பெய்வித்துக்
கோலஞ்செய் ஞாயிற்றைக் கொண்டேத்திப் பொங்கலன்று
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—தன. குணசேகரன், சிதம்பரம்.

சாதி முறையிருப்பின் சட்டங்கள் சாவதுடன்
நீதியும் நில்லாவாம் நெஞ்சமே—ஆதலினல்
சாலப் பகையதனைச் சாய்த்திட்ட போதுனக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—எஸ். சுப்பிரமணியன், சிவகாசி.

தேனெனவே பாலெனவே தீங்கரும்புச் சாறெனவே
ஊனில் ஒளிரும் உயர்தமிழால்—வானுர்ந்த
கோல அழகு கொழிக்குங் குறளுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—இரா. உமா (சக்தி), சின்னுளப்பட்டி.

கற்கண்டே ! நற்கனியே ! கன்னல் நறுஞ்சாறே !
பொற்குவையே! பூவுடலே! பூந்தமிழின்—சொற்சுவையே
கோலமே என்றனுக்குக் கொஞ்சம் இரங்குனக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

காலத்தைப் பொன்னுக்கிக் காட்டும் உழைப்பாளி
சீலத்தை யாவருமே சிந்தித்தால்—கோலப்பொற்
காலமே தோன்றும் கடும்முயற்சி செய்வார்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கே. சந்திரமணி, ஈரோடு-6.

நல்லவர்க்கும் கெட்டவர்க்கும் நற்பாலம் போலிருந்த
வல்லவர்கள் தோன்றி வளர்கின்ற—நல்லுலகில்
ஆலம் விழுதினைப்போல் அன்புதனை ஈவோர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் தெ. மு. முத்துக்கிருட்டிணன், இராசபாளையம்.

இன்றும் வருங்கொல் எனவஞ்சிக் கொல்நிரப்பால்
குன்றும் வறியோர் குலமகிழ—நன்றுற்றும்
நீலமேய் கண்மலராய் ! நேர்தமிழர் ஆட்சிக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் த. வாசுதேவன், பி.ஏ., கள்ளக்குறிச்சி.

சின்ன மனத்தில் சினத்தை வளர்த்திட்டால்
என்ன பயன்விளையும் எண்ணத்துள்—அன்பென்னும்
பாலமே கட்டிப் பகையைக் கடந்திட்டால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் மு. இரத்தினம், அலங்காநல்லூர்.

தமிழுந் தமிழருந் தாழ்வுற்ற போதில்
அமிழ்தெனத் தோன்றிட்டார் அண்ணு—இமிழ்கடல்சூழ்
ஞாலத் தமிழர்க்கு நாளுமுழைத் தாரதனல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் ச. ஆதிமூலம், பி.ஏ., தேவகோட்டை.

கால விழுதூன்றிக் கன்னித் தமிழர்க்கே
கோல நிழல்விரிக்கும் கொள்கைக்கோர்—பாலமிடும்
ஆலங் கிளைபோலும் ஆளுங் கலைஞர்க்கிஞ்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—காவிரி நாடன், சென்னை-34.

கண்ணின் கருமணியே! கன்னித் தமிழ்வழங்கும்
மண்ணில் வறுமையை மாய்த்திட—எண்ணிலா
ஆலை திறக்கும் அருமைக் கலைஞர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சுப. அறவாணன், முதலிபட்டி.

தொண்டுந் தியாகமுந் தூய்மையும் வாய்மையும்
கண்டுதன் வாழ்வில் கடைப்பிடிக்கும்—தொண்டரைக்
காலம் அழித்திடினும் கார்கால மாரிபோல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—டாக்டர் பி. போத்தி, பெரியகுளம்.

காலத்தாற் செய்தபெரு நன்றிக்கும் கல்வியொடு
சீலத்தைத் தந்தபெருஞ் சிந்தைக்கும்—சேல்விழியீர்!
ஓலமிடும் ஏழைவாழ் வோங்கவழி செய்தவர்க்கும்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சி. மாணிக்கம், காரமடை.

விதியென்ற நம்பிக்கை வேர்பறியச் சாய்க்கும்
'விதியொன்றைக்' கண்டறிவார் மீண்டும்—மதிசிறப்பக்
காலத் தொடும்பொருந்தாக் கற்பனையாம் என்பார்க்கிஞ்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

இன்சொல்லே கூறி இருநிலத்து மன்னுயிர்கள்
வன்பசியை யும்போக்க வல்லாரேல்—அன்னவரைச்
சீலராய்ப் போற்றுஞ் சிறப்பதுவே எஞ்ஞான்றும்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் மு. துரைசாமி, திருச்சி.

வங்கக் கடலோரம் வாழ்கின்ற அண்ணுவின்
தங்கத் தமிழகத்துத் தம்பியரே!—எங்கெங்கும்
காலத்தை வெல்லுங் கடமையினை ஆற்றிடுவீர்!
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—இரா. முருகன், ச. பே. புதூர்.

பொன்னி வளநாட்டிற் பூத்த புதுமலரே
கன்னித் தமிழகத்தின் கண்மணியே—என்மகனே
காலத்தை வெல்லுங் கனித்தமிழை நாங்காப்போம்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ந. நல்லம்மாள், நாமக்கல்.

ஞாலத்தில் மக்கள் நலமுடனே வாழவைக்குங்
காலத்தால் மங்காநற் கார்முகிலே!—சீலத்தாற்
காலமெலாம் நீமிதமாய்க் காரீந்தா லுன்றனுக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ந. மாயகிருட்டிணன், சென்னை-13.

ஏழை இனிதுயர எப்பாடு பட்டேனுங்
கூழை நனிவார்த்துக் கூட்டுறவால்—மேழிபிடி
சீலக் குடிமக்கட் சிந்தை மகிழ்ந்தக்கால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—பெ. இராசசுந்தரம், திருவேற்காடு

கேட்ட பொருளனைத்துங் கேட்பார்க்குத் தாமளித்து
வாட்டும் வறுமைப் பிணியகற்றி—நாட்டினரைக்
காலமெல்லாந் தம்முயிர்போற் காக்குநல் லாட்சியர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—தி. செ. கந்தசாமி, சங்ககிரிதுர்க்கம்.

வீட்டு வருவாய்க்கு வேண்டியன செய்கின்ருேம்
நாட்டு வருவாய்க்கு நாமென்ன—காட்டுகின்ருேம்?
காலத்தை எண்ணிக் கருத்தடை செய்திட்டால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சாந்தா தர்மலிங்கம், புதுச்சேரி-4.

வாழ்வில் உடலில் வளத்திற் குறையுடையோர்
தாழ்ந்தே இரந்து தவிக்கின்ற—சூழ்நிலையின்
மூலத்தை நீக்க முனைந்த கலைஞருக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

469

—இரத்தின-மணியரசன், தெ. நெடுஞ்சேரி.

தாயகமுந் தாய்மொழியுந் தானுந்தன் கண்ணிரண்டாய்
நேயமுடன் காத்திடவே நீவந்தால்—தூயவனே
காலமே வாடாத காவியப் பூவாக்கி
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கலாவதி தென்னவன், பெரியகுளம்.

வாழ்கின்ற மாண்பனைத்தும் வாழ்வோர்க் கெடுத்துரைத்துக்
தாழ்கின்ற மக்களினந் தாமுயர—ஆழ்ந்தநற்
சீலமுகும் நல்லுரையைச் செப்புந் தமிழ்மறைக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கு. மங்கையர்க்கரசி, திருச்செங்கோடு.

இல்லாருங் கல்லாரும் இல்லையென நம்முதல்வர்
நல்லாற்றில் ஆட்சி நடத்துதலால்—நல்வழியிற்
சாலவே போற்றித் தகுபட்டந் தானளித்து
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—வித்துவான் பெ. அண்ணாமலை, சென்னை-1·

போற்றற் குரியசெயல் பொன்போலாற் றுவிடினும்
தூற்றித் திரியாதே தூயோரை—காற்றுடி
வாலறுந்தும் நூலிருந்தால் வானந்தா னேற்பதுபோல்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் அரிமதி தென்னகன், புதுச்சேரி-1.

ஈன்று பெரிதுவந்(து) இன்பமுறும் வாழ்வளித்(து)
ஆன்ற பெருமையெல்லாம் ஆற்றுவித்துச்—சான்றோனுக்
காலமெல்லாம் நல்வழியைக் காட்டிநிற்கும் பெற்றோர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—தி. செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

அருமைக் கனியே! அயலாரால் எல்லை
கருகா திருக்கக் கடுகிப்—பொருதுவதில்
காலறு பட்டாலென் ? கையறு பட்டாலென் ?
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—சு. தருமர், மேலான்மறைநாடு.

போர்மேகஞ் சூழ்கின்ற போதெல்லாம் பாரதத்தின்
சார்பெல்லாம் எங்குஞ் சமாதானம்—பார்வெல்லுங்
காலமே ஆயினுங் காட்டும் பொறுமைக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—ஆ. பாலகிருட்டிணன், அறந்தாங்கி.

அன்போ டமுதளிப்பார் ஆதரிப்பார் மக்கள்தம்
துன்பந் துடைப்பார் துணையிருப்பார்—இன்புறவே
நாலா நலன்களை நன்கமைப்பார் அன்னவர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—எம். சி. சுப்பையா பிள்ளை, நாகர்கோயில்.

விண்ணிற் பறக்கின்றோம் ; வெண்ணிலவில் நிற்கின்றோம்
கண்ணிற் பலவிந்தை காண்கின்றோம்—மண்ணில்மாக்
கோலமே காட்டிடும் புத்துலகங் கண்டோர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—மு. சம்பந்தன், கோவை-18.

‘ நாமிருவர் பிள்ளை நமக்கிருவர் ’ போதுமென்று
பூமியில் பின்னோர் புகழ்ந்துரைக்க—நாமினிமேல்
சால நலங்காணச் சார்ந்தே எடுத்துரைப்போம்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கே. சின்னசாமி, திருக்கோயிலூர்.

கட்டுப்பா டின்றிக் கணக்கற்ற பிள்ளைகளைச்
சிட்டுஞ் சிமிழுமாய்ப் பெற்றெடுத்துக்—கெட்டிருக்குங்
கோலமே காட்டாத கொள்கை வழிநடந்தால்
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் காவிரிக்கயலன், இளங்காடு.

இதயத்தின் நன்றி எழிற்கவிதை ! காலை
உதயத்தின் நன்றி ஒளித்தேன்—புதுமலரே!
பாலமாம் அண்ணா பணிக்கருணைப் பண்புக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் முத்து வெங்கடேசன், திருமயம்.

உண்ண உணவும் உடுக்க உடையுமின்றிக்
கண்ணீர் வடிப்பாரைக் காப்பதற்கு—மண்மீது
கோலமிகு திட்டங் குவித்திட்டார் அன்னவர்க்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—புலவர் இல. கிருட்டிணன், ஈரோடு.

காதலனைக் கைப்பிடித்துக் காலமெலாந் துன்பமின்றி
மாதரின் வாழ்க்கை மணம்வீசச்—சாதலிலும்
பாலமெனக் காதலையே பாடிவைத்த பாரதிக்கு
ஞாலமே கைகூப்பும் நன்கு.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., சென்னை-5.



நேரு
பிறந்தநாள்
விழா!







குழந்தைகள்
புத்தகக்
கண்காட்சி

ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

10. இருளின் மடியில்......!

'....நான் என் அப்படி அழுது புலம்பினேன்—கதறித் துடித்தேன்—தெரியுமா?

என் ஆருயிர் அக்காள் பழைய அக்காளாகவே இல்லை; அதனுடைய எழில் மிக்க மலர் மேனி எவ்வாறெல்லாமோ மாறிப்போயிருந்தது.

ஆரஞ்சுச் சுளை என்போமே, அந்த மென்மையான உள்ளடங்கிய உதடுகள், இப்போது ஒடு நீங்காத புளியம்பழம் போல வெளியே பிதுங்கிக் கொண்டு வீங்கிப் பளபளத்தன.

எள்ளுப் பூ நாசி என்போமே, அந்த எடுப்பான மூக்கு, இப்போது தஞ்சாவூர்க் குடமிளகாய்ப் பழம்போலத் தடிப்பேறித் தோன்றியது.

நாவற்பழக் கண்கள் என்போமே, அந்தக் கரிய பெரிய விழிகள், இப்போது புகை படிந்து புழுதியில் விழுந்து விட்ட சோடாக் கோலிகள் போல ஒளிமங்கி உள்ளுக்குப் போய்விட்டன.

பாதியாகப் பிளந்தெடுத்த பலாச்சுளைகள் என்போமே, அந்தக் காதுகள், இப்போது வாழைப் பூவின் மடல்களின் அடிப்புறத்தில் வளையமிட்டிருக்கும் செந்நிறத்தைத் தாங்கித் தளதளவென்று மின்னின.

'பால் நிலவோ — — — —? பப்பாளிப் பழமோ......?' என்றெல்லாம் பாவலர்கள் பாடுவார்களே, அந்தப் பொலிவு மிதந்த ஒளிமுகம், இப்போது, சிறுத்தும் பெருத்தும், சிலிர்த்தும் சிதைந்தும், வெடித்தும் விரிந்தும் சின்னாபின்னமாய்க் கண்ணுக்குத் தெரிந்தது!

நண்டு வளையைச் சுற்றிலும் சரி—கரையான் எடுத்த புற்றிலும் சரி—பூத்துக் கிடக்குமே மண், அப்படித்தான் பூத்துப் போயிருந்தது அதன் உடம்பு முழுதும்!

அழகாய் நீண்ட ஊமத்தம் பூ மொட்டுப்போல் விளங்கிய கை-கால் விரல்களோ, பள்ளி ஆசிரியர் இனிமேல் எழுதவே முடியாது என்று தூக்கியெறிந்த 'சாக்-பீசு'த் துண்டுகள் போலக் கரைந்தும் குறைந்தும் காணப்பட்டன!

பசும்பொன்னால் ஆன சிலை போல வளர்ந்துகொண்டிருந்த என் அக்காள் இப்போது, பழுக்கத் தொடங்கிவிட்ட பாகற் காய்களின் சிலையாகவே காட்சி அளித்தது!

உளுத்த மூங்கிலாக—உப்பிருந்த மட்குடமாக—வெடித்த வெள்ளரிப் பழமாக—வீசியெறியப்பட்ட குருவிக்கூடாக—ஒரு மனித உருவம் மாறக்கூடும் என்று என்னால் கற்பனையே செய்ய முடியவில்லை!

"அய்யய்யோ! உனக்கு ஏனக்கா இந்தக் கோலம் வந்தது? உனக்கு எப்படியக்கா இந்தக் கோரம் வந்தது?" —என்று குமுறிக் குமுறிக் கதறினேன் நான்.

சுவரிலும் தூணிலும் என் தலையைப் போட்டு முட்டிக் கொண்டேன்; மோதிக் கொண்டேன்.

தரையிலும் படியிலுமாக உருண்டு புரண்டேன்; ஓலமிட்டு அழுதேன்.

என்னைப் பார்த்துவிட்டு, என் தாயும் தமக்கையும் என்னைப் போலவே கதறித் துடித்தனர்; பெருங்குரல் பாய்ச்சி அழுதனர்.

எங்கள் வீடு நொடிப்பொழுதில் இழவு வீடாகவே மாறி விட்டது.

எங்களுடைய அழுகுரலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாரும் ஓடோடி வந்து விட்டனர்.

ஒரு முதியவர் வந்து என்னைத் தூக்கி நிமிர்த்தித் தன் தோள் மீது சாய்த்துக்கொண்டு அவருக்குத் தெரிந்த ஆறுதல் மொழிகளைக் கூறினார்.

ஆனால் அவருடைய வார்த்தைகளால் என்னுடைய ஆத்திரத் தீ—துயரக் குமுறல்—அவ்வளவு எளிதில் அடங்குவதாக இல்லை. "நாங்கள் யார் குடியைக் கெடுத்தோம்? எவரை ஏமாற்றினோம்? யாருக்குத் துரோகம் செய்தோம்? எவர் சோற்றில் மண்ணை அள்ளிப் போட்டோம்?...என் அக்காவுக்கு ஏன் இந்தக் கதி?.... எங்கள் என் இந்த இடி?.... ஏன் இந்தக் குடும்பத்துக்கே ஏன் இந்தச் சிதைவு—சீர் குலைவு......?"

—என் கதறலுக்கிடையே வெடித்த இந்த வினாக்களுக்கு அந்தப் பெரியவரால் என்ன விடையைத்தான் கூறமுடியும்?

என் தந்தைக்குத் தெய்வ பக்தி இருந்ததில்லை என்று முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

அண்ணன்-தம்பிகளாக அரவணைத்துக் கொண்டு வாழவேண்டிய சமுதாயத்தில், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், பணக்காரன்-பரம ஏழை என்கிற பாகுபாடுகளும் சாதி பேதங்களும் வெடிப்புகளாக விழுவதற்கு விதைகளைத் தூவியவர்களின் விருப்பப்படி எழுந்தவைகள் தாமே இந்தத் தெய்வங்கள் என்கிற எண்ணமும், என் தந்தை அவற்றை வணங்காமல் ஒதுங்கியதற்குக் காரணமாக இருக்கலாமோ என்னவோ ?

ஆனால், நானும் என் தமக்கையும் தெய்வ பக்தி உள்ளவர்களாகவே வளர்ந்தோம்—வளர்க்கப்பட்டோம் என் அன்னையினால்.

அதோடு, எங்கள் குடும்பத்திற்கு ஒரு காலத்தில் குளிர் நிழலாக—புகலிடமாக—இருந்த கிறித்துவ உபதேசியாரின் அன்புத் தழுவலும் ஆண்டவனை நிந்திக்குமாறு என்னைத் தூண்டவில்லை. பெருந்தன்மை மிக்க அந்தக் கிழவர் தம்முடைய கிறித்துவச் சமயத்துக்கு என்னை இழுக்காவிட்டாலும், அவர் அடிக்கடி எடுத்துக் கூறிய கருத்துரைகளால் கவரப்பட்ட நான், இந்த உலகத்தை இயக்குகின்ற 'பேராற்றல்' ஏதோ ஒன்று இருக்கத்தான் இருக்குமோ என்று எண்ணியதும் உண்டு.

அந்தப் பேராற்றலுக்குத்தான் பெரியவர்கள் 'கடவுள்' என்னும் பெயர் சூட்டி இருப்பார்களோ என்று நான் கருதியதும் உண்டு.

அத்தகைய 'கடவுள்' ஏழைகளுக்கு இனிய தோழராக — பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பாக—நோயாளிகளுக்கு

மருத்துவராக — குருடர்களுக்கு வழித்துணையாக —எல்லாரிடமும் இரக்கமுள்ளவராக — நடுநிலையாளராக—இருப்பார் என்றும் நான் உறுதியாக நம்பியதும் உண்டு.

ஆனால் . . . .

ஒரு பாவமும் அறியாத—ஒரு தீங்கும் புரியாத—என் அருமை அக்காள் உருக்குலைந்து, உடல் சிதைந்து நிற்பதைக் கண்டபோது—

'' அய்யோ ! கடவுளே ! உனக்குக் கண்ணே இல்லையா ? கருணையே இல்லையா ? என் அப்பா கும்பிடாததற்கெல்லாம் சேர்த்து வைத்துக் காலையும் மாலையும் உன்னைக் கும்பிட்டோமே ! கொண்டாடினோமே! காணிக்கையெல்லாம் செலுத்தினோமே ! அதற்கெல்லாம் பலனே இல்லையா ? உனக்குப் பரிவே கிடையாதா ? என் அக்காளின் வாழ்க்கையே இருளாகி விட்டதே ! வருங்காலமே அழிந்துபோய் விட்டதே ! அதற்கு ஏன் இந்தக் கொடுமை ? ஏன் இந்தச் சித்திரவதை ? இது உனக்கே அடுக்குமா ?—என்றெல்லாம் அந்த ஆண்டவன் மீது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வந்தது.

இனி நான் ஆத்திரப்பட்டு என்ன ? ஆங்காரம் கொண்டு என்ன ?

தெய்வங்களை நிந்தித்து என்ன ? சிறு குழந்தையாக இருந்தபோது என் அக்காளைத் தூக்கிக் களித்தாராமே அந்த அடுத்த வீட்டுத் தொழுநோய்க்காரரை நொந்துகொண்டுதான் என்ன ? பின்னர் கொல்லையிலே அதனைத் தீண்டிய புடையன் பாம்பு மீது பழிபோட்டுத்தான் என்ன ?

என் அக்காளிடம் முன்பு பூத்துச் சிரித்த பழைய அழகு வரப்போகிறதா ? பொலிவு வரப்போகிறதா ? உருவம் வரப்போகிறதா ? கண்ணிலே ஒளிதான் வரப்போகிறதா ?

எல்லாமே இடிந்து, நொறுங்கி, தேய்ந்து, அழிந்து விட்டன !

இந்த மனிதப் பிறவிதான் எதற்கு ? இதன்மீது இவ்வளவு கொடுமையான பிணிச்சுமைகள் தான் எதற்கு ?

இனி, ஆயிரம் ஆயிரமாக நாங்கள், அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் என் அக்காளை எவனாவது மணக்கத் துணிவானா ? மனம் வந்து ஏற்பானா? திரும்பித்தான் பார்ப்பானா ?

நன்றாகச் செழித்து வளர்ந்து கொண்டிருந்த செந்நெற் பயிரில், கதிர்விடப்போகும் வேளையில் 'சூறைநோய்' விழுந்தால் எப்படி இருக்கும் ?

என் அக்காளின் வாழ்க்கையும் அப்படித்தானே எரிந்து கரியாகிவிட்டது !

அந்தக் கோரமான வடிவத்தில் என் அக்காளைப் பார்க்கப் பார்க்க எனக்கே உயிரை விட்டுவிட வேண்டும்போல் இருந்தது.

பிறகு நெடுநாட்கள் எங்கள் ஊரிலே நான் தங்கியிருக்கவில்லை.

நகரத்திற்குத் திரும்பி என் அக்காளுக்கு ஏற்பட்டுவிட்ட நரக வேதனையைப்பற்றிக் கூறிய பொழுது, உபதேசியார்—தாத்தா ஆறாத் துயரத்தில் ஆழ்ந்தார். எனக்கு என்னென்னவோ ஆறுதல் மொழிகள் எல்லாம் கூறினார்.

'' நீயே உன் உள்ளத்தை உடைய விட்டுவிட்டால், பிறகு உன்னையே துணையாக நம்பியிருக்கும் உன் அன்னையின் கதியும் அக்காளின் கதியும் என்னதான் ஆவது ? '' என்று —எடுத்துக் காட்டித் தேறுதல் மொழிந்தார்.

'' கவலைப்படாதே, மாதவா ! இந்தக் கொடிய நோயைக் குணமாக்குவதற்கு நம்முடைய மருத்துவ விஞ்ஞானிகள் ஏதாவது கண்டுபிடிக்காமல் இருக்கமாட்டார்கள். சுவீடன் நாட்டிலே எனக்குத் தெரிந்த பாதிரியாருக்கு இதைப்பற்றி எழுதிக் கேட்போம். அவர் எப்படியாவது உதவி செய்வார். ''

—என்று நம்பிக்கையும் ஊட்டினார் உபதேசியார் தாத்தா.

அவர் அளித்த ஆறுதலும் நம்பிக்கையும் என் மனத்திலே சிறிது மாறுதலை உண்டு பண்ணின.

என் கல்லூரிப் படிப்பும் வழக்கம்போல் தொடர்ந்தது.

வழக்கம்போல் விடுமுறை நாட்களில் நான் எனது ஊருக்குப் போய் வந்தேன்.

என் அக்காளுக்குப் பூச்சூட்டியும் விட்டேன்.

ஆனால், முன்பெல்லாம் அதனுடைய சொறி பிடித்த கையைப் பார்த்துவிட்டுப் பூவைச் சூட்டி விட்டதற்கும், இப்போது பெருநோய் வந்து குறுகிப்போன அதன் விரல்களைப் பார்த்துக் கொண்டே பூவைச் சூட்டுவதற்கும் ஒரு பெருத்த வேறுபாட்டினை உணர்ந்தேன் என் மனநிலையில். அந்தத் துயரத்தின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் என் நெஞ்சம் விம்மிப் புடைத்து வீரிட்டு அழுதது உள்ளுக்குள்.

ஒரு சமயம் நான் என் அக்காளுக்குப் பூச்சூட்டி விடும் பொழுது, உடைந்த உள்ளத்துடன் என் அம்மாவே இப்படிச் சொன்னார்கள் :

'' ஏம்பா, மாதவா ! எதுக்கு இப்படிப் பூ மேலே எல்லாம் காசைக் கொண்டுபோய்ப் போட்டுத் தெண்டமாக்கணும் ? உன் அக்காள் இருக்கிற அழகிலே அவள் பூ இல்லையேன்னு தான் அழுகிறாளா ? ''

'' என்னம்மா நீங்களே இப்படிச் சொல்றீங்க ? ''

—என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டேன் நான்.

'' பின்னே என்னப்பா ? அவள் இனிமேலே பூவையோ பொட்டையோ வைத்துக்கொண்டு என்ன ஆகப்போகிறது ? எவனுக்குக் கழுத்தை நீட்டப் போகிறாள் ? அவளைப் பொறுத்த வரைக்குந்தான் எல்லாமே முடிஞ்சு போச்சே ! . . . . . .முடிஞ்சு போச்சே !

'' இன்னொருதரம் அக்கா முன்னாலே இப்படியெல்லாம் பேசாதீங்க, அம்மா ! என் அக்காளுக்குப் பூக்கள் மேலே எவ்வளவு ஆசை என்கிறது எனக்குத் தெரியாதா ? . . . . இந்த உலகத்திலே நீங்கள் சொல்றபடியே வேறே எதைத்தான் அது ஆண்டு அனுபவிக்கப் போகிறது ? எதுக்குத்தான் ஆசைப்படப் போகிறது ? . . . இருந்திருந்து கேவலம் இரண்டு முழப் பூ ! . . . அதைக்கூட அது சூடிக்கக்கூடாது என்று ஏனம்மா நீங்க தடுக்கிறீங்க ? ''

—இப்படிச் சொல்லும்பொழுது எனக்கே அழுகை பிரிட்டுக் கொண்டு வந்தது.

என்னைப் பார்த்து என் அக்காள், அம்மா இருவருமே விம்மி விம்மித் தேம்பினர்.

சில மணித்துளிகள் அந்தக் கண்ணீர் வெள்ளத்திலே கரைந்தன.

பிறகு, என் தொண்டையைக் கனைத்துக் கொண்டு என் அக்காளிடம் இப்படி ஆறுதலாகக் கூறினேன்:

"நீ அழாதே, அக்கா! மேனாட்டிலிருந்து மருந்துகளை வரவழைத்தோ வேறு எந்த வகையிலேயோ உன்னைக் குணமாக்கி விடலாம் என்று உபதேசியார் தாத்தா உறுதியாகச் சொல்லியிருக்கிறார். அப்படியே உனக்கு குணம் ஆனாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி; என் உயிர் உள்ளவரைக்கும் உன் ஆசைதீரப் பூக்களை வாங்கி உனக்குச் சூட்டிக் கொண்டுதான் இருப்பேன்; இது சத்தியம்!"

—என்னுடைய சூளுரையைக் கேட்டதும் என் அன்னையார் ஏளனமாக நகைத்தார்கள்.

"உன் சத்தியத்தைக் கேட்கும்போது எனக்குச் சிரிப்புத்தாம்பா வருகிறது! இப்போதே உன் அக்காளுக்கு நீ பூச்சூட்டுகிறதைப் பார்த்தால் அதை முறையானதாக ஊர்க்காரங்க ஒப்புக் கொள்ள மாட்டாங்க; அப்படி இருக்கிறபோது, உனக்கென்று ஒருத்தி வந்து விட்டால் அவள் எப்படி இன்னொரு பெண்ணுக்கு நீ பூச்சூட்டுவதை ஏற்றுக் கொள்வாள்—பொறுத்துக் கொள்வாள்? நானுந்தான் இனிமேலே எத்தனை காலத்துக்கு உயிரோடு இருந்து அவளுக்குப் பூச்சூட்டி விட முடியும்? அதனாலேதான், அந்த ஆசைகளையெல்லாம் இப்போதே உதறி எறிந்துவிடணும் என்று நான் சொல்ல வந்தேன்."

"இதோ பாருங்கள் அம்மா! என் அக்காளின் கைகள் இருக்கிற நிலையிலே அதுக்கு நான் பூச்சூட்டி விடுவதையே பொறுத்துக் கொள்ள முடியாத ஒருத்தியை நான் எதற்குத் தான் கட்டிக் கொள்ள வேண்டும்? என் இரத்தத்தின் இரத்தமான என் உடன் பிறந்த அக்காளை விட எங்கிருந்தோ வரப்போகிறவள்தான் எனக்கு உயர்ந்தவள் ஆகிவிடுவாளா? இன்னும் தெளிவாக—உறுதியாகச் சொல்கிறேன்: பெருநோய்க்கு இரையாகிவிட்ட என் அக்காளுக்குப் பூச்சூட்டிய இந்தக் கையாலே இனி இன்னொரு பெண்ணுக்கு நான் பூச்சூட்டவே மாட்டேன்; அதற்குச் சம்மதிக்காத ஒருத்தி—சகிப்புணர்ச்சி இல்லாத ஒருத்தி—எனக்குத் தேவையே இல்லை!"—என்று அழுத்தமாகவே ஆணையிட்டேன்.

(தேன்மொழி! உன் கூந்தலுக்கு அன்று நான் பூச்சூட்ட மறுத்ததற்கான காரணம் இப்தாவது உனக்குத் தெளிவாக விளங்குகிறதா?)

* * *

அடுத்தாற்போல் ஒரு விடுமுறையில் நான் ஊருக்குப் போயிருந்தபோது—

ஒருநாள் மாலை ஐந்துமணி இருக்கும்.

தெருவை ஒட்டிய எங்கள் அறையில் அமர்ந்து உருசிய நாட்டின் இலக்கிய மேதை டால்ஸ்டாய் அவர்கள் தீட்டிய 'புத்துயிர்' என்னும் புதினத்தை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தேன்!

'பூவோ, பூ! பூவோ, பூ!' —என்று உரக்கக் குரல் கொடுத்துக் கொண்டு சென்றாள் சிறுமி ஒருத்தி.

அவளைக் கூப்பிட்டு இரண்டு முழம் மல்லிகைச் சரம் வாங்கினேன்.

என் அக்காளை அழைத்து அதன் தலைமுடியிலே பூச்சரத்தைச் செருகியபோது

யாரோ இருமியவாறே எச்சில் உமிழ்கின்ற ஒலி கேட்டது.

அறைச்சன்னல் வழியாகத் தெருப்பக்கம் என் பார்வையைத் திருப்பினேன்.

அங்கோ இரண்டு மூன்று ஆட்கள் நின்று கொண்டு எங்களையே கூர்ந்து கவனிப்பது போல் தெரிந்தது.

சிறிது நேரத்தில் அந்த ஆட்கள் எங்கள் வீட்டினுள் வந்து விட்டனர். அவர்களைக் கண்டதும் என்னுடைய அம்மா மிகுந்த மரியாதை அளித்து வரவேற்றார்கள்; கூடத்திலே பாயை எடுத்து விரித்து அமரச் சொன்னார்கள்; தாம்பூலத் தட்டைக் கொண்டுபோய் வைத்துப் போட்டுக் கொள்ளச் சொன்னார்கள்; அறையினுள்ளிருந்த என்னையும் அழைத்து அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

வந்திருந்தவர்களுள் சற்று வயது முதிர்ந்தவராகக் காணப்பட்ட ஒருவர்,

"என்ன காவேரியம்மா! எங்களுக்கெல்லாம் அழைப்புக் கொடுக்காமலே காரியத்தை முடிச்சிட்டீங்களே!"—என்று வெற்றிலையை எடுத்துச் சுண்ணாம்பைத் தடவிய வண்ணம் கேட்டார்.

"நீங்க என்ன சொல்றீங்க?" புரியாமலே வினவினார் என் அம்மா.

"அதுதாம்மா, உங்க பையனுக்கு எங்க கிராமத்திலே பெண் பார்க்கச் சொல்லிவிட்டு, இப்போ வேறெங்கோ முடிச்சிட்டதா தெரியுதே!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க; உங்க மாதிரி அடுத்தடுத்த கிராமத்திலே இருக்கிற உறவுக்காரங்க எல்லாரையும் ஒதுக்கித் தள்ளிட்டு என் ஒரே பையனுக்கு அப்படியெல்லாம் செய்திடுவேனா?"

"ஏம்மா பொய் சொல்றீங்க? பெண்ணும் பிள்ளையும் அந்த அறைக்குள்ளே ஒண்ணா நின்னுகிட்டு இருந்ததை நாங்க நாலுபேரும் எங்க கண்ணாலே பார்த்துவிட்டுத்தான் வர்றோம். இவங்களையும் வேற யாரோன்னு நினைச்சிடாதீங்க. கொஞ்சநாளைக்கு முந்தி உங்க பையனுக்குப் பெண் பார்க்கச் சொன்னீங்களே, அந்த வார்த்தையை நம்பி எங்க கிராமத்திலே நான் பார்த்து வச்சிருக்கிற ஒரு பெண்ணோடை தாய் மாமன்தான் இவர்; இவர் சிற்றப்பா; அவர் பெண்ணோடை பெரியப்பா மகன். மாப்பிள்ளைப் பையனோடை வீடு—வாசல்—மாடு—மனையெல்லாம் எப்படி இருக்குங்கிறதை அவங்களும் நேரில் பார்த்துத் தெரிஞ்சுக்கட்டுமேன்னு சாதாரணமாகத்தான் அழைச்சுக்கிட்டு வந்தேன். அவங்களும் உங்க பையன் இருந்த நிலையைப் பார்த்திட்டு அசந்து போயிட்டாங்க! நீங்க என்னடான்னா இன்னும் என்கிட்டே கதை விடுறீங்களே!" —என்று ஏகத்தாளமாய்ச் சிரித்தார் அந்தப் பெரியவர்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்டு—சிரிப்பைப் பார்த்து— என் இரத்தமெல்லாம் கொதித்தது.

என் அம்மாவோ,

"நான் அப்போதே சொன்னேனே கேட்டியா?" —என்று பற்களை 'நறநற' வென்று கடித்துக் கொண்டு பார்வையால் அனலை வீசினார் என்மீது.

என் அக்காளுக்குப் பூச்சூட்டியதைப் பார்த்துவிட்டுத்தான், அந்தப் பெரிய மனிதர்கள் முடிச்சுப் போட்டுப் பேசுகிறார்கள் என்பதை நானும் புரிந்து கொண்டேன். அதற்கு மேல் நிலைமையைத் தெளிவாக்காமல் நான் இருக்கலாமா? என் அக்காளை அவர்கள் முன்னால் வரச் சொன்னேன்.

"அய்யா, பெரியவரே, அறைக்குள்ளே என்னோடு இருந்தது இந்தப் பெண்தான்; என் உடன்பிறந்த அக்கா! இதனுடைய கைகள் இருக்கிற நிலையிலே நான் இதுக்குப் பூச்சூட்டியதிலே என்ன தப்பு?" —சற்றுச் சூடாகவே கேட்டேன் நான்.

"ஏன் உங்க அம்மாவை விட்டுப் பூ வைக்கச் சொல்றது?"—என்றார் வந்திருந்தவர்களுள் இளவட்டமான ஆள்.

"ஏன், அண்ணன்—தம்பிகள் தங்கள் அக்கா—தங்கைகளுக்குப் பூச்சூட்டக் கூடாதுன்னு எங்காவது சட்டம் இருக்கிறதா?"

"நீங்க படிச்ச பையனா இருக்கிறதாலே சட்டத்தைப்

பத்தியெல்லாம் பேசுறீங்க! ஆனா, நம்ம சமுதாயத்திலே—கிராமங்களிலே— நமக்குன்னு சில பழக்க வழக்கங்களைத் தொன்று தொட்டு கடைப்பிடிச்சு வருகிறோம். அதுகளையெல்லாம் ஒரே நாளிலே மாத்திப் போட்டு விட முடியுமா? உங்க அப்பாகூட என்னென்னமோ புரட்சியெல்லாம்தான் உங்க ஊரிலே பண்ணிப் பார்த்தார்; கடைசியிலே அதுவே அவர் உயிருக்கு உலை வைக்கலையா? 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'—அப்படீன்னு திருவள்ளுவரே சொல்லியிருக்கலையா? ......"

—அந்தப் பெரியவர் இவ்வாறு எனக்குத் தேவையில்லாத அறிவுரையைப் பகரும்பொழுதே எனக்காக அவர் பார்த்திருந்த பெண்ணின் மாமன் என்று சொல்லப்பட்ட மனிதர் எரிச்சல் கொண்டவராக எழுந்து விட்டார்.

"எதுக்கண்ணே இந்த வளவளப் பேச்செல்லாம்? இப்படி ஒரு பெருநோய் பிடித்த பெண் இருக்கிற வீட்டிலே எவனாவது அறிவுள்ளவன் பெண்ணைக் கொடுக்க ஆசைப்படுவானா? வாங்க, போகலாம்." —என்று அவர் கத்தரித்துப் பேசிய சொற்களைக் கேட்டு நான் இடிந்தே போனேன்.

* * *

அடுத்த நாள் காலையிலே என் அக்காளைக் காணோம்.

தான் இருக்கிற வரையில் எனக்கு யாரும் பெண்தர மாட்டார்கள் என்கிற எண்ணத்தில்தான் அது ஓடிப்போயிருக்க வேண்டும்.

அதற்குப் பிறகு ....

என் வாழ்க்கையில் எத்தனையோ பாதைகள்—பயணங்கள் —சூழல்கள்— சூறுவளிகள்!

சிலர் சொன்னார்கள்;

'சென்னையில் உள்ள புகைவண்டி நிலையங்களில்தான் தொழுநோயாளிகள் பெரும் எண்ணிக்கையில் உறைந்து போயிருக்கிறார்கள்'—என்று.

அதனால்தான் சென்னையிலே என் அக்காவைத் தேடிக் கண்டுபிடித்து விடலாம் என்று வந்தேன். ஆனால் சென்னையோடு மட்டும் நான் நின்றுவிடவில்லை. தமிழ் நாட்டின் தலையாய நகரங்கள்—சிறப்பான ஆலயங்கள்—எங்கும்போய்த் தேடி அலைந்தேன். கால்கள் இற்றுவிழ—இடுப்பே ஒடிவதுபோல—நான் ஏறி இறங்கியதுதான் மிச்சம். என் அக்காளைக் காணவே முடியவில்லை.

ஊருக்குச் செல்லவோ அங்கே என் அக்கா இல்லாமல் வெறித்துக் கிடக்கும் எங்கள் வீட்டைப் பார்க்கவோ எனக்கு மனமே வரவில்லை.

கடைசியில், எப்படியோ சென்னையிலேயே வந்து தங்கி விட்டேன்; வயிற்றுப்பாட்டுக்காக ஒரு நண்பரின் உதவியால் 'பேரின்பமுத்து நிறுவன'த்திலே வேலையிலும் அமர்ந்து விட்டேன்.

எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

என் அக்காளை என்னால் மறக்கவே முடியவில்லை; எப்படி முடியும்?

அதனால்தான் இன்று கண்ணம்பாடி அணைக்கட்டிலே என் அக்காளைப் போலவே தோற்றம் அளித்த அந்தக் கன்னடக் காரியைக் கண்டதும் நான் என் நிதானத்தையே இழந்து ஒரு பைத்தியமாகவே ஆகிவிட்டேன். . . . . . .

என் அருமை வள்ளியக்காள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறதோ? இல்லை இறந்துதான் போய்விட்டதோ? ஆனால் நான் சாவதற்குள்ளே அதைச் சந்தித்துவிட மாட்டோமா என்று என் நெஞ்சம் எப்படித் துடிதுடிக்கிறது தெரியுமா? ...

* *

மாதவனின் நாட்குறிப்பு தேன்மொழியைக் கண் கலங்கச் செய்துவிட்டது. இனம் விளங்காத உணர்வுகள் எல்லாம் ஒன்று கூடி அவளது இதயமலரை அப்படியே பாறுங்கல்லாய் அழுத்தின.

(வளரும்)



வழிகாட்டும் வடஆர்க்காடு!

தண்டராம் பட்டு கடை வீதி. 26–9–71 அன்று காலை வேளை .. அலங்கரிக்கப்பட்ட கார் ஒன்று.. அதோ வண்ணப் பூக்களாலும், பன்னிறத் தோரணங்களாலும் புனையப்பெற்று வந்து கொண்டிருக்கிறது. ஒலி பெருக்கியும் அதனுள் பொருத்தப்பட்டுள்ளது.

சீமான் வீட்டு மணமக்கள் ஊர்வலமா? அல்லது தேர்தல் பிரச்சாரமா? இல்லை அதன் வெற்றிப் பெருமிதமா?

''என்ன அது?'' முதியவர் ஒருவர் ஒன்றும் புரியாமல் விழிக்கிறார். அருகிலிருந்த இளைஞர் ஒருவர் அவரது ஐயத்தை அகற்றுகிறார்.

''தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு இராதாகிருஷ்ணன் அவர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், மற்றும்எட்டுப் பேர்களும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல. வேலூர் பெண்ட்லண்டு மருத்துவமனைசென்று அவர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளவும் புறப்பட்டு விட்டார்கள்'' என்கிறார்.

''இதெல்லாம் எனக்கு அப்போதே தெரியாமல் போய் விட்டதே!'' என்று பெருமூச்சு விடுகிறார் பெரியவர். ஆமாம். இவரைப் போல் பலருக்கும் தெரியாமல் போய்விட்டதால் தான் இன்று இந்திய மக்கள் தொகை 56 கோடி அளவில் ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடிக் கிளைத்திருக்கிறது. இல்லையென்றால், பாரதி சொன்னதுபோல் அதே 'முப்பது கோடி'யே நீரில் போட்ட கல்லைப்போல் நிலைத்திருக்கும். இன்று பெருகி விட்ட பலகோடி மக்கள் தொகையை எண்ணியெண்ணி, இன்னும் மேன்மேலும் பெருகாதிருக்க, அரசு இன்று பலகோடி ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கும் நிலையும் ஏற்பட்டிராது என்று நினைத்துக் கொண்டேன்.

"இப்படிக்குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வதற்கா விளம்பரம்?'' என்று கேட்கிறார் பெரியவர்.

''விளம்பரப் படுத்தியதால் தானே உங்களுக்குப் புரிந்திருக்கிறது. அதுபோலவே மற்றவர்க்கும் புரியக் கூடும். அறுவைச் சிகிச்சை செய்து அதன் மூலம் குழந்தைகள் பிறப்பைத் தடுப்பது மட்டும் அரசின் நோக்கமல்ல. அதனால் குடும்பத்தினர் அனைவரும் நலமும், வளமும் அடைய வைப்பதே பெரு நோக்கம் ஆகும். முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்வதுபோல் இது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் அல்ல. குடும்ப நலத்திட்டம்.'' குடும்ப நலத் திட்டம்'' என்று நாசூக்காகப் பதிலளிக்கிறார் இளைஞர்.

''ஆகா'' என்று வியந்தபடியே போகிறார் முதியவர். மக்கள் நல்வாழ்வு பெற வேண்டுமெனில், அவர்களிடத்தே குடும்ப நலத் திட்டம் முதலில் வேரூன்ற வேண்டும் என்பதை உணர்ந்துள்ளது இன்றைய அரசு. அந்த எண்ணத்தை உறுதிப்படுத்த, வலுப்படுத்த, ஒவ்வொரு மாவட்டமும் இரண்டிரண்டு மாதங்களை எடுத்துக் கொண்டு விழாவாக எடுத்துச் சிறப்பித்து வருகிறது. அதன் அடிப்படையில் அமைந்ததே குடும்ப நலத் திட்டத் தீவிர இயக்கம் ஆகும்.

12,148·2 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டு, 37,38,273 மக்கள் வாழும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் கடந்த 1–8–1971 முதல் 31–10–1971 வரை குடும்ப



நலத் திட்டத் தீவிர இயக்கம் நடைபெற்றது.

7,51,689 தகுதி வாய்ந்த தம்பதிகள் வாழும் இம்மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத் தீவிர இயக்கம் தொடங்கு முன்னர் (1961 முதல் 1–8–1971 வரை) நடைபெற்றுள்ள அறுவைச் சிகிச்சைகள் 1,08,379 ஆகும். ஆனால், தீவிர இயக்கம் ஆரம்பித்த பிறகு இரண்டு மாத காலத்தில் நடந்துள்ள அறுவைச் சிகிச்சைகள் மட்டும் 14,382 ஆகும்.

'பசுமைப் புரட்சி' என்று ஒரு புறத்தில் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றோம். ஆனால், இதன் முழுப்பயனை அடைய, மக்கள் உற்பத்தியைக் குறைத்தால்தானே முடியும். நாள் தோறும் வீட்டுக்கும், நாட்டுக்கும் புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்குவது மக்கள் தொகைப் பெருக்கமே என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

ஆகவே, இந்தத் தீவிர இயக்க காலத்தில் மட்டும் பெண்களுக்கான அறுவைச் சிகிச்சைகள் சுமார் 2,000-க்கும் மேலாகும். இப்படி ஏராளமான பெண்டிர்க்கு அறுவைச் சிகிச்சை செய்ததிலும், ஆடவர்க்கும் சேர்த்து மொத்தம் 15,000 அறுவைச் சிகிச்சைகள் செய்து தமிழ் நாட்டிலுள்ள மாவட்டங்களுள் வட ஆர்க்காடே முதன்மை வகிக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும், குடும்ப நலத் திட்ட மாவட்ட விளம்பர அதிகாரியும் பெருமையோடு கூறுகின்றார்கள்.

இத்துணைச் சிறப்போடு இந்த இயக்கம் வெற்றி பெறுவதற்கு, அம்மாவட்டத்தில் நடத்தப்பட்ட விளம்பர—பிரச்சாரப் பணி முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

தீ பரவுகிறது. தடுத்து விடுகின்றோம். தொற்று நோய் பரவுகிறது. தடுத்து விடுகின்றோம். ஆனால், இவை எங்கோ எப்போதோ ஒரு முறை. இந்தத் தீயைவிடத் தொற்று நோயைவிட நிமிடந்தோறும் மிக வேகமாகப் பரவி வருவது மக்கள் தொகைப் பெருக்கமே.

இது ஓர் அபாய அறிகுறி ....!

இது ஓர் எச்சரிக்கை ......!

குழப்பம் விளைவிப்பது ....!

அந்நிய ஆக்கிரமிப்பைக் காட்டிலும் அபாயம் மிகுந்தது ......என்பதை நாமுணர வேண்டும். இதைத் தெள்ளத் தெளிய விளங்க வைக்கும் சிறந்த பிரச்சாரப் பணியைக் குடும்ப நலத்துறை மேற்கொண்டுள்ளது.

இந்நாளில் திரைப்படம் மிகச் சிறந்த பிரச்சார சாதனம் என்பது மறுக்க முடியாத உண்மை. 1–8–1971 முதல் 15–8–1971 வரை நடைபெற்ற விளம்பரப் பிரச்சாரப் பணியில், வேலூர் மக்கள் தொடர்பு அலுவலர், அவ்வலுவலகத்தைச் சார்ந்த செய்தி உதவியாளர், விளம்பர உதவியாளர், வேலூர், சென்னை, செங்கை மாவட்டங்களின் குடும்ப நலத் திட்ட விளம்பர அதிகாரிகள், மைய அரசின் சென்னை, சேலம் களப்பணி அலுவலர்கள் ஆகிய இந்த எண்மரும், பேரூர், சிற்றூர் தோறும் இரவு பகல் இரு வேளையும் குடும்ப நலத் திட்டத்தின் குறிக்கோளையும் சீரிய பணியினையும் மக்களிடத்தில் விளக்கி உரைத்தனர்.

> வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடும்பநலத் திட்டத் தீவிர இயக்கம் கடந்த அக்டோபர் திங்கள் நடைபெற்றது. அப்போது நேரில் பார்வையிட்டுக் கண்டறிந்த விளக்கம் இங்கே சுருக்கித் தரப்படுகிறது.

இவர்களுக்கு உறுதுணையாக வேலூர் மக்கள் தொடர்பு அலுவலகத்தைச் சார்ந்த திரைப் படப் பிரிவுகள் நான்கும், வேலூர் சென்னை, செங்கை மாவட்டங்களின் குடும்ப நலத் திட்ட அலுவலகத்தைச் சார்ந்த திரைப்படப் பிரிவுகள் மூன்றும் மைய அரசின் சென்னை, சேலம் களப்பணி அலுவலர்களைச் சார்ந்த திரைப்படப் பிரிவுகள் இரண்டும், கோட்டாட்சித் தலைவர்களின் பொறுப்பிலுள்ள திரைப்படப் பிரிவுகள் இரண்டும் ஆக 11 திரைப்படப் பிரிவுகள் பதினைந்து நாட்களில் ஒரு நாளைக்கு இரண்டு காட்சிகள் வீதம் 330 படக் காட்சிகள் நடத்தின. பிரச்சாரக் காலத்திற்குப் பிறகும் 50 படக்காட்சிகள் நடத்திக் காட்டி 380 படக் காட்சிகளுக்கு வழி வகுத்தன.

1. உலகுக்குத் திருக்குறள், உரிமைக்கு இரு குரல்.
2. குறளின் சிறப்புக்கு [இரண்டு அடிகள். குடும்பச் சிறப்புக்கு இரு [குழந்தைகள்.

3. நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால், அதை விடுத்து வீட்டிலே உற்பத்தி பெருக்குகின்றார்.

4. ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்

என்றெழுதப்பட்ட 654 சிலைடுகள் மாவட்டம் முழுவதும் உள்ள திரைப்பட அரங்குகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

இப்படிப் பணையளவாகச் செய்யப்படும் விளம்பரத்தால் தினையளவு நன்மையல்ல; அதை விடப் பெருமளவில் நன்மைகள் கிட்டி வருகின்றன என்கிறார் குடும்ப நலத் திட்ட மாவட்ட விளம்பர அலுவலர்.

" பிறப்பைத் தடுப்பது " என்பது தங்களது இனத்துக்கு, மதத்துக்கு மாறுபட்ட கருத்துடையது என்று இதுகாறும் கருதி வந்த கிறித்தவரும், முஸ்லீம்களும், 200-க்கும் மேற்பட்டோர் இந்தத் தீவிர இயக்க காலத்தில் தாமே முன்வந்து அறுவைச் சிகிச்சை செய்துள்ளனர் என்று பூரிப்புடன் கூறுகின்றார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

"மாநிலத் திட்டக் குழு அமைத்திருக்கிறோம். இது இன்னும் விரிவாக மக்கள் அளவிலிருந்து மாவட்ட அளவிலிருந்து வர வேண்டும் என்று விரும்புகின்றோம். அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்கின்றோம்" என்று கூறும் நம் முதல்வரின் எண்ணம் ஈடேறக் குடும்ப நலத் திட்டம் முன்னோடியாக இருந்து செயல்பட வேண்டும்.

ஆகவே, குடும்ப நலத் திட்டத் தீவிர இயக்க காலத்தில், நாடகம், வில்லுப்பாட்டு, தெருக் கூத்து என 175 கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அவ்வப்போது நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் மேதகு ஆளுநர் அவர்களும், நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்களும், உணவமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்துக் குடும்ப நலக் கொள்கைகளை விரிவாக எடுத்து விளக்கினர். இந்நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்புகள் பல தமிழ் ஏடுகளில் 66 நாட்கள் வெளியிடப்பட்டன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள, 36 ஊராட்சி ஒன்றியங்களும், 11 நகராட்சி மன்றங்களும், 13 வட்டங்களும் 38 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 16 அரசினர் மருத்துவ மனைகளும், 3 தனியார் மருத்துவ மனைகளும் தீவிர இயக்கத்தில் பங்கு கொண்டன. ஒவ்வொன்றும் தத்தம் திறமையைக் காட்டின என்றாலும், தங்களுக்குத் தரப்பட்ட குறியீட்டையும் தாண்டி, நெமிலி ஊராட்சி ஒன்றியமும், அரக்கோணம் நகராட்சி மன்றமும், சத்தியவிஜயநகரம் ஆரம்பச் சுகாதார நிலையமும், திருவண்ணாமலைக் கோட்டமும் அதிகமான அறுவைச் சிகிச்சைகளைச் செய்து சாதனைகள் புரிந்து காட்டியுள்ளன.

சட்டத்தின் துணையோடு ஏழை எளிய மக்களுக்கு நிலப் பட்டா, வீட்டு மனைப் பட்டா வழங்குதல்; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள்; தொழில் துறையில் புதிய, புதிய முயற்சிகள்; மாணவர்களுக்குப் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி; எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால், திட்டங்கள்; பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டங்கள் என்று எண்ணற்ற அரசின் ஆக்கப்பணிகள் அனைத்தும் வலிவும் பொலிவும் பெற்று விளங்கக் குடும்ப நலத் திட்டம் முதலில் சிறப்புற வேண்டும். அது தன் இலட்சியத்தில் வெற்றி பெற வேண்டும். இதை மனத்தில் கொண்டு வட ஆர்க்காடு மாவட்டம் கடந்த ஒரு மாத காலத்தில் 15,000 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து பிற மாவட்டங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

" அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம் ". இந்த அளவான என்பதன் அளவுதான் என்ன ?

கிறித்தவருக்குக் கூறப்பட்ட பத்துக் கட்டளைகள் போல், முஸ்லீம்களுக்குச் சொல்லப்பட்ட ஐந்து கட்டளைகள் போல், அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மக்களுக்குத் தந்த மூன்று கட்டளைகள் போல், குடும்ப நலத் திட்டத்திற்காக நம் முதல்வர் கலைஞர் அவர்கள் தந்த ஒரே ஒரு கட்டளை தான்.

" நாம் இருவர்—
நாம் பெறுவதும் இருவர்"

—இளங்கோ

பிழைபட எழுதேல்!

அக்கறை

அக்கறை என்னும் சொல்லைப் பயன்படுத்துவதில் பலர் அக்கறை காட்டுவதில்லை—அக்கரை என்றே பலரும் எழுதி வருகின்றனர். அக்கரை என்பது அந்தக் கரை என்றே பொருள்படும். அது, ஈடுபாடு கவனம் என்னும் பொருளில் வராது. எனவே, ஈடுபாடு கவனம் என்னும் பொருள்பட வேண்டுமானால் அக்கறை என்றே எழுத வேண்டும்—அக்கறையும் அக்கரையும் ஒன்றன்று.

பசுப்பால்

பசுவின் பால் என்பதனைப் பசும்பால் என்றே பலர் எழுதுகின்றனர். பசும்பால் என்றால், பசுமை+பால்= பசுமையான பால் என்றுதான் பொருள்படும். பசுவின் பால் என்பதை யுணர்த்தப் பசு+பால் பசுப்பால் என்றுதான் எழுதவேண்டும். பசுப்பால்தான் பசுவின் பால்.

"அகிலமெங்கும் வாழும் மனித இனத்தில் ஆறில் ஒரு பங்கைக் கொண்டுள்ள இந்தியாவில், பெருகிவரும் மக்களினத்திற்குத் தேவையான உணவை எதிர் காலத்தில் வழங்க முடியுமா ?"

இப்படியொரு ஐயம் பலநாட்டைச் சேர்ந்த அரசியல் வாதிகள், அறிஞர்கள், அறிவியல் வித்தகர்கள். பொருளாதார வல்லுநர்கள் ஆகியோர் உள்ளத்தில்

சாமிநாதன் சேவை சமுதாயத்திற்குத் தேவை!

நீண்ட நாட்களாக நிலவி வந்தது. இந்த ஐயம் நாளுக்கு நாள் வளர்ந்து, இந்தியாவின் எதிர்காலம் மிகவும் பயங்கரமாக இருக்கும் என்று அவர்களை எண்ண வைத்தது. அவர்கள் அந்த எண்ணத்தை எழுத்தின் மூலமும், பேச்சின் மூலமும் வெளிப்படுத்தி வந்தனர்.

அவர்கள் கூறிய அபாய அறிவிப்பைக் கேட்டு இந்திய அரசுக்கு உள்ளூரப் பயமேற்பட்டதால், உணவு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளில் தீவிரக் கவனம் செலுத்த முன் வந்தது.

"இந்தியாவிலேயே, இந்தியாவிற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியாதா ?" என்னும் கேள்வி ஓர் இளம் இந்திய வேளாண்மை விஞ்ஞானியின் உள்ளத்தில் எழுந்தது.

"முயற்சி திருவினை ஆக்கும்" என்ற அவரது தாய்த்திருநாடாம் தமிழ் நாட்டின் முதுமொழி நினைவுக்கு வந்தது. முயற்சியில் ஈடுபட்டார். பிறநாட்டில் வளர்ந்துள்ள அறிவியலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியில் நாட்டம் செலுத்தினார். ஆராய்ச்சி தொடங்கிய சில நாட்களிலேயே, அவருக்குத் தன் முயற்சி வெற்றி பெறும் என்னும் நம்பிக்கை ஏற்பட்டது.

"இந்தியாவில் பெருகிவரும் மக்களினத்திற்குத் தேவையான உணவை—அதுவும் குறிப்பாக ஊட்டச் சத்து மிகுந்த உணவை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய முடியும்" என அறிவித்தார். அவரது உலகுக்கு அறிவிப்பைக் கேட்டுப் பலர் 'பைத்தியக்

பகல் முழுதும்
கடினமான வேலைக்குப் பிறகு...

புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே ஒரு கப்
அருந்துங்கள்
—5 செகண்டில் தயார்!

நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

முற்றிலும் சுத்தமான காப்பி—
தென்னிந்திய காப்பி
விதைகளிலிருந்து
தயாரிக்கப்பட்டது

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

காரத்தனம்'' எனக் கேலி பேசினர்; பலர், ''வீண் முயற்சி'' என்று விதண்டா வாதம் பேசினர். இவ்வாறு பேசியவர்களில் பெரும்பாலோர் நமது நாட்டவர் என்பதே வேதனைக்குரியது. இந்திய அரசும் இவரது கூற்றை நம்பத்தயங்கியது. ஆனாலும் ஊக்கம் இழந்துவிடவில்லை.

''ஊக்கமது கைவிடேல்'' என்ற பழமொழிக்கிணங்க, உள்ளம் உடையாது உறுதியோடு ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அவரது ஊக்கத்தைத் தூண்டுவதாக, அவருடன் ஆராய்ச்சியி. ஈடுபட்டிருந்த ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்பு இருந்தது. காலச் சக்கரம் சுழன்று ஓடியது. கடைசியில் ''முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்'' என்பதற்கேற்ப வெற்றியும் பெற்றார்.

குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் அளிக்கும் ஊட்டச் சத்து மிகுந்த குட்டை ரகக் கோதுமையைக் கண்டுபிடித்தார். அதன் பின்புதான் அவருடைய திறமையை இங்குள்ளவர்கள் உணர முற்பட்டனர்.

அப்பொழுது இந்திய அரசின் வேளாண்மை அமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்த இளம் வேளாண்மை விஞ்ஞானியிடம் நம்பிக்கை ஏற்பட்டது; உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களைத் தீட்டச் சொன்னார்.

உயர் விளைச்சல் ரகத் திட்டம் (High yielding varieties programme) உருவாகியது.

உயர் விளைச்சல் ரகத் திட்டத்தினால் ஏற்படவிருக்கும் நன்மைகளை உணர்ந்து கொண்ட திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், ''உயர் விளைச்சல் ரகங்களை ஏற்றுக்கொண்டு சாகுபடி செய்ய உழவர் பெருமக்கள் முன் வருவார்களா ?'' என்றார்.

ஆராய்ச்சியில் கண்ட பலனை நாட்டின் ஏழை எளிய உழவர்களுக்கும் விளக்கி உயர் விளைச்சல் ரகங்களில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகத் தேசிய செயல் விளக்கம் (National Demonstration) அமைக்கும் திட்டத்தை அந்த விஞ்ஞானி உருவாக்கினார். அத்திட்டத்தின்படி ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி நிலையத்தை விட்டு வெளியே சென்று, உழவர்களின் வயலிலேயே செயல் விளக்கத்தளைகள் அமைத்து உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளின் நன்மையை விளக்கிக் காட்டினர். அதன் பயனாய் உழவர்கள் தெளிவு பெற்று உயர் விளைச்சல் ரகங்களைப் பெரும்பரப்பில் சாகுபடி செய்ய முற்பட்டனர். உயர் விளைச்சல் ரகச் சாகுபடியால் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி பெருகியது.

அந்த விஞ்ஞானி அடுத்து மானாவாரி சாகுபடி மேம்பாட்டுத் திட்டத்தையும் (Dry-and development scheme) உருவாக்கினார்.

பலபயிர் சாகுபடித் திட்டமும் (Multiple cropping scheme), சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டமும் (Small farmers development scheme) அந்த விஞ்ஞானியின் சிந்தையில் உருவாகியவையே!

அவருடைய அரும் முயற்சியால் டெல்லிக்கு அருகில் உள்ள ஒரு கிராமம், டெல்லி மாநிலத்திற்குத் தேவையான தரமான விதைகளை உற்பத்தி செய்து கொடுக்கும் கிராமமாக வளர்ச்சி பெற்றது.

பிலிப்பைன்சு நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் '' ரமோன் மாக்சேசே '' அவர்கள் நினைவாக சமுதாயத் தலைமைப் பொறுப்பேற்றுச் செயற்கரிய செய்துள்ளவர்களுக்கு அளிக்கப்படும் பரிசு (Award for community Leadership) அந்த இளம் விஞ்ஞானிக்குக் கொடுக்கப்பட்டது. ஆசியாவின் நோபெல் பரிசு (Asian Nobal Prize) என்று புகழப்படும் ''மாக்சேசே'' பரிசை அவர் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் மணிலா கில்டன் எனும் இடத்தில் நடைபெற்ற பரிசு அளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டார்.

ரூபாய் 75,000 பரிசுத் தொகையும், கேடயமும் அவருக்கு வழங்கப்பட்டது.

அந்த விஞ்ஞானியைப் பாராட்டுவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் முன்னின்று ஒரு பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தார். தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையின் சார்பாக, 15-11-1971 அன்று, சென்னை தீவுத் திடலின் எதிரே அமைந்துள்ள கூட்டுறவு ஒன்றியம் கட்டடத்தில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. அந்தப் பாராட்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

''யார் அந்த விஞ்ஞானி?'' எனக் கேட்கத் தோன்றுகிறதா?

டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராகப் பணியாற்றும் டாக்டர் சாமிநாதன் அவர்களே அந்த விஞ்ஞானி.

''வழக்கமாகவே நம்மவர்களின் திறமையை உணர்ந்துகொள்வதில் நாம் பின்தங்கியே உள்ளோம். பிற நாடுகள் நம்மவர்களின் திறமையைப் பாராட்டிப் புகழும்வரை, நம்மவர் திறமையை நாம் உணராமல் இருக்கின்றோம். இந்த நிலை மிகவும் வருத்தப்படக் கூடியதொன்றாகும். எடுத்துக்காட்டிற்குச் சொல்ல வேண்டுமானால் டாக்டர் எம். என். சாமிநாதன் அவர்கள் திறமையை நாம் உணராமல் இருந்துவிட்டோம். அவரது திறமையை நாம் பாராட்டத் தவறிவிட்டோம். அவர் ''மாக்சேசே'' பரிசு பெற்ற பின்புதான் நாம்

முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

தொழில்
* கட்டுமான கட்டமைப்புகள்
* தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
* எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
* மின் தடுப்புச் சாதனங்கள்
* விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
* இனமல், டிசிசி கம்பிகள்

விவசாயம்
* வேளாண்மைக் கருவிகள்
* பயிர் பாதுகாப்பு கருவிகள்
* டிராக்டர் தொடர்பு வண்டி
* மோட்டார் விசை யேற்றங்கள்
* கரும்பாலை
* வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்
* எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
* மருத்துவமனை சாமான்கள்
* கதவுகளுக்கான பூட்டு
* தாழ்ப்பாள்கள்
* சுகாதார வசதி பொருட்கள்
* பீங்கான் பொருட்கள்
* காலணிகள்
* தோலணிப் பொருட்கள்

ஏற்றுமதி
* பல வண்ண சாதாரண தோல்கள்
* நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
* கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

அவரைப் பாராட்ட முன்வநதுள்ளோம். ஒன்றுமே செய்யாதிருப்பதைவிட காலங்கடந்து செய்வது சிறந்தது (Late is better than never) என்ற பழமொழிக்கேற்பவே இப் பாராட்டு

விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்'' என்று வரவேற்புரை நிகழ்த்திய மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் மிகவும் உருக்கமாகக் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டில் போதிய மழை வளம் இல்லை; நிலத்தின் அடியில் உள்ள நீரை வெளியே கொண்டுவந்து பசுமைப் புரட்சியைத் தீவிரப்படுத்தத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. எனவே, கிடைக்கும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றியும் குறிப்பிட்ட பாசன முறைக்கு எந்தப் பயிர் மிகவும் ஏற்றது என்பதையும் ஆராய்ச்சி செய்து, அதை உழவர்களிடையே பரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று டாக்டர் சாமிநாதன் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனெனில் அவர் வேளாண்மையில் தலை சிறந்த ஒரு நிபுணராகும்'' என்று குறிப்பிட்டு விட்டு, ''தமிழ்நாடு அரசுச் சார்பாகவும், தமிழ்நாட்டின் மக்கள் சார்பாகவும் டாக்டர் சாமிநாதன் அவர்களுக்கு நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றேன்'' என்றார் மாண்பு மிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள்.

''டாக்டர் சாமிநாதன் சமுதாயத்திலே உயிரைப் பாதுகாக்கும் முறையில் இருந்து வேறுபட்டுப் பயிரைப் பாதுகாக்கும் முறைக்கு வந்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும். அவர் நம்மவர், நம் நாட்டைச் சேர்ந்தவர் என்பதைவிட, எங்கள் சோழமண்டலத் தைச் சேர்ந்தவர் என்பதைச் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். டாக் டர் சாமிநாதனுக்கு உலகப் பரிசு கிடைத் திருக்கிறது என்றால், இதில் அவரைவிட நமக் குத் தான் பெருமை அதிகம்''.

'தமிழன் என்றோர் இனம் உண்டு
தனியே அவர்க்கொரு குணம் உண்டு'

என்பார்கள். அதற்கேற்ற வகையில் தமிழ னுக்குத் தனித்திறன் உண்டு என்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

''அவரை உலகம் பாராட்டிய பின்தான் நாம் இன்று பாராட்டுகிறோம். முன்னாலேயே அவரை நாம் பாராட்டி இருக்கவேண்டும்.

''அடுத்த வீட்டுக்காரனின் அருஞ்செயலை அமெரிக்கர்கள் பாராட்டினாலும் பக்கத்து வீட்டுக்காரர்கள் பாராட்ட முன்வராத நாடு இது. பாராட்டாவிட்டாலும் பழியாவது கூறா மல் இருப்பார்களா என்றால் இல்லை. இது பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். நம் நாட்டில் பிறந்தவர்களைப் பாராட்டுவதில் கூட நம்மவர்களுக்கு பஞ்சைப் புத்தி தான் இருக்கிறது என்பார்.

''செயற்கரிய காரியம் செய்துள்ளவர்களைப் பாராட்டாவிட்டால் நாம் கடமை தவறியவர் களாவோம். எனவே, டாக்டர் சாமிநாதன் அவர்களை முதன் முதலில் நாம் பாராட்டத் தவறிவிட்டோம். நாம் பாராட்டிதயற்குப் பின்புதான் மற்றவர்கள் பாராட்டியிருக்க வேண்டும்'' என்று பாராட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங் லிங்கம் அவர்கள் கூறினார்.

அவர் தமிழ்நாடு வேளாண்மைத்துறையின் சார்பில் டாக்டர் சாமிநாதனுக்கு நெல்மாலை அணிவித்து வெள்ளிக் கேடயம் ஒன்றை பரி சாக வழங்கினார்.

''வெளிநாட்டில் உலகப் பரிசு பெற்றபோது கூட ஏற்படாத ஒரு மகிழ்ச்சியை, தாய்நாட் டில் பாராட்டுப் பெறுகிற இந்த நேரத்தில் அடைகிறேன்'' என்று டாக்டர் சாமிநாதன் குறிப்பிட்டார்.

டாக்டர் சாமிநாதன் அவர்கள் 7-8-1925 அன்று தையில் டாக்டர் சாம்ப சிவன்— கம்மாள் அவர்களது புதல்வராய்ப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைக் குடந்தை யிலேயே முடித்துக்கொண்ட இவர் 1944-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல் லூரியில் சேர்ந்தார். 1947-ல் பி.எஸ்சி. (வேளாண்மை) பட்டம் பெற்ற இவர் டெல்லி யில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்படிப்பிற்காகச் சேர்ந்தார்'

1948-ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளுக்கான போட்டித் தேர்வு எழுதித் தேர்வு பெற்றார். ஐ.பி.எஸ். பதவியில் அமர்ந்து பணியாற்றுமாறு அவருக்கு அரசு ஆணை கிடைத்தது. ஆனால், இவர் அந்தப் பதவியை விரும்பாமல், அதே சமயத்தில் கிடைத்த 'யுனெஸ்கோ' படிப்பு உதவித் தொகையைக் கொண்டு நெதர்லாண்டிலுள்ள வேகன்னிங்கன் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் படித்தார்.

அதன்பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத் தில் சேர்ந்து படித்து 1952-ல் பி.எச்டி. பட்டம் பெற்றார். பிறகு அமெரிக்காவில் உள்ள 'விஸ்கான்சின்' பல்கலைக் கழகத்தில் இனவழி ஆய்வியல் பிரிவில் பணியாற்றினார். 1954-ஆம் ஆண்டில் இந்தியா திரும்பி, கட் டாக்கில் உள்ள மைய நெல் ஆராய்ச்சி நிலை யத்தில் பணியாற்றினார். அதே ஆண்டில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உயிரணு ஆய்வியல் வல்லுநராகச் சேர்ந்தார். தனது அயராத உழைப்பினால் 1961-ஆம் ஆண் டில் தாவரவியல் தலைவராகப் பொறுப்பேற்ற அவர் 1966-ஆம் ஆண்டில் இந்திய வேளாண் மை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார்.

இவர் சிவப்பு நிறமாக உள்ள கோதுமை யை, அம்பர் நிறத்திற்கு மாற்றி, 10.5 சத புரதச் சத்தும், 3 சத லைசின் சத்தும் அடங் கிய சர்பதி சோனரா என்ற மிகு விளைச்சல் தரும் குட்டை ரகக் கோதுமையை உருவாக்கி யுள்ளார். ஆனால் இச்சாதனைக்குத் தான் மட் டும் காரணமல்ல, தனது உதவியாளர்களே காரணம் என்று பெருமையுடன் கூறிக்கொள் ளும் அவரிடம் எனது ஆசையைத் தெரிவித் தேன்.

''தாங்கள் இன்னும் பல புதுமைகளை ஏற்படுத்தி விரைவில் நோபல் பரிசும் பெற்று தமிழனின் திறமையை, இந்தியாவின் பெரு மையைத் தரணியெங்கும் பரப்ப வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தேன். அவர் அமைதியாக இருந்தார். ''இது என் ஒரு வனின் வேண்டுகோள் மட்டுமல்ல பல்லா யிரக் கணக்கானவர்களின் விருப்பமும் ஆகும் என்றேன். ''முயற்சிக்கின்றேன்'' என்றுகூறி முறுவலித்தார்.

உழவர் சமுதாயத்தின் உயர்வுக்கு வழி வகுத்த ஒரு நிபுணரைச் சந்தித்ததில் எனக்கு முழுத் திருப்தி!

இவ்வாண்டு சென்னையில் நடை பெற்ற சிறுவர் கலை விழாக்களில் குறிப்பிடத்தக்க சிறப்புடன் இருந்தது, சென்னை வானொலிச் சிறுவர் கலைவிழா.

நேரு அவர்களின் பிறந்த நாளாகிய நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் குழந்தைகள் நாளாகக் கொண்டாடும் மரபின்படி, நவம்பர் 14-ஆம் நாள் வானொலி யில் ஒலிபரப்ப, நவம்பர் 11-ஆம் நாள் சென்னை சங்கீத அகாடமி அரங்கில் ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கலை விழாவைச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மகராஜன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

குழந்தை வித்துவான்களின் நாதசுர இன்னிசையுடன் துவங் கிய இந்த ஆண்டின் விழாவில் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம், குஜராத்தி, வங்காளம் ஆகிய மொழிகளில் பாடல்கள், நாட்டியங்கள், நாடகம் முத லிய பலவகை நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இயற்றியுள்ள 'மனிதருள் மாணிக்கம்' என்ற பலகுரல் பாடல், என். வி. சந்தானம் எழுதியுள்ள 'நிதானம் பிரதானம்' என்ற நாடகம், தணிகை உலகநாதரின், 'ஒரு நாள் வேலை' என்ற அபிநயப் பாடல், வி. ஆர். ராஜனின் விகடக் கச்சேரி, சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப்பாட்டு, ராஸ்கர்பா நடனம், பெசன்ட் தியாசபிகல் பள்ளி மாணவ மாணவியர் நிகழ்த்தும் 'காலையில் கண்ணன்', பாம் பாட்டி நடனம், அம்புலி ஆராய்ச்சி பற்றிய கதாகாலசேபம், சிறுவர் கலைப்பூங்காவின், தாள வாத்தியக் கச்சேரி, கணேஷ் வானொலிச் சிறுவர் சங்கம் அளிக்கும் காவடி ஆறுபடைவீடு நடனம், பத்மா லயா குழுவினரின் சிங்கன்-சிங்கி நடனம், பஞ்சாப் நாட்டுப்புற சித்தா நடனம், கன்னட நாட்டு அறுவடை விழாப்பாடல் முதலியன இடம் பெற்றன.

அனைத்தும் சுவைக்கத்தக்க விதத்தில் இருந்ததைக் குறிப் பிடாமல் இருக்க முடியாது.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனைக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலியவற்றை சப்ளை செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள்.

1972 ஏப்ரல் 1ஆம்தேதிமுதல், அல்லது ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் அதிகாரியால் ஒவ்வொரு விஷயத்திலும் திட்டமாக நிர்ணயிக்கப்படும் தேதியிலிருந்து தொடங்கி 1973 மார்ச்சு 31-ஆம் தேதி முடிய உணவுப் பொருள்கள் மற்றும் இதர மருத்துவமனை அவசியப் பொருள்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனையின் கண்காணிப்பாளரால் மாநில ஆளுநரின் சார்பில் அவரது உத்தரவின்படி அவருக்காக 1972 ஜனவரி 3-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

1971 டிசம்பர் 3-ஆம் தேதி முதல் அலுவலக எல்லா வேலை நாட்களிலும் காலை 10–30 முதல் மாலை 5-00 மணிவரை ஒப்பந்த பாரமும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதியும் தேவைப்படும் பொருள்களின் அட்டவணையும் இராசா மிராசுதார் மருத்துவமனை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பாரத்திற்கான விலை ரூபாய் ஐந்தும் இதற்கான விற்பனைவரி சர்சார்ஜ் உட்பட 0·20 காசும் முறையே "XXIII Medical Miscellaneous" என்றும் "XII Sales Tax Receipt Under the State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்புக்களில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்க கருவூலம் எதிலுமோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்தியதற்கான சலான்களுடன் மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப் பாரங்களைப்பெற மனு செய்து, பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஒப்பந்ததாரர்கள் தங்கள் ஒப்பந்தங்களை கண்காணிப்பாளர் இராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்-1 (தமிழ்நாடு ஆளுநர்க்காக) என்று விலாசமிட்டு அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ரொக்கமாக பணம் ஏற்கப்படமாட்டாது.

குறிப்பு :—(1) 1971 அக்டோபர் 1-ஆம் தேதிக்குப் பிற்பட்டு. தாசில்தார் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட நிர்ணய பாரத்திலமைந்த சால்வன்சி சர்டிபிகேட்டோ அல்லது கெஜட் பதிவுபெற்ற அதிகாரி ஒருவரால் சரியான முறையில் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலோ ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்ந்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகப்படுமானல் வருமான வரி ஒப்பாய்வு சர்டிபிகேட்டை தாக்கல் செய்ய வேண்டும்.

(3) ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 1,000-க்கு மேலானல் விற்பனை வரி கணக்குத் தீர்ப்பு சர்டிபிகேட்டை ஒப்பந்தத்துடன் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரி ஒருவரிடமிருந்து அல்லது தாசில்தார் சார்பில் தலைமையக டெபுடி தாசில்தாரிடமிருந்து) 1971 அக்டோபர் 1-ந் தேதிக்குப் பிறகு பெறப்பட்ட ஒரு நேஷனலிட்டி சர்டிபிகேட்டை அல்லது கெஜட் பதிவு பெற்ற ஒரு அதிகாரியால் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலை ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்பவேண்டும்.

டாக்டர் **டி. பூபதி, எம்.டி.**

கண்காணிப்பாளர்,
இராசா மிராசுதார்
மருத்துவமனை தஞ்சாவூர்.

(தூ: 24)

ஜீப் பொது ஏல விற்பனை

தஞ்சாவூர் மாவட்டம், ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குரிய ஜீப் எம்.எஸ்.ஒய். 9821-ஐ 1971 டிசம்பர் 10-ந் தேதி அன்று தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி அலுவலரால் தஞ்சாவூர்மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் மாலை 3-00 மணிக்கு பொது ஏலத்தில் விற்கப்படும். ஷெ ஜீப்பைப் பார்வையிட விரும்புபவர்கள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பனகல் கட்டடத்தில் பார்வையிடலாம். ஏல சம்பந்தமான விதிகளைக் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டி. செல்லையா,

மாவட்ட அபிவிருத்தி
அலுவலர் 1.,
பனகல் கட்டடம்,
தஞ்சாவூர்.

(தூ.1)

உதகமண்டலம் நகராட்சி

1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 15-ஆம் தேதி புதன் கிழமை மாலை 3·30 மணிக்குள் டைகர்ஹில் அணைக்கட்டைப் பழுதுபார்ப்பதற்கும் மராமத்து செய்வதற்கும் உதகை கமிஷனர் அவர்களால் ஒப்பந்தங்கள் வாங்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகளும் ஒப்பந்தப் பத்திரங்களும் 13–12–1971 மாலை 4·00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 10·30 செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை முனிசிபல் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 10·30, 13–12–1971-ஆம் தேதிக்குள் முனிசிபல் கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும்.

ஆணையர்,

உதகமண்டலம் நகராட்சி.

(தூ:28)

ஒப்பந்தப் புள்ளி

மேட்டூர் மின் இயக்குத் திட்டம், மேட்டூர் அணை-1.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டுக் கீழே காணும் பொருட்களை வழங்குவதற் கான முடிமுத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் மேட்டூர் அணை-1-ல் உள்ள அவரது அலுவலகத்தில் முடிவு நாள் பிற்பகல் 1 மணிவரைபெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் பெயரும்.	அளவு.	சாமான்கள் விநியோகிக்க வேண்டிய இடம்.	முடிவுத் தேதி.
1. ஒ.டி.எஸ்./1/71-72 ஜி. ஐ. பைப்புகள் 20 மி.மீ.	10,000 மீட்டர்கள்.	மேட்டூர் அணை-1.	20-12-1971
2. ஒ.டி.எஸ்./2/71-72 ஜி. ஐ. பைப்புகள் 20 மி.மீ.	10,000 மீட்டர்கள்.	சேலம்.	டிை
3. ஒ.டி.எஸ்./3/71-72 ஜி. ஐ. பைப்புகள், 25 மி.மீ.	10,000 மீட்டர்கள்.	மேட்டூர் அணை.	டிை
4. ஒ.டி.எஸ்./4/71-72 ஜி. ஐ. பைப்புகள், 32 மி.மீ.	20,000 மீட்டர்கள்.	,,	டிை
5. ஒ.டி.எஸ்./5/71-72. ஜி. ஐ. பைப்புகள், 40 மி.மீ.	10,000 மீட்டர்கள்.	,,	டிை
6. ஒ.டி.எஸ்./6/71-72 எம். எஸ். பட்டைகள் 25 × 3 மி.மி.	25 மெட்ரிக் டன்கள்.	,,	டிை
7. ஒ.டி.எஸ்./7/71-72 எம். எஸ். பட்டைகள் 25 × 6 மி.மி.	25 மெட்ரிக் டன்கள்.	,,	டிை
8. ஒ.டி.எஸ்./8/71-72 எம். எஸ். பட்டைகள் 32 × 10 மி.மி.	25 மெட்ரிக் டன்கள்.	,,	டிை
9. ஒ.டி.எஸ்./9/71-72 எல். டி. பின் இன்சுலேட்டர் (ஷெல் மட்டும்).	5,000 டஜன்.	,,	டிை
10. ஒ.டி.எஸ்/10/71-72 எல். டி. பின் இஞ்சுலேட்டர் (ஷெல் மட்டும்).	5,000 டஜன்.	சேலம்.	டிை
11. ஒ.டி.எஸ்./11/71-72 ஜி. ஐ. எல்.டி. பின்ஸ் 250 × 16 மி.மி.	2,500 டஜன்.	மேட்டூர் அணை.	டிை
12. ஒ.டி.எஸ்./12/71-72 ஜி. ஐ.எல். டி. பின்ஸ் 250 × 16 மி.மி.	2,500 டஜன்.	சேலம்.	டிை
13. ஒ.டி.எஸ்./13/71-72 எல். டி. சேக்கில் இன்ஸ்லேட்டர் (ஷெல் மட்டும்).	5,000 டஜன்.	மேட்டூர் அணை.	டிை
14. ஒ.டி.எஸ்./14/71-72 எல். டி. சேக்கில் இன்ஸ்லேட்டர் (ஷெல் மட்டும்).	5,000 டஜன்.	சேலம்.	டிை
15. ஒ.டி.எஸ்./15/71-72 எல்.டி. செக்கில் இன்சுலேட்டருக்கு வேண்டிய ஹார்டுவேர்கள்.	2,500 டஜன்.	மேட்டூர்.	டிை
16. ஒ.டி.எஸ்./16/71-72 எல். டி. செக்கில் இன்சுலேட்டருக்கு வேண்டிய ஹார்டுவேர்கள்.	2,500 டஜன்.	சேலம்.	டிை

சாற்றுக்குறிப்புப் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 [(ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத்தக்க தல்ல)] பணம் அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ மேட்டூர் மின் இயக்கத்திட்ட தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்தி 17-12-1971 தேதி வரை மட்டும் பெற்றுக்கொள்ளக் கோரப்படுகிறது. வேண்டிய சாற்றுக் குறிப்பின் எண் விவரமாக இருக்க வேண்டும். அஞ்சல் மூலமாக பணம் அனுப்பினவர்களுக்கு சாற்றுக் குறிப்புகள் சாதாரண தபாலில் (under certificate of posting) தான் அனுப்பப்படும். சாற்றுக் குறிப்புகள் கிடைக்காவிட்டாலோ அல்லது தாமத மாகக் கிடைத்தாலோ தமிழக மின்சார வாரியம் பொறுப்பேற்காது. மேற்படி சாற்றுக் குறிப்புகள் பிறருக்கு மாற்றிக்கொள்ளத் தக்கதல்ல.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திற்கும் ரூ. 250 (ரூபாய் இருநூற்றம்பது மட்டும்) கட்டுத்தொகையாக மேட்டூர் மின்திட்ட அலுவலகத்தில் நேரில்செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெட்யூல்டு வங்கியில் செலுத்திய (Demand draft) பணமாற்றோலை இணைக்கப்பட்டோ அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பெறும் குத்தகைகள் உரிய முடிவு தேதிஅன்று மாலை 3.00 மணியள வில் வந்துள்ள குத்தகைதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். குறிப்பிட்ட தேதி கடந்து பெறப்படும் குத்தகைகள் நிராகரிக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களை யுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கிடையே உத்திரவைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவ ராவார்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மேட்டூர் இயக்கத் திட்டம், மேட்டூர் அணை-1.

(த. 13)

ஒப்பந்தப் புள்ளி

பாளையங்கோட்டைப் பெருந்திடலில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவச் சாலைக்கும், மருத்துவ மனையைச் சேர்ந்த செவிலியர் பொது உணவு விடுதிக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரி குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை தேவைப்படும் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி தமிழ்நாடு அரசினரின் ஆளுநருக்காக டிை மருத்துவ நிலையத்தின் கண்காணிப்பாளரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 2—00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள், தேவைப்படும் சாமான்களின் பட்டியல் விதிகள் அடங்கிய அட்டவணை முதலியவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்)

"XXIII Medical Miscellaneous II. D.M.E." என்னும் தலைப்பில், விற்பனை வரி 20 காசு மட்டும் "XII Sales Tax" என்ற தலைப்பிலும், ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கியிலோ அல்லது அரசுக் கருவூலங்களிலோ செலுத்தி மேற்படி இரண்டு செலான்களையும் டிை கண்காணிப்பாளரிடம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு :—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமான சான்றிதழ் (Solvency Certificate) அல்லது அதன் உண்மையான நகல் அரசிதழ் பதிவான அலுவலரால் கையொப்பமிட்டாவது அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000-க்குமேற்படுமானல் வருமானவரி பாக்கியில்லாமல் செலுத்துதற்குரிய அத்தாட்சியும், ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும் தேசிய இனச் சான்றும் (Nationality Certificate) சேர்த்து அனுப்பப் படவேண்டும்.

(3) ஒப்பந்த நிபந்தனை நமூனவையும் பொருள்களின் அட்டவணையையும் கையெழுத்திட்டு ஒப்பந்தத்துடன் திருப்பித் தர வேண்டும்.

டாக்டர் **கே. எஸ். வாசுதேவன்,**
எம்.எஸ்., எப்.ஏ.ஸி.எஸ்.
கண்காணிப்பாளர்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை,

(த. 9)

ஒப்பந்தப் புள்ளி

கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட தனித் தனியான ஒப்பந்தங்களை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின் திட்டம், 34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் அந்தந்த வேலைகளுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாட்களில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

எண்.	குறிப்பிடுகை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை விற்பனை வரி உள்பட ரூபாய்.	கட்டுத் தொகை ரூபாய்.	ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி.
1	K/C. 295	கோதையாறு மேல் தங்கலில்உள்ள சின்னக்குட்டியார் அணையில் Ch 420 முதல் 500 வரை அஸ்திவாரத்திற்கு மண்தோண்டுதலும் (Excavation for foundation) Ch. 404 முதல் 504 வரை பிளாக் நெ. V-ல் R. L. 4120 முடிய கட்டுமான வேலை (Building masonry) செய்தலும்.	10.35	23,750	10-12-71
2	K/C. 296	கோதையாறு மேல் தங்கலில்உள்ள சின்னக் குட்டியார் அணையில் 500 முதல் 640 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் (Excavation for foundation) பிளாக் நெ. VI-ல் ch 504 முதல் 604 வரை அணைக்கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை (Building masonry) செய்தலும்.	10.35	16,000	10-12-71
3	K/C. 297	கோதையாறு மேல் தங்கியில்உள்ள சின்னக்குட்டியார் அணையில் ch.640 முதல் 740 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் Excavation for foundation பிளாக் நெ. VII-ல் ch. 604 முதல் 704 வரை அணைக்கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை (Building masonry) செய்தலும்.	10.35	12,500	27-12-71
4	K/C. 298	கோதையாறு மேல் தங்கலில் உள்ள சின்னக்குட்டியார் அணையில் ch. 740 முதல் 890 வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் (Excavation for foundation) பிளாக் நெ. VIIIஉம், IX-உம், ch. 704 முதல் 890 வரை அணைக்கட்டு மேல் தளம் வரை கட்டுமான வேலை (Building masonry) செய்தலும்.	10.35	20,000	27-12-71

ஒப்பந்தப் பத்திரங்களின் நகல்களை (மாற்றத் தகாதவை) ஒவ்வொரு வேலைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ள தன் விலையைக்கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களையும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தகளையும் கட்டுத் தொகை (Earnest money deposit) இரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களையும் கண்டிப்பாகநிராகரிக்கப்படும். கட்டுத்தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதைப்பெற்றுஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். காசோலைகள் (Cheques) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்டு ட்ராப்டை முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தங்களுடன் அனுப்பக்கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ சில அல்லது எல்லா ஒப்பந்தங்களையுமோ நிராகரிக்கக் கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்.

34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7.
(கு. 12)

ஏல விற்பனை

காவல் துறை

கீழ்க்கண்ட காவல்துறை மோட்டார் லாரி வட ஆர்க்காடு மாவட்ட ஆயுதப்படை அலுவலகத்தில் 27-12-1971 திங்கட் கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

வண்டி எண்.	வண்டியின் விபரம்.
எம்.டி.ஜே. 3477.	பெட்போர்டு, ஓபன் டைப் லாரி, 1961 ஆம் ஆண்டில் தயாரித்தது.

2. மேற்கண்ட வண்டியை வேலூர் ஆயுதப்படைத் தலைமையலுவலகத்தில் பார்வையிடலாம்.

3. விற்பனை நிபந்தனைகளை ஆயுதப்படை தலைமையலுவலக ஆய்வாளரிடம் தெரிந்து கொள்ளலாம்.

கே. வி. உன்னிகிருஷ்ணன்,
கண்காணிப்பாளர், வட ஆர்க்காடு,
வேலூர்.

(கு. 16)

ஒப்பந்தப் புள்ளி

அச்சகத் துறை

தமிழ்நாடு அரசினர் (எழுது பொருள் மற்றும்) அச்சகத் துறைக்காக ஒரேஒரு "மின்சார உலோக மறு-உருக்கு அடுப்பு" (One Number of Electric Metal Remelting Furnace) விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வியாபாரிகளிடமிருந்து, இயக்குநர், அரசினர் எழுது பொருள் மற்றும் அச்சகத் துறை, சென்னை-1 அவர்களால் 16-12-1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தப்பட்ட முழு விவரங்களைத் தேவையுள்ளவர்கள் மேற்படி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

அரசினர் எழுது பொருள் அச்சகத் துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.

(கு 17)

மருத்துவமனைக்கு உணவு வழங்கல்

எண் : 27670/க/71, நாள் : 9–11–1971.

1972–73-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மருத்துவ மனைக்கும் இதர அரசினர் மருத்துவ மனைகளுக்கும் ஆகாரப் பொருட்கள் முதலியவை விநியோகம் செய்தலுக்கான ஒப்பந்தம்.

1972 ஏப்ரல் 1-ந் தேதி முதல் அல்லது அதற்குப் பிந்தையதொரு தேதி முதல் 1973 மார்ச் 31-ந் தேதி வரையில் சேலம் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கும் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள இதர மருத்துவமனைகளுக்கும் ஆகாரப் பொருட்களையும் இதர மருத்துவமனை தேவைப் பொருட்களையும் விநியோகம் செய்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளின் மேற்பார்வையாளர்கள் அல்லது மருத்துவ அதிகாரிகள் 1972 ஜனவரி 7-ந் தேதி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்வார்கள்.

2. ஒப்பந்த நிபந்தனைகள், ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் ஆகியவற்றையும் ஒப்பந்த நமூனாவையும் அந்தந்த மருத்துவமனைக்கு விண்ணப்பம் செய்து பெறலாம். ஒப்பந்தம் செய்ய விரும்புபவர் மூன்றரை சதவிகிதம் விற்பனை வரி உட்பட ஒப்பந்த நமூனா முதலியவற்றிற்கு விலையான ரூ. 5.20 (ஐந்து ரூபாய் இருபது காசு) தொகையை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ, அல்லது அரசினர் கருவூலம் ஒன்றிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனாவுக்கான விலைத் தொகையை "XXIII Medical—g.Miscellaneous—I. Director of Health Services and Family Planning....other Receipts" என்ற தலைப்பிலும், விற்பனைவரியை "XII. Sales tax—Receipts under the State Sales tax Act—general Sales-tax" என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனா செய்யக்கோரி செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்துடன் கூட, அசல் சலானைச் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தத் தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளி அளித்த பின்பு, ஒப்பந்தப் புள்ளி சம்மந்தமாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் மேற்கொள்ளக்கூடாது.

சேலம் மாவட்டம்

1. அரசினர் தலைமை மருத்துவமனை, சேலம்.
2. அரசினர் மருத்துவமனை, ஆத்தூர்.
3. டிை மேட்டூர் தேக்கம்.
4. டிை ஓமலூர்.
5. டிை நாமக்கல்.
6. டிை இராசிபுரம்.
7. டிை திருச்செங்கோடு.
8. டிை ஏத்தாப்பூர்.
9. டிை சேந்தமங்கலம்.
10. டிை வேலூர்.
11. டிை ஏர்க்காடு.
12. டிை ஜலகண்டாபுரம்.
13. டிை மோகனூர்.
14. டிை குமாரபாளையம்.
15. டிை வேம்படிதாளம்.
16. டிை சங்ககிரி.
17. டிை வெண்ணந்தூர்.
18. டிை ஆலம்பட்டி.
19. டிை தம்மம்பட்டி.
20. அரசினர் தொழுநோய் மருத்துவ மனை, ஏத்தாப்பூர்.

குறிப்பு:—ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971 அக்டோபர் 1-ஆம் தேதியன்றோ, அல்லது அதற்குப் பிறகோ பெறப்பட்டு தாசில்தார் ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு சால்வன்சி சர்ட்டிபிகேட்டும், நேஷனலிட்டி சர்ட்டிபிகேட்டும், ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகமானால் வருமானவரி வெரிபிகேஷன் சர்டிபிகேட்டும் மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூபாய் 1,000-க்கு அதிகப்படுமானால் விற்பனை வரி கிளியரன்ஸ் சர்டிபிகேட்டும் அல்லது தமிழக அரசின் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரி ஒருவரால் அத்தாட்சியிடப்பட்ட அவற்றின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

வி. செல்வராசு,
எம்.பி.பி.எஸ்.,
(த. 4) மாவட்ட மருத்துவ அலுவலர், சேலம்.

செங்கை மருத்துவக் கல்லூரி

மாநில ஆட்சித் தலைவருக்காகவும், அவர் சார்பிலும், அவர் ஆணைப்படியும், செங்கற்பட்டு அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம்தேதி முதல் அல்லது, நிர்ணயிக்கப்படும் தேதி முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம்31-ஆம்தேதி வரையுள்ள காலத்திற்கு சில உணவுப் பொருட்களும் மற்றும் சில வைத்தியத்திற்குத் தேவையான பொருட்களும் விநியோகிப்பதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இம்மருத்துவமனைக் கண்காணிப்பாளரால் சென்னை மாநில ஆளுநர் அவர்கள் சார்பில் நாளது 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி திங்கட் கிழமையன்று பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப் படுகின்றது.

ஒப்பந்த நமூனாவும், மருத்துவமனைக்கு விநியோகிப்பதற்கு வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலும் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நமூனாவும் வேண்டுவோர் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா அல்லது அரசாங்க ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அல்லது அதன்கிளைகளிலோ அல்லது அரசாங்க கருவூலத்திலோ "XXIII Medical—J. Miscellaneous" என்ற பிரிவின் கீழ் ரூபாய் 'ஐந்து மட்டும்' கட்டி சலானைக் கண்காணிப்பாளர் (சூப்பரிண்டெண்டெண்ட்) அவர்களிடம் அரசாங்க அலுவல் நாட்களில் சமர்ப்பித்து மேற்கண்ட நமூனாக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் பாரம் வாங்குவதற்கு 3½ சத வீதம் (பதினெட்டு காசு மட்டும்) விற்பனை வரியை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அல்லது அதன் கிளை பாங்குகளிலோ "XII Sales tax—Receipt under Sales tax Act" என்ற பிரிவின்கீழ் கட்டி அந்தச் சலானையும் கண்காணிப்பாளர் அவர்களிடம் மேற்சொன்ன ரூபாய் ஐந்துக்கான சலானுடன் சேர்ப்பித்து மேற்கண்ட நமூனாக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு :—

(1) ஒப்பந்தங்களுடன் அவரவர்கள் சொத்து மதிப்புச் சான்றிதழ், தேசிய இனச் சான்றிதழும், அதற்குரிய நமூனாவும் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தச் சொத்து மதிப்புச் சான்றிதழ் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின்வாங்கியதாகவும் தாசில்தார் அவர்களால் கொடுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதனுடைய உண்மை நகலை அரசிதழ் பதிவு அதிகாரிகளின் கையொப்பம் பெற்றும் சமர்ப்பிக்கலாம்.

(2) ஒப்பந்த நிபந்தனையின்படி வருமான வரி, விற்பனை வரி, சான்றிதழ்கள் ஒப்பந்தத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும் மொத்த ஒப்பந்தத் தொகையில் ஐந்து சதவீதத்திற்குச் சமமான வைப்புத் தொகையைப் (Deposit) பிணைப்பணமாக (Earnest Money) விலக்களிக்கப்பட்டத் தொகை போக அனுப்ப வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் திரும்பப் பெறப்படுமானால் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் பிணைப்புத்தொகை செலுத்தத் தவறினால் அவர் செலுத்திய பிணைப்பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

டாக்டர் ஹெச். கிருஷ்ணராவ்,
எம்.எஸ்.,
கண்காணிப்பாளர்,
செங்கை மருத்துவக் கல்லூரி,
மருத்துவமனை செங்கற்பட்டு.

30—10—1971.

(த.15)

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம் சென்னை—1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அவர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 8—12—1971 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—சென்னை-திருச்சி-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையின் (H.N. 45) கி.பி. 102-6-ல் உள்ள (மைல் 63-2-ல்) பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.

கட்டுத் தொகை—
ரூ. 7,600.

ஒப்பந்தப்புள்ளிகள் 8-12-71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனாக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சென்னை (சைதாப்பேட்டை) அலுவலகத்தில் 1—12—1971 முதல் 7—12—1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் சைதாப்பேட்டை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலுள்ளும், "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் 11, சைதாப்பேட்டை பெயரில் செலுத்திச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

தி. மு. அ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை), சென்னை-1.

(த. 18)

ஒப்பந்தப் புள்ளி

எண்ணூர் அனல் மின் திட்டம்

(இயக்குதல், பேணுதல் பிரிவு)

குறிப்பு எண் PT 3/71-72.

தமிழக மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழக மின்சார வாரியம்—எண்ணூர் அனல் மின் திட்டம் (இயக்குதல், பேணுதல் பிரிவு) குறிப்பு எண் P.T. 3/71-72 எனவும், மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் 20-12-1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2-0] தேவையான பொருள்கள் :—

Serial number and Description. (1)	*Quantity.* (2)
1 Heat resisting grade grey paint ..	260 litres (in 20 lit. containers)
2 Heat Resisting grade Aluminium paint	200 litres. (in 20 lit. containers)
3 Anticorrosive Red paint (IS 158).	400 litres. (in 20 lit. containers)
4 Best Quality grey paint	160 litres. (in 20 lit. containers)
5 Enamel Aluminium	200 litres. (in 20 lit. containers)
6 Enamel Ballstop grey (IS2932/1964).	300 litres. (in 20 lit. containers)
7 Enamel Azure Blue (IS 2932/1964).	100 litres. (in 20 lit. containers)
8 Enamel Black	60 litres. (in 20 lit. containers)
9 Post office Red Enamel (IS-2939/1964.	25 litres. (in 1 lit. containers)
10 Thinner	300 litres. (in 20 lit. containers)
11 Anticorrosive Black (IS-158) ..	760 litres. (in 20 lit. containers)
12 Red oxide paint (IS-123) ..	600 litres. (in 20 lit. containers)
13 Aluminium paint (IS-2339/1964) ..	200 litres. (in 20 lit. containers)
14 Desustofts	200 litres. (in 20 lit. containers)
15 Grey Enamel paint (IS 2932/1964.)	460 litres. (in 20 lit. containers)
16 Green Enamel paint (IS 2932/1964.)	1000 litres. (in 20 lit. containers)
17 Red Enamel paint (IS 2932/1964.)	120 litres. (in 20 lit. containers)
18 White Enamel (IS 2432/1964) ..	46 litres.

3-0] ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

4-0] இந்த வேலைக்கான முன்பணம் ரூபாய் 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு) இந்தத் தொகையை ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி முன் செலுத்த வேண்டும்.

5-0] துறையினரைச் சார்ந்த நமூனைக்களில் இல்லாத ஒப்பந்தங்களும்இறுதித் தேதிக்கும்,நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, காரணம் காட்டாது நிராகரிக்கவும்,வேலையை ஒப்பந்தக்காரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

6-0] அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்.

எண்ணூர், சென்னை-57,
தொலைபேசி எண்: 59569,
தந்தி: ENTERMAL (Operation)

(த. 6)

காவல்துறை மருத்துவ மனை, கோயம்புத்தூர், மற்றும் இம் மாவட்டத்திலுள்ள மற்ற மருத்துவ மனைகளுக்கு, தேவையான உணவுப் பொருள்கள் முதலான சாமான்களை 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தப் புள்ளியை ஒப்புக் கொள்பவர் குறிப்பிடும் தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தேவை. மருத்துவ நிலையங்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அந்தந்த நிலைய மருத்துவ அலுவலகரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00மணிவரை சென்னை மாநில ஆளுநர் சார்பாகப் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், தேவையான பொருள்களின் பட்டியல்கள், ஒப்பந்த நமூனை முதலான வேண்டுவோர் இவற்றின் கிரயமான ரூ. 5-20 (ரூபாய் ஐந்தும் காசு இருபது மட்டும்) செலுத்தி, செலுத்துச் சீட்டுடன் அந்தந்த மருத்துவ நிலைய அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகையை ரிசர்வ் பாங்கியிலாவது, மாகாண பாங்கியின் ஏதாவதொரு கிளையிலாவது அல்லது ஏதேனும் அரசாங்கக் கருவூலத்திலாவது XXIII. Medical I-DHS FP.G.Misc. other roceipts. என்ற தலைப்பின் கீழ் செலுத்தி தாக்கல் செய்யப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் இந்தத்தொகைத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மற்றும் தேவையான விவரங்கள் வேண்டுவோர் அந்தந்த மருத்துவமனை வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் பொருள்களின் விவரப்பட்டியல் ஆகியவற்றைப் படித்த பின்பு கையொப்பமிட்டு, ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்துக் கொடுக்க வேண்டும்.

மாவட்ட மருத்துவ மனை
அதிகாரி

கோயம்புத்தூர்—18.
2—11—1971.
(த. 39)

மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனை, அரசினர் தொற்றுநோய் மருத்துவமனை, தோப்பூர், அரசினர் க்ஷயரோக நிலையம், தோப்பூர், காலரா சேகரிப்பு நிலையம், மதுரை ஆகிய நான்கு மருத்துவ நிலையங்களுக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரம் உடையவர்கள் குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய தேவைப்படும் உணவுப் பொருள்களும், இதரச் சாமான்களும் விநியோகம்செய்வதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி பிற்பகல் 2 மணி அளவில் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை டீன் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

குறிப்புகள்.

1. ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் தனித்தனியாக ஒப்பந்தப் பாரங்கள் அனுப்ப வேண்டும்.

2. ஒப்பந்தங்கள் அடங்கிய உறையின் மீது எந்த மருத்துவ மனைக்கு ஒப்பந்தம் என்பதைத் தெளிவாக எழுதவேண்டும். உதாரணமாக ''மதுரை எர்ஸ்கின் மருத்துவமனைக்கு அல்லது தொற்று நோய் மருத்துவ மனைக்கு'' என்று விவரமாக எழுத வேண்டும்.

3. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதியோ அல்லது அதற்குப் பின்னரோ வாங்கிய சால்வன்சி சர்டிபிகேட் அனுப்ப வேண்டும். மேற்படி சான்றிதழ் தாசில்தார் கையொப்பமிட்டதாகவோ அல்லது அதன் உண்மையான நகல்அரசிதழ் பதிவான அரசு அதிகாரியின் கையொப்பமிட்டதாகவோ இருக்க வேண்டும்.

3அ. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந்தேதியோ அல்லது அதற்குப பின்னரோ வாங்கிய நேஷனலிடி சான்றிதழும்அனுப்ப வேண்டும். மேற்படி சான்றிதழ் தாசில்தார் கையொப்பமிட்டதாகவோ அல்லது தலைமை அலுவலக உதவித் தாசில்தார் கையொப்பமிட்டதாகவோ இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் வேண்டிய சாமான்களின் அட்டவணை ஒப்பந்தப் பாரம் அடங்கிய செட் ஒன்று பெறுவதற்கான கட்டணம் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) XXIII. Medical Miscellaneous என்ற தலைப்பில் அரசுக்கருவூலத்திலாவது அல்லது ஸ்டேட் பாங்க் அதன் கிளைகளிலாவது செலுத்தி அதற்கு அத்தாட்சியான செலான் பாரத்தை மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனை ஆபீசில் கொடுத்து மேற்படி பாரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒவ்வொரு செலானுடனும் விற்பனை வரியாக ரூபாய்க்கு 3½ சதவிகிதம் "XII. sales tax receipts under the state sales tax Act—General sales tax" என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலாவது ஸ்டேட் பாங்கி அதன் கிளையிலாவது தனியாக செலுத்தி செலான் பாரத்தையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

6. ஒப்பந்தப் பாரங்கள் வாங்குவதற்காகச் செலுத்தின பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் எக்காரணத்தைக் கொண்டும் பணம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் விற்பனை வரி வருமானவரி பாக்கி இல்லை என்பதற்குச் சான்றிதழ் அனுப்ப வேண்டும்.

8. ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் கீழே கண்ட அத்தாட்சி இணைக்கப்பட வேண்டும். அத்தாட்சி இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் தள்ளுபடி செய்ய ஏதுவாகும்.

ஒப்பந்தப் புள்ளி, சம்பந்தப்பட்ட நிபந்தனையையும், உணவுப் பொருட்கள் பட்டியலில் கண்ட நிபந்தனைகளையும் பொருள்களின் அளவு, தராதரம் பற்றியும் படித்துப் புரிந்து கொண்டேன். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு நடக்கச் சம்மதிக்கிறேன்.

டீன்,
அரசினர் எர்ஸ்கின்
மதுரை. மருத்துவ மனை.
3-11-1971.
(த. 35)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

(தேசிய நெடுஞ்சாலை)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப் பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11 ஔவை யார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவரு டைய அலுவலகத்தில் 15—12—1971 புதன்கிழமை அன்று பிற்பகல் 3—30 மணி வரையில் (அலுவலகக்கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற் றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3·35 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை	ஒப்பந்தப் புள்ளி கிடைக்கும் விலாசம்.
1. இராமநாதபுரம் மாவட்டம்	ரூ.	
தேசிய நெடுஞ்சாலை 49-ல் மைல் 64/6 (கி.மீ.103/6-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல்.	5,100	கோட்டப் பொறியா ளர் (தேசிய நெடுஞ் சாலை வேலைகள் மதுரை.

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வ தன்மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2 விலாசத்திலிருந்து 6—12—1971 முதல் 14—12—1971 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெற லாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட தனி கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ் சாலை) அதிகார எல்லைக்குள்ளே உள்ள அரசினர் கருவூலங் கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ் நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங் கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப் பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2

(த-33)

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும், தமிழகப் பொதுப்பணித்துறை தஞ்சை மாவட்ட மேற்பார் வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னா ரது அலுவலகத்தில் 29—12—1971 மாலை 3·00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—தஞ்சை மாவட்டம் நாகப்பட் டினம் தாலூகா வேளாங்கன்னி மாதாகோவில் சமீபத்தில் வெள்ளையாற்றின் இடதுகரை மைல் 99/4-260-ல் தடுப்புச் சுவர்கட்டுதல்.

2. ஒப்பந்த வகை—கே. 2

3. வைப்புத் தொகை (கருவூல செலான் உருவில்) ரூ. 6,000.

4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங் களில் பொதுப் பணித்துறை செலுத்துத் தொகை என்ற தலைப்பில் செயற்பொறியாளர் வெண்ணாறு கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).

5. விற்பனை வரி ரூ. 0·88 (காசு எண்பத்தெட்டு மட்டும்)

(அரசினர் கருவூலங்களில் XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்)

6. ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள் 10—12—1971.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.32)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

செங்கல்பட்டு வட ஆர்க்காடு பெருவட்டம்

வேலையின் பெயர்:—வட ஆர்க்காடு மாவட்டம் செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும் பொதுப் பணித் துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கல்பட்டு வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15-12-1971 மாலை 3 மணி வரைக் கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை	:	மொத்தத் தொகை.
2 முன்வைப்புத் தொகை	:	ரூ. 11,000
3 ஒப்பந்தப்புள்ளிப் பத்தி ரங்களின் விலை-வரை படங்களுடன்.	:	ரூ. 51.50 (விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.)
4 முடிக்கவேண்டிய காலம்	:	10 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள்செங்கல்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1-12-1971 தேதிமுதல் 13-12-1971 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல் லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் ''P.W.D. Remittances III Other Remittances'' என்ற தலைப்பின் கீழ் ''நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை'' என்பவர் கணக்கில் செலுத்தப் பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்கில் ''XII Sales Tax (B) Receipts under State Sales Tax Act-General Sales Tax'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படிக் கருவூலச் செலுத்துச் சீட்டுகளை, இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத்தொகை கரு வூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களா கவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால்ரசீது டெபா சிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் டிமான்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம்குறைத்து ஏற்றுக்கொள்ளப் படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன்ஏற்றுக்கொள்ளப்படும். மற்று எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலையில் குறைந்த பட்சம் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம், **வேலூர்.1**

(த.23)

ஏல விற்பனை

ஒரு டெசோட்டா லாரி (எம்: எஸ்.ஒய். 2905 திறந்த மாடல் —11,226 கிலோ கிராம் கொள் ளளவு உள்ளது. 6 சிலிண்டர்கள்—பெட்ரோலால் இயங்குவது—இருக்கை வசதிகள் உள்ளது—1955-ல் தயாரிக்கப்பட்டது) 10-12-71 காலை 11 மணிக்கு அடியிற் கையொப்பமிட்டவரால் வைகை அணையிலுள்ள தமிழ்நாடு வனவளப் பயிற்சிப் பள்ளியில் பொது ஏலத்தில் விற்கப்படும். வண்டியைப்பார்வையிட விரும்பு வோர்கள் அந்தப் பள்ளியில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். விற்பனை அறிவிப்புக்களை அப்பள் ளிக்கு நேராகச் சென்றோ அல்லது அடியில் உள்ள முகவரிக்கு 25 காசு அஞ்சல் வில்லை அனுப் பியோ பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். தேவராஜுலு,
முதல்வர், தமிழ்நாடு
வனவளப் பயிற்சிப் பள்ளி,
வைகை அணை,
மதுரை மாவட்டம்.

(த.68)

மறு ஒப்பந்தம்

நகராட்சி சுகாதாரப் பிரிவில் உபயோகப்படும் பென்ஸ் லாரி யை (எம்.டி.ஆர். 4004) தேவை யான புதிய சாமான்கள் மாற்றி ரிப்பேர் செய்து கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 13-12-71-ஆம்தேதி மாலை 3-30 மணிக்குள்ளும் அதன் முன்பும் நகராட்சி ஆணையர் அவர்களா லோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ பெறப்படும். ஒப்பந்தம் அனுப்பும் கவர் மேல் ''பென்ஸ் லாரி ரிப்பேர் செய்ய ஒப்பந்தம்'' என்று குறிப்பிட வேண்டும். மேலும் அத்துடன் ரூ. 450 ஒப்பந்தம் டிபாசிட் தொகை நகராட்சி கருவூலத்தில் கட்டி அதன் அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும். ஒப்பந் தங்கள் 13-12-71 மாலை 3-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்த தாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிக்கப்படும். நகராட்சி ஆணை யர் ஒப்பந்தங்களைக் காரண மின்றி. ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம்.

வி. பிருதிவி,
ஆணையர் டெனிகேட்
இராஜபாளையம் நகராட்சி.

(த.30)

தஞ்சாவூர் வல்லம் சாலையில் உள்ள மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முதலிய வற்றை வழங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி.

1972 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் அதிகாரியால் ஒவ்வொரு விஷயத்திலும் திட்டமாக நிர்ணயிக்கப்படும் வேறொரு தேதியிலிருந்து தொடங்கி 1973 மார்ச்சு 31-ஆம் தேதி முடிய உணவுப் பொருட்கள் மற்றும் இதர ஆஸ்பத்திரி அவசிய தேவைப் பொருட்கள் வழங்குவதற்கான மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியின் கண்காணிப்பாளரால் மேற்படி மருத்துவமனை அலுவலகத்தில் மாநில ஆளுநரின் சார்பில் அவர் உத்தரவின்படி அவருக்காக 1972 ஜனவரி 3-ஆம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 2-மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

1971 டிசம்பர் 15-ஆம் தேதி முதல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் 4-00 மணி வரை வல்லம் சாலையில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப் பாரமும், ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதியையும் தேவைப்படும் பொருட்களின் அட்டவணையையும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் பாரத்திற்கான விலை ரூபாய் ஐந்தும் இதற்கான விற்பனை வரி 3 சதவிகிதமும் (0·18) முறையே "XXIII Medical Miscellaneous XXII Sales Tax Receipts under the State Sales Tax act General Sales Tax"—என்ற தலைப்புகளில் ரிசர்வ் பேங்க ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்கக் கருவூலம் எதிலுமோ தமிழக அரசின் கணக்கில் செலுத்தப்பட்டதற்கான சலான்களுடன் பாரங்களைப் பெற மனு செய்ய வேண்டும்.

ஒப்பந்ததாரர்கள் தங்கள் ஒப்பந்தங்களை சூப்பரன்டெண்டெண்ட் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி தஞ்சாவூர் "(மாநில ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மற்றும் அவருடைய ஆணைக்கேற்பவும் செயல் புரிபவர்)" என்று விலாசமிட்டு அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ரொக்கமாகப் பணம் ஏற்கப்பட மாட்டாது.

குறிப்பு :—1971 அக்டோபர் 1—ஆம் தேதிக்குப் பிற்பட்டுத் தாசில்தார் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட நிர்ணய பாரத்திலமைந்த சால்வன்சி சர்டிபிகேட்டோ அல்லது கெஜட் பதிவு பெற்ற அதிகாரி ஒருவரால் சரியான முறையில் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலோ ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

2. ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகப்படுமானால் வருமானவரி பாக்கி இன்றிச் செலுத்தியுள்ளமைக்கான சர்டிபிகேட்டை தாக்கல் செய்ய வேண்டும்.

3. விற்பனை வரி பாக்கியின்றிச் செலுத்தியுள்ளமைக்கான சர்டிபிகேட்டை ஒப்பந்தத்துடன் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும்.

4. தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத ரெவினியூ அதிகாரி ஒருவரிடமிருந்து (அல்லது தாசில்தாரின் சார்பில் தலைமையக டெபுடி தாசில்தாரிடமிருந்து) 1971 அக்டோபர் 1-ம் தேதிக்குப் பிறகு பெறப்பட்ட ஒரு தேஷுனலிட்டி சர்டிபிகேட்டை அல்லது கெஜட் பதிவு பெற்ற ஒரு அதிகாரியால் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலை ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் கோத்து அனுப்ப வேண்டும்.

டாக்டர் டி. நாகராஜன், எம். டி.,
எப். சி.சி.பி. (யு. எஸ். ஏ).,
சூப்பரன்டெண்டெண்ட், தஞ்சாவூர்
மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி.

தஞ்சாவூர்,
5—11—1971.

தமிழ்நாடு போக்குவரத்துத் துறை

"டர்ன் பட்டன்களுக்கு ஐலட் அண்ட் வாஷர்" வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அடியிற்கையொப்பமிட்டவரால் 28-12-71 நண்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி பற்றி விளக்கமான நிபந்தனைகளையும், பிற விவரங்களையும் பொருட்கள் வாங்கும் அலுவலர், தமிழ்நாடு போக்குவரத்துத் துறை, சென்னை-2 என்னும் முகவரியில் எல்லா அலுவலக நாட்களிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்.

(த.67)

பொதுப்பணித் துறை

எண் 47

"பெட்ரோலால் இயங்கும் காங்க்ரீட் இம்மெர்சன் வைபரேட்டர்ஸ்" ஐந்து வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 10-12-71 நண்பகல் 1 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

இதற்கான குறிப்புகளையும், நிபந்தனைகளையும் அடியிற் கையொப்பமிட்டவரின் நேர்முக உதவியாளரிடம் மனு செய்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சச்சிதானந்தம்,
பொதுக் கண்காணிப்பாளர்
பொதுப்பணித் துறை
& கிடங்குகடை,
சென்னை-1.

(த.66)

ஏற்றுக்கொள்ளப்படும்.

1972-73 ஆண்டிற்கான உணவு, உணவல்லாத பொருட்கள் வழங்குவது குறித்து.

முதல்வர், அரசாங்க ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1, அவர்களால் 1-4-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்குத் தேவையான உணவு, உணவல்லாத பொருட்கள்வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்ப விவரங்கள் 3-1-1972 திங்கட்கிழமையன்று பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(2) ஒப்ப அறிக்கையின்நகலும் பொருட்களுடைய விவர நகலும், முதல்வர் அரசாங்க ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1, அவர்களுடைய அலுவலகத்தில் ரூ. 5-ஐ "XXIII-Medical II D.M.E. J· Miscellaneous" என்ற தலைப்பின் கீழும் ரூ. 5-க்கான விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதத்தை ($17\frac{1}{2}$ அல்லது 18 காசு) அதற்குரிய வருமான மேல் வரி (Surcharge) 5 சதவிகிதத்தை "XXII Sales Tax-Receipts under S.T Act General S.T." என்ற தலைப்பின் கீழும் ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஸ்டேட் வங்கியிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ செலுத்தியதற்கான செல்லுச் சீட்டைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ரிசர்வ் வங்கியில் பணம் கட்டினால் வங்கியினுடைய அசல் செல்லுச் சீட்டை இவ்வலுவலகத்தில் செலுத்த வேண்டும். ரிசர்வ் வங்கி அல்லாத மேற்சொல்லப்பட்ட மற்ற வங்கிகளில் பணம் செலுத்தினால் செல்லுச் சீட்டினுடைய எண், தேதி, செலுத்தப்பட்ட பணம், செலுத்துபவருடைய பெயர் போன்ற விவரங்களை ஒப்ப நமூனைவைப் பெறுவதற்கான விண்ணப்பத்தில் விவரமாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட பணத்தை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(3) ஒப்பந்தத்தினுடையமதிப்பு ரூபாய் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டால் வருமான வரி சரிபார்த்தல் சான்றிதழுடன் 1-10-1971 அன்றோஅல்லது அதற்குப்பிறகோ வட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்ட பெறுமானச் சான்றிதழும் தேசியச் சான்றிதழும் ஒப்ப விவரங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்ப விவரங்களுடைய மதிப்பு ஓராயிரம் ரூபாய்க்கும் மேற்பட்டால் விற்பனை வரி பாக்கியில்லை என்பதற்கான சான்றிதழும் இணைத்து அனுப்ப வேண்டும். மேற்கண்ட அசல் சான்றிதழ்களை அரசாங்க நிலை பெற்ற அலுவலரிடமிருந்து பெற்ற நகலையும் இணைத்து அனுப்பலாம்.

எம். ஜி. பிரபு,
எம்.டி.எப்.சி.சி.பி.(யு.எஸ்.ஏ.)
முதல்வர்.

(த. 50)

போக்குவரத்துத் துறை.

அண்ணாசாலை, சென்னை-2.

தமிழ்நாடு அரசாங்க ஆளுநரின் சார்பில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து இலாகாவின் கட்டடப் பொறியாளரால் வரும் இரண்டு வருடத்திற்கு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிலுள்ள மாதவரம் பணிமனையில், சிற்றுண்டிச்சாலை, குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட கவர்களில், கட்டடப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை-2ல் ஒப்பந்தங்கள் 9—12—1971 மாலை 3 மணி முடிய வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3—15 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1—04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

இயக்குநர்.

(த. 20)

சத்தியமங்கலம் நகராட்சி.

சத்தியமங்கலம் நகராட்சி (கோவை மாவட்டம்) அலுவலக உபயோகத்திற்கு ஒரு தமிழ் டைப் அடிக்கும் கருவியும் (Typewriter—Tamil) ஒரு நகல் எடுக்கும் கருவியும் (Duplicator) உடனடியாகத் தேவைப்படுகின்றன. மேற்படி கருவிகளை விநியோகம் செய்யும் கம்பெனிகள் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "தனி அதிகாரி", நகராட்சி அலுவலகம், சத்தியமங்கலம், கோவை மாவட்டம் என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். டைப் அடிக்கும் கருவி அல்லது டியூப்ளிகேட்டர் (Duplicator) ஆகியவற்றிற்கு அனுப்பப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் ரூ. 125-00 பிணைப் பணம் (Earnest Money Deposit) அனுப்ப வேண்டும். மேற்படி பிணைப் பணம் மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாக அனுப்ப வேண்டும். இந்த விளம்பரம் "தமிழரசு" பத்திரிகையில் வெளியான தேதியில் இருந்து 15-வது நாள் மாலை 3·00 மணிவரை மேற்படி ஒப்பந்தங்கள் வரவேற்கப்பட்டு, அன்று மாலை 3·30 மணிக்குத் தனி அதிகாரி அல்லது அவரால் அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும். மேற்படி 15-வது நாள் அரசாங்க விடுமுறையாக இருந்தால் அதற்கு அடுத்த நாள் மேற்படி நேரத்தில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்த நிபந்தனைகளை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கா. கலிபுல்லா,
தனி அதிகாரி,
சத்தியமங்கலம் நகராட்சி.

(த.26)

தேனி-அல்லிநகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்)

பைப் லைன் பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 14—12—1971 மாலை 4·00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள், மற்றும் இதர விவரங்களை நகராட்சி அலுவலகத்திற்கு மனுச் செய்தோ நேரிலோ பெறலாம்.

கா. முகமது இப்ராஹிம், பி.ஏ.
தனி அலுவலர்.

(த.29)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித்துறை

'' வைகைச் சீரமைப்புத் திட்டம் ''.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பிலும் கீழ்க்காணும் வேலைகளுக்காக—கே. 2. ஒப்பந்த வகையில், அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுரை வட்டம், மதுரை அவர்களால், மதுரை-2-ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் 15—12—1971 அன்று மாலை 3–00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பெறும். அதே நாள் மாலை 4-00 மணிக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள், அப்போது வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1. இராமநாதபுரம் மாவட்டம். சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 12, 13 மற்றும் 14–முதலியன கட்டுதல்.	12,100
2. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 15, 16 மற்றும் 17 முதலியன கட்டுதல்.	12,100
3. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 18, 19 மற்றும் 20 முதலியன கட்டுதல்.	12,100
4. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 21, 22 மற்றும் 23 முதலியன கட்டுதல்.	12,100
5. இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டம், பார்த்திபனூர் அருகே வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 24 மற்றும் 25 கட்டுதல்.	8,100

ஒவ்வொரு வேலைக்கான, ஒப்பந்த நிபந்தனைகள், வரை படங்கள் மற்றும் பத்திரங்களின் விலையான ரூ. 20-ஐ '' P. W. III. O. R. '' என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொ. ப. து, தலைநிலை வேலைக் கோட்டம், வைகைச் சீரமைப்புத் திட்டம், பரமக்குடி அவர்கள் வரவில் சேரும் படியும், மேற்கண்ட ஒவ்வொரு ஒப்பந்தப் பத்திரத்தின் விலைக்கான விற்பனை வரி 70 காசுகளை '' XII. Sales Tax (d) Miscellaneous '' என்ற தலைப்பிலும் தனித் தனியே அரசுக் கருவூலங்களில் செலுத்தி அதற்கான ரசீது களைக் கொடுத்து, மதுரை வட்ட (பொ.ப.து.) மேற்பார்வைப் பொறியாளர், மதுரை-2 அலுவலகத்தில் 6—12—1971 தேதி முதல் 13—12—1971 தேதிக்குள், மேற்கண்ட ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத் தொகையும் கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசீய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது '' செட்யூல்டு வங்கிகளின் கால் ரசீது டெபாசிட்டு '' வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் '' டிமாண்ட் டிராப்டுகளாகவோ '' ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடு குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2.

(த. 3)

ஏல விளம்பரம்

தூத்துக்குடி துறைமுக வாரியத்திற்குச் சொந்தமான பழைய இரும்பு, மரம் முதலிய சாமான்களைத் தூத்துக்குடி துறைமுகத்திற்குள் வைத்து 10-12-71 அன்று காலை 10 மணிக்கு பகிரங்க ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள், சாமான்களின் பட்டியல் முதலியவைகளை ''போர்ட் ஆபீஸர், தூத்துக்குடி-1'' என்ற விலாசத்திற்கு பங்களா தேஷ் அகதிகள் நிவாரண நிதிக்கான ஸ்பெஷல் 5 காசு தபால் தலை உட்பட 55 காசு மதிப்புள்ள தபால் தலைகள் ஒட்டப்பட்ட சொந்த விலாசமிடப்பட்ட உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. டி. ராமச்சந்திரன்,
துறைமுக அதிகாரி
தூத்துக்குடி,
(த.56)

இரு நூறு காலி டிரம்கள் (205 லிட்டர்—கொள்ளளவு) 6-12-1971-ஆம் தேதி மாலை 4 மணிக்கு கடனா நதி அணைப்பகுதியில் செயற்பொறியாளர் அவர்களால் ஏலம் விடப்படும். ஏல விதிகளை அம்பாசமுத்திரம் கடனா நதித் திட்ட கோட்டச் செயற்பொறியாளருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

செயற்பொறியாளர்,
கடனா நதி திட்டக் கோட்டம்,
அம்பாசமுத்திரம்.

(த.51)

ஒப்பந்தப் புள்ளி

1972–73-ஆம் ஆண்டில் இராமனாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கு தேவையான உணவுப் பொருள்கள் முதலியவை கொடுப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி.

இராமனாதபுரம் மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட அரசினர் மருத்துவ மனைகளுக்கு 1972–73 (1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1973-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய அல்லது வேறு குறிப்பிட்ட தேதியிலிருந்து மார்ச்சு மாதம் 31-ம் தேதிமுடிய) ஒரு வருடத்திற்குவேண்டிய ஆகாரச் சாமான்களும் இதர சாமான்களும் வழங்குவதற்கு 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக் கிழமை பகல் 2 மணிக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் சார்பில் அந்தந்த மருத்துவமனை அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு அந்தந்த சம்பந்தப்பட்ட மருத்துவமனை மருத்துவ அதிகாரிக்கு (Medical Officer) எழுதித் தெரிந்து கொள்ளவும்.

ஒப்பந்தப் பாரம் வேண்டுபவர்கள் '' XXIII. K. Medical miscellaneous '' என்ற தலைப்பில் ரூபாய் 5 க்கு ஒரு செலான் அரசாங்க கருவூலத்தில் கட்டி ஒப்பந்தப் பாரங்களை சம்பந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரிகளிடமிருந்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

மேலும் 15 காசுகள் ஒப்பந்தப் பாரத்தின் விற்பனை வரிக்காக '' XII. Sales tax-Receipts under the State Sales tax Act—General Sales tax '' என்ற தலைப்பின்கீழ் மற்றொரு செலானில் சர்க்கார் கஜானாவில் கட்டவேண்டும். ஒப்பந்தப் பாரத்தின் விலையையும், அதற்குரிய விற்பனை வரியையும் ரொக்கமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மருத்துவ மனைகளின் பட்டியல்

1. அரசினர் தலைமை மருத்துவமனை, இராமனாதபுரம்.
2. அரசினர் மருத்துவமனை, இராமேஸ்வரம்.
3. அரசினர் மருத்துவமனை, சிவகெங்கை.
4. அரசினர் மருத்துவமனை, விருதுநகர்.
5. அரசினர் மருத்துவமனை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
6. அரசினர் மருத்துவமனை, சாத்தூர்.
7. அரசினர் மருத்துவமனை, அருப்புக்கோட்டை.
8. அரசினர் மருத்துவமனை, தேவக்கோட்டை.
9. அரசினர் மருத்துவமனை, முதுகுளத்தூர்.
10. அரசினர் மருத்துவமனை, ராஜபாளையம்.
11. அரசினர் மருத்துவமனை, சிவகாசி.
12. அரசினர் மருத்துவமனை, பனைக்குளம்.
13. அரசினர் மருத்துவமனை, கீழசெவல்பட்டி.
14. அரசினர் மருத்துவமனை. திருப்புவனம்.
15. அரசினர் மருத்துவமனை, கண்டனூர்.
16. அரசினர் மருத்துவமனை. கீழக்கரை.
17. அரசினர் மருத்துவமனை, காளுடுகாத்தான்.
18. அரசினர் மருத்துவமனை, திருவாடானை.
19. அரசினர் மருத்துவமனை, வத்திராயிருப்பு.
20. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, பாகனேரி.
21. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, பரமக்குடி.
22. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, இளையாங்குடி.
23. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, சிவகெங்கை.
24. அரசினர் பெண்கள் சிசு மருத்துவமனை, பள்ளத்தூர்.
25. அரசினர் மீனாக்ஷி சொக்கலிங்கம் மருத்துவமனை, பூலாங்குறிச்சி.
26. அரசினர் மருத்துவமனை, புதுமடம்.
27. அரசினர் காசநோய் நிலையம், சோமநாதபுரம்.
28. அரசினர் மருத்துவமனை, சிங்கம்புனரி.
29. அரசினர் மருத்துவமனை, தொண்டி.
30. அரசினர் மருத்துவமனை, காரைக்குடி.
31. அரசினர் இராமனாதன் பெண்கள் சிசு மருத்துவமனை, பூலாங்குறிச்சி.

ஒப்பந்தம் போடுபவர்கள் அவரவர் சொத்து விவரங்களைப் பற்றி, சால்வென்சி சர்ட்டிபிகேட் அந்தந்த தாசில்தாரிடமாவது அல்லது கெஜெடெட் ஆபீசர் கையொப்பமிட்ட நகலையாவது வாங்கி ஒப்பந்தப் பாரங்களுடன் மேற்கண்ட தேதியில் கொடுக்க வேண்டியது.

மேலும் இந்திய குடிமகன் என்பதற்குச் சான்று அந்தந்த தாசில்தாரிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்கி அனுப்ப வேண்டும்.

சால்வென்சி சர்ட்டிபிகேட் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பிறகு வாங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

வருடாந்திரத் தேவை ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் வருமான வரி பரிசீலனை சர்ட்டிபிகேட் குறிப்பிட்ட பாரத்தில் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். காண்ட்ராக்டின் மதிப்பு ரூபாய் 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி எடுப்பு சான்று ஒப்பந்தத்துடன் அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தங்கள் அடங்கியுள்ள கவர்களின்மேல் '' ஆகாராதி மற்றும் இதர சாமான்களுக்கான ஒப்பந்தம்'' என்று குறிப்பிட்டு அந்தந்த மருத்துவமனை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

டாக்டர் அ. பொன்னுசாமி,
மாவட்ட மருத்துவ அலுவலர்,

இராமனாதபுரம்.
7–11–1971
(த.19)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கோதையாறு நீர்-மின் திட்டத்தைச் சேர்ந்த நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகள் (Lorries):—

1 எம்.டி.என். 3982	அவைலிங் பெட்போர்டு டம்பர் 1956 மாடல் டி.பி. ஸ்பெசிபிக்கேசன் எண் K. C. 300
2 எம்.டி.என். 5602	ருசியன் டம்பர்—1961 மாடல் டி.பி. ஸ்பெசிபிக்கேஷன் எண் K. C. 299
3 எம்.டி.என். 5634	ருசியன் டம்பர்—1961 மாடல் டி.பி. ஸ்பெசிபிக்கேஷன் எண் K. C. 302
4 எம்.டி. என். 5636	ருசியன் டம்பர்—1961 மாடல். டி.பி. ஸ்பெசிபிக்கேஷன் எண் K. C. 301

அவைகள் இருக்கின்ற நிலையில் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 27-12-1971 மாலை 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 27-12-1971 மாலை 3-30 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்த சம்பந்தப்பட்ட முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் எண் 34-ஏ, பெருமாள் புரம், பாளையங்கோட்டையில் இயங்கிவரும் கோதையாறு நீர்-மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் 10-12-1971 முதல் எல்லா வேலை நாட்களிலும், வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலே கண்ட ஒப்பந்தத்திற்குக் கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) ஒவ்வொரு உந்து வண்டிக்கும் தனித்தனியாக கோதையாறு நீர்-மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் ரொக்கமாகவோ அல்லது ட்ராப்ட் (draft) மூலமாகவோ செலுத்திச், செலுத்தியதற்கான இரசீது அல்லது ட்ராப்டை ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு அனுப்பி வைக்க வேண்டும்.

ஒப்பந்த நிபந்தனைகள் கொண்ட தஸ்தாவேஜுகள், நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகளின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் நேராகவோ அல்லது பணவிடைத்தாள் மூலமாகவோ ரூ. 5-15 (ரூபாய் ஐந்து காசு பதினைந்து மட்டும் விற்பனை வரி உட்பட) ஒவ்வொரு வண்டிக்கும் தனித்தனியாக கோதையாறு நீர்-மின்திட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்த விலையான ரூ. 5-15 (ரூபாய் ஐந்து காசு பதினைந்து மட்டும்) திருப்பித்தரத் தக்கதல்ல. ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர் களுக்குச் சாதாரண அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும். அஞ்சல் பிரயாணத்தின்போது ஒப்பந்த நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

உந்து வண்டிகளைப் பார்வையிட விரும்புவோர் கோதையாறு நீர்-மின்திட்ட கீழ்த்தங்கலில் உள்ள தலைமைப் பண்டகசாலைப் பொறுப்பாளரின் அலுவலகத்தில் அலுவல் நாட்களில் வேலை நேரங்களில் அனுமதிக்கப்படுவார்கள். ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத் தக்கதல்ல.

பாளையங்கோட்டை,
2—11—1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்-மின்திட்டம்.

(த.5)

ஏல விற்பனை

பழுதடைந்த நிலையிலுள்ள குளித்தலை வட்டார ஜீப் எம். எஸ்.ஒய். 7809—15-12-71-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சித் தலைவர்) அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏல சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

மாவட்ட ஆட்சியாளர்,
திருச்சிராப்பள்ளி

(த.64)

ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

தமிழக ஆளுநருக்காகக் கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 15-12-71 மாலை 3 மணிவரை ''சீத்தாவுட் பார் மவுண்டிங் பிளாக்ஸ்'' தமிழ்நாடு அரசாங்க அச்சகத்திற்கு 1971-72-ம் ஆண்டில் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் டைப் செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-1 அவர்களுக்கு எழுதவும்.

ஜி. ரெங்கா ராவ்,
இயக்குநர்,
எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை-1.

(த.55)

ஒப்பந்தப் புள்ளி

1. கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்குத் தேவையான உணவுப் பொருட்கள் முதலான சாமான்களை 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்பவர் குறிப்பிடும் தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 31-ம்தேதி முடிய வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தேவை. ஒப்பந்தப் புள்ளிகள், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிவரை தமிழக ஆளுநர் சார்பாக பெற்றுக் கொள்ளப்படும். பின்புவரும் ஒப்பந்தப் புள்ளிகள் எக்காரணத்தைக் கொண்டும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், தேவையான பொருட்களின் பட்டியல்கள், ஒப்பந்த நமூனு முதலியன வேண்டுவோர் அவற்றின் கிரயமாய் ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும்,காசுகள் இருபது மட்டும்) செலுத்திச் செலுத்துச்சீட்டுடன், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது விண்ணப்பம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகையை ரிசர்வ் பாங்கியிலோவது அல்லது ஏதேனும் ஒரு அரசாங்கக் கருவூலத்திலாவது கீழ்க் குறிப்பிட்டுள்ள தலைப்பின் கீழ் * (XXIII Medl I Directer of Medl Education—g Mise other receipts) செலுத்தி தாக்கல் செய்யப்பட வேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் இந்தத் தொகை திரும்பக் கொடுக்கப்படமாட்டாது. மற்றும் தேவையான விவரங்கள் வேண்டுவோர் மருத்துவமனை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், பொருள்களின் விவரப்பட்டியல் ஆகியவற்றை படித்த பின்பு கையொப்பமிட்டு, ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்துக் கொடுத்து விடவேண்டும்.

குறிப்பு : ஒப்பந்தப்புள்ளிகளைச் சீலிட்டு உறையிலிட்டு, கண்காணிப்பாளர் கோவை மருத்துவக் கலலூரி மருத்துவ மனை, கோவை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மீது'' 1972-73-ம் வருடத்துக்கு உணவுப் பொருட்களும், மற்ற சாமான்களும் வழங்க ஒப்பந்தப் புள்ளி என்று '' என்று குறிப்பிட வேண்டும்.

டாக்டர் டி. லட்சுமணன்,
எம். எஸ்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை.

(த. 38)

ஏல விற்பனை

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், 16, சௌத் போக் ரோடு, தி. நகர் சென்னை-17-ல் உள்ள ஜீப் எம்.டி.எச். 2648 (வில்லீஸ் 1959 ரேர்) 15-12-1971 அன்று 11 மணிக்கு உள்ள இடத்தில் இருக்கும் நிலையில்பகிரங்க ஏலத்தில்விடப்படும்.

பின்குறிப்பு :

1. மேற்படி வண்டியை மேலே கண்ட விலாசத்தில் எல்லா வேலை நாட்களிலும் பார்வையிடலாம்.
2. மற்ற நிபந்தனைகளுக்கும், விபரங்களுக்கும் கூட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலர், செங்கை மாவட்டம், சென்னை-17 அவர்களை அணுகவும்.

ஆணையாளர்,
வட்டாரப் போக்குவரத்துந் துறை.

(த-48)

விற்பனை

வீட்டு வசதி வாரியம்

கோவை புதூர்.

'' குறைந்த தவணை முறையில் வீட்டுமனைகள், வீடுகள் விற்பனை ''

1. தண்ணீர் வசதியுடன் கூடியது.
2. தெருவிளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன.
3. தார் சாலைகள் போடப்பட்டுள்ளன.
4. போக்குவரத்து வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

வீட்டு மனைக்கான விண்ணப்பங்களை ரூ. 3 (அஞ்சலில்அனுப்ப ரூ. 4) வீடுகளுடன் கூடிய விண்ணப்பங்களை ரூ. 5 (அஞ்சலில் அனுப்ப ரூ. 6) மேற்படி அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15-1-1972 வரை பெற்றுக்கொள்ளப்படும்.

இதனைப் பற்றிய மேலும் விவரங்களை ஆர்.எஸ். புரத்தில் அமைந்துள்ள கோவை வீட்டு வசதிப் பிரிவு அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

எல். ஆர். சாஸ்திரி,
நிர்வாக அதிகாரியும்,
செயற்பொறியாளரும்,
கோவை வீட்டுவசதிப்பிரிவு.

11-22, திவான் பகதூர் சாலை,
ஆர். எஸ். புரம், கோவை-2,

தொலைபேசி எண் : 25811.

(த. 43)

ஏல விற்பனை

தீயணைப்புத் துறை

கண்டம் செய்யப்பட்ட கீழ்க் கண்ட வண்டி வேலூர் தீயணைப்பு நிலையத்தில் 21-12-71 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேற்படி இடத்தில் வண்டியைப் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளைக் கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு எண்—
எம்.எஸ்.ஒய். 9247

வருடம், மாடல்—
ஸ்டுடிபேக்கர், வி '8,
1952 மாடல்
பெட்ரோலில் ஓடுவது.

கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
வேலூர் கோட்டம்.

(த. 52)

நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அவர்கள் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–12–1971 மாலை 3 மணி வரை குறளகத்தின் 4-வது மாடியிலுள்ள அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை. ரூ.
சென்னை, திருச்சி, திண்டுக்கல் (தே.நெ. 45) சாலையின் கி.மீ. 104/4 (மைல் 64/2) உள்ள பாலத்தைத் திருப்பிக் கட்டுதல்.	6,610

ஒப்பந்தப் புள்ளிகள் 15—12—1971 அன்றே மாலை 3–15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரை படங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் 11, கிண்டியிலுள்ள நெடுஞ்சாலைக் கட்டட அலுவலகத்தில் 6–12–1971 முதல் 14–12–1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். அப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் 11, கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலுள்ளும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலை) கோட்டம் 11, கிண்டி, சென்னை-25. பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கிப் பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

தி. மு. அ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.).

(த.47)

தமிழ்நாடு மாநில ஆளுநருக் காக மதுரை நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் 72—73-ஆம் ஆண்டு அரசாங்கச் சாலைகளின் பரா மரிப்பு வேலைகளுக்கு முத்திரை பதிக்கப்பெற்ற சதவீத ஒப் பந்த விவரங்கள் கோட்டப் பொறியாளர் (நெகிப்) அலு வலகத்தில் '' சொர்ணு '' கட்ட டத்தில் 15—12—1971-ஆம் தேதி பிற்பகல் 3–00 மணி வரை (அலுவலகக் கெடியார நேரப் படி) பெற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட ஒப்பந்த விவரங்கள் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற வர்கள் முன்னிலையில் அன்று பிற்பகல் சரியாக 3–15 மணி அளவில் கோட்டப் பொறியா ளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்கள் கோட்டப் பொறியாளர் அலு வலகத்தில் ஒவ்வொரு வேலைக் கும் ரூபாய் 3–15 வீதம் செலுத்தி (விற்பனை வரி உட்பட) (இந்தத் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது) எல்லா வேலை நாட் களிலும் அலுவலக நேரங்களில் (அதாவது காலை 10–30 மணி முதல் மாலை 5–00 மணிவரை) 6—12—1971 முதல் 13—12—1971 வரை விண்ணப் பித்துப்பெற்றுக் கொள்ளலாம் ஒப்பந்த விவரங்கள் பெறப் படும் 13—12—1971-ஆம் தேதிக்குப் பின் எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்த விவரங் கள் விற்பனை செய்யப்பட மாட்டது.

முன் பண வைப்புத் தொகை மதுரைக் கோட்டப் பொறியாளர் சார்பில் மதுரைக் கோட்ட எல் லைக்குள் இருக்கும் அரசாங்கக் கருவூலத்தில் வருவாய் வைப்புத் தொகை என்ற தலைப்பில் ரெவின்யூ டெப்பாசிட் செலுத்தி அதற்கான கருவூலச் செலுத்துச் சீட்டை (சலான்) ஒப்பந்த விவரத்துடன் இணைக் கப்பட வேண்டும். டேவணித் தொகையை எந்த ஷெட்யூல் பாங்கிலும், டிமாண்டு டிராப் டாகவும், பாங்கி கியாரண்டி ஆகவும் பெற்றுக் கொள்ளப் படும். டிமாண்டு டிராப்டுகள் (ஸ்டேட் பாங்க் அல்லது இதர பாங்குகளால் கொடுக்கப்படும்) பணமாக்கப்பட்டவுடன் ஒப் பந்தம் ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய பாதுகாப்புப் பத்திரங் கள், தேசியக் கடன் பத்திரங்கள் தமிழ்நாடு மின்சாரவாரியப் பத்திரங்களும் முன்பண வைப்பு களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி மின்சார வாரியப் பத்திரங்கள் கோட்டப் பொறி யாளரின் பேரில் மாற்றப்பட்டி ருக்க வேண்டும். தவிரப் பணமோ காசோலையோ (செக்) முன் பண வைப்புக்காக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (Vide G.O.MS.No.1077, P.W.D. dated 1—7—1969)முன் பண வைப்புத் தொகைக்காகசெலுத்துச்சீட்டின் றியும் வருமானவரி, விற்பனைவரி செலுத்தியதற்கான சான்றிதழ் கள் சம்பந்தப்பட்ட அதிகாரி களிடமிருந்து பெற்றும் இணைக் கப்படாத ஒப்பந்த விவரங்கள் தள்ளுபடி செய்ய ஏதுவாகும்.

எஸ். எம். சுப்பிரமணியம்,
கோட்டப் பொறியாளர்,
நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை),
மதுரை.

(த.76)

தமிழ்நாடு மருத்துவத் துறை யில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்ய 16-12-1971 மாலை 5 மணி வரை மனுக்கள் வர வேற்கப்படுகின்றன.

1. அரசு மருத்துவ மனைகளில் டயட்டீசியன் பதவிகள் :
   தேவைப்படும் இடங்கள்-3.
   சம்பளம் : மாதம் ஒன் றுக்கு ரூ. 425—20—5 525—25—700.
   கல்வித் தகுதிகள் : 1. பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. பட் டப் படிப்பில் இரசாய னம் அல்லது மனை இயல் பாடமாக படித் திருக்க வேண்டும். அல் லது மனை இயல், நர்சிங் மருத்துவம், அறுவைச் சிகிச்சையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
2. அனைத்திந்திய மக்கள் நல்வாழ்வுத் துப்புரவு நிறுவனத்தில் டயட்டீசி யன் டிப்ளமா, கல்கத்தா அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல் லது அமைப்பொன்றில் மனை இயல் பட்டம் பெற் றிருக்க வேண்டும்.

மக்களுடைய தேவைக்குத் தகுந்தாற்போல் பழகியவர்களுக் கும் சமூகத் தொண்டு புரிந் திருப்பவர்களுக்கும் முதலிடம் கொடுக்கப்படும்.

வயது : 1-7-1972-ல் 40 வய திற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

2. அரசு மருத்துவக் கல்லூரி களில் ' நான்மெடிகல் டியூட் டர்ஸ்.' (தற்காலிக நியமனம்).

உத்தியோகத்தின் பெயரும் தேவையான இடங்களும்.

உடற்கூறியல் நான்மெடி கல் டியூட்டர்.	14
உடல் அமைப்பியல் டியூட் டர்கள்.	11
இருமி இயல் நான்மெடி கல் டியூட்டர்.	11
பார்மகாலஜி நான்மெடி கல் டியூட்டர்.	1
பயோ கெமிஸ்ட்ரி நான் மெடிகல் டியூட்டர்.	2
மொத்தம் ...	39

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு 575—25—600—40—1,000.

தகுதி : பல்கலைக் கழக மானி யக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் உடற் கூறியல், உடல் அமைப்பியல் மைக்ரோபயாலஜி அல்லது பயோ கெமிஸ்ட்ரியில் எம். எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச் சாதி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு கிடையாது. அங்க ஈன மானவர்களுக்கு வயது வரம்பு 10 ஆண்டுவரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர் கள், மகன்கள், மணமாகாத மகள்கள், 1-1-1963-ல் அல் லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீஸ் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார் ஜண்ட் மேஜர் இன்ஸ்டக்டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசீய மாணவர் படையைச் சேர்ந்த வர்களாக இருந்தால், வயது விஷயத்தில் சலுகை உண்டு. இராணுவம், கடற் படை, விமா னப் படை, ஆகியவற்றி லிருந்து கலைக்கப்பட்டதால் வந்த வர்கள் 1-7-1972 அன்று 40 வயதுக்குக் குறைவானவர்கள் 1-1-1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானி லிருந்து குடிபெயர்ந்து வந்தவர் கள் விசயத்திலும் இலங்கை பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட் பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ. மீட்டர் உள்ள தன் முகவரி குறிப்பிடப்பட்ட 0·35 காசு அஞ்சல் வில்லை ஒட் டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 11)

குடும்ப நலத் துறை

சென்னை மக்கள் நல்வாழ்வு—குடும்பநல இயக்குநர் (பொது நலப்பிரிவு) அலுவலகத்தில் தொழில் நுட்பப்பணியாளர் (சத் துணவு) பதவிக்கு விண்ணப்பங் கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி—
கீழ்க்குறித்த தகுதிகள் உள்ள வர் இப்பதவியில் அமர்த்தத்தக்க வர்—

1. 25 வயதுக்குட்பட்டவர்.
2. எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு படித்து முடித்தவர். மற் றும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியவர்.
3. நல்ல உடற்கட்டும், பார் வையும், வெளி வேலை செய்யத்தக்க திறனும் உள்ளவர்.
4. சென்னை மருத்துவக் கல்வி இயக்குநர் நடத்திய ஆய்வகத் தொழில் நுட் பச்சான்றிதழ்பெற்றவர்.

விண்ணப்பங்கள், மக்கள் நல் வாழ்வு—குடும்பநல இயக்குநர் (பொது நலப் பிரிவு) 81, அண்ணா சாலை, சென்னை-6 என்ற முகவரிக்கு 15-12-1971 தேதிக் குள் வந்து சேரவேண்டும்: நேரில் காண அழைக்கப்படுவோ ருக்குப் பயணப்படித் தொகை ஏதும் தரப்படமாட்டாது.

இயக்குநர்,
மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை.

(த-60)

ஏல விற்பனை

1957 வருட மாடல் பார்கோ லாரி எம்.டி.ஓ. 2422, பெட்ரோ லில் இயக்கப்படுவதும், 153'' பேஸ் வீல் உடையதும் மூன்று நபர் அமர வசதியுள்ளதும், பின் புறம் திறந்த அமைப்பு உள்ளது மான ஒரு லாரி கீழ்க்கண்ட அலு வலரின் அலுவலகத்தில் 15-12-1971 அன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்கொண்டு தகவல்கள் மற் றும் நிபந்தனைகளைக் கீழ்க்கண்ட அலுவலரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்,
மாவட்ட கால்நடைப் பண்ணை,
ஒரத்தநாடு.

(த.53)

ஒப்பந்தப் புள்ளி

தொழில்வளர்ச்சித் துறை

வேலையின் பெயர் ... தொழிற்பேட்டையில், ஒன்றில் 4 L டைப் பணிக் கூடங்கள் அமைப்பதற்காக, பேட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக பொருள்களை வழங்குவதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 21-12-1971 அன்று மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3.10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை 2-அவர்களால் திறக்கப்படும்.

1.	ஒப்பந்த வடிவம்	மொத்தத் தொகை.
2.	கட்டுத் தொகை	ரூபாய் 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு).
3.	மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து.	ரூபாய் 10·40 காசு.
4.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர், அலுவலகம், தெற்குக்கோட்டம் தொழிற்பேட்டை, மதுரை என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர், (கட்டுமானம்), தெற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 10—12—71 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ '' இண்டஸ்டிரீஸ் ஏனைய ரசீட்ஸ் '' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), தெற்குக் கோட்டம், தொழிற்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையை சலான் வடிவிலோ, ' கால் டிபாசிட் ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் ' சி ' (கட்டுமானம்), தெற்குக் கோட்டம், • மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவீகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பகுதி.

சென்னை 2.
(த. 2)

ஏல விற்பனை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கார்குடி மத்திய மரக் கிடங்கிலும், ரோடு ஓர மரக் கிடங்கு தொரப்பள்ளியிலும் நீலகிரி வடக்குக் கோட்ட வன அலுவலர் அவர்களாலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ 9–12–1971 காலை 9-00 மணிக்கு நடத்தப்படும்.

இனங்கள்.	தோராயமான அளவு. க. மீ.
1. சட்டி	4
2. தேக்கு	200
3. ஹொன்னை	50
4. கிரிலியா	60
5. வெண்தேக்கு	10
6. நாவல்	10
7. மத்தி	200
8. தேக்குக் கால்கள்	1,214

ஏனைய பிற விவரங்கள் நீலகிரி வடக்குக் கோட்ட வன அலுவலகத்திலோ அல்லது முதுமலை வனச் சரக அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். சுப்ராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம்.

(த.42)

ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாட்டில் மக்கள் நல் வாழ்வுப்பணிகள் :—
குடும்ப நலத்திட்ட இயக்குநர் அவர்களின் நிர்வாகத்திலுள்ள அரசாங்க மருத்துவ நிறுவனங்களுக்கு 1972—73-ஆம் ஆண்டுக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள், ஃபிக்சஸ், அப்சார்பெண்ட் பஞ்சு ஆகியவைகளை வழங்குதல்.

1972 ஏப்ரல் 1 முதல் அல்லது அதற்குப்பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத்திட்ட இயக்குநர் நிருவாகத்திலுள்ள அரசினர் மருத்துவ நிறுவனங்களில் ஊராட்சி மன்றங்களால் நிருவகிக்கப்படுபவர்களின் தேவைக்காக எக்ஸ்ரே டெவலப்பர்கள், ஃபிக்சஸ் ஆகியவைகள் வழங்குவதற்கும், அப்சார்பெண்ட் பஞ்சு, கம்பளம் வழங்குவதற்கும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர், மக்கள் நல் வாழ்வுப்பணி, குடும்ப நலத்திட்டம் (கணக்கு) அவர்களால் 1972 ஜனவரி 10-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2·00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் ஆகியவைகளுக்கு மக்கள் நல்வாழ்வுப்பணி குடும்ப நலத்திட்ட அலுவலகம், சென்னை-6க்கு 1971 டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 10·37 (ரூபா பத்து காசுகள் 37 மட்டும்) $3\frac{1}{2}$ சதவிகித விற்பனைவரி மீது 5 சதவிகித சர்ச்சார்ஜ் வரி உள்பட) இக்கட்டணத்தை இந்திய ரிசர்வ் வங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். இத்தொகை '' XXII ஓரே சலானில் ஜி. மிஸ்ஸலேனியஸ்—ஐ மக்கள் நலப்பணி குடும்ப நலத்திட்ட இயக்குநர்—இதர வரவினங்கள் '' என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரியை ''XII'' விற்பனை வரி அரசு விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரவினம்—பொது விற்பனை வரி '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவத்தைக் கோரும் மனுவுடன் ஒரிஜினல் சலான்கள் இணைக்கப் படவேண்டும். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-க்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி நேசனலிட்டி சான்றிதழ் தாசில்தாரால் கையொப்பமிடப்பட்டும், ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000க்கும் மேல் இருக்குமானல் வருமான வரி வெரிபிகேசன் சான்றும், ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு ரூ. 1,000க்கு மேற்பட்டிருக்குமானல் விற்பனை வரிச்சான்றும் அல்லது அரசிதழ் அலுவலரின் ஒப்பந்தத்துடன் கூடிய சரியான நகல்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.

எம். பழனிசாமி,
மக்கள் நல்வாழ்வுப்பணி
குடும்ப நலத்திட்டம்,
(கணக்குகள்) உதவியாளர்—

(த. 22)

ஒப்பந்தப் புள்ளி

தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டை அரசினர் விதைப் பண்ணையில் விதை நெல் பதனப்படுத்தும் இயந்திர அமைப்புகளை வழங்கவும் நிருமாணிக்கவும் ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குக் கடைசி நாள் 6—12—1971 மாலை 3 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3·30 மணிக்கு அடியிற் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் பிரிக்கப்படும்.

வளர்நிலை ஆராய்ச்சிப் பொறியாளர்.
வட்டார ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர்—3.

(த. 8)

வேலை வாய்ப்பு

புதுக்கோட்டை, பார்ஸ்டல் பள்ளியில் புத்தகம் கட்டும் கண்காணிப்பாளர் (பைண்டிங் மேஸ்திரி) வேலை ஒன்று நிரந்தரமாகக் காலியாக உள்ளது. அதற்குக்கீழ்க்கண்ட தகுதியுள்ளவர்கள் '' கண்காணிப்பாளர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம் '' என்ற முகவரிக்கு 6—12—1971-க்குள் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

தகுதி

1. வயது :—30 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும் (மலை ஜாதியினர், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 35 வயதுக்குட்பட்டிருக்க வேண்டும்).

2. கல்வித்தகுதி :—அரசாங்க தொழில் நுட்பத் தேர்வில் தேறியிருக்க வேண்டும். இரண்டு ஆண்டுகள் புத்தகம் கட்டும் பணியில் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. உடல் :—மருத்துவ பரிசோதனைகளில் உடல் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

4. சம்பள விகிதம் :—
ரூ. 140—3—155—4—175—5—210 பிரத்தியேகச் சம்பள மாதம் ரூ 5.

5. பதவி, வேலைத் திறனைப் பொறுத்து நிரந்தரமாக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் போது தங்கள் சொந்தச் செலவிலேயே வரவேண்டும்.

ரா. சேரலாதன்,
கண்காணிப்பாளர்.

இடம் : புதுக்கோட்டை,
15–11–1971.

(த. 27)

தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்: மதுரை, தொழிற்பேட்டை வட்டார சோதனைக் கூடத்திற்கு மின்சார வயரிங்குக்குப் பேனல் போர்டுகள் சப்ளை செய்வதற்காக.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காகப் பொருள்களை வழங்குவதற்காக தொழில்துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் 10—12—71 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. கட்டுத் தொகை .. .. ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்).
2. மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. ரூ. 5-20 காசு.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம். 1 மாதம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், (வி) தெற்குக் கோட்டம், தொழில்துறை, மதுரை-7 என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) தெற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 20—11—71 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 5·20 ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ' ''. இண்டஸ்டிரீஸ், ஏனைய ரசீட்ஸ்'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (வி) (கட்டுமானம்) தெற்குக் கோட்டம் தொழில்துறை, தொழிற்பேட்டை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (வி) (கட்டுமானம்) தெற்குக் கோட்டம், தொழிற்துறை, மதுரை அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி மத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்
கட்டுமானப் பகுதி

சென்னை-2
(த. 14)

குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

எண். 1372/71/SD1

நாள் 19—11—1971.

பொருள் : கோயம்புத்தூர் சாக்கடைத் திட்டம்—மண்டலம் 3—பகுதி நான்கு—முதல் கட்டம்—சாக்கடை நீர் கொண்டு செல்லும் குழாய் போடுதலும் இணைத்தலும் அதன் சம்பந்தப்பட்ட வேலைகளும்.

பார்வை : இவ்வலுவலக ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு எண். 1372/எஸ்.டி.1 நாள் 21—10—1971.

மேற்படி வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் கடைசித் தேதி 22—12—1971 மாலை மூன்று மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைத் தேதியும் 20—12—1971 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மற்ற நிபந்தனைகளில் மாறுதல் எதுவுமில்லை.

சே. ம. சாகுல் அமீத்,
மேற்பார்வைப்
பொறியாளர், கோவை.

(த.72 அ)

உணவுப் பொருள் வழங்கல்

காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனைக்கும், தாம்பரம், திருவள்ளூர், பொன்னேரி, மதுராந்தகம், திருத்தணி, பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், மாதவரம் பால் பண்ணை ஆகிய அரசினர் மருத்துவ மனைகளுக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து ஆரம்பித்தோ அல்லது அந்தந்த நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்படும் தேதி முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரையுள்ள காலத்திற்கு உணவுப் பொருட்களும் மற்றும் வைத்திய நிலையத்திற்கு தேவையான இதரப்பொருட்களும் சப்ளை செய்வதற்காக முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புக்கள் (ஒப்பந்தங்கள்) வாங்கப்படும். ஒப்பந்த அறிவிப்புகள் (Tender) 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணி வரை அந்தந்த மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அல்லது மருத்துவ அலுவலர்களால், தமிழக ஆளுநர் அவர்களுக்காக வாங்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு நமூனாவும் (Tender form) மருத்துவமனைக்குச் சப்ளை செய்ய வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலும் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய நோட்டீசும் வேண்டுவோர் ரூ.5.00-ஐ ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது அதன் கிளை பாங்குகளிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ '' XXIII. Medical—J. Miscellaneous '' என்ற பிரிவின் கீழ்ச் செலுத்தி அந்தச் சலானை அந்தந்த வைத்திய நிலையங்களில் அதிகாரிகளிடம் கொடுத்து மேற்கண்ட படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த அறிவிப்பு நமூனா (Tender Form) வாங்குவதற்கு 3½ சதவீதம் விற்பனை வரியை ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது அதன் கிளை பாங்குகளிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ '' XII. Sales Tax —Receipts under the State Sales Tax Act—General Sales Tax '' என்ற பிரிவின் கீழ் கட்டி அந்தச் சலானை அந்தந்த மருத்துவமனைகளில் மேற்குறிப்பிட்ட படி ரூ. 5 (ஐந்துக்கான) சலானுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பு

1. ஒப்பந்தங்களுடன் பெரும் புள்ளிச் சான்றிதழும், தேசிய இனச் சான்றிதழும் அதற்குரிய படிவத்தில் சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தப் (சால்வன்சி சர்டிபிகேட்) பெரும் புள்ளிச் சான்றிதழ் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின் வாங்கியதாகவும், தாசில்தார் அல்லது தலைமையகத்துணைத் தாசில்தாரால் கொடுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதனுடைய உண்மை நகலை அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் கையொப்பம் பெற்றும் சமர்ப்பிக்கலாம்.

2. ஒப்பந்த நிபந்தனைகளின் படி வருமான வரி, விற்பனை வரி சான்றிதழ்கள் ஒப்பந்தத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்த அறிவிப்புக் கொடுக்க எவரும் ஒப்பந்த அறிவிப்புக் கொடுத்த பின் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலருடன் எந்தக்கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது.

மாவட்ட மருத்துவ அலுவலர்,
10-11-71 காஞ்சிபுரம்.
(த.61)

தொழில் வணிகத் துறை

எண். 19427/டி.பி./டி.6/க்யூ/71, நாள் 15-11-1971.

வேலையின் பெயர்: ஓசூர், காட்பாடி, அரக்கோணம், திருவண்ணாமலை, அம்பத்தூர் பகுதிகளில் உள்ள பணிமனைக் கூடங்களுக்கு சுழற்கதவுகள் (ரோலிங் சட்டர்கள்) வழங்குதல்—நிறுவுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், மேற் கண்ட பணிகளுக்காகத் தயாரிப்பாளர்கள் விற்பனையாளர்களிடமிருந்து 10-12-1971 மாலை 3 மணி வரை தொழில் வணிகத்துறையின் நிருமாணப் பிரிவு மேற்பார்வைப் பொறியாளரிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அதேநாள் மாலை 3-10 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரால் (35-2, உட்ஸ்ரோடு, சென்னை-2), அப்போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—கே. 2.
2. கட்டுத் தொகை—ரூ. 625
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—விநியோக ஆணைத் தேதியிலிருந்து ஒரு மாதம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 1-12-1971 முதல் அலுவலக நேரங்களில் நிருவாகப் பொறியாளர் (சி) அம்பத்தூர் கோட்டம், தொழில் வணிகத் துறை, 35-2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அலுவலகத்தில் இலவசமாகக் கிடைக்கும்.

கட்டுத் தொகை ஷெட்யூல்ட் பாங்குகளில் எடுக்கப்படும் டிமாண்ட் டிராப்டாகவும் கால் ரசீதாகவும், செல்லான்களாகவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

நிருவாகப் பொறியாளர் (சி) அம்பத்தூர் கோட்டம், சென்னை-2 என்பவர் பெயரில் இந்தக் கட்டுத் தொகைக்கான, ஷெட்யூல் பாங்குகளில் எடுத்து அனுப்பப்படும் டிமாண்ட் ட்ராப்டுகள், மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசின் செக்யூரிட்டி சம்பந்தப்பட்ட அஞ்சல் நிலையச் செக்யூரிட்டுகள் நடப்பு மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்கள் சம்பந்தப்பட்ட அஞ்சல் நிலையங்களில் தகவலுடன் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிக் கேரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர் (சி)
(த.65)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால், வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17 சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப்பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 22—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக் காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் ..	கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றும் கட்டம் — தலைமை நீரேற்று நிலையம்—நீரேற்றிகளும் அதன் உபகரணங்களும் அளித்தல்—நிறுவுதல்.
ஒப்பந்த வகை ..	மொத்தத் தொகை.
முன் வைப்புத்தொகை :	ரூ. 5,640 (ஐயாயிரத்து அறுநூற்று நாற்பது).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.	ஆறு மாதம்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை.	ரூ. இருபதும் காசு எழுபத்தி ஐந்தும் மட்டும். (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி பொதுச்சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து, 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 18—12—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்

(கு. 37)

நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை
பாம்பன் வட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகட்கு அரக்கு முத்திரையிட்ட இன வாரி ஒப்பந்தப் புள்ளிகள் நெ. 4, ஸ்ரீநகர் காலனி, சென்னை-15, மேற்பார்வைப் பொறியாளர், பாம்பன்வட்டம் அலுவலகத்தில் 8—12—1971 மாலை 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்	வேலையின் விவரமும்.	கட்டுத் தொகை.
		ரூ.
1	முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மீ. 43 (மைல் 26/7) பாலம் அமைத்தல்.	6,490

ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், நமூனக்கள், வரைபடங்கள், முதலியவற்றைத் தனிக் கோட்டப் பொறியாளர், திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25.90 செலுத்தி 1—12—1971 முதல் 7—12—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப் பணம் எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத் தொகையைத் தனிக் கோட்டப் பொறியாளர், திருமானூர் பால வேலை, தஞ்சாவூர் தனிக் கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக் கோட்டப் பொறியாளர், திருமானூர் பால வேலை , தஞ்சாவூர் பெயரில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன் வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பாம்பன் வட்டம்.

(த.49)

பொதுப்பணித் துறை
செங்கற்பட்டு வட ஆர்க்காடு பெருவட்டம்

வேலையின் பெயர்—வடஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் அரசினர் மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட பிரிவுக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்டப் பணிக்காகச் செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் 10—12—1971 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை ... ... மொத்தத் தொகை.
2 முன் வைப்புத் தொகை ..ரூபாய் 3,500.
3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங் ரூ. 20.60 விற்பனை வரி 3 சதகளின் விலை வரை படத்துடன் விகிதம் சேர்த்து.
4 முடிக்க வேண்டிய காலம் 6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் (வேலூர்-1) அலுவலக நேரங்களில் 26-11-1971 முதல் 8—12—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் '' P. W. Remittances III Other Remittances '' என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, கட்டடங்கள் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி ரூ. 0.60 (காசுகள் அறுபது மட்டும்) கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்கில் '' XII Sales Tax (b) receipt under State Sales Tax Act General Sales Tax Act '' என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்தில் விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறித்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்று பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். மற்று எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
செங்கற்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த.57)

அரசாங்கக் கீழ்ப்பாக்க மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்குத் தேவையான 1972 ஜனவரி 1-ஆம் தேதி முதல் 1972 ஜூன் 30-ஆம் தேதி முடிய உள்ள காலத்திற்கான மருந்து வகைகள், இரண சிகிச்சை உபகரணங்கள் முதலிய வற்றின் தேவைகளை நிரப்புவது பற்றிய ஒப்பந்த அறிவிப்பு.

முத்திரை ஒப்பந்தங்கள் (2) நகல்களில்) 20—12—1971 அன்று பிற்பகல் 3 மணி வரை மருந்துகள், இரண சிகிச்சை உபகரணங்கள் முதலியவற்றின் தேவைகளின் நிரப்புவது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்களுக்காக ரூபாய் 2(ரூபாய் இரண்டு மட்டும்) ''XXIII. Medical Miscellaneous'' என்ற தலைப்பிலும் மேற்படி ரூபாய் இரண்டுக்கான விற்பனை வரியை '' XII. Sales Tax Receipt under the Sales Tax Act '' என்ற தலைப்பிலும் கட்டி மேற்படி இரண்டு வங்கி ரசீதுகளுடன் கூடிய விண்ணப்பத்தின் பேரில் இம்மருத்துவமனை அலுவலகத்திலே ஒப்பந்த பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரியப்படுத்தப்படுகிறது. மேற்படி ரூபாய் 2 (ரூபாய் இரண்டு மட்டும்) எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்றும் தெரியப் படுத்தப்படுகிறது.

குறித்த தேதியும், நேரமும் கடந்து வரும் ஒப்பந்தங்களும், முத்திரையிடப்படாத உறையில் வரும் ஒப்பந்தங்களும், முன்பண வைப்பு வங்கி இரசீதில் (சலான்) இல்லாத ஒப்பந்தங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.

எச். டி. சிங்,
கண்காணிப்பாளர்,
அரசினர் கீழ்ப்பாக்கம்
மருத்துவக் கல்லூரி
மருத்துவ மனை.

(அ. 31)

பொறியியல் பணித்துறை.

திருச்சி வட்டம், திருச்சிராப்பள்ளி—1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

எண். (1)	வேலையின் பெயர். (2)	ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசி தேதியும் நேரமும். (3)	பிணைத் தொகை. (4)	ஒப்பந்த முறை. (5)	முடிக்க வேண்டிய காலம். (6)	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. (7)	விற்பனை வரி. (8)	ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கடைசி தேதி. (9)	விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் தேதியும் நேரமும். (10)
			ரூ.			ரூ.	ரூ.காசு.		
1	திருச்சியில் உள்ள அரசினர் ரயில்வே போலீஸ் பிரிவில் ஒரு போலீஸ் தலைமைச் சேவகர் குடியிருப்பும், 20 போலீஸ் சேவகர்கள் குடியிருப்புகளும் கட்டுதல்.	24-12-71 மாலை 3 மணி.	3,200	எல்.எஸ்.	பத்து மாதங்கள்.	25	0.88	13-12-71	24-12-71 மாலை 3-30 மணி.
2	திருச்சியில் உள்ள சிந்தாமணி போலீஸ் குடியிருப்புப் பிரிவின் 4 போலீஸ் தலைமைச் சேவகர்கள் குடியிருப்பும், 6 போலீஸ் சேவகர் குடியிருப்பு வீடுகளும் கட்டுதல்.	24-12-71 மாலை 3-00 மணி.	2,500	எல்.எஸ்.	எட்டு மாதங்கள்.	25	0.88	13-12-71	24-12-71 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் (ஒவ்வொரு வேலைக்கும் தனியே) முறையே அரசின் கருவூலத்தில் XXXVII Public works-State Revenue—Miscellaneous மற்றும் XII Sales Tax (b) receipts under the State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தி இந்தச் சலான் மேற்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமையுண்டு.

மற்ற விதிகளும், விவரங்களும் விரிவாக ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த.54)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : மதுரை மாவட்டம்–நிலக்கோட்டை தாலுகா– பட்டிவீரன்பட்டி—ஒரு போலீஸ் ஆய்வாளர், இரு போலீஸ் தலைமைச் சேவகர், பதின்மூன்று போலீஸ் சேவகர் ஆகியோருக்கான இருப்பிடக் கட்டடம் அமைத்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர் மதுரை வட்டம், மதுரை—2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 29–12–1971 மாலை 3·00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு மாலை 4·00 மணிக்குத் திறக்கப்படும். 20—12—1971 முதல் 27—12—1971 வரை ஒப்பந்த தஸ்தாவேஜுகள் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்த முறை:—

தொகை மதிப்பு.

கட்டுத் தொகை ரூ. 4,300;

வேலை முடிவுக்கெடு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்த தஸ்தாவேஜுக்கு விலையான ரூ. 20 (ரூபாய் இருபது) தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ P. W. Remittances III OR'' என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர் பெரியகுளம் கோட்டம்—பொதுப்பணித் துறை பெரியகுளம், அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0·75 காசு விற்பனை வரியை 'XII Sales Tax (d) Miscellaneous' எனும் தலைப்பிலுமாக, ஒரே சலானில் செலுத்திச் சலானைத் தாக்கல் செய்து, ஒப்பந்த தஸ்தாவேஜுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சலானைத் தாக்கல் செய்த பிறகே ஒப்பந்த தஸ்தாவேஜுகள் வழங்கப்படும்;

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் ''Deports Call'' இரசீது அல்லது மாநில அரசாங்க செக்யூரிடிகள் அல்லது ஷெட்யூல் பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட 14 பாங்குகளின் உத்ரவாதம் ஆகிய உருவிலே கட்டுத் தொகை டிபாசிட் ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில மின்சார சர்டிபிகேட்டுகளும் கூட, மார்க்கட் மதிப்பில் 5 சத விகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்
பொதுப்பணித்துறை,
மதுரை வட்டம், மதுரை.

(த. 79)

கட்டடம் கட்ட..

வேலையின் பெயர்—

சென்னை அரசினர் மனநோய் மருத்துவ மனையில் பணி புரியும் செவிலியர்களுக்கான (நர்சஸ்) குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைப்பு அறிக்கையின்படி 9-11-71 என்ற கடைசி நாள் 8-12-71, மாலை 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 1-12-71 முதல் 7-12-71 வரை எல்லா அலுவலக நேரங்களிலும் பெறலாம்.

மற்ற நிபந்தனைகளில் எந்த மாறுதலும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கை வட்டம்

(த-63)

வேலையின் பெயர்—

நந்தனம் அரசினர் கலைக்கல்லூரியில் கூடுதல் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி தரக் கடைசி நாள் 15-11-71 மாலை 3 மணி என்று இருந்த கெடு 9-12-71 மாலை 3 மணி வரை ஒத்திவைக்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை, செங்கற்பட்டு வட்டம், பொதுப்பணித் துறை, சென்னை, 5-ல் 1-12-71 லிருந்து 8-12-71 வரை எல்லா அலுவல் நேரத்தில் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்
சென்னை, செங்கை வட்டம்

(த-62)

சென்னை மியூசியம் தியேட்டர் அரங்கில் நவீன முறையில் இருக்கை வசதிகளைத் (புஷ்பேக் சேர்கள்)28, டிப அப் சேர்கள் 485, ஆக மொத்தம் 513 சேர்கள்) தயாரித்து அமைத்துக் கொடுப்பது பற்றிய வேலைகளுக்காக, உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 20—12—1971 மாலை 4·00 மணிவரை வரவேற்கப் படுகின்றன. பல்வேறு வகைகளிலுமாக சேர் ஒன்றுக்கு விலை விகிதம் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி விவரங்களை இயக்குநர், அரசு அருங்காட்சியகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11·00 மணியிலிருந்து பிற்பகல் 3·00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்,

எஸ். டி. சத்தியமூர்த்தி,
இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை—8.

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

உணவுப் பொருள் வழங்குதுறை

1972-73-ஆம் ஆண்டுக்கு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தமிழ்நாடு ஆளுநர் ஆணைப்படியும், அவர் சார்பாகவும், கட்டளைப்படியும், வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ நிலையங்களுக்கு, உணவுப் பொருட்கள் முதலியவை கொடுப்பதற்கான ஒப்பந்த விவரப் பட்டியல்கள் (டெண்டர்) வரவேற்கப்படுகின்றன.

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே கொடுக்கப்பட்டுள்ள மருத்துவ நிலையங்களுக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளும் அதிகாரியினால் தெரிவிக்கப்படும் தேதியிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் தேதி முடிய தேவைப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான பொருட்களையும் அளிப்பதற்கான அனுப்ப வேண்டிய ஒப்பந்த விவரப் பட்டியலை (டெண்டர்) வரும் 1972-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். முத்திரையிடப்பட்ட உறையினுள் வைக்கப்பெற்ற ஒப்பந்தப் புள்ளியை அந்தந்த மருத்துவ நிலையத் தலைமை மருத்துவ அலுவலரிடம் கொடுத்துக் கொள்ளலாம்.

அரசினர் காவலர் மருத்துவ நிலையத்திற்கான ஒப்பந்தங்கள் வேலூரில் மாவட்ட மருத்துவ அலுவலரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

அரசினர் பெண்ட்லண்ட் மருத்துவநிலையம், வேலூர்.

அரசினர் காவலர் மருத்துவ நிலையம், வேலூர்.

அரசினர் எலும்புருக்கிநோய் நிலையம், பென்னாத்தூர்.

அரசினர் மருத்துவ நிலையம், திருவண்ணாமலை.

ஷை	திருப்பத்தூர்.
ஷை	குடியேற்றம்.
ஷை	வாலாஜாப்பேட்டை.
ஷை	அரக்கோணம்.
ஷை	வந்தவாசி.
ஷை	ஆரணி.
ஷை	செய்யார்.
ஷை	போளூர்.
ஷை	செங்கம்.
ஷை	சோளிங்கர்.
ஷை	ஆம்பூர்.
ஷை	கலவை.

அரசினர் பெண்கள் குழந்தைகள் மருத்துவ நிலையம், வாணியம்பாடி.

அரசினர் பெண்கள் குழந்தைகள் மருத்துவ நிலையம், பேர்ணாம்பட்டு.

அரசினர் மருந்தகம், மெயில்பட்டி.

ஷை	சாத்தனூர் அணை.
ஷை	தனிப்பாடி.
ஷை	சேத்துப்பட்டு.

அரசினர் தொழுநோய் தடுப்புக் காலனி, திருவண்ணாமலை

ஷை	போளூர்.
ஷை	அரக்கோணம்.

அரசினர் தொழுநோய் மருத்துவ நிலையம், திருவத்திபுரம்.

அரசினர் மார்பு மருத்துவ நிலையம், திருவண்ணாமலை.

அச்சிட்ட '' ஒப்பந்தப் படிவங்கள் ஒப்பந்த விதிகள் '' தேவைப்படும் பொருட்களின் பட்டியல் முதலியன பெறுவதற்கு ரூபாய் 5·18 (ரூபாய் ஐந்தும் பதினெட்டு காசும் விற்பனை வரி உட்பட) கீழ்க்கண்ட அலுவலகங்களுள் ஒன்றில் செலுத்தலாம்.

(1) ரிசர்வ் வங்கி.

(2) அரசு வங்கிகளின் ஏதாவதொரு கிளை (ஸ்டேட் வங்கி).

(3) அரசினர் கருவூலங்களுள் ஒன்று.

கட்டணத் தொகை ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) ''XXIII மெடிகல் ஜி. மிஸ்லேனியஸ்'' என்னும் தலைப்பின் கீழ் செலுத்தி அந்தச் சலானை மனுவுடன் கொடுத்துப் படிவங்களைப் பெற வேண்டும். பணம் ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது. (0·18 காசு) விற்பனை வரியைக் XII S.T. என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பு:—1. ஒவ்வொருவரும் தங்கள் ஒப்பந்தத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தாசில்தார் ஒப்பமிட்ட '' பொருளாதாரச் சான்றிதழ் '' (சால்வன்சி சர்டிபிகேட்) மூலப்படியோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின் ஒப்பம் பெற்ற நகல் படியோ அனுப்பி வைக்க வேண்டும்.

2. ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தம் குறிப்பிட்ட தேதிகளில் பெறப்பட்டதும், பிறகு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எவ்விதக் கடிதமும் பெறப்பட மாட்டாது. ஒப்பந்தங்களின் முடிவை அறிவிப்பதைத் தவிர வேறு எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் அனுமதிக்கப்பட மாட்டாது.

எர்னஸ்ட் ஜே. டேவிட்,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
வட ஆர்க்காடு, வேலூர்.

வேலூர் (வ.ஆ.),
12—11—1971.
(த. 44)

மின்சார வாரியம்

—கோதையாறு நீர்மின் திட்டம்—

குறிப்பு எண்: PS–SUR-1
Supply of Junglewood planks and scantlings

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளுடன் ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுறையில் எழுதப்பட்டு, மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 27–12–1971 பிற்பகல் 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன் திறக்கப்படும்.

(2) ஒப்பந்தப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 2·10 (ரூபாய் இரண்டும் காசு பத்து மட்டும் விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்திக் கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

(3) மேலே குறிப்பிட்டுள்ள சப்ளைக்கான கட்டுத் தொகை (earnest money deposit) ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் செக்குகள் (cheques) ஏற்கப்பட மாட்டா. கட்டுத் தொகையின்றிச் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் (Bank Demand Draft) அனுப்புவதனால் ஒப்பந்த கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்துக்கான கட்டுத் தொகையை ஒப்பந்தத்துடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தத்துக்காக ஒப்பந்ததாரரால் கட்டபட்டத் தொகையையோ, வேறு தொகையையோ, ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(4) ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்குரியவர் இவ்வலுவலகத்தால் குறிப்பிட்ட நாட்களுக்குள் பிணை வைப்புத் தொகையை (Surity Deposit) செலுத்த வேண்டும். இப்பிணை வைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து சப்ளை செய்ய வேண்டிய பொருளின் மதிப்பில் 5 சத வீதம் இருக்கும். இந்தப் பிணை வைப்புத் தொகைக்கும், கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்தத் தொகையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி பொருட்களைத் திருப்திகரமாக சப்ளை செய்த பிறகு திருப்பித் தரப்படும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்குரியவர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும், ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி சப்ளை செய்தலிலிருந்து பின்வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.

(5) இவ்வலுவலகத்தின் மறுபாரத்தில் இல்லாத ஒப்பந்தங்களும், குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்ட பொருட்கள் சப்ளை செய்தலை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கு பகிர்ந்து வழங்குதற்கோ அல்லது சில ஒப்பந்தங்களையோ எல்லா ஒப்பந்தங்களையுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

(6) ஒப்பந்தப் பிரதிகள் சாதாரண அஞ்சலிலேயே அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படினும், ஒப்பந்தப் பிரதிகள் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுதலுக்கு உரியதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம், பெருமாள்புரம், திருநெல்வேலி-7.

(த.40)

மறு ஒப்பந்தப் புள்ளி

வனத்துறை

வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை '' வனப்பொறியாளர், திருச்சி'' அவர்கள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

1. ''சிக்கள்ளி—திக்னுரி சாலை அமைத்தல். 3·8 கிலோ மீட்டர் தலைமலை வனச்சரகம் கோவை வடக்கு வனக்கோட்டம்.''

கட்டுத்தொகை ரூ. 1,530 (இ.எம்.டி)

ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 8-12-1971 நேரம் முறையே மாலை 3·00 மணி, 3·05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை '' வனப்பொறியாளர், 1-ஏ ராயல்ரோடு, கன்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி-1'' எனும் முகவரியிலிருந்து ரூ. 1·04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமோ செலுத்தி 25-11-1971 முதல் 5-12-1971 முடிய அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப்பொறியாளர், திருச்சி.

17—11—1971.

(த. 78)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவு நீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15—12—1971 (புதன் கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் ..	ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—முதல்நிலை—50,000 லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட நீர்த்தொட்டி கட்டுதல்.
ஒப்பந்த வகை ..	மொத்தத் தொகை.
முன் வைப்புத் தொகை.	ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்). இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை அனுப்புதல் கூடாது.
வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.	நான்கு மாதங்கள்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை.	ரூபாய் ஐந்து காசு பதினெட்டு மட்டும் (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லைநகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 11—12—71 (சனிக்கிழமை) மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(த. 59) **மேற்பார்வைப் பொறியாளர்** (பொ. சு.)

ஏல விளம்பரம்

குழித்துறை நகராட்சி

இந்த நகராட்சிக்குச் சொந்தமான வெட்டு வெளி பஸ் நிலையம் இருக்கும் கேண்டீன் நடத்தும் உரிமையை 1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இந்த நகராட்சியில் வைத்துப் பகிரங்கமாக ஏலம் செய்யப்படும். ஏலம் கேட்க விரும்புவோர் முன்பணம் செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம். காண்டிராக்ட்டு கமிட்டியின் ஒப்புதலுக்குப் பிறகுதான் மேற்படி கேண்டீனை அனுபவிக்கும் உரிமை வழங்கப்படும். இந்த நகராட்சியின் 20—1—1971-ஆம் தேதிய 1971–72-ஆம் ஆண்டு குத்தகை ஏல விளம்பரத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் விடப்படும்.

விவரம்.	காலம்.	கட்டுத் தொகை.
(1)	(2)	(3)
கேண்டீன் I	15—12—1971 முதல் 31—3—1972 வரை.	டெபாசிட் ரூ. 50. கரண்டு டெபாசிட் ரூ. 50.

டி. பி. கோபு, பி.காம்.,
ஆணையர்.

குழித்துறை நகராட்சி,
குழித்துறை,
18—11—1971.

(த. 71அ)

ஒப்பந்தப்புள்ளி

குழித்துறை நகராட்சி

1971 டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிவரை குழித்துறை நகரமன்றத்தின் தேவைக்கு 18×11 அங்குலம் அளவில் 60 கக்கூஸ் டின் சப்ளை செய்வதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன. அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்தங்கள் திறக்கப்படும். கூடுதல் விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். உத்திரவு கிடைத்த 15 தினங்களுக்குள் எல்லா டின்களையும் சப்ளை செய்து விட வேண்டும்.

விவரங்கள்.	எண்ணம்.	கட்டுத் தொகை.
கக்கூஸ் டின் மூடி, கைப்பிடி உட்பட—24 கேஜ் 18×11 அங்குலம்.	60	ரூ. 50

டி. பி. கோபு, பி.காம்.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
குழித்துறை,
18—11—1971

(த. 71ஆ)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

பார்வை எண்: ந: எண் 1651/66/வ 6/நாள் 18-11-71

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 23-12-71 மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக் படும்.

(ஒப்பந்த வகை—கே. 2)

வேலையின் விவரம்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.	விற்பனை வரி.
	ரூ.	ரூ.	ரூ. காசு.
வளவனாற்றின் குறுக்கே 22.4 கி: மீ-ல் (Regulator) கடை ஒழுங்கை கட்டுதல்.	6,000	10.00	0·35

1: ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் 6-12-71.

2. பிணைப்பணம் (E. M. D.) நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து. வடிகால் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

3: ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் ''பொதுப் பணித்துறை செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை'' என்னும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், பொ.ப.து. வடிகால் கோட்டம், திருவாரூர் என்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் ''XII—விற்பனை வரி பி. பற்று சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்—பொது விற்பனை வரி'' என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 21-12-71 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின் நேர் உதவியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் பிறகு வரும் விண்ணப்பங்கள் சாதாரணமாக கவனிக்கப்பட மாட்டாது.

அ. சேஷாத்திரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்,
தஞ்சாவூர்.

18—11—1971

(த.74)

குடிநீர், வடிகால் வாரியம்

வேலையின் பெயர் :

காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்குத் திட்டம்—முதல்நிலை—1-வது பகுதிக்கு 2·50 இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. நீர்த்தேக்கம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மேற்கண்ட பணிக்காக இந்தத் துறை அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிமிருந்து துறையின் படிவத்தில் அனுப்பப்படும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரிய மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்ட மேற்பார்வைப் பொறியாளரால், எண். 52, கெங்கு ரெட்டி ரோடு, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவருடைய அலுவலகத்தில் 29—12—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—முழுத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 1,620.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதம்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10·35.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் தொகையை நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், வாணியம்பாடி என்பவர் கணக்கில், ''P.W. III O.R.'' என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கான தொகையை ''XII. Sales Misc. I—General Sales-tax'' என்ற தலைப்பிலும் தனித்தனி செலானில் செலுத்தவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) கோட்டம், குடிநீர், வடிகால் வாரியம், 301, ஜமாத்ரோடு, வாணியம்பாடி என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ)
குடிநீர், வடிகால் வாரியம்.

(த.69)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை
(தேசிய நெடுஞ்சாலை)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிடப் பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் பத்திரங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2 அவர்கள் எண் 11 ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்தி லுள்ள அவருடைய அலுவலகத்தில் 22-12-1971 தேதி (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் (அலு வலகக் கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவ ருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங் கள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்கு திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	முன்பண வைப்புத் தொகை.	ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் விலாசம்.
இராமநாதபுரம் மாவட்டம்—	ரூ.	
தேசிய நெடுஞ்சாலை 49-ல் கி.மீ. 100/7-ல் (மைல் 62/7)-ல் உள்ள பாலத்தை திரும்பக் கட்டுதல்.	4,400	கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை வேலைகள்), மதுரை.

ஒவ்வொரு கோப்புக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்துமூலம் வேண்டுகோள் விடுப்ப வதன்மூலம் கோட்டப் பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2 விலாசத்திலிருந்து 15-12-71 முதல் 21-12-71 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங் களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், வரைபடங்கள் முதலியனவற்றைப் பெறலாம். இத்தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன் பொருள் வைப்புத்தொகை யை மேற்கண்ட தனி கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத் தியதற்கான செலானை ஒப்பந்தப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளரின் பெயரில் மாற்றப்பட்ட டெபாசிட் அத் தாட்சிகளும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களையும், டிமாண்ட் பத் திரங்களையும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், முன்பொருள் வைப்புத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

வங்கி உத்தரவாதங்களை சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் பத்திரங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப் பந்தப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கென ரசீது இல்லாத ஒப் பந்தப் பத்திரங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2.

(த.77)

ஒப்பந்தப்புள்ளி

குழித்துறை நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்வதற்கென மூடிமுத்திரையிடப் பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படாமல் ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். அதே தேதியன்று பிற்பகல் 4-30 மணிக்குத் திறக்கப்படும். குறிப் பிட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் முன் வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப் புள்ளிகளும் கண்டிப்பாக நிராகரிக்கப் படும். இதர விவரங்கள் அலுவலக நாட்களில் வேலை நேரங் களில் தெரிந்து கொள்ளலாம்.

வேலையின் விவரம்.	முன் வைப்புத் தொகை.	ஒப்பந்தப் படிவம் விலை.	வேலை முடிக்க வேண்டிய காலம்.
	ரூ. காசு.	ரூ. காசு.	
மரக்கறி சந்தையின் ரோட்டிற்கு தார் தளம் அமைக்க.	190 00	4 32	2 மாதம்.

டி. பி. கோபு, பி.காம்.,
ஆணையர்.

குழித்துறை நகராட்சி,
குழித்துறை,
18—11—1971
(த.71 இ)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள் வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச்சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத்துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில், மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர் களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

தொடர் எண்ணும் வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி.	ஒப்பந்தப் புள்ளிப் பெற கடைசித் தேதி.
	ரூ.	ரூ.			
1 திருச்சி— திருவெறும்பூர் துணைத் தொழில்கள் பேட்டையில் ஒரு பிளாக் கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக, தொழிலா ளர்களுக்கான மூன்று பிளாக்குகள் கட்டுதல்.	3,300	10·40	8 மாதங்கள்.	19—11—71	6—12—71
2 கும்பகோணம் தொழில் பேட்டையில் ஒரு பிளாக் கில் 6 குடியிருப்புகள் உள்ளதாக தொழிலாளர் களுக்கான ஒரு பிளாக் கட்டுதல்.	1,100	10·40	6 மாதங்கள்.	22—11—71	7—12—71

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ ''XXIX, Industries and other Receipts'' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம், 63, ரங்கநாதபுரம், புத்தூர், திருச்சி, அவர்களது கணக்கில் செலுத்தவேண்டும்.

கட்டுத் தொகையை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டு மானம்), திருச்சிக் கோட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கி யினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
(கட்டுமானப் பகுதி).

(த.92)

கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் இனை)

எண் : 52/71—72

கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் 15-12-1971-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணிவரை கீழ்க் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களை கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் 1-12-1971-ஆம் நாளிலிருந்து 14-12-1971-ஆம் நாள் வரை காலை 10-30 மணியிலிருந்து பிற்பகல் 3-00 மணி வரை கீழே குறிப்பிட்ட தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத்தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேர வேண்டிய நாளான 15-12-1971-ஆம் நாள் பிற்பகல் 1-00 மணி வரை தான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 15-12-1971-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களைத் தபாலில் பெற விரும்புபவர்கள் தபால் செலவையும் சேர்த்து அனுப்பவும்.

வரிசை எண்.	வேலையின் விவரம்.	வேலையின் சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களின் விலை.
	தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம். திருப்பூர்—			
	நான்கு குடியிருப்புகளுக்கான ஒரு அறைகொண்ட இரண்டு மாடி கட்டடங்கள் (4-ல் 1) (5 blocks) ஐந்து திருப்பூரில் கட்டுவது.			
		ரூ.	ரூ.	ரூ.
(1)	குரூப் B	1,00,000	1,500	ரூ. 10 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவிகிதம்.
(2)	குரூப் C	1,00,000	1,500	டிை
(3)	குரூப் D	1,00,000	1,500	டிை
(4)	குரூப் E	1,00,000	1,500	டிை
(5)	குரூப் F	1,00,000	1,500	டிை

11/22, திவான் பகதூர் சாலை,
இரத்தினசபாபதிபுரம் (அஞ்சல்),
கோயம்புத்தூர்-2.

இல. அரங்கநாத சாஸ்திரி,
நிர்வாகப் பொறியாளர்,
கோவை வீட்டு வசதிப் பிரிவு, கோயம்புத்தூர்-6.

(த. 81அ)

ஒப்பந்தப் புள்ளி

நிலநீர் இயக்ககம்

அறிக்கை எண் 4/71-72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான கால வரம்பு நீட்டிப்பு.

வேலையின் பெயர்.—36 அங்குலம் உள் விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்த மேற்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி அமைப்புகளும் (Pre-Stressed Concrete Pipes and specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக் கொண்டு சென்று சரியான வரிசைப் படியும், சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைப்புகளால் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகதில், முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கால வரம்பு 20-12-71 மாலை 3·00 மணிவரை நீட்டிக்கப்படுகிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 20-12-1971 அன்று மாலை 4·00 மணிக்கு, அச்சமயம் வந்திருக்கும், ஒப்பந்தப் புள்ளி தாரர்கள் முன்னிலையில் பிரிக்கப் படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 16-12-71 வரை கிடைக்கும். நிலநீர் இயக்குநர் அலுவலகம் 1-11-71 முதல் எண் 10ஏ, தண்டபாணி தெரு, தியாகராயநகர், சென்னை-17 என்ற முகவரியில் செயல்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
82, இராயப்பேட்டை, நெடுஞ் சாலை, சென்னை-4.

(த.94)

வீட்டுவசதி வாரியம், கொரட்டூர் கோட்டம்

கொரட்டூர் புதூர் முதல் கட்ட திட்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயரும் எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 8-12-1971 மாலை 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர் எண்.	வேலையின் விவரம்.	வேலையின் சுமார் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை. ரூ.
1.	குறைந்த வருமானப் பிரிவு தொகுதி—II ஒன்றில் நான்கு இல்லங்கள் உள்ளதாக இரண்டு தள அடுக்குகள் வீடுகள் வகையில் 10 பிளாக்குகள் கட்டுதல். கே.ஆர். 6/1837/71.	7,70,000	10,500	15 எஸ்.டி.
2.	குறைந்த வருமானப் பிரிவினர் வீட்டு வசதி தொகுதி ஒன்றில் நான்கு இல்லங்கள் உள்ள இரண்டு தள அடுக்குகள் வகையில் 10 பிளாக்குகள் கட்டுதல். கே.ஆர். 6/3079/71.	7,70,000	10,500	15 எஸ்.டி.
3அ.	நடுத்தர வருமானப் பிரிவினர் வீட்டு வசதி தொகுதி ந.வ.பி.தனி வீடுகள்—உள் வசதிகள் உட்பட ஏழு வீடுகள் கட்டுதல் (பகுதி I-ன் கீழ் டி.டி. 5/70-ன் படி 2 வீடுகள், டி.டி.6/75-ன் படி 2 வீடுகள். டி.டி. 7/70-ன்படி 3 வீடுகள் கே.ஆர். 6/1214-ஏ/71.	1,35,350	2,030	10 எஸ்.டி.
ஆ.	நடுத்தர வருமானப் பிரிவினர் வீட்டு வசதி ந.வ.பி. தனி வீடுகள்—உள் வசதிகள் உட்பட ஏழு வீடுகள் (டி.டி. 5/70-ன் படி 2 வீடுகள். டி.டி. 6/70-ன் படி 3 வீடுகள். டி.டி.7/70-ன் படி 2 வீடுகள்) பிரிவு கே.ஆர். 6/1214-பி/71.	1,30,500	1,960	10 எஸ்.டி
இ.	நடுத்தர வருமானப் பிரிவினர் வீட்டு வசதி ந.வ.பி. தனி வீடுகள்—உள் வசதிகள் உட்பட ஏழு வீடுகள் (டி.டி. 5/70-ன் படி 3 வீடுகள்).	1,28,600	1,930	10 எஸ்.டி.
4.	நடுத்தர வருமானப் பிரிவினர் வீட்டு வசதி தொகுதி ஒன்றில் நான்குள்ள இரண்டு தள அடுக்கு வீடுகள் மொத்தம் ஏழு வீடுகள் கட்டுதல். கே.ஆர். 6/1838/71.	6,02,000	9,030	15 எஸ்.டி.
5.	நடுத்தர வருமானப் பிரிவினர் வீட்டு வசதி தொகுதி ஒன்றில் நான்குள்ள இரண்டு தள அடுக்கு வீடுகள் மொத்தம் ஏழு பிளாக்குகள் கட்டுவதற்காக.	6,02,000	9,030	15 எஸ்.டி.
6.	தொழில் வினைஞர்களுக்கான பிளாட் திட்டப் படி தொகுதி ஒன்றில் 72 தனி வீடுகள் அமைப்பு. பேட்ச் ஒன்று கே.ஆர். 6/3160/70.	5,54,400	8.320	15 எஸ்.டி.
7.	தொழில் வினைஞர்களுக்கான பிளாட் திட்டப்படி தொகுதி ஒன்றில் 72 தனி வீடுகள் அமைப்பு பேட்ச் II. கே.ஆர். 6/3159/71.	5,69,800	8,550	15 எஸ்.டி.

வரைப்படங்கள் ஒப்பந்தப் புள்ளிகள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கோட்டூர் கோட்டம், அண்ணாநகர், சென்னை-40-ல் ஒப்பந்தப் பத்திரத்திற்கானத் தொகையைச் சலான் மூலம் செலுத்தி 1-12-1971-ல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் 8-12-1971 மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

டி. பி. காளியப்பன்,
நிர்வாகப் பொறியாளர் (கே)

(த. 36)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார திட்டம் (விநியோகம்)

கீழ்க்கண்ட பொருள்கள் வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட சாற்றுக் குறிப்பெண்ணும், தேதியும் குறியிட்ட விலை ஒப்பந்தங்கள் (Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் எதிரே குறிப்பிட்ட தேதியில் பகல் 12 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்ணும் பொருளும்.	சாற்றுக் குறிப்பெண்.	சாற்றுக் குறிப்பின் விலை. (வரி உட்பட) ரூ.	தவணைத் தேதி.
1. 33 KV. கேபிளின் மேல் மூடுவதற்கான 1 மீட்டர் நீளமுள்ள காங்கிரீட் 'P' வகை ட்ரப்கள்.	P. 134/71.	10	27—12—71
2. 11 KV. கேபிளின் மேல் மூடுவதற்கான 1 மீட்டர் நீளமுள்ள காங்கிரீட் 'P' வகை ட்ரப்கள்.	P. 135/71.	10	27—12—71
3. போர்ஸிலினால் செய்யப்பட்ட 200 ஆம்பியர்-500 வோல்ட் தாங்கும் சக்தியுள்ள ப்யூஸ் யூனிட்டுகள்.	P. 136/71.	10	29—12—71
4. போர்ஸிலினால் செய்யப்பட்ட 300 ஆம்பியர்-500 வோல்ட் தாங்கும் சக்தியுள்ள ப்யூஸ் யூனிட்டுகள்.	P. 137/71.	10	29—12—71
5. டின் சால்டர் 50 சதவீதம் (Tin Solder 50%)	P. 138/71.	10	12— 1—72
6. பிளம்பிங் மெட்டல் 30 சதவீதம் (Plumbing)	P. 139/71.	10	12— 1—72
7. அலுமினியம் கேபிள் இணைப்பு சால்டர் (Solder for Jointing Aluminium Cable)	P. 140/71.	10	12— 1—72

ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்ட முடிவுத்தேதிகளில் பிற்பகல் 3 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலம் தவறிவரும் விலை ஒப்பந்தங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேற்படி பொருள்களைப் பற்றி விவரங்களும் விலைப் புள்ளிகள் குறித்து அனுப்புவதற்கு குறிப்புத்தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச் சாற்றுக் குறிப்பு பிரதிகள் (Copies of specification) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு மேலே குறித்த விலைக்கு பிரதி ஒன்று ரூ. 10 விற்பனை வரி உட்பட) அக்கௌண்ட்ஸ் ஆபீசர், சென்னை மின் அமைப்பு, 157, அண்ணா சாலை, சென்னை-2 (Accounts Officer, Madras Electricity System, 157, Anna salai Madras-2) என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் (Demand draft) மூலமாகவே அல்லது நேரிலோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே ஒப்பப்படும். அஞ்சலில் அவை தவற நேரிட்டால் அதற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ, எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பந்ததாரர்களுக்கிடையே ஆணையை (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ஒருவர் பெயரில் வாங்கப்பட்டவிலையொப்பத்தாள்களும், ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகளும் மற்றொருவர் பயன்படுத்துவது செல்லாது. அரசாங்கக் கடன் பத்திரங்களையோ அல்லது மின்சார வாரிய பாண்டு (Board Bonds) களையோ கட்டுத் தொகைக்கு ஈடாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

கட்டுத் தொகை (Earnest Money Deposit) இல்லாமல் அனுப்பப்படும் விலை ஒப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒவ்வொரு ஒப்புச் சாற்று குறிப்புகளுக்கும் கட்டுத் தொகை ரூ. 1,000 (ஒரு ஆயிரம்) கட்ட வேண்டும்.

காசோலைகள் (Cheques) கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஆங்கிலத்திலுள்ள ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள்தான் (Copies of Specification in English only) விற்கப்படும்.

157, அண்ணா சாலை, சென்னை-2.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை மின்சாரத் திட்டம், சென்னை-2.

(த. 58)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், அவர்களால் எண். 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29—12—71 அன்று மாலை 3 மணி வரை, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏதேனும் ஒரு அலுவலர் அவர்களால் திறக்கப்படும்.

எண்.	வேலை விவரம்.	ஒப்பந்த முறை.	கட்டுத் தொகை. ரூ.	வேலை முடிவுறும் காலம்.	ஒப்பந்தப் பத்திர விலை. ரூ.
1	மேல்விஷாரம் குடிநீர்த் திட்டம்—I-வது பகுதியில் 2.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. நில மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல்.	மொத்தத் தொகை.	785	8 மாதங்கள்.	10.35
2	மேல்விஷாரம் குடிநீர்த் திட்டம் II. பகுதியில் 6 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நில மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல்.	மொத்தத் தொகை.	1,700	ஷை	10.35

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான பணத்தை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வாணியம்பாடி என்பவர் கணக்கில் "P.W. III OR" என்ற தலைப்பிலும், விற்பனைவரிக்கானத் தொகையை " XII Sales Tax—Miscellaneous I—General Sales Tax " என்ற தலைப்பிலும் தனித் தனி செலான்களாகக் கட்ட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 301, ஜமாது ரோடு, வாணியம்பாடி-3 அவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப் படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை வழங்க, கால நீட்டிப்பு தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.)
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை-8.

(த 46)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை அல்லது அவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து எண் 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்னும் முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15-12-71 புதன்கிழமை பிற் பகல் 3-மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற் பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற் பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப் பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக் கப்படும்.

வேலையின் பெயர்	நிலக்கோட்டை குடிநீர்த் திட்டம் முதல் நிலை நீரேற் றுக் குழாய்ப் போக்கிற் கென வார்ப்பிரும்புக் குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.
ஒப்பந்த வகை	மொத்தத் தொகை.
முன்வைப்புத் தொகை ..	ரூ. 1,220 (ரூபாய் ஆயிரத்து இருநூற்று இருபது மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந் தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வேலையினை முடிப்பதற்குரிய ... ஆறு மாதங்கள். கால அளவு.

ஒப்பந்தப் படிவங்களின் விலை. ரூ. 5.18 (விற்பனை வரி உட் பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராம மூர்த்தி தெரு, மதுரை-2 என்னும் முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற் குறித்த விலையினைச் செலுத்தி 13-12-71 திங் கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர், வடிகால் வாரியம்.

12-11-71.
(த. 73)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகட்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் நெ. 4, ஸ்ரீநகர் காலனி சைதாப் பேட்டை, பாம்பன் வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் 8-12-71 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வ. எண்.	வேலை விவரம்.	கட்டுத் தொகை. ரூ.
1	தேசிய நெடுஞ்சாலை 5-ல் (சென்னை கல்கத்தா சாலை) கி.மீ. 31/0 (மைல் 19/3) உள்ள பாலம் திருப்பிக் கட்டுதல்.	1,800
2	தேசிய நெடுஞ்சாலை 5-ல் கி.மீ. 34/10-ல் உள்ள பாலத்திற்கு அணுகு சாலை அமைத்துக் கல்வர்ட் கட்டுதல்.	1,850

ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள், நமூனுக்கள், வரை படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை) அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூபாய் 25.90செலுத்தி 1-12-71 முதல் 7-12-71 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட் டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத் தொகையை கோட்டப் பொறியாளர்(நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம், சென்னை-25 தனிக்கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அர சாங்கக் கருவூலத்திலேனும் ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனியாக நெடுஞ்சாலை, கோட்டப் பொறியாளர், ஜெமினி மேம்பாலம், சென்னை-25 பெயரில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத் துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும். மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பாம்பன் வட்டம்.

(த. 45)

பயிற்சி

கதர் கிராமத் தொழில் வாரியம்
(மட்பாண்டத் தொழில்)

செங்கற்பட்டு மாவட்ட திருவள்ளூர் தாலூக்கா, செவ் வாப்பேட்டையில் உள்ள மண்டல மட்பாண்ட பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப் பம் அனுப்ப கோரப்படுகிறார்கள்.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம், மைசூர், ஆந்திரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மட்பாண்டத் தொழிலாளர்களும் மற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டவர் ரூ. 45 உணவு விடுதிக்கு முன்பணம் கட்டத் தயாராக இருக்க வேண்டும்.

பயிற்சி துவக்கம்	1-1-1972.
பயிற்சி வகுப்புகள்	1. ஓராண்டு காலம்—கலைஞர் பயிற்சி.
	2. ஆறுமாத காலம்—கலைஞர் பயிற்சி.

ஆறுமாத கால பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர் மட்பாண்டத் தொழில் தெரிந்திருந்தால் நலம். மட்பாண் டத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சிபாரிசு பெற்று வரு வோருக்கு பயிற்சி வகுப்பில் முதலிடம் அளிக்கப்படும்.

வயது வரம்பு:	18 வயது முதல் 35 வயது வரை உள்ள ஆண்கள் மட் டும் விண்ணப்பிக்கவும்.
உதவித்தொகை	பரம்பரையாத மட்பாண்டத் தொழிலில் ஈடுபாடு உள்ள வர்களுக்கு பயிற்சியில் சேர தனிச் சலுகையும் பயிற்சிக் கால உதவித் தொகையும் வழங்கப்படும். மாதம் 1-க்கு ரூ. 75, மற்றவர்களுக்கு உத வித் தொகை ரூ. 60 மற்றும் பயிற்சி நிலையத்திற்கு தங்கள் ஊரிலிருந்து வந்து செல்வ தற்கான ரயில் அல்லது பஸ் கட்டணம் (மூன்றும் வகுப்பு) பயணப்படி முதலியவை களுக்கான ரசீதுகள் ஒப்ப டைப்பின் அந்த செலவுத் தொகைகளும் வழங்கப்படும்.

விண்ணப்பத்தில் தரவேண்டிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

விண்ணப்பங்களில் கொடுக்கவேண்டிய விவரங்கள்:
(மட்பாண்ட பயிற்சி வகுப்பில் சேருவதற்கு 6 மாத கலைஞர் வகுப்பு—ஓராண்டு கலைஞர் வகுப்பு)

1. விண்ணப்பதாரரின் பெயர்
2. முழு முகவரி (விவரமாக)
3. பிறந்த தேதியும் வருடமும்
4. பொதுக் கல்வி
5. தொழிற்கல்வி
6. மட்பாண்டத் தொழில் முன் அனுபவம்
7. மட்பாட்டத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து பயிற்சி பெற வந்தால் அச் சங்கத்தின் பெயரும் முகவரியும் பரிந்துறைக் கடிதமும்

விண்ணப்பதாரர் கையொப்பம்

மேற்கண்ட விவரங்களைத் தெளிவாக எழுதி மனுக்களை "நிருவாகி மண்டல மட்பாண்டப் பயிற்சி நிலையம் செவ்வாப்பேட்டை, திருர் அஞ்சல், செங்கற்பட்டு மாவட்டம் ("தமிழ்நாடு"), முகவரிக்கு 10—12—1971-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

தொழில் அலுவலர்,
மாவட்ட கதர் கிராமத் தொழில்,
சென்னை-32.

(த.75)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்
9/10, மூர்தெரு, சென்னை-1

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன, நிருவாக இயக்கு நரால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு 20—12—1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

	வேலை விவரம்.	கட்டுத் தொகை. ரூபாய்.
1.	விருத்தாசலத்தில் கட்டவிருக்கும் இரண் டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவை யான இரும்புக் குழாய் உத்திரம் மற் றும் இதர சாமான் வழங்குதல். (Supply and erection of tubular trusses and other Accessories)	2,000
2.	காஞ்சிபுரத்தில் கட்டவிருக்கும் இரண் டாவது சேமிப்புக் கிடங்கிற்குத் தேவையான இரும்புக் குழாய் உத்த ரம் மற்றும் இதர சாமான்கள் வழங்கு தல். (Supply and erection of tubular trusses and other accessories).	1,000

வேலைபற்றிய முழு விவரங்களை இந்த அலுவலகத்தி லிருந்து 1—12—1971-க்குப் பிறகு எல்லா வேலை நாட்களிலும் நேரிலோ அஞ்சல் மூலமோ ரூ. 25·92 (விற்பனை வரி உட்பட) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜி.எம். ஒயிட், ஐ.ஏ.எஸ்.,
நிர்வாக இயக்குநர்.

(த.89)

பொதுப்பணித் துறை

செங்கல்பட்டு—வட ஆர்க்காடு வட்டம்

என் 29214/வ2/70—நாள்: 1—11—1971.

வேலையின் பெயர் — செங்கல்பட்டு மருத்துவ மனை கல்லூரியில் இரண்டாவது பகுதியின் முதல் மாடியும் இரண்டாம் மாடியும் கொண்ட கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப்பணித் துறை மற்றும் அரசின் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கல்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வையினரால் 10—12—1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. அதே நாள் 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் செங்கல்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1 ஒப்பந்த முறை .. மொத்தத் தொகை.
2 முன்வைப்புத் தொகை .. ரூ. 18,500.
3 ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை வரைபடத்துடன். ரூ. 51·50 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.
4 முடிக்க வேண்டிய காலம் 18 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் செங்கல்பட்டு-வட ஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 22—11—1971 முதல் 8—12—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் "P.W.D. Remittance" என்ற தலைப்பின்கீழ் நிர்வாகப் பொறியாளர் பொ. ப. து., கட்டடங்கள் கோட்டம் காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி, ரூ. 1·50 கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆகியவற்றில் "XII. Sales Tax (b) receipt under state sales Tax Act–General sales Tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகை கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசியசேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு பேங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெட்யூல்டு பேங்குகளின் டிமாண்ட் டிராப்ட்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்சாரவாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுகொள்ளப்படும். தேசீய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்தத் தபால் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற எந்தப் படிவத்தில் செலுத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள், பெரிய கட்டட வேலைகளில் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.)
செங்கை-வட ஆர்க்காடு பெருவட்டம், வேலூர்.

(த.91)

மறு ஏல விளம்பரம்

பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் தாலூக்கா பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான எலவந்தி வடுகபாளையத்திலுள்ள பிரதம சுகாதார நிலையத்தில் அலுவலர் குடியிருப்புக் கட்டடங்களுக்குப் பின்புறமும் ரோடிற்கு முன்புறம் உள்ள இரு பஞ்சாயத்து யூனியனுக்குத் தேவைப்படாத மூன்று கட்டடங்களிலுள்ள சுமார் ரூ. 12,500 மதிப்புள்ள ஓடுகள், விட்டங்கள், மற்றும் ஜன்னல்கள் மரச் சாமான்கள் முதலியவைகளை வடுகபாளையத்தில் 9—12—1971-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்குத் தனித்தனிக் கட்டடமாக ஆணையர் அவர்களால் அல்லது ஆணையர் அதிகாரம் பெற்றவர்களால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் பொங்கலூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அ. அமலதாஸ்,
ஆணையர்.

(த. 88)

ஏல விற்பனை

காவல் துறை

மணிமுத்தாறு, மதராஸ் சிறப்பு காவற் படைக்குச் சொந்தமான அடியிற்கண்ட போலீஸ் வாகனங்கள் புதன்கிழமை (8-12-71-ஆம் தேதி) காலை 10 மணி அளவில் மணிமுத்தாறு மேற்படி படையின் தளவாய் அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. M.D.H.—2932—பார்கோ 1960 பெட்ரோல் திறந்த மாதிரி லாரி.
2. M.S.Y. 7965—ஸ்டுடிபேக்கர் 1955 பெட்ரோல் திறந்த மாதிரி லாரி.

மேற்கண்ட வாகனங்களை மணிமுத்தாறில் உள்ள தலைமையகத்தில் எல்லா அலுவலக வேலை நாட்களிலும் பார்வையிடலாம். மேலும் விவரம் தேவையெனில் அடியிற் கையொப்பமிட்ட அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ந. கோவிந்தராஜ்,
தளவாய், மதராஸ் சிறப்புக் காவற்படை, மணிமுத்தாறு.

(த. 93)

...ரசினர் தலைமை மருத்துவமனை ...ன் இதர மருத்துவமனைகளுக்கு 1972-ஆம் ஆண்டுக்கு உணவுப் பொருள் வகைகள் முதலியவை வாங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள்.

மக்கள் நல்வாழ்வுப் பணி—குடும்ப நலத்திட்ட இயக்குநர் நிர்வாகத்தில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் இதர மருத்துவமனைகளுக்கு 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லது அதற்குப் பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு உணவுப்பொருள் வகைகள், இதர மருத்துவ மனைத் தேவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளின் கண்காணிப்பாளர்கள் மருத்துவ அலுவலர்களால் 1972 ஜனவரி 7 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்கள், நிபந்தனைகள், ஒப்பந்த வடிவங்கள் ஆகியவைகளைச் சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளுக்கு மனுச் செய்து பெறலாம். ஒப்பந்தப் புள்ளி வடிவம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5·19. (ஐந்து ரூபாய் 19 காசுகள் மட்டும், விற்பனைவரி 3 சதவிகிதம்—சர்சார்ஜ் 5 சதவிகிதம் உட்பட) இத் தொகை இந்திய ரிசர்வு பாங்கிலோ, அரசுக்கருவூலத்திலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் கட்டப்பட வேண்டும். இத் தொகை ஒரே சலானில் "XIII. Medical — G. Miscellaneous — I Director of Health Services and Family planning other receipts" என்னும் தலைப்பில் ஒப்பந்தப் புள்ளி வடிவத்துக்காகவும் "XII. Sales tax receipts under Sales tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் விற்பனை வரியும் கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவங்கள் கோரும் மனுவுடன் ஒரிஜனல் சலான்கள் இணைக்கப்படவேண்டும். இத் தொகை திருப்பித்தரப்படாது.

குறிப்பு:—ஒரு மருத்துவமனை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் 1971 அக்டோபர் 1-ல் அல்லது அதற்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி சான்றிதழும் நேஷனாலிட்டி சான்றிதழும் தாசில்தாரால் கையொப்பமிடப்பட்டும், ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. 10,000-ஐ மீறுமானால் வருமானவரி வெரிபிகேஷன் சான்றும், ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. 1,000-ஐ மீறுமானால் வருமானவரி கிளியரன்ஸ் சான்றும் அல்லது மாநில அரசிதழ் பதிவு அலுவலரால் கையொப்பமிடப்பட்ட சரியான நகல்களும் தரப்பட வேண்டும்.

இயக்குநர்,
மக்கள் நல்வாழ்வுப்பணி
குடும்ப நலத்திட்டம்.

(த. 21)

மாநிலத்திலுள்ள அரசினர் மருத்துவ மனைகளுக்கு 1972-73 ஆம் ஆண்டுக்குத் தேவைப்படும் எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்கள், அப்சார்பெண்ட் காட்டன் உல் ஆகியவைகளை வழங்குதல்.

மாநிலத்தில், மருத்துவக்கல்வி இயக்குநரின் கீழ் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லது அதற்குப் பிற்பட்ட தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்கள், அப்சார்பெண்ட் காட்டன் உல் ஆகியவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலக மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம் அவர்களால், தமிழ்நாடு ஆளுநர் சார்பில் 1972 ஜனவரி 11, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், நிபந்தனைகள், இதர விவரங்களை மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை-5-க்கு 25-12-71 தேதியிலிருந்து மனுச் செய்து பெறலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10. இத்துடன் மூன்றரை சதவிகித விற்பனை வரி செலுத்த வேண்டும். பத்திரத்துக்கான தொகை, இந்திய ரிசர்வ் பாங்க் கிளைகளிலோ, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளைகளிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ "XXIII Medical II Director of Medical Education: Miscellaneous என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை State Sales Tax Act-General Sales Tax" என்ற கணக்கில் செலுத்த வேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கில் செலுத்தினால், அசல் சலான்களைக் கொடுக்க வேண்டும். கருவூலங்களில் செலுத்தினால், சலானின் எண், தேதி, கட்டப்பட்ட தொகை, ஒப்பந்தப் புள்ளிதாரரின் பெயர், தொகை செலுத்தப்பட்ட பாங்க் அல்லது கருவூலத்தின் பெயர் முதலியன, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தைக் கோரும் மனுவில் தெரிவிக்கப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-ம் தேதிக்குப் பிற்பட்ட சால்வன்சி நேஷனலிட்டி சான்றிதழ், தாசில்தார் கையொப்பத்துடனும் ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000-ஐ மீறுவதானால் வருமான வரி வெரிபிகேஷன் சான்றும், ஒப்பந்த மதிப்பு ரூ. 1,000-ஐமீறுவதானால் விற்பனை வரி கிளியரன்ஸ் சான்றும், அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் கையொப்பமிடப்பட்ட சரியான நகல்கள், ஒப்பந்தப் புள்ளியுடன் அனுப்பப்பட வேண்டும்.

ஆர். பசுபதி,
தலைமைக் கணக்கு அலுவலர்,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்.

(த.95)

தேவகோட்டை நகராட்சி

600 காலன் கொள்ளளவு உள்ள டாங்கர்-டிரெயிலர் ஒன்று சப்ளை செய்ய ஆணையர், தேவக்கோட்டை நகராட்சி அவர்களால், மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 15—12—1971ஆம் தேதி மாலை 4·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். கட்டுத் தொகை ரூ. 300. மற்ற விவரங்களை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வெ. முத்துக்குமாரசாமி,
ஆணையர்.

(த.84)

ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

[தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை.]

எண் 50/1971-72

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் 10—12—1971ஆம் நாள்பிற்பகல் 3-00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களை கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலகநாட்களில் 1—12—1971ஆம் நாளிலிருந்து 9—12—1971ஆம் நாள்வரை காலை 10—30மணியிலிருந்து பிற்பகல் 3-00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 10—12—1971-ஆம் நாள் பிற்பகல்1-00 மணி வரை தான் பெற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப்புள்ளிகளை 10—12—1971ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிச் செய்தவர்களின்முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களைத் அஞ்சலில் பெற விரும்புபவர்கள் அஞ்சல் செலவையும் சேர்த்து அனுப்பவும்.

வரிசை எண்.	வேலையின் விவரம்.	குடியிருப்புகளின் எண்ணிக்கை.	வேலையின் சுமார் மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களின் விலை.
			ரூ.	ரூ.	ரூ.
	சேரி அபிவிருத்தித் திட்டம்—நேரு நகர்ப்பகுதி—சேலம்				
I	பதினெட்டுக் குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக்கட்டடங்கள் (18-ல் 1) இரண்டும் (2 பிளாக்குகள்) ஆறு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக் கட்டடங்கள் (6-ல் 1) ஒன்றும் (ஒரு பிளாக்கு) நேரு நகர்ப் பகுதி, சேலத்தில் கட்டுவது—				
	(1) குருப் A.	42	1,97,000	3,000	ரூ. 10 மற்றும் விற்பனைவரி மூன்றரை சதவிகிதம்.
	(2) குருப் B	42	1,97,000	3,000	௸
	(3) குருப் C	42	1,97,000	3,000	௸
	(4) குருப் D	42	1,97,000	3,000	௸
II	பதினெட்டுக்குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக்கட்டடங்கள் (18-ல் 1) இரண்டும் (2 பிளாக்குகள்) ஆறு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட மூன்று மாடிக் கட்டடங்கள் (6-ல் 1) இரண்டும் (2 பிளாக்குகள்) நேரு நகர்ப் பகுதி, சேலத்தில் கட்டுவது—				
	(5) குருப் E	48	2,25,000	3,400	ரூ. 15 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவிகிதம்.
III	[illegible] குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட மூன்றுமாடிக் கட்டடங்கள் (18-ல் 1) மூன்று (3 பிளாக்குகள்) நேரு நகர்ப்பகுதி சேலத்தில் கட்டுவது—	80			
	(6) குருப் F	80	1,69,000	2,600	ரூ. 10 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவிகிதம்.
IV	சேலம் கூட்டுறவு நூற்பு ஆலைத் தொழிலாளர்களுக்கான வீடுகட்டும் திட்டம்—சேலம்.				
	நான்கு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட இரண்டு மாடிக் கட்டடங்கள் (4-ல் 1) ஆறு (6 பிளாக்குகள்) சேலம் கூட்டுறவு நூற்பு ஆலைத் தொழிலாளர்களுக்காகச் சேலத்தில் கட்டுவது. (உள்ளிருப்பு வசதிகளும் இதில் அடங்கும்.)	24	1,60,000	2,420	ரூ. 10 மற்றும் விற்பனை வரி மூன்றரை சதவிகிதம்.

11/22, திவான்பகதூர் சாலை,
இரத்தினசபாபதிபுரம் (அஞ்சல்),
கோயம்புத்தூர்-2
(த: 81-அ)

இல. அரங்கநாதசாஸ்திரி,
நிருவாகப் பொறியாளர், கோவை வீட்டு வசதிப் பிரிவு, கோயம்புத்தூர்-2.

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் : கோடிக்கரையில் ஓர் ஆய்வாளர் மாளிகைக் கட்டுதல் பற்றி.

மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 16—12—1971 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1 ஒப்பந்த வகை — — மொத்தத் தொகை.

2 பிணைப்பணம் .. .. — ரூ. 4,000.

3 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ..ரூ. 30 (முப்பதுமட்டும்)
(அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "பொ. ப. —செலுத்துத் தொகை-மறைய செலுத்துத் தொகை" எனும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், வெண்ணாறுக் கோட்டம், தஞ்சாவூர், அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும்.)

4 விற்பனை வரி — — — ரூ. 1.05 (ரூபாய் ஒன்று காசு ஐந்து மட்டும்.)
(அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு-மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.)

5 கால அளவு — — — 10 மாதங்கள்.

6 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் 25—11—1971. நாள்.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.90)

55

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

(கிழக்குக் கோட்டம்).

எண் : எம்இ 4/1210/71

கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர் ஒப்பந்தக்காரரின் பெயர் ஆகியவை உறைமீது குறிப்பிடப்பட்டு மூடி முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிட்ட நாட்களில் மாலை 3–00 மணிக்கு முன் அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் வந்திருக்கும் ஒப்பந்தாரரின் முன்னிலையில் மாலை 3-05 மணியளவில் பிரிக்கப்படும்..

தொடர் எண்.	ஒப்பந்த வடிவம்.	வேலையின் விவரம்.	வேலையின் மதிப்பீடு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.	ஒப்பந்தப் புள்ளியின் விலை, விற்பனைவரி தனி (இது திருப்பித் தரப்பட மாட்டாது.) ரூ.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படும் காலம்.	ஒப்பந்தப் புள்ளிப் பெறுவதற்கும், திறப்பதற்கும் ஆன நாள்.
1	மொத்தத் தொகை.	வட சென்னைப் புறநகர்ப் பகுதி திட்டத்தில் ஒவ்வொன்றும், ஒன்றில் நான்கு (1-ல் 4) அடங்கிய 44 குடியிருப்புகள் கொண்ட பதினொன்று நடுத்தர வருமான பிரிவு வகை பிளாக்குகள் கட்டுதல்—தொகுதி I.	6,92,000	10,400	20	6-12-1971	22-12-1971
2	டை	வடசென்னைப் புறநகர்ப் பகுதி திட்டத்தில் ஒவ்வொன்றும் ஒன்றில் நான்கு (1-ல் 4) அடங்கிய 28 குடியிருப்புகள் கொண்ட ஏழு குறைந்த வருமானப் பிரிவு வகை பிளாக்குகள் கட்டுதல்—தொகுதி II.	3,08,000	4,620	15	6-12-1971	22-12-1971
3	டை	வடசென்னைப் புறநகர்ப் பகுதி திட்டத்தில் 10 குறைந்த வருமான பிரிவு வகை இல்லங்கள் கட்டுதல்.	1,40,000	2,100	10	6-12-1971	22-12-1971
4	டை	பட்டினப்பாக்கம் கடற்கரைஎஸ்டேட் தொகுதி I-ல் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டிருக்கும்ஒவ்வொன்றும் ஒன்றில் இருபது (1-ல் 20) குடியிருப்புகள் அடங்கிய ஏழு கட்டடங்களுக்கு இரண்டாவது அடுக்கு கட்டுதல்—தொகுதி I	4,59,800	6,900	15	29-11-1971	7-12-1971
5	டை	டை —தொகுதி II.	4,59,800	6,900	15	29-11-1971	7-12-1971
6	டை	டை —தொகுதி III.	4,59,800	6,900	15	29-11-1971	7-12-1971
7	டை	டை —தொகுதி IV. (எட்டு பிளாக்குகள்).	5,25,400	7,880	20	29-11-1971	7-12-1971

ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் மற்றும் பிற தகவல்களை நிருவாகப் பொறியாளர் கிழக்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை-35ல் உள்ள அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11 மணி முதல் 2 மணி வரையில் மேற் குறிப்பிட்ட தேதியிலிருந்து பணம் கட்டிப் பெறலாம். எந்த ஒரு ஒப்பந்தத்தையும் காரணமின்றி நிராகரிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

டி. சாமுவேல் தம்பு,
நிருவாகப் பொறியாளர், வீட்டு வசதிவாரியம்.

சென்னை-35, 18-11-1971.
(த.82)

ஒப்பந்தப் புள்ளி

உணவுப் பொருட்கள் மற்றும் மருத்துவத் தேவைகட்கு 1972 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31-ஆம் தேதி வரை உள்ள காலங்கட்கு கீழ்க்கண்ட மருத்துவமனைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை கண்காணிப்பாளர் மருத்துவ அதிகாரிகளிடம், 7-1-1972 வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்குள் கிடைக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் பிரதிகளைக் கருவூல ரசீது சலான் இணைத்து மனுச்செய்து மருத்துவமனைகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிக்கான பணம் 5.19 (ஐந்து ரூபாய், காசு பத்தொன்பது மட்டும்) விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம் விற்பனை வரிக்கான சர்சார்ஜ் 5 சதவிகிதம். இவை ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஸ்டேட் பாங்க் அலுவலகங்களில் ஏதாவது ஒன்றினிலோ அல்லது அரசுக் கருவூலங்களிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் "XXIII Medical-I Director of Health and family planning-G miscellaneous other receipts" என்னும் தலைப்பில் ஒப்பந்தப் புள்ளிக்கான தொகையைச் செலுத்த வேண்டும். விற்பனை வரிக்கான தொகையை "XII sales Tax receipt under the state sales Tax Act—General sales Taxes" என்ற தலைப்பில் கட்ட வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

1. காந்தியடிகள் மெமோரியல் மாவட்ட தலைமை மருத்துவமனை, திருச்சி.
2. நகர் பொது மருத்துவ மனை, புதுக்கோட்டை, அரசினர் ரேனிஸ் மருத்துவமனை, புதுக்கோட்டை.
3. அரசினர் மருத்துவமனை, கரூர்.
4. அரசினர் மருத்துவமனை, திருவரங்கம்.
5. அரசினர் மருத்துவமனை, அரியலூர்.
6. அரசினர் மருத்துவமனை, பெரம்பலூர்.
7. அரசினர் மருத்துவமனை, லால்குடி.
8. அரசினர் மருத்துவமனை, ஆலங்குடி.
9. அரசினர் மருத்துவமனை, குளித்தலை.
10. அரசினர் மருத்துவமனை, ரேனூர்.
11. அரசினர் மருத்துவமனை, துறையூர்.
12. அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவமனை, விராலிப்பட்டி.
13. அரசினர் செல்லப்பா மருத்துவமனை, அரிமளம்.
14. அரசினர் நாச்சியம்மாள் ஆச்சி மருத்துவமனை, கோப்பனப்பட்டி.
15. அரசினர் மருத்துவமனை, வேலாயுதம்பாளையம்.
16. அரசினர் கஸ்தூர்பாய் மருத்துவமனை, ஓமந்தூர்.
17. அரசினர் மருத்துவமனை, பள்ளப்பட்டி.
18. அரசினர் காந்தி லெப்ரோசிரியம், தோளூர்பட்டி.
19. அரசினர் மருத்துவமனை, ஜெயங்கொண்டசோழபுரம்.

குறிப்பு:—ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளிகளும் கீழ்க்கண்ட இணைப்புகளுடன் அதாவது உண்மையான அல்லது உண்மை நகல்களுடன் இருத்தல் வேண்டும்.

I. (1) சால்வன்ஸ் சர்டிபிகேட்டும் நேஷனலிட்டி சர்டிபிகேட்டும் அக்டோபர் திங்கள் முதல் தேதிக்குப் பிறகு (1971) பெற்றதாகத் தாசில்தாரிடம் கையெழுத்துப் பெற்றிருக்க வேண்டும்.

(2) ரூ. 1,000 மதிப்பீட்டிற்கு மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளிக்கு இந்த ஆண்டுக்கான விற்பனை வரி ஆய்வுப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.

(3) ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டவற்றிற்கு, விற்பனை வரி கிளியரன்ஸ் சர்டிபிகேட் இணைக்கப்படவேண்டும்.

II. ஒப்பந்தப் புள்ளிகள் சம்பந்தமாகஎந்தவிதத் தொடர்பும் ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ளக்கூடாது.

டாக்டர் வி. சந்திரசேகரன், எம்.எஸ்.,
உதவி மாவட்ட மருத்துவ அலுவலர்.

திருச்சி,
7—11—71.
(த. 70)

ந. க. எண். 3138/71/பி1.

மாதவரம் நகரிய மன்றத்திற்குக் கீழ்க்கண்ட விவரப்படி குடி நீர் வண்டிகள் விநியோகம் செய்ய மூடிமுத்திரையிட்ட உறைகளில் ஒப்பந்தப்புள்ளிகள் அடியில் கையொப்பமிட்டவரால் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ஆம் நாள் (15-12-71-ஆம் தேதி) பிற்பகல் 3·00 மணி வரைபெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை அன்றே பிற்பகல் 3-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். பிற ஒப்பந்த நிபந்தனைகள் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

விவரம்.	வழங்க வேண்டிய பொருள்களின் எண்ணிக்கை.	கட்டுத் தொகை ரூ.
ஒற்றை மாடு இழுக்கக்கூடிய எ.டி.சி. சாதனங்களுடன் அமைந்த குடி நீர் வண்டி சப்ளை செய்தல், "19 கேஜ் தகடால் ஆன பீப்பாய் 100 காலன் கொள்ளக்கூடிய அளவு (4 அடி நீளம் 2 அடி 6அங்குல அகல விட்டமுள்ளது) (எ. அண்டு வி. 500–19) தண்ணீர் வெளியில் விடப் பைப்புகள் பொருந்தியதாகவும் இருக்க வேண்டும்).	நான்கு வண்டிகள்	100

எஸ். அரங்கநாதன்,
நிருவாக அதிகாரி.

மாதவரம் நகரியம்,
சென்னை-60.
15-10-71.
(த.83)



ஒப்பந்தப் புள்ளி

அரசுப் பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும் திருநெல்வேலி, கன்னியாகுமரி பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் பொதுப் பணித்துறை, திருநெல்வேலி, அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—12—1971 பிற்பகல் 3 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-30 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்	..	திருநெல்வேலி கால்நடை மருத்துவமனையில் ஆப்பரேசன் தியேட்டர், கிளினிக்கல் லேபரட்டரி அமைப்பதற்காக.
ஒப்பந்த வடிவம்	..	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை	..	ரூ. 1,125
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை.		ரூ. 20
விற்பனை வரி	..	ரூ. 0·70
வேலை முடிக்க வேண்டிய காலம்.		4 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை "பி. டபிள்யூ III OR ரஸீட்ஸ்" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி, கன்னியாகுமரி பெருவட்டம், திருநெல்வேலி-2 அவர்கள் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி (XII ST. b) ரஸீட்ஸ்" மாநில விற்பனை வரிச் சட்டம், பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருநெல்வேலி கன்னியாகுமரி பெருவட்டம், திருநெல்வேலி 2, அவர்தம் அலுவலகத்தில், ஒப்பந்த அறிவிப்புகள் மற்ற விவரங்களை 17—11—1971 முதல் 10—12—1971 வரை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ, அல்லது அஞ்சல் மூலமாகவோ மேலாளர் அவர்களிடம் ஒப்பந்தப் புள்ளி விற்பனைவரிக்கு ரசீது சலானுடன் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

இறுதி நாளுக்குப் பின்னர் வரும் மனுக்கள் கவனிக்கப் படமாட்டாது.

ஏனைய விவரங்கள் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, திருநெல்வேலி,
கன்னியாகுமரி பெருவட்டம்.

(த.7)

பொதுப்பணித் துறை

பார்வை : ந.க. 5756/6-வது நாள் 16—11—1971.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 22—12—1971 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

1.	வேலையின் பெயர்	தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள கற்பகநாதர் குளம் இறைவைத் திட்டத்தின் வளவாற்றின் குறுக்கே மேல் நீர் போக்கியோடு கூடிய பாலம் கட்டுதல்.
2.	வேலைக்கான பிணைப்புத் தொகை.	ரூ. 2,200
3.	ஒப்பந்த வகை	கே. 2
4.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.	ரூ. 5
5.	விற்பனை வரி ..	ரூ. 0·20

6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 1—12—1971 முதல் காவிரி வளர்ச்சிப் பணி வட்ட அலுவலகத்தில் கிடைக்கும்.

7. ஒப்பந்தப் புள்ளிகளின் விலையை அரசினர் கருவூலத்தில் "PWD III OR" என்ற தலைப்பில்நிர்வாகப்பொறியாளர், (பொதுப்பணித் துறை) ஆற்று இறைவைக் கோட்டம், நாகைப்பட்டினம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

8. விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII Sales Tax (b) receipts under State Sales Tax Act—General Sales Tax என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

9. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 20—12—71 தேதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் தனி மேற்பார்வைப் பொறியாளரது நேர்முக உதவியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

அ. சேஷாத்திரி
தனி மேற்பார்வைப் பொறியாளர்.

(த.80)

541

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம், வாலாஜாப்பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்டப் பணிக்காகச் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்டமேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30-12-71 மாலை 3 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெரு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த முறை :	மொத்தத் தொகை.
முன்வைப்புத் தொகை :	ரூபாய் 10,200
ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்:	ரூ. 51.50. விற்பனை வரி 3 சதவிதம் சேர்த்து.
முடிக்கவேண்டிய காலம் :	10 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 14-12-71 தேதி முதல் 18-12-71 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும்; ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 50.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D.—Remittances, III--Other Remittances" என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக்கோட்டம், காஞ்சிபுரம்" என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) Receipts under state Sales Tax act—General Sales—Tax" என்னும் தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகை கருவூலச் சீட்டுவடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் ஷெட்யூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. ப. து.)
செங்கற்பட்டு—வட ஆர்க்காடு பெரு வட்டம்.

(த.41)

ஏல விற்பனை

கோயம்புத்தூர் நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட் வண்டிப் பேட்டைக்கு அருகில் உள்ள புதிய பிளாக் கடை என். பி. 25-ல் 31-3-1974 வரை தக்காளி வியாபாரம் செய்யும் உரிமை 17-12-1971-ஆம் தேதியன்று காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

கட்ட வேண்டிய கட்டுத் தொகை ரூ. 100 மற்ற நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆணையர்.

(த 85)

கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான சாக்கடைத் திட்ட பூமியில் உள்ள 10 லாட் வண்டல் மண்ணை மேற்படி இடத்திலேயே 16—12—1971-ஆம் தேதி காலை 10·00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். கட்டவேண்டிய கட்டுத் தொகை ஒவ்வொரு பிரிவிற்கும் ரூ. 50. மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

ஆணையர்.

(த.86)

உரிமை ஏலம்

ஸ்ரீரங்கம் நகராட்சி

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் ஸ்ரீரங்கம் நகராட்சிக்குச் சொந்தமான 5·02 ஏக்கர் விஸ்தீரணமுள்ள புல் பண்ணையில் (Sewage Farm) 1—1—1972 முதல் 31—3—1974 முடிய உள்ள காலத்திற்குப் புல் வெட்டிக்கொள்ளும் உரிமை (Licence) 22—12—1971-ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் ஆணையராவது அல்லது அவரின் அதிகாரம் பெற்றவர்களாலாவது பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏல டிபாசிட் ரூ. 500. மற்ற விவரங்கள் நிபந்தனைகள் சம்பந்தமாக அலுவலக வேலை நாட்களில் அலுவலகத்தில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
[illegible]—11—1971.

(த.87)

ஆசிரியர், வெளியிடுபவர்; செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2

தமிழரசு

திங்கள் இருமுறை டிச 16 1971 35 காசு

பணமழையில் நனைந்திடக் கணமும் தயங்காதீர்!

கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினால் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம்... எனவே

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை
ஒரு ரூபாய் தான்.

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ. 50,000
10 மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ. 50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ. 50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ. 1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.
மொத்தப் பரிசுத் தொகை ரூ. *

14,00,000

குலுக்கல் நாள்: 31-12-71

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை
264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2

* [illegible] வெளியீட்டுக்கு உரியது.

கொடி நாள்
(7-12-71)
முதல்வர் நிதி வழங்குகிறார்
கொடியைக் குத்திக் கொள்கிறார்
வங்கதேச மக்களுக்கு உதவத் தஞ்சையிலிருந்து சென்ற மருத்துவக் கல்லூரி
மாணவர்கள் சென்னையில் சிறப்பாக வழியனுப்பிவைக்கப்பட்டனர். (3.12.71)

ஜலந்தரிலுள்ள படைவீரர்களுக்கு அந்நகர மக்கள் பொதுநலச் சங்கம் இலவசமாகத் தேநீர் வழங்குகிறது.

கிழக்கத்திய முனையில் நமது பீரங்கிப் படையினர்.

ராஜஸ்தான் பகுதியில் நமது விஜயந்தா டாங்கி.

கைதாகியுள்ள பாகிஸ்தான் படையினர்.

வங்க தேச அகதிகளிடையே குடியரசுத் தலைவர் வி.வி. கிரி உரையாற்றுகிறார்.

பஞ்சாபின் முன்னணிப் பகுதியிலுள்ள படைவீரர்களிடம் தலைமையமைச்சர் இந்திரா காந்தி உரையாடுகிறார்.

ராஜஸ்தான் முன்னணிப் பகுதியிலுள்ள படை வீரர்களிடம் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் உரையாற்றுகிறார்.



இந்தியாவின் மீது பாகிஸ்தான் படையெடுப்பு! தமிழ்நாடு சட்டப் பேரவையின் கண்டனத் தீர்மானம்

கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக்குரலை மதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திரப்பங்களாதேஷ் முழக்கத்தைச் செய்ய முன் வந்த போது அவர்கள் மீது கொடு இரக்கமின்றி ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு பல இலட்சக் கணக்கானவரைக் கொன்று குவித்ததோடு அல்லாமல், ஒரு கோடி அகதிகளை இந்தியாமீது சுமத்திய தன் மூலம் இந்திய நாட்டின் மீது மறைமுகத் தாக்குதலைத் தொடங்கி விட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின்மீது படையெடுக்கவே துணிந்து விட்ட செயலைத் தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு எதிரிகளை முறியடித்து இந்தியா பெரும் வெற்றி பெறுவதற்கு எல்லா விதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்குத் தருமென்கிற உறுதியை மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீர மறவர்களை வாழ்த்துவதிலும், அவர்தம் அருந் தியாகச் செயல்களைப் போற்றுவதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப்பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை ஏதும் உருவாகாத சூழ்நிலைதான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணியாகத் திரண்டு நின்று எதிரியை வென்றிடவேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்துவத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

தொடக்க காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய அரசு உலக நாடுகள் அனைத்துக்கும் தெளிவாக்கியிருப்பதோடு நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன் வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகை சூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிடப் போருக்குத் தேவையான ஆள், பொருள், கருவி அனைத்தையும் வழங்கிடவும், இந்தியப் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணையாக இருக்கவும் தமிழ்நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் 6—12—1971 அன்று முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானம்.

முகப்பில்: உதகைப் பழங்குடியினரின் வாழ்வியலில் ஒரு காட்சி!

தமிழரசு
மலர் 2
இதழ் 12
16-12-1971

வெற்றி நமதே—எதிரி வீழ்வது உறுதி!

இன்று கொடிநாள்; கொடியவர் ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தகர்த்து வெற்றிக் கொடி ஏந்த இந்தியா ஆளுரைக்கும் நாளும் இந்நாளேயாகும். இந்தியா விடுதலை பெற்ற போது பாகிஸ்தான் தோன்றியது. தோன்றிய போதே அந்த நாடு ஓர் அவலட்சண அமைப்போடு தோன்றியது. மேற்குப் பாகிஸ்தானுக்கும் கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இடையிலே ஆயிரம் மைல். அந்த ஆயிரம் மைலுக்கு இடையே நமது இந்தியப் பூபாகம்.

உலகத்தில் எந்த ஒரு நாடும் இப்படி இடையிலே ஆயிரம் மைலை இரு பகுதிகளுக்கிடையே பெற்றிருக்கவில்லை. அமைப்பு முறையிலே மட்டுமல்லாமல் ஆதிக்க வெறிக்கு அடிமைப்படுவதிலும் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பெருந்தொல்லைக்கு ஆளாயினர்.

அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவில்லை. மொழி உரிமை நசுக்கப்பட்டு, மொழி ஆதிக்க வெறி உச்சக் கட்டத்திற்குச் சென்று அந்த மக்களின் உணர்ச்சி எரிமலைத் தீக்குழம்பாயிற்று. தங்கள் மாநில உரிமைகள் நசுக்கப்படுவதைத் தாங்காத கிழக்கு வங்க மக்கள், ஜனநாயக ரீதியில் தங்கள் தீர்ப்பைச் சென்ற ஆண்டு தேர்தலில் வழங்கினர்.

மாநில உரிமை கேட்ட மக்களின் குரல் வளையை நெரிப்பதுபோல் தேர்தல் தீர்ப்பைப்புறக்கணித்துவிட்டுக் கிழக்கு வங்க மக்களின் மதிப்புக்குரிய தலைவர் முஜிபுர் ரகிமானையும் சிறையில் அடைத்துவிட்டு, லட்சக்கணக்கான கிழக்கு வங்க மக்களின் உயிரையும் பறித்து, ஒரு கோடி மக்களை அகதிகளாக இந்தியாவுக்குத் துரத்திவிட்டு, மனிதாபிமானமற்ற முறையில் பேயாட்டம் போடத் தொடங்கியது பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சி!

மிதிபட மிதிபடப் புழுவும் புலியாகும் என்பதற்கேற்பக் கிழக்குப் பாகிஸ்தான், கிழக்கு வங்கமாகி, கிழக்கு வங்கம், 'பங்களா தேஷ்' சுதந்திர நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டது. பங்களாதேஷின் முக்திபஹனி என்ற விடுதலைப்படையினர், பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கு மரண அடி கொடுக்கத் தொடங்கியதும் ஆதிக்க வெறியர் யாகியாகானின் ஆத்திரம் இந்தியா மீது திரும்பியது.

'பங்களா தேஷ்' பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தேவை என்று வலியுறுத்தியது இந்தியா செய்த குற்றமாம். அதற்காக அழகுமிகு தாஜ்மகால் ஒளியுமிழும் ஆக்ரா மீது குண்டு வீச்சு. சீக்கியரின் பொற்கோயில் எழுந்து நிற்கும் அமிர்தசரஸ் மீது குண்டு வீச்சு. ஸ்ரீநகர், ஜோத்பூர் போன்ற இந்திய மண்ணிலே எதிரிகள் திடீர் தாக்குதல். இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுப்பு!

ஆம், தூங்கும் புலியை இடறிவிட்டார்கள்; இப்போது அதன் விளைவை அனுபவிக்கிறார்கள். விரைவில் பங்களா தேசில் பாகிஸ்தான் படை, இருந்த இடம் தெரியாமல் போகும்.

இந்திய நாடாளுமன்றத்தில் இந்தியாவின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களால் அங்கீகாரப் பிரகடனம் செய்யப்பட்ட 'பங்களா தேஷ்' புதிய அரசின் கொடி, விடுதலை வீரர்களின் புகழ் பாடியபடி விரைவிலே பறக்கப் போகிறது. பாகிஸ்தானின் தோல்விக் காய்ச்சல், இந்தியா மீதும் கடும் பாய்ச்சலுக்குக் காரணமாவதில் வியப்பில்லை.

நெருக்கடி நீண்ட நாள் இருக்குமா என்பதைவிட முற்றுமா என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாக வேண்டும். முற்றக்கூடும். எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். போர்க்கால விளைவுகள்—போருக்குப் பின் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் இவைகள் அனைத்தையும் மனத்திற் கொண்டு நாடு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆகவேண்டும்.

இந்த மண்ணைக் காக்கும் போரில் மான மறவர்கள் களம் நோக்கிச் சென்ற வண்ணமிருக்கின்றனர். தாயின் அன்பு முத்தம் பெற்றுத் துப்பாக்கி ஏந்திக் கிளம்பிடும் வீரர்கள்—தந்தையின் ஆசி பெற்றுத் தோள் தட்டிச் செல்லும் தகைமைசால் மைந்தர்கள்—தோகையாள் கண்ணீர் துடைத்து எதிரியின் வியூகத்தைப் பிளக்கச் செல்லும் இளங்காளையர்—மழலைக்கு முத்த மழை பொழிந்து மாற்றாரைப் புறங்காணப் பறந்தோடும் புறநானூற்றுச் செல்வங்கள்— இவர்கள் எல்லாம் சாவின் கோரக்கரங்களுக்கு அஞ்சாமல் சமர்க்களம் செல்லும் தியாகச் சுடர்கள் அன்றோ!

விடைபெற்றுக் களம் சென்ற மகனின் இராணுவ உடைகள் மட்டும் திரும்பி வந்து—அவைகளைக் கண்ணீரால் நனைக்கும் தாய்களின் பாதங்களுக்கு மலர்கள் தூவி வணங்குகிறோம். என்றாலும், அந்தத் தாயும் அந்தக் குடும்பமும் வாழும் பொறுப்பினை நாமல்லவா ஏற்றுக்கொள்ள வேண்டும்?

களத்தில் நிற்போர் காக்கி உடை அணிந்த வீரர்கள்.... அந்த உடை அணியாத நாம் போர்க்களத்தில் இருக்கிற உணர்ச்சியோடு காரியங்கள் ஆற்றியாக வேண்டும்.

வெளிப்பகை, யுத்த தளவாடங்களோடு வரும். உட்பகை, கறுப்புச் சந்தைக்காரர்கள், கொள்ளை வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், அவசர நிலை உணராமல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் ஐந்தாம் படையினர் ஆகியோர் உருவிலே வரும். அவர்கள் மீது அரசு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் எதிரிகளுக்கு இடம் கொடுத்த தீங்கினைச் செய்த குற்றத்திற்கு ஆளாகும். அவர்களை அரசு மட்டுமின்றி நாட்டு நலனில் அக்கறையுள்ள பொதுமக்களும் அடையாளங் காட்டிடத் தவறக் கூடாது. போர் நேரத்தில் வதந்திகள் எதிரியின் கணைகளை விடக் கொடியவைகளாகும். வதந்திகளைப் பரப்புவோர் ஐந்தாம் படையினரில் ஒரு பிரிவினரேயாகும்.

போர்க்காலத்தில் உற்பத்தி பெருக, தொழிலாளத் தோழர்களும் தொழில் அதிபர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்தாக வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு— நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இவைகளை மாணவ நண்பர்கள் உணர்ந்து பணியாற்றுவார்கள் என நம்புகிறேன். அவர்களிடையே இந்தியாவின் எதிரிகள் மாணவர் வேடத்தில் நுழையக்கூடும்; தூண்டி விடக் கூடும். அந்த எதிரிகள் தொலைவிலிருந்து அல்ல; துரோகச் சகதியிலிருந்து முளைத்திருப்பவர்களே யாவர். அவர்கள் சூது மதிக்கு மாணவர்களும் மற்றவர்களும் இரையாகிவிடக்கூடாது.

போருக்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. நேற்று, சட்டப் பேரவையில் நிதி பற்றி நான் அறிவித்த பிறகு 'யுத்த நிதி' குவியத் தொடங்கிவிட்டது.

நிதி அனுப்புவோர் நாட்டுப் பாதுகாப்பு நிதி (நேஷனல் டிபன்ஸ் பண்ட்) என்ற தலைப்பில் தமிழக அரசுத் தலைமைச் செயலகத்திற்கு முதலமைச்சரின் முகவரிக்கு அனுப்பிட வேண்டுகிறேன்.

போரில் பாதிக்கப்பட்டோர், கால்—கை இழந்தோர், உயிர் தந்தோர் ஆகியோர் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ் நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர் குடும்பங்களுக்கும், அங்கஹீனமாகி, பணியாற்றிடத் தகுதியிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் ஐயாயிர ரூபாயும், மூன்று ஏக்கரா புஞ்சை அல்லது $1\frac{1}{2}$ ஏக்கரா நஞ்சையும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும், உடைகளுக்கும் உதவி அளிக்கப்படும்.

உலகைக் கவர முடியும்!

மேலை நாடுகளில் உள்ள விதவிதமான கட்டடங்களைப் பார்க்கும்போது—நம் நாட்டிலுள்ள பொறியாளர்களுக்கும் தக்க வாய்ப்பு உருவாக்கப்பட்டால் — அவற்றைப் போலவே உறுதியாக எடுத்துக்காட்டாக அமைக்க முடியும்.

வாஷிங்டனில் வளைந்து வளைந்து போகிற சாலைகளையெல்லாம் பார்த்த போது நம் நாட்டில் நம்முடைய பொறியாளர்களுக்கு இவ்வளவு வாய்ப்பு ஏற்படவில்லையே என்றுதான் எண்ணினேன். வாய்ப்பும் வசதியும் செய்யப்படுமானால் இங்குள்ள பொறியாளர்களும் உலக நாடுகளின் கவனத்தைக் கவருகிற மாதிரிப் பணியாற்றக் கூடியவர்களே!

—பொறியாளர் பேரவைத் தொடக்க விழாவில் முதல்வர்.

யுத்த நேரத்தில் ரத்த தானம் இன்றியமையாத அறச் செயல்! அதனைச் செய்திட அனைவரும் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள வேண்டும்.

செருமுனையில் நாடு!

சிங்க முழக்கம் செய்திடும் ஆற்றல் மறவர், போரில்!

எதிரிகளைத் தூளாக்கிட எக்காள முழக்கம் எங்கணும் கேட்குது!

கடைசி யுத்தமெனக் கர்ச்சிக்கிறார் யாகியாகான்!

தன் முடிவைத் தானே தெரிந்து கொண்டு போருக்கு வந்திருக்கிறார் என்று புரிகிறது.

உண்மை உணர்ந்த நாடுகள் நம் பக்கம். நியாயமுணர்ந்த தேசங்கள் நம் பக்கம். உண்மை உணர்ந்தும் நம்மை அலட்சியப்படுத்துகிற நாடுகள் விரைவில் திருந்துகிற அளவுக்கு இந்தப் போரில் பாடங் கற்றுக் கொடுப்போம். அதற்கு நம்முடைய ஒற்றுமையைப் பலப்படுத்துவோம். கட்சி, மத, சமய, சாதி வேறுபாடுகளை மறப்போம்.

வீரச் செயல் புரிவோம். தீரத்தை நிலைநாட்டுவோம்.

வீர விருதுகள் பெறுவோர்க்குத் தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரமவீர சக்கர விருது பெற்றவர்க்குப் பத்தாயிர ரூபாய் என்று இதுவரையில் இருந்ததைப் பதினைந்தாயிரமாக இனிமேல் உயர்த்தி வழங்கப்படும். மகா வீர சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும்.

வீர சக்கர விருது மூவாயிரம் என்று இருந்தது ஐயாயிரம் ரூபாயாக இனிமேல் உயர்த்தித் தரப்படும். சேனா விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிர ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. வீரர்களுக்கு அரசு காட்டும் ஊக்கத்தைப் போலவே தமிழகப் பெருமக்களும் ஊக்கம் காட்டிட வேண்டும்.

பொதுச் சேவை புரிவோர் இந்த நற்பணியில் இன்றே இறங்கிட வேண்டும். எதிரியை நோக்கி இந்தியாவின் 110 கோடிக்கு மேற்பட்ட கரங்கள் வீர முழக்கத்தோடு உயர்ந்துள்ள உணர்ச்சிமிகு காட்சியை அனைத்துலகும் கண்டு வியக்கும் வண்ணம் போரில் ஈடுபடுவோம்.

வெற்றி நமதே!

எதிரி வீழ்வது உறுதி!

வணக்கம்.

(முதல்வரின் வானொலி உரை)

முதல்வர் தாயகம் திரும்பினர்

அமெரிக்க நாட்டு அரசின் அழைப்பிற்கிணங்கத் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கருணாநிதி அவர்கள் தமது அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை 8—11—'71 அன்று தொடங்கினர். சென்னையிலிருந்து புறப்பட்ட அவர், 9—11—'71, 10—11—'71 அன்று லண்டன் மாநகரில் தங்கி, 11—11—'71 அன்று வாஷிங்டன் நகர் சென்றடைந்தார்.

அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவர், அமெரிக்க அரசு வரவேற்பு அலுவலர், உயர் அதிகாரிகள், அங்கு வாழும் தமிழ் மக்கள் ஆகியோர் அளித்த வரவேற்புக்குப் பின், பால்டிமோர் நகரில் '' வாஷிங்டன் போஸ்ட் '' செய்தித்தாளினைச் சார்ந்த திரு வாரன் அண்ணு, ''பால்டிமோர்சன்'' செய்தித் தாளினைச் சார்ந்த திரு ஆடம்க்ளேமர் ஆகியோர் முதலமைச்சரைப் பேட்டி கண்டனர்.

பேட்டியின்போது ''மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவது மத்திய அரசின் சுமைகளைக் குறைக்கும்; அதன் மூலம் மத்திய அரசு மிக முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் எனவும், மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் மத்திய அரசு வலுவாக இருக்க முடியும்'' எனவும், முதல்வர் கூறினர். ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி மக்கள் தொகையைப் பெருக்கும் இந்தியா, வங்க தேச அகதிகளைக் காட்டி உதவி கேட்பது எந்த வகையில் நியாயம் என வினு எழுப்பிய போது, — நாட்டில் நிகழும் மக்கள் தொகைப் பெருக்கத்தையும் வங்காள தேச நெருக்கடியின் காரணமாக வரும் அகதிகளின் பெருக்கத்தையும் ஒன்ருகக் கருதக் கூடாது, எனவும், மக்கள் தொகைப் பெருக்கத்திஞல் ஏற்படும் சுமைகளை அந்தக் குடும்பங்கள் பகிர்ந்து கொள்கின்றன என்றும், வங்காள தேச அகதிகள் பலர் முதியோராகவும், பலவினப் பட்டவர்களாகவும் உள்ள காரணத்தால் அவர்களது தேவையை முழுமையாகத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அரசுக்கே உள்ளது எனவும், எனவேதான் பண உதவி கேட்கின்ருேம் எனவும் முதலமைச்சர் விளக்கம் அளித்தார். அத்துடன் அமெரிக்க மக்களின் நெஞ்சை நெகிழ வைக்கும் வண்ணம் '' மடியில் கைவைத்துப் பணம் கேட்கவில்லை; இதயத்தைத் தொட்டுத்தான் கேட்கிருேம் '' என உருக்கமாகக் கூறினர். வங்க அகதிகளுக்கு உதவுவதில் தமிழ்நாடு அக்கறை காட்டவில்லை என்ற கூற்றை மறுத்த முதல்வர், அவதியுறும் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு உதவத் தமிழகம் என்றும் தயங்காது என்றும் தெரிவித்தார்.

11—11—'71, அன்று அமெரிக்க வெளிவிவகாரத் துறை அளித்த விருந்தில் முதல்வர் கலந்து கொண்டார். அப்போது செனட்டர் திரு எட்வர்டு கென்னடி, செனட்டர் திரு பாப் டோ லா பாகிஸ்தானுக்கு அமெரிக்கா செய்யும் ஆயுத உதவியைத் தடுப்பதில் முனைப்பாக இருந்தவரும், செனட் சபையின் ஆயுதப் படைக்குழுவின் உறுப்பினருமான செனட்டர் திரு சாக்ஸ்பி, அமெரிக்க நாட்டு வெளிவிவகாரக் குழுவின் ஆசியா விவகாரத் துணைக் குழுவின் தலைவர் திரு காலங்கர், செனட்டர் திரு கேல் மெக்கி ஆகியோர்களுடன் உரையாடி '' வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவின் நிலை என்ன, என்பதைத் தெள்ளத் தெளிவாக முதல்வர் விளக்கினர்.

'' காலம் பொன் போன்றது—கடமை கண் போன்றது '' என்ற பொன்மொழிகளை நாட்டுக்கு நல்கியதுடன், தனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்துவரும் முதல்வர் அமெரிக்க நாட்டில் அடியெடுத்து வைத்தவுடனேயே தாய்த்திரு நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்து முடித்தார். ஆம்! இன்று நாட்டை அச்சுறுத்திவரும் வங்க தேச அகதிகள் பிரச்சினையை அமெரிக்க நாட்டுச் செனட்டர்களுக்கு விளக்கினர். முதல்வர் அவர்கள் தன்து கடமைகளை முடிக்கும் நேரந்தவிர மிகுதியான நேரத்தில், தொல்லை தரும் தனது கண்ணுக்கு அமெரிக்க நாட்டின் பால்டிமோர் நகரிலுள்ள புகழ்மிக்க ஜான் ஹோப்கின்ஸ் கண் மருத்துவமனையில் மருத்துவம் பெற்றுக்கொண்டார்.

மருத்துவம் பெறும் முன்னர் 12—11—'71 அன்று உலகிலேயே மிகப் பெரிய விவசாயப் பண்ணை எனக் கருதப்படும் '' மேரி லாண்ட் '' மாநிலத்தில் உள்ள பெல்ட்வில்லி என்னுமிடத்தில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை முதல்வர் பார்வையிட்டார்.

இப்பண்ணையில் உள்ள அலுவலர் அங்குச்சேகரிக்கப்பட்டுள்ள சிறு தானியங்களின் சிறப்பை விளக்கினர்; முதல்வர் இப்பண்ணையைப் பார்வையிட்டதன் பயனுகத் தமிழ் நாட்டில் 1,000 ஏக்கர் நிலத்தில் அமைத்துள்ள '' அண்ணு பண்ணையும் '' அங்குள்ள '' கலைஞர் கருணாநிதி விவசாய ஆராய்ச்சி நிலையமும் '' பயனடையும்; இதன் மூலம் நாடு நலன் பெறும் என நம்பலாம்.

கண்ணுக்கு மருத்துவம் பெற்ற கலைஞர், மருத்துவர் ஆலோசனைக் கிணங்க ஓய்வெடுத்துக் கொண்டபின்—தனது பயணத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தொடர்ந்தார்.

20—11—'71 அன்று கென்னடி முனைக்கு அருகில் உள்ள ஏரிகள் நிறைந்த எழில் நகராம் ஆர்லாந்தோவில் நுண்கலை, மற்றும் கலாச்சாரக் கழகத்திற்கு நிதி சேர்க்கும் சிறப்பு விருந்தில் கலைஞர் '' சிறப்பு விருந்தினராகச் '' சிறப்பிக்கப்பட்டார். விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரும் அமெரிக்காவின் பழங்கால நாகரிக உடைகளிலும் சிவப்பு இந்தியர் உடைகளிலும் வந்திருக்கத் தமிழக முதல்வர் தமிழ் நாட்டு உடையான வேட்டி, சட்டை, துண்டு அணிந்திருந்தார்; விழா மேடையிலேயே வியத்தகு கவிதை புனைந்து தமிழ் நாட்டு மக்களை மகிழ்வித்து வந்த முதல்வர் கலைஞர், ஆர்லாந்தோவிலும் அத்தகையதோர் அருமையான கவிதையைப் புனைந்து அமெரிக்க நாட்டு மக்களை மகிழ்வித்தார்.

அமெரிக்க நாட்டின் முன்னுள் குடியரசுத் துணைத் தலைவர் ஹம்ப்ரே, கலைஞரை வரவேற்கிருர். தமிழ்நாடு அரசு நிதித்துறைச் செயலாளர் திரு வெங்கிடரமணன், திரு முரசொலி மாறன் எம்.பி., ஆகியோரும் அருகில் உள்ளனர்.

21—11—'71 அன்று முதல்வர் அவர்கள் சைப்ரஸ் தோட்டம், உலகப் புகழ் வாய்ந்த அமெரிக்கத் திரைப்பட இயக்குநர் திரு வால்ட்டிஸ்னி அமைத்துள்ள '' டிஸ்னிலாந்து '' எனும் அற்புத உலகம் ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்தார். அத்தகைய அற்புத உலகைத் தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் ' டிஸ்னிலாந்தின் ' ஒவ்வொரு பகுதியினையும் பார்த்தார்.

22—11—'71 அன்று, அமெரிக்க விண்வெளிக் கப்பல்களைப் பறக்கவிடும் கென்னடி ராக்கெட் தளத்திற்கு முதல்வர் சென்ருர். 1,00,000 ஏக்கர் நிலத்தில் உள்ள இந்தத் தளத்தில் 15,000 பேர் பணி புரிகின்றனர். ஆண்டொன்றுக்குச் சுமார் 2,000 கோடி ரூபாய் வரவு-செலவு செய்யும் இந்த ராக்கெட் தளத்தில் மனிதர்களால் இயக்கப்படும் விண்வெளிக் கப்பல்களையும், தானே இயங்கும் விண்வெளிக் கப்பல்களையும் முதல்வர் பார்வையிட்டார். அமெரிக்க நாட்டிற்கு வருகை தருவோருக்குக் காட்டப்படாத ராக்கெட் தளத்தில் பல இடங்களை முதலமைச்சருக்கு ராக்கெட் தளத் தலைவர் சுற்றிக் காண்பித்தார். 1972-ஆம் வருடம் மார்ச்சு மாதம் பறக்கவிடப்படும் ' அப்போலோ 16 ' ராக்கெட்டை முதல்வர் பார்வையிட்டார். ராக்கெட் தளத்தை முதலமைச்சர் பார்வையிட்டதில் சிறப்பான பகுதி, விண்வெளி ஆராய்ச்சியின் பயன்களை அமைதியான பணிகளுக்கு எந்த அளவு பயன்படுத்தலாம் என்று குறித்து ராக்கெட் தள அலுவலர்களுடன் கலந்துரையாடியது ஆகும்.

22—11—'71 பிற்பகல் முதல்வர் சிகாகோ நகருக்கு வருகை தந்தார். அங்கு வாழும் இந்திய மக்கள் அவருக்கு மகத்தான வரவேற்பளித்தனர்.

23—11—'71 சிகாகோ பல்கலைக் கழகத்தில் அரசியல் கருத்தரங்கில் முதல்வர் பேருரை ஆற்றினார். இக்கருத்தரங்கிற்கு ஏராளமான ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் வந்திருந்தனர்.

முதல்வர் கலைஞர் தமது உரையில் தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாறு, பெரியாரின் சமூக, அரசியல் தொண்டுகள், அதனைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து அரசியல் கட்சியாகவும், ஆளுங் கட்சியாகவும் உருவாக்கிய வரலாறு, பண்டித நேருவின் ஜன நாயகக் கொள்கைகள் ஆகியவை பற்றி நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவைத் தொடர்ந்து, ஏறத்தாழ ஒருமணிநேரத்திற்குக் கருத்தரங்கிற்கு வந்திருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் எழுப்பிய ஐய வினாக்களுக்குச் சிறந்த முறையில் விடையளித்தார் முதல்வர்.

அதன்பின் சிகாகோ பல்கலைக் கழக வளைவுக்குள், பல்கலைக் கழகப் பேராசிரியர் ரூடில்ப், முதல்வருக்குச் சிறப்பு விருந்தளித்தார். பின்னர் சிகாகோ நகரில் உள்ள விஞ்ஞான-தொழில் நுட்பப் பொருட் காட்சியை முதல்வர் பார்வையிட்டார். அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. அவர் முக்கிய விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டுக், கௌரவ உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். தமிழ் நாட்டில் இதுபோல் விஞ்ஞான-தொழில் நுட்பப் பொருட்காட்சியை அமைப்பது பற்றி ஆலோசிக்கப் படும் என்று கூறினார்.

24—11—'71-லும் சிகாகோவில் தங்கியிருந்த முதல்வர், 25-11-'71-ல் நியூயார்க்நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். நியூயார்க்கிலுள்ள இந்தியத் தூதுவரக அலுவலர்களும், அங்கு வாழும் இந்திய மக்களும் முதல்வருக்குச் சிறப்பான வரவேற்பளித்தனர்.

26—11—'71-ல் நியூயார்க் நகரில் உள்ள '' ஸ்டாக் எக்சேஞ்சிற்கு '' முதல்வர் வருகை தந்தார். அங்கு கணக்குப்போடும் இயந்திரங்களைப் (கம்ப்யூட்டர்களை) பயன்படுத்தும் முறையை முதல்வர் கண்டறிந்தார்.

செனட்டர் கூப்பருடன் முதல்வர் கலைஞர்

பின்னர் நியூயார்க் நகரில் உள்ள "உலக நாடுகள் சபை"க்கு முதல்வர் வருகை தந்தார். அங்கு மிக முக்கியமானவர்களுக்கு வழங்கப்படும் வரவேற்பு, தமிழக முதல்வருக்கு அளிக்கப்பட்டது.

உலக நாடுகள் சபையில் முதல்வருக்கு நண்பகல் விருந்து அளிக்கப்பட்டது. இவ்விருந்தில் உலகநாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் தலைமை ஆலோசகர் திரு சி. வி. நரசிம்மன் அவர்களும், உலகநாடுகள் சபையில் இந்தியத் தூதுவராக உள்ள திரு சாமர்சனும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

26—11—'71 பிற்பகல், உலக நாடுகளின் பொதுச் சபையில் இந்தியப் பிரதிநிதிகளுடன் முதல்வர் வீற்றிருந்தார்.

பின்னர் உலக நாடுகள் சபையின் உயர் அலுவலர் திரு சி. வி. நரசிம்மன் அவர்கள் முதல்வருக்கு வரவேற்பு வழங்கினார். முதல்வர் தக்க முறையில் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

உலக நாடுகள் சபையின் பொதுச் செயலாளரான திரு ஊதாண்ட், உடல் நலமின்றி மருத்துவ மனையில் இருப்பதாலும் அவரைப் பார்க்க மருத்துவ மனையில் ஒருவரும் அனுமதிக்கப் படாதகாரணத்தாலும், முதல்வர், திரு ஊதாண்ட் அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரது உடல்நலம் பற்றி விசாரித்தார். முதல்வரது நல்லெண்ணங்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்ட திரு ஊதாண்ட் முதல்வருக்குத் தமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

நியூயார்க்கில் உள்ள செய்தியாளர்கள் ' வங்காள தேசத்தில் சுதந்திரப் படையினருக்கு இந்தியா ஆதரவு அளித்தால் இந்தியாவில் பிரிவினை கேட்கும் திராவிடர்களையும், சீக்கியர்களையும் இந்தியா எதிர்நோக்க வேண்டியிருக்கும் ' என உலக நாடுகள் சபையில் பாகிஸ்தான் தூதுவர் பேசியுள்ளதாகக் குறிப்பிட்டபோது '' இந்தியாவில் யாரும் பிரிவினை கேட்கவில்லை '' என ஆணித்தரமாக முதல்வர் கூறினார்.

'' அமெரிக்க செனட்டர் திரு எட்வர்டு கென்னடியைச் சந்தித்துப் பேசியபோது, வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைமையைத் தெளிவாகக் கூறினேன். அத்துடன் வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவுக்கு ஆதரவான திரு. எட்வர்டு கென்னடி அவர்கள் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் மட்டும் பேசினால் போதாது ; இந்தியாவை ஆதரித்து அமெரிக்க மக்களிடையேயும் திரு எட்வர்டு கென்னடி மேலும் மேலும் பேசவேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். வங்காள தேசப் பிரச்சினையில் அமெரிக்க மக்களும், செய்தித்தாள்களும் இந்தியாவுக்கு அளித்துவரும் ஆதரவிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

மேலும் கென்னடி முனையில் உள்ள ராக்கெட் தளத்தைப் பார்வையிட்டபோது சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு மட்டுமல்லாமல், வேளாண்மை வளர்ச்சிக்கும் அமெரிக்காவில் வளர்ந்துள்ள விஞ்ஞான வளமும், தொழில் நுட்ப நுண்ணறிவும் பயன்படுத்தப்படுவதைக் கண்டறிந்தேன். அமெரிக்காவில் கணக்குப் போடும் இயந்திரங்களினால் (கம்ப்யூட்டர்களினால்) ஏற்படும் பயன்களைக் கண்டேன். கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என இந்தியாவில் கருதப்படுவது தவறு என்பதை உணர்ந்தேன்'' என்று நியூயார்க் செய்தியாளர்கள் பேட்டியின் போது முதல்வர் கூறினார்.

நியூயார்க்கில் தங்கி இருந்த முதல்வர், தமிழகத்தில் அளிக்கப்பட்டுவரும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக அமெரிக்க நாட்டுக் கல்வி நிபுணர்களுடன் கலந்துரையாடினார். இதற்கென, ' சான்பிரான்சிஸ்கோ ' விலிருந்தும், ''மினிசாட்டோ' விலிருந்தும் கல்வி நிபுணர்களை வரவழைத்தார்.

நியூயார்க் கல்வி வாரியத்தின் வேந்தரான டாக்டர் ஆர்வே ஸ்கிரிப்னருடன் முதல்வர் தமிழகக் கல்வி வளர்ச்சிபற்றிக் கலந்து பேசினார். மேலும் உலகின் பல பகுதிகளில் உள்ள 180 கல்லூரிகளுக்கு, ஆலோசகராக விளங்குபவரும், அமெரிக்காவில் உள்ள ' விஸ்கன்சின் ' பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவருமான டாக்டர் பிரஸ்டிரபா அவர்களுடனும், மற்றொரு கல்வி மேதை டாக்டர் லோவட் ஆகியோருடனும் முதல்வர் இரண்டு மணிநேரம் கலந்துரையாடினார். பின்னர் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஆலோசனை கூறத் தமிழ்நாட்டிற்கு வரும்படி அக்கல்வி மேதைகளை முதல்வர் அழைத்தார். முதல்வரது அழைப்பினை அக்கல்வி மேதைகள் அன்புடன் ஏற்றுக் கொண்டனர். விரைவில் சென்னையில் கல்லூரிக் கல்வி பற்றி அந்த மேதைகள் ஆய்வு செய்வார்கள்.

பாரிசில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கி வைத்த தமிழக முதல்வர், தனது அமெரிக்கச் சுற்றுப்பயணத்தில் நியூயார்க் நகரிலும் '' தமிழ்ச் சங்கத்தைத்'' துவக்கிவைத்தார். இத்துவக்க விழாவில் உரையாற்றிய கலைஞர், நாம் பணிபுரிகின்ற நாட்டின்கலாச்சாரத்திற்கு நேசக்கரம் நீட்டி உறவு கொண்ட போதிலும், தமிழினத்திற்குள்ள தனித்தன்மையை இழந்துவிடக் கூடாது. அதனைப் போற்றிக் காக்க வேண்டும். அதேநேரத்தில் '' பழங்காலத் தமிழ் இலக்கியங்களில் இல்லாதது ஒன்றுமில்லை என்ற எண்ணத்தில் இருந்திடாமல், அமெரிக்காவில் வளர்ந்துள்ள விஞ்ஞானப் புதுமைகளைக் கற்றிட வேண்டும் '' எனக் கூறினார்.

அத்துடன் அமெரிக்க நாட்டில் பணிபுரியும் தமிழ்நாட்டு விஞ்ஞானிகள், தொழில்நுட்ப மேதைகள் ஆகியோரின் அறிவும் ஆற்றலும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் தமிழ் நாட்டில் ''கௌரவப் பேராசிரியர்கள் பதவி'' (Honorary Professor) உருவாக்கப்படும் எனவும், அப்படித் தமிழகத்திற்கு வருகின்ற விஞ்ஞானிகள், அமெரிக்க நாட்டில் தங்களுக்குள்ளதொடர்பினைத்துண்டித்துக்

கொள்ளத் தேவை இல்லை எனவும், தமிழகத்தில் அவர்களது பணி முடிவடைந்தவுடன் அவர்கள் அமெரிக்கா திரும்புவதற்கு வழிவகை செய்யப்படும் என்றும் கூறினர்.

அமெரிக்க செனட்டில், நிதியுதவித் துணைக் குழுவின் தலைவரான செனட்டர் கேல் மெகீ, ஜே. என. கேஞ்சி, முரசொலி மாறன் எம்.பி. ஆகியோருடன் தமிழக முதல்வர்

அரசின் நீண்ட நாளைய முயற்சியான உணவுப்பொருள்களின் உற்பத்தி, தேவைக்கேற்பப் பெருகிவிட்டதால், சமுதாய நலம், மக்கள் நல்வாழ்வுடன் கல்வி மக்களின் வாழ்வில் முதலிடம் பெற்றுவிட்டது. எனவே கல்வி மேம்பாட்டிற்குத் தமிழக அரசு ஆவன செய்யும் எனக்கூறினர்.

ஐந்து நாட்கள் நியூயார்க்கில் தங்கியிருந்த முதல்வர், ''ராகா'' எனும் மிகச்சிறந்த இசைப்படம் ஒன்றினையும், 'ரவிசங்கரின்' ஓவியச் சிற்பங்களையும் கண்டு களித்தார். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே கலை, பண்பாட்டுப் பாலங்களை உருவாக்கியுள்ள கலைஞர்களுக்கு டாக்டர் கலைஞர் தன் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

பின்னர் 29—11—'71 மாலை நியூயார்க் நகரிலிருந்து வாஷிங்டனுக்குப் புறப்பட்டார்.

30—11—'71-ல் வாஷிங்டன் திரும்பிய முதல்வர், 1—12—'71-ல் அமெரிக்க நாட்டில் உள்ள 'மேரிலாண்ட்' என்ற மாநிலத்திற்கு வருகை தந்தார். தமிழகத்தின் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கே (4 மில்லியன் மக்கள் தொகையே) உள்ள இம்மாநிலம் அமெரிக்க நாடு உருவாகும் போது இருந்த 13 மாநிலங்களில் ஒன்றாகும். இம்மாநிலத்தின் ஆளுநர் திரு மார்வின் மண்டல் அவர்களை 'அன்னா போலிஷ்' என்னுமிடத்தில் தமிழக முதல்வர் சந்தித்தார்.

'அமெரிக்க நாட்டில் நிலவும் மத்திய மாநில உறவுகள், மாநிலங்களின் அதிகாரங்கள் வருவாயினைப் பெருக்கிக்கொள்வது, மாநிலங்களின் நிருவாகம், மாநிலங்களுக்கு மத்திய அரசு ஜனநாயக முறையில் வழங்குகின்ற மான்யங்கள் ஆகியவை பற்றி மேரிலாண்ட் மாநில ஆளுநருடன் தமிழக முதல்வர் கலந்துரையாடினர்.

அடுத்து, இந்தியாவின் நீண்டநாளைய நண்பரும், அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதியும், இந்நாள் செனட்டருமான திரு ஹம்ஃப்ரே அவர்களைச் சந்தித்து அரை மணி நேரம் கலந்துரையாடினர். அப்போது, இந்தியாவிற்குள் வங்கதேச அகதிகள் வருவது இந்தியாவின் மீது ஏற்படும் மறைமுகமான தாக்குதல் என்றும், அகதிகள் பிரச்சினையைத்தீர்ப்பது அனைத்துலகத்தின் பொறுப்புஎன்பதையும் முதல்வர் எடுத்துக் கூறினர். திரு ஹம்ஃப்ரே அவர்களை இந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் வரும்படி முதல்வர் அழைத்தார்.

அடுத்து, அமெரிக்க அரசாங்கச் சமுதாய, மறுவாழ்வுத் துறையைச் சார்ந்த டாக்டர் மக்கார்தி அவர்களை முதல்வர் சந்தித்துப் பேசினர். அப்போது தமிழகத்தில் பொதுவாகப் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கெனவும் குறிப்பாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கெனவும் ஓர் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவது பற்றிப் பேசினர்.

உலக பாங்கியின் தலைவரான திரு மக்னமாரா அவர்களைச் சந்தித்துத் தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் சத்துணவுத் திட்டம், குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம், குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்கள் ஆகியவைகளை விளக்கிக் கூறி அவைகளை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த உதவி அளிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு நாளும்—ஏன் ஒவ்வொரு விநாடியும், ஏழைப்பாட்டாளி மக்கள் ஏற்றம் பெற—தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வு வளம் பெற, அவர்கள் கல்வியில் மேம்பாடு பெற அயராது உழைக்கும் நமது முதல்வர் அமெரிக்க நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 5—12—'71 அன்று தாயகம் திரும்பினர்.

நீலமலையின் பழங்குடி மக்கள்

"தனி ஒருவனுக் குணவிலை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்பது பாரதிக் கவிஞனின் வாக்கு.

காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்தும் ஒதுங்கியும் வாழ்கின்ற இனத்தவரையும் கண்டு, அவர்க்குத் தேவையானவற்றைத் தருவது மக்கள் நல அரசின் கடமையாகும்.

இதனை உணர்ந்த தமிழக அரசு, ஆதிவாசிகள் நலனுக்காக அரிய திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகிறது.

தமிழக அரசு நிதானமாகவும் உறுதியுடனும், இழப்புகளையும் இடுக்கண்களையும் பாராமலும், அத்தகைய பூர்வீகக் குடிகளுக்குப் புதுவாழ்வு தரும் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டு இன்று ஓரளவுக்கு நல்விளைவுகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. பழங்குடி மக்களின் பிடிவாதங்கள் மெள்ளத் தகர்ந்து வருகின்றன. அரசின் நேசக் கரத்தைப் பற்றிக்கொண்டு அவர்கள் வாழ்வில் ஒளி பெறத் தொடங்கியிருக்கின்றனர்.

நீலகிரி மலையில் உதகை, கூனூர், கூடலூர் என்னும் மூன்று வட்டங்கள் உண்டு, அவற்றில் 1961-ஆம் ஆண்டின் கணக்குப்படி 4,09,308 பேர் வாழ்கின்றனர். அவர்களில் ஆதிவாசிகள் மட்டும் 12,948 பேர் ஆவர். தாங்கள் வாழும் இடத்தாலும், தங்கள் தொழிலாலும் அவர்கள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

இனம் வாரியாக அவர்களின் எண்ணிக்கை வருமாறு.—

பனியர் — —	4,777
இருளர்	4,502
குறும்பர்	1,174
கோத்தர்	832
தோதவர்	706
காட்டு நாய்க்கர் ..	552
சோலகைர்	177
கோகர்	2
குடியர் — —	2
பள்ளியர் — ..	1
எதிலும் சேராதோர்.	223
	12,948

அவர்களில் பனியர்களும் காட்டு நாய்க்கர்களும் மலைச்சரிவுகளில், 4,000 அடிக்குக் கீழே வாழ்கின்றனர். குறும்பர்களும், இருளர்களும் 4,000 அடிக்குமேல் 6,000 அடிக்குக் கீழே உறைகின்றனர். 6,000 அடி உயர்வுள்ள இடங்கள் கோத்தரின் இருப்பிடங்கள். அதற்கும் மேல் உச்சியில் வாழ்வோர் தோதவர்கள் எனப்படுவோர்.

இந்தப் பழங்குடி மக்களின் பண்பாடுகளிலும் பெருத்த மாறுபாடுகள் உண்டு. தோதவர்கள் எருமைகளை மேய்த்து வாழ்கின்றனர். கோத்தர்களோ கைவினைஞர்கள்! மற்ற இனத்தவர்கள் காடுகளில் விளையும் பொருள்களை விற்று வாழ்வோர். கன்னட நாட்டிலிருந்து வந்த படகர் நீலகிரிக்கு வந்து வேளாண்மைத் துறையில் ஈடுபட்டதிலிருந்து விவசாயமும் அங்கு நன்கு செழிக்கத் தொடங்கியது.

மலைவாசிகளின் நிலையை உயர்த்தத் திட்டமிட்ட அரசு முதலில் அவர்களுக்குத் தூய்மையும் சுகாதார வசதிகளும் நிறைந்த இல்லங்களைக் கட்டித் தர ஆரம்பித்தது. அதற்காக 1,000 ரூபாய் கடனாகத் தரப்பட்டது. இன்று அத்தொகை 1,250 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் ரூ. 937.50 உதவித்தொகையாகத் தரப்படுகிறது. மீதிப் பணம் ரூ. 2.50 வீதம் 101 மாதங்களிலும், ரூ. 5 வீதம் 12மாதங்களிலும் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். மூன்றாவது ஆண்டுத் திட்டக்காலத்தில் 811 இல்லங்கள் அவ்வாறு கட்டித்தரப்பட்டன.

	குடியிருப்புகளும்.	இல்லங்களும்.
இருளர் ..	19	275
குறும்பர் ..	9	158
காட்டுநாய்க்கர் ..	3	57
தோதவர் —	58	143
கோத்தர் —	11	76
பணியர் — ...	7	102
	107	811

கடனைத்திருப்பிச் செலுத்துவதற்கு மிகவும் தாராளமாகச் சலுகைகள் தரப்பட்டும், கடன் பகுதியைக் கட்டுவதில் ஆதி

வாசிகள் காலதாமதம் செய்வதையே காண்கிறோம். வீடுகள் பழுதடையும்பொழுதுஅவற்றைச் செப்பனிடவும் இயலாத நிலையில் பழங்குடி மக்கள் உள்ளனர். அவ்வாறு சேதமடைந்து அவர்களால் கைவிடப்பட்ட மூன்று குடியிருப்புக்களை அரசு தன் செலவில் கட்டிக் கொடுத்திருக்கிறது. உறையுள் வழங்கும் அரசு, பழங்குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் எண்ணம் கொண்டு, வருவாய் மிக்க தொழில்களில் அவர்களைப் பயிற்றுவித்து வருகிறது. அன்றாடக் கூலிகளாகப் பாடுபடும் அவர்களுக்கு நிலத்தினை அளித்து வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்தி வருகிறது. வென்லாக் சரிவிலும் அதற்குப் புறத்திலும் வாழும் தோதவர்களுக்குப்பட்டா நிலங்கள் வழங்கப்பட்டு உழுவதற்கான கருவிகளும் விதைகளும் சலுகையுடன் தரப்படுகின்றன. நீலமலையில் வாழ்கின்ற ஏறக்குறைய 300 தோதவர் குடும்பங்களுக்கும் பட்டா நிலங்களைக் கொடுத்து உழைப்பை நம்பிவாழும் விவசாயிகளாக அவர்களை மாற்றுவதற்கு அரசு முயற்சி செய்துவருகிறது.

அதுபோன்றேகோத்தர், குறும்பர், இருளர், பனியர் ஆகியோருக்கும் நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் பனியர் நாடோடி வாழ்க்கை நடத்துபவர்கள். ஓரிடத்தில் தங்கி வாழாத அவர்களை நிலைக்குக் கொணர்ந்து, வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்துவது பெரும்பாடாக இருக்கிறது. அவ்வகையில் கூடலூர் வட்டத்தில் 100 ஏக்கர் நிலம் நீலகிரி ஆதிவாசிகள் சங்கத்திற்காகஒதுக்கப்பட்டு அங்குப் பனியர்களுக்காக அரசின் செலவில் வீடுகளும் கட்டித்தரப் பட்டுப் பனியர்களை அங்குக் குடியேற்றிச், சுற்றியுள்ள நிலத்தில் அவர்களைப் பாடுபடவைக்கப் பெரும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

விவசாயத் துறையில் மட்டுமன்றி வேறு தொழில்களிலும் சிறக்கவும் பூர்விகக் குடிகளுக்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. கோத்தர்கள், கருமான் வேலை, தச்சு வேலை போன்றவற்றில், மிக்க ஆற்றல் உள்ளவர்கள். இவர்கள் மூங்கிலைக் கொண்டு முடைவதில் இணையற்றவர்கள். குறும்பர்கள் காட்டின் செல்வத்தினைத் தேடிக் கொணர்வதில் திறனுடையோர். மலைவாழ் மக்களின் இத்தகைய திறமையெல்லாம், பயனுள்ள முறையில்வெளிப்படப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அரசின் ஆதரவோடு முன்னேறி வருகின்றன. பனியர்களுக்காக மூங்கில் முடையும் தொழிலுக்கான சங்கங்கள் பம்பலக் கொம்பையிலும், கூழலையிலும் இயங்கி வருகின்றன. காட்டில் சேகரிக்கப்படும் பொருள்களுக்கான சந்தையுண்டு. கசபர்களுக்காகவும் இருளர்களுக்காகவும் இரண்டுசங்கங்கள் இருக்கின்றன. உதகையில் தோதவர்களுக்கான பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்செயல்பட்டு வருகிறது. தோதவர் பெண்களின் கைவண்ணம் வளரவும், அதன் மூலம், வருவாய் பெருகவும் ''எம்ப்ராய்டரித் தொழிற்பள்ளி'' ஒன்றும் உதகையில் உண்டு. கோத்தர்களுக்காகத் திரிசிகாடியில் பொம்மை உற்பத்திச் சாலையும், சிவப்பு மண்பாண்ட உற்பத்திக் கூடமும், கீழ்கோத்தகிரியில் தையற்கலைப் பள்ளியும் இயங்கி வருகின்றன.

ஆலயம் ஆயிரம் அமைத்தலை விட ஆங்கொரு ஏழைக்கு எழுத்தறிவித்தல் புனிதமான பணியல்லவா? அரசின் தீவிரமான முயற்சியினால் பள்ளிக்குச் செல்லும் பூர்விகக் குடிகளின் குழந்தைகளின் எண்ணிக்கை பெருகிவருகிறது. மலை எங்கும் ஆதிவாசிகள் பரவி வாழ்வதாலும், இடம் விட்டு இடம் அவர்கள் அடிக்கடி மாறிக்கொண்டு இருப்பதாலும், அரசு அமைத்துள்ள 18 பள்ளிகளில், சிறுவர்கள் தங்கிப் படிக்க வசதிகள்செய்துதரப்பட்டுள்ளன. அரசினர் பள்ளி, தனியார் நடத்தும்தக்கர்பாபா குருகுலம், தூசத்குரு சேவா சங்கம் ஆகியவற்றிலும் சேர்ந்து 1,456 பிள்ளைகள் படித்து வருகின்றனர். கல்வித் துறையைப் பொறுத்த வரையில் தங்கள் குழந்தைகள் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி நீலகிரி மக்களிடையே வேகமாகப் பரவி வருகிறது. அரசும் பள்ளிகளில் மாணவர்க்கு உணவு, உறையுள் வழங்கியும், உதவித் தொகை கொடுத்தும் அவர்களுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் சுகாதாரத்துடன்வாழ, சுற்றுப்புறத் தூய்மை அவசியமாகும். சுத்தமான தண்ணீர் மக்களுக்குக் கிடைக்கப் பெறுதல் வேண்டும்; கழிவு நீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு வெளியேற்றப்பட வேண்டும். இவையெல்லாம் நிறைவேற, நீலகிரி மாவட்டத்தில் உள்ள பூர்விகக் குடிகளின் 250 குடியிருப்புகளில் அரிசன நலத்துறை துரிதமாகச் செயலாற்றி வருகிறது. புதிய குடிநீர்க்கிணறுகள் தோண்டப்படுவதோடு பழைய கிணறுகளை ஆழப்படுத்தலும், அவற்றில் தூர் எடுத்தலும் நடந்து வருகின்றன. குடியிருப்புகளைச் சுற்றிப் பாதைகள் வெட்டவும் நடை பாதைகள் அமைக்கவும் அரசு இன்று ஆவன செய்துகொண்டிருக்கிறது.

பழங்குடிமக்களின் நல்வாழ்விற்காக இரண்டு நகரும் மருந்தகங்கள் நீலகிரி மாவட்டத்திற்குத் தரப்பட்டுள்ளன. அவை உதகையிலும் கூடலூரிலும் பிணி நீக்கும் பணியினை மேற்கொண்டுள்ளன. உதகையிலுள்ள நகரும் மருந்தக வண்டி, தோதர்கள், கோத்தர்களின் நோய்களைத் தீர்த்து வருகிறது. கூடலூரில் உள்ள அத்தகையவண்டிப்பாதைக் கருகாமையில் உள்ள குடியிருப்புகளில் வாழ்வோருக்கு உதவி அளிக்கிறது. இன்னும், தாய் சேய் நல விடுதிகளும் மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் ஆதிவாசிகளுக்காக அமைக்க அரசு உறுதி பூண்டிருக்கிறது.

மாநில, மாவட்ட மட்டங்களில் பூர்விகக் குடிகளுக்காக நல்வாழ்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தோதவர் இனத்தைச் சேர்ந்த சமூக ஊழியர் திரு முத்திக்கன் இடம் பெற்றுள்ளார். பூர்விகக் குடிகளின் நம்பிக்கையைப் பெற்று அவர்களுடைய ஒத்துழைப்புடன் அவர்களின் வாழ்வில் சுமையைக் குறைத்துச் சுவையைக் கூட்டத் தமிழக அரசின் அரிசனநலத் துறை தன்னாலியன்ற அரும்பணிகளையெல்லாம் ஆற்றி வருகிறது. பல முனைகளில் வெற்றியும்கண்டு வருகிறது. முனைப்புடன் உழைத்தால் முயற்சிக்குரிய பலன் கிட்டாமலா போய்விடும்?

நற்றத்தம்

தமிழில் யாப்பிலக்கணம் உணர்த்தும் நூல்களில் ஒன்று நற்றத்தம். இந்நூல் இப்போது இல்லை. யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக வந்துள்ளது. இதன் ஆசிரியர் நற்றத்தனார்.

1602 ஆம் ஆண்டு—

''ஏசுபிரான் போதித்த உண்மைகளை ஏற்றுக்கொண்ட மக்களில் சிலர் நீலகிரி மலையில் ஒதுங்கி வாழ்கின்றனராம். அவரைத் தேடிக் கண்டுபிடித்து அவருடன் தொடர்புகொள்க'' என்று ஓர் ஆணை பிறந்தது கொச்சி சிரியன் கிறித்துவ ஆலயத்தின்பாதிரியாரிடமிருந்து! இரு போர்த்துகீசியப் பாதிரியார்கள் புறப்பட்டனர். இருள்மண்டிய காடுகளைக் கடந்து மலை ஏறினர். அங்கு வாழும் மக்களைக் கண்டனர். அவர்கள் கரத்தில் பைபிள் இல்லை. கழுத்தில் சிலுவை இல்லை. அவர்கள் கிறித்துவர் அல்லர் என்பது தெளிவாகிவிட்டது. எனினும் அவர்களுடைய நெடிதுயர்ந்த தோற்றமும், அகன்று விரிந்த கண்களும், நீண்டு நிமிர்ந்த நாசியும், சிவந்த நிறமும், உள்ளத்து உணர்ச்சிகளைக் கள்ளமின்றி எடுத்துரைக்கும் சீர்மிகு முகமும் அவர்களைக் கவர்ந்துவிட்டன.

அதுமுதல் தோதவர்களைப் பற்றித்தான் எத்தனை விந்தைமிகு ஆராய்ச்சிகள்!

''ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் காணமற்போன இஸ்ரேல் மக்களின் தொகுதி அல்லவா இங்கே வாழ்கிறது'' என்று வியந்தார் ஒருவர். பண்டைத் தமிழகத்தில் வாணிபத்தின் பொருட்டு வந்து தங்கியிருந்த ரோமானியர்கள் பின்னர் இங்கு வந்துற்றனரோ என்று ஐயுற்றார் மற்றொருவர். சுமேரிய மக்களுக்கு இவர் நெருங்கிய பல்லவர் உறவென்றார் சிலர். உணவுப் பழக்கத்தையும், திருமண முறையையும் கண்டு இவர்கள் பாண்டவர் மரபென்றார் சிலர். "ஐயிரண்டு திசை முகத்தும் புகழ்வைத்த தென்னிலங்கைப் பெருவேந்தன்" இராவணனின் பல்லக்குச் சுமப்போரின் பரம்பரை என்று கருத்துரைத்தார் வேறு சிலர்.

தோதவர்கள் மொழி கன்னட மொழியுடன் தொடர்புடையது என்பது டாக்டர் மெட்லின் கூற்று; அது மலையாளத்தின் கிளை என்பது ரிவர்லின் கருத்து. அது சுந்தரத் தெலுங்கின் உதரத்தே எழுந்த மொழி என்பது டாக்டர்ஆப்பர்ட்டின் ஆராய்ச்சி. தமிழின் அண்மைக்காலச் சேய் என்பது கால்டுவெல் தரும் விளக்கம். சுமேரிய மொழிக்கும் தோதவர் மொழிக்கும் இடையே வியத்தகு ஓற்றுமை உள்ளது என்பது கிரேக்க இளவரசரும் ஆராய்ச்சியாளருமான பீட்டரின் கண்டுபிடிப்பு.



உறவாதல் வேண்டும் என்று கணித்தார், ஒரு வரலாற்று ஆசிரியர். ''இவர்கள் திராவிடரே!'' என்று முடிவு கூறினார் ஒரு மொழிநூல் வல்லுநர். இவர்கள் ஆரிய வழியினர் என்று விளக்கினார் மக்களின் தொன்மையை ஆயும் புலவரொருவர்.

மாமல்லபுரத்துக் குடவரைக் கோயில்கள் போல அமைந்த தோதவர்களின் வீடுகளையும் ஆலயங்களையும் கண்டு இவர்கள்

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் திருச்சியிலுள்ள 'ஜூனியர் சேம்பர், என்னும் இளைஞர் கழகம் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கான ஓவியப் போட்டிகளை நடத்தி வருகிறது.

ஆறுவது ஆண்டான இவ்வாண்டில் நடைபெற்ற குழந்தைகள் ஓவியம் வரையும் போட்டியை வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் துவக்கி வைத்தார். மின்துறை அமைச்சர் திரு ஓ.பி. இராமன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்.

திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி லாலி மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஓவியப் போட்டியில் 2,261 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

சின்னஞ்சிறு பிஞ்சு உள்ளங்களின் கற்பனைத் திறனை ஆக்க வழியில் உருவாக்கும் இப்போட்டியை நடத்தியவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

போட்டியில் கலந்து கொண்ட குழந்தைகள், வயதுக்கு ஏற்ப நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு பிரிவுக்கும், முதலாவது, இரண்டாவது, மூன்றுவது பரிசுகளும் ஏழு ஆறுதல் பரிசுகளும் அளிக்கப்பட்டன. அதிகப் பரிசுகள் பெற்ற குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடத்திற்குச் சுழற்கேடயம் வழங்கப்பட்டது.

நீலகிரி மலையில் ஆறுயிரம் அடிகளுக்குமேல் வாழ்கின்ற தோதவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்குமேல் இராது. ஆனால், அவர்களைப் பற்றிய ஆராய்ச்சிகளோ முடிவுறாது நீண்டு கொண்டிருக்கின்றன. இந்தியாவில் உள்ள வேறு எந்த மலைவாழ் இனத்தைப் பற்றியும் இத்தனை விரிவான ஆராய்ச்சிகள் நடந்ததில்லை எனலாம். ஆங்கிலேயருக்கும் மேலை நாட்டவருக்கும் தோதவர்களைப் பற்றி அப்படி ஒரு தனிமோகம்!

காரிருள் அமர்ந்த காடுகளில் கருத்த இனத்தவராய் வாழும் மற்ற மலைவாழ்மக்களிலும் முற்றிலும் வேறுபட்ட தோதவர்களின் தோற்றம் கண்டு அவர்கள் நெஞ்சம் மயங்கினரோ ? "புத்துக்குளி" என்னும் அங்கி அணிந்து பண்டை ரோமானியர் போல் அவர்கள் நடந்த ஏற்றம் மிகு நடையழகில் சித்தம் பறி கொடுத்தனரோ ? அவர்தம் விசித்திரமான சமுதாயப் பழக்கங்களில் சிந்தையைக் கிளறும் ஆவல்தான் ஊற்றெடுத்ததோ ?

நிலத்தின் வெம்மை தாங்காது மலை ஏறிவந்த தங்களை அன்புடன் வரவேற்ற தோதவரின் பண்பினைக் கண்டு மேனி குளிரும் உதகைச் சூழ்நிலையில் மேனாட்டாரின் உள்ளமும் குளிர்ந்ததுவோ? அறியோம்!

உலகின் மற்றெல்லா இனத்தாரையும் விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்னும் எண்ணம் தோதவர்களுக்கு இருக்கிறது. மலையில் வாழும் பிற இன மக்களும், பின்னாளில் அங்குக் குடியேறியவர்களும் தோதவர்களையே மலையின் நாயகர்களாகக் கொண்டு "குடு" என்னும் திரை செலுத்தும் வழக்கமும் நெடுநாட்களாக இருந்து வந்திருக்கிறது. தோதவர்கள் தங்களை 'ஆள்' என்று அழைத்துக்கொள்வர். அவர்கள் அகராதியில் அதற்கு மனிதர் என்று பொருள். மற்ற மக்களைப் பேடர்கள் என்று அழைப்பர்.

தோதவர்கள் இனத்தில் தார்த்தசாள், தெவ்லியாள் என்னும் இரு பெரும் பிரிவுகளும் 14 உட்பிரிவுகளும் உண்டு. திருமணங்கள் உட்பிரிவுகளுக்குப் புறத்தேயும் பெரும் பிரிவுகளுக்கு உள்ளேயும் நிகழ்கின்றன. தார்த்தசாள் குலத்துப் பெண்ணுக்குத் தெவ்லியாளர் குலத்து ஆண் மகனுடன் காதல் தொடர்பு இருக்கக் கூடும். ஆயினும் கடிமணமாக மலரச் சமுதாயம் அனுமதிப்பதில்லை. உட்பிரிவுக்குள்ளே வாழ்பவர் உடன் பிறப்புகளைப்போல எண்ணப்படுவதால் வெவ்வேறு உட்பிரிவுகள் எனப்படும் குழுக்களைச் சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும்தான் திருமணம் நிச்சயிக்கப்படும்.

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்குகளின்படி இன்று நீலகிரியில் வாழும் தோதவர்களின் எண்ணிக்கை 776 ஆகும். 19-ஆம் நூற்றுண்டின் கிறித்துவ மிஷன் முயற்சியினுல் மதம் மாறிய தோதவர்களையும் நிலம் பெயர்ந்து நாடு நகரங்களை அடைந்த தோதவர்களையும் சேர்க்க இந்த எண்ணிக்கை தொள்ளாயிரமாக உயரக் கூடும்.

தோதவர்கள் 'மந்துகள்' எனப்படும் சிறு கிராமங்களில் வாழ்கின்றனர். எருமை மந்தைகளை மேய்ப்பவர் ஆதலால் அத்தகைய மந்தைகள் தங்கிய இடங்களே மந்துகள் ஆகியிருக்கக்கூடும். நீலகிரி மலையில் அத்தகைய மந்துகள் நூற்றிருபத்து மூன்று இருக்கின்றன. அவற்றில் 89 மந்துகள் காலமெல்லாம் இங்கேயே கழித்திடமாட்டோமா என்னும் எண்ணத்தைத் தூண்டும் அளவுக்கு விரிவும் வனப்பும் வளமையும் பொங்கித் ததும்பும் வென்லாக் சரிவுகளில் (wenlock downs) அமைந்திருக்கின்றன. முத்தநாடு மந்து என்பது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் சுற்றுலாப்பயணிகளின் கண்களுக்கும் காமிராக்களுக்கும் இலக்காவது அரசினர் தாவரப் பண்ணையை ஒட்டிய மஞ்சக்கல் மந்தாகும்.

அரை வட்ட வடிவில் மூங்கிலும் பிரம்பும் கொண்டு நெருக்கமாக வேயப்பட்ட தோதவர்களின் வீடுகள் தோற்றத்தில் சற்றுப் புதுமையானவை. வீட்டின் வெளியே இரு சிறு திண்ணைகள் இருக்கும். இரு கால்களையும் கைகளையும் தரையில் வைத்துத் தவழ்ந்துதான் நாம் குடிலுக்குள் புக வேண்டும். அத்தனைச் சிறிய வாயில்! உள்ளே புகுந்ததும் உதகையின் குளிரை வெல்வதற்கு இதனினும் உயர்ந்த இடம் இருக்க முடியாது என்பதை உணர்வோம். வீட்டின் ஒரு புறத்தில் படுப்பதற்கு மேடையும் பாத்திரங்கள் வைப்பதற்கும் ஓர் இடமும் ஒரு மூலையில் அடுப்பும் உண்டு. தானியங்கள் இடிப்பதற்குத் தரையில் குழி அமைக்கப்பட்டிருக்கும்.

தோதவர்களின் கலையும், பண்பாடும், கடவுள் நெறியும் அவர்கள் வளர்க்கும் எருமையுடன் சேர்த்துப் பின்னப்பட்டிருக்கின்றன. நீலகிரியில் வாழும் தங்களுடைய 3,000 எருமைகளையும் தோதவர்கள் தனித்தனியாக அறிவர். எருமைகள் அவர்களுக்குத் தெய்வீகமானவை. பெண்ணுக்குச் சீதனமாக எருமைகளே வழங்கப்படுகின்றன. தவறுகளுக்கு அபராதங்களாக எருமைகளே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எருமையின் பாலையும் பாலில் உற்பத்தியாகும் பொருள்களையுமே தோதவர்கள் முக்கிய உணவாகக் கொள்கின்றனர். தோதவர் இறக்கும்பொழுதும் அவர்களுக்குத் துணையாக அவர் வளர்த்த எருமைகளே பலியாகத் தரப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட மந்துவின் அருகே ஓடும் இரு சிற்றேடையில் ஒன்று, தெய்வீக எருமைகள் நீர் அருந்துவதற்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும். கிராமத்தில் ஓர் ஓடை வறண்டுபோனலோ எருமை நீர் அருந்தும் நிலைக்குக் கீழ் இருந்துதான் மக்கள் தண்ணீர் எடுக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் எருமை அருந்தும் நீரை யாரும் கறைப்படுத்தக் கூடாது. நீண்டு வளைந்த கொம்புகளைக் கொண்ட இந்தத் திண்மையான எருமைகள் பசிய புல்களோடு மூலிகைச் செடிகளையும் விரும்பித் தின்கின்றன. இவை இருநூறு முதல் முந்நூற்றைம்பது அவுன்சு வரை பாலினைப் பொழிந்த காலம் உண்டு. கூட்டமாகக் கூடி நின்று இவை தாக்கினுல் காட்டு விலங்குகளும் கதிகலங்கிவிடும்.

மாணவிக்குப் பரிசு

காந்தியடிகளின் நூற்றுண்டு விழாவை ஒட்டிச் சென்னை விக்டோரியா தொழில் நுட்பக் கழகத்தினர் ஓவியப் போட்டி ஒன்று நடத்தினர். தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர் மாநிலங்களைச் சேர்ந்த 103 ஓவியர்கள் இதில் பங்கு கொண்டு 203 ஓவியங்கள் அனுப்பினர்.

சென்னை ஓவிய நுட்பக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. சுசீலா சொக்கலிங்கம் அவர்களின் 'கிராமத்து அழகி' என்னும் ஓவியம் பரிசு பெற்றது.

கிராமத்து அழகி ஓவியம், கடற் சிப்பிகள், மணிமாலைகள், கண்ணுடித் துண்டுகள் வெள்ளைச் சிமெண்டு, செங்கல் தூள் போன்றவற்றுல் செய்யப்பட்டது.

கட்டுப்பாடுகள் மிகவும் குறைவான தோதவரின் இல்லற வாழ்க்கை புதுமையானது. திருமணம் என்பது புனிதமான சடங்காகவோ காலமெல்லாம் போற்றப்பட வேண்டிய தளையாகவோ அங்குக் கருதப்படுவதில்லை. எந்த நேரத்திலும் ஒரு கணவன் தன் மனைவியை அவள் பிறந்தகத்துக்கு அனுப்ப முடியும். அதே போன்று மனைவியும் எந்த நேரத்திலும் எவ்விதத் திருமண முறிவையும் கோராமல் தான் விரும்பும் ஆண் மகனுடன் உறவு கொள்ள முடியும்.

குழந்தைகளுக்கு இரண்டு அல்லது மூன்று வயது நடக்கும்பொழுதே தோதவர் இனத்தில் "நிச்சயதார்த்தங்கள்" நிகழ்ந்து விடுகின்றன. தாய் மாமன் மகள் அல்லது அத்தையின் மகளே ஒரு பையனுக்கு மிகவும் பொருத்தமான மனைவியாவாள். இத்தகைய நிச்சயதார்த்தங்கள் ஒவ்வொரு ஆண்டும் பெண்ணுக்குப் 'புத்துக்குளி' எனப்படும் ஆடையினை வழங்குவதன் மூலம் மேலும் உறுதி செய்யப்படுகின்றன. ஆனல் இந்த உறவினை முறித்துக்கொள்ளும் உரிமை இரு சாராருக்கும் எப்பொழுதும் உண்டு. வயது வந்த பெண்ணெருத்திக்கு அவளுக்கு நிச்சயம் செய்விக்கப்பட்ட ஆண் மகன் பிடிக்காதவனுக இருந்தால் அவனை மறுப்பதற்கு அவள் முழு உரிமை பெற்றிருக்கிருள். ஆனுல், அதற்குரிய அபராதத்தினைப் பஞ்சாயத்தார் குறித்தபடி பையனுக்குச்செலுத்த வேண்டும்.

நிச்சயம் செய்விக்கப்பட்ட பெண் பதினுறு அல்லது பதினேழு வயது வரை அவனுடைய தந்தை வீட்டிலேயே காலம் கழிக்கிருள். அவளுக்காக உறுதி செய்யப்பட்டவனுடன் தான் அவள் முதன் முதலாக உடல் உறவு கொள்ள வெண்டும் என்ற அவசியம் இல்லை. தோதவர் இனத்தில் பருவமடைந்த ஓர் பெண்ணும் ஆணும் காதல் கொண்டு, கருத்தொருமித்தால், ஆண், பெண்ணின் தந்தையை அணுகி அவளை அவன் மனைவியாக அடைவதற்கு அனுமதியைக் கோருவான். அவள் ஏற்கனவே மற்றெருவனுக்கு நிச்சயமானவளாக இருந்தால் பஞ்சாயத்தார் தீர்ப்பின்படி சில எருமைகளை அவளுக்குரியவனுக்கு அவன் அபராதமாகச் செலுத்த வேண்டியிருக்கும்.

இவ்வாறு ஒருவன் மனைவியை மற்றவன் 'கவர்வது' என்பது தோதவர் இனத்தில் வழக்கமாகவே இருந்து வந்திருக்கிறது. தன் வாழ்நாளில் ஒரு தோதவர் பெண் சராசரியாக நான்கு முறை மணம் புரிந்துகொள்கிறாள்.

தோதவர் இனத்தில் எழுபத்தைந்து சத வீதத்திற்கு மேற்பட்ட ஆண்கள் பத்தொன்பது வயதிற்கு முன்னாலேயே இல்வாழ்வில் ஈடுபட்டு விடுகின்றனர். பெண்களில் தொண்ணூற்றெட்டுச் சத வீதத்திற்கும் மேலாகப் பதினைந்து வயதிலேயே தாம்பத்தியச் சுவையை உணர்ந்து விடுகின்றனர்.

கருவுற்ற தோதவர் பெண் ஐந்தாம் திங்களில் தனித்ததோர் குடிசையில் வைக்கப்படுகிறாள். ஏழாம் மாதத்தில் அவளுக்குத் திருமணம் நிகழ்கிறது. திருமணம் என்பது இங்குப் பொருத்தமற்ற வார்த்தையாகும். ஏனெனில் இந்தச் சடங்கு ஒரு வகையில் அவளுடைய குழந்தைகளுக்குத் தந்தையாகவும், அவளைக் காப்பாற்றுவதற்குக் கணவனாகவும் ஒருவனை நிர்ணயிக்கும் சடங்காகும். சமுதாய வழக்கப்படியும், சட்டப்படியும், அவனே அவள் வயிற்றில் தற்போது வளரும் குழந்தைகளுக்கு மட்டுமின்றி இனிப் பிறக்கும் குழந்தைகளுக்கும் தந்தையாவான்.

ஒரு நாவல் மரத்தடியின் கீழ் இந்தப் புதுமையான சடங்கு நிகழ்கிறது. எல்லாருடைய விருப்பத்துடனும் பஞ்சாயத்தார் கூடி முடிவு செய்த மாப்பிள்ளையும் பெண்ணும், முன் வரிசையில் பெண்களும் பின் வரிசையில் ஆண்களுமாகக் குழுமியிருக்கும் பெரியோர்களிடம் ஆசி பெறுகின்றனர். பின்னர் 'புப்தூர்' என்னும் செடியினைத் தேடி மாப்பிள்ளை புறப்படுகிறான். சிறிது நேரத்தில் அந்தச் செடியின் கிளையினால் ஆன வில்லுடனும் அம்புடனும் அவன் திரும்புகிறான். அவற்றை அன்புடன் பெண்ணிடம் ஒப்படைக்கிறான். இனி இது போன்றதோர் சடங்கினை மற்றொருவன் நிகழ்த்தும் வரை அவனே அவளுக்குக் கணவனும் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் தந்தையும் ஆவான். மணவினை முடிந்ததும் விருந்து தொடங்குகின்றது. ஆண்கள் களிபொங்க ஆடி மகிழ்கின்றனர்.

சிறையிலே இளஞ் சிட்டுகள் !

இந்தியாவில் சராசரியாக நாள்தோறும் 20,000 இளங் குற்றவாளிகள் (21 வயதுக்குட்பட்டவர்கள்) சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். சிறையில் ஓர் இளங்குற்றவாளிக்கு ஒரு நாள் ஆகும் செலவு மூன்று ரூபாய்; ஆண்டுக்கு மொத்தம் ஆகும் செலவு சுமார் இரண்டேகால் கோடி ரூபாய்.

தோதவர் இல்வாழ்க்கை முறையில் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தைக் கவரும் ஒரு பழக்கம், ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி அவனுடைய உடன் பிறப்புகளுக்கும் மனைவியாக இருப்பதாகும். முன்னாளில் தோதவர் இனத்தில் பெண்கள் மிகவும் குறைவாக இருந்தது தான் இந்தப் பழக்கத்திற்கு அடிப்படை என்பர். மனப்போக்கில் மாற்றம், பெண்கள் கூடுதலின் விளைவாக இந்தப் பழக்கம் இந்நாளில் மெல்ல மறைந்து வருகிறது.

குழந்தை பிறந்ததும் ஒரு குடிசைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடுத்த அமாவாசை வரை அங்கேயே வளர்க்கப்படுகிறது. குழந்தை பிறந்த மூன்று மாதங்கள் அதன் முகத்தைப் பார்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த வழக்கமும் இந்நாளில் அருகி வருகின்றது. ஆண் குழந்தை பிறக்கும்பொழுது, சேயினைத் தாயும் தந்தையும் தங்கள் பிரிவினைச் சேர்ந்த ஒரு புனிதக் குடிலுக்கு எடுத்துச் சென்று இறை வழிபாடு புரிந்து பெயரிடுகின்றனர். பெண் குழந்தைகளுக்கு அத்தகைய 'பெருமை' கிடைப்பதில்லை. மலையும், நதியும், வாழும் மந்துவும், கோயிலும் ஆண் குழவிகளுக்குப் பெயர்களாக அமைகின்றன. நகைகளின் பெயர்களைப் பெண் குழந்தைகளுக்குச் சூட்டுகின்றனர். எனினும் ஒருவருக்கு வைத்த பெயரைத் தோதவர்கள் மறு முறை யாருக்கும் சூட்டுவதில்லை. ஒருவன் இறந்த பிறகு தேவனாவதால் அவனுடைய பெயரை மற்ற யாரும் உச்சரிக்கக் கூடாது என்பது அவர்கள் கொள்கைகளாகும்.

தோதவர்கள் சந்திக்கும் பொழுது தங்களுக்கே உரிய முறையில் வணக்கம் செலுத்துகின்றனர். பெரியவர் ஒருவர் பெண்மணி ஒருத்தியைக் காண நேர்ந்தால் தனது பாதங்களை ஒவ்வொன்றாக மாற்றித் தன் முன்னால் குனிந்து அமர்கின்ற பெண்ணின் சிரசில் வைக்கிறார். அவள் தனது வலது கரத்தால் அவருடைய பாதங்களைப் பரிவுடன் பற்றிச் சுமக்கிறாள். வயதான பெண்மணியும் ஓர் இளைய ஆண் மகனும் சந்திக்கும்பொழுது மேற்கூறிய பழக்கம் மாறுபடுகிறது. ஆணின் தலையில் வயதான மாதின் பாதங்கள் பதிகின்றன.

பஞ்சாயத்து என்பது தோதவர் இனத்தின் வலிமை மிக்கதோர் அம்சமாகும். கோயில் பூசாரிகளை நியமிப்பது முதல், திருமணங்கள், மண முறிவுகள், பிணக்குகள் வரை பஞ்சாயத்தாரால் எல்லா வழக்குகளும் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றன. அபராதங்கள் எருமைகள் வடிவில் செலுத்தப்படுகின்றன. இனத்தில் முதுமை மிக்க மக்கள் சிலர் வட்டமாக அமர்ந்து பேசி இவ்வாறு எடுக்கும் முடிவுகளை எல்லாரும் எவ்விதத் தடையுமின்றி ஏற்றுக்கொள்கின்றனர்.

தோதவர்கள் இவ்வுலகைத் தோதவர் நாடென்றும், இறந்தவர் புகுவதை அம்ம நாடென்றும் அழைக்கின்றனர். தோதவர் குலத்தில் இறப்பு நிகழும்பொழுது அது பெரும் சடங்காகக் கொள்ளப்படுகிறது. இறந்தபின் நிகழும் சடங்குகள் இரண்டு பிரிவுகளாகச் செய்யப்படுகின்றன. இறந்த உடன் நிகழ்வது " பச்சைச் சாவு " எனப்படுகிறது. சின்னாட்கள் கழித்து, மாண்டவரை " அம்ம நாட்டிற்கு " அனுப்பும் விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இறந்தவருக்கு எருமைகள் பல அன்று பலியாகத் தரப்படுகின்றன. முன்னாளில் இறந்தவரின் மந்தை முழுவதும் அன்று வெட்டிப்பலியாக்கப்பட்டு விடுமாம். அம்ம நாட்டில் இறந்தவருக்குத் துணை போவதற்காக எருமைகள் இவ்வாறு காணிக்கையாக்கப்பட்ட விசித்திரமான கொடிய வழக்கம் அரசினரின் தடை காரணமாக இன்று மறைந்து வருகிறது.

தோதவர்களின் மதத்தைப் பற்றிய உண்மைகள் ஆராய்ச்சியாளர்களுக்கு இன்றும் எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. அவர்களுக்குக் கோயில்கள் உண்டு எனினும் அவர்கள் உருவ வழிபாட்டில் நம்பிக்கை உடையவர் அல்லர். பெண்கள் கோயில்கள் அருகே வரக்கூட அனுமதிக்கப்படுவதில்லை. லவ்டேலுக்கும் பெர்ன் குன்றத்திற்கும் இடையே ஒரு கோயில் உள்ளதனால் இன்றும் தோதவர் பெண்கள் அவ்வழியில் புகை வண்டியில் பயணம்செய்வதில்லை. மதத்தின் பெயரால் அவர்கள் திருவிழாக்கள் நடத்துவதில்லை.

எருமைகளில் சிலவற்றைத் தோதவர்கள் புனிதமானவையாய்க் கருதுகின்றனர். ஒவ்வொரு மந்துவிற்கும் அருகே ஒரு கோயில் உண்டு. அதற்கருகே உள்ள தொழுவத்தில் இந்த எருமைகள் பூசாரியினால் பேணிக் காக்கப்படுகின்றன. பஞ்சாயத்தாரால் நியமிக்கப்படுகின்ற பூசாரி கடுமையான கட்டுப்பாடுகளுடன், வாழ்க்கையின் வசதிகளிலிருந்தும் வசீகரங்களிலிருந்தும் ஒதுங்கி வாழ்பவராவார். இடையில் அணிந்திருக்கும் கருப்புத் துண்டுதான் இவருடைய ஒரே அங்கியாகும். கோயிலுக்குள் ஒரு பகுதியில் இவர் வாழ்கிறார். தோதவர்கள் கோயில் ஒரு வகையில் பால் பண்ணையாகவே விளங்குகிறது. தெய்வீக எருமைகளை மேய்ப்பதும் அவற்றினின்றும் பால்கறப்பதும், வெண்ணெய் தயிர் எடுப்பதும், " பாலாள் " எனப்படும் பூசாரியின் பணியாகிறது. இவற்றைத் தவிர, இறப்பு, பிறப்புச் சடங்குகளின்போது பூசாரி பங்கேற்கிறார். அந்நியரின் கால்களும் பெண்டிரின் பாதங்களும் படாமல் இவர் கோயிலைக் காக்கிறார். " தீட்டுகள் " நேரும்பொழுது விரதங்கள் இருந்து பிராயச்சித்தம் செய்வதும் இவர் பொறுப்பாகும். பாலைக் கறக்கும் பொழுதும், தயிரைக் கடையும் பொழுதும் இவருடைய இதழ்கள் மந்திரங்களை ஓதிக்கொண்டே இருக்கும்.

தோதவர்களின் கோயில்களில் எருமை நெய்யைக் கொண்டுதான் பூசாரி விளக்கேற்றுகிறார். விளக்கேற்றுவதற்குக் கோயில்களில் தீக்குச்சிகள் பயன்படுத்தப்படுவதில்லை. இரண்டு அடி நீளமுள்ள குச்சிகளை உரசித் தீப் பற்ற வைக்கின்றனர். மோனி எனப்படும் புனித மணி ஒன்று கோயிலில் உண்டு.

தோதவரின் ஆலயங்களில் சிறப்பு மிக்கதாகக் கருதப்படுவது சத்தி மந்துவைச் சேர்ந்த கோயிலாகும். இருவர்க்கிடையே பூசல்கள் நேரும்பொழுது, அவர்களை இந்தக் கோயிலில் அழைத்து விசாரித்தால் உண்மை வெளியாகும் என்பது தோதவர்களின் நம்பிக்கையாகும். சத்தி மந்துவின் ஆலயத்தின் முன்னால் சத்தியத்திற்கு மாறாக யாரும் நடந்துகொள்ள முடியாது என்பது தோதவர்கள் கருத்தாகும்.

தோதவர் குலப்பெண்கள் எருமை நெய்யைத் தடவித் தங்கள் கூந்தலைச் சுருள் சுருளாகத் தொங்கவிட்டிருப்பர். கால்களின் அளவும் கார் குழலின் சிறப்பும் தான் ஒரு பெண்ணின் அழகுக்கு அளவுகோல் என்று தோதவர் எண்ணுகின்றனர்.

தோதவர் இனத்துப் பெண்களும், ஆண்களும் ஒன்பது அடி நீளமும் நாலரை அடி அகலமும் உள்ள 'புத்துக்குளி' என்னும் ஆடையை அணிகின்றனர். கோவையில் உருவாகும் துணிக்குப் புது மெருகேற்றிப் புத்துக்குளியாக மாற்றுவது தோதவர் பெண்களின் கைவண்ணமாகும். விரைவாகவும் மிகுந்த கற்பனையுடனும் இவர்கள் துணியின் மீது வண்ண நூல்களைக் கொண்டு பின்னுகின்றனர். வேலைப்பாடுகள் மிகுந்த புத்துக்குளிகளைக் கண்டு வெளிநாட்டார் பலர் பித்துப்பிடித்து அலைகின்றனர் எனின் மிகையாகாது.

பொடி தூவினால் தீ அணையும் !!

மின்சாரக் கருவிகளால் ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்கத் தண்ணீரைப் பயன்படுத்தினால் மேலும் கோளாறுகள் ஏற்படக் கூடும். எனவே இதுபோன்ற தீ விபத்துக்களை அணைக்க ஒரு விதப் பொடியை இங்கிலாந்து நாட்டில் கண்டு பிடித்திருக்கிறார்கள். மின்சாரக் கருவி, தீப் பிடித்துக் கொண்டதும் இந்தப் பொடியினைத் தூவினால் தீ அணைந்து விடும்.

அத்துடன் இந்தப் பொடி பட்ட இடத்தில் எந்தவிதக் கறையும் படாது. துடைத்தவுடன் சுத்தமாகிவிடக் கூடியது.

தோதவர்கள் மாமிச உணவைத் தீண்டாதவர்கள். எருமைப் பாலை அதில் விளையும் வெண்ணெய், தயிர், நெய் மற்றும் கேழ்வரகு, சாமை, கிழங்குகள், தேன் போன்றவற்றையுமே உண்டு வளர்பவர்கள். அஞ்சா நெஞ்சர்கள் ; எனினும் அன்பு நெறியில் பயில்பவர்கள். மந்துகளுக்கு எதிரே 'வீரக்கல்' எனப்படும் பெரியதோர் கல் உண்டு. இரு கரங்களாலும் இதனை எடுத்து மார்பகத்திற்கு மேல் உயர்த்தித் தோளில் சுமப்பது வீர விளையாட்டாகக் கருதப்படுகிறது. ஈமச் சடங்குகளின் பொழுது, சீறிவரும் எருமைகளை அடக்கிக் கொல்வதனைக் காண்போர் தோதவர்களின் தோள் வலியினை உணர்வர். எனினும் தங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும்பொழுது பஞ்சாயத்துக்களின் மூலம் வழக்குகளைத் தீர்த்துக்கொள்கின்றனர். ஆயுதங்கள் தாங்குவது இவர்கள் அறியாத ஒன்று.

தோதவர்களின் புலமையைப் பற்றி ஆராய்ந்த எம். பி. எமனோ என்பவர் " தொடர் பாடல்கள் " என்னும் மாபெரும் நூலையே எழுதியிருக்கிறார். வட்டமாக நின்று ஒருவரையொருவர் கைகளால் பற்றிக்கொண்டு " ஹ ! ஹொ ! ஹா ! ஹொ !" என்று சுற்றிச் சுற்றி ஆடும்பொழுது ஒருவர் அங்கேயே பாடல் புனைந்து பாடுவாராம். அவ்வாறு பாடப்பட்ட பாடல்களில் உள்ள கற்பனை ஆழத்தைக் கண்டு அதிசயிக்கிறார் எம். பி. எமனோ.

தோதவர்கள், தமிழ், கன்னடம் முதலிய மொழிகளை எளிதில் கற்று உரையாடுகின்றனர். ஆனால் அவர்களின் மொழியை மற்றவர்கள் புரிந்துகொள்வது கடினம். அவர்கள் பேசும்பொழுது, சொல்லின் முதல் எழுத்துச் சற்று வலுவாக ஒலிக்கக் கடை எழுத்து இரகசிய ஓசையுடன் காற்றோடு கலந்துவிடுகிறது.

தோதவர் மொழியை உற்று ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல், அது தமிழின் சேயே என்று அறுதியிட்டுக் கூறுகிறார். தற்காலத் தமிழின் அன்றாடச் சொற்களோடு, சங்க காலத் தமிழ்ச் சொற்களான, திட்டை, நஞ்சு, கூகை, உகிர், மிடறு, புள், கரும்பொன், கோடு, உணங்கு, துவி, திங்கள் போன்றவையும் தோதவர் மொழியில் வழங்கப்படுகின்றன.

பழங்குடி மக்கள்—என்னும் நீலகிரி வாழ்கின்ற தோதவர் இனத்தில் நீள் நிலத்தில் காணாத புதுமைகள் எல்லாம் நிறைந்திருக்கக் காண்கிறோம்.

1972-ல்
உலகப் பொருட்காட்சி!

டெல்லியில் 1972 ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் தேதி உலகப் பொருட்காட்சி தொடங்குகிறது. ஏறக்குறைய 47 நாடுகள் கலந்து கொள்ளப் போவதாகத் தெரிகிறது. ரூபாய் 4 கோடி செலவில் 100 ஹெக்டர் நிலப் பரப்பில் இந்தப் பொருட்காட்சி அமைக்கப்பட விருக்கிறது.

நிறத்தில், தோற்றத்தில் மற்ற மலைவாழ் மக்களிடத்தில் காணாத புதுமை! இவ் வாழ்க்கை முறையில் இதிகாசத்திலன்றி எவரிடத்தும் கேள்வியுறாத புதுமை! எருமைகளைப் போற்றுவதில் வேறெங்கும் எதிர்ப்படாத புதுமை!

மதம் உண்டு! எனினும் மத குரு இல்லை. வழிபட உருவங்கள் இல்லை! திருவிழாக்கள் இல்லை!

ஊன் உணவு கொள்வதில்லை.

உடல் உரம்மிக்கோர், எனினும் உற்றதோர் பகைவரின் கருவிகள் எடுப்பதில்லை!

ஆடலும் பாடலும் ஆடவர்தான் அறிவார்! . . . . .

—எனப் புதுமைகள் பல மிளிரும் இந்தப் பழங்குடி மக்களிடத்தில் ஆராய்ச்சியாளர்கள் தனி ஆர்வம் காட்டுவதில் வியப்பென்ன?

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள் :
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி: 'BESTCEMENT' போன்: 27256
பாக்டரி: புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி: 'CEMENT' போன்: 144.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

நமது நாட்டின் வேளாண்மையை மேம்படுத்துவதற்கு ஜெர்மன் நாடு சென்ற பத்து ஆண்டுகளாக உதவி வருகிறது. இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள 'மாண்டி' என்ற மாவட்டத்தில் ஜெர்மன் கூட்டுறவுடன் துவக்கப்பட்ட திட்டம் மாபெரும் வெற்றியடைந்து, புகழ் பெற்றுள்ளது. இத் திட்டத்தின் பயனாக, மாண்டி மாவட்டத்தின் பொருளாதார நிலையில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இரண்டாவது இந்திய-ஜெர்மனி வேளாண்மைத் திட்டம் 1967-ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

இந்திய அரசுக்கும், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசுக்கும் (Federal Republic of Germany) இடையில் 1966-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவே இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத் திட்டத்திற்குத் தேவையான தொழில் நுட்ப விவரங்களை ஜெர்மன் ஆலோசகர் குழு ஒன்றின் மூலமாக, ஜெர்மன் அரசு வழங்கி வருகிறது. அத்துடன் திட்டப் பணிகளுக்குத் தேவையான கருவிகளையும் வழங்கி வருகிறது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, தமிழ்நாடு அரசு, அலுவலர்களையும் நிருவாகச் செலவிற்குத் தேவையான நிதியையும் வழங்கி வருகிறது.

திட்டத்தின் நோக்கம்

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்.

1. நீலகிரி மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியை விரைவாகப் பெருக்குதல்.

2. நீலகிரி மாவட்ட உழவர்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துதல்.

திருந்திய தொழில் நுட்பவியல் மூலமாகவும், அதைத் தொடர்ந்து திறமையான விரிவினைத் திட்டத்தைச் செயல்படுத்துவதின் மூலமாகவும், பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண்மையில் ஒரு மாபெரும் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காக, நீலகிரி மாவட்டத்தின் உழவர்களுக்குத் தேவையான பொருள்களும், தேவையான தொழில் நுணுக்கங்களும் வழங்கப்படும். விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிப் பூஞ்சாள மருந்துகள், கருவிகள் முதலிய தேவைப் பொருள்கள் (Inputs) கடன் தொகைகள், விற்பனை வசதிகள், ஆகியவைகளை ஒருங்கிணைத்து வழங்கி, தீவிரச் சாகுபடிக்கான உத்திகள் மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தின் சிறப்பியல்புகளாவன :

*உருளைக் கிழங்கு, காய்கறிகளில் மிகு விளைச்சல் தரும் வகைகளைப் புகுத்துதல் ; தீவனப் பயிர் அபிவிருத்தி.

*ஏற்றதோர் பயிர் சுழற்சி (Rotation) ஏற்படுத்துதல்.

*விதைகள், இரசாயன உரங்கள், இரசாயனப் பொருள்கள், கருவிகள் ஆகிய தேவைப் பொருள்களைத் தேவையான காலத்திலும், தேவையான அளவிலும் வழங்குதல்.

* உற்பத்திப் பெருக்கின் காரணமாக, அதிகமாக விற்பனைக்குக் கிடைக்கும் விளைபொருள்களை விற்பனை செய்ய மாநிலத்தின் உள்ளேயும், வெளியேயும் உள்ள விற்பனை வசதிகளை வலிவு பெறச் செய்தல்.

* வேளாண்மையில் திருத்திய தொழில் நுட்பவியல் விரைவாக மேற்கொள்ளப்படுவதற்கு விரிவினைப் பணிகளைத் தூண்டி விடுதல்.

தலையாய பணிகள்

இத் திட்டத்தின் த[illegible]ாய பணிகள் கீழே விவரி[illegible]டுள்ளன:—

1. நீலகிரி மாவட்டத்தில் சால நிலக்கேற்ற அனைத்து நாட்டுக் கோதுமை, உருளைக் கிழங்கு, காய்கறிகள், ஸ்ட்ராபெரி, கிளாடியோலி, ரோஜா மற்றும் இதர ஏற்றுமதிக்கேற்ற மலர் வகைகளைச் சாகுபடிக்குக் கொண்டு வருதல்.

2. நோய், வைரஸ் ஆகியவைகளால் தாக்கப்படாத உயர் விளைச்சல் தரும் உருளைக்கிழங்கு வகைகளை விதைக்காகப் பெருக்கம் செய்து வழங்குதல்.

3. மிகு விளைச்சல் தரும் முட்டைக்கோசு, காலி பிளவர் ஆகியவைகளின் விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல்.

4. கூடலூர் பகுதி உழவர்களுக்கு நோய் தாக்காத உயர் விளைச்சல் தரும் இஞ்சியின் (ரியோ டி ஜெனிரோ) விதைக் கிழங்குகள் வழங்குதல்.

5. உருளைக்கிழங்கு, இஞ்சி, நெல், காய்கறிகள் ஆகியவற்றிற்குரிய திருந்திய கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைப் பற்றிய செயல் விளக்கம் அமைத்தல்.

6. உருளைக்கிழங்கைத் தாக்கும் பொன்னிற நூற் புழுக்களை (Golden Nematcde) ' டாசனிட் ' (Dasanit) மருந்து மூலமாகக் கட்டுப்படுத்தல்.

7. நீலகிரி மாவட்டத்தில் சமுதாய-வேளாண்மைப் பொருளாதார நிலைமை பற்றிய விசாரணை மேற்கொள்ளல்.

8. உருளைக்கிழங்கு, இஞ்சி, காய்கறிகள் ஆகியவைகளுக்கு விற்பனை வசதி பற்றிய ஆய்வு மேற்கொள்ளுதல்.

9. சிறு நிலக்கிழார்களுக்கான குறுகிய காலக் கடன் நிதித் திட்டத்தை நிருவாகித்தல்.

10. மண் பரிசோதனை செய்தல்.

11. நீர்வளம் மேம்படுத்தல், மண்வளம் பாதுகாத்தல்.

ஆராய்ச்சி நிலையங்களும், பண்ணைகளும்

இத் திட்டத்தின்கீழ் ஆறு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அவைகளின் விவரம் வருமாறு:

1. பழ ஆராய்ச்சி நிலையம், கல்லார்.

2. பழ ஆராய்ச்சி நிலையம், பர்லியார்.

3. பழவகைப் பண்ணியல் ஆராய்ச்சி நிலையம், குன்னூர்.

4. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், நஞ்சநாடு.

5. சிம்ஸ் பூங்கா, குன்னூர்.

6. அரசினர் பூந்தோட்டம், உதகை.

இத்துடன் தொட்டபெட்டா, உட் அவுஸ், கோல்கிரைன், குருத்துக்குளி, நஞ்சநாடு, தும்மனட்டி, விஜயநகரம், தாங்காத்தோட்டி ஆகிய எட்டு இடங்களில் உள்ள பண்ணைகளில் வேளாண்மை ஆராய்ச்சியும், விதைப் பெருக்க வேலையும் நடைபெற்று வருகின்றன.

கருகல் நோய் தாக்காத உருளைக் கிழங்கு

மலைப் பகுதிக்கேற்ற, கருகல் நோய் தாக்காத உருளைக்கிழங்கு ரகத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக, உலகின் பல பாகங்களிலும் இருந்து ஏறத்தாழ 120 உருளைக் கிழங்கு வகைகள் வரவழைக்கப்பட்டு, திட்டப் பண்ணைகளில் பயிரிட்டுப் பார்க்கப்பட்டன. இதுவரை 12 உருளைக்கிழங்கு வகைகள் கருகல் நோயினால் தாக்கப்படாதவை எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சோதனை மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த 12 வகைகளில் ' குப்ரிமுத்து ' (Kufri Muthu) என்னும் வகையே கருகல் நோயால் மிகவும் தாக்கப்படாதிருப்பதுடன், மிகு விளைச்சல் தரக்கூடியது என்பதும் தெளிவாகியுள்ளது. இந்த வகை திட்டப் பண்ணைகளில் விதைப் பெருக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

உயர் விளைச்சல் தரும் காய்கறிகள்

காய்கறி வகைகளில் கீழ்க் கண்டவைகள் உயர் விளைச்சல் தரும் வகைகள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

காய்கறிகளின் பெயர்.	வகையின் பெயர்.
புஷ்பீன்ஸ்	1. எக்சிகியூடிவ் (Executive)
	2. ஓரிங்கர். (Oeringer)
போல் பீன்ஸ்	1. ரிகோர்டு (Rekord)
	2. கோல்டு ரீஜென். (Gold regen)
பட்டாணி (உயரம்).	1. ஸெனிட் (Zenit)
	2. நுக்கெட். (Nugget)
பட்டாணி (குட்டை).	1. எக்செலென்ஸ். (Excellenz)
	2. யூபெரிச். (Ueberreich)
காலிபிளவர்.	1. கிபோஜெயிண்ட். (Kibogaint)
	2. டாக்டர் ஜென்ஸ்மா. (Dr. Jensma)
	3. டெல்ஃப்டர் மார்க்கட். (Delfter Markt)
முட்டைக்கோசு (பச்சை).	ஓ.எஸ்.கிராஸ். (O. S. Gross)
முட்டைக்கோசு (சிவப்பு).	ஃப்ருகா (Frueka)
முள்ளங்கி	1. ரோட்டர் நெக்கரும். (Rotor Neckarruhm)
	2. வெய்ஷெர் நெக்கரும். (Weisser Necharruhm)

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பீன்ஸ், பட்டாணி வகைகள் உள்ளூர் வகைகளை விட முறையே 40 சதம், 30 சதம் அதிக மகசூல் அளித்துள்ளன. முள்ளங்கி வகைகள் உள்ளூர் வகைகளை விட 50 சதம் அதிக மகசூல் அளித்துள்ளன.

ஸ்ட்ராபெரி

புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்ட பினுமினன் (Phenomenon), மெஜஸ்டிக் (Mejestic) என்ற 2 வகைகளும் உள்ளூர் வகைகளை விட மகசூலிலும், தரத்திலும் உயர்ந்தவை என்பது ஆரம்ப சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

உருளைக் கிழங்கு நோயும், வைரஸும்

உருளைக் கிழங்குச் செடிகளுக்கு 5 முறை டைத்தேன் எம். 45 மருந்தை ஒரு 'டா' பரப்புக்கு (கால் ஏக்கர்) 180 கிராம் வீதம் 10 நாள் இடைவெளியில் தெளிப்பது உச்சளவு மகசூல் கொடுக்கும் என்பது சோதனைகளின் மூலம் தெளிவாகியுள்ளது.

உருளைக் கிழங்கை எக்ஸ் (X), ஒய் (Y), எஸ் (S), எம் (M), இலைச் சுருட்டும் வைரஸ் ஆகிய 5 வகை வைரஸ்கள் தாக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இறைவையாகப் பயிரிடப்படும் உருளைக் கிழங்கில் அசுவிணிப் பூச்சிகளால் பரவும் வைரஸ் நோய்கள் (இலைச் சுருட்டும் வைரஸ், உருளைக் கிழங்கு வைரஸ் 'ஒய்') மிகுதியாகத் தாக்குகின்றன. வைரஸ் நோய் தாக்கிய செடிகளை அகற்றுவதும், 'டேட்டூரா ஸ்ட்ராமோனியம்' என்னும் ஊமத்தச் செடி வகை, புகையிலை, 'சினபோடியம் அமராண்டிக்கலர்' என்னும் செடிகள் ஆகியவைகளை வளர்ப்பதும் வைரஸ் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நல்வழிகள் என்று ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பூச்சியியல் பிரிவு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கூட்டுறவுடன், கீழ்க்கண்ட சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

1. பேரி, ஆப்பிள், ஆரஞ்சு, கோகோ, மங்குஸ்தான் மலையில் சாகுபடியாகும் காய்கறிகள், உருளைக் கிழங்கு ஆகியவைகளில் தோன்றும் புதிய பூச்சிகள் என்னென்ன என்பதை ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது.

2. வெட்டுப் புழு, டைமண்ட் பிளாக் மாத், 'சான் ஜோஸ் ஸ்கேல்', பிளம்பழ ஈ, முட்டைக் கோசு பச்சைப்புழு ஆகியவைகளின் வாழ்க்கைச் சரிதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

3. உருளைக் கிழங்கின் வெட்டுப் புழுவை ஆல்ட்ரின் 5 சதத் தூள் அல்லது ஹெப்டாகுளோர் 6 சதத் தூள் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என்பது தெரியவந்துள்ளது.

4. முட்டைக் கோசில் தோன்றும் 'டைமண்ட் பிளாக் மாத்' என்னும் பூச்சியையும், அசுவிணிப் பூச்சியையும் 'மெட்டாசிட் ரோம்பி' என்னும் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4.5 மில்லி லிட்டர் வீதம் கலந்து 3-வது வாரத்தில் தெளித்தும், மாலத்தியான் 0.125 சதக் கரைசலை 6-வது வாரத்தில் தெளித்தும் கார்பரில் 0·2 சதக் கரைசலை 9-வது வாரத்தில் தெளித்தும், கட்டுப்படுத்தலாம் என்பது தெளிவாகியுள்ளது.

பொன்னிற நூற்புழு

உருளைக் கிழங்குச் செடிகளைத் தாக்கும் பொன்னிற நூற்புழுக்கள் பரவியுள்ளதைக் கண்டுபிடிப்பதற்காக 1964-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தீவிர ஆய்வு முடிவடைந்துள்ளது. 16,800 தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான 9,380 ஹெக்டேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது, பொன்னிற நூற்புழுவின் தாக்குதல் உதகை நகரசபை எல்லைக்குள் அதிக அளவில் இருப்பதாகவும், அப்பகுதியிலேயே அதிக அளவில் பரவி வருவதாகவும் தெளிவாகியது. பொன்னிற நூற்புழு எவ்வாறு பரவுகிறது என்பதைஅறிய மேற்கொள்ளப் பட்ட ஆய்வில், நூற்புழுக்கள் விதைக் கிழங்குகள், காற்று, மழை நீர், நூற்புழு தாக்கிய வயலில் நாற்று விட்டு நூற்புழு தாக்காத வயலில் நடுதல் ஆகியவைகளின் மூலம் பரவுகின்றன என்பதும் புலனாகியது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டம் துவக்கப்படுவதற்கு முன்பும், துவக்கப்பட்ட பின்பும் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகள் பற்றிய பல சோதனைகள் நடத்தப்பட்டன. ஹெக்டேருக்கு 300 கிலோ 'டாசனிட்' (Dasanit) எனப்படும் 'பீனைல் பாஸ்பரோதியோவேட்' (Phenyl Phosphorothioate) மருந்தைப் பயன்படுத்தினால், பொன்னிற நூற்புழுக்கள் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன், மகசூலும் அதிகரிக்கிறது என்பது தெரியவந்துள்ளது. 'டாசனிட்' மற்ற மருந்துகளைவிட பின்கண்ட வகைகளில் சிறந்து விளங்குகிறது.

*குருணை வடிவில் இம்மருந்து இருப்பதால், இரசாயன உரங்களுடன் கலந்து இடுவதற்கு ஏற்றது.

விளம்பரத் திறமை !

ஒரு விமான நிறுவனத்தினர் தங்களிடமிருந்த சிக்கனத்திற்குக் கட்டுப்படாத ஒரு விமானத்தை விற்பதற்கு முடிவு செய்தனர். கையிலிருக்கும் சரக்கு, பழைய சரக்கானதால், அதனைக் கெட்டிக் காரத்தனமாக, செய்திப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்கள். அந்த விளம்பரம் இது :—

பழமை பாராட்டுக்குரியது; விமானம் விற்பனைக்குக்கிடைக்கும். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், வின்ஸ்டன் சர்ச்சில், அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் ஆகியோரை ஏற்றிச்சென்ற பெருமை படைத்தது இந்த விமானம். இந்த அரிய விமானத்தின் அமைப்பை உருவாக்கிய மேதை விக்டோரியா மகாராணியின் காலத்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இருபது பயணிகளைக் கவனிப்புடன் அழைத்துச் செல்லும் சேவைக்கு இந்த விமானத்தில் நான்கு ஓட்டுநர் இருக்கிறார்கள். இதய நோயாளிகள் பயணம் செய்வதற்கு இதுவே ஏற்றது ; ஏனென்றால் இந்த விமானம் அவர்களை வெகு வேகமாகவோ வெகு உயரத்திலோ அழைத்துச்செல்லாது. இதை வாங்குபவருக்கு, மிக விரைவில் ஒரு புதிய விமானத்தில் பயணம் செய்யும் அரிய வாய்ப்பும் கிடைக்கும்.

501

*இம்மருந்து செடிகளுக்குத் தீங்கு விளைவிப்பதில்லையாதலின், உருளைக் கிழங்கு நடப்படும் சமயத்திலும் இடலாம்.

*மண்ணில் இருக்கும் வரையில் இம்மருந்து, பொன்னிற நூற்புழுக்கள் செடியின் வேர்ப் பகுதியைத் தாக்குவதைத் தடுத்துவிடுவதால், பொன்னிற நூற்புழுக்களால் உருளைக் கிழங்குச் செடிகள் தாக்கப்படுவதில்லை.

நூற் புழுக்களைக் கட்டுப்படுத்தும் இதர மருந்துகளைப் பயன்படுத்திய பின், உருளைக்கிழங்கு பயிரிட்டால் செடிகள் இறந்து விடக்கூடும். ஆனால், டாசனிட் மருந்து பயன்படுத்தும் போது உருளைக் கிழங்கு பயிரிடுதல் அவசியமாகிறது. இன்னும் பல மருந்துகள் பற்றிய சோதனைகள் முன்னேற்ற நிலையில் உள்ளன.

அண்மையில், இந்திய-ஜெர்மனி விரிவினைக்குழு ஒன்று உருளைக் கிழங்குச் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி ஆய்வு செய்து, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய முறைகளையும் பரிந்துரைத்துள்ளது. நாட்டின் நலம் காக்கும் பணியாக (National Security Measure) பொன்னிற நூற்புழுவால் பாதிக்கப்பட்டுள்ள பரப்பு முழுவதிலும் ஹெக்டேருக்கு 300 கிலோ வீதம் டாசனிட் மருந்து உபயோகிக்கப் படவேண்டும் என்பதே அக்குழுவின் முக்கியப் பரிந்துரையாகும்.

இலவச மருந்து

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொன்னிற நூற்புழுக்களைக் கட்டுப் படுத்துவதற்காக 3,049.57 ஏக்கரில் டாசனிட் 10 சத மருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. பொன்னிற நூற்புழுவால் 1970–71-ஆம் ஆண்டில் தாக்கப்பட்டிருந்த வயல்களின் சொந்தக்காரர்களுக்கு 328.52 மெட்ரிக் டன் டாசனிட் மருந்து இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. 1971 நவம்பர் திங்களில், இரண்டாம் முறையாக டாசனிட் மருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் மூன்றும் முறையாக மருந்து தூவும் பணி மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 75 இலட்சம் மதிப்புள்ள டாசனிட் மருந்தை நீலகிரி மாவட்ட உழவர்கள் 3,000 ஏக்கரில் 3 முறை பயன் படுத்துவதற்காக, மேற்கு ஜெர்மனி அரசு, இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் மூலம் இலவசமாக வழங்கியுள்ளது. இம்மருந்திற்குச் சுங்கவரி மட்டும் ரூபாய் 40 இலட்சம் ஆகியுள்ளது. இத்தொகையைத் தமிழ்நாடு அரசு கொடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அமைந்துள்ள பரிசோதனைச் சாலையில் 1,400 மண் மாதிரிகளும், 297 செடிகளும் இதுவரை பரிசோதிக்கப்பட்டுள்ளன.

காட்டெருமைக் கூட்டம் !

மலைவளம், வனவளம் மிகுந்த நீலகிரி மாவட்டம், பல அரிய வனவிலங்குகளின் தாயகம் போல இருக்கின்றது.

கூட்டம் கூட்டமாகத் திரியும் காட்டெருமைகள், யானைகள், புலி, சிறுத்தை, புள்ளிமான், கடமான், பில்லாய் மான், முயல் மான், முயல் வகைகள், மலை அணில், செந்நாய், காட்டுக் கோழிகள், மயில், காட்டுப் பன்றி ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

உழவியல் முடிவுகள்

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள உழவியல் பிரிவினர் உருளைக் கிழங்குச் சாகுபடியில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து கீழ்க்கண்ட சிறப்புமிகு முடிவுகள் கிடைத்துள்ளன:—

*நெருக்கமான இடைவெளியில் உருளைக் கிழங்கு அதிக மகசூல் அளிக்கும்.

* 'கிரேட் ஸ்காட்' என்னும் உருளைக் கிழங்கு ரகம், 'பிரசிடெண்ட்' என்ற ரகத்தைவிடச் சிறந்தது.

* விதைக் கிழங்குகளின் பருமன் அதிகமாவதற்கு ஏற்ப, மகசூலும் அதிகமாகிறது.

*பல்வேறு நிலைகளில் உருளைக் கிழங்குச் செடிகளுக்கு மண் அணைப்பது, மகசூலை அதிகப் படுத்தவில்லை.

*உருளைக் கிழங்குச் செடிகளில் மெக்னீசியம் எந்தவித பயனும் அளிக்கவில்லை.

* தழைச்சத்தை மண் மூலமாகத் தெளிப்பதனால் அல்லது இலை மூலமாகத் தெளிப்பதனால் ஏற்படும் பயனில் எவ்வித வேறுபாடும் இல்லை.

* 'கிரேட் ஸ்காட்', 'பிரசிடெண்ட்' ஆகிய ரகங்கள் முறையே 98 நாட்களிலும், 119 நாட்களிலும் அறுவடை செய்யப் படும்போது அதிக அளவு மகசூல் கொடுத்துள்ளன.

* எஸ். எஸ். பி/இசட்/785 என்ற ரகம் உச்ச அளவு மகசூல் (ஒரு 'டா' பரப்புக்கு 42.5 குவிண்டால். ஒரு 'டா' என்பது கால் ஏக்கர்.) அளித்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக 'சபீர்' (Saphir) என்ற ரகம் மகசூல் கொடுத்துள்ளது.

கோதுமை

இரசாயன உரம் இடாமல் சாகுபடி செய்யும் போது 'எஸ். 216' என்ற கோதுமை ரகமும், இரசாயன உரமிட்டுச் சாகுபடி செய்யும்போது 'சோட்டி லெர்மா' என்ற கோதுமை ரகமும் அதிக அளவு மகசூல் அளித்துள்ளன என்பது சோதனைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

மலர்கள்

ஏற்றுமதிக்கு ஏற்ற மலர் வகைச் செடிகளை ஏராளமாகப் பயிரிட நீலகிரி மாவட்டத்தில் பெரும் வாய்ப்பு இருப்பதால், ஏற்றுமதிக்கு ஏற்ற மலர்கள் பற்றிய ஆய்வும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய-ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள் நீலகிரி மாவட்ட உழவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைத்து வருகின்றனர் என்பது வெள்ளிடை மலையாகும்.

யானைகளைக் கூட்டம் கூட்டமாகப் பார்க்க வேண்டுமா? வாருங்கள் முதுமலைக் காட்டுக்கு....!

உலகத்திலேயே இப்பொழுது மூன்று வகையான யானை இனங்கள்தான் இருக்கின்றன. அவை யானை இனம், ஆப்பிரிக்க யானை இனம், ஆப்பிரிக்க சிறிய காட்டு யானை இனம் என்பவை. இந்த மூன்று இனங்களிலும், ஆப்பிரிக்க யானை தான் அளவிலும், பருமனிலும் பெரியது.

யானையின் பருமனையும், பெரிய அளவையும், அதற்கில்லாத நுண்ணறிவையும் கண்டு மனிதர்கள் மிகவும் பயப்பட்டனர். யானை தனது நுண்ணறிவினால் பாலங்களில் நடக்காதென்றும், புதை மண்ணை மிதிக்காதென்றும், கால் வழுக்கி விழாதென்றும் மிகைப்படுத்திக் கூறிவந்தனர். ஆனால் இந்தக் கூற்று உண்மையென்றால் யானையைக் குழியில் விழவைத்துப் பிடிப்பது முடியாத காரியமாகிவிடும். மேலும் எத்தனையோ யானைகள் சகதியில் அமுங்கித் தத்தளித்துத் தவித்ததற்கும் ஆதாரம் இருக்கிறது. மிகுந்த பலமும், நுண்ணறிவும் உள்ள மிருகமானால் அவை இவ்வளவு எளிதில் மனிதனால் பழக்கப்பட்டிருக்க முடியாது. மனிதனுக்குப் பணிந்து வேலை செய்ய வைத்திருக்க முடியாது.

யானைக்குக் கண்பார்வை குறைவானது. ஆனால் யானை வாசனையை நுகர்ந்து அறிவதில் திறமையும், கூர்மையான செவியையும் உடையது. ஒரு காலத்தில் நமது கானகத்தில் தன்னிச்சையாகப் பெருகிப் பரந்து வாழ்ந்து வந்த யானைக் கூட்டம் உலகப் பெரும் போர்க் காலத்தில் காடுகளை அழித்ததாலும், பல யானைகளைப் பிடித்து உலகத்தில் உள்ள மிருகக் காட்சி சாலைகளுக்கு அனுப்பியதாலும் எண்ணிக்கையில் குறைந்து வந்தன. ஆனால் அவைகள் குறைந்து வரும் வேகத்தைக் கண்டு பயந்து, சரணாலயங்கள் அமைப்பதன் மூலமும், சட்டங்களைக் கடுமையாக்கியும், இப்பொழுது யானைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

யானைகளுடைய தந்தங்களுக்காகத் திருட்டுத்தனமாக யானைகளைச் சுடுவதும் குறைந்திருக்கிறது. மேலும் அவைகள் கூட்டங் கூட்டமாக வாழ்வதனாலும், அடர்ந்த காடுகளில் மட்டுமே வாழ்வதாலும் தங்களை அழிவிலிருந்து காத்துக் கொள்கின்றன. யானைகள், அடர்ந்து



வளர்ந்த பசுமையான குளிர்ந்த காடுகளையே மிகவும் விரும்புகின்றன. ஆதலால் அவைகளைக் கடும் வெயிலில் வேலை செய்ய வைப்பது உசிதமானதன்று.

இவைகள் காட்டுத் தழைகளையும், மூங்கிலையும், பசுமையான புல்லையும் விரும்பிச் சாப்பிடுகின்றன. மாலை வேளையில் தண்ணீர் குடித்துத் தாகம் தணிக்கின்றன. நீர்நிலைகளிலோ ஆற்றிலோ மூழ்கி, நீந்தி விளையாடும்போது, துதிக்கை மூலம் நீரை வாரி இறைத்துப் பிளிறிக் கொண்டும், ஊளையிட்டுக் கொண்டும் குளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

யானை கருவுற்று பத்தொன்பது மாதங்களுக்குப் பிறகு பெண் குட்டியையும், இருபத்தொரு மாதங்களுக்குப் பிறகு ஆண் குட்டியையும் ஈனுகிறது. வனத்துறையில் யானைகளைப் பிடித்துப் பழக்கி, காட்டு வேலைகளுக்காக நிர்வாகிக்கப் படும் யானைக் கோட்டங்களில்

உள்ள யானைகளும் அங்கேயே உள்ள ஆண் யானையுடன் சேர்க்கை செய்தும், குட்டி போடுகின்றன. வேலை முடிந்து மேய்ச்சலுக்காகக் காட்டிற்குள் விடப்படும்போது காட்டு ஆண் யானையுடன் சேர்ந்தும் இனப்பெருக்கம் செய்கின்றது.

ஆண் யானைகளுக்குச் சில சமயங்களில் 'மதம்' பிடித்து விடுகிறது. 'மதம்' கொள்ளும் யானைகளுக்கு, கண்ணிற்கும் காதுக்கும் இடையிலுள்ள பகுதியில் ஒரு ''சுரப்பி'' சாதாரண காலத்திலுள்ளதைவிட சற்றுப் பெரிதாக வீங்கி அதிலிருந்து திரவம் வடிய ஆரம்பிக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் யானை மிகவும் எரிச்சல் அடைகிறது. ஆதலால் அந்த யானையின் அருகில் செல்வது அபாயகரமானதாக முடியும். மதம் ஏன் பிடிக்கிறது என்பதற்கு உறுதியிட்டு எந்தக் காரணத்தையும் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறோம். இனச் சேர்க்கைக்காகப் பால் உணர்வு ஏற்படும் காலங்களில் யானை மதம் கொள்ளும் என்றும் சிலர் கருத்தறிவிக்கின்றனர். சாதாரணமாக ஆண் யானைகளுக்குத்தான் மதம் பிடிக்கிறது. ஆனால் ஒரு சில பெண் யானைகளுக்கும் மதம் பிடித்த ஆதாரக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. மதப்பிடிப்பு ஒரு சில நாட்களிலிருந்து ஒரு சில வாரங்கள் வரை நீடிக்கிறது. ஆண்டில் எந்தக் காலத்தில் குறிப்பாக மதம் பிடிக்கிறது என்றும் திட்டமாகச் சொல்ல முடியாது.

யானையுடைய தந்தத்தை சொகுசுப் பொருளாக உலக மக்கள் கருதுகின்றனர். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது பழமொழி. விலை மதிக்க முடியாத தந்தத்தினால் தான் இந்தப் பழமொழி வழக்கில் வந்தது. பர்மிய யானைகளுக்குள்ள தந்தம் நீளத்திலும் நிறையிலும் குறைவானதாக இருக்கும். பெண் யானைகளுக்குத் தந்தம் மிகமிகச் சிறியதாகவே இருக்கும். இலங்கையிலுள்ள ஆண் யானைகளில் பெருவாரியானவற்றிற்குத் தந்தங்களே கிடையாது. இப்படிப்பட்ட யானைகள் நமது நாட்டிலும் சில இருக்கின்றன.

யானை மேலே அம்பாரி!

முதுமலை வனவிலங்குக் காப்பகத்துக்கு உள்ளே செல்ல நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய். மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படுவதில்லை.

இங்கு யானை மேல் சவாரி செய்ய 4 பேர்களுக்கு 4 மணி நேரத்துக்குக் கட்டணம் பத்து ரூபாய். முன்கூட்டி எழுதிப் பணம் அனுப்பி இதற்குப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தந்தமில்லாத யானைகளை 'மக்னு' என அழைக்கிறோம்.

வனவிலங்குச் சரணாலயங்களில் யானைகளைப் பிடிப்பது தவிர்க்கப்பட்டிருக்கிறது. நமது நீலகிரி மாவட்டம் முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தில் கூட்டங் கூட்டமாக யானைகள் சுற்றித் திரிவதைப் பார்க்கும் வாய்ப்பு உடல் சிலிர்க்க வைக்கும்.

நமது நாட்டு மலைக்காடுகளில் காணப்படும் மற்றுமொரு உன்னத மிருகம் ''கவுர்'' என்று சொல்லப்படும் காட்டு மாடுகள், தென் மாநிலங்களில் மைசூர், கேரளாவிலும், ஆனைமலை, முதுமலைக் காடுகளிலும் மந்தை மந்தையாகத் திரிகின்றன. நன்கு வளர்ந்த வயதான காளைகள் மினுமினுவென்று கரு நிறமாக இருக்கும். கால்களில் குளம்பிலிருந்து முட்டுவரை வெள்ளைக் காலுறை அணிந்தது போன்று வெண்மையாக இருக்கும். அவைகளுடைய கொம்புகள் வளைந்து கூர்மையாகவும் பலமுடையதாகவும் இருக்கும். மூங்கில் அதிகமுள்ள காடுகளில் மூங்கிலின் இளம் தாளைத் தின்று வாழும். வேட்டைப் பிரியர்கள் அதிகமாக இந்த மாடுகளை வேட்டையாடியதால் அடியோடு அழியும் நிலைக்கு வந்து விட்டது. ஆனால் இப்பொழுது காட்டு மாடுகளை வேட்டையாடுவதற்குக் கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதால் இம்மிருகங்கள் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டிருக்கின்றன. மேலும் முதுமலை, பந்திப்பூர், சரணாலயங்களில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதால் வெகுவாகப் பெருகி வாழ்ந்து வருகின்றன.

நமது நாட்டு மாடுகளுக்கு ஏற்படும் தொத்து நோய்களும், இந்தக் காட்டு மாடுகளுக்கும் பரவி விடுகிறது. வனவிலங்கு சரணாலயங்களில், அதைச் சுற்றியுள்ள கிராமத்து மாடுகள் உள்ளே வந்து மேய்வது தடுக்கப்படாமலிருப்பதால், படு நோய்கள் காட்டு மாடுகளுக்கும் பரவி, அநேகம் செத்து மடிகின்றன. இந்த நோய் பரவியதன் காரணமாக 1968-ஆம் ஆண்டு முதுமலையில் மட்டும் சுமார் 70—80 காட்டு மாடுகள் செத்து மடிந்தது மிகவும் பரிதாபமானது.

இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாமலிருக்க அரசு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது.

முதுமலையில் யானைச் சவாரி செய்து விலங்கினங்களைப் பார்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையும் சுற்றுலா வருபவர்களுக்காகப் புதிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து வருகிறது.



உழைப்போம்! ஒன்றுபடுவோம்!! ஒத்துழைப்போம்!!!

நமது நாட்டில் வங்க தேசப் பிரச்சினை காரணமாக இருள் சூழ்ந்து தேசிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அவசர நிலைமை நாடு முழுவதும் அறிவிக்கப் பட்டுள்ளது. இராணுவ ஆட்சியின் பேயாட்டத்தைக் கண்டு பீதியுற்று இலட்சக்கணக்கான மக்கள் நமது நாட்டைப் புகலிடமாக நாடி வந்த வண்ணமாய் இருந்தனர். இதன் காரணமாக நமது நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் தொழில் உறவுகளை நன்முறையில் நாம் பேணிக் காத்துவர உறுதி கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்பெரு முயற்சியில் தொழிலாளர்களும், தொழில் நிருவாகிகளும் தொழிற் சங்கத் தலைவர்களும் தோளோடு தோள் நின்று உதவி புரிய வேண்டும். இதற்கு அரசும் தன்னாலியன்ற முழு ஒத்துழைப்பை எப்போதும் நல்கத் தயாராக உள்ளது.

தொழில் துறையில் அமைதி நிலவினால்தான் தொழில்வளர்ச்சி தொழிலாளர் நலன் என்ற உறுதியான மாளிகையை எழுப்ப முடியும். ஆகவே, தொழில் அதிபர்களும், தொழிலாளர்களும் மேலும் கட்டுப்பாடும், பொறுமையுணர்வும் கொண்டு தொழில் அமைதியைக் குலைக்கிற அல்லது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டிக் காப்பதையே நோக்கமாகக்கொண்டு பாடுபடுவதற்குத் தடையாக இருக்கிற எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாதிருப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

இதற்கு முன்பு ஒரு முறை, அதாவது, 1962-ல் நமது வட எல்லையைச் சீனா தாக்கிய நேரம். அந்தச் சந்தர்ப்பத்தில், நமது மாநிலத்தில் எல்லாத் துறையினரும், நமது மாபெரும் நாட்டின் ஏனைய மாநிலத்தினரைப்போலவே ஒன்றுபட்டு வீறு கொண்டு எழுந்தனர். நாட்டின் பாதுகாப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் முழு முயற்சி எடுத்துக்கொள்வதென்றும் தேசிய ஒற்றுமைக்கும், உள்நாட்டு அமைதிக்கும் ஊறு ஏற்படும் எச்செயலிலும் ஈடுபடுவதில்லை என்ற உறுதியையும் மேற்கொண்டனர்.

அக்கூட்டத்தில் மேற்கொண்ட பிற முடிவுகளுக்கிடையே கீழ்க்கண்ட முடிவுகளும் ஒருமனதாக ஏற்கப்பட்டன:—

1. சூழ் நிலை:—தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் அளவை உயர்த்திடும் வகையில் தொழிலாளர்களின் இடைவிடாத உழைப்பிற்கு உறுதி செய்யும் பொருட்டுத் தொழில் அமைதியைப் பேணுவதற்கும், உற்பத்தி அளவை உயர்த்துவதற்கும் உரிய தேவையினை எடுத்துக்கூறும் முழக்கங்கள் தொழிற்சாலை வளைவுகளிலும், மற்றும் முக்கியமான எல்லா இடங்களிலும் தென்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. தொழில் அமைதி:—இயன்ற வரையில் தகராறுகள் அனைத்தும் இரு தரப்புப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலமோ அல்லது சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலமோ தீர்க்கப்பட வாய்ப்பில்லை என்றால் வேலையிலிருந்து நீக்கிவிடுதல், வேலையிலிருந்து விடுவித்தல், ஆட்குறைப்புச் செய்தல் போன்ற தனிப்பட்ட தொழிலாளர்களைப் பாதிக்கின்ற தகராறுகள் தொழிலாளர் நல ஆணையாளரிடம் நடுவர் தீர்ப்புக்குக் கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும் என்றும் அவரது முடிவு இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. உற்பத்தி:—இயன்ற இடங்களிலெல்லாம் புதிய முறை மாற்றுப் பணிகள் நடத்தியும் கூடுதல் மணி நேரங்கள் வேலை செய்தும் உற்பத்தி பெருக்கப்பட வேண்டுமெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மூலப் பொருள்களைக் கருத்துடன் பயன்படுத்துவதிலும், பொருள்கள் வீணாகாமல் பார்த்துக்கொள்வதிலும் நிருவாகமும் தொழிலாளர்களும் ஒத்துழைக்க முடியும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தொழில் அமைதித் தீர்மானத்தைச் சொல்லளவில் நிறைவேற்றியதுடன் நின்றுவிடாமல்,

தொழிலாளர் நல அமைச்சர்
திரு. என். வி. நடராசன்

அதன் நிபந்தனைகளை உண்மையாகவும் நேர்மையாகவும் செயலிலும் கடைப்பிடித்தோம். தொழில் அமைதியைக் காப்பதற்கும், தொழில் உற்பத்தி அளவை உயர்த்துவதற்கும், தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் முழுமனத்துடன் ஒத்துழைத்தனர் ; தொழிலாளர்களின் நியாயமான குறைகள் தனியே நடுவர் தீர்ப்பிற்கு விடும் ஏற்பாட்டின் மூலம் தீர்க்கப்படுவதற்கும் வகை செய்யப்பட்டது. நம் நாட்டிலுள்ள ஏனையமாநிலங்களை விடத் தமிழ்நாட்டில் தனிப்பட்ட இந்த நடுவர் தீர்ப்பின் மூலம் பல தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட முடிந்துள்ளது.

தற்போதுள்ள நமது தொழில் துறை உறவு நிலை, நாட்டின் ஏனைய பல பகுதிகளில் நிலவி வரும் உறவு நிலையைவிடச் சிறந்த நிலையில் உள்ளதென்றாலும், இது இன்னும் உறுதி வாய்ந்த அடிப்படையில் அமைய வேண்டியுள்ளதுடன், மேலும் பெருமளவில் சமநிலையையும் அடைய வேண்டியுள்ளது. நாடு இன்றுள்ள நெருக்கடி நிலையில் நமக்கிடையேயுள்ள சிறு வேறுபாடுகளை நாம் மறந்து விட வேண்டும் ; நமது அரசியலிலும், சமுதாயத்திலும், கோட்பாடுகளிலும் நமக்குள் எந்தவிதமான வேற்றுமைகள் இருப்பினும், நாட்டின் பொது நலன் என்னும் உயர் தனிக் கொள்கையைக் கருதி நமது தனிப்பட்ட நலன்களையும் கருத்து வேறுபாடுகளையும் இச் சமயத்தில் புறக்கணிக்கச் சித்தமாயிருக்க வேண்டும் ; நாட்டின் நலனுக்காக எவ்விதத் தயக்கமும் இன்றி நம்மை அர்ப்பணித்துக் கொள்ள முன்வர வேண்டும்.

தொழில் அமைதி, உற்பத்தி, தொழிலாளர்நலன்ஆகியவற்றைக் கட்டிக் காக்க நாம் மேற்கொண்டுள்ள முயற்சியில் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்ற இந்த நெருக்கடியான சூழ்நிலையில் நாம் உறுதி கொள்வோமாக:—

1. பொருள்களை உற்பத்தி செய்தல், பணிகளை நிறைவேற்றுதல் இவற்றில் எத்தகைய சூழ்நிலையிலும் குறுக்கீடுகள் எதுவும் ஏற்படாமலிருக்க நாம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

2. தொழிலாளர்களையும், இயந்திரங்கள், பொருள்கள் ஆகியவற்றையும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்குத் தடையாக உள்ள இடையூறுகள், பொறிகள் எவையும் செயல்படாமலோ அல்லது விரயம் எதுவும் ஏற்படாமலோ கண்காணிப்பதுடன் தொழிற்சாலைகளை நடத்துவதில் நிருவாகத்தினர் பெருமளவுக்குச் சிக்கனத்தைக் கடைபிடிப்பதிலும் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்.

3. தொழிலுக்கு வராமல் நின்றுபோகும் நிலை, பணியில் அசட்டை, கடமைப் புறக்கணிப்பு ஆகியவைகள் ஏற்படாத வகையில் தொழிற் சங்கங்கள் கடமையாற்ற வேண்டும்.

4. தொழில் அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதனாலோ, உற்பத்தியைப் பெருக்க முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும் என்பதனாலோ, தொழிற்சாலைகளில் எழக்கூடிய நியாயமான தகராறுகள் அடக்கப்பட்டுவிடும் என்பது பொருள் அல்ல. ஆனால், இத்தகைய தகராறுகள் முடிவற்ற சச்சரவில் அல்லது வழக்கில் முடியக் கூடாது என்பதுதான் தமிழக

மூவரில் ஒருவர்

இன்று, உலகத்திலுள்ள 500 நாடுகளின் தலைவர்களில் மூன்று பேர் மட்டுமே கவிஞர்கள்.

சீன நாட்டின் தலைவர் மாசேதுங், செனகல் நாட்டின் தலைவர் லியோபோல்ட் செதார் செங்கர், தமிழ் நாட்டின் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆகிய மூவருமே அந்தப் பெரும் புகழுக்குரியவர்கள்.

டாக்டர் மால்கம் ஆதிசேஷையா, 'கவியரங்கில் கலைஞர்' நூல் வெளியீட்டு விழாவில்

அரசின் நோக்கமாகும். நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலமோ, சமரச உடன்படிக்கையின் மூலமோ வேறுபாடுகள் விரைவாகத் தீர்க்கப்பட முயற்சிப்பதுடன், அவ்வாறு தீர்க்கப்பட முடியாவிட்டால், இருதரப்பினரும் தாமே முன்வந்து நடுவர் தீர்ப்பின் மூலம் அத் தகராறுக்குத் தீர்வு காண வேண்டும்.

5. அவசியமேற்பட்டால் அரசு சமரச உடன்படிக்கையை விரைவாக நிறைவேற்றவும் நடுவர் தீர்ப்பு விரைவில் கிடைப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும்.

விடுதலைப் போராட்டமாயிருப்பினும், சமூக அமைதியைக் காப்பதாயிருப்பினும், வெள்ளத்தினாலோ, பஞ்சத்தினாலோ, பாதிக்கப்பட்ட பகுதிக்கு விரைந்து உதவியளிப்பதாயிருப்பினும் அல்லது பிற நெருக்கடி நிலைமை அல்லது மக்கள் தேவை எதுவாயிருப்பினும், நாட்டின் அறைகூவலுக்குச் செவிமடுத்து நற்பணி புரிவதில் நமது மாநிலம் எப்போதும் திரண்டெழுந்து விழிப்புடன் செயலாற்றி வந்துள்ளது. சீன ஆக்கிரமிப்பு நடந்த காலத்தில் செயல்பட்டது போல தற்போதும் தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தங்களது அயராத ஒத்துழைப்பைத் தந்தால்தான் நம் நாட்டு நலனைச் சிறந்த வகையில் பேணிக்காக்க இயலும். எனவே, தொழிலதிபர்களும், தொழிலாளர்களும், தொழிற்சங்களுங்கம், எப்போதும் போலவே ஒன்றுபட்டுத் திரண்டு உதவுவார்கள் என்பதில் அரசுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

தமிழக அரசு, போர் வெறியர்களின் அட்டூழியத்தைத் தகர்த்தெறியத் தனது ஒத்துழைப்பை இந்திய அரசுக்கு இதய பூர்வமாகத் தருவதென்று ஏற்கெனவே எடுத்துள்ளமுடிவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளதைத் தொடர்ந்து தொழிலாளத் தோழர்களும் தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிலதிபர்களும் தங்களின் தூய்மையான ஒத்துழைப்பைத் தருமாறு அரசின் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கம்பளி உற்பத்தியில் இந்தியா முக்கிய அங்கம் வகித்துவருகிறது விரிப்புக் கம்பளி (Carpet-Wool) உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகித்து வரும் சீனாவிற்கு அடுத்த படியாக இந்தியாவே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால், தரம் மிகுந்த விரிப்புக் கம்பளி உற்பத்தியில் உலகத்திலேயே இந்தியா தான் முதலிடம் வகித்து வருகிறது.

இந்தியா ஆண்டுதோறும் 10 முதல் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள விரிப்புக் கம்பளிகளை ஏற்றுமதி செய்து வருகிறது. ஆனால் அதே அளவு மதிப்புள்ள மெல்லிய நயமான கம்பளி இழையை ஆண்டுதோறும் இறக்குமதி செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் இந்தியா இருந்து வருகிறது. இறக்குமதி செய்யாவிட்டால், நம் நாட்டிலுள்ள கம்பளி நூலிழை நூற்கும் ஆலைகளுக்கும், கம்பளம் நெய்யும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான கம்பளி இழை கிடைக்காது.

கம்பளியால் செய்யப்பட்ட உடைகளை ஏற்றுமதி செய்தவகையில் இந்தியாவிற்குச் சென்ற ஆண்டு 30 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்துள்ளது. இதுவரை நிகழாத ஒரு சாதனை இது. சோவியத்து யூனியனுக்கு ஏற்றுமதி மும்மடங்காகப் பெருகியுள்ளது. ஹாங்காங், சிங்கப்பூர், ஷாம்பியா, சுவீடன் முதலிய இடங்களுக்கும் பெருமளவில் கம்பளி உடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. எனவே இந்தியாவில் கம்பளி உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்தியாவில் மெல்லிய கம்பளி இழைகளைக் கொடுக்க வல்ல செம்மறியாடுகளை வளர்ப்பதற்கு ஏற்ற பகுதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஜம்மு-காஷ்மீர் அடங்கிய இமய மலைப் பகுதி, இமாசலப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலத்தின் மலைப் பிரதேசங்கள், தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டம் ஆகிய பகுதிகளில் மட்டுமே மெல்லிய நயமான கம்பளி கொடுக்கக் கூடிய செம்மறியாடுகள் வளர்க்கப்படுகின்றன. மேற்கூறிய பகுதிகளில் உற்பத்தியாகும் மெல்லிய கம்பளியின்

கம்பளி

அளவு, இந்தியாவின் மொத்தக் கம்பளி உற்பத்தியில் 6 சதமே உள்ளது. மீதியுள்ளவை விரிப்புகள் தயாரிக்கப்பயன்படும் கம்பளியாகவே உள்ளது.

இந்தியாவில் ஆண்டு தோறும் 1·9 கோடி கிலோ கிராம் உயர் தரக் கம்பளி இழையும், 1·2 கோடி மீட்டர் உயர்தரக் கம்பளி ஆடைகளும், 4 கோடி கிலோ கிராம் மற்றக் கம்பளங்கள், துணி வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. நம் நாட்டில் 4·2 கோடி செம்மறி ஆடுகள் உள்ளன. இவைகளிலிருந்து 3·2 கோடி கச்சாக் கம்பளம் உற்பத்தியாகிறது.

மெல்லிய கம்பளி உற்பத்தியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் மெல்லிய கம்பளி கொடுக்கும் செம்மறியாடுகளை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மாநிலக் கால்நடை மேம்படுத்தும் வாரியத்தின் பரிந்துரைக்கு ஏற்ப 1946-ஆம் ஆண்டிலேயே மெல்லிய கம்பளி கொடுக்கவல்ல செம்மறி ஆடுகளைப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள 'சாண்டி நல்லா' (Zandynallah) என்னும் இடத்தில் செம்மறி ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம் பெற்றவளர்ச்சியின் காரணமாக அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றது.

மண்டல அடிப்படையில் கம்பளி மற்றும் செம்மறி ஆடுகள் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தை இந்த ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்த 1956-ஆம் ஆண்டில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அனுமதித்தது. இத் திட்டம் 1968-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் செம்மறி ஆடுகளை மேம்படுத்தும் தீவிரத் திட்டப்படி 1956-ஆம் ஆண்டு முதல் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டது. இப்பொழுது இந்த ஆராய்ச்சி நிலையம் கால்நடைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மேற்பார்வையில் செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு அரசும், இந்திய அரசின் கீழ் செயலாற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் கொடுத்த ஆக்கத்தினாலும் ஊக்கத்தினாலும் போதுமான அடிப்படை ஆராய்ச்சிப் பணிகள் இந்த ஆராய்ச்சிநிலையத்தில் கடந்த 20 ஆண்டுக் காலமாக நடைபெற்று வந்துள்ளன.

'சாண்டி நல்லா' வில் உள்ள செம்மறி ஆடுகள் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் கம்பளி உற்பத்தியைப் பெருக்குவதுடன் தரத்தையும் உயர்த்துவதற்காகக் கீழ்வரும் முறைகளை மேற்கொண்டுள்ளது:—

(1) நீலகிரி மாவட்டத்தில் செம்மறி ஆடுகளிடையே தேர்ந்த வளர்ப்பு முறையை (Selective breeding) மேற்கொள்ளல்.

(2) மெல்லிய கம்பளி தரக் கூடிய வெளிநாட்டுச் செம்மறி ஆடுகளுடன் நீலகிரிச் செம்மறி ஆடுகளை இனக்கலப்புச் செய்து, நீலகிரிச் செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்துதல்.

இந்த ஆராய்ச்சி நிலையம் செம்மறி ஆடுகளை நவீன முறையில் பராமரிக்கும் நிலையமாக விளங்கி வருகிறது. கம்பளியைப் பகுத்து ஆயும் பரிசோதனைச் சாலையும் இங்கே உள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சியின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, நீலகிரி மாவட்டச் செம்மறி ஆடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு "ரோம்னே மார்ஷ்" (Romney Marsh) என்ற அயல் நாட்டு இனத்தைவிட 'மெரினோ' (Merino) என்னும், அயல் நாட்டு இனமே சிறந்தது என்பது புலனாகிறது. நயமும் தரமும் மிகுந்த கம்பளி உற்பத்தியைப் பெருக்கும் குறிக்கோளை நிறைவேற்றி வைக்க 'மெரினோ' செம்மறி ஆடுகள் பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

மெல்லிய கம்பளி அளிப்பதில் 'மெரினோ' செம்மறி ஆடுகளே உலகத்திலேயே சிறந்து விளங்குகின்றன. நீலகிரி மாவட்டத்திற்கு 'மெரினோ' செம்மறி ஆடுகள் ஏற்றதாக அமையுமா என்பதையும், அவை மெல்லிய கம்பளி உற்பத்தியைப் பெருக்க உதவுமா என்பதையும் அறிவதற்காக 1965-ஆம் ஆண்டில் 10 மெரினோ செம்மறி கடாக்களும், 40 மெரினோ பெண் செம்மறி ஆடுகளும் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவைகள் நீலகிரி மாவட்டத்தின் சூழ்நிலை, பருவநிலைகளுக்கு ஈடுகொடுத்து எவ்வித இடர்ப்பாடும் இன்றி வளர்ந்து வருகின்றன. இப்பொழுது இவ்வாராய்ச்சி நிலையத்தில் உள்ள 1,632 செம்மறி ஆடுகளில் 152 செம்மறி ஆடுகள், (35 செம்மறி கடா, 80 பெண் செம்மறி ஆடுகள், 34 செம்மறியாட்டுக் குட்டிகள்) கலப்படமற்ற மெரினோ செம்மறி ஆடுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சியில் ஈடுபடுவதுடன் கூட, விரிவினைப் பணிகளையும் மேற்கொண்டுள்ளது. செம்மறியாடுகளைப் பராமரித்தல், கம்பளி உற்பத்தியை மேம்படுத்தல் ஆகிய விரிவினைப் பணிகளை 4 நிலையங்களின் மூலம் செம்மறியாடு வளர்ப்பவர்களுக்குச் செய்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 25,000 பெண் செம்மறியாடுகளின் தேவைக்காக ஏறத்தாழ 500 பொலி கடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கம்பளி உற்பத்தியை உச்ச அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் 'சாண்டி நல்லா' ஆராய்ச்சி நிலையம் கீழ்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளது.'

* கலப்படமற்ற தனித்தன்மை வாய்ந்த 'மெரினோ' செம்மறியாட்டு இனத்தையும், நீலகிரி இனச் செம்மறியாடுகளையும் வளர்த்தல்.

* கம்பளியின் தரத்தையும், உற்பத்தியையும் உயர்த்த நீலகிரி இனத்தை 'மெரினோ' இனத்துடன் இனக் கலப்புச் செய்து, நீலகிரி இனத்தை மேம்படுத்துதல்.

* கம்பளி கொடுப்பதற்கும் மாமிசத்திற்கும் ஏற்ற இருவகைப் பயனளிக்கும் (Dual purpose breed) இனத்தை உருவாக்க 'ரோம்னி மார்ஷ்' இனத்துடன் இனக்கலப்புச் செய்தல்.

* மேய்ச்சல் தரைகளை மேம்படுத்துதல்.

* இறக்குமதி செய்யப்பட்ட, பனியால் தாக்கப்படாத புற்களை மேய்ச்சல் தரைகளில் சாகுபடிக்குக் கொண்டுவருதல்.



* தேர்ந்த வளர்ப்பியல் மூலம் கம்பளி உற்பத்தியையும் தரத்தையும் பெருக்குதல்.

* திறந்த வெளி முறையில் செம்மறியாடுகளை வளர்த்தல்.

* மேய்ச்சல் தரைகளிலும், செம்மறியாடுகளிலும் காணப்படும் கொள்ளை உயிரிகளைக் (Parasites) கட்டுப் படுத்தல்.

— கொள்ளை உயிரிகளாலும், பாக்டீரியாக்களாலும் ஏற்படும் தீங்குகளை அறவே ஒழித்தல்.

* பண்ணையை இலாபமாக நடத்த 10 ஆண்டுக்காலத்திற்குள் செம்மறியாடுகளின் எண்ணிக்கையை 5,000-க்கு உயர்த்துதல்.

* தனிப்பட்டவர்களுக்கும் கூட பொலி கடாக்களையும் பெண் செம்மறியாடுகளையும் அதிக அளவில் வழங்க ஆவன செய்தல்.

* நீலகிரியில் செம்மறியாடுகள் வளர்ப்பதைத் துணைத் தொழிலாக்கிக் கம்பளி உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்பைப் பெருக்குதல்.

* கம்பளி விற்பனையை முறைப்படுத்தல்.

* கம்பளி நாலிழை நூற்கும் ஆலையையும் கம்பளம் நெய்யும் தொழிற்சாலையையும் கூட்டுறவுத் துறையில் அமைத்தல்.

நீலகிரி மலையில் உள்ள பருவநிலையையும், ஏராளமான மேய்ச்சல் தரையையும் பயன்படுத்தி இப்பொழுது உள்ள மெல்லிய கம்பளி கொடுக்கும்செம்மறியாடுகளின் தொகையை 5 அல்லது 6 மடங்கிற்கும் அதிகமாக ஆக்க முடியும். இவ்வாறு செய்தால் மெல்லிய கம்பளி உற்பத்தி பெருகவும், 3 முதல் 5 ஆண்டுகளில் கம்பளி நூற்பு ஆலையும், கம்பளம் நெய்யும் ஆலையும் ஏற்படுத்த இயலும். இதனால் நீலகிரி மாவட்டத்தில் சிறந்த பயன்கள் விளையும்.

* கிராமப்புறப் பொருளாதாரம் செழிக்கும்.

* நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

* இறக்குமதியால் இழந்து வரும் அந்நியச் செலாவணி மீதமாகித் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்.

'சாண்டிநல்லா' செம்மறி ஆடுகள் ஆராய்ச்சி நிலையத்தின் இன்றியமையாமையை உணர்ந்த தமிழ்நாடு அரசு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தவிருக்கும் 5 மிகப் பெரிய செம்மறியாடு வளர்ப்புப் பண்ணையில் ஒன்றாக இவ்வாராய்ச்சி நிலையத்தையும் சேர்க்க வேண்டும் என்று இந்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது. அதுமட்டுமா? நயமிகு கம்பளி, அதைக் கொடுக்கும் செம்மறியாடுகளைப் பேணுதல் பற்றி ஆராய்வதற்காக ஏற்படுத்தவிருக்கும் மண்டல நிலையங்களில் ஒன்றாக இவ்வாராய்ச்சி நிலையத்தை மேம்படுத்த, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (U. N. D. P.) கீழ் கிடைக்கும் உதவிகளைப் பெறுவதற்காகவும் இந்திய அரசுக்குத் தேவைக் கோரிக்கையைத் தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது.

அண்மையில் 'சாண்டிநல்லா' செம்மறியாடுகள் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்த தேசிய வேளாண்மை ஆணைக் கழகம் மெல்லிய கம்பளி கொடுக்கும் செம்மறியாடுகளை வளர்க்க நீலகிரி மாவட்டத்தில் பெரும் வாய்ப்பு உள்ளது என்றும், அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள இந்த ஆராய்ச்சி நிலையம் பெருந்துணை செய்யும் என்றும் கருத்தறிவித்துள்ளது.

எனவே, மெல்லிய கம்பளி உற்பத்தியில் நீலகிரி மாவட்டம் விரைவில் முன்னேறும் என்பதும், அத்துடன் நீலகிரி வாழ் பழங்குடி மக்களின் வாழ்வும் செழிக்கும் என்பதும் உறுதி.

முன்னேறிப் பணிபுரியும் சென்னைச் சுழற் சங்கம்

ROTARY INTERNATIONAL

'' வறியோர்க் கெல்லாம்
கல்வியின் வாடை
வரவிட வில்லைமதக்
குருக்களின் மேடை
நறுக்கத் தொலைந்த
தந்தப் பீடை
நாடெலாம் பாய்ந்தது
கல்விநீ ரோடை''

என்று, பிரான்சு நாட்டில் ஏற்பட்ட கல்விப் புரட்சியினை வரவேற்றுப் பாடி மகிழ்ந்த புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன், நமது தாய்த் தமிழ்நாட்டிலும் 'கல்விச் செல்வம்'—சமுதாயத்தின் அடிமட்டத்தில் கடைகோடியில் வாழ்வோர்க்கு எட்டாத ஒன்ருகத்—துய்க்க முடியாத ஒன்ருக இருந்த இழிநிலையைக் கண்டு, மனம் நொந்து,

'' எளிமையினுல் ஒரு தமிழன்
படிப்பில்லை யென்ருல்
இங்குள்ள எல்லாரும்
நாணிடவே வேண்டும்''

என்று பாடினுர். ஆம்! உண்மை தானே!

நாடு உரிமை பெற்ற பின், துறைதோறும் மாற்றமும் வளர்ச்சியும் காண்பதற்கான திட்டங்கள் தீட்டப்பெற்றுச் சிறப்பான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. கல்வித் துறை மட்டும் இதற்கு விலக்கா என்ன?

ஆம்! 'எல்லார்க்கும் கல்வி, இலவசக் கல்வி, என்னும் திட்டத்தை நோக்கித் தமிழகம் வீறு நடைபோட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. பல்வேறு கல்வித் திட்டங்களில் தமிழகம் முன்னேடியாக இருக்கிறது! சீருடை, இலவசப் பகல் உணவு, கல்லூரிப் புகுமுக வருப்பு வரை இலவசக் கல்வி என்பன யாவும் இந்த உண்மையைப் புலப்படுத்தும்.

அண்மையில், 23–11–71-ல் சென்னை ரோட்டரிக் கழகத்தின் இளைஞர் பணிக்குழு ஒரு நல்ல திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. ஆம்! ஏழைமையின் காரணமாகப் பகல் உணவு சாப்பிடாமல் பட்டினி கிடந்து கல்லூரிக் கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை 'கன்னிமாரா ஹோட்டலில்', கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். கல்வியமைச்சர் அவர்கள், 'ஏழைக் கல்லூரி மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் நற்பணியை—திட்டத்தைத் தொடங்கி வைக்கையில், சமூகத்தின் மேல் மட்டத்தில் இருப்பவர்களுக்கு இத்தகு ஈகையுணர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பாராட்டினுர்.

தமிழகத்தில் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பகல் உணவு அளிக்கும் திட்டம், அமெரிக்க நாட்டின் 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் நல்ல முறையில் நடைபெறுகிறதென்றும், 30 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் பயிலும் 18 இலட்சம் ஏழைக் குழந்தைகள் இன்று பயன் பெறுகின்றனர் என்றும், அமெரிக்கக் 'கேர்' நிறுவனம் கடந்த 10 ஆண்டுகளில் உணவு தானியங்கள், பால் தூள், எண்ணெய் போன்ற உதவிகளாக 10 இலட்சம் ரூபாய் உதவியிருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

சென்னை ரோட்டரிக் கழகத்தினர் சென்ற ஆண்டு மயிலாப்பூரிலுள்ள செவிட்டூமைப் பள்ளிக்கு ஒரு விடுதி கட்டித்கொடுத்திருக்கின்றனர். இப்போது, ரோட்டரிக் கழகத்தின் இளைஞர் பணிக்குழு, ஏழைக் கல்லூரி மாணவர்களின் நண்பகல் உணவுக்காக ரூ. 40 ஆயிரம் உதவ முன்வந்து, திட்டத்தின் முதற்படியாக நகரிலுள்ள லயோலா கல்லூரி, புதுக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, விவேகானந்தா கல்லூரி, சட்டக் கல்லூரி, எத்திராஜ் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 180 ஏழை மாணவர்களுக்குப் பகலுணவு வழங்குவதற்கு உரிய பணத்தை அந்தந்தக் கல்லூரி நிருவாகிகளிடம் அமைச்சர்அவர்கள் வழங்கி 'இத்திட்டம் மாநிலம் முழுதுமுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் அமல் நடத்தப்பட ரோட்டரிக் கழகத்தினர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் ரோட்டரிக் கழகத்தின் இளைஞர் பணிக்குழுத் தலைவர் திரு ஜி. இராமசாமி, 'கல்லூரியில் பயில வரும் மாணவர்களில் சிலர் தங்கள் மதிய உணவுப் பிரச்சினையைப் பட்டினியுடனேயே கழித்து விடுகிருர்கள்' என்றும், 'சிலர் வெற்று உணவுப் பாத்திரங்களோடு வந்து சாப்பிடுவதுபோலப் பாசாங்கு செய்கிருர்கள்' என்று கூறியது பலரது உள்ளங்களை உலுக்குவதாக இருந்தது. இத்தகைய இழிநிலையை ஒழிக்க எண்ணி முன்வந்து முன்மாதிரியாக நடந்து கொண்டிருக்கும் சென்னை ரோட்டரிக் கழகமும், இளைஞர் பணிக் குழுவும் கொண்டுள்ள மனிதத் தன்மை மிக்க இப்பணி மேலும் மேலும் வளர்ந்து, தமிழக மெங்கும் விரிந்து பரவும் என்பதில் ஐயமில்லை! அந்த நற்பணி வெல்க! வழிகாட்டும் சென்னை ரோட்டரிக் கழகம் வாழ்க!

செல்வி கன்னுவின் வாழ்க்கையில் பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும் இது

தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள பணியில் செலவிட்டால் எந்தப் பெண்ணும் பெருமை பெறலாமே ! ஆமாம் **செல்வி கன்னு** தனது ஓய்வு நேரத்தைச் சிறுசேமிப்பு முகவராகப் பணியாற்றுவதில் செலவிட்டார்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள். 1970-71 ஆம் ஆண்டில் சிறுசேமிப்பு வாடிக்கையாளர்களைச் சேர்ப்பதில் பெருஞ் சாதனையைச் செய்தமைக்காக மத்திய அரசு துணை நிதியமைச்சர் திருமதி **சுசிலா ரோஹட்கி** யிடமிருந்து பரிசு பெறுகிறார்.

செல்வி கன்னுவின் தனிப்பட்ட முயற்சியால் கூடுதலான வருவாய் கிடைத்ததை நீங்கள் அறிவீர்கள். சிறு சேமிப்புக்காக வாடிக்கையாளர்களைச் சேர்ப்பது சுலபமானது. நீங்கள் கூடச் சிறுசேமிப்பு வாடிக்கையாளராகப் பணியாற்றலாம். அதன் மூலம் வருவாய் பெறுவதுடன் பரிசுகளையும் பெறலாமே!

உங்கள் ஓய்வு நேரத்தை இப்படிப் பயனுள்ள பணியில் செலவிட்டு நாட்டுக்கும் சமுதாயத்துக்கும், நற்தொண்டாற்ற இன்றே சிறுசேமிப்பு முகவராகச் சேருங்கள்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க

வட்டார இயக்குநர்
தேசிய சேமிப்பு நிறுவனம்
எண் 1/18 அண்ணா சாலை
சென்னை - 2.
தொலைபேசி: 85962

சிறுசேமிப்பு இயக்குநர்
தமிழ்நாடு அரசு

இந்தியாவில் ஒரு சுவிட்சர்லாந்து!

பூமிப்பந்தின் 77 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகைக்கும் 11 டிகிரி வடக்குத் தீர்க்க ரேகைக்கும் இடையே, கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கூடும் இடத்தில் நீலகிரி அமைந்திருக்கிறது.

மேலை நாட்டு மக்கள் விரும்பிக் கூடுகின்ற கீழைநாட்டுத் தலமல்லவா அது !

சமவெளியில் 200 மைல்கள் பரந்திருக்கும் நீலமலைகளைச் சுற்றி மோயாறு, சிறுபவானி என ஓடும் இரு ஆறுகள் பசுமையைவளர்த்து இறுதியில் பவானி எனப் பெயர் பெற்றுச் சமவெளியில் பாய்கின்றன.

கிழக்கில் கோவையும்வடக்கில் கருநாடகமும் மேற்கிலும் தெற்கிலும் கேரளமும் சூழ்ந்திருக்கக் தடாகத்துத் தாமரை போல் தனித்த எழிலுடன் விளங்கும் நீலகிரி மலையின் அடிவாரத்தில் அழகும் பயனும் மிக்க காடுகள் அடர்த்தியாக உள்ளன. நீலகிரி மாவட்டத்தின் பரப்பு 982 சதுர மைல்கள். கடல் மட்டத்திற்கு மேலே 5,000 அடி முதல் 8,000 அடிவரை உயர்ந்தும் தாழ்ந்தும் தோன்றும் கணக்கற்ற சிகரங்களின் வனப்பும் கணவாய்கள்,பீடபூமிகளின் சிறப்பும் காணக் காணத் தெவிட்டாதவை !

மலையின் மிக உயர்ந்த சிகரமாகத் தொட்டபெட்டா 8,760 அடியில் எடுப்புடன் நிற்கிறது. அதற்குச் சற்றுக் கீழே, 7,500 அடி மட்டத்தில் ''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவாகத் தருநிழலாக'' பல்லாண்டுகளாகப் பலருக்குச் சுகமளித்து வருகிறது உதகை என்னும் மலைநகரம்.

மனோகரமான அந்த இடத்தைக் கண்ட வெளிநாட்டார், அதனை ''இந்தியாவின் சுவிட்சர் லாந்து'' எனப் பாராட்டினர். கோடைப் புகலிடங்களிலும் ஒரு குறை உண்டு. அங்குக் கோடையில்வெம்மை கடுமையாக இருக்கும்; பனிக்காலத்தில் உறைபனி பொழியும். சுவிட்சர்லாந்தும் இதற்கு விதி விலக்கல்ல. ஆனால் உதகையில் எந்த நாளிலும் வெப்ப அளவு 68 டிகிரி (எப்) யைத் தாண்டியதில்லை. பூமியின் நடுநிலைக் கோட்டிற்கு அருகாமையில் இருப்பதால் இங்கு உறைபனியும் பெய்வதில்லை எனவே மென்மையான உடல்வாகு படைத்தோர் மேனி நலமுடன் வாழ உதகையை விட மேலான இடம் உலகிலேயே இல்லை எனலாம். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

இனியது இனியது உதகை !

''பார்க்குமிடமெல்லாம்பசுமை! பாறை என்பதே தெரியாத புதுமை ! இது போன்ற இன்பம் தரும் பயண அனுபவத்தை இது வரை அறிந்ததே இல்லை ! எண்ணாயிரம் அடிகளுக்கும் மேலே ஏறிச் சென்று தொட்ட பெட்டாவில் நின்று சமவெளியைக்காணும் பொழுது, ஆகா! அதன் அழகை என்னென்பேன் ! அந்த அரிய காட்சிகளைக் காண அன்பே என் அருகே நீ இல்லையே !''

என்று தன் மனையாளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார் ஸர் தாமஸ் மன்ரோ !

அத்தனை இனியது உதகை !

மலை ஏறிய மதகுருக்கள்

புனித தாமஸின் மூலமாக ஏசுவின் கருத்துக்களை ஏற்ற பழம் கிறித்துவரில் சிலர், நீலமலையின் மேல், வெளி உலகத் தொடர்பின்றி வாழ்வதாகக் கேள்வியுற்றார், சிரியன் சர்ச்சின் பிஷப் பிரான்சிஸ்கோ ராய். மதக் கோட்பாடுகளில் அவர்களை மேலும் ஈடுபடுத்த 1602-ஆம் ஆண்டு மத போதனையாளர் ஒருவரை நீலகிரிக்கு அனுப்பினார். அவர் தந்த செய்தி திருப்தி தராமற் போகவே வேறு ஒருவரை அனுப்புமாறு ரோமன் கத்தோலிக்கக் குழுவை வேண்டினார்கள்.

மதகுரு அருள்தந்தைஜேகோம் பெர்ரைரி அப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கள்ளிக் கோட்டையிலிருந்து புறப்பட்ட பெர்ரைரி குளிரைத் தாங்கிக் கொண்டு நீலகிரி ஏறினார். பல மைல்களைக் கடந்து சென்ற அவர் அங்குக் கிறித்துவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களைக் காணவில்லை: எனினும் அங்கு வாழ்ந்த படகர்களுடனும் தோதவர்களுடனும் பழகி அவர்களைப் பற்றிய பயன்மிகு விவரங்களை அறிந்து வந்தார்.

கள்வனைத் தேடினர்!

கவின்மலை கண்டனர்

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் இந்தியா வாழ்ந்த காலம் அது. பாளையக்காரன் ஒருவன் குடியானவர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தான். கம்பெனியின் கணக்கர் அவன் மீது பாயவே தேவ நாயக்கன் கோட்டை வழியாக அவன் நீலகிரி மலைக்குத் தப்பிஓடிவிட்டான்.

அவனைத் தேடி 1818-ஆம் ஆண்டில் கோவை உதவி கலெக்டர்களான விஷ் (Whish) கிண்டர்ஸ்லி (Kindersly) ஆகியோர் புறப்பட்டனர். வழியெல்லாம்அவர்கள்கண்ட பசுமையான காட்சிகளும், இதம் தரும் இனிய காற்றும் குளிர்ந்த சூழ்நிலையும் உதவிக் கலெக்டர்களை உவகையில் ஆழ்த்தின.

கோத்தகிரி அருகே ஒரு குடிசையில் அவர்கள் தேடி வந்த பாளையக்காரரர்களைக் கண்டனர். பழமும் தேனும் பல்சுவை உணவும் தந்து அவர்களைப் பரவசப் படுத்திய பாளையக்காரன் ''பருகப் பால் கொண்டு வருகிறேன்'' என்று கூறி மறைந்து விட்டான்.

ஆனால் உதவிக் கலெக்டர்கள் மனம் குலையாது கள்வனைத் தேடுவதைக் கைவிட்டு அந்தக் கவின் மலையின் மேலே மேலும் ஏறிச் சென்று அதன் அமைப்பை ஆராய்ந்தனர்.

நீலகிரியின் அழகையும் பருவச் சூழ்நிலையின் சிறப்பையும் பற்றி உதவியாளர்கள் உரைக்கக் கேட்ட கலெக்டர் சல்லிவானின் உள்ளத்தில் அதனைத் தானும் காண வேண்டும் என்ற ஆசைக் கனல் மூண்டது.

கடமையை மறந்த கலெக்டர்!

1818 ஆம்-ஆண்டில் கோவையின் கலெக்டராகப் பொறுப் பேற்றவர் சல்லிவான் என்ற ஆங்கிலேயர். அவர்,ஆங்கிலேயர் ஆரோக்கியமுடன் வாழ நீலமலையே சிறந்த இடம் என்ற முடிவுக்கு வந்தார்.

அவர் 1833-ஆம் ஆண்டு உதகையில் ஏக்கர் ஒரு ரூபாய் வீதம் தோதவர்களிடமிருந்து நூறு ஏக்கர் நிலம் வாங்கினார். அங்கு உதகமண்டலத்திலேயே முதன் முறையாகக் கட்டடம் எழுப்பினார். உதகையை விட்டுப் பிரிய மனமின்றி அங்கிருந்து கொண்டே கோவையை நிர்வகிக்கத் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து ஆங்கிலேய அதிகாரிகள் பலர் உதகையில் குடியேறினர்.

1835 ஜனவரியில் அவர் ரெவின்யூ போர்டு உறுப்பினராணார். 1836-ல் கவுன்சில் உறுப்பினராக நியமிக்கப் பட்டார். 1841 மே திங்களில் ஓய்வு பெற்றார். தன் பதவிக் காலத்தில் உதகையின் உயர்வுக்காக ஓய்வின்றி உழைத்த சல்லிவான் சிறந்த தோட்டக் கலை வல்லுநர்; விவசாயத்தில் ஆர்வம் மிக்கவர். தன்னுடைய சொந்தச் செலவில் இங்கிலாந்தில் ஓர் தோட்டக் கலை நிபுணரை வரவழைத்துத் தன் தாயகத்திலிருந்தும் தென்னாப்பிரிக்காவிலிருந்தும் கொணர்ந்த பழம் தரும் மரங்களையும் காய்கறிச் செடிகளையும் அவர் உதகையில் பயிரிட்டார்.

இன்று உதகையில் வானுற வளர்ந்திருக்கும் மரங்களில் பல, சல்லிவான் காலத்தில் திட்டமிடப்பட்டவை. உயர்தர ஆப்பிள், பீச், ஸ்ட்ராபெர்ரி புதிய வகைகளும் எண்ணற்ற ரோசாச் செடிகளும் அவரால் உதகையில் அறிமுகப்படுத்தப் பட்டன. சல்லிவான் கொண்டு வந்த வீரியம் மிகுந்த பார்லி வகையை இன்னும் நீலகிரியில் சல்லிவான் காங்கி (sallivan gangi) என்றழைக்கின்றனர்.

சிறுமுகையிலிருந்து (siru mugai) உதகைக்குச் செல்லும் பழையபாதை ஒன்று சல்லிவான் அவர்களால் செப்பனிடப் பட்டது.

இன்று உதகையில் உள்ள உல்லாச ஏரி சல்லிவான் அவர்களால் அமைக்கப்பட்டது தான். உதகையை உருவாக்கியவர் சல்லிவான்! உலகம் போற்றும் நிலைக்கு அதனை உயர்த்தியவர் சல்லிவான்! உதகையின் சூழ்நிலையில் ஏங்கி அங்கேயே தம் காலத்தின் பெரும் பகுதியைக் கழித்ததனால் கோவையை நிர்வகிக்கும் கடமையை மறந்தவர் என்ற பழியையும் சுமந்தவர் சல்லிவான்!

கலெக்டர் கட்டிய கல் பங்களா!

உதகையில் தொடர்ந்து வாழ நினைத்த சல்லிவான் 1822-ஆம் ஆண்டு ஏப்ரலில் கட்டத் துவங்கிய மாளிகைக்கு '' கல் பங்களா '' என்று பெயர். முழுதும் கருங்கற்களினாலேயே அது கட்டப்பட்டது. அதற்கான கற்கள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டன என்பது இன்றளவும் தெரியாமலேயே இருந்து வருகிறது.

வெண்பாப் போட்டி-25

ஈற்றடி : யாரைநாம் போற்றிடுதல் ஈங்கு

முடிவு நாள் : 2—1—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

"தமிழரசு" அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை-2.

குறிப்பு—நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெற வேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.

1823 முதல் 1827 வரை கல் பங்களாவில் வாழ்ந்த சல்லிவான் பின்னர் அரசினருக்கு மாளிகையை அளித்து, மாதம் ரூ. 490 வாடகையாகப் பெற்றார். 1846-ஆம் ஆண்டு ஒரு மேஜருக்கு விற்றார். பின்னர் அது பல கரங்களுக்கு மாறியது. ஒரு முறை ' கல் பங்களா ' பள்ளிக்கூடமாக இருந்த பொழுது அங்கு டாக்டர் ஜி.யு. போப் முதல்வராகப் பணியாற்றியிருக்கிறார். இறுதியில் 1869-ல் பொதுப்பணித்துறை அதனை ஏற்றது. இன்று கல் பங்களா, அரசினர் கல்லூரியாக இருக்கிறது.

கல் பங்களாவின் பெரும் பகுதி சல்லிவான் கட்டியது போலவே இன்றும் இருக்கிறது. எனினும் ஆயிரக்கணக்கில் செலவழித்து அரசினர் சிறு மாற்றங்களைச் செய்திருக்கின்றனர். பங்களாவினை அடுத்துப் பல புதிய கட்டடங்களை எழுப்பியுள்ளனர்.

கல் பங்களாவுக்குப் பக்கத்திலிருக்கும் மணிக்கூண்டு 1,700 ரூபாய் செலவில் 1878-ஆம் ஆண்டு அரசினரால் கட்டப்பட்டதாகும்.

கல் பங்களாவுக்கு அருகே நெடிதுயர்ந்து நிற்கும் கருவாலி மரம் (OAK) சல்லிவான் அவர்களால் நடப்பட்டது. அவர் நினைவாக இன்னும் அது ''சல்லிவான் ஓக்'' என்று அழைக்கப்படுகிறது.

ஒரே பெயர்; பல கதை

1821-ஆம் ஆண்டு கலெக்டர் சல்லிவான் முதன்முதலில் வந்து இறங்கிய இடத்தில் மந்து ஒன்று இருந்ததாம். மந்து என்பது தோதவர் வாழும் கிராமத்திற்குப் பெயர். அதற்கு அருகே ' ஒற்றைக்கல் ' ஒன்று இருந்ததால் அது ஒற்றைக்கல் மந்து என்று அழைக்கப்பட்டதாம். சல்லிவான் கல் பங்களாவைக் கட்டிய இடம்தான் அந்த 'ஒத்தக்கல் மந்து'. அதுவே மருவி '' ஒத்தகமந்து'' ஆனது என்பது உதக மண்டலத்தின் பெயரைப் பற்றிப் பொதுவாகத் தரப்படும் விளக்கமாகும்.

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,

தமிழரசு அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை - 2

ஒட்டை என்றால் மூங்கில் என்று பொருள். மூங்கில் புதர்களும் சோலைகளும் நெருங்கி வளர்ந்து உள்ள இடமாதலால் ஒட்டைகாய் 'மந்து' என்பது ஒத்தகமந்து வாயிற்று என்பது ஒரு சிலரின் வாதம்.

பக்த்மத் எனப்பட்ட தோதவர் கிராமம் படகர்களால் 'ஒத்தக மந்து' எனத் திரித்துக் கூறப்பட்டது என்பது சிலரின் கருத்து. காண வருவோருக்கெல்லாம், மகிழ்ச்சியை ஊட்டி வளர்ப்பதால் ''ஊட்டி'' எனப் பெயர் பெற்றது என்பது உல்லாசப் பயணத்திற்காக உதகை வந்த பள்ளிச் சிறுவன் ஒருவனின் ஆராய்ச்சி!

உல்லாச ஏரி உருவான விதம்

இரண்டு மலைத் தொடர்களின் முனைகளுக்கும் இடையே சிறியதோர் அணையைக் கட்டி 1823-ஆம் ஆண்டில் கலெக்டர் சல்லிவான் அவற்றை இணைத்தார். அதன் விளைவாக ஆறு அல்லது ஏழு மலைகளில் பிறந்து வந்த அருவிகள், இரண்டு மைல் நீளத்திற்கும் பசிய மலைகள் நடுவே பாம்பு போன்றதோர் ஏரியாக நெளிந்தன. எழுநூறு கஜம் அகலம் கொண்ட ஏரி உதகையின் எழிலுக்கு எழில் சேர்த்தது. 1830-ஆம் ஆண்டிலேயே சர் தாமஸ் மன்றோ உதகை ஏரியில் உல்லாசப் படகு விட்டு மகிழ்ந்திருக்கிறார்.

பெருமழையின் விளைவாக ஏரி உடைத்துக்கொண்டதால் 1831-ஆம் ஆண்டில் அணை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. ' வில்லோ பண்ட்' என வழங்கும் இடைக் கரைப்பாதையும் அமைக்கப் பட்டது.

ஏரியை மேலும் விரிவுப்படுத்தி அணையை உயர்த்தி, நீலகிரி, மைசூர் கிராமங்களின் நிலங்களின் பாசனத்திற்கு ஏரியின் நீரைப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றும் இருந்தது. ஈரோட்டில் உள்ள நிலங்களுக்கு உதகை ஏரியிலிருந்து நீர் வேண்டும் என்று தாசில்தார் 1829-ஆம் ஆண்டு விண்ணப்பம் செய்திருந்தார். ஆனால் செலவினைக் கருதி அத்தகைய திட்டம் ஆரம்பத்திலேயே கைவிடப்பட்டது. இடைக்கரைப் பாதைக்குக் கிழக்கே தேங்கி உள்ள நீர் நாற்றமெடுக்க ஆரம்பித்தது. மலேரியா கொசுக்களின் பிறப்பிடமாகி உதகையில் நோய்கள் பரவக் காரணமாயிற்று. இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் ஏரியின் அந்தப் பகுதி சென்ற நூற்றாண்டின் இறுதியில் மூடப் பட்டது. உள்ளூரில் அதற்குத் தேவையான ஆட்கள் கிடைக்காமல் தினந்தோறும் ஐந்நூறு பேருக்கு மேற்பட்ட சிப்பாய்கள் ஏரியின் மேற்பகுதியைத் தூர்க்கும் பணியைச் செய்தனர்.

1849—50ல் ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 20,000 வேல மரங்கள் ஏரியின் கரைகளில் நடப்பட்டன. பாதுகாப்பு இன்மையாலும், ஆடுகளின் 'கவனிப்பினாலும்' 1854-ஆம் ஆண்டு 154 செடிகள்தாம் எஞ்சியிருந்தன! 1888-ல் 26,150 ரூபாய் செலவில் ஏரிக் கரைகள் செப்பனிடப்பட்டு அழகுமிக்க செடிகள் வளர்க்கப் பட்டன. ஐரோப்பாவிலிருந்து உயிருடன் கொண்டு வரப்பட்ட மீன் வகைகள் ஏரியில் விடப் பட்டன.

இன்று ஆண்டுக்கு ஆண்டு அரசின் முயற்சியில் ஏரி புத்தெழில் பெற்று வருகிறது. உதகை வரும் உல்லாசப் பயணிகள் எல்லாரும் ''விரும்பும் இட

மாக, தோகை மயிலனைய மாதரும் அவர்தம் தோள் தழுவிய கணவரும் தோணிகள் ஓட்டி விளையாடி வரும் நீர்நிலையாக உதகை ஏரி புகழ் பெற்று விளங்குகிறது.

உதகைக் குளிரின் பெருமை

'' பெரியதோர் கோட்டு அணிந்து உடலை மூடியிருக்கிறேன். ஆனாலும் பேனாவைப் பிடிக்க முடியாமல் என் கரங்கள் நடுங்குகின்றன. சமவெளியில் இருந்தபொழுது போர்வை ஏதும் இல்லாமலேயே நான் உறங்கியதுண்டு. ஆனால் உதகையிலோ, போர்வையும் அதற்கு மேல் ஆங்கிலக் கம்பளியும், அதற்கும் மேலே இரண்டு மெல்லிய மெத்தைகளையும் போட்டுக் கொள்ளுகிறேன். சுமைதான் அழுத்துகிறதே தவிர குளிர் குறையக் காணேன் '' என்றார் சென்னை கவர்னராக இருந்த சர் தாமஸ் மன்றோ. உதகைக் குளிரின் பெருமைக்குச் சான்று வேறென்ன வேண்டும் !

ஆங்கிலேயரின் மோகம்

கலெக்டர் சல்லிவானுக்குப் பிறகு ஆங்கிலேய அதிகாரிகள் பலர் உதகைக்குப் படையெடுத்தனர் !

இருவரைத் தவிர, சென்னை மாநிலத்தை ஆளவந்த கவர்னர்கள் அனைவருமே உதகைக்கு வந்திருக்கின்றனர். அங்கு சிறு வீடுகளைக் கட்டி அதிகமான வாடகைக்கு விட்டுப் பெரும் பொருள் ஈட்டிய அதிகாரிகள் பலர் உண்டு. 38,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு வீட்டிற்கு வருடத்திற்கு 20,000 ரூபாய் வாடகையாகக் கிடைத்ததாம்.

1829-ஆம் ஆண்டு பல்லக்கில் ஏறி உதகைக்கு வந்த லார்டு வாஷிங்டன் வீடுகளுக்கு விதிக்கப்பட்ட வாடகையை அறிந்து கோபம் கொண்டார். அதிகாரிகளின் இந்தச் செயலைத் தடுக்க உத்தரவிட்டார்.

கூடலூர் வழியாக இடர்ப்பாடுகள் மிகுந்த செங்குத்தான பாதையில் வந்த கவர்னர், நெல்லித்துறையிலிருந்து புதிய மலைப்பாதையை அமைக்கவும் ஆணையிட்டார். 1832-ஆம் ஆண்டு மலைப்பாதை வெட்டும் வேலை தொடங்கியது.

லார்டு எல்பின்ஸ்டன் என்ற கவர்னர் '' தேக நிலை '' கருதி உதகைக்குச் சென்றபோது தன்னுடன் 13 பேர்களடங்கிய பரிவாரத்தையும் அழைத்துக் கொண்டு சென்றார். இது தலைமை அரசாங்கத்திற்குச் சினத்தை மூட்டியது. '' தலைநகரான சென்னையிலிருந்து அத்துணைத் தூரத்தே மாகாணத்தின் அரசாங்கம் செல்வது உசிதமல்ல; உடனே திரும்புக'' என்ற உத்தரவு பறந்தது.

உதகைக்கும் கோத்தகிரிக்கும் இடையே சாலை அமைத்தார் லார்டு டிவீட்டேல் (Lord Tweeddale) என்ற கவர்னர். அங்குப் பொதுப் பூங்கா அமைக்கும் முயற்சிக்கும் பெரும் ஆதரவு அளித்தார் அவர்.

சர் சார்லஸ் டிரிவெல்யான் (Sir Clarles Trevelyan) என்ற கவர்னருக்கு, உதகைக்கு '' விக்டோரியா '' என்று பெயர் வைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் அது நிறைவேறாமலே போய்விட்டது

லார்டு வில்லியம் பெண்டிங்க், டல்ஹௌஸி, லார்ட் லிட்டன் லார்ட் கர்சன் போன்ற கவர்னர் ஜெனரல்களும், வைசிராய்களும் உதகைக்கு வந்து அளவற்ற ஆனந்தம் அடைந்திருக்கின்றனர்.

> ### முதல் நாவல்
>
> தமிழ்நாட்டில் தோன்றிய முதல் நாவல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதி 1876-ல் வெளியிட்ட பிரதாப முதலியார் சரித்திரம்.

'' இனிமையான . காலைப் பொழுதில் முதன் முறையாக நான் உதகையைக் கண்டேன். உதகை என்னும் உவகை ஊற்றில் மூழ்கி எழுந்தோர் அதனைப் பற்றிப் பெரிதும் புகழ்பாடக் கேட்டிருக்கிறேன். ஆனால் எல்லா வகையிலும் அவர்கள் உரைத்ததைவிட எழில் மிக்கதாக உதகை இருப்பதைக் கண்டேன். இன்று மாலைப் பொழுதில், மழை பொழிந்தது. ஆனால், எத்தனை அழகான ஆங்கில மழை ! எவ்வளவு சுவையான ஆங்கிலச் சேறு! இங்கிலாந்து, ஸ்காட்லாந்தின் அழகுள்ள பகுதிகளெல்லாம் இங்கு ஒருசேர உள்ளனவோ என்ற மலைப்பு ஏற்படுகிறது. ! கண்ணே ! உதகை ஒரு சொர்க்கம் தான் என்பதற்கு அட்டியில்லை !''

—என்று தன் மனைவிக்கு எழுதிக் குறிப்பிட்டார் லிட்டன் பிரபு.

கர்சன் பிரபு வந்தபோது தோதர்கள் பாடியும் ஆடியும் வரவேற்றனர். '' சென்றேன், கண்டேன், வென்றேன் '' என் பது சீஸரின் வாக்கு அல்லவா ! மூன்று நாட்களுக்குப் பிறகு உதகைப் பொது மக்களிடமிருந்து விடைபெற்ற கர்சன் பிரபு சொன்னார் !

'' நான் உதகைக்கு வந்தேன்; கண்டேன்; வெல்லப்பட்டேன்!''

1869-ஆம் ஆண்டில் உதகையைக் காணவந்த சென்னை கவர்னர் நேப்பியர் பிரபு கோடைக் காலந்தோறும் சென்னை அரசாங்கம் உதகையில் இயங்க லாம் என்று எண்ணினார். 1870-ஆம் ஆண்டு சூலைத் திங் களில் உதகை வந்த அரசாங்கம் செப்டம்பர் இறுதியில்தான் திரும்பியது. அதற்காக ஏற்பட்ட செலவு ரூ. 7,016–14–11 ஆகும்.

ஆண்டுதோறும் அரசாங்கம் கோடையில் உதகையில் இயங்கும் இந்த வழக்கம் தொடர்ந்தது. 1937-ல் திரு சி. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை அமைந்தபோதுதான் இது நிறுத்தப்பட்டது.

மனுநீதித்திட்டம் செயல்படும் பாங்கு!

மக்களுடன் தொடர்பு கொண்டு, குறைகளை அறிந்து அவற்றைக் களைவதற்கான மனுநீதித் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் எல்லா வட்டங்களுக்கும் திங்கள்தோறும் அலுவலர் குழு சென்று பார்வையிடும் ஏற்பாடு 1969 செப்டம்பரிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட வட்டத்தின் டிப்டி தாசில்தார், பொதுப்பணித் துறை, மின்சாரத் துறை, வனத்துறை அலுவலர்கள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய விரிவினை அலுவலர் ஒருவர் ஆகியோர் அக்குழுவில் இடம் பெறுகின்றனர். உடனடியாகத் தீர்வு காணக்கூடிய மனுக்கள் குறித்து அங்கேயே தீர்வு காண்பதும், மற்ற மனுக்கள், உரிய நடவடிக்கைக்காக அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பப் பெறுவதும் நடைமுறையாகும். இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் மூன்று வட்டங்களிலும் உள்ள கிராமங்கள் அனைத்தும் 1970 மே மாதத்துக்குள் பார்வையிடப் பெற்றன.

இரண்டாவது ஆண்டிலும் அலுவலர்கள் மக்களுடன் தொடர்பு கொண்டு மனுக்களைப் பெற்றுத் தீர்வு காணும் அலுவல் 1970 செப்டம்பரில் தொடங்கியது. 1971 மே மாதத்துக்குள் 55 கிராமங்களிலும் இப்பணி முடிவு பெற்றது. மூன்றாம் ஆண்டில் இந்த மக்கள் தொடர்புப் பணி 1971 செப்டம்பரில் தொடங்கப் பெற்று, மொத்தம் உள்ள 55 கிராமங்களில் 1971 அக்டோபர் முடிய, 18 கிராமங்களுக்கு அலுவலர் குழு சென்று வந்தது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அலுவலர்கள் குழுவிடம் மக்கள் அளித்த மனுக்கள், உடனடியாக அதே இடத்தில் தீர்வு காணப்பட்டவை, பின்னர் தீர்வுகாணப்பட்டவை, ஏற்கப்பட்ட கோரிக்கைகள், மறுக்கப்பட்டவை இன்னும் தீர்வு காணாமல் இருப்பவை பற்றிய விவரங்களைக் கீழே காணலாம்.

1969-ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் 1838. அவற்றிற்கு உடனே அதே இடத்தில் தீர்வு காணப்பட்டவை 82 மனுக்கள். ஏற்றுக்கொள்ளப் 502 நிராகரிக்கப்பட்டன. பின்னர் 110 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 839 நிராகரிக்கப்பட்டன. மற்றத் துறைகளுக்கு 272 மனுக்கள் அனுப்பப்பட்டன. இன்னும் 33 மனுக்கள் தீர்ப்பாகாமல் உள்ளன.

1970-ஆம் ஆண்டு பெறப்பட்ட மொத்த மனுக்கள் 477. அவற்றிற்கு உடனே அதே இடத்தில் தீர்வு காணப்பட்டது. 9 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. 88 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. பின்னர் 76 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன. 125 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மற்றத் துறைகளுக்கு 143 மனுக்கள் அனுப்பப் பட்டன. இன்னும் 36 மனுக்கள் தீர்ப்பாகாமல் உள்ளன.

1971-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை 41 மனுக்கள் பெறப்பட்டன. அதே இடத்தில் அவற்றிற்குத் தீர்வு காணப்பட்டது. மற்றத் துறைகளுக்கு 14 மனுக்கள் அனுப்பப்பட்டன. 19 மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. பின்னர், 1 மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 7 மனுக்கள் தீர்ப்பாகாமல் இன்னும் உள்ளன.

1971-ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் மொத்தம் 65 மனுக்கள் பெறப்பட்டன. அவைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டது. 1 மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 5 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மற்றத் துறைகளுக்கு 32 மனுக்கள் அனுப்பப்பட்டன. இன்னும் தீர்ப்பாகாமல் இருப்பவை 27 மனுக்கள்.

1971-ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மொத்தம் 131 மனுக்கள் வந்தன. அவற்றிற்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டது. மற்றத் துறைகளுக்கு 18 மனுக்கள் அனுப்பப்பட்டன. 1 மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 45 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 67 மனுக்கள் இன்னும் தீர்ப்பாகாமல் இருக்கின்றன.

மனுக்கள் பெரும்பாலும் நில ஒதுக்கீடு, சாலை வசதிகள், மனை இடங்கள், குடிநீர் வசதி, கல்வி வசதி பற்றியவையாகும்.

நீலகிரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட மனை நிலப் பட்டாக்கள் கடைசியாக உள்ள நிலவரம் :—

1.	உதகமண்டலம் வட்டத்தில் வழங்கப்பட்டவை	281
2.	குன்னூர் வட்டத்தில் வழங்கப்பட்டவை	606
3.	கூடலூர் வட்டத்தில் வழங்கப்பட்டவை	87
	மொத்தம் ..	974

பள்ளிகளுக்கு வசதி

மாவட்டத்தில் 1971 ஜூலையிலிருந்து 1971 செப்டம்பர் வரை கீழ்க்கண்ட வேலைத் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

குஞ்சபானை, ஜகனுரி கிராமங்களில் பழங்குடியினருக்கான தங்கிப் படிக்கும் பள்ளிக் கட்டடங்

களுக்கும் ஆசிரியர் குடியிருப்புகளுக்கும் மின் வசதி அமைப்பு.

கூடலூர் வட்டம் கப்பாலாவில் பழங்குடியினருக்கான தங்கிப்படிக்கும் பள்ளிக்கு மின் வசதி, எலமன்ஞ கிராமத்தில் பழங்குடியினருக்கான தங்கிப் படிக்கும் பள்ளிக்குக் குடிநீர்க் கிணறு அமைப்பு.

குடிநீர்க் கிணறுகள்

ஆனைக்கால்மண்டு பழங்குடியினர் குடியிருப்பில் புதுக் குடிநீர்க் கிணறு அமைப்பு; வாழைத் தோட்டம் பழங்குடியினர் குடியிருப்பில் புதுக் குடிநீர்க் கிணறு அமைப்பு; முத்தநாடுமண்டால் கிணற்றில் தூர் எடுப்பு இறைவைக் கிணறு அமைப்பு.

கோத்தகிரி மாதிரி கிராமத்தில் சாலையில் சிறுபாலம் அமைப்பு; இதே கிராமத்தில் நீர்த்தொட்டியும் பம்பு செட்டும் அமைப்பு;

புதிய சாலைகள்

திரிச்சிகுடியில் உள்ள பழங்குடியினருக்கான தங்கிப் படிக்கும் பள்ளிக்குச் சாலை அமைப்பு; நஞ்சநாடு கிராமத்தில் தக்கர் பாபா குருகுலத்துக்குச் சாலை அமைப்பு; நெல்லியாளம் பழங்குடியினர் குடியிருப்புக்கும் பள்ளிக்கும் சாலை அமைப்பு;

குறும்பர் பள்ளம், சக்கநள்ளி ஆகியவைகளில் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கிணறுகளை மேலும் ஆழப்படுத்தும் பணிகள்; குந்தே கோடுமண்டு பழங்குடியினர் குடியிருப்புச் சாலை அமைப்பு; பொக்குபுரம் பழங்குடியினர் தங்கிப் படிக்கும் பள்ளி பழுது பார்க்கும் பணிகள்; தாரநாடு மண்டில் பழங்குடியினர் குடியிருப்புக்கு படிக்கட்டுத் தடம் அமைத்தல் ஆகியன.

நன்னிலை எய்தப் பலமுனைப் பணி

தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் சமநீதியும், சரிசம வாய்ப்பும் பெற்று முன்னேற்றம் காண வேண்டுமென்பதற்காக நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு துறைகளிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாவட்டத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களில் ஆதி திராவிடர், ஆதி கர்ஞடிகள், சக்கிலியர், அருந்ததியர், பள்ளர், பறையர் ஆகியோர் குறிப்பிடத்தக்க இனத்தவராவர்.

மாவட்டத்தில் அரிசன முன்னேற்றத்திற்காக அரசினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கல்வித் துறையில் அரிசன நலத்துறை இவர்களுக்காகப் பதினொரு தங்கும் விடுதிகளை நடத்தி வருகின்றது. தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்டு வரும் நான்கு விடுதிகளுக்கு மானியம் வழங்கி வருகிறது. விநோபா நகரிலும், கோபாலபுரத்திலும் இம்மக்களின் குடும்ப நலம் கருதி இரு சமுதாய நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. இவை தீண்டாமை அகற்றவும், மாறுபாடில்லா மனத்துடன் கூடி வாழவும், உதவுவதுடன் குழந்தைகள் நலத்தையும் பேணிவருகின்றன. இந்நிலையங்களுக்கு வானொலிப் பெட்டி, விளையாட்டுப் பொருள்கள், முதலுதவிப் பெட்டிகள், இசைக்கருவிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. அன்றியும் செய்தித் தாள்களும், மாத வார இதழ்கள் போன்ற அறிவு வளர்க்கும் பத்திரிகைகளும் அளிக்கப்படுகின்றன.

அரிசன நலத்துறை 4 பள்ளிகளையும் மலைச்சாதியினர் தங்கிப் படிக்கும் 21 பள்ளிகளையும் நடத்தி வருகிறது.

உதவித் தொகை

பள்ளிகளில் பயிலும் அரிசனப் பிள்ளைகளுக்கு அரசு தாராளமாக உபகாரச் சம்பளம் உதவி வருகிறது. ஆண்டுக்கொருமுறை முதற் படிவம் முதல் 5-ஆம் படிவம் வரை பயிலும் மாணவர்க்கு அரசாங்கம் உடைகள் வழங்குகிறது. அரசினர் பெண்கள் விடுதிகளில் இருக்கும் மாணவிகட்கும் ஆண்டுக்கு நான்கு உடைகள் கொடுக்கப்படுகின்றன.

பழங்குடி மக்கள் தங்கிப் பயிலும் பள்ளிகளில் உள்ள பிள்ளைகட்கும் அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகட்கும் புத்தகங்களும் எழுது பலகையும் அளிக்கப்படுகின்றன;

பொருளாதார நிலை

ஏழை அரிசனங்களுக்கு இல்லங்களைக் கட்டி அரசு வழங்குகிறது; வீடில்லா அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுத்துள்ளது. இதுவரையும் 1,655 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அரிசன மக்களுக்கு இதுவரை 2,162 வீடுகட்டும் மனைகள் வழங்கப்பட்டிக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் வாழும் அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள் அளிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பயிரிடுவதற்குரிய நிலங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தொழில் துறைகளில் பயிற்சி பெற்றவர்க்கு அவ்வத் துறைகளில் தொழிலாற்றுவதற்கு வேண்டிய கருவிகள் முதலியன ஆண்டு தோறும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. உதவி பெறத் தக்கவர்க்கு வீடுகட்டும் பொருட்டுக் கடனுதவி செய்யப்படுகிறது. சிறு தொழில்-வியாபாரம் தொடங்க வட்டியில்லாக் கடனும் வழங்கப்படுகிறது.

நல்வாழ்வு

அரிசன மக்கள் சுகாதார நல்வாழ்வுக்குச் செய்யப்பட்ட பணிகளுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது அவர்கள் குடியிருப்புகளிலே குடிநீர் பெற வசதி செய்ததைச் சொல்ல வேண்டும். இது தவிர, சாலைகள், பாதைகள், கழிநீர், வடிகால்கள், கண்மாய்கள், சிறுபாலங்கள், குளிக்கும் அறை போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

43 அரிசனக் குடியிருப்புக்களில் இதுவரை 27 குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

வேளாண்மை

ஏர்த் தொழிலுக்குரிய எருதுகள், விதைகள், எரு உரம் முதலியனவும் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

அரிசன மக்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் பல அடிக்கடி மாவட்ட மாநில அளவில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் திட்டம் தென்ஆசியா முழுமைக்கும் பெருமை அளிக்கும்

உலக வங்கியின் துணை இயக்குநர் கிரிகோரி வோட்டா கூறுகிறார்

"தமிழ்நாடு அரசின் குடிசை மாற்றும் பணிகள் ஆசிய நாடுகள் முழுமைக்கும் பெருமை அளிக்கக் கூடியதாகும்.

"உலகத்தின் மறுபக்கத்திலிருந்து இந்த வேலையைப் பற்றி-தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பணிகளைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்போது அப் பணிகளை எனது கண்களால் கண்டு களித்தமையால் பெரிதும் மகிழ்கிறேன்.

"சமூக நீதியில் அக்கறை கொண்டுள்ள எங்கள் அனைவருக்கும் இந்தப் பணி ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

"கிழக்காசிய நாடு அனைத்திலும் இந்தத் திட்டத்தைப் பரப்ப நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

"தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தொடர்ந்த வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்"

—இப்படிக் கூறியவர் யார் தெரியுமா? வாஷிங்டனிலிருந்து வந்திருந்த உலக வங்கியின் தென் ஆசிய துணை இயக்குநர் திரு. கிரிகோரி வோட்டா.

கடந்த 27-11-'71 அன்று சென்னை மாநகரிலுள்ள பல்வேறு குடிசைப் பகுதிகளுக்குக் குடிசை மாற்று வாரியத் தலைமைப் பொறியாளர், மற்றும் அலுவலர்களுடன் சென்று பார்வையிட்டார். அப்பகுதிகளில் குடிசைகளை மாற்றி, மாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டங்களைக் கண்டு, சாதனைகளைக் கேட்டறிந்து தமது மகிழ்ச்சியினைத் தெரிவித்தபோதுதான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



திருமதி பில்ஜெயின் சொல்கிறார்...

நாகரிகம் என்றால் என்ன?''

கருத்துச், சுருண்ட கூந்தலும், செக்கச் சிவந்த நிறமும், நம்பிக்கை ஒளி விடும் விழிகளும், ஆங்கிலமும் தமிழும் சரளமாக அலைபுரளும் இதழ்களுமாக நம் முன்னால் நிற்கின்ற ஒரு பெண்மணிதான் இப்படி ஒரு வினாவை எழுப்புகிறார்.

அதற்கான விடையும் அவரிடத்திலிருந்தே வருகிறது.

"அன்பை, அறநெறியைப் போற்றவேண்டும்; பொறாமை பொச்சரவு இருத்தல் கூடாது! எல்லாருக்கும் எல்லாம் என்றிருப்பதான முறை வேண்டும். இருப்போர் இல்லாதாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்; இந்தக் குணங்களைப் பெற்றதுதான் நாகரிகம் மிகுந்த சமுதாயம். அப்படிப் பார்க்கும் பொழுது, தோதவர் இனம்தான் உலகிலேயே மிகவும் நாகரிகம் மிக்க சமுதாயம் என்பேன்".

திருமதி பில்ஜெயின் (Piljain) அவர்களின் பேச்சிலுள்ள அழுத்தமான உண்மை நம்மை அதிசயிக்க வைக்கிறது!

திருமதி பில்ஜெயினைப் பார்ப்பவர்கள், பிற்போக்கு மிக்க சமுதாயம் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் தோதவர்களின் பிரதிநிதியா இவர் என்று பலர் ஆச்சரியப்படுவர். அவரது தோற்றமும் பேச்சும் உரையாடுவோரின் உள்ளத்தில் தோதவர்களைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தை உருவாக்கிவிடும்.

இவாம் பில்ஜெயின் இளம்வயதில், பள்ளி நாட்களில், ஒருமுறை பிளாரன்ஸ் நைட்டிங்கேல் பாத்திரத்தை ஏற்றார். அவளைப் போலத் தானும் கதியற்றவர்களுக்குத் தன்னலமற்ற சேவை புரியவேண்டுமென்னும் இலட்சியம் இவாமின் மனத்தில் அன்றே பதிந்து விட்டது.

கிறித்துவ மிஷனின் உதவியாலும், அரசினர் ஆதரவாலும், அவர் வேலூரிலும், டெல்லியிலும் உள்ள கல்லூரிகளில் மருத்துவ உதவியாளர் (Nursery and Midwifery) பயிற்சி பெற்றார். பின்னர் இங்கிலாந்தில் உள்ள செயின்ட் பால் மருத்துவ மனையிலும், மருத்துவ உதவியாளருக்கான புகழ் பெற்ற மருத்துவக் கல்லூரி ஒன்றிலும் மேலும் பயிற்சி பெற்றார்.

அவருடைய பயிற்சியின் பயனைத் துய்க்கப் பல நிறுவனங்கள் முன்வந்தன. அவற்றில் உலகச் சுகாதார நிறுவனம் (W.H.O.) ஒன்று. இதனை எண்ணி அவர் மகிழ்ந்திருக்கையில் இடிபோன்ற சேதி ஒன்று தாயகத்திலிருந்து கிடைத்தது. 1939-ஆம் ஆண்டு தோதவர்களின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்த கிரேக்க இளவரசர் பீட்டர் மீண்டும் 1949-ஆம் ஆண்டு அத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தார். தோதவர்களின் எண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட்டதை உணர்ந்தார் அவர். இதற்குக் காரணம், தோதவர்களின் இல்வாழ்க்கை முறையில், தோதவர் பெண்களில் 20 சதவீதம் பேர் மலடுகளாக இருப்பதாகும். ஆண்களில் பெரும்பாலோர் சிபிலிஸ், கொனோரியா போன்ற கொடிய நோய்களுக்கு ஆட்பட்டு அல்லலுறுவதும்தான் என்று கண்டறிந்தார். இவற்றைச் சீர்செய்ய அரசு உடனடியாக முன் வராவிடில் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த தோதவர் குலம் விரைவில் பூண்டற்றுப் போய்விடும் என்று எச்சரித்தார் பீட்டர்.

பீட்டரின் அறிக்கையைக் கண்ணுற்ற பில்ஜெயினின் நெஞ்சம், தான் பிறந்த இனத்தின் அவல நிலையை எண்ணிக் குமுறியது. அவர் இரவு பகல் ஊண், உறக்கமின்றித் துடித்தார். தான் பணி புரிய வேண்டிய இடம்

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெட்

(தமிழ்நாடு அரசுக்கு உரியது)
150-A, அண்ணா சாலை, மத்திய நூலகக் கட்டிடம், சென்னை-2.
(நிறுவனத்தின் நெறியாளர் குழுவினரால் 26-10-71ல் ஏற்கப்பெற்ற விளம்பரத்தின் வாசகம்)

நிறுவப் பெற்ற தேதி : 21-5-1965
பதிவுத் தலைமை அலுவலகம் : மத்திய நூலகக் கட்டிடம், 150-A, அண்ணா சாலை, சென்னை-2.

பொது மக்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து ஆயிரம் ரூபாயோ அல்லது அதற்கு மேற்பட்டு (ஆயிரக் கணக்கில்) செலுத்தப்படும் டிபாசிட் தொகைகளை இத் தொழில் நிறுவனம் கீழ்க்கண்ட வருடாந்திர வட்டி விகிதங்களில் ஏற்றுக்கொள்ளும்.

ஓர் ஆண்டும் அதற்கு மேலும் ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குள்	9%	இரண்டு ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும்	9½%

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி கொடுக்கப்படும்

நெறியாளர்கள் குழு:

திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்
தொழில் துறை,
தமிழ்நாடு அரசு — தலைவர்

திரு. எஸ். வெங்கிட்டரமணன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்
நிதித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஆர். நடராசன், ஐ.ஏ.எஸ்.,
சிறப்புச் செயலாளர்,
பொதுப் பணித்துறை,
தமிழ்நாடு அரசு — நெறியாளர்

திரு. ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்.,
தலைவர் & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறு தொழிற் வளர்ச்சி
நிறுவனம், சென்னை. — நெறியாளர்

திரு. சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்.,
நெறியாளர்
தொழில்-வணிகத்துறை,
சென்னை. — நெறியாளர்

திரு. பி. சிவலிங்கம்,
பி.இ., (ஆனர்ஸ்)
தொழில் நுட்பக் கல்வி நெறியாளர்,
சென்னை. — நெறியாளர்

திரு. ஜி. துவாரகாநாதன்,
ஐ.ஏ., ஐ.ஏ.எஸ்.,
— நெறியாளர் (நிதி)

திரு. டி. எஸ். விஜயராகவன்,
ஐ.ஏ.எஸ்.,
— நிர்வாக இயக்குனர்

கம்பெனி மேற்கொண்டுள்ள அலுவல்கள் :

(A) தமிழக அரசுக்கு சொந்தமான தொழிற்கூடங்களை நிர்வகித்தல்
தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம், எஃகு தொடர்பு வார்ப்பு ஆலை, அரக்கோணம்.

(B) கூட்டுத் துறையில் தொழில்களை துவங்க ஊக்குவித்தல்.
தூத்துக்குடி உர ஆலை, ஹைட்ரோ சல்பைட் ஆலை,
ஆட்டோமோபைல் டயர் & டியூபுகள், சிகரெட்டுகள் முதலியன.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை 5-2-70ல் உற்பத்தியை துவக்கியுள்ளது. இந்தத் தேதிக்கு முன் செய்யப்பட்ட செலவுகள் எல்லாம் மூலதனத்தோடும், தொழிற்சாலை கட்டுமானச் செலவுகளுடனும் சேர்க்கப்பட்டுள்ளன.

1970—71ல் நஷ்டம்: ரூ. 78,80,009
அறிவிக்கப்பட்ட பங்கு வீதம் : ஒன்றுமில்லை

	(லட்சத்தில்)
செலுத்தப்பட்ட மூலதனம் (31—3—71ல் உள்ளபடி)	ரூ. 686.74
அரசு வழங்கிய கடன் ,,	ரூ. 444.33
ரிசர்வ் தொகை ,,	ரூ. Nil
கடன் பத்திரங்கள் மூலம் (Debentures) ,,	ரூ. 75.00
ரொக்க கடன் ,,	ரூ. 75.00
அதிகப்பற்று (Overdraft) ,,	ரூ. Nil

விண்ணப்ப நமூனுக்களுக்கும் விதிமுறைகளுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தாருக்கு (டிபாசிட் பிரிவு), 150-A, அண்ணா சாலை, சென்னை 2-க்கு எழுதிக் கேட்கவும்.

உதகைதான் என்ற முடிவுக்கு வந்து தாயகம் நோக்கி வந்து விட்டார். அது முதல் தம் வாழ்க்கையைத் தோதவர்களின் முன்னேற்றத்திற்காக பில்ஜெயின் அர்ப்பணித்து வருகிறார். மருத்துவ உதவிகளைத் தன்னுடைய செலவிலேயே புரிந்ததால் கைப் பொருள் சின்னாளில் கரைந்து விடவே, 1955-ஆம் ஆண்டு பண்டித நேரு தமிழகம் வந்திருந்த போது அவரைச் சந்தித்தார் பில்ஜெயின். அவருடைய விடா முயற்சியையும், தளரா ஊக்கத்தையும், தன்னலமற்ற உள்ளத்தையும், பாராட்டிய பண்டிதர் மலைவாழ் மக்களின் மருத்துவ நலனுக்காகத் தமிழகஅரசு அளித்திருந்த நடமாடும் மருத்துவப் பிரிவிற்குத் தலைமை மருத்துவ ஊழியர் (Head Nurse) பணியை அவருக்கு அளிக்க ஏற்பாடு செய்தார்.

தோதவர்களின் சில பழக்கங்களுக்கு மாறாக அவர்களுக்கு மருத்துவ உதவியளித்தல் என்பது எளிதல்ல. ஆனால் தோதவர்களின் அளவற்ற நம்பிக்கையைப் பெற்ற பில்ஜெயின் அவர்களிடையே சுழன்று பணியாற்றி வருகிறார். தாயைச் சுற்றிச் சேய்கள் கூடுவது போல் தோதவர்கள் அவர் செல்லும் இடத்திலெல்லாம் அவரை மொய்த்துக்கொள்வதைக் காணலாம்.

ஒரு முறை பில்ஜெயின் சகோதரிக்குப் பிள்ளைப் பேற்றுக் காலம் நெருங்கியபோது அவர் அபாயமான நிலையில் இருந்ததை அறிந்த பில்ஜெயின் மருத்துவ மனைக்குக் கொண்டுவந்து விட்டார். அதனை அறிந்த அவளுடைய கணவன் ஆத்திரமடைந்து, மருத்துவ மனைக்கு வந்து கதவுகளை எல்லாம் நொறுக்கி விட்டுப் போய்விட்டான். பில்ஜெயின் சகோதரியின் உடல்நிலை இருந்தத் தன் இரத்தத்தை அளித்தார்; என்றாலும் அவசரமாக ஓர் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அதற்கு அவளுடைய கணவனின் அனுமதி வேண்டும். தோதவர் குலத்து ஆண்களும், செல்ல அஞ்சுகின்ற காட்டு வழிப்பாதையில் இருளில் தன்னந்தனியாகச் சகோதரியின் கணவனை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய அஞ்சா நெஞ்சம் சகோதரியின் கணவனின்

> ## மலையைத் தோண்டினால்
>
> நீலகிரி மலைகளில் கிடைக்கும் முக்கியமான கனிப்பொருட்கள்:—
>
> அலுமினியம் தயாரிப்பதற்குப் பயன்படும் பாக்சைட்; தரமான கனியன், மைகா, இரும்புத்தாது ஆகியவை ஆகும்.
>
> கோத்தகிரி, உதகை ஆகியவைகளின் சுற்றுப்புறப் பகுதிகளிலும் இந்த இரண்டு இடங்களுக்கும் இடையில் உள்ள பகுதிகளிலும் சுமார் 16 அடி ஆழத்தில் பாக்சைட் படிவங்கள் உள்ளன.
>
> கூடலூர், தேவங்கோடு பகுதியில் தரமான மைகா உள்ளது. ஆனால் சுரங்கத்தில் நீர்க்கசிவின் காரணமாக இதை அதிகம் பயன்படுத்த இயலவில்லை.
>
> இடப்பள்ளி, இல்லித்துறை, கொள்ளிமலை, தொட்டபெட்டா, உதகை முதலிய பகுதிகளில் 22 இலட்சம் டன் இரும்புக்கனி கிடைக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மனத்தைக் கரைத்து விட்டது. தன் மனைவியின் மீதும், அவளைப் போன்ற மற்ற தோதவர் குலச் சகோதரிகள் மீதும் பில்ஜெயினுக்கு உள்ள அன்பின் ஆழத்தை அவன் புரிந்துகொண்டு அனுமதி அளித்தான். இரண்டு உயிர்கள் அன்று பிழைத்துப் பில்ஜெயினுக்கு நன்றி கூறின.

மனிதர்களிடத்துமட்டுமின்றிப் பிராணிகளிடத்திலும் ஆதரவு காட்டுபவர் பில்ஜெயின்.

> ## முட்டை கோசு கிலோ 10 காசு!
>
> நீலகிரி மாவட்டத்தில் முக்கிய அறுவடைப் பருவக் காலங்களில் முட்டைக் கோசு போன்றவை கிலோ 10 காசுக்கு விற்கப்படுகின்றன. எனவே இந்த வகைப் பொருட்களை, தொழில்களுக்குப் பயன்படுத்தவும், உலர்பதனம் செய்து பயன்படுத்த ஏற்ற தொழில்களைத் தொடங்கவும் நல்ல வாய்ப்பு உள்ளது.

நாங்கள் சென்ற சமயம், கையில் அழகியதோர் அணிற் குஞ்சினை வைத்துக் கொண்டு சிறிய ஃபில்லரினால் அவர் உணவூட்டிக் கொண்டிருந்தார்.

மருத்துவத் துறையோடு பில்ஜெயினின் பணிகள் நிற்கவில்லை. தோதவர்களின் சமுதாய முன்னேற்றத்திற்கும் அவர் பல வகைகளிலும் பாடுபடுகிறார். தோதவர் குலத்து இளைஞர்களின் மேற்படிப்புக்கான வழிவகைகள் முதல் தோதவர் வளர்க்கும் எருமைகள் எங்காவது தவறி மேய்ந்து விட்டால் ஏற்படும் தொல்லைகளிலிருந்து அவற்றை விடுவிப்பது வரை பல சிக்கல்கள், தீர்வுக்காக இவரை நாடி வருகின்றன.

பில்ஜெயின் கிறித்துவ மத நெறியைத் தழுவியவர். ஆனாலும் தோதவரின் பண்பாடுகளைப் பற்றிப் பேசும்பொழுது இவரது விழிகள் சுடர் விடுகின்றன. எம்முடைய இனத்திற்கு நிகர் எவருமில்லை என்ற எக்காளம் பேச்சிலே தெரிகிறது.

தோதவர்களைப் பற்றி எத்தனையோ பேர் ஆராய்ச்சிகள் நடத்தி வந்திருக்கிறார்களல்லவா? அதைப்பற்றி பில்ஜெயின் சற்றுப் பெருமைப்படுவார் என்று எண்ணினோம். ஆனால், எல்லாரும் எல்லாவற்றையும் சரியாக எழுதி விடவில்லை என்ற வருத்தம் பில்ஜெயினுக்கு இருக்கிறது. சிலர் விபரீதமான முறையில் தோதவர்களைப்பற்றி எழுதி விடுகிறார்களாம்.

"அரசு, தோதவர்களின் முன்னேற்றத்திற்காக ஆற்றி வரும் பணிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டோம்.

"தோதவர் இனமே அழிந்து விடுமோ என்று நாங்கள் அஞ்சிய காலத்தில், மருத்துவ உதவி புரிந்து இந்த இனத்தை மீட்ட அழிவின் பிடியிலிருந்து மீட்ட அரசாங்கத்தின் பணியினை நாங்கள் எப்படி மறக்க முடியும்?"

நன்றி யுணர்வுடன் நாதழுதழுக்க பில்ஜெயின் கூறும் பதில் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது.

யும் வேற்பிரித்தறிவது
கடினமானதால், நாங்கள்
களையை மட்டும் ஒழிக்கும்
ஸ்டாம் F-34
தயாரித்திருக்கிறோம்



இன்றே — —! அந்த மலர் மலைக் குன்றுகளாகவே அவள் முட்டுகள் அத்தனையுமே எரி வி..களுக்குத் தெரிந்தன.

"உள்ளிருப்பு வேலை நிறுத்தம்" என்கிறார்களே, அப்படித்தான் உள்ளத்தில் எழும் எண்ணங்களும் சில சமயம் ஓட்டமின்றி மரத்துப் போகின்றன; சவம்போல விறைத்தும் விடுகின்றன. சவங்களுக்கு எப்போதுமே பளு அதிகம் அல்லவா?

அத்தகைய மனச்சுமையின் பளுவைத் தாங்கமுடியாமல்தான் தேன்மொழியும் இப்போது தவியாய்த் தவித்தாள்.

அவளால் ஓரிடத்தில் உட்காரவே முடியவில்லை. அறையினுள்ளேயே அங்கும் இங்குமாய் உலவினாள்; சன்னலருகே சென்று கீழேயும் எட்டிப் பார்த்தாள்.

'பூங்கா நகரம்' (Garden City) என்னும் புகழுக்கு ஏற்பவே மைசூரின் அந்த அகலமான சாலை அழகு மிளிர நீண்டு சென்றது. அதன் இரு

11. உணர்ச்சிக் குழந்தை

மருங்குகளிலும தேர்ச் சப்பரம் போலச் செழிப்பாக வளர்ந்திருந்தன மரங்கள்; அவற்றில் ஒன்றிரண்டுதான் இலைகளோடு தென்பட்டன; மற்றவை எல்லாம் இலைகளே இல்லையோ என்னும்படி ஒரே மலர்க் கோபுரங்களாகவே பூப்பந்தல் விரித்திருந்தன.

செந்நிற ஆப்பிள் பழங்களும் மஞ்சள் வண்ண ஆரஞ்சுப் பழங்களும் முட்டு முட்டாகக் குவிந்து கிடப்பது போலச் சில மரங்களில் சிவப்புப் பூக்களும், சில மரங்களில் மஞ்சள் பூக்களும் மாறி மாறிக் காட்சி அளித்தன.

வேறொரு சமயமாக இருந்திருந்தால், 'இவ்வளவு பெரிய தஞ்சாவூர்க் கதம்பம் இப்படித் தரையிலே விழுந்து கிடக்கிறதே!' என்று வியந்து போயிருப்பாள் தேன்மொழி.

சு. மனோமலையான்

அதற்குக் காரணம் மாதவனின் நாட்குறிப்புத்தான்.

குளிர்நீர் என்று கைவைக்கப் போக, அதுவோ கொதிநீராகவே கையைக் கொப்புளிக்கச் செய்து விட்டால் எப்படி இருக்கும்?

அந்த நாட் குறிப்பை ஏன்தான் படித்தோம் என்று ஆகிவிட்டது தேன்மொழிக்கு.

'......இவர் எழுதியதையெல்லாம் நான் படிக்காமலே இருந்திருக்கக் கூடாதா?.... இவருடைய குடும்பத்தைப் பற்றி—குறிப்பாக, இவருடைய அக்காளைப்பற்றி—நான் தெரிந்து கொள்ளாமலே இருந்திருக்கக் கூடாதா?'

—புழுங்கி வெந்தது அவளுடைய பூப்போன்ற நெஞ்சம்.

அதே சமயம், மாதவனின் எழுத்துக்களிலே ஓர் ஒப்பில்லாத 'நேர்மை' ஒளி வீசுவதையும் அவள் உணராமல் இல்லை.

அவன் நினைத்திருந்தால் தன்னைப்பற்றிய எல்லாத் தகவல்களையுமே, சோற்றுக்குள் புதைத்து வைத்த முட்டையாகவே மூடியிருக்கலாம். தான் மேட்டுக் குடியிலே பிறந்ததாகவும் பெருமை அடித்திருக்கலாம்; மெத்தையிலே புரண்டதாகவும் பீற்றியிருக்கலாம்; தனக்கு முன்னே ஒரு தமக்கை பிறந்தாள் என்றே எழுதாமலும் விட்டிருக்கலாம்; அப்படியே பிறந்ததை ஒப்புக்கொண்டாலும் அவள் எப்போதோ இறந்துவிட்டாள் என்றும் சாதித்திருக்கலாம்.

மாதவனோ......? அம்மாதிரி அற்பத்தனமான பொய்களையே ஆடைகளாக அணிந்துகொண்டு தன்னை அற்புதமான மனிதனாகக் காட்டிக்கொள்ள அவன் அணுவும் விழையவில்லை; அதன்மூலம் தனக்காக உயிரையே தரத் தயங்காத தேன்மொழியையும் அவன் வஞ்சிக்க நினைக்கவில்லை.

பொய்மைகளால் கட்டப்பெறும் புழுதி மாளிகை எவ்வளவு காலத்திற்குத்தான் நிலைகுலையாமல் நிமிர்ந்து நிற்க முடியும்? அது சரிந்து சிதைவதற்குப் புயலா வீச வேண்டும்? சாதாரணப் பூங்காற்றே போதாதா?

அதனால்தான், தன வாழ்க்கைப் பாதையிலே அதுகாறும் ஏற்பட்டுவிட்ட பள்ளம்—படுகுழிகளை—ஒளிவு மறைவு எதுவுமின்றித் தன் நாட்குறிப்பிலே வெளிப்படையாகவே எழுதிக் காட்டியிருந்தான் மாதவன்.

அவனுடைய எழுத்துக்களில் ஒளிர்ந்த அந்த 'நேர்மை' தேன்மொழியின் இதயத்தைக் கவர்ந்தது என்னவோ உண்மைதான்; ஆனால், அதேவேளையில் தொண்டையில் சிக்கிக்கொண்ட மீன் முள்ளைப்போல, இன்னொரு நினைவும் வந்து அவளது நெஞ்சை நெருடாமல் இல்லை.

'......இவருடைய அக்காளுக்கு அப்படியொரு கொடிய நோய் ஏன்தான் வந்ததோ, பாலிலே தேள்விழுந்த மாதிரி......அப்பப்பா எவ்வளவு பெரிய பயங்கரம்! அவளோடு ஒரே தாய் வயிற்றில்—ஒரே உதிரத்தில்—பிறந்தவர்தாமே இவரும்?........ ஒருவேளை இவருக்கும் தன் அக்காளைப் போலவே......?'

—அதற்குமேல் கற்பனையே செய்ய முடியவில்லை தேன்மொழியால்.

நெஞ்சுக் கூடே விண்டு வெடித்து விடும்போல் விண்விண் என்று தெறித்தது.

கண்களிலும் நீர் துளிர்த்து விட்டது.

சன்னலோரத்தில் நின்று முன்போல வீதியின் அழகை—அங்கே சுறுசுறுப்பாகப் பறந்துகொண்டிருக்கும் மனிதர்களை—வண்டி, வாகனங்களை—அவளால் பொறுமையோடு வேடிக்கை பார்க்கவே முடியவில்லை. அவளது கொடியுடல் முழுவதுமே தடதடவென்று ஆடிற்று.

படுக்கையில் வந்து 'பொத்' தென்று விழுந்து விட்டாள் அவள்.

சிறிது நேரம் சென்று, குப்புறப் படுத்துக்கொண்டிருந்த அவளது கரம், படுக்கையை ஒட்டியே கிடந்த சிறு மேசையில் இருந்த (கைகளில் எடுத்துச் செல்லக்கூடிய) சிறு வானொலிப் பெட்டியைத் திருகி விட்டது. அதுவோ........?

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா!

ஆறடி நிலமே சொந்தமடா!'

—உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் அந்த உருக்கமான திரைப்படப் பாடல் தேனாக ஒலித்தது கணீரென்று.

அந்தப் பாட்டைக் கேட்கக் கேட்க, தன்னுடைய வாழ்வும் உடனே அப்படி ஆடி அடங்கிவிடாதா என்று ஏங்கியவளைப் போலக் குலுங்கிக் குலுங்கி அழுதாள் அந்த அப்பாவிப் பெண்!

• • •

புகைவண்டி நிலையத்திற்குத் தன் நண்பன் அமலனைப் பார்க்கச் சென்றிருந்த மாதவன் திரும்பி வருவதற்குச் சற்று நேரமே ஆயிற்று.

அவன் தேன்மொழியின் அறைக் கதவைத் தட்டிய போது அது தானாகத் திறந்துகொண்டது.

தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தன் காதலி முடங்கிக் கிடக்கும் அவல நிலையைப் பார்த்து மாதவனுக்கே இரக்கமாகத்தான் இருந்தது.

அவன், அவள் அருகே சென்று தோளைத் தொட்டான் உரிமையோடு.

அவள் அடுத்த கணமே எழுந்து விட்டாள் சரேல் என்று.

"தூக்கத்தைக் கெடுத்து விட்டேனா?"—முறுவலித்தவாறே கேட்டான் மாதவன்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை"—என்றவாறே நழுவிக் கிடந்த புடவைத் தலைப்பைச் சரிசெய்து கொண்டாள் தேன்மொழி.

"நேற்று நாம் போட்டிருந்த திட்டப்படி இந்நேரம் நாம் எங்கே இருக்க வேண்டும் தெரியுமா?"

"எங்கே?"

"சகன்மோகன் அரண்மனை ஓவியக் கூடத்தில்"

"ஓ!"

"என்ன, 'ஓ' என்று உற்சாகம் இல்லாமல் கொட்டாவி விடுகிறாய்? நாம் உடனே புறப்பட வேண்டாமா?"

"நீங்கள் மட்டும் போய்ப் பார்த்து விட்டு வாருங்களேன்!"

"என்ன தேன்மொழி அப்படிச் சொல்லிவிட்டாய்? நான் அங்கே போக வேண்டும் என்று திட்டமிட்டதே உனக்காகத் தானே! அதுவும், கும்மிருட்டில் அகல் விளக்கை ஏந்தி, அது காற்றினால் அணைந்து விடாதபடி கையினால் மறைத்துச் செல்கிறாளே அந்த அழகியின் ஓவியத்தை உனக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தானே!"

தேன்மொழியோ மறுமொழி ஏதும் கூறாமல் சன்னல் வழியே வெண்முகில் மிதந்து செல்லும் விண்வெளியையே வெறிக்கப் பார்த்தாள்.

'............என்னுடைய வாழ்க்கை விளக்குக்கூட இப்போது காற்றிலே ஆடிக்கொண்டுதான் இருக்கிறது!—'

—அவளுடைய நெஞ்சினுள் என்னென்னவோ நினைவுகள் எல்லாம் அலை பாய்ந்தன.

"என்ன தேன்மொழி, ஒன்றுமே பேசாமல் இருக்கிறாய்! ஓவியக் கூடத்துக்குப் போவோமா வேண்டாமா?"

—அவளது அமைதியைக் கலைத்தான் மாதவன்.

"வேண்டாங்க; எனக்கு ஒரே அலுக்கையாக இருக்கிறது."

"அலுக்கை உடம்புக்கா? இல்லை, உள்ளத்துக்கா?" சிரித்துக்கொண்டே கேட்டான் அவன்.

தேன்மொழி அவனுக்கு விடையேதும் சொல்லவில்லை.

"ஆமாம், கேட்க மறந்து விட்டேனே! நான் எழுதியிருந்தேனே அதைப் படித்து விட்டாயா?"

"ம்"

"அதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?"

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது? ஆனால், எதையுமே ஒளிக்காமல் நடந்தது நடந்தபடியே எழுதியிருக்கிறீர்கள்"

"இப்போதாவது, நான் என் நிதானத்தை இழந்து அந்தக் கன்னடக்காரியைத் துரத்திக்கொண்டு ஓடினேன் என்பது உனக்குப் புரிகிறதா?"

"ம்"

"என்ன தேன்மொழி, இது! உன் குரலிலே வழக்கமான உணர்ச்சியே இல்லையே! என்னவோபோல் இருக்கிறாயே!".

—தன் நெஞ்சிலிருந்த சுமையை எழுத்துக்களாக இறக்கி வைத்துவிட்டதால் கலகலப்பாகப் பேசினான் மாதவன்.

ஆனால் அதே சுமை இப்போது தேன்மொழியின் நெஞ்சுக்கல்லவா குடிபெயர்ந்து விட்டது? அவளால் எப்படி அவனைப் போலக் கலகலப்போடு பேச முடியும்?

பெருமூச்செறிந்தவளாக,

"இன்றைக்கே சென்னைக்குக் கிளம்பி விடுவோமே! இத்தனை நாட்களாக அப்பாவின் முகத்தைப் பார்க்காமல் இருப்பது மனத்துக்கு என்னவோபோல் இருக்கிறது!"

—என்று வறட்சியாகச் சிரித்தாள் தேன்மொழி.

"சாமுண்டீசுவரி கோவில், சீரங்கப்பட்டினம் இங்கெல்லாம் போகவேண்டும் என்று சொன்னாயே?"

"இன்னொரு முறை வரும்போது பார்த்துக் கொண்டால் போகிறது! இப்போது புறப்பட்டு விடுவோம்"

—அவளுடைய குரலில் ஒலித்த அழுத்தத்தைக் கொண்டு அவளுடைய மன நிலையைப் புரிந்து கொண்டு விட்டான் மாதவன்.

அன்றைக்கு மதிய உணவு முடிந்தவுடனேயே ஓய்வு கூட எடுத்துக் கொள்ளவில்லை; இருவரும் மைசூருக்கு விடை கொடுத்துவிட்டுச் சென்னையை நோக்கிக் கிளம்பிவிட்டனர்.

முன்பு மைசூருக்கு வந்த பொழுது முன்னிருக்கையில் மாதவனோடு ஒட்டித்தான் உட்கார்ந்திருந்தாள் தேன்மொழி அவனுடைய தோளை—கழுத்தை—தொட்டுக் கொண்டும் வந்தாள் உற்சாகமாக.

இப்போதோ—

தலையை வலிக்கிறது என்று சொல்லிப் பின்னிருக்கையிலே போய்ப் படுத்தேவிட்டாள் அவள்.

• • •

சென்னைக்குத் திரும்பிய தேன்மொழிக்கும் மாதவனுக்கும் சில நாட்கள் தொடர்ந்து ஓய்வே கிட்டவில்லை; வெற்றி விழாக்களும் விருந்துகளும் அவர்களைத் தெவிட்டிப் போகும் அளவுக்குத் திணற அடித்தன.

'டேபிள் டென்னிஸ்'-ஆட்டப் பந்தயத்திலே மற்ற மாநிலங்களையெல்லாம் மண்டியிடச் செய்து தமிழ்நாட்டின் தனிப்பெருமையைத் தலைநிமிரச் செய்துவிட்டார்கள் அல்லவா? அந்த உற்சாக வெறியிலேதான், விளையாட்டுப் பந்தயங்களிலே ஈடுபாடு கொண்ட நண்பர்களும் நல்லெண்ணம் கொண்டவர்களும் அவர்களைத் திக்குமுக்காட வைத்தனர் பாராட்டு மழையிலே நனைய விட்டு.

இவ்வாறு சிரிப்பும் விளையாட்டும் புகழும் பூமாலையுமாகப் பொழுது போய்க் கொண்டிருந்தாலும் தேன்மொழியின் மனம் மட்டும் தங்கள் குடும்ப டாக்டர் பூங்கொடியைத் தனித்துச் சந்தித்து உள்ளந்திறந்து உரையாடுவது பற்றியே எந்த நேரமும் எண்ணிக் கொண்டிருந்தது.

அவளோ அப்போது சென்னையில் இல்லை. விடுமுறையில், தெற்கே எங்கோ தன் சொந்த ஊருக்குப் போய்விட்டாளாம்.

இதற்கிடையில், பேரின்பமுத்தும் முக்கியமான பொறுப்புகளையெல்லாம் முன்பு கூறியவாறே, படிப்படியாக மாதவனிடம் ஒப்படைத்து வந்தார். தம்முடைய பரந்த நிறுவனத்தினிலும் உள்ள பல்வேறு அங்கங்களைப் பற்றிய அந்தரங்கச் செய்திகளையும் அவனிடம் ஒன்றுவிடாமல் கூறினார். தொழில் நுணுக்கங்கள் — வணிகத் தொடர்புள்ள சில 'மூடு மந்திரங்கள்',— வருமானவரி அதிகாரிகளின் கண்ணிலே மண்ணைத் தூவுவதற்குத் தேவையான சில 'கறுப்பு—வெள்ளை'க் கணக்குகள் சில பொருளாதாரச் செலாவணி 'முடிச்சுகள்'— அவற்றை அவிழ்ப்பதற்குரிய 'வழி, துறைகள்'—எல்லாவற்றையுமே அவனிடம் அவர் ஒளிக்கவில்லை.

மாதவனுக்குக் கூட அவற்றையெல்லாம் கேட்டுத் தன் மனத்திலே பதிய வைத்துக் கொள்வதற்குச் சற்று அலுப்பாகவே இருந்தது.

'எங்கோ வெளிநாட்டுக்குப் பயணம் போகிறவர் போலவும், அங்கேயே தங்கிவிடப் போகிறவர் போலவும் எதற்கு நம்மிடம் எல்லாவற்றையுமே சொல்கிறார்?'—என்றும் அவன் எண்ணினான்.

ஆனால், இரண்டே வாரங்களில் அவனுடைய எண்ணமே பலித்து விடுவது போன்ற நிலைமையே உருவாகி விட்டது.

ஆம்; பேரின்பமுத்து உடனடியாகச் சிங்கப்பூர் செல்ல வேண்டியவர் ஆகிவிட்டார்.

அங்கேயும் அவருக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று பொன்முட்டையிடும் வாத்தாக வளர்ந்து கொண்டிருந்தது.

சொல்லப் போனால், அவர் பாடத் தொடங்கிய தொழில் துறைப் பாட்டுக்கு அந்தச் சிங்கப்பூர்க்கடைதான் 'பல்லவி' ஆகும். அதிலிருந்து கிடைத்த அளவில்லாத இலாபமே தமிழகத்திலும் ஒரு நிறுவனத்தைத் தோற்றுவிப்போமே என்கிற துணிச்சலைக் கொடுத்தது அவருக்கு.

அந்த வெளிநாட்டு விற்பனை நிலையத்தைப் பொறுப்போடு கவனித்துக் கொண்டிருந்த அவரது தூரத்து உறவினர் திடீரென்று சில வன்முறையாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டாராம்; தந்தி வந்தது.

அதனால்தான் உடனே அங்கே பறந்து செல்ல வேண்டியதாயிற்று பேரின்பமுத்துக்கு.

விமானத்தில் ஏறுமுன் அவர் உரைத்த சொற்கள் மாதவனின் மனத்தை அப்படியே பாகாக உருக வைத்து விட்டன.

'' .. .. — .. .. .. மாதவா! நமக்கு என்று ஓர் ஆண்பிள்ளை இல்லாமல் போய் விட்டதே என்று சில நாட்களாக நான் ஏங்கியது உண்டு; ஏன், அழுததும் உண்டு. ஆனால் .. — .. .. உன்னைப்போல ஒரு நல்லபிள்ளை—நாணயமான பிள்ளை—எனக்கு உற்ற துணையாக வாய்க்க வேண்டும் என்பதற்காகத்தான் எனக்கு ஓர் ஆண்பிள்ளை தரிக்காமல் போனதோ என்று இப்போது நினைக்கிறேன். நீ காப்பாற்றி விடுவாய் என்கிற நம்பிக்கையில்தான் என் சொத்துக்களை. மட்டுமல்ல, தேன்மொழியையும் உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். தேன்மொழி......அது ஒரு குழந்தை! வெறும் உணர்ச்சிகளால் மட்டுமே ஆன குழந்தை துன்பம் என்றால் என்னவென்றே அவளுக்குத் தெரியாது. சாதாரண எறும்பு கடித்தாலே கருந்தேள் கொட்டிவிட்டதைப் போலக் கத்தக் கூடியவள். இனி அவளுடைய வாழ்வு—தாழ்வு எல்லாமே உன் கையில்தான். சிங்கப்பூர் செல்கிற நான் திரும்பித்தான் வருவேனோ, இல்லை, என் சொந்தக்காரரைப் போல அங்குள்ள குண்டர்களுக்குத் தீனியாகத்தான் ஆவேனோ? எதுவானாலும் இனி எல்லாமே உன் பொறுப்புத்தான்!—கூறி வரும் பொழுதே பேரின்பமுத்தின் குரல் தழு தழுத்தது; கண்ணீரும் தாரை தாரையாக வழிந்தது.

மாதவனுக்கும் விழிகள் கலங்கி விட்டன.

தேன்மொழியோ ... ... தேம்பித்தேம்பி அழுதே விட்டாள். தன் தந்தையைச் சுமந்து செல்லும் விமானம் வெகு தொலைவுக்கு அப்பால் மறைந்தபிறகும் கூட, அவளால் நிறுத்தவே முடியவில்லை அழுகையை.

* * *

விமான நிலையத்திலிருந்து தேன்மொழியும் மாதவனும் பிளைமவுத் காரில்தான் ஒன்றாகத் திரும்பிவந்தார்கள். எனினும் இருவருக்குமிடையே எந்த விதப் பேச்சோ, வார்த்தையோ, ஏன், பார்வையோ கூட இல்லை!

ஆனால் வீட்டில் நுழைந்த போதோ .... முன் கூடத்தில் கிடந்த சோபாவில் அமர்ந்து நாளிதழ் ஒன்றை விரித்துப் படித்துக்கொண்டிருக்கும் டாக்டரைக் கண்டதும் ஒரே உற்சாகத்துடன் உரக்கக் கூவலானாள் தேன்மொழி:

'' வாங்க, டாக்டர்! எப்போது வந்தீர்கள் ஊரிலிருந்து? உங்களைத் தேடி எத்தனை தடவை நான் அலைவது?''

'' ஆமாம், அப்படியென்ன முக்கியமான செய்தி?''—முறுவலுடன் கேட்டாள் பூங்கொடி.

'' அதுவா? வாருங்கள் மாடிக்குப் போவோம்; தனியாகச் சொல்கிறேன்.''

(வளரும்)



இன்னி வரும்வேளேத் தோள்தாங்கிக் கையிரண்டில்
அன்னிச் செருக்கழித்த அஞ்சார்முன் ;—தள்ளாடிப்
போருக்கு வந்திட்ட புல்லனை ஓட்டிடவே
வீரர் எழுக விரைந்து.

உடுமலே அர. தமிழ்ச்செல்வன், உடுமலே.

ஆகா ! முரசொலிகேள் அன்பே ! விடைதருக
நாகாவான் வீழ்த்த நானெழுந்தேன்—சாகார்யார் ?
போரெடுத்து மாண்டேனும் பொன்னுட்டைக் காப்பவரே
வீரர் எழுக விரைந்து.

புலவர் வள்ளிவேலன், திருப்பத்தூர்.

சாதிச் சழக்குகளேத் தீச்சமயச் சண்டைகளே
நீதி வழுவும் நெறிகேட்டை—மோதியுமிழ் !
வேரதிர வீழ்த்து ! விளேவுநன் ருக்கிடும்
வீரர் எழுக விரைந்து.

ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம்.

ஆயுதத்தைத் தாங்கி அரும்போர் புரிபவரே
தேயமுறு வீரர்எனச் செப்பாதே—சாயாத
தீரர் உளமெதையுந் தாங்குந் திறமறியும்
வீரர் எழுக விரைந்து.

சு. காந்திமதி, மதுரை-9.

போர்என்ருல் புன்முறுவல் பூத்திட்ட நற்றமிழீர் !
கூர்புயலால் இந்நாட்டைக் கொள்ளுதற்குச்—சீர்அற்ற
ஆரவாரப் பாகிஸ்தான் ஆசையுடன் எண்ணுவதால்
வீரர் எழுக விரைந்து.

சு. ம. சுப்பிரமணியன், மதுரை-18.

சிங்கமுன் சிற்றெலியாய்த் தீச்சுடர்முன் வைக்கோலாய்ப்
பொங்கும் எரிமலைமுன் பூநீராய்—இங்குவந்து
போரெடுத்துப் பார்க்கிறது பொல்லாத பாகிஸ்தான் ;
வீரர் எழுக விரைந்து.

ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

வஞ்சியுடன் கொஞ்சியும் வம்பளந்து பேசியும்
வஞ்சித்து வாழ்ந்ததெலாம் போதுமே !—துஞ்சிடவும்
நேரம் இனியில்லை நெஞ்சில் துணிவுள்ள
வீரர் எழுக விரைந்து.

கு. பிரான்சிஸ், சென்னை-11.

மங்காப் புகழ்நூற்கள் மக்களுக் கிந்நாளில்
பொங்குதமிழ்ப் பாவலரே போதாது—சங்கம்போல்
தீரறிவு கொண்ட திருநூற்கள் யாத்திடப்பா
வீரர் எழுக விரைந்து.

வெ. சுப்பிரமணியன், சென்னை-5.

செங்குருதி நீராகச் செத்தார் கரையாகப்
பொங்கும் நிணத்தாறுய்ப் போவதுவோ ?—வங்கத்தான்
போராடிச் சாகுமுன் போய்க்காக்க இந்திய
வீரர் எழுக விரைந்து.

பாவெழிலன், பெரம்பலூர்.

சாவோ ஓர்முறைதான் ; சாற்றுங்கால் நோயுற்றுப்
போவோர் புகழின்றிப் பொல்லாங்கு—போவதற்குப்
போராடிப் பொன்றுங்கால் பொன்னுலகு பெற்றிடுவீர்
வீரர் எழுக விரைந்து.

மு. காளத்தி, பி.ஏ., சென்னை-52.

பஞ்சத்தை நோயைப் படையெடுப்பை மாற்றலரின்
வஞ்சத்தைத் தூளாக்கி வாகைபெற—நெஞ்சத்தில்
வாரமுடன் தன்மானம் மண்டிடும் பற்றுடைய
வீரர் எழுக விரைந்து.

சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

உழுவார் விதைப்பார் உயர்தொழில்கள் செய்வார்
அழுவார் உழைப்பினை அள்ளிக்—கொழுப்பார்நெஞ்
சீரமே அற்றவர் இந்நிலையை மாற்றிட
வீரர் எழுக விரைந்து.

அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

சிங்கத்தை வெல்லச் சிறுநரி நின்றதுபோல்
பங்கமுற வந்த பகைவருடன்—மங்காமல்
தீரமுடன் நின்று திருநாட்டைக் காப்பதற்கு
வீரர் எழுக விரைந்து.

அரு. மதிவாணன், திருச்செங்கோடு.

ஆண்டவனைத் தேன்தமிழில் வேண்டுதல் தீதென்றும்
மாண்டமொழி ஆரியந்தான் மாண்பென்றும்—ஈண்டுசிலர்
தீரமுடன் செப்புகின்ருர் செந்தமிழைக் காப்பதற்கு
வீரர் எழுக விரைந்து.

குழ. அண்ணுமலே, கோவை.

சிங்கத்தாய் நாடே சிறியோர்க்கு ஞாபகம்செய்
'வங்கம்' நமதங்கம்' மண்ணுலகில்—செங்களத்துப்
போரில் பகைவென்று பூமாலை சூடவே
வீரர் எழுக விரைந்து.

பாவலர். கருமலைப்பழம்நீ, ஊத்தங்கரை.

பெற்ற சுதந்திரத்தைப் பேணித் தினங்காக்க
முற்றும் துறப்போம்; முனைந்துழைப்போம்—பற்றுடனே
தீரங்கொள் போர்த்திறத்தால் தீர்த்தே பகையொழிக்க
வீரர் எழுக விரைந்து.

சண்முக. தாயுமானவன், பொன்மலை.

என்னுயிரைத் தாலியிலே ஏற்றவளே வெற்றியுடன்
உன்முகத்தில் நான்விழிப்பேன் ஒய்யாரி!—என்றன்பை
ஆரத் தழுவி அணைத்து விடைபெற்று
வீரர் எழுக விரைந்து.

ந. சுப்பையர், மதுரை-2.

ஈரச் சுவடில்லா எண்ணத்தோன் சோதரனின்
ஈரற் குலையுருவி இன்புறுவோன்—ஓரத்தில்
சோரம் விளைக்கின்ற தீயோனைப் போயழிக்க
வீரர் எழுக விரைந்து.

தி. இரத்தினம், பி.எஸ்ஸி.,பி.டி., நாகர்கோயில்.

நெஞ்சப் புனத்தினிலே நேர்மை நிறைந்திருக்க
வஞ்சனைகள் வெல்ல வழியென்ன?—அஞ்சாத
தீரர் இவரென்று தீயவர் அஞ்சிட
வீரர் எழுக விரைந்து.

அ. கிருட்டிணசாமி, சென்னை-15.

எல்லையிலே நம்படைகள் எற்றமுடன் முன்னின்றே
ஒல்லையிலே மாற்றரை ஒட்டுதற்கும்—எல்லையிலாச்
சீர்பொருட்கள் உற்பத்தி செய்வதற்கும் நாட்டகத்தே
வீரர் எழுக விரைந்து.

வீர. முருகேசன், எம்.ஏ.,பி.டி., களிமங்கலம்.

முன்பொருநாள் போர்தொடுத்து மொய்ம்பிழந்து தோற்[றெழுந்த
துன்பம் ஒருசிறிதும் தோற்றாமல்—வன்புடனே
ஈரமிலாப் போர்தொடுக்கும் தீயவரை வென்றிடவே
வீரர் எழுக விரைந்து.

வித்துவான். க. சேதுராமலிங்கன், இராமேச்சுரம்.

வந்தாரை வாழ்விப்போம் வாளெடுத்தால் வாலறுப்போம்
சிந்தாத செங்குருதி சிந்தவைப்போம்—வந்தபோர்ப்
பாரம் பெரிதோ? பகைபெரிதோ? பேராண்மை
வீரர் எழுக விரைந்து.

குகதாஸ். விசுவநாதன், தூக்கநாயக்கன்பாளையம்.

தங்கத் தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி
எங்கும் தமிழ்மணக்க ஏற்றமுடன்—சங்கொலிப்பீர்!
சீரான இந்நிலைக்குச் சீறும் பகையிருப்பின்
வீரர் எழுக விரைந்து.

மௌனசி "கோ", சிலம்பகம்.

பெற்றதாய் நாட்டைப் பிறரடிமை கொளவந்தால்
சற்றுமஞ் சாமற் சமர்புரிந்து—வெற்றிகொள்வோம்
தீரரிவர் என்றுலகம் தேர்ந்திடவே நாடெங்கும்
வீரர் எழுக விரைந்து.

நா. முத்தையா, அறந்தாங்கி.

நெஞ்சினிலே நீதி நிறைதோளில் துப்பாக்கி
துஞ்சலிலும் நாட்டுக்காய்த் தொண்டெண்ணம்,—அஞ்சாமை
ஆரத் தழுவிநிற்கும் ஆண்மை அணியாக
வீரர் எழுக விரைந்து.

புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி (அருவை).

தொண்டுள்ளம் கொண்டோர் தொடர்ந்திடுக தம்பணியை
மண்டுகின்ற துன்பத்தால் வாடாதீர்—ஒண்டமிழின்
தீரர் எனத்தக்க சீரணியால் வாழ்வுறவே
வீரர் எழுக விரைந்து.

புலவர் தென்னவன், செம்பனூர்.

வடக்கின் புறத்தினிலே வாலாட்டி இன்றும்
இடக்குத்தான் செய்கின்ற எத்தர்—அடங்கியே
போரில் புறமோடப் பொன்னித் திருநாட்டு
வீரர் எழுக விரைந்து.

புலவர் இரா. முருகையன், சென்னை-1.

உறங்கு கின்றோமென் றுள்ளியே எல்லைக்
கிறங்கி வரவே எழுந்தார்—முறங்கொண்டு
சூரப் புலியெதிர்த்த செந்தமிழ்த்தாய்ப் பாலுண்ட
வீரர் எழுக விரைந்து.

மீராம்னுலன், சீர்காழி.

தொத்திட்ட நம்மக்கள் நோய்தீரும் வேளையிலே
வத்திட்ட வெம்பகைவன் வாலறுக்கத்—தந்திட்ட
தீரம் துணிவாற்றல் தேர்ந்த திறத்துடன்
வீரர் எழுக விரைந்து.

புலவர் தி. செ. கந்தசாமி, சங்ககிரி.

இற்றைநாள் இந்திய எல்லைப் புறத்தைக்கைப்
பற்ற நினைத்திடும் பண்பிலாப்—பற்றலரை
வேரறுக்கப் பாய்ந்திடும் வேங்கையாய் மார்தட்டி
வீரர் எழுக விரைந்து.

சு. தருமர், மேலாண்மறைநாடு.

ஆரத் தழுவிவிட்டாய் அங்கமெங்கும் முத்தமிட்டாய்
வீரத்தாய் நாயகியே வீற்றிருந்து—பாரடிநீ
தீரமுடன் போர்புரிந்து தீமைகளை மாய்ப்பதற்கு
வீரர் எழுக விரைந்து.

குப்பிச்சிப் பாளையக் குமரன், திருமூர்த்தி நகர்.

அறிவியற் கல்வி அருந்தமிழ்நா டெங்கும்
பொறியியலிற் காணும் புதுமை—நெறிமுறையில்
சீருறவே தோன்ற சிறந்தபல் நூலாக்க
வீரர் எழுக விரைந்து.

தி. கி. சு. கலியாணசுந்தரம், பி.எஸ்ஸி., பி.எட்.,
வசந்தநகர், மதுரை-3.

எல்லையில் எல்லையில் தொல்லைக ளெந்நாளும்
தல்குவது நாங்களில்லை நீங்களெனச்—சொல்லிய
ஈரமிலா நெஞ்சரை இக்கணமே வீழ்த்துதற்கு
வீரர் எழுக விரைந்து.

புலவர் எ. இராதாகிருஷ்ணன், கம்மவான்பேட்டை.

வீட்டுக்கும் நாட்டுக்கும் வெல்லும் தமிழுக்கும்
பாட்டுக்கும் தொண்டு பலசெய்ய—வேட்டுப்பெண்
வீரர் எழுந்தார் விரைந்தாரே; கண்டேனும்
வீரர் எழுக விரைந்து.

இராமரத்னம், புகலூர்.

தாய்மொழியில் கல்விபெறத் தன்செய்யில் நெல்பெருகச்
சேய்இரண்டால் இல்லம் சிறப்பாக—ஆய்ந்தறிந்து
நேரத்தில் செய்தக்க நீதிவழித் தொண்டுசெய
வீரர் எழுக விரைந்து.

க. சுரேந்திரன், விருத்தாசலம்.

வில்லும் புலியும் விரையும் கயல்மீனும்
வெல்லும் பனிவரையில் வீற்றிருக்கச்—சொல்லுதமிழ்
வீரம் நிலைநாட்டி விணர் முதுகொடிக்க
வீரர் எழுக விரைந்து.

திரு. சிவ. கிருட்டிணன், கனியூர்.

உரிமை பறித்தால் உறைநீங்கும் வாளால்
எரிசினம் கொண்டே எதிர்ப்போம்—அரிமாவின்
தீரச் சினங்கொண்டு தீயவரைத் தீர்த்திட
வீரர் எழுக விரைந்து.

து. பால்ராசு, விருதுநகர்கல்லூரி.

அன்பைப் புதைப்போர் அழிவுக்குக் கைகொடுப்போர்
துன்பம் விளைக்கத் தொடங்குவோர்—மன்பதையில்
வேரோ டொழிந்திடவே வெல்லும் அறப்போர்செய்
வீரர் எழுக விரைந்து.

சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

நாட்டுரிமை காப்பதற்கும் நல்லதமிழ் பேணுதற்கும்
வீட்டுக்(கு) ஒருவர் விரைந்திடுமின்—பாட்டினிலே
சூரரெனத் தீரரெனச் சொற்சிலம்பம் ஆடாமல்
வீரர் எழுக விரைந்து.

நா. தண்டபாணி, புதுக்கோட்டை.

எண்ணி இருமாந்(து) இருக்கின்ற நாடெல்லாம்
நண்ணி வியந்து நமையறிய—விண்ணதிரப்
போராடி வென்று புறப்பகையை ஓட்டுதற்கு
வீரர் எழுக விரைந்து.

விழியிறை, மதுரை மாவட்டம்.

பேரற்றுப் போனார் பெரும்போர் புரிந்தவர்தாம்
வேரற்றுப் போனார் வெறிகொண்டோர்—சீரற்றார்
பாரினில் போரற்ற பண்புதனை நாட்டவே
வீரர் எழுக விரைந்து.

வெற்றிமணி, மயிலம்.

கற்றென்ன, மேடையிலே கைதூக்கிப் பேசியென்ன.
வெற்றுரையால் ஏழைதுயர் வீழுமோ?—வெற்றிதரும்
ஏரெடுத்தும் சோறெடுக்கா ஏழைகளைத் தூக்கவினை
வீரர் எழுக விரைந்து.

மு. சேதுபதி, பி.எஸ்ஸி., சிவகங்கை.



முந்திரி நாள் விழா

"அமெரிக்காவிலிருந்து அந்நியச் செலாவணியாக டாலர் பெறுவது கஷ்டம். அந்த டாலர்களை இந்தியா இருவகைகளில் பெறுகிறது. ஒன்று சணல் மூலமாக; மற்றொன்று முந்திரி மூலமாக.

சணலுக்கு அடுத்தபடியாக, முந்திரிதான் அந்நியச் செலாவணியை அதிகமாகச் சம்பாதித்துக் கொடுக்கிறது.

ஆனால் சணலுக்கு ஏராளமான சலுகைகள் தருகிறார்கள். அந்தச் சலுகைகள் ஏன் முந்திரிக்குத் தரப்படவில்லை? தென் மாநிலங்களில் பயிரிடப்படும் பயிர் என்பதாலா என்று இந்திய முந்திரி வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் நான் உறுப்பினராக இருந்த பொழுது கேட்டேன்.

முந்திரியில் சராசரியாக ஏக்கருக்கு 1 மூட்டைகூட மகசூல் கிடைக்கவில்லை. முந்திரி முன்பெல்லாம் காடு கரம்பாக உள்ள இடங்களில் பயிரிடப்படும் பயிராக(wasteland crop)இருந்தது. ஆனால் தற்பொழுது டாலர் சம்பாதித்துக் கொடுக்கும் பயிராக விளங்குகிறது. முந்திரியால் கிடைக்கும் வருமானம் இந்திய அரசுக்கே செல்வதால், முந்திரிச் சாகுபடிக்கு இந்திய அரசு அதிகச் சலுகைகளை—மானியங்களை அளிக்கவேண்டும்.

நமது வேளாண்மை அமைச்சர் விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்தவர். அவர் வேளாண்மை அமைச்சராக ஆகிய பிறகு எங்குப் பார்த்தாலும் பசுமையாக இருக்கிறது. நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது. நான் போக்குவரத்து அமைச்சராக இருப்பதால் இங்கும் அங்கும் போய் வரும்பொழுது பார்க்கிறேன். நாடு எங்கும் பசுமையாக இருக்கிறது. எனவே சாமானிய நிலத்தில் பயிராகும் முந்திரிக்கு அதிகச் சலுகைகளைச் செய்து, முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களின் வருவாயைப் பெருக்க, வேளாண்மை அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் நவீன முந்திரித் தொழிற்சாலைகளை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருவாக்க முயன்று வருகிறோம். கேரளாவில் உள்ளது போன்ற தொழிற்சாலைகள் இங்கு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தொழிற்சாலைகளில்விவசாயிகளைப் பங்குதாரர்களாகச் சேர்த்து, அவர்களும் பலன்பெற ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இந்தப் பகுதியில் முந்திரிப் பழத்திலிருந்து மதுபானம் தயாரிக்கும் தொழிற்சாலையை அருணா சுகர்ஸ் நிறுவனத்தார் ஆரம்பிக்க விருக்கிறார்கள். அதனால் தற்பொழுது வீணாகிவரும் முந்திரிப் பழங்கள் பயன் படுத்தப்படும். அதன் காரணமாக முந்திரிச் சாகுபடி செய்பவர்களுக்கு அதிக வருவாய் கிடைக்கவிருக்கிறது. விரைவில் இப்பகுதி பொன்விளையும் பூமியாகிவிடும். எனவே, நமது வேளாண்மை அமைச்சர் மைய அரசுடன் கலந்து பேசி, முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும்'' என்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் 20—11—1971 அன்று விருத்தாசலத்தில் நடைபெற்ற முந்திரி நாள் விழாவில், மலர் வெளியிட்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

'' தாசில்தாரைப் பார்க்கப் பயந்த குடியானவர்கள் இருந்த நிலை உண்டு. ஒரு காலத்தில் உரத்திற்கு உழவர்கள் பட்ட கஷ்டம் சொல்ல முடியாததாக இருந்தது; அப்படிப்பட்ட நிலை இன்று இல்லை. அதற்குக் காரணம் இன்றைய அரசுதான் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உழவர்களைப் பற்றி அடிக்கடி நினைப்பார். உழைத்து உழைத்து உலகுக்குச் சோறுபோடும் உழவன்தான் கருக்காச்சோறு சாப்பிட்டு வருகிறான். எனவே உழவனின் வாழ்வை உயர்த்த வேண்டுமென்பதில் அண்ணாவுக்கு மிகுந்த அக்கறை இருந்தது.

நமது நாட்டிலே நல்ல வளம் இருக்கிறது. உழவர்களிடையே நல்ல மனம் இருக்கிறது. ஏன் உணவு உற்பத்திப் பெருக்கம் இல்லை என்று அண்ணா ஆழ்ந்து சிந்தித்தார். உலகை வாழ வைக்கும் உழவுத் தொழிலுக்குப் பல்வேறு இன்னல்கள் இருக்கலாமா என்று கலைஞரிடம் கேட்டார். கலைஞரும் கூடாதுஎன்றார். இருவரும் சேர்ந்து சிந்தித்துப் பல்வேறுதிட்டங்களைத் தீட்டினர். கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து உழவர்களின் கருத்தறிந்தனர். உழவர்களுக்கு உழவுத் தொழிலில் ஊக்கம் ஏற்படுவதற்கான சலுகைகள் அளித்தனர். அதனால்

இன்று உணவுப் பற்ருக்குறை மறைந்து, தன்னிறைவு பெற்ருள்ளோம்.

வேளாண்மைத்துறையில் பணியாற்றும் களப்பணியாளர்களிலிருந்து, இயக்குநர் வரை தங்கள் பணியைத் திறமையாகவும் கடமையுணர்ச்சியுடனும் செய்கிருர்கள். அவர்கள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நல்ல பணி செய்கிருர்கள்.

முந்திரிச் சாகுபடிக்கு அதிகச் சலுகை அளிக்கவில்லை என்று சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார். தமிழ்நாடு அரசு முந்திரிச் சாகுபடி செய்பவர்களுக்குப் பல உதவிகளைச்செய்கிறது.'' என்று முந்திரி நாள் விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டு விட்டு, என்னென்ன உதவிகளைத் தமிழ்நாடு அரசு செய்கிறது என்பதைத் 'தமிழரசு' இதழிலிருந்து படித்துக் காட்டி விளக்கிஞர். அவர் மேலும் பேசுகையில், போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டது போல் நிச்சயமாக நவீன முந்திரித் தொழிற்சாலை அமைக்கப்படும் என்ருர்.

"இந்த ஆண்டில் 7,500 ஏக்கர் முந்திரியில் 2 முறை இலவசமாக மருந்து தெளிக்கப்படும். முந்திரிக்கு ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கவும், திட்டமிட்டுள்ளோம். அதற்கு ஆகும் முழுச் செலவையும் மைய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு எழுதியுள்ளோம். இச்சலுகைகளையெல்லாம் பயன்படுத்தி முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்'' என்று அவர் முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்களைக் கேட்டுக் கொண்டார்.

முந்திரி நாள் விழாவிற்கு வந்திருந்தவர்களைத் துணை வேளாண்மை இயக்குநர் திரு சிவசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்றுப் பேசிஞர். விழாவில் விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு செல்வராஜ் அவர்களும், உளுந்தூர்பேட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுப்ரமணியம் அவர்களும் முந்திரிச் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளை விளக்கிப் பேசிஞர்கள். துணை வேளாண்மை இயக்குநர் திரு பூ. சோலையப்பன் அவர்கள் நன்றி கூறிஞர். முந்திரி நாள் விழா விருத்தாசலத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்றது. அதையொட்டி ஒரு பொருட் காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முந்திரிச் சாகுபடி செய்யும் உழவர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். முந்திரி நாள் விழா மொத்தத்தில் ஒரு திருநாளாகவே இருந்தது.

பசுமைப்
புரட்சிக்கும்
பச்சைச்
சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின்
தயாரிப்புகளான வில்லியர்ஸ்
என்ஜின்கள் வேளாண்மைத்
துறையில் நீர்ப்பாசனத்துக்கும்,
பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத்
தெளிக்கவும் உழவுப் பெருங்குடி
மக்களின் உற்ற நண்பஞக
உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில்
பணிபுரியும் படைவீரர்களுக்கும்
மற்றவர்களுக்கும் போக்குவரத்து
ஊர்திகளாகப் பணி புரிகின்றன,
என்பீல்டு இந்தியாவின் புல்லெட்
மற்றும் குருசேடர் மோட்டார்
சைக்கிள்கள்.

வேளாண்மை,
தொழில், போக்குவரத்து
ஆகிய துறைகள்
வளம் பெற அரும்பணி
ஆற்றும் நிறுவனம்
என்பீல்டு இந்தியா.

தி என்பீல்டு இந்தியா
லிமிடெட்
சென்னை-19





வாளினைப் போலும் மீசை
வல்லமை துள்ளும் நெஞ்சம்
ஆளினை மயக்கும் கண்கள்
அழகிய நெற்றிப் பொட்டு
கேளிரை மறவாப் பாசம்
கீழ்நிலை ஒழிக்கும் வேகம்
தோளினை உயர்த்தும் வீரம்
தோய்ந்தபா ரதியாம் செல்வர்!

அன்னையின் நாட்டில் உள்ளார்
அடிமையாய் நாமம் பெற்றுக்
கண்ணையும் விற்றுக் கொண்டு
கடுந்துயர் உற்ற போழ்தில்
புண்ணியப் புலவர் வந்தார்
புலியெனச் சீறிப் பாய்ந்தார்!
எண்ணிலாக் கவிதை தந்தார்;
இமயமாய் எழுந்தே நின்ருர்!

உண்மையைத் தெய்வம் என்ருர்
உரிமையைச் செல்வம் என்ருர்
திண்மையை வாக்கிற் சேர்த்தார்
திக்கெலாம் பரவச் செய்தார்
பெண்மையைப் போற்றிச் சொன்ஞர்
பேதைமை ஒழித்துப் போஞர்!
நன்மையை நாட்டில் காண
நாளெலாம் துடித்தார் அன்பாய்!

வள்ளுவர், கம்பர், கூத்தர்
வாய்மையர், சாத்தர்; நெஞ்சை
அள்ளிடும் சிலம்புச் செல்வம்
ஆக்கிய வேந்தர்; பேய்போல்
துள்ளிடும் மாற்ருர் ஆட்சித்
துன்பினை அறியார்; தீமை
கிள்ளிடும் புரட்சித் தீயின்
கிளர்ச்சியில் இவரே நின்ருர்!

பைந்தமிழ்ப் புலவர் எல்லாம்
பயத்தினில் மிதப்பார்; அன்ருர்
ஐந்திணைப் பாடம் அன்றி
அரசியல் அறியார் என்றே
தொய்ந்திடும் மதியார் எல்லாம்
சொல்லிய போழ்தில் வீர
மைந்தராய்த் தோற்றம் தந்தார்
பாரதி வாழ்த்துப் பெற்ருர்!

புலவர் தமிழ்ப்பித்தன்

வினா : நவம்பர் 1-ஆம் தேதி 'தமிழரசு' இதழில் "பாரி முல்லை" பற்றிப் படித்தவுடன், எனது வீட்டின் தோட்டத்தில் அதைப் பயிரிட விரும்பியுள்ளேன். ஆகையால் அதன் பதியம் எங்கு, எவ்வாறு பெற இயலும் என்பதை எழுத வேண்டுகின்றேன்.

—ஜி. சந்திரசேகரன்,
கோவிந்தராஜ் நகர்,
தருமபுரி மாவட்டம்.

விடை : பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு, 26—9—1971 அன்றுதான் "பாரி முல்லை" வெளியிடப்பட்டது. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக மலர் ஆராய்ச்சிப் பண்ணையில், தற்பொழுது பாரிமுல்லை இனப் பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் பாரிமுல்லைப் பதியங்கள் விற்பனைக்குக் கிடைக்கக் கூடும். பதியங்களின் விலை விவரம், எப்பொழுது கிடைக்கும், எப்படி அனுப்பப்படும் என்ற விவரங்களை அறியத் தயவு செய்து கீழ்வரும் முகவரிக்கு எழுதுங்கள்.

— மலர்வகை நுண்ணறிஞர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

(குறிப்பு : இதே கேள்வியைப் பலர் கேட்டுள்ளதால், ஒவ்வொருவருக்கும் தனியே விடையளிக்கப்படவில்லை.)

வினா : கத்தரிச் செடி பயிரிடும் முறையையும், உழவு முறையையும், உரமிடும் அளவு முறையையும் அடுத்த 'தமிழரசு' இதழில் தெள்ளத் தெளிவாக விளக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

—க. திருஞானசம்பந்தம்,
மாம்பட்டு, வடஆர்க்காடு,
மாவட்டம்.

விடை : கத்தரி பயிரிடுவதற்குக் கீழ்க்கண்ட பருவங்கள் ஏற்றதாகும்.

(1) ஜூன் முதல் நவம்பர் முடிய.
(2) டிஸம்பர் முதல் ஏப்ரல் முடிய
(3) பிப்ரவரி முதல் ஜூலை முடிய



வேளாண்மை வினாக்களே கேட்கப்படவேண்டும்

கத்தரியில் உயர்ந்த மகசூல் பெறுவதற்குக் கீழ்வரும் ரகங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

(1) கொத்து வெள்ளை (எஸ். எம். 62).
(2) குடியாத்தம் வரிக்கத்தரி (எஸ்.எம். 68).
(3) நீண்ட ஊதா (எஸ். எம்.60)
(4) பூசா ஊதா நீளம்
(5) பூசா ஊதா உருண்டை

ஓர் ஏக்கர் கத்தரி சாகுபடி செய்ய 150 கிராம் விதைகளை ஒரு சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்தைக் கலந்து நாற்றுவிட வேண்டும். நாற்றுவிடுவதற்கு மேடைப்பாத்திகள் அமைப்பதே சிறந்தது.

கத்தரிச் சாகுபடி செய்யவிருக்கும் நிலத்தை இரும்புக் கலப்பையால் 4 அல்லது 5 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும் .ஏக்கருக்கு 10 டன் (26 வண்டி) தொழு உரம் இட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 100 கிலோ அமோனியம் சல்பேட், 125 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும்.

அதன்பின் 75 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியில் பார் அமைக்க வேண்டும். பார்களில் தண்ணீர் விட்டு 36 முதல் 35 நாட்கள் வயதுடைய நாற்றுகளைப் பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் 60 சென்டி மீட்டருக்கு (2 அடி) ஒன்று வீதம் நட வேண்டும். நாற்று நட்ட 3-ஆம் நாள் உயிர் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

கத்தரி நாற்றுநட்ட 3 வாரங்களுக்குப் பின் ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட்டு, மண் அணைத்துத்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கத்தரி நாற்று நட்ட 6 வாரங்களுக்குப் பிறகு இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும்.

கத்தரி வயலில் 2 அல்லது 3 முறை களைஎடுத்தல். அவசியம். இளஞ்செடிகளுக்கு வாரம் 2 முறையும், வளர்ந்த செடிகளுக்கு வாரம் ஒரு முறையும் முறையாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு கத்தரிச் சாகுபடி செய்து, பயிர்ப்பாதுகாப்பு முறைகளையும் முறையாகச் செய்து வந்தால், ஓர் ஏக்கரிலிருந்து 16,000 முதல் 18,000 கிலோ கத்தரிக்காய்கள் கிடைக்கும்.

வினா : எங்கள் நிலத்தில் ஒரு ஏக்கர் கத்தரி சாகுபடி செய்துள்ளோம். செடி நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த போதிலும் காய்கள் அதிகமாகக் காய்க்கவில்லை. மேலும் பூச்சிகளால் நிறையப் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு என்னென்ன பூச்சி மருந்துகள் அடிக்க வேண்டும் ? எந்தெந்தச் சமயத்தில் அடிக்க வேண்டுமென்பதைத் தயவு செய்து விளக்கவும்.

—கே. எஸ். கலியபெருமாள்
கட்டமுத்துப்பாளையம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை : கத்தரிச் செடிகள் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த போதிலும் காய்கள் அதிகமாகக் காய்க்கவில்லையென்றால், தங்கள் நிலத்தில் தழைச்சத்து அதிகமாக இருக்கக் கூடும். போதிய அளவு சூப்பர்பாஸ்பேட் உரமும், மூரியேட் ஆப் பொட்டாஷ் உரமும் இட்டிருந்தால் தான் நிறையக் காய்க்கும். இல்லாவிட்டால் தழைச்சத்து மிகுதியின் காரணமாகச் செடிகள் செழித்து வளருமே ஒழிய நிறையக் காய்க்காது. இதை மனத்திற்கொண்டு இனிமேலாவது மேலே கூறப்பட்டுள்ள விடையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவு உரங்களை இட்டுக் கத்தரி பயிரிட முயலுங்கள். தங்கள் கத்தரிச் செடிகள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் எந்த வகைப் பூச்சி என்பதைக் கூறவில்லை. பூச்சிகளுக்கு ஏற்ற மருந்தினைத் தெளித்தால் தான், அவைகளின் தாக்குதலை முழு அளவில் கட்டுப்படுத்த முடியும்.

பொதுவாகக் கத்தரிச் செடிகளைப் புள்ளி வண்டு (கடலை வண்டு), அசுவணி, காய் துளைக்கும் புழு, மாவுப் பூச்சி, உண்ணி ஆகிய பூச்சிகளும், வாடல் நோயும் தாக்கக் கூடும்.

புள்ளி வண்டுகளைக் கட்டுப்படுத்த 1 பங்கு கால்சியம் ஆர்சினேட் என்ற மருந்தையும், 4 பங்கு சுண்ணாம்புத் தூளையும் சேர்த்து, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம் அல்லது கார்பரில் 10 சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவலாம்.

அசுவணி, கொழுந்து துளைப்பான், காய் துளைக்கும் புழு, புள்ளிவண்டு ஆகிய 4 வகைப் பூச்சிகளும் காணப்பட்டால் எண்ட்ரின் 0.02 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது டி.டி.டி. 0.1 சதம் (1 கிலோ 50 சத டி.டி.டி. நனையும் தூளை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து அல்லது கார்பரில் 0.1 சதம் (1 கிலோ கார்பரில் 50 சத நனையும் தூளை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

மாவுப்பூச்சி (சப்பாத்திப்பூச்சி, புருகப் பூச்சி என்றும் கூறப்படுவது உண்டு) தாக்கினால், பாராத்தியான் 0.05 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

உண்ணிகள் (Mites) தாக்கியிருந்தால் ஏக்கருக்கு 10 கிலோ கந்தகத் தூளை தூவ வேண்டும் அல்லது 1 கிலோ தண்ணீரில் கரையும் கந்தகத்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

வாடல் நோய் தாக்கினால் செடிகள் திடீரென்று இறந்து காய்ந்துவிடும். இதைத் தடுக்க தண்ணீரில் கரையும் செரசான் மருந்தைத் தெளித்து (1 கிலோ மருந்தை 1000 லிட்டர் தண்ணீரில் கரைத்து) மண்ணை நன்கு நனைக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு மருந்து தெளிக்க மேற்கூறிய அளவு மருந்துக் கரைசலில் 360 லிட்டர் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு தடவை மருந்து தெளித்த பின்பும் பூச்சி அல்லது நோயின் தாக்குதல் காணப்படின் 15 நாட்கள் கழித்து மீண்டும் அதே முறையில் மருந்து தெளிக்க வேண்டும்.

மருந்து தெளிப்பதற்கு முன்பு காய்களைப் பறித்துவிட வேண்டும். கூடுமானவரை மருந்து தெளித்த 15 நாட்களுக்குக் காய்களைப் பறிக்காமல் இருப்பதே நல்லது. அதற்குள் காய்களைப் பறிக்க வேண்டிய அவசியம் ஏற்படின் காய்களைத்தண்ணீரில்நன்கு கழுவிய பின்பே, சமைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் காய்களின் மேல் படிந்துள்ள மருந்தின்நஞ்சுஉடலுக்குத் தீங்கு விளைவிக்கும். எனவே இதில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியம்.

வினா: தமிழ்நாட்டில்வேளாண்மை வளர்ச்சிக்காகக் குழாய்க் கிணறுகள் போடுவதாக 'தமிழரசு' மூலம் அறிந்தேன். ஒரு குழாய்க் கிணறு போட எவ்வளவு செலவு ஆகும். நாங்கள் 4 அல்லது 5 பேர் சேர்ந்துபோடலாம் என ஆசைப்படுகின்றோம். அதற்கு எங்களுக்கு அரசு உதவி செய்யுமா?

—வி. அளகேசன்,
கொமரப்பாளையம், சேலம்
மாவட்டம்.

விடை : நிலத்தின் கீழே உள்ள பாறை அல்லது மலை ஆகியவைகளுக்கு ஏற்பவும் தண்ணீர் கிடைக்கும் ஆழத்திற்கு ஏற்பவும் குழாய்க்கிணறு அமைக்கும் செலவு ரூபாய் 5,000 முதல் ரூ. 10,000 வரை ஆகலாம். சில இடங்களில் ரூபாய் 20,000-க்கு மேலும் ஆகியுள்ளது. இதுபற்றி அறிய

சேலம் 1-ல் உள்ள துணை வேளாண்மைப் பொறியாளர் (மெக்கானிக்கல்) அவர்களை அணுகுதல் நல்லது. நான்கு அல்லது ஐந்து பேர் சேர்ந்து குழாய்க் கிணறு அமைக்க நீர்ப்பாசனக்கூட்டுறவுச்சங்கம் அமைத்தால்தான் இயலும். நீர்ப்பாசனக்கூட்டுறவுச்சங்கம் அமைப்பது பற்றிய விவரங்களை அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள வளர்ச்சி அலுவலர் (கூட்டுறவு) அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

செய்திகள்

ஜெர்மனி நாட்டில் உள்ள அனைத்துலக ஜெட் விமான நிலையம் எந்த நேரத்திலும் பரபரப்பாகக் காணப்படுகிறது. விமானங்கள் அங்கு வந்த வண்ணமும் சென்ற வண்ணமுமாகவே இருக்கின்றன. பொதுவாக — விறுவிறுப்பான பகல் வேளைகளில் நிமிடத்திற்கு ஒரு விமானம் அந்த விமான நிலையத்தில் காட்சி தருகிறது. அமைதி நிறைந்த இரவு வேளைகளில் நான்கு நிமிடத்திற்கு ஒரு விமானம் அங்கே காட்சி தருகிறது. அங்கே உள்ள ரெயின் மெயின் விமான நிலையத்தில் ஏறக்குறைய 210 விமான நிறுவனங்களைச் சேர்ந்த விமானங்கள் வந்து செல்கின்றன.

* * *

கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய் மூலம் பால் வழங்கும் புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது போலவே டில்லியிலிருந்து பம்பாய்க்கும், கல்கத்தாவிற்கும் குழாய் மூலம் பால் அனுப்பப்படும்.

டெல்லி, கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய 4 நகரங்களும் குழாய்களின் மூலம் இணைக்கப்படும். எந்த நகரில் பால் உபரியாக இருக்கிறதோ, அங்கிருந்து மற்ற நகரங்களுக்கு விரைவாகக் குழாய் மூலம் பால் அனுப்பப்படும்.

இம் மாபெரும் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கி 31½ கோடி ரூபாய் மதிப்புள்ள 1,26,000 டன் பால் பவுடரும் 42,000 டன் நெய்யும், கொடுத்து உதவுகிறது.

இத்திட்டத்திற்காகக் குழாய்கள் பூமிக்கு அடியில் புதைக்கப்படும். தற்பொழுது டெல்லியிலிருந்து பம்பாய்க்குக் குழாய்கள் புதைக்கப் பட்டுவிட்டன. டெல்லியிலிருந்து கல்கத்தாவுக்குக் குழாய்கள் புதைக்கும் வேலையும் துவங்கப்பட்டுள்ளது.

செய்திகள்

பின்பு கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் குழாய்கள் புதைக்கப்படும். இவ்வேலைகள் 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடிந்துவிடும். அதன் பிறகு பம்பாய்க்கும், சென்னைக்கும் இடையே குழாய்கள் புதைக்கப்படும்.

சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி ஆகிய 4 நகரங்களிலும் பெரிய அளவில் பால் பண்ணை துவங்கப்படும், இத்திட்டத்தினால் 2 கோடி மக்கள் பயன் பெறுவார்கள்.



காகிதப் புட்டிகளில் பால் அடைக்கப்பட்டு விற்பனை செய்யும் புதிய முறையும் புகுத்தப்படும். இம்முறையினால் பால் 15 நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். காசு போட்டவுடன் பால் வழங்கக் கூடிய சிறிய இயந்திரங்களை, நகரின் முக்கிய இடங்களில் வைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

* * *

இன்று, மக்களின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கும் தட்டெழுத்துப்பொறியைக் கண்டு பிடித்தவர் கிரிஸ்ட்டபர் லாதம் ஷோல்ஸ் ஆவார். அவரது கண்டு பிடிப்பு ஒவ்வொரு கட்டமாக வளர்ச்சியடைந்தது. ரெமிங்டன் என்பவரின் கூட்டுறவுடன் இறுதியில் வெளிவந்தது. அந்தப் பொறிக்கு ரெமிங்டன் என்று பெயர் வந்தது.

செய்திகள்

மாற்று இருதயம், மாற்றுச் சிறுநீரகம் போன்ற சிகிச்சைகளைப் போலவே பற்களையும் மாற்றி வைத்துச் சிகிச்சை செய்யும் முறை ஒன்று தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

பற்களே இல்லாத பொக்கை வாய்க்கு, பல் செட் வைத்துக் கொள்வது அல்ல இந்த முறை. விழுந்துவிட்ட—அல்லது எடுக்கப்பட்ட—ஒரு பல்லின் இடத்தில், வேறு ஒருவரின் வாயிலிருந்து ஈறுடன் கூடிய பல்லை எடுத்து வைத்து இவரது வாய் ஈறுடன் ஒட்டவைப்பது இந்த முறை. சிறிது நாட்களில் அந்தப் பல் அவரது பிற பற்களைப் போலவே ஈறுடன் ஒட்டிக் கொண்டு, வளரவும் ஆரம்பிக்கும்.

வடகிழக்கு இங்கிலாந்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இந்தப் பல் மாற்றுச் சிகிச்சையை டேவிட் டிக்ஸன் என்னும் பிரிட்டிஷ் டாக்டர் வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

* * *

ஜெர்மனி ஒரு புதுவகைப் புகைப்படக் கருவியைத் தயாரித்திருக்கிறது. ஏறக்குறைய ஒரு விரல் அளவே உள்ளது அந்தக் கருவி. இதில் அரைக்கால் அங்குல பிலிம்தான் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாம் உலகப் பெரும் போரின் போது, துப்பறியும் நிபுணர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்தச் சிறிய புகைப்படக் கருவி, தற்போது, மேலும் சில நவீன அமைப்புகளுடன் உருவாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இந்த அதிசயப் புகைப்படக் கருவி, அமெரிக்க நாட்டில் அதிக அளவில் விற்பனையாகிறது.

ஏழையாய்ப் பிறந்து ஏற்றம் பெற்றவர்

"அண்ணா! அண்ணா! அந்த வண்ண விளக்குகளைப் பார்த்தீர்களா, எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று கண்காட்சியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்த கண்ணகி சொன்னாள்.

"ஆமாம்........ இன்றைக்கெல்லாம் அதையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல இருக்கிறது. இல்லையா?" என்றான் மகிழ்ச்சியாகக் கண்ணகியின் அண்ணன் இளங்கோ.

கண்காட்சியில் மக்கள் திரள் திரளாகக் கண்ணுக்கு விருந்தான காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டே சென்றார்கள். ஓரிடத்தில் பால்நிலவைப்போலப் 'பளிச்' சென்று மின்சார விளக்கு ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. அந்த விளக்கின் ஒளியில் கண்ணகி பார்க்க இன்னும் அழகாக இருந்தாள். அவள் தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

"என்னம்மா, கண்ணகி! உன் அழகைப் பார்க்க உனக்கே கண்கள் கூசுகிறதா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் இளங்கோ.

"இல்லை, அண்ணா. இவ்வளவு ஒளியுள்ள இந்த மின்சார விளக்கை யார் கண்டு பிடித்திருப்பார்கள்? அதற்கு எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்களென்று யோசனை பண்ணினேன்...... அவ்வளவு தான்" என்றாள் கண்ணகி. இளங்கோவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "இப்படியல்லவா கேள்வி கேட்க வேண்டும். அப்பொழுது தானே அறிவு வளர்ச்சி ஏற்படும்?" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, ஒரு சிற்றுண்டி விடுதிக்குத் தன் தங்கையை அழைத்துச்சென்றான்.

"என்னண்ணா! விளக்கைப் பற்றிக் கேட்டால், காபி வாங்கித் தரச் சிற்றுண்டி விடுதிக்குப் போறீங்க?" என்றாள் புரியாமல் கண்ணகி.

"எல்லாம் வேலையாகத்தான்.....கொஞ்சம் வயிற்றுக்குப் போட்டுவிட்டுப் பிறகு நீ கேட்ட கேள்விக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்......" என்றான் இளங்கோ நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே.

"கதையா? அப்படியென்றால் அதை இப்போதே செல்லுங்களண்ணா........கதை என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்...." என்றாள் ஆவலுடன் கண்ணகி.

சிற்றுண்டி முடிந்து இருவரும் அருகே இருந்த மணற் பரப்பில் வந்து உட்கார்ந்தனர். கண்காட்சியாயிற்றே, சொல்ல வேண்டுமா? எந்தப் பக்கம் திரும்பினாலும் வண்ண விளக்குகள் தான்! மின்சாரத்தின் விந்தை அவர்களை வியப்படையச் செய்து கொண்டிருந்தது.

"அண்ணா! சொல்லுங்கள் கதையை.....?" என்று வற்புறுத்தினாள் கண்ணகி.

விளக்கின் ஒளி மிகுதியால் கண்களைக் கசக்கிக் கொண்ட இளங்கோ கதை சொல்ல ஆயத்தமானான்.

"கண்ணகி! கதையைச் சொல்வதற்கு முன், ஒரு குறிப்பை உனக்குச் சொல்கிறேன். மின்சாரப்பல்பைஎடிசன்என்னும் விஞ்ஞானி கண்டு பிடிப்பதற்கு முன்பே, மைக்கல் ஃபாரடே என்பவர், மின்சாரத்தின் மூலம் ஒளியை உற்பத்தி செய்யலாம் என்பதைக் கண்டு பிடித்தார். அந்த ஒளிதான் இப்போது நம் கண்களைக் கூசச் செய்கிறது. இப்போது மைக்கல் ஃபாரடே என்பவரைப் பற்றி உனக்குச் சொல்லப் போகிறேன். அவர் யார்? எப்படி வாழ்க்கையிலே முன்னேறினார் என்பதைப் பற்றியெல்லாம் நீ தெரிஞ்சிக்கப் போறே..

நாளையத் தலைமுறை

"சொல்லுங்கண்ணா!" கண்ணகி, கதை கேட்கக் காதை நீட்டிக் கொண்டாள்.

"மைக்கல் ஃபாரடே இலண்டனில் பிறந்தவர். அவருடைய அப்பா இரும்பு வேலை செய்யும் ஒரு கருமான். இவர்களுடைய குடும்பம் மிகவும் வறுமையிலே இருந்தது. ஒரு குதிரை இலாயத்திலே குடிசையைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்" என்று இளங்கோ சொல்லி முடிப்பதற்குள் கண்ணகி "ஐயோ பாவம்!" என்று இரக்கப்பட்டாள்.

இளங்கோ மேலும்சொன்னான்; "மைக்கல் ஃபாரடேயின் குடும்பம் அந்தக் குதிரை இலாயத்தில் குளிராலும், பட்டினியாலும் தவித்தன. சில சமயங்களில் ஒரே ஒரு ரொட்டித் துண்டைப் பங்கு போட்டுக் கொண்டு நாட்களைக் கழித்திருக்கிறார்கள்".

கண்ணகி கேட்டாள்; "மைக்கேல் படிக்கவில்லையா?"

"ஏன் இல்லை. மைக்கேல் தன் கிராமத்தில் ஒரு பள்ளியில் சேர்ந்து, ஓரிரண்டு ஆண்டுகளில் எழுதவும் படிக்கவும், கணக்குப் போடவும் கற்றுக் கொண்டான். அதோடு அவன் பள்ளிப் படிப்பு முடிந்தது!"

"ஏன்?"

"வயிறு இருக்கிறதே! அதற்கு வழி தேட வேண்டாமா? ஒரு புத்தக வியாபாரியிடம் வேலைக்குச் சேர்ந்தான். அந்த வியாபாரி செய்திப் பத்திரிகை படிப்பகம் ஒன்றையும் நடத்தி வந்தான். சிறுவன் மைக்கேல் நாள்தோறும் காலையில் ஒரு பத்திரிகையை எடுத்துக்கொண்டு, வாடிக்கைக்காரர்களின் வீடுகள் ஒவ்வொன்றிற்கும் செல்வான். அவர்கள் ஒவ்வொருவரும் அதைப் படித்து முடிக்கும் வரையிலும் மைக்கேல் காத்திருப்பான்! பிறகு அதை வாங்கிக் கொண்டு அடுத்தவர் வீட்டுக்குச் செல்வான். இதற்காக அவர்கள் ஒவ்வொருவரும்

அவனுக்குக் காசு கொடுப்பார்கள். இப்படிக் கொஞ்ச நாள் வேலை பார்த்து வந்தான்....''

''பிறகு? அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்களா?''

''இல்லை, கண்ணகி! மைக்கேலின் திறமையைக் கண்ட முதலாளி அவனைத் தம்மிடமே 'பைண்டிங்' வேலைக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார். சில சமயம் அந்தக் கடைக்கு விஞ்ஞானப் புத்தகங்கள் 'பைண்ட்' செய்வதற்கு வரும். மைக்கேல் அந்தப் புத்தகங்களைப் 'பைண்ட்' செய்வதற்குள், ஒரு வரி கூட விடாமல் படித்து முடித்து விடுவான்! கண்ணகி! உன்னால் அது முடியுமா?''

''ம்........மேலே சொல்லுங்கண்ணா!''

''மைக்கேல் விஞ்ஞான சம்பந்தமான புத்தகங்களை ஆர்வத்தோடு படித்தான். ஒரு சமயம் கலைக் களஞ்சியம் புத்தகத்திலே மின்சாரம் பற்றி இருந்ததைப் படித்து அளவிலா ஆனந்தம் அடைந்தான். அதோடு நின்றானா அவன்? கொஞ்சம் காசைச் சேர்த்துக்கொண்டு, சொந்தமாக ஒரு மின்சார இயந்திரத்தையே உண்டாக்க முற்பட்டான்!''

''அப்படியா? அப்போது அவனுக்கு என்ன வயது இருக்கும்?''

''பதின்மூன்று! ஆம். அந்த வயதிலேதான் அவன் இப்படியொரு அதிசயச் செயலிலே ஈடுபட்டான். இதற்கிடையே அவன் விஞ்ஞானச் சொற்பொழிவைக் கேட்கவும் பேராசை கொண்டான்.

ஒரு சமயம் 'இயற்கை விஞ்ஞானம்' என்பது பற்றிப் பிரபல விஞ்ஞானி ஒருவர் பேசுவதாக அறிந்தான். அதற்குப் போகக் கட்டணம்வேறு போட்டிருந்தார்கள். மைக்கேல் என்ன செய்வான், பாவம்! உடனே அவனுக்கு ஒரு யோசனை வந்தது. தயங்கித் தயங்கி தன் அண்ணன் ராபர்ட்டிடம் சொன்னான். ராபர்ட் ஒரு கொல்லன் பட்டறையில் வேலை செய்பவன்; அவன் தம்பியின் விஞ்ஞான ஆர்வத்தைக் கண்டு பெருமைப் பட்டான். உடனே அவனுக்குக் காசு கொடுத்து அந்தப் பேச்சைக் கேட்க அனுப்பிவைத்தான்.''

''அண்ணன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். நீங்களும் இருக்கிறீர்களே!''

''மைக்கேலிடம் ஒரு நல்ல பழக்கம் இருந்தது. அதுதான் குறிப்பெழுதும் பழக்கம். விஞ்ஞானிகள் பேசும்போது முக்கியமானவற்றைக் குறிப்பு எழுதிக் கொள்வான். அப்படி எழுதிய நோட்டுப் புத்தகங்களைத் தானே அழகாகப் 'பைண்ட்' செய்து கொள்வான்.

''இப்போதுள்ளவர்கள் தம் பாடத்தை எழுதுவதற்குக் கூடச் சோம்பல் படுகிறார்கள். மற்றவர்கள் பேச்சை எங்கே குறிப்பு எழுதப்போகிறார்கள்?''

ஐ. நா. வில்

ஐக்கிய நாடுகள் அவையில் சீன நாடு சேர்க்கப்பட்டது. இதனால் உலக மக்கள் தொகையில் 95 சதவிதம் ஐ.நா. அவையில் பிரதிநிதித்துவம் பெற்றதாகிவிடுகிறது.

இன்னும் ஒன்பதே நாடுகள்தான் இதில் அங்கம் பெற வில்லை. அவை இரு ஜெர்மனிகள்; இரு கொரியாக்கள்: இரு வியட்நாம்கள்; ரொடிஷியா நாடு (இது இன்னும் சட்டபூர்வமாக உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படாதது); சுவிட்சர்லாந்து; (ஐ. நாவில் அங்கம் வகிக்காமல் தனித்து இயங்க விரும்புவது) தாய்வான் (தற்போது ஐ நா. விலிருந்து வெளியேறி விட்டது. சீனாவில் பிரதி நிதித்துவம் அளிக்கப்படுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

அங்கம் வகிக்காத இந்த 9 நாடுகளின் மக்கள் தொகை 20 கோடி ஆகும்.

''நன்றாகச் சொன்னாய் கண்ணகி! மைக்கேல் வேலை செய்த புத்தகக் கடைக்கு ஒருவர் வழக்கமாக வந்து கொண்டிருந்தார். அவர் மைக்கேலின் விஞ்ஞான ஆர்வத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். அந்தச் சமயம், சர் ஹம்பிரி டேவி என்னும் பிரபலவிஞ்ஞானி நான்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தவிருந்தார். அந்தக் கூட்டத்துக்கு மைக்கேலை அவர் அழைத்துச் சென்றார். நான்கு சொற்பொழிவுகளையும் மிக உன்னிப்பாகக் கேட்ட மைக்கேலுக்கு எல்லையில்லா ஆனந்தம் ஏற்பட்டது. உடனே ஒரு பெரிய கடிதத்தை எழுதி சர் ஹம்பிரிக்கு அனுப்பினான்....''

''கடிதத்தில் மைக்கேல் என்ன எழுதியிருந்தார்?''

''சர் ஹம்பிரி 'ராயல் இன்ஸ்டிடியூஷன்' என்ற விஞ்ஞானக் கூடத்தை நிறுவியிருந்தார். அங்கு ஒரு சிறு வேலை தர முடியுமா என்றும், தனக்கு விஞ்ஞானத்தில் அளவு கடந்த ஆர்வம் உண்டு என்றும் எழுதியிருந்தான்.''

''அதற்கு அவரிடமிருந்து பதில் வந்ததா?''

''வந்தது. ஆனால் எந்த உறுதிமொழியும் அதில் இல்லை. 'விஞ்ஞானம் ஒரு பொல்லாத எஜமானி; அதன் மூலம் ஒருவர் பிரதிபலன் பெறுவது முடியாத காரியம்' என்று எழுதியிருந்தார். பிறகு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று முயற்சிப்பதாகவும் அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.''

''ஐயோ, பாவம்! மைக்கேலுக்கு வேறு வேலையே கிடைக்கவில்லையா?''

''மைக்கேலின் தகப்பனார் இறந்துவிட்டதால், குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இவர் மேல் விழுந்தது. அமைதி சிறிதும் இல்லாமல் எங்கெங்கோ அலைந்தார். ஆனால், இதற்கிடையில் ஏதேதோ சோதனைகளைச் செய்து கொண்டுதான் இருந்தார். இலண்டனில் உள்ள ஒரு புத்தகப் 'பைண்டிங்' கடையில் மைக்கேல் வேலைக்கு அமர்ந்தார். ஆனால் அதிலும் அவருக்குச் சலிப்பு ஏற்பட்டது......''

''...ந்த வேலையையும் அவர் ...ட்டு விட்டாரா?''

''ஆமாம். திடீரென்று ஒரு ... சர் ஹம்பிரியிடமிருந்து ...கம் வந்தது. தம்மை ... 'ராயல் இன்ஸ்டிட்டி...ல்' பார்க்கும்படி அதில் ...ப்பிட்டிருந்தது. மைக்கேல் ...ழ்ச்சியால் துள்ளிக் குதித்...ன். ம.|நாள் காலை ...ம்பிரியைச் சந்தித்தான். ...மக்கேலுக்கு அச்சோதனைச் ...லையில் 'உதவியாள்' வேலை ...ளிக்கப்பட்டது. சோதனைச் ...லையைப் பெருக்குவது, ...ோதனைக் கருவிகளைத் துடைப்...ப்பது, மற்ற எடுபிடி வேலைகளைச் ...செய்வதுதான் இந்த உதவி...யாளன் வேலை! இதற்குச் ...ம்பளம் வாரத்துக்கு ஆறு ...டாலர்!''

''மைக்கேலுக்கு இந்த வேலை ...யாவது பிடித்ததா?''

''அவருக்கு விருப்பமான வேலையாயிற்றே இது. விடுவாரா? ஹம்பிரியின் மேற்பார்வையில், மைக்கேல் பீட்ருட் ...ழங்கிலிருந்து சர்க்கரை எடுப்பதிலும் நைட்ரஜன் குளோரைடு தயாரிப்பதிலும் வெற்றி கண்டார்.

ஹம்பிரி வெளிநாடுகளுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார். மைக்கேலையும் தம்மோடு வரும்படி அழைத்தார். அதற்கு மனப்பூர்வமான ஒப்புதலை அளித்த மைக்கேல் அவருடன் பல நாடுகளைக் காணும் அரிய வாய்ப்பைப் பெற்றார். பல நாட்கள் மேனாடுகளிலேயே சுற்றிக்கொண்டிருந்த மைக்கேலுக்குத் தாய் நாட்டின் நினைவு வராமலில்லை. தம் குடும்பத்தினரின் நினைவும் அடிக்கடி வந்தது. அவர் தம் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினார்...'

''கடிதமா? அதில் என்ன எழுதியிருந்தார், அண்ணா?''

''எத்தனை நாடுகளுக்குச் சென்றாலும், நம் இங்கிலாந்தையும், வீட்டாரையும், நண்பர்களையும் என்னால் மறக்கவே முடியவில்லை. 'எதற்கு இந்த வீண் அலைச்சல்? வீட்டுக்குப் போய் விடுவோம்' என்ற எண்ணம் எனக்கு வந்ததுண்டு. ஆனால் என் எதிர்காலம் ஒன்று இருக்கிறதே, அதற்காக நான் பொறுமையாயிருக்கிறேன் — என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.''

''பிறகு தாய்நாட்டிற்கு வந்தாரா? வந்து ஏதாவது செய்தாரா?''

''தாய் நாடு வந்தார். தாம் வேலை பார்த்த சோதனைக் கூடத்தில் தாமே சொந்தமாகச் சோதனைகளைச் செய்தார். பல சோதனைகளும் சம்பளமும் இப்போது அவருக்குச் உயர்த்தப்பட்டது. சொற்பொழிவுகள், கட்டுரைகள் எழுதுதல் முதலிய நல்ல பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். 1821-ஆம் ஆண்டில் மைக்கேலுக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர்

சாரா பெர்னார்டு. திருமணத்துக்குப் பிறகு மைக்கேல் மளமளவென்று முன்னேறினார். விஞ்ஞானம் சம்பந்தமாக 158 கட்டுரைகளும், மின்சார ஆராய்ச்சி சம்பந்தமாக 30 தொடர்க் கட்டுரைகளையும் எழுதினார்.

''இவையெல்லாம் ஓர் அறிவுக் களஞ்சியமாக விளங்கியதைப் பலரும் பாராட்டினார்கள். சொற்பொழிவுகள் பல நிகழ்த்திப் பேரும் புகழும் பெற்றார். மைக்கேல் குழந்தைகளுக்காகக் கூடத்தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்.''

''மைக்கேல் குறிப்பாக என்னெத்தைக் கண்டுபிடித்தார், அண்ணா?''

''காந்தத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என்பதைக் கண்டுபிடித்தார் அன்று முதல் மின்சார யுகம் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து அவர், மின்சாரத் தூண்டுதல் பற்றிய தம் தத்துவத்தை நிரூபித்துக் காட்டினார். இதை ஆதாரமாகக் கொண்டு தான் இப்போது தொலைபேசி இயங்குகிறது. மேலும் பலவித மின்சாரங்களிடையே உள்ள ஒற்றுமைகளை அவர் நிரூபித்துக் காட்டினார். மின்சாரத்தின் மூலம் ஒளியை உற்பத்தி செய்யலாம் என்ற மைக்கேலின் வெற்றி, மகத்தான வெற்றியாகும்.''

''முயற்சி இருந்தால் எவரும் முன்னேறலாம் என்பதற்கு மைக்கேல் வாழ்க்கை ஒரு முன்னுதாரணம். இல்லையா அண்ணா?''

''ஆமாம், கண்ணகி. மைக்கேலுக்கு 49 வயதாகி விட்டது. கடைசி வரை அவர் கொஞ்சமும் தளராமல் உழைத்து வந்தார். உலகம் முழுவதிலுமிருந்து மைக்கேலுக்குப் புகழ் தேடி வந்தது. பிரிட்டிஷ் அரசியார் மைக்கேலுக்கு ஒரு அழகிய மாளிகையை அன்பளிப்பாக அளித்தார். இந்த மாளிகையில் தான் மைக்கேல் 1867-ஆம்ஆண்டு காலமானார்.''

''ஐயோ, பாவம்...... வாழ்நாள் முழுவதும் விஞ்ஞானத்துக்காகவே வாழ்ந்த மைக்கேல் ஃபாரடேயின் புகழ் மறையாது, இல்லையா?''

''ஆமாம், இவ்வளவு புகழ் வாய்ந்த மைக்கேல் ஆடம்பர மற்றவர்; எளிமையானவர். அவர் இறப்பதற்கு முன்பு, தம் உடல் அமைதியான சாதாரண இடத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்றும், தம் கல்லறை மீது ஏதும் எழுதப்படாத ஒரு சலவைக் கல் மட்டுமே பதிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாராம். போலவே அவர் விருப்பம் போலவே செய்யப்பட்டார். அடக்கம் மைக்கேல் ஃபாரடேயின் வாழ்வு இன்றையப் பிள்ளைகளுக்கு ஒரு முன் மாதிரியாக இருந்து, அவர்கள் முன்னேற வழி செய்யும் என்று நம்புகிறேன்!''

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

அரசினர் காசநோய் மருத்துவ மனை

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தக் குத்தகையை ஏற்றுக்கொள்ளும் தகுதிப் பெற்ற அதிகாரி ஒவ்வொரு விசயத்திலும் திட்டமாக குறிப்பிடும் மற்ற தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதியோடு முடிவடையும் காலத்திற்கு நாகர்கோவில் அரசினர் காசநோய் மருத்துவ மனைக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்களையும், மற்றும் மருத்துவ மனைக்கான இதர சாதனங்களையும் வழங்குவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) தமிழ்நாடு ஆளுநர் அவர்களது சார்பில் இம்மருத்துவமனை கண்காணிப்பாளரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பற்றிய நிபந்தனைகளடங்கிய பிரதி, ஒப்பந்தப் புள்ளி நமூனு தேவையான பொருட்களின் அட்டவணை இவைகளை இம்மருத்துவமனை அலுவலகத்திலிருந்து அலுவலக நேரங்களில் பணிபுரியும் எல்லா நாட்களிலும் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான அடக்க விலை ரூ.5·18 (ரூபாய் ஐந்து, காசு பதினெட்டு) விற்பனைவரி உட்பட இந்தத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. இந்தத் தொகையைத் தமிழ்நாடு ரிசர்வ் பாங்கியிலோ அல்லது ஸ்டேட் பாங்கியின் ஏதாவது ஒரு கிளையிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ, கீழ்க்கண்ட விவரப்படி,

ஒப்பந்தப்புள்ளி நமூனு	—ரூ. 5·00
விற்பனை வரி	—ரூ. 0.18
மொத்தம்	—ரூ. 5.18

பணம் செலுத்தும் சீட்டில் எழுதி (சலானில்) XXIII. Medical G. Miscellaneous Director of Health Services & Family Planning என்ற தலைப்பில் செலுத்தி, செலுத்துச் சீட்டை இவ்வலுவலகத்திற்கு அனுப்பும் விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒப்பந்த நமூனுவின் கிரயத்தை ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேற்கொண்டுள்ள முழு விவரங்களுக்கு கீழே ஒப்பமிட்டவரை அணுகவும்.

டாக்டர் டி.எல். இராசசேகரன்,
எம்·பி,பி.எஸ், டி.டி.டி.
கண்காணிப்பாளர்,
அரசினர் காசநோய் மருத்துவ மனை.

நாகர்கோவில்,
8—11—1971.

(த. 16)

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2, என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 6—1—1972 (வியாழக் கிழமை) பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: திருச்சி வடிகால் திட்டம்—இரண்டாம் நிலை—பகுதி ஒன்று ஐந்தாவது பகுதியில் ஸ்டோன்வேர், சி. ஐ. குழாய்களும், ஏனைய இதர உறுப்புகளும் பதித்தலும், இணைத்தலும்—சம்பந்தமாக.

ஒப்பந்த வகை — மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை: ரூ. 19,000 (ரூபாய் பத்தொன்பதாயிரம் மட்டும்). இத் தொகை கருவூலச்செலான் பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப்பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும். காசோலை ஒப்புக் கொள்ளப்பட மாட்டா.

வேலையினை முடிப்பதற்குரிய காலஅளவு: பன்னிரண்டு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: 20.70 (ரூபாய் இருபதும் காசு எழுபதும் மட்டும் விற்பனைவரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 30-12-71 (திங்கட்கிழமை) மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ. சு. பொ.) குடிநீர்,
வடிகால் வாரியம்.

மதுரை—2,
14—11—71.

(த.14)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1 தேசிய நெடுஞ்சாலை-மைசூர் சாலை எல்லை, கிருஷ்ணகிரி சேலம் சாலையில் கி.மீ. 161.2-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல்.	7,325
2 தேசிய நெடுஞ்சாலை-மைசூர் சாலை எல்லை, கிருஷ்ணகிரி, சேலம் சாலையில் கி.மீ. 163.4-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல்.	9,080
3 தேசிய நெடுஞ்சாலை-மைசூர் எல்லை, கிருஷ்ணகிரி சேலம் சாலையில் கி.மீ. 171.4-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல்.	1,400
4 தேசிய நெடுஞ்சாலை-மைசூர் கிருஷ்ண கிரி சேலம் சாலையில் கி.மீ. 177.8-ல் உள்ள சிறு பாலத்தைப் புதுப்பித்தல்.	3,035
5 தேசிய நெடுஞ்சாலை 7-ல் சேலம் மாற்றுப் பாதையில் உள்ள மணிமுத்தாற்றின் குறுக்கே கி.மீ. 44-ல் பாலம் கட்டுதல்.	4,875

ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைப்படங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் அலுவலகத்தில் 15—12—71 முதல் 21—12—71 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேல்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவினியூ டெபாஸிட்' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர்(நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

தி. மு. அ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

(த.3)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை. ரூ.
தேசிய நெடுஞ்சாலை-பனரஸ், கன்னியா குமரி சாலை கி.மீ. 209/2 (மைல் 80/1) உள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுதல்.	1,420

ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைப்படங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சிறப்புக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 15—12—71 முதல் 21—12—71 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டி பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேல்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

தி. மு. அ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.13)

611

போக்குவரத்துத் துறை

அண்ணா சாலை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில், நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை, சென்னை-2 அவர்களால் வரும் மூன்று வருடத்திற்குக் கீழ்க்கண்ட ஸ்டால்கள் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணாசாலை(மவுண்ட்ரோடு), சென்னை 2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் 20-12-1971 3 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 2-வது நெம்பர் ஸ்டால் பலவகைப் பொருள்கள் (General Merchants).

2. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 3-வது நெம்பர் ஸ்டால் புதிய பழங்கள் காய்கறிகள் விற்றல்(General Merchandise).

ஒப்பந்தத்திற்கான விதிகள், நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1.04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

இயக்குநர்.

(த.2)

மின்சார வாரியம்

மேட்டூர் மின் இயக்கத் திட்டம், மேட்டூர் அணை-1

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு, மேட்டூர் மின் திட்ட மேற்பார்வை மின் பொறியாளரால் 31-12-1971 தேதி பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed Tender) ''மேட்டூர் கான்கிரிட்டு கம்பங்கள் செய்யும் இடங்களாகிய (1) நேரு நகர், (2) டி. டி.சி. சென்ட்டர் அருகிலுள்ள தொட்டிகளிலிருந்து மேட்டூர் மின் திட்ட எல்லைக்கு ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு 7.32 மீட்டர், 8.23 மீட்டர் மற்றும் 9.14 மீட்டர் கான்கிரிட்டு கம்பங்களை குத்தகைச் சீட்டு ஒப்புக் கொள்ளக்கூடிய தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குக் கொண்டு சேர்க்கின்ற வேலைக்குவரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், நிபந்தனைத் தாள்கள், பிரதி ஒன்றுக்கு ரூ. 5.00 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத் தக்கது அல்ல) பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ, மேட்டூர் மின் இயக்கத் திட்ட தலைமைக் கணக்காயரிடம் (செலவினம்) செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 24-12-1971. குத்தகை விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் சாதாரண அஞ்சல் மூலமாக மட்டும் (அஞ்சல் செய்யப்பட்ட அடையாளம் பெற்று) அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினாலோ அல்லது உரியகாலத்தில் கிடைக்காது போனாலோ மின்சார வாரியம் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் புள்ளி மற்றும் நிபந்தனைகள் அடங்கிய தாள்கள் மாற்றித்தரத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவரால் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத்தொகையாக மேட்டூர் மின்திட்ட தலைமைக் கணக்காயரிடம் நேரில் செலுத்தி ரசீது பெற்றோ அல்லது ஷெட்யூல் வங்கியில் செலுத்தப்பட்ட பண மாற்றோலையோ (Demand Draft) குத்தகை நிபந்தனைத் தாளுடன் இணைத்துஅனுப்ப வேண்டியது. பணமாற்றோலையோ அல்லது கட்டுத் தொகையோ செலுத்தியதற்கான ரசீதோ இணைக்கப்படாத குத்தகைத் தாள்கள் தள்ளுபடிசெய்யப்படும். குத்தகை தாள்கள் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 31-12-1971 தேதி பிற்பகல் 4-00 மணியளவில் திறக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளும்ஒப்பந்தங்களும் 30-11-1971ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மேட்டூர் மின் திட்டம்,
மேட்டூர் அணை-1.

(த.1)

வனத்துறை

வனப்பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை ''வனப் பொறியாளர், திருச்சி'' தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

''உள்ளூர் தாண்டா—பர்கூர் சாலை 6.4 கி. மீ. அமைத்தல், பர்கூர் வனச்சரகம், கோயம்புத்தூர் வடக்கு வனக்கோட்டம்''

அச்சாரம் (இ. எம். டி.) ரூ. 4,200.

ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 20—12—1971. நேரம் முறையே மாலை 3-00, 3-05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை ''வனப்பொறியாளர் 1-ஏ ராயல் ரோடு'' கண்டோ மெண்ட், திருச்சி-1'' என்றமுகவரியிலிருந்து ரூ. 1.04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி அலுவலக வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முக சுந்தரம்,
வனப்பொறியாளர்.

(த.9)

ஏலம்

காவல்துறை நீலகிரி மாவட்டம்

இக்காவல் துறைக்குச் சொந்தமான ஒரு பழுதடைந்த பர்கோடைப் மூடப்பட்ட மோட்டார் வாகனம் (Fargo closed type pick up Van) MDN 5021(1960) மாடல் வண்டி 25-12-1971 தேதியன்று காலை 10 மணியளவில் இம்மாவட்டக் காவல் துறை அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

2. ஏலம் எடுக்க விருப்பமுள்ளவர்கள் அதற்கான விதிகளை இந்த அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

டி. நாராயணசாமி,
மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், நீலகிரி உதகமண்டலம்.

22—11—1971

(த.10)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 22–12–71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கு ''குறளக கட்டடம்'' நான்காவது மாடியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப் படும்.

வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1 வாரணசி கன்னியாகுமரி சாலையையும் கிருஷ்ணகிரி இராணிபேட்டை சாலையையும் இணைக்கும் துணைச் சாலையில் கி. மீ. 1.6-ல் ஒரு பாலம் கட்டும் வேலை.	3,290
2 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 33/2-ல் பாலம் கட்டுதல்.	1,810
3 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 38/6-ல் பாலம் கட்டுதல்.	3,610
4 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 40/2-ல் பாலம் கட்டுதல்.	1,350
5 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 52/2-ல் பாலம் கட்டுதல்.	4,090
6 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 55/0-ல் பாலம் கட்டுதல்.	3,000
7 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 94/4-ல் பாலம் கட்டுதல்.	3,720
8 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 98/2-ல் பாலம் கட்டுதல்.	1,830
9 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 107/6-ல் பாலம் கட்டுதல்.	4,860
10 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 84/4-ல் பாலம் கட்டுதல்.	2,000
11 வாரணசி கன்னியாகுமரி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண் 7) மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரி சேலம் பகுதியில் கி.மீ. 73/0-ல் கட்டுதல்.	1,920

ஒப்பந்தப் புள்ளிகள் 22–12–71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலிய வற்றை கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சென்னை-1 அலுவலகத்தில் 15–12–71 முதல் 21–12–71 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப் பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சென்னை-1 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவின்யூ டெபாஸிட்' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சென்னை-1 பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானல் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில்தான் இருக்கவேண்டும். தவிர, இந்திய ரிசர்வ் பாங்கின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

தி. மு. அ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.6)

ஒப்பந்தப் புள்ளி

பொறியியல் பணித்துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம், சென்னை-5

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. சென்னை-செங்கற்பட்டு வட்டம், சென்னை-5 அவர்களால் அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

1.	வேலையின் பெயர் ..	சைதாப்பேட்டை வட்டம், வேளச்சேரியில் 1 உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர், 9 காவலர் குடியிருப்பு கட்டுதல்.	சைதாப்பேட்டை வட்டம், திருவான்மியூரில் 1 உதவி ஆய்வாளர், 1 தலைமைக் காவலர், 13 காவலர் குடியிருப்பு கட்டுதல்.
2.	ஒப்பந்த முறை	மொத்தத் தொகை ..	மொத்தத் தொகை.
3.	பிணைப்பொறுப்புத்தொகை:	ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்).	ரூ. 3,600 (ரூபாய் மூவாயிரத்து அறுநூறு மட்டும்).
4.	ஒப்பந்தப் பத்திரங்களின் : விலை.	ரூ. 20.	ரூ. 20.
5	விற்பனை வரி —	ரூ. 0-66 (அறுபத்தாறு காசு மட்டும்).	ரூ.0-66 (அறுபத்தாறு காசு மட்டும்).
6.	முடிக்கவேண்டிய காலம் :	4 மாதங்கள்.	4 மாதங்கள்.
7.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாட்கள் (கிடைக்குமிடம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்).	20—12—1971-லிருந்து 27—12—1971 வரை.	20—12—1971-லிருந்து 27—12—1971 வரை.
8.	விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் நாள்.	28—12—1971 மாலை 3 மணி	28—12—1971 மாலை 3 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையும், விற்பனை வரியும் முறையே அரசின் கருவூலத்தில் (XXXVII Public Works—state Misc.) மற்றும் (XII sales tax (b) receipts under the state sales-tax—General Sales-tax) என்ற தலைப்புகளின் கீழும் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச் சலான் மேற்கண்டவேலைகளுக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறுமல் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளருக்கு எந்த ஒப்பந்தங்களையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையுண்டு

மற்ற விதிகளும், விவரங்களும் விரிவாக ஒப்பந்தப் பத்திரங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம்.

(கூ. 11)

ஒப்பந்தப் புள்ளி

ந.க. எண். 31136/71/வ 2/நாள் 17–11–1971.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப் பணித்துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெரு வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைக்கு பதிவுச் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிட மிருந்து மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் 30-12-1971-ஆம் தேதி மாலை 4 மணி வரை அரக்கு முத்திரை யிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள் ளப்படும்.

வேலையின் பெயர்:	(1) முதுகுளத்தூர் வட்டம் பரளை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டிகீழத் தூவல் கீரனூர் மற்றும் 32 கண் மாய்களுக்குப் பாசனம் வழங் குதல்.	(2) கீரனூர் கீழத் தூவல் கால் வாய் வெட்டு தல்.
ஒப்பந்த வகை:	கே. 2.	கே. 2.
கட்டுத் தொகை:	ரூ. 7,290.	ரூ. 2,220.
ஒப்பந்தப்புள்ளிவிலை பிளான்கள் உட்பட.	ரூ. 20.70.	ரூ. 10.35.
வேலை முடிக்க வேண்டிய காலம்.	12 மாதங்கள்.	12 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி விலையாக ரூ. 20, ரூ. 10, ''பி.டபிள்யு டி. III ஓ.ஆர்'' என்ற கணக்குத் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொ.ப.து., சிவகெங்கை அவர்கள் கணக்கி லும் விற்பனை வரிக்கான ரூ. 0.70, 0.35 காசை '' 12 விற்பனை வரி'' என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கரு வூலத்தில் செலுத்தி ரசீதுகளைத் தனித்தனியாக அனுப்ப வேண்டும். இத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர்(பொ.ப. து.), இராமநாதபுரம் பெருவட்டம், மதுரை அலுவலகத்தில் 22–12–1971 முதல் 28–12–1971 வரை விற்பனைக்காக இருக்கும். ஒப்பந்தப் புள்ளிகள் கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 28–12–1971 மாலை 5 மணிக்கு வந்து சேர வேண்டும். இதற்குப் பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர் களிடமிருந்து கட்டுத் தொகையை அரசாங்கக் கருவூலத்தி தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெட் யூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும், மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்சாரவாரியக் கடன் பத்திரங்கள், அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் முதலிய வைகள், அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எவ் வளவு குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எவ்விதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திற்கான வருமான வரி, விற்பனை வரி முதலியவைகளைச் செலுத்தியதற்கு அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ண யிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில் தொகைக் குறி யிட்டு கொடுக்காமலோ இருந்தால் அவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறிாளர் அவர்கள் எக்காரண அறிவிப் பையும் உரிமைப் படுத்தாமல் ஏதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைப் பெற்றுள்ளார்.

ரெ. ராமசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
இராமநாதபுரம் வட்டம், மதுரை.

(தூ.19)

தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் பல ஜாதிகள்

இடம்—அரசாங்க தடிமண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும்—27 & 28—12—1971 முற்பகல் 9·00.

அளவு—ஏறத்தாழ 1,000 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலுள்ள மண் டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி,
தென் பிரிவு.

(தூ.29)

அரசினர் மருத்துவமனை தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்குத் தேவையான உணவுப் பொருள் கள் முதலியவற்றை வழங்குவ தற்கான ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள அரசினர் மருத்துவமனைகளுக்கு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம்நாள் முதல் ஆரம்பமாகும் அல்லது ஒவ்வொரு விஷயத்திலும் அதி காரியால் ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ள குறிப்பிடப்படும் அத்த கைய இதர நாளிலிருந்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளோடு முடிவடையும் காலத்திற்கு உணவு மற்றும் இதர மருத்துவமனைகளுக்குத் தேவை யான பொருள்கள் வழங்குவதற் கான முத்திரையிட்ட ஒப்பந்தங் கள் 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7-ஆம் நாள் வெள்ளிக் கிழமையன்று மாலை 2 மணிவரை சம்பந்தப்பட்ட மருத்துவ அலு வலர்கள், சூப்பிரின்டெண் டெண்ட் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும் என்று இதனால் அறிவிக்கப்படுகிறது :—

(1) அரசினர் மாவட்ட தலைமையக மருத்துவ மனை, நாகப்பட்டினம்.

(2) கும்பகோணம், மன்னார் குடி, மாயூரம், திருவாரூர், பட்டுக் கோட்டை, திருத்துறைப்பூண்டி, சீர்காழி, நன்னிலம், அதிராம்பட் டினம், அறந்தாங்கி, பொறை யார், திருக்காட்டுப்பள்ளி, கூத்தா நல்லூர், திருப்பனந்தாள், பேரா ஊரணி ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசினர் பெண்கள் மற்றும் சிசு மருத்துவமனை.

(3) பாபநாசம், குற்றாலம், குடவாசல், சுவாமிமலை, அம்மா பேட்டை, வைத்தீஸ்வரன் கோவில், திருவிடமருதூர், நாச் சியார் கோயில், வலங்கைமான், சுந்தரப்பெருமாள்கோயில் மற் றும் கிளியனூர் ஆகிய இடங்களி லுள்ள அரசினர் மருந்தகங்கள்.

குறிப்பு.—திருத்துறைப்பூண்டி பெண்கள் மற்றும் சிசு மருத்துவ மனைக்கான ஒப்பந்தப் புள்ளி, திருத்துறைப் பூண்டி அரசினர் மருத்துவமனை மருத்துவ அலு வலர், அவர்களால் அவரது அலு வலகத்தில் பெற்றுக்கொள்ளப் படும்.

தேவைப்படும் பொருள்களின் அட்டவணையுடன் ஒப்பந்த நிபந் தனைகளின் பிரதியும் மற்றும் ஒப்பந்த நமூனாவின் பிரதியும் மேற்படி அலுவலர்களிடமிருந்து மேற்படி நமூனாக்களின் விலையான ரூ. 5-யும், விற்பனை வரிக்காக காசு (15) பதினைந்தையும் சேர்த்து (ரூ. 15)-ஐ ஒரே செலானில் கட்டி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகைத் திரும்பப் பெறக் கூடியதல்ல. இக்கட்டணம் ரூ. 5.15-யை சென்னை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளைகளிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலத்திலோ சென்னை அரசின் கணக்கிற்கு முறையே, XXXIII Medical-I. Director of Health services and Family Planning—G. miscellaneous other receipts", " XII sales-tax receipts under the state sales-tax Act—General sales-tax". என்ற தலைப்பின் கீழ் செலுத்தப் பட வேண்டும். விற்பனை வரி செலுத்துவதை விவரமாக செலா னில் குறிப்பிட்டுள்ள (On what account with authority if any and Head of Account)-ன் கீழ் குறிப்பிட வேண்டும். நமூனாக்களைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட மருத்துவமனை அல்லது நிறுவனங்களில் அலுவ லகத்தில் எந்த வேலை தினத்தி லும் காலை 11 மணி மற்றும் மாலை 5 மணிக்கு இடையில் செலான் கள் தாக்கல் செய்யப்பட வேண் டும். எக்காரணத்தைமுன்னிட்டும் ரொக்கம் பெற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்றோ அல்லது அந்த நாளுக் குப் பிந்திய ஏதாவதொரு நாளி லோ பெறப்பட்ட சால்வென்சி சர்டிபிகெட்டை, அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நமூனாவில் ஒரு தாசில்தார் கையொப்பத் துடனோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் நற்சான்று டன் கூடிய அதன் நகல் பிரதி யையோ கட்டாயமாக இணைத்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் மதிப்பீடா னது ரூ. 10,000-க்கும் மேம் பட்டதாக இருப்பின் அத்தகைய ஒப்பந்தத்துடன் இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் கிளி யரன்ஸ் சர்ட்டிபிகேட் ஒன்றை யும் ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

(3) ஒவ்வொரு ஒப்பந்தத் துடன் 1971-ஆம் ஆண்டு அக் டோபர் திங்கள் முதல் நாளன்றோ அல்லது அதற்குப் பிந்திய ஏதா வது ஒரு நாளிலோ தாசில்தார் அந்தஸ்திற்குக் குறையாத ரெவின்யூ அலுவலர் அல்லது தாசில்தார் சார்பில் செயல்படும் ஹெட்குவாட்டர்ஸ்டெபுடிதாசில் தாரிடமிருந்து பெறப்பட்ட நேஷ னலிட்டி சர்ட்டிபிகேட் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் ஒருவரின் நற்சான்றுடன் கூடிய அதன் நகல் பிரதியையோ இணைத்து அனுப்ப வேண்டும்.

(4) ஒப்பந்தப் புள்ளி கொடுப் பவர், ஒப்பந்தத்தைக் கொடுத்த பின்பு தன்னுடைய ஒப்பந்தம் சம்பந்தமாக இவ்வலுவலகத் திற்கு தனிப்பட்ட எவ்விதக் கடி தப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளக்கூடாது.

டாக்டர் கா. குழந்தைவேலு,
எம்.பி.பி.எஸ்., மாவட்ட மருத்துவ அலுவலர், தஞ்சை இருப்பு, நாகப்பட்டினம்.

21-10-1971.

(தூ. 12)

குறுகிய கால மறு ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை சென்னை வட்டம், சென்னை-25

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை) சென்னை வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 29—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்.	முன் வைப்புத் தொகை. ரூ.	ஒப்பந்த நமூனு கிடைக்குமிடம்.
கீழ்பாலூர். என். சி. வீரலூர் சாலைக்குச் செல்லும் சாலையை மேம்பாடு செய்தல், கி.மீ. 0·0—11·2.	2,750	கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணுமலை.

ஒப்பந்தங்கள் 29—12—1971 அன்றே மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனுக்கள் வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணுமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25·75 செலுத்தி 15—12—1971 முதல் 28—12—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணுமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணுமலை பெயரில் செலுத்தி செலுத்துச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்களின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினுல் அதற்கான, ''ரிசர்வ் வங்கி''யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) சென்னை வட்டம்.

26—11—1971.

(தூ.31)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

1642/எஸ்.டி. 2/71, தேதி 24—11—1971.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியம், சார்பாக கீழ் வரும் பணிக்கு, அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், 30—12—1971 மாலை 3·00 மணிமுடிய கோவை பொதுச் சுகாதார மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்ருவது வீதி, டாடாபாட், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ, வரப்பெற்ற ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(1) பணியின் பெயர்—சேலம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம். இரண்டாம் நிலை-இரண்டாம் கட்டம் (பகுதி 1) 20, 24 அங்குல கிராவிட்டி மெயின் பைப்புகளைப் பதித்தல் மற்றும் இணைத்தலும் மற்ற வேலைகள் செய்தல்.

(2) ஒப்பந்த முறை—மொத்தத் தொகை (L. S.).

(3) பிணைப்பணம்—ரூ. 8,960 (ரூபாய் எண்ணுயிரத்து தொளாயிரத்து அறுபது மட்டும்.)

(4) பணி முடிக்க வேண்டிய காலம்—ஆறு மாதங்கள்.

(5) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட).

(6) ஒப்பந்தப் பத்திரங்கள் விற்கப்படும் தேதி—29—11—1971 முதல் 28—12—1971 முடிய.

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், 28, ஔவையார் தெரு, சுப்பிரமணியம் நகர், சேலம்-5 விலாசத்துக்கு, மணி ஆர்டர் மூலமாகவோ, நேரில் பணம் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

பிணைப்பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின்''கேட்பு வரைவோலை'',சேலம் நிருவாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தவோ அல்லது கருவூலகத்தில், சேலம் நிருவாகப் பொறியாளரின் சார்பில் ''பி.டபிள்யூ. III OR''—தலைப்பில் செய்யப்படலாம். அங்கீகாரம் செய்யப்பட்ட வங்கிகளின் பொறுப்புறுதிகள் பிணைப் பணத்திற்காக ஒப்புக் கொள்ளப்படும். பிணைப்பணம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்க உட்பட்டது.

மேற்பார்வைப் பொறியாளருக்கு ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா ஒப்பந்தங்களையோ காரணம் கூறுமல் நிராகரிக்க உரிமையுண்டு.

சே. ம. சாகுல்அமீது,
மேற்பார்வைப் பொறியாளர்.

(தூ.30)

பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்:—வேலூர் கோட்டையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியில் ஓர் ஆய்வாளர் மற்றும் மூன்று உதவி ஆய்வாளர்கள், ஒரு ரிசர்வ் ஆய்வாளர் நான்கு தலைமை காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும் அரசினர் பிறதுறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 29—12—1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3·15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை:—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,100.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்:—ரூ. 20-60 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.

முடிக்கப்பட வேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 13—12—1971 தேதி முதல் 27—12—1971 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும் ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20-00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) P. W. D. கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் Remittaces III Other Remittances என்ற தலைப்பின் கீழ் நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, வேலூர் கோட்டம், வேலூர் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·60 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் X-II Sales tax(b)Receipts Under State Sales tax Act General salos tax என்ற தலைப்பின் கீழ் செலுத்துப் படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினுல் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டுவடிவிலோ தேசியச் சேமிப்புப்பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது ''டிமாண்ட்'' டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்டு டிராப்ட்டுகள் '' செயற் பொறியாளர், (பொ. ப. து.) வேலூர், கோட்டம், வேலூர் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசீயச் சேமிப்பு நற்சான்று பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ந. சு. இராமசுவாமி.
மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
செங்கற்பட்டு வடார்க்காடு மாவட்டம், வேலூர்.

(தூ.36)

வேலைவாய்ப்பு

கோவை மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொளத்துப்பாளையம் ஆயுர்வேதிக் கிராம மருந்தகத்திற்குப் பகுதி நேர ''ஏ'' வகுப்பு மருத்துவராக நியமனம் செய்ய 10–1–72-க்குள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதச் சம்பளம் ரூ. 150 (நிர்ணயம் செய்யப்பட்டத் தொகை).

ஈ. முகமது ஜலீல், பி.இ.,
ஆணையர் (பொறுப்பு),
தாராபுரம்.

(தூ.22)

சேலம் மாவட்டத்தில் உள்ள துவக்கப் பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகளுக்கு 1971–72 ஆம் ஆண்டிற்கு விஞ்ஞானக் கருவிகள் மற்றும் விளக்கப் படங்கள் முதலியன வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 31–12–71 தேதி மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்த விதிகள் மற்றும் விநியோகம் செய்யப்பட வேண்டிய விஞ்ஞானக்கருவிகளின் பட்டியலை அலுவலக வேலை நேரத்தில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. மேலும் ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் ரூ. 300 (ரூபாய் முன்னூறு மட்டும்) மதிப்புள்ள பேங்க் டிராப்ட் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பெயரில் பெறப்பட்டு காப்புத் தொகையாக இணைக்கப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளிகள் சேலம் மாவட்ட வளர்ச்சி அலுவலர் (தெற்கு) அவர்களாலோ, அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களாலோ சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 3–1–72 காலை 12 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஆட்சித் தலைவர்,
சேலம் மாவட்டம்.

(தூ.32)

பொது விளம்பரம்

எண் : 27670/க/71, நாள் : 9–11–1971.

1972–73-ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மருத்துவமனைக்கும் இதர அரசினர் மருத்துவ மனைக்கும் ஆகாரப் பொருள்கள் முதலியன சப்ளை செய்தலுக்கான ஒப்பந்தம்.

1972 ஏப்ரல் 1-ஆம்தேதி முதல் அல்லது அதற்குப்பிந்தைய தொரு தேதி முதல் 1973 மார்ச்சு 31-ஆம் தேதி வரையில் சேலம் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள இதர மருத்துவமனைகளுக்கும் ஆகாரப் பொருள்களையும் இதர மருத்துவமனை தேவைப் பொருட்களையும் வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் மேற்பார்வையாளர்கள் அல்லது மருத்துவ அதிகாரிகள் 1972 ஜனவரி 7-ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 2 மணி வரையில் பெற்றுக் கொள்வார்கள்.

2. ஒப்பந்த நிபந்தனைகள், ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் ஆகியவற்றையும் ஒப்பந்த நமூனாவையும் அந்தந்த மருத்துவமனைக்கு விண்ணப்பம் செய்து பெறலாம். ஒப்பந்தம் செய்ய விரும்புபவர் மூன்றரை சதவிகிதம் விற்பனை வரி உட்பட ஒப்பந்த நமூனா முதலியவற்றிற்கு விலையான ரூ. 5·20 (ஐந்து ரூபாய் இருபது காசு) தொகையை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது அரசினர் கருவூலமொன்றிலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனாவுக்கான விலைத் தொகையை "XXIII Medical g. Miscellaneous Director of Health Services and Family Planning......other receipts" என்ற தலைப்பிலும், விற்பனை வரியை "XII Sales Tax Receipts under the State Sales Tax Act-General Sales Tax" என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்த வேண்டும். ஒப்பந்த நமூனா சப்ளை செய்யக்கோரி செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்துடன் கூட, அசல் சலானை சேர்த்து அனுப்ப வேண்டும். இந்தத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரமாட்டாது. ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்த பின்பு, ஒப்பந்தப் புள்ளி சம்பந்தமாக எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் மேற்கொள்ளக்கூடாது.

சேலம் மாவட்டம்.

1. அரசினர் தலைமை மருத்துவமனை, சேலம்.
2. அரசினர் மருத்துவமனை, ஆத்தூர்.
3. ௸ மேட்டூர் தேக்கம்.
4. ௸ ஓமலூர்.
5. அரசினர் மருத்துவ மனை, நாமக்கல்.
6. ௸ இராசிபுரம்.
7. ௸ திருச்செங்கோடு.
8. ௸ ஏத்தாப்பூர்.
9. ௸ சேந்தமங்கலம்.
10. ௸ வேலூர்.
11. ௸ ஏற்காடு.
12. ௸ ஜலகண்டாபுரம்.
13. ௸ மோகனூர்.
14. ௸ குமாரபாளையம்.
15. ௸ வேம்படிதாளம்.
16. ௸ சங்ககிரி.
17. ௸ வெண்ணந்தூர்.
18. ௸ ஆலம்பட்டி.
19. ௸ தம்மம்பட்டி.
20. அரசினர் தொழுநோய் மருத்துவமனை, ஏத்தாப்பூர்.

குறிப்பு :—ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடன் 1971 அக்டோபர் 1-ஆம் தேதியன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெறப்பட்டு தாசில்தார் ஒருவரால் கையொப்பமிடப்பட்ட ஒரு சால்வன்சி சர்ட்டிபிகேட்டும், நேஷனாலிடி சர்ட்டிபிகேட்டும் ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகமானால் வருமானவரி வெரிபிகேஷன் சர்ட்டிபிகேட்டும் மற்றும் ஒப்பந்தத்தின் மொத்தத் தொகை மதிப்பு ரூபாய் 1,000-க்கு அதிகப்படுமானால் விற்பனைவரி கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டும் அல்லது தமிழக அரசின் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரி ஒருவரால் அத்தாட்சியிடப்பட்ட அவற்றின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பப்படவேண்டும்.

வி. செல்வராசு, எம்.பி.பி.எஸ்.,
மாவட்ட மருத்துவ அலுவலர், சேலம்.

(த. ஆர். 1)

ஏல விற்பனை

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ஆம் வருடம், டிசம்பர் மாதம், 23-ஆம் தேதி, வியாழக் கிழமை, காலை 10-30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 21–12–71 செவ்வாய்க் கிழமையன்றும், 22–12–71 புதன் கிழமையன்றும், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

வசதி வாரியம்.
தெ. 71890 டி.2 71.
நாள், 1–12–71.

ஆணையர்,
காவல் துறை அலுவலகம்.

சென்னை-8,
1—12—71
(த.41)

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், அவர்களால் எண் 52, கொங்கு ரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29–12–1971 அன்று மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறி அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏதேனும் ஒரு அலுவலர் அவர்களால் திறக்கப்படும்.

எண்ணும் வேலையின் விவரமும்.	ஒப்பந்த முறை.	கட்டுத் தொகை. ரூ.	வேலை முடிவுறு காலம்.	ஒப்பந்தப் பத்திர விலை. ரூ.
1. மேல் விஷாரம் குடிநீர்த் திட்டம்—I-வது பகுதியில் 2.5 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. நில மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல்.	மொத்தத் தொகை.	785	எட்டு மாதங்கள்.	10.35
2. மேல் விஷாரம் குடிநீர்த் திட்டம் II-ம் பகுதியில் 6 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நில மட்ட நீர்த் தேக்கம் கட்டுதல்.	மொத்தத் தொகை.	1,700	௸	10.35

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான பணத்தை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வாணியம்பாடி என்பவர் கணக்கில் "P. W. III—OR" என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கான தொகையை "XII Sales Tax-Miscellaneous I-General Sales Tax" என்ற தலைப்பிலும் தனித் தனிச் செலான்களாகக் கட்ட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.), மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 301, ஜமாது ரோடு, வாணியம்பாடி-3 அவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை வழங்கக், கால நீட்டிப்புத் தரப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர்(ம. ந. வா. பொ.),
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,

சென்னை-8.
(த.ஆர். 7)

விளம்பரம்

எல்.ஐ.எம். (ஆயுர்வேதம்) டாக்டர் பட்டம் பெற்ற 35 வயது மேற்படாத தகுதி வாய்ந்த ஆண்களிடமிருந்தும் பெண்ணிடமிருந்தும் இந்த நகராட்சி ஆயுர்வேத வைத்தியசாலை மருத்துவ அலுவலருக்கான வேலைக்கு விண்ணப்பங்கள் 30–12–1971 மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ரூபாய் ஒன்று செலுத்தி மாயூரம் நகராட்சி அலுவலகத்திலிருந்து மனு வடிவங்களைப் பெறலாம்.

கி. வீரையன்,
ஆணையர்.

1–12–71
மாயூரம்
(த. 24)

நாகர்கோயில் நகராட்சி

இந் நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவின் பார உந்து எண் எம்.டி.கே. 1352-ஐ பழுது பார்க்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 27–12–1971 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். பழுது தீர்க்க வேண்டிய விவரங்கள், நிபந்தனைகள் முதலியன விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ நகர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டால் நேரில் தெரிந்துக்கொள்ளலாம்.

பொறுப்புத் தொகை ரூ. 100.

நிபந்தனைகள்.

1 பழுது பார்க்கப்பட்டபின் பார உந்து தகுதிச் சான்றிதழ் பெறத் தக்கதாக இருக்கவேண்டும்.

2 பழுது வேலைகள் நகராட்சிப் பொறியாளர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டதாக இருக்கவேண்டும்.

3 ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலையைத் தவிர கூடுதல் வேலையோ, கூடுதல் உதிரி உறுப்புக்களோ அனுமதிக்கப்பட மாட்டாது.

4 எல்லாப் பழுது வேலைகளும் நகராட்சி வளாவினுள் செய்யப்படவேண்டும்.

தங்கவேலு,
ஆணையர்.

நாகர்கோயில்
29—12—71
(த.21)

ஸ்ரீரங்கம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 29–12–1971 மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

	வேலை விபரம்.	மதிப்பீடு.	கட்டுத் தொகை.
		ரூ.	ரூ.
1.	திருவானைக்காவல் சன்னதி வீதியின் தென்புறம் புதிய சாக்கடை கட்டவும் மேற்படி தெருவின் வடபுறமுள்ள பழைய சாக்கடைக்கு மராமத்து செய்வதற்கும்.	3,600	90
2.	மேல விபூதி பிரகாரம் பழைய கக்கூசிற்கருகில் மண் தரை கக்கூஸ் ஒன்று கட்டுவதற்கு.	2,700	70

ஆணையர்,
ஸ்ரீரங்கம் நகராட்சி.

(த. 51)

வீட்டு வசதி வாரியம்

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும், வேலையின் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22–12–1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர் : காஞ்சிபுரத்தில், தமிழ்நாடு அரசினர் வாடகை வீடுகள் திட்டம்—கட்டம் II, தொகுதி I-ன் கீழ் 2ஏ/68 T.D. யின்படி இரண்டு அறைகள், இரண்டு தளங்கள் உள்ள பிளாக்குகள், இரண்டு பிளாக்குகள் கட்டுதல்.

வேலையின் மதிப்பு : ரூ. 66,400

கட்டுத் தொகை : ரூ. 995.

வரைபடங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவைகளை நிருவாகப் பொறியாளர் (K), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அறிஞர் அண்ணா நகர், சென்னை-40 அவர்கள் அலுவலகத்திலிருந்து 15–12–1971 முதல் ரூ. 10 அத்துடன் விற்பனை வரி சர்சார்ஜ் ஆகியனவும் (இது திருப்பித்தரப்படமாட்டாது) செலுத்தி எல்லா அலுவலர் நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 22–12–1971 மாலை 3–05-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

டி. பி. காளியப்பன்,
நிருவாகப் பொறியாளர் (K.)
கொரட்டூர் கோட்டம்.

(த. 39)

வீட்டு வசதி வாரியம்

தக்கைக்கல் திட்டப் பிரிவு

எண்ணூர், சென்னை-57.
குறிப்பு எண். சி.சி.பி. 5/1345/69

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (உறையின் மீது வேலையின் பெயரை குறித்து) பெருந்திட்ட அதிகாரி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப்பிரிவு, எண்ணூர், சென்னை -57. அவர்களால் மாலை 3-00 மணிக்குள் 29—12—1971 அன்று வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—1971 அன்று மாலை 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வேலையின் பெயர்—எண்ணூரிலுள்ள தக்கைக்கல் திட்டப் பிரிவின் தொழிற்சாலையில் கரி வழங்கி, தாக்கு கட்டி கொடுத்தல்.

அளவு—7,200 மெட்ரிக் டன் (ஒரு மாதத்திற்கு 1,200 மெட்ரிக் டன் வீதம்).

வைப்புத் தொகை—ரூ. 10,800.
ஒப்பந்த நமூனாவின் விலை—ரூ. 10 விற்பனை வரி.

ஒப்பந்த நமூனாவின் விலை திரும்பப் பெறமுடியாதது.

ஒப்பந்த நமூனாக்களையும் மற்ற விவரங்களையும் எண்ணூரிலிருக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு அலுவலகத்திலிருந்து 6—12—1971 முதல் 28—12—1971 முடிய எல்லா அலுவலக வேலை நாட்களிலும் காலை 9-45 மணியிலிருந்து மாலை 4-15 மணி வரையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனாக்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, எவ்விதக் காரணமுமின்றி மறுப்பதற்குத் திட்ட அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

ஜெயராமன்,
திட்ட அதிகாரி.

27—11—1971.
(த. 23)

நல்வாழ்வுத் துறை

அரசினர் தலைமை மருத்துவ மனைகள் இதர மருத்துவ மனைகளுக்கு 1972-ஆம் ஆண்டுக்கு உணவுப் பொருள் வகைகள் முதலியன வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள்.

மக்கள் நல்வாழ்வுப் பணி—குடும்ப நலத்திட்ட இயக்குநர் நிருவாகத்தில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் இதர மருத்துவ மனைகளுக்கு 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லது அதற்குப் பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு உணவுப் பொருள் வகைகள், இதர மருத்துவமனைத் தேவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் கண்காணிப்பாளர்கள் மருத்துவ அலுவலர்களால் 1972 ஜனவரி 7 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்கள் நிபந்தனைகள், ஒப்பந்த வடிவங்கள் ஆகியவைகளை சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளுக்கு மனுச்செய்து பெறலாம். ஒப்பந்தப்புள்ளி வடிவம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5·19 (ஐந்து ரூபாய் 19 காசுகள் மட்டும்), விற்பனை வரி 3 சதவிகிதம்—சர்சார்ஜ் 5 சதவிகிதம் உட்பட) இத் தொகை இந்திய ரிசர்வ் பாங்கியிலோ, அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் கட்டப்படவேண்டும். இத்தொகை ஒரே சலானில் "XIII -Medical-g. Misc.—I-Director of Health Services and Family Planning—other receipts".. என்ற தலைப்பில் ஒப்பந்தப் புள்ளி வடிவத்துக்காகவும், " XII Sales tax Receipts under Sales tax Act–General Sales tax" என்ற தலைப்பில் விற்பனை வரியும் கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் கோரும் மனுவுடன் அசல் சலான்கள் இணைக்கப்படவேண்டும். இத்தொகை திருப்பித் தரப்படாது.

குறிப்பு:—ஒரு மருத்துவமனை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியுடனும் 1971 அக்டோபர் 1-ல் அல்லது அதற்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி சான்றிதழும், நேஷனலிட்டி சான்றிதழும், தாசில்தாரால் கையொப்ப மிடப்பட்டும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. 10,000-ஐ மீறுமானால் வருமானவரி வெரிபிகேஷன் சான்றும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. 1,000-ஐ மீறுமானல் வருமானவரி கிளியரன்ஸ் சான்றும் அல்லது மாநில அரசிதழ் பதிவு அலுவலரால் கையொப்பமிடப்பட்ட சரியான நகல்களும் தரப்படவேண்டும்.

எம். பழனிச்சாமி,

மக்கள் நல்வாழ்வுப் பணி குடும்ப நலத் திட்டம் (கணக்குகள்), இயக்குநர், உதவியாளர்.

(த.ஆர். 9)

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுத் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் நிறுவனங்களில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேப்பார்வைப் பொறியாளர் அவர்களால் 22-12-1971 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: இலப்பைக் குடிகாடு குடிநீர்த்திட்டம்—முதல் நிலை—3·5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட, உறுதிபெறு கற்காரை நீர்த் தாங்கி கட்டுதல்.

ஒப்பந்த வகை: மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 2,650 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்).

இத்தொகை, கருவூலச்செலான் பணஉத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சிப் ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலை முடிப்பதற்குரிய அளவு:—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி,—15 தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச்செலுத்தி 20–12–1971 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்.
(பொ. சு.)

(த.5)

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை), சென்னை வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 29—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விபரம்.	முன் வைப்புத் தொகை.	ஒப்பந்த நமூனா கிடைக்குமிடம்.
காஞ்சிபுரம், திருவத்திபுரம் சாலையில் பிரிந்து விண்ணவேதி, மரியநல்லூர், சுமங்கலி, கொத்தனூர் வழியாகப் புதுப்பாடி வட இலுப்பைச் சாலையில் சேரும் சாலையை (கி.மீ. 0·0 முதல் 23·1 வரை) மேம்பாடு செய்தல்.	ரூ. 5,485	கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை), திருவண்ணாமலை.

ஒப்பந்தங்கள் 29—12—1971 அன்று மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைப்படங்கள் முதலியனவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திருவண்ணாமலை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூபாய் 25·88செலுத்தி 15–12–1971 முதல் 28–12–1971 வரைஅலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருவண்ணாமலை பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ''ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்''.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

சென்னை-25,
1—12—1971.

ஜி. ஜார்ஜ் ஜேகப்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.)

(த. 42)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும், அவர் பொருட்டும், தமிழக பொதுப்பணித்துறை தஞ்சைமாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 29–12–1971 மாலை 3–00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

1.	வேலையின் பெயர்	தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம் வட்டம் வேளாங்கண்ணி மாதா கோவில் சமீபத்தில் வெள்ளை யாற்றின் இடது கரை மைல்99 4-260-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.
2.	ஒப்பந்த வகை	கே. 2.
3.	வைப்புத் தொகை (கருவூல செலான் உருவில்).	ரூ. 6,000.
4.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துகை என்ற தலைப்பில் செயற் பொறியாளர், வெண்ணாறு கோட்டம், தஞ்சை, அவர்களின்கணக்கில்கட்டவேண்டும்.	ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்.
5.	விற்பனை வரி அரசினர் கருவூலங்களில் '' XII விற்பனைவரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.	ரூ. 0·88 (காசு எண்பத்தெட்டு மட்டும்).
6.	ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும்நாள்.	10–12–1971.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.2)

தாம்பரம், அரசு காசநோய் சானடோரியம் மேற்பார்வையாளர் அவர்களால், தாம்பரம் அரசு காசநோய் சானடோரியத்துக்கு உணவுப் பொருட்கள், மற்றும் மருத்துவமனைக்கு தேவையான பொருட்கள் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து அல்லது வேறு குறிப்பிட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாகவும், அவர் ஆணையின்படியும், 3—1—1972 மாலை 2·00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் தேவையான பொருட்களின் பட்டியல்கள், ஒப்பந்த நமூனா முதலியன வேண்டுவோர் பத்திரங்களின் விலை ரூ. 5 விற்பனை வரி ரூ. 3½ சதவிகிதம், சர்சார்ஜ் ரூ. 5 சதவிகிதம். இக்கட்டணத்தை இந்திய ரிசர்வ் வங்கியில் அல்லது அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். ''XXII மெடிகல் II இயக்குநர் மருத்துவக்கல்வி ஜே. மிஸ்ஸலேனியஸ் மற்ற ரசீதுகள் '' என்ற தலைப்பில் ஒப்பந்தப்பத்திரத்தின் விலையையும், ''XII விற்பனை வரி—விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரவினம் '' என்ற தலைப்பில் விற்பனை வரியையும் செலுத்தப்பட வேண்டும். ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவில் செலுத்தினால் அசல் செல்லுச்சீட்டைக் கொடுக்க வேண்டும். ஸ்டேட் வங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ பணம் செலுத்தினால் செல்லுச் சீட்டினுடைய எண், தேதி, செலுத்தப்பட்ட பணம், செலுத்துபவருடைய பெயர் விவரங்களை ஒப்பந்த நமூனாவைப் பெறுவதற்கான விண்ணப்பத்தில் விவரமாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட பணம் எக்காரணம் முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

2. மேற்பார்வையாளர், அரசு காசநோய் சானடோரியம், தாம்பரம் அவர்களுக்கு முகவரியிட்ட ஒப்பப்புள்ளிகள் அவருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

குறிப்பு:—ஒப்பந்தப்புள்ளி ஒவ்வொன்றுடனும் 1—10 1971-ஆம் தேதிக்குப் பிற்பட்டு, தாசில்தார், ஒருவரால் கையெழுத்திடப்பட்ட சால்வன்சி சான்றும் ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000க்கு அதிகப்படுமானால் வருமானவரி ஆய்வுச் சான்றிதழும், ஒப்பந்தத் தொகை ரூ. 1,000க்கு மேலானால் விற்பனை வரி கணக்குத் தீர்ப்புச் சான்றிதழும், மற்றும் நேசனலிட்டி சான்றும் அல்லது கெஜட் பதிவு பெற்ற ஓர் அதிகாரியால் அத்தாட்சி இடப்பட்ட அதன் சரியான நகலும் ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் விதிகள் ஆகியவற்றின் நகல்களில் ஒப்பந்தக் கவரின் சான்றும் இருத்தல் வேண்டும்.

டாக்டர் வி. ரங்கசாமி,
மேற்பார்வையாளர்,
அரசினர் காசநோய்
சானடோரியம்,
தாம்பரம், சென்னை-47.

(த.15)

நல்வாழ்வுத் துறை

தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுப்பணிகள்.—குடும்ப நலத்திட்ட இயக்குநர் அவர்களின் நிர்வாகத்திலுள்ள அரசாங்க மருத்துவ நிறுவனங்களுக்கு 1972-73-ஆம் ஆண்டுக்கு எக்ஸ்ரே டெவலப்பர்கள் பிக்சர்ஸ், அப்சார்பெண்ட் பஞ்சு ஆகியவைகளை வழங்குதல்.

1972 ஏப்ரல் 1 முதல் அல்லது அதற்குப்பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத்திட்ட இயக்குநர் நிர்வாகத்திலுள்ள அரசினர் மருத்துவ நிவனங்களில், ஊராட்சி மன்றங்களால் நிருவகிக்கப்படுபவர்களின் தேவைக்காக எக்ஸ்ரே டெவலப்பர்கள், பிக்சர்ஸ் ஆகியவைகள் வழங்குவதற்கும், அப்சார்பெண்ட் பஞ்சு, கம்பளம் வழங்குவதற்கும், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர், மக்கள் நல்வாழ்வுப் பணி, குடும்ப நலத்திட்டம் (கணக்கு) அவர்களால் 1972 ஜனவரி 10-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் ஆகியவைகளுக்கு மக்கள் நல்வாழ்வுப்பணி குடும்ப நலத்திட்ட அலுவலகம், சென்னை-6க்கு 1971 டிசம்பர் 15-ஆம் தேதியிலிருந்து மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 10·37 (ரூபாய் பத்து காசுகள் 37 மட்டும்) 3½ சதவிகித விற்பனைவரி மீது 5 சதவிகித சர்சார்ஜ் வரி உட்பட) இக்கட்டணத்தை இந்திய ரிசர்வ் பாங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசினர் கணக்கில் செலுத்த வேண்டும். இத்தொகை ஒரே சலானில் '' XXIII'' மருத்துவம் ஜி. மிஸ்ஸலேனியஸ் I மக்கள் நலப் பணி குடும்ப நலத்திட்ட இயக்குநர்—இதர வரவினங்கள் '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை ''XII விற்பனை வரி அரசு விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரவினம்—பொது விற்பனை வரி '' என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவத்தைக் கோரும் மனுவுடன் அசல் சலான்கள் இணைக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

1971 அக்டோபர் 1-க்குப் பிறகு பெறப்பட்ட சால்வன்சி நேசனலிட்டி சான்றிதழ் தாசில்தாரால் கையொப்பமிடப்பட்டும், ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000க்கும் மேல் இருக்குமானால் வருமான வரி வெரிபிகேசன் சான்றும், ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 1,000க்கு மேற்பட்டிருக்குமானால் விற்பனை வரிச்சான்றும் அல்லது அரசிதழ் அலுவலரின் ஒப்பத்துடன் கூடிய சரியான நகல்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.

எம். பழனிச்சாமி,
மக்கள் நல்வாழ்வுப்பணி
குடும்ப நலத்திட்டம்
(கணக்குகள்) உதவியாளர்—
சென்னை-6.

10—11—1971

(த. ஆர்.3)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக் கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 29—12—1971 அன்று பிற்பகல் 3—30 மணி (அலுவலக கெடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3—35 மணிக்குத் திறக்கப்படும்.

எண்.	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம்.
		ரூ.	
1.	மதுரை பாலமேடு சாலைக்கு 100 எம்.எம். (4") கனத்திற்குச் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் கி.மீ. 6/6—10/0.	3,800	கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) திண்டுக்கல்.
2.	ஷை கி.மீ. 10/0–15/0.	5,500	ஷை
3.	ஷை கி.மீ. 15/0—20/0.	5,500	ஷை
4.	கி.மீ. 20/0—24/4.	4,900	ஷை

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக் கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திண்டுக்கல் விலாசத்திலிருந்து 15—12—1971 முதல் 28—1—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள் நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுத் தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிக்ளும், 12 வருட தேசீயத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும் டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு காரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப)
திருச்சிராப்பள்ளி-1.

(த. 45)

வீட்டுவசதி வாரியம்

10'' (250 மி.மி.) விட்டமுள்ள C.1 குழாய்களைப் பட்டினப்பாக்கம் கடற்கரை எஸ்டேட்டிலுள்ளஅலுவலகத்திற்குத் தருவித்துக் கொடுக்க ஒப்பந்தப் புள்ளிகளைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் தேதி 24—12—71, மாலை 3 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

சென்னை-35.
25—11—71.

டி. சாமுவேல்தம்பு,
நிருவாகப் பொறியாளர்,
கிழக்குக் கோட்டம்.

(த. 48)

ஏலம்

தர்மபுரி மாவட்டம், ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 22—12—1971 (புதன்) அன்று காலை 11—00 மணி அளவில் சிந்தி பசுக்கள், சிந்தி கிடாரிகள், சிந்தி காளைகள், கலப்பு இனப் பசுக்கள், கலப்பு இனக் கிடாரிகள், மற்றும் வேலைக்காளைகள் முதலியன அடங்கிய மொத்தம் 60 (அறுபது) கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட இருக்கின்றன.

ஏலம் பற்றிய விதிமுறைகளைக் குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அலுவலகம் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர், தர்மபுரி மாவட்டம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது பதில் எழுதப் போதிய உரையுடன் கூடிய தபால் தலைகளுடனோ விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். மேற்கண்ட கால்நடைகளை எந்த வேலை நாட்களிலும் பண்ணையின் வேலை நேரங்களில் நேரில் வந்து பார்வையிடலாம்.

குஞ்சு பொரிப்பு அலுவலர்,
உடன் கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப்பண்ணை,
ஒசூர்.

(த. 52)

மருத்துக் கல்வித்துறை

டீப் எக்ஸ்ரே தேரபி யூனிட் வழங்குவதற்காக மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் அவர்களால் 1971 டிசம்பர் 22 மாலை 2—00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இயக்குநர், மருத்துவக் கல்வி, '' எழிலகம் '', சேப்பாக்கம், சென்னை-5-ல் ரூ. 10-ம் விற்பனை வரி 3 சதவிகிதமும் செலுத்தி ஒப்பந்தப்புள்ளிப்பத்திரத்தையும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைபற்றிய விளக்க நகலையும் பெறலாம்.

விலைப்புள்ளிகள், இயக்குநர் மருத்துவக் கல்வி, சென்னை-5, என்ற முகவரிக்கு மூடி முத்திரையிடப்பட்ட கவரில் அனுப்ப வேண்டும். '' Quotation for XI The supply of deep X-Ray Theraphy Unit '' என்று குறிப்பிட்டு 1971 டிசம்பர் 22-க்குள் அனுப்ப வேண்டும். குறிப்பிடப்பட்ட நாள் நேரத்திற்குப் பின்னர் வரும் புள்ளிகளும் மேலே குறிப்பிட்டுள்ளதைப் போல் குறிப்பிடப்படப்படாதவைகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இயக்குநர், மருத்துவக் கல்வித் துறை, சென்னை, அவர்களிடம் மேற்கொண்டு தகவல்கள் தேவைப்பட்டால் தெரிந்து கொள்ளலாம்.

என். ஆர். ரத்னகண்ணன்,
இயக்குநர், மருத்துவக் கல்வி.

(ந.49)

செங்கோட்டை நகராட்சி

இந் நகராட்சியின் பொதுச் சுகாதார உபயோகத்திற்கு 200 லிட்டர் பினாயில் (லோசன்) சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 30—12—1971 வியாழன் மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். வந்துள்ளஒப்பந்தங்கள் 30—12—1971 மாலை 4—30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்ததார் ரொக்கமாக ரூ. 25.00 கட்டி ரசீதை ஒப்பந்தத்துடன்இணைத்துஅனுப்ப வேண்டும். காலம் கடந்துவரும் ஒப்பந்தமும், கட்டுத்தொகை கட்டாத ஒப்பந்தமும் கவனிக்கப் படமாட்டாது. ஏனைய விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்,
செங்கோட்டை நகராட்சி

(த. 49)

மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிக்குச் சொந்தமான திரு வி. க. காய்கறி அங்காடியில் தற்போது கீற்றுக் கொட்டகையாக இருக்கும் 5 கடைகளைப் புதிதாக ஓட்டுக் கட்டடங்களாகக் கட்டுவதற்கு ரூ. 15,000 மதிப்பீட்டிற்கான வேலைக்கும், கூறைநாடு நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒரு மல அறை (கக்கூஸ்) கட்டுவதற்கும் ரூ. 6,700 மதிப்பீட்டிற்கான வேலைக்கும் 30—2—1971 ஆம்தேதி மாலை 4—00 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக்கருவூலத்தில்கடைகள் கட்டும் வேலைக்கு ரூ. 3-00-ம் விற்பனை வரி பதினொன்று காசும் மேற்படி கக்கூஸ் கட்டுவதற்கு ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரி செலுத்தி 28—12—1971-க்குள் பெற்றுக் கொள்ளலாம். 28—12—1971-க்குப் பிறகு ஒப்பந்தப் புள்ளி நமூனா வழங்கப்பட மாட்டாது.

சி வீரைய்யன்,
ஆணையர்.

மாயூரம்,
2—12—1971.

(த. 48)

பொதுப்பணித் துறை

ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

வேலையின் பெயர்:—பூந்தமல்லி அரசினர் (போர்டு) உயர் நிலைப்பள்ளியில் பொன்விழாக் கட்டடம் கட்டுதல், செங்கற்பட்டு மாவட்டம்.

மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 22—12—1971 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 22—12—1971 மாலை 3.00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3·15 மணிக்கு அவை திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் 20—12—1971வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை,
செங்கை—வடார்க்காடு
பெருவட்டம், வேலூர்-1.

(ந.28)

எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண். AEP 77 to 82.

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம் குறிப்பு எண். AEP 77 to 82 Supply of Pull lifts etc. எனவும்மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க்கையொப்பமிட்டவரால் 30—12—1971 மாலை 3-30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு குறிப்பு எண் விவரம் முன் பணம் முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

Serial number.	Detail.	Specu number.	Cost of Tender. RS.	Earnest Money Deposit. RS.
1	Pulling and lifting machine stores. Capacity M. 50, Make Mex-pull.	AEP· 77	5	1,100
2	Pulling and lifting machine 3 and 1½ tons Capacity mightly Max-pull M· 30 and M. 15. Chain Pully block Index make 5 tons, 3 tons. 1½ tons Capacity.	AEP 78	5	1,100
3	Wire ropes slings wire rope clamps shackles, bull doggrips.	AEP 79	5	600
4	Grinding machines and blowers Ralli Wolf Make.	AEP 80	5	1,100
5	Grinding discs Carborandum Universal Make 101.6 × 10·5 × 4·76 mm, A. 24., A. 30 RB.	AEP 81	5	500
6	M.S· Block Tublar Scaf folding pipes 1½ in dia. with plain ends.	APE 82	5	825

3. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தங்களும் இறுதித்தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் பிரித்துக் கொடுக்கவும் கீழ்க்கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

4. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப் பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவையல்ல.

தொலைபேசி எண். 59556. **மேற்பார்வைப் பொறியாளர்,**
தந்தி ENTERMAL எண்ணூர் அனல் மின் திட்டம் எண்ணூர்.
சென்னை-57.

(த.33)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17, சர். பி.டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 22—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக் காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்-மூன்றும் கட்டம்-தலைமை நீரேற்று நிலையம்-நீரேற்றிகளும் அதன் உபகரணங்களும் அளித்தல்—நிறுவுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை ரூ. ஐயாயிரத்து அறு நூற்று நாற்பது (ரூ. 5,640).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச்சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதம்.

ஒப்பந்தப்படிவங்களின் விலை—ரூ. இருபதும் காசு எழுபத்தி ஐந்தும் மட்டும். (விற்பனை வரி உட்பட.)

ஒப்பந்தப்படிவங்கள் வேண்டுவோர் கோவில்பட்டி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து, 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முக்வரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற் குறித்த விலையினைச் செலுத்தி 18—12—1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.சு.)

(த.ஆர்.4)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை திண்டுக்கல் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பாகவும், திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) கோட்டப் பிராந்தியத்தில் உள்ள அரசினர் சாலைகளில் 1972–73-ம் ஆண்டிற்கான பராமரிப்பு வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்கள்) அட்டவணையில் திண்டுக்கல் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல்) அவர்களால் அவர்களுடைய அலுவலகத்தில் 20–1–1972 ஆம் தேதி பிற்பகல் 4–00 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக நேரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் அன்றைய தினமே பிற்பகல் 4–05 மணி அளவில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப் பட்டியல்களிலும் பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும் மேற்படி விவரக் குறிப்புக்களும் திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை) கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 10–1–1972-ஆம் தேதி முதல் 19–1–1972 ஆம் தேதி வரை (இரு நாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலில் அடக்கவிலை விற்பனை உட்பட ரூ. 5.18 (ரூபாய் ஐந்து காசு பதினெட்டு மட்டும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தர இயலாது. 20–1–1972-ஆம் தேதி ஒப்பந்த விவரங்கள் விற்கப்படமாட்டாது.

ஒவ்வொரு வேலைக்கான வேலை விவரங்கள் முன் வைப்புத் தொகை, விவரங்கள் அடங்கிய அட்டவணை இவ்வலுவலகத்திலும் இதன் அனைத்து உட்கோட்ட உதவிப் பொறியாளர் (நெ. கி. ப. து.) அலுவலகங்களிலும், இதன் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் (நெ.) உள்ள அறிவிப்புப் பலகையில் 10–1–1972-ஆம் தேதி முதல் 19–1–1972-ம் தேதி வரை விளம்பரம் செய்யப்படும். முன்வைப்புத் தொகை திண்டுக்கல் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத்தவிர கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை) திண்டுக்கல் சார்பில் மாற்றப்பட்ட பன்னிரண்டு ஆண்டுதேசியத் தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின் சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல்டு வங்கிகளால்வழங்கப் படும் வங்கி உத்திரவாதங்களும், டிமாண்டு-டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், முன் வைப்புத் தொகைக்காகப் பெற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

வி. எம். ராமதாஸ் ராவ்,
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.து.), திண்டுக்கல்.

(த.37)

திண்டுக்கல் நகராட்சி

திண்டுக்கல் நகராட்சியின் உபயோகத்திற்காகக் கீழ்க்கண்ட அளவுள்ள குப்பைத் தொட்டிகள் வினியோகிப்பதற்குத் திண்டுக்கல் நகராட்சி ஆணையராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ 29–12–1971 மாலை 4-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தம் கொடுக்க விருப்பம் உள்ளவர்கள் ரூ. 200 பொறுப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தம் கொடுக்கலாம்.

ஒப்பந்த நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பொறியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. 2'–0'' × 2'–0'' Size Rcc Dustbins—100
(யந்திரத்தால் தயார் செய்யப்பட்டது).

2. 2'–6'' × 2'–00 Size Rcc Dustbins—100
(யந்திரத்தால் செய்யப்பட்டது).

ஆணையர்,
திண்டுக்கல் நகராட்சி.

(த.46)

செங்கோட்டை நகராட்சி

திருநெல்வேலி மாவட்டம்

செங்கோட்டை நகராட்சி (Escort-37) டிராக்டர் மற்றும், டிரெய்லர் ஆகியவற்றிற்குத் தேவையான சாதனங்கள் (sparo parts) போட்டு நல்ல நிலையில் பழுதுபார்த்துக்கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 20—12—1971 திங்கட்கிழமை மாலை 3 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்றவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். டிராக்டரையும் டிரெய்லரையும் அலுவலக வேலை நாட்களில் வந்து பரிசோதனை செய்து கொள்ளலாம்.

ஒப்பந்ததார், ஒப்பந்த டிபாசிட் ரூ. 50 கட்டி ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். டிபாசிட் இல்லாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏனைய நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

ஆணையர்,
செங்கோட்டை நகரசபை.

செங்கோட்டை,
1—12—1971.

(த. 9)

ஒப்பந்தப் புள்ளி

மருத்துவ மனை

உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவத் தேவைகட்கு 1972 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31-ந் தேதி வரை உள்ள காலங்கட்கு கீழ்க்கண்ட மருத்து மனைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. அவை கண்காணிப்பாளர்-மருத்துவ அதிகாரிகளிடம், 7-1-1972 வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்குள் கிடைக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் பிரதிகளை, கருவூல ரசீது-சலான் இணைத்து மனுச் செய்து மருத்துவ மனைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிக்கான பணம் 5·19 (ரூபாய் ஐந்து, காசு பத்தொன்பது மட்டும்) விற்பனை வரி 3½ சத வீதம், விற்பனை வரிக்கான சர்சார்ஜ் 5 சத வீதம், இவை ரிசர்வ் வங்கியிலோ அல்லது ஸ்டேட் பாங்க் அலுவலகங்களிலோ ஏதாவது ஒன்றிலோ அல்லது அரசுக் கருவூலங்களிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் XXIII Medical—I Director of Health and Family Planning—G. Miscellaneous other receipts என்ற தலைப்பில் ஒப்பந்தப் புள்ளிக்கான தொகையைச் செலுத்த வேண்டும். விற்பனை வரிக்கானத் தொகையை "XII Sales tax Receipts under the State Sales tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் கட்ட வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்தப் பணம் திரும்ப தரப்படமாட்டாது.

1. காந்தியடிகள் மெமோரியல் மாவட்டத் தலைமை மருத்துவ மனை, திருச்சி.
2. நகர் பொது மருத்துவ மனை, புதுக்கோட்டை. அரசினர் ரேனிஸ் மருத்துவ மனை, புதுக்கோட்டை.
3. அரசினர் மருத்துவ மனை, கரூர்.
4. அரசினர் மருத்துவ மனை, திருவரங்கம்,
5. அரசினர் மருத்துவ மனை, அரியலூர்.
6. அரசினர் மருத்துவ மனை, பெரம்பலூர்.
7. அரசினர் மருத்துவ மனை, லால்குடி.
8. அரசினர் மருத்துவ மனை, ஆலங்குடி.
9. அரசினர் மருத்துவ மனை, குளித்தலை.
10. அரசினர் மருத்துவ மனை, கீரனூர்.
11. அரசினர் மருத்துவ மனை, துறையூர்.
12. அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவமனை, வலையபட்டி.
13. அரசினர் செல்லப்பா மருத்துவ மனை, அரிமலம்.
14. அரசினர் நாச்சம்மாள் ஆச்சி மருத்துவ மனை, கோப்பனப்பட்டி.
15. அரசினர் மருத்துவ மனை, வேலாயுதம்பாளையம்.
16. அரசினர் கஸ்தூர்பாய் மருத்துவ மனை, ஓமந்தூர்.
17. அரசினர் மருத்துவ மனை, பள்ளப்பட்டி.
18. அரசினர் காந்தி லெப்ரோசிரியம், தோஹூர்பட்டி.
19. அரசினர் மருத்துவமனை, ஜெயங்கொண்டாச்சோழபுரம்.

குறிப்பு:—ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும் கீழ்க்கண்ட இணைப்புகளுடன் அதாவது உண்மையான அல்லது உண்மை நகல்களுடன் இருத்தல் வேண்டும்.

(I) 1. சால்வன்ஸி சர்டிபிகேட்டும் நேஷனலிட்டி சர்டிபிகேட்டும் அக்டோபர் திங்கள் முதல் தேதிக்குப் பிறகு (1971) பெற்றதாக தாசில்தாரிடம் கையெழுத்துப் பெற்றிருக்க வேண்டும்.

2. ரூ. 1,000 மதிப்பீட்டிற்கு மேற்பட்ட ஒப்பந்தப் புள்ளிக்கு இந்த ஆண்டுக்கான விற்பனை வரி ஆய்வுப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் புள்ளியின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டவற்றிற்கு, விற்பனை வரி கிளியரன்ஸ் சர்டிபிகேட் இணைக்கப்பட வேண்டும்.

(II) ஒப்பந்தப் புள்ளிகள் சம்பந்தமாக எந்த விதத் தொடர்பும் ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது.

டாக்டர் வி. சந்திரசேகரன்,
உதவி மாவட்ட மருத்துவ அலுவலர்,
திருச்சி.

7-11-1971.

(த.ஆர். 10)

வீட்டு வசதி வாரியம்

அறிஞர் அண்ணா நகர் (மேற்கு விரிவினை)யில் பொது மக்கள் மனை நிலங்களை ஒரேயடியாக வாங்கவும், வாடகை கிரய முறையில் வாங்கவும் இடங்கள் ஒதுக்குதல்.

கிடைக்கும் வீட்டு மனைகளின் எண்ணிக்கை.	1,000.
மனையின் பரப்பு	1 கிரவுண்டுக்கும் 2 கிரவுண்டுக்கும் இடைப்பட்டவை.
மனுதாரருக்கு வேண்டுமான தகுதி.	ரூ. 3,000-க்கு மேற்பட்ட மதிப்புள்ள சொந்த வீடோ, மனை நிலமோ இருக்கக்கூடாது.
மனுக்கள் பெற இறுதி நாள்.	17-1-1972.
மனுவடிவங்கள் கிடைக்கும் காலம்.	15-12-1971 காலை 10-00 மணி முதல் மாலை 2 மணி வரை ரூ. 5 செலுத்தி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 36, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35-ல் வரவேற்பு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. வி. வாசுதேவன்,
தலைவர்,
வீட்டு வசதி வாரியம்.

(த. 7)

ஒப்பந்தப் புள்ளி

நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—1971 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

	வேலையின் பெயர்.	கட்டுத் தொகை. ரூ.
1	சென்னை, திருச்சி, திண்டுக்கல் சாலை மைல் 91/7-ல்(கி.மீ.148-5) பாலத்தைத்திரும்பக் கட்டுதல்.	9,000
2	தேசிய நெடுஞ்சாலை 45, சென்னை திருச்சி, திண்டுக்கல் சாலை மைல் 85/1-ல் (கி.மீ. 137/8-ல்) பாலம் திரும்பக் கட்டுதல்.	11,366
3	சென்னை, திருச்சி, திண்டுக்கல், சாலை (தேசிய நெடுஞ்சாலை 45) மைல் 85/1-ல் (கி.மீ. 137/8-ல்) பாலத்திற்கு அணுகு சாலையைக் கட்டுதல்.	4,640

ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—1971 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நமூனக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம்-II கிண்டி சென்னை அலுவலகத்தில் 15—12—1971 முதல் 21—12—1971 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25·88 கட்டி பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுங்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலகத்திலுள்ளும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம்-II கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுசீட்டையாவது அல்லது வங்கிபொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.34)

குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்.—காவேரிப்பாக்கம் குடிநீர் வழங்கு திட்டம்—முதல் நிலை—1-வது பகுதிக்கு 2·50 இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவுள்ள ஆர்.சி.சி. நீர்த்தேக்கும் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மேற்கண்ட பணிக்காக இந்தத் துறை அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து துறையின் படிவத்தில் அனுப்பப்படும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்ட மேற்பார்வைப் பொறியாளரால், எண் 52, கெங்கு ரெட்டி ரோடு, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவருடைய அலுவலகத்தில் 28-12-1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த முறை—முழுத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 1,620.
3. வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதம்.
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10·35

ஒப்பந்தப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வாணியம்பாடி என்பவர் கணக்கில், P.W. III O.R." என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கான தொகையை "XII—Sales—Misc. I—General Sales Tax" என்ற தலைப்பிலும், தனித் தனியாகச் செலானில் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர், (ம.ந.வா.பொ. கோட்டம்) குடிநீர் வடிகால் வாரியம், 301, ஜமாத் ரோடு, வாணியம்பாடி, என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பணம் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பப்படமாட்டாது.

மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.வா.பொ.)
குடிநீர், வடிகால் வாரியம், சென்னை-8.

(த.ஆர்.5)

பொதுப் பணித்துறை

செங்கற்பட்டு, வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர் : குடியாத்தம் வட்டம்—உமராபாத்தில் ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள் பத்து காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப்பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற் குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30—12—1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,300.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 20·60 விற்பனை வரி 3 சதவீதம் சேர்த்து.

முடிக்கவேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 14—12—1971-ஆம் தேதி முதல் 28—12—1971-ஆம் தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது). கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் (P.W. Remittances III Other Remittances) என்ற தலைப்பின் கீழ் ''நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை வேலூர் கோட்டம், வேலூர் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·60 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் (XII Sales tax (b) Receipts Under State Sales tax Act-General Sales tax)என்றதலைப்பின்கீழ் செலுத்தபடவேண்டும்.மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்ட் டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் ''டிமாண்டு டிராப்ட்டுகள்'' செயற் பொறியாளர், (பொ. ப. து.), வேலூர் கோட்டம், வேலூர். அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின் வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.),
செங்கற்பட்டு, வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 40)

சின்கோனத் துறை

ஆனைமலை அரசினர் சின்கோனத் தோட்டம் தொழிலாளர் குடியிருப்புக்களில் புதைக் கக்கூஸ்கள் ரூ. 70,000 மதிப்பில் கட்டுவதற்காக, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பில் வரவேற்கப்படுகின்றன.

31—12—1971 மாலை 3·00 மணிவரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படும். அதே நாளில் மாலை 3·30 மணிக்கு கீழே கையொப்ப மிட்டவராலோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அவரது உதவியாளராலோ ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

மேற்பார்வையாளர், அரசினர் சின்கோனத் தோட்டம், ஆனைமலை, சின்கோனா அஞ்சல், வால்பாறை வழி, கோவை மாவட்டம் என்ற முகவரியில் ரூ. 2·07 (விற்பனைவரி உட்பட) நேரில் பணமாகவோ, அல்லது மணியாடர் மூலமாகவோ செலுத்தி ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு பற்றிய விளக்க நகல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம். மோகன்ராவ்,
இயக்குநர்,
சின்கோனத்துறை.

(த. 20)

பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம் வேலூர்-1

வேலையின் பெயர்:—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம், வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும் பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 30-12-1971 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 10,200.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (வரை படங்களுடன்)—ரூ. 51·50 விற்பனை வரி 3 சத வீதம் சேர்த்து.

முடிக்க வேண்டிய காலம்—பத்து மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 14-12-1971 தேதி முதல் 28-12-1971 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது. கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் ''P. W. D. Remittances, III—Other Remittances '' என்ற தலைப்பின் கீழ் '' நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ''XII Sales Tax (B) receipts, Under State Sales Tax Act—General Sales Tax'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் '' டிமாண்ட் டிராப்டாகவோ '' ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ''ஷெட்யூல்டு பாங்குகளின் '' டிமாண்ட் டிராப்டுகள் '' செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம், அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சத வீதம் குறைத்து ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.)
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்.

(த.ஆர். 8)

ஏல விற்பனை

தீ அணைப்புத் துறை

திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தைச் சேர்ந்த கண்டம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொடர் ஊர்தி பம்ப் (பம்ப் மாத்திரம்) திருச்சிராப்பள்ளி தீ அணைப்பு நிலையத்தில் 27-12-1971 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்தப் பம்பை திருச்சிராப்பள்ளித் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

பம்பின் விவரங்கள்.

பதிவு எண்.	ஊர்தியின் வகுப்பு.	மேக்.	வருட மாடல்.
எம்.எஸ்.ஒய். 7843	தொடர்ஊர்தி பம்ப்.	கொடிவா கவன்ட்ரி கிளைமேக்ஸ் பேபி.	1956

விற்பனை நிபந்தனைகள் திருச்சிராப்பள்ளியில் கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ரெத்தினசாமி,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

(த. 17)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் செனுய்நகரில் பல அடுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 21–12–1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

எண்.	பதிவு எண்.	வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு. ரூ.	கட்டுமானத் தொகை. ரூ.	ஒப்பந்தப் பத்திரங்களின் விலை.
1	I	32 குடியிருப்புகள் கொண்ட எ1, எ2	2,47,000	3,700	ரூ. 15 மற்றும் விற்பனை வரி [(திருப்பித் தரப்படமாட்டாது) (ஒவ்வொரு வகைக்கும்)]
2	II	32 குடியிருப்புகள் கொண்ட எ3, எ4	2,47,000	3,700	௸
3	III	32 குடியிருப்புகள் கொண்ட எ5, எ6	2,47,000	3,700	௸
4	IV	32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் எ7, எ8 16 16 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் சி1.	3,09,000	4,630	௸
5	V	௸ எ9, எ10, சி2.	3,09,000	4,630	௸
6	VI	32 குடியிருப்புகள் கொண்ட கட்டடம் எ11, 24 குடியிருப்புகள் கொண்ட பி2.	2,16,500	3,250	௸
7	VII	௸ எ12, பி1.	2,16,500	3,250	௸
8	VIII	பி3, சி3	1,55,000	2,325	௸
9	IX	பி4, சி4	1,55,000	2,325	௸

வரைபடங்களையும், ஒப்பந்தப் பத்திரங்களையும், கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 10–12–1971 முதல் 20–12–1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 21–12–1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

தாண்டவராய சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

(கு 18)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 22–12–1971 அன்று பிற்பகல் 3–00 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

வரிசை எண்.	வேலையின் பெயர்.	கொள்ளளவு (லிட்டர்களில்.)	உயரம் (மீட்டரில்.)	வேலையின் சுமார் மதிப்பு. ரூ.	கட்டுத் தொகை. ரூ.
1.	தாண்டவராயச் சத்திரத்தில் மேல்நீர் நிலைத்தேக்கம் கட்டுதல்.	4,50,000	20	1,35,000	2,000
2.	திருமங்கலத்தில் (கோயம்பேடு; அண்ணா நகருக்கு மேற்கு) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல்.	2,75,000	20	82,000	1,250
3.	பார்வதி கக்கன் குடியிருப்பில் (புளியந்தோப்பு) மேல்நீர் நிலைத்தேக்கம் கட்டுதல்.	1,15,000	20	35,000	525
4.	கிரேநகர் பள்ளத்தில் (புளியந்தோப்பு) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல்.	1,50,000	20	45,000	675
5.	மீனும்பாள் சிவராஜ் நகரில் (சேத்துப்பட்டு) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல்.	80,000	20	24,000	360
6.	சாலைமாநகரில் (புரசைவாக்கம்) மேல் நீர்நிலைத் தேக்கம் கட்டுதல்.	1,15,000	20	35,000	525

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை :—ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு வகைக்கும், திருப்பித் தரப்படமாட்டாது.)

ஒப்பந்தப் பத்திரங்களையும் வரைபடங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 12–12–1971 முதல் 21–12–1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 22–12–1971 அன்று பிற்பகல் 3–15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 3.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

(கு. 60)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப்பணித் துறை

பு.என்.வி. 25/71-72.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலையை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி கன்னியா குமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்களால் 12-1-1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4 மணிக்கு திறக்கப்படும்.

வேலையின் பெயர்:	"R. C. C. Box for the reach 0-0-486 to 0-1-275 of Karungal distributary" ஒன்று கட்டுதல்.
ஒப்பந்த வடிவம்:	மொத்தத் தொகை.
கட்டுத் தொகை:	ரூபாய் 4,300
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை:	ரூபாய் 20
விற்பனை வரி:	ரூ. 0.70
வேலையை முடிக்க வேண்டிய காலம்:	4 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது) அரசுக் கருவூலத்தில் "P. W. III. O. R. Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை, ராதாபுரம் கால்வாய் கோட்டம், நாகர்கோயில் கன்னியாகுமரி மாவட்டம் அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி "XII S. T. (b) Receipts under the State Sales Tax Act General Sales Tax" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருநெல்வேலி கன்னியாகுமரி வட்டம், திருநெல்வேலி-2 அவர்கள் அலுவலகத்தில் 16-12-71-லிருந்து 7-1-72 வரை நேரிலோ அஞ்சல் மூலமோ, மேலாளருக்கு, ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலையையும் விற்பனை வரியையும் செலுத்தியதற்கான ரசீதை உடன் வைத்து மனுச்செய்துப் பெற்றுக்கொள்ளலாம். இத் தேதிக்குப் பிறகு வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டா. மேற்கொண்டு விவரங்களை அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து.
திருநெல்வேலி, கன்னியாகுமரி வட்டம்,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2;

(த. 44)

வேலை வாய்ப்பு

அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு வேலைவாய்ப்பு தொழில் பயிற்சி சர்வீசில் தொழிற் பயிற்சி நிறுவனங் களுக்கு மூன்று முதல்வர்களுக் கான மனுக்கள் 1972 ஜனவரி 6, மாலை 5-00 மணி வரை வர வேற்கப்படுகின்றன.

சம்பளம் : ரூ. 550—25—600—35—950 மாதத்திற்கு.

தகுதி : பல்கலைக்கழக மானி யக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் மெக்கானிக் கல், எலக்டிரிகல் அல்லது ஆட்டோ மோபைல் பொறி யியல் இவற்றில் ஏதேனும் ஒன் றில் பட்டம் பெற்றிருக்க வேண் டும். தொழிற்கூடம் அல்லது தொழிற்சாலையில் மூன்று வருடங் களுக்குக் குறையாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

சென்னை தொழில்நுட்ப நிறுவ னம் அல்லது பல்கலைக் கழகம் மானியக் குழுவினால் அங்கீகாரம் பெற்ற பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம் ஒன்றில் ஆட்டோ மோபைல் பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். தொழிற் கூடம் அல்லது தொழிற்சாலையில் மூன்று வருடங்களுக்குக் குறை யாத செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது : 1-7-1972-ல் 30 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதியினர் பிற்பட்ட வகுப்பினர் விசயத்தில் வயது வரம்பு கிடையாது. தங்கக் கட்டுப்பாடுச் சட்டத் தினால் பாதிக்கப்பட்ட பொற் கொல்லரின் மகன்கள், மண மாகாத மகள்கள் 1-1-1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபிசர் இன்ஸ்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ராக் டராகப் பணிபுரிந்த முன்னாள் தேசிய மாணவர்ப் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இரா ணுவம், கடற்படை, விமானப் படை, ஆகியவற்றிலிருந்து கலைக் கப்பட்டதால் வந்தவர்கள் 1-4-1972 அன்று 40 வயதிற்குக் குறைவானவர்கள் 1-1-1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தவர்கள் விசயத் திலும், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப் பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம். சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெய ரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, 23 செ.மீ. உள்ள தன் முகவரி எழுதிய 0.35 காசு தபால் அஞ்சல் வில்லை ஒட்டப்பட்டு தபால் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறை யை உடன் வைத்து அனுப் பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த.25)

ஒப்பந்தப் புள்ளி

போக்குவரத்துத் துறை, சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக, தமிழ்நாடு ஆளுநர் சார்பில், தலைமைப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2, அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரை யிட்ட இனவரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாலை 3-00 மணி வரை கீழே ஐந்தாவது காலத்தில் குறிக்கப்பட்ட தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

வரிசை எண்.	வேலை விவரம்.	முடிக்கும் காலம்.	முன் வைப்புத் தொகை.	ஒப்பந்தத் தேதி.	ஒப்பந்த விதிகளின் விலை விற்பனை வரி உட்பட.
			ரூ.		ரூ.
1	சைதாப்பேட்டையில் பேருந்து நிலையம் மற்றும் பணிமனை கட்டுதல். தார் சாலை அமைத்தல், முள் வேலி அமைத்தல்.	ஒரு மாதம்.	3,300	5-1-1972	15.55

ஒப்பந்தம் :- மொத்தத் தொகை.

ஒப்பந்தங்கள் மேலே ஐந்தாவது காலத்தில் குறிப்பிட்ட தேதியில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரைபடங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2 அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட வேலைக்கு, மேலே குறிப்பிட்டத் தொகையைக் கட்டி கீழ்க் கண்ட தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்க காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. (20-12-1971 to 4-1-1972)

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2, அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

எஸ். சிவானந்தா,
தலைமைப் பொறியாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து, சென்னை-2.

(த. 59)

ஒப்பந்தப் புள்ளி

பாளையங்கோட்டை நகராட்சி

பாளையங்கோட்டை நகர் மன்றத்திற்குத் தேவையான 100 சிமிண்ட் குப்பைத் தொட்டிகள் விநியோகம் செய்ய நகர்மன்ற ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி கள் 27-12-1971-ஆம் தேதி மாலை 4 மணி வரை கட்டுத் தொகை ரூ. 300 உடன் வர வழைக்கப்படுகின்றன. சப்ளை செய்ய வேண்டிய காலம் 2 மாதம். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 4-30 மணிக்குத் திறக் கப்படும். விவரம் கீழ்வருமாறு :

செண்டிரிபூகல் முறையில் கம்பி யிணைக்கப்பட்ட சிமெண்டு காங்கி ரிட்டால் செய்யப்பட்ட இரு புறமும் திறந்த உருண்டையான சிமெண்டுத் தொட்டி கனம் 2'' உயரம் 2'-7'' உள் விட்டம் 36'' வெளி விட்டம் 40'', தொட்டியைச் சுற்றி $\frac{1}{4}$'' உருட்டுக் கம்பி 4'' மத்திக்கு மத்தி கட்டி உயரத்தில் $\frac{1}{4}$'' உருட்டுக் கம்பி 6'' மத்திக்கு மத்தி கட்டி 2'' கனத்துக்கு 1:2:4 கான்கிரீட் போட்டு நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும்.

ஆணையர்.

2-12-71.

(த.53)

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29-12-71 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப்பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.	கட்டுத் தொகை.
	ரூ.
சென்னை, திருச்சி, திண்டுக்கல் (தே. நெ. 45) சாலையில் கி.மீ. 38/2-4 (மைல் 23/7)-ல் உள்ள பாலத்தைத் திருப்பிக் கட்டுதல்.	1,472

ஒப்பந்தப் புள்ளிகள் 29-12-71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும். ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II, சென்னை (கிண்டி, சென்னை-25) அலுவலகத்தில் 22-12-71 முதல் 28-12-71 முடிய விற்பனை வரியுட்பட ரூ.25.88 கட்டிப்பெற்றுக்கொள்ள லாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கோட்டம் கிண்டி, சென்னை-25) அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்தி னுள்ளும், ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் II கிண்டி, சென்னை-25 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியை யாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

(த. 35)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளி கள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகா தாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அர சினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து எண். 17, சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர் களால், 5-1-1972 புதன்கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறி யாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: பொதுச் சுகாதாரப் பொறியியல் கோட்டம், திருச்சி, இரும்பு எஃகு கம்பிகள் சப்ளை செய்தல்.

ஒப்பந்த வகை: மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை: ரூ. 6,000 (ரூபாய் ஆறுயிரம் மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற் றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி, பொதுச் சுகா தாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு: இரண்டு மாதம்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 15.53 (விற்பனை வரி உட் பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 3-1-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள் ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொது சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை-2,
28-11-1971.
(த. 55)

தமிழ்நாடு அரசு (வாழ்க்கைப் பொருள் வழங்குத் துறை) வெற்றுக் கோப்பைகள் விற்பனைக்கு

தருமபுரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சேமிப்பு நிறுவனத் தின் தருமபுரி கிடங்கிலுள்ள பயன்படுத்தவியலாத மற்றும் பழுதுற்ற 75 கிலோ கிராம் மற்றும் 100 கிலோ கிராம் கொள் ளளவுள்ள 16,442 வெற்றுக் கோணிப்பைகளை விற்பனை செய்ய அரக்குமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரால் 1971-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் புதன் கிழமை 22-ஆம் நாள் பிற்பகல் 2 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறைகளில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டியது. முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 2-30 மணிக்கு திறக்கப்படும். மேற்சொன்ன நாள் அரசாங்க விடுமுறை நாளாக இருந்தால் மறு நாள் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள், விற்பனை வரை முறைகள், வரையறை கள், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து ரூபாய் ஐந்தும் மற்றும் மூன்றரை நூற்று விழுக்காடு விற்பனை வரி ஆக ரூ.5-20 காசுகள் செலுத்தி, 2—12—1971-ஆம் நாளிலிருந்து 21—12—1971-ஆம் நாள் வரை பெற்றுக் கொள்ளலாம். இத் தொகைத் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

ரா. பத்மநாபன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தருமபுரி.

(த. 47)

மாவட்ட வேளாண்மை அலுவலர் அலுவலகம்

மாவட்ட வேளாண்மை அலு வலர் (பருத்திப் பெருக்கு), திருப்பூர் அவர்களுக்கு, 1972–73-ஆம் ஆண்டிற்குத் தேவைப் படும் சுமார் 30,000 (முப்பதா யிரம்) (101·6 செ.மீ. நீளமும், 71·1 செ.மீ அகலமும், 1 கிலோ எடையுமுள்ள) டி. டபிள்யூ. பிளேன் கோணிப்பைகள் வழங்கு வதற்கான மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வர வேற்கப்படுகின்றன.

திருப்பூர் கிடங்கிற்கு இரயில் செலவில்லாமல் (F.O.R.) விநியோகம் செய்யும் வகையில் விலைவிகிதம் குறிப்பிடப்பட வேண்டும். மற்றும் விநியோகத் திற்கான ஆணையிட்ட 10 (பத்து) தினங்களுக்குள் கோணிப்பைகள் வழங்கப்படவேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் தரும்பொழுது, மாதி ரிக் கோணிப்பைகள் கண்டிப் பாக அனுப்புதல் வேண்டும். மாதிரிக் கோணிப்பைகள் அனுப் பாத ஒப்பந்தப் புள்ளிகள்கண்டிப் பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. ஒவ்வொரு ஒப்பந் தப் புள்ளியுடனும் பிணை வைப்புத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) கரு வூலத்தில் செலுத்தி செலான்கள் அனுப்புதல் வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் இரு பிரதிகளாகத் தாக்கல் செய் யப்பட்டு, '' மாவட்ட வேளாண்மை அலுவலர் (பருத்திப் பெருக்கு), இராய பண்டாரம் தெரு, திருப்பூர்-2'' என்ற விலாசத்திற்கு அனுப்பு தல் வேண்டும். ரொக்க மாகவோ, மணியார்டர் மூல மாகவோ ரூ. 2·07 செலுத்தி, ஒப்பந்தப் பாரமும், சட்ட-திட் டங்களும் இரு பிரதிகளாக இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

'' 1972-73-ஆம் ஆண்டிற் குக் கோணிப் பைகள் சப்ளை செய்வதற்காக ஒப்பந்தப் புள்ளி'' என்று உறையின் மேல் குறிப்பிட்ட மூடி முத்திரையிடப் பட்ட உறைகள் '' மாவட்ட வேளாண்மை அலுவலர் (பருத்திப் பெருக்கு), இராய பண்டாரம் தெரு, திருப்பூர்-2'' அவர்களுக்கு 6—1—1972-ஆம் தேதி, நண்பகல் 12 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ சேர வேண்டும். காலம் கடந்துவரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மேலே குறித்த தேதியில், மாவட்ட வேளாண்மை அலு வலர் (பருத்திப் பெருக்கு), திருப்பூர் அலுவலகத்தில் பிற் பகல் 3-00 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள், வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன் னிலையில் திறக்கப்படும்.

ந. கிருஷ்ணமூர்த்தி,
மாவட்ட வேளாண்மை அலுவலர்
(பருத்திப் பெருக்கு),
திருப்பூர்-2.

(த. 70)

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப்பகுதி தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

தொடர் எண்ணும், வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி.	ஒப்பந்தப் புள்ளிப் பெற கடைசித் தேதி.
	ரூ.	ரூ.			
1 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'எப்' வகை தொழிற் கூடங்கள் இரண்டு கட்டுதல்.	6,900	10·40	12 மாதங்கள்.	15–12–1971	22–12–1971
2 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'எப்' வகை ஒன்று 'ஜி' வகை ஒன்று தொழிற்கூடங்கள் கட்டுதல்.	5,650	10·40	டி	15–12–1971	22–12–1971
3 அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 'ஜி' வகை இரண்டு தொழிற்கூடங்கள் கட்டுதல்.	4,400	10·40	10 மாதங்கள்.	15–12–1971	22–12–1971
4 அம்பத்தூர் தொழிற்பேட்டை 'ஜி' வகை தொழிற் கூடங்கள் இரண்டு கட்டுதல்.	4,400	10·40	டி	15–12–1971	22–12–1971
5 அம்பத்தூர் தொழிற்பேட்டை 'எச்' வகை தொழிற்கூடங்கள் மூன்று கட்டுதல்.	5,850	10·40	12 மாதங்கள்.	15–12–1971	22–12–1971
6 அம்பத்தூர் தொழிற்பேட்டை 'எச்' வகை தொழிற்கூடங்கள் மூன்று அமைத்தல்.	5,850	10·40	டி	15–12–1971	22–12–1971

1. ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் (சி) அம்பத்தூர் கோட்டம் 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது அலுவலகத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்டத் தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries—other receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம் 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்த வேண்டும்.

4. கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ 'கால் டிபாசிட்' வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகைக்காக, ஷெட்யூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள் (நிருவாகப் பொறியாளர், கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்டவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பீட்டில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகைச் செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர், (கட்டுமானப் பகுதி).

சென்னை-2.
(த.26)

வீட்டு வசதி வாரியம்

சென்னை வடக்குப் பிரிவு

கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயர் ஒப்பந்தக் காரரின் பெயர் ஆகியவை உறை மீது குறிப்பிடப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதனதன் பெயர்களுக்கு எதிரில் குறிப்பிட்ட நாட்களில் மாலை 2-30 மணிக்கு முன் அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் வந்திருக்கும் ஒப்பந்ததாரரின் முன்னிலையில் மாலை 2-35 மணியளவில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்.	வேலையின் சுமார் மதிப்பு.	ஒப்பந்த வடிவம் மொத்தத் தொகை.	ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை (திருப்பித் தரப்பட மாட்டாது.)
	ரூ.	ரூ.	ரூ.
அறிஞர் அண்ணா நகர், பகுதி மூன்று தொகுதி ஒன்று, ஒன்றில் நான்கு (1—4) வீடுகள் கொண்ட மூன்று நடுத்தர வருமானப் பிரிவு வகை பிளாக்குகள் கட்டுதல்.	2,27,400	3,415	15+4% சதவிகித வி. வ.
அறிஞர் அண்ணா நகர், பகுதி மூன்று தொகுதி இரண்டு, ஒன்றில் நான்கு (1—4) வீடுகள் கொண்ட மூன்று நடுத்தர வருமானப் பிரிவு வகைபிளாக்குகள் கட்டுதல்.	2,27,400	3,415	15+4% சதவிகித வி. வ.
அறிஞர் அண்ணா நகர், பகுதி மூன்று தொகுதி ஒன்று, ஒன்றில் நான்கு (1—4) வீடுகள்கொண்ட நான்கு நடுத்தர வருமானப் பிரிவு வகை பிளாக்குகள் கட்டுதல்.	3,03,200	4,555	15+4% சதவிகித வி. வ

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் பிற தகவல்களை நிருவாகப் பொறியாளர், சென்னை வடக்குக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அவர்தம் அலுவலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரையில் 29–11–71ல் அல்லது அதற்குப் பிறகு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை விற்பனை வரி செலுத்தப்பட்ட இரசீது சலான்களைக் கொடுத்துப் பெறலாம்.

வி. எஸ். இராமகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 8)

கதர் கிராமத்தொழில் துறை

1972-ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் துறை கை முறைக் காகித அலகுகளுக்குத் தேவையான வெள்ளைப் பருத்தி பனியன் வெட்டுத் துண்டுகள் (White Cotton Hosiery Cuttings சப்ளை செய்வதற்கான முத்திரையிடப்பெற்ற ஒப்பந்தங்கள் 31-12-1971 மாலை 4 மணி வரை அடியிற் குறிப்பிட்ட அலுவலரால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்றே மேற்படி ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

கீழ்க்கண்ட முகவரியில் ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள் மற்றும் விவரங்களை 3½ சதவிகிதம் விற்பனை வரியுடன், ரூ. 5-ம் (ரூபாய் ஐந்து மட்டும்) மணியார்டர் மூலமோ அல்லது ரொக்கமாக நேரில் செலுத்தியோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனாக்கள் மாற்றத் தக்கதல்ல.

மண்டல துணை இயக்குநர்,
கதர் கிராமத்தொழில்கள்,
18, ஸ்ரீ. குமாரநகர்,
திருப்பூர்-3.

(த. 69)

ஏல விளம்பரம்

தீயணைப்புப் பணித்துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி, ஸ்டுடிபேக்கர், 1957-ஆம் வருட மாடல் எம்.எஸ்.எக்ஸ். 183 என்னும் வண்டியை, கோயம்புத்தூர் ஸ்டேட் பாங்க் சாலையில் உள்ள கோயம்புத்தூர் தீயணைப்புத்துறை காம்பவுண்டில், 1972-ஆம் வருடம் சனவரி மாதம் 5-ந் தேதி காலை 11 மணிக்கு பகிரங்கமாக ஏலம் விடப்படும். மேற்கண்ட இழுக்கும் மோட்டார் வண்டியைக் கோயம்புத்தூர் தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவருடைய அலுவலகத்தில் பெறலாம்.

ஏ. கே. இராமநாதன்,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்.

(த. 68)

ஒப்பந்தப் புள்ளி

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக்கொள்ளப்படும்.

எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்.	பிணைப் பொறுப்புத் தொகை.	ஒப்பந்த முறை.	முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை.	விற்பனை வரி.	ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கும் கடைசி தேதி.	விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.
			ரூ.			ரூ.	ரூ.காசு.		
1	திருச்சியில் உள்ள அரசினர் ரயில்வே போலீஸ் பிரிவில் ஒரு போலீஸ் தலைமைச் சேவகர் குடியிருப்பும், 20 போலீஸ் சேவகர்கள் குடியிருப்புகளும் கட்டுதல்.	24–12–1971 மாலை 3-00 மணி.	3,200	எல்.எஸ்	பத்து மாதங்கள்.	25	0·88	13–12–1971	24–12–1971 மாலை 3-30 மணி.
2	திருச்சியில் உள்ள சிந்தாமணி போலீஸ் குடியிருப்புப் பிரிவில் 4 போலீஸ் தலைமைச் சேவகர் குடியிருப்பும், 6 போலீஸ் சேவகர் குடியிருப்பு வீடுகளும் கட்டுதல்.	24–12–1971 மாலை 3-00 மணி.	2,500	எல்.எஸ்.	எட்டு மாதங்கள்.	25	0·88	13–12–1971	24–12–1971 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் (ஒவ்வொரு வேலைக்கும் தனியே) முறையே அரசின் கருவூலத்தில்: XXXVII Public Works—State Revenue—Miscellaneous மற்றும் XII Sales Tax (b) receipts under the State Sales Tax Act General Sales Tax என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தி இந்தச் சலான் மேற்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளரின் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமையுண்டு.

மற்ற விதிகளும், விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்
திருச்சி [illegible] மேற்பார்வைப் பொ

645

ஒப்பந்தப் புள்ளி

வெள்ளிப் பதக்கங்கள் (மெடல்) பொன் முலாமிட்ட வெள்ளிப் பதக்கங்கள், சென்னை-6ல் உள்ள உடற்பயிற்சிக் கல்வி தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் தெரிவிக்கப்படும் வரை அளவு களின் படி வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சென்னை-6, உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர் அவர்களால் 1—9—1971 முதல் டிசம்பர் 20-ந் தேதி மாலை 2-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

வெள்ளிப் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக விலைப் புள்ளிகள், குடியரசுத் இரு நாள் விளையாட்டுகள் 1971—72 என்று உறையின் மீது குறிப்பிட்டு, ஒப்பந்தப் புள்ளிகளை பதிவு அஞ்சல் மூலம் அனுப்பலாம் அல்லது நேரில் தரலாம். ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடனும் கட்டுத் தொகை ரூ. 200 (இருநூறு மட்டும்) கட்டப்பட வேண்டும். ஒப்பந்த மொத்த மதிப்பு ரூ. 8,355 விற்பனை வரி நீங்கலாக.

20—12—1971 மாலை 2-00 மணிக்குப் பிறகுவரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படமாட்டா. 20—12—1971 மாலை 3-00 மணிக்கு கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் ஒரு குழு, ஒப்பந்த புள்ளிகளைத் திறக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ அப்போது இருக்கலாம்.

எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ, அனைத்தையும் நிராகரிக்கவோ குழுவுக்கு உரிமை உண்டு.

கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் அலுவல் நாட்களில் காலை 10-30லிருந்து மாலை 3 மணி வரை பதக்கங்களைப் பார்வையிடலாம். ஒப்பந்த நிபந்தனைகளையும் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மூன்று நாட்களுக்குள் ஒப்பந்தப் புள்ளிதாரர் ஒரு உடன்பாடு எழுதிக் கொடுக்க வேண்டும்.

பதக்கங்கள் பற்றிய விவரம் வருமாறு

விலை விகிதம். ரூ.	அளவு		விவரம்.		தேவைப்படும் பதக்கங்கள் எண்ணிக்கை.
15	3·4	செ.மீ.	Die struck Silver medals with Gopuram emblem with Die struck matter in front of the medals and engraving matter at the back of the medal	Dist. level	183
				State level	138
				Total	321
20	டி		Do (Gold plated)	Divisional level	30
				State level	138
				Total	168
30	டி		Do	State level	6

ஒவ்வொரு வகையிலும் வெள்ளியின் எடை எவ்வளவு என்பது ஒப்பந்தப் புள்ளிதாரரால் குறிப்பிடப்பட வேண்டும்.

வெள்ளி நூற்றுக்கு நூறு சுத்த வெள்ளி என்பதற்கு உத்தரவாதம் வேண்டும்.

1—12—1971
(க.79)

வி. எம். ரகுபதி,
உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர்,
சென்னை.

16-12—13

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண்-17 சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 5–1–1972 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—ஸ்ரீரங்கம் குடிதண்ணீர்த் திட்டம்—தலைமை நீரேற்று நிலையம்—இரண்டாம் நிலை—நீரேற்றிகள் அளித்தல்—நிருமாணித்தல் சம்பந்தமாக.

ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை.—ரூ.4,500(ரூபாய் நான்காயிரத்து ஐநூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையின் முடிவிற்குரிய கால அளவு.—ஆறு மாதம்

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 15·56 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் நிருவாகப் பொறியாளர், பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி 15, தில்லை நகர் சாலை, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 3–1–1972 மாலை 5 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரை-2,
26–11–1971.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

(த. 92)

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 24–12–1971 மாலை 4 மணிவரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.	வேலையின் மதிப்பு.	வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 உடன் தனிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இட வசதி செய்ய ஓர் அறை கட்ட.	10,500	525
2 குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய்சேய் நலவிடுதியைப் பழுது பார்க்க.	6,700	335
3 ஒலிமுகம்மதுபேட்டை தாய் சேய் நலவிடுதி கட்டடத்தை விரிவுபடுத்த.	9,000	450

காஞ்சிபுரம்,
3–12–1971.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

(த. 96)

ஏல விற்பனை

தலைமைச் செயலகம் (ஊர்திகள்)

இராஜபவன் பிளிமவுத்கார் (பதிவாகாதது), தலைமைச் செயலகம் அலுவலர் ஊர்திகள் நிறுத்தப்படும் இடம், சென்னை-9ல், 27–12–1971 காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

காரின் பெயர்.—ராஜபவன் பிளிமவுத் (பதிவாகாதது). மாடல்.—1960 மாடல்.

ஏலம் கோர விரும்புவோர், கண்காணிப்பாளர் தலைமைச் செயலகம் (ஊர்திகள்) அவர்களிடம் தொடர்பு கொண்டு விற்பனை நிபந்தனைகளை அறிந்து கொள்ளலாம்.

டி. வி. வெங்கட்டரராமன்,
அரசு இணைச்செயலாளர்,
பொதுத்துறை.

(த. 87)

வனத் துறை

அரசினர் தேயிலைத் தோட்டத் திட்டம்

நெல்லியாளம் கோட்டம், கூடலூர், நீலகிரி

கீழ்க்காணும் வேலைகளை மேற்கொள்வதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாக நெல்லியாளம் கோட்ட வன அலுவலர் அவர்களால் 17—1—1972-ஆம் தேதி காலை 11 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்த விண்ணப்பமும் கீழ்க்குறிப்பிட்ட வைப்புத் தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்திய சலானுடன் அனுப்பப்பட வேண்டும்.

வேலை விளம்பரம்.	மதிப்பீட்டுத் தொகை.	வைப்புத் தொகை.
	ரூ.	ரூ.
1 1972-ஆம் ஆண்டின் தேயிலைச் செடி நடும் இடங்களுக்குச் சாலைகள் அமைத்தல்.	45,000	1,350
2 நாற்றங்காலிலிருந்து நெல்லியாளம் சாலையில் இரண்டு பாலங்கள் கட்டுதல்.	20,000	600
3. 1972 மற்றும் 1973-ஆம் ஆண்டு தேயிலைத் தோட்டங்களின் சாலையில் ஒரு பாலம் கட்டுதல்.	10,000	300
4. எலமன்னு அம்மன்காவு சாலை சீர்படுத்துதல்.	10,000	300

மேற்குறிப்பிட்ட வேலைகள் 31—3—1972-க்குள் முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்த நமூனவும் மற்ற விவரங்களும் ரூ. 4·14 கீழே ஒப்பமிட்டவரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. ரமேஷன்,
கோட்ட வன அலுவலர்.

(த. 67)

பொதுப் பணித் துறை

கள்ளிப் பெட்டிகள் (Dealwood Boxes) வழங்குவது சம்பந்தமாக முத்திரையிட்ட ஒப்பந்த அறிவிப்புகள் நிருவாகப் பொறியாளர், மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம், பொதுப் பணித்துறை, சென்னை-5 அவர்களால் 15–1–1972, 3 மணிக்கும் அதற்கு முன்பே ஏற்கப்படும். ஒப்பந்த அறிவிப்பு செய்யவிரும்புபவர்கள் எழுத்து மூலமாக கேட்டுக் கொண்டால், சாமான்கள் வழங்கவேண்டிய அளவு நிபந்தனைகள் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்படும்.

"P.W. III Other Remittances Executive Engineer, P.W.D. Soil Mechanics and Res. Divn., Madras-5", என்ற கணக்குத்தலைப்பில் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துக்கான கட்டணம் ரூபாய் ஒன்றும், "XII. Sales-tax Under State Sales-tax Act" என்ற கணக்கின் கீழ் விற்பனை வரி காசு மூன்றும் செலுத்தியதற்கான வங்கி சலான் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்த அறிவிப்புப் பத்திரங்களின் தேவைக்கான விண்ணப்பங்கள் 10–1–1972-க்கு மேல் வந்தால் கவனிக்கப்பட மாட்டா.

திருவாகப் பொறியாளர்,
மண்தன்மை ஆராய்ச்சிக் கோட்டம்.

(த. 50)

மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, கோவை மத்திய பண்டகச்சாலையிலுள்ள கழிவு இரும்புச் சாமான்கள், துத்தநாகக் கம்பிகள், உபயோகப்படாத வன (M. D. C. 7726) மற்றும் இதர கழிவுப் பொருள்கள் வாங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 7—1—1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 3-30 மணியளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தப் புள்ளிகள் சம்பந்தப்பட்ட முழு விபரங்களடங்கிய நமூனக்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ரூ. 3 (ரூபாய் மூன்று மட்டும், இது திருப்பித்தரதக்கது அல்ல) "தலைமைக் கணக்காயர் (செலவினம்) பைக்காரா மின்திட்டம், டாடாபாத் கோவை-12" என்ற விலாசத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 6—1—1972 தேதி மாலை 5 மணிவரைதான் கொடுக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி படிவங்கள் அஞ்சல் பிரயாணத்தின் போது தவறினாலோ அல்லது தாமதமாகக் கிடைத்தாலோ இவ்வாரியம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது. ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கது அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின்திட்டம்,
டாடாபாத், கோவை-12.

(த-88)

குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடுபொதுச்சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்), பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 5—1—1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—பள்ளப்பட்டி குடிநீர்த்திட்டம்—இரண்டாம் நிலை—தலைமையில் பணிகள் வடித்து நீர்சேகரிக்கும் அமைப்பு (ஃபில்டர் பெசின்) அமைத்தல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை—ரூ. 2,325 (ரூபாய் இரண்டாயிரத்து முன்னூற்று இருபத்து ஐந்து மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர் மெயின்ரோடு, திருச்சி, என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 3—1—1972 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
தமிழ்நாடு குடிநீர் வாரியம்.

மதுரை,
26—11—1971.
(த. 66)

தீ அணைப்புத் துறை

திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தைச் சேர்ந்த கண்டம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொடர் ஊர்தி (பம்ப் மாத்திரம்) திருச்சிராப்பள்ளித் தீ அணைப்பு நிலையத்தில் 5—1—1972 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்தப் பம்பை திருச்சிராப்பள்ளி தீ அணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

பம்ப்பின் விவரங்கள்.

பதிவு எண்.	ஊர்தியின் வகுப்பு.	மேக்.	வருட மாடல்.
எம்.எஸ்.ஒய். 7843.	தொடர் ஊர்தி பம்ப்.	கொடிவா கவண்ட்ரி கிளைமேக்ஸ் பேபி.	1956

விற்பனை நிபந்தனைகள் திருச்சிராப்பள்ளிக் கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ரெத்தினசாமி,
கோட்டத் தீயணைப்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.

(த. 63)

குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையமும் மருத்துவமனையும் எழும்பூர், சென்னை

சென்னை—8 எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையமும் மற்றும் மருத்துவ மனைக்கு (Institute of Child Health and Hospital for Children, Madras-8). 1972 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் 1973 மார்ச்சு 31-ஆம் தேதி வரையிலுள்ள காலத்திற்குத் தேவைப்படும் ஆகார வகையில்லாத பொருள்கள் (Non-diet articles) சப்ளை செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறைகளில் அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த நிபந்தனைகள் தேவைப்படும் பொருட்களின் பட்டியல் மற்றும் ஒப்பந்த வடிவங்களை மனுச்செய்து அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலை ரூ. 5-ஐ (ரூபாய் ஐந்து மட்டும்) "XXIII—Medical DME-J Misc" என்ற தலைப்பிலும் மற்றும் 3½ சதவீத விற்பனை வரியும், அதற்கான சர்சார்ஜ் 5 சதவீதத்தையும் "XII Sales Tax receipts under the Sales Tax Act" General Sales Tax, என்ற தலைப்பிலுமாகச் சென்னையில் உள்ள ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது அரசினர் கருவூலம் ஒன்றிலோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்த வேண்டும்.

டாக்டர் வி. பாலகோபால் ராஜு,
நெறியாளர் மற்றும் கண்காணிப்பாளர், குழந்தைகள்
நல ஆராய்ச்சி நிலையமும், மருத்துவமனையும், எழும்பூர்,
சென்னை-8.

(த. 61)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை

தேசிய நெடுஞ்சாலை வேலைகள் (மதுரை மாவட்டம்)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை, அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 12—1—1972 புதன்கிழமை அன்று பிற்பகல் 3-30 மணிவரையில் (அலுவலக கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

எண்.	வேலையின் பெயர்.	கட்டு தொகை. ரூ. உ.	ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் விலாசம்.
1	மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7—கி.மீ. 37/6-55/0 சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	32,100	கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2.
2	கி.மீ. 55/0-65/0 சாலையை அகலப்படுத்தி பலப் படுத்துதல்.	24,800	ஷை
3	கி.மீ. 65/0-77/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	31,500	ஷை
4	கி.மீ. 77/0-88/4 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	29,100	ஷை
5	கி.மீ. 95/0–105/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	25,900	ஷை
6	கி.மீ. 105/0–115/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	30,000	ஷை
7	கி.மீ. 115/0–125/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	27,800	ஷை
8	கி.மீ. 125/0–134/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	19,000	ஷை
9	கி.மீ. 134/0–146/4 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	31,300	ஷை
10	கி.மீ. 170/0–183/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்	25,600	ஷை
11	கி.மீ. 183/0–195/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	36,200	ஷை
12	கி.மீ. 195/0–203/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்	21,400	ஷை
13	கி.மீ. 203/0–213/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	20,200	ஷை
14	கி.மீ. 213/0–224/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	31,700	ஷை
15	கி.மீ. 224/0–231/6 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	21,700	ஷை
16	சேலம்—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை 7—கி.மீ. 345/0–355/0 சாலையை அகலப்படுத்தி பலப்படுத்துதல்.	31,000	கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சி கோ-2.
17	தேசிய நெடுஞ்சாலை எண் 45—கி.மீ. 403/0–417/250 சாலையை அகலப்படுத்தி விரிவுப்படுத்துதல்.	33,700	ஷை

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப்பொறியாளர் அலுவலகம் (தேசிய நெடுஞ்சாலை)

மதுரை-2 மேலும் கோட்டப்பொறியாளர். அலுவலகம் தேசிய நெடுஞ்சாலை திருச்சி கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 5—1—1972 முதல் 11—11—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயப்படிவங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகையை மேற்கண்ட தனிக் கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும் மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரியப்பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்குஒப்புதலைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பி. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை),
மதுரை-2.

(த. 81)

ஒப்பந்தப் புள்ளி

மின்சார வாரியம்

விளக்க விவரம் எண். SEG BB 44

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக தமிழ்நாடு மின்சாரவாரியத்துக்கு உபயோகப்படக்கூடிய பலதரப் பொருள்களை சென்னை எழும்பூர், ஸால்ட் குவார்ட்டர்ஸ், கொருக்குப்பேட்டை, மத்திய இரயில் நிலையம் சரக்குத் தொழுவங்களிலிருந்தும் சென்னையில் உள்ள மற்ற இடங்களிலிருந்தும் சென்னை-12-ல் உள்ள பேஸின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையம் சரக்கு நிலையத்திற்குப் போக்கு வரவு ஏற்றிச் செல்லல் வேலைக்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 20—12—1971 அன்று பகல் 1-00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 10·00 (ரூபாய் பத்து) ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளி விளக்க விவரப் பிரதிகள் வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 10:00 வீதம் துணைத் தலைமைக்கணக்கர், மின் உற்பத்தி நிலையம், பேஸின் பிரிட்ஜ் மின்நிலையம், சென்னை-12 என்ற முகவரிக்கு பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. இத்தொகையை பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (Specification No.) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விலை ஒப்பந்ததாரர்களுக் கிடையே ஆணையைப் பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்துக்கும் ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) பிணைத் தொகையாக பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் நேரில் செலுத்தி அதற்கான ரசீதை விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மேற்படி ரசீது இல்லாத விலை ஒப்பங்களும் உரிய தாள்களில் சேர்க்கப்படாத விலை ஒப்பங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. 20-12-71 அன்று மாலை 4-00 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளின் முன்னிலையில் அடியிற் கையொப்பமிட்டுள்ளவரால் அவருடைய அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை மின் பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
பேஸின் பிரிட்ஜ் மின் நிலையம்,
சென்னை-12.

(த. 83)

ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட லெட்ஜரை அச்சிட்டு வழங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் (Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் 30—12—1971 பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

வரிசை எண், பொருள்.	சாற்றுக் குறிப்பெண்.	அச்சிட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை.
1. தமிழ்நாடு மின்சார வாரியம் 39-பி, காலம்வார் லெட்ஜர், (T.N.E.B.—39-B, Column war Ledgers)	(Specfication No.) PA/HC/Tender No. 1/71.	சுமார் 25,000 பிரதிகள்.

மேற்படி லெட்ஜரை அச்சிட்டு வழங்குவதற்கான விவரங்களும், விலைப்புள்ளிகள் குறித்து அனுப்புவதற்கான குறிப்புத்தாள் ஒன்றும் அடங்கிய ஒப்புச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் (Copies of Specn.) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) (விற்பனை வரி உட்பட), " அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், தமிழ்நாடு மின்சார திட்டம், 157, அண்ணா சாலை, சென்னை-2 ", என்ற முகவரிக்கு, ரொக்கமாகவோ அல்லது பணஅஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி மேற்படி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

பிரதிகள் (Copies of Specification) சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அஞ்சலில் தவறிவிட நேரிட்டால் எக்காரணம் முன்னிட்டும் மின்சார வாரியம் பொறுப்பு ஆகாது.

ச. சபாபதி,
மேற்பார்வைப் பொறியாளர்
(விநியோகம்)
சென்னை மின்சார திட்டம்.

157, அண்ணா சாலை,
சென்னை-2

த. 101

நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு மாநில ஆளுநர்க்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—71 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு குறளகக் கட்டடம் நான்காவது மாடியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்.	முன்வைப்புத் தொகை. ரூ.
1. தேசிய நெடுஞ்சாலை எண். 47-ல் பவானி-குமாரபாளையம் புறச்சாலை அமைத்தல்.	65,660
2. பவானி-குமாரபாளையம் புறச்சாலையில் காவிரியின் குறுக்கே பாலம் கட்டுதல்.	1,15,550
3. பவானி-குமாரபாளையம் புறச்சாலையில் கி.மீ. 4·5-ல் காளிங்கராயர் கால்வாய் குறுக்கே பாலம் கட்டுதல்.	4,230

ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—71 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர்(நெ), தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 21—12—71 முதல் 28—12—71 முடிய ரூ. 250 உடன் விற்பனை வரியும் முதல் இரண்டு வேலைகளுக்கும் ஒவ்வொன்றிற்கும் ரூ. 25 உடன் விற்பனை வரியும் மற்ற மூன்றுவது வேலைக்கும் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற் குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம், சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் என்ற பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ)

(த.85)

சைனிக் பள்ளி

அமராவதி நகர்

கோயம்புத்தூர் மாவட்டம்

5-வது வகுப்பு

1972-ஆம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு

1972 பிப்ரவரி மாதம் 19, 20 தேதிகளில் நுழைவுத் தேர்வு நடைபெறும். (விடைகளை, தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிகளில் எழுதலாம்.) இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று தேர்முகப் பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு, தேர்வு போர்டு முன் ஆஜராக வேண்டும்.

வயது.—1962 ஜூலை 2 மற்றும் 1963 ஜூலை 1-ந் தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உட்பட).

தமிழ் நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள்:—

சென்னை.	திருநெல்வேலி.
கடலூர்.	சேலம்.
தஞ்சாவூர்.	வேலூர்.
திருச்சிராப்பள்ளி.	அமராவதிநகர்.
மதுரை.	

பள்ளிப் பாடத்திட்டம்.—திறமையான கல்வி உணவு வசதி மற்றும் விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற்பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசிய பாதுகாப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும் மத்திய செகண்டரி கல்வி போர்டால் நடத்தப்படும் அகில இந்திய உயர் செகண்டரி தேர்வுக்கும் (புகுமுக வகுப்பிற்குச் சமமானது) சிறுவர்களைத் தயார் செய்யும். போதனை மொழி ஆங்கிலம். தவிர உயர்-கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியைக் கட்டாயப் பாடமாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

பள்ளிக் கட்டணம்.—ஆண்டுக்கு ரூ. 2,050 (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உள்பட); உடை வகைகள் கட்டணம் (Out Fit Charges) ரூ. 300 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 150 பின்வரும் ஆண்டுகளிலும், செலுத்த வேண்டும். எச்சரிக்கைத் தொகை ரூ. 150 (இது பள்ளியை விட்டுச் செல்லும்போது திருப்பித் தரப்படும்). கைச்செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 100.

தகுதி மற்றும்—வருமான அடிப்படையில் அரசாங்க உதவித் தொகைத் திட்டங்கள்.—

தமிழ்நாடு :—தமிழ் நாட்டில் நிலைத்து வாழ்ந்து வரும் சிறுவர்களுக்கும் மற்றும் இதற்குச் சேர்த்துக்கொள்ளும் வருடத்தில் ஜனவரி 1-ஆம் தேதியன்று உள்ளபடி குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்குத் தமிழ் நாட்டில் தொடர்ந்து உத்தியோகத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

கூட்டாகப் பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 400, ரூ. 500, ரூ. 700, ரூ. 1,000 வரையில் இருக்குமானல் அப்பொழுது அளிக்கப்படக்கூடிய உபகாரச் சம்பளத்தின் மதிப்பு முறையே முழுதும், முக்கால், பாதி, கால் பாகம்.

பாதுகாப்பு அமைச்சகம்.—பணிபுரிந்து வரும் முன்னுள் JCOகள், ORகள் மற்றும் அவர்களுக்குச் சமமான கடற்படை விமானப்படைகளில் பதவிகளை வகித்தவர்களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

உள்துறை அமைச்சகம்.—மத்திய அரசு நேரடி ஆட்சியின் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்குத் தாராளமான உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

விண்ணப்பம் மற்றும் விளக்கக் குறிப்புகள்.—விண்ணப்பப்படிவம், பள்ளி விளக்கக் குறிப்புகள், மாதிரி விஞத்தாள் ஆகியவைகள் வேண்டுவோர் 90 காசு தபால் தலையும் அதனோடு 5 காசு வரித் தபால் தலையும் ஒட்டிய 42 செ. மீ.×15 செ. மீ. அளவுள்ள சுய விலாசமிட்ட உறையுடன் முதல்வர் சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதிநகர் தபால் அலுவலகத்தில் பெறுமாறு), அவர்கள் பெயருக்கு ரூ. 3-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச்செய்து பெறலாம். மேலும் மனுவில் எந்த மொழியில் விஞத்தாள் தேவை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

கடைசித் தேதி.—குறிப்பிட்ட படிவத்தில் பூர்த்தி பெற்ற விண்ணப்பங்களுடன் ரூ. 5-க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டரை இணைத்து முதல்வருக்கு 20—1—1972 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

(த. 82)

ஒப்பந்தப் புள்ளி

கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களுக்கு 1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் அதிகாரி குறிப்பிடும் தேதியிலிருந்து 1973-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதிவரை தேவைப்படும் உணவுப் பொருட்களும், மருத்துவ நிலையங்களுக்கான இதர சாமான்களும் வழங்குவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ் நாடு அரசினரின் ஆளுநருக்காக மேற்படி மருத்துவ நிலையங்களின் கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகளால் 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2·00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ,தேவைப்படும் சாமான்களின் பட்டியல், விதிகள் அடங்கிய அட்டவணை முதலியவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூ. 5·00 (ரூபாய் ஐந்து மட்டும்) '' XXIII. Medical G. Miscellaneous I DHS & EPM என்ற தலைப்பில் விற்பனை வரி 18 காசு மட்டும் '' XII Sales Tax '' என்ற தலைப்பிலும் ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ அரசுக் கருவூலங்களிலோ செலுத்தி மேற்படி இரண்டு செலான்களையும் மேற்படி கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகளிடம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. அரசினர் தலைமை மருத்துவ நிலையம், தூத்துக்குடி.
2. அரசினர் மருத்துவ நிலையம், தென்காசி.
3. அரசினர் மருத்துவ நிலையம், நான்குநேரி.
4. அரசினர் மருத்துவ நிலையம், சங்கரன்கோவில்.
5. அரசினர் மருத்துவ நிலையம், அம்பாசமுத்திரம்.
6. அரசினர் மருத்துவ நிலையம், செங்கோட்டை.
7. அரசினர் மருத்துவ நிலையம், கோவில்பட்டி.
8. அரசினர் மருத்துவ நிலையம், திருச்செந்தூர்.
9. அரசினர் மருத்துவ நிலையம், ஸ்ரீவைகுண்டம்.
10. அரசினர் மருத்துவ நிலையம், ஆயக்குடி.
11. அரசினர் மருத்துவ நிலையம், சேர்மாதேவி.
12. அரசினர் மருத்துவ நிலையம், சாத்தான்குளம்.
13. அரசினர் மருத்துவ நிலையம், எட்டையபுரம்.
14. அரசினர் மருத்துவ நிலையம், ஒட்டப்பிடாரம்.
15. அரசினர் மருத்துவ நிலையம், காலங்குடியிருப்பு.
16. அரசினர் மருத்துவ நிலையம், கடையநல்லூர்.
17. அரசினர் மருத்துவ நிலையம், மேலப்பாளையம்.
18. அரசினர் மருத்துவ நிலையம், காயல்பட்டினம்.
19. அரசினர் தொழுநோய் தடுப்பு நிலையம், சீருடையார்புரம்.
20. அரசினர் தொழுநோய் தடுப்பு நிலையம், சிவகிரி.
21. அரசினர் ஆயுர்வேத மருத்துவ நிலையம், செங்கோட்டை.

குறிப்பு:—(1) ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமான சான்றிதழ் (Solvency Certificate) அல்லது அதன் உண்மையான நகல் கெஜட் பதிவான அதிகாரியின் கையொப்பமிட்டாவது அனுப்பவேண்டும்.

(2) ஒப்பந்தம் கொடுக்கப்படும் சலான்களின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டால் வருமான வரி பாக்கி இல்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும் ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரி கட்டி முடித்த அத்தாட்சியும், மேலும் தேசிய இனச்சான்றும் (National Certificate) ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

(3) ஒப்பந்த நிபந்தனை நமூனுவையும், பொருள்களின் அட்டவணையையும் தனிக் குறிப்பீடு அட்டவணையையும் நன்குகப் படித்து அறிந்து சம்மதித்துக் கொள்ள வேண்டும். அதன் ஒப்புதலுக்காக மேற்படி நமூனுவையும், அட்டவணையையும் கையெழுத்திட்டு ஒப்பந்தத்துடன் திருப்பித்தர வேண்டும்.

(4) ஒப்பந்தத்துடன் கொடுக்கும் நபர் ஒப்பந்தம் சமர்ப்பித்தபின் அது சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளக்கூடாது.

டாக்டர் எஸ். ரெங்கநாதன், பி.ஏ., எம்.பி.பி.எஸ்.,
மாவட்ட மருத்துவ அதிகாரி, திருநெல்வேலி இருப்பு,
தூத்துக்குடி-3.

(த. 110)

மதுரை மாவட்ட மருத்துவ மனைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

ந.க. எண். 24562/பி. வி./71. நாள் : 20–11–71.

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் அல்லது அதற்குப்பிந்தியதொரு தேதி முதல் 1973-ஆம்ஆண்டு மார்ச்சு 31-ந்தேதி வரையில் மதுரை மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும், ஏனைய கீழ்க்காணும் மருத்துவ மனைகளுக்கும் தேவையான உணவுப் பொருட்கள், இதர மருத்துவமனைத் தேவைகளையும் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், சம்பந்தப்பட்ட மருத்துவமனைக் கண்காணிப்பாளர்கள், மருத்துவ மனை அலுவலர்களால் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ந்தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. அரசினர் தலைமை மருத்துவமனை, திண்டுக்கல்.
2. அரசினர் மருத்துவமனை, பழனி.
3. அரசினர் மருத்துவமனை, கொடைக்கானல்.
4. அரசினர் மருத்துவமனை, உசிலம்பட்டி,.
5. அரசினர் மருத்துவமனை, திருமங்கலம்.
6. அரசினர் மருத்துவமனை, மேலூர்.
7. அரசினர் மருத்துவ மனை, போடிநாயக்கனூர்.
8. அரசினர் மருத்துவ மனை, உத்தமபாளையம்.
9. அரசினர் மருத்துவமனை, பெரியகுளம்.
10. அரசினர் மருத்துவ மனை, வத்தலகுண்டு.
11. அரசினர் மருத்துவ மனை, கம்பம்.
12. அரசினர் மருத்துவ மனை, நிலக்கோட்டை.
13. அரசினர் மருத்துவமனை, தாண்டிக்குடி.
14. அரசினர் மருத்துவ மனை, பண்ணைக்காடு.
15. அரசினர் மருத்துவ மனை, ஆயக்குடி.
16. அரசினர் மருத்துவ மனை, ஒட்டன்சத்திரம்.
17. அரசினர் மருத்துவ மனை, தேனி.

ஒவ்வொரு மருத்துவமனைக்கும் தேவைப்படும் பொருட்களின் பட்டியல், ஒப்பந்த வரன் முறைகள், ஒப்பந்த வடிவங்கள், ஆகியவற்றினை, அந்தந்த சம்மந்தப்பட்ட மருத்துவமனைகளும் மனுச்செய்துப் பெறலாம். ஒப்பந்தப் புள்ளி வடிவம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5-19 ரூபாய் ஐந்து, பத்தொன்பது காசுகள் மட்டும் விற்பனை வரி 3 சத விகிதம் சர்சார்ஜ் 5 சத விகிதம் உள்பட) இத்தொகை இந்திய ரிசர்வு வங்கியிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ தமிழ் நாடு அரசின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவத்துக்கு ரூ. 5-00 (XXIII Medical—G. Miscellaneous - I. Director of Health Services and Family Planning—Other Receipts) என்ற தலைப்பிலும், விற்பனை வரி ரூ. 0-19 XII Sales Tax Receipts under Sales Tax Act—General Sales Tax என்ற தலைப்பிலும் ஒரே செலுத்துச் சீட்டில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் படிவங்கள் விண்ணப்பத்துடன் அசல் செலுத்துச் சீட்டு இணைக்கப்படவேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

குறிப்பு.—ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் அனுப்பும் ஒப்பந்தப் புள்ளியுடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதிக்குப் பின்னர் வட்டத்து ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்ட பெரும்புள்ளிச் சான்றிதழும் (Solvency Certificate) தேசீய இனச் சான்றிதழும் (Nationality Cetificate) அனுப்ப வேண்டும்.

2. ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்பட்டால் வருமானவரி சான்றிதழும் (Income Tax verification certificate) ஒப்பந்தப் புள்ளி மதிப்பு ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனைவரி முழுமையும் பாக்கியின்றி கட்டியமைக்கான சான்றிதழும் (Sales Tax clearance certificate) அனுப்ப வேண்டும். தமிழக அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரால் கையொப்பமிட்ட உண்மை நகல்களும் அனுப்பலாம்.

3. ஒப்பந்தப் புள்ளியுடன் ஒப்பந்த வரன் முறைகள் (Condition of Tender) உணவுப் பொருட்களின், மற்றும் தேவைப்பட்டியல் (Schedule of Diet, etc. articles) ஆகியவற்றினையும் நன்கு படித்துத் தெரிந்து, வரன் முறைகளுக்கு உட்பட்டு நடக்கச் சம்மதம் என அதில் கையெழுத்திட்டு திருப்பி அனுப்பி வைக்க வேண்டும்.

4. ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்பிய பின்னர் ஒப்பந்த சம்மந்தமாய் எந்த விதமான கடிதத் தொடர்பும் செய்யக் கூடாது.

திண்டுக்கல், டாக்டர் தி. சி. நாகராஜன், எம்.பி.பி.எஸ்.
20—11—71. மாவட்ட மருத்துவ அலுவலர்.

(ந. 73)

ஒப்பந்தப் புள்ளி ஒத்தி வைப்பு அறிக்கை

பொதுப்பணித்துறை

சென்னை—செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர்—சென்னை அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அவுட் பேஸண்ட் (out-patient) அலுவலகத்திற்காகக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்காக ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 16-10-1971 என்ற கெடு 27–12–1971 மாலை 3-00 மணிவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 18-12-1971 முதல் 26-12-1971 வரை பெற்றுக்கொள்ளலாம். மற்ற நிபந்தனைகளில் எந்த மாறுதலும் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறிஞர்,
சென்னை-செங்கை வட்டம்.

(ந. 80)

ஒப்பந்தப் புள்ளி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்காக 1972–73-ஆம் ஆண்டு உணவுப் பொருட்கள் மற்றும் இதர மருத்துவமனை தேவைகளுக்குண்டான ஒப்ப அறிவிப்பு.

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்தக் குத்தகை ஏற்றுக்கொள்ளும் தகுதி பெற்ற அதிகாரி ஒவ்வொன்றிற்கும் திட்டமாகக் குறிப்பிடும் மற்ற தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியோடு முடிவடையும் காலத்திற்கு நாகர்கோயில் அரசாங்க மாவட்டத் தலைமை மருத்துவ மனைக்கும் மற்றும் பத்மனுபபுரம், குழித்துறையிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளுக்கும் தேவைப்படும் உணவுப்பொருட்களையும் மற்றும் மருத்துவ மனைக்காக இதர சாதனங்களையும் வழங்குவதற்கான முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகள் தமிழ்நாடு அரசு, ஆளுநர் (கவர்னர்) அவர்கள் சார்பில் அந்தந்த ஊர் மருத்துவமனை அலுவலர்களால் 1972-ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 7-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை வர வேற்கப்படுகின்றனர்.

2. ஒப்ப அறிவிப்புப் பற்றிய நிபந்தனைகளடங்கிய பிரதி, ஒப்ப அறிவிப்பு நமூனு தேவையான பொருட்களின் அட்டவணை நாகர்கோயில் மாவட்ட மருத்துவ அலுவலர் அலுவலகத்திலும், பத்மனுபபுரம், குழித்துறை அரசினர் மருத்துவ அலுவலரின் அலுவலகங்களிலிருந்தும், அலுவலக நேரங்களில் பணிபுரியும் எல்லா நாட்களிலும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

3. மற்றும் தேவையான, விவரங்கள் அனைத்தும் அந்தந்த அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டாக்டர் ஈ.ஏ. கிருஷ்ணமூர்த்தி,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
நாகர்கோயில்.

நாகர்கோயில்,
27–11–1971

(ந. 74)

ஏல விற்பனை

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ஸ்டேஷன் வாகன் எம்.எஸ்.ஒய். 5677, 15–12–71 தேதி புதன் கிழமை காலை 11-00 மணிக்கு செங்கற்பட்டு, மாவட்ட வளர்ச்சி அலுவலர் (தெற்கு) அவர்களால் மாவட் ஆட்சியாளர் அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். அலுவலக வேலை நாட்களில் ஊர்தியைக் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அலுவலகத்தில் பார்வையிடலாம். ஏலம் கேட்க விரும்புபவர்கள் கட்டுத்தொகை ரூ. 100 மாவட் வளர்ச்சி மன்ற அலுவலர், (தெற்கு) அவர்களிடம் செலுத்த வேண்டும்.

மேற்படி தொகை ஏலம் முடிந்தவுடன், ஏலம் கேட்காதவர்களுக்கு வாபஸ் செய்யப்படும். கட்டுத் தொகை ரூ. 100-ஐ கட்டாதவர்கள் ஏலத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.

ஏலமானது, உயர்ந்த தொகை கேட்பவர்களுக்கு விடப்படும். மேற்படி ஏலதார் ஏலத் தொகையில் 25 சத வீதத்தை ஏலக் கட்டுத் தொகை ரூ. 100 போக மீதியும் உடனே கட்டிடவேண்டும். அப்படிக் கட்டத் தவறினால் அவர்களது கட்டுத் தொகை ரூ. 100 சர்க்காருக்குத் தாக்கல் செய்து மறு ஏலம் நடத்தப்படும்.

மேற்படி ஏலம் தமிழ்நாடு போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் காயம் செய்யப்படும். காய உத்திரவு ஏலதாருக்கு அனுப்பிய தேதியிலிருந்து 1 வாரத்தில் மீதித் தொகை பூராவையும் விற்பனை வரியுடன் செலுத்த வேண்டும். பிறகுதான் வண்டி பட்டுவாடா செய்யப்படும். தவறினால் ஏலதார் கட்டியுள்ள 25 சதவீதத் தொகையானது அரசுக்குச் சேர்ந்துவிடும். மறு ஏலம் நடத்தப்படும். மேற்படி மறு ஏலத்தில் நஷ்டம் ஏற்பட்டால் ஏற்படும் நஷ்டம் முதல் ஏலத்தாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

மேற்படி ஏலமானது தமிழ்நாடு போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் காயம் செய்யப்படாவிட்டால் ஏலதார் கட்டியுள்ள 25 சதவீதத்தொகை ஏலதாருக்குத் திருப்பி அளிக்கப்படும்.

மாவட்ட வளர்ச்சி அலுவலர்.
(தெற்கு), மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

(ந. 57)

மணப்பாறை நகராட்சி

மணப்பாறை நகராட்சிக்குக் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27-ஆம்தேதி திங்கட் கிழமை மாலை 4-00 மணிவரை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் மேற்படி டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி மாலை 4-15 மணிக்கு நகராட்சி ஆணையர் அவர்களால் அப்பொழுது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

	வைப்புத் தொகை. ரூ.
1. 9'—0''× 7'—6'' அளவில் ஒப்பந்த அறிவிப்பில் கண்ட அளவு விவரத்தில் பெட்டிக்கடை வழங்குதல். 10 பெட்டிக்கடைகள்.	250
2. மின்சாரச் சாமான்கள். (ஒப்பந்தப் படிவங்களில் உள்ளபடி).	100

ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரம் ஒன்றின் விலை ரூ. 5-18 (விற்பனை வரி உள்ளிட்டு).

வி. நாகராஜன்,
ஆணையர்.

(த.95)

காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27-12-1971 அன்று மாலை 4-00 மணி வரை மூடி, முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்கண்ட வேலைகளுக்கு வரவேற்கப்படுகின்றன. அவை அன்று மாலை 4-05 மணிக்கு ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியரிடமிருந்து எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

வேலையின் பெயர்.	மதிப்பு. ரூ.	பொறுப்புத் தொகை. ரூ.
1. நகரக் கூடம் மின்சார ஒயரிங் செய்தல்.	8,000	400
2. நகராட்சி அலுவலக மின்சார ஒயரிங்.	5,000	250
3. வேகவதி தலைமை நீர் நிலையத்தில் 50 குதிரை வேகமுள்ள மின்உந்து பொருத்துவதற்கு அறை கட்ட.	8,400	420

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

காஞ்சிபுரம்,
25—11—1971.

(த.97)

குடிசைப் பகுதி மாற்று வாரியம்

கீழ்க்கண்ட வேலைகளுக்கு, உறையின்மேல் வேலையின் பெயரும், ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரும் குறிப்பிட்டு மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், 24–12–1971மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட முகவரிக்கு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—யானைக்கவுனி காவல் நிலயத்திற்குப் பின்புறம் கல்யாணபுரத்தில் பலதளக் கட்டடம் கட்டுவதற்கு 'பைல்' அடித்தளம் அமைத்தல்.

வேலையின் சுமார் மதிப்பு.—ரூபாய் 5 இலட்சம்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை. கட்டுத்தொகை ரூ. 7,500.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை.—ரூ 15+விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோட்டம் 1, 35/37, ஜகாங்கீர் தெரு, இரண்டாம் கடற்கரைச் சாலை, சென்னை-1 அவர்தம் அலுவலகத்தில் 15–12–1971 முதல் 23–12–1971 வரை அலுவல் நாட்களில் காலை 10-00 மணி முதல் மாலை 4-00 வரை, ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை, விற்பனை வரியும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம்,
கோட்டம் 1, சென்னை-1.

(த. 98)

வட ஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள வட்ட மருத்துவமனை களில் மிதிவண்டி நிலயம், நடத்துவதற்கு 1972—73-ஆம் ஆண்டுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 14—1—1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிவரை அந்தந்த மருத்துவமனை மேலாளர் களால் பெற்றுக் கொள்ளப் படும். மருத்துவமனைக்குள் மிதி வண்டிகள் நிறுத்துமிடம் வைத்து நடத்துவதற்கான விதிகள் :—

1. மிதி வண்டிகள் நிறுத்துவதற்குரிய தகுந்த சாதனங் களைக் குத்தகைக்காரர்கள் வைக்க வேண்டும்.

2. மருத்துவமனை சிப்பந்திகள் மற்றும் அரசினர் இலாக்காவி லிருந்து தபால் அல்லது அலுவலக வேலையாக மிதி வண்டி களில் வந்தால் அவர்களிட மிருந்தும் கட்டணம் வசூலிக்கக் கூடாது. மருத்துவமனை ஒப்பந்ததாரர்கள் அவர்களதுஏஜண்டுகள் முதலியோர் மிதி வண்டிகளும் விலக்குப் பெற்றவை.

3. மிதி வண்டிகளை அவைகளின் உரிமையாளர்களிட மிருந்து பெறும்போதும், மீண்டும் திருப்பிக் கொடுக்கும் போதும் அடையாள வில்லைகள், வழங்கும் முறையைக் கையாள வேண்டும்.

4. உரிமையாளர் மிதி வண்டிகளை ஒப்படைத்த பின்னர் அவைகளைக் கவனிப்புடன் பார்த்துக் கொள்ளவேண்டும். வில்லைகள் திருப்பிக் கொடுத்தபின்னர் அவர்கள் மிதி வண்டிகளை ஒழுங்காகச் சரிபார்த்துக் கொடுக்க வேண்டும்.

5. காலை 6 மணி முதல் இரவு 8 மணிவரை மிதி வண்டிகளைக் கண்காணிப்பதற்காகக் காவலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

6. குத்தகைக்காரர் பொறுப்பில் மிதி வண்டிகளை விட்டபின்னர் அவைகள் காணு மற்போனால் குத்தகைக்காரரே பொறுப்பாளியாவார். அத்துடன் இழந்ததை ஈடு செய்வதும் அவருடைய பொறுப்பாகும்.

7. குத்தகை எடுக்க விரும்புவோர் திரும்பப் பெறக் கூடிய ஈட்டுத்தொகையை ரூ. 25 (ரூபாய் இருபத்து ஐந்து) நேரில் ஏல கட்டுத் தொகை கட்டுவது போன்று கட்டியபின் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் பெற வேண்டும்.

8. குறிப்பிட்ட குத்தகைக்காக அரசுக்கு 1972—73-ஆம் ஆண்டு முழுமைக்கும் எவ்வளவு பணம் ஒப்புதல் தருகிறீர் என்பதை ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடவேண்டும்.

9. ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களை ரூ. 25 கட்டிய பின் பெற்றுக் கொள்ளலாம்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட குத்தகைக்காரர் அந்தந்த மருத்துவமனை சூப்பிரண்டெண்ட் அவர்களுடன் ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டும்.

11. எந்தக் குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று இவ்வலுவலகத்திலிருந்து அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட அன்றே ஏலத்தொகைக்கட்டிவிட வேண்டும். அவ்வாறு கட்டத் தவறினால் அன்றைது பொறுப்பிலேயே முன் அறிவிப்பு இல்லாமல் குத்தகைவேறு ஒருவருக்கு வழங்கப்படும்.

12. ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டவுடன் முழுத்தொகையும் கட்டி ஒப்பந்தம் செய்து கொள்ளா விட்டால் ஈட்டுப் பணத்தைப் பறிமுதல் செய்வதுடன், மேலும் அதனால் அரசினருக்கு ஏற்படும் நஷ்டத்தையும் அவரிடமிருந்து அரசினர் விதிகளின்படி வசூலிக்கப்படும். இது முக்கியமான விதிமுறை.

13. ஏலத்தொகை கட்டி முடிந்த பின்பு ரூ. 2·25 மதிப்புள்ள அரசினர் முத்திரைக் காகிதத்தில் ஒப்பந்தம் கையெழுத்து செய்ய வேண்டும்.

மாவட்ட மருத்துவ அலுவலர்,
வட ஆர்க்காடு, வேலூர்.

தேதி : 3—12—1971

(த.91)

ஏல விற்பனை

வனத்துறை

மரக்கிடங்கு, பொள்ளாச்சி.

சுமார் 70 கனமீட்டர் ஈட்டி, 50 கனமீட்டர் தேக்கு, 50 கனமீட்டர் கரிமருது, 50 கன மீட்டர் தடசு, 200 கனமீட்டர் பில்லமருது, 80 கனமீட்டர் பல ஜாதி மரங்கள் ஆகியவைகளை 22-12-1971-ஆம் தேதி தமிழக அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென்கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவுப் பெற்றவர் களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடத்தப்படும்.

மற்ற விவரங்கட்கு பொள்ளாச்சியிலுள்ள தமிழக அரசினர் மரக்கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர்,
தென்கோவைப் பிரிவு.

பொள்ளாச்சி,
3—12—1971

(த.90.)

திருச்சிராப்பள்ளி நகராட்சி

இந்நகராட்சிக்குத் தேவையான ஒரு ஆங்கில டைப்ரைட்டிங் மெசின் (Policy Size) வழங்க அரக்கு முத்திரையிட்ட உறைகளில் ஒப்பந்தப் புள்ளிகள் 28—12—71-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த.93)

மணப்பாறை நகராட்சி

மணப்பாறை நகராட்சிக்கு சுமார் ரூ. 38,000 மொத்த மதிப்புள்ள 17 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 1971ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27-ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் மேற்படி 27—12—71-ஆம் தேதி மாலை 4-15க்கு நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ அப்பொழுது ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இதர விவரங்களை அலுவலகத்தில் எழுத்து மூலமாகவோ நேரிலோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். செட்யூல் பாரம் ஒன்றின் விலை ரூ. 5-18.

வி. நாகராஜன்,
ஆணையர்.

(த.94)

பொதுப்பணித்துறை
ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

எண். 29214/70/வ2/
நாள். 3—12—71

வேலையின் பெயர்.—செங்கல்பட்டு மருத்துவமனை, கல்லூரியில் இரண்டாவது பகுதியின் மேல் முதல் மாடியும் இரண்டாம் மாடியும் கொண்ட கட்டடம் கட்டுதல்—செங்கல்பட்டு மாவட்டம்.

மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசி தேதி 22—12—1971 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 22—12—71 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாளில் மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 20—12—71 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து. செங்கை-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 99)

பொதுப்பணித்துறை
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்
தஞ்சாவூர்
ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு அறிக்கை

வேலையின் பெயர் : தூரியாறு, மன்னியார் வடிகால் அபிவிருத்தித் திட்டம். வேலைகள் 1 முதல் 6 பிரிவுகள்.

பார்வை : தமிழரசு தேதி 1—11—71-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 23—12—71 அன்று மாலை 4-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 21—12—71 வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

அ. சேஷாத்திரி,
தனிமேற்பார்வைப் பொறியாளர்.

(த.100)

மின்சார வாரியம்

கோவை இரயில்வே கூட்ஸ் ஷெட், பார்சல் ஆபீஸ் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ள இடங்களிலிருந்து, பைக்காரா சென்ட்ரல் ஸ்டோர்ஸ், சென்ட்ரல் ஆபீஸ் டாடாபாத் ஆகிய இடங்களுக்கும் அதற்கு மாருகவும் இவ்வாரிய சாமான்களை ஏற்றிச் செல்வதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 5—1—1972 மாலை 3-00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை சுமார் 3-30 மணியளவில் வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி சரத்துக்களும், விதிகளும் அடங்கிய படிவங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ '' தலைமைக் கணக்காயர் (செலவினம்) பைக்காரா மின்திட்டம், டாடாபாத், கோவை-12 '' அவர்களிடம் ரூபாய் 2 (ரூபாய் இரண்டு மட்டும், திருப்பித்தரத்தக்கது அல்ல) செலுத்தி அதற்கான ரசீதைப் பண்டக மேற்பார்வையாளர், பைக்காரா மின்திட்டம், கிராஸ்கட் ரோடு, கோவை-12 '' அவர்களிடம் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் படிவங்கள் 4—1—72 அன்று மாலை 5 மணி வரைதான் கொடுக்கப்படும். முன்பணம் 5—1—72 மாலை 1-30க்குள் கட்டிவிட வேண்டும். முன்பணம் கட்டியதற்கான ரசீது இணைத்து வராத ஒப்பந்தப்புள்ளிகளும், அலுவலகப் படிவங்கள் அல்லாத ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

தபாலில் ஏற்படும் எந்தத் தவறுகளுக்கும் இவ்வாரியம் எந்தப் பொறுப்பும் ஏற்காது.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின் திட்டம்,
டாடாபாத், கோவை-12.

(த.105)

பொதுப்பணித் துறை
ஒப்பந்தத்தேதி நீட்டிப்பு.

வேலையின் பெயர் : திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள், 18 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

பார்வை : தமிழரசு தேதி 1—11—1971, 16—11—1971-ல் வெளியிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

மேற்கண்ட வேலைக்கான ஒப்ப அறிவிப்புகள் பெறும் தேதி 6—1—1972 அன்று மாலை 3-00மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 5—1—1972 அன்று மாலை 5-00 மணிவரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

ரா. வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
30—11—1971
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த.108)

நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, திருச்சிக் கோட்டம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்கள் சார்பாகவும் திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பிராந்தியத்தில் உள்ள காவேரி டெல்டாவின் வாணிப வளர்ச்சி மேம்பாடு செய்யும் வேலைக்கும், மண்ணச்சநல்லூரில் கட்டவிருக்கும் மார்க்கெட் கட்டட வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள்(டெண்டர்கள்) அட்டவணைப் பட்டியல்களில், திருச்சிராப்பள்ளி கோட்டப் பொறியாளர் அவர்களால், அவர்களுடைய அலுவலகத்தில் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் (கோட்டப் பொறியாளர் அலுவலக கடிகாரத்தின்படி) பெற்றுக் கொள்ளப்படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்த அறிவிப்புகள் அன்றைய தினமே பிற்பகல் 4-15 மணியளவில் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்கள் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்பு பற்றிய விவரங்கள் குறிப்பிட்ட அறிவிப்புப்பட்டியல்களிலும், பொதுவான நிபந்தனைகளுடன் அட்டவணையும், மேற்படி விவரக் குறிப்புகளும், திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் (12—1—72 முதல் 18—1—72 வரை, இரு நாட்களும் உட்பட) அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் விண்ணப்பித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கான அட்டவணைப் பட்டியலின் அடக்கவிலை, விற்பனை வரி உட்பட ரூ. 10.35 (ரூபாய் பத்தும் காசு முப்பத்தைந்தும்) ஆகும். இந்தத் தொகை எக்காரணத்தைக் முன்னிட்டும், திருப்பித்தர இயலாது. 19—1—72-ஆம் தேதி ஒப்பந்தப் பட்டியல்கள் விற்கப்படமாட்டாது.

முன்வைப்புத் தொகை திருச்சிராப்பள்ளி (நெ.கி.ப.) கோட்டப் பொறியாளர் அவர்களின் எல்லைக்குட்பட்ட அரசினர் கருவூலங்கள் ஏதேனும் ஒன்றில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துச் சீட்டு இணைக்கப்பட வேண்டும். இதைத் தவிர கோட்டப்பொறியாளர் பெயருக்கு வாங்கப்பட்ட பன்னிரண்டண்ாடு தேசீய தற்காப்புப் பத்திரங்களும், மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும் ஷெட்யூல் வங்கிகளால் வழங்கப்படும் வங்கி உத்தரவாதங்களும், டிமாண்டு டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் முன்வைப்புத் தொகைக்காகப் பெற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத்தொகை வங்கி உத்தரவாதமாக இருப்பின் அவைகள் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். முன்வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

வரிசை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்த மதிப்பு.	கட்டுத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.
		ரூ.	ரூ.	
1	அப்பாதுரை கிராமம் டி. வளவனூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0	43,700	1,100	4 மாதங்கள்.
2	அப்பாதுரை கிராமம் டி. வளவனூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/0	43,100	1,080	ஷை
3	அப்பாதுரை கிராமம் டி. வளவனூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-5/8	40,500	1,020	ஷை
4	புள்ளம்பாடி–செங்கரையூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0	46,100	1,160	ஷை
5	புள்ளம்பாடி–செங்கரையூர் சாலை மேம்பாடு செய்தல் 2/0-4/0	47,200	1,180	ஷை
6	கூகூர்–ஆனந்திமேடு சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0	50,600	1,270	ஷை
7	கூகூர்–ஆனந்திமேடு சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-3/2	31,300	790	ஷை

வரிசை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்த மதிப்பு.	கட்டுத் தொகை.	வேலையை முடிக்க வேண்டிய காலம்.
		ரூ.	ரூ.	
8	சிறுமருதூர்-கீழபெருங்கனூர்-நகர்சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/6-4/0	42,000	1,050	4 மாதங்கள்
9	சிறுமருதூர்-கீழபெருங்கனூர்-நகர்சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-6/0	34,700	870	ஷை
10	புள்ளம்பாடி-வண்டலை கூடலூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0	40,000	1,000	ஷை
11	புள்ளம்பாடி-வண்டலை கூடலூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/4	48,000	1,200	ஷை
12	அன்பில்-குரிச்சி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-1/0	28,000	700	ஷை
13	அன்பில்-குரிச்சி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/0-2/4	40,000	1,000	ஷை
14	வாளாடி-எசனக்கரை தண்டன்கரை சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0	46,000	1,150	ஷை
15	அன்பில்-தின்னியம் சாலை மேம்பாடு செய்தல் 0/0-1/0	37,500	940	ஷை
16	அன்பில்-தின்னியம் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/0-3/0	43,000	1,080	ஷை
17	புள்ளம்பாடி சங்கேந்தி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-1/0	19,000	480	ஷை
18	புள்ளம்பாடி சங்கேந்தி சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 1/0-3/0	40,000	1,000	ஷை
19	வாளாடி-சிறுமருதூர்-வி. துறையூர்-சமயபுரம் சாலை கி.மீ. 0/0-2/0	47,000	1,180	ஷை
20	வாளாடி-சிறுமருதூர்-வி. துறையூர்-சமயபுரம் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/0	46,000	1,150	ஷை
21	வாளாடி-சிறுமருதூர்-வி. துறையூர்-சமயபுரம் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-6/2	49,000	1,230	ஷை
22	மாந்துறைநகர்-மருதூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0-2/0	30,000	750	ஷை
23	மாந்துறைநகர்—மருதூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 2/0-4/0	45,500	1,140	ஷை
24	மாந்துறைநகர்-மருதூர் சாலை மேம்பாடு செய்தல் கி.மீ. 4/0-5/4	35,500	890	ஷை

மண்ணச்சநல்லூர் மார்க்கெட்டுக்கான கட்டடங்கள் கட்டுதல்

25	மார்க்கெட்டுக்கு அலுவலக கட்டடம் கட்டுதல்	55,000	1,380	ஷை
26	நடவடிக்கை மன்றம் ஷெட் கட்டுதல் (எண் 1)	30,100	760	ஷை
27	நடவடிக்கை மன்றம் ஷெட் கட்டுதல் (எண் 2)	30,100	760	ஷை
28	மார்க்கெட்டுக்குக் கிடங்கு கட்டுதல்	36,000	1,050	ஷை

எம். டி. பால்மாணிக்கம்,
கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) திருச்சிராப்பள்ளி.

(த.109)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தொழில் வணிகத் துறை பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் மாலை 3 மணி வரை பெறப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில் கீழே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசி நாள் மாலை 3-10 மணிக்கு, அந்த சமயத்தில், வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை.	ஒப்பந்த வடிவத்தின் விலை.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்த வடிவங்கள் கிடைக்கும் நாள்.	ஒப்பந்த வடிவம் பெற கடைசி நாள்.
	ரூ.	ரூ.			
1. காக்களூர் தொழிற்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு ஒரு பிளாக்கு கட்டுதல்.	1,100	10.40	6 மாதங்கள்.	18-12-1971	28-12-1971
2. மாதவரம் தொழிற்பேட்டையில் ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள் வீதம் தொழிலாளர்களுக்காக 2 பிளாக்குகள் கட்டுதல்	2,100	10.40	6 மாதங்கள்.	18-12-1971	28-12-1971

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற் பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்தம் அலுவலகத்தில், மேலே குறிப்பிடப்பட்ட தேதிகளில், அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனைவரி உட்படத் தொகையான ரூ. 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது) அரசுக்குக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத்த வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) தொழிற் பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவீதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தில் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப் பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி.

(த. 76)

6-12-15

663

ஒப்பந்தப் புள்ளி

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், கோட்டம் எண் 4, அசோக் நகர், சென்னை-83.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண் 4, அசோக் நகர், சென்னை-83 அவர்தம் அலுவலகத்தில் 30—12—1971 மாலை 3—00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3—10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	வேலையின் சுமார் மதிப்பு.	ஒப்பந்தப் படிவம் கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை (திருப்பித் தரப்படாது).	வேலை முடிக்க வேண்டிய காலம்.
	ரூ.	ரூ.	ரூ.	
1. ஜாபர்கான் பேட்டை, திட்டம் 2, தொகுதி ஒன்று டி.டி. 217/70 படி ஓர் அறை நான்கு தளங்கள் உள்ள குடியிருப்புக்கள் ஒன்றில் 32 (ஏ1, ஏ2.) இரண்டு பிளாக்குகள் கட்டுதல்.	8,97,600	6,000	15 விற்பனை வரி.	9 மாதங்கள்.
2. ஜாபர்கான் பேட்டை, திட்டம் 2 தொகுதி 2 டி.டி. 217/70 படி ஓர் அறை நான்கு தளங்கள் குடியிருப்புகள் ஒன்றில் 32 (ஏ. 3, ஏ. 4, ஏ. 5) மூன்று பிளாக்குகள் கட்டுதல்.	5,96,400	9,000	15 விற்பனை வரி.	9 மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-4, அசோக் நகர், சென்னை-83 அவர் தம் அலுவலகத்தில், 20-12-1971-லிருந்து எல்லா வேலை நாட்களிலும் காலை 11—00 மணி முதல் மாலை 3—00மணி வரை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை விற்பனைவரி உட்பட செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டைக் கொடுத்து ஒப்பந்தப் புள்ளி வடிவங்களைப் பெறலாம்.

பெற்றுக் கொள்ளப்பட்ட எந்த ஒரு அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளும் காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

எஸ். மாரியப்பன்,
மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று
வாரியம், கோட்டம் எண்-4.

அசோக் நகர், சென்னை-83,
25—11—1971.

(தி 71)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர் — — கிண்டி தொழில்பேட்டை தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையத்தில் துணைக் கூடங்கள் இரண்டு கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காகத் தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக் காரர்களிடமிருந்து, மேற்பார்வைப்பொறியாளர் கட்டுமானப் பகுதி தொழில் வணிகத்துறை அவர்களால் 29—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு/ சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் — மொத்தத் தொகை
2. கட்டுத் தொகை .. ரூபாய் 3,200 (ரூபாய் மூவாயிரத்து இரு நூறு மட்டும்)
3. மாதிரி வரைப்படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து. ரூபாய் 10.40
4. வேலையைமுடிக்கவேண்டிய காலம். 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறி, யாளர் (கட்டுமானம்) வடக்குக்கோட்டம் தொழிற்பேட்டை, கிண்டி, என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), வடக்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 17—12—1971 அன்று முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10.40 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது), அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32, அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற் பேட்டை, கிண்டி, அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்ட் வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமை யாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக் கொள்ளப்படாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி.பி. மாத்யூ,
மேற்பார்வையாளர், (கட்டுமானப்பகுதி)

(த. 72)

ஒப்பந்தப் புள்ளி

எழுதுபொருள் அச்சுத்துறை

அரசு அச்சகம் தங்கசாலை கட்டடம் சென்னையில் 1—2—72 முதல் 31—1—73 வரை உள்ள காலத்திற்குக் கழிவுப் பொருட்களை அன்றாடம் எடுத்துக் கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29—12—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், மூடி முத்திரையிட்டு பதிவு அஞ்சலில் எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநர், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். வேறு வழியில் அனுப்பக்கூடாது. "29—12—71 கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர், சென்னை-1-ல் எல்லா வேலை நாட்களிலும், ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் மற்ற விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இயக்குநர்

(த: 65)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வளர்ச்சித் துறை

வேலையின் பெயர் :—

தஞ்சாவூர் தொழிற் பேட்டையில் ஒன்றில் 4 'எல்' பணிக்கூடங்கள் அமைந்த பிளாக் கட்டுவதற்காக.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக, பொருள்களை வழங்குவதற்காக, தொழில்துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப் பகுதி தொழில் வணிகத்துறை அவர்களால் 24—12—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்	—	மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை	—	ரூபாய் 2,500 (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்).
3. மாதிரி வரைப்படத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையும், ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்களின் விலைக்குரிய விற்பனை வரியும் சேர்த்து.		ரூபாய் 10·40 காசு.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம்.		6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் திருவாகப் பொறியாளர் அலுவலகம், திருச்சி கோட்டம், 63, ரங்களுதபுரம், புத்தூர் என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சி கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 15—12—1971 அன்று முதல், அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40-ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது). அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries other Receipts" என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சி கோட்டம் 63, ரங்களுதபுரம், புத்தூர், திருச்சி அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, "கால் டிபாசிட்" ரசீது வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சி கோட்டம், அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

(த. 62)

ஒப்பந்தப் புள்ளி

தமிழக ஆளுநருக்காக கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—1—1972 மாலை 3·00 மணிவரை அரசு அச்சகத்திற்குத் தேவையான பலவிதமான பொருள்கள் வழங்குவதற்கு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் விவர அட்டவணையில் டைப் செய்து அனுப்பப்பட வேண்டும். விவர அட்டவணைகளை ரூபாய் இரண்டு மட்டும் செலுத்தி, விற்பனை அலுவலர், அரசு வெளியீட்டு அலுவலகம், சென்னை-2 அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை-1, அவர்களுக்கு எழுதவும்.

—ஜி. ரங்கா ராவ்,
இயக்குநர்.

அரசினர் எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1.
3—12—1971

(த-89)

ஒப்பந்தப் புள்ளி

தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காகத் தொழில் துறை மற்றும் இதர அரசுத்துறைகளின் கட்டுமானப்பகுதியின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத் துறை அவர்களால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-10-க்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் துறை, 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் திறக்கப்படும்.

வரிசை எண்ணும் வேலையின் பெயரும்.	கட்டுத் தொகை.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. ரூ.	வேலை முடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரம் கிடைக்கும் நாள்.	ஒப்பந்தப் புள்ளிப் பெறுவதற்கான கடைசிநாள்
1 அம்பத்தூர் தொழிற் பேட்டையில், 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (பிளாக் 1-ல் 6 குடியிருப்புகள்) கட்டுதல்.	2,100	10·40	6 மாதங்கள்.	17-12-1971	29-12-1971
2 அம்பத்தூர் தொழிற் பேட்டையில் 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) கட்டுதல்.	2,100	10·40	6 மாதங்கள்.	17-12-1971	29-12-1971
3 அம்பத்தூர் தொழிற் பேட்டையில் 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) கட்டுதல்.	2,100	10·40	6 மாதங்கள்.	17-12-1971	29-12-1971
4 அம்பத்தூர் தொழிற் பேட்டையில் 2 பிளாக்குகள் தொழிலாளர் குடியிருப்புகள் (ஒரு பிளாக்கில் 6 குடியிருப்புகள்) கட்டுதல்.	2,100	10·40	6 மாதங்கள்.	17-12-1971	29-12-1971

1. ஒப்பந்த வடிவம்: மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர் தம் அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட தேதி முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10-40ஐ (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX Industries and Other Receipts" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) அம்பத்தூர் கோட்டம், 35/2, உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்த வேண்டும்.

4. கட்டுத் தொகையைச் சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' வடிவிலோ, ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்டாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), அம்பத்தூர் கோட்டம், 35/2 உட்ஸ்ரோடு, சென்னை-2 அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்ட் வங்கியின் டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்

களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப் பட்ட எந்த வங்கியினுடைய உத்தரவாதமும் ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகிறவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி.

சென்னை-8.

(தூ 86)

ஒப்பந்தப் புள்ளி

குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழே குறிப்பிடப் பட்டுள்ள வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-8 அவர்களால் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை-8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 29-12-1971 அன்று மாலை 3-00 மணி வரை, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் இத்துறையில் அல்லது இது போன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்ததாரர் களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

தொடர் எண்ணும் வேலையின் விவரமும்.	ஒப்பந்த வடிவம்;	கட்டுத் தொகை.	வேலையைமுடிக்க வேண்டிய காலம்.	ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.
		ரூ.		ரூ.
1 பண்ருட்டி நீர் வழங்கு திட்டம் இரண்டாவது கட்டம் 1-வது பிராந்தியத்திற்காக, 9 இலட்சம் லிட்டர் திறனுள்ள ஆர். சி.சி. மேல் மட்ட சர்விஸ் ரிசர்வாயர் வேண்டுமான குழாய்கள், இணைப்புகள், வால்வு பிட்டுகள் முதலியவற்றுடன் முழுதுமாக.	மொத்தத் தொகை.	4,680	7 மாதங்கள்.	10·85
2 பண்ருட்டி நீர் வழங்கு திட்டம் இரண்டாவது கட்டம், 2-வது பிராந்தியத்திற்காக 4 இலட்சம் லிட்டர் திறனுள்ள ஆர்.சி.சி. மேல்மட்ட சர்விஸ் ரிசர்வாயர், வேண்டுமான குழாய்கள், இணைப்புகள், வால்வு பிட்டுகள் முதலியவற்றுடன் முழுமையாக.	மொத்தத் தொகை.	2,365	7 மாதங்கள்.	10·35

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிருவாகப் பொறியாளர் (ம.ந.வா.பொ.) மக்கள் நல் வாழ்வுப் பொறியியல் கோட்டம், குடிநீர் வடிகால் வாரியம், 28, ராஜாஜி தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களிடமிருந்து, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நேரில் செலுத்தியோ அல்லது பண அஞ்சல் மூலம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப் படமாட்டாது.

(தூ. 75)

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
குடிநீர், வடிகால் வாரியம், சென்னை-8.

ஒப்பந்தப் புள்ளி

அரசினர் மருத்துவ மனை, உதகை

உதக மண்டல அரசினர் தலைமை மருத்துவமனை மற்றும் குன்னூர், கூடலூர், கோத்தகிரி, சிங்காரா ஆகியவற்றிலுள்ள மருத்துவ நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு ஆகாரப் பொருட்களும், மருத்துவமனைத் தேவைகளும் 1971 ஏப்ரல் 1-முதல் (அல்லது ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட தேதி முதல்) 1973 மார்ச்சு 31 முடிய வழங்குவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972, ஜனவரி 7, வெள்ளிக் கிழமை மாலை 2.00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும். உதகமண்டலம் அரசினர் தலைமை மருத்துவமனையைப் பொறுத்த அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் மருத்துவமனையின் மேற்பார்வையாளரால் பெற்றுக்கொள்ளப்படும். இதர மருத்துவ நிறுவனங்களைப் பொறுத்தவரை அந்தந்த நிறுவனங்களுக்குப் பொறுப்பான மருத்துவ அலுவலர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

ஒப்பந்த வடிவம், நிபந்தனைகள் அந்தந்த மருத்துவ மனைகளுக்குத் தேவைப்படும் ஆகாரப் பொருட்கள், இதரப் பொருட்கள் ஆகிய விவரங்களை, மருத்துவ அலுவலர் அல்லது சம்பந்தப்பட்ட மருத்துவமனையின் மேற்பார்வையாளர் இவர்களுக்கு மனுச் செய்து பெறலாம். செலானையும் உடன் வைத்து மனுச் செய்ய வேண்டும். ஒப்பந்தப் புள்ளி வடிவம் முதலியவைகளுக்கான விலை ரூ. 5.20-ஐ விற்பனை வரி உட்பட (திருப்பித்தரப்படாது) ஒரே சலானில் இந்திய ரிசர்வ் வங்கியிலோ, இந்திய ஸ்டேட் வங்கியின் கிளையிலோ, தமிழ்நாடு அரசுக் கருவூலத்திலோ பத்திரத்திற்காக "XXIII Medical G. Miscellaneous --1 Director of Health Services and Family Planning—Other receipts" என்ற தலைப்பில் ரூபாய் ஐந்தும், விற்பனை வரிக்காக ரூ. 0.20 காசு XII Sales-tax receipts under the State Sales tax Act—General Sales tax என்ற தலைப்பிலும் கட்டவேண்டும். ரொக்கமாகப் பணம் ஏற்கப்படமாட்டாது.

குறிப்பு.—(1) 1971 அக்டோபர் 1-ஆம் தேதிக்குப் பிற்பட்டு தாசில்தார் ஒருவரால் கையெழுத்திடப்பட்ட நிர்ணய பாரத்திலமைந்த சொத்துச் சான்றிலோ அல்லது கெஜட் பதிவு பெற்ற அதிகாரி ஒருவரால் சரியான முறையில் அத்தாட்சி இடப்பட்ட அதன் உண்மை நகலோ ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 10,000-க்கு அதிகப்படுமானால் வருமான வரி ஒப்பாய்வுச் சான்றிதழும், ஒப்பந்தத்தின் தொகை மதிப்பு ரூ. 1,800-க்கு மேலானால் விற்பனை வரிக் கணக்குத் தீர்ப்புச் சான்றிதழும் ஒப்பந்தத்துடன் சேர்த்துத் தாக்கல் செய்ய வேண்டும்.

டாக்டர் கே. ஜே. வர்க்கீஸ்,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
நீலகிரி,
மேற்பார்வையாளர்,
அரசினர் மருத்துவமனை.

உதகமண்டலம்,
18—11—1971.

(தூ. 106)

ஒப்பந்தப் புள்ளி

வீட்டு வசதி வாரியம்

கொரட்டூர் கோட்டம்

கே, ஆர். 1/211-ஏ/70.
24—11—71.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால் 22—12—71 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர் : தமிழ்நாடு அரசு வாடகை வீடுகள் திட்டம். இரண்டாம் கட்டம், தொகுதி I-ன் கீழ் காஞ்சிபுரத்தில் T. D. எண் 2-ஏ/68-ன் படி இரண்டு அறை, இரண்டு தள பிளாக்குகள், இரண்டு பிளாக்குகள் கட்டுதல்.

வேலையின் சுமார் மதிப்பு.—ரூ. 66,400.

கட்டுத் தொகை—ரூ. 995.

வரை படங்கள், ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவைகளை நிருவாகப் பொறியாளர் (கே). தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அறிஞர் அண்ணா நகர், சென்னை-40 அவர்கள் அலுவலகத்தில் 15—12—71-லிருந்து ரூ. 10-ம் அத்துடன் விற்பனை வரி, சர்சார்ஜ் ஆகியவையும் (இது திருப்பித் தரப்படாது) சலான் முறையில் செலுத்தி எல்லா அலுவல் நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் 22—12—71 மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

டி. பி. காளியப்பன்,
நிருவாகப் பொறியாளர்
(கே).

(தூ. 77)

ஒப்பந்தப் புள்ளி

பொதுப் பணித்துறை

வேலையின் பெயர்:

கடலூர் மீன்துறை வடகரையில் படகு பேசின் ரிவெட்மெண்ட் சுவர் கட்டுதல்.

(1) தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலைக்காக 27-12-1971 மாலை 3·00 மணி வரை, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மத்திய மெக்கானிகல் வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

(2) ஒப்பந்த வடிவம் : கே. 2.

(3) கட்டுத் தொகை: ரூ. 3,000.

(4) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை: ரூ. 20 (இருபது மட்டும்).

(5) ஒப்பந்தப் பத்திரங்களின் விற்பனை வரி. — ரூ. 0.60 காசு (அறுபது காசு மட்டும்.)

(6) வேலை முடிக்கவேண்டிய காலம். — 6 மாதங்கள்.

(7) மேற்பார்வைப் பொறியாளர், மத்திய தொழில் வட்டம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கும் காலம். — 13—12—1971 முதல் 24—12—1971 முடிய.

(8) பிரிவு 4, பிரிவு 5 இவற்றில் குறிப்பிட்டத் தொகையை முறையே "P. W. Remittances XII. other Remittances" என்றும் 'Sales Tax—B. Receipt under the State Sales tax Act. என்ற தலைப்புகளில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்கக் கருவூலம் எதிலுமோ மேற்பார்வைப் பொறியாளர், மெரைன் ஒர்க்ஸ் கோட்டம், கடலூர் அவர் தம் கணக்கில் செலுத்தியதற்கான சலான்களுடன் மேலே குறிப்பிட்ட ஒப்பந்தப் படிவங்களைப் பெற மனுச்செய்து, பெற்றுக் கொள்ள வேண்டும்.

(9) ஒப்பந்தப் புள்ளி அறிக்கை விவரத்தில் கண்டுள்ள விதிப்படியே கட்டுத் தொகைகள் ஏற்கப்படும்.

(10) துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட உறையில் மேலே வேலையின் பெயரை எழுதி ஒப்பந்தப் புள்ளி என்று குறிப்பிட்டு மட்டுமே ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கப்படவேண்டும்.

(11) எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க மேற்பார்வைப் பொறியாளர், மத்திய மெக்கானிக்கல் வட்டம் அவர்களுக்கு உரிமையுண்டு.

(12) 9, 10-வது பிரிவுகளில் சொல்லப்பட்டதற்கு மாறாக உள்ள ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

டி. ஜ. பால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
மத்திய மெக்கானிக்கல் வட்டம்.
சென்னை-5.

(த. 78)

ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் லிமிடெடின் யூனிட்

(தமிழ்நாடு அரசின் நிறுவனம்)

எண்: ஜி.எல். 3/71.

நாளொன்றுக்குச் சுமார் 1,200 டன் சுண்ணாம்புக் கற்களை ராஜபாளையம் அருகே ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் சுண்ணாம்புக்கல் குவாரியிலிருந்து (தொழிற்சாலை சதுக்கத்திற்கு சுமார் 2-லிருந்து 2·5 கிலோமீட்டர்) 1971 டிசம்பர் கடைசியிலிருந்து 1½ மாதத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குக் கொண்டுசென்று போடும் பணிகளுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20-12-1971 வரை வரவேற்கப்படுகின்றன.

நிபந்தனைகள், ஒப்பந்தப் புள்ளி வடிவம், இதர விவரங்களை பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் அஞ்சல், (வழி) ராஜபாளையம் அவர்களிடம் ரூ. 10·30 மட்டும் (இது திருப்பித் தரப்படமாட்டாது) 8-12-1971 முதல் பண அஞ்சல் மூலம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் அஞ்சல்,
(வழி) ராஜபாளையம்,
1-12-1971.

(த.107)

ஒப்பந்தப் புள்ளி

கோட்டம் 1, சென்னை-1

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் சார்பிலும் வாரியத்திற்காகவும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளி விவரங்களும் உறையில் குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழ்க்கண்ட வேலையை மேற்கொள்வதற்காக மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-1, 35/37 ஜகாங்கீர் தெரு, கடற்கரை இரண்டாவது சந்து, சென்னை-1-ல், 30-12-1971 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அப்போது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.	தொகை மதிப்பு.	கட்டுத் தொகை.	ஒப்பந்த வடிவம்.	ஒப்பந்தப் பத்திரத்தின் விலை.
	ரூ.	ரூ.		ரூ.
சென்னை மாநகராட்சி 10-வது வட்டம் பழைய வண்ணாரப்பேட்டை ஆர். எஸ். 1756/1 செமெட்ரி சாலைத் திட்டத்தில் 2·73 இலட்சம் லிட்டர் திறனுள்ள ஆர். சி. சர்வீஸ் மேல்மட்டத்தேக்கம், தரை மட்டத்துக்கு மேல் 21.0 மீட்டரில் அமைப்பிட்டுக்கட்டுதல், அவசியமான குழாய்கள் இணைப்புகள். வால்வு பிட்டுகள் நீர் மீட்டர் சமக்கிணறு ஏற்பாடு நியமனம் முழுமையாக.	1·31 இலட்சம்.	1,970	மொத்தத் தொகை	25+ விற்பனைவரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர், குடிசை பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 1, 35/37, ஜகாங்கீர் தெரு, கடற்கரை இரண்டாவது சந்து, சென்னை-1 உள்ள அலுவலகத்தில் 8-12-1971 முதல் 29-12-1971 வரை அலுவலக நாட்களில் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை, ஒப்பந்தப் பத்திரத்தின் விலையையும் விற்பனை வரியையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். "Personal Deposit Account (P. D. A.) of the Executive Engineer Slum Clearance Board, Division No. 1." என்ற தலைப்பில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில், சைதாப்பேட்டை, சென்னையில் செலுத்த வேண்டும். விற்பனை வரி, பொது விற்பனை வரி இரண்டு சளான்களும் கொடுக்கப்பட வேண்டும்.

காரணம் ஏதும் குறிப்பிடப்படாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்க உரிமை உண்டு.

எம். ஆத்மநாதன்,
நிர்வாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம், சென்னை-1

(த. 102)

ஒப்பந்தப் புள்ளி

அரசு எழுதுபொருள் அச்சுத் துறை

1972—73-ஆம் ஆண்டுக்காக எழுதுபொருள்கள், துணி வகைப் பொருட்கள் வழங்குவதற்காக, கீழே குறிப்பிட்ட ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர், தங்கசாலை கட்டடம், சென்னை-1, அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித் தேதியும் நேரமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தொகுதி.	பொருட்கள் விவரம்.	ஒப்பந்தப் புள்ளிகள் பெறக் கடைசித் தேதியும் நேரமும்.
'A'	Drawing meterials (colour cakes, Drawing ink, Tracing cloth, Tracing paper etc.)	1972 ஜனவரி 7-ஆம் தேதி மாலை 5 மணி.
'B'	Accessories for typewriters and duplicators (Typewiter Ribbons carbon paper, Stenoil paper, Duplicating ink etc.)	
'C'	Cutlery (Needles, paper pins, paper clips etc.)	
'D'	Writing Materials (Pencils, Pen-holders, nibs etc.)	
'E'	Miscellaneous articles(Gum, Calico cloth, hessian country twine, packing planks etc.)	1972 ஜனவரி 10-ஆம் தேதி மாலை 5 மணி.
'F'	Inks (Writing ink, Registration ink, Rubber Stamp ink etc.)	
'G'	Clothing materials (Gold Lace, yellow braid, Woollen Jersey, Socks, buttons etc.)	

ஒப்பந்த நிபந்தனைகள், கட்டுத் தொகைகள், சாம்பிள்கள் முதலியன குறித்து மேல் விவரங்களை உதவி இயக்குநர், எழுதுபொருள் அரசினர் எழுது பொருட்கள் ஸ்டோர்ஸ், பழைய உயர்நீதி மன்றக் கட்டடம், முதல் கடற்கரைச் சாலை சென்னை-1, அவர்களிடமிருந்து பெறலாம்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்,
எழுதுபொருள் அச்சுத்துறை.

சென்னை,
17—11—1971.
(ந. 84)

மகளிர் குழந்தைகள் மருத்துவமனை

மகளிர் மருத்துவம் மற்றும் பெண்கள் நோய் நிறுவனம், அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8-ல் 1972—73-க்கு உணவு, உணவு அல்லாத மற்ற பொருட்களை வழங்குவதற்கு.

அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை-8-க்கு 1972 ஏப்ரல் 1-லிருந்து அல்லதுஅதற்குப் பிற்பட்ட ஒரு தேதியிலிருந்து 1973 மார்ச்சு 31 வரை உள்ள காலத்துக்கு உணவு, இதர மருத்துவமனைத் தேவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இயக்குநரும் மேற்பார்வையாளரும், அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8, அவர்களால் 1972 ஜனவரி 3, திங்கட்கிழமை மாலை 2 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இயக்குநர், மேற்பார்வையாளர் அலுவலகம், மகளிர் மருத்துவம் மற்றும் பெண்கள் நோய் நிறுவனம், அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8-ல் ஒப்பந்தப் புள்ளி நமூனாவும், மருத்துவ மனைக்கு வழங்க வேண்டிய பொருட்கள் அடங்கிய பட்டியலும், மற்றும் நிபந்தனைகள் அடங்கிய அறிவிப்பும் பெறலாம். ஒப்பந்தப் பத்திரத்திற்கான விலை ரூபாய் ஐந்தும், இதற்கான விற்பனை வரி 3½ சதவீதம் சர்சார்ஜ் 5சதவீதமும் முறையே, XXIII—Medical—II Director of Medical Education–J-Misc.'' என்றும், "XII Sales Tax Receipts under the Sales Tax Act—General Sales Tax '' என்ற தலைப்புக்களில் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலுமோ அல்லது அரசாங்கக் கருவூலம் எதிலுமோ தமிழ்நாடு அரசின் கணக்கில் செலுத்தியதற்கான சலான்களுடன் மேலே குறிப்பிட்ட ஒப்பந்த வடிவங்களைப் பெற மனுச்செய்து, பெற்றுக்கொள்ள வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் இத்தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட சொத்துக்களின் பெறுமான சான்றிதழ் அல்லது அதன் உண்மையான நகல் அரசிதழ் பதிவு அலுவலரால் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000-க்கு மேற்படுமானல் வருமான வரி பாக்கியில்லாமல் செலுத்துதற்குரிய அத்தாட்சியும் ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனை வரிகட்டி முடித்த அத்தாட்சியும் தேசிய இனச்சான்றும் சேர்ந்து அனுப்பப்பட வேண்டும்.

என். ராஜசேகரன்,
இயக்குநரும், மேற்பார்வையாளரும்.

(ந. 88)

ஒப்பந்தப் புள்ளி

சுருளியாறு நீர்மின் திட்டம்

குறிப்பிடுகை எண் : SUR 1-எ, SUR 2-எ, SUR 4-எ, SUR 5-எ, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட தனித் தனியான ஒப்பந்தப் புள்ளிகளை அதன் முக உறையில் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் 3-1-1972 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகளை அதே நாளில் பிற்பகல் 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

எண்.	குறிப்பிடுகை எண்.	வேலையின் பெயர்.	ஒப்பந்தப் புள்ளியின் விலை எஸ்.டி. உட்பட.	கட்டுத் தொகை ரூபாய்.	ஒப்பந்தப் புள்ளிப் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி.
1	SUR 1எ	நிரந்தரமான '8ஜி' கட்டடம் ஆறுக்கு.	10.88	[illegible],400	8-1-1972
2	SUR 2எ	தற்காலிக '8ஜி' கட்டடம் இரண்டிற்கு.	10.88	1,650	8-1-1972
3	SUR 4எ	நிரந்தரமான மூன்றாவது நான்காவது '2எப்' கட்டடம்.	10.88	1,400	8-1-1972
4	SUR 5எ	தற்காலிக '6எப்' கட்டடம் ஒன்றிற்கு.	10.88	1,850	8-1-1972

ஒப்பந்தப் புள்ளி நகல்களை (மாற்றத் தகாதவை) ஒவ்வொரு செட்டிற்கும் மேலே குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி, கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம் அல்லது கோட்டப்பொறியாளர், சுருளியாறு நீர்மின் திட்டம், சின்னமனூர், மதுரை மாவட்டம் என்ற அலுவலகத்திலிருந்தும் இத்தொகையைச் செலுத்தி ஒப்பந்தப் புள்ளிப் படிவத்தைப் பெறலாம். இத்தொகையை எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித்தரப்படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகையை(Earnest Money deposit)இணைக்கப் படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத்தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (Cheques) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டுத்தொகைக்கான டிமாண்ட் டிராப்ட்ஸ் முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளி அனுப்பக் கூடாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளை காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தப்புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்கவும் கீழே கையொப்பமிட்டவருக்குப் பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் புள்ளிப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும்போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர்-மின் திட்டம், 34-எ, பெருமாள்புரம்.
திருநெல்வேலி-7.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு.
அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.